
# அத்திமலைத் தேவன்

பாகம் 3



– காலச்சக்கரம் நரசிம்மா

வானதி பதிப்பகம்

# அத்திமலைத்தேவன்

## (பாகம் - மூன்று)

'காலச்சக்கரம்' நரசிம்மா

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

[illegible] : ஜூலை, 2019

[illegible] : ஆசிரியருக்கு

வானதி வெளியீடு

விலை : ரூ. 600/–

| | | |
|---|---|---|
| ❒ | Title | **ATHIMALAIDEVAN (PART-3)** |
| ❒ | Author | **'Kalachakkaram' NARASIMMA** |
| ❒ | Language | Tamil |
| ❒ | Subject | Historical Novel |
| ❒ | Edition | First Edition, July, 2019 |
| ❒ | Pages | 744 |
| ❒ | Published By | **VANATHI PATHIPPAKAM**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai - 600 017.<br>Ph: 2434 2810 / 2431 0769<br>e-mail : vanathipathippakam@gmail.com |
| ❒ | Price | **₹ 600.00** |

Laser Typeset by: **SS Graphics,** Cell : 9843534436

Printed at: **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

# முன்னுரை

ஆன்மிக ஞானத்தைப் பெற இமயமலைச் சாரலுக்குத்தான் செல்ல வேண்டுமா? துறவறம் ஏற்பதற்குத் தவசியாகத் தனிமையைத்தான் நாட வேண்டுமா? மனநிம்மதியைப் பெறுவதற்கு புனிதப் பயணங்களைத்தான் மேற்கொள்ள வேண்டுமா? இவை ஒன்றையும் செய்யாமல், கடந்த ஆறு மாத காலமாக ஒரு துறவியாக மனநிறைவையும், மனநிம்மதியையும் நான் பெற்றுள்ளேன். ஒரு சரித்திரப் புதினம் குறிப்பாகப் பல்லவர்களைப் பற்றி ஒரு வரலாற்றுப் புதினத்தை எழுதினால் போதும். ஒரு மனிதன் பண்பட்டுவிடுவான். வாழ்க்கையில் உள்ள நெளிவு சுளிவுகளை அறிந்து, நமது வாழ்க்கை எவ்வளவு அநித்யமானது என்பதைப் புரிந்து கொண்டு, தனது ஓட்டினுள் ஒடுங்கும் ஆமையைப் போன்று தனது இந்திரியங்களைச் சுருக்கிக் கொண்டு, பற்றற்ற வாழ்க்கையில் நிலைத்திருப்பான். காரணம், பல்லவ அரச குடும்பத்தில் அவ்வளவு சோகங்கள், மர்மங்கள்!

அரசியல் ஆர்வம், திரைப்பட மோகம் என்று இருந்த காலம் போய், அத்திமலைத்தேவன் புதினத்தை எழுதத் துவங்கிய பிறகு, தனி உலகத்திற்குப் போய்விட்டேன். எல்லாவற்றிலும் ஆர்வத்தை விட்டுவிட்டேன். பல்லவத்தைக் கடைந்த போது, எனக்குக் கிடைத்த தகவல்கள், சம்பவங்கள் என்னைப் பெரும் பிரமிப்பினில் ஆழ்த்திவிட்டன.

தேசத்தின், கலாசாரத்தின் பெருமைகளை அறியாத ஒரே இனம் நமது தமிழர் இனம் என்றுதான் சொல்வேன். இன்று தமிழ் உணர்வைப் பற்றி ஓங்கிப் பேசும் எவரும், தமிழர் சரித்திரங்களைப் பற்றிச் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. புராதனச் சரித்திரச் சின்னங்கள் அனைத்தும் அழிந்து கொண்டிருக் கின்றன. அதைப் பற்றி இம்மியும் யாரும் கவலை கொள்ளவில்லை. தமிழரின் பெருமைகளுக்கு அடையாளமாக உள்ள சின்னங்களை அழிய விட்டுவிட்டு, தமிழர் பெருமைக்கு அரசியல்வாதிகள் உதட்டசைவு (Lip Service) மட்டுமே செய்து வருவது வருத்தத்திற்குரியது.

அதே போன்று, சோழர்களும், பாண்டியர்களும் தான் தமிழை வளர்த்தார்கள் என்று கூறுபவர்களைக் கிணற்றுத் தவளைகள் என்றுதான் கூற வேண்டும். காஞ்சியின் முக்கூடல் கடிகை தமிழின் விளைநிலமாக இருந்திருக்கிறது. உலக நாடுகளுக்கு மன்னர்களைத் தயார் செய்து அனுப்பியுள்ளது, முக்கூடல் கடிகை.

மாவிலக்கை என்கிற துறைமுகம், தற்போது உள்ள மரக்காணம் பகுதியில் இருந்திருக்கிறது. உலக நாடுகளுடன் அங்கே வர்த்தகம் நடைபெற் றிருக்கிறது. அரிக்கமேடு என்கிற புதுச்சேரியின் அருகில் உள்ள பகுதி கண்ணாடி தொழிற்சாலை ஒன்றைக் கொண்டிருந்தது. இங்கிருந்து ரோமாபுரி, எகிப்து, கிரேக்கம் போன்ற நாடுகளுக்குக் கண்ணாடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

பல்லவக் காஞ்சியின் நாகரிகம், மன்னர்களின் தெய்வபக்தி, இவை அனைத்துமே நம்மை உருகிப் போகச் செய்கின்றன. பாலாறு, செய்யாறு, வேகவதி,

கொசத்தலை ஆறு என்று எத்தனை ஆறுகள் வட தமிழகத்தில் பாய்ந்திருக்கின்றன. இன்று பிளாஸ்டிக் குடங்களுடன் மக்கள் அல்லாடுவதைக் காணும் போது மிகவும் வேதனையாக உள்ளது.

எழுத்தாளர்கள் மலிந்துவிட்டார்கள். குறிப்பாகச் சரித்திரப் புதினங்களை நிறைய பேர் எழுதத் துவங்கி விட்டார்கள். அனைவருமே கல்கியின் பொன்னியின் செல்வனைப் படித்துவிட்டு அதன் தாக்கத்தில் தாங்களும் எழுத வேண்டும் என்று எண்ணி வரலாற்றுப் புதினங்களை எழுதிக் கொண்டிருக் கிறார்கள். தவறில்லை..! ஆனால் சரித்திரப் புதினங் களை எழுதும் போது சரித்திர உண்மைகளுக்குப் புறம்பாக, வேண்டும் என்றே எழுதுகிறார்கள். ஆராய்ச்சிகளைச் செய்யாமல், 'நான் எழுதுவதுதான் சரித்திரம்' என்கிற ரீதியில் எழுதுவதால், உண்மை களைப் பொய்கள் என்றும், பொய்களை உண்மை சரித்திரம் என்றும் வாசகர்கள் நம்பிவிடுகின்றனர்.

சரித்திர எழுத்தாளனுக்குப் பொறுமை மிகவும் அவசியம். ஒரு அரசனைப் பற்றி எழுதும் போது அவனது மனைவியைப் பற்றிய குறிப்பு ஒன்று வருகிறது என்றால், அந்த அரசனின் மனைவியின் பெயர் என்ன, அவள் எந்த நாட்டு இளவரசி என்பதைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். பதிப்பகத்தில் புதினத்தை உடனே கேட்கிறார்கள் என்பதால் ஆராய்ச்சி செய்யாமல், பொத்தாம் பொதுவாக, அவள் ஒரு சேர இளவரசி என்று எழுதிவிடுகிறார்கள். இதனால் பல குழப்பங்கள் நேரிடும்.

சோழ அரசனின் மனைவி பெயர் தெரியவில்லை என்றால் அவள் பழுவேட்டரையரின் மகள் என்று கூறிவிடுகிறார்கள். பழுவேட்டரையர்கள் நிறைய பேர் இருந்தாலும் எத்தனை பெண்களைத்தான் பழு வேட்டரையர்கள் பெற்றுக் கொள்வார்கள்? போவோர் வருவோருக்கெல்லாம் பெண் கொடுப்பதுதான் பழுவேட்டரையர்களின் வேலையா?

அரசனாக இருந்தால் அவன் ஒரு இளவரசியைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது இல்லை. நரசிம்மவர்ம பல்லவன் ஒரு சாதாரணக் குடிமகளைத்தான் திருமணம் செய்து கொண்டிருந் தான். போரில் தோல்வியே காணாத நரசிம்மவர்ம பல்லவன், புலிகேசியையே ஓட ஓட விரட்டியவன், ஒரு சாதாரணப் பெண்ணை எப்படி மணக்கலாம் என்று இவர்களாகவே அந்தப் பெண்ணைச் சேர இளவரசி, சோழ இளவரசி - என்று கூறிவிடுகின்றனர். இம்மாதிரித் தருணங்களில்தான் சரித்திரம் 'குழம்பிய குட்டை'யாகிவிடுகிறது. சரித்திரச் சம்பவங்களைத் தடம் புரளாமல் எடுத்துச் செல்வதில்தான் ஒரு சரித்திர எழுத்தாளனின் வெற்றி உள்ளது. சரித்திரச் சம்பவங்களை மாற்றாமல் கையாள வேண்டும் என்று இளம் வரலாற்று எழுத்தாளர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அத்திமலைத்தேவன் இரண்டாம் பாகத்திற்கு நல்ல வரவேற்பு. முதல் பாகத்தைவிட வேகம் அதிகம் என்று பலரும் கூறினார்கள். பெரம்பூர் வரை ஒரு வேகம், அரக்கோணம் வரை இன்னும் அதிக வேகம் என்றுதானே இரயில்கள் செல்லும்.

எவ்வளவு தகவல்கள் என்று இரண்டாம் பாகத்தைப் படித்த அனைவருமே பாராட்டினார்கள்.

குறிப்பாகக் கம்போடியாவுக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையே உள்ள ஆலய ஒற்றுமையைக் குறித்துப் பலரும் தங்கள் வியப்பினைத் தெரிவித்தனர்.

அலைபேசியில் தொடர்பு கொண்ட வாசகர்கள் சிலர், அதிகமான தகவல்கள் கதையின் வேகத்தைக் கெடுப்பதாகப் புகார் கூறினார்கள். கதையை முடித்துவிட்டு, பிறகு கீழே கொடுத்திருக்கும் உபரி தகவல்களைப் படிக்கலாமே என்று நான் அவர்களிடம் கூறிய போது அவர்கள் சொன்ன பதில் - நீங்கள் அளித்திருக்கும் அடிக்குறிப்புகள் (Foot Notes) பகுதியே ஒரு கதையைப் போன்று சுவாரசியமாக இருப்பதாகக் கூறினார்கள்.

அத்திமலைத்தேவனை ஒரு யாகம் போன்றுதான் செய்து வருகிறேன். மூன்றாம் பாகத்தை அளித்து விட்ட நிலையில், பாகம் நான்கு மற்றும் இறுதி பாகம் ஐந்தை ஆகஸ்ட் 31க்குள் முடிப்பதாக உத்தேசம்.

வாசகர்களுக்கும், வானதி பதிப்பகத்திற்கும், இந்தப் புதினங்களை வெளியிடுவதில் பெரும் பங்காற்றியுள்ள அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

பல்லவப் பயணம் தொடரும்.

**'காலச்சக்கரம்' நரசிம்மா.**
**98417 61552**
**tanthehindu@gmail. com**

# இரண்டாம் பாகத்தில்...

**வ**ளங்களையும், வெற்றிகளையும் வாரி வழங்கும் தேவ உடும்பர அத்திமலையான் பிரதிமையைக் கைப்பற்றப் பலரும் முனைகின்றனர்.

அசோகனின் மகனும் மகளும் காஞ்சியில் இருந்து அனுப்பிய ஓலையினைச் சவ்ஷீலா மகத வீணையில் ஒளித்து வைத்திருக்க, அது சமுத்ரகுப்தனின் வசம் கிடைக்க, தேவ உடும்பரத்தை கைப்பற்ற அவன் காஞ்சியின் மீது படையெடுக்கிறான். சாணக்கியர் அவனது கனவில் தோன்றி எச்சரிக்க, தனது முயற்சியினைக் கைவிட்டு அவன் மீண்டும் மகதம் செல்கிறான்.

தேவராஜா மார்க்கத்தைப் பின்பற்றும் காம்போஜ நாட்டின் அரசன் சூர்யவர்மனின் மகள் ககனமயி தங்களது ராஜகுரு சோமஸ குருவுடன் காஞ்சிக்கு வந்து, தேவ உடும்பர அத்திமலையானை தரிசிக்கிறாள். தங்கள் நாட்டின் நிலநடுக்கங்களுக்குக் காரணமே, அத்தி மலையான் தங்கள் நாட்டைப் பார்த்து நிற்பதால் என்று நினைக்கும் அவர்கள், தேவ உடும்பர பிரதிமை தங்களுக்கே உரியது என்று நினைத்து அதனை எப்படித் தங்கள் நாட்டிற்குக் கவர்ந்து செல்வது என்று யோசிக்கும் போது, சிம்மவர்மனின் நான்கு மகன்களில், இரண்டாவது மகன் தானவர்மன் அவள் மீது காதல் வசப்படத் தனக்குச் சீதனமாக அத்திமலையானைக் கேட்கிறாள்.

மகாயான புத்த சித்தினி பிரக்ஞுதாராவும் அவளது சீடன் ஜினிங்டியாண்டையும், தேவ உடும்பரத்தை தங்கள் நாட்டிற்குக் கவர்ந்து செல்ல முயற்சிக்க, தன்னை வசியம் செய்ய வேண்டாம் என்றும் புத்த மார்க்கத்தால் ஈர்க்கப்பட்ட தானே தேவ உடும்பரத்துடன் வருவதாகவும் கூறுகிறான், சிம்மவர்மனின் மூன்றாவது மகன் ஜெயவர்மன்.

தெரவாடா புத்தப் பிரிவைச் சேர்ந்த புத்த கயை புண்யமித்ரா தனது பங்குக்கு இலங்கை அரசன் திஸ்ஸனுடன் சேர்ந்து தேவ உடும்பரத்தை புத்த கயைக்குக் கடத்திச் செல்ல முயன்று சிம்மவர்மனின் தம்பி விஷ்ணுவர்மனின் இளைய மகன் விஜயவர்மனை கைக்குள் போட்டுக் கொள்கிறான்.

ஒருநாள் நடுநிசியில் -

அத்திமலையான் ஆலயத்தில் பரபரப்பான நிகழ்வுகள் நடக்கின்றன.

❖ இளவரசி நவரத்னாதேவியின் உடல் பொற்றாமரைக் குளக்கரை அருகே உள்ள ரத்ன மண்டபத்தில் பிணமாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

❖ இளவரசன் விஜயவர்மனின் சடலமும் கைப்பற்றப் படுகிறது.

❖ ஆலயத்திற்கு வரும் பட்டர்கள் தேவ உடும்பர சிலை காணாமல் போனதைக் கண்டு திகைத்து நிற்கின்றனர்.

❖ எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போன்று, இளவரசன் ஜெயவர்மன் காணாமல் போகிறான்.

❖ ஒரு இரவில், காஞ்சியில் நடைபெறும் விபரீத நிகழ்வுகளால், காஞ்சியின் தலைவிதியே மாறுகிறது.

❖ எல்லாச் சம்பவங்களுக்கும் காரணம், காணாமல் போன ஜெயவர்மன்தான் என்று கருதுகிறான், அவனது மூத்த அண்ணன் அவனிசிம்மன்.

இனி..

## வாசகர் குறிப்பு

அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி
இவையிவை உண்மை,
இவையிவை கற்பனையென
மனமிசை சார்த்திக் கொள்ளவும்.
உதிரிப்பூக்களாம் சரித்திரச் சம்பவங்களை
எனது கற்பனை நாரினில்
சரமாகத் தொடுத்துள்ளேன்,
அத்திமலையானுக்குச் சமர்ப்பிக்க!
உங்கள் செவிகளில் பூச்சுற்ற அல்ல..!
**'காலச்சக்கரம்' நரசிம்மா.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சம்பவம் மூன்று; சதியாளன் ஒன்று! | 13 |
| 2. | கடலில் மிதந்த சிலை! | 36 |
| 3. | தாவிச் சென்ற தகவல் | 55 |
| 4. | அண்ணலும் நோக்கினான்; ஆபத்தும் நோக்கியது! | 68 |
| 5. | முதலும், இறுதியும் | 76 |
| 6. | மாயக்குழி | 89 |
| 7. | தலையில் விழுந்த பல்லி | 97 |
| 8. | மூடுபனி | 110 |
| 9. | கருப்பு ஆடு.. வெள்ளை மாடு! | 118 |
| 10. | ஒன்பது வெற்றிலைகள் | 142 |
| 11. | களப்பிர களேபரங்கள் | 151 |
| 12. | நண்டுகளும், யானைகளும் | 175 |
| 13. | பெயர் சொல்ல ஒரு பிள்ளை | 187 |
| 14. | மல்லனை மாற்றிய வல்லன் | 207 |
| 15. | நவம் தசமானது | 227 |
| 16. | குடமா.. குணமா? | 235 |
| 17. | வாதாபி கணபதிம் சதிம் | 260 |
| 18. | கல்தூண் காட்டிய வழி | 281 |
| 19. | பாரளந்த பாரவி | 296 |
| 20. | புதிர்விடுத்த கதிர்! | 313 |
| 21. | அந்தியில் வந்த அவந்தி | 321 |
| 22. | ஆளுமை கோல் முறிந்தது | 332 |
| 23. | குகையில் கிட்டிய ரகசியம் | 347 |
| 24. | மூன்றாம் மதிமலை | 361 |
| 25. | சிங்கமல்லன்! புலிமல்லன்! | 377 |

| | | |
|---|---|---|
| 26. | பழுதையுமல்ல! பாம்புமல்ல! | 387 |
| 27. | சோழியன் குடுமி.. | 401 |
| 28. | இரும்புக்கர மங்கை! | 419 |
| 29. | திகம்பரச் சாமியார் | 443 |
| 30. | ஆசைக் குமிழிகள் | 460 |
| 31. | வர்மகேதுவின் அடுத்த பலி | 482 |
| 32. | ஐந்து பறவைகள் | 496 |
| 33. | குழம்பிய குளத்தில் நீந்தும் கயல் | 513 |
| 34. | ஆதியில் பாதி.. பாதியில் காளி! | 531 |
| 35. | கடல்மல்லையில் காதல் கோட்டை! | 538 |
| 36. | பொக்கிஷக் குவியலில் ஒரு செய்தி | 550 |
| 37. | சுழல் கோபுரத்தின் உச்சியில்... | 568 |
| 38. | மல்ல எதி | 582 |
| 39. | ராஜ - ராஜஸ்ரீராஜன் | 587 |
| 40. | உளிகளின் யுத்தம் | 606 |
| 41. | மூன்றாவது பங்காளி | 611 |
| 42. | அத்திமலை முழைஞ்சில் சீரிய சிங்கம் | 619 |
| 43. | கண்டு கொண்டேன் கொலையாளியை! | 642 |
| 44. | ஜெகமே ஜெயன் | 649 |
| 45. | தேவனைக் காட்டிய தேவி! | 662 |
| 46. | வீழ்ந்தது வாதாபி! | 678 |
| 47. | அஞ்சிலை அணங்கு | 683 |
| 48. | பல்லவம் பல்லவி பாடட்டுமே.. | 686 |
| 49. | வேட்டையாடு! உறவாடு! | 708 |
| 50. | கைக்கு எட்டியது.. ஆனால்.. | 723 |
| 51. | 2004 டிசம்பர் 24, சுனாமி | 732 |
| 52. | அத்திமலைத்தேவன் பேசுகிறேன்.. | 735 |
| | வாராத வரதர் வந்தார் | 740 |

# 1. சம்பவம் மூன்று; சதியாளன் ஒன்று!

கதிரவன் தனது கிரணங்களை அத்திமலையானின் ஆலயத்தில் படரவிடலாமா என்பது போன்று குன்றமாக உருவாகியிருந்த மேகக்கூட்டங்களின் பின்பாக நின்று தயக்கத்துடன் எட்டிப்பார்த்தான். அஸ்வமேத யாகத்தின் அக்னி குண்டத்தில் தோன்றிப் பிரம்மனின் கட்டளைப் படி விஸ்வகர்மாவினால் தேவ உடும்பர மரத்தில் தேகம் சமைக்கப்பெற்று அத்திமலையின் மீது தேவராஜனாக அருள்பாலித்த அத்திமலைத்தேவன் தற்போது ஆலயத்தின் உள்ளே இல்லை என்கிற உண்மை இன்னும் பல்லவ நாட்டிற்குத் தெரியாது.

ஐந்து திருமணங்கள் நடைபெற்றதைக் கொண்டாடும் வகையில் முந்தைய தினம்தான் அத்திமலைத்தேவனின் ஆலயத்திலிருந்து வந்த பின்பு, தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் சிம்மவர்மனின் ஐந்து செல்வங்களையும் அழைத்தார். அவனிசிம்மன், தானவர்மன், ஜெயவர்மன், பீமவர்மன் மற்றும் நவரத்ன பல்லவியின் கைகளால் ஒத்தாடை அரண்மனையில் ஐந்து மரங்களை நட வைத்தார். தொடர்ந்து அரண்மனையின் நந்தவனத்தில் நடைபெற்ற ஆட்டங்களாலும், பாட்டங்களாலும் அரண்மனையே அதிர்ந்தது.

இன்னமும் கொண்டாட்ட மனநிலையில்தான் ஒத்தாடை இருந்தது. அத்திமலை ஆலயத்தில் பட்டர்கள் ஆலயத்திற்குள் நுழைந்து நேராகச் சந்நிதியை நோக்கி நடக்கத் துவங்கினர். ஒரே ஒரு பட்டர் மட்டும்

தற்செயலாகப் பொற்றாமரைக் குளத்தை நோக்கிப் பெருந்தேவி தாயாரை நினைந்து தனது கைகளைக் கூப்பித் தொழ, அவரது கண்களில் ரத்ன மண்டபத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த நவரத்ன பல்லவியின் உடல் தென்படவில்லை. இன்னும் சூரியனின் கிரணங்கள் அந்தப் பகுதியை ஆக்கிரமித்திருக்கவில்லை என்பதால் அவரது கண்களுக்கு அது புலப்படவில்லை போலும்.

சந்நிதியை அடைந்தவர்கள் கரங்களைக் கூப்பிக் கைதொழுது "ஸ்வாகதம்.. தேவராஜ.. ஜெய விஜயீ பவ!" — என்று கோஷமிட்டபடி நிற்க, அனந்த பட்டர் மட்டும் தனது தோளின் மீது பரத்தியிருந்த திறவுகோலினை எடுத்துச் சந்நிதியின் கதவைத் திறந்தார்.

கதவைத் திறந்தவரின் உடலை ஆயிரம் மின்னல்கள் தாக்கின. இடியாக அவரது ஓலம் முழங்கியது.

"ஐயோ.. இதென்ன..? அத்திமலைத் தேவராஜனைக் காணோமே!" அவரது அலறல் அனைவரையும் உலுக்க, பட்டர்கள் அலறியடித்துக் கொண்டு செய்வதறியாது இங்கும் அங்கும் ஓடினர்.

"இதென்ன சோதனை! பிரம்மனே பிரதிஷ்டை செய்த தேவ உடும்பர பிரதிமையைக் காணோமே. யார் எடுத்திருப்பார்கள்?" — கண்ணீர்விட்டார் ஒரு பட்டர்.

அனந்த பட்டரும், இன்னும் சிலரும் ஆலய அதிகாரி நாராயண நம்பியிடம் ஓடினர்.

"தேவ உடும்பரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவராஜனின் சிலையைக் காணவில்லை!" — பட்டர்கள் கூற, அவர் அதிர்ச்சியுடன் நின்றார். முந்தைய இரவு, ஜெயவர்மன் அத்திமலையானின் ஆலயத்திற்குச் சென்ற போது, 'என்ன நடந்தாலும், யாரும் எனது பின்பாக ஆலயத்திற்குள் வரக்கூடாது!' என்று கூறிய வுடன், தனது மனைக்கு வந்து படுத்துக் கொண்டவர் தான். ஆலய பட்டர்கள் வந்து எழுப்பியதும்தான் கண்

விழிக்கிறார். 'ஆலயத்தில் என்ன நடந்திருக்கும்? இளவரசர் ஜெயவர்மன் எங்கே?'

தனக்குள் பதைபதைப்புடன் கேட்டபடி, அவசரமாகக் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆலயத்தை நோக்கி விரைந்தார். அதற்குள் ரத்ன மண்டபத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த நவரத்னதேவியின் உடல், இளவரசன் விஜயவர்மன், அபயகிரி மற்றும் வீரகொசு வனின் சடலங்களும் கைப்பற்றப்பட்டன. அதிகாரிகள் பதைபதைப்புடன் அரண்மனைக்குச் செல்ல, அங்கே அரண்மனையே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

"இளவரசன் ஜெயவர்மனை காணவில்லை!"

காவலர்கள் அவனை நாலாதிக்கிலும் தேடிக் கொண்டிருந்தனர்.

உடல் நலம் கெட்டு, மரணப்படுக்கையில் கிடந்த சிம்மவர்மனுக்குத் தகவல்கள் சொல்லப்படவில்லை. தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் அரண்மனைக்கு விரைந்தவர், பட்டத்து இளவரசன் அவனிசிம்மனை நாடிச் சென்றார்.

வெளியே பதற்றத்துடன் குரல்கள் ஒலிப்பதைக்கேட்டு கண்விழித்த அவனிசிம்மனின் மனைவி புவனமாதேவி உறங்கிக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள். அவனை எழுப்ப மனமில்லாமல், தானே எழுந்து சென்று அறையின் கதவைத் திறக்க, அரண்மனை அதிகாரிகள் தான் நின்றிருந்தனர்.

"இளவரசியாரே! மிக அவசரம்..! அத்திமலையானின் ஆலயத்தில் விபரீதங்கள் நிகழ்ந்துள்ளன. இளவரசரிடம் ஆலோசனை செய்வதற்காக, தலைமை அமைச்சர் மச்ச வாசுதேவர் ஆலோசனை அறையில் காத்திருக் கிறார்..!" — அதிகாரிகளின் குரல்கள், கதவின் இடைவெளியின்

*வழியே அவனிசிம்மனின் செவிகளைச் சென்றடைய, எழுந்து தனது மஞ்சத்தில் அமர்ந்தான்.*

*"என்ன நடந்தது புவனா? விடியலில் ஏன் இந்தப் பதற்றம்?"*

*"அத்திமலையானின் ஆலயத்தில் ஏதோ விபரீதம் நிகழ்ந்துள்ளதாம்..!" — புவனா கூற, அவனிசிம்மன் திகைப்புடன் மஞ்சத்தில் இருந்து இறங்கி, நெகிழ்ந்திருந்த தனது வேட்டியை இறுக அணிந்தவன், சாளரத்தின் ஓரமாக வெள்ளிக்கலயத்தில் இருந்த நீரில் முகத்தை அலம்பி, மூன்று முறை கொப்பளித்தான்.*

*பிறகு, தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் காத்திருந்த ஆலோசனை அறையை நோக்கி விரைந்தான்.*

*மன்னர் சிம்மவர்மனுக்கு உடல்நிலை சரியில்லை. பேச்சு அடியோடு நின்றுவிட்டது. எப்போதும் குறிப்பிட்ட திசையில் வெறித்து நோக்கியபடி அமர்ந் திருக்கிறார். அவரது சிந்திக்கும் திறன் அடியோடு வற்றி விட்டது என்று கூறிய வைத்தியர்கள், அவரது நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதை அதற்குக் காரணமாகக் கூறியிருந்தனர்.*

*பிரக்ஞுதாராவின் நோக்குவர்ம பந்தன*த்தில் சிம்மவர்மன் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. சிம்மவர்மன் ராஜாங்க நடவடிக்கைகளில் கவனம்*

* பிரக்ஞுதாராவைப் பற்றிச் சீன மற்றும் ஜப்பானிய ஜென் சரித்திரக் குறிப்புகள் இவை: பிரக்ஞுதாரா மகாயானத்தைச் சேர்ந்த மாபெரும் யோகினி. கேரளாவில் ஒரு அந்தணக் குடும்பத்தைச் சேர்ந்த அவளது உண்மை பெயர் கேயூரா. சிம்மவர்மனை தனது நோக்கு வர்மத்தால் மயக்கி அவனது குடும்பத்தையே தனது கட்டுக்குள் வைத்திருந்தாள். கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலம் என்று முக்காலத்தையும் அறிந்த இவள் கையில் Dragon பதிக்கப்பட்ட தடியைச் சுமப்பது வழக்கம். பிரக்ஞுதாரா என்றால் பிரக்ஞைக்குத் தாரகையாகத் திகழ்பவள் என்பது பொருள்.

செலுத்த இயலாத நிலையில், அவனிசிம்மன்தான் தலைமை அமைச்சரோடு இணைந்து முக்கியமான முடிவுகளை எடுத்துக் கொண்டிருந்தான்.

ஆலோசனை அறைக்குள் நுழைந்த அவனிசிம்மனின் பார்வையைத் தவிர்த்தபடி எழுந்தார், மச்சவாசுதேவர். அவனிடம் எந்தத் தகவலை முதலில் தெரிவிப்பது? அத்திமலையானின் தேவ உடும்பர பிரதிமையைக் காண வில்லை என்பதையா? நாட்டிற்கே செல்ல மகளாகத் திகழ்ந்த இளவரசி நவரத்னாதேவி பொற்றாமரைக் குளத்தருகே இருந்த ரத்ன மண்டபத்தில் தற்கொலை செய்து கொண்டு, சடலமாக ஊசலாடிக் கொண்டிருப் பதையா, இளவரசன் விஜயவர்மன் வெட்டி வீழ்த்தப் பட்டுப் பிணமாக ஆலயப் பிராகாரத்தில் கிடப்பதையா, இல்லை முந்தைய இரவு நடுநிசியில் ஒத்தாடை அரண்மனையை விட்டுச் சென்றிருந்த இளவரசன் ஜெயவர்மன் இன்னும் திரும்பவில்லை என்பதையா?

"இளவரசே! மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்!" — பொதுவாகக் கூறினார் வாசுதேவர்.

"நடந்ததைக் கூறுங்கள், தலைமை அமைச்சரே!" — அவனிசிம்மனின் குரலில் உறுதி ஒலித்தாலும், அவனது இதயத்தில் ஒருவித அச்சம் படர்ந்தது. அத்திமலையான் ஆலயத்தில் விபரீதங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறிந்த உடனேயே அவனது இதயத்தைக் கவ்விய அச்சம், ஆலோசனை அறையினுள் நுழைந்த போது அவனது தேகம் முழுவதுமாக வியாபித்து நின்றது. மச்சவாசு தேவரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி நின்றான்.

"நமது காஞ்சியின் பொக்கிஷமான தேவ உடும்பர அத்திமலையானின் சிலையைக் காணவில்லை. அந்தச் சிலை களவாடப்பட்டிருப்பதை ஊர்ஜிதம் செய்வதைப் போன்று, ஆலயத்தில் அதற்கு முன்பாகப் பெரும் போராட்டம் நடைபெற்றிருக்கிறது." என்றவர் தொடர்ந்து பேசாமல் மௌனம் சாதித்தார்.

“போராட்டம் நடைபெற்றதா?” — திகைத்தான் அவனிசிம்மன்.

“ஆம் இளவரசே! விடியலில் ஆலய வளாகத்தில் நான்கு சடலங்களைக் கண்டோம். அவற்றில் அரச குடும்பத்தைச் சேர்ந்த இருவரின் உடல்கள்..” — மச்சவாசுதேவரின் குரல் கம்மியது.

“யார்?” — அவனிசிம்மனின் வாய் உலர்ந்து போனது.

“உங்களது ஆருயிர் தங்கை நவரத்ன பல்லவி பொற்றாமரைக் குளத்தின் ரத்ன மண்டபத்தில் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். தங்களது சிற்றப்பன் விஷ்ணுவர்மரின் மகன் விஜயவர்மனும் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தார்..” — மச்சர் கூற, துடிதுடித்துப் போனான், அவனிசிம்மன்.

“நவரத்னாவா?” — அதிர்ச்சியில் சிலையாகிப் போனான், அவனிசிம்மன்.

பல்லவ நாட்டின் உயிர் நாடி எங்கே இருக்கிறது என்று வெளிநாட்டினர் யாராவது கேட்டால், உடனே இளவரசி நவரத்னாவைத்தான் பல்லவ மக்கள் சுட்டிக்காட்டுவது வழக்கம். அரச குடும்பத்திற்கே ஒரே மகள் என்பதால், பிரியத்தை வாரி அவள் மீது வர்ஷித்தனர். சிம்ம வர்மனுக்குப் பிறந்த நான்கு மகன்களுக்குப் பிறகு, பெருந் தேவியிடம் நேர்ந்து கொண்டு பிறந்தவள். அவளது அருளால் பிறந்திருந்ததால் நவரத்ன பல்லவிதேவி என்று பெயரிட்டிருந்தார்கள். சிம்மவர்மனின் தம்பி விஷ்ணுவர்மனுக்கும் இரண்டே மகன்கள் என்பதால், அவனது குடும்பமும் நவரத்ன பல்லவியின் மீது வாஞ்சையினைக் காட்டினார்கள். பால்யத்தில் இளவரசி நவரத்ன பல்லவி கால்களில் நூபுரங்களை அணிந்திருந்த போதிலும், அவை ஒலியே எழுப்பவில்லை. காரணம், மாற்றி, மாற்றி அண்ணன்மார்கள் அவளைத் தங்களது

முதுகில் குதிரை சவாரி ஏற்றிக் கொண்டு நந்தவனத்தில் ஓடிக் கொண்டிருப்பார்கள்.

குறிப்பாக ராஜவர்மனுக்கு நவரத்னாவின் மீது அதிகப் பாசம். அவளது கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தால், துடித்துப் போய்விடுவான். ஆபரணங்களை அணிவதற்காக நவரத்னாவின் செவி மடல்கள் மற்றும் மூக்கில் பொற்கொல்லர்கள் துளையிட்ட போது, அன்று முழுவதும் ராஜவர்மன் ஒன்றுமே உண்ணாமல், அவளைச் சமாதானம் செய்தபடி இருந்திருந்தான்..

இளவரசி நவரத்னா பிறந்ததைக் குறிக்கும் வகையில் காஞ்சியின் அனைத்து ஆலயங்களிலும் ரத்ன மண்டபத்தை எழுப்பினார்கள், அரசகுடும்பத்தினர். அத்திமலையான் கோயில், ஒத்தாடையான் கோயில், சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில், எண்கரத்தான், பிரவாள வண்ணர், உலகளந்தான், ஆதி சரஸ்வதி கோயில் என்று எல்லா ஆலயங்களிலும் ரத்ன மண்டபங்கள் எழுப்பப்பட்டன.

அத்திமலைத்தேவனின் ஆலயத்தில் பொற்றாமரைக் குளத்தின் கரையில் ரத்ன மண்டபத்தை எழுப்பினார்கள், அரச குடும்பத்தினர். பொற்றாமரைக் குளமும், அதன் கரையில் உள்ள ரத்ன மண்டபமும், ஓங்கி வளர்ந்த கிழக்கு வாயில் கோபுரமும், குளத்தைச் சுற்றிய நந்தவனங்களும், நவரத்ன பல்லவியின் மனதை வசீகரிக்க, ஆலயத்திற்கு வரும்போதெல்லாம், அவள் ரத்ன மண்டபத்தில்தான் அமர்ந்திருப்பாள்.

'இந்த மண்டபம் எனது பெயரைத் தாங்கி நிற்கிறது. ஆலயத்திற்கு வருபவர்கள் எல்லாம் எனது பெயரை உச்சரிக்கும் வண்ணம், இதனை ரத்ன மண்டபம் என்று பெயரிட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பெருந்தேவி தாயார் ரத்ன மண்டபத்தில் எழுந்தருளி, ஊஞ்சல் உற்சவத்தைக் கண்டருள்வார்!' — தோழிகளிடம் பெருமை அடித்துக் கொள்வாள்

நவரத்னா. காஞ்சியின் அனைத்து ஆலயங்களுக்கும் அவள் சென்று வந்தாலும், அத்திமலையானின் ஆலயத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி வந்தாள்.

அண்ணன் ஜெயவர்மன் அவளைக் கடிந்து கொள்வான்.

“அரண்மனையினுள் இருக்கும் ஒத்தாடையானை விட்டு, எதற்காக அத்திமலையானின் ஆலய ரத்ன மண்டபத்தில் பொழுதைக் கழிக்கிறாய்? நீ இளவரசி என்பதை நினைவில் கொள்.”

அருகில் இருந்த சாயாதேவி நவரத்னாவுக்கு ஆதரவாகப் பதில் அளித்தாள்.

“ஒரே ஒரு ஆடையை அணிபவன் பெண்களை எங்ஙனம் கவர்வான்? பட்டுப் பீதாம்பரம் அணியும் அத்திமலைத்தேவனின் ஆடை அலங்காரங்களைக் காணத்தான் பெண்களிடம் நாட்டம் இருக்கும்!” — சாயா கூற, நவரத்னாதேவி சிரித்தாள்.

நவரத்னாவிடம் அன்பு செலுத்துவதில் கூட, அவனிசிம்மனுக்கும், ஜெயவர்மனுக்கும் போட்டிதான். ஒரு நாள், ஜெயவர்மன் ரத்னாவிற்குக் கதை சொல்லிக் கொண்டிருந்த போது, அவனிசிம்மன் அவளை அழைத்தான்.

“இரு பெரியண்ணா! கதையைக் கேட்டுவிட்டு வருகிறேன்!” என்று சொல்ல, அவனிசிம்மன் கோபித்துக் கொண்டு அன்று முழுவதும் அவளிடம் பேசவில்லை.

“உனக்கு ஜெயவர்மனைத்தான் பிடிக்கும். நான் அழைத்தால் வரமாட்டாய்!” என்று நிஷ்டூரத்துடன் புறக்கணிக்க, ரத்னா கேவிக்கேவி அழ, பிறகு அவனியிடம் அவளுக்காக ஜெயவர்மன் மன்னிப்புக் கேட்டதும்தான், ரத்னாவிடம் மீண்டும் பேச ஆரம்பித்தான், அவனிசிம்மன்.

ரத்னாவிடம் பழகுவதில் கூடச் சகோதரர்களிடையே பெரும் போட்டி எழ, ஒவ்வொருவரிடமும் தான் விசேடப் பாசத்தைக் கொண்டிருப்பதாக அவள் கூறிக் கொண்டு இருந்தாள். ஆனால் உண்மையில் ஜெயவர் மனிடம்தான் அவள் அதீதப் பாசத்தைக் கொண்டிருந் தாள். மற்ற அண்ணன்மார்கள் தாங்கள் ஓய்வாக இருந்த நேரத்தில் இவளை அழைத்துப் பேசுவார்கள். ஆனால் ஜெயவர்மன், இவளது தேவைகளை அறிந்து அவளை நாடி வருவான். ரத்னாவுக்குப் பிரச்னைகள் ஏற்படும் முன்னரே அதற்கான தீர்வுகளுடன் ரத்னாவுக்காகக் காத்திருப்பான். ரத்னாவும் தனது பிரச்னைகளின் தீர்வுகளுக்கு ஜெயவர்மனைத்தான் அணுகுவாள்.

இதனை அவனிசிம்மனும் அறிந்திருந்தான். எனவே தான், தான் ரணதிலகன் என்பவனை நேசிப்பதாக ஜெயவர்மனிடம் சொல்லாமல், தன்னிடம் வந்து கூறி, தனக்கு உதவுமாறு ரத்னா கேட்டபோது, அகமகிழ்ந்து போனாலும், மனதினுள் திகைத்துப் போனான், அவனிசிம்மன். தனது தேவைகளுக்கு ஜெயவர்மனிடம் தானே செல்வாள். தன்னிடம் எதற்காக வந்து நின்றாள்? — என்று அவனிசிம்மன் யோசித்துக் கொண்டிருந்த போது, ஜெயவர்மனே அங்கே வந்தான்.

"ரத்னா! எனக்கு நீ ரணதிலகனை மணப்பதில் விருப்பம் இல்லை. அவனது பூர்வீகம் குறித்து எனக்குப் பல சந்தேகங்கள் எழுகின்றன!" — என்று ஜெயவர்மன் கூற, உடனே ரத்னா தன்னிடம் வந்ததற்கான காரணத்தை அறிந்து கொண்டான், அவனிசிம்மன். ஜெயவர்மன் அவளது காதலை எதிர்க்கிறான்!

ஜெயவர்மன் எதிர்க்கிறான் என்கிற ஒரே காரணத் திற்காக, அவனிசிம்மனும், மற்ற சகோதரர்களும், ரத்னா — ரணதிலகன் காதலை அங்கீகரித்து அவர்களது திருமணத்திற்கும் தங்களது ஆதரவினை நல்கியிருந்தனர்.

மணமாகி முதல் இரவிலேயே தனது வாழ்க்கையை நவரத்னா முடித்துக் கொண்டாள் என்கிற செய்தி அவனிசிம்மனை நொறுங்கிப் போகச் செய்தது.

"எனது தந்தை... மன்னருக்குச் செய்தி தெரியுமா?". — கவலையுடன் கேட்டான்.

"இல்லை இளவரசே! மன்னரிடம் எதனைத் தெரிவிப்பது, எதனை மறைப்பது என்று தங்களுடன் கலந்தாலோசித்துவிட்டுப் பிறகு அறிவிக்கலாம் என்று நினைக்கிறேன்."

அவனிசிம்மன் அவரைக் கலக்கத்துடன் நோக்கினான்.

"கொலையை யார் செய்தார்கள்?" — ஈனஸ்வரத்தில் கேட்டான் அவனிசிம்மன்.

"தெரியவில்லை இளவரசே! அவருடன் இலங்கையைச் சேர்ந்த ஒரு புத்த பிட்சுவும் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார். அவர் பெயர் அபயகிரி என்பது மட்டும் தெரிகிறது. தரும நகரத்தில் தங்கியிருந்தவராம். கடிகையில் புத்த தத்துவத்தைப் போதிக்கும் புண்யமித்ராவிடம் கல்வி பயிலும் சீடராம்."

இளவரசன் உறைந்து போனான். "ஒரு இரவில், ஆலயத்தில் மூன்று சடலங்களா? ஒருவேளை வீரகொசுவன் அவர்களைக் கொன்றிருப்பானோ?" — அவனிசிம்மன் முணுமுணுத்தான்.

"மூன்று சடலங்கள் இல்லை, இளவரசே! நான்கு! ஆலயத்தில் காவல் புரிந்த வீரகொசுவனும் வெட்டிக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான். ஆனால் இந்தச் சம்பவங்களைக் காட்டிலும், நம்மை நிலைகுலையச் செய்யும் செய்தி ஒன்று உள்ளது, இளவரசே!" — மச்ச வாசுதேவர் பீடிகை போட, அவரது குழப்பம் நிறைந்த கண்களை நோக்கிய அவனிசிம்மனின் தேகம் அவனையும் அறியாமல் நடுங்கியது.

'சொல்லுங்கள்! எதையும் தாங்கும் இதயத்தைக் கொண்டவனாகக் காத்திருக்கிறேன்!' — என்று உரைப்பவனைப் போன்று, நின்று கொண்டிருந்த அவனிசிம்மன், அங்கிருந்த இருக்கையில் சரிந்தான்.

"அத்திமலையானின் தேவ உடும்பர அத்தி மேனி கடத்தப்பட்டது!" — மச்சவாசுதேவர் கூறியதும்.

பிரம்மன் அச்வமேதயாகத்தில் ஆவிர்பவித்து, விஸ்வ கர்மாவால் தேகம் சமைக்கப்பட்டு, சாணக்கியனால் ஆராதிக்கப்பட்டு, கரிகாலன், இளந்திரையன், சமுத்ர குப்தன், என மாபெரும் மன்னர்களால் போற்றப்பட்ட அத்திமலையானின் தேவ உடும்பரத்தைக் காண வில்லையா?

வடபுலத்தில் இருந்த தேவ உடும்பரமான போதி மரம் சிதைக்கப்பட்டதும், தட்சிணத்தில் இருந்த தேவ உடும்பரத்திற்கு ஆபத்து என்று ஒவ்வொரு பல்லவ மன்னன் பதவி ஏற்கும் போதும் அவர்களிடம் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

ஆனால், தேவ உடும்பர விருட்சம் இப்போது அத்தி மலையானின் பிரதிமையாக நிற்கும் போது அதனைக் கைப்பற்ற யார் துணியக்கூடும் என்று மனதினுள் நம்பிக் கொண்டிருந்தனர், பல்லவர்கள். ஆனால் இன்று ஒருவன் தேவ உடும்பரத்தைக் களவாடி விட்டானே!

"யாருடைய வேலை இது?" — கர்ஜித்தான் அவனிசிம்மன்.

"யாரை என்று குறிப்பிட்டுச் சொல்வது, இளவரசே! நேற்று நடுநிசியில் அரண்மனையின் வாயிலில், பஞ்சவர் சபையின் உறுப்பினர்கள் நின்றிருந்தனராம். அரண் மனையிலிருந்து வெளியே வந்த இளவரசர் ஜெயவர்மன் அவர்களுடன் பேசிவிட்டு அத்தியூர் சென்றுவிட்டாராம். இன்னும் அவர் திரும்பி வரவில்லை. காவலர்கள் அவரைத் தேடிச் சென்றிருக்கிறார்கள். அவர் சென்ற

பிறகு, பௌத்தபுரம் மன்னர் ரணதிலகர் தருமபுர அரண் மனையில் இருந்து பதைபதைத்துப் போய் வந்தாராம். தனது மனைவி இளவரசியார் நவரத்தினத் தேவியைக் காணவில்லை என்று கூறினாராம். இளவரசி குதிரையில் தனது நான்கு சீதன வெள்ளாட்டி*களோடு கிழக்கே சென்றதாகத் தரும நகரக் காவலாளிகள் கூறுகின்றனர். அதை ரணதிலகரும் ஊர்ஜிதப்படுத்தினார்" — மச்சவாசுதேவர் கூறினார்.

அவனிசிம்மன் திகைத்துப் போனான். தனது முதலிரவின் போது, நவரத்னதேவி, சீதன வெள்ளாட்டி களை அழைத்துக் கொண்டு எங்கே போனாள்? எதற்காகத் தனது உயிரையே மாய்த்துக் கொண்டாள்? அவள் காதலித்து விருப்பத்துடன் மணந்தவன்தானே ரணதிலகன்! ஜெயவர்மன் ஒருவன்தான் அவளது திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தான்.

'நினைத்தேன். ஜெயவர்மனின் மர்ம நடவடிக்கைகள் தான் அனைத்துக்கும் மூலக்காரணம் போலும்!' — மனதினுள் பொருமினான் அவனிசிம்மன்.

"அத்திமலையான் காணவில்லை என்கிற தகவலை ஜனங்கள் அறிந்து கொண்டனரா?" — அவனிசிம்மன் வினவினான்.

"இல்லை அரசே! ஆலயத் திருக்காப்பினை சார்த்தி விட்டோம். மேற்கு வாயிலையும் அடைத்துவிட்டோம். மன்னரிடம் தெரிவித்துவிட்டு, அவரது ஆணைப்படி நடக்கக் காத்திருக்கிறோம்." — மச்சவாசுதேவர் கூறினார்.

அவனிசிம்மன் கைகளைப் பின்பாகப் பிணைத்தபடி மேலுங்கீழும் நடந்தான்.

தந்தை சிம்மவர்மனுக்குச் சித்தபிரமை பிடித்தமை யால் எவ்வித முடிவுகளையும் எடுக்கும் நிலையில்

* சீதன வெள்ளாட்டி - சீதனமாக கொடுக்கப்பட்ட பணி யாளர்கள்.

இல்லை. மக்களின் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றுப் பஞ்சவர் சபையின் மூலம் தனது அதிகாரத்தைச் செலுத்தி வந்த ஜெயவர்மனும் எங்கு சென்றான் என்பது மர்மமாக உள்ளது. ராஜ்யலக்ஷ்மி கையில் மகுடத்துடன் இவனை நோக்கி நடந்து வருகிறாள். இனி இவன்தான் பல்லவ நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க உள்ளான். இவன் பேசுவதும், செய்வதும்தான் இனி பல்லவத்தின் சட்டதிட்டங்கள்.

பல்லவ ராஜ்யத்தின் ஜீவநாடியே அத்திமலையானும் அவனது ஆலயத்தில் உள்ள தேவ உடும்பர பிரதிமையும் தாம். பல்லவ மன்னர்களுக்கு ஆற்றலையும், அதிகாரத்தையும், வளங்களையும் வாரி வழங்கும் அத்திமலையானே காணாமல் போய்விட்டான் என்கிற போது, பல்லவத்தின் எதிர்காலமே இனி கேள்விக் குறியாகிவிட்டது. அத்திமலையானைக் காணவில்லை என்றால், கலவரம் வெடிக்கும். பல்லவத்தின் அஸ்திவாரமே ஆடிவிடும். என்ன செய்வது..?

"இத்தனை விபரீதங்களுக்கும் காரணம் ஜெயவர்மன் தான்!" — சினத்துடன் அவனிசிம்மன் கூற, மச்சவாசு தேவர் அதிர்ந்து போனார்.

"இளவரசே! அத்திமலைத்தேவன் பிரதிமை காணாமல் போனதற்கும், இளவரசர் ஜெயவர்மனுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?" — திகைப்புடன் கேட்டார்.

"தலைமை அமைச்சரே! சிந்தித்துப் பாருங்கள்.. அத்தியூர் ஆலயத்தில் மூன்று விபரீதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. முதலில் எனது ஆருயிர் தங்கை நவரத்னா தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள். தற்கொலை என்று நாம் கருதுகிறோம். அது கொலையாகக் கூட இருக்கலாம். நவரத்னா ரணதிலகனை காதலித்ததையோ திருமணம் செய்து கொண்டதையோ ஜெயவர்மன் விரும்பவில்லை. குறிப்பாக, எங்கள் ஆதரவில் அவளது

திருமணம் நடந்தேறியதால், அவள் மீது கடும் கோபம் கொண்டிருந்தான். தனது சொல்லை அவமதித்து, ரணதிலகனை மணந்து கொண்டதால் அவளை வெறுத்துவிட்டிருந்தான். எனவேதான், அவளைத் தற்கொலைக்குத் தூண்டிவிட்டிருக்கிறான். ஜெயவர்மன் அத்தியூருக்குச் சென்றிருக்கிறான். அந்த ஆலயத்தின் ரத்ன மண்டபத்தில் நவரத்னாவின் உயிரற்ற உடல் ஊசலாடிக் கொண்டிருந்தது என்றால், நவரத்னாவை ஜெயவர்மன்தான் ஏதாவது செய்திருக்க வேண்டும்!" மச்சவாசுதேவரின் கண்களினுள் ஆழமாகப் பார்த்தான், அவனிசிம்மன்.

"அடுத்ததாக, விஜயவர்மனின் கொலைக்கு வருவோம். விஜயவர்மன் எனது அத்தையின் இளைய மகள் சாயா தேவியைக் காதலித்தான். ஜெயவர்மனும் அவளைக் காதலித்தான். அவன் அவளை மணந்து கொண்டாலும், திருமணத்திற்கு முன்பே அவளது காதல் தொடர்பாக ஜெயனுக்கும், விஜயனுக்கும் இடையே தகராறு மூண்டிருக்கிறது. அவன் மீது வன்மம் கொண்டிருக்கிறான். கடிகையைச் சேர்ந்தவர்கள், 'இனி எனது சிற்றப்பன் விஷ்ணுவர்மனுக்கு ஒரு மகன்தான்!' என்று ஜெயவர்மன் சபதம் இட்டதை என்னிடம் தெரிவித்தார்கள். நீங்கள் குறிப்பிடும் அபயகிரி என்கிற அந்தப் புத்த பிட்சுவுடன் ஜெயவர்மன் தேவ உடும்பரத்தைக் கவர்வதற்காகத் திட்டம் தீட்டியிருப்பான். விஜயவர்மன் அதனை அறிந்து அவனைத் தடுத்திருப்பான். விஜயவர்மன் அபயகிரியைக் கொன்றிருப்பான். ஏற்கெனவே தம்பியின் மீது வன்மம் கொண்டிருந்த ஜெயவர்மன் விஜயவர்மனைக் கொன்று, தேவ உடும்பர அத்தி மலையானைக் கவர்ந்திருப்பான்." — அவனிசிம்மன் கூறினான்.

"இளவரசே! தேவ உடும்பர பிரதிமை உயரமானது. கனமும் கொண்டது. அதனை ஒருவரால் எப்படி எடுத்துச், செல்ல முடியும். அப்படியே ஜெயவர்மன்

அதனை எடுத்துச் சென்றிருந்தாலும், அவர் அதனை வைத்துக் கொண்டு என்ன செய்வார்? சிலையைக் களவாடுவதன் நோக்கம்தான் என்ன?"

"உமக்குத் தெரியாததா, தலைமை அமைச்சரே! தேவ உடும்பர மரம் அதிகம் கனமில்லாதது. கற்சிலையைப் போன்று கனக்காதது. பத்துப் பதினைந்து பேர் சேர்ந்தாலே போதும், அதனை எளிதாகச் சுமந்து சென்றுவிடலாம். சரியாகப் பஞ்சவர் சபையைத் தனக்கு அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான். இந்தச் சதிகளை அவனும், பஞ்சவர் சபையும் சேர்ந்துதான் செய்திருக்கிறார்கள். தேவ உடும்பர சிலையைக் கடத்துவதற்கு இவர்களுக்கு அதிக நேரம் பிடிக்காது. முத்ரன் மற்போர் வீரன்! யானை பலம் கொண்டவன்! அவன் ஒருவனே சிலையைத் தூக்கிச் செல்லும் ஆற்றலைப் பெற்றவன். போதாத குறைக்கு வரதநாராயண நம்பியும் பஞ்சவர் சபை உறுப்பினர்தானே. பௌத்த சமயத்தைச் சேர்ந்த விசாகமித்திரன், விஸ்வக்ஷேனன் மற்றும் எனது தம்பி ராஜவர்மன் அனைவரும் இந்தச் சதியில் பங்கேற்றிருக்கக் கூடும்."

மலைத்துப் போய் அவனிசிம்மனையே வெறித்துக் கொண்டிருந்தார், வாசுதேவர்.

"தேவ உடும்பர சிலையை ஜெயவர்மன் களவாடுவதற்கு நோக்கம் இருக்க வேண்டும் என்றீர். நோக்கம் உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படுகிறது. தாங்கள்தான் கவனிக்கத் தவறிவிட்டீர்கள். ஜெயவர்மனுக்கு பட்டத்து இளவரசனாகிய என் மீது பொறாமை உண்டு. எனது தந்தையே பாலகாடம் போரின் போது 'ஜெயவர்மன் பட்டத்து இளவரசனாக இருந்திருக்கக் கூடாதா என்று தான் நினைத்த தருணங்கள் உண்டு' என்று பேசவில்லையா..? அவன் மனத்தினுள் தான் மன்னனாகப் பல்லவத்தை ஆட்சி செய்ய வேண்டும்

என்கிற எண்ணம் துளிர்விட்டது. எனவேதான், நேர்முறையில் தனது அதிகாரத்தைச் செலுத்த முடியாது என்று, அத்தியூருக்கும், ஒத்தாடைக்கும் இடையே பிரச்னைகளை ஏற்படுத்தி, பஞ்சவர் சபை ஒன்றை அமைத்து, அதை தனது ஆதரவாளர்களால் நிரப்பி, கொல்லைப்புறத்து வழியாக ராஜாங்கத்தில் நுழைந்து அதிகாரம் செய்து வருகிறான். தேவ உடும்பரத்தைக் கொண்டு, மறைவாக அஸ்வமேதயாகம் செய்து சக்கரவர்த்தியாகத் திகழப் பார்க்கிறான். அதற்குத்தான் அவன் மக்கள் போற்றி ஆராதிக்கும், அத்திமலையானை கடத்தியிருக்கிறான். அவனுக்குத் துணை போகின்றனர், சாக்கிய பௌத்தர்கள். அவர்களுக்கும் தேவை தேவ உடும்பரம்தானே. எனவேதான் அவன் தன்னைத் தடுத்த நவரத்னாவையும், விஜயவர்மனையும் கொலை செய்துவிட்டு, தேவ உடும்பரத்தைக் கடத்தியிருக்கிறான். இப்போது புரிந்ததா அவனது நோக்கம்?" — அவனி சிம்மனின் குரலில் காழ்ப்புணர்ச்சி மிகுந்து காணப் பட்டது.

மச்சவாசுதேவர் ஸ்தம்பித்துப் போய் நின்றார். ஜெயவர்மன் இப்படியெல்லாம் செய்யக்கூடியவன் தானா? அவரால் நம்பவும் முடியவில்லை. அவனி சிம்மனின் கூற்றை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"என்ன செய்யலாம் இளவரசே?" — ஒன்றும் தோன்றாத நிலையில், அவனிசிம்மனை குழப்பத்துடன் நோக்கினார், மச்சவாசுதேவர்.

"என்ன செய்வதா? மன்னரிடமும், மக்களிடமும் நடந்த சம்பவங்களை இப்போதைக்கு மறைப்போம். ஜெயவர்மன் எங்கிருந்தாலும், அவனைத் தேடிக் கண்டு பிடிக்கும்படி படையினரை எட்டுத் திக்குகளிலும் அனுப்புங்கள். தேவ உடும்பர சிலையை மீண்டும், சந்நிதியில் ஸ்தாபிதம் செய்தே ஆக வேண்டும். மக்களின் நம்பிக்கையை அல்லவா ஜெயவர்மன் கடத்திச் சென்றிருக்கிறான்." — அவனிசிம்மன் கூறினான்.

"உத்தரவு இளவரசே!" — வாசுதேவர் கூறினார்.

"பஞ்சமர் சபை உறுப்பினர்கள் அனைவரையும், எனது சிற்றப்பன் மகன் ராஜவர்மன் உள்படக் கைது செய்து சிறையில் அடையுங்கள். தேவ உடும்பரத்துடன் ஜெயவர்மன் எங்கே சென்றான் என்கிற தகவலை அவர்கள் கக்கும் வரையில் சித்திரவதை செய்யுங்கள்.." — அவனிசிம்மன் சாளரத்தின் அருகே சென்று ஒத்தாடையான் கோயில் கோபுரத்தை வெறித்தான்.

"உத்தரவு இளவரசே!" — மச்சவாசுதேவர் தலையசைத்தார்.

"விஜயவர்மன் மற்றும் நவரத்னாதேவியைக் கொன்று விட்டுத் தப்பிச் சென்ற ஜெயவர்மனை உயிருடனோ, பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்குப் பரிசினை அறிவியுங்கள்." — அவனிசிம்மனின் குரலில் ஆவேசம் கொப்பளித்தது.

மச்சவாசுதேவர் திகிலில் உறைந்து போய் அவனி சிம்மனின் அகன்று விரிந்த தோளினை வெறித்துப் பார்த்தார். மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்த ஜெய வர்மனை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவர்களுக்குப் பரிசு என்று அறிவிப் பினைச் செய்தால், வேறு வல்லடியே வேண்டாம். நடைபெற்றிருக்கிற விபரீதங்கள் போதாது என்று நாடே பிளவுபடாதா?

"தேவ உடும்பர பிரதிமை கிடைக்கும் வரை ஆலயத்தில் அவசரச் செப்பனிடும் திருப்பணிகள் இருப்பதாகக் கூறி ஆலயத்தை மூடி வையுங்கள்." — அவனிசிம்மன் தொடர்ந்து கூறினான்.

மச்சவாசுதேவர் திகைப்புடன் அவனிசிம்மனைப் பார்த்தார். அதுவரையில், 'உத்தரவு இளவரசே' என்கிற இரு சொற்களைக் கிளிப்பிள்ளையாக ஒப்புவித்துக் கொண்டிருந்த மச்சவாசுதேவர், அவனிசிம்மனின் இந்த உத்தரவினைக் கேட்டதும் பதைபதைத்துப் போனார்.

"இளவரசே! நடக்கக்கூடிய காரியமா இது? அத்தி மலையான் இல்லாத ஆலயத்தைப் பூட்டி வைத்துச் செப்பனிடும் பணிகள் நடப்பதாகக் கூறினால், யார் ஏற்பார்கள்? அத்திமலையானை தரிசிக்காமல் ஒரு காரியத்தையும் தொடங்குவதில்லை நம் மக்கள். ஆலயத்தில் நான்கு மரணங்கள் சம்பவித்துள்ளன. உடனே செப்பனிடும் பணிகளுக்காக ஆலயம் மூடப்படு மானால், மக்கள் சந்தேகம் கொள்ளமாட்டார்களா? ஜெயவர்மன் கொலைகளைச் செய்துவிட்டு, தேவ உடும் பரத்துடன் தப்பிச் சென்றுவிட்டான் என்று சொன்னால், மக்கள் ஏற்பார்களா? அவன் மீது அபிமானத்தைக் கொண்டவர்கள். போராட்டங்கள் வெடிக்கலாம். பஞ்சவர் சபையினர் மக்களின் ஆதரவைப் பெற்றவர்கள். அவர்களைக் கைது செய்தாலே கலவரம் ஏற்படலாம். நாம் நிதானத்தைக் கடைப்பிடிப்பதே உத்தமம்."

சாளரத்தின் இருபுறச் சுவர்களிலும் கையை ஊன்றி வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனிசிம்மன், திரும்பித் தலைமை அமைச்சரை உறுத்துப் பார்த்தான்.

"இப்போதுள்ள குழப்பமான சூழ்நிலையில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது எங்ஙனம்..? நான்கு உயிர்கள் போனதற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது தான். ஆனால் தேவ உடும்பர பிரதிமையே காணவில்லை என்கிற போது, அதை எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்கிற அவசரம் இதில் அடங்கி யிருக்கும் போது, நிதானமாக எப்படிச் செயல்படுவது?"

அவனிசிம்மனின் மனதில் சினம் பொங்கியது.

"வீரகொசுவனின் கையால் விஜயவர்மனும், அபயகிரியும் மாண்டனர் என்று அறிவிப்போம். இளவரசியார் ஆலயத்தில் தற்கொலை செய்து கொண்டதை மறைத்து, அரண்மனை உப்பரிகையில் இருந்து தவறி விழுந்து இறந்தார் என்று அறிவிப்போம்.

ஜெயவர்மன் காணவில்லை என்பதை மட்டும் அறிவிப்போம். ஆனால் அத்திமலைத்தேவன் பிரதிமை காணவில்லை என்பதை மட்டும் அறிவிக்காமல் விடுவோம்" — மச்சவாசுதேவர் கூற, அவரை வியப்புடன் பார்த்தான், அவனிசிம்மன்.

"ஆலயத்திற்கு வரும் மக்கள் அத்திவரதன் இல்லாத வெறும் சந்நிதியையா தரிசிப்பார்கள்? அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் தருவது?" — அவனிசிம்மன் ஆயாசத்துடன் இருக்கை ஒன்றில் சரிந்து, தனது இருகைகளால் தலையைப் பற்றிக் கொண்டான்.

"நாம் சந்நிதியை வெறுமையாக ஏன் விடப் போகிறோம். காண்பதற்கு அத்திமலையானைப் போன்றே இருக்கும் ஒரு பிரதிமையை ஆலயத்தின் பிரதான சந்நிதியில் பிரதிஷ்டை செய்துவிடுவோம். தேவ உடும்பர அத்திமலையான் கிடைக்கும் வரை, அவரே அத்தி மலைத்தேவனாக அருள்பாலிக்கட்டுமே!" — மச்சவாசு தேவர் கூற, யோசனையில் ஆழ்ந்தான் அவனிசிம்மன்.

"அம்மாதிரி அத்திமலைத்தேவனைப் போன்ற ஒரு பிரதிமை கிடைக்க வேண்டுமே?" — கவலையுடன் கேட்டான் அவனிசிம்மன்.

"இளவரசே! ஸ்ரீவர மலை என்னும் மாலிருஞ்சோலை மலையின் உச்சியில் வரதநாராயணப் பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார் அல்லவா?"

"ஆம்! நானும் அவரை தரிசித்திருக்கிறேன்!" — அவனிசிம்மன் கூறினான்.

"அவர் காண்பதற்கு அச்சாக நமது அத்திமலைத் தேவனைப் போன்றே இருப்பார். அவரை இங்கே கொண்டு வந்து, அத்திமலையானாக இருத்திவிடுவோம். உண்மையான தேவ உடும்பர அத்திமலையான் கிடைக்கும்வரையில் அவரை அத்திமலைத்தேவனாக

மக்கள் வழிபடட்டும்" — மச்சவாசுதேவர் கூற, அதிர்ந்து போனான், அவனிசிம்மன்.

"தலைமை அமைச்சரே! பல்லவ மன்னருக்குத்தான் சித்தம் பேதலித்துவிட்டது என்று நினைத்தேன். பல்லவத் தலைமை அமைச்சருக்குக் கூடவா? என்ன பேசுகிறோம் என்பதை உணர்ந்துதான் பேசுகின்றீரா? காணாமல் போனது அத்திமலையான் தேவ உடும்பர பிரதிமை. வரதநாராயணப் பெருமாளோ கற்சிலையாகத் தோன்றுகிறான். கற்சிலையை வைத்துத் தேவ உடும்பர அத்திமலையான் என்றால் மக்கள் எங்ஙனம் ஏற்பார்கள்?" — அவனிசிம்மன் கேட்டான்.

"இளவரசே! அத்திமலையானை முழு பக்தியுடனும், பயத்துடனும் தொழுபவர்கள் அவன் கற்சிலையா, தேவ உடும்பரமா என்று ஆய்வு செய்து கொண்டிருக்க மாட்டார்கள். கருத்திலே பக்தி இருக்கும் போது கண்ணில் கல்லுக்கும், மரத்திற்கும் வேறுபாடு காண மாட்டார்கள். பட்டர்களிடம் முழு அலங்காரத்தைச் செய்யச் சொல்லி, நெற்றியில் திருமண் காப்பைச் சற்றே அகலமாகச் சாற்றி, அவனை அத்திமலையானாக வணங்குவோம். இதனிடையில் ஜெயவர்மனையும், தேவ உடும்பர பிரதிமையையும் கைப்பற்றி மீண்டும் ஸ்தாபிதம் செய்வோம்." — மச்சவாசுதேவர் கூறினார்.

"நல்லது! காக்கும் கடவுளான நமது அத்தி மலையானையே ஜெயவர்மன் கடத்திவிட்டான் என்பதை மக்கள் ஏற்கமாட்டார்கள். அவனை உடனடியாகத் தேடிக் கண்டுபிடித்து, தேவ உடும்பர அத்திமலைத் தேவனை மீட்போம். அதுவரையில், நீங்கள் சொன்ன யோசனையை உடனே செயலாற்றுங்கள்." — அவனிசிம்மன் கூற, மச்சவாசுதேவர் உடனடியாகத் தலையசைத்துவிட்டுப் புறப்பட்டார்.

பிரக்ஞுதாராவினால் பிரக்ஞையை இழந்து சித்த பிரமை லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த

சிம்மவர்மனிடம் எப்படி நடந்த விபரீதங்களை விவரிப்பது என்கிற யோசனையுடன் அவனிசிம்மன் தந்தையின் அறையை நோக்கி நடந்தான்.

மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஆலய வளாகத்தில் இறந்து போனதாலும், வீரகொசுவனின் மரணத்தாலும், அத்திமலையானின் ஆலயத்தில் அன்று தரிசனம் கிடையாது என்று அறிவிக்கப்பட்டது. நவரத்ன பல்லவி மற்றும் விஜயவர்மன் ஆகியோரின் தகனத்திற்குப் பிறகு, புண்யாவசன சாங்கியங்கள் முடிந்த பிறகு மறுநாளே ஆலயத்தில் ஆராதனைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே, அவனை தரிசிக்கா மலேயே மக்கள் அன்றைய தினத்தைக் கழித்தனர்.

வீரகொசுவன் இறந்துவிட்டதால், புதிய வீரகொசுவன் நியமிக்கப்படும் வரை சீவேலி நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஒத்தாடை அரண்மனை சோகத்தில் ஆழ்ந்திருந்தது. விஜயவர்மனின் மரணத்தைவிட, நவரத்னாவின் தற்கொலையைவிட, மக்களை மிகவும் பாதித்திருந்தது ஜெயவர்மனைப் பற்றிய மர்மம்.

அவனிசிம்மனின் ஆதரவாளர்களும் மக்களிடையே நின்று, அரச குடும்பத்துக் கொலைகளுக்குக் காரணம், ஜெயவர்மன். அவர்களைக் கொன்றுவிட்டு, தலைமறை வாகிவிட்டான் என்கிற கருத்தினைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

'இது உண்மையாக இருக்குமோ?' — என்று மக்கள் குழம்பிக் கொண்டிருக்க, சந்தடியில்லாமல், பஞ்சவர் சபையினரைக் கைது செய்தனர், காவல் படையினர்.

நவரத்னா, விஜயவர்மன் ஆகியோரது சடலங்கள் ஊர்வலமாக ராஜவீதியின் வழியே எடுத்துச் செல்லப் பட்டுத் தும்புருவனத்தில் தகனம் செய்யப்பட்டது. அஸ்வமேத யாகம் நடைபெற்ற பூமியில் அவர்களைத்

தகனம் செய்தால், நற்கதியை அவர்கள் அடையக்கூடும் என்று சொல்லி, ராஜகுரு அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

நாள் முழுவதும் சோகத்தில் கழித்த அரச குடும்பத்தினர், ஜெயவர்மன் எங்கே என்று மனதினுள் கேட்டபடி உறங்கச் சென்றுவிட்டனர். மக்களும், மனதில் சோகத்துடனும், ஜெயவர்மன் மீண்டும் வந்துவிட வேண்டும் என்கிற பிரார்த்தனையுடனும் உறங்கச் சென்றனர்.

நடுநிசி —

ஒரு பெரிய வண்டியை இழுத்தபடி மூன்று யானைகள் மாலிருஞ்சோலை என்கிற ஸ்ரீவர மலையின் மீது மெதுவாக ஏறின. உச்சி வரை வண்டி போகாத காரணத்தால், நரசிங்கப் பெருமான் ஆலயத்தருகேயே யானைகள் நின்றன. சுமார் முப்பது பேர் மலையுச்சியில் நின்று கொண்டிருந்தனர். அந்த மலையுச்சியில் இருந்த வரதநாராயணப் பெருமாள் கோயிலைச் சுற்றி ஆங்காங்கே தீப்பந்தங்கள் ஒளிர்ந்தன. யானைகளைப் பார்த்ததும், அவர்களிடையே நின்றிருந்த தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் தனது மேல்துணியைக் கொடியாக அசைத்துக் காட்ட, அந்த முப்பது பேரும் சேர்ந்து ஆலயத்தின் உள்ளே இருந்த வரதநாராயணப் பெருமாள் சிலையைச் சுமந்து வந்து மலையுச்சியில் இருந்து இறங்கத் துவங்கினர். நரசிங்கப் பெருமாள் ஆலயத்தின் முன்பாக நின்ற வண்டியில் சிலை ஏற்றப்பட, அந்த மூன்று யானைகளும் அத்தியூருக்குப் புறப்பட்டன.

பொழுது புலர்ந்தது.

விஸ்வரூபப் பூசைக்கு முன்பாகப் புண்யாவசன சாங்கியங்கள் செய்வதாகக் கூறி, வரதநாராயணப் பெருமாள் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அத்திமலையானை தரிசிப்பதாக எண்ணி மக்களும் வரதநாராயணனை தரிசித்துக் கொண்டிருந்தனர்.

அனந்த பட்டர் பூசனைகள் செய்தாலும், அவரது மனம் கனத்தது. வரதநாராயணனை அத்திவரதனாகத் தரிசிக்கிறோம் என்கிற எண்ணம் அவருக்கு வேதனையைத் தந்தது. தேவ உடும்பர அத்திதான் காஞ்சிக்குப் பெருமை. வளங்களை வாரித்தரும் அத்திவரதனை இழப்பதற்கு மனம் வருமா?

வரதநாராயணப் பெருமாள் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தார். 'அத்திமலையானே! சீக்கிரம் திரும்பி வந்து உன் மலையில் நில். நான் எனக்குப் பிரியமான எனது மலைக்குத் திரும்பிப் போக வேண்டும்! நீயாக நான் எவ்வளவு நாட்கள் காட்சிதருவது?' — என்கிற பாவனையில் நின்று கொண்டிருந்தார்.

'அத்திமலையானே! எப்போது நீ திரும்பி வருவாய்?' — அனந்த பட்டர் தனக்குள் கேட்டுக் கொண்டிருந்தார். தனக்குள் கேட்டு என்ன பயன்? வீட்டில் இருக்கும் மகள் அஞ்சிலை அணங்கைக் கேட்டிருந்தால் அவளாவது ஏதாவது பதிலைத் தந்திருக்கக் கூடும்.

ஜெயவர்மன் அவளிடம் ஒரு சுவடியைக் கொடுத்திருந் தானே. அதில் ஏதோ தகவல் உள்ளதே..!

அங்ஙனமே, அனந்த பட்டர் மகள் அஞ்சிலை அணங்கிடம் கேட்டிருந்தாலும் அவள் நிச்சயம் பதிலைக் கூறியிருப்பாள் என்று தோன்றவில்லை. காரணம், அவளே அந்தச் சுவடியைப் படிக்கவில்லையே. ஜெயவர்மன் காணாமல் போவதற்கு முன்பாக அவளிடம் ஒப்படைத்திருந்த சுவடிகளைப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறாளே தவிர, அதை வாசித்தாள் இல்லை. பார்க்கலாம்! ஜெயவர்மன் மீண்டும் வந்து அவளைச் சந்தித்துச் சுவடியைத் திருப்பிப் பெறுகிறானா என்பதை.

# 2. கடலில் மிதந்த சிலை!

'கடல் மின்னல் (海闪电)'. என்கிற பொருளைத் தரும், 'ஹாய் ஷாண்டியன்' என சீன மொழியில் பெயரிடப்பட்டிருந்த அந்தக் கலம், மாவிலக்கை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு இலங்கையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சீன மாலுமிகள் சிலர் அந்தக் கலத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். இலங்கையில் இருந்து *பினாகத் தீவு, வேங்கை தீவு, காம்போஜம்,

* பினாகத் தீவு- தற்போதைய பினாங்.

வேங்கை தீவு- தற்போதைய சிங்கப்பூர் (According to Singapore's official portal, sometime in its history, the name of Temasek was changed to Singapura. The Sejarah Melayu (Malay Annals) contains a tale of a prince of Srivijaya, Sri Tribuvana (also known as Sang Nila Utama), landed on Temasek (வேங்கைத் தீவு) after surviving a storm. According to the tale, the prince saw a strange creature, which he was told was a lion; believing this to be an auspicious sign, he decided to found a settlement called Singapura, which means 'Lion City' in Sanskrit. It is unlikely there ever were lions in Singapore, though tigers continued to roam the island until the early 20th century. However, the lion motif is common in Hindu mythology, which was dominant in the region during that period (one of the words for 'throne' in the Malay language is 'singgasana', meaning 'lion's seat' in Sanskrit), and it has been speculated that the 'Singapura' name, and the tale of the lion, were invented by court historians [1]The Greco-Roman astronomer Ptolemy (90-168) identified a place called Sabana at the tip of Golden Chersonese (believed to be the Malay Peninsula) in the second century.[2] The earliest written record of Singapore may be in a Chinese account from the third century, describing the island of

இலாகத் தீவு வழியாக நான்ஹாய் இல்ஹா போர்முசாய்** தீவுக்குச் செல்ல வேண்டும்.

கடல் மின்னல் என்கிற அந்தக் கலம் இலங்கை தீவைக் கடந்து கிழக்காகத் திரும்பி வேங்கை தீவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. கலத்தில் மேல்தளத்தில் கண்களை மூடி அமர்ந்திருந்தனர், பிரக்ஞாவும், ஜினிங்கும். அவர்கள் தங்களது நேத்திரங்களை மூடி தியானத்தில் இருக்கும் போதுதான், அவர்களது கண்கள் நோக்கு வர்மத்தைக் கொண்டு மற்றவர்களை வசீகரிக்காமல் அமைதியாக இருக்கும் என்பதை உணர்ந்திருந்த ஜெயவர்மன், கலத்தின் கீழ்த்தளத்திற்கு இறங்கும் படிகளில் அமர்ந்து அந்தத் தேக்கு மரப் பெட்டகத்தையே வெறித்துக் கொண்டிருந்தான். கண்கள் அந்தப் பெட்டகத்தையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருக்க, சிந்தனை அவனது எதிர்காலத்தை எண்ணிச் சுழன்று கொண்டிருக்க, செவிகள் மட்டும், மேல்தளத்தில் தியானத்தில் இருந்த இருவரும் கண் விழித்துவிட்டனரா என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தது.

தந்தை சிம்மவர்மனை மனம் எண்ணியது. ரணதிலகனும், பிரக்ஞாவும் சோழம் செல்வதற்காக அனுமதி கேட்டு ஒத்தாடை அரண்மனைக்குள் நுழைந்த அன்றே அவரைக் குறி வைத்திருக்க வேண்டும். போர்க்களத்தில் எதிரிகளுக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்த சிம்மவர்மன் பிரக்ஞுதாராவின் முன்பாகப் பூனைக்குட்டியாகப் பம்மியது ஜெயவர்மனுள், ஆத்திரத்தையும், திகைப்பினையும் ஏற்படுத்தின. பிரக்ஞா மிகவும் ஆபத்தானவள். அவளது நோக்கம் அத்தி

Pu Luo Chung (蒲罗中).. தமிழில் இதனை வேங்கைதீவு என்று அழைத்தனர்.

** நான்ஹாய் இல்ஹா போர்முசாய் என்பது 'தெற்கு கடலின் அழகிய தீவு' என்று சீன மொழியில் பொருள் கிடைக்கிறது.

மலையானின் பிரதிமை என்பதை விரைவிலேயே கண்டு கொண்டான்.

ரணதிலகனைக் காதலித்து அவனைத்தான் மணமுடிப்பேன் என்று கூறிய நவரத்னா, இவன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கேட்காமல், அவனிசிம்மன், தானவர்மன் மற்றும் பீமவர்மனின் ஆதரவோடு அவனைத் திருமணம் செய்து கொண்டதும் ஜெயவர்மனுக்கு ஊர்ஜிதமானது. பிரக்ஞா பல்லவ அரச குடும்பத்தில் ஒவ்வொருவரையாகத் தன் வசப்படுத்து கிறாள் என்பது புரிந்து போனது.

பஞ்சவர் சபை உறுப்பினன் விஸ்வக்ஷேனன்தான் தகவலை இரகசியமாகச் சேகரித்து ஜெயவர்மனுக்கு அளித்திருந்தான்.

கௌதம புத்தருக்குப் பிறகு அடுத்த புத்தரான தாருக புத்தர் அவதரிப்பதற்குத் தேவ உடும்பரம் மிக அவசியம். பெரும் ஆற்றல்களைத் தன்னுள் வைத்திருக்கும் தேவ உடும்பரத்தைத் தேடி மகாயானா மற்றும் தெரவாட பௌத்தர்களிடையே பெரும் போட்டி மூண்டிருக்கிறது. தேவ உடும்பரம் காஞ்சியில் இருப்பதை அறிந்து, கேயூராவின் வழி வந்த பிரக்ஞுதாரா அதனைக் களவாடுவதற்கு வந்திருக்கிறாள் என்பதனைப் புரிந்து கொண்டான்.

புத்த கயையின் தெரவாடா பிரிவு தலைவர் சம்பூர்ண மித்ராவும் இலங்கை அரசனின் உதவியோடு தேவ உடும்பரத்தைக் களவாட முயற்சித்துக் கொண்டிருப்பதும் புலப்பட்டது.

காம்போஜ தரும நகரத்தின் இளவரசி ககனாவும், அவளுடன் வந்திருந்த சோமஸ பண்டிதரும் தங்களது தேவராஜா மார்க்கத்தின் தெய்வமான தேவராஜனை குறிவைத்திருப்பதும் புரிந்தது. எனவேதான் தனது அரச குடும்பத்தைப் பிரக்ஞுதாராவின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும், தான் வணங்கும் அத்தி

மலையானையும் காக்க வேண்டும் என்கிற தீர்மானத்தில் இருந்தான்.

பஞ்சவர் சபையின் உதவியுடன் அத்திமலையானின் பிரதிமையை எப்படிக் காப்பது என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான். அரச குடும்பத்தையே தனது நோக்கு பார்வையால் பந்தனம் செய்திருந்த பிரக்ஞுதாராவுக்கு, கோயில் பட்டர்களையும், காவலர்களையும் வசியம் செய்து அவர்கள் கையாலேயே தேவ உடும்பர பிரதிமையைப் பெறுவதா பெரும் காரியம்..?

பிரக்ஞுதாரா ஆபத்தானவள்! தனது வீரமும், பராக்கிரமமும், தந்திரமும் அவள் முன்பாகச் செல்லாது என்பதை உணர்ந்து கொண்டான் ஜெயவர்மன். இவனது வாளைச் சுழற்றி இவன் வீசுவதற்கு முன்பாகவே, தனது கூர்மையான கண்களைச் சுழற்றி இவனை வசியப்படுத்தி விடுவாள் என்பதைப் புரிந்து கொண்டு அவளை எப்படி எதிர்கொள்வது என்று யோசித்த போது, விஸ்வக் க்ஷேனன் கண்களைக் கருமை வண்ணத் துணியால் கட்டிக் கொண்டால், நோக்கு வசியத்தில் சிக்காமல் தப்பிக்கலாம் என்று புண்யமித்ரா என்கிற பிக்கு சொன்னதாகக் கூற, தனது வசம் கரிய துணி ஒன்றைப் பத்திரப்படுத்தி இருந்தான். அத்திமலையான் ஆலயத்தில் பிரக்ஞுதாராவையும், ஜினிங்கையும் ஏமாற்றி அவர்களைச் சிறைபிடிக்கவோ, அல்லது கொன்றோ, அத்திமலையானைக் காக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் ஆலயத்திற்குச் சென்றிருந்தான். ஆனால் அவனே எதிர்பார்த்திராத வகையில், நவரத்னாவின் தற்கொலை, விஜயவர்மன் பல்லவத்திற்கு இழைத்திருந்த துரோகம், அவனது கொலை என்று அடுக்கடுக்காகத் தொடர்ந்து நிகழ்ந்த விபரீதச் சம்பவங்களால், தனது திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல், அவர்களைத் தனது பின்பாக ஓடி வரச் செய்திருந்தான். அவர்களை ஆலயத்தில் இருந்து

அப்புறப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் ஒன்றே அப்போது மேலோங்கி இருந்தது. வேறு எது பற்றியும் சிந்திக்கவில்லை.

அங்ஙனம் அவன் ஆலயத்தைவிட்டு ஓடியதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. ரத்ன மண்டபத்தில் பிணமாகத் தொங்கிய தங்கை நவரத்னாதேவியின் கரத்தில் இருந்த அந்த முக்கியச் சுவடியை உடனடியாகப் பத்திரப்படுத்த வேண்டும் என்கிற உணர்வும் அவன் ஓடிச் சென்றதற்கு ஒரு காரணம்.

சிந்தனை செய்தபடி ஜெயவர்மன் மேல்தளத்தைக் கவனித்தான். இன்னும் பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் தியானத்தில் இருப்பதை உணர்ந்தவன், தனது சிந்தனை புரவியைத் தொடர்ந்து மேயவிட்டான்.

பிணமாகத் தொங்கிய தங்கை நவரத்னாவின் கையில் கிடைத்த ஓலையை மீண்டும் நினைவுபடுத்திப் பார்த்தான். ஓலையில் வரையப்பட்டிருந்த வாசகங்கள் அவன் கண்களின் முன்பாக நிழலாடின.

'அண்ணா! இந்த முடிவை எடுத்ததற்கு என்னை முதலில் மன்னித்துவிடு. நமது பல்லவத்திற்கும், அத்திமலைத்தேவனுக்கும் கேடு விளைவிக்கும் ஒரு கொள்ளையனுக்கு மனைவியாகத் திகழ்கிறேன். நீ அன்றே என்னை எச்சரித்தாய். நான்தான் கேட்கவில்லை. கேட்கும் நிலையிலும் இல்லை. என்னை வசியப்படுத்தி ரணதிலகனின் மனைவியாக வைத்திருக்கிறாள். எல்லாம் பிரக்ஞுதாராவின் திட்டம்தான். அதனை அறியாமல் நான் காதல் வலையில் விழுந்துவிட்டேன். அதற்கு எனக்கு நானே தரும் தண்டனை இது. இந்தச் சுவடியை மிகவும் பத்திரமாக வைத்துக்கொள். நான் செய்த பிராயச்சித்தங்களின் ஆதாரம் இந்தச் சுவடிகளில் உள்ளன. எனது சீதன வெள்ளாட்டிகளின் உதவியோடு இந்தப் பிராயச்சித்தங்களைச் செய்திருக்கிறேன். காலம் வரும்போது இந்த ஓலை உனக்குக் கை கொடுக்கும்.

அடுத்த பிறவியிலும் உனக்கே நான் தங்கையாகப் பிறக்க வேண்டும்..'

சீதன வெள்ளாட்டிகளின் உதவியோடு என்ன பிராயச்சித்தங்களைச் செய்திருக்கிறாள்? அவர்களைச் சந்தித்துப் பேச வேண்டும். அந்தச் சுவடிகளை வாசிக்க நினைத்தவன் சட்டென்று சுதாரித்தான். அந்த ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் மிகவும் முக்கியமானதாகத் தோன்றுகிறதே. இந்த ஓலையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்றால், இவன் அதனைப் படிக்காமல் இருப்பதே நலம். இவனது சிந்தனையில் ஓலையின் இரகசியங்களைப் பதிய வைத்தால், நோக்கு வசியத்தால் பிரக்ஞுதாரா இவனைத் தனது வசப்படுத்தி இவனது வாயினாலேயே அதனைத் தெரிந்து கொள்வாள். நவரத்னாதேவி கூறியுள்ள தகவல் இரகசியமாக இருக்க வேண்டும் என்றால், இவன் அதனை வாசிக்காமல், எங்கேயாவது அதனைப் பத்திரப்படுத்த வேண்டும் என்று ஜெயவர்மன் நினைத்த போதுதான், ஆலயத்தினுள் பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் பிரவேசம் செய்திருந்தார்கள்.

அபயகிரியும், விஜயவர்மனும் அங்கே வந்ததால் பிரக்ஞுதாராவின் கவனம் திசைதிரும்ப, தம்பியைக் காப்பாற்ற வேண்டி இவன் தன்னைப் பிரக்ஞுதாராவின் முன்பாக வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. கண்களைக் கரிய துணியால் கட்டி அவளது பார்வையைத் தவிர்த்திருந்தானே தவிர, மேலாடையில் மறைத்து வைத்திருந்த சுவடி அவளது கையில் சிக்கக் கூடாது என்று யோசித்தபடிதான் நின்றிருந்தான். அப்படியே அந்தச் சுவடி அவள் கையிலோ, ஜினிங்கின் கையிலோ கிடைத்திருந்தாலும், அவர்களால் சுவடியைப் படித்துப் பொருளைப் புரிந்து கொண்டிருக்க முடியாது. காரணம், பாலியோ, சமஸ்க்ருதமோ கலவாமல், தூய தமிழில் தகவலைக் குறிப்பிட்டிருந்தாள் நவரத்னா. ஆனால் பிரக்ஞு

தாராவுக்குத்தான் வசிய மொழி தெரியுமே. இவனை வசப்படுத்தி, ஓலையை அவனைக் கொண்டே வாசிக்க வைத்து, பொருளும் கூறச் செய்துவிடுவாளே..! எனவே தான், தனது உயிரைவிட, சிந்தனையைவிட, சுவடியே மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து ஆலயத்திலிருந்து வெளியே ஓடினான். நல்ல காலமாக, அனந்த பட்டரின் மகள் அஞ்சிலை அணங்குவிடம் ஓலை ஒப்படைக்கப் பட்டுப் பத்திரமாக இருக்கிறது. பிரக்ஞதாராவையும், ஜினிங்டியாண்டையையும் மாவிலக்கை வரை இட்டுச்சென்று, தேவ உடும்பர சிலையை அவர்களிடம் கொடுத்து வழியனுப்பத்தான் செய்திருந்தான்.

"நீயும் என்னுடன் வா, ஜெயவர்மா! எங்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, எங்கள் விருந்தாளி யாகத் தங்கிவிட்டு, பிறகு உனது நாட்டிற்குத் திரும்பலாம்!" — பிரக்ஞதாரா ஜெயவர்மனை அழைத்தாள்.

ஜெயவர்மன் தயங்கினான். அவர்கள் அழைப்பினை ஏற்பது உசிதம் அல்ல என்றுதான் யோசித்தான். ஆனால், அதற்குள் அவனிடம் இயற்கையிலேயே நிறைந்திருக்கும் துணிவும், தைரியமும் விழித்துக் கொண்டன.

பிரக்ஞதாரா, மற்றும் ஜினிங்குடன் கலத்தில் சென்று, அயர்ந்திருக்கும் சமயத்தில் அவர்களைக் கொன்றுவிட்டால், இனி அவர்களால் தொல்லைகள் இருக்காதே!

இந்த யோசனையுடன்தான் கலத்தில் ஏறியிருந்தான். கலம் இலங்கையைக் கடந்து பினாகத் தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதற்குள்ளாக இவர்களைக் கொன்று இதே கலத்தில் மாவிலக்கைக்குத் திரும்ப வேண்டும் என்று அமர்ந்தபடி யோசித்துக் கொண்டிருந் தான்.

தங்கை நவரத்னாவின் தியாகத்தை எண்ணிய போது பல்லவ அரச குடும்பத்தில் தோன்றியதைப்

பெருமையாக நினைத்தான், ஜெயவர்மன். அதே சமயம், தம்பி விஜயவர்மனின் துரோகத்தை எண்ணிய போது, தான் அரச குடும்பத்தில் ஒருவன் என்பதை நினைத்துப் பார்க்கவே அருவருத்தான்.

கீழே வைக்கப்பட்டிருந்த அந்தத் தேக்குமரப் பெட்டகத்தைப் பார்த்தான். பத்து அடி நீள அந்தப் பெட்டகம், சிறிய கலத்தின் அடிப்பகுதியை அடைத்திருந்தது. அதன் உள்ளே ஒன்பது அடி நீள அத்தி மலையான் சயனித்திருந்தார்.

பினாகத் தீவினை அடைவதற்குள் பிரக்ஞுதாராவையும், ஜினிங்கையும் கொன்று மீண்டும் மாவிலக்கை திரும்ப வேண்டும். அதற்கு தக்க தருணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தான், ஜெயவர்மன்.

மனம் ஒத்தாடை அரண்மனையில் இவனுக்காகக் காத்திருக்கும் மனைவி சாயாதேவியைச் சுற்றி வந்தது. இப்போது சாயாதேவி என்ன செய்து கொண்டிருப்பாள்? நவரத்னாவின் தற்கொலை, விஜயவர்மனின் கொலை, இவன் காணாமல் போனது போன்ற அதிர்ச்சிகளைக் குடும்பம் எப்படி ஏற்றிருக்கும்? தந்தை சிம்மவர்மன் சித்தப்பிரமையில் இருக்க, அவனிசிம்மன் இந்தப் பிரச்னைகளை எங்ஙனம் கையாளப் போகிறான்? இவனைக் காணாமல் பஞ்சவர் சபையினர் பரிதவிப்பார்களே..! பிரக்ஞுதாரா அழைத்தவுடன் கலத்தில் ஏறியது தவறோ..? மீண்டும் காஞ்சிக்குச் சென்று, அவர்களின் பதற்றத்தைக் குறைத்து, அமைதியை உண்டாக்க வேண்டும். அவனிசிம்மனுடன் சமரசத்தைச் செய்து கொண்டு அவனுக்கு உதவியாக இருக்க வேண்டும்..!

ஓலையை அஞ்சிலை அணங்கிடம் தராமல் அவனிசிம்மனிடமே கொடுத்திருக்கலாமோ? வருங்கால மன்னன் என்கிற செல்வாக்கினைக் கொண்டு, பிரச்னைகளைச் சுமுகமாக அவன் முடித்திருக்க முடியுமே.

அப்போதைக்கு ஜெயவர்மனுக்கு என்ன தோன்றியதோ அதை மட்டுமே செய்திருந்தான். பிரக்ஞுதாராவையும், ஜினிங்கையும் ஆலயத்திலிருந்து கிளப்பித் தன்னைப் பின்தொடரச் செய்து, கிழக்காக ஐயம்படுகையை நோக்கி ஓடியிருந்தான், ஜெயவர்மன். வழியில் முதலில் தென்பட்ட அனந்த பட்டரின் வீட்டில் புகுந்து ஜினிங் அறியா வண்ணம், அஞ்சிலை அணங்கிடம் சுவடியைக் கொடுத்துவிட்டு, வேறு பக்கமாக ஓடி மீண்டும் ஜினிங்கின் கண்களில் வேண்டும் என்றே பட்டு, அவனை ஐயம்படுகையை நோக்கி அழைத்துச் சென்றிருந்தான்.

ஜெயவர்மன் தொடர்ந்து சிந்தனையில் இருக்க, கலத்தின் மேல்தளத்தில் எதிரும் புதிருமாகத் தியானத்தில் அமர்ந்திருந்த பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் கண்களை மூடியபடியே கிசுகிசு குரலில் பேசினர்.

“குருவே! தேவ உடும்பரம் கிடைத்துவிட்டது அல்லவா? எதற்காக ஜெயவர்மனை நம்முடன் அழைத்து வருகிறீர்கள்..?” — பிரக்ஞுதாராவை கேட்டான், ஜினிங்.

அவன் கேட்டது ஜெயவர்மனின் செவிகளில் விழுந்திருந்தால் கூட, ஜினிங் கண்களை மூடி ஏதோ பௌத்த மந்திரங்களை ஜபிப்பதாகத்தான் ஜெயவர்மன் நினைத்திருக்கக் கூடும்.

“காரணம் இருக்கிறது, ஜினிங்! ஜெயவர்மனின் நாடிச் சக்கரங்களைக் கவனித்தேன். நமது மகாயானத்திற்குக் கிடைத்துள்ள பொக்கிஷம் அவன். அவனது தேகத்தில் மிகப்பெரிய மகாயான யோகியாகத் திகழ்வதற்கான கூறுகளைக் காண்கிறேன். புத்தன் அமைதியை மட்டுமே நமது நாடிச்சக்கரங்களில் புகுத்தினான். ஆனால் அந்த அமைதியான நிலையில் அமரும் போது நமது நாடிச்சக்கரங்கள் மாபெரும் செயல்களைச் செய்யும். அத்தகைய அரிய செயல்களைச் செய்யும் வல்லமையைக் கொண்டிருக்கிறான், ஜெயவர்மன். தனது சக்தியை அவன் இன்னும் அறியவில்லை. அதனை அறியவைக்கச்

*செய்து, எனது சீடனாக மாற்றி, மகாயானத்தின் மாபெரும் யோகியாக அவனை மாற்றி, உலகத்தையே ஆளப் போகிறேன். சூலினி தந்திர உபாசனையை விவரிக்கும் இலங்காவதார சூத்ரம்* வலியுறுத்தும் தேக அமைப்பினையும், குணங்களையும் ஜெயவர்மன் கொண்டிருக்கிறான். இப்போது நாம் ஜெயவர்மனை** கடத்திச் சென்று கொண்டிருக்கிறோம். அதை அவன் அறியவில்லை. தேவ உடும்பரத்தில் சூலினி சிலையைத் தான் நாம் செய்யப் போகிறோம்!" — பிரக்ஞுதாரா கூற, ஜினிங் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான்.*

* பிரக்ஞுதாரா, சூலினி தந்திரம் பேசும் லங்காவதார சூத்திரத்தை அறிந்தவள். புத்த தர்மத்தைத் தான் கடைப்பிடித்ததால், ஜெயவர்மனைக் கொண்டு சூலினி உபாசனையைச் செய்து பலன்களைப் பெற்றுக் கொண்டாள். SOOLINI THANTHRA என்னும் உக்கிர ஆட்டத்தில் இருந்து எழும்பிய கலையே SHOALIN KUNGFU. சூலினி தந்திரம் என்கிற சொல்லில் உருவானதே ஷாவ்ல்னி தந்த்ரா. அதுவே (SHAOLIN) ஷவ்லின் ஆக உருவாகியது. வேதியர்கள் அதர்வண வேதத்தில் கூறப்பட்ட தேவதா உபாசனங்களை நிராகரித்து, பிரம்மா, விஷ்ணு, சிவன், துர்க்கை போன்ற தெய்வங்களை மட்டும் ஏற்றுக் கொள்ள, சூலினி போன்ற தேவதைகளைப் பௌத்தர் கள் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். Bodhidharma's teachings and practice centered on meditation and the LaEkâvatâra Sûtra. The Anthology of the Patriarchal Hall (952) identifies Bodhidharma as the 28th Patriarch of Buddhism in an uninterrupted line that extends all the way back to the Gautama Buddha himself.[16]

** Bodhidharma was a Buddhist monk who lived during the 5th century. He is traditionally credited as the transmitter of Chan Buddhism to China. According to Chinese legend, he also began the physical training of the monks of Shaolin Monastery that led to the creation of Shaolin kungfu. In Japan, he is known as Bodhi Daruma. According to the principal Chinese sources, Bodhidharma came from Indian subcontinent, and was a 'South Indian' [...] the third son of a great Indian king. [5][note 2] Throughout Buddhist art, Bodhidharma is depicted as an ill-tempered, profusely-bearded, wide-eyed non-Chinese person. He is referred as 'The Blue-Eyed Barbarian' (Chinese: 碧眼胡; pinyin: Bìyǐnhú) in Chan texts.[10]

"தேவ உடும்பரம் என்பது உக்கிரத்தைத் தணிக்கும் மரம் என்று நீங்களே கூறியிருக்கிறீர்கள், குருவே! அப்படியிருக்க, உக்கிரத் தேவதையான நமது சூலினி*க்கு தேவ உடும்பரத்திலா சிலை அமைப்பது?" ஜினிங் கேட்டான்.

"உக்கிரத்தைத் தணிக்கும் என்பதால்தான் தேவ உடும்பரத்தில் அவளுக்குத் தேகம் அமைக்கப் போகிறோம். குங்கலீயம்** கோபத்தை அதிகரிக்கும். தேவ உடும்பரம் கோபத்தைக் கட்டுப்படுத்தும்! இது உனக்குத் தெரியாதா? சூலினியை உபாசிக்கும் மனிதன் அவளது

* சூலினி தந்திரம் மிகவும் உக்கிரமானது. அத்திமலையானின் உக்கிரத்தைக் கட்டுப்படுத்த தேவ உடும்பரத்தில் அவனுக்குத் தேகம் சமைத்தது போன்று, சூலினியைக் கட்டுப்படுத்து வதற்கும் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் குங்கலீயம். குங்கலீயம் என்பது அத்தியைப் போன்றே ஒரு மரம். ஆயுர்வேத, சித்த வைத்தியத்திற்கு உதவும். மிகவும் ஆகர்ஷண சக்தி கொண்டது. குங்கலீய எண்ணையை நெற்றியில் தடவினால் எளிதில் ஒருவரை வசப்படுத்தலாம். கைவிரல்களில் குங்கலீய எண்ணையைத் தடவிக் கொண்டு சூலினி தந்திரம் கூறும் முத்திரைகளை எதிரிகளின் முன்பாகக் காட்டி, அவர்களது தேக நாடி மையங்களில் அந்த எண்ணையைத் தடவினால் அவர்களை எளிதில் கட்டுப்படுத்தி விடலாம். இந்தக் கலைக்குக் 'குங்கலீயம் பூச்சு' என்று பெயர். சூலினி தந்திரம் SHAOLIN என்று சீனர்களால் மாற்றப்பட்டது போன்று, குங்கலீய பூச்சு (KUNGFU) என்று மாறியிருக்கக் கூடும். ஜெயவர்மன் பெயரிட்ட கலைகள்தானே இவை.

சீன மொழியில் SHAO என்றால் மலை. LIN என்றால் காடு. மலைக்காடு விஹாரத்தில் உருவான கலை என்பதால் SHAOLIN என்று பெயர் பெற்றது. நமது சூலினி தந்திரம் சூலினியை விந்தியாரண்ய மகாயோகேச்வரி என்று குறிப்பிடுகிறது. அதாவது விந்திய மலைக்காட்டில் உறைபவள் என்று. பொருத்தமாகத்தான் உள்ளது.

Chinese texts differ on the date of Bodhi Dharma's I, with one early account claiming that he arrived during the Liu Song dynasty (420-479) and later accounts dating his arrival to the Liang dynasty (502-557). Bodhidharma was primarily active in the territory of the Northern Wei (386-634). சிம்மவர்மனின் மூன்றாவது மகன்.

*உக்கிரத்தைத் தாங்க வேண்டியிருக்கும். அவளது கோபம் உபாசிப்பவனின் தேகத்தில் இறங்கும். ஏழு நாடிச்சக்கரங் களையும் சீராக வைத்திருக்கும் ஜெயவர்மன்தான்*

---

ஜெயவர்மன்தான் போதிதர்மாவாகச் சென்றதால், அவன் சென்ற காலத்தில் லியாங் பரம்பரைதான் அப்போதைய சீனத்தை ஆண்டு கொண்டிருக்க வேண்டும்.

** குங்கலீயம் -Kungiliyam, a medicinal tree is a rare and precious specious herb found all over India. This species is commonly known as Sal tree or Shala. It's scientific name is Shorea Robusta Gaertn. Kungiliyam is used in Ayurveda, Siddha and Unani because of its miraculous medicinal power. It is good for curing chronic skin disorders, musculoskeletal disorder, tumors, diseases of oral cavity, rheumatism, fever, cough, asthma, epilepsy, ear and hair ailments etc. Kungiliyam is found in the thick forest of Attappadi and resin from the tree is collected by the local tribes and it is sold in our sales outlets.

குங்கலீயம் தைலத்தைத் தடவித் தேகத்தில் Epilepsy என்கிற காக்காய் வலிப்பு உண்டாக்கலாம். குங்கலீய தந்திரம் அறிந்தவர்கள் இதனைக் கொண்டுதான் எதிரிகளை அடக்கினார்கள்.

குங்கலீயம் என்றால் ரட்சை என்று பொருள். குங்குமம் என்பது நெற்றியில் பெண்கள் இட்டுக்கொள்ளும் ஒரு ரட்சை. உடலுறுதியை ஏற்படுத்தி ரட்சையை உண்டாக்குவது குங்கலீய தந்த்ரம். குங்கலீனிய தந்திரத்தை உபாசிக்கப் பொறுமையும் மனஉறுதியும் மிக அவசியம் என்று சூலினி தந்திரம் உரைக்கிறது.. ரிஹிழிநி திஹி என்கிற சீனச் சொல்லுக்கு, பொறுமையும், மனவுறுதியும் கொண்டு கற்க வேண்டிய கலை என்பதே பொருள். எனவே, சூலினி கோயிலை மலைக்காட்டில் நிறுவி, அதில் குங்கலீய தந்திரத்தை உபதேசித்தான், ஜெயவர்மன் என்று கூறலாம். அந்தக் கோயிலே SHAOLIN MONASTERY என்கிற விஹாரமாகவும், வர்மக்கலையை ஆட்டுவிக்கும் குங்கலீய தந்திரமே, KUNG FU MARTIAL ARTS என்று மருவிப்போனது எனலாம்.

அக்னிகுண்டத்தில் தோன்றிய தேவராஜனின் உக்கிரத்தைத் தணிக்க விஸ்வகர்மா அவருக்குத் தேவ உடும்பரத்தில் தேகத்தைச் சமைத்தான். தெரவாட பௌத்தர்கள் அமைதியைப் பரப்புவதற்காக, அடுத்து அவதாரம் செய்ய உள்ள தாருக புத்தரின் சிலையைத் தேவ உடும்பரத்தில் செதுக்க நினைக்கின்றனர்.

சூலினியை உபாசிக்கப் போகிறவன். அவன் மிகவும் உக்கிரம் நிறைந்த, போர்க் கலைகளை அறிந்தவன். ராஜ ரத்தம் அவன் உடலில் பாய்கிறது. எனவே தேவ உடும்பர தேகத்தில் கட்டுண்டு இருக்கும் சூலினியை அவனது தேகத்தில் அவ்வப்போது இறக்கி நாம் செயலாற்றப் போகிறோம்.” — பிரக்ஞுதாரா கூறினாள்.

பிரக்ஞுதாராவோ உச்ச உக்கிரத்தின் உறைவிடமான சூலினியின் தேகத்தைத் தேவ உடும்பரத்தில் அமைத்து அவளை அடக்கி ஆள நினைக்கிறாள். சூலினிக்கு மலைக்காட்டில் ஒரு ஆலயத்தைக் கட்டி, ஜெயவர்மனை அதன் உபாசகனாக அமர்த்த நினைக்கிறாள். பிரக்ஞுதாரா தன்னைச் சிறை வைக்கப் போவதை அறியாமல், ஜெயவர்மன் அத்திமரச் சிலையுடன் கலத்தில் பயணம் செய்து கொண்டிருந்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் போது பிரக்ஞுதாராவையும், ஜினிங்கையும் கொல்ல வேண்டும் என்று சமயத்தைப் பார்த்திருந்தான்.

சீனத்தை ஆண்டு கொண்டிருந்த லியாங் பரம்பரையைச் சேர்ந்தவன் ஜினிங்டியாண்டை. ஆம்ரபாலியின் மகள் கேயூராவை மணந்தலே வூ — வின் பரம்பரையைச் சேர்ந்தவள், பிரக்ஞுதாரா. இருவரும் குரு சிஷ்யனாக மாறியதன் பின்பாக ஒரு கதை உண்டு.

லியாங் பரம்பரையைச் சேர்ந்த பாவ் பாவ் தியாண்டை என்கிற ஒரு இளவரசி தங்கள் மாளிகை நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாடிக் களைத்தவள், ஒரு மரத்தடியில் கண்ணயர, அவளைத் தேடி வந்தான் அவளது அண்ணன் ஜினிங் டியாண்டை. அப்போது தனது சகோதரி வலிப்பு

---

**நம்மிடம் பருத்தியை வாங்கி நமக்கே அமெரிக்கா சட்டை தைத்துக் கொடுத்தது போல், நமது தாந்த்ரீக கலைகளைக் கற்று நமக்கே Martial Arts கற்றுக் கொடுத்த சீனர்களை என்ன என்று சொல்வது..? அனைத்தையும் மூடநம்பிக்கைகள் என்று நாம் புறக்கணிக்க, மற்றவர்கள் அவற்றை அறிந்து கொண்டு நமக்கே தண்ணீர் காட்டுகின்றனர்.**

நோயினால் அவதிப்படுவதைக் கண்ணுற்ற ஜினிங்டியாண்டை செய்வதறியாது திகைக்க, அங்கே வந்த பிரக்ஞுதாரா, நான் அவளைக் குணப்படுத்துகிறேன். நீ எனது சீடனாக வர வேண்டும் என்று கூறி, பாவ் பாவ் — வை, குணப்படுத்தி ஜினிங்கைப் பல்லவத்திற்கு அழைத்துச் சென்றிருந்தாள். தனது தங்கையைக் குணப்படுத்தியதும், அவள் மீது பூரண நம்பிக்கையைக் கொண்டு ஜினிங் அவளுடன் காஞ்சிக்குச் சென்றான்.

பிரக்ஞுதாரா தன்னை லியாங் வம்சத்தின் அரசனாக எப்படியும் அமர்த்திவிடுவாள். அதற்குரிய ஆற்றலும், திறமையும் அவளிடம் இருப்பதை உணர்ந்த ஜினிங் அவளது ஆத்மார்த்த சீடனாகத் திகழ்ந்தான்.

தியானம் முடித்துக் கண்களைத் திறந்த போது, பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் சூழ்நிலையில் ஒருவித மாற்றத்தை உணர்ந்தனர். இவர்கள் தியானத்தைத் துவங்கிய போது கதிரவன் உச்சி வானில் ஏறியிருந்தான். ஆனால் தியானம் முடிந்து அவர்கள் கண்களைத் திறந்த போது, கதிரவனை கரிய மேகங்கள் திரண்டு மூடியிருந்தன. சில்லென்று குளிர்க் காற்று வீசத் தொடங்கியது. கலத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மாலுமிகள், திடீரென்று காற்று பலமாக வீசுவதையும், கடல் நீலச் சேலையைக் களைந்துவிட்டு, கரிய சேலையை அணிந்ததையும் பார்த்தனர்..

சுகமாக வீசிய காற்று இப்போது பலமாக வீசத் துவங்கியது. மழை மேகங்கள் ஒன்றையொன்று கைகுலுக்கிப் பாராட்டிக் கொள்வதைப் போன்று, மின்னல்கள் வானில் இங்கும் அங்குமாகப் பாயத்துவங்க, பலத்த இடியொலி கடலலைகளின் ஆர்ப்பரிப்புக்குப் பின்பாட்டுப் பாடின.

ஜினிங் இடியொலியின் ஓசையைக் கேட்டுக் கண்களைத் திறந்தான். ஆனால் பிரக்ஞுதாரா தொடர்ந்து தியானத்தைத் தொடர்ந்தாள். மாலுமிகள் இருண்ட

வானத்தையும், கரிய கடலையும் மாற்றி மாற்றி நோட்டம் விட, ஒரு கட்டத்தில் வானத்திற்கும் கடலுக்கும் வேறுபாடு தெரியாமல் போகுமளவுக்கு இருள், கடல் மின்னல் என்கிற அந்தக் கலத்தினைச் சூழ்ந்தது. சீன மாலுமி ஒருவன் தீப்பந்தம் ஒன்றை ஏற்ற, சரியாகப் பிரக்ஞுதாராவும் தனது கண்களைத் திறந்தாள்.

தாங்கள் இருள் சாம்ராஜ்யத்தைப் பரப்பிவிட்டிருக்க, கடல் மின்னல் என்கிற அந்தக் கலத்தில் மட்டும் ஒளி பாய்வதா என்பது போன்று சடசடவென்று மழை பொழியத் துவங்கியது.

காற்று, மழை, இடி, மின்னல் என்று வானிலிருந்து தோன்றிய ஆவேசத் தாக்குதல்கள் அமைதியாக இருந்த கடலை உசுப்பிவிட்டிருக்க வேண்டும். திடீரென்று கடலலைகள் உருவாகிக் கடல் மின்னலை இங்கும் அங்குமாகத் தள்ளி அலைக்கழிக்கத் துவங்கின. இயற்கையின் சீற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினர், சீன மாலுமிகள்.

கலத்தின் கீழ்தளத்திற்குச் செல்லும் படியில் அமர்ந்திருந்த ஜெயவர்மன், கலத்தின் ஆட்டத்தைக் கண்டு திகைத்து மேல் தளத்திற்கு வந்தான்.

"கவலைப்படாதே ஜெயவர்மா! இவை கடக்கும் மேகங்கள்தான். விரைவில் மழை நின்று கதிரவன் தோன்றுவான்!" — பிரக்ஞுதாரா கூறினாள்.

ஆனால் தொடர்ந்து மேகங்கள் திரளத் துவங்க, மழை அதிகரித்துக் கொண்டே போனது. பலத்த புயல் காற்று வீசத்தொடங்க, மாலுமிகள் கலத்தைச் செலுத்த இயலாமல் பரிதாபமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பிரக்ஞுதாரா ஆகாயத்தையும், கடலையும் மாற்றி மாற்றி வெறித்துப் பார்த்தாள். அவளது நோக்கு வசியத்திற்கு மனிதர்களும், மிருகங்களும் கட்டுப்படு

வார்கள். பஞ்சபூதங்கள் கட்டுப்படுமா என்ன? இயற்கையின் சீற்றம் அதிகரித்துக் கொண்டே போக, கடல் மின்னல் என்கிற அந்தக் கலம் சுழலில் சிக்கியது.

பினாகத் தீவினை நோக்கிச் சென்று கொண்டிருந்த கலம் இப்போது மீண்டும் இலங்கையின் தென் கிழக்கே சென்றது.

கடல் நீரில் ஊஞ்சலாக ஆடிக் கொண்டிருந்த அந்தக் கலம் இப்போது ராட்சத அலைகளால் பந்தாடப்படத் தொடங்கியது. எதற்கும் கலங்காத ஜினிங்டியாண்டே அச்சத்துடன் பிரக்ஞதாராவை நோக்க, அவள் கலத்தின் மையத்தில் பாய்மரத்தைப் பிணைத்திருந்த தூணின் மேடையில் நின்று இரு கைகளையும் விரித்து வானத்தைப் பார்த்து மகாயான சூக்தங்களை உச்சரிக்கத் துவங்கினாள். தன்னைப் பிரக்ஞதாரா கட்டுப்படுத்த முயலுவதை அந்தப் புயல் விரும்பவில்லை போலும். காற்றின் ஓலம் இன்னும் அதிகரிக்க, மழை இன்னும் பலமாகப் பெய்து 'கடல் மின்னலை'ச் சுற்றி நீர், திரை ஒன்றை அமைத்தது. மழை நீரில் தீப்பந்தமும் அணைந்து போக, ஒருவரையொருவர் காண இயலாத வண்ணம் இருள் நிலவியது. காற்றின் பாய்ச்சல், கடல் நீரின் கொந்தளிப்பு மற்றும் மழைநீர் கலத்தில் மோதும் ஒலி மட்டும்தான் கலத்தில் இருந்தவர்களின் செவிகளில் கேட்டது.

ஜெயவர்மனுக்குப் புயலும் மழையும் அச்சத்தை ஏற்படுத்தவில்லை. கலம் நீரில் மூழ்கினால், இவன் எப்படியாவது நீரில் நீந்தித் தப்பித்துக் கொள்ளலாம். கலம் கவிழ்ந்து பிரக்ஞதாரா மற்றும் ஜினிங் கடலில் மூழ்கி இறந்தால், பல பிரச்னைகள் முடிவுக்கு வரும். தேவ உடும்பரம் என்று இவன் கொண்டு வந்திருக்கும் சிலை போலி என்பதை அவள் அறியாமலே இருப்பாள். அவள் உயிர் பிழைத்தாலும், கடல் நீரில் தேவ உடும்பர அத்திமலைத்தேவனின் சிலை அடித்துச் செல்லப்பட்டது என்று கூறிவிடலாம்.

பிரக்ஞுதாரா தேவ உடும்பர அத்திவரதனைக் களவாட திட்டமிடுகிறாள் என்பதை அறிந்து ஐயம்பாடுகை ஸ்பதி காளநந்தியிடம் கூறி, அத்தி மலையானைப் போன்றே ஒரு போலி சிலையினை தயார் செய்திருந்தான். அதைதான் தன்னுடன் எடுத்து வந்திருந்தான்.

புயலில் சிக்கிய அந்தக் கலம் நீரில் மூழ்கினால் நல்லது என்றே அவன் நினைக்கத் துவங்கிவிட்டான்.

அவனது எண்ணத்தை இயற்கை அன்னை அறிந்து கொண்டுவிட்டாள் போலும். தனது கணவனான சமுத்திரராஜன் செவிகளில் ஜெயவர்மனின் எண்ணத்தைக் கூறிவிட்டது போல, உடனே 'கடல் மின்னல்' கலத்தின் மையப் பகுதியில் விரிசல் உண்டாகி உள்ளே நீர் புகத் தொடங்கியது. நீர் குபுகுபுவென்று நீரூற்று உண்டானதைப் போன்று கலத்தில் ஏறத்துவங்க, விரிசல் அதிகரித்துக் கொண்டே வந்து, கலத்தின் மையப் பகுதியில் நின்ற பாய்மரத் தூணை அடைந்தது. கலத்தின் மையப்பகுதி உடைய, பாய்மரம் பிணைக்கப்பட்டிருந்த தூண் உடைந்து கடல் நீரில் விழுந்தது. இதனால் மையப் பகுதியில் இரண்டாக உடைந்தது கலம். கீழ்த்தளத்தில் புகுத்த கடல்நீரின் சுழற்சியில் அத்திமலையான் சிலை வைக்கப்பட்டிருந்த பெட்டகம் நழுவி நீரில் அடித்துச் செல்லப்பட்டது. ஒருபுறம் சிலையுடன் கூடிய பெட்டகம் அடித்துச் செல்லப்பட, மறுபுறம், பெட்டகத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு, அதன் நீண்ட மூடி தனியாகக் கடல் நீரில் மிதந்து சென்றது.

கலத்தின் கீழ்தளப் படியின் கைப்பிடியைப் பற்றிக் கொண்டு நின்ற ஜெயவர்மன், பாய்ந்து சென்று அந்தப் பெட்டகத்தின் மூடியைப் பற்றி அதன் மீது தாவி ஏறினான். அதன் மீது ஏறி அமர்ந்தவன் தனது உறுதியான கைகளால் மூடியின் விளிம்பினைப் பற்றிக் கொண்டான். இருளின் ஊடே மற்றவர்களைக் காண முயன்றான். அந்த இருளில் அவனால் யாரையும் காண

இயலவில்லை. பிரக்ஞுதாரா மற்றும் ஜினிங்கின் கதை முடிந்தது போலும் என்கிற எண்ணத்தோடு பெட்டகத்தின் மூடியின் மீது அமர்ந்து கடல் நீரில் பயணித்துக் கொண்டிருந்தான், ஜெயவர்மன்.

இரவெல்லாம் ஆட்டம் ஆடிய புயல், விடியற் காலையில் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சென்றுவிட்டது. வானரத்திடம் சிக்கிய மலர்மாலையைப் போன்று இங்கும் அங்குமாக மேகங்கள் சிதறிக் கிடக்க, சூரியன் மெதுவாகத் தனது கிரணங்களைப் பரவவிட்டுக் கொண்டிருந்தான்.

கடல் மின்னல் என்கிற கலம் கிழக்குக் கடலில் பயணித்திருந்த சுவடே இல்லை. முந்தைய இரவில் ஆர்ப்பரித்த கடலா இது என்பது போன்று அமைதியாகக் காணப்பட்டது கடல்.

ஜெயவர்மன் சுமந்து வந்திருந்த அத்திமலையானின் போலி சிலை கடல் நீரில் தொடர்ந்து மிதந்து கொண்டிருந்தது. பாற்கடலில் சயனித்துக் கொண்டே இருப்பது அலுப்பினைத் தருகிறது. இங்ஙனம் கடலில் நீந்திச் செல்வது புதிய அனுபவமாக உள்ளது என்று கூறுவது போன்று அத்திமரத்தில் செதுக்கப்பட்ட அந்தப் பிரதிமை மிதந்தபடி சென்றது.

காம்போஜ நாட்டின் தெற்குக் கரையோரம் அமைந்திருந்த மலைத்தொடர் ஒன்றில் இருந்து ஒரு அருவி வழிந்து ஆறாகப் பெருகியோடி வந்து கடலில் கலந்தது. அந்த மலைத்தொடரையும், அருவியையும் பார்த்து அந்தச் சிலை உற்சாகம் அடைந்திருக்க வேண்டும். தான் கோயில் கொள்வதற்கு ஏற்ற இடம் என்று அந்தச் சிலை நினைத்திருக்க வேண்டும்.

கடல் நீரில் மிதந்து வந்த சிலை, அந்தக் காட்டாறு கடலில் கலக்கும் இடத்தை அடைந்து இரு பெரும் பாறைகளிடையே சிக்கி நகராமல் நின்றது.

அப்போது —

அந்த மலையில் இருந்து ஒரு மூதாட்டி இறங்கி வந்தாள். அந்தக் காட்டாற்றில் நீராடுவதற்காக, தனது ஆடைகளைக் களைந்த போதுதான் தற்செயலாக அவளது பார்வை அத்திமலையானின் சிலையின் மீது பதிந்தது. அவளது புருவங்கள் வியப்பினால் உயர்ந்தன.

அந்த மூதாட்டியின் பெயர் பென்.* தனது ஜாகைக்குச் சென்று மலைவாழ் மக்களை அழைத்து வந்தவள், பாறைகளின் இடையே சிக்கியிருந்த அத்திமலையானின் சிலையை எடுத்து மலை மீது கோயில் ஒன்றை அமைத்தாள்,

காஞ்சியின் போலி அத்திமலைத்தேவன் பென் குன்றத்தின் மீது கோயில் கொண்டான்.

---

* அந்த மூதாட்டி பென்-னின் பெயரில் இன்று கம்போடியாவில் ஒரு மலை நகரமே உள்ளது. அதனை Phnom Penh என்று அழைக்கின்றனர்.

Phnom Penh (literally, 'Penh's Hill') takes its name from the present Wat Phnom ('Hill Temple'). Legend has it that a wealthy widow named Lady Penh found a Koki tree floating down the Tonle Sap river after a storm. Inside the tree was a stone statue of Vishnu. Daun Penh ordered villagers to raise the height of the hill northeast of her house and used the Koki wood to build a temple on the hill to house the Vishnu image slightly lower down. The temple became known as Wat Phnom Daun Penh, which is now known as Wat Phnom, a small hill 27 metres (89 ft) in height.

இதன் காலம் 1372 என்று கம்போடியா சரித்திர நூல்கள் கூறினாலும், கைவல்யர்கள் என்னும் கம்போடியா நாட்டு வைணவர்கள் அது ஜெயவர்மன் கொண்டு வந்த சிலை என்று கூறி வந்திருக்கின்றனர்.

# 3. தாவிச் சென்ற தகவல்

மன்னன் சிம்மவர்மனின் பிறந்த நட்சத்திரம் அன்று. எண்கரத்தான்* ஆலயத்தில் அவனது பெயரில் சிறப்புப் பூசனைகளுக்கு ஏற்பாடு செய்திருந்தான் அவனிசிம்மன்.

சிம்மவர்மனுக்கு எண்கரத்தான் என்கிற ஒரு பட்டமும் உண்டு. காஞ்சியிலிருந்து திக்விஜயம் செய்து வேங்கி வேமுலம்** போன்ற நாடுகளைக் கைப்பற்றியிருந்தான் சிம்மவர்மன். போர்க் கலைகளில் வல்லவனான சிம்மவர்மனைக் கண்டு சாளுக்கியர்கள் நடுங்கினர்.

தனது பெயருக்கு ஏற்றாற்போன்று சிம்மவர்மன் எதிரிகளுக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ, திக்விஜயத்திற்கு

---

* எண்கரத்தான் ஆலயம் தற்போது காஞ்சி ரங்கசாமி குளம் அருகே அஷ்டபுஜம் கோயில் என்கிற பெயரில் அழைக்கப்படுகிறது.

** வேசந்தச் (ஜலாலபுரம்) செப்பேடு (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு) சிம்மவர்மனின் திக்விஜயத்தைப் பற்றிக் கூறுகிறது. குண்டூர் மாவட்டம் சந்தனப்பள்ளி தாலுக்கா, ஜலாலபுரத்தில் ஒரு வீட்டிற்குச் சுவர் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டிய போது, இந்தச் செப்பேடு பூமியுனுள் கிடைத்தது. ஐந்து ஏடுகள் உள்ள இந்தச் சாசனம் சமஸ்கிருதத்தில் செதுக்கப்பட்டுள்ளது. முதல் எட்டிலும், கடைசி எட்டிலும் ஒரு பக்கம் மட்டுமே செதுக்கப்பட்டுள்ளது. நடுவில் உள்ள மூன்று ஏடுகளிலும் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. ஏடுகளின் இடது ஓரம் துளையிடப்பட்டு ஒரு இரும்பு வளையமும், வளையத்தில் பல்லவ அரசு முத்திரையும் உள்ளன. சிம்மவர்மன் தனது 19வது ஆட்சி நிறைவு பெற, திக்விஜயம் செய்து, நாதத்தபாடி என்கிற வேசந்தம் என்னும் இந்த கிராமத்தை ஜேஷ்டஷர்மன் என்கிற அந்தணனுக்கு அளித்ததைக் குறிப்பிடுகிறது இந்தச் செப்பேடு.

வில், வாள், ஈட்டி, தண்டம் போன்ற ஆயுதங்களுடன் புறப்பட்ட சிம்மவர்மனைக் காணும் போது பல்லவ மக்களுக்கு எண்கரத்து பெருமாளே திக்விஜயம் கிளம்புவது போன்று தோன்ற, "எண்கரத்து மன்னர் வாழ்க!" என்கிற கோஷம் விண்ணைப் பிளந்தது.

அப்படிப்பட்ட சிம்மவர்மன்தான் தற்போது கை கால்கள் முடங்கி, விட்டத்தையே வெறித்து நோக்கியபடி கிடந்தான். பல்லவ அரச குடும்பத்திற்கு அடிமேல் அடியாக விபரீதங்கள் நிகழ, மனமகிழ்ச்சி அரண் மனையைவிட்டு அடியோடு நீங்கிவிட்டிருந்தது.

மன்னன் மஞ்சத்தில் கிழிந்த நாராகக் கிடக்கிறான். அவனது ஆருயிர் மகள் நவரத்ன பல்லவி தனது இன்னுயிரை மாய்த்துக் கொண்டிருந்தாள்.

அவனது தம்பி மகன் விஜயவர்மன் கொலை செய்யப்பட்டிருந்தான்.

எல்லாவற்றையும் விஞ்சுவது போல், மன்னனின் மிகவும் பிரியமான மகன், இளவரசன் ஜெயவர்மன் காணாமல் போயிருந்தான்.

அரச குடும்பத்திற்கு என்ன நேர்ந்தது என்று குடிமக்கள் விசனப்பட்டுக் கொண்டிருக்க, அவனி சிம்மனோ தனது கிடுகிடு நடவடிக்கைகளால், குடும்பத்தில் குழப்பத்தினை உருவாக்கிவிட்டிருந்தான்.

பஞ்சவர் சபையினரைக் கைது செய்யும்படி உத்தரவு இட்டிருந்த அவனிசிம்மன், சிற்றப்பன் மகன் ராஜ வர்மனையும் சேர்த்துதான் சிறையில் அடைத்திருந்தான். ஏற்கெனவே, இளையவன் விஜயவர்மனை இழந்திருந்த விஷ்ணுவர்மனின் குடும்பம், ராஜவர்மனின் கைது நடவடிக்கையால் கோபம் கொண்டு, அரண்மனையை விட்டு நீங்கி, நந்தவனத்தின் மறுபக்கம் நின்ற, சிறு மாளிகையில் குடிபுகுந்திருந்தது.

ஜெயவர்மனின் குடும்பம் ஒரு மாளிகையிலும், சிம்மவர்மனும், அவனிசிம்மனும் மைய அரண்மனை யிலும், விஷ்ணுவர்மன் ஒரு மாளிகையிலுமாக வசிக்க, அரசகுடும்பம் சுக்குநூறாக உடைந்தது.

ராஜவர்மனின் மனைவி கடம்ப இளவரசி ராஜஸ்ரீ தான் அனைவருக்கும் பாலமாகத் திகழ்ந்தாள். சாயா தேவியிடம் சென்று ஜெயவர்மன் நிச்சயம் திரும்பி வருவான் என்று ஆறுதல் கூறுவாள். மைய அரண் மனைக்கும் சென்று சிம்மவர்மனுக்குப் பணி விடைகளைச் செய்வாள்.

அவனிசிம்மனின் மனைவி புவனமாதேவியும் கர்ப்பம் தரித்திருந்தாள். அவளுக்கும் ஆதரவாக ராஜஸ்ரீதான் திகழ்ந்தாள்.

அன்றும் வழக்கம் போல், சாயாதேவியின் மாளிகைக்கு முதலில் சென்றாள் ராஜஸ்ரீ.

வழக்கம் போல், முகத்தில் பொலிவின்றி, அலங்காரம் எதுவும் செய்து கொள்ளாமல் இருக்கையில் அமர்ந்தபடி சாளரத்தின் வழியே சூனியத்தையே வெறித்துக் கொண்டிருந்தாள், சாயா.

"சாயா! ஜெயவர்மரைப் பற்றித் தகவல் ஏதேனும் வந்ததா?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"தகவல் வந்திருந்தால் நான் இப்படி அமர்ந் திருப்பேனா? அவர் இருக்கும் இடத்தைத் தேடி ஓடிச் சென்றிருக்கமாட்டேனா?" — சோகமாகக் கூறினாள் சாயா.

"நீ இப்படியே அசோக வனத்துச் சீதையாக அமர்ந்திருந்தால், அவர் வந்து உன்னைக் காணும் போது, இவளையா நாம் கைப்பிடித்தோம் என்று திகைக்க மாட்டாரா? எக்கணமும் அவர் வந்துவிடுவார் என்கிற நம்பிக்கையுடன், உன்னை அலங்கரித்துக் கொண்டு தானே நீ அமர வேண்டும்! எழுந்திரு சாயா! இன்று

மன்னரின் பிறந்த தினம். உன்னை அலங்கரித்துக் கொண்டு என்னுடன் வா. மன்னரிடம் ஆசி பெறுவோம்." — ராஜஸ்ரீ கூற, அவளைக் கண்கள் பனிக்க நோக்கினாள், சாயா.

"எனது கணவன்தான் நவரத்னா மற்றும் விஜய வர்மனின் மரணங்களுக்குக் காரணம். கொலைகளைச் செய்துவிட்டு அவர் தலைமறைவாக இருப்பதாக அரண்மனையில் அனைவரும் பழி சுமத்தி வரும் நிலையில், நான் என்னை அலங்கரித்துக் கொண்டால், வேறு வினையே வேண்டாம். கணவனுடன் தொடர்பில் இருக்கிறாள். அதனால்தான் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள் என்று ஒரு சாராரும், கணவன் தலைமறைந்தவுடன், தன்னை அலங்கரித்துக் கொண்டு மற்றொரு புருஷனுடன் சல்லாபிக்கின்றாள் என்று மற்றொரு சாராரும் கூறுவதற்காக நான் என்னையே அலங்கரித்துக் கொள்ள வேண்டுமா? பெண்கள் அலங்கரித்துக் கொள்வதே ஆண்களைக் கவருவதற்குத் தான் என்கிற எண்ணம் கொண்டிருப்பவர்களிடையே நாம் வசிக்கிறோம் என்பதை மறந்துவிடாதே, ராஜஸ்ரீ." — சாயாவின் குரலில் வேதனை கொப்பளித்தது.

"ஜெயவர்மரைப் பற்றி எனக்குத் தெரியும், சாயா. தந்தையைப் போன்றே மாபெரும் வீரர். பாலகாடத்தைக் கைப்பற்றி அவர் என்னைச் சிறைபிடித்த போதே அண்ணனுக்கு உரியவள் என்று என்னை மிகவும் கண்ணியமாக நடத்தினார். இளவரசர் அவனிசிம்மர் என்னை ஏற்க மறுத்த போது, உனது கணவனின் முகம் எவ்வளவு வருத்தத்தில் ஆழ்ந்தது தெரியுமா? ராஜவர்மர் என்னை ஏற்றுக் கொண்டதும், அவரது கண்களில் பரமானந்தம் பரவியதே. தனது குடும்பத்தை மிகவும் நேசிப்பவர். அத்துணைப் பாசமிக்கவர், யாரிடமும் எதையும் தெரிவிக்காமல் சென்றிருக்கிறார் என்றால், ஏதாவது காரண காரியம் இருக்கும். நிச்சயம் தனது

பணியை முடித்துக் கொண்டு வருவார் பாரேன்." ராஜஸ்ரீ கூறினாள்.

"இல்லை ராஜஸ்ரீ! அவரது மனத்தில் பல வருத்தங்கள் உண்டு. மன்னர் சிம்மவர்மர் என் கணவரிடம், 'நீ பட்டத்து இளவரசனாக இருந்திருக்கக் கூடாதா?' என்று பலமுறை கூறியிருக்கிறார். அதைச் செவியுற்ற அவனிசிம்மரும், மற்ற சகோதரர்களும் எனது கணவரின் மீது காழ்ப்புணர்ச்சியினை கொண்டிருக்கின்றனர். என்னைக் காதலித்த விஜயவர்மன், நான் ஜெயவர்மரை மணந்ததும், எங்கள் மீது விரோதம் காட்டி வந்தார். கடிகையில் வித்யுதா என்கிற பெண்ணிடம் விஜயவர்மன் முறைதவறி நடந்து கொண்டதால் மட்டுமே, அவனைத் தாக்கியிருக்கிறார். அவன் மீது வேறு கோபம் இல்லை. ஆனால், நமது இளவரசர் அவனிசிம்மர் அனைத்துக் குற்றங்களையும் எனது கணவனின் மீது சுமத்துகிறார். இது எப்படி நியாயமாகும்? எங்களுக்காக வாதாட யார் இருக்கிறார்கள்?" — சாயா கண்ணீர் உகுத்தாள்.

"ஏன் இல்லை? அந்த அத்திமலையான் இருக்கிறானே. உண்மையில் அவன்தானே இந்த உலகையே ஆள்கின்றான். அவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறானே!" — ராஜஸ்ரீ கூறியதும், அவளைச் சட்டென்று திரும்பி நோக்கினாள், சாயா.

"அவனையே காணவில்லை என்கிறார்களே, ராஜஸ்ரீ! நான் யாரிடம் போய் எனது குறையைக் கூறுவேன்? உனக்குத் தெரியாது ராஜஸ்ரீ. எனது கணவரைப் போன்ற ஒரு சுத்த சத்வமான மனிதரைக் காணவே முடியாது. கண்களாலேயே அனைவரையும் அரவணைக்கும் அந்தப் பார்வை, குடும்பத்தினர் மீது அவர் காட்டிய பாசம், மக்களின் மீது அவர் செலுத்திய அன்பு, பொதுவாக ஒரு ஆண்மகன் அதுவும் ஒரு இளவரசனின் பள்ளி யறைக்கு வந்து நடுநிசியில் யாராவது பேச முடியுமா? எங்கள் பள்ளியறை கதவினைத் தட்டி யாரோ தகவலைக்

கூறினார்கள். இவர் உடனே கோபிக்காமல், அவருடன் பொறுமையாகப் பேசி அனுப்பிவிட்டு, உடனே அவரும் புறப்பட்டுச் சென்றார் என்றால் பார்த்துக் கொள்ளேன். எத்தகைய சாத்வீகமான மனிதர்..!"

"நடுநிசியில் முதலிரவு தம்பதியரின் பள்ளியறையைத் தட்டிய அந்த மூடன் யார்? நீ அவனைப் பார்த்தாயா?" — ராஜஸ்ரீ கேட்க, குங்குமமாகச் சிவந்தது சாயாவின் முகம்.

"வந்து அழைத்தவன் மூடன் இல்லை. ஜெயவர்மரை போகவிட்ட நான்தான் மடச்சி!" — சாயா வருத்தத்துடன் கூறினாள்.

ஆதுரத்துடன் அவளது தலையைத் தனது மார்பில் சாய்த்துக் கொண்டாள், ராஜஸ்ரீ.

"வருத்தப்படாதே, சாயா! விரைவில் உனது கணவர் வந்துவிடுவார். அவரை அன்று இரவு அழைத்துச் சென்றது யார் என்பது தெரிந்தால், எனது கணவரிடம் கூறி அந்த மனிதரின் மூலம் இளவரசரின் இருப்பிடத்தை அறிந்து கொள்ளலாம் அல்லவா!" — ராஜஸ்ரீ கூற, சாயா யோசித்தாள்.

"எனது கணவர் பெயர் எதையும் குறிப்பிடவில்லை. வந்தவரும் கிசுகிசுத்தக் குரலில்தான் பேசினார். அதன் பின் ஜெயவர்மரின் முகம் மிகவும் பதற்றத்துடனும், ஆழ்ந்த யோசனையுடனும் காணப்பட்டது. ஆனால் அந்தப் பதற்ற நிலையிலும் எனது கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதிலைத் தந்தார். திரும்பி வந்தவுடன் எனது கேள்விகளுக்கு ஆற அமரப் பதில் தருகிறேன் என்றார். ஆனால் ஒன்று.. நடுநிசியில் உங்களைக் காண்பதற்குக் கம்பீரமாக இருக்கிறது. சற்றே உங்கள் கம்பீரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்றேன். உடனே, கம்பீரத்துடன் பேசியதால் கம்பீரமாக இருக்கிறேனோ என்னவோ என்றார். அவ்வாறு அவர்

கூறியது எனக்குப் புரியவில்லை. அதன் பிறகு நானும் உறங்கிப் போனேன். அவர் எப்போது புறப்பட்டுச் சென்றார் என்றே தெரியாது.”

சாயா கூறியதைக் கேட்டதும், ராஜஸ்ரீ யோசனையில் ஆழ்ந்தாள்.

சாயாதேவி அவளது தோளினைப் பற்றினாள்.

“ராஜஸ்ரீ, உண்மையாகவே அத்திமலையானின் பிரதிமையைக் காணவில்லையா?” — சாயா கேட்க ராஜஸ்ரீ சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, தலையை மேலும் கீழுமாக ஆட்டினாள்.

“ஆமாம்! உண்மைதான்! அந்தப் பழியும் உன் கணவனின் மீதுதான் சுமத்தப்பட்டிருக்கிறது..” — கிசுகிசுத்த குரலில் கூறினாள், ராஜஸ்ரீ.

“இருக்கவே முடியாது! அதை நான் உனக்கு நிரூபிக்கிறேன்!” — ராஜஸ்ரீயின் கையைப் பிடித்துத் தனது மாளிகையின் பிரார்த்தனை அறைக்கு இட்டுச் சென்றாள், சாயாதேவி.

பிரார்த்தனை அறையின் மையத்தில் ஒரு சிறு மண்டபம் இருக்க, அதன் உள்ளே அத்திமலையானின் பஞ்சலோக விக்கிரகம் ஒன்று இருந்தது.

ராஜஸ்ரீயிடம் அந்த விக்கிரகத்தைச் சுட்டிக் காட்டினாள்.

“இந்த விக்கிரகம் நமது முன்னோர்கள் திருலோச்சன பல்லவனாலும், அவரது மகன் இளந்திரையனாலும் பூஜிக்கப்பட்ட விக்கிரகம். அத்திமலை மீது அதீதப் பக்தி கொண்டிருக்கும் எனது கணவர் அவரை அன்றாடம் ஆராதித்து வருகிறார். ஒரு நாளும் அத்திமலையானின் ஆலயத்திற்கு அவர் போகாமல் இருந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால், என்னிடம் அவர் தனது காதலை வெளிப்படுத்தியதே அத்திமலையில்தான். அவராவது

அத்திமலையானை கடத்திச் செல்வதாவது?" — என்று கோபத்துடன் பொங்கியவள், ராஜஸ்ரீயை ஆவேசத்துடன் பற்றித் திருப்பி, ஒரு மூலையைச் சுட்டிக்காட்டினாள்.

"இதைக் கவனித்தாயா, ராஜஸ்ரீ? ஒவ்வொரு ஹஸ்த நட்சத்திரம் அன்றும் வேகவதியில் அவர் அத்தி மலையானுக்கு அனுப்பும் அத்தியோலை. நான் சொன்னால் நீ நம்பமாட்டாய். அவர் எப்போது ஓலையை அனுப்பினாலும், அது முக்கூடல் சங்கமத்தில் அவரது கைக்கு மீண்டும் கிடைத்துவிடும். இதில் இருந்தே உனக்குத் தெரியவில்லையா.. எனது கணவர் அத்திமலைத்தேவனின் அருளுக்குப் பாத்திரமானவர் என்று. தான், அத்திமலையானால் விண்ணில் ஏவிவிட்டிருக்கும் காற்றாடி என்றுதான் தன்னையே அழைத்துக் கொள்வார். அப்படிப்பட்டவர், அத்திமலைத்தேவனைக் கடத்திவிட்டார் என்று கூசாமல் சொல்கின்றனரே. இந்த அத்தியோலைகளில் இன்ன இன்ன வேண்டுதல்களை எழுதியிருக்கிறார் என்று நீயே உனது கண்களால் படித்துத் தெரிந்துகொள்!" — சாயா உக்கிரத்துடன் சுவரின் ஆணியில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்தக் குத்துக்கம்பியைக் கையில் எடுத்து அதில் கற்றையாக அடுக்கப்பட்டிருந்த காய்ந்த அத்தியிலைகளை எடுத்து ராஜஸ்ரீயின் கரத்தில் வைத்தாள்.

'அத்திமலைத்தேவா! எனது தந்தையைக் காப்பாற்று. அவரது உடல்நிலை நலம் பெற வேண்டும்!'

'அத்திமலைத்தேவா! எனது அண்ணியார் புவனாதேவிக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும். தாயும், சேயும் நலமாக வாழ வேண்டும்.'

'அத்திமலைத்தேவா! எனது சகோதரி யோசனையின்றி ரணதிலகனை கணவனாகத் தேர்ந்தெடுத்துவிட்டாள். அவனுக்கு நல்ல எண்ணங்களை ஏற்படுத்தி அவனும், எனது தங்கையும் சுகமாக வாழ வேண்டும்.'

'அத்திமலைத்தேவா! கடம்ப இளவரசி ராஜஸ்ரீயை சிறைப்படுத்தி வந்துவிட்டேன். அவனிசிம்மனோ அவளை ஏற்க மறுக்கிறான். அவளுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தைத் தா..!'

புனுகு குழைவினில் எழுதப்பட்டிருந்த ஜெயவர்மனின் வேண்டுகோள்களைத் தொடர்ந்து படித்த ராஜஸ்ரீயின் கண்கள் குளமானது.

'எவ்வளவு உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவர், ஜெயவர்மன்! மற்றவர்களுக்காக மட்டுமே வேண்டிக் கொள்கிறாரே! தனக்காக ஒன்றுமே கேட்கவில்லையே! எப்படிப்பட்ட நல்லவர். எத்தகைய மாமனிதரை உயிருடன் இழந்திருக்கிறது பல்லவம்?'

சாயாவை கண்ணீருடன் நோக்கினாள், ராஜஸ்ரீ. "சாயா! உண்மையிலேயே இப்படிப்பட்டவரைக் கணவனாக அடைவதற்கு நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும். இவ்வளவு நல்ல எண்ணம் கொண்டவர், பெண்களைக் கண்ணியத்துடன் போற்றுபவரே, உன்னைத் தனது காதல் மனைவியாக ஏற்றிருக்கிறார் என்றால், நீ அவர் மனதைக் கவர்ந்திருக்க வேண்டும். அதுவே நீ செய்த பாக்கியம். என்னைப் பார்! எனது கணவர் ராஜவர்மர் சிறையில் இருக்கிறார். இருப்பினும் நான் தைரியத்தை இழக்காமல் அனைவருக்கும் உதவிக் கொண்டிருக்கிறேன். அதற்குக் காரணம், உனது கணவரின் பிரார்த்தனைகள்தான் என்னையும் அறியாமல் எனக்குள் துணிவினை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அத்தகைய ஒரு நல்ல இதயத்தில் உறைந் திருக்கும் நீ மனம் கலங்கலாமா? கிளம்பு! அவனி சிம்மரிடம் இந்த இலைகளைக் காட்டி உன் கணவரின் நல்ல மனதைப் புரிய வைப்போம். அவர் கூறுவது போன்று, ஜெயவர்மன் சதிசெய்து சிலையினை அபகரித் திருக்கமாட்டார். ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியதால், தன்னை வெளிக்காட்டாமல் இருக்கிறார்

என்று நிரூபிப்போம்..” — என்று இலைகளைப் புரட்டிக் கொண்டே வந்தவள், ஒரு குறிப்பிட்ட இலையைப் படித்ததும் அவளது கண்கள் நிலைகுத்தி நின்றன.

‘அத்தியூரா! எனது தந்தையை அந்தப் புத்த சித்தினி நோக்கு வசியத்திற்கு உட்படுத்தி, சோழத்திற்குப் பல்லவம் வழியாகச் செல்ல அனுமதி பெற்றுவிட்டாள். நவரத்னாவையும் வசப்படுத்தி ரணதிலகனின் காதலியாக மாற்றியிருக்கிறாள். அவள் உன்னை நோக்கித்தான் வருகிறாள். அவளிடம் இருந்து உன்னைக் காப்பதற்குத் தேவையான ஆற்றலை நீதான் எனக்குத் தர வேண்டும்!’ — அந்த அத்தியிலையில் எழுதியிருந்த வேண்டு கோளினை வாசித்த ராஜஸ்ரீ பரபரப்புடன் சாயாவைப் பார்த்தாள்.

“இந்த இலையில் ஜெயவர்மர் எழுதியுள்ள செய்தியைப் படித்தாயா?” — என்று அந்த இலையை உருவிச் சாயாதேவியிடம் நீட்ட, அவள் அதை வாசித்தாள். திகைப்பினால் அவளது வாய் பிளக்க, அந்தப் பெண்கள் இருவரும், குழப்பம் மிகுந்த கண்களால் ஒருவரையொருவர் வெறித்தனர்.

“இந்த ஓலைக்கு என்ன பொருள்?” — ராஜஸ்ரீ கேட்டாள்.

“தெரியவில்லை. நானே இப்போதுதான் இந்த ஓலையைக் கவனிக்கிறேன். பொதுவாக அவரது பிரார்த்தனை அறைக்குள் நான் செல்வதே கிடையாது!” — துக்கத்தினால் தொண்டை அடைக்கப் பேசினாள், சாயாதேவி.

“உனது கணவர், எனது கணவர் ஆகிய இருவரின் மீதும் உள்ள அபவாதத்தைக் களையப் போகும் அத்தியிலை இது. அத்திமலையானே நமது கண்களில் இதனைக் காட்டியிருக்கிறார். அதுமட்டுமா? வீரச் சிங்கமாகத் திகழ்ந்த நமது மன்னர், தற்போது மஞ்சத்தில் சித்தபிரமையுடன் கிடப்பதற்கான காரணம், நமது நாத்தி

நவரத்னாவின் மரணத்திற்கான காரணம் மற்றும் விஜயவர்மரின் கொலைக்கான காரணம் எல்லாமே நமது ஜெயவர்மர் குறிப்பிட்டிருக்கும் அந்தச் சித்தினியாகத் தான் இருக்க வேண்டும். அவளது பெயர் என்ன..? சற்று விசித்திரமாக இருந்ததே! பிரக்ன.. பிரக்ஞுதாரா..! ஆம்! அவளது அறிமுகத்திற்குப் பிறகுதானே, குதூகலமாக இருந்த நமது குடும்பத்தில் விபரீதங்கள் நிகழத் துவங்கின. உடனே, நாம் அவனிசிம்மரிடம் இந்த ஓலையைக் காட்டுவோம்." — ராஜஸ்ரீ பரபரப்புடன் கூறிவிட்டு, அங்கிருந்து புறப்பட எத்தனித்தாள்.

அவளது புஜத்தைச் சட்டென்று பற்றினாள், சாயா!

"நிதானம் தேவை ராஜஸ்ரீ! அத்தியிலையில் உண்மைகள் உள்ளன. அத்திமர சிலையையே காண வில்லை என்கிற போது, உண்மைகளைத் தாங்கி வரும் அத்தியிலைக்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? நாம் சென்று இந்த இலைகளைக் காட்டினால், நமது கணவன்மாரைக் காப்பாற்ற நாம் செய்யும் திட்டமாகவே அதனை எண்ணுவார். அதனால் நாம் கூறும் தகவல் களுக்கோ, இந்த அத்தி ஓலைகளில் உள்ள உண்மை களுக்கோ மதிப்பு இருக்காது. அதற்குப் பதில், ஜெயவர்மர் நம்மிடம் ஏதோ தகவல்களைத் தெரிவித் திருக்கிறார் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டால், பிறகு நாம் அதை அவர்களது கட்டாயத்தில் வெளியிட்டால் உண்மைகளுக்குக் கனம் இருக்கும். அத்தியோலைகளுக்கும் மதிப்பு இருக்கும். உலகிற்கும் அது தெரிய வரும். எனவே முதலில் தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரிடம் தகவலை எட்டவிடுவோம். நமக்குச் சாட்சியாகவும் இருப்பார். அவரையும் நாம் எச்சரிக்கை யுடனேயே அணுக வேண்டும். நாளை அவனிசிம்மன் அவரையும் தனது கையகப்படுத்தி ஜெயவர்மனுக்கு எதிராகச் சாட்சி கூறலாம். எனவே, ஜெயவர்மனின் பிரார்த்தனை ஓலைகளில் பல மர்மத் தகவல்களைத்

தெரிவித்திருக்கிறான் என்பதை அனைவருக்கும் தெரிய வைப்போம்."

"அந்தத் தகவலை எப்படிப் பரப்புவது?" — ராஜஸ்ரீ கூறினாள்.

"எனது மாளிகையிலேயே ஒருத்தி இருக்கிறாள். அவளது பெயர் சிந்தாமணி. சிந்தாமல் சிதறாமல் தகவல்களை வம்பாகப் பேசி ஊரில் மணியடித்துப் பரப்புவாள். அரண்மனையில் நடக்கும் நிகழ்வுகளை எனக்குத் தெரிவிப்பதும் அவள்தான். அவளிடம் தகவலைக் கூறினால், தனது கணவன் துருவனிடம் அதனை எட்டவிடுவாள். துருவனின் அண்ணன் சாகரன்தான் தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரின் கணக்காளன். அவளை இப்போது அழைக்கிறேன்.." சாயா கூற, தலையசைத்தாள், ராஜஸ்ரீ.

"அந்தச் சிந்தாமணியை அழைத்துத் தகவலைக் கூறப் போகிறாயா?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"அவளிடம் கூறி எல்லாருக்கும் சொல் என்றால் அவளுக்குச் சுவாரஸ்யம் இருக்காது. அதற்கு ஒரு உபாயம் வைத்திருக்கிறேன். இரு!" — என்ற சாயாதேவி, குரல் கொடுத்தாள்.

"யாரங்கே! சிந்தாமணியை அழைத்து வா!" என்று குரல் கொடுக்க, காவலன் சென்று சிந்தாமணியை அழைத்து வந்தான்.

சிந்தாமணி பணிவுடன் தலைகுனிந்து நின்றாள்.

"சிந்தாமணி! நானும், இளவரசி ராஜஸ்ரீயும் மிக முக்கியமான தகவல்களைப் பற்றி ஆலோசிக்கப் போகிறோம். காவலர்கள் கூட இருக்கக் கூடாது என்பதால்தான் நான் உன்னை அழைத்தேன். காவலர் களைப் போகச் சொல்லிவிட்டு, நீ வாயிற்கதவை மூடிவிட்டு, யாரும் வராமல் பார்த்துக்கொள்" என்று கூறியதும், தலையசைத்துவிட்டு, அறையின் வாயிலை நோக்கி நடந்தாள்.

காவலர்களை அனுப்பிவிட்டு, கதவை மூடிய சிந்தாமணி தனது செவிகளைக் கதவின் மீது பதித்தாள். வெறும் வாயை மெல்லுபவளான சிந்தாமணி குசேலன் தந்த அவலைப் பிடுங்கி உண்ட துவாரகை கண்ணனாக மாறி, உள்ளே பகிரப்பட்ட அவலைத் தனது செவிகளால் ஆவலுடன் விழுங்கினாள்.

கதவில் பதிந்திருக்கும் அவள் செவிகளுக்கு நல்ல விருந்தளித்தனர், சாயாவும், ராஜஸ்ரீயும். விரைவிலேயே, தனது செவிகளின் மூலமாகச் சிந்தையில் பதிந்திருந்த தகவலை எதிர்ப்பட்டோரிடம் தெரிவித்தபடி தனது கணவன் துருவனிடம் எட்டவிட்டாள். அவன் தனது அண்ணன் சாகரனிடம் கிளிப்பிள்ளையாக ஒப்புவிக்க, விரைவிலேயே மச்சவாசுதேவர் அந்தத் தகவலை அறிந்து கொண்டார்.

ஜெயவர்மன் சில இரகசியத் தகவல்களை மனைவி சாயாதேவிக்கு அனுப்பியுள்ளான். ராஜஸ்ரீயுடன் அதனைப் பற்றிச் சாயாதேவி ஆலோசனை செய்து கொண்டிருந்தாள். அதனை ஒட்டுக்கேட்ட சிந்தாமணி என்கிற பணிப்பெண் தனது கணவன் துருவனிடம் சொல்ல அவன் தனது அண்ணன் சாகரனிடம் சொல்ல, தனது கணக்காளனாகத் திகழ்ந்த அவன், அந்தத் தகவலைத் தன்னிடம் கூறிவிட்டான் என்கிற சமாசாரத்தை இளவரசன் அவனிசிம்மனிடம் தெரிவிப்பதற்காக விரைந்து கொண்டிருந்தார், மச்சவாசுதேவர்.

புவனதேவியின் உடல் நிலையை விசாரிப்பதற்காக அரண்மனையினுள் ராஜஸ்ரீ நுழைந்த அதே நேரம், மச்சவாசுதேவரும் நுழைந்தார். இவளைத் திரும்பிப் பார்த்தபடி அவர் விரைவாக அவனிசிம்மனின் அறையை நோக்கி நடக்க, தனக்கும் முன்பாகவே தாங்கள் பரப்பியிருந்த தகவல் அரண்மனையினுள் தாவிச் செல்வதைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டாள், ராஜஸ்ரீ.

# 4. அண்ணலும் நோக்கினான்; ஆபத்தும் நோக்கியது!

ஜெயவர்மனின் கைகளும் கால்களும் தொடர்ந்து நீந்திக் கொண்டிருந்த காரணத்தால் களைத்துப் போயின. உறுதியான கைகால்கள் களைத்தனவே தவிர, மென்மை யான அவனது மனம் சளைக்கவில்லை. தொடர்ந்து நீந்திச் செல் என்று அவனை வலியுறுத்திக் கொண்டே இருந்தது. தான் காண்பது அத்தனையும் கனவுதான். தான் கடலில் நீந்திக் கொண்டிருக்கவில்லை. அத்திமலை ஆலயத்தின் பொற்றாமரைக் குளத்தில்தான் நீந்திக் கொண்டிருக்கிறோம். இதோ.. கரையேறி அத்தி மலையானை தரிசித்துவிட்டு, ஒத்தாடை அரண்மனை அந்தப்புரத்தில் இவனுக்காகக் காத்திருக்கும் சாயாதேவியின் மடியில் சென்று விழப்போகிறோம்.. என்று எண்ணியபடி நீந்திக் கொண்டிருந்தான். உடல் களைப்பினை மறக்கடிக்க, அந்தச் சுகமான நினைவுகளில் ஆழ்ந்தபடியே, முன்னேறிக் கொண்டிருந்தான்.

அத்திமலைத்தேவனுக்கு இனி பிரக்ஞுதாராவினால் ஆபத்து நீங்கியது. அவள் உயிருடன் இருக்கிறாளோ இல்லையோ..? மீண்டும் மாவிலக்கை வரை நீந்துவதற்கு, இவன் உடலில் திராணி இல்லை. இப்படியே நீந்திக் கொண்டு இருப்போம். அருகே ஏதாவது தீவு தென்படுகிறதா என்று பார்ப்போம். கரை ஏறியவுடன் ஏதாவது கலத்தில் மீண்டும் காஞ்சிக்குச் செல்லுவோம் என்றுதான் நீந்திக் கொண்டிருந்தான்.

ஜெயவர்மன் அவ்வப்போது கடல்நீரில் மிதந்தபடி தனது பார்வையைச் சுற்றி ஓடவிட்டு, கரை ஏதேனும் தெரிகிறதா என்று நோக்கிவிட்டு, பிறகு மீண்டும் நீந்தத் தொடங்குவான். அப்படி ஒருமுறை, அவன் தண்ணீரில் மிதந்தபடி கண்களில் வழிந்த நீரைத் துடைத்தபடி நேராக நோக்க, அவனது பார்வையில் ஒன்றிரண்டு தென்னை மரங்கள் தென்பட்டன. மிக அருகிலேயே கரை இருக்கிறது என்பதை உணர்ந்த ஜெயவர்மனின் மனதில் நிம்மதி பரவ, அந்தத் தீவை நோக்கி நீந்தத் துவங்கினான்.

கரை கண்ணில் பட்டதும், களைத்துப் போன அவனது தேகமும், புதிய உத்வேகத்துடன் அவன் நீந்துவதற்கு உதவ, விரைவிலேயே அவன் அந்தத் தீவை அடைந்துவிட்டான்.

அது ஒரு மனித சஞ்சாரமற்ற தீவு என்பதைப் புரிந்து கொண்டு, சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டு பிறகு தீவைச் சுற்றிப் பார்க்கலாம் என்று கரையில் காலை வைத்ததும், மணல் மேட்டிலேயே 'தடால்' என்று விழுந்தான். நீண்ட தொலைவு நீந்தி இருந்ததால், உடல் கெஞ்ச, அப்படியே கண்களை மூடி உறங்கிப் போனான்.

ஜெயவர்மன் கண்விழித்த போது கதிரவன் மேற்கில் இறங்கிக்கொண்டிருந்தான். எழுந்து மணலில் அமர்ந்தவனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

கனிகள் எதையாவது பறித்து உண்ணலாம் என்கிற நினைப்போடு, கடற்கரையிலிருந்து தீவின் உள்பகுதியை நோக்கி நடந்தான்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் நுழைந்து கனிகள் ஏதாவது தென்படுகிறதா என்று சுற்றி நோக்கினான். அப்போது —

புதர்களின் பின்பாக யாரோ நகர்வது போல் தோன்ற, ஜெயவர்மன் சட்டென்று நின்றான். காட்டு மிருகம் ஏதாவது இவனைத் தாக்குவதற்காகத் தயார் நிலையில்

நிற்கிறதோ? அவன் நின்றதும், புதரின் பின்பாக ஏற்பட்ட அசைவும் நின்றது. ஜெயவர்மனின் கண்கள் குறிப்பிட்ட புதரையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தன.

ஏதாவது ஒரு காட்டு மிருகம், உறுமியபடி தன் மீது பாயக்கூடும் என்று ஜெயவர்மன் தயார் நிலையில் இருந்தான். அவனது உடைவாளைப் பயணித்திருந்த கலத்திலேயே விட்டுவிட்டு, உயிர் பிழைத்தால் போதும் என்று நீந்தி வந்திருந்தான். உடலும், கைகளும் களைத்திருந்ததால், மேலே பாயும் மிருகத்துடன் போராட முடியுமா என்பதே அவனுக்கு உறுதியாகத் தெரியவில்லை. வருவதை எதிர்நோக்குவோம் என்று அந்தப் புதரையே வெறித்துக் கொண்டிருந்தான். மீண்டும் சலசலவென்று அந்தப் புதரின் பின்பாக அசைவு.

புதரின் பின்பிருந்து மிருகம் எதுவும் பாயவில்லை. மனிதன் ஒருவன்தான், புதரிலிருந்து நழுவி இவன் முன்பாக வந்து நின்றான். ஜெயவர்மன் அதிர்ந்து போனான்.

அவன் முன்பாக வந்து நின்றது, ஜினிங்டியாண்டை. தனது மேலாடையைக் காய வைத்திருந்தான் போலும். திறந்த மார்புடன் கைகளைக் கட்டியபடி இவனை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தான்.

"தப்பித்துவிட்டாயா? நீ கடலில் மூழ்கி மாண்டிருப்பாய் என்று நினைத்தேன்..?" — ஜினிங் சீன மொழியில் கூற, அவனது மொழியும், த்வனியும் ஜெயவர்மனுக்குப் புரியாமல் போனாலும், அவன் உடல்கூறின் மொழியை வைத்து அவன் கேட்பதைப் புரிந்து கொண்டான், ஜெயவர்மன்.

"நீண்ட கடற்கரையைக் கொண்ட பல்லவத்தில் வசிப்பவனுக்கு நீச்சல் தெரியாதா என்ன? எங்கே உனது குரு, பிரக்ஞுதாரா?" — ஜெயவர்மன் கேட்டான்.

*"நான் இதோ இருக்கிறேன், ஜெயவர்மா!" — பின்னால் இருந்து குரல் ஒலிக்கத் திடுக்கிட்டுத் திரும்பினான், ஜெயவர்மன். பிரக்ஞுதாரா அவனை புன்சிரிப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள்.*

*"நானும், ஜீனிங்கும் இங்குப் பறந்து* வந்துவிட்டோம். நீ இங்குதான் வருவாய் என்று எனக்குத் தெரியும். உனது வருகைக்காகத்தான் காத்திருந்தோம்." — பிரக்ஞுதாரா கூற, ஜெயவர்மன் மனதினுள் அதிர்ந்தான்.*

---

* புத்த சித்தினிகள் தாவிப் பறக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார்கள் என்று கூறுகிறது டாகினி தாந்தரீகம். The Dakinis practiced sex magic ('karma mudra') and death magic. These gave them the power of flight (among other abilities). Flying is a common result of shamanic practices everywhere (and of course European witches fly, too). In Elephant Journal, Ms. Noel Smith Sparrow, a researcher speaks about a radical Tibetan Buddhist practice called Chod. Chod is an art of marrying our subconscious and conscious minds together. It is the union of our waking self (the thoughts, goals, and beliefs in our day-to-day life) and shadow self (the deeply hidden, taboo, and dark stories and beliefs). What a wonderful and radical thing it is to be a witch. In Tantric Buddhism, this is called 'inviting Mara to tea.' -Elephant Journal.

போதியின் அடியில் ஞானத்தைப் பெறுவதற்காக கௌதம புத்தர் அமர்ந்த போது, அவரது தவத்தைக் கலைக்க மாரா என்னும் துர்தேவதை முயற்சித்ததாகப் புத்த தத்துவம் கூறுகின்றது. மாரா என்னும் துர்சக்தி, டாகினி, வேதாளி மற்றும் சூலினி என்கிற மூன்று பெண் தேவதைகளைக் கொண்டுதான் ஞானம் பெற முயலும் ஆண்களைத் தடுத்துத் தனது வசம் இழுத்துக் கொள்வதாக நம்பப்படுகிறது. ஞானம் பெறும் ஆண்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இந்தப் பெண் தேவதைகளுக்கு அதீத சக்தியை மாரா கொடுப்பதாகக் கூறப்படுகிறது. Kiss of the Yogini and The Origins of Buddhist Yoga and Tantra என்கிற இரு நூல்கள் பௌத்தத் தாந்த்ரீகங்கள் மற்றும் சித்து வேலைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன, பௌத்தர்களின் தாந்த்ரீக தேவதை டாகினி என்னும் பெண் தேவதை. பெண் தாந்த்ரீகர்கள் டாகினி தேவதைக்குப் பணிந்து சரணடைய அவர்கள் மூலம் டாகினி சித்து வேலைகளில் ஈடுபடுவாள். டாகினியின் உக்கிர அம்சம் வேதாளி. வேதாளியின் உக்கிர அம்சம் சூலினி.

*பறந்து வந்தோம் என்கிறாளே? இவளுக்குச் சித்தம் கலங்கிவிட்டதா என்ன?*

*பிரச்னைக்குரியவர்கள் ஒழிந்தார்கள் என்று இவன் நினைத்திருக்க, இதோ அவர்களிடம் மீண்டும் வலிய வந்து சிக்கியிருக்கிறான்.*

அவளது கண்களை நோக்காமல் பரந்து விரிந்த கடலைப் பார்த்து நின்றான்.

“சற்றும் எதிர்பார்க்காதபடி புயலடித்துத் தேவ உடும்பரம் கடலில் நழுவிச் சென்றுவிட்டதே.” — முகத்தில் போலியான வருத்தத்தைக் காட்டினான்.

பிரக்ஞுதாரா கலகலவென்று சிரித்தபடி ஜெயவர்மனை நோக்கினாள். பற்கள் தெரிய அவள் நகைத்தாலும், கண்கள் ஒருவித குரூரத்தைப் பிரதிபலித்தன.

“ஜெயவர்மா! தேவ உடும்பரத்திற்கு நீரில் இருக்கும் போது ஆற்றல் அதிகரிக்கும் என்பது எனக்குத் தெரியும். எனவே, கடலில் அந்தச் சிலை விழுந்துவிட்டது என்பது உண்மையானால் அதன் ஆற்றல் அதிகரிக்கும் என்று நீ மகிழ்ச்சிதானே அடைய வேண்டும். எதற்காக முகத்தில் போலியான வருத்தத்தைக் கொண்டிருக்கிறாய்..?”

பிரக்ஞுதாரா கேட்டதும், ஜெயவர்மனின் வாய் உலர்ந்து போனது. அமைதியாக அவளது முகத்தை நோக்கியபடி நின்றான்.

---

**The Dakinis were shamanic priestesses of a non-Buddhist, non-Hindu 'tribal' people of Bengal (the region just east of Magadha, where Surya was born). They belonged to an ethnic group-perhaps Munda-with darker skin than the Buddhists and Hindus of the time.**

**புத்தர் ஞானத்தைப் பெற்று அனைத்தையும் துறக்கிறார். ஆனால் இந்தச் சித்தினிகள் துறவறத்தையும் தாந்த்ரீகத்தையும் இணைத்துத் துர்தேவதைகளிடம் நட்புக் கொண்டு அவர்கள் மூலம் செயலாற்றுகிறார்கள். தாந்திரீகம், வர்மக்கலை, நோக்கு வர்மம், ஏவல், பில்லி சூனியம் அனைத்தையும் ஒருங்கிணைத்து அதனைச் 'சோத்' என்று அழைத்தார்கள்.**

"நீ கொண்டு வந்தது தேவ உடும்பர மரமல்ல அது போலி சிலை என்பது எனக்கு தெரியும். எனது ஆற்றலை நீ குறைத்து மதிப்பிட்டுவிட்டாய், ஜெயவர்மா! நான் மிகவும் சக்தி வாய்ந்தவள். எனது உடலில் சனாதன ரத்தமும் ஓடுகிறது; மகாயான பௌத்த ரத்தமும் ஓடுகிறது. இந்த இரண்டு ரத்தங்களும் கலப்பதால் யாராலும் செய்ய முடியாத சாகசங்களை என்னால் செய்ய முடியும். உக்கிரத் தேவதைகளான டாகினி மற்றும் வேதாளியை எனது வசம் வைத்திருக் கிறேன் என்பது நீ அறியாதது. மூன்றாவது தேவதையான உக்கிரத்தின் உச்ச நிலையில் இருக்கும் பயங்கரியான சூலினியை வசப்படுத்தவே தேவ உடும்பர தேகத்தைத் தேடினேன். ஆனால், தேவ உடும்பரத்தைக் காட்டிலும் சிறந்த தேகம் ஒன்று இருப்பதைக் காஞ்சியில் கண்டேன்." — பிரக்ஞுதாரா கூறியதும் திகைப்புடன் அவளை நோக்கினான்.

தேவ உடும்பர அத்திமலையானைக் காட்டிலும் சிறந்த தேகமா? — காஞ்சியின் எந்த ஆலயத்தில் அத்தகைய சிலை இருக்கிறது?

"'தேவ உடும்பர அத்திமலையானைக் காட்டிலும் சிறந்த தேகமா? — காஞ்சியின் எந்த ஆலயத்தில் அத்தகைய சிலை இருக்கிறது?' என்று உனது மனதிற்குள் கேட்டுக் கொள்கிறாய் என்று, டாகினி தேவி எனது செவியில் உரைக்கின்றாள்." — பிரக்ஞுதாரா கூற, கலவரத்துடன் அவளை நோக்கினான், ஜெயவர்மன். என்ன இது? இவளது மனதை அப்படியே படிக்கின்றாளே!

"ஜெயவர்மா! தேவ உடும்பர தேகத்தைக் காட்டிலும் சிறந்த தேகம் ஒன்றைக் காஞ்சியில் கண்டேன் என்றேனே. அந்தத் தேகம் ஆலயத்தில் இல்லை. அரண்மனையில் ராஜகுமாரனாக வாழ்ந்து வருகிறது அந்தத் தேகம். தேவ உடும்பர அத்தியின் அருள்பெற்ற நீதான் அந்தத்

தேகத்துக்கு உரியவன். உனது மனதில் பாயும், குடும்பப் பாசம், மக்கள் மீது நேசம், தர்ம சிந்தனை, பரோபகார எண்ணங்கள், கண்ணியம், போராடும் ஆற்றல் எல்லா வற்றிற்கும் காரணமே, உனது தேகத்தின் மூலாதாரம் மிகவும் ஆற்றல் பெற்றுத் திகழ்வதால்தான். எந்த ஆற்றல்களை வேண்டிப் புத்தன் போதியின் அடியில் அமர்ந்தானோ, அந்த ஆற்றல்களைத் துறவறம் ஏற்காமலேயே, இயற்கையிலேயே நீ பெற்றுவிட்டாய். ஒருவேளை, அத்திமலைத்தேவனைத் தொடர்ந்து ஆராதித்ததால் கிடைத்த பலன் என்று நினைக்கிறேன். புத்தன் தேவ உடும்பரத்தைத் தேடிச்சென்று அதனடியில் அமர்ந்தான். நீயோ தேவ உடும்பர தேகத்தின் ஆற்றலைக் கொண்டிருக்கிறாய். எனவேதான் உன்னைக் கண்டதும், எனக்குத் தேவ உடும்பர அத்திமலையான் மீது இருந்த நாட்டம் போயிற்று. அத்திமலையானை அபகரிக்க வந்தவள், உன்னைக் கண்டேன்." கண்கள் மினுமினுக்க அவனை மதிப்புடன் பார்த்தாள் பிரக்ஞுதாரா.

"அழியப்போகும் எனது தேகத்தைப் போய், அத்திமலையானின் தேகத்துடன் ஒப்பிடுகிறாயே?" — காட்டத்துடன் ஒலித்தது அவனது குரல்.

யாரோ செவியில் பேச, அதை உன்னிப்பாகக் கவனிப்பவளைப் போன்று தனது சிரசை வலதுபுறமாகச் சாய்த்த பிரக்ஞுதாரா, பிறகு இடிஇடி என்று சிரிக்கத் துவங்கினாள்.

ஜினிங் வியப்புடன் சிரித்துக் கொண்டிருக்கும் பிரக்ஞுதாராவை பார்த்தான். அதிபயங்கரி பிரக்ஞுதாரா. டாகினி, வேதாளி என்ற இரு துர்தேவதைகளின் உக்கிரத்தைத் தன்னுள் கொண்டிருப்பவள். அவளிடம் கோபாவேசத்துடன் பேசி மீண்டவர் எவரும் இல்லை. ஆனால் ஜெயவர்மனின் காட்டமான பேச்சைக் கேட்டும், கோபம் கொள்ளாமல் சிரித்துக் கொண்டிருக் கிறாள் என்றால், உண்மையிலேயே ஜெயவர்மன் ஒரு

அபூர்வப் பிறவியாகத்தான் இருக்க வேண்டும். மனதினுள் நினைத்தான் ஜினிங்.

"ஜெயவர்மா! உனது அந்தரங்கத்தைப் பற்றிப் பேசுகிறேன் என்று என்னைத் தவறாக நினைக்காதே! உன்னைப் பற்றி நீ அறியாதவன். உனது தேகத்தைப் பற்றி எங்ஙனம் உன்னால் அறிய முடியும்? உனது திருமணம் நடந்த அன்று இரவு பள்ளியறையில் நீ கோபத்துடன் நுழைந்தாய். கடிகையில் உனது சகோதரன் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதைக் கண்ணுற்றதால் உனக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு எழுந்தது. நீ உறவு கொள்ளும் மனநிலையில் இல்லை. அப்போது பள்ளியறையில் என்ன நடந்தது? உனது தேகத்தைக் கண்டதும் உன் மனைவி என்ன செய்தாள்? நீ அவளிடம் உறவு கொண்டதும், உன்னிடம் என்ன சொல்லி அழுதாள்? நீ அவளிடம் என்ன சொல்லிச் சமாதானம் செய்தாய்?" — பிரக்ஞுதாரா கேட்க, கல்லாகச் சமைந்து நின்றான், ஜெயவர்மன்.

பள்ளியறையின் கதவுகளுக்குப் பின்பாகக் கணவன் மனைவியிடையே நடந்த சம்பவம். அதனை நேரில் கண்டது போன்று பிரக்ஞுதாரா விவரிக்கின்றாளே.. ஜெயவர்மனது முகம் அவமானத்தாலும் கோபத்தாலும் சிவந்து போனது.

அதனைக் கவனிக்கத் தவறவில்லை, பிரக்ஞுதாரா!

"சற்றே அந்த இரவைப் பற்றிச் சிந்தித்துப் பார், ஜெயவர்மா. அந்த இரவுதான் உன்னையே உனக்கு அறிமுகம் செய்யப் போகிறது!" — கிசுகிசுத்த குரலில் பிரக்ஞுதாரா கூற, தன்னையும் அறியாமல், ஜெயவர்மனின் நினைவுகள் அவனது முதலிரவு வைபவத்தினைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது.

# 5. முதலும், இறுதியும்

முக்கூடல் கடிகையில் சாளுக்கிய நாட்டியக்காரி வித்யுதாவிடம் முறை தவறி நடந்து கொண்டிருந்த விஜயவர்மனிடமிருந்து அவளைக் காப்பாற்றி, விஜயவர்மனை நையப்புடைத்தபடி, கடிகையின் மைதானத்தின் வழியாக அவனை ஜெயவர்மன் இழுத்துச் சென்றான். அவன் ஜெயவர்மனை கொலை செய்வேன் என்று எச்சரிக்க, இவனும் 'சிற்றப்பன் விஷ்ணுவர்மனுக்கு இனி ஒரு மகன்தான்' என்று சூளுரை செய்துவிட்டு, ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பியிருந்தான். கோபத்துடன் பள்ளியறைக்குள் நுழைந்தவன், மஞ்சத்தில் அவனுக்காகக் காத்திருந்த சாயாதேவியைப் பார்த்தான்.

"சாயா! இன்றைய எனது மனநிலையில் எனக்குக் கலவியாடத் தோன்றவில்லை. எனது கோபம் தணியும்வரை சற்றே நீ பொறுத்திருக்க வேண்டும்.." — கோபத்துடன் அவன் மஞ்சத்தில் அமராமல் இருக்கையில் அமர்ந்தான். விஜயவர்மன் வித்யுதாவை சித்திரவதை செய்து கொண்டிருந்தது ஒருபுறம் அவனது ஆத்திரத்தைக் கிளப்பியிருந்தாலும், அதைக் காட்டிலும், இவன் மனைவி சாயாதேவியைக் கீழ்த்தரமாக அவன் விமரிசித்திருந்தது ஜெயவர்மனுள் பெரும் பிரளயத்தை உண்டாக்கி இருந்தது.

"என்ன நடந்தது, ஜெயவர்மரே! முதலிரவில் ஒரு கணவன் மனைவியை நெருங்கமாட்டேன் என்று சொல்கிறார் என்றால், அவர் மனதில்தான் பிரச்னை

இருக்கும். தேகத்தில் நிச்சயம் பிரச்னை இல்லை. எனவே, உங்கள் மனக்கிடக்கையை என்னிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் பிரச்னையை நான் தீர்க்கிறேன்?" — சாயா கூறினாள்.

சற்றே கோபம் குறையாமல் அவளை எரிச்சலுடன் நோக்கினான், ஜெயவர்மன்.

"எனது தேகத்தைப் பற்றி நீ எங்ஙனம் அறிவாய். இன்னும் நாம் ஒருவரையொருவர் தொட்டதும் கிடையாது. நாம் காதலித்ததால் ஒருவேளை நீ எனது மனதைப் படித்திருக்கலாம். ஆனால் எனது தேகத்தில் குறைபாடு இல்லை என்று எங்ஙனம் கூறுகிறாய்?"

அவனை புன்முறுவலுடன் நோக்கினாள் சாயா.

"தேகத்தில் பிரச்னை என்றால் நீங்கள் பள்ளியறைக்குள் பிரவேசித்திருக்கமாட்டீர்கள். இல்லை.. இல்லை! தவறு. உங்கள் தேகத்தில் பிரச்னை இருந்திருந்தால், மணவறை வரை வந்திருக்கமாட்டீர்கள். காரணம், உங்கள் மனம் சுத்த சத்வமானது. அதில் கேவலங்களுக்கும், கீழ்த்தரமான எண்ணங்களுக்கும் இடமில்லை. மனம் பாதிக்கப்பட்டு எத்தனையோ ஆண்கள் பள்ளியறைக்குள் நுழையாமல் அந்தச் சடங்கையே பகிஷ்காரம் செய்திருக்கிறார்கள். தனக்காக ஒருத்தி காத்திருப்பதை அறிந்தும், அவர்களது ஆணவ ஆண்மை அங்ஙனம் அவர்களை நுழையவிடாமல் தடுக்கிறது. தாங்கள் உள்ளே வந்து, மனதைவிட்டு உறவாடும் மனநிலையில் இல்லை என்று கூறுவது, உங்கள் கம்பீரத்தை அதிகரித்துக் காட்டுகிறது." — சாயாதேவி கூற, சற்றே ஜெயவர்மனின் மனம் இளகிற்று.

"என்னை மன்னித்துவிடு, சாயா! மனம் சரியில்லை தான். எனது தம்பி விஜயவர்மன் சாளுக்கிய நாட்டியக் காரி வித்யுதாவிடம் முறைதவறி நடந்து கொண்டிருந் தான். சாளுக்கியத்தின் ராஜ நர்த்தகி அவள். இப்போது தான் சாளுக்கியத்துடன் சற்றே உறவு சீர்பட்டு, அவர்கள்

நல்லெண்ணக் குழுவில் நாட்டியக்காரி வித்யுதாவை நமது அவையில் ஆடுவதற்கு அனுப்பியிருக்கிறார்கள். பல்லவ இளவரசன் ஒருவன் அவளை நாசமாக்கினான் என்கிற செய்தி சாளுக்கியத்திற்குச் சென்றால்.. என்ன நடக்கும்? அதுமட்டுமா? நான் அவளை விஜய வர்மனிடம் இருந்து காப்பாற்றியதும் அவன் என் மீது சீறிப் பாய்ந்தான். உனது முதலிரவை நடத்திக் கொள்ளாமல் என்னை வந்து தடுக்கின்றாயே! உன்னால் இயலவில்லையா, இல்லை உன் மனைவி ஒருவேளை இன்னும் என்னை நினைக்கிறாளோ என்று கேட்டான். அந்தக் கோபத்தில்தான் நான் அவனைத் தாக்கினேன்." மனம் வெதும்ப ஜெயவர்மன் பேச, மஞ்சத்தில் அமர்ந்திருந்த சாயா, உடனே அவசரமாக எழுந்து வந்து அவனது சிரசைப் பற்றித் தனது மார்பில் சாய்த்துக் கொண்டாள்.

"ஜெயவர்மரே! உண்மைதான். இப்படிப்பட்ட காட்சியைப் பார்த்த பிறகு, தனது மனைவியைப் பற்றிக் கேவலமான பேச்சுகளைக் கேட்ட பிறகு, எந்த ஆண்மகனுக்கும் முதலிரவு வைபவத்தைக் கொண்டாடத் தோன்றாதுதான்" என்றவள், "ஆனால்.." என்று கூறிவிட்டு நிறுத்திக் கொண்டாள்.

அவனது சிரசைத் தனது மார்பில் சரித்து இரு கைகளாலும் அவனது கழுத்தினை அணைத்து, சாயா அவனைத் தன்னோடு இறுகப் பிணைத்திருக்க, தலையை உயர்த்தத் தோன்றாமல், கண்களை மட்டும் உயர்த்தி அவளது முகத்தை நோக்கினான்.

"ஆனால்..?" — ஜெயவர்மன் கேட்டான்.

"இன்று நீங்கள் என்னுடன் உறவாடவில்லை என்றால், விஜயவர்மனுக்கு அது முதல் வெற்றி என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? என்னை நீங்கள் தட்டிப் பறித்துக் கொண்டீர்கள் என்கிற கோபம் உங்கள் மீது கொண்டிருக்கிறார். வித்யுதாவை காப்பாற்றி, உங்கள்

தம்பியைத் தாக்கி விரட்டிவிட்டீர்கள். உடலில் காயம்பட்டாலும், அவர் தற்போது இந்த சம்பவத்தை மறந்துவிட்டு, வேறு எவளையாவது நாடியிருப்பார். ஆனால் நீங்கள் அவர் தேகத்தில் ஏற்படுத்தியிருக்கும் காயத்தைவிட, உங்கள் மனதில் அவர் ஏற்படுத்தி யிருக்கும் காயம் பலமானது என்று பொருள் உண்டாகிவிடும் அல்லவா? இந்த உண்மை ஒருவேளை வெளியே கசிந்தால்.. சாயாவை மணந்து என்ன பயன்? முதலிரவு அன்றே அவர்களைப் பிரித்துவிட்டேன் என்று உங்கள் தம்பி கூறலாம் அல்லவா?" சாயா கேட்க, அவளது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஜெயவர்மன், இருக்கையில் இருந்து மேலுங்கீழும் நடைபோட்டான்.

அவன் சிந்தனையில் இருக்கும் போதே அவனை மேலும் கரைக்க எண்ணினாள், சாயா.

"உங்கள் தேகத்தைப் பற்றி எனக்கு என்ன தெரியும் என்று கேட்டீர்கள் அல்லவா? சொல்கிறேன்.. இவ்வளவு நாட்கள் நான் வெறும் அத்தை மகள்தான். நமது காதலையே நீங்கள் வெகுகாலம் கழித்துதான் அங்கீகரித்தீர்கள். அதனால் காதலியாக இருக்கும் போது நான் பெற்ற அனுபவங்களை உங்களிடம் கூறாமல் விட்டேன். இப்போது மனைவி என்கிற முழு உரிமையில் கூறுகிறேன். உங்கள் தேகம் தேவ உடும்பரத்தைப் போன்றது. இன்னும் சொல்லப் போனால், அதைவிடச் சிறந்தது." சாயா கூறியதும், திகைப்புடன் அவளைப் பார்த்தான்.

"அவசரப்படாதே, சாயா! அவன் அஸ்வமேத யாகத்தில் தோன்றிய தேவராஜன். சதையும், மாமிசமும் கொண்ட இந்தத் தேகத்தைப் போய் அவனுடைய தேகத்துடன் ஒப்பிடுவது தவறு." ஜெயவர்மன் பதைபதைப்புடன் அவளைத் திரும்பி நோக்கினான்.

"இல்லை. நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. உங்கள் தேகம் என்னைப் பொறுத்தவரை தேவ உடும்பரத்தைக் காட்டிலும் உயர்ந்தது. உங்கள் தேகத்தைக் காணும் போதெல்லாம், நான் அத்திமலையானையே காண்பது போன்று உணர்கிறேன். பலமுறை நான் பெருந்தேவி தாயாரைத் தரிசித்துவிட்டு, அத்திமலையின் மீது ஏறி, தேவராஜனை சந்திக்காமல் சென்றிருக்கிறேன். பலமுறை நீங்களும், ஏன் அத்திமலைத் தேவராஜனை தரிசிக்காமல் போகிறாய் என்று என்னைக் கேட்டிருக் கிறீர்கள்? நான் அத்திமலையானைத் தொட்டதில்லை. ஆனால் அவனைத் தரிசிக்கும் போது எனக்கு ஏற்படும் பரவசத்தை உங்களைக் காணும் போதும் உணர்கிறேன். உங்களையும் நான் இதுவரை தொட்டதில்லை. உயரமான அத்திமலையான் ஓங்கி உலகளந்து நிற்பது போன்று, நீங்களும், உயரமாக, ஓங்கி உலகளந்து நிற்கிறீர்கள். அவனது தேகத்திலும், உங்களது தேகத்திலும் நான் வேறுபாடே காணவில்லை." — சாயா கூறியதும் மிகப்பெரிய நகைச்சுவையினைக் கேட்டது போன்று 'ஹோ' என்கிற உரத்த குரலில் சிரித்தான், ஜெயவர்மன்.

"வெளியே சொல்லாதே, சாயா! நானும் அத்திமலையானும் ஒரே மாதிரியில் தேகம் கொண்டிருக்கிறோம் என்பதனை அறிந்தால், அவனைக் கடத்த நினைப்பவர்கள் அவனுக்குப் பதிலாக என்னைக் கடத்திச் சென்று போய்விடப் போகிறார்கள்." — ஜெயவர்மன் சொல்ல, துணுக்குற்ற சாயா ஓடிச்சென்று அவனது வாயை தனது கையால் மூட, அந்தக் கையைப் பற்றினான், ஜெயவர்மன்.

"எனது வாயை மூடக் கையைத்தான் பிரயோகப் படுத்த வேண்டுமா?" — என்றபடி அவளது கரத்தைப் பற்றி மஞ்சத்தை நோக்கி நடந்தான், ஜெயவர்மன்.

விஜயவர்மனுக்கு அவன் அன்றிரவு மாபெரும் தோல்வியை வழங்க உத்தேசித்துவிட்டான் என்பதைப்

புரிந்து கொண்டதுமே, அவனது மனக்கலக்கத்தினை நீக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் சாயாவின் முகத்தில் படர்ந்திருந்த தாய்மை உணர்வு விலகி, பெண்களுக்குரிய நான்கு வகைக் குணங்களும் நான்கு திசைகளில் இருந்து தோன்றி அவளது முகத்தில் குடியேறின. பரவசத்துடன் கண்களை மூடி இருந்த சாயா, அவனது தேகத்தைப் பார்த்ததும் அதிர்ந்து போய் அமர்ந்தாள். என்ன இது? பச்சை சாற்றுவதற்கு முன்பாக அத்திமலையான் அலங்காரங்கள், ஆபரணங்கள், புஷ்ப மாலைகள், நறுமணப் பூச்சுகள் எதுவுமின்றி ஒரு மெல்லிய பீதாம்பரத்துடன் காட்சி தருவான். செம்மையான அவனது தேவ உடும்பர தேகத்தைக் காண்பதற்கே பரவசத்தைத் தரும். இளவரசி என்பதால் அவளால் அருகே இருந்து அத்திமலையானை தரிசிக்க முடிந்தது. ஒருமுறை அனந்த பட்டரிடம் வேண்டி மிக அருகில் அவனை தரிசிக்கவும் செய்தாள்.

விஸ்வகர்மா செதுக்கிய சிலை அல்லவா! அத்தி மலையானின் நரம்பு மண்டலங்கள், கைகால் நகங்கள் போன்றவற்றை அனந்த பட்டர் இவளுக்குக் காட்டி யிருந்தார். தேவ உடும்பர அத்திமலையான் பிரதிமையின் நேர்த்தியைக் கண்டு இவள் அயர்ந்து போய் இருந்தாள். கம்பீர ஆண்மையுடன், 'இன்னும் நெருங்கி வா! எனது அரவணைப்பில் பாதுகாப்பாக இரு!' என்று சொல்வது போன்ற அந்த முகத்தினை நோக்கியதும், அவளையும் அறியாமல் வேண்டினாள்.

'மற்றவர்களுக்கு நீ அத்தன். எனக்கு நீ அத்தியூர நாதன். உன்னைப் போன்ற தேகக் கம்பீரத்தை உடையவனையே எனக்கு மணாளனாக அனுப்பு!' என்று கண்கள் பனிக்க தான் வேண்டியிருந்தது நினைவுக்கு வந்தது.

அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர தேகத்தை அருகினில் பார்த்துப் பரவசப்பட்டு அன்று வேண்டிக் கொண்டது போல, தன்னைப் போன்ற தேகத்தைக்

கொண்ட ஒரு மணாளனைத்தான் அனுப்பியிருந்தான். அன்று சந்நிதியில் தேவ உடும்பர மேனியைப் பார்ப்பது போன்றுதான், ஜெயவர்மனின் தேகத்தைக் கண்டதும் உணர்ந்தாள், சாயா. தனது வேண்டுகோள் நிறைவேறி விட்ட பரவசத்தில், சாயா உணர்ச்சிவசப்பட்டு அழத்துவங்கினாள்.

"உங்கள் தேகமும், அத்திமலையானின் தேகமும் ஒன்று தான். சந்தேகமேயில்லை. அன்று சந்நிதியில் அவன் அருகாமையில் உணர்ந்த அதே பரவசத்தை உணருகிறேன் நான்.." — கதறத் தொடங்கினாள், சாயா.

அவளது உணர்ச்சி வேகத்தைக் கண்டு திகைத்தான், ஜெயவர்மன்.

கடிகையில் தேவ உடும்பரத்தைப் பற்றி அவன் சுவடிகளைப் படித்திருக்கிறான். தேவ உடும்பர விருட்சம் காம மரம் என்று அழைக்கப்படும். தேவ உடும்பரத்தின் விதையை வேறு ஒரு மரத்தில் வைத்தால், அந்த மரத்தை அணைத்து, ஊடுருவி ஆக்கிரமித்துவிடும் என்று அறிந்திருக்கிறான். தன்னைத் தேவ உடும்பர தேகத்தைக் கொண்டவன் என்று சாயா உணர்ச்சியுடன் கூறுவதைக் கண்டதும் அவளது உணர்ச்சி வேகத்திற்குத் தடை போட எண்ணினான்.

கோப வேகத்தில் வேகவதி ஆறாக ஓடும் மனைவியின் கோபத்தை, அடக்கத்தானே பிரம்மன் காஞ்சியில் அஸ்வமேத யாகத்தைச் செய்தான். மனைவியின் வேகத்தை அடக்கப் பல்லவக் காஞ்சியின் இளவரசுக்குச் சொல்லியா தர வேண்டும்? சாயாவின் வேகத்தைத் தடுத்து நிறுத்தும் எண்ணத்துடன் அவளை நோக்கிக் குனிந்தான். அங்கே கூடல் சங்கமம் நடந்தேறியது.

"நமது வாழ்க்கையின் துவக்கத்திலேயே அத்தனை இன்பத்தையும் வாரி வழங்கிவிட்டாய். இது போதும். இனி உறவாடுவதற்கு நீ அருகில் இல்லையென்றாலும்

*அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை." — ஜெயவர்மன் உணர்ச்சி வேகத்தில் கூறினான்.*

*"இங்கு நடந்ததும் ஒரு முக்கூடல் சங்கமம்தான். வேகவதியின் வேகத்தில் நீ. அகன்ற பாலாற்றின் ஆளுமையுடன் நான். பாலாறுக்குத் துணையாகத் திகழும் செய்யாறு* போன்று அத்திமலையான் நம்மை இயக்கிச் செயல்பட வைத்து இங்கே முக்கூடல் சங்கமத்தை உருவாக்கினான்." — அதே பரவசத்துடன் கண்களை மூடிக் கூறினான் ஜெயவர்மன்.*

*"தேவ உடும்பரமே! திகம்பரத்தை மறைத்துப் பீதாம்பரதாரியாக மாறுங்கள். ரதி கேளிக்கை நடத்தியது போதும். சற்றே உறங்குவோம். நாம் உறங்கவில்லை என்றால் நமது முகத்தில் உறக்கத்தை இழந்த அறிகுறிகள் தென்படும். மற்றவர்களின் கேலிக்கு இலக்காவோம்!" — கிறங்கிப் போன குரலில் சாயாதேவி கூறினாள்.*

---

* பாலாறு, வேகவதியுடன் இணையும் மூன்றாவது ஆறு செய்யாறு! செய்யாறு தமிழ் நாட்டின் திருவண்ணாமலை மாவட்டத்தில் பாயும் ஒரு பருவக் கால ஆறு ஆகும். திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் உருவாகும் இந்த ஆறு பாலாற்றின் துணை ஆறு ஆகும். ஜவ்வாது மலைத்தொடரின் நசமலையில் தோன்றி மேற்குத் தெற்காகப் பாய்ந்து பின்பு செங்கம் அருகில் வடகிழக்காகத் திரும்பித் திருவண்ணாமலை மாவட்டத்தின் முழு நீளத்திற்கும் பாய்கிறது. ஜவ்வாது மலையிலிருந்து கிழக்காகப் பாயும் பீம ஆறு (பீமன் அருவியிலிருந்து உருவாவது), மிருகண்ட நதி (மிருகண்ட அணையிலிருந்து வருவது) ஆகிய துணை ஆறுகள் போளூருக்கு அருகிலுள்ள சோழவரம் எனும் ஊரில் செய்யாறுடன் இணைகின்றன. ஜவ்வாது மலையின் அடிவாரத்திலுள்ள செண்பகத்தோப்பு அணையிலிருந்து உருவாகும் நாக நதி எனும் துணை ஆறும் அமிர்தி அருகில் வரும் ஆறும் ஆரணி அருகே இணைந்து கமண்டல நாக நதியாகி வாழைப்பந்தல் அருகில் இணைகிறது. இங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் அகலத்தில் செய்யாறு ஆறாக வடக்குக் கிழக்காக ஓடிக் காஞ்சிபுரத்தை அடுத்த பழையசீவரம் எனும் ஊரில் பாலாறுடன் இணைந்து வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.

*"உத்தரவு பெருந்தேவியே!" — ஆடைகளை அணிந்தபடி கூறினான் ஜெயவர்மன்.*

*"என்னைப் பெருந்தேவி என்று ஏன் அழைக்கிறீர்கள்? அத்தை மகளாக இருந்த போது, நான் தேவி; உங்கள் காதலியாக மாறியதும் பெருந்தேவி. உங்கள் மனைவியாக மாறியதும் நான் கோப்பெருந்தேவி! தெரிந்து கொள்ளுங்கள்." சற்றே மிரட்டலாக ஒலித்தது சாயாவின் குரல்.*

*"ஆம்! தேவி, பெருந்தேவி, கோப்பெருந்தேவி என்கிற உனது பரிணாம வளர்ச்சியைக் கண்டு நான் மலைக் கின்றேன். உனது வேகத்தைக் கண்டதும் கோப்பெருந் தேவி என்கிற நிலையின் அடுத்தக் கட்டத்திற்கும் வளர்ந்துவிட்டாய்." — ஜெயவர்மன் குறும்புடன் அவளைப் பார்த்தான்.*

*"கோப்பெருந்தேவிக்கு அடுத்த நிலையா? அது என்ன?" — குழப்பத்துடன் அவனை நோக்கினாள், சாயாதேவி.*

*"அத்தை மகள் தேவி, காதலி பெருந்தேவி, மனைவி கோப்பெருந்தேவி மூன்று பேரும் சமாளிக்க எளிதாக இருந்தனர். ஆனால் நேற்று ஆட்கொள்ள எவ்வளவு போராட வேண்டியிருந்தது. கோப்பெருந்தேவி அய்யகோ பெருந்தேவியாக மாறிவிட்டாய். இனியும் நீ வளராதே." — ஜெயவர்மன் சிரித்தான்.*

*சாயா பொய்க் கோபத்துடன் அருகிலிருந்த தட்டைப் பார்க்க, அதில் மாம்பழம், கமலப்பழம், சீதளப்பழம்* போன்ற பழ வகைகள் வைக்கப்பட்டிருந்தன.*

---

*** கமலப்பழம்: உரித்தால் தாமரையைப் போன்று பிரிவதால் ஆரஞ்ச் பழத்திற்குக் கமலப்பழம் என்று பெயர்.**

**சீதளப்பழம்: மிகவும் குளிர்ச்சியை உண்டுபண்ணுவதால், சீதளப்பழம் என்று பெயர். அதனை நாம் சீதாப்பழம் என்று அழைக்கின்றோம்.**

சிணுங்கியபடி ஒரு சீதளப்பழத்தை எடுத்து அவன் மீது வீசி எறிந்தாள்.

"மாம்பழம் உஷ்ணாதிக்கப் பழம், கமலம் மத்யமமான பழம். சீதளப்பழம் குளிர்ச்சியான பழம். நல்லவேளையாக நீ சீதளத்தைத்தான் எறிந்திருக்கிறாய். என்னைத் தேவ உடும்பர அத்திமலையான் என்று அழைத்தாய். அது உண்மையானால் எனது மார்பில் நிலவும் ஸ்ரீதள மணியாக நீ மட்டுமே இருப்பாய். உன்னைத் தீண்டும் வரை வேறு எவளையும் நான் தீண்டியதில்லை. உன்னைத் தீண்டிவிட்டு வெளியேறும் நான் இனி ஒருவளையும் தீண்டமாட்டேன். நான் தீண்டிய ஒரே பெண்ணாக நீ மட்டுமே இருப்பாய்." — உணர்ச்சியுடன் அவளை நெருங்கித் தனது கைகளினுள் அவளைச் சிறை வைத்தான்.

தான் கேட்காமலேயே இனி ஒருவளையும் தீண்டமாட்டேன் என்கிற வாக்குறுதியை ஜெயவர்மன் தந்துவிட, அவனது வாக்கு சத்தியமானது என்பதை உணர்ந்து, கண்களில் பொலபொலவென்று நீர் சிந்தியபடி மஞ்சத்தில் சரிந்தாள் சாயா. ஜெயவர்மனும் பக்கலில் படுத்து அந்த வெற்றிகரமான இரவை வாழ்த்தியபடி கண்களை மூடினான். பரவசமும் மனநிறைவும், போர்வையாக அவர்கள் மீது பரவியது. சற்று நேரமே அவர்கள் உறங்கியிருப்பார்கள்.

தடதடவென்று யாரோ அந்த அறைக்கதவைத் தட்டினார்கள்.

இருவருமே பதைபதைத்து எழுந்தனர். ஜெயவர்மன் நெகிழ்ந்திருந்த தனது வேட்டியை இறுகக் கட்டியபடி, கதவைத் திறந்து தலையை மட்டும் வெளியே நீட்டி யாருடனோ பேசினான்.

தூக்கக் கலக்கத்தில் அவனது முதுகையே கவனித்துக் கொண்டிருந்த சாயா, அவனது தோளும், புஜங்களும் புடைத்து விறைப்பதைக் கண்டு முகம் சுருங்கினாள்.

ஏதோ முக்கியத் தகவல் அவனுக்குத் தெரிவிக்கப்படுகிறது போலும். தகவலைக் கொண்டு வந்திருப்பவர் யார்? சற்றே எட்டிப்பார்த்து, வந்திருக்கும் நபரின் முகத்தைக் காண முயன்றாள். ஆனால் ரதிகேளிக்கைக்குப் பிறகு, புயலால் சின்னாபின்னமாக்கப்பட்ட புஷ்பவனத்தைப் போன்று கிடந்த தனது மனைவியின் கோலத்தை வந்தவர் காணக்கூடாது என்பதற்காகக் கதவுகளுக் கிடையே சிறிய இடைவெளியை மட்டும் விட்டு, தனது தலையை வெளியே நீட்டி ஜெயவர்மன் பேசிக் கொண்டிருந்ததால், சாயாவால் வந்தவனின் முகத்தைக் காண முடியவில்லை.

வந்தவனுடன் பேசிவிட்டு அவசரமாகத் திரும்பிய ஜெயவர்மன் முகம் சற்றே பதற்றத்துடன் காணப்பட்டது.

"வந்தது யார்? சற்றும் இங்கிதம் இன்றி, நடுநிசியில் பள்ளியறைக் கதவைத் தட்டி முதலிரவு தம்பதியரின் ஏகாந்தத்தை நாசம் செய்த அந்த நாகரிகம் இல்லாத மனிதன் யார்?" — சற்றே கோபத்துடன் கேட்டாள், சாயா.

அவள் கோபத்துடன் கேட்டதும், ஜெயவர்மனின் முகத்தில் தென்பட்ட பதற்றம் சட்டென்று குறைந்தது. அவனது கண்கள் அவளை வாஞ்சையுடன் நோக்கின.

"நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. நீ உறங்கு" என்றபடி வெளியே புறப்படத் தயாரானான்.

"எங்கே?" — சாயா கேட்டாள்.

"எங்கே என்கிற உனது கேள்விக்கு நான் பதிலளிக்கத் துவங்கினால் விடிவதற்குள் பல சதிகள் அரங்கேறிவிடும். எனவே, சதிகளை முறியடித்துவிட்டு நான் ஆற அமர உன்னுடன் பேசுகிறேன்" என்றவன், சாளரத்தின் வழியாக ஏறி நந்தவனத்தில் குதிப்பதற்குத் தயாராக நின்றான். அவனைத் திகைப்புடன் நோக்கினாள், சாயா.

"எதற்காகச் சாளரத்தின் வழியாகச் செல்கிறீர்கள்?" என்று கேட்டவளைத் திரும்பி நோக்கிப் பதில் கூறாமல்

அவளை உறுத்துப் பார்த்தபடியே குறும்புடன் சிரித்தான். எதற்காகத் தன்னைப் பார்த்துச் சிரிக்கிறான்? சாயா தேவிக்குப் புரியவில்லை. ஆனால் அவனது கம்பீரமான சிரிப்பில் தன்னை முற்றிலும் இழந்தாள், சாயா.

"சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீர்கள். சற்றே உங்கள் கம்பீரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். சற்று முன்பாக, தங்களது முகத்தைக் கதவின் இடைவெளி வழியாக வெளியே நீட்டிப் பேசிக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? அப்போது உங்கள் குவிந்த புஜங்களும், பரந்த முதுகும், வலுவான கால்களையும் நோக்கும் போது எனது கண்ணே பட்டுவிடும் போல இருந்தது. என்ன பலம்! வீரத்தின் திரட்சி! உங்களை பட்டத்து இளவரசனாகப் படைக்காமல், நாலு மகன்களில் மூன்றாவதாகப் படைத்த அந்த அத்திமலைத்தேவனின் மீது கோபம் கோபமாக வருகிறது. எனது கணவனின் கம்பீரம் யாருக்கும் வராது!" சாயா கர்வத்துடன் கூறினாள்.

"கம்பீரத்துடன் பேசியதால் நான் உனக்குக் கம்பீரமாகக் காட்சியளித்தேனோ என்னவோ!" — சிரித்தபடியே கூறிய ஜெயவர்மன், சாளரத்திற்கும் நந்தவனத் தடாகத்திற்கும் இடைப்பட்ட தொலைவைத் தனது கண்களால் அளந்தான்.

தடாகத்தில் பாய்வதற்குத் தயாராக நின்ற ஜெய வர்மனை காதலுடன் பார்த்தாள் சாயா. தீபங்களின் ஒளியில் ஜெயவர்மனின் தேகத்தில் வேர்வை மினுமினுத்ததைக் கண்டாள். அவனது புறமுதுகில் பிறைச்சந்திரனைப் போன்ற ஒரு நகக்கீறலைக் கண்டாள். முதுகில் காயங்கள் இருந்தால் ஒரு மன்னன் போர்க்களத்தில் புறமுதுகு இட்டு ஓடிவந்திருந்தான் என்பதாகப் பொருள். அவனுக்கு அது கேவலத்தை உண்டாக்கும். ஆனால் பஞ்சணை களத்தில் ஒரு ஆண்மகனின் முதுகில் காயங்கள் இருந்தால், அவன்

வெற்றியுடன் முன்னேறி ஆக்கிரமித்து வென்றுவிட்டான் என்பதாகப் பொருள்.

சாளரத்தை அடைத்துக் கொண்டிருந்த அவனது தேகத்தை ஆசையுடன் சாயா நோக்கிக் கொண்டிருக்க, ஒருமுறை அவளைத் திரும்பி நோக்கிப் புன்னகைத்தவன், நந்தவனத் தடாகத்தில் குதிக்க, 'தொபீர்' என்று அவன் குதித்ததால் ஏற்பட்ட ஒலியினைக் கொண்டு அவன் தடாகத்தில் குதித்துவிட்டான் என்பதனை யூகித்தாள். அடுத்தகணமே, அவன் தன்னை நோக்கிக் குறும்புடன் சிரித்ததற்கான காரணத்தைப் புரிந்து கொண்டாள், சாயா.

ரதிகேளிக்கை முடிந்து நீராடிவிட்டு வெளியே செல்கிறான் என்பதால் அவன் அத்திமலை ஆலயத் திற்குத்தான் செல்கிறான் என்பதனைப் புரிந்து கொண்டாள். எங்கே போகிறீர்கள் என்று ஜெய வர்மனிடம் அவள் கேட்ட கேள்விக்கு, பதில் கொடுத்துவிட்டான்..

அதன் பிறகு உறக்கம் வராமல், மஞ்சத்தில் யோசித்தபடி படுத்திருந்தாள். ஜெயவர்மன் தீண்டிய முதலும், கடைசிப் பெண்ணாக தானே இருக்கப் போகிறோம் என்கிற எண்ணம் அவளுள் பெருமிதத்தை ஏற்படுத்த, அவன் அளித்த பரமானந்தத்தை அணுவணுவாக ரசித்தபடி கிடந்தாள்.

ஜெயவர்மன் தீண்டிய முதலும், கடைசியுமான பெண் தான் தான் என்கிற பெருமிதத்தில் திளைத்திருந்த சாயாதேவி, ஜெயவர்மன் முதலும் கடைசியுமாகத்தான் தன்னைத் தீண்டியிருந்தான் என்பதை அறிந்திருந்தால் என்ன செய்திருப்பாளோ?

# 6. மாயக்குழி

வாட்களாக நாட்கள் செல்லும் இந்த பூமியில், இரவும், பகலும் மாறி மாறி வந்து செல்கின்றன. இன்பத்தையும் துன்பத்தையும், நன்மையையும் தீமையையும், ஆனந்தத்தையும் சோகத்தையும், ஒளியையும், இருளையும் வாழ்க்கையில் சரிசமமாகக் கொள்ள வேண்டும் என்பதனை மனிதனுக்குப் போதிக்கவே, இரவு பகல் என்கிற சுழற்சியை ஆண்டவன் உண்டாக்கியிருந்தானோ என்னவோ. அவன் உண்டாக்கிய பகலும் இரவும், அவனுக்கே சொந்தம். ஒரே ஒரு இரவைத் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் அவன் மனிதனுக்குத் துணை நிற்கிறான். ஆண்டவனே, ஒரு மனிதனை அவனது பள்ளியறைக்குள் நுழைய வைத்துவிட்டு, இங்கிதத்துடன் விலகி நிற்கிறான். அந்த இரவில் பள்ளியறையில் நடப்பதை அறிவதற்கு ஆண்டவனுக்குக் கூட உரிமை இல்லை என்கிற போது, கண்டது போன்று ஒப்புவிக்க, அதிர்ச்சியின் உச்சத்தில் நின்றான்.

தம்பதிகளுக்குள்ளே அந்தரங்கப் பரிமாற்றம் நிகழ்கின்ற போது துர்நாற்றக் காற்று உள்ளே வீசக்கூடாது என்று வாசனாதி சுகந்தங்களைப் பரவச் செய்கின்றனர். இயற்கையின் ஆசி அந்தத் தம்பதிகளுக்குக் கிட்ட வேண்டும் என்பதற்காக நறுமண மலர்களால் மஞ்சத்தை அலங்கரிக்கின்றனர். தாமச எண்ணங்களை ஏற்படுத்தும் பண்டங்களைத் தவிர்த்து, பால், திரட்டுப்பால், கனிகள், என்று இனிய பண்டங்களைச் செய்து வைக்கிறார்கள். மனதைப் பாதிக்கும் கடினச் சொற்கள் தம்பதிகளின் செவிகளில் விழக்கூடாது என்றுதான் நலங்கு

*பாடல்களை வெளியில் அமர்ந்தபடி சுமங்கலிகள் இசைக்கிறார்கள்.*

*பள்ளியறையினில் தேகம் மட்டும் கூடவில்லை. மனங்களும் அல்லவோ சங்கமிக்கின்றன. நேர்மறையான சூழலை உருவாக்கித் தம்பதியைப் புதிய வாழ்க்கையில் திருப்பிவிடுகின்றனர். ஆயிரம் பகல்களும், இரவுகளும் ஒருவரது வாழ்க்கையில் வரலாம். முதல் இரவின் நினைவுகள் மட்டுமே பசுமையாக அவரது வாழ்நாளில் நிலைத்திருக்கும்.*

அப்படித் தனக்கும், சாயாதேவிக்கும் மட்டுமே உரித்தான அந்த முதல் இரவின் நினைவுகளைப் பிரக்ஞுதாரா விவரிக்கத் துவங்கியதும், ஜெயவர்மன் அருவருப்புடன் அவளைப் பார்த்தான்.

"நீ பெரிய சித்தினியாக இருக்கலாம். உலகிலேயே மிகவும் சக்தி படைத்தவளாக இருக்கலாம். எனது தாயின் வயதினைக் கொண்டிருக்கிறாய். இரு இள உள்ளங்களின் பள்ளியறை அனுபவங்களைப் பற்றி உனது வாயால் கூறுவதற்குக் கூசவில்லையா?" — ஆத்திரத்துடன் ஜெயவர்மன் அவளை ஏறிட்டான்.

"எங்கள் மகாயானத்தில் ஆண் பெண் என்று பேதம் எல்லாம் கிடையாது. எல்லாம் நாடிச்சக்கரங்களைக் கொண்ட தேகங்கள்தான். நான் உனது பள்ளியறையில் எட்டிப்பார்க்கவில்லை. நாடிச் சக்கரத்தின் சுழற்சியைத் தான் கண்காணித்து வருகிறேன். அதன் சுழற்சிகளைக் கொண்டுதான் முக்காலத்தையும் உணர்கிறேன். நீ ஜெயவர்மன் என்கிற உனக்கும், உனது மனைவி சாயாவிற்கும் இடையே நிகழ்கிற சங்கமமாக அதனைக் காணுகிறாய். நானோ உனது நாடிச்சக்கரங்களுக்கும், உனது மனைவியின் நாடிச்சக்கரங்களுக்கும் நிகழ்ந்த சங்கமத்தை வாசித்தேன். தோல் வரையில்தான் அழகு! கூடும் வரையில்தான் ஆண் பெண் பேதம்! சூனகத்தின் வரைதான் காமம். ஆனால் ஆழத்தில் நாடிமண்டலங்

களுக்கு இந்தப் பேதமெல்லாம் கிடையாது. எல்லாம் சுழற்சியே. நீ இன்னும் தேகத்தின் மேல்புறத் தோலினில் தான் மேலோட்டமாக வாழ்கின்றாய். தேகத்தைக் கடக்க நீ இன்னும் உன்னையே அறிந்து கொள்ளவில்லை. உனது மனைவி உனது தேகத்தைப் புரிந்து கொண்ட அளவிற்குக் கூட நீ உன்னையே அறிந்து கொள்ள வில்லை. அவள் கூறியது முற்றிலும் உண்மையே. நீ அத்தி மலைத்தேவனைப் போன்றே மிகவும் ஆற்றல் மிக்க தேகத்தைக் கொண்டவன்." — பிரக்ஞுதாரா ஜெயவர்மனைக் கூர்ந்து கவனித்தாள்.

"அப்படி என்ன விசேட ஆற்றலை நான் பெற்றிருக் கிறேன்.." — அவளது பார்வையைத் தவிர்த்தபடி கேட்டான், ஜெயவர்மன்.

"உனது தேகத்தின் மூலாதாரம்* மிகவும் பலமாக உள்ளது, ஜெயவர்மா. சக்திவாய்ந்த மூலாதாரத்தைக் கொண்டவனுக்குத் தேகபலம் மட்டுமல்ல! ஆன்ம பலம் மிகவும் அதிகமாக இருக்கும். உனது மூலாதாரத் தளம் உச்சக்கட்ட சக்தியின் மையம். ஒரு கட்டடத்தின் கூரை அழகாக இருக்கலாம். ஆனால் அக்கட்டடத்தின் அஸ்திவாரம் வலுவாக இல்லாவிட்டால், கூரையினால் அக்கட்டடத்திற்கு என்ன பிரயோசனம்?!"

பிரக்ஞுதாரா கேட்க ஜெயவர்மன் பதில் கூறவில்லை.

பிரக்ஞுதாரா தொடர்ந்தாள்:

* மூலாதாரம் ஆணுறுப்பின் பின்பாகவும், சுவாதிஷ்டானம் அதற்கு மேல்புறத்திலும், மணிபூரகம் தொப்புளின் கீழும், அனாகதம் விலா எலும்புக்கூட்டின் பின்பாகவும், விசுத்தி தொண்டைக் குழியிலும், அஜனா புருவங்களில் இடையேயும், சஹஸ்ர தளம் தலையின் உச்சியிலும் உள்ளன. சிசு பிறக்கும் போது அதன் உச்சியில் கைவைத்துத் தடவிப் பார்த்தால், மிகவும் மிருதுவாக இருக்கும். தலையும் அமுங்கும். மண்டையோடு உறுதிபடாத நிலையில் சஹஸ்ர தளம் உள்ள பகுதி மிருதுவாக இருக்கும்.

"மூலாதாரத் தளம் வலுவாக உள்ளவன் உணவிலும், போகத்திலும், உறக்கத்திலும் நாட்டம் உள்ளவனாக இருப்பான். ஆனால், திடீரென்று அவன் தன்னை உணர்ந்து கொள்வான். அவன் தேகத்தைக் கடந்து பயணித்துத் தனது ஆன்ம பலத்தை உணர்ந்து, உலகிற்கே வழிகாட்டுவான். மூலாதார சக்தி பூரணமாக உன்னிடம் நிரம்பியுள்ளது. எல்லாவற்றையும் துறந்து நீ ஜகத்குருவாக மாறப் போகிறாய். நீ கண்விழிக்கும் நேரம் வந்துவிட்டது. தேகத்தின் நாடிமண்டலங்கள் க்ஷேத்ரங்கள் என்னும் இரு சக்கரச் சுழற்சிகளின் இடையே செயல்படுகின்றன. ஒரு தேருக்கு இரு சக்கரங்களைப் போன்று அந்தர் க்ஷேத்திரம் என்னும் தேகத்தின் உள்ளே சுழலும் சக்கரமும், உபய க்ஷேத்திரம் என்னும் தேகத்தின் வெளியே சுழலும் சக்கரத்தாலும், தேகம் என்னும் இரதம் ஓடுகிறது. உபய க்ஷேத்திரத்தில் வளைய வந்த நீ இனி அந்தர் க்ஷேத்திரத்தில் பயணிக்கப் போகிறாய். உபய க்ஷேத்திரம் உனது அரண்மனை என்றால், அந்தர் க்ஷேத்திரம் மலை வாசத்து வசந்த மாளிகை. இதுகாறும் உனது அரண் மனையில் வசித்த நீ இனி புதிய வசந்த மாளிகையில் வசிக்கப் போகிறாய். இரு க்ஷேத்திரங்களிலும் என்னைப் போன்று நீ மாறி மாறி வசிக்கலாம்." — பிரக்ஞுதாரா கூற, ஜெயவர்மன் அவளைக் குழப்பத்துடன் பார்த்தான்.

"என்னை எங்கே இட்டுச் செல்கிறாய், பிரக்ஞுதாரா! இந்தப் பிறவியைக் கழிப்பதற்குத் தேவையான கல்வியை முக்கூடல் கடிகையில் பயின்றுவிட்டேன். அழகான நாடு, அறிவுள்ள சான்றோர்கள், பாசமான குடும்பம், குணவதியான மனைவி, பக்தி செலுத்த அத்திமலையான், ஆன்ம உணர்வினை வளர்க்க ஆலயங்கள் என்று என்னைச் சுற்றி நல்லவைகளே உள்ளன. இந்த வாழ்க்கையைத் திருப்தியுடன் கழிக்க எண்ணுகிறேன். நீ புதிதாக எனக்குக் கல்வி போதிக்கத் தேவையில்லை. எனது அரண்மனையே எனக்குப் போதும். மலைவாச வசந்த மாளிகைகள் எனக்குத் தேவையில்லை." —

ஜெயவர்மன், முதன்முறையாகப் பிரக்ஞுதாராவின் கண்களை நோக்கிப் பேசினான்.

"நான் உன்னை வற்புறுத்தவில்லை, ஜெயவர்மா. ஆனால் உனது தேகத்தின் உள்ளே இருக்கும் ஆற்றலை ஒருமுறை கண்டறிந்து வா. அதோ அந்தப் பாக்கு மரத்தின் அடியில் அமர்ந்து உன்னை நீயே அறிந்து கொள். நாளை உனது தேகத்தின் உள்ளிருந்து மீண்டு வா. பிறகு உனக்கு என்ன தோன்றுகிறதோ அதன்படியே செய்." — பிரக்ஞுதாரா கூறினாள்.

"எங்கும் நான் பயணிக்கப் போவதில்லை. மீண்டும் காஞ்சிக்கே செல்லப் போகிறேன்." — வீராப்புடன் கூறினான், ஜெயவர்மன்.

"சரி! நீ காஞ்சிக்கே, செல். இப்போது பசியுடன் இருப்பாய். ஜினிங், நம் இளவரசருக்கு உண்பதற்குக் கனிகளைக் கொடு. அவன் சற்று ஓய்வு எடுக்கட்டும். நானும் தியானம் செய்ய வேண்டியிருக்கிறது." — பிரக்ஞுதாரா கண்களை மூடினாள்.

தனது பின்பாக வரும்படி ஜினிங் சைகை காட்ட, அவனைப் பின்தொடர்ந்த ஜெயவர்மன், அவன் அளித்த கனிகளை உண்ணத் துவங்கினான்.

ஜெயவர்மன் ஜினிங்கின் பின்பாகச் சென்றதும், சற்று நேரம் கண்களை மூடி அமர்ந்திருந்த பிரக்ஞுதாரா கண்களைத் திறந்தாள். தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தவள், தான் சுட்டிக்காட்டிய பாக்கு மரத்தின் கீழ் சென்று நின்றாள்.

பௌத்த சித்தினியாக டாகினி மற்றும் வேதாளியின் அனுக்ரகத்தைப் பெற்றுவிட்டாள். "உக்கிரத்தின் உச்ச நிலையில் இருக்கும் சூலினியை வசப்படுத்திவிட்டால், தாந்த்ரீக உலகில் மகாராணியாக இவள் வளைய வரலாம். ஜெயவர்மனைக் கொண்டு சூலினி தந்திரத்தை மூலமாகக் கொண்ட ஒரு விஹாரத்தை நிறுவிவிட

வேண்டும். சூலினி தந்திரத்தை உபாசிப்பதற்கு உரிய நாடித்தளங்களைக் கொண்டிருக்கிறான், ஜெயவர்மன். தேவ உடும்பரத்தைக் காட்டிலும், மிகவும் பயன்படக் கூடியது ஜெயவர்மனின் தேகம். அவனை விடக் கூடாது.”

தனக்குள் முணுமுணுத்தவள், தனது கையில் இருந்த தண்டத்தால் சக்கரக் கோலம் ஒன்றை வரைந்தாள். கேரவாட வியூகச் சக்கரம் என்பது அதற்குப் பெயர். அந்தச் சக்கரத்தின் உச்சத்தில் சஹஸ்ர முக்கோணம், பிறகு கீழ் நோக்கி ஒன்றன் பின் ஒன்றாக அஜன முக்கோணம், விசுத்தி முக்கோணம், அனாகத முக்கோணம், மணிபூரக முக்கோணம், சுவாதிட்டான முக்கோணம் மற்றும் மூலாதார முக்கோணம் என்று வரைந்தாள். பக்கலில் டாகினி சக்கரத்தை வரைந்து அதிலிருந்து அம்புக்குறி ஒன்றை முதல் வட்டத்தை நோக்கி வரைந்தாள். சற்று நேரம் கண்களை மூடி, கேரவாட சூத்திரத்தை உச்சரித்தவள், பிறகு தான் முன்பு அமர்ந்திருந்த இடத்திற்கே சென்று தனது தியானத்தைத் தொடர்ந்தாள்.

கனிகளை உண்ட ஜெயவர்மன் மீண்டும் கடற்கரையை நோக்கி நடந்து வந்தான். பிரக்ஞுதாரா தியானத்தில் ஆழ்ந்திருந்ததைப் பார்த்தான். ஜினிங் ஒரு மரத்தடியில் தனது சரீரத்தைக் கிடத்திவிட்டு, கண்களை மூடி உறங்கத் துவங்கினான்.

சற்று நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு, அவர்கள் இருவரும் கண்ணயர்ந்திருக்கும் சமயம், கடலில் நீந்தி வேறு எங்காவது சென்றுவிட வேண்டும். இவர்கள் இருவரும் இருக்கும் இடத்தில் கூட நிற்கக் கூடாது என்று மனம் எச்சரிக்க, ஓய்வு எடுப்பதற்கு இடத்தைத் தேடினான். பாக்கு மரம் இருந்த இடம் சற்றே நிழலாக இருப்பதைக் கண்டான். பாக்கு மரத்தை நோக்கி நகர்ந்தான். அவன் அந்த மரத்தினை நோக்கிச் செல்வதை உணர்ந்த பிரக்ஞுதாரா கண்களைத் திறக்காமலேயே

புன்முறுவல் ஒன்றைச் சிந்தினாள். ஜினிங்கும் ஒரு கண்ணை மட்டும் திறந்து, ஜெயவர்மன் பாக்கு மரத்தை நோக்கிச் செல்வதை நோட்டம்விட்டான்.

"வா.. வா.. எனது போதி தர்மனே! நீலக்கண் ஜகத் குருவே! வா வா! சூலினி விஹாரத்தை* வழி நடத்த வா." பிரக்ஞுதாரா கூறினாள்.

பாக்கு மரத்தின் அடியில் இருந்த மண்மேட்டில் சென்று அமர்ந்தான், ஜெயவர்மன். அவன் அமர்ந்ததும் தான் தாமதம். அவன் அமர்ந்த பகுதியில் மண் உள்நோக்கிச் சரியத்துவங்க, 'ஆ..' என்று அலறியபடி ஜெயவர்மன் பாதாளத்தை நோக்கித் தலைகுப்புற விழுந்து கொண்டிருந்தான்.

அவனது ஓலத்தை ரசித்துக் கேட்டபடி பிரக்ஞுதாராவும், ஜினிங்கும் எழுந்து வந்தனர். ஜெயவர்மன் நழுவி விழுந்திருந்த கேரவாட வியூகச் சக்கரத்தையே இருவரும் வெறித்துப் பார்த்தபடி நின்றனர்.

"குருவே! இனி அடுத்தது என்ன?" — ஜினிங் கேட்டான்.

"ஜெயவர்மனாகக் கேரவாட வியூகத்தினுள் விழுந்திருக்கிறான். மீண்டும் வெளியே வரும் போது எனது சீடனாக வருவான். அவனுக்கு போதி தருமன் என்று பெயரிடப் போகிறேன். எனது கனவுகளை

---

* சூலினி விஹாரம் என்பதை Shaolin Monastery என்று சீனர்கள் அழைக்கின்றனர்.

The Shaolin Monastery, also known as the Shaolin Temple, is a Chan Buddhist temple in Dengfeng County, Henan Province, China. Believed to have been founded in the 5th century CE, the Shaolin Temple is the main temple of the Shaolin school of Buddhism to this day. (Wikipedia.) The name refers to the forests of Shaoshi (\£[; ShÎo Shì) mountain, one of the seven peaks of the Song mountains. The first Shaolin Monastery abbot was Batuo (also called Fotuo or Buddhabhadra), a dhyâna master who came to ancient China from ancient India[2] to spread Buddhist teachings.

நினைவாக்கப் போகிறான், போதி. ஏழு நாடிச்சக்கரங் களைக் குறிக்கும் ஏழு மலையுச்சிகளைக் கொண்ட சாங்கிய மலையில் சூலினிக்கு ஆலயத்தை எழுப்பப் போகிறான் போதி தருமன். டாகினி, வேதாளி தாந்த்ரீகங்களைக் காட்டிலும் சர்வ வல்லமையைத் தந்து ஆற்றலை அளிக்கும் சூலினி தாந்திரத்தைக் கையாண்டு உலகையே ஆளப் போகிறான்" என்றவள், ஜெயவர்மன் விழுந்திருந்த குழியையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

ஜினிங் பொறுமையை இழந்துவிட்டான். தான் படுத்துக் கொண்டிருந்த மரத்தின் நிழல்பகுதியை நோக்கித் திரும்பி நடந்தான். கேரவாட வியூகம் என்பது ஒரு மாயக்குழி. அடிப்பகுதி இல்லாத ஒரு நீண்ட குழி. உள்ளே நழுவி விழுந்திருக்கும் ஜெயவர்மன் தனது நிகழ்கால நினைவுகளில் இருக்கும் போதெல்லாம் கீழே விழுந்து கொண்டே இருப்பான். தன்னையே முற்றிலுமாக மறந்த நிலையில் எப்போது இருக்கிறானோ, அப்போது குழியைவிட்டு வெளியே வந்துவிடுவான். அவன் ஜெயவர்மன் என்பதை முற்றிலுமாக மறந்து, போதி தருமனாக வெளியே வரக் காலதாமதம் ஆகலாம் என நினைத்த ஜினிங், மீண்டும் உறங்கச் சென்று விட்டான்.

'போதி தருமன் வரப் போகிறான். தனது பழைய நினைவுகளை வெறுத்து, புதிய பாதையில் புதிய சிந்தனை களுடன் பயணிக்கப் போகிறான். இவளது கனவுகளை மெய்ப்படச் செய்ய இவளுடைய சீடன் போதி தர்மன் இதோ வந்து கொண்டே இருக்கிறான்.' பிரக்ஞுதாரா எண்ணினாள். அந்த எண்ணம் ஏற்படுத்திய உற்சாகத் தினால், தனது கையில் இருந்த தண்டத்தை மண்ணில் ஓங்கிப் பாய்ச்சியவள், களிப்புடன் போதி தருமனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

# 7. தலையில் விழுந்த பல்லி

அத்திமலையானின் ஆலயம் —

தேவ உடும்பர மேனியன், அத்திமலையானுக்குப் பதிலாக ஸ்ரீவரதநாராயணன், தேவராஜனாக நின்று பத்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தான். ஆலயத்திற்கு வந்த அவனது பத்தர்கள் அதை அறியாமல் அவனை தரிசிக்கக் காத்திருந்தனர். ஆலயத்தில் வழக்கமாகவே அமைதி தவழ்ந்து கொண்டிருக்கும். ஆனால், அன்றைய மோன நிலையில், ஒருவிதக் கலக்கமும், அச்சமும் நிலவியது. அத்திமலைத் தேவ உடும்பர மேனியை யாரோ கவர்ந்து சென்றுவிட்டனர் என்கிற உண்மையை அறிந்திருந்த பட்டர்கள் மட்டும் தங்கள் உதடுகளைப் பந்தனம் செய்து கொண்டு, பத்தர்களோடு உரையாடாமல், தங்கள் பணியைச் செய்து கொண்டிருந்தனர்.

தலைமைப் பட்டரான, அருளாள அத்தங்கி, பட்டர்களுக்கு ஒரு கட்டளையினை இட்டிருந்தார். "உண்மையைச் சொல்லவும் வேண்டாம். பொய்யை உரைக்கவும் வேண்டாம். தேவ உடும்பர அத்திவரதன் என்று தீபாராதனையின் போது பக்தர்களிடம் கூற வேண்டாம். அதே சமயம் ஸ்ரீவரத்து வரதநாராயணன் என்பதையும் உரைக்க வேண்டாம். அத்திமலை வரதராஜன் என்று மட்டும் கூறுங்கள். வரதநாராயணன் என்பதால் வரதன் என்று அவனை அழைப்பதில் தவறு இல்லை. அத்திமலையின் மீது ஸ்ரீவரமலையான் தற்போது நிற்பதால் அவனை அத்திமலையான் என்று

அழைப்பதில் தவறில்லை. வேறு ஒன்றும் பக்தர்களிடம் உரைக்கக் கூடாது” என்று அருளாள அத்தங்கி கூறியிருந்தார். கோயிலதிகாரி ஐயக்ரீவரின் உத்தரவு இது. அடுக்கடுக்கான விபரீத நிகழ்வுகளால் பல்லவமே ஸ்தம்பித்துப் போய் நிற்க, புதிதாக ஒரு விபரீதத்தை எதிர்நோக்கத் திராணி இல்லாத ஆலய அதிகாரிகள் பட்டர்களை எச்சரித்திருந்தனர்.

அனந்த பட்டர் சோகத்துடன் பெருந்தேவி தாயார் சந்நிதியின் நுழைவாயில் படியில் அமர்ந்திருந்தார். வழக்கமாக அத்திமலைத்தேவனுக்கே கைங்கர்யம் செய்கிறோம் என்கிற கர்வத்துடன் அமர்ந்திருப்பார். சிம்மவர்மனின் பட்டாபிஷேகம் அன்று அவனுக்கு அத்திமலையான் ஆலயப் பரிவட்டத்தை அரண் மனைக்கு எடுத்துச் சென்றவர். இப்போது சிம்மவிஷ்ணுவே பதவிக்கு வந்துவிட்டிருந்தான். அனந்த பட்டர் மனதினுள் புலம்பிக் கொண்டிருந்தார்.

“சர்வவல்லமை பொருந்திய, உக்கிரமூர்த்தியான அத்திமலையானையே கடத்துவதற்குத் துணிந்தவர் யார்? அவர்களை ஏன் அத்திமலைத்தேவன் தண்டிக்காமல் விட்டான்..? பிரம்மன் ஆராதித்த மூர்த்தியையே கவர்ந்து சென்றுவிட்டனரே. அத்திமலைத் தெய்வமே! எங்கிருந்தாலும் இங்கே வந்துவிடு. காவல் படையினர் உன்னை ரகசியமாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். உன்னை யாராவது கடத்திவிட்டார்களா அல்லது நீதான் எங்கள் கைங்கர்யத்தில் குறை கண்டு கோபித்துக் கொண்டு சென்றுவிட்டாயா? நாங்கள் எந்த அபசாரத்தைச் செய்திருந்தாலும், எங்கள் மீது கருணை காட்டி, மீண்டும் உனது இருப்பிடத்திற்கே வந்துவிடு..” — மனம் போனபடி புலம்பிக் கொண்டிருந்தார், அனந்த பட்டர்.

அவரது கண்கள் கிழக்கு வாசல் கோபுரத்தையே வெறித்துக் கொண்டிருந்தன. அவரது மக்ள் அஞ்சிலை

அணங்கு, ஒரு மூங்கில் கூடையில், மல்லிகை, முல்லை, தாமரை, பவழமல்லி, செண்பகம், இருவாட்சி, துளசி, தவனம், என விதம்விதமான மலர்களைச் சேகரித்துக் கொண்டு பெருந்தேவி தாயாரின் சந்நிதியை நோக்கி வந்தாள். படியில் சோகமாக அமர்ந்திருந்த தந்தையைக் கண்டதும், மனம் நெகிழ்ந்தது. ஆலயங்களில் நடைபெற்ற கொலைகளுக்குப் பிறகு இப்படித்தான் எதையோ பறிகொடுத்தவரைப் போன்று அமர்ந்திருக்கிறார். இவர்களது மனையில் கூடப் பசி, தாகம் எதையுமே இலட்சியம் செய்யாமல் வாயிற் திண்ணையில் அமைதியாக அமர்ந்திருக்கிறார். இவள் பலமுறை கேட்டிருந்தும் பதில் கூறாமல் அமைதியைக் கடைப்பிடித்தார்.

அணங்கு அவரது நிலையை எண்ணிக் கவலை கொண்டாள். மனம் தாங்காமல் ஒரு நாள் அவரது கையைப் பற்றி அவரது அமைதிக்கான காரணத்தைக் கேட்க, கதறியபடி தேவ உடும்பர அத்திவரதனைக் காணவில்லை என்கிற உண்மையைக் கூறினார்.

உடனேயே தங்களது பூசனை அறையில் பெட்டகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஜெயவர்மன் அளித்த சுவடிகளைப் பற்றி நினைவுக்கு வந்தது. தந்தையிடம் அதைப் பற்றிக் கூறி, அத்திவரதன் காணாமல் போனதற்கும் அந்தச் சுவடிகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா என்று கேட்க நினைத்தாள்.

ஆனால் —

'சுவடிகளை யாரிடமும் தராதே! பல்லவ மன்னன் வந்து கேட்டால் மட்டுமே நீ சுவடிகளைத் தர வேண்டும்!' — ஜெயவர்மனின் கிசுகிசுத்த குரல் அவளது செவிகளில் ரீங்கரிக்க, தந்தையிடம் சுவடிகளைப் பற்றித் தெரிவிக்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டாள்.

"யார் களவாடினார்கள்?" — சோகத்துடன் அனந்த பட்டரைக் கேட்டாள்.

"தெரியவில்லையம்மா! ஆனால் சந்நிதியில் நடை பெற்ற கொலைகளுக்கும், அத்திமலையான் காணாமல் போனதற்கும் இளவரசன் ஜெயவர்மன்தான் காரணம் என்று இளவரசர் அவனிசிம்மரே இரகசியமாகக் கூறி வருகிறாராம்!" — பட்டர் கூற, அஞ்சிலை அணங்கின் உள்ளம் அதிர்ந்தது.

"இருக்காது அப்பா! ஜெயவர்மர் அத்திமலையானிடம் அதீத பக்தி பூண்டவர். உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஒரு வெள்ளிக்கிழமை பொற்றாமரைக் குளத்திற்குப் பெருந்தேவி தாயார் சென்ற போது, அவரது பல்லக்கை ஜெயவர்மர் சுமந்து வந்தாரே. இளவரசன் என்கிற கர்வம் இல்லாமல், ஸ்ரீபாத தாங்கிகளுடன் தோளோடு தோள் உரசிச் சென்றாரே. அவரா அத்திமலையானைக் கவர்ந் திருப்பார்?" — என்று மட்டும் கூறிவிட்டு அடுக்களையை நோக்கி நகர்ந்துவிட்டாள். ஜெயவர்மனை கடைசியாகக் கண்டவள் தான்தான் என்கிற உண்மையைச் சொல்லிவிடப் போகின்றோமே என்கிற பதற்றம் அவளது நடையில் புலப்பட்டது. நல்லவேளையாக, அனந்தபட்டர் அவளது பதற்றத்தைக் கவனிக்கத் தவறிவிட்டார்.

ஒருநாள் —

தந்தை ஆல்யத்திற்குச் சென்ற பிறகு ஆவல் இதயத்தைப் பற்றிக் கொள்ள, ஜெயவர்மன் அளித்திருந்த சுவடிகளைப் பிரித்துப் பார்த்தாள்.

ஜெயவர்மன் அவளிடம் இரண்டு சுவடிகளை அளித்திருந்தான். இரண்டு பனையோலைச் சுவடிகளை வெள்ளி நூலினால் பிணைத்து, பட்டுத் துணியில் சுற்றித் தந்திருந்தான். ஓலைகளைக் கையில் எடுத்துப் பார்த்தாள். தற்கொலை செய்து கொண்ட இளவரசி நவரத்னாதேவி அண்ணன் ஜெயவர்மனுக்கு எழுதிய ஓலை. மற்றொன்று அவள் புனைந்திருந்த கவிதை என்பதையும் யூகித்தாள், அணங்கு.

சிம்மவர்மன் தவமிருந்து பெற்ற மகள் நவரத்னா. பெருந்தேவி தாயாருக்குச் சூர்ணாபிஷேகம்* செய்வதாக வேண்டிக் கொண்டு, பிறகு பிறந்தவள். அவனிசிம்மன், தானவர்மன், ஜெயவர்மன் மற்றும் பீமவர்மனுக்குப் பிறகு மகள் பிறந்ததால் அரசத் தம்பதிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவள் பிறந்த அன்று பெருந்தேவி தாயாருக்கு நவரத்ன ஹாரம் ஒன்றைச் சாற்றினாள் சிம்மவர்மனின் மனைவி, அரசி குந்தளாதேவி. ஜெயவர்மன்தான் அவளது சார்பாக நவரத்ன ஹாரத்தை ஆலயத்திற்குக் கொண்டு வந்திருந்தான்.

நவரத்ன ஹாரத்தைச் சாற்றிய போது, மூர்த்தத்தின் உச்சியில் சாற்றியிருந்த தாமரைப் பூ உதிர்ந்து விழ, அந்தக் காட்சியைக் கண்டு, அனைவரும் பரவசத்துடன் நிற்க, அனந்த பட்டர்தான் ஜெயவர்மனிடம் கூறியிருந்தார். நவரத்ன ஹாரத்தைச் சாற்றியதைத் தாயாரே அங்கீகரித்துவிட்டாள். அத்தியூரில் நவரத்ன பீடங்கள் இருக்கின்றன. பொருத்தமாக நவரத்ன ஹாரத்தைத் தாயாருக்குச் சாற்றி உள்ளீர்கள். எனவே, இளவரசிக்கு நவரத்னாதேவி என்றே பெயரிடுங்கள் என்று ஜெயவர் மனிடம் தெரிவிக்க, அவனும் தனது பெற்றோரிடம் கூறி, அருமைத் தங்கைக்கு நவரத்ன பல்லவி தேவி என்றே பெயரிட்டிருந்தான். சிம்மவர்மனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவளுக்குப் பெயரிடும் அன்றுதான், சிம்மவர்மனுக்கும் எண்கர விஜயன் என்கிற பட்டமும் கிடைத்தது. கம்பீரமான மகன்கள், அழகான பெண் என்று பிள்ளைச் செல்வங்களைத் தனக்கு அருளிய காஞ்சி நகரின் ஆலயங்கள் அனைத்திலும் அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்தான். தனக்கு மகள் பிறந்ததன் அடையாளமாகச் சிவாலயங்களுக்கு ஸ்வர்ண ஜலதாரைகளைச் சமர்ப்பித்தான். வைணவக்

* சூர்ணாபிஷேகம்- மஞ்சள் மற்றும் சந்தனம் கலந்த பொடியினால் அபிஷேகம்.

கோயில்களில் ரத்ன மண்டபங்களை எழுப்பினான். பெருந்தேவி தாயார் அவதரித்திருந்த கிழக்கு வாசல் பொற்றாமரைக் குளத்தின் கரையில் பழைய நான்கு கால் மண்டபத்தை இடித்துவிட்டு அழகிய ரத்ன மண்டபத்தைக் கட்டுவித்தான். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், பெருந்தேவி ரத்னா மண்டபத்திற்கு எழுந்தருளி ஊஞ்சல் உற்சவத்தை நடத்திக் கொள்வாள்.

அத்திமலை ஆலயத்திற்கு வந்தால், 'இது அடியாளின் மண்டபம்' என்று நவரத்ன பல்லவி தோழிகளுடன் மண்டபத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்பாள். பொற்றாமைரைக் குளமும், அதன் கரையில் இருந்த ரத்ன மண்டபமும், சுற்றி இருக்கும் உயர்ந்த மதிலும், அதில் மோதிப் பரவும் காற்றும், அடர்ந்த மரங்களும், பொற்றாமரைக் குள நீரில் விளையாடும் அன்னங்களும், மரங்களில் இனிமையாகக் கூவும் பறவைகளும், ஆலய மடப்பள்ளியில் அட்காரம் காய்ச்சப்படுகின்ற மணமும் நவரத்னாவைக் கிறங்க வைக்கும்.

ரத்ன மண்டபத்தில் அமர்ந்து கவிதைகளைப் புனைந்து கொண்டிருப்பாள். அவளுக்கு இலக்கியத்திலும் நாட்டம் அதிகம். குறிப்பாகத் தமிழில் கவிதைகளை இயற்றுவது மிகவும் பிடிக்கும். அத்திமலையைப் பற்றியும், தேவராஜனை பற்றியும் தோழிகளைக் கொண்டு பாடச் செய்வாள். தான் எழுதிய கவிதைகளை அத்திமலையானின் சந்நிதியில் உருக்கமாகப் பாடுவாள். ஜெயவர்மன் நவரத்னாவை கேலி செய்வான். "நீ பிறந்ததைக் கொண்டாடுவதற்காக ரத்ன மண்டபத்தைத் தந்தை கட்டினார். அதற்காக நீயே அங்கே உட்கார்ந்து தேய்க்க வேண்டும் என்பதில்லை. உனது கவிதைகளைக் கேட்டு, அத்திமலையான் எங்காவது ஓடிவிடப் போகிறான் பார்!" என்பான்.

ஆனால் மனதிற்குள் அவனுக்குத் தங்கையின் கவி எழுதும் திறமையை எண்ணி மிகவும் பெருமைப்பட்டுப்

போனான். அவ்வப்போது ஆவலுடன் ரத்ன மண்டபத்தில் அமர்ந்து அவள் எழுதிய கவிதைகளைக் கேட்டு ரசிப்பான். அத்திமலை ஆலயத்தின் அமைதி யான சூழ்நிலைதான் தன்னைக் கவிதாயினிஆக்கியது என்று நவரத்னா ஜெயவர்மனிடம் கூறுவாள். இனிது இனிது ஏகாந்தம் இனிது. அதுவும் வெளியுலகப் பந்தங்களைத் தற்காலிகமாக அறுத்து எறிந்துவிட்டு, ஆலயத்தின் அமைதியில் திளைப்பது எவ்வளவு இனிமையைத் தரும். கலி முற்ற, அமைதி இன்றிப் போகும். அமைதியற்ற வாழ்க்கையை அனுபவிக்கப் போகும் மனிதர்களுக்காகத்தானே, அமைதியை வாரி வழங்கும் ஆலயங்களைப் படைத்திருக்கிறான்.

ரத்ன மண்டபத்தை இளவரசியின் மண்டபம் என்று தான் அத்தியூர் மக்கள் அழைத்தனர். சிறுதேவி மண்டபத்திற்குப் பெருந்தேவி வருகிறார் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். இளவரசி பிறந்ததைக் குறிக்கும் வகையில் கட்டப்பட்ட ரத்ன மண்டபத் திலேயே தனது இன்னுயிரை மாய்த்துக் கொண்டிருக் கிறாள். என்ன கொடுமை!

தனக்குள் வேதனையுடன் நினைத்த அஞ்சிலை அணங்கு, பெருந்தேவி தாயாரின் படிகளில் ஏறத் துவங்கினாள்.

வழக்கமாக மகளைக் கண்டால், “வாம்மா. மலர் மாலை தொடுத்துவிட்டாயா?” — என்று வாஞ்சையுடன் கேட்பார், அனந்த பட்டர். ஆனால் இப்போது அவளைப் பார்த்ததும், தலையை மட்டும் லேசாக அசைத்தார். அவரது சிவந்த கண்களும், துவண்ட தேகமும், நிகழ்ந்த விபரீதச் சம்பவங்களை எண்ணி உள்ளுக்குள் அவர் அழுது கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

திடீரென்று நம்பிராஜேந்திர பட்டர் அனந்தரைத் தேடி ஓடி வந்தார். “பட்டரே! என்ன இங்கே அமர்ந்திருக் கிறீர்கள்..? இளவரசர் தானவர்மரும், இளவரசி

ககனாதேவியும் காம்போஜத்திற்குக் கிளம்பப் போகின்றனராம். கடைசியாக ஒருமுறை, அத்திமலை யானை தரிசிக்க, ஆலயத்திற்கு வரப்போகிறார்கள். சந்நிதியில் நீர்தான் அவர்களை வரவேற்க வேண்டும்." — நம்பிராஜேந்திர பட்டர் அவசரத்துடன் கூறிவிட்டு, வந்த வழியே நடந்தார்.

அனந்த பட்டரும் எழுந்து செல்ல, வருங்காலக் காம்போஜ மன்னன் தானவர்மனைக் காண வேண்டும் என்கிற ஆவலில், அஞ்சிலையும், பெருந்தேவி தாயாரின் சந்நிதிக்குள் நுழையாமல், தந்தையைப் பின்தொடர்ந் தாள்.

"அணங்கு! அணங்காமல் இருக்கலாம். வணங்காமல் இருக்கலாமோ..? தாயை வணங்காமல் போகிறாயே!" இனிய குரல் ஒன்று தனக்குப் பின்பாகக் கேட்க, வியப்புடன் திரும்பி நோக்கினாள், அணங்கு. அவளது நெருங்கிய தோழியும், தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரின் பெயர்த்தியுமான ரங்கபாதுகாதான் நின்றிருந்தாள்.

"பெருந்தேவி எங்கே போகப் போகிறாள்..? இங்கே தானே இருக்கிறாள். இளவரசர் தானவர்மர் காம்போஜத்திற்கே மன்னராகப் போகிறார். அவர் ஆலயத்திற்கு வரப்போகிறாராம். இனி நாம் அவரை எங்கே காணப்போகிறோம்..?" — அஞ்சிலை அணங்கு சிரித்தாள்.

"அப்படி அலட்சியமாகப் பேசாதே. இப்போது அத்தி மலையானே ஆலயத்தில் இருந்து ஓடி மறைந்து விட்டதாகக் கூறுகிறார்கள்." — ரங்கபாதுகா கூறியதும், உறைந்து போனாள், அணங்கு.

"உனக்கு யார் சொன்னார்கள்?"

"எனது பாட்டனார் எனது தந்தையிடம் பேசிக் கொண்டிருந்ததை மறைந்திருந்து கேட்டேன்." ரங்கபாதுகா கூறினாள்.

அஞ்சிலை அணங்கு மௌனம் சாதித்தாள்.

"ஜெயவர்மர்தான் எல்லாவற்றிற்கும் காரணமாமே?" — கேட்டபடி அஞ்சிலையுடன் நடந்தாள்.

துடித்துப் போன வாய் பதிலைக் கூற முயல, அதனை அடக்கினாள் அஞ்சிலை.

'வேண்டாம்! பாதுகாவிடம் சொன்னால், அவள் விஷயத்தைத் தனது பாட்டனாரிடம் சொல்லிவிடுவாள். அழகு கொட்டிக் கிடக்கும் பெண்களுக்கு விவேகம் இருக்காது என்பதற்கு, பாதுகா ஓர் உதாரணம். மனம் வெள்ளை மனதுதான். ஆனால் அப்பாவி.. யாரையும் நம்பி விஷயங்களைக் கூறும் சுபாவத்தைக் கொண்டவள்.'

"அரசியல் வேண்டாமே, பாதுகா. ஆலயத்திற்கு வந்திருக்கிறோம்." — அணங்கு கூற, பாதுகா சிரித்தாள்.

"அரசியலே அத்திமலையானைச் சுற்றித்தானே நடக்கிறது.. ஜெயவர்மர் எங்கே போயிருப்பார்?" — மீண்டும் தொடர்ந்தாள், பாதுகா.

அணங்கு தொடர்ந்து மௌனத்தைக் கடைப்பிடிக்க, அவர்கள் அத்திமலை ஏறும் போது சரியாகத் தான வர்மனும், ககனாவும் வந்தனர். அவர்கள் மலையேறும் வரை காத்திருந்த இருவரும், பிறகு தேவராஜனின் சந்நிதிக்குச் சென்றனர். பத்தர்கள் ஒதுங்கி நிற்க, அனந்த பட்டர் இளவரசத் தம்பதியாரை சந்நிதிக்குள் அழைத்துச் சென்றனர்.

தானவர்மனும் ககனாவும், முதலில் உள்ளே போக, சோமஸ பண்டிதரும், தீபன் சமந்தரையனும் அவர்களைப் பின்தொடர்ந்தனர். அனந்த பட்டர் தீபாராதனையைக் காட்ட, காம்போஜ மன்னரும், அரசியும் தேவராஜனை தரிசித்தனர்.

"அன்று நாம் தரிசித்த தேவ உடும்பர தேவராஜன் இல்லை இவன். இவன் கற்சிலை!" — சோமஸ பண்டிதர் ககனாவின் செவியில் கிசுகிசுத்தார்.

ககனா திகைப்புடன் வரதனை தரிசித்தபடி தனது கண்களால் அவனை அளந்தாள். உண்மை! தேவ உடும்பர சிலையின் முகம் தீர்மையாகவும் செம்மை யாகவும் திகழும். இந்த மூர்த்தத்தின் முகம் உறுதியாகவும், விரிந்தும் திகழ்கிறது. கூர்ந்து கவனித்தால் சிலைகளிடையே வேறுபாட்டினை அறிந்துவிடலாம். ஆனால், மக்கள் தெய்வத்தின் மேனியை எங்கே கவனிக்கிறார்கள்..? தாங்கள் அளித்த பழமும், தேங்காயும் மீண்டும் தங்கள் வசம் வந்து சேருகிறதா என்பதைத் தானே கவனிக்கிறார்கள். வரும் போது ஒரு கைகூப்புச் சைகை. போகும் போது ஒரு கைகூப்புச் செய்கை. எனக்கு இதனைத் தா, அதனைத் தா என்று அத்திமலையானிடம் கேட்கிறார்களே தவிர, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று யார் கேட்கிறார்கள்?

"அத்திமலையானே! உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" — என்று கேட்ட ஒரே ஆத்மா, ஜெயவர்மன் தான். அவனும் மர்மமான முறையில் மாயமாகிப் போனான்.. பெருமூச்சுடன் ஸ்ரீவர மலையானுக்குத் தீபாராதனை காட்டினார், அனந்த பட்டர்.

"அரசே! உண்மையான அத்திவரதர் எங்கே?" — ககனா தானவர்மனின் செவியில் கிசுகிசுத்தாள்.

"உஷ்! ககனா! இந்த இடத்தில் கேட்கும் கேள்வியா இது? அமைதியாக இரு. வெளியே சென்று பேசலாம்!" — தானவர்மன் எச்சரித்தான்.

ஆனால் அந்த எச்சரிக்கையைக் ககனா பொருட் படுத்தினாள் இல்லை. ஆரத்தித் தட்டுடன் வந்து நின்ற அனந்த பட்டரைக் கேள்வியுடன் பார்த்தாள்.

"சுவாமி! அன்று நான் தரிசித்த தேவராஜன் செம்மையாகக் காட்சி தந்தான். இன்று அவனது முகம் கருமையாகத் தோன்றுகிறதே! ஏன்?" — ககனா கேட்க அனந்த பட்டரின் முகம் வெளிறிப்போனது. என்ன பதில் கூறட்டும் என்பது போன்று தானவர்மனைப் பார்த்தார்.

தானவர்மன், சங்கடத்துடன் மனைவியைப் பார்த்தான். இவனையே அண்ணன் அவனிசிம்மனுக்குச் சரிசமமாகக் காம்போஜ மன்னனாக அமர வைத்திருக்கும் மகராசி. பேரழகி வேறு. அவளைக் கடிந்து பேச மனம் வரவில்லை. எதையாவது சொல்லிச் சமாளியுங்கள் என்பது போன்று அனந்த பட்டரைப் பார்த்தான்.

பட்டரால் பட்டெனப் பேச முடியுமா என்ன? அதிகாரிகளிடம் பட்டு போன்ற மிருதுவான சொற்களைப் பேசினால் பட்டராகத் திகழலாம். இல்லையேல் பட்டுபட்டு உணரும்வரை பட வேண்டியதுதான்.

"இளவரசியாரே! இன்று புனுகு குழைவையும், ஹோமத் தீட்சையையும் கலந்து அவனது தேகத்தில் பூசியிருக்கிறோம். அதனால் கருமை முகத்தானாகத் தெரிகிறான்." — கூறிவிட்டு அவசரமாகத் தன்னைச் சந்நிதிக்குள் புதைத்துக் கொண்டார், அனந்த பட்டர். ககனா வேறு கேள்விகளைக் கேட்டுவிடப் போகின்றாளே என்கிற பயம் போலும்.

"நன்றாகவே சமாளிக்கிறார். அத்திமலையானுக்குப் புனுகுக் குழைவினைப் பூசுகின்றாரோ இல்லையோ, நமக்கு நன்றாகவே குழைத்துப் பூசி மொழுகுகிறார்!" — ககனா கூற, சோமஸ பண்டிதர் சிரித்தார்.

"தேவராஜ மார்க்கத்தைச் சேர்ந்த நம்மிடம் தேவ உடும்பர தேவராஜன் இருந்திருந்தால், நாம் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் ஐராவத மலையின் மீது வைத்திருப்போம். இவர்களுக்கு அதன் அருமையும் தெரியவில்லை, பெருமையும் புரியவில்லை!" — சோமஸர் கூற, ககனா தலையசைத்தாள்..

அப்போது —

அத்திமலையேறி சந்நிதிக்கு வந்து நின்றாள் சாயாதேவி. சந்நிதியில் தனவர்மனும், ககனாவும்

இருப்பதை அறிந்து கொண்டதும், துவாரபாலகர் சிலைப் பக்கமாக ஒதுங்கி நின்றாள். தனவர்மன் சென்றதும், பிறகு சென்று தரிசிக்கலாம். ஜெயவர்மனின் மீது பழிகளைச் சுமத்திக் கொண்டிருக்கும் அவனது சகோதரர்களின் முன்பாக நிற்பதைத் தவிர்க்கலாம் என்கிற நினைப்பில் ஜெயன் சிலையின் கீழாக நின்றாள்.

'ஜெயன் விஜயன், என்று இருவர் என்னை அடைய முயற்சித்தாலும், எனது மனம் ஜெயனையே நாடுகிறது. ஜெயனுக்கு ஜெயம்!' என்று அன்றொரு நாள் ஜெயவர்மனிடம் சாயா கூற, அவன் நெகிழ்ச்சியுடன் இவளது கையைப் பற்றியது நினைவுக்கு வர, அவளது கண்கள் கலங்கின.

முந்தானையால் கண்களை அவள் துடைத்துக் கொள்ள, அந்தக் காட்சியைக் கண்டனர், அருகே இருந்த அஞ்சிலை அணங்கும், ரங்கபாதுகாவும்.

"உள்ளே அரச குடும்பம்தானே தரிசனம் செய்கிறது. இவர்கள் மட்டும் ஏன் வெளியே நிற்கிறார்கள். உள்ளே செல்லலாமே!" — ரங்கபாதுகா அஞ்சிலையிடம் கேட்க, அவளைக் கையால் அடக்கினாள், அணங்கு.

அப்போது —

சொத்தென்று ஏதோ சாயாதேவியின் தலையில் விழ, அவள் பதற்றத்துடன் தலையை அசைத்து உதற, அதைக் கவனித்த அஞ்சிலை அணங்கு, சாயாதேவியின் பக்கமாக நகர்ந்து அவளது தலையில் விழுந்திருந்த பல்லி ஒன்றைத் தட்டிவிட்டாள்.

"சிரசில் பல்லி விழுந்துவிட்டது, இளவரசி!" — ரங்கபாதுகா கூறினாள்.

"ஓ..! என்னவோ, ஏதோ என்று பதறிவிட்டேன். பல்லிதானா?" — பெருமூச்சு ஒன்றைச் சிந்தினாள், சாயா.

அஞ்சிலை அணங்குவின் மனம் உடனே யோசிக்கத் துவங்கியது. சாத்திரங்களைக் கரைத்துக் குடித்த அனந்த பட்டரின் மகளாயிற்றே. பல்லி தேகத்தில் விழுந்தால், அதற்குரிய பலன்கள் உண்டாயிற்றே. பல்லி சிரசில் விழுந்தால் அதற்கு என்ன பொருள்..? சிந்தித்துப் பார்த்த அஞ்சிலையின் முகம் கலவரம் அடைந்தது.

சிரசில் பல்லி விழுந்தால், தலையில் இடி விழுமன்றோ? கெட்ட செய்தி ஒன்றைக் கேட்பதற்கு இளவரசி தயாராக இருக்க வேண்டும் என்றல்லவா சாத்திரம் உரைக்கிறது. அஞ்சிலை அணங்கு சாயாதேவியைத் திகிலுடன் நோக்கினாள்.

தனது கணவன் ஜெயவர்மனை கடைசியாகக் கண்ட அஞ்சிலைதான் தனது தலை மீது விழுந்த பல்லியை அகற்றியவள் என்பது தெரியாமல், ஜெயவர்மனையே நினைத்துக் கொண்டு நின்றிருந்தாள், சாயாதேவி.

சாயாதேவியின் சிரசின் மீது பல்லி விழுந்த அதே சமயம், கேரவாட மாயக் குழியில் ஜெயவர்மனாக நழுவி விழுந்திருந்த அவள் கணவன், தனது நிகழ்காலத்தை மறந்து, போதி தருமனாக, வெளிப்பட்டிருந்தான்.

அத்திமலையானை மறந்த சூலினி உபாசகனாக —

பல்லவத்தை மறந்த சீனத் துறவியாக —

பிரக்ஞுதாராவின் சீடனாக மாறியிருந்தான்.

சாயாவின் நிழலாகப் பின்தொடர்ந்தவன், பிரக்ஞாவின் நிழலாக மாறினான்.

இனி, சாயா வெறும் நிழல்தான்! சாயா என்றால் நிழல்தானே..

# 8. மூடுபனி

ஒத்தாடை அரண்மனை மற்றும் காஞ்சி ஆலயங்களின் கருங்கல் தரைகள், முக்கூடல் கடிகையின் சுண்ணாம்புப் பூச்சுடன் கூடிய மண் தரைகள், கடுமையான கற்பாறைகள் மிகுந்த கடற்கரைகள், வளமான முக்கூடலின் பாலாற்றின் சுடுமணற்பரப்பு என்று நடந்திருந்த ஜெயவர்மனது உறுதியான கால்கள், முதன்முறையாகப் பனிமலைகளின் மீது ஏறத்துவங்கின. சப்தரிஷிகள் சுற்றி அமர்ந்திருப்பது போன்று கதிரொளியில் தகதகத்த உச்சிகளுடன் வானோங்கி நின்றன. ஏழு பெண்கள் கும்மியடித்தது போன்று அந்த ஏழு மலைகளும் வட்டமாக இருக்க, ஆட்டத்தினால் சிதறிய அவர்கள் சூடிய மலர்கள் சிதறுவது போன்று, மேகங்கள் அந்த ஏழு மலைகளைச் சுற்றி இங்கும் அங்குமாகச் சிதறி மிதந்தன. எங்கும் வெண்மையை வாரி இறைத்தபடி பனிப்படலம்தான். திருமணத் தம்பதியரின் மீது வர்ஷிக்கும் அட்சதையைப் போன்று வானிலிருந்து பனிச் சிதறல்கள் தூவப்பட, முதன்முறையாக அந்த அனுபவத்தை உணர்ந்தும், அதைச் சிலாகிக்காமல் இயந்திர கதியில் பிரக்ஞுதாராவின் பின்பாக நடந்து கொண்டிருந்தான். திருநீறு போன்று குவிந்து கிடக்கும் பனித்துகள்களை வாரி மேனியில் பூசி அதன் குளுமையை அனுபவிக்க வேண்டும் என்கிற எண்ணம் கூட இல்லை அவனுக்கு.

வெப்பம் நிறைந்த பகுதியில் இருந்து வருபவர்கள் பனிமழையைக் கண்டால் அதில் விளையாடாமல் இருக்கமாட்டார்கள். ஆனால் அந்த மலையின் மீது

ஏறத்துவங்கிய அந்த மூவரும், பனிமலையையோ, மேலே வர்ஷிக்கும் பனிமழையையோ சிறிதும் இலட்சியம் செய்யாமல் அவர்கள் வழியே நடந்து கொண்டிருந் தார்கள். அங்கு பெய்து கொண்டிருந்த பனிமழை மலைச் சரிவுகளை மட்டும் மூடவில்லை; போதி தர்மாவின் பல்லவக் கால நினைவுகளையும் சேர்த்து மூடுவது போன்று தோன்றியது.

பிரக்ஞுதாரா பலமுறை அந்தப் பகுதிக்கு வந்திருக்க வேண்டும். அனாயாசமாகத் தனது இலக்கை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். சீனத்திலேயே பிறந்து வளர்ந் திருந்த ஜினிங்டியாண்டைக்குப் பனிப்பிரதேசங்கள் புதிது இல்லை என்றாலும், பாதங்களை உறையவைக்கும் பனியில் ஜெயவர்மன் எவ்வித பிரச்னையும் இன்றி நடந்து வந்ததைக் கண்டு ஜினிங் வியந்து போனான்.

தான் யார் என்பதையே மறந்திருந்தான், ஜெயவர்மன். அப்போதுதான் உலகில் தோன்றியவனைப் போன்று, பிரக்ஞுதாராவின் பின்பாக ஒரு ஆட்டுக்குட்டியைப் போன்று நடந்து சென்று கொண்டிருந்தான். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், பனியில் பதிந்திருந்த பிரக்ஞுதாராவின் காலடிகள் மீதே தனது பாதங்களைப் பதித்து நடந்து கொண்டிருந்தான். இட, வலம் நோக்காமல், வானை அண்ணாந்து, மலையுச்சியை நோக்காமல், ஒவ்வொரு அடியையும் எண்ணி வைத்தான். எங்கு செல்கிறோம் என்பதை அறியவில்லை. எங்கிருந்து வருகிறோம் என்றும் நினைவில் இல்லை. அவனது குரு பிரக்ஞுதாரா வழியில் தொடர்கிறான். அவள் எங்கே இட்டுச் செல்லுகிறாளோ, என்ன கட்டளைகளை இடுகின்றாளோ அதனைச் சிரமேற் கொண்டு செய்வதற்குத் தயார் நிலையில் இருக்கிறான்.

"ஜெயவர்மா!" — ஜினிங் திடீரென்று அவனை அழைத்தான்.

அழைத்தது தன்னை இல்லை என்பது போன்று திரும்பி நோக்காமல், தலையைக் குனிந்தபடி நடந்து கொண்டிருந்தான் ஜெயவர்மன்.

"இளவரசே!" — மீண்டும் ஜினிங் அழைக்க, இம்முறையும் அவன் திரும்பி நோக்கவில்லை.

"ஜினிங். நீ எவ்வளவு முறை அவனைச் சோதனை செய்து பார்த்தாலும், அவன் திரும்பிப் பார்க்க மாட்டான். கேரவாடா வியூகத்தில் விழுந்தவன் ஒரு நாழிகையில் வெளி வந்துவிட்டான் என்றால், அவன் மிகவும் உறுதி நிறைந்தவன். இப்போது அந்தர் க்ஷேத்திரத்தில் இருக்கிறான். அவனை ஜெயவர்மன் என்று அழைத்தால் திரும்பமாட்டான். அவனது புதிய பெயரில் அழைத்துப் பார்!" பிரக்ஞதாரா கூறினாள்.

உடனே ஜெயவர்மனின் புதிய பெயரைக் கிசுகிசுத்தான், ஜினிங்.

"போதி தர்மா!"

சட்டென்று நின்ற போதி தர்மா, முகத்தைத் திருப்பி ஜினிங்கின் கண்களுக்குள் உறுத்து நோக்கி வினவினான். "அழைத்தாயா ஜினிங்?"

"முதன்முறையாகப் பனிமலையில் ஏறுகின்றாய். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாமா?" — ஜினிங் கேட்டான்.

"குரு சொல்வதைச் செய்கிறேன்!" எவ்வித உணர்ச்சியுமின்றிக் கூறினான்.

"தொடர்ந்து பயணிக்கலாம், போதி தர்மா! அப்போதுதான் இரவுக்குள் நாம் செல்ல வேண்டிய இடத்தை அடைய முடியும்." — பிரக்ஞதாரா கூற, போதி தர்மா மௌனமாக அவளைப் பின்தொடர்ந்தான்.

சப்தரிஷி மலை என்று இதிகாசங்களில் அழைக்கப் பட்ட மலைத்தொடர் அவை. பிரக்ஞதாரா, போதி

தர்மா மற்றும் ஜினிங் ஏறிக் கொண்டிருந்த மலையின் பெயர் கோஷு மலை.*

இரவு படர்வதற்கு முன்பாக வட்டமாக நின்ற அந்த ஏழு மலைகளின் நடுவே பரந்து விரிந்த அந்தச் சமவெளிப்பகுதியை மூவரும் அடைந்தனர். பனிக் காற்றின் 'ஹோ' என்கிற அமானுஷ்யமான சத்தத்தைத் தவிர, அந்த மலைத்தொடரும், சமவெளிப் பகுதியும் அமைதியாகத் திகழ்ந்தன.

'எங்களிடம் வந்து சிக்கிக் கொண்டாய். இனி எங்களைக் கடந்து நீ மீண்டும் செல்ல முடியாது. நீ ஜெயவர்மன் என்பதை மறந்துவிடு. இனி எங்களுடன் இருக்கப் போகும் போதி தர்மன் நீ' என்று கூறுவதைப் போன்று வானோங்கி தன்னைச் சுற்றி நின்ற மலைகளையே வெறித்துப் பார்த்தான், போதி தர்மன்.

எங்கோ காற்றில் அத்திமலையான் ஆலயத்து டமாரம் ஒலிப்பது போன்ற ஒலியும் ஒத்தாடையான் ஆலயச் சங்கு முழங்கும் ஒலியும் கலந்து அவன் காதில் கேட்டன. சளசளவென்று வேகவதி ஆறு பாய்ந்து முக்கூடலில் கலக்கும் ஒலியும் கேட்க, சாயாவின் நூபுரங்களின் சப்தமும் இனிமையாகக் கேட்டது.

'நான் ஏன் எனது பிரியமான காஞ்சியைவிட்டு இங்கே வந்து நிற்கிறேன். இவை எல்லாம் கனவுதான். நான் இதோ முக்கூடல் கடிகையின் களரியில் பயிற்சி செய்து கொண்டிருக்கப் போகிறேன்!' — தனது அந்தர க்ஷேத்திரத்தில் இருந்து உபய க்ஷேத்திரத்திற்கு வந்திருந்த போதி தருமனுக்கு, ஜெயவர்மனாகச் சிந்தனைகள் தோன்றின.

---

* புராணங்களில் கௌசிக மலை என்று அழைக்கப்பட்டது. சீனாவின் ஹீனன் மாகாணத்தின் தலைநகரமான லௌயாங் நகரை வேய் என்கிற மன்னர் பரம்பரை ஆண்டு வந்தது. இந்தப் பரம்பரையினர்தான் போதி·தர்மாவை குருவாக் ஏற்று ஷொலோன் விஹாரத்தைக் கட்டினார்கள்.

"என்னை விட்டுவிடு. நான் மீண்டும் காஞ்சிக்குச் செல்ல விரும்புகிறேன்!" என்று சொல்ல எண்ணிப் பிரக்ஞுதாராவை நோக்கினான்.

அந்தர க்ஷேத்திரத்தில் இருந்து அவனது நாடி மண்டலம் மீண்டும் அபய க்ஷேத்திரத்திற்கு வந்து விட்டதை அறிந்த பிரக்ஞுதாரா அவனைச் சட்டென்று வசப்படுத்தி மீண்டும் அவனை அந்தர க்ஷேத்திரத்திற்குள் தள்ளினாள்.

போதி தர்மாவின் கண்களில் மீண்டும் முழு அமைதி நிலவியது.

"போதி தர்மா! இந்தச் சமவெளியில்தான் நாம் சூலினி விஹாரம் ஒன்றை நிறுவப் போகிறோம். சூலினி தந்திரத்தை உபாசிப்பதற்குத்தானே உன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். அவளது உக்கிரம் உனது தேகத்தில் இறங்கும் போது வேதனையாகத்தான் இருக்கும். ஆனால், அவளது அருள் கிடைத்ததும், உலகிலேயே வெல்ல முடியாத சக்தியாக நீ திகழப் போகிறாய்." பிரக்ஞுதாரா கூற, அவளை பக்தியுடன் நோக்கித் தலையசைத்தான், போதி தர்மன்.

"போதி தர்மா! புத்தர் அமைதியைத் தேகத்தின் உள்ளேயும், வெளியேயும் பரவச் செய்து ஆனந்தத்தை அடைந்தார். ஆனால் கலி முற்றும் போது தருமம் அழியும். உலக மக்கள் சோகங்களால் அலைக்கழிக்கப் பட்டு, துன்பத்துடன் விடிவைத் தேடி அலைவர். என்னை நான் அறிந்து கொண்டேன்; எனக்குப் பரமானந்தம் கிட்டிவிட்டது என்று மரத்தடியில் தவம் செய்து கொண்டு அமரும் நிலையை என்னால் ஏற்க முடியவில்லை. புத்த தத்துவத்தின் அமைதி நமக்கே தேவை. ஆனால் அனைத்தையும் துறந்து ஆனந்தத்துடன் அமர்வது என்கிற கொள்கையை என்னால் ஏற்க முடியாது. இங்குதான் பௌத்தத்துடன் நான் வேறுபடுகிறேன். கலியில் மக்கள் துன்பப்படும் போது

நாம் அவர்களது துக்கங்களைக் களைய வேண்டும். அதற்குப் புத்தன் கூறும் வழி, எல்லாவற்றையும் துறந்துவிட்டு.. அமைதியாக உன்னை உணர்ந்து தவம் செய் என்கிறார். நாம் அமைதியாக அமர்ந்தால், கலி கலுஷம் தீர்ந்துவிடுமா..? அதர்மத்தை அழிக்க நமது பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டாமா? நாம் அதர்மத்தை அழிக்கத்தான் இங்கே சூலினிக்கு விஹாரத்தை அமைக்கப் போகிறோம். உலக மன்னர் களை நமது மார்க்கத்திற்குத் திருப்பி, அவர்களைத் தர்மத்தின் காவலர்களாகத் திகழச் செய்யப் போகிறோம்." — பிரக்ஞுதாரா கூறினாள்.

ஜினிங் ஆர்வத்துடன் அவளைப் பார்க்க, பிரக்ஞுதாராவோ தனது கூரிய பார்வையினால் போதி தர்மனைப் பந்தனம் செய்திருந்தாள். அவள் கூறுவதையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான், போதி தர்மா.

"உலகத்திலேயே தர்மம் மிகுந்த நகரம் காஞ்சி. அஸ்வமேத யாகம் நடைபெற்ற மண். பண்டிதர்களும் வேதியர்களும் வாழும் பூமி. அன்றாடம், யக்ஞங்களும், ஹோமங்களும் நிகழ்த்தப்படும் பூமி. சிப்பிக்குள் முத்து தோன்றுவது போன்று, காஞ்சி என்னும் சிப்பியில் தோன்றியுள்ள முத்து நீ. மூவாயிரம் வருடத்திற்கு ஒருமுறை புத்தர் அவதரிப்பார். ஆனால் தர்மத்தை நிலை நாட்ட அவ்வப்போது மனித ரூபம் எடுத்து வருவார் என்று தாமரை சூத்திரம் சொல்கிறது. அப்படி வந்தவன் தான் நீ. உன்னால்தான் தர்மம் நிலைபெறச் சொல்கிறது. எனவேதான் உனக்கு போதி தர்மா என்று பெயரிட் டிருக்கிறேன். இனி உன் பணி சூலினி தந்திரத்தின் மூலம் அரிய சக்திகளைப் பெற்று உலகத்திற்கும், மகாயான மார்க்கத்திற்கும் சேவை செய்ய வேண்டும். வீரக்கலை களை உனக்குச் சூலினி அளிப்பாள். வர்மத்தைக் கொண்டு அதர்மத்தை அழித்து, தர்மத்தை நிலைநாட்டு வாய்!" என்றவள் அவனது சிரசில் தனது வலக்கையை வைத்தாள்.

"போதி தர்மா! சூலினி தாந்த்ரீகம் என்பது அனைவருக்கும் சித்திக்காது. அதன் உக்கிரத்தைத் தாங்கும் நாடி மண்டலங்கள் உடலில் இருந்தால்தான் அதனை ஏற்க முடியும். எனவேதான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். உனது தேகத்தின் உறுதி தேவ உடும்பரத்தை ஒத்திருக்கிறது. அதனால்தான் உன்னை எனது சீடனாக ஏற்றேன். சூலினி தந்திரத்தினைக் கற்பதற்கு முன் நீ அனைத்துத் தந்திரங்களையும் அறிய வேண்டும். முதலில் ஸ்வர்ண தூபத் தந்திரத்தை* உனக்கு போதிக்கப் போகிறேன். பிறகு இதயச் சூத்ரம், வைரச் சூத்ரம் ஆகியவற்றை நீ அறியப் போகிறாய்."

தத்துவங்கள், சூக்தங்களைக் கற்ற பிறகு, டாகினி தந்திரம், வேதாளி தந்திரத்தைப் போதி தர்மனுக்குப் போதித்தாள், பிரக்ஞுதாரா.

அத்திமலையில் பயணத்தைத் துவக்கிய ஜெயவர்மன் போதி தர்மனாகக் கோஷ்ய மலையை அளந்து கொண்டிருந்தான். புத்த சித்தாந்தத்தில் ஆழ்நீச்சல் அடிக்கத் துவங்கினான்..

போதிதர்மனுக்குத் தானறிந்த அத்தனை கலைகளையும் போதித்த பிரக்ஞுதாரா ஒருநாள் அவனை அழைத்தாள்.

---

* சீன மஹாயான பௌத்தர்களின் துவக்க மந்திரம். புதிதாக உள்ளவரின் மனதில் சாம்பிராணி தூபம் போடுவது போன்று, போதி சத்வ சூத்திரங்களைப் பரப்பி, பௌத்தத் தர்மத்தின் வாசனையை உண்டுபண்ணுவார்கள். இதற்கு ஸ்வர்ண தூபச் சூத்திரம் என்று பெயர். ஆதாரம்: போதிசத்வபீடகம். மஹாயான சூத்திரங்கள் மற்றும் ஆகமங்கள், சமஸ்கிருதம், பாலி, சீனம் மற்றும் ஜப்பானிய மொழியில் உள்ளன.

The Mahayana sutras survive predominantly in primary translations in Chinese and Tibetan from original texts in Buddhist Hybrid Sanskrit or various prakrits. A handful of them, such as the Prajñâpâramitâ sutras like the Heart Sutra and the Diamond Sutra, are considered fundamental by most Mahayana traditions.

"போதி தர்மா! இதுவரைதான் என்னால் உன்னுடன் பயணிக்க முடியும். இதற்கு மேல் பயணிக்கும் தகுதியை நான் படைத்திருக்கவில்லை. இனி நீ தனியாகத்தான் பயணிக்கப் போகிறாய். நாளை முதல் சூலினி தந்திரத்தை நீ உபாஸிக்கப் போகிறாய். சூலினியை நோக்கி உனது தியானத்தைத் துவங்கு. அவளது தந்திரத்தை அவளே போதிப்பாள். சூலினி தந்திரத்தை உபாசித்த பிறகு, நீ அவளுக்கு விஹாரம் கட்டும் பணியைத் துவக்கலாம். உன்னை நாடி ஒரு மன்னன் வருவான். அவனுக்கு என்று நீ விஹாரத்தினைக் கட்ட வேண்டும்!" — பிரக்ஞுதாரா. கூறியதும் அவளது காலில் பணிந்து தனது அடுத்தக் கட்டப் பயணத்தைத் துவங்கினான், போதிதர்மன்.

# 9. கருப்பு ஆடு.. வெள்ளை மாடு!

நவரத்ன பல்லவி மற்றும் விஜயவர்மனின் கர்மக் காரியங்கள் நடைபெற்று முடிந்தன. நிகழ்வுகள் பூர்த்தியடைந்த சனிக்கிழமை மாலை, ஒத்தாடை அரண்மனையின் உப்பரிகையில் அரச குடும்பமே குழுமியிருந்தது. பல்லவச் சின்னமான நந்திக்கொடி காற்றில் படபடத்துக் கொண்டிருக்க, பெரிய விதானம் ஒன்றின் கீழ் பஞ்சணைகளும், இரத்தினக் கம்பளங்களும் விரிக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே தீபங்கள் எரிந்து கொண்டிருக்க, முக்காலிகளில் அனைவருக்கும் பழரசமும், கனிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் யாரும் அவற்றை அருந்தும் மனநிலையில் இல்லை. ஒவ்வொரு குடும்ப உறுப்பினரின் நெஞ்சங்களிலும் ஆயிரம் வினாக்கள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. கோபம், சோகம், வெறுப்பு, ஆர்வம், எரிச்சல், துக்கம், சாந்தம், மலைப்பு, குழப்பம் என்று பல்வேறு உணர்வு களை முகத்தில் காட்டியபடி ஒவ்வொருவராக உப்பரிகைக்கு வந்து கொண்டிருந்தனர். ராஜமாதா குந்தளாதேவி நடைப்பிணமாகவே படிகளில் ஏறி வந்தாள். கவரி வீசும் பெண்கள், பணிப்பெண்கள், காவலர்கள் அனைவருக்குமே அங்கே தடை விதிக்கப் பட்டிருந்தது.

மூடிய அறைகளில் குடும்ப விவகாரங்களைப் பேசினால், சுவரில் செவிகள் பதிய வாய்ப்புண்டு என்பதால், அவனிசிம்மன்தான் உப்பரிகையில் கூடலாம் என்கிற யோசனையைக் கூறியிருந்தான். சிம்மவர்மனைத் தவிர அனைவருமே அங்கே குழுமியிருந்தனர். மகன்களின் திருமணப் பேச்சு வார்த்தைகளின் போது

சித்தபிரமை பிடித்து மௌனமாகிவிட்ட மன்னர் சிம்ம வர்மன் விட்டத்தைப் பார்த்தபடி சயனித்திருக்கிறான். அவனுக்குத் துணையாக வைத்தியர் தயாகரரோடு, தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் அமர்ந்திருக்கிறார். சிம்மவர்மனின் கண்கள் மட்டும் அசைகின்றனவே தவிர, நா பேச மறுக்கிறது. தந்தையை உப்பரிகைக்கு அழைத்து வந்து குடும்பத்தினருடன் உறவாட வைத்தால் அவரது நிலையில் மாற்றம் ஏற்படலாம் என்று ராஜமாதா குந்தளாதேவி கூட யோசனை கூற, அதை அவனிசிம்மன் ஏற்கவில்லை. சிம்மவர்மனை உப்பரிகைக்கு அழைத்து வந்தால், அவனது மருத்துவரையும், செவிலியரையும் உடன் வைத்திருக்க நேரிடும். அவர்களுக்கு முன்பாகக் குடும்பப் பிரச்னைகளைப் பேச இயலாது என்று கூறிவிட்டான் அவனிசிம்மன்.

காம்போஜத்திற்குப் புறப்பட்ட தானவர்மனையும், நவரத்னாவின் கர்மக் காரியங்களுக்குப் பிறகு குடும்ப உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுப் பிறகு கிளம்ப வேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டான்.

"நான் காம்போஜத்தில்தானே இருக்கப் போகிறேன். இங்கே இருக்கும் பிரச்னைகளை நீங்கள் அனைவரும் சமாளித்துக் கொள்ளுங்கள்" என்று தானவர்மன் சுயநலமாகக் கூறினான். காம்போஜ மன்னனாகும் அவசரம் அவனுக்கு. ஆனால் அவனிசிம்மன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

"குடும்பப் பிரச்னைகளை நாங்கள் சமாளித்துக் கொள்கிறோம். ஆனால் அத்திமலைத்தேவன் காணாமல் போன விவகாரத்தில் உனது மனைவி, காம்போஜ ராஜகுரு, மற்றும் உபதளபதியின் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. அத்திமலையானைப் பற்றி அவர்கள் கடிகை சுவடித் தலைவரை விசாரித்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அவர்களிடமும் விசாரிக்க வேண்டி இருக்கிறது. எனவே, நீ அந்தக் கூட்டத்தில் கலந்து

கொள்ளத்தான் வேண்டும்.." என்று சற்றே காட்டத்துடன் கூறினான்.

சிதறுவதற்குத் தயாராக வைக்கப்பட்ட நெல்லிக்கனி மூட்டையாகக் குடும்பத்தினர் குழுமியிருந்தனர். மகாராணி குந்தளாதேவி, அவனிசிம்மன், அவன் மனைவி புவனமாதேவி, தானவர்மன், அவன் மனைவி ககனமயி, சாயாதேவி, பீமவர்மன், விஷ்ணுவர்மன், அவன் மனைவி காஞ்சனை, ராஜஸ்ரீ, ராஜமாதா என்று அனைவருமே அங்கே அமர்ந்திருந்தனர்.

ராஜஸ்ரீயின் பார்வை உப்பரிகையின் நுழை வாயிலையே கவனித்துக் கொண்டிருந்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராஜவர்மனும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தான். ராஜவர்மனும் சற்றே தளர்ந்த நடையுடன் அங்கே தோன்றினான். அவனது கையில் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. பஞ்சவர் சபையின் அங்கத்தினராக உள்ள அனைவருமே கைது செய்யப்பட்டிருந்தனர். அமைதியாக பீமவர்மனின் பக்கலில் அமர்ந்தவனின் பார்வை ராஜஸ்ரீயை நோக்கியது. பிறகு சாயாவைப் பரிதாபத்துடன் பார்த்தது.

கடந்த இரு வாரங்களில் அத்திமலையானின் ஆலயத்தில் நிகழ்ந்த சம்பவங்கள், பல்லவ அரச குடும்பத்தையே புரட்டிப் போட்டுவிட்டன. ஒரு தற்கொலை, ஒரு கொலை, ஒருவன் மாயமாகிப் போனது, சிம்மவர்மனின் சித்தபிரமை போன்ற எதிர்மறையான நிகழ்வுகள் அனைவரையுமே உலுக்கியிருந்தன.

ராஜமாதா உருக்கமான குரலில் புலம்பத் துவங்கினாள்.

"யார் கண்பட்டதோ? மகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும், வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்த நம் குடும்பம் இப்படித் துன்பப் புயலில் சிக்கிச் சின்னாபின்னம் ஆகிவிட்டதே. எனது அருமை மகள் நவரத்னா எதற்காக இந்த முடிவினை எடுத்தாள்?

விஜயவர்மன் ஏன் கொலை செய்யப்பட்டான்..? யாரால்?" — என்று கதறத் துவங்கினாள்.

விஷ்ணுவர்மனின் மனைவி காஞ்சனை தனது ஓரகத்தியைக் கடுமையுடன் நோக்கினாள். "இதென்ன அக்கா! உங்கள் மகன் ஜெயவர்மன்தான் எனது மகன் விஜயவர்மனை கொலை செய்தான் என்று உலகமே கூறுகின்றதே. யார் கொலை செய்தார்கள் என்று ஒன்றுமே தெரியாதவராகக் கேட்கிறீர்களே..?"

"சிற்றன்னையே! ஞான திருஷ்டி பெற்றவரா நீங்கள்? ஒத்தாடை அரண்மனையின் அந்தப்புரத்தில் சப்ர மஞ்சத்தில் சயனித்தபடி அத்தியூரில் நடந்ததை நேரில் பார்த்தது போன்று கூறுகிறீர்களே. அல்லது உங்கள் தேரில் சக்கரங்களுக்குப் பதிலாக உங்களது கண்களைப் பிணைத்து அத்தியூர் அனுப்பினீர்களா?" — கொந்தளித்தாள், சாயாதேவி.

"பிள்ளையை இழந்தவள் நான். மனம் நொந்து கிடக்கிறேன். எனது நொந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதே, சாயா!" — காஞ்சனை அவளைக் குரோதத்துடன் பார்த்தாள்.

"நீங்கள் பிள்ளையை இழந்தது உண்மைதான். ஆனால் மகாராணியார் தனது மகனை உயிருடன் இழந்திருக் கிறார். உங்களைவிட அவருக்கு வேதனை அதிகம். எனவே நீங்களும் சொற்களை எச்சரிக்கையுடன் பயன் படுத்துங்கள்." — சாயாதேவியின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"சாயா! என்ன இது! நம் மீது தவறு இருக்கிறது. அப்படியிருக்க, சிற்றன்னையுடன் ஏன் மல்லுக்கு நிற்கிறாய்?" — அக்கா என்ற உரிமையில் புவனமாதேவி சாயாவைக் கண்டித்தாள்.

"என்ன தவறைக் கண்டுவிட்டாய் அக்கா? யாரும் எந்தத் தவறையும் இங்கே செய்யவில்லை? தவறு

செய்தவர் யார் என்பதை அறிவிக்கவா இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பிரச்னைகளுக்குத் தீர்வு காணத்தான் இந்தக் கூட்டத்தை இளவரசர் கூட்டி இருக்கிறார்?" — சாயா அவனிசிம்மனைப் பார்த்தாள்.

அவனிசிம்மனுக்கு வெறுப்பாக வந்தது. எல்லாப் பிரச்னைகளுக்கும் காரணம் ஜெயவர்மன் என்பது தெளிவாகத் தெரிகிறது. சந்தேகத் தராசின் முள் அவன் பக்கமாகவே நீளுகிறது. அப்படி இருக்க, சாயா அனைவரையும் சாடிப் பேசுகின்றாளே!

"என்ன நடந்தது? நமது குடும்பத்திற்கு ஏன் இந்த நிலை? என்பதைக் கலந்து பேசி, அவரவர் எண்ணங் களைக் கூறி, யோசனைகளைப் பகிர்வதற்காகவே இந்தக் கூட்டம். பல்லவ அரச குடும்பத்தை உலகமே போற்றுகிறது. ஆனால் குடும்ப ஆண்கள் பேசுவதற்கு முன்பாகப் பெண்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வது நன்றாகவா இருக்கிறது?" — அவனிசிம்மன் பொதுவாகக் கூறினாலும், அவனது பார்வை தன்னை நோக்குவதை உணர்ந்தாள், சாயா.

சற்றே தனது குரலைத் தாழ்த்தியவள், அவனிசிம்மனை நேராகக் கண்களினுள் பார்த்தாள். "அண்ணா! இந்தக் குடும்ப ஆலோசனை ஆண்கள், பெண்கள், பெரியவர், சிறியவர், மணமானவர், மணமாகாதவர் என்கிற அடிப்படையிலா நடக்கிறது. இந்த ஆலோசனைக் கூட்டம் பாதிக்கப்பட்டவர், பாதிக்கப்படாதவர் என்கிற அடிப்படையில் நடக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள்!" சாயா கூற, முதன்முறையாகத் தானவர்மன் வாய் திறந்தான்.

"குடும்பத்தில் பல துர்சம்பவங்கள் நடந்திருக்கிறது. தந்தையாருக்கு மனநிலை சரியில்லை. நவரத்னாவின் தற்கொலை, விஜயவர்மன் கொலை, ஜெயவர்மனின் திடீர்த் தலைமறைவு எல்லாமே அனைவரையும்

*பாதித்திருக்கின்றன. பாதிக்கப்படாதவர் என்று யாரைக் கருதுகிறாய், சாயா..?"*

*"தலைமறைவு என்பது தவறான சொல். எனது கணவர் தலைமறைவாகச் சென்றார் என்று எதை வைத்துக் கூறுகிறீர்கள்?" — சாயா கேட்டாள்.*

*"வெளிநாட்டவருடன் ஜெயவர்மன் ஓடத்தில் ஏறிச் சென்றதாக, மாவிலக்கை துறைமுக அதிகாரி கூறுகிறார். ஆலயங்களில் அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருக்க, எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல், திடீர் என்று கடல் கடந்து செல்பவர்களை எப்படி நம்ப முடியும்? தலைமறைவு என்றுதான் கூற முடியும்?" — தானவர்மன் கோபத்துடன் சாயாவை உறுத்துப் பார்த்தான்.*

*சாயாதேவி சளைக்கவில்லை. உடனேயே அவனுக்குப் பதிலடி கொடுத்தாள்.*

*"கடல் கடந்து இரகசியமாக வந்த ஒருவளைக் கண்டதும் காதல் கொண்டு வாழ்க்கைத் துணைவியாக நம்பி ஏற்றுக் கொள்ளும் போது, திடீர் என்று கடல் கடந்து செல்லும் தம்பியை மட்டும் சந்தேகப்படத் தோன்றுமோ? கடல் இலக்ஷ்மண ரேகையா என்ன.. கடக்காதே என்று கூறுவதற்கு? ஒருவர் கடல் கடந்து சென்றால், அவரே அத்தனை விபரீதங்களுக்கும் காரணகர்த்தா என்று முடிவு கட்டிவிடுவதா? நாளை நீங்களும் கடலைக் கடந்துதான் காம்போஜம் செல்ல இருக்கிறீர்கள்? நீங்களும் தலைமறைவாகச் சென்றுவிடப் போகிறீர்கள் என்று கூறலாமா?"*

*சாயாவின் சொற்களில் இருந்த உக்கிரம் அனைவரையும் சுட்டது. ககனா திகைப்புடன் சாயாவைப் பார்க்க, ராஜஸ்ரீ தான் அமர்ந்த இடத்தில் இருந்து மெதுவாக எழுந்து வந்தாள். சாயாதேவியின் அருகில் அமர்ந்து அவளது தோளில் கைவைத்து அவளை அணைத்துக் கொண்டாள். ராஜஸ்ரீ பொதுவாக ராஜ்மாதாவை நோக்கிப் பேசினாள்.*

"அம்மா! நான் இந்தக் குடும்பத்தின் மருமகள். கடம்பத்தில் என்னைச் சிறைப்பிடித்த போது ஜெயவர்மன் என்னை மிகவும் கண்ணியமாக நடத்தினார். சிறைக்கைதியாக நான் வந்தாலும் என்னைக் கண்ணுங்கருத்துமாகப் பார்த்துக் கொண்டார். குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் பற்றி என்னிடம் கூறி, அவர்களின் குணாதிசயங்களை மிகவும் சிலாகித்துப் பேசினார், குறிப்பாக மூத்தவர் இளவரசரைப் பற்றி! அனைத்துச் சகோதரர்களில் குடும்பத்தை மிகவும் நேசித்தது ஜெயவர்மர்தான் என்பது எனது எண்ணம். சத்புத்திரரான அவரை நாமே குறை கூறலாமா? சாயாதேவியின் மனது என்ன பாடுபடும்? விஜயவர்மரை கொலை செய்தது ஜெயவர்மர்தான் என்பதற்கு என்ன ஆதாரம்? விஜயவர்மரை கொலை செய்ய அவர் திட்டமிட்டிருந்தால், கொலை நடக்க இருந்த ஆலயத்திற்கு அவர் ஏன் செல்ல வேண்டும்? யாராவது ஆளை அனுப்பிக் கொலை செய்திருக்கலாமே?!" — என்றவள், ராஜவர்மனை நோக்கினாள்.

"ராஜவர்மரே! நீங்கள் மௌனம் சாதிப்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கின்றன. அன்று நடந்தது என்ன? பஞ்சவர் சபையினர் எதற்காக இரவு அரண்மனை வாயிலில் கூடினீர்கள்?" — ராஜஸ்ரீ கேட்க, ராஜவர்மன் தலை நிமிர்ந்தான்.

"ஜெயவர்மன் ஒரு தியாகி. குடும்பத்தைக் காப்பதற்காகத் தன்னையே அழித்துக் கொண்டவன். அவன் நமது குடும்ப மானத்தையும், ஒற்றுமையையும் காப்பாற்றவே சில காரியங்களில் ஈடுபட்டான். இதற்கு மேல் என்னால் இப்போது ஒன்றும் கூற இயலாது. நாளைக் காலை கொலு மண்டபத்தில் தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர் தலைமையில் நடக்க இருக்கும் விசாரணையின் போது அவரிடம் எல்லா ஆதாரங்களையும் தருவதாக உறுதியளித்திருக்கிறேன்.

இப்போது நான் தகவல்களைக் கூறினால், நாளைக் காலை விசாரணைக்குள் இன்று பல கொலைகள் நிகழலாம்.." — ராஜவர்மன் கூற, அவனிசிம்மன் அவனைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

"அவை என்ன ஆதாரங்கள்? இங்கே அவற்றைப் பற்றித் தெரிவிக்கலாமே!" — அவனிசிம்மன் கூறியதும், ராஜவர்மனின் கண்கள் எச்சரிக்கை அடைந்தன.

ராஜவர்மன் தயக்கத்துடன் சாயாவைப் பார்த்தான். "ஜெயவர்மன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க ஒரு தகவல் உள்ளது. மனைவியுடன் பள்ளியறையில் தனது முதல் இரவினைக் கழித்துக் கொண்டிருக்கும் ஒருவனை யாரோ கதவைத் தட்டி வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றிருக்கின்றனர். அழைத்துச் சென்றவர் யார்? இதனை நீதான் தெளிவாக்க வேண்டும், சாயா! உங்களது முதல் இரவில் நடந்து என்ன?"

சாயா திடுக்கிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். இவ்வளவு பெரிய கூட்டத்தில் பதில் கூற வேண்டிய கேள்வியா இது?

அனைவரின் பார்வையும் அவளை நோக்க, சாயா சங்கடத்துடன் நெளிய, ராஜஸ்ரீ அவளது உதவிக்கு வந்தாள்.

"ராஜவர்மரே! இந்தக் கேள்வியை நான் ஆட்சேபிக்கிறேன். ஒரு பெண்ணிடம் நான்கு பேரின் முன்பாகக் கேட்கும் கேள்வி இல்லை இது?"

"ஆபத்துக்குப் பாவமில்லை. தற்சமயம் இந்த உப்பரிகையில் அமர்ந்திருக்கும் நமது குடும்பத்தினரிடையே ஒரு கருப்பு ஆடு உள்ளது. அதன் நடவடிக்கைகளில் எனக்குச் சந்தேகம் உள்ளது. இப்போது அந்தக் கருப்பு ஆட்டினை வெளிப்படுத்தினால், நாளை காலைக்குள் சில சம்பவங்கள் நிகழலாம். நவரத்னாவின் இறப்புக்கு முன்பாக அவளைச் சந்தித்தது

அந்தக் குடும்ப உறுப்பினர்தான்." — ராஜவர்மன் கூற, திடுக்கிட்டு அவனை நோக்கிய அனைவரும், பிறகு தயக்கத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"பீடிகையும், பூடகமும் குடும்பத்தினரிடையே தேவையில்லை, ராஜவர்மா! இது கொலு மண்டபம் இல்லை. சம்பவங்கள் அடுக்கடுக்காக நிகழ்ந்து நமது அரச குடும்பத்தை வருத்திக் கொண்டிருக்கிறது. இனி பழைய மகிழ்ச்சி மீண்டும் தோன்றுமா என்கிற நிலையில் இருக்கிறோம். நமது குடும்பத்தில் நடந்த நான்கு திருமணங்களின் போதுதான் நாம் கடைசியாக மகிழ்ச்சியை அனுபவித்தோம். அதற்கு மேல் இடி தாக்க ஆரம்பித்துவிட்டது. யார் அந்தக் கருப்பு ஆடு என்று சொல்?" — பீமவர்மன் கேட்டான்.

"உண்மை! ஆனால் இப்போது கூற இயலாது. உங்கள் அனைவருக்கும் ஒரு தகவலை மட்டும் கூற விரும்புகிறேன். நவரத்னா தற்கொலை; விஜயவர்மன் கொலை, ஜெயவர்மனை சுற்றிய மர்மம் இவை மட்டும்தான் உங்களை பாதித்திருக்கும் நிகழ்வுகளாக நினைக்கிறீர்கள். அவனிசிம்மா! இதைக் கேள்.. நமது குடும்பத்தை நிலைகுலையச் செய்யும் இன்னும் பல சம்பவங்கள் அன்று இரவு நடந்திருக்கின்றன.." அனைவருமே ராஜவர்மனை கலக்கத்துடன் நோக்கினர்.

"நமது பல்லவத்தை வாழ வைக்கும் பொக்கிஷம் களவு போனது தெரியுமா?" — ராஜவர்மன் கேட்டான்.

"இது பழைய தகவல். நமது பொக்கிஷம் என்று அத்திமலையானின் பிரதிமையைக் குறித்துதானே சொல்கிறாய். ஸ்ரீவரதநாராயணப் பெருமாளை அத்திமலையில் ஸ்தாபிதம் செய்து, பிரச்னையைச் சமாளித்ததே நான்தான். என்னிடம் புதிதாக இந்தத் தகவலைச் சொல்கிறாயே!" — அவனிசிம்மன் எரிச்சலுடன் சொன்னான்.

"நமது பொக்கிஷம் அத்திமலையானை கோட்டை விட்டுவிட்டோம். ஆனால் அன்றிரவு அரண்மனை கஜானாவில் இருந்த அவனது ஸ்ரீதளமும் பறிபோன தகவல் எத்தனை பேருக்குத் தெரியும்..?" — ராஜவர்மன் கேட்டதும் அனைவரும் உறைந்து போயினர்.

"ஆ!" என்கிற ஓலம் பெண்களிடம் இருந்து எழுந்தது.

"இதை நீ எப்படி அறிவாய்..?" — அவனிசிம்மன் கேட்டான்.

"ஜெயவர்மன்தான் அத்தியூருக்குப் புறப்படுவதற்கு முன்பாக என்னிடம் ரகசியமாகச் சொன்னான். சதியாளர்களைப் பற்றி நவரத்ன பல்லவி அறிந்திருக்கிறாள். அவள் அதனை ஜெயவர்மனிடம் கூறுவதற்காக அவனை அவசரமாக அழைத்திருக்க வேண்டும். அவளுடைய தூதன் வந்து ஜெயவர்மனை அழைத்திருக்கிறான். உடனே ஜெயவர்மன் அரண்மனையைவிட்டுப் புறப்பட்ட போது வெளியே என்னைக் கண்டான். பல சதிகள் அரங்கேறியுள்ளன என்பதை மட்டும் என்னிடம் கூறினானே தவிர, சதியாளர்கள் யார் என்பதைக் கூறவில்லை. தங்கை நவரத்ன பல்லவி அவசரமாகத் தன்னை அழைத்ததாக மட்டுமே கூறினான். அவனுக்கு நவரத்ன பல்லவி யார் மூலமாகவோ தகவலை அனுப்பியிருக்கிறாள். அந்த நபரைக் கண்டுபிடித்தால் எல்லாத் தகவல்களும் தெரிய வரும். ஜெயவர்மனை அந்த இரவில் சந்தித்த நபர் யார்? என்பதை அறிந்தால் சதியாளர்களை அறிந்துவிடலாம்." — ராஜவர்மன் கேட்க, அனைவரது பார்வையும் சாயாவின் மீது பதிந்தது.

சாயாவின் முகம் குங்குமமாகச் சிவந்தது. இம்மாதிரிக் கேள்விகளை ஒரு பெண் எங்ஙனம் எதிர்கொள்வாள்? ஆனால் நடந்த குழப்பங்களுக்கு ஜெயவர்மன்தான் காரணம் என்று சாதிப்பவர்களுக்கு அவன் குற்றமற்றவன் என்பதனை நிரூபிக்க வேண்டும் என்கிற அவளது உத்வேகம் அந்தச் சங்கடத்தை விரட்டி அடித்தது.

"ராஜவர்மரே! நாங்கள் பொழுதுடன் உறங்கி விட்டோம். அப்போது திடீரென்று யாரோ அறைக் கதவைத் தட்டினார்கள். நான் வந்தவர் முகத்தைப் பார்க்கவில்லை ஜெயவர்மன் மட்டும் தனது சிரசை வெளியே நீட்டிப் பேசிக் கொண்டிருந்தார். நான் வந்திருப்பது யார் என்று கேட்ட போது அவர் பெயர் ஒன்றும் கூறியதாக நினைவில் இல்லை. அவசரமாக வெளியே செல்ல வேண்டும் என்பதை மட்டும் கூறினார். ஆனால் வந்த நபரைக் காவலாளிகள் பார்த்திருக்கக் கூடும் அல்லவா? அவர்களைக் கேட்டால் விடை கிடைக்குமே!"

"நான் அவர்களைக் கேட்டுவிட்டேன். அவர்கள் யாரும் வந்தவரைக் கவனிக்கவில்லை. அதற்குமேல் இந்த விவகாரத்தில் செயல்பட முடியாதபடி நான் கைது செய்யப்பட்டுவிட்டேன். ஜெயவர்மனின் பள்ளியறை வரை வந்து அவனை அழைத்துச் சென்ற மனிதர் யார்?" — ராஜவர்மன் கேட்டான்.

சாயாதேவி சற்றே யோசித்து, ஜெயவர்மன் கூறியதை நினைவுபடுத்தி இருந்தால், அன்று நடுநிசியில் அவர்களது பள்ளியறைக் கதவைத் தட்டி, ஜெயவர்மனை அழைத்துச் சென்றவனின் பெயரை அங்கே கூறியிருக்கலாம். ஆனால் ஜெயவர்மனைக் காணாமல் குழம்பிப் போயிருந்த அவளது சிந்தைக்கு யோசிக்க எங்கே அவகாசம் கிடைக்கக் கூடும்..?

"அப்பா ராஜவர்மா, எனது மகன் ஜெயவர்மன் உன்னிடம் கடைசியாக என்ன கூறினான்?" — ராஜமாதா குந்தளா கண்ணீர் உகுத்தபடி கேட்டாள்.

"இன்றிரவு பல சதிகள் அரங்கேறியுள்ளன. தங்கை நவரத்னாவுக்கு ஆபத்து என்று செய்தி வந்ததாகக் கூறினான். செய்தி கொண்டு வந்த மனிதன் யார் என்று சொல்லவில்லை." — ராஜவர்மன் குழப்பத்துடன் கூறினான்.

"ஒரு நாட்டின் மன்னன் சுயநினைவில் இல்லை யென்றால், எவ்வளவு சதிகள் அரங்கேறுகின்றன. எனது தந்தை சூரியவர்மர் இன்றி எங்கள் நாட்டில் ஒரு அணுவும் அசையாது!" — ககனா பெருமைப்பட்டாள்.

காஞ்சனை அவளை எரிச்சலுடன் நோக்கினாள். "உனது திருமணமே அவருக்குத் தெரியாமல் திடீரென்று நிகழ்ந்த ஒரு சம்பவம் என்பதை மறந்துவிடாதே. நாங்களே வேதனையில் இருக்கிறோம். அதன் நடுவே, உங்கள் காம்போஜ பெருமையைக் காம்போதி ராகத்தில் இசைக்காதே.." — காஞ்சனை சொல்ல, அந்தக் குழப்பத்திலும், ராஜமாதங்கியும், புவனாவும் சிரித்து விட்டனர்.

"உங்களது உள்நாட்டுக் குழப்பங்களில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. நாங்கள் உடனடியாகக் காம்போஜம் புறப்பட நினைக்கிறோம்." — ககனா கூற, அவனிசிம்மனின் முகம் கடுமையாக் மாறியது.

"நடைபெற்ற சம்பவங்களில் தங்களது பங்கு இல்லை என்பதை நிரூபித்துவிட்டே யாராக இருந்தாலும் புறப்பட அனுமதிக்கப்படுவார்கள்." — கர்ஜித்த அவனிசிம்மன் சாயாவை நோக்கினான்.

"ராஜவர்மன் கூறும் அந்த நபர் ஜெயவர்மனைச் சந்தித்ததாகவே வைத்துக் கொள்வோம். அவனது குரலையாவது நீ கேட்டிருக்க வேண்டுமே, சாயா?" — அவனி கேட்க, அவனை நோக்கித் தலையசைத்தாள் சாயா.

"குடும்ப ஆலோசனையில் விவாதிக்கப்படும் விவரங்கள் யாருடைய செவிகளையும் அடையக் கூடாது என்பதற்காக உப்பரிகையில் பேசுகிறோம். அப்படியிருக்க நடுநிசியில் அறையின் கதவை, அதுவும் முதலிரவன்று பள்ளியறை கதவைத் தட்டுபவர், உரக்கப் பேசுவாரா? அவர்கள் கிசுகிசுத்த குரலில் பேசிக் கொண்டார்கள். வந்தவரது குரல் எனது செவிகளில் புகவில்லை." —

சாயா கூற, இளவரசர்களின் அத்தை ராஜமாதங்கி வேதனையுடன் கூறினாள்.

"பல்லாண்டு வாழவேண்டிய பல்லவக் கொழுந்துகள் இப்படி அகாலமாக மரணம் அடைகின்றனவே. மர்மங்களும் புதைகுழியாக நமது குடும்பத்தை உள்ளே இழுக்கின்றனவே. யாராவது ஜோசியரைக் கொண்டு குடும்பத்தில் சாபம் ஏதாவது உள்ளதா என்று பார்க்கலாமே." — ராஜமாதங்கியின் கூற்றைத் தலையசைத்து ஆமோதித்தாள், ராஜமாதா குந்தளா.

"இல்லை அம்மா! எப்போது ஜோசியர் வசம் போகின்றதோ, அவர் இந்தச் சம்பவங்களுக்குப் பூர்வ ஜென்ம வினை என்று கூறிப் பரிகாரங்களைச் சொல்லுவார். அது சதியாளர்களுக்கு வசதியாகப் போய்விடும். நமது குடும்பத்தில் நிகழ்ந்த அத்தனை சம்பவங்களுக்குமே ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளது என்பது தெரிகிறது. சதிகளுக்கு மூலம் அத்திமலைத்தேவனை அபகரிக்கும் திட்டமே." — அவனிசிம்மன் கூறினான்.

"அத்திமலையானின் பிரதிமை பறிபோனது —
ஸ்ரீதள மணி களவாடப்பட்டது —
நவரத்னாவின் தற்கொலை —
வீரகொசுவனின் மரணம் —
விஜயவர்மனின் கொலை —
ஜெயவர்மன் காணாமல் போனது..

அனைத்துமே ஒரே இரவில் நடந்திருக்கின்றன. நிச்சயம் இவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை தான். ஆனால் இதன் துவக்க முடிச்சு எங்கு நிகழ்ந்தது. அந்த முடிச்சினை விடுவித்தால், அனைத்து முடிச்சுகளையும் அவிழ்த்துவிடலாம். இவை அனைத்திற்கும் தொடக்கம், ஜெயவர்மனை சந்திக்க வந்த அந்த மனிதன். அவனைக் கண்டுபிடித்தால் போதும்!" — ராஜவர்மன் கூறினான்.

"நிச்சயம் கண்டுபிடிப்போம், ராஜவர்மா!" — அவனிசிம்மன் கூறினான்.

"அண்ணா! பஞ்சமர் சபை உறுப்பினர்களை நீ காரணம் இல்லாமல் சித்திரவதைக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறாய். பெரிதாக ஏதோ சதி ஒன்று அரங்கேறப் போகிறது. நீங்கள் அரண்மனை வாயிலில் தயாராக இருங்கள், என்று மற்ற நால்வரையும் அரண்மனை வாயிலில் நிற்கச் சொன்னான், ஜெயவர்மன். 'ராஜவர்மா! நீ புறப்பட்டுப் போ. ராஜஸ்ரீ உனக்காகக் காத்திருப்பாள்' என்று கூறினான். நான் உடனே, 'ஏன் சாயாதேவி மட்டும் உனக்காகக் காத்திருக்க மாட்டாளா?' என்றேன். இருவரும் சிரித்துவிட்டு அவரவர்களின் ஜாகைக்குச் சென்றோம். பஞ்சவர் சபை விஸ்வக்க்ஷேனனும், விசாகவர்மனும் வந்து கூறியதும் தான் எனக்கு நடந்த சம்பவங்கள் தெரியும். பஞ்சவர் சபையினரிடம் யாரும் என்னைப் பின்தொடர்ந்து வரக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்தான், ஜெய வர்மன். அவன் கட்டளைப்படி அனைவரும் அரண் மனை வாயிலிலேயேதான் இரவு முழுவதும் நின்றிருந்தனர். அரண்மனை அதிகாரியிடம் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. அரண்மனை காவலர்களின் கண்பார்வையில்தான் அவர்கள் அனைவரும் இரவு முழுவதும் நின்று ஜெயவர்மனின் அழைப்புக்காகக் காத்திருந்தனர். தேசபக்தர்களைச் சந்தேகித்து, சதியாளர்களுக்கு வெண்சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றோமோ என்று சந்தேகமாக இருக்கிறது. பஞ்சவர் சபையை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். நீ அவர்களைச் சிறையில் அடைத்தால் தேச பக்தியுடன் இருப்பது குற்றமோ என்கிற எண்ணம் மக்களிடையே உருவாகிவிடும்." — ராஜவர்மன் கூறினான்.

அதுவரை அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த, சிம்மவர்மனின் தம்பி விஷ்ணுவர்மன் முதன் முறையாக வாய் திறந்தான்.

“ராஜவர்மன் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. விஜயவர்மனை பெற்ற தந்தை நான். நானே கூறுகிறேன். அவனது நடவடிக்கைகள் சரியில்லை. பெண்களை மிகவும் இழிவாக நடத்தி வந்திருக்கிறான். கடிகையில் மீமாம்சம் போதிக்கும், சங்கபரணர் எனது நண்பர். அவரே கூறினார். அன்றாடம் கடிகையில் தங்கும் பெண் களுக்குத் தொல்லைகள் கொடுத்து வந்திருக்கிறான். நாம் எல்லாரும் சாளுக்கிய நர்த்தகி வித்யுதாவின் நடனத்தைக் காணச் சென்றோமே, அவளை விஜயவர்மன் தவறாக நெருங்கியிருக்கிறான். களரி பயிற்சிக்கு வந்த ஜெயவர்மன் அதை அறிந்து அவனை அடித்து அங்கிருந்து அப்புறப்படுத்தி இருக்கிறான். அப்போது சாயாவைப் பற்றி அவன் குறை கூற, அந்தக் கோபத்தில் ஜெயவர்மன் விஜயவர்மனைத் தாக்க, விஜயவர்மன் சாயாவை விதவையாகச் செய்வதாக சபதம் செய்திருக்கிறான். உடனே எனது சிற்றப்பனுக்கு ஒரு மகன்தான் என்று ஜெயவர்மனும் சூளுரைத்திருக்கிறான். இந்தச் சம்பவத்தைக் கண்ட யாரோதான் விஜயவர்மனை கொன்றுவிட்டு, ஜெயவர்மனின் மீது பழி வருமாறு பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.” — விஷ்ணுவர்மன் கூற, காஞ்சனை கணவனை எரித்துவிடுபவளைப் போன்று நோக்கினாள்.

“ஆஹா! என்ன பாசம்.. என்ன பாசம்! அண்ணன் குடும்பத்தின் மீது பீறிட்டுப் பெருகுகின்றதோ வாஞ்சை. பெற்ற மகன் விஜயனைக் காட்டிலும் ஜெயன் உகந்தவனாகிப் போனானா? எனக்குத் தெரியும்.. ஜெயவர்மன்தான் எனது மகன் விஜயவர்மனை கொன்றுவிட்டான்.” — ஆவேசத்துடன் கூறினாள் காஞ்சனை.

“அம்மா! விசாரணைக்கு முன் தீர்ப்பு கூறாதே!” — ராஜவர்மன் அவளை எச்சரித்துவிட்டு அவனி சிம்மனைப் பார்த்தான்.

"அண்ணா! எனது தந்தை கூறியது முற்றிலும் உண்மை. விஜயவர்மனின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் விதமாகவே இருந்தன. எங்கள் அரண்மனைக்கு மர்மமனிதர்கள் பலர் வந்திருப்பதாக, காவல் அதிகாரி கூறுகிறார். கட்டுக்காவலை மீறி, விஜயவர்மன் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றிருக்கிறான்." — ராஜவர்மன் கூற, விஷ்ணுவர்மன் அதனை ஆமோதித்தான்.

"உண்மைதான் அவனிசிம்மா! நானே அவனுக்குப் பரிந்து ராஜமாதங்கியிடம் பெண் கேட்டிருக்கிறேன். பின்னர் அவனுடைய நடவடிக்கைகளை அறிந்து கொண்டு எனது தவறை உணர்ந்தேன். என்னிடமே ஜெயவர்மனைக் குறித்து எதிர்மறையாகப் பேசியிருக் கிறான்." — விஷ்ணுவர்மன் கூற, அவனிசிம்மன் சட்டென்று தனது தாயைப் பார்த்தான்.

"அண்ணன் தம்பிகளுக்குள் வெறுப்பினை மூளச் செய்வதே பெற்றோர்தான். ஒருவனை மட்டும் உயர்த்தியும், மற்றவர்களைத் தாழ்த்தியும் பேசும் போது, அவனிடம் மற்றவர்களுக்குத் துவேஷம் உண்டாகின்றது. நமது தந்தை பலமுறை ஜெயவர்மன் பட்டத்து இளவரசனாகத் திகழ்ந்திருக்கக் கூடாதா என்று எனது முகத்திற்கு முன்பாகவே தனது ஆதங்கத்தை வெளிப் படுத்தி இருக்கிறார். அவன் மீது எனக்கு வெறுப்பு தோன்றியதற்கு அதுவே கூடக் காரணமாக இருந்திருக்கலாம்." — அவனிசிம்மனின் குரலில் ஒலித்தது வருத்தமா அல்லது ஆற்றாமையா..?

சாயா திகைப்புடன் அவனிசிம்மனைப் பார்த்தாள். நிச்சயம் அவனது குரலில் தொனித்தது நெகிழ்வுதான்.

அவனிசிம்மன் கண்களில் திடீர்ச் சோகம். "நான் எனது தம்பி ஜெயவர்மனை புரிந்துக்கொண்டேன். திருமணம் முடிந்தவுடன், நானும் அவனும் தனித்திருந்த போது என்னிடம் வந்தான். 'அவனிசிம்மா! என் மீது

சற்றும் சந்தேகம் கொள்ளாதே.. எனக்கு அரசனாக வேண்டும் என்கிற எண்ணம் இல்லை. எனது வாழ்க்கை பெரிய மாற்றம் அடையப் போகிறது என்பதை அத்தி மலையானே என்னிடம் சூசகமாகத் தெரிவித்து விட்டான். நாமெல்லாம் ஒரே ரத்தம். பாண்டவர்கள் தர்மத்தின் பக்கம் நின்று அதனை ஜெயிக்க வைத்தார்கள். கர்ணனோ அதர்மத்தின் பக்கம் நின்று தர்மத்தை ஜெயிக்க வைத்தான். சகோதரர்கள் நீங்கள் தர்மத்தின் பக்கம் நின்று அதனை ஜெயிக்க வையுங்கள். நான் அதர்மத்தின் பக்கம் சென்று தர்மத்தை ஜெயிக்க வைக்கிறேன்' என்று சூசகமாகப் பேசினான். அவனது கூற்று அப்போது எனக்குப் புரியவில்லை. ஏதோ பசப்புகிறான் என்று நினைத்தேன். ஆனால், இப்போது ஜெயவர்மனின் வெள்ளை மனதை நான் புரிந்து கொண்டேன். தலைமை அமைச்சரின் கணக்காளனின் தம்பி மனைவி சிந்தாமணி என்பவள், சாயாவும் ராஜஸ்ரீயும் ஜெயவர்மனின் பிரார்த்தனை அறையில் இருக்கும் ரகசிய அத்தியோலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததாகத் தகவலை அனுப்பினாள். அவள் மூலமாகவே அந்த அத்தியிலைகளைக் கைப்பற்றி அவற்றை வாசித்துப் பார்த்தேன். அனைத்திலும் நமது குடும்பத்திற்கான பிரார்த்தனைகள் —

— தந்தை சிம்மவர்மர் நலம் பெற வேண்டும்.

— பிரக்ஞாதாராவின் வசியத்திலிருந்து விடுபட வேண்டும்.

— நவரத்னா சுகமாக வாழ வேண்டும்.

— அவனிசிம்மனும், சகோதரர்களும் பெயரும் புகழும் பெற்று வாழ வேண்டும்..

என்று அனைத்துமே தனது குடும்பத்திற்கான பிரார்த் தனைகள். தனக்காக ஒன்றுமே வேண்டிக் கொள்ள வில்லை. இப்படி ஒரு தம்பியைப் பெற நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்."

ராஜஸ்ரீயும், சாயாவும் அர்த்தத்துடன் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டனர். இவர்களாக அத்தியிலைகளைக் காட்டி, ஜெயவர்மனுக்காக வாதாடியிருந்தால் அவனி சிம்மன் அவற்றை நம்பியிருக்கமாட்டான். தானே அவற்றைக் கைப்பற்றி வாசித்துப் பார்த்ததால், தம்பியின் அருமை தாமதமாகப் புரிந்திருக்கிறது.

ராஜவர்மன் நிம்மதி பெருமூச்சு ஒன்றைச் சிந்தியபடி அவனிசிம்மனை நோக்கினான்.

"அண்ணா! இப்போதாவது ஜெயவர்மனை புரிந்து கொண்டாயே. நடந்த அத்தனை சம்பவங்களுக்கும் காரணகர்த்தாவாகத் திகழ்ந்து அங்குரார்ப்பணம் செய்தவள், பிரக்ஞுதாரா என்கிற அந்தப் புத்த சித்தினி தான். மாய மந்திரமும், நோக்குக் கலையும் அறிந்தவள். தனது நோக்குக் கலையால் மன்னரை அவள் வசியம் செய்து, சோழத்திற்குச் செல்ல அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று ஜெயவர்மன் அன்றே சந்தேகித்தான்."

"எல்லாம் சரி! அத்திமலையான் சிலை எங்கே? மக்களுக்கு உண்மை தெரிவதற்கு முன்பாக நாம் அதைக் கண்டுபிடித்து மீண்டும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டாமா?" — ககனா நினைவுபடுத்தினாள்.

மீண்டும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யவா அவள் அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாள். தேவராஜ மார்க்கத்தைப் பின்பற்றும் தங்கள் காம்போஜ தேசத்தின் ஐராவத மலையின் மீது தேவ உடும்பர அத்திமலையானை பிரதிஷ்டை செய்யும் எண்ணத்தில் அல்லவோ அவள் அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாள்.

"உண்மை! முதலில் அத்திமலையானைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.." அவனிசிம்மன் கூறிக் கொண்டிருந்த போதே அந்த அதிசயம் நிகழ்ந்தது.

"எனது கண்மணி ஜெயவர்மன் எங்கே? ஜெயவர்மா.. ஜெயவர்மா!" கதறியபடி வந்து நின்றான், மன்னன் சிம்மவர்மன். பின்பாகத் தலைமை அமைச்சர்

*மச்சவாசுதேவரும், மருத்துவர் தயாகரரும் பரவசத்துடன் நின்றிருந்தனர்..*

*குடும்பத்தினர் அனைவரும் தங்கள் கண்களையே நம்ப முடியாமல் எழுந்து நின்றனர்.*

*"அரசே! தாங்களா உரையாடுகிறீர்கள்?" — பரவசத்துடன் எழுந்து அவரை நோக்கி ஓடினாள் குந்தளா.*

*"எனது ஜெயவர்மன் என்னைப் பேச வைத்து விட்டான். எல்லாரும் கேளுங்கள். சோழத்திற்குச் செல்ல அனுமதிகேட்டு ஒரு புத்த சந்நியாசினி வந்தாளே. அவளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று ஜெயவர்மன் கூறியதும், நான் அனுமதி மறுத்தேன் அல்லவா..? அதன்பின் எனது அறைக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன். குந்தளா! நீ எனக்குப் பானகம் கொண்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்றாய் அல்லவா! அப்போது அந்தப் பௌத்தச் சந்நியாசினி எனது அறைக்கு வந்து நின்றாள். இங்கே ஏன் வந்தாய்? என்று நான் அவளைக் கடிந்தேன். என்னைக் கடுமையாகப் பார்த்தாள் அவள். நான் சிறிது சிறிதாக எனது பிரக்ஞையை இழக்க, எனது வாயில் அவள் பலவந்தமாக ஒரு குளிகத்தைச் செலுத்தினாள். அதற்குப் பிறகு எனக்கு எதுவும் நினைவில் இல்லை. சற்று முன்பு உறங்கிக் கொண்டிருந்த எனக்கு ஒரு கனவு. நமது ஜெயவர்மன் ஒரு பௌத்தத் துறவியாகத் திகழ்கிறான். எனக்கு வாயில் செலுத்தப்பட்டிருந்த குளிகத்தை எடுத்து வேகவதியில் வீசி எறிந்துவிட்டு, என்னைத் திரும்பிப் பார்க்காமல், ஒரு பனிமலையின் மீது ஏறிச்செல்கிறான். ஜெயவர்மா.. ஜெயவர்மா.. என்று நான் கதறுகிறேன். அவன் திரும்பிப் பாராமல் செல்கிறான். எங்கே சென்றான் எனது ஜெயவர்மன்!" — சிம்மவர்மன் கதற, குடும்பத்தினர் அவனைச் சூழ்ந்து கொண்டு ஆறுதல் கூற முயன்றனர். மருத்துவர் சிம்மவர்மனின் அருகில் நின்று, இன்னின்ன தகவல்களை மன்னரிடம் கூறலாம். இன்னின்ன அதிர்ச்சிதரும் தகவல்களைக் கூறாமல்*

விடலாம் என்று குடும்பத்தினரிடம் கூறிக் கொண்டிருக்க, ஒவ்வொருவராகச் சிம்மவர்மனிடம் சென்று பேச, சாயாதேவி மட்டும் எதுவும் பேசாமல் மௌனமாக உப்பரிகையில் இருந்து இறங்கத் துவங்கினாள். அவளுள் மளுக்கென்று ஏதோ முறிந்து போனது.

'ஒரே இரவில், நமது வாழ்க்கையின் துவக்கத்திலேயே அத்தனை இன்பங்களையும் வாரி வழங்கிவிட்டாய். இது போதும். இனி உறவாடுவதற்கு நீ அருகில் இல்லை யென்றாலும் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. உன்னுடன் வாழ்ந்து, கோடி இரவுகளின் சுகத்தை அனுபவித்துவிட்டேன். இனி நீ அருகில் இல்லை யென்றாலும் பரவாயில்லை..' — ஜெயவர்மன் முதலிரவன்று இவளது செவியில் கிசுகிசுத்தது, இவளது காதில் ஒலித்தது.

'எனது வாழ்வில் பெரிய மாற்றம் நிகழப் போகிறது. பாண்டவர்கள் தர்மத்தின் பக்கம் நின்று அதனை ஜெயிக்க வைத்தார்கள். கர்ணனோ அதர்மத்தின் பக்கம் நின்று தர்மத்தை ஜெயிக்க வைத்தான். சகோதரர்கள் நீங்கள் தர்மத்தின் பக்கம் நின்று அதனை ஜெயிக்க வையுங்கள். நான் அதர்மத்தின் பக்கம் சென்று தர்மத்தை ஜெயிக்க வைக்கிறேன்..' — ஜெயவர்மன் தன்னிடம் கூறியதாக அவனிசிம்மன் சற்றுமுன் தெரிவித்திருந்தது.

'ஜெயவர்மன் ஒரு பௌத்தத் துறவியாகத் திகழ்கிறான். எனக்கு வாயில் செலுத்தப்பட்டிருந்த குளிகத்தை எடுத்து வேகவதியில் வீசி எறிந்துவிட்டு, என்னைத் திரும்பிப் பார்க்காமல், ஒரு பனிமலையின் மீது ஏறிச்செல்கிறான். ஜெயவர்மா ஜெயவர்மா என்று நான் கதறுகிறேன். அவன் திரும்பிப் பாராமல் செல்கிறான்..' — சிம்மவர்மன் சற்றுமுன் தனது கனவில் ஜெயவர்மனை பார்த்ததாகக் கூறியது.

அத்திமலையானின் ஆலயத்தில் துவாரபாலகன் ஜெயனின் சிலையின் மீது ஊர்ந்து கொண்டிருந்த பல்லி

ஒன்று இவளது தலையில் விழுந்து, அஞ்சிலை அணங்கு என்கிற பெண்ணால் தட்டிவிடப்பட்டது போன்ற சூசகத் தகவல்கள் சாயாதேவிக்கு ஒரு உண்மையை உணர்த்தியது. இவளது பிரிய நாதன் இனி வரப்போவ தில்லை.

தேவ உடும்பர அத்திமலையானை ஜெயவர்மனின் தேகத்தில் தான் காண்பதாகக் கூறியிருந்தாள். இப்போது இவள் பக்தி செலுத்திய அத்திமலையானையும் காண வில்லை. இவள் காதலைச் செலுத்திய ஜெயவர்மனையும் காணவில்லை. இவளைத் தனது ஸ்ரீதளமணி என்று அழைத்திருந்தான். அந்த ஸ்ரீதள மணியும் களவாடப் பட்டது.

இனிமேல் இவளுக்கு என்ன இருக்கிறது..? இயந்திர கதியில் அமைதியாக உப்பரிகை படிகளில் இறங்கத் தொடங்கினாள். அவள் உப்பரிகையில் இருந்து நழுவிச் செல்வதை அவனிசிம்மனும், ராஜஸ்ரீயும் கவனித்தனர். இருவருமே அவள் பின்னாடி ஓடி வந்தனர்.

"கவலைப்படாதே சாயாதேவி. நான் ஜெயவர்மனைத் தேடிக் கண்டுபிடித்து உன்னிடம் சேர்க்கிறேன்!" — அவனிசிம்மன் உத்தரவாதம் அளித்தான்.

நின்று அவனை நிதானமாகத் திரும்பி நோக்கினாள். "இளவரசே! அத்திமலையானை மட்டும் தேடுங்கள். ஜெயவர்மரை தேடாதீர்கள்.." என்று மட்டும் கூறிவிட்டுத் தொடர்ந்து படிகளில் இறங்க, ராஜஸ்ரீ பாய்ந்து அவளது தோளினைப் பற்றினாள்.

"எங்குச் செல்கிறாய், சாயா?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"எங்குச் செல்வேன்! எனது அத்திமலைத்தேவனைச் சந்தித்து அவனிடம் நியாயம் கேட்கப் போகிறேன்?" சாயா கூற, மனநிம்மதியைத் தேடி அவள் ஆலயத்திற்குச் செல்வதாக நினைத்தாள்.

*தனது வீட்டு நந்தவனத்தில் பவழ மல்லிகளைச் சேகரித்துக் கொண்டிருந்த அஞ்சிலை அணங்கு, சாயாதேவி அத்திமலை ஆலயத்தின் தெற்காக ஓடிக் கொண்டிருந்த வேகவதி ஆற்றை நோக்கிப் போவதைக் கண்டாள். அஸ்தமிக்கும் காலத்தில் எதற்காக இளவரசியார் ஆற்றங்கரைக்குச் செல்கிறார்? இப்போது நீராடமாட்டார்களே?*

*உடனே அவளுள் ஒரு யோசனை. ஜெயவர்மர் தன்னை ரகசியமாகச் சந்தித்துத் தன்னிடம் கொடுத்த ரகசியச் சுவடிகளைப் பற்றிச் சாயாவிடம் கூறினால் என்ன? அத்திமலையான் மற்றும் ஜெயவர்மன் குறித்த தகவல்கள் அந்தச் சுவடிகளில் இருந்தால் அவர் அதனை வைத்து அவர்களது இருப்பிடத்தைக் கண்டுபிடிப் பாரோ? நல்லவேளையாக, அனந்த பட்டர் ஆலயத்தில் தான் இருந்தார். பூக்குடலையை வைத்துவிட்டு, தனது பூசனை அறையில், பதுக்கியிருந்த சுவடிகளை எடுத்துத் தனது முந்தானையில் மறைத்துக் கொண்டு சாயாதேவி சென்ற வழியிலேயே பின்தொடர்ந்தாள், அஞ்சிலை. ஆற்றங்கரையை அடைந்தவள் திகைத்தாள். இளவரசியை எங்குமே காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள் அஞ்சிலை. அவள் கண்களில் சாயாதேவி தென்படவே யில்லை.*

*சாயாதேவி வேகவதியில் மூழ்கிக் கொண்டிருந்தாள். அவளது நாசியில் இருந்து புறப்பட்ட நீர்க்குமிழிகள் ஒவ்வொன்றாக வெடித்து வேகவதியில் கலக்க, கடைசியாக பெரிய நீர்க்குமிழி ஒன்று சாயாவின் நாசியிலிருந்து புறப்பட்டது. ஆற்றின் மேல்வரை பயணித்த அந்த நீர்க்குமிழி வெடித்த போது, கோஷ்ட மலையின் பின்பாகச் சமவெளிப் பகுதியில் தியானத்தில் ஆழ்ந்திருந்தான் போதி தர்மா. அப்போது அவன் அந்தர க்ஷேத்திரத்தில் இல்லாமல், உபய ஷேத்திரத்தில் இருந்தான். எனவே, அந்த வேகவதியில் வெடித்த நீர்க்குமிழியின் ஒலி அவன் செவிகளில் பாய்ந்திருக்க*

வேண்டும். வடக்கு நோக்கி அமர்ந்திருந்தவன், திரும்பித் தெற்கே நோக்கினான். முதன் முறையாக உணர்ச்சியற்ற அவனது கண்களில் நீர் துளிர்த்தது.

"நிழலே! பரமனின் நிழலில் இளைப்பாறுவாய்!" அவனது வாய் முணுமுணுத்தது. சாயா என்கிற நிழல் அவன் முகத்தில் ஒருகணம் படர்ந்து உடனேயே விலக, போதி தருமனின் முகம் பழைய உணர்ச்சியற்ற நிலையை அடைந்தது.

அஞ்சிலை அணங்கு தொடர்ந்து இளவரசியைத் தேடிக் கொண்டுதான் இருந்தாள். இனி என்னைத் தேடுவதில் பிரயோசனம் இல்லை என்பது போல், சாயாதேவியின் தேகம் நீரில் மிதந்து வந்து கரையோரம் ஒதுங்க, அதைக் கவனித்த அஞ்சிலை உறைந்து போய் நின்றாள். கனத்த இதயத்துடன் ஜெயவர்மன் கொடுத்திருந்த ஓலைச்சுவடிகளைத் தனது பெட்டகத்திலேயே பத்திரப்படுத்தினாள்.

"சுவடிகளே.. உன்னில் என்ன மர்மங்களைக் கொண்டிருக்கின்றீரோ, எனக்குத் தெரியாது. சேர வேண்டிய இடத்திற்கு நீங்களே சென்று சேர்ந்து கொள்ளுங்கள். ஆனால் எனது தந்தையார் எனக்குத் திருமணம் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்குள் உங்களுக்கு உரிய இடத்தினை நாடிச் சென்றுவிடுங்கள்!" அணங்கு சற்று உரக்கவே, சுவடிகளிடம் பேசினாள்.

"கட்டுண்டோம்! பொறுத்திருப்போம்! காலம் வரும்! அப்போது நாங்கள் மர்மங்களை விடுவிப்போம்!" — என்று சுவடிகள் பதில் கூறியது, அஞ்சிலை அணங்கின் செவிகளில் விழவில்லை போலும்.

நவரத்னாவின் தற்கொலை,
விஜயவர்மனின் கொலை,
வீரகொசுவனின் மரணம்,
அபயகிரியின் பிணம்,

அத்திமலையான் காணாமல் போனது,
ஜெயவர்மன் மாயமாகிப் போனது

என்கிற விபரீத நிகழ்வுகளின் பட்டியலில் சாயாதேவியின் தற்கொலையும் மறுநாள் சேரப் போகின்றது என்பதை அறியாமல் அன்றிரவு அரச குடும்பம் உறங்கிக் கொண்டிருந்தது. ஆலயத்திற்குச் சென்ற சாயாதேவி திரும்பி வரவில்லை என்பதை அறியாமல், விடுதலை செய்யப்பட்ட கணவன் ராஜவர்மனுடன் அளவளாவிக் கொண்டிருந்தாள் ராஜஸ்ரீ.

உறங்கப் போவதற்கு முன்பாக ராஜவர்மன் ராஜஸ்ரீயிடம் ஒரு ரகசியத்தை வெளியிட்டான்.

“யாரிடமும் சொல்லாதே ராஜஸ்ரீ. ஜெயவர்மன் கடைசியாக என்னிடம் என்ன கூறினான் என்று பெரியன்னை கேட்ட போது நான் அவரிடம் உண்மையை மறைத்துவிட்டேன். ஜெயவர்மன் என்னிடம் கூறியது இதுதான்.. நமது குடும்பத்தில் வெள்ளாடு ஈன்ற கருப்பு ஆடு ஒன்று மேய்ந்து வருகிறது... என்றான். அதை நான் அரசியாரிடம் மறைத்து விட்டேன்.” — ராஜவர்மன் கூறிவிட்டு உறங்கச் சென்றான். ஆனால் ராஜஸ்ரீ அன்று முழுவதும் உறங்காமல் அந்தக் கருப்பு ஆட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து தம்பதியருக்கு அன்று முதலிரவு. ஆனால் பலருக்கு அதுவே இறுதி இரவாகப் போய்விட்டதே? பல்லவத்திற்கு அது பயங்கர இரவாக அல்லவா மாறிவிட்டிருந்தது...?

காலம் ஏன் பல்லவத்திற்குப் பல்லாண்டு பாட மறுக்கிறது? பல்லவத்தின் வெள்ளை ரிஷபம் ஏன் காலத்தால் அடக்க முடியாத ஜல்லிக்கட்டுக் காளையாக ஓடிக் கொண்டே இருக்கிறது..?

# 10. ஒன்பது வெற்றிலைகள்

'ஜெயவர்மா.. ஜெயவர்மா!'

நவரத்னாவின் தற்கொலை, விஜயவர்மன் கொலை, தேவ உடும்பர சிலை மாயமாகிப் போனது போன்ற தகவல்களை எல்லாம் தாங்கிக் கொண்ட, சிம்ம வர்மனின் நெஞ்சம், தனது பிரிய மகன் ஜெயவர்மன் காணாமல் போனான் என்கிற செய்தியைத் தாங்க முடியாமல் துடித்துப் போனது.

"அய்யகோ..! ஜெயவர்மனை எனது கனவில் துறவியாக அல்லவா கண்டேன். அவனைக் காணவில்லை என்று சொல்கிறீர்களே. பல்லவத்திற்காகவும், நமது குடும்பத்தின் நன்மைக்காகவும் தனது தேகத்தில் இருந்த ஒவ்வொரு இரத்தத்துளியையும் சிந்துவதற்குத் தயாராக இருந்தவன். அத்திமலைத்தேவனைத் தரிசிக்காமல் ஒரு கவளம் சோறு கூட உண்பதற்கு மறுப்பான். அவனை, எனது பிரிய மகனைச் சதியாளனாகச் சித்திரிக்காதீர்கள். அவன் எதனைச் செய்தாலும், அது நமது நன்மைக்காகவே என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். நமக்கெல்லாம் இரட்சையைப் போன்றவன். போர்க்களத்தில் எனது கேடயம் அவன். அவனால்தான் என்னால் பல வெற்றி களைப் பெற முடிந்தது. எனது செல்வத்தை எப்படி யாவது கண்டுபிடித்து எனது கண்களின் முன்பாக நிறுத்துங்கள்.." — புலம்பிக் கொண்டே இருந்தான் சிம்மவர்மன்.

"நல்ல செய்தியுடன் திரும்புகிறேன்!" — என்று அவரிடம் தலைமை அமைச்சர் கூறிவிட்டு அகன்றாலும்,

அவர் ஒத்தாடை அரண்மனையைவிட்டு வெளியே வருவதற்குள்ளாக இருண்ட முகத்துடன் அரண்மனைக் காவலர் தலைவன் அவரை நோக்கி நடந்து வந்தான்.

அவன் முகத்தைக் கண்டதுமே, மச்சவாசுதேவர் யூகித்துவிட்டார், ஏற்கெனவே நிகழ்ந்துள்ள விபரீதங்கள் போதாது என்று அடுத்த விபரீதத் தகவலுடன் அவன் வந்து 'கொண்டிருக்கிறான்.

"ஜெயவர்மரின் பத்தினி சாயாதேவி வேகவதி ஆற்றில் இறங்கித் தற்கொலை செய்து கொண்டார்."

இடியாக இறங்கியது அவன் கூறிய செய்தி. ஒரு திங்களுக்குள் பல்லவ அரச குடும்பத்திற்குத்தான் எத்தனை வல்லடிகள். சிம்மவர்மனின் சித்தம் கலங்கியதில் இருந்து, சாயாவின் தற்கொலை வரை எத்தனை சோகங்கள். அத்திமலையானை காக்கத் தவறியதுதான் பல்லவத்திற்குக் கேடாகிப் போனதோ?

சாயாவின் மரணம் இன்னும் சிம்மவர்மனுக்குத் தெரிவிக்கப்படவில்லை. மன்னர் இருக்கும் நிலையில் அவருக்கு அந்தத் தகவலைத் தெரிவிக்காமல் இருப்பதே நலம் என்று கூறிவிட்டாள், மகாராணி குந்தளாதேவி.

மச்சவாசுதேவர் வேதனையுடன் அந்தப்புரத்தை விட்டுப் புறப்பட, யோசனையுடன் நின்ற குந்தளாதேவி, அவரை மீண்டும் அழைத்தாள்.

"மச்சவாசுதேவரே! எனக்கு ஒரு யோசனை.. இப்படி அடுக்கடுக்காக அரச குடும்பத்திற்குத் தொடர் பிரச்னைகள் நிகழ்வதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். புதிய ராஜகுருவின் பெயர் மிருத்யுஞ்சய வல்லபர். ஆனால், அவர் ராஜகுருவாகப் பதவி ஏற்றதும்தான் தொடர்ந்து அரச குடும்பத்தில் மரணங்கள் ஏற்படுகின்றன. ஒரு மரணம் மட்டுமே என்றால் விதி எனக் கூறலாம். இருமுறை மரணங்கள் என்றால் தற்செயல் எனலாம். ஆனால் இப்படி மீண்டும்

மீண்டும் சுழற்றி அடித்தால், எங்கோ கோளாறு உள்ளது. அத்திமலையானின் உக்கிரம்தான் எனது குடும்பத்தை வாட்டுகிறதோ..? ராஜகுருவிடம் கூறினால், மீண்டும் மீண்டும் ஹோமங்களை நடத்தலாம் என்கிறார். ஹோம குண்டத்தில் குடம் குடமாக நெய்யை ஆவாஹனம் செய்தும், யமகுண்டத்திற்கும் நிறைய உயிர்களை ஆவாஹனம் செய்துவிட்டோம். இனியும் இது தொடரக்கூடாது. உடனே யாராவது ஜோதிடரை நான் காண வேண்டும். அரச குடும்பத்தில் இனி மரணம் என்கிற பேச்சுக்கே இடம் இருக்கக் கூடாது." — குந்தளா வெறுப்புடன் கூற, முச்சவாசுதேவர் தலையசைத்தார்.

"பட்டத்து இளவரசர் அவனிசிம்மருக்கு ஜோதிடரை அணுகுவதே பிடிக்கவில்லை, அரசியாரே! அவர் எதையாவது கூறி இன்னும் அச்சப்படுத்துவார் என்றே கூறுகிறார்." — வாசுதேவர் கூறினார்.

"அவனிசிம்மனை நான் சமாளித்துக் கொள்கிறேன்! நீர் இது குறித்து என்ன செய்வது என்று யோசியுங்கள்." — குந்தளாதேவி கூறினாள்.

"அரசியாரே! அத்திமலை ஆலயத் தலைமை பட்டர், இது குறித்து என்னிடம் ஏற்கெனவே அனுமதி கேட்டார். நான்தான் மறுத்துவிட்டேன். பல்லவத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கு, புள்ளலூர் நாகவல்லி பிச்சரிடம் சென்று அரச குடும்பத்தாரின் எதிர்காலம் குறித்தும் அத்திமலையான் இருப்பிடம் குறித்தும் தாம்பூலப் பிரஷ்ணம்* கேட்கலாம் என்கிறார்.

* தாம்பூலப் பிரஷ்ணம்: புள்ளலூர் என்கிற பகுதியில்தான் புலிகேசிக்கும், மகேந்திர பல்லவனுக்கும் போர் நடந்தது. புள்ளலூரில் வருங்காலத்தில் பெரும் போர் நிகழும் என்று நாகவல்லி பிச்சர் என்கிற ஜோதிடர், சிம்மவர்மன் காலத்திலேயே ஆரூடம் கூறியிருந்தார். அவரது இயற்பெயர் கண்ட கோபாலர். நாகவல்லி என்றால் வெற்றிலை. இந்திரலோகத்தில் உண்டான தாவரம் வெற்றிலை. 'தாம்பூலப் பிரஷ்ணம்' எனப்படுவது வெற்றிலை ஆரூடம். சதவாகன

*"நீர் நாகவல்லி பிச்சரை அரண்மனைக்கு அழைத்து வாரும். நான் அவனிசிம்மனை சமாளிக்கிறேன்." குந்தளா கூறினாள்.*

*"நாகவல்லி பிச்சர் வரப்போகிறார். குடும்பப் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து நல்ல தீர்வினை உண்டாக்கித் தருவார்." — தனது தாய் கூறியவுடன், அவனிசிம்மன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.*

---

மற்றும் பல்லவர் காலத்தில் புகழ் பெற்று, தற்போது மறைந்து போன ஒரு கலை. இந்தப் பாரம்பரிய முறை மூலம், ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றிய தகவல்களைப் பெறலாம். காணாமல் போன நபர் அல்லது இழந்த மதிப்புள்ள பொருட்கள், நிச்சயமற்ற விஷயங்கள், தீமை, சூனியம் போன்ற சிக்கல்களை விடுவிக்கும். யார் விசாரிக்கப்படுகிறாரோ அந்த நபருக்கு மரியாதை குறிக்க வேண்டும். சில ஜோதிடர்கள், ஒரு நபரின் உடல்நலத்திற்கும் செல்வத்திற்கும் முக்கியமாக முன்னறிவிப்பதற்காக இந்த முறையைப் பயன்படுத்து கின்றனர்.. ஆரூடம் பார்க்க வருபவர், தாம்பூலம் கொண்டு வந்தால், தாம்பூல ஆரூடம் பார்க்கலாம். ஆரூடம் பார்க்க வருபவர் வெற்றிலை மட்டும் கொண்டு வந்து 'பாக்கு' கொண்டு வராவிட்டால் குலதெய்வத்தின் அருள் கிடைக்காது என்று பொருள். ஆரூடம் கேட்க வந்தவரால் கொண்டு வந்து கொடுக்கப்பட்ட வெற்றிலையைக் கொண்டு பலன் சொல்ல வேண்டும். அப்படிக் கொடுத்த வெற்றிலைகள் எண்ணிக்கையைப் பத்தால் பெருக்கிக் கிடைக்கும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டிச் சேர்த்துக் கிடைத்த மொத்த எண்ணிக்கை களை 7ஆல் வகுத்தால் வரும் மீதி தொகையை முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று எண்ணி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கிரகத்திற்குத் தாம்பூலக் கிரகம் என்று பெயர். அந்தத் தாம்பூலக் கிரகம் நிற்கும் ராசியைத் தாம்பூல ஆரூட லக்னமாக எடுத்துக் கொள்ள வேண்டும். மீதி வராவிட்டால் சனியைத் தாம்பூலக் கிரகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். தாம்பூல ஆரூடத்திற்கு நேரக்கட்டுப்பாடும் கிடையாது. இரவு, பகல் எப்பொழுது வேண்டுமானாலும் பார்க்கலாம். வெற்றிலையில் மை தடவிப் பார்ப்பதற்கும் இந்த ஆரூடத்திற்கும் தொடர்பு இல்லை.

"ஜோதிடர் கலவரமூட்டும் விதமாக எதையாவது கூறுவார். ஏற்கெனவே நிம்மதியின்றித் தவிக்கும் நாம் இன்னும் குழம்புவோம். வேண்டாம், அம்மா!" — என்று பிடிவாதமாக மறுத்தான்.

ஆனால் குந்தளா, கல்லினில் ஊர்ந்து செல்லும் எறும்பாக மாறி, அவனைப் பணியவைத்தாள்.

"அவனிசிம்மா! இறைவன் அனைத்தையும் படைத்து இன்னது இப்படிதான் நடக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டான் என்றால், அப்படியே நடந்துதான் ஆக வேண்டும். ஆனால் இப்படிதான் நடக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துவிட்ட போது எதற்காக ஜோதிடம் என்கிற கலையைப் படைத்தான்? நடக்க வேண்டியதை இரகசியமாக வைத்திருப்பான். ஆனால் இது நடக்க வேண்டாம் என்று அவனே நினைக்கும் சில நிகழ்வுகளை மட்டுமே ஜோதிடர்களின் வாயால் கூற வைத்து, விதியை மதியால் வெல்ல வைப்பான். நாகவல்லி ஜோதிடர் மூலம் அத்திமலையான் எதனையோ தெரிவிக்க விரும்புகிறான். அவரை சந்தித்துக் கேட்டுத்தான் பார்ப்போமே."

குந்தளா இறைஞ்ச, அவனிசிம்மன் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டான். அவன் ஒப்புக்கொண்டதற்குக் காரணம் அவளது இறைஞ்சல்கள் மட்டுமல்ல, சாயாதேவியின் தற்கொலை அவனுள் ஒரு அச்சத்தை உண்டுபண்ணியிருந்தது. குடும்பத்தை ஏதோ பிரச்னை ஆட்டி வைப்பதாக அவனுக்கும் தோன்றியது.

அன்று மாலை —

உப்பரிகை விதானத்தின் கீழே ஒரு மணையின் மீது நாகவல்லி பிச்சர் அமர்ந்திருந்தார். அவரது முன்பாக ஒரு தீபம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அருகே ஒரு எழுத்தாணியும், ஒன்பது சுவடிகளும் சதுரமாக வைக்கப் பட்டிருந்தன.

மையத்தில் வைக்கப்பட்டிருந்தது சூரியச் சுவடி. மற்றவை எல்லாம் முறையே, சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்ரன், சனி, ராகு மற்றும் கேது சுவடிகள் என்று விளக்கினார் பிச்சர்.

உப்பரிகையின் படிகளில் ஏறுவதற்கு முன்பாக ஒரு தங்கத் தாம்பாளத்தில் வெற்றிலைகள் அடுக்கப் பட்டிருந்தன. உப்பரிகையில் ஏறிச்சென்ற அரச குடும்பத்தினர் தங்களுக்குத் தோன்றிய எண்ணிக்கையில் வெற்றிலைகளை எடுத்துக் கொண்டு உப்பரிகை படிகளில் ஏறினர். மன்னர் சிம்மவர்மனின் முன்பாகத் தலைமை அமைச்சர் தட்டை நீட்ட, அவன் நான்கு வெற்றிலைகளை எடுத்துத் தலைமை அமைச்சரிடம் தந்தான். குந்தளா ஏழு வெற்றிலைகளை எடுத்துக் கொண்டு உப்பரிகை படியேறினாள்.

அரச குடும்பத்தினர் ஒவ்வொருவராக வெற்றிலை களை நாகவல்லி பிச்சரிடம் கொடுத்தனர்.

நவக்கிரகக் கோலம் ஒன்றை வரைந்த பிச்சர், அரசனும் அரசியும் கொடுத்திருந்த வெற்றிலைகளை மையத்தில் வைத்து, அவர்களது குடும்பத்தினர் அளித்த வெற்றிலைகளைச் சுற்றி வைத்தார். பிறகு, ஒவ்வொரு கற்றையில் இருந்து குறிப்பிட்ட வெற்றிலைகளை உருவி, அவற்றை ஒன்று சேர்த்துப் பிறகு மீண்டும் ஒரு எண்ணிக்கையில் பிரித்துக் கடைசியில் தன்னிடம் இருந்த வெற்றிலை சிலவற்றை உருவிக் கீழே போட்டு விட்டு, வலக்கையில் மிகுதி வெற்றிலைகளை வைத்துத் தன்னிடம் உள்ள வெற்றிலைகளின் எண்ணிகையைச் சரிபார்த்தார்.

கையில் இருந்த வெற்றிலையின் எண்ணிக்கை ஒன்பது..!

"ஐந்தாம்படையாக இலைகள் நிற்க, மிகுதி நான்கு தலைகள் எங்கே?" — குழப்பத்துடன் கேட்டார், நாகவல்லி பிச்சர்.

“புரியவில்லை பிச்சரே!” — தலைமை அமைச்சர் கூறினார்.

“கையில் ஒன்பது வெற்றிலைகள் உள்ளன! இளவரசி நவரத்ன பல்லவி தேவியார், இளவரசர் விஜயவர்மர், அபயகிரி என்கிற இலங்கை வீரர், ஆலயத்தைக் காக்கும் வீரகொசுவன், இளவரசி சாயாதேவியார் என்று ஐந்து தலைகள் பலியாகி உள்ளன. ஆனால் எனது கையில் ஒன்பது வெற்றிலைகள் உள்ளன. இன்னும் நான்கு தலைகள் பலியாகி இருக்க வேண்டும். அவை யார் என்பது தெரிந்தால் மட்டுமே இந்த விபரீத வியூகத்தின் அடித்தளத்தைக் காண முடியும்!” — பிச்சர் கூறினார்.

அனைவரும் கலவரத்துடன் நாகவல்லி பிச்சரை நோக்கினர்.

“இன்னும் நான்கு மரணங்களா? இனிமேல்தான் நடக்குமா?” — கலவரத்துடன் கதறினாள், குந்தளா. ராஜஸ்ரீ அரசியாரின் தோள்களில் கைவைத்து அவளை ஆறுதலுடன் அணைத்தாள்.

“இல்லை அரசியாரே! நான் அப்படிக் கூறவில்லை. எனது வெற்றிலைக் கணக்கின்படி மொத்தம் ஒன்பது மரணங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். அந்தக் கணக்கினைத்தான் கூறினேன். ஒன்பது மரணங்கள் இதுவரை நடைபெற்றிருக்க வேண்டும் என்று தாம்பூலப் பிரஷ்ணம் கூறுகிறது. வெற்றிலைகளின் எண்ணிக்கையோடு, மரணங்களின் எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டும். அதன் பிறகே அடுத்த பிரஷ்ணத்தை என்னால் கேட்க முடியும்.”

“ஒருவேளை, ஜெயசிம்மனும் மரணம் அடைந்திருந்தால், ஆறு மரணங்கள் என்று கொள்ளலாம் அல்லவா?” — அவனிசிம்மன் கலக்கத்துடன் கேட்டான்.

“விளையாட்டுக்குக் கூட அப்படிக் கூறாதே, அவனிசிம்மா!” — குந்தளா ஓலமிட்டாள்.

"என்னை மன்னித்துவிடுங்கள். இன்னும் நான்கு மரணங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். ஐந்து மரணங்கள் தான் நமக்குத் தெரிய வந்திருக்கிறது. மிகுதி நான்கு மரணங்கள் எங்கே நிகழ்ந்திருக்கின்றன.. அவை, கொலையா, இயற்கை மரணமா அல்லது தற்கொலையா என்கிற விவரங்களைச் சேகரித்தால்தான் என்னால் அடுத்த பிரஷ்ணத்தைக் கேட்க முடியும்."

"நிகழ்ந்த தற்கொலைகளைப் பற்றிக் கேட்ட போது, இளவரசிகள் நவரத்னாதேவி, சாயாதேவி மற்றும் வீரகொசுவன் ஆகியோரின் பெயர்கள் வந்தன. கொலையைப் பற்றிக் கேட்ட போது, இளவரசன் விஜயவர்மர் பெயரும், அபயகிரி என்கிற போர் வீரரின் பெயரும் வந்தன. ஜெயவர்மரின் முடிவு, கொலையா தற்கொலையா என்று கேட்டால், பதில் இல்லை என்று வருகிறது. எனவே அவர் உயிருடன்தான் இருக்க வேண்டும். ஆனால் இன்னும் நான்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று மட்டும் பிரஷ்ணம் கூறுகிறதே தவிர, அவர்கள் யார், எப்படி இறந்தார்கள் என்பதற்குப் பதில் இல்லை. இறந்தவரின் பெயரைச் சொல்லி அவர் எப்படி இறந்தார் என்று கேட்டால் மட்டுமே நமக்குப் பதில் கிடைக்கும். பொதுவான கேள்விகளுக்குப் பதில் கிட்டாது. எனவே இறந்த மற்ற நான்கு பேரைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தால்தான், தொடர்ந்து பிரஷ்ணத்தை நடத்த முடியும்.." — பிச்சர் கூற அனைவரும் குழப்பத்துடன் ஒருவரையொருவர் நோக்கினர்.

பிச்சர், தனது முன்பாக எரிந்து கொண்டிருந்த தீபத்தையே வெறித்துக் கொண்டு அமர்ந்திருக்க, திடீரென்று பலத்த காற்று வீசத் தொடங்கியது. உப்பரிகையின் விதானம் அந்தக் காற்றின் வேகத்தைத் தாங்காமல் படபடக்க, காற்றின் வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. அரச குடும்பத்தினர் கலவரத்துடன் எழுந்து கொள்ள, பிச்சரின் முன்பாக

வைக்கப்பட்டிருந்த சுவடிகளும் வெற்றிலைகளும், காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. பிச்சரின் முன்பாக இருந்த விளக்கு உருண்டு விழ, அதில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீபம் அணைந்தது. தொடர்ந்து பலத்த மழை பெய்யத் துவங்க அரச குடும்பத்தினர், உப்பரிகை படிகளில் இறங்கி வர, பணிப்பெண் ஓடி வந்தாள்.

“மன்னர் பெருமான் அமரலோகத்தை நாடிச் சென்றுவிட்டார்..”

“நாகவல்லி பிச்சர் கூறிய ஒன்பது எண்ணிக்கையில், இப்போது ஆறாவதாகச் சிம்மவர்மன் சேர்ந்திருக்கிறான். இன்னும் மூன்றுதான் மிகுதி!” — தனக்குள் கூறிக் கொண்டார், தலைமை அமைச்சர், மச்சவாசுதேவர்.

## 11. களப்பிர களேபரங்கள்

சிம்மவர்மனின் உடல் தகனம் செய்யப்பட, அடுத்த மன்னனாக அவனிசிம்மன் பதவி ஏற்பதற்கு நாளும் குறிக்கப்பட்டது. அவனிசிம்மனின் மகுடாபிஷேகம் குறித்து மச்சவாசுதேவரும், ராஜகுரு ம்ருத்யுஞ்சயரும், இளவரசரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"தலைமை அமைச்சரே! நான் பதவியேற்றதும் தம்பி ராஜவர்மனை பல்லவத் தளபதியாக நியமிக்கப் போகிறேன். இதுவே எனது முதல் அறிவிப்பாக இருக்க வேண்டும்." — அவனிசிம்மன் கூற, தலைமை அமைச்சர் தலையசைத்தார்.

"நல்ல முடிவு. தகுதியானவரைத்தான் தேர்ந்தெடுத்து உள்ளீர்." — மச்சவாசுதேவர் கூறினார்.

"ஜெயவர்மன் அவனது தகுதியை எப்போதோ அறிந்திருந்தான். நான் இப்போதுதான் அறிந்து கொண்டேன்." — ஜெயவர்மனை நினைத்துச் சற்றே சோகத்தில் ஆழ்ந்தான், அவனிசிம்மன்.

"அவனிசிம்மா! முதல் அறிவிப்பைப் பிறகு கவனிக்கலாம். நமது தந்தை முடிவெடுக்காத சில அரசு ஆணைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். அரண்மனை அதிகாரி குவலயங்காத்தார் ஒரு பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார். எல்லாக் காரியங்களைவிட மிக அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். கஜபிருஷ்டம் கிராமத்தில் நமது அரண்மனை சவக்கிடங்கில் உள்ள பிணங்கள் சில அழுகிக் கொண்டிருக்கின்றன. அவை

குறித்த விசாரணைகளும் நீண்டு கொண்டே போகின்றன. அவற்றைத் தகனம் செய்வதற்கு உடனடியாக நீ உத்தரவிட வேண்டும்." — ராஜவர்மன் கூறினான்.

ராஜகுரு மிருத்யுஞ்சயர் அசூயையுடன் ராஜவர்மனை நோக்கினார்.

"இளவரசர் இன்னும் மன்னராகப் பதவி ஏற்கவில்லை. முதன்முதலாக நம்முடன் ஆலோசனை நடத்துகிறார். இப்போது அந்தப் பிணங்களின் தகனத்திற்கு என்ன அவசரம்? பிறகு பார்த்துக் கொள்ளலாமே!"

"இல்லை! தேகங்களைத் தகனம் செய்வது ஒரு புண்ணிய காரியமே. அரண்மனை அதிகாரியை அந்தத் தகவல்களைக் கொண்டு வரச்சொல்லுங்கள். இப்போதே செய்து முடிப்போம்." — அவனிசிம்மன் கூற, ராஜவர்மன் அரண்மனை அதிகாரி குவலயரை வரவழைத்தான்..

கிடங்கில் உள்ள பிணங்களின் பெயர்ப் பட்டியலை அவனிசிம்மனின் முன்பாக நீட்டினார், அரண்மனை அதிகாரி.

அவர் நீட்டிய சுவடியை வாங்கிப் பார்த்தான், அவனிசிம்மன்.

"முத்துமாணிக்க வேலர்! அனாதையாக, முக்கூடல் சங்கமத்தில் கிடந்த பிணம். வயோதிகம்தான் மரணத்திற்குக் காரணம். குடும்பத்தினர், மற்றும் உறவினர்கள் இல்லை. எனவே, உடனே தகனத்திற்கு ஏற்பாடு செய்துவிடலாம்.

அடுத்ததாகப் பட்டியலில் உள்ள சடலங்கள் விருகோதரன், கம்பீரன், ரவிவர்மன் மற்றும் சந்திராத்ரி! நான்கு பேருமே அரண்மனை ஊழியர்கள். பணியில் இருந்த போது மாண்டு போயினர்.

"கடும் வயிற்று வலியினைத் தாளாமல், சந்திராத்ரி என்பவன் தரும நகரத்து அரண்மனை உப்பரிகையில்

இருந்து விழுந்து மரணம் அடைந்திருந்தான். விருகோதரன் என்பவன் கடிகையில் நஞ்சை குடித்துத் தற்கொலை செய்து கிடந்தான். தனக்குக் குடும்பம் இல்லை என்றும் தனிமையினால்தான் உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் ஓலை எழுதியிருந்தான்.

ரவிவர்மன் என்பவனும், கம்பீரன் என்பவனும் ஒரே பணிப்பெண்ணைக் காதலித்திருந்தனர். அவளை அடைவது தொடர்பாக இருவருக்கும் சண்டை எழ, அவர்களிடையே வாட்போர் நிகழ்ந்து, ஒருவரை யொருவர் கொன்றனராம். அவர்கள் இருவரும் காதலித்த திலோத்தமா என்கிற பணிப்பெண் இதனைத் தெரிவித்தாள்." அரண்மனை அதிகாரி கூறினான்.

அவனிசிம்மன் அவனை விசித்திரமாகப் பார்த்தான். "திலோத்தமா கூடவா அவர்கள் இருவரின் தேகங்களையும் தகனம் செய்ய முற்படவில்லை. ஒருவேளை, அவர்களின் தேகத்தை அல்லாமல், மனதை மட்டும்தான் விரும்பினாளோ?" — அவனிசிம்மன் கேட்டான்.

ராஜவர்மன் அரண்மனை அதிகாரியை அதிசயத் துடன் நோக்கினான்.

"நான்கு பேருமே அரண்மனைப் பணியாளர்களா? இதென்ன விந்தை! நால்வரும் ஒரே நேரத்தில் மரணம் அடைந்திருக்கின்றனரா?" — ராஜவர்மன் கேட்க, குவலயர் விளக்கமளித்தார்.

"இல்லை இளவரசே! சந்திராத்ரி, திங்கட்கிழமை யன்றும், விருகோதரன் புதன் கிழமை அன்றும், தற்கொலை செய்து கொண்டனர். ரவிவர்மனும், கம்பீரனும் சனியன்று ஒருவரையொருவர் வெட்டிக் கொன்றனர்." அதிகாரி கூறியதும் ராஜவர்மன் யோசனையில் ஆழ்ந்தான்.

"நாலு அரண்மனைப் பணியாளர்கள் திடீரென்று இறந்து போனதாகச் சொல்லப்படுகிறது. காரணங்களும்,

மரணம் நிகழ்ந்த விதமும் வேறுதான் என்றாலும், தனது மனதில் ஏதோ உறுத்தல் தோன்றுவதை உணர்ந்தான், ராஜவர்மன்.

"அவனிசிம்மா! சற்று பொறு. இந்த நான்கு சடலங்களை இப்போதைக்குத் தகனம் செய்ய வேண்டாம்.." என்றவன் அரண்மனை அதிகாரியின் காதில் ஏதோ கிசுகிசுத்தான். அதிகாரி தலையசைத்துவிட்டுச் செல்ல, அவனை அவனிசிம்மனும், ராஜகுருவும், தலைமை அமைச்சரும் ஆர்வத்துடன் நோக்கினர்.

"என்ன விஷயம், ராஜவர்மா? நால்வரின் குடும்பங்களும் சடலங்களுக்கு உரிமை கோராத நிலையில், அரசாங்கம்தானே அவர்களுக்கு அந்திமக் கிரியைகளைச் செய்ய வேண்டும்?" — அவனிசிம்மன் கேட்டான்.

"அவனிசிம்மா! நினைவிருக்கிறதா? 'ஐந்தாம்படையாக இலைகள் நிற்க, மிகுதி நான்கு தலைகள் எங்கே?' என்று கேட்டாரே, நாகவல்லி பிச்சர்! தாம்பூலப் பிரஷ்ணத்தின்படி ஒன்பது மரணங்கள் நிகழ வேண்டி இருக்கும் என்றாரே. அந்த நான்கு பேரும் இவர்களாக இருக்கக் கூடுமோ?" — ராஜவர்மன் கேட்டான்.

மச்சவாசுதேவர் திகைத்தார். "அதற்கான வாய்ப்பு இல்லை, இளவரசே! மன்னர் சிம்மவர்மரை கணக்கில் கொண்டால் எண்ணிக்கை ஆறு வருகின்றது. இளவரசர் ஜெயவர்மனைப் பற்றியும் தகவல் இல்லை. அவரையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் எண்ணிக்கை ஏழு. நீங்கள் சொல்வதைப் போன்று இந்த நால்வரையும் கணக்கில் கொண்டால், எண்ணிக்கை பதினொன்றை எட்டிவிடுமே. மேலும் இந்த நான்கு அரண்மனைப் பணியாளர்களும் வெவ்வேறு நிலையில் மரணத்தைத் தழுவியுள்ளனர். எனவே, இவர்களை அந்தப் பட்டியலில் சேர்க்கக் கூடாது." — வாசுதேவர் கூற, அவனிசிம்மன் அதனை ஆமோதித்தான்.

"ஆம் ராஜவர்மா! பிச்சர் கூறியது ஒன்பது மரணங்கள். இவர்களைக் கணக்கில் கொண்டால் எண்ணிக்கை பதினொன்று வருகிறது." — வாசுதேவரின் கூற்றை ஆமோதித்தான், அவனிசிம்மன்.

ராஜவர்மன் பதில் கூறவில்லை. தான் அனுப்பிய அரண்மனை அதிகாரிக்காகக் காத்திருந்தான். அதிகாரியும் கையில் சில சுவடிகளை ஏந்தி வந்தார்.

அதைப் பெற்றுக் கொண்ட ராஜவர்மன், குறிப்பிட்ட சுவடியைத் தேடி எடுத்து அதனைக் கவனிக்க, அவனது முகத்தில் நிலவியிருந்த குழப்பம் நீங்கியது.

"அனைவரும் இதனைக் கவனியுங்கள். இந்தப் பட்டயம் தங்கை நவரத்னாதேவியின் திருமணத்தின் போது நாம் அவளுக்கு அளித்த சீர் மற்றும் செல்வங் களின் விவரங்கள். நான் அதனை வாசிக்கிறேன். சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள்.." ராஜவர்மன் பட்டயத்தை வாசிக்கத் துவங்கினான்.

"காஞ்சி நகரின் முக்கியப் பகுதியான தருமநகரமும், சுற்றியுள்ள தும்புருவனத்தின் மேற்கு பகுதியும் இளவரசி நவரத்னாதேவிக்கும், அவளது கணவர் பௌத்தபுரத்து தலைவர் ரணதிலகனுக்கும் வழங்கப்படுகிறது.

நவரத்னாதேவியும் அவளது கணவர் பௌத்தபுரத்து தலைவன் ரணதிலகனும் வசிப்பதற்குத் தருமநகரத்து ஆதிசரஸ்வதி ஆலயத்தின் அருகே உள்ள பிரவாள அரண்மனை வழங்கப்படுகிறது.

பத்து எண்ணிக்கை ஸ்வர்ண மகுடங்கள், பொற் பாகைகள், கல்லிழைத்த மகுடங்கள், பாகையில் சொருகு வதற்கு வைரக்கிளிகள், நவரத்ன சவுக்கிளிகள் மற்றும் கண்டாபரணங்கள், ஒரு துலாதட்டு நிறையக் கல்லிழைத்த ஹாரங்கள், அட்டிகைகள், பதக்கங்கள், கணையாழிகள், ரத்னா கவசங்கள், வீரவண்டையங்கள், ஐநூறு தடா நிறையத் தங்க நாணயங்கள், வெள்ளிக்

கவரிகள், குடைகள், தீவட்டிகள், ஐம்பது தட்டு நிறையத் தங்கக் கட்டிகள்.

திலோத்தமா, சாரதா, சிம்மிகா, ஜ்யோத்சனா, விசாலாட்சி என்கிற பணிப்பெண்கள்.

திருமணத் தம்பதிகளுக்கு ஊழியம் செய்யச் சந்திராத்ரி, விருகோதரன், ரவிவர்மன், கம்பீரன் என்கிற நான்கு சீதன வெள்ளாட்டிகள்..”

ராஜவர்மன் பட்டயத்தை வாசிப்பதை நிறுத்திவிட்டு, அவனிசிம்மனை அர்த்தத்துடன் நோக்கினான்.

“பார்த்தாயா அவனிசிம்மா! இறந்து போன நால்வரும், அரண்மனை ஊழியர்கள் மட்டும் இல்லை. நாம் நவரத்னாவுக்குச் சீதன வெள்ளாட்டிகளாக அனுப்பிய வர்கள். தற்கொலை செய்வதற்கு முன்பாகத் தனது சீதன வெள்ளாட்டிகளுடன் புரவிகளில் எங்கோ சென்றிருக் கிறாள். அவள் தற்கொலை செய்து கொண்டது போலவே, இந்த நான்கு பேருமே மர்மமான முறையில் இறந்திருக்கின்றனர். நாகவல்லி பிச்சர் குறிப்பிட்டிருந்த அந்த ஒன்பது மரணங்களின் எண்ணிக்கை இப்போது சரியாக உள்ளது. நமது தந்தையை இந்தப் பட்டியலில் நாம் சேர்த்திருக்கக் கூடாது.”

ராஜவர்மன் கூறியதும், மற்ற மூவரும் பிரமித்துப் போய் அமர்ந்திருந்தனர்.

“ராஜவர்மா! மாவிலக்கை கடற்கரையின் புதை குழியைப் போன்று மர்மங்கள் நம்மை இழுத்துக் கொண்டே போகிறதே..?” அவனிசிம்மன் குழப்பத்துடன் அவனைப் பார்த்தான்.

“உண்மைதான். ஆனால் நிகழ்வுகள் பல, சதிகளும் பல. நோக்கம் மட்டுமே ஒன்று என்று தெரிகிறது. எப்படியாவது, சதித்திட்டக் கட்டடத்தின் அஸ்தி வாரத்தை நாம் கண்டுபிடித்து அதனைத் தகர்ப்போம்.” — ராஜவர்மனின் குரலில் கோபம் தொனித்தது.

“பல்லவத்தின் அஸ்திவாரமே அஸ்திகிரி பேரருளாளன். அவனையே கடத்தி நமது அஸ்தி வாரத்தை அசைத்துவிட்டார்களே, சதிகாரர்கள்!” — ராஜகுரு புலம்பினார்.

“இப்போது புலம்பி என்ன பயன்! ஜெயவர்மன் நம்மை எச்சரித்துக் கொண்டுதான் இருந்தான். நான்தான் அவன் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியினால் அவன் கூறியதை அலட்சியம் செய்தேன். இப்போது தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது..” அவனிசிம்மன் வேதனை யுடன் கூறினான்.

“தலைமை அமைச்சரே! நாளை விடியலில் முதல் வேலையாக நாகவல்லி பிச்சரை அரண்மனைக்கு வரவழையுங்கள். தாம்பூலப் பிரஷ்ணத்தைத் தொடரு வோம்.” — ராஜவர்மன் கூற, மச்சவாசுதேவர் தலையசைத்தார்.

அன்றிரவு —

அவனிசிம்மன், தலைமை அமைச்சர் மற்றும் ராஜ குருவுடன் ஆலோசனைகளை முடித்துவிட்டு அரண் மனையின் தனது ஜாகைக்குத் திரும்பினான், ராஜவர்மன். ராஜஸ்ரீ அவனுக்காக உறங்காமல் காத்திருந்தாள்.

“எனது வருகைக்காக ஏன் காத்திருக்கிறாய்? நீ உறங்க வேண்டியதுதானே..?”

“இளவரசிகளுக்கு ஏது உறக்கம்? இளவரசர்கள் போர்க் களத்திற்குப் போகிறோம் என்கிற பெயரில் போருக்கு முன்பும், பிறகும், போரிட்ட களைப்பு நீங்க உறங்கு வார்கள். இளவரசர்கள் இருக்கும் போது அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக இளவரசிகள் விழித்திருக்கத் தானே வேண்டும்.” — கேலியுடன் ராஜஸ்ரீ ராஜவர்மனின் உடைவாளையும், கேடயத்தையும் வாங்கி வைத்தாள்.

"ஏன்? இளவரசர்கள் போர்க் களத்திற்குச் சென்றிருக்கும் போது நீங்கள் நிம்மதியாக உறங்கலாமே?" — தனது பொற்பாகையைக் கழற்றியபடி அவளை நோக்கிச் சிரித்தான்.

"அங்ஙனம் உறங்க முடியுமா என்ன? எந்த இளவரசன் சிறைப்பிடிப்பானோ என்கிற அச்சத்தில் உறக்கம் வருமா? இல்லை போருக்குச் சென்ற நாதன் நல்லவிதமாக மீண்டும் வரவேண்டுமே என்கிற கவலை மனதை அழுத்தும் போது உறங்கத் தோன்றுமா? சபிக்கப்பட்ட ஜென்மங்கள் இளவரசிகள்." — ராஜஸ்ரீ கூற, ராஜவர்மனது முகம் திடீரென்று யோசனையில் ஆழ்ந்தது.

"இன்று ஏன் இவ்வளவு தாமதம்? ஜெயவர்மர் இருந்த போதுதான் எப்போதும் அவருடனேயே காலத்தைக் கழிப்பீர்கள். இப்போது என்ன வந்தது?" — ராஜஸ்ரீ அவனது பொற்பாகையை மேஜையின் மீது வைத்துவிட்டு, குவளையில் பாலைக் கொண்டு வந்து ராஜவர்மனிடம் நீட்டினாள்.

"ராஜஸ்ரீ! என்னை மிரட்டாதே. வருங்காலத் தளபதியிடம் பேசுகின்றோம் என்பதை நினைவில் கொள்! அவனிசிம்மன் மன்னனாகப் பதவி ஏற்றதும், முதல் வேலையாக என்னை நாட்டின் தளபதியாக நியமிக்க உள்ளான்." — ராஜவர்மன் சற்றே மிரட்டலான குரலில் கூற, ராஜஸ்ரீ சிரித்தாள்.

"'வைத்தால் சிகை, வழித்தால் மொட்டை!' என்பது போல் இருக்கிறது பல்லவத்தின் நிலைமை. ஒரு நாள் உங்களுக்குச் சிறைவாசம். மறுநாள் நாட்டின் தளபதி பதவி. ஏன், முன்யோசனை இன்றி செயல்படுகிறது பல்லவம்..? வந்தபின் போராடுவது என்றில்லாமல், வரும்முன் காப்பது என்கிற அடிப்படையில் செயலாற்றி இருந்தால், இன்று பல மரணங்களைத் தவிர்த்திருக்கலாம் அல்லவா?" — ராஜஸ்ரீ கூற, மஞ்சத்தில் சாய்ந்திருந்த ராஜவர்மன் அவளை வியப்புடன் பார்த்தான்.

ராஜஸ்ரீ அமைதியானவள் மட்டும் அல்ல, சிறந்த மதியூகியும் கூட. அவளது பேரழகையும், தீர்க்கமான சிந்தனையையும் கண்டுதான் பல்லவ அரசியாகத் திகழ் வதற்குரிய அனைத்து இலட்சணங்களையும் கொண்டவள் என்று அவனிசிம்மனுக்காக அவளைச் சிறைப்பிடித்து வந்திருந்தான், ஜெயவர்மன். அவன் மீதுள்ள வெறுப்பில், ராஜஸ்ரீயை உதாசீனம் செய்திருந் தான். அவனது தவறு இவனது பாக்கியமாகிப் போனது. உத்தமமான மனைவியை தான் அடைந்திருக்கிறோம் என்கிற பெருமிதத்துடன் அவளது கைகளைப் பற்ற, அவள் மஞ்சத்தில் அமர்ந்தபடி அவனது பாதங்களை வருடிவிட்டாள்.

"ஜெயவர்மரைப் பற்றித் தகவல் ஏதேனும் தெரிந்ததா? பாவம் சாயா! மிகவும் அவசரப்பட்டுவிட்டாள். நாளை ஜெயவர்மர் மீண்டும் வந்து சாயா எங்கே என்று கேட்டால் நாம் என்ன பதிலைக் கூறுவது?" — சோகத்துடன் அவனைப் பார்த்தாள்.

"சாயா எப்போதும் உணர்ச்சி வசப்படுபவள். உன்னைப் போன்று வேதனைகளைப் பொறுமையுடன் சகிப்பவள் இல்லை. சொல்ல மறந்துவிட்டேனே, ராஜஸ்ரீ! நாகவல்லி பிச்சர் கூறினாரே.. மொத்தம் ஒன்பது மரணங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும். நவரத்னாதேவி, சாயாதேவி, விஜயவர்மன், வீரகொசுவன் மற்றும் அபயகிரி ஆகியோரைத் தவிர இன்னும் நான்கு மரணங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றாரே, அந்த நான்கு பேரை அடையாளம் கண்டுவிட்டோம். நவரத்னாவின் நான்கு சீதன வெள்ளாட்டிகள்தான் மர்மமான முறையில் இறந்திருக்கிறார்கள். நாளைக் காலை அவர்களின் பெயர்களைப் பிச்சரிடம் கூறித் தாம்பூலப் பிரஷ்ணம் கேட்டால், மர்மங்கள் விலகும் என்று தோன்றுகிறது." — ராஜவர்மன் கூறினான்.

"சீதன வெள்ளாட்டிகளா? கொலைகளா, தற்கொலைகளா?" — ராஜஸ்ரீ திகைப்புடன் அவனை நோக்கினாள்.

"தெரியவில்லை. இரண்டு கொலைகள், இரண்டு தற்கொலைகள் என்று தோன்றுகிறது." — ரவிவர்மன் கூற, ராஜஸ்ரீ பரபரப்படைந்தாள்.

"ஆக, நாகவல்லி பிச்சர் கூறியது சரிதான். மொத்தம் ஒன்பது மரணங்கள். அது கிடக்கட்டும், அந்தச் சீதன வெள்ளாட்டிகளின் பெயர்களை எங்ஙனம் அறிந்தீர்கள்?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"நவரத்னாவின் சீர் சீதனங்களின் பட்டியலில் அவர்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்திராத்ரி, விருகோதரன், ரவிவர்மன், கம்பீரன் என்கிற நான்கு பெயர்களை பட்டயம் குறிப்பிட்டுள்ளது." ராஜவர்மன் கூறியதும், ராஜஸ்ரீயின் சிந்தனை அங்கிருந்து நழுவ, மௌனமாக யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

"ராஜஸ்ரீ..!" ராஜவர்மன் அழைக்க அவளிடம் இருந்து பதிலில்லை.

"ராஜஸ்ரீ!" — மீண்டும் சற்றே பலமான குரலில் அழைக்க, அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

"அழைத்தீர்களா?" — ராஜஸ்ரீ கேட்க, அவளது சிந்தனை வேறு எங்கோ நிலவுவதைப் புரிந்து கொண்டான், ராஜவர்மன்.

"என்ன யோசனை, ராஜஸ்ரீ?"

"தாங்கள் சற்று முன்பாக உச்சரித்த பெயர்கள் எனது சிந்தனைக் குதிரையைச் சாட்டையினால் அடித்து ஓடச்செய்துவிட்டன. அவ்வளவே! மீண்டும் ஒருமுறை அந்தச் சீதன வெள்ளாட்டிகளின் பெயர்களைக் கூறுங்கள். எனது சிந்தையில் ஏதோ மின்னல் வெட்டுகின்றது. ஒருவேளை தாங்கள், மீண்டும் அந்தப் பெயர்களை உச்சரித்தால்; எனது நினைவில் அதற்கான காரணம் தெரியலாம்." — ராஜஸ்ரீ கூற, அவளை விசித்திரமாகப் பார்த்தபடி, ராஜவர்மன், அவர்களது பெயர்களைக் கூறினான்.

"சந்திராத்ரி, விருகோதரன், ரவிவர்மன், கம்பீரன்!" — ராஜவர்மன் கூறியதும்தான் தாமதம், ராஜஸ்ரீயின் முகத்தில் ஒளி பரவியது.

"கம்பீரன்.. கண்டுபிடித்துவிட்டேன். கம்பீரத்துடன் பேசியதால் கம்பீரமாகத் தோன்றுகிறேனோ என்னவோ!" — ராஜஸ்ரீ கூறியதும், விழித்தான் ராஜவர்மன்.

"எனக்குப் புரியவில்லை, ராஜஸ்ரீ!"

"முதலிரவன்று பள்ளியறையில் ஜெயவர்மர் சாயாதேவியிடம் கூறிய சொற்கள். உங்களது கம்பீரத்தைக் கண்டு எனது கண்ணே பட்டுவிடும் போன்று உணர்கிறேன் என்று சாயாதேவி கூறிய போது, கம்பீரத் துடன் பேசியதால் கம்பீரமாகத் தோன்றுகிறேனோ என்னவோ என்று கூறியிருக்கிறார் ஜெயவர்மர். சாயாவுக்கு அப்போது புரியவில்லை. இப்போது எனக்குப் புரிகிறது. நவரத்னாதேவி தனது சீதன வெள்ளாட்டிகளுடன் தருமநகர அரண்மனையை விட்டுப் புறப்பட்டிருக்கிறார். வழியில் ஜெயவர்மரை அழைத்துவரச் சொல்லிக் கம்பீரன் என்கிற வெள்ளாட்டியை அனுப்பியிருக்கிறார். கம்பீரன்தான் அவர்களது பள்ளியறை கதவைத் தட்டியிருக்கிறான். ஜெயவர்மரை அவசரமாக அழைத்திருக்கிறான். எனவேதான், 'கம்பீரத்துடன் பேசியதால் கம்பீரமாகத் தோன்றுகிறேனோ என்னவோ' என்று ஜெயவர்மர் வந்தவனின் பெயரைக் கூறியுள்ளார். ஆனால் சாயா அதனைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டாள். ஆனால் எதற்காகக் கம்பீரனும், இதர வெள்ளாட்டிகளும் தங்கள் முடிவைத் தேடிக் கொண்டனர்?"

ராஜவர்மன் ராஜஸ்ரீயை அசந்துபோய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். என் மனைவி இவ்வளவு கூரிய புத்தியைக் கொண்டவளா? — என்கிற பொருள் அவனது பார்வையில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"உண்மைதான் ராஜஸ்ரீ! கம்பீரன்தான் ஜெயவர்மனை அழைத்திருக்கக் கூடும். அப்படி என்ன ஆபத்தில் சிக்கிக் கொண்டிருந்தாள் நவரத்னா? புரியவில்லையே? ஜெயவர்மனே நேரில் வந்து அனைத்தையும் விவரித்தால் தான் குழப்பங்கள் நீங்கும். எனது உடைவாளைக் கொடு. உடனே நான் கிளம்ப வேண்டும்" — ராஜவர்மன் கூற, அவனது சிரசைப் பற்றித் திண்டில் அழுத்தினாள், ராஜஸ்ரீ.

"அவசியமில்லை. நிம்மதியாக உறங்குங்கள். நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்றவள் ஒளிர்ந்து கொண்டிருந்த தீபங்களைப் புஷ்பத்தால் அணைத்து விட்டு அவனருகில் சரிந்தாள்.

ஆனால் இருவருமே, மறுநாள் நாகவல்லி பிச்சர் விடுக்கப் போகின்ற மர்மங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு உறங்காமல் கிடந்தனர்.

★ ★ ★

**நா**கவல்லி பிச்சர் தாம்பூலப் பிரஷ்ணம் பார்த்தபடி அரச குடும்பத்தின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

"சீதன வெள்ளாட்டிகள் நான்கு பேருமே தற்கொலைதான் செய்து கொண்டிருக்கின்றனர். ஒன்பது மரணங்கள், ஐந்து தற்கொலைகள், நான்கு கொலைகள். இளவரசிகள் இருவர், வீரகொசுவன், சந்திராத்ரி, விருகோதரன் என்கிற இரு வெள்ளாட்டிகள் ஆகிய ஐவரும் தற்கொலை செய்துள்ளனர். விஜயவர்மனை அபயகிரி வெட்டிச் சாய்த்துள்ளான். அபயகிரியை விஜயவர்மன் கொன்றிருக்கிறான். அதே போன்று, ரவிவர்மனும், கம்பீரனும் ஒருவரையொருவர் வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள். எல்லா மரணங்களும் ஒன்றையொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன என்று தாம்பூலப் பிரஷ்ணம் கூறுகிறது. எல்லாவற்றிற்கும் காரணம் அத்திமலைத்தேவனின் பிரதிமை.. அதனைக் களவாடியது ஒரு பெண்!"

"இப்போது அத்திமலையானின் பிரதிமை எங்கே இருக்கிறது?" — அவனிசிம்மன் கேட்டான்.

"பிரதிமை இருக்கும் இடம் ரகசியமாக வைக்கப் பட்டுள்ளது. அந்த ரகசியத்தை வைத்திருப்பவளும் ஒரு பெண்!" — பிச்சர் கூறினார்.

"சிலை கிடைக்குமா?". — ஈனஸ்வரத்தில் கேட்டாள், குந்தளா.

மீண்டும் வெற்றிலைக் கட்டுகளைப் பிரித்து, சேர்த்து இலைகளைக் குலுக்கி, மீண்டும் பிரித்து ஒரு கற்றையை உருவி வெற்றிலைகளின் எண்ணிக்கையைப் பார்த்தார்.

"மாயமாகிப் போனவனே குழப்பத்தை விடுவிப்பான்!" — பிச்சர் கூற, அனைவரும் அவரைக் குழப்பத்துடன் பார்த்தனர்.

"அப்படியென்றால் ஜெயவர்மர், மீண்டும் வந்து விடுவாரா?" — ராஜஸ்ரீ கேட்க, அவளைப் பரிதாபமாகப் பார்த்தார்.

"நான் அப்படிக் கூறவில்லையே இளவரசி! மாயமாகிப் போனவரே மர்மத்தை விடுவிப்பார் என்று மட்டும்தான் என்னால் கூற முடியும்." — நாகவல்லி பிச்சர் கூற, அனைவரின் முகங்களிலும் குழப்பம் அதிகரித்தது.

"இந்த விபரீதங்களுக்கு யார் காரணம்?"

"பல்லவ களேபரங்களுக்கு, களப்பிரர்களே காரணம். களேபரம் செய்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தவர் களே காரணம்!" — பிச்சர் கூற, குற்ற உணர்வுடன் தலையைக் குனிந்து கொண்டான் அவனிசிம்மன்.

"மகுடாபிஷேகம் முடிந்ததும் களப்பிரர்களுக்கு தகுந்த பாடத்தைப் புகட்டுகிறேன். பல்லவத்தைவிட்டே அவர்களை விரட்டுகிறேன்." அவனிசிம்மன் சூளுரைத் தான்.

*"ஸ்ரீதள மணி எங்கே உள்ளது? அதனைக் களவாடியது யார்?" — இளவரசன் பீமவர்மன் கேட்டான்.*

*"கேள்வியின் நாயகனுக்கு மட்டுமே இதற்கான பதில் தரும் அருகதை உள்ளது!" — வெற்றிலையின் எண்ணிக்கையைப் படித்தபடி நாகவல்லி பிச்சர் கூறினார்.*

*"கேள்வியின் நாயகன் என்றால்.. யார் அந்த நாயகன்..?" — விஷ்ணுவர்மனின் மனைவி காஞ்சனை கேட்டாள்.*

*"செவி வழியாகக் கேட்டு ஒருவன் பெறும் ஞானம்தான் வேதம். அந்த வேதநாயகனான அத்திமலையான்தான் இதற்குப் பதில் கூற முடியும் என்கிறார், நாகவல்லி பிச்சர்." — ராஜகுரு மிருத்யுஞ்சயர் விளக்க, ராஜஸ்ரீ அவரை அதிசயத்துடன் நோக்கினாள். கருப்பு ஆட்டுக்குக் கவலை வந்துவிட்டதோ..?*

*"எனது அண்ணன் மகன் அவனிசிம்மன் மன்னனாக நீண்ட காலம் ஆட்சி புரிவானா?" — சிற்றப்பன் விஷ்ணுவர்மர் கேட்க, மீண்டும் வெற்றிலைகளைக் குலுக்கினார், பிச்சர்.*

*"புதிய பெயருடனும், கீர்த்தியுடனும் நாட்டை ஆள்வான். வனவரசன் பெயரையும் காக்கும் கடவுளான மாலவனின் பெயரையும் தாங்கிப் பல்லவத்தைப் பலமான தேசமாக மாற்றுவான். ஆனால்.. இளவரசர் மட்டும் அல்ல, நான்கு சகோதரர்களும் மன்னர்களாகத் திகழ்வார்கள் என்று தாம்பூலப் பிரஷ்ணம் கூறுகிறது." — நாகவல்லி பிச்சர் கூறியதும் அங்கே நீண்ட மௌனம் நிலவியது.*

*அவனிசிம்மனின் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த சந்தேகப் பேய் மீண்டும் விழித்துக் கொண்டது. ஜெயவர்மன் அத்திமலைத்தேவனை ரகசியமாகப் பதுக்கி அஸ்வமேத யாகத்தைச் செய்து, மன்னன் ஆக மாறப் பார்க்கிறானா?*

"மற்றவர்களைப் பற்றித் தெரியாது. தாம்பூலப் பிரஷ்ணத்தைக் கொண்டு நான் காம்போஜ மன்னனாகத் திகழப் போவது உறுதி என்பது தெரிகிறது." — தானவர்மன் சிரித்தான்.

நாகவல்லி பிச்சர் அவனிசிம்மனையும், ராஜ வர்மனையும் கூர்ந்து கவனித்தார். "தாங்கள் மன்ன னாகத் திகழ்வீர். ஆனால் உங்கள் குடும்பத்தில் நடக்கும் விபரீதங்களுக்கு உங்கள் குருதியே காரணம் என்று பிரஷ்ணம் கூறுகிறது. எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நேரம் என்று பிரஷ்ணம் கூறுகிறது." — நாகவல்லி பிச்சர் கூற, அவனிசிம்மனின் பிடரி மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன. ராஜவர்மனை செய்வ தறியாது நோக்கினான்.

'குடும்பத்தில் உள்ள கறுப்பாடு!' அன்றே ராஜவர்மன் கூறியிருந்தானே!

தாம்பூலப் பிரஷ்ணம் கேட்ட பிறகு காரியங்கள் மளமளவென்று நடந்தேறின. அவனிசிம்மன் பல்லவ மன்னனாகப் பதவி ஏற்றான். கையோடு அவன் ராஜவர்மனை தளபதியாக அறிவித்துவிட்டான்.

திலோத்தமை என்கிற பெண்ணை அரண்மனைக்கு வரவழைத்தான் அவனிசிம்மன். தற்போது சிம்மவிஷ்ணு சினம் பொங்கும் கண்களோடு அவளை வெறித்தான். "உண்மையைச் சொல் திலோத்தமா! உனது தலை தப்ப வேண்டுமென்றால் கம்பீரன், மற்றும் ரவிவர்மனின் மரணங்களுக்கு உண்மையான காரணம் என்ன என்பதை விளக்கு. உன்னை அடைவதற்காக அவர்கள் இருவரும் வெட்டி மடிந்தனர் என்னும் காரணத்தை என்னால் ஏற்க முடியாது?" — சிம்மவிஷ்ணு அச்சுறுத்தியதும், அரண்டு போனாள், திலோத்தமா.

"என்னை மன்னித்துவிடுங்கள், அரசே! உண்மையைக் கூறிவிடுகிறேன். கம்பீரன் மட்டுமே எனது காதலர். நானும் அவரும் உயிருக்குயிராகக் காதலித்தோம்.

இந்நிலையில் இளவரசியாரின் சீதன வெள்ளாட்டியாக அவரும், பணிப்பெண்ணாக நானும் தருமநகரம் சென்ற பிறகு எங்களது காதல் பலப்பட்டது. இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளக் கூடத் தீர்மானித்தோம். இளவரசியார் தற்கொலை செய்து கொண்ட அன்று முன்னிரவில் அவரும், சீதன வெள்ளாட்டிகளும் எங்கோ கிளம்பிச் செல்வதைக் கவனித்தேன். காரணம், அப்போது நானும் கம்பீரனைச் சந்திப்பதற்காக நந்தவனத்தில் காத்திருந்தேன். என்னைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு, இளவரசியாருடன் எங்கோ புறப்பட்டுச் செல்கிறாரே என்று வியந்தேன். விடியற் காலைதான் மீண்டும் வந்தார். அதன் பிறகு கம்பீரன் முற்றிலும் மாறிப் போனார். என்னுடன் பேசுவதைத் தவிர்த்தார். நான் பேச முயன்றாலும் என்னைப் புறக்கணித்தார். எப்போதும் அந்த நான்கு சீதன வெள்ளாட்டிகளும் ஆழ்ந்த யோசனையில் இருந்தனர். திடீரென்று ஒரு நாள், என்னை அழைத்தார், கம்பீரன்.

'திலோத்தமா, நாங்கள் நான்கு பேரும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்துவிட்டோம். எங்களிடம் ஒரு முக்கியமான ரகசியம் உள்ளது. அதனை வசியப் படுத்தியோ, சித்திரவதை செய்தோ, எதிரிகள் பறித்துக் கொள்வார்கள் என்கிற பயம் உள்ளது. இளவரசியாரே தற்கொலை செய்து கொண்ட பிறகு, அவரது சீதன வெள்ளாட்டிகளான நாங்களும் தற்கொலை செய்து கொள்வதுதான் முறை' என்றார்.." — தொடர்ந்து பேச முடியாமல் கண்ணீர்விட்டு அழுதாள்.

அவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும்வரை காத்திருந்தனர், சிம்மவிஷ்ணுவும், ராஜவர்மனும். திலோத்தமா முந்தானையால் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தாள்..

"நான் மறுத்தேன். திருமணம் செய்து கொண்டு எங்கேயாவது தலைமறைவாகச் சென்றுவிடலாம் என்று இறைஞ்சினேன். கம்பீரன் கேட்கவில்லை. தன்னை நான்

உண்மையாகக் காதலிக்கிறேன் என்றால், தங்கள் இருவருக்கும் அவளைக் காதலிப்பதில் போட்டி உருவாகி அதனால் ஒருவரையொருவர் கொன்றனர் என்கிற காரணத்தையே அனைவரிடமும் கூற வேண்டும் என்ற சத்தியம் ஒன்றைச் செய்யச் சொன்னார். எனவேதான் விசாரணையின் போது நான் அப்படிக் கூறினேன். உண்மையில் நான்கு வெள்ளாட்டிகளும் தற்கொலை செய்து கொண்டனர். அவர்களிடம் உள்ள ரகசியம் என்ன என்பது எனக்குத் தெரியாது. சத்தியமாக இதுதான் நடந்தது." — திலோத்தமா கதறினாள்.

"நீ சொன்னதை யாருக்கும் வெளியே கூறக்கூடாது. கம்பீரனும், ரவிவர்மனும் உன்னை அடைவதற்குப் போட்டி போட்டு, தங்களை மாய்த்துக் கொண்டனர் என்பதாகவே இருக்கட்டும்." அவளை எச்சரித்து அனுப்பினான், சிம்மவிஷ்ணு.

"அரசே! இப்போது என்ன செய்யப் போகிறோம்?" — ராஜவர்மன் கேட்டான்.

"களையெடுப்போம் களப்பிரர்களை!" — இரண்டே சொற்களில் தனது திட்டத்தை அறிவித்தான் சிம்மவிஷ்ணு.

அதன் பிறகு, களப்பிரரின் மீது போர் அறிவிக்கப் பட்டது. திடீரென்று சிம்மவிஷ்ணு தங்கள் மீது நடவடிக்கை எடுக்கத்துவங்க, களப்பிரர் நிலைகுலைந்து திணறினர். பணிந்தவர்களைப் பல்லவத்தைவிட்டுப் போகச் சொன்னான். பணியாதவர்களைக் கொன்று கிழக்கு காடுகளின் பல்லவ மேடு* குன்றங்களில் அவர்களின் தலைகளை ஈட்டியில் சொருகி வைத்தான்.

களப்பிரர் கூட்டம் மீண்டும் வடபுலத்தை நோக்கித் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடியது. மீண்டும்

---

* பல்லவ மேடு தற்போதைய பல்லாவரமாக இருக்கக் கூடும். பல்லாவரம் தொடங்கிப் பொத்தேரி வரை குன்றங்கள் இருந்த காலம் அது.

*தருமநகரத்தைக் கைப்பற்றிக் காஞ்சியுடன் இணைத்தான், சிம்மவிஷ்ணு.*

*தருமநகரத்தினுள் நுழைந்த சிம்மவிஷ்ணு உறைந்து போய் நின்றான். தரும நகரத்தையே அடையாளம் தெரியாமல் மாற்றியிருந்தனர், ரணதிலகனும், அவனது படையினரும். நகரின் மையத்தில் இருந்த ஆதிசரஸ்வதி கோயில் தாராதேவி என்கிற சாக்கியத் தேவதையின் கோயிலாக மாற்றப்பட்டிருந்தது. சுற்றி அமைந்திருந்த ஏழு திருமால் கோயில்களும்* நகரத்தைவிட்டு வெளியேற்றப் பட்டு, அத்தனை பெருமாள்களும், ஊரகத்தான் சந்நிதியிலும் ஒத்தாடையான் ஆலயத்திலும் பத்திரப் படுத்தி வைக்கப்பட்டிருந்தனர். ஏழு திருமால் கோயில்*

---

* முதல் பாகத்திலேயே இந்த விவரங்களைத் தெரிவித்திருக் கிறேன். காமாட்சி அம்மன் கோயிலின் பின்பாக ஆதிகாமாட்சி கோயில் ஒன்று இருக்கிறது. அதுவே அன்றைய ஆதி உக்கிரச் சரஸ்வதி கோயில். வேகவதியாக ஓடிய சரஸ்வதி இவள்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. களப்பிரர் அவளைத் தாராதேவியாக மாற்றிவிட்டனர். மீண்டும் சங்கரர் அவளது உக்கிரத்தை அடக்கி ஆதிகாமாட்சியாகப் பிரதிஷ்டை செய்தார். இப்போதைய காமாட்சி சாந்த மூர்த்தியாக அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவள்தான். அப்போது ஒத்தாடையான் என்கிற ஏகாம்பரேஸ்வரருக்கு உடனுறை நாயகியாக இருந்தவள் ஏலவார்குழலி. ஒத்தாடை ஆலயத்திலேயே ஏலவார்குழலி குடியிருந்தாள். என்ன காரணத்தாலோ, சரஸ்வதி ஆதிகாமாட்சியாக மாறிவிட்டாள். ஏகாம்பரேஸ்வரரின் உடனுறையாக புதிதாகச் சங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட காமாட்சி மாறி இருக்க வேண்டும். சரஸ்வதி ஆதிகாமாட்சியாக மாறி இருக்க வேண்டும்.

தரும நகரத்தின் ஏழு திருமால் கோயில்கள் எழுமால் கோயில்கள் என்று அழைக்கப்பட்டன. அவை:

- ❖ உருகுவாருள்ளத்து பெருமாள் (நீரகத்தார்) சந்நிதி -இன்று உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது.
- ❖ நிலாத்திங்கள் துண்டத்துப் பெருமாள் - இன்று ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் உள்ளது.
- ❖ கள்வரெம்பெருமான் - காமாட்சி அம்மன் கோயிலில் சந்நிதியின் வலதுபுறம் உள்ளது.

*களையும் சமணப் பசடிகளாக மாற்றிவிட்டிருந்தனர் ரணதிலகனின் படைகள்.*

*தருமநகர அரண்மனையில் நுழைந்த சிம்ம விஷ்ணுவின் படைகள் திகைத்துப் போயினர். எங்கு நோக்கினும், செல்வங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. ஆபரணங்கள், நவரத்னங்கள், ஸ்வர்ணக் கட்டிகள்..*

*அனைத்தும் பல்லவத்தில் சூறையாடப்பட்ட செல்வங்கள் என்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை சிம்மவிஷ்ணுவுக்கும், ராஜவர்மனுக்கும். ஒவ்வொரு அறையாக சோதனை செய்தபடி வந்த மன்னரும் தளபதியும், உப்பரிகை கோடியில் இருந்த ஒரு அறையினுள் நுழைந்தனர்.*

*அந்த அறையின் மஞ்சத்தில் பாக்குமரப் பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீதள மணி வைக்கப் பட்டிருந்த பெட்டகம். அரண்மனை கஜானாவில் அந்தப் பெட்டகத்தைப் பார்த்திருக்கின்றனர். சந்தேகத்துடன் அதனைத் திறந்து பார்த்தான், ராஜவர்மன். உள்ளே ஸ்ரீதள மணி இல்லை! ஸ்ரீதள மணியையும் ரணதிலகன் அபகரித்துவிட்டிருந்தான். கஜானாவில் இருந்த ஸ்ரீதள மணியும் பறிபோய்விட்டது. திடுக்கிட்டு சிம்ம விஷ்ணுவைத் திரும்பி நோக்கினான், ராஜவர்மன். அவனுடைய பார்வை, அறைக் கதவின் பின்பாகச்*

---

❖ திருவிருத்த பெருமாள் (கார்வான பெருமாள்) - உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளது.

❖ ஊரகத்தார் (தற்போது பாம்பு சிலையாக உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ளார். விக்கிரகங்கள் காணாமல் போயிருக்கக் கூடும்).

❖ பள்ளிகொண்ட பெருமாள் - தற்போது வேலூர் பள்ளி கொண்டானில் ஆற்றின் நடுவே இருக்கிறார்.

❖ கரிய மாணிக்கப் பெருமாள். அத்திமலைத்தேவனுக்கு நிகராக மிகவும் ஆற்றல் மிக்கப் பெருமாள். தற்போது வந்தவாசி அருகே அத்தி என்னும் கிராமத்தில் எழுந்தருளி இருக்கிறார்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்த நீல வண்ண ஆடையின் மீது பதிந்தது.

ஜெயவர்மன் குறிப்பிட்ட கருப்பு ஆடு சிக்கிக் கொண்டது!

ராஜவர்மன் அந்த ஆடையைக் கண்டதும் மனதிற்குள் கூறிக் கொண்டான். கடைசித் தம்பி பீமவர்மனின் மனதுக்கு உகந்த நாக நீல வண்ண ஆடை அவனது கண்களில் தென்பட்டது. சிம்மவிஷ்ணுவுக்கு அந்த ஆடையைச் சுட்டிக்காட்டினான். வெளியே நின்ற காவலனை சிம்மவிஷ்ணு அழைத்தான்.

"பீமவர்மன் எங்கே? அவனது ஆடைகள் இங்கே உள்ளனவே?" — சிம்மவிஷ்ணு கேட்டான்.

காவலன் தலையைக் குனிந்தான். "இளவரசர் பீமவர்மர் தனது ஆடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணமாக ஒருவித மயக்க நிலையில் நடந்தபடி எங்கோ சென்றுவிட்டார்."

உறைந்து போனார்கள், சிம்மவிஷ்ணுவும், ராஜவர்மனும்.

'பீமவர்மனையுமா பிரக்ஞதாரா வசியப்படுத்தி விட்டாள்?' — ராஜவர்மன் அரண்டு போனான். "எல்லா விபரீதங்களுக்கும் காரணம் பிரக்ஞதாரா!"

"அவள் மட்டும் எனது கையில் சிக்கினால்.." இரத்தமாகச் சிவந்த கண்கள் விரிய, பற்கள் நெரிபட, சிம்மவிஷ்ணு கூறியதைக் கேட்டு ராஜவர்மன் சோகமாகச் சிரித்தான்.

"பிரக்ஞதாரா உனது கையில் சிக்குவது இருக்கட்டும். நீ அவளது கண்களில் சிக்கிவிடப் போகிறாய். ஜெயவர்மன் அனேகமாக அவளது கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்." — ராஜவர்மன் கூறினான்.

அத்திமலையானையும், ஜெயவர்மனையும் சிம்ம விஷ்ணு தனது ஆட்சிக்காலம் முழுவதும் தேடிக் கொண்டுதான் இருந்தான். ஆனால் அவனது முயற்சிகள் எல்லாமே வீணாகப் போயின. அத்திமலையானை கண்டுபிடித்து அவனது ஆலயத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்கிற அவனது எண்ணம் கடைசி வரை நிறைவேறவே இல்லை. ஜெயவர்மனைப் போன்று பீமவர்மனும் தலைமறைவாகிவிட்டிருந்தான்.

சிம்மவிஷ்ணு ஒரு நாள் ராஜவர்மனுடன் ஆலயத்திற்குச் சென்றான். அப்போது ஆலயத்தில் ஒரு திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அனந்த பட்டரின் மகள் அஞ்சிலை அணங்கின் திருமணம்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பிருந்தாரண்யம்* என்கிற துளசிக் காட்டின் நடுவே ஐந்து தடாகங்கள் இருந்தன. ஒவ்வொரு தடாகத்தின் கரையிலும் ஒரு மாலவனின் விண்ணகரம் காணப் பட்டது. அவற்றின் பெயர் பஞ்சப் பொய்கை க்ஷேத்திரம். அங்கே கஜ தீர்த்தக் கரையில் உள்ள ஆலயத்தில் கைங்கர்யம் செய்து கொண்டிருந்த நந்தபட்டரைத்தான் அஞ்சிலை அணங்கிற்கு மாப்பிள்ளையாகப் பேசி முடித்தார், அனந்த பட்டர். திருமணம் நிச்சயமான நாள் முதலாக அஞ்சிலை அணங்கு குழம்பிக் கொண்டுதான் இருக்கிறாள். தனது பூஜை அறை பெட்டகத்தில் பத்திரப் படுத்தி இருக்கும் ஜெயவர்மன் கொடுத்த சுவடிகளை என்ன செய்வது..? இப்போதைய மன்னரிடம் கொடுத்து

* பிருந்தாரண்யம் (பிருந்தாவனம்) என்கிற துளசி வனம் இன்றைய திருவல்லிக்கேணி. இங்கே விஷ்ணு, இந்திர, சோம, அக்னி, பிரம்ம என்று ஐந்து தடாகங்கள் இருந்ததாகப் புராணம் கூறுகிறது. அல்லிக்குளம் மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. மற்ற தடாகங்கள் காலப்போக்கில் காணாமல் போய்விட்டன. கஜ தீர்த்தம் இப்போது உள்ள ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷன் எதிரே யானைக் குளம் என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

விடலாமா? என்று யோசித்துக் கொண்டே தான் இருந்தாள்.

திருமணம் முடிந்ததும் தந்தையிடம் சுவடிகளைத் தந்து மன்னரிடம் ஒப்படைக்க வேண்டியதுதான் என்கிற முடிவுக்கு வந்திருந்தாள், அஞ்சிலை அணங்கு. திருமணம் நடந்து கொண்டிருந்த போதுதான், தற்செயலாக அரச குடும்பமும் அங்கே வந்தது. அனந்த பட்டரின் மகளுக்குத் திருமணம் என்பதை அறிந்து சிம்மவிஷ்ணு, புவனா, ராஜவர்மன், ராஜஸ்ரீ மற்றும் மகேந்திரன் அவர்களை வாழ்த்த — ஒருகணம்.. மன்னனிடம் ஜெயவர்மன் தந்த சுவடிகளைப் பற்றிக் கூறிவிடலாமா என்று கூட நினைத்தாள்.

'அத்திமலையானின் மீதே பாரத்தைப் போட்டு விடுவோம். திருமணம் முடிந்து அத்திமலையானை தரிசிப்பதற்காகச் செல்லப் போகிறோம். அவன் மல்லிகை, முல்லை போன்ற வெண்மை நிற மாலைகளை அணிந்திருந்தால் சுவடிகளை மன்னரிடம் கொடுத்து விடுவோம். செவ்வரளி மாலை அணிந்து நின்றால் சுவடிகளை நாமே வைத்திருப்போம்!' — என்று மனதினுள் தீர்மானித்தாள்.

திருமணம் முடிந்து அத்திமலையின் மீது ஏறினர், திருமணத் தம்பதிகள். அரச குடும்பம் தரிசித்த பிறகு, உச்சிக் காலப் பூசனையை பட்டர்கள் துவங்க அஞ்சிலை அணங்கு கணவன் நந்தபட்டருடன் காத்திருந்தாள். தற்செயலாக அவளது பார்வை துவாரபாலகரில் ஜெயன் சிலையின் மீது பதிந்தது. அணங்கு, முன்னர் சாயாதேவி நின்றிருந்த அதே இடத்தில் நின்றிருந்தாள். சாயாவின் தலையில் பல்லி விழுந்த போது இவள்தானே அதனைத் தட்டிவிட்டிருந்தாள். ஜெயவர்மன் மற்றும் சாயா இல்லாமலேயே போய்விட்டார்களே.. வேதனையுடன் நினைத்த அஞ்சிலை, ஜெயன் சிலையைக் கவனித்தாள். சற்றே மூச்சினை இழுத்துப் பிடித்தாள். காரணம் ஜெயன்

சிலையில் செவ்வரளி மாலை ஒன்று சாற்றப்பட்டிருந்தது. சுவடிகளைக் கொடுக்காதே என்று ஜெயவர்மனே கூறுவது போன்று தோன்றியது.

பிருந்தாவனத்தில் இருந்த கணவன் வீட்டிற்கு அஞ்சிலை அணங்கு புறப்பட்ட போது அவளுடன் ஜெயவர்மன் கொடுத்திருந்த சுவடிகளும் புறப்பட்டுச் சென்றன. ஜெயவர்மனே அதை என்னிடம் வந்து வாங்கிக் கொள்ளும் வரை சுவடிகள் என்னிடமே இருக்கட்டும் என்கிற தீர்மானத்திற்கு வந்திருந்தாள், அஞ்சிலை அணங்கு.

சிம்மவிஷ்ணுவுக்கும், புவனமாதேவிக்கும் பிறந்த மகன் மகேந்திர பல்லவன் சிற்றப்பன் ஜெயவர்மனைப் போன்றே காண்பதற்கு அழகாகவும், கம்பீரமாகவும் இருந்தான். மகேந்திரனைக் காணும் போது ஜெய வர்மனைக் காண்பது போன்றே இருப்பதாக ராஜவர்மனும் சிம்மவிஷ்ணுவிடம் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பான். ராஜவர்மன் ஓய்வாக இருக்கும் காலங்களில், மகேந்திரன் அவனுடன் அமர்ந்து மர்மமான முறையில் காணாமல் போயிருந்த ஜெயவர்மனையும், அத்திமலையானைப் பற்றியும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருப்பான். மல்யுத்தத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவன் மகேந்திரன்.

சிம்மவிஷ்ணுவால் அத்திவரதரையோ, ஜெய வர்மனையோ கண்டுபிடிக்க இயலவில்லை. என்னால் நிறைவேற்ற முடியாத இந்தக் காரியங்களை என் சார்பாக நீ செய்ய வேண்டும் என்கிற சத்திய பிரமாணத்தை வாங்கிக் கொண்டு தனது இறுதி மூச்சை விட்டான் சிம்மவிஷ்ணு.

ஐவராகப் பிறந்தார்கள்.. நவரத்னாதேவி இளமை யிலேயே சோக முடிவை நாடினாள். ஜெயவர்மன் மர்ம மான முறையில் காணாமல் போனான். தானவர்மன் காம்போஜ மன்னராகக் கடல் கடந்து சென்றவன்,

பல்லவ சகோதரர்களோடு தொடர்பினை அறவே விட்டு விட்டான். பீமவர்மனும் காணாமல் போய்விட, சிம்ம விஷ்ணுவுக்குக் கடைசிவரை துணையாக இருந்தது, ராஜவர்மனும் ராஜ்யஸ்ரீயும்தான். அத்திவரதனின் பிரதிமையைக் கண்டுபிடிக்க இயலவில்லையே என்கிற வருத்தத்துடனும், ஜெயவர்மனை பற்றிய நினைவுகளுடனும் சிம்மவிஷ்ணு மரணப்படுக்கையில் விழுந்தான்.

மகேந்திரனுக்கு உடனடியாக யுவராஜனாக மகுடாபிஷேகம் நடைபெற்றது. சிம்மவிஷ்ணுவால் அத்திவரதரைத் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லை. அவன் மகன் மகேந்திர பல்லவன் அத்திமலைத் தேவனைத் தேடிக் கண்டுபிடித்து அத்திமலையில் பிரதிஷ்டை செய்கிறானா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் அவனோ சமண நண்பர்களால் ஈர்க்கப்பட்டுச் சமண மதத்தைத் தழுவி இருக்கிறான். அவனுக்கு அத்திமலையானின் பிரதிமையைப் பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது..?

# 12. நண்டுகளும், யானைகளும்

ரணதிலகன் தலைமையில் களப்பிரர்கள் ஓடிக் கொண்டே இருந்தார்கள். அவர்களை வேரோடு பிடுங்கிச் சாய்ப்பது என்கிற உக்கிரத்துடன் பல்லவத்தின் படைகள் துரத்திக் கொண்டிருந்தன. வேங்கியை கடந்தும் நந்திக்கொடி பறக்க, அவர்களிடம் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்கிற உத்வேகத்துடன் ஓடிக் கொண்டே இருந்தான்.

நல்லவேளையாக, களவாடிய பொக்கிஷங்கள் அனைத்தையுமே பத்திரப்படுத்தியாகிவிட்டது. யாராலும் பொக்கிஷங்களை வைத்திருக்கும் இடத்தை நெருங்க முடியாது. நெருங்குவதென்ன.. அவை பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பற்றி அறிந்திருக்கக்கூட மாட்டார்கள். இதுவரை பல்லவர்களின் கால்தடம் பதியாத அந்த இடத்தைத் தற்செயலாகத்தான் கண்டுபிடித்திருந்தான், ரணதிலகன். பல்லவர்கள் நாட்டை விஸ்தீரணம் செய்ய வேண்டும் என்கிற ஆவலில் எல்லைகளைப் பெருக்கிக் கொண்டே போகின்றனரே தவிர, தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஆராயத் தவறிவிடுகின்றனர். எனவே, தங்கள் பகுதிகளின் ரகசியங்களை அவர்கள் அறிந்து கொள்ளாமலே இருக்கின்றனர்.

அது இவனைப் போன்ற கள்வர்களுக்கு வசதியாகப் போகின்றது. அவர்களின் பொக்கிஷங்களை அபகரித்து அவர்களின் நாசியின் அடியிலேயே பதுக்கி வைப்பதற்கும் உதவுகிறது. எல்லாப் பொக்கிஷங்களும்

இவன் வசம்தான். கை நழுவிப்போனது அழகிய நவரத்ன பல்லவிதான்.. அதுவும் பிரக்ஞுதாராவினால் வந்தது. இவனுடைய முதலிரவன்று போதனைகளைக் கூறாமல் இருந்திருந்தால், நவரத்னாதேவியின் செவிகளில் அவை விழாமல் இருந்திருக்கும். வசியத்தில் அவள் இல்லாத நிலையில், இவன் எச்சரித்திருந்தும், பிரக்ஞுதாரா சில உண்மைகளைக் கூற, அதனை நவரத்ன பல்லவி கேட்டுவிட்டாள். விளைவு — கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத கனியாகிவிட்டிருந்தாள், நவரத்னா.

நவரத்னா தனது உயிரையே மாய்த்துக் கொள்வாள் என்று ரணதிலகன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லைதான். அவள் ஏமாற்றப்பட்டாள் என்பதைத் தவிர உயிரைவிடுவதற்கு வேறு காரணம் இல்லையே! உண்மையிலேயே நவரத்னாவின் பேரழகில் சொக்கிப் போய்விட்டிருந்தான், ரணதிலகன். காட்டில் ஜெயபாலனின் அடியாளாகக் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டிருந்த தனக்குப் பேரழகுப் பெட்டகமான பல்லவ இளவரசியே மனைவியாகக் கிடைத்தது குறித்து மலைத்துப் போயிருந்தான். கடம்ப இளவரசி ராஜஸ்ரீயை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று துடித்த ஜெயபாலனின் கனவு நினைவாகவில்லை. ஆனால் ஸ்வேத ஹூனர்களின் தலைவனாக வேண்டும், ஒரு இளவரசியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இவன் கனவு காணாமலேயே அனைத்தும் இவனுக்கு நடந்து கொண்டிருந்தன. பிரக்ஞுதாராவின் திட்டமாக இருந்தாலும், நவரத்னாவை வேகவதி கரையில் கண்டதுமே அவளிடம் மயங்கிவிட்டிருந்தான். ஆற்றில் குதித்த அவளைத் தொட்டுத் தூக்கிக் கரை சேர்த்த போது இந்திரலோகத்துச் சுந்தரியைக் கையில் ஏந்தியிருப்பதாக உணர்ந்தான். காட்டில் தனது தோற்றத்தைப் பற்றிச் சற்றும் சிந்தியாதவன், அவளை மயக்கத் தன்னை விசேடமாக அலங்கரித்துக் கம்பீரமாகக் காட்டிக் கொண்டான். ஆனால் அனைத்துமே கடலில் பெய்த மழையாகிவிட்டதுவே!

களப்பிரரின் தளபதியான ரணதிலகனின் நண்பன் மகாபலி இன்னொரு புரவியில் இவன் பக்கலிலேயே பயணித்துக் கொண்டிருந்தான். ரணதிலகனின் புரவி சாணம் இட நின்றால், மகாபலியின் புரவியும் நின்று சாணமிடும். ரணதிலகன் வலப்புறமாகப் பார்த்தால், மகாபலியும் வலதுபுறமாக நோக்குவான். ரணதிலகன் இயற்கை உபாதையைக் கழிக்கப் புரவியைவிட்டு இறங்கினால், அவனும் இறங்குவான். எல்லாவற்றிற்கும் காரணம் ரணதிலகன் பதுக்கி வைத்த பொக்கிஷங்கள். தருமநகர அரண்மனையில் இளவரசியின் கணவனாகப் பெரிதும் மதிக்கப்பட்டிருந்த ரணதிலகன் தனது அதிகாரத்தைக் கொண்டு களப்பிரப் படையினர் அன்றாடம் களவாடிய பொருட்களை எல்லாம் தான் ஒருவனே சிலரது உதவியுடன் ரகசியமாக மறைத்து வைப்பான். அவனுடன் பொக்கிஷங்களை மறைப்ப தற்காக உடன் செல்பவர்கள், அதன்பின் உலகத்தில் நடமாட முடியாது. தான் பதுக்கிய பொக்கிஷங்களின் இருப்பிடம் தெரியாமல் இருக்க வேண்டி, தனது அடியாட்களைக் கொன்றுவிடுவான். ரணதிலகன் களவில் பங்கேற்றாலும், பொக்கிஷங்களை அவன் எங்கு பதுக்கியிருக்கிறான் என்பது தெரியாமல், அவனது நிழலாகப் பின்தொடர்ந்தான், மகாபலி.

சிம்மவிஷ்ணு களப்பிரரை வேட்டை ஆடத் துவங்கியதும், இவர்கள் காஞ்சியைவிட்டுத் தப்பிச்சென்ற போது, மகாபலி ரணதிலகனை கேட்டுவிட்டான். "நாம் களவாடிய பொக்கிஷங்களை எங்கே வைத்திருக்கிறாய், ரணதிலகா?"

தன்னைக் கேட்ட மகாபலியை அலட்சியமாக நோக்கினான், ரணதிலகன். "இப்போது பொக்கிஷம் நமது உயிர்தான். நாம் களவாடிய பொக்கிஷங்களை இறைவன் நினைத்தாலும் எடுக்க முடியாது. மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறேன். பல்லவர்களின் வெறி அடங்கியதும், நாம் மீண்டும் வந்து அவற்றை எடுத்துக் கொள்வோம்.

*இப்போதைக்கு சென்று வடபுலத்தில் பதுங்கிக் கொள்வோம்..” என்று கூறி அவனை உடன் இழுத்து வந்திருந்தான்.*

*“பொக்கிஷங்கள் இருக்கும் இடத்தின் குறிப்புகளை ஒரு சுவடியில் பதிவு செய்து அதனை நானும், நீயும் மாற்றி மாற்றி வைத்துக் கொள்வோம். ஒருவேளை, பதுக்கி வைத்துள்ள இடத்தை நீ மறந்துவிடக்கூடும்.” — நைச்சியமாகக் கூறினான், மகாபலி.*

*“சுவடியில் எழுதினால், அடுத்தகணம் எனது உயிரைப் பறித்துவிட்டு, சுவடியை எளிதாக யார் வேண்டு மானாலும் பறித்துக் கொள்ளலாம். எனது சிந்தையில் இரகசியம் இருக்கும்வரை எனது உயிருக்கு ஆபத்தில்லை.” காட்டத்துடன் கூறி இருந்தான், ரணதிலகன்.*

*வேறு வழியின்றி, ரணதிலகன் இழுத்த இழுப்புக் கெல்லாம், சென்று கொண்டிருந்தான், மகாபலி. எப்படியாவது பொக்கிஷங்கள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு ரணதிலகனின் கதையை முடித்துவிட வேண்டியதுதான் என்றுகூட முடிவு கட்டியிருந்தான். ஆனால் பிடிவாதமாக ரகசியத்தைத் தனது மனதில் வைத்துப் பூட்டியிருக்கும் ரணதிலகனிடம் இருந்து விஷயத்தை எப்படி வாங்குவது?*

*நீண்ட பயணத்திற்குப் பிறகு, களப்பிரப் படையினர், உத்கலத்தில் நுழைந்து கடக கடற்கரையைச் சென்று அடைந்தனர். சமணர்கள் அதிகம் வசித்த பகுதி அது. சமணத் தவசிகள் வசித்த கடக குகைகள்* அதிகமாக*

---

* உதயகிரி என்கிற காந்தகிரி குகைகள் கிறிஸ்துவுக்கு முன்பே இரண்டாம் நூற்றாண்டில் கார்வேல மன்னனால் அமைக்கப்பட்டவை. கடக குகைகளில் துறவறம் பூண்ட சமணத் துறவிகள் குடி புகுந்தனர். கடக குகைகள் இருந்த இப்பகுதி கடகம் என்று அழைக்கப்பட்டுத் தற்போது கட்டா என்று அழைக்கப்படுகிறது. ஓரிசா மாநிலத்தின் Cuttack நகரம்தான் இந்தப் பகுதி. உதயகிரி மற்றும் காந்தகிரி

அங்கே காணப்பட்டன. குமார பர்வதத்தின் கடக குகைகளை அடைந்ததுமே, ரணதிலகனும், களப்பிரப் படையினரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். இந்தப் பகுதியில் பல்லவர்களுக்கு அதிகாரமில்லை. சமணத் தவசிகள் மட்டுமே எங்கும் காணப்பட்டனர். அதுவரை தங்களைக் களப்பிரர் என்று அழைத்துக் கொண்டிருந்த ரணதிலகன், சமயோசிதமாகத் தங்களைச் சமணத்தைப் பின்பற்றும் ஸ்வேத ஹூணர்கள் என்றதும் அவர்களுக்கு மரியாதையும் உபசரிப்பும் இரட்டிப்பாகியது. பல்லவர்கள் விரட்டியதால் அஞ்சி ஓடி வந்துள்ளோம். அடைக்கலம் தாருங்கள் என்று இறைஞ்சாமல், காஞ்சி அர்ப்பணன்சேரியில் இருந்து தலயாத்திரையாகத் தாங்கள் கடக குகைகளுக்கு வந்துள்ளோம். தவசிகளுடன் சிறிது காலம் தவ வாழ்க்கை வாழ உள்ளோம் என்றதும் அவர்களை அக்கறையுடன் குகைகளில் தங்க வைத்தனர்.

ரணதிலகனுக்கு உதயகிரியில் பெரிய குகை ஒன்றும், மகாபலிக்குச் சற்றுச் சிறிய குகை ஒன்றும் ஒதுக்கப் பட்டது. மற்ற களப்பிரர்கள் காந்த கிரியில் ஒரு குகையில் தங்கவைக்கப்பட்டனர். ரணதிலகனின் மீது அறவே

---

இரண்டும் சூரியன் மற்றும் சந்திரனைக் குறிப்பதாகக் கூறுகிறார்கள். ஹதிகும்பா கல்வெட்டு இந்த இரண்டு மலைகளையும் குமாரி பர்வதம் என்று குறிப்பிட்டுள்ளது..

The caves of Udayagiri and Khandagiri, called lena or leGa in the inscriptions, were dug out mostly during the reign of Kharavela for the abode of Jaina ascetics. The most important of this group is Ranigumpha in Udayagiri which is a double storeyed monastery. Other important caves include Hathi gumpha, Ananta gumpha, Ganesha gumpha, Jaya Vijaya gumpha, Mancapuri gumpha, Bagha/Byaghra/ Vyaghra gumpha and Sarpa gumpha.[4]

According to historian, B. M. Barua, based on a reading of line 14 of the Hathigumpha inscription, there were a total of 117 caves erected by Kharavela and others on the Kumari hill (Udayagiri). Only 35 caves have been excavated in in both the hills so far.

Google (கூகுள்) உள்ளே நுழைந்து kataka caves என்று குறிப்பிட்டால், சீட்டுக்கட்டு போன்று அடுக்கப்பட்டுள்ள அம்மலைக் குகைகளின் படத்தைக் காணலாம்.

நம்பிக்கையை இழந்திருந்த மகாபலி தானும் ரணதிலகனின் குகையிலேயே உடன் தங்கிக் கொள்ள நினைத்தான்.

"ரணதிலகா! நானும் உன்னுடன் உனது குகையிலேயே தங்கிக் கொள்கிறேன்." — மகாபலி கூறினான்.

"நாம் என்ன கணவன் மனைவியா, ஒரே குகையில் உறங்குவதற்கு..? குகையைப் பார்த்தாய் அல்லவா.. தேனீக்களின் கூட்டினைப் போன்று மிகவும் குறுகியதாக இருக்கிறது. நமது இருவரின் பெரிய தேகங்களையும் நீட்டிக் கொண்டு வசதியாக உறங்க முடியாது. கவலைப் படாதே. உனக்குத் தெரியாமல் பொக்கிஷங்களை நானே எடுத்துக் கொள்ளமாட்டேன்." — எரிச்சலுடன் கூறினான், ரணதிலகன்.

"காதல் மனைவியாக இருந்தாலும், அவள் கழுத்தில் அணிந்திருக்கும் ஆபரணங்களையும் சேர்த்துப் பறிமுதல் செய்யும் பேராசை கொண்டவன் நீ. நான் உன்னைச் சந்தேகப்படவில்லை. உனது பேராசையின் மீதுதான் எனக்கு நம்பிக்கை இல்லை. என்னை ஏமாற்ற நினைத்தால், விளைவு பயங்கரமாக இருக்கும்." — மகாபலி கூற, ரணதிலகனும், மகாபலியும் ஒருவரை யொருவர் கொலை வெறியுடன் உறுத்துப் பார்த்தபடி நின்றனர்.

சூரிய அஸ்தமனம் ஆனதும், தவசிகள் மூலக்குகையில் கூடிப் பிரதிகமா பிரார்த்தனையைத் துவங்கினர். அவர்கள் சூக்தங்களை உச்சரிக்க, மலைக் குகைகளில் அவர்களது குரல்கள் எதிரொலித்தன. பிரார்த்தனை முடிந்ததும், மூலக் குகையின் வெளியில் உயரமான கல்தூணில் பிணைக்கப்பட்டிருந்த அந்தக் காண்டா மணியை ஒலித்தார், ஒரு தவசி.

குகைகளில் தங்கியிருந்தவர்கள் அனைவரும் மூலக் குகையை நோக்கி நடந்தனர். தனது குகையின் வாயிலில் அமர்ந்திருந்தான் ரணதிலகன். அவனை நோட்டம்

விட்டபடி தனது குகையின் வாயிலில் அமர்ந்திருந்தான், மகாபலி.

இவனை எப்படிக் கழற்றிவிடுவது என்று ரணதிலகனும், இவனிடம் இருந்து பொக்கிஷங்களின் இருப்பிடத்தை எப்படியாவது அறிந்து கொண்டு இவனை யமலோகம் அனுப்பிவிட வேண்டும் என்று மகாபலியும் மனதினுள் திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளை — அந்த வரிசையில் மொத்தம் பதினான்கு குகைகள் இருந்தன. ரணதிலகனின் குகைக்குப் பக்கத்துக் குகையைத் தனக்குக் கேட்டு வாங்கியிருந்தான், மகாபலி. அங்கு தங்கியிருந்த தருமசேனர் என்கிற தவசியை அந்த வரிசையின் கடைசிக் குகைக்கு மாற்றிவிட்டு, அந்தக் குகையை மகாபலிக்குத் தந்திருந்தனர்.

இடம் மாற்றப்பட்ட தருமசேனர்* என்கிற அந்தத் தவசி தனது குகையில் இருந்து வெளியே வந்தார். அந்த வரிசையில் எட்டு குகைகள் இருந்தன. மையத்தில் இருந்த இரண்டு குகைகளில் ரணதிலகனும், மகாபலியும் தங்கியிருந்தனர். பெரிய மலைப்பாறையை ஒட்டி இருந்த கடைசிக் குகையில் தருமசேனர் தங்கியிருந்தார். இதர ஐந்து குகைகளில் பல்வேறு தேசங்களில் இருந்து வந்திருந்த தவசிகள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

தங்களது குகைகளின் வாயிலில் அமர்ந்திருந்த ரணதிலகனையும், மகாபலியையும் வியப்புடன் நோக்கினார், தருமசேனர்.

"ஏன் இன்னும் அமர்ந்திருக்கிறீர்கள்? மணியடித்தால் இரவு உணவுக்கு அழைக்கிறார்கள் என்று அர்த்தம். வாருங்கள்!" என்று அழைக்க, இருவரும் தருமசேனரை தொடர்ந்தனர். மூவரும் சென்று ஒன்றாக அங்கு

* தருமசேனர் என்னும் சமணத் தவசிதான் பிறகு சூலைநோய் கண்டு, தனது சகோதரி திலகவதியால் ஆட்கொள்ளப்பட்டு, சைவக் குரவராக மாறிய மருள்நீக்கியார் என்கிற திருநாவுக்கரசர் என்கிற அப்பர்.

போடப்பட்டிருந்த மணைப்பலகைகளில் அமர்ந்து கொள்ள, அவர்களின் முன்பாகப் பாக்குமட்டை தட்டுகளும், குவளைகளில் நீரும் வைக்கப்பட்டன. ஒரு துறவி மூங்கில் கூடையில் கோதுமை ரொட்டிகளை வரிசையில் அமர்ந்திருந்த தவசிகளுக்குப் பரிமாற, மற்றொரு தவசி, மலைத்தேனை அந்த ரொட்டிகளின் மீது ஊற்றியபடியே வந்தார். தன்னருகில் அமர்ந்திருந்த தருமசேனருடன் பேசியபடியே ரொட்டிகளை உண்ணத் துவங்கினான், ரணதிலகன்.

“சுவாமி! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” — ரணதிலகன் கேட்க, தருமசேனர் அவனை நட்புடன் பார்த்தார்.

“நான் பாடலிபுத்திரத்தில் இருந்து வருகிறேன்” என்றபடி ரொட்டித் துண்டு ஒன்றைத் தேனில் ஊற வைத்தார், தருமசேனர்.

“எனது மூதாதையர்கள் பாடலிபுத்திரத்தில்தான் இருந்தனர். ஆனால் நான் பிறந்தது, மகாகாந்தார தேசத்தில். அங்கிருந்து திருவேங்கடத்தின் சந்திரகிரியில் வசித்துப் பிறகு காஞ்சிக்குக் குடிபெயர்ந்தேன். அங்கிருந்துதான் இப்போது வந்திருக்கிறேன்.” — ரணதிலகன் கூற, தருமசேனரின் புருவங்கள் உயர்ந்தன.

“அடேடே! எங்கள் பகுதியில் இருந்து வருகின்றீரா? என்ன ஆச்சரியம்! பாடலிபுத்திரத்தைச் சேர்ந்த தாங்கள், காஞ்சியில் இருந்து இங்கே வந்திருக்கிறீர்கள். பல்லவ தேசத்தின் எல்லையான திருவாமூரைச் சேர்ந்த நான் பாடலிபுத்திரத்தில் இருந்து வருகிறேன். என்ன ஒரு ஒற்றுமை!” என்றவர், மகாபலியைப் பார்த்தார்.

“நீரும் இவருடன்தான் பயணிக்கின்றீரா?” — தரும சேனர் கேட்க மகாபலி ரணதிலகனை குரோதத்துடன் நோக்கியபடி பதிலளித்தான்.

“ஆம்! அவர் எங்கிருந்து வருகிறாரோ, அங்கிருந்துதான் வந்தேன். எங்கே போகிறாரோ அங்கே போவேன். அவர்

போகுமிடமெல்லாம் நானும் வருவேன்." அர்த்தத்துடன் அவன் கூற, அதனைத் தருமசேனர் மிகவும் ரசித்தார்.

"நல்ல நட்புக்கு அதுவே அடையாளம். நானும் நல்ல பொக்கிஷங்களைச் சேகரித்திருக்கிறேன். அதை மறைவாகப் பதுக்கி வைத்திருக்கிறேன்."

சற்றே அதிர்ந்த ரணதிலகனும், மகாபலியும் அவரை ஆர்வத்துடன் நோக்கினர். நாங்களும் பொக்கிஷங்களைச் சேகரித்து, அவற்றைப் பத்திரமாகப் பதுக்கியிருக்கிறோம் என்பதனை மட்டும் சொல்லாமல் தவிர்த்தனர்.

"நான் சேகரித்திருக்கும் பொக்கிஷங்களை யாரும் களவாட முடியாது. காரணம் அவை சமணச் சித்தாந்தத்தின் சுவடிகள். அவற்றைப் படித்து எனது சிந்தையில் பதுக்கி உள்ளேன்." — தருமசேனர் கூறியதும் மற்ற இருவரின் ஆர்வமும் வடிந்தது. சமணத் தாத்பரியங் களை விளக்கும் சுவடிகள் யாருக்கு வேண்டும்?

மூவரும் பேசிக் கொண்டே உணவை அருந்திவிட்டு, தத்தம் குகைகளுக்கு உறங்குவதற்குச் சென்றுவிட, மகாபலி மட்டும் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். ரணதிலகன் உறங்கத் துவங்கியதும், அவனது ஆயுதங்களைப் பதுக்கிவிட்டு, அவனது குரல்வளையில் கத்தியை வைத்து அச்சுறுத்திப் பொக்கிஷம் இருக்கும் இடத்தினைத் தெரிந்து கொண்டு அவனைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்க, உறங்காமல் நடுநிசிக்காகக் காத்திருந்தான். நிலவொளியைத் தவிர வேறு வெளிச்சம் அந்த மலைக் குகைகளில் இல்லை. மூலக் குகையின் வெளியே இருந்த கல்தூணில் மட்டும் ஒரு தீபகப்பரை ஒளிர்ந்து கொண்டிருந்தது. அதன் ஒளி உயரத்தில் இருந்த இவர்களின் குகைப் பக்கம் பாயவில்லை.

தனது குகையினுள் சயனித்த ரணதிலகனுக்குத் திடீர் என்று ஒரு யோசனை. உண்மையிலேயே இவனால் மீண்டும் எப்போது பல்லவத்தினுள் அடியெடுத்து வைக்க

முடியுமோ. மகாபலி இவனுக்குத் தொல்லைகளைக் கொடுத்தாலும் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கிறான். அவனுக்குத் தெரியாமல் பொக்கிஷங்கள் உள்ள இடத்தை ஒரு சுவடியினில் குறிப்பிட்டு எங்கேயாவது பதுக்கி வைத்தால், பிறகு வந்து சுவடியின் மூலம் பாதையைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

எழுந்து தருமசேனரின் குகைக்குச் சென்று ஒரு பனையோலைச் சுவடியைக் கேட்டு வாங்கி வந்தான். தான் பொக்கிஷங்களைப் பதுக்கி இருந்த ரகசியப் பகுதியைப் பற்றிய குறிப்புகளை அதில் பதிவு செய்துவிட்டு அந்தச் சுவடியைப் பதுக்கினான்.

நடுநிசி —

காற்று பலமாகக் கற்பாறைகளில் மோதும் ஒலியைத் தவிர அந்த இரவு அமைதியாகத்தான் இருந்தது. தனது குகையைவிட்டு வெளியேறிய மகாபலி கையில் குத்துவாளுடன் ரணதிலகன் உறங்கிக் கொண்டிருந்த குகையினுள் நுழைந்தான். ரணதிலகன் ஆழ்ந்த நித்திரையில் இருக்க, அடிமேல் அடி வைத்து நகர்ந்து உள்ளே நுழைந்தான். ஒரு மூலையில் ரணதிலகனின் குத்துவாள் நிறுத்தப்பட்டிருந்தது. அதனைப் பறிமுதல் செய்த மகாபலி, பிறகு மல்லாந்து உறங்கிக் கொண்டிருந்த ரணதிலகனின் தேகத்தின் இரு புறங்களிலும் காலைப் பதித்து அவனது மார்பின் மீது சடாரென அமர்ந்து தனது குத்துவாளை அவனது குரல் வளையில் பதித்தான்.

"உறக்கத்திலிருந்து கண் விழிப்பாய், ரணதிலகா! பொக்கிஷங்களை எங்கே பதுக்கியிருக்கிறாய்? அந்த ரகசியத்தைக் கூறு." — ஆவேசக் குரலில் கிசுகிசுத்தான், மகாபலி.

திடுக்கிட்டுக் கண்விழித்த ரணதிலகன், தனது மார்பின் மீது அமர்ந்திருக்கும் மகாபலியைக் கண்டதுமே அவனது நோக்கத்தைப் புரிந்து கொண்டான்.

"ரகசியத்தைக் கூறினாலும் மரணம்.. கூறாவிட்டாலும் மரணம். கூறாமலேயே மரணத்தைத் தழுவிக் கொள்கிறேன். காரணம் நான் இறந்துவிட்டால், அவை அனுபவிப்பார் யாருமின்றி இருக்குமிடத்திலேயே கிடக்கும். எனவே முடிவு உன் கையில். என்னைக் கொல்வதும், கொல்லாததும் உனது விருப்பம்."

ரணதிலகன் கூறக் குழம்பிப் போனான், மகாபலி.

"நான் இப்போது உன்னைக் கொல்லாமல் விட்டாலும், நீ பதிலுக்கு என்னைக் கொல்லாமல் விடமாட்டாய். எனவே புதையல் போனால் போகிறது. எனக்கு உனது உயிர் போதும். பல்லவத்தில்தானே பொக்கிஷங்கள் இருக்கின்றன. நானே தேடி எடுத்துக் கொள்கிறேன். நீ செத்தால் போதும்!" — மகாபலி கூற, இப்போது ரணதிலகன் குழம்பினான்.

இருவரும் தத்தம் நிலையிலேயே உறுதியாக இருக்க, திடீரென்று தனது பாதங்களை உயர்த்திக் கொண்டு வந்து மகாபலியின் பிடரியைத் தாக்கினான். அது ரணதிலகன் செய்த தவறு. அவனது பாதங்கள் மகாபலியின் பிடரியைத் தாக்க, அதைச் சற்றும் எதிர்பார்த்திராத மகாபலி நிலைகுலைந்து சரிய, அந்த அதிர்ச்சியில் அவனது குத்துவாள் ரணதிலகனின் குரல்வளையில் இறங்க, அவன் கதறி எழுந்து அலறியபடி வெளியே ஓடினான். அவனது குரல்வளை பிளந்து குருதி பொங்கியது.

"காப்பாற்றுங்கள்.. என்னை காப்பாற்றுங்கள்..!" என்று கதறியவன் செய்வதறியாமல், இருபுறமும் நோக்க, கடைசியில் இருந்த தருமசேனர் தங்கியிருந்த குகையினுள் வெளிச்சம் தென்பட, அதனை நோக்கி ஓடினான்.

உள்ளே தருமசேனர் தீபத்தின் ஒளியில் சுவடிகளைப் படித்துக் கொண்டிருந்தார். ரணதிலகன் அவரது மடியில் போய் விழுந்தான்.

"தருமசேனரே! என்னைக் காப்பாற்றுங்கள். மகாபலி என்னைக் குத்திவிட்டான்." — தொண்டையில் குருதி பொங்கி வர அவன் பேச இயலாமல் தடுமாற, அவனது ஆபத்தான நிலையைக் கண்டு பதறி அவனது முகத்தை நோக்கிக் குனிந்தார்.

தனது உயிர் தேகத்தைவிட்டு நழுவுவதை உணர்ந்த ரணதிலகன் சட்டென்று தருமசேனரின் தலையைப் பலமாகப் பற்றி அவரது காதில் ஒரு தகவலைச் சொன்னான்.

"நூற்றிப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரசகஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்."

என்று அவரது செவிகளில் கூறிய ரணதிலகனின் தலை சரிந்தது. அவன் அவர் செவிகளில் இரகசியத்தைப் பாய்ச்சிக் கொண்டு இருக்கும் போதே, ரணதிலகனை ஒவ்வொரு குகையாகத் தேடிக் கொண்டு வந்த மகாபலி உள்ளே நுழைந்து அந்தக் காட்சியைப் பார்த்தான்.

என்ன நடக்கிறது என்று புரிவதற்குள், தருமசேனரின் மார்பில் தனது வாளினை வைத்தான் மகாபலி. "ரணதிலகன் உம்மிடம் என்ன கூறினான்?" — சந்தேகத்துடன் கேட்டபடி அவரை வெறித்தான், மகாபலி. தருமசேனர் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்.

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷம் கிடைக்கும்.'

ரணதிலகனின் கிசுகிசுத்த குரல் அவரது செவிகளில் ரீங்கரித்துக் கொண்டே இருந்தது.

# 13. பெயர் சொல்ல ஒரு பிள்ளை

**ப**னிபடர்ந்த கௌசிக மலை என்கிற கோஷு மலையின் பின்பாக எழுப்பப்பட்டிருந்த சூலினி கோட்டத்தின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த ஒரு உயர்ந்த மேடையின் மையத்தில் ஒரு நான்கு கால் மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் மையத்தில் இலங்காவதார தந்திரச் சக்கரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் முன்பாகத் தியானத்தில் அமர்ந்திருந்தான், போதி தர்மா. ஜெயவர்மனாக இருந்த போது திகழ்ந்த கம்பீரத்தில் குறைவில்லைதான். ஆனால், பல்லவ இளவரசனாக இருந்த போது கண்களில் நிலவிய தேசபக்தி, குடும்பப் பாசம், மனைவியின் மீது நேசம், மக்களின் மீது பரிவு எதுவும் இப்போது அவனது கண்களில் காணப்படவில்லை. கோஷு மற்றும் சுற்றி உள்ள பனிமலைகளில் நிலவிய பூரண அமைதியைத் தான் அவனது முகம் பிரதிபலித்தது. ஜெயவர்மனாக இருந்த போது, அத்திமலையானின் ஆலயத்து அன்றலர்ந்த பொற்றாமரையாகக் காட்சி தரும் அவனது கண்கள்.. ஆனால் போதி தர்மாவின் கண்களாக அவை மாறிய பிறகு, நிலவைக் கண்டதும், இதழ்களைக் குவித்து மூடிக்கொள்ளும் முண்டகமாக அவனது இமைகள் பாதி மூடி, சுருங்கி, பக்கவாட்டினில் நீண்டிருந்தன. கண்கள் தானே உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. உணர்வுகள் வற்றும் போது கண்களும் சுருங்க வேண்டியதுதானே. பல்லவம், காஞ்சி மற்றும் அத்திமலைத்தேவனைப் பற்றிய நினைவுகள் அனைத்தும் கோஷு மலையின் பனிக்கட்டிகளாக உறைந்து

பொய்விட்டன. இப்போது அவனது சிந்தையில் இருப்பது சூலினியை உபாசிக்கும் இலங்காவதார தந்த்ரம்தான்.

பழையன கழிந்து புதியன அவனது சிந்தையில் புகுந்துவிட்டாலும், அந்தரத் தேகத்தில் இல்லாமல் உபயத் தேகத்தில் நிலவும் போது ஜெயவர்மனது கடந்த கால நினைவுகள் மெலிதாக வீசும். கண்களில் சற்றே வேதனை எட்டிப்பார்க்கும். உடனே சூலினியை நினைத்தபடி மனதை மீண்டும் உக்கிரமாக்கிக் கொண்டு அந்தரத் தேகத்தினுள் புகுந்துவிடுவான்.

அவன் தியானத்தை முடித்ததும், குங்கிலியப் பூச்சு ((Kung Fu) என்னும் வீரக் கலைகள் துவங்க இருந்தன. குங்கலிய தைலத்தைக் கைவிரல்களில் தடவி எதிரிகளின் நெற்றியின் சிந்தனை மையத்தில் அதனைப் பூசி அவனை வசப்படுத்த வேண்டும் என்பதே அந்தக் கலையின் நோக்கம். மாணவர்கள் சிலர் போதி தர்மா கண்விழிப்பதற்காகக் காத்திருந்த வேளையில் —

தியானத்தில் இருந்த போதி தர்மாவின் உடல் திடீரென்று குலுங்க, சூ சிங் என்கிற சீடன் மட்டும் தனது கையை உயர்த்தித் தன்னை யாரும் பின் தொடர்ந்து வர வேண்டாம் என்று சைகை காட்டியபடி, போதி தர்மாவை கூர்ந்து கவனித்தபடி முன்னேறி வந்து அவரைப் பார்த்தபடி நின்றான். மீண்டும் ஒருமுறை போதி தர்மாவின் உடல் குலுங்கியது. இவ்வாறு அவரது தேகம் குலுங்குகிறது என்றால், அவரது உணர்வுகள் அந்தரத் தேகத்திலிருந்து உபயத் தேகத்திற்கு வருகிறது என்பதாக அர்த்தம்.

தர்மா தனது கண்களைத் திறப்பதற்காகக் காத்திருந் தான் சூ சிங்.

போதி தர்மாவின் இடுங்கிய கண்கள் மலர்ந்தும் மலராத தாமரை மலரைப் போன்று பாதி திறக்க, தனது

முன்னே நின்ற சூ சிங்கைக் கடந்து அவனது பார்வை நோக்கின..

கோஷு மலையைக் கடந்து யாரோ அவனை நாடி வருகிறார்கள் என்பதை லங்காவதார சக்கரம் உணர்த்த, அவனது கண்கள் தொலைவில் தெரிந்த மஞ்சள் மலையின் உச்சியையே வெறித்தன. மலைக்கு அப்பால் போர் நிகழக்கூடிய அறிகுறிகள் தென்பட, உணர்வின்றித் தனது கண்களைச் சுழலவிட்டுச் சூ சிங்கின் பக்கமாக நோக்கினான்.

மீண்டும் லங்காவதார சக்கரத்தில் ஏற்பட்ட அதிர்வு ஒன்று அவனுள் எதையோ உணர்த்த, விருட்டென்று தனது இடத்தில் இருந்து எழுந்தான்.

"சூ சிங்! இன்றைய வகுப்புகளை ரத்து செய்துவிடு. இன்று ஒரு அசம்பாவிதம் நடக்க உள்ளது.." என்றான்.

சூ சிங் பணிவுடன் தனது தலையை அசைக்க, கரிய சால்வையினைத் தனது தலையில் முக்காடாகப் போட்டுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான். சூலினி கோட்டம் என்கிற ஷோலின் விஹாரத்தைக் கடந்து பின்பாக உள்ள மலைச்சரிவை நோக்கி நடந்தான். பனிமலையின் அடிவாரத்தில் தனியாகக் காணப்படும் குடிலில்தான் பிரக்ஞுதாரா மரணப் படுக்கையில் கிடக்கிறாள்.

அவளது குடிலை நோக்கி நடந்தான். கடந்த காலத்துடன் போதி தர்மாவுக்கு இருக்கும் ஒரே தொடர்பு பிரக்ஞுதாராதான். அவளது மரணத்திற்குப் பிறகு, இவனுக்கென்று யாருமே இருக்கப் போவதில்லை. முதன்முதலாக அத்திமலையானின் ஆலயத்தில் தனது செவிகளில் கிசுகிசுத்துவிட்டுப் படியிறங்கிச் சென்ற அந்த மாலைவேளைக்குரிய நினைவுகள் எழும்பின. சாயாதேவியுடன் படியிறங்கிச் செல்ல, அத்திமலை ஆலயத்தின் வாயிலில் அவளை முதன்முறையாகக்

கண்டான். இன்று அவள்தான் இவனுக்கு எல்லாமுமாக இருந்தாள். பனிக்காற்றின் ஓலம் செவிகளை மூடியிருந்த சால்வையைக் கடந்து அவனுக்குக் கேட்க, குடிலினை அடைந்து உள்ளே நுழைந்து மீண்டும் அதன் கதவினை மூடினான்.

கிழிந்த நாராகக் கட்டிலில் கிடந்தாள், பிரக்ஞுதாரா. உடல் குறுகி, முகம் சுருங்கி எலும்புக்கூடாகக் கிடந்தாள். இருநூறு வயதை அடைந்துவிட்டாள். கம்பீரக் கொண்டையுடன், மிடுக்காகக் காஞ்சியின் வீதிகளில் நடந்து, கண்களாலேயே காரியங்கள் ஆற்றி, சரித்திரத்தை மாற்றி எழுதிய பிரக்ஞுதாராவின் துணிவு யாருக்கு வரும்..?

தாராவையே வெறித்துப் பார்த்தபடி நின்றான். காஞ்சியையும், தனது இஷ்ட தெய்வமான அத்திமலை யானையும், பிரியமான மனைவியையும், பாசமுள்ள குடும்பத்தையும், நண்பர்களையும் விட்டுத் தன்னைப் பிரித்து எங்கோ மனிதச் சஞ்சாரமற்ற அந்தப் பனி மலைக்குத் தன்னை அழைத்து வந்த பிரக்ஞுதாராவின் மீது அவனுக்குத் துவக்கத்தில் வெறுப்பு இருந்தது. ஆனால் தொடர் தியானத்தால் மெய்ஞ்ஞானத்தை உணரத்துவங்கியதும், பல்லவ இளவரசன் என்கிற பதவியும், பட்டமும் அவனுக்கு மிகவும் கேவலமாகத் தோன்றின. ஒருவனால் குடும்பத்துடனும், உறவுகளிடமும் எவ்வளவு நாட்கள்தான் ஒன்றாக இருக்க முடியும்..? என்றாவது ஒருநாள் பிரிந்துதானே தீர வேண்டும். மனைவி, மக்கள், தாய், தந்தை, சுற்றம் எல்லாமே. நிரந்தரம் இல்லை என்கிற போது என்றாவது ஒரு நாள் பிரிந்துதானே ஆக வேண்டும். இறுதியில் பிரிவதற்குப் பதிலாக இவன் துவக்கத்திலேயே பிரிந்திருக்கிறான். பிரக்ஞுதாராவை பார்த்தபடி யோசித்துக் கொண்டே நின்றான்.

திடீரென்று —

தனது இரு கண்களையும் திறந்த பிரக்ஞுதாரா, நேராகத் தன்னை உறுத்துப் பார்த்தபடி நிற்கின்ற போதி தர்மாவின் கண்களினுள் பார்த்தாள். பலவீனமான குரலில் பேசினாள்.

"போதி! நினைவிருக்கிறதா? காஞ்சியில் இருந்த போது எனது கண்களைக் காண்பதற்குத் தவிர்ப்பாயே. அத்திமலையானின் ஆலயத்தில் உனது கண்களைக் கரிய துணியால் மூடிக் கொண்டு வந்தாயே..! இன்று கரிய துணியால் உடல் முழுவதும் மூடியிருக்கிறாய். உனது கண்களைத் தவிர!" — சிரிக்க முயன்றாள் தாரா!

"உங்களையே வருத்திக் கொள்ளாதீர்கள் தாயே! ஓய்வு எடுங்கள்." — போதி சொல்ல, மீண்டும் அவனை வெறித்தாள்.

"போதி! இன்னும் சற்று நேரத்தில் இந்த தேகத்தைவிட்டு எனது உயிர் புறப்பட்டுவிடும் என்பது உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும். நிரந்தர ஓய்வு எடுக்கப் போகிறேன். அதற்கு முன்பாக உன்னுடன் பேசிவிட்டுத்தான் போகிறேனே..! உனக்கு நான் ஒருவள்தான் இருந்தேன். எனக்கும் நீ ஒருவன்தான் இருந்தாய்..! நான் உன்னிடம் செலுத்திய அன்பைக் கண்டு பொறாமை கொண்டு ஜினிங்டியாண்டை கூட என்னுடன் சண்டையிட்டுக் கொண்டு நமது விஹாரத்தைவிட்டுக் கிளம்பிச் சென்றான். ஆனால் உன் மீது நான் கொண்டிருந்த அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது..! உன்னைக் காஞ்சியில் இருந்து இங்கே அழைத்து வந்ததற்கு நீ கூட என்னைச் சபித்திருப்பாய். ஆனால் உன்னை உயர்ந்த இடத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும் என்றுதான் நான் உன்னை இங்கே அழைத்து வந்தேன். வருங்காலத்தில் உனது பெயர் மட்டுமே பாரெங்கும் பரவியிருக்கும்..! உனது மனைவி கூறியது போன்று நீ தேவ உடும்பர தேகத்தைக் கொண்டவன்தான். விதுரன் நட்ட தேவ உடும்பர

விருட்சம் பௌத்தத்தின் போதி ஆனது போன்று, காஞ்சியின் தேவ உடும்பரமாகிய நீ இன்று சீனத்தின் போதியாகிவிட்டாய்."

தாரா கூற, போதி அவள் அருகே அமர்ந்து அவளது கையைப் பற்றிக் கொண்டான்.

"பழையனவற்றைக் கழித்துவிட்டேன், தாயே! அவற்றைப் பற்றிப் பேச வேண்டாமே!" — போதி கூறினான்.

"போதி தர்மா! பழையதைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. உயர்ந்த மரமாக இருந்தாலும், என்றாவது ஒரு நாள், வேருக்குப் பயணம் செய்துதான் ஆக வேண்டும். வேர் மரத்திற்கு நீரை வழங்குவது போன்று பழைய நினைவுகள்தான் நமக்குச் சக்தியை அளிக்கிறது. உன்னைப் போன்று பாக்கியசாலி இல்லை நான், போதி தர்மா. நீ பெரிய அரச குடும்பத்தில் பிறந்தவன். எனது கதை தெரியாதல்லவா உனக்கு..

"எனது பாட்டிதான் ஆம்ரபாலி! அசோகனின் அவையில் நடனம் ஆடிய பெண். அவளது தாய் கலிங்கத்தில் இருந்து அசோகரால் கடத்தப்பட்டவள். ஆம்ரபாலி அசோகனின் கடைசி மனைவி திஸ்ஸ ரக்காவிடம் நோக்கு கலையைக் கற்றவள். திஸ்ஸ ரக்காதான் போதி என்னும் தேவ உடும்பர மரத்தை நாசம் செய்தவள். அவளது மகள் கேயூராதான் எனது தாய். ஆம்ரபாலி சேர நாட்டின் திருநாவாய் என்கிற ஆலயத்தில் இருந்து பிரும்ம ஓலை என்கிற ரகசியத்தைக் களவாடி வஸ்திரம் ஒன்றில் தைத்துக் காஞ்சிக்குக் கொண்டு வரும் போது அவளை முதலை ஒன்று விழுங்கியதாம். அவளிடம் இருந்த அந்த வஸ்திரத்தை எனது தாய் கேயூரா பிரித்த போது, அந்த ஓலை கிட்டியது. அந்த ஓலையைக் கொண்டுதான் நான் காஞ்சியில் தேவ உடும்பரம் உள்ளது என்பதை

அறிந்தேன். அதனைத் தேடி வரும்போதுதான் உன்னைக் கண்டேன்.

"எனது பாட்டி, பாட்டன், தாய் ஆகியோரது கதை களெல்லாம் சோகமயமானது. பந்தங்கள் அமைந்தால் பிரிவு ஏற்படும் போது மிகவும் துன்பமாக இருக்கும் என்றுதான் நான் பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வில்லை. உன்னை முதல் முறை கண்ட போதே உனது சிறப்புகளை உனது நாடிச்சக்கரங்கள் தெளிவுபடுத்தி விட்டன. உனது குடும்பத்தில் மரணங்களும், பிரிவுகளும் நிறையவே நடக்கப் போவதை உணர்ந்தேன். அதனால் தான் உன்னை உனது குடும்பத்தில் இருந்தே பிரித்து அழைத்து வந்தேன். உன்னை உன்னதமான உயரத்திற்கு அழைத்து வந்திருக்கிறேன். சற்றே குனிந்து மலையின் கீழே பார். பதவிக்காக, சுகத்திற்காக, பணத்திற்காக ஒருவரையொருவர் வெட்டிக் கொண்டு, பழிதீர்த்துக் கொண்டு, மானிடர்கள் ஈடுபடும் செயல்களைப் பார். அரியணை பதவிக்காகச் செய்யப்படும் சதிகளையும், கொலைகளையும் பார். மற்றவர்களின் பாபங்களைக் கண்டு அவர்களுக்காக வருந்தும் உன்னைப் போன்றவர்கள் வாழத் தகுதியான இடம் துர்நாற்றம் வீசும் அரண்மனையா..? இல்லை இந்தப் பனிமலைச் சிகரமா..? நான் இதோ புறப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். நீ மேலும் மேலும் கீர்த்தியையும் புகழையும் பெறப் போகிறாய்." — பிரக்ஞுதாரா கூறி முடிக்க அவளைச் சற்றே வருத்தத்துடன் நோக்கினான், போதி தர்மன்.

"எனக்கு என்று இப்போது யாரும் இல்லை. நானும் இருந்து ஒன்றும் செய்யப் போவதில்லை. அந்தரத் தேகத்திற்கும், உபயத் தேகத்திற்கும் இடையே அல்லாடுகிறேன். என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். காஞ்சியைவிட்டு உங்கள் பின்பாக வந்தது போன்று, இந்த உலகத்தையும்விட்டு உங்கள் பின்பாகவே

வந்துவிடுகிறேன்..” — போதி தர்மன் சொல்ல, முதல் முறையாகப் பிரக்ஞுதாராவின் கண்கள் பனித்தன.

“போதி தர்மா! பலமுறை மரணத்தைச் சிலாகித்துப் பேசியவள் நான். ஆனால் இன்று தனிமரமாக உன்னை நிற்க வைத்துவிட்டு, நான் கிளம்பிப் போகிறேன் என்பதை நினைக்கும் போது எனக்கே வருத்தமாக இருக்கிறது. என்னால் தற்போது ஒன்றும் செய்ய முடியாத நிலை. இருப்பினும், எனது தவ வலிமையின் கடைசிப் பிரயோகம் உனக்கு உதவட்டும். உனக்கு நான் ஒரு வரம் தருகிறேன். மரணப் படுக்கையில் இருக்கும் என்னால் என்ன செய்ய முடியும் என்று நினைக்காதே. உனக்கு என்ன வேண்டுமோ கேள்! அதனைச் செய்து முடிக்கிறேன்!” — பிரக்ஞுதாரா கூற, போதி தர்மா அவளது கையை இன்னும் இறுக்கமாகப் பற்றினான்.

“தாயே! இப்போது நான் வேண்டுவது ஒன்றுமே இல்லை. மனது பரிபூரண ஆனந்தத்தில் நிலைத்துள்ளது. இருப்பினும், இப்போது ஒன்றை மட்டும் நான் தங்களிடம் கேட்க விரும்புகிறேன். உண்மையில் தங்கள் வசியத்தில் இருந்த எனது தந்தை சிம்மவர்மரை காக்க வேண்டும் என்பதற்காகவே என்னை நானே தங்களிடம் பணயமாகத் தந்து எனது குடும்பத்தைக் காப்பாற்றினேன். எனது சகோதரர்களும், எனது நாட்டு மக்களும் அனைத்துச் சதிகளுக்கும், கொலைகளுக்கும் காரணம் நான்தான் என்றே நினைத்திருப்பார்கள். சம்பவங்களும் அத்தகைய சந்தேகத்தினை ஊர்ஜிதம் செய்வது போன்றே அமைந்தன. நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கவும் வாய்ப்பில்லாமல் தங்கள் பின்பாகவே நான் புறப்பட்டு வந்துவிட்டேன். இன்று மற்றவர்களின் நினைப்பைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்றாலும், சான்றோர் படைத்த நாட்டின் இளவரசன் ஜெயவர்மன் ஒரு கொலைகாரன், கொள்ளைக்காரன், தம்பி, தங்கையின் மரணங்களுக்கே காரணமாக இருந்தவன் என்றெல்லாம்

நாளை சரித்திரம் கூறக் கூடாது அல்லவா. இன்று போதி தர்மனாக நான் உன்னத நிலையை அடைந்தாலும், போதி தர்மன்தான் பழைய பல்லவ இளவரசன் ஜெயவர்மன் என்பது யாருக்குத் தெரியப் போகிறது..? ஜெயவர்மன் குற்றமற்றவன் என்பது காஞ்சிக்கும், எனது குடும்பத்திற்கும் தெரிய வேண்டும், தாயே! எனக்கு அது போதும். இன்னும் அத்திமலையானையும், காஞ்சியையும், பல்லவத்தையும், முக்கூடல் கடிகையையும் மறக்க முடியாமல் தவிக்கிறேன்!" — வேதனை மிகுந்த குரலில் போதி தர்மன் கூறியதும், பிரக்ஞுதாராவின் கண்களில் கண்ணீர் திரள ஆரம்பித்தது.

"உனக்குள் இவ்வளவு வேதனைகளா போதி தர்மா? போதும்! நீ பௌத்தத்திற்குப் பணியாற்றியது போதும். காஞ்சிக்குச் சென்று உனது குடும்பத்தினருடன் சேர்ந்து கொள். உனது உறவுகளுடன் வாழ்ந்து வேதனைகளைத் துறந்துவிடு.." — தாரா கூற, தலையசைத்து மறுத்தான் போதி தர்மா.

"இல்லை தாயே! தலைமுறைகள் மாறிவிட்டன. குடும்பத்துடன் இனி ஒட்டாது. நான் இங்கேயே எனது காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். ஆனால், நான் குற்றமற்றவன் என்பதை எனது காஞ்சி உணர வேண்டும். அதற்கு மட்டும் நீங்கள் ஆசி வழங்கினால் போதும்." — போதி தருமன் கேட்க, அவனை வாஞ்சையுடன் பார்த்தாள், பிரக்ஞுதாரா.

"நியாயமான கோரிக்கை, போதி தர்மா! ஒருமுறை உன்னை ஜெயவர்மன் என்றே அழைக்கிறேன். உன் மீது எந்தப் பழியும் ஏற்படாது. உனது நல்ல மனதைப் பல்லவ நாடு மட்டுமல்ல, உலகமே புரிந்து கொள்ளும். உன்னால் சீனத்தில் பல்லவத்திற்குப் பெருமை. காஞ்சியில் உன்னால் சீனத்திற்குப் பெருமை. எல்லாப் பெருமை களும் உன்னைத்தான் சேரும். உனது குடும்பத்தினரும், நாட்டினரும் உன்னைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம்

விரைவில் கிட்டும். நீ மனதில் என்ன நினைக்கிறாய் என்று தெரிகிறது. தேவ உடும்பர சிலை அதற்குரிய இடத்திற்கு மீண்டு வரும். அந்தப் பழியில் இருந்தும் நீ மீளுவாய்.. எனது தவ வலிமையால் நீ கேட்கும் இந்த வரத்தைத் தருகிறேன். நீ கேட்காத மற்றொரு வரத்தையும் தருகிறேன்.

"நான் புறப்பட்டுச் சென்றதும் நீ தனியாக இருக்கப் போவதில்லை. யாங்சீ நதியின் கரையில் உனக்கு ஒரு மகன் கிடைப்பான். அவன் உனது பெயரை விளங்க வைப்பான். அவனை நீ மிக விரைவில் ஒரு ஆற்றங் கரையில் சந்திப்பாய். அவனை அழைத்து வந்து இங்கே வளர்த்து வா. ஒரு நாள் உலகத்தையே அவன் சுற்றுவான். அப்போது காஞ்சிக்கு நிச்சயம் செல்வான். பல்லவ இளவரசன் ஜெயவர்மன் குற்றமற்றவன் என்பதை உனது குடும்பத்திற்கும் நாட்டு மக்களுக்கும் புரிய வைப்பான். அவனால் உனது புகழ் பல்லவத்தில் பரவும். இது நீ கேட்காமல் நானாக வழங்கும் ஆசி!" — என்று பிரக்ஞுதாரா கூற, உருக்கத்துடன் அவளது கையைப் பற்றியபடி அவளது கண்களினுள் நோக்கினான்.

அரசனையும் ஆண்டியையும், கற்றவனையும் கல்லாதவனையும், நல்லவனையும் வல்லவனையும், பாரபட்சம் இன்றித் தனது நோக்கு பார்வையால் வசியம் செய்திருந்த தாராவின் கண்கள் சிறிது சிறிதாக ஒளியை இழந்து பிறகு ஒரேயடியாக மூடிக் கொண்டன.

பிரக்ஞுதாராவின் தேகத்தைப் புதைத்துவிட்டு, அவளுக்காகப் பிரார்த்தனையை போதி தர்மா நிறைவேற்றிய அதே நேரம் ஷென் குவின் என்னும் வீரன் ஷோலின் விஹாரத்தில் நுழைந்தான்.

"போதி தர்மர்! யாங் மன்னர் உங்களை உடனே செங்டுவிற்கு வரும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். ஜென் மன்னர் செங்டுவையும், சூய் பரம்பரையையும்

அழிப்பதாகச் சபதம் செய்திருக்கிறார். யாங்சீ நதியின் கரையில் போர் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் உங்களது உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்" என்றதும், பிரக்ஞுதாராவின் ஆசி நினைவுக்கு வர, சூ சிங்கை நோக்கி போதி தர்மா தலையசைக்க, அவனது பயணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்காகச் சூ சிங் விரைந்தான்.

செங்டு, சூய் நாட்டின் தலைநகரம் என்றாலும் கோஷி நகரம்தான் நாட்டின் ஞானத்தின் தலைநகரம் எனலாம். பல்லவம் சான்றோரை உடைத்து என்பதற்கு ஆதாரமாகக் காஞ்சி நகரம் திகழ்ந்தது போன்று, சூய் பரம்பரைக்குப் பெருமையாகத் திகழ்ந்தது, கோஷி நகரம். கன்பூசிய* தத்துவங்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தது கோஷி நகரம். போதி தர்மாவின் இலங்காவதாரா தந்திரத்தை அறிந்து ஷோலின் என்கிற சூலினி கோட்டத்தின் நியமங்களை ஏற்றுக் கொண்டிருந்தனர். சூய் பரம்பரையின் குலக் குருவாகவே மாறிவிட்டிருந் தான், போதி தர்மா.

**கோகுரியோ ராஜ்யத்தினை ஆண்ட ஜென் பரம்பரையினரும், சூய் பரம்பரையினரும் பரம வைரிகள். யாங்சீ ஆற்றின் வடக்கே அமைந்திருந்தது சூய் நாட்டின் தலைநகரம் செங்டு. ஆற்றின் தெற்கே அமைந்திருந்தது கோகுரியோ.

உலகிலேயே முதன்முறையாகவும், மிகப் பெரிய தாகவும், மஞ்சள் நதி மற்றும் யாங்சீ நதியை இணைத்து

* கன்பூசியஸ் (Confucius (551-479 BC) சீனத் தத்துவஞானி.

** கோகுரியோ ராஜ்யம் தற்போது கொரியாவின் மாகாணமாக உள்ளது.

Sui Dynasty was founded by Emperor Wen of Sui, its dynasty capital was Chang'an (which was renamed Daxing, 581-605) and later Luoyang (605-618).

*ஒரு செயற்கை ஆற்றினை உருவாக்கிக் கால்வாய்*** ஒன்றை எழுப்ப முடிவு செய்தார் சூய் சக்கரவர்த்தி யாங். இதற்கு ஜென் மன்னர் எதிர்ப்பைத் தெரிவித்தார்.*

*ஜென் மன்னரது எதிர்ப்பை அலட்சியம் செய்த. சூய் சக்கரவர்த்தி யாங், கால்வாய்ப் பணிகளைத் துவக்க, ஜென் படைகள் யாங்சீ நதியினை ஆக்கிரமிக்க, இரு தேசங்களுக்கும் இடையே மூண்ட போரில் சூய் படையினர் படுதோல்வியைச் சந்தித்தனர். இருப்பினும், யாங் கால்வாய்ப் பணியினைத் தொடர்ந்து மேற் கொள்ள, மீண்டும் ஜென் படையினர், போர் கப்பல்களை அனுப்ப, மீண்டும் இரு நாடுகளும் போரிட்டன. இம்முறையும் சூய் படைகளுக்குத் தோல்வி.*

*இருப்பினும், கால்வாய்ப் பணிகளைத் தொடருவதில் குறியாக இருந்தார், யாங் சக்கரவர்த்தி. இருமுறை பொறுமை காட்டிய ஜென் மன்னர், இம்முறை பகிரங்கமாக ஒரு எச்சரிக்கையை விடுத்தார்.*

*‘மீண்டும் சூய் பரம்பரையினர் கால்வாய்ப் பணிகளைத் துவக்கினால், இம்முறை, சூய் தேசத்தையே*

*** திபெத் பகுதியில் உருவாகும் யாங்சி நதி மேற்கு வடக்காக மஞ்சள் மலைத்தொடரின் வழியாக ஓடி, ஷாங்காய் நகரில் கடலில் கிழக்குக் கடலில் கலக்கின்றது. சீனத்தின் தாய் நதி என்று அழைக்கப்படும் யாங்சி நதியின் நீளம் 6418 கி.மீ. சீனா மற்றும் ஆசியாவின் மிக நீளமான நதி. உலகின் முதல் கால்வாயினைக் கி.பி. 605 இல் சூய் பரம்பரையினர் எழுப்பினர். மஞ்சள் மலையில் ஓடும் மற்றொரு நதியான மஞ்சள் நதி மற்றும் யாங்சீ நதியினையும் இணைத்தது இந்தச் செயற்கை கால்வாய்.

(The Grand Grand Canal, known to the Chinese as the Jing-Hang Grand Canal) (Chinese: 京杭大运河; pinyin: Jîng-Háng Dà Yùnhé; literally: “Beijing-Hangzhou Grand Canal”), a UNESCO World Heritage Site, is the longest as well as the oldest canal or artificial river in the world.[1] Starting at Beijing, it passes through Tianjin and the provinces of Hebei, Shandong, Jiangsu and Zhejiang to the city of Hangzhou, linking the Yellow River and Yangtze While residing in the city of Luoyang (in Henan in Central China).

அழித்துவிடுவோம்' என்கிற செய்தியைத் தாங்கி வந்திருந்தான் ஜென் மன்னரின் தூதன்.

தூதரிடம் ஓலையை வாங்கிப் படித்த சக்கரவர்த்தி யாங், சிவந்த கண்களுடன் அவனை வெறித்துப் பார்த்தார். அடுத்தகணம் தனது குத்து வாளினை அவன் மீது வீசி எறிய, கோகுரியோ ஜென் மன்னரின் தூதன் அங்கேயே பிணமாக விழுந்தான்.

செய்தியை அறிந்த கோகுரியோ பரம்பரையினர் வெகுண்டு போயினர்.

ஜென் மன்னன் வெறியுடன் படைகளைத் திரட்டத் துவங்குவதை அறிந்த யாங், வீராவேசமாகப் பேசினான்.

"வருவது வரட்டும். நமது படைகளைத் திரட்டுங்கள். கால்வாய் அமைந்தே தீரும்!" என்றதை அவனது அமைச்சர்களே ரசிக்கவில்லை.

இம்முறை யாங்கின் அமைச்சர்களே ஒன்று திரண்டு கால்வாய் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மீண்டும் ஜென் மன்னர்களுடன் போரிட வேண்டாம் என்று வேண்டிக் கொண்டனர். இருமுறை கோகுரியோ படைகளிடம் தோல்வியையும், சேதத்தினையும் அடைந்ததை யாங்கிற்கு நினைவுப்படுத்தினர். ஆனால் யாங் தனது பிடிவாதத்தைக் கைவிட மறுத்தார்.

"நீங்கள் ஜென் மன்னனுக்குப் பயந்து உலகின் மிகப் பிரம்மாண்டமான கால்வாய் அமைவதை எதிர்க்கின்றீர்கள். நான் அந்தக் கால்வாயை அமைத்தே தீருவேன். உங்களுக்குப் போரிட அச்சமாக உள்ளது என்றால், நான் போதி தர்மாவைக் கொண்டு ஜென் படைகளைச் சமாளிக்கிறேன்!" என்று சூளுரைத்த யாங், தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான சென் குவின் என்பவனைக் கோஷு மலைக்கு அனுப்பி, போதி தர்மாவிடம் நிலைமையைக் கூறி அவனைக் கையோடு அழைத்து வரச் சொல்லியிருந்தான்.

போதி தர்மா குவின்னுடன் செங்குவிற்குச் சென்ற போது அரண்மனையில் மட்டுமன்றி, தலைநகரம் செங்குவே குழப்பத்தில் காணப்பட்டது. போதி தர்மாவைக் கண்டதும் யாங் நேரிடையாக விஷயத்திற்கு வந்தார்.

"போதி தர்மா! மஞ்சள் நதியையும் யாங்சி நதியையும் இணைத்து உலகிலேயே முதல் பிரம்மாண்டக் கால்வாய் ஒன்றை உருவாக்க முயல்கிறேன். ஆனால் ஜென் மன்னர் எனது திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். இருமுறை எங்கள் இரு நாடுகளுக்கும் போர் மூண்டது. ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேரைக் கொண்ட ஐந்து வகைப் படைகளை* கொண்டுதான் ஜென் மன்னரிடம் மோதினேன். ஆனால் படைபலம் இருந்தும் ஜென் மன்னரின் வலுவான கப்பல் படையின் முன்பாக எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இருமுறை தோல்வியுற்றோம். இந்த முறை எப்படியும் அவர்களை வெல்ல வேண்டும். அதற்கு உனது உதவி தேவை.." யாங் சக்கரவர்த்தி கூற, அவருடனும், படைத்தளபதிகளோடும் யாங்சி நதியின் கரையை அடைந்தான்.

"லவ்சு என்கிற பெரிய கலம் ஒன்றை யாங்சி ஆற்றின் மையத்தில் நிறுத்திக் கப்பலில் இருந்து ஏவுகணைகளைச் செலுத்துவதால், எனது வீரர்களால் தாக்குப் பிடிக்க இயலவில்லை!" யாங் கூறினான்.

"யாங்சி ஆற்றில் பெரிய கலத்தைச் செலுத்துகிறார்கள் என்றால் திறமையானவர்கள்தான்.." தனக்குள் கூறிக் கொண்ட போதி தர்மாவின் கண்கள் சற்றே பனித்தன. மஞ்சள் நதி, யாங்சி நதி மற்றும் லோயி என்கிற சிற்றாறு மூன்றும் அருகருகே ஓடியும் சங்கமம் ஆகாமல் தங்களது தனித்தன்மையைக் கிழக்குக் கடலில் கலக்கும் வரை

* யாங் மன்னரின் படைகள் Five Barbarian Forces என்று அழைக்கப்பட்டது. ஐந்து படைகளின் தலைவர்களும் மிகவும் கொடிய மனம் படைத்தவர்கள் என்பதால் இந்தப் பெயர்.

நிலைநாட்டின.. பாலாறு, செய்யாறு, வேகவதி போன்று சங்கமமாகி ஒற்றுமையை நிலைநாட்ட இந்த நதிகளுக்கு விருப்பமில்லை போலும். இவனது சீடனாகத் திகழும் யாங் மன்னர் கால்வாய் வெட்டுவதன் மூலம் சங்கமத்தை உண்டாக்க நினைக்கிறான். ஆனால் மஞ்சள் நதி ஜென் மன்னரின் நாடு கோகரியோ வழியாக ஓடுவதால், அவர்களுக்குத் தங்கள் நதியை யாங்சி நதியுடன் இணைக்க விருப்பமில்லை என்பதை யூகித்தான், போதி தர்மா.

யாங்சி நதி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்தது. மஞ்சள் நதி தெற்கிலிருந்து வடக்காகப் பாய்ந்தது. லோயி ஆறு, வடக்கிலிருந்து தெற்காகச் சூய் தலைநகரம் செங்டு வழியாகப் பாய்ந்து யாங்சியில் கலந்தது. இந்தக் கால்வாயை வெட்டுவதன் மூலம் மூன்று நதிகளும் சங்கமமாகும். யாங்கின் யோசனை பாராட்டுதலுக் குரியதுதான். அநியாயப் போர் என்றால் போதி துணை போவதற்கு யோசித்திருப்பான். யாங்கிற்கு நல்ல போதனைகளைச் செய்திருப்பான். ஆனால் யாங் முக்கூடலை அல்லவா உருவாக்கப் பார்க்கின்றான்..? அவனுக்கு உதவ வேண்டியதுதான்.

போதி தர்மா யாங்சி நதியை மேலும் கீழுமாகப் பார்த்தான். இருபுறம் அடர்ந்திருந்த மரங்களையும், அவற்றின் பின்பாக மதில்சுவர் போன்று நின்ற மலைச் சரிவுகளையும் பார்த்தான். சற்று நேரம் யோசித்தவன், சூய் படைத்தளபதிகளைப் பார்த்தான்.

"ஜென் மன்னரின் லவ்சு கப்பல் ஆற்றின் மையத்தில் சரியாக எங்கே நிற்கும்..?" — போதி தர்மா கேட்டதும், ஒரு படைத்தளபதி சிறிய தோணி ஒன்றில் ஏறிச்சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தை வலம் வந்து காட்டினான்.

"அங்கு நின்றுதான் அவர்கள் ஏவுகணைகளைச் செலுத்துகிறார்கள்..!" — யாங் சக்கரவர்த்தி கூறினார்.

போதி தர்மா, லவ்சு என்கிற கலம் நிற்கும் ஆற்றிற்கும், கரைக்கும், கரைக்குப் பின்பாக இருக்கும் அடர்ந்த காட்டினையும் கண்களால் அளந்தான். தனது யோசனை பலிதம் ஆகும் என்கிற திருப்தியுடன சக்கரவர்த்தி யாங்கைப் பார்த்தான்.

“சக்கரவர்த்தியே! அதோ படைத்தளபதியின் தோணி நிற்கும் இடத்தில்தான் ஜென் மன்னரின் லவ்சு ஏவுகணை நிற்கும் என்றால், அதற்கு நேர் எதிராக வலுவான இரும்புச் சாரம் ஒன்றை எழுப்புங்கள். ஐம்பது யானைகளின் எடையுள்ள மிகப்பெரிய இரும்பு உருளை ஒன்றை அந்தச் சாரத்தில் ஊசலாடச் செய்து அதனை வலுவான ஸ்தம்பங்களை எழுப்பி அவற்றில் பிணையுங்கள். இரும்புச் சாரங்கள், ஸ்தம்பங்கள் மற்றும் இரும்பு உருளை அனைத்தையும் இலைகளாலும், தழைகளாலும் மறைத்து வையுங்கள்” என்றான் போதி தர்மா.

தர்மா கூறியதை நிறைவேற்ற, விரைவாகச் செயல் பட்டார்கள். அவ்வப்போது அவர்கள் பணியை மேற்பார்வையிட்ட போதி தர்மா, மீண்டும் மீண்டும் ஆற்றின் மையப் பகுதிக்கும், கரை மற்றும், வீரர்கள் எழுப்பும் இரும்புச் சாரத்திற்கும் இடையேயான இடைவெளியை கண்களால் அளந்து கொண்டிருந்தான்.

பணிகள் முடிந்தது. நடுநிசியில் ஒருமுறை வெள்ளோட்டம் ஒன்றைப் புரிந்து, தனது திட்டம் பலிதம் ஆகுமா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

மறுநாளே —

ஜென் மன்னரின் லவ்சு கலம், சிறு ஓடங்கள் சுற்றி வர, யாங்சி நதியில் வழக்கமாக தான் நிற்கும் இடத்தில் வந்து நின்றது. ஜென் மன்னரின் படையினர், ஏவுகணைகளைக் குறிபார்த்துக் கொண்டிருந்த சமயம், மரங்களின் பின்பாக மலைச்சரிவில் ஸ்தம்பங்களின்

அருகே கையில் கோடரிகளுடன் நின்றிருந்தனர். சாரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நீண்ட இரும்புக் கம்பியில் கனத்த இரும்பு உருளை ஒன்று இணைக்கப்பட்டிருந்தது. அந்த நீண்ட கம்பியைக் கயிற்றினில் பிணைத்து மலைச்சரிவில் அமைக்கப் பட்டிருந்த இரு ஸ்தம்பங்களில் பிணைத்திருந்தனர். பிணைத்திருந்த அந்தக் கயிற்றைத் துண்டிக்கத்தான் அந்த இரு வீரர்களும் கையில் கோடரிகளுடன் நின்றிருந்தனர்.

போதி தர்மா தனது முகத்தைக் கரிய துணியால் மூடியிருந்தான். தனது கண்களை மட்டும் வெளியே காட்டி லவ்சு கலத்தையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான்.

கலத்தில் வீரர்கள் ஏவுகணைகளைத் தயார் செய்வதைக் கண்டதும், திரும்பி மலைச்சரிவில் நின்றிருந்த அந்த இரு வீரர்களை நோக்கினான். தனது முகத்திரையை நீக்கிக் கையில் இருந்த துணியைக் காற்றில் வீசி,

"ம்ம்.. கயிற்றைத் துண்டியுங்கள்!" என்று கூவினான்.

அடுத்தகணம் —

ஸ்தம்பங்களில் பிணைக்கப்பட்டிருந்த கயிற்றைத் துண்டித்தனர், அந்த வீரர்கள்.

எப்போது தன்னை விடுவிப்பார்கள் என்கிற துடிப்பில் இருந்ததோ அந்த உருளையுடன் கூடிய இரும்புக் கம்பி. குறுக்கே நின்ற செடிகளையும், மரங்களையும் நாசம் செய்து கொண்டு ஆற்றை நோக்கிப் பாய்ந்து, அனுமன் கடலைக் கடப்பது போன்று காற்றில் பாய்ந்து லவ்சு கலத்தைக் குறி வைத்து விரைந்தது.

கரிய உருளை ஒன்று பறந்து வருவதைக் கவனித்த ஜென் படையினர் திகைப்புடன் வாய் பிளந்து நிற்க, அந்த உருளி லவ்சு கலத்தைத் தாக்கி உடைத்தது. கலம்

இரண்டாகப் பிளந்து நீரில் மூழ்க, ஜென் மன்னரின் ஏவுகணைக் கலம் சுக்கு நூறாகி ஆற்றில் மூழ்குவதைக் கண்டு சிறு தோணிகளில் இருந்த ஜென் வீரர்கள் சிதறி ஓடினர்.

சூய் வெற்றி பெற, யாங் பாய்ந்து வந்து போதி தர்மாவை அணைத்துக் கொண்டார். அதன் பிறகு கால்வாய்* பணிகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டு, நிறைவும் பெற்றன. அதன் பிறகு நிகழ்ந்த சம்பவங்கள் பௌத்தத்தைப் பின்பற்றிய இரு நாடுகளுக்குமே தலைகுனிவைத் தந்தது.

சூய் மன்னர் யாங்கைக் கொல்ல நினைத்த ஜென் மன்னர், யாங்கின் மீது அதிருப்தியில் இருந்த அமைச்சர்களை விலைக்கு வாங்கி, அவர்களை யாங்கின் மீது ஏவிவிட்டான். உறங்கிக் கொண்டிருந்த யாங் அவனது மஞ்சத்திலேயே வெட்டிச் சாய்க்கப்பட்டான்.

யாங்கின் அரசியல் ஆலோசகர் சென் ஹுய் அதனைத் தடுக்க முயன்ற போது அவரும் கொல்லப் பட்டார்.

பதிலடியாக யாங்கின் ஆதரவாளர்கள், ஜென் அரச குடும்பத்தின் ஐம்பத்து ஒன்பது பேரை வெட்டிக் கொன்றனர். இரு நாட்டிற்கும் இடையே பழிக்குப் பழி வாங்கும் கொலைகள் தொடர, யாங்சியில் இரத்த ஆறு ஓடி, கால்வாய் வழியாகப் பாய்ந்தது. மஞ்சள் நதியில் பெருகிய ஜென் ரத்தமும், லோயி ஆற்றில் பெருகிய சூய் ரத்தமும் கால்வாயின் வழியாக ஓடி யாங்சியில் சங்கமமாகியது.

ஜென் படையினரின் தாக்குதலில் குற்றுயிரும் குலையுயிருமாக ஷேன் குவின் கோஷு மலைக்கு வந்து போதி தர்மாவிடம் நடந்ததைக் கூறினான், உடனே

* சூய் பரம்பரையினர் கட்டிய, The Grand Canal இன்றும் UNESCOவின் Heritage site ஆகத் திகழ்கிறது.

செங்டுவுக்கு விரைந்த போதி தர்மா கனத்த இதயத்துடன் யாங்சி ஆற்றங்கரையில் உலவிக் கொண்டிருந்தான்.

சனாதனத்தில் வன்முறை அதிகம். தங்கள் மார்க்கமே அமைதியானது என்று பல்லவத்தில் பிரசாரம் செய்யும் சமணமும், சாக்கியமும், தங்களைப் பின்பற்றும் மன்னர்களிடையே வன்முறையை நீக்கத் தவறியதே..? சனாதனத்தைப் பழித்துத் தங்களது கொள்கைகளை உயர்த்திப் பேசும் எந்த மார்க்கமும் தங்களை ஏற்றுள்ள நாடுகளில் அமைதியை நிலைநாட்டத் தவறி விட்டனவே..? பிறகு பல்லவ நாட்டில் வந்து எந்த முகத்துடன் உபதேசம் செய்கிறார்கள். முதன்முறையாகப் பல்லவத்தைவிட்டு வந்தது தவறோ என்று நினைக்கத் துவங்கினான், போதி தர்மா.

அப்போது —

அழுகுரல் ஒன்று கேட்டது.

திடுக்கிட்ட போதி தர்மா சுற்றுமுற்றும் பார்க்க, பத்துப் பிராயங்களே நிரம்பிய ஒரு பிக்கு சுமக்க முடியாமல் ஒரு பிணத்தைச் சுமந்து கொண்டு ஆற்றங்கரையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அவனை நோக்கி நடந்த போதி தர்மா, அவனிடம் இருந்து அந்த உடலை வாங்கித் தனது தோளினில் சரித்துக் கொண்டான்.

அந்தச் சிறுவனை பரிவுடன் நோக்கினான், போதி தர்மா.

"பாலகப் பிக்குவே! நீ யார்?"

"எனது பெயர் சென்யி. இது எனது தந்தை ஷேன் ஹுய். எனது தந்தை யாங் சக்கரவர்த்தியின் ஆலோசகர். மன்னரைக் காக்க முற்பட்ட அவரை வெட்டிக் கொன்று விட்டனர், எதிரிகள். எனது குடும்பத்தினர் யாரும் மிஞ்சவில்லை. நான் மட்டுமே தப்பியுள்ளேன். இனி

என்ன செய்யப் போகிறேனோ தெரியவில்லை..?" — சென்யி கதறி அழ, அவனை மற்றொரு கையால் அணைத்துத் தனது பக்கம் இழுத்துக் கொண்டான், போதி தர்மன். சிறுவனின் தந்தையைப் புதைத்துவிட்டு, அவனை அழைத்துக் கொண்டு கோஷு மலைக்குப் பயணித்துக் கொண்டிருந்தான். பிரக்ஞுதாரா கூறியது போன்று அவனுக்கு யாங்சி ஆற்றங்கரையில் ஒரு மகன் கிடைத்துவிட்டிருந்தான்.

அந்த மகன் ஜெயவர்மன் என்கிற போதி தர்மாவின் மனக்குறையைத் தீர்க்கப் போகிறான்.. அந்தச் சிறுவன்தான் வருங்காலத்தில் உலக யாத்திரையை மேற்கொண்ட புத்த பிக்கு ஹுயன் சாங்.* ஜெயவர்மன் தனது இறுதிக் காலத்தின் போது பல்லவத்திற்கு விடும் செய்தியைச் சுமந்து கொண்டு வந்து நரசிம்மவர்மப் பல்லவனைச் சந்தித்து அவனிடம் வழங்கப் போகிறான்.

* Xuanzang was born Chen Hui (or Chen Yi) around 602 in Chenhe Village, Goushi Town (Chinese: ñ}l®"), Luozhou (near present-day Luoyang, Henan) and died on 5 February 664[8] in Yuhua Palace in present-day Tongchuan, Shaanxi). His family was noted for its erudition for generations, and Xuanzang was the youngest of four children. His ancestor was Chen Shi, a minister of the Eastern Han dynasty.

# 14. மல்லனை மாற்றிய வல்லன்

கதிரவனுக்கு மறைவதற்கே விருப்பமில்லை என்பது போன்று அன்றைய அஸ்தமிக்கும் பொழுது நெருங்கிக் கொண்டிருந்தும், தனது வெப்பத்தையும் குறைத்துக் கொள்ளாமல், தனது கிரணங்களையும் மீண்டும் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்ளாமல் பல்லவத்தையே சுற்றி வந்து கொண்டிருப்பது போன்று தோன்றியது. அதற்குக் காரணம் உண்டு. முக்கூடல் கடிகையின் உள்ளே இருந்த களரியில் இளங்குமரர்கள் சிலர் உற்சாகத்துடனும், பெரும் ஆரவாரத்துடனும் மற்போரில் ஈடுபட்டிருந்தனர். திமிறும் உடற்தசைகளும், முறுக்கேறிய நரம்புகளும், உடலில் பெருகும் வேர்வையாறும், காணும் எவருக்குமே களரியில் இறங்கி மற்போர் புரியும் ஆவல் தொற்றிக் கொள்ளும்.

யானைக் கூட்டங்களிடையே புகுந்த சிம்மமாக ஒரு இளங்குமரன் தன்னுடன் மோதிய மல்யுத்த வீரர்களை அனாயாசமாகத் தூக்கிச் சுழற்றி வீசிக் கொண்டிருந்தான். அவனது நெடிய தேகமும், முரட்டுத்தனமான தோற்றமும், கண்களில் மிகுந்திருந்த அலட்சியமும், மற்ற வீரர்களிடையே அச்சத்தையும், பொறாமையையும் தோற்றுவித்தன. கடிய பணிகளைப் புரிந்து காய்த்துப் போய் இருக்கும் தங்களது கரங்கள், அரண்மனைவாசி யாகச் சுகபோகங்களை அனுபவித்து, ஏவலாளர்களைக் கொண்டு தனது பணிகளைச் செய்து கொள்ளும் ஒரு சுகவாசியிடம் தாங்கள் தோற்று நிற்பதை எண்ணி வெட்கித் தலைகுனிந்தனர். "ஜெய் ரிஷபத் தேவா!" — என்று சமணத் தீர்த்தங்கரர்களில் ஒருவரான ரிஷபத்

தேவரை ஒவ்வொரு மல்யுத்த வீரனை வீழ்த்தும் போதும், அந்த இளங்குமரன் அழைத்தான்.

மல்யுத்த வீரர்களிடையே அச்சத்தையும், பொறாமையையும் தோற்றுவித்திருந்தவன், பல்லவ யுவராஜன், மகேந்திரன். தேவேந்திரனைப் போன்று எல்லாச் சிறப்பு அம்சங்களையும் கொண்டவன். யௌவனம் அவனை அரவணைத்துக் கொள்ள, அந்தப் பருவத்திற்குரிய தாகங்கள் அப்போதுதான் அவனுள் தோன்றத்துவங்கி இருந்தன. தன்னைச் சுற்றி நின்ற அத்தனை வீரர்களையும் வெற்றி கொண்டுவிட்ட நிலையில், இன்னும் யாராவது இருக்கின்றனரா என்பது போன்று தன்னைச் சுற்றிப் பார்த்தவன், பிறகு ஒத்துவராடை ஒன்றை எடுத்துத் தன்னைத் துடைத்துக் கொண்டபடி ஒரு பாறையின் மீது அமர்ந்து கொண்டான். மகேந்திரனின் கண்கள் தனது நண்பர் குழாமைத் தேடின. அவர்கள் களரியின் வாயிலில் நின்று எதைப் பற்றியோ தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

மகேந்திரன் கலைகளை மட்டும் அல்ல, கலகலப்பையும் விரும்புபவன். தன்னைச் சுற்றிக் கலையுணர்வு மிக்க நண்பர்கள் எப்போதும் இருக்க வேண்டும் என்று நண்பர்களை மிகவும் கவனத்துடன் தேர்ந்தெடுத்திருந்தான். ஒவ்வொரு கலைக்கும் ஒருவன் என்னும் விதமாக ஒன்பது நண்பர்களைக் கொண்டிருந் தான். சிற்பி, ஓவியன், நடனக் கலைஞன், பலகுரலில் பேசுபவன், ஆழ்கடல் நீச்சல் தெரிந்தவன், உலக நாடு களுக்குப் பயணிப்பவன், சாமுத்ரிகா லட்சணங்களை அறிந்தவன், வாஸ்து கலைகளை, மிருகங்களின் எண்ணங் களை அறிபவன், மூலிகை மகிமைகளை அறிந்தவன் என்று அவனது ஒன்பது நண்பர்களும் மிகவும் திறமைவாய்ந்தவர்கள், எப்போதும் மகேந்திரனைச் சுற்றி அமர்ந்திருப்பார்கள். தேவேந்திரனை அஷ்டதிக்

பாலகர்கள் சுற்றி அமர்ந்திருப்பதைப் போன்று, மகேந்திரனைச் சுற்றி அவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

ராஜவாகன், மலரவன், அபஹாரன், நிலவன், தொண்டரையன், அர்த்தபாலன், மித்ரகுப்தன், மந்திரகுப்தன், விஸ்ருதன் என்கிற மகேந்திரனின் ஒன்பது நண்பர்களையும் நவகுமாரர்கள் என்று காஞ்சியில் அழைப்பது வழக்கம். வருங்கால அரசனின் நண்பர்கள் என்பதால் நவகுமாரர்களுக்கு மதிப்பும், மரியாதையும் தரப்பட்டாலும், தருமமிகு காஞ்சி வாசிகளுக்கு நவகுமாரர்களின் மீது பெரும் அதிருப்தி நிலவியது. சனாதனப் பாசறையான தருமமிகு காஞ்சியில் களப்பிரர் அறிமுகம் செய்வித்திருந்த சமணத்தின் பக்கம், மகேந்திரனை* இட்டுச் சென்றிருந்தனர், நவகுமாரர்கள். ஓங்கி உயர்ந்த விண்ணகரக் கோபுரங்களும், சிவாலயத்தின் தெய்விக மணியோசையும், மகேந்திரனை ஈர்க்கவில்லை. சமணத் தீர்த்தங்கரர்களின் போதனையில் கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். இதனால், காஞ்சிவாசியினர், நவகுமாரர்களின் மீது கோபம் கொண்டிருந்தனர்.

முகத்தைத் தனது மேல்வஸ்திரத்தால் துடைத்தபடி தனது நண்பர்களை நோக்கி நடந்தான், மல்லன். களரியின் பணியாள் தட்டு ஒன்றில் நீட்டிய எலுமிச்சை பானம் நிறைந்த பாக்கு மட்டை குவளையைப் பெற்றுக் கொண்டு, பானகத்தை ஒரு கையால் உறிஞ்சியபடி நண்பர்களை அடைந்தான்.

"நவகுமாரர்களிடையே என்ன பிரச்சனை! எதனைக் குறித்து இவ்வளவு தீவிர ஆலோசனை?" — மகேந்திரன் கேட்டான்.

---

* இரண்டாம் நந்திவர்மன் காலத்திய உதயேந்திரம் செப்பேடுகளில் சிம்மவிஷ்ணு பல்லவன் விஷ்ணுவின் (அத்திமலைத்தேவன்) தீவிர பக்தன் என்று பதிவிடப்பட்டுள்ளது. அவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன் சமண மதத்தில் இருந்து, பிறகு அப்பரால் சைவத்திற்கு மாற்றப்பட்டவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*உபஹாரன் என்பவன் மகேந்திரனைத் திரும்பிப் பார்த்தான்.*

*"மாமல்லா,* உன்னை அர்ப்பணன்சேரி** கிராமத்திற்கு அழைத்துச் செல்லலாமா வேண்டாமா என்றே விவாதம் செய்து கொண்டிருக்கிறோம்." — உபஹாரன் கூற, குவளையில் எஞ்சியிருந்த பானகத்தை உறிஞ்சியபடி ஓரக்கண்ணினால் அவனைப் பார்த்தான் மகேந்திர மல்லன்.*

*"அங்கே என்ன விசேடம்?" — மகேந்திரன் கேட்க மலரவன் என்பவன் கரிசனத்துடன் மகேந்திரனின் கரத்தில் இருந்த ஒத்துவராடையினைப் பறித்து அவனது முதுகினைத் துடைக்க, ராஜவாகனன் என்பான் மகேந்திரனை நெருங்கி வந்தான்.*

*"பல்லவ இளவரசன் நீ. களரியின் வெளியே உலகம் ஒன்று இருக்கிறது என்று எப்போது உணரப் போகிறாய், மல்லா? நமது சமணப் பசடியைச் சேர்ந்த தருமசேனர் என்பவருக்கு இன்று தண்டனை வழங்க உள்ளாரே, சமண குரு பலிதானா! தீர்ப்பின் முடிவைக் கேட்கும் ஆவலில்தான் அர்ப்பணன்சேரிக்குப் போக நினைக்கிறோம்." — ராஜவாகனன் கூறினான்.*

*"யார் அந்த தருமசேனர்?" மாமல்லன் பாக்கு மட்டை குவளையை அலட்சியமாக வீசி ஏறிந்தபடி மீண்டும் தான் அமர்ந்திருந்த பாறையை நோக்கி நடக்க, நவகுமாரர்களும் அவனைப் பின்தொடர்ந்தனர்.*

---

* மல்யுத்தத்தில் மிகவும் வல்லவனாகத் திகழ்ந்த மகேந்திரனை அவனது நண்பர்கள் மட்டுமல்ல, பல்லவ மக்களே மல்லன் என்றே அழைத்தனர்.

** அர்ப்பணன்சேரி என்பது சமணர்கள் வசித்த ஒரு கிராமம். இங்கே அரப்பு மரங்கள் நிறைந்த காட்டில், ரிஷபதேவர் என்கிற திகம்பரச் சமணத் தீர்த்தங்கரருக்குச் சமணப் பசடி இங்கே இருந்தது. அதன் தலைமை குரு பலிதானா.

தங்களில் யார் அவனுக்குப் பதிலளிக்கப் போகிறார்கள் என்று நவகுமாரர்கள் ஒருவரையொருவர் கேள்வியுடன் பார்க்க, அபஹாரன்தான் அவனுக்குப் பதிலளித்தான்.

"திருவாமூர்* பகுதியைச் சேர்ந்த மருள்நீக்கியார் சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பாடலிபுத்திரம் சென்று கல்விகற்றுச் சமணத்தைத் தழுவி, தருமசேனர் என்று பெயர் மாற்றம் பெற்று, நமது குரு பலிதானாவை குருவாக ஏற்றார். திடீரென்று மீண்டும் சைவத்திற்குத் திரும்பிய அவரை நமது சமண குரு கைது செய்து, விசாரணை நடத்திப் பசடி சிறையில் அடைத் துள்ளார். இன்று அவருக்குத் தீர்ப்பு வழங்கப்படுகிறது. அதைக் கேட்பதற்குத்தான் அர்ப்பணன்சேரி செல்ல விரும்புகிறோம்!" — அபஹாரன் கூறினான்.

சைவ வெள்ளாளர் குலத்தில் புகழனார் மற்றும் மாதினி இணையருக்கு மகனாகப் பிறந்தவர் திருநாவுக்கரசர் என்கிற அப்பர். இவருடைய இயற்பெயர் மருள்நீக்கியார் ஆகும். இளமையில் சைவ சமயத்தினை விட்டுச் சமண சமயத்தவரானார். சமண நூல்களைக் கற்று அம்மதத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். அப்போது தருமசேனர் என்று அழைக்கப்பட்டார். இவருடைய சகோதரி திலகவதியார்.

"வந்த இடத்திற்கே திரும்பிச் சென்றுவிட்டார்! இதற்கு ஏன் விசாரணை, தண்டனை!" — மல்லன் திகைத்தான்.

"நமது தத்துவங்களைக் கற்று உணர்ந்துவிட்டு மீண்டும் மார்க்கத்தை மாற்றினால், நமது திகம்பரத்தைக் கொச்சைப் படுத்துவார்களோ என்கிற ஐயம்தான்.

* பசுபதீசுவரர் திருக்கோயில், திருவாமூர், திருக்கோயிலூர் (வழி), பண்ருட்டி (அஞ்சல்) அப்பர் என்னும் திருநாவுக்கரசர் சுவாமி அவதரித்த இடம். கடலூர் மாவட்டத்தில் உள்ளது. பண்ருட்டியிலிருந்து மேற்றிசையில் 8 கி.மீ-ல் கெடில நதியின் வடகரையில் இக்கோயில் உள்ளது.

*இப்போதெல்லாம் காதலன் காதலியை மாற்றுவது போன்று சமயங்களை மாற்றிக் கொள்கிறார்கள் அல்லவா?" — மந்திரகுப்தன் சிரித்தான்.*

*"மருள்நீக்கியார் புத்த பிக்குவான புத்தருள் தேரரை வாதத்தில் வென்று, சமணத்தின் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். நமது காஞ்சி சமணத்தின் திக்கஜம் என்கிற பட்டத்தைப் பலிதானா அவருக்கு வழங்கினார். ஆனால் அவ்ருக்குத் திடீரென்று சூலை நோய் பீடிக்க, நமது சமணப் பசடியில் அவருக்கு வைத்தியம் பார்க்கப் பட்டது. தருமசேனரை குண்டிகை நீரைக் குடிக்கச் செய்து மயிற்பீலியால் வருடிவிட்டனர். இதனால் நோய் அதிகரித்ததே தவிர, பலன் கிட்டவில்லை. ஆனால், சைவத்தைச் சேர்ந்த மருள்நீக்கியாரின் தமக்கை திலகவதி அவரைத் திருவத்திகை என்னும் சிவாலயத்திற்கு அழைத்துச் சென்று பிரார்த்தனை செய்தார். உடனே அவருக்குச் சூலை நோய் குணமாகிவிட்டது.*"*

---

* சூலை நோய் என்பது குடற்புண். இன்று peptic ulcer என்று கூறுகிறோம்.

'கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
 கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
 பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
 குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மானே.'

என முதல் பதிகம் தொடங்கி, தனது வயிற்று வலியைப் போக்கும்படி 10 பதிகங்களைத் திருவத்திகை என்னும் ஊரில் கண்ணீர் மல்கப் பாடினார். இதையடுத்து சிவபெருமானின் கருணையால், மருள்நீக்கியாரின் சூலை நோய் என்னும் வயிற்று வலி தீர்ந்தது. இதையடுத்து அவர் சிவபக்தராக மாறினார். சிவபெருமானாலேயே, 'திருநாவுக்கரசர்' என்று பெயர் சூட்டப்பட்டார்..

மகேந்திரன் அலட்சியமாகச் சிரித்தான். "நவகுமாரர் களே..! நான் நினைக்கிறேன். சூலை நோய் என்பதே தமக்கையும், தம்பியும் சேர்ந்து இயற்றிய நாடகம். சூலை நோயால் அவதிப்படுவது போன்று நடிக்கச் சொல்லித் தம்பியை மீண்டும் சைவத்தில் சேர்த்திருக்கிறார், திலகவதியார்."

மகேந்திரன் கூறியதும் தொண்டரையன் பதிலளித் தான். "குரு பலிதானாவிற்கும் அந்தச் சந்தேகம் உண்டு. எனவேதான் தருமசேனரைக் கைது செய்திருக்கிறார்."

"அது கிடக்கட்டும்! தருமசேனரை விசாரிப்பதற்கும், தண்டனை கொடுப்பதற்கும், அரசவை இருக்கிறதே!? பசடியின் சிறையில் அடைப்பதற்கும், விசாரணை நடத்தித் தண்டனை கொடுப்பதற்கும் அரசவைக்கு அறிவிக்காமல் இவர்களாகவே அனைத்தையும் செய்கிறார்களே?" — மகேந்திரன் கேட்டான்.

"மத ரீதியான குற்றங்களுக்கு, சமணக் குருமார்தான் விசாரணைகளைச் செய்து தண்டனையை அறிவிப்பார்." — மலரவன் கூறினான்.

"நாம் இப்படியே பேசிக்கொண்டு இருக்கப் போகின்றோமா? குரு தீர்ப்பை வழங்குவதற்குள்ளாக நாம் அர்ப்பணன்சேரிக்குப் போக வேண்டும்!" — தொண்டரையன் அவசரப்படுத்த, அனைவரும் மகேந்திரனைப் பார்த்தார்கள்.

"நீ வருகிறாயா இல்லை.. அரண்மனைக்குப் போகிறாயா?" — ராஜவாகனன் கேட்டான்.

"தீர்ப்பின் முடிவை நானும் கேட்க விரும்புகிறேன். நானும் வருகிறேன்." — மகேந்திரன் கூற அனைவரும் புறப்பட்டனர்.

★ ★ ★

**அ**ர்ப்பணன்சேரி ரிஷபதேவர் பசடி —

பசடியின் முன்பாக மிகப்பெரிய வெட்டவெளி. எங்கும் அரப்பு மரங்கள் நின்று, நிழலை வாரி வழங்கிக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் சைவர்களும், மற்றொரு பக்கம் சமணர்களுமாகக் குழுமியிருக்க, பலிதானா சீடர்கள் புடைசூழப் பசடியில் இருந்து வெளியே வந்தார். ஒரு கௌபீனத்தை மட்டுமே அணிந்திருந்தார். ஒரு துறவிக்கு இருக்க வேண்டிய சாந்தமும், சாத்வீகமும் அவரது கண்களில் காணப்படவில்லை. குரோதமும், எரிச்சலும் அவற்றிற்குப் பதிலாகத் ததும்பி நின்றன.

“அழைத்து வாருங்கள் அந்த தருமசேனனை! வருவதற்கும் போவதற்கும் நமது சமயம் என்ன கணிகையர் விடுதியா?” — ஒரு குருமாரின் வாயில் வரக்கூடாத சொற்கள்! ஒரு மூலையில் நின்று அழுது கொண்டிருந்த மருள்நீக்கியாரின் சகோதரி திலகவதி தனது கைகளால் செவிகளை மூடிக் கொண்டார்.

“ஈசனே! முக்கண்ணா!” கதறிய அந்தப் பெண்மணியை நோட்டம்விட்டான் மகேந்திரன். இளமையிலேயே விதவையாகி உடன்கட்டை ஏறுவதற்குத் தயாரான நிலையில் நிற்க, தம்பியின் கதறல் தமக்கையின் நெஞ்சை உருக்க, அவனுக்காக உடன்கட்டை ஏறும் முடிவினை மாற்றியவர். தம்பிக்காகத் தன்னை உருக்கிக் கொண்டவர். மருள்நீக்கியாரும், அக்காவின் மீது அன்பும், மரியாதையும் செலுத்தி வந்தவர்தான். விதி அவர்களது வாழ்க்கையில் விளையாடியது.

பிரக்ஞுதாராவின் சதியால் உக்கிரம் அடைந்திருந்த மன்னன் சிம்மவிஷ்ணு களப்பிரர்களின் மீது போர் தொடுத்தான். அவனது திடீர்த் தாக்குதலால் சிதறிய களப்பிரர்கள் வடக்கே ஓடிப்போகத் தொடங்கினர். தனது குடிலின் திண்ணையில் அமர்ந்து சுவடிகளை வாசித்துக் கொண்டிருந்தான், மருள்நீக்கியார். காஞ்சியில் இருந்து தப்பி ஓடி வந்திருந்த ரணதிலகன் மற்றும் அவனது ஆதரவாளர்கள் திருவாமூர் பக்கமாக ஓடி வர,

மாளிகையின் சுகபோகங்களை இழந்து மீண்டும் நாடோடியாக ஓட வேண்டியுள்ளதே என்கிற ஆத்திரத்தில் வழியில் எதிர்ப்பட்டவர்களைத் தாக்கியும், வழிப்பறி செய்தும் சென்று கொண்டிருந்த ரணதிலகன் படையினரின் பார்வை, திண்ணையில் அமர்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்த சிறுவன் மருள்நீக்கியானின் மீது பதிந்தது. ஓடும் வேகத்தில் அவனையும் வாரித் தூக்கித் தோளின் மீது போட்டுக் கொண்டு ஓடினர். அடுக்களையில் உணவு சமைத்துக் கொண்டிருந்த திலகவதி வெளியே வந்து பார்த்த போது தம்பியைக் காணாமல் திகைத்திருந்தாள். அதன் பின்னர், மருள்நீக்கியான் எங்கெங்கோ சென்று பாடலிபுத்திரத்தை அடைந்திருந்தான். அங்கேதான் களப்பிரரால் சமணத்திற்கு மாற்றப்பட்டிருந்தான்.

சமண மதகுரு தருமசேனராக மருள்நீக்கியான் மீண்டும் காஞ்சி வந்த போது தற்செயலாகக் காஞ்சி வந்திருந்த திலகவதி அவரை இனம் கண்டு கொண்டார். தனது தம்பி காணாமல் போனது மட்டுமல்லாமல், சமணத்தை ஏற்றது குறித்து வருந்தி, ஒத்தாடையான் ஆலயத்தில் கண்ணீர்விட்டுப் புலம்பினார்.

அதன் பிறகுதான் தருமசேனருக்கு சூலை நோய் ஏற்பட்டு, திருவதிகை ஆலயத்திற்குச் சென்று நோய் தீரப்பெற்று, தமக்கையால் மீண்டும் திருத்திப் பணி கொள்ளப்பட்டார். மருள்நீக்கியார் தருமசேனராக மாறி இப்போது மீண்டும் திருநாவுக்கரசராக மாறியிருந்தார். எதிர்காலத்தில் திருஞான சம்பந்தரால் 'அப்பா' என்று அழைக்கப்பட்டு அப்பராக விளங்க இருந்தார்.

அப்பராகத் திகழப் போகின்றவரை வெறும் சுப்பனாக நினைத்துப் பலிதானா அவருக்குத் தண்டனை வழங்கும் தீவிரத்துடன் அமர்ந்திருந்தார்.

"அழைத்து வாருங்கள் தருமசேனனை" என்று குரு கூறியதும், சீடர்கள் பசடியின் பாதாளச் சிறையில்

அடைக்கப்பட்டிருந்த தருமசேனரை அழைத்து வந்தனர். மருள்நீக்கியாரின் முகத்தில் கலக்கமே காணப்பட வில்லை. வருவது வரட்டும், தன்னை எனக்குக் காட்டி அருளிய ஈசன் என்னைப் பார்த்துக் கொள்வான் என்கிற மனநிலையில் நிதானமாக நடந்து வந்தார். அவரைக் கண்டதும் திலகவதியாரின் அழுகை அதிகமாகியது.

"சமணத்தின் தாத்பரியங்களைக் கேலிக்கூத்தாக்கி விட்டு, மீண்டும் சைவத்தை ஏற்ற தருமசேனனுக்குக் காஞ்சியின் சமணச் சமஸ்தானம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அதற்குரிய தக்க தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டும். கடைசியாக ஒரு வாய்ப்பு தரப்படுகிறது. சமணத்திலேயே நிற்கின்றாயா அல்லது அந்தப் பித்தன் ஒத்தாடையான் பின்பாகப் போகின்றாயா..?" — பலிதானா கேட்டார்.

"ஒற்றை ஆடையை அணிந்திருப்பவன் பித்தன் என்றால் திகம்பரத்துடன் திரியும் உங்களை எல்லாம் என்ன என்று அழைப்பது? உங்கள் மார்க்கத்தை ஏற்பதைக் காட்டிலும் தண்டனையை மிகவும் விரும்பி வரவேற்கிறேன். ம்ம்.. சீக்கிரம்! உங்களது தண்டனைகளை அறிவிக்கச் சொல்கிறான், எனது ஒத்தாடையான். அவன் உடனே வந்து என்னைக் காப்பாற்ற நினைக்கிறான்.." — துணிவுடன் மருள்நீக்கியார் கூற, பலிதானாவின் முகம் சிவந்தது.

"என்ன அகம்பாவம்! சுடலைப் பொடியினைப் பூசுவதற்கு முன்பாக சுண்ணாம்புத் துகள்களை இவனது தேகம் பூசிக் கொள்ளட்டும். இவனைச் சுண்ணாம்புக் குழியில் தள்ளித் தாளிடுங்கள்." — பலிதானா கூறியதும், சீடர்கள் மருள்நீக்கியாரைச் சுற்றி நின்று கொண்டு அவரது புஜங்களைப் பற்றினர்.

"ஐயோ.. தம்பி! நீ சமணத்திலே தங்கிவிடு. நீ உயிருடன் இருந்தால் போதும்.." திலகவதி கதறினார்.

"வருந்தாதீர்கள் அக்கா! பாழடைந்த வீட்டிற்கா சுண்ணாம்புப் பூச்சு பூசுகிறோம்? குடிபுகும் மனைகளுக்குத்தானே சுண்ணாம்பு பூசுகிறோம். எனதப்பன் ஈசன் குடியேற உள்ள இந்தத் தேகத்திற்கு அவர்களே சுண்ணாம்பு பூசி அனுப்புகிறார்கள். நான் நலமாக இருப்பேன். சென்று வருகிறேன்," என்று மருள்நீக்கியார் கூறியபடி துணிவுடன் சீடர்களுடன் நடந்தார்.

பலிதானாவின் சீடர்கள் சுண்ணாம்பு குவிக்கப் பட்டிருந்த குழியினில் மருள்நீக்கியாரை தள்ளிவிட்டு, வெளியே பாதாள அறையின் கதவைத் தாளிட்டனர்.

"ஒரு வாரம் கழித்து வந்து உனது தம்பியின் சடலத்தைப் பெற்றுக்கொள்." — பலிதானா அலட்சிய மாகத் திலகவதியிடம் கூற, அவள் அவரை உறுதியுடன் நோக்கினாள்.

"ஈசனின் அருளால், என் தம்பி நலமுடன் வெளியே வருவான்!" — திலகவதி கூற, பலிதானாவும் சீடர்களும் பலமாகச் சிரித்தனர்.

"ஆம்! சுண்ணாம்புக் காளவாயில் இருந்து தேகமற்ற பூதமாக வெளிவந்து உங்கள் சிவனின் பூதகணங்களோடு சேருவான்!" பலிதானா கேலியுடன் கூறிவிட்டு, பசடியினுள் நுழைந்தார்.

சீடர்கள் மருள்நீக்கியாரை சுண்ணாம்புக் காளவாயில் இட்டுத் தாளிட்டபின் புறப்பட்டுச் செல்ல, நவகுமாரர் களுடன் நின்ற மகேந்திரன், மூடிய அந்தப் பாதாளக் கதவையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தான். 'ஈசனின் அருளால் என் தம்பி நலமுடன் வருவான்!' — திலகவதி கூறுவது அவனது காதில் ரீங்கரிக்க, நவகுமாரர்களை வியப்புடன் பார்த்தான்.

"அந்தப் பெண்மணியின் குரலில் தொனித்த உறுதியைக் கவனித்தாயா? ஏழு நாட்களுக்குப் பிறகு ஒரு மனிதன், சுண்ணாம்புக் குழியில் இருந்து நலமுடன்

எப்படி வர முடியும்? இரண்டே நாட்களில் உடல் வெந்து, சுவாசக் குழாய் எரிந்து மரணத்தைத் தழுவமாட்டானா?" — மகேந்திரன் கேட்டான்.

"கண்மூடி மடமையில் திகழ்பவர்களைத்தான் பத்தர்கள் என்கின்றனர் பாமர மக்கள்." — மலர்வன் கூறினான்.

அவனது கூற்று அருகில் இருந்த திலகவதியாரை எரிச்சல் கொள்ள வைத்தது.

"கண்மூடிய பக்தியல்ல. ஊனக் கண்களை மூடி ஞானக்கண்களால் உலகினைக் காண்கிறோம். இறைவன் நாமாவைச் சொல்ல வேண்டிய வாயைக் கிழிந்த துணியால் கட்டிக் கொள்ளும் உங்களுக்கு எங்கள் தாத்பரியம் புரியாது. எனது தம்பி இன்றிலிருந்து ஏழாம் நாள் திரும்பி வருவான். அவன் நலமுடன் வந்தால் என்ன செய்வது..? நீங்கள் அனைவரும் சைவத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? எனது தம்பி பிணமாக வந்தால், நான் உங்கள் சமணத்தை ஏற்றுக் கொள்கிறேன்.." — நம்பிக்கையுடன் திலகவதி கூற,

முதலில் வேடிக்கையாகத் தோன்றிய திலகவதியின் நம்பிக்கை அவளது குரலில் தோன்றிய உறுதியைக் கண்டதும் சற்றே வியப்பு தோன்றியது. 'மருள்நீக்கியார் சுண்ணாம்புக் காளவாயில் இருந்து ஏழு நாட்களுக்குப் பிறகு நலமுடன் வெளிவந்தால், நீங்கள் சைவத்தை ஏற்கிறீர்களா?' — திலகவதி விடுத்த சவாலைக் கண்டு நவகுமாரர்கள் திகைத்துப் போய் நிற்க, மகேந்திரன் திலகவதியாருக்கு தக்க பதிலைக் கொடுக்க நினைத்தான்.

"எனக்கு ஒரு அத்தை இருந்தாள். அவள் பெயர் நவரத்ன பல்லவி. மீசை முளைப்பதற்குள் காலமாகி விட்டாள். இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் மீசை முளைத்து எனக்குச் சிற்றப்பனாகத் திகழ்ந்திருப்பாள். உங்களது கதையையும் அவள் நம்பியிருப்பாள்!" — மகேந்திரன் கூற, நவகுமாரர்கள் நகைத்தனர்.

திலகவதி கண்களில் கண்ணீருடன் மகேந்திரனை நோக்கினாள்.

"சிற்றப்பனின் மீசையையே மறைத்து அவனை அத்தை என்று கூறுவான் என் தம்பி! பார்க்கத்தானே போகிறீர்கள். எனது சவாலை ஏற்கிறீர்களா?" — மீண்டும் திலகவதி கேட்க, நவகுமாரர்கள், மகேந்திரனைப் பார்க்க, அவன் திலகவதியை உறுத்து நோக்கினான்.

"மாமல்லன் என்பார்கள் என்னை. பல்லவத்தின் வருங்கால மன்னன் கூட. களரியில் பல சவால்களை ஏற்றவன். உனது சவாலை ஏற்க அஞ்சுவேனா என்ன? உனது தம்பி ஏழு நாட்களுக்குப் பிறகு நலமுடன் வந்தால், நான் நிச்சயம் சைவத்தை ஏற்கிறேன். இல்லையென்றால், நீ சமணத் தவசியாகிச் சாலைகளை விளக்கு மாற்றால் பெருக்கிக் கொண்டே செல்ல வேண்டும்.. பார்க்கலாம்! வெற்றி யாருக்கு என்று!" என்றான்.

திலகவதி ஒருமுறை சுண்ணாம்புக் காளவாயைத் திரும்பி நோக்கிவிட்டு அங்கிருந்து அகன்றாள். அதன் பிறகு ஏழு நாட்கள் வரையில் அர்ப்பணன்சேரிக்கு மகேந்திரனோ, நவகுமாரர்களோ செல்லவில்லை. ஏழு நாட்கள் கழித்து, திலகவதியார் ரிஷபத் தேவர் பசடியின் முன்பாக இருந்த சுண்ணாம்புக் காளவாயின் அருகே வந்து நின்றிருந்தாள்.

மகேந்திரனும், நவகுமாரர்களும் ஒருபுறம் ஆர்வத்துடன் காத்திருந்தனர். சைவம் பதின்மரை தனது வசப்படுத்தப் போகிறதா அல்லது சமணத்திற்கு ஒரு பெண் சந்நியாசி கிடைக்கப் போகின்றாளா?

பலிதானா சீடர்களுடன் வந்து நின்றார். திலகவதியை ஒருமுறை ஏறிட்டு நோக்கியவர், "தர்மசேனனின் சடலத்தை அவனது சகோதரியிடம் ஒப்படையுங்கள்!" — பலிதானா உத்தரவிட, சீடர்கள் சுண்ணாம்புக் காளவாயின் கதவைத் திறந்தனர்.

உள்ளே கும்மிருட்டாக இருந்தது. சுண்ணாம்பின் வீச்சு அங்குக் கூடியிருந்தவர்களின் முகத்தைப் பதம் பார்க்க, தங்கள் அங்க வஸ்திரங்களினால் முகத்தை மூடிக் கொண்டு கண்களை மட்டும் விட்டு, அனைவரும் சுண்ணாம்புக் குழியை நோக்கினர்.

முதலில் அமைதியாகத்தான் இருந்தது.

**"சுண்ணம் வெள்ளத்தில் மூழ்கினேன்**
**அம்பலவாணனின் திருவருள் அமுதுண்டு**
**எவ்வகை ஊனமும் இன்றி மீண்டு வந்தேன்.."**

என்று சுண்ணாம்பையே திருநீற்றாகப் பூசிக் கொண்டு வெளியே வந்தார், மருள்நீக்கியார். பேருவகையுடன் அதனைப் பார்த்துக் கொண்டிருந்த திலகவதியார், "திருநாவுக்கரசரே.. நீர் வாழி!" — என்றபடி மகேந்திரனை நோக்கினாள்.

மகேந்திரனும், நவகுமாரர்களும் வாயடைத்துப் போய் நின்றனர்.

பலிதானனா தனது முன்பாக வந்து நின்ற மருள் நீக்கியாரை குரோதத்துடன் பார்த்தார்.

"மாய மந்திர வித்தைகளைக் கற்றீரோ? எப்படி இது சாத்தியம்? இதனால் நாங்கள் மனம் தளர்ந்துவிடுவோம் என்று கனவு காணாதீர்.. சமணச் சமயச் சார்பில் பெற்ற சாதகத்தால் நீ சாவாது பிழைத்திருக்கின்றாய். இனி நஞ்சைப் புகட்டி உன்னைக் கொல்லுவதே தகுந்த தண்டனை" என்று கூற, சீடர்கள் உடனே பசடியின் உள்ளே சென்று நஞ்சு கலந்த பாலமுதை கொண்டு வந்தனர்.

மருள்நீக்கியாரை திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரனை, புன்னகையுடன் நோக்கினார் திலகவதியார்.

"நான் சொன்னேன் அல்லவா! ஒத்தாடையானின் சொரூபத்தைக் கண்டாயா?! நீங்கள் சைவத்தை ஏற்பதாக

உறுதி அளித்தீர்கள் அல்லவா. அவசரம் இல்லை. இன்னும் எமது ஈசனின் அற்புதங்களைப் பார்த்துவிட்டு அவனது மகிமையைப் புரிந்து கொண்டால், நீங்களே சிவப்பதத்தைப் பற்றிக் கொள்வீர்கள்." திலகவதி கூற மகேந்திரனின் முகம் உணர்ச்சியற்று இருந்தது.

சீடர்கள் அளித்த நஞ்சு கலந்த பாலமுதை மருள்நீக்கியாருக்கு அளித்து உண்ணும்படி செய்தனர்.

'எம்பிரான் அடியார்க்கு நஞ்சும் அமுதாம்' என்று கூறி அதை உண்டு எவ்விதத் தீங்கும் அடையாமல் நின்றார் அவர். திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விடம் சிவபெருமானுக்கு அமுதமாக ஆயிற்று அவனடியார்க்கு நஞ்சு அமுதாயிற்று.

'நஞ்சும் இவனுக்கு அமுதாயிற்று. இவன் பிழைப்பானாகில், நமது சமயம் நசித்துவிடும் என்றெண்ணிய பலிதானா, மத யானை ஒன்றை வரவழைத்து மருள்நீக்கியாரை மிதித்துக் கொல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். குன்று போல விளங்கிய மதயானை ஒன்று தருவிக்கப்பட்டது. பயங்கரமான அந்த யானை அவரை நோக்கி வர, அது அவரது சிரசில் நின்று சுக்கு நூறாக அதனைப் பெயர்த்துவிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க, மருள்நீக்கியார், கண்களை மூடி ஈசனை நோக்கிப் பாடத் துவங்கினார்:

**"சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**..அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை."**

என்று உருகிய குரலில் பாட, அவரை நோக்கி மூர்க்கத்துடன் வந்த அந்த மதயானை, அவரை வலம் வந்து பணிந்துவிட்டுப் போனது.

அந்தக் காட்சியைக் கண்ட மகேந்திரனின் வாய் உலர்ந்து போனது. முதன்முறையாக மகேந்திரன் தெய்விக

அற்புதங்களைக் காண்கிறான். சனாதனத்தின் பெருமை களைப் பெற்றோர் உரைக்க அவன் கேட்டிருக்கிறான். இருப்பினும், சமண, சாக்கியர்கள் போதித்த எளிமை யான தியான முறைகள் போன்று அல்லாமல் சனா தனத்தில் வேள்வி வழிபாடுகள் மிகவும் கடினமானவை என்று நினைத்திருந்தான். இறைவனை அறிவதற்கு எளிதான மார்க்கமாகச் சமணத்தை நினைத்திருந்தான். ஆனால் மருள்நீக்கியார் திருநாவுக்கரசராக நிகழ்த்திய அற்புதங்களைக் கண்டதும், அவனது இதயம் உருக ஆரம்பித்தது. உண்மையில் சனாதனத்தின் தாத்பரியங் களை அறியாமல் தான் கிணற்றுத் தவளையாக இருந்திருக்கிறோம் என்பதனை உணர்ந்தான். என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்பதனை அறியாமல் மெதுவாகத் திலகவதியாரை நோக்கி நடந்தான். தனது தம்பி மருள்நீக்கியார் திருநாவுக்கரசராக நடத்திக் காட்டிய அற்புதங்களால் மெய்ம்மறந்து நின்ற திலகவதியார், தனது கால்களை யாரோ பற்றுவதை உணர்ந்து குனிந்தாள். மகேந்திரன்தான் கண்கள் பனிக்க நின்று கொண்டிருந்தான்.

"தாயே! அவர் அற்புதங்களைச் செய்து காட்டியது பெரிதல்ல. நீங்கள் எனது தம்பி நலத்துடன் சுண்ணாம்புக் காளவாயில் இருந்து வருவான் என்று உறுதியுடன் கூறினீர்கள். அந்த உறுதிக்குக் கட்டுப்பட்டுத் தான் இறைவன் உங்கள் தம்பிக்கு அருள்பாலித் திருக்கிறான். எனது சிந்தையில் படிந்திருந்த இருளை நீக்கி நல்வழி காட்டினீர்கள். உங்களுக்கு வாக்களித்தது போன்று நான் சைவத்தை ஏற்கச் சித்தமாக இருக்கிறேன்!" — மகேந்திரன் உருக்கத்துடன் கூற, அதைக் கேட்டு அங்கே குழுமியிருந்த சைவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தினைச் செய்தனர்.

தங்களது வருங்கால நம்பிக்கை நட்சத்திரமான மகேந்திரன் சைவத்தை ஏற்கச் சித்தமாக இருப்பதாக அறிவித்ததும், அதிர்ந்து போன பலிதானாவும்

சீடர்களும், அவசரமாகப் பசடிக்குள் நுழைந்தனர். அரச குடும்பத்தின் ஆதரவு கிடைத்துவிட்டதால் இனி மருள் நீக்கியாரை சித்திரவதை செய்ய முடியாது என்று அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

மகேந்திரனின் தோளினைப் பற்றி எழுப்பிய திலகவதியார் அவனை அன்புடன் நோக்கினார்.

“மகனே! நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும். ஈசனின் மகிமையைப் புறச்சமயத்தில் இருக்கும் போதுதான் இன்னும் நன்றாக உணர முடியும். எனது தம்பி தர்மசேனனாக இருந்து இப்போது திருநாவுக் கரசராக மாறியது போன்று, நீயும் சனாதனத்திற்குப் பல அற்புதச் சேவைகளைச் செய்யப் போகிறாய்” என்று கூற, சரியாகத் திருநாவுக்கரசர் தனது தமக்கையின் கால்களில் பணிந்தார்.

“தம்பி! பல்லவ இளவரசன் மகேந்திரனை உன்னிடம் ஒப்படைக்கிறேன். சைவத்தை ஏற்கச் சித்தமாக இருக்கிறான். நாளையே ஒத்தாடை ஆலயத்திற்கு அவனை அழைத்துச் சென்று ஈசனின் அருளைப் பெற்றுத் தா!” — திலகவதி கூற, திருநாவுக்கரசர் மகேந்திரனைப் பரிவுடன் நோக்கி, அவனை அணைத்துத் தனது பக்கலில் நிறுத்திக் கொண்டார்.

மறுநாள் —

சூரியோதயத்தின் முன்பாகவே மகேந்திரன் ஒத்தாடையான் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுக்காகக் காத்திருந்த திருநாவுக்கரசர், அவனை ஆலயக் குளத்தில் நீராடச் செய்தார். மூன்று முறை நீரில் மூழ்கி எழுந்தவனின் நெற்றியில் திருநீற்றை அப்பினார்.

“மகேந்திரா! இந்தக் குளத்தின் நீரைக் கம்பா நதி என்று அழைப்பார்கள். மனதில் நிலவும் சஞ்சலங்களும், அச்சங்களும் இந்தக் குளத்து நீரில் மூழ்கி எழுந்தால் நீங்கிவிடும். பல்லவ அரச குடும்பத்தினர் இந்த

ஆலயத்திற்குப் பல தொண்டுகளைச் செய்துள்ளனர். ஒத்தாடையான் சிவாலயமும், அத்திமலைத்தேவனின் ஆலயமும் பல்லவர்களுக்கு இரு கண்களைப் போன்றவை. இதனை அறியாமல் அஞ்ஞானத்தால் பாதை மாறிச் சென்றுவிட்டாய். இன்று மீண்டும் வந்து சிவானந்தத்தில் திளைத்துவிட்டாய்.." என்று கூறத் தனது இரு கைகளையும் கூப்பித் தலைகுனிந்து பணிவுடன் நின்றான், மகேந்திரன்.

"ஸ்வாமி! ஒரு சிறு சந்தேகம். நான் இதுகாறும் சமணத்தில் திளைத்திருந்ததால் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். நான் தற்போது ஒத்தாடையானின் அருளை நாடி நிற்கிறேன். ஒருவேளை ஒரு மன்னனாக நாளை நான் அத்திமலையானின் அருளை நாடி அவனது ஆலயத்திற்கும் செல்ல நேரிடலாம். அத்திமலையானை நாடுவதால் ஒத்தாடையான் என்னைக் கைவிடுவானா அல்லது ஒத்தாடையான் அருள்பெற்றவன் என்பதால் அத்திமலையான் எனது பக்தியை ஏற்றுக் கொள்ள மறுப்பானா..?"

திருநாவுக்கரசர் சிரித்தார்.

"மகேந்திரா! நமது தேகத்தில் உயிர் நிலைப்பதற்குக் காரணம் எதுவாக இருக்கக் கூடும் என்று நினைக்கிறாய்?"

மகேந்திரன் யோசித்தான். "தேகத்தில் உயிர் தங்குவதற்கு வெப்பமும், தேவை. உடலில் வெப்பம் நீங்கினால் மரணம் சம்பவிக்கும். அதே சமயம் வெப்பம் மட்டுமே தேகத்தை நடத்துவதில்லை. தேகத்தினுள் போதிய நீர் இருப்பும் அவசியம்."

மகேந்திரன் கூறியதும், திருநாவுக்கரசர் புன்முறுவலுடன் அவனைப் பார்த்தார்.

"நன்று கூறினாய், மகேந்திரா! தேகத்திற்கு நீர் இருப்பும், வெப்பமும் மிக அவசியம். வெப்பமாக நமது தேகங்களை

இயக்கிக் கொண்டிருப்பவன் ஒத்தாடை ஈசன். நீரினில் சயனித்திருக்கும் நீர்வண்ணன் நமது தேகத்தில் நீராக இருக்கிறான். படைப்புக்கு அதிபதியான நான்முகன் நமது தேகத்தினுள் பிராண வாயுவை ஊதிவிடுகிறான். நமது தேகத்திற்கு வெப்பம், நீர், வாயு மூன்றையும் அளிக்கும் மும்மூர்த்திகள் இந்தக் காஞ்சியில் உள்ளனர். எனவே, காஞ்சி நகரம்தான் சனாதனத் தர்மத்தின் தேகம்." — திருநாவுக்கரசர் விளக்க, அவரைப் பரவசத்துடன் நோக்கினான், மகேந்திரன்.

"ஸ்வாமி! ஒரு சிறு சந்தேகம்.. பலிதானாவினால் பல சித்திரவதைகளை அனுபவித்தீரே. ஏழு நாட்கள் சுண்ணாம்புக் காளவாயில் கிடந்தீரே? சுண்ணாம்புக் காளவாயினுள் அடைக்கப்படுவதற்கு முன்பாகவே ஈசன் ஏன் உங்களைக் காப்பாற்றவில்லை? ஏழாம் நாள்தான் அவன் உங்களைக் காப்பாற்ற வேண்டுமா?" — மகேந்திரன் கேட்க, திருநாவுக்கரசர் சிரிக்கத் தொடங்கினார்.

"உண்மைதான் மகேந்திரா! ஈசன் முன்பாகவே வந்து என்னைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால் நான் அனுபவித்த சித்திரவதைகளுக்குக் காரணம் ஈசன் இல்லையே. அவன் காரணமாக இருந்திருந்தால், உடனே வந்திருப்பான்." — திருநாவுக்கரசர் கூற, சற்றே குழம்பிப் போய் அவரைப் பார்த்தான், மகேந்திரன்.

"சுவாமி! தாங்கள் சைவத்தை ஏற்றதால்தானே பலிதானாவும் அவரது சீடர்களும் கோபமடைந்து தங்களைச் சித்திரவதை செய்தார்கள்?" — மகேந்திரன் கேட்டான்.

"அப்படி என்று யார் கூறியது? நான் ஒருவன் சமணத்தைத் துறந்து சைவத்தை ஏற்றதால், சமணம் அழிந்துவிடாது என்பதை அறியாதவரா, பலிதானா? நான் சைவத்தை ஏற்றதால் அவர் என்னைத் தண்டிப்பதாக மற்றவர்கள் நினைத்தது போலவே, நீயும்

நினைத்துக் கொண்டிருக்கிறாய், மகேந்திரா! உண்மையில் காரணம் அது இல்லை. யாரிடமும் கூறாத ஒரு தகவலை உன்னிடம் கூறுகிறேன்..” என்றவர் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, குளத்து நீரில் இன்னமும் நின்றிருந்த மகேந்திரன் செவிகளை நோக்கிக் குனிந்தார்.

“களப்பிரர்களின் தலைவன் ரணதிலகன் காஞ்சியின் தருமநகரத்தில் தங்கியிருந்தான் அல்லவா..?” — திருநாவுக்கரசர் கூற, அவரை இடைமறித்தான் மகேந்திரன்.

“அறிவேன் சுவாமி! அவன் எனது அத்தை நவரத்னாதேவியின் கணவன். எனது அத்தையின் அகால மரணத்தினால்தான் எனது தந்தை களப்பிரரை விரட்டி அடித்தார் என்று எனது தாயின் மூலம் அறிந்திருக் கிறேன். அவர்களுக்குச் சீதனமாக அளித்த மாளிகைதான் தருமநகரத்தில் உள்ளது.” — மகேந்திரன் கூற, அந்த விடியற்காலையின் இருளிலும் திருநாவுக்கரசரின் கண்கள் மினுமினுப்பதைக் கவனித்தான், மகேந்திரன்.

“ரணதிலகன் காஞ்சியில் கொள்ளையடித்த அரிய பொக்கிஷங்களை ரகசியமாக ஒரு இடத்தில் பதுக்கி வைத்திருக்கிறான். பல்லவர்கள் படை எடுக்கும் வேளையில் அவற்றை வடபுலம் எடுத்துச் செல்ல இயலாது என்பதால் அவற்றை இங்கேயே ஒளித்து வைத்துவிட்டு வடபுலம் சென்றான். அவனது நண்பன்தான் பலிதானா. அவனுடைய உண்மையான பெயர் மகாபலி. இருவரையும் நான் குமார பர்வதத்தில் சந்தித்தேன். ரணதிலகன் இறக்கும் தறுவாயில், தான் பதுக்கி வைத்துள்ள பொக்கிஷங்கள் இருக்கும் இடத்தை எனக்குக் கூறியிருப்பதாகப் பலிதானா நினைத்திருக் கிறான். அந்தப் பொக்கிஷங்கள் உள்ள இடத்தை நான் அறிவேன் என்பதால்தான் என்னைச் சித்திரவதைகளைச் செய்து என்னிடம் இருந்த பொக்கிஷ இரகசியங்களை அறிய நினைக்கிறான், பலிதானா!” — திருநாவுக்கரசர் கூற, அவரை ஆச்சரியத்துடன் நோக்கினான், மகேந்திரன்.

# 15. நவம் தசமானது

திருக்கச்சி மயானம் —

கம்பா குளத்து நீரில் நீராடி, சுடலைப் பொடி நீறணிந்து திகம்பர மார்க்கத்தைத் துறந்து திருநாவுக்கர சரால் திருத்திப் பணி கொள்ளப்பட்டு, ஏகாம்பரன் என்கிற ஒத்தாடையானின் இணையடியைப் பற்றிக் கொண்டான் மகேந்திரன்.

செய்தி காட்டுத் தீ போலப் பரவ, ஒத்தாடை அரண்மனையிலும், தருமநகரத்திலும், அத்தியூரிலும் ஆங்காங்கே மக்கள் கூட்டங்கூட்டமாய் நின்றபடி தங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

“அரண்மனையிலேயே ஒத்தாடையான் குடிகொண் டிருக்க, வேறு மார்க்கத்தைச் சேர்ந்தவனை எப்படி அவன் மன்னனாக்குவான்? அரசப் பதவி வேண்டு மென்றால் ஊரோடு ஒத்து வாழத்தானே வேண்டும்..” — ராஜவீதியில் நின்றபடி சைவர்கள் பேச, தருமநகரத்து சமணர்களும், சாக்கியர்களும், சற்றே பதற்றத்துடன் காணப்பட்டனர்.

“நமக்கென்று ஒரு மன்னர் கிடைக்கப் போகிறார் என்று நினைத்திருந்து கடைசியில் கைநழுவிப் போனதே!” — என்று தங்களது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர்.

“திகம்பரச் சாமியைத் துதித்தவன் இப்போது ஏகம்பரத்தை நாடியிருக்கிறான். விரைவில் பீதாம்பரத்தைத் தரிப்பான். எப்படியோ, நரி இடப்பக்கம் போனால் என்ன, வலப்புறம் போனால் என்ன! நம்

மீது பாயாமல் இருந்தால் போதும்" என்று அத்தியூர் வைணவர்கள் சற்றே கேலியுடன் பேசினர்.

அவன் தன்னைப் பற்றுவதற்காகவே காத்திருந் தவனைப் போன்று, ஒத்தாடையான் உடனேயே துரித வேகத்தில் காரியங்களை நடக்கச் செய்தான்.

காணாமல் போன அத்திமலையானையும், ஜெயவர்மனையும் நினைந்தபடி மரணப் படுக்கையில் கிடந்த சிம்மவிஷ்ணு, மகேந்திரனை அருகே அழைத்தான்.

"நீ திருநாவுக்கரசரால் ஆட்கொள்ளப்பட்டது என்பது நல்ல செய்திதான். ஆனால் நமது காஞ்சியின் ஜீவநாடி அத்திமலைத்தேவன் என்பதை மறந்துவிடாதே. மிகவும் விலைமதிப்பில்லாத பொக்கிஷம் அவன். நமது குடும்ப அரசாட்சியில் அவனைப் பறிகொடுத்துவிட்டோம் என்பது நமக்குப் பெரும் இழுக்கு. தியாகியான எனது தம்பி ஜெயவர்மன் அதைக் காப்பாற்றவே தன்னைத் தியாகம் செய்து கொண்டான் என்பதைப் பிறகே உணர்ந்தேன். எல்லா விபரீதங்களுக்கும் ஜெயவர்மனே காரணம் என்று எனது ஆதரவாளர்களை வைத்தே நானே புரளி பரப்பினேன். இன்று அவனிடம் மன்னிப்பு கேட்கத் துடிக்கிறேன். அவன் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்றே தெரியவில்லை. நமது பல்லவத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை நீதான் துடைக்க வேண்டும், மகேந்திரா..! எப்படியாவது தேவ உடும்பர அத்தி மலைத்தேவனின் பிரதிமையைத் தேடிக் கண்டுபிடித்து அவனது ஆலயத்திலேயே மீண்டும் பிரதிஷ்டை செய்து விடு. ஒருவேளை, எனது மரணத்திற்குப் பிறகு ஜெயவர்மன் காஞ்சிக்கு வந்தால் அவனிடம் நான் மன்னிப்புக் கோரியதாகக் கூறு!" — என்றவன் அருகிருந்த ராஜவர்மனையும், ராஜஸ்ரீயையும் பார்த்தான்.

"மகேந்திரனைக் கவனித்துக் கொள்ளுங்கள். புவனாவையும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றவன் ஆயாசத்துடன் கண்களை மூடினான்.

*"அத்திமலை தேவராஜா! மனக்குறையுடன் உன்னிடம் வருகிறேன். எங்கிருந்தாலும், உனது ஆலயத்திற்கு மீண்டு வந்துவிடு.." என்றவனின் தேகம் குலுங்கியது. கடைசியாகச் சிம்மவிஷ்ணு உச்சரித்த சொற்கள் இவை —*

*"ஜெயவர்மா! என்னை மன்னித்துவிடு!"*

*சிம்மவிஷ்ணு இறந்து அவனது கிரியைகள் முடிந்து முதல் அமாவசை தினம். இரவு முக்கூடல் கடிகையின் களரியில் மல்யுத்தப் போட்டி ஒன்றில் பங்கேற்ற சாளுக்கியத் தேசத்திலிருந்து வந்திருந்த குணபரன் என்கிற மல்லன் 'தன்னை எதிர்க்கப் பல்லவத்தில் யாராவது இருக்கின்றனரா?' என்று சவால்விட்டிருந்தான். 'யாரும் இல்லை என்றால், பல்லவத்தின் வாலிபர்கள் அனைவரும் கோழைகள் என்று சுவடியில் தனக்குப் பட்டயம் எழுதி அளிக்க வேண்டும்' என்றெல்லாம் கேலி பேசினான்.*

*தந்தையின் நினைவில் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தான், மகேந்திரன். களரியில் குணபரன் சவால்விட்ட போது, அங்கிருந்த நவகுமாரரில் ஒருவனான மலரவன் ஒத்தாடை அரண்மனைக்கு ஓடி வந்து, மகேந்திரனின் கையைப் பற்றி இழுத்தான்.*

*"பல்லவத்தின் மானத்தைக் காக்க ஓடி வா மல்லா!" — மலரவன் கூவி அசைத்தான். குணபரன் களரியில் விடுத்த சவாலைப் பற்றி அறிந்த மகேந்திரன் கோபத்துடன் களரிக்கு விரைந்து அவனது சவாலை ஏற்றான். இருவருக்கும் கடும் மல்யுத்தப் போர் நடந்தது. இறுதியில் மகேந்திரன் குணபரனை தூக்கிச் சுழற்றிக் கிடாசினான். பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தான் குணபரன்.*

**'பகாப்பிருகு லலிதாங்குரன்**<br>**சத்துரு மல்லன்**<br>**சிக மல்லன்**

**எதி குணபரன்**
**அவன்தன் காயம் கிழிபட**
**மயேந்திர போத்தரசர் கந்தசேனன்**
**வெல்வித்தது மல்ல தேவகுலம்..'**

என்று அந்த இடத்திலேயே மகேந்திரனுக்கு ஒரு மங்கல வாழ்த்துரையைப் பாடிவிட்டான், புஷ்போத்பவன் என்கிற மலரவன். அதனைச் செவியுற்ற குணபரன் மலரவனை எரிச்சலுடன் நோக்கினான்.

"வா மல்லா! உனது வெற்றியைக் கொண்டாடலாம்!" — தோழர்கள் மகேந்திர மல்லனை மது அருந்த அழைத்தனர். மகேந்திரனும், நண்பர்களும், தங்களது வெற்றியைக் கொண்டாட, மது அருந்திக் கொண்டிருந் தனர். அப்போது, அங்கு நிலவும் சூழ்நிலையை அறியாமல், ஒரு அழகிய பெண் களரியினுள் புகுந்து இவர்கள் அமர்ந்து மதுவருந்திக் கொண்டிருந்த பகுதியைக் கடந்து சென்றாள். தங்களது கொண்டாட்டங் களுக்குச் சிறப்பளிக்க மற்றொரு விருந்தும் தயாராகி விட்டதைக் கண்டு மகேந்திரனின் நண்பர்கள் அவளை நோக்கி நடந்தனர்.

மறுநாள் —

தலைமை அமைச்சர் மற்றும் ராஜகுரு இருவரும் மகேந்திரனைச் சந்திக்க வந்தனர்.

"இளவரசே! தங்களது மகுடாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. தங்களை உடனே ஒத்தாடை அரண்மனைக்கு வரச் சொன்னார், தலைமை அமைச்சர்!" — என்று தூதுவன் கூறியதும் அங்கே பலத்த கரகோஷமும் ஆரவாரமும் எழுந்தது.

அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. முதல் நாள் அவனிடம் தோற்ற குணபரன் மகேந்திரனைத் தேடி வந்தான். அவனை அழைத்து வந்த நண்பர்கள், மகேந்திரனின் முன்பாக அவனை நிறுத்த, அவன் மகேந்திரனின் பாதங்களில் மண்டியிட்டான்.

“மன்னரே! இனி எனது வீரம் உங்கள் வசம். நான் உங்கள் அடிமை!” என்றதும் அவனைத் தூக்கி நிறுத்தினான்.

“இன்று முதல் எனக்குப் பத்து நண்பர்கள். நவ குமாரர்கள் இனி தசகுமாரர்கள் ஆனீர்கள்! உங்களைத் தசகுமாரர்கள் என்றே அழைக்கப் போகிறேன்!” — குணபரனை கட்டிக் கொண்டான்.

மகுடாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது என்றவுடன் பல்லவத்தை பரபரப்பு தொற்றிக் கொண்டது. பட்டாபிஷேக ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற..

பதவி ஏற்பதற்கு முன்பாக ஆசான் திருநாவுக்கரசரிடம் ஆசி வாங்க விரும்பி ஒத்தாடை ஆலயத்திற்குச் சென்றான், மகேந்திரன். உடன் அவனுக்கு மிகவும் பிரியமான தசகுமாரர்களும் சென்றனர்.

அனைவரும் திருநாவுக்கரசரைப் பணிய, அவர் ஆசி வழங்கினார்.

“தசமி என்பது வெற்றியைக் குறிக்கும் பத்தாம் நாள் என்பார்கள். தசகுமாரர்களை உடன் வைத்திருக்கும் நீ தச அவதாரம் எடுத்த மாலவனைப் போன்று திகழப் போகிறாய்.” — திருநாவுக்கரசர் கூறினார்.

“சுவாமி! சனாதனத்திற்குத் திரும்பிய பின்னரே, நான் இதுகாறும் இழந்தது பல என்பதை உணர்கிறேன். மன்னனாகப் பதவி ஏற்க உள்ள என்னை நீரே வழி நடத்த வேண்டும்.” — மகேந்திரன் கூறினான்.

“கிழக்கே வேங்கடவன், மத்தியில் அத்தியூரான், வடக்கே ஆதி சரஸ்வதி, மேற்கே ஒத்தாடையான், தெற்கே பிரம்மன் அஸ்வமேத யாகம் நடத்திய பூமி என்று நீ வாசம் செய்யும் அரண்மனையைச் சுற்றித் தெய்வங்கள் நிற்க, நான் யாரப்பா உனக்கு வழிகாட்ட..? கீர்த்தியும், புகழும் பெற்று வாழ்வாங்கு வாழ்வாய்!” — அவனது சிரசில் கைவைத்து ஆசீர்வதித்தார், திருநாவுக்கரசர்.

"சுவாமி! போரில் வென்றால் கீர்த்தி உண்டாகும். மக்கள் மனம் குளிர ஆட்சி செய்தால் புகழ் உண்டாகும். இவை இரண்டையும்விட இப்போது எனது மனம் நாடுவது ஒன்றே! பல்லவ குடும்பத்தின் எனது முந்தைய தலைமுறை மிகவும் துன்பங்களைச் சந்தித்து உள்ளது. அகால மரணங்கள், தற்கொலைகள், மாயமாகிப் போவது என்று பல சம்பவங்கள் நடந்தேறி உள்ளன. எனது தந்தையும், காணாமல் போன அத்திமலைத்தேவனின் பிரதிமையை நினைத்து மனம் வருந்தியே காலம் அடைந்தார். எல்லாவற்றிற்கும் மூலக் காரணத்தை அறிந்து சாபங்களை நீக்கி, மீண்டும் எனது குடும்பத்தில் மகிழ்ச்சியை நிலைநாட்ட விரும்புகிறேன். இதற்கெல்லாம் அத்திமலையானின் பிரதிமை காணாமல் போனது காரணமாக இருக்குமோ என்று மனம் சஞ்சலம் கொள்கிறது. நான் என்ன செய்வது?" — மகேந்திரன் கேட்டான்.

"மகேந்திரா! மக்கள் செய்த பாவம் மன்னருக்கே என்கிற கூற்றுப்படி உங்கள் குடும்பம் மற்றவரின் பேராசைகளில் சிக்கிப் பாதிக்கப்பட்டுள்ளது. விபரீதங் களுக்கு அரச குடும்பத்திலேயே சிலர் உடந்தையாக இருந்திருக்கின்றனர். அதெல்லாம் எண்ணி இப்போது கலங்காதே. பதவியை ஏற்றுக் கொண்டு அதற்கான பிராயச்சித்தங்களைத் தேடு.. முதலில் காணாமல் போன பிரதிமையைத் தேடு. அது கிடைத்தால் மட்டுமே நமக்கெல்லாம் சௌபாக்கியம்."

"எனது பாட்டன் சிம்மவர்மரின் காலத்தில் காணாமல் போனது சிலை. எனது தந்தை அதன் பின்பு முப்பது வருடங்கள் ஆட்சி செய்துவிட்டார். அவர் ஆட்சிக்காலம் முழுவதும் அத்திவரதனின் சிலையைத் தேடிக் கண்டுபிடிக்க முயன்றார். அவரால் இயலவில்லை. முப்பது வருடக் காலங்களில் சிலை பத்திரமாக இருக்குமோ.. இல்லை கடல் கடந்து சென்றுவிட்டதோ, இல்லை தேவ உடும்பர சிலையை அற்பர்கள் யாகத்திற்குப் பிரயோகம் செய்துவிட்டனரோ..!"

கண்களை மூடி சற்று நேரம் அமர்ந்திருந்த நாவுக்கரசர், மகேந்திரனைக் கவனித்தார்.

"கவலைப்படாதே.. அத்திமலையான் அந்த அளவிற்கு நிலைமை போவதை அனுமதிக்கமாட்டான். பிரதிமை எங்கேயோ பத்திரமாகத்தான் இருக்க வேண்டும். எனக்கு ஒரு ஐயம். உனது அத்தையின் கணவன் ரணதிலகன், காஞ்சியில் பல பொக்கிஷங்களைக் களவாடிப் பதுக்கி வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனை நான் குமார பர்வத மலைக் குகையில் சந்தித்தேன். அவன் களப்பிரன். உனது அத்தையை வசியப்படுத்தித் திருமணம் புரிந்தான் என்று கூறினாயே. ஒருவேளை அவனது வசம் உள்ள புதையல்களில் அத்திவரதனின் சிலை இருக்கிறதோ? வீரர்களை அனுப்பி அவன் பதுக்கிய பொக்கிஷங்களைக் கண்டுபிடியேன்!" — திருநாவுக்கரசர் யோசனை கூறினார்.

"ரணதிலகன் பதுக்கி உள்ள பொக்கிஷங்களை எங்கே என்று தேடுவேன்?" — மகேந்திரன் குழம்பினான்.

யோசனையுடன் மீண்டும் கண்களை மூடிய நாவுக்கரசரின் செவிகளில் ரணதிலகனின் கிசுகிசுத்த குரல் ரீங்கரித்தது.

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.'

உரத்த குரலில் இருமுறை நாவுக்கரசர் ரணதிலகன் தன்னிடம் தெரிவித்திருந்த குறிப்பைக் கூறினார்.

மகேந்திரனும், தசகுமாரர்களும் அவரை வியப்புடன் பார்த்தனர்.

"என்ன சுவாமி இது?" — மகேந்திரன் கூற, அவனைப் புன்சிரிப்புடன் நோக்கினார், திருநாவுக்கரசர்.

"உனது அத்தை நவரத்ன பல்லவியின் கணவர், ரணதிலகர் இறப்பதற்கு முன்பாக எனது செவியில் கூறிய

குறிப்பு. அவர் பதுக்கியுள்ள பொக்கிஷங்கள் இருக்கும் இரகசிய இடத்தைக் குறிக்கிறது. கடகங்கள் என்றால் நண்டுகள் என்று பொருள். இந்த குறிப்பு 'நூற்றுப் பதினேழு நண்டுகளின் நடுவே நிற்கும் பன்னிரண்டு யானைகளில் பட்டத்து யானையின் மீது அமர்ந்திருக்கும் அரசியைக் கேட்டால் பொக்கிஷங்கள் இருக்கும் இடத்திற்கு வழி கூறுவாள்' என்னும் பொருள் வருகிறது. இந்தக் குறிப்பினை வைத்துப் பொக்கிஷங்களைக் கண்டுபிடி" என்றார் திருநாவுக்கரசர்.

மகேந்திரன் பல்லவ மன்னனாக அரியணை ஏறிவிட்டான். முதல் மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட இன்னும் அழைத்திருக்கவில்லை. தனது நண்பர் களான தசகுமாரர்களை அழைத்தான். பத்து சுவடிகளில் திருநாவுக்கரசர் கூறியிருந்த அந்தக் குறிப்பினை பதிவு செய்து, அவர்களிடம் விநியோகித் தான்.

"திசைக்கொருவராகச் செல்லுங்கள். குறிப்பு இது தான்..! இதனை வைத்து அத்திமலைத்தேவனின் பிரதிமையினைக் குறித்துத் தகவல் கிடைக்கின்றனவா என்று தேடி வாருங்கள்." — மகேந்திரன் உத்தரவிட்டான்.

ராஜவாகன் கிழக்கிலும், மலரவன், தென்கிழக்கிலும் அபஹாரன் தெற்கிலும், நிலவன் தென்மேற்கிலும், தொண்டரையன் மேற்கிலும், அர்த்தபாலன் வடமேற்கிலும், பிரமதி வடக்கிலும், மித்ரகுப்தன் வடகிழக்கிலும் செல்லும்படி பணித்தான், மகேந்திரன். மந்திரகுப்தனை காஞ்சியிலேயே தங்கியிருந்து நகருக்கு வந்து போகும் பயணிகளை, குறிப்பாக அந்நிய தேசத்தவரைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கச் சொன்னான். விஸ்ருதன் என்பானை அரண்மனை யிலேயே தங்கி இவர்கள் அனுப்பும் தகவல்களையும், அவர்களுக்குத் தேடுதல் வேட்டைக்குத் தேவைப்படும் உதவிகளையும் ஒருங்கிணைக்கும்படி உத்தரவிட்டான். தசகுமாரர்கள் திசைக்கொருவராகச் சென்று அத்திமலையானின் பிரதிமையைத் தேடத்துவங்கினர்.

# 16. குடமா.. குணமா?

ஐராவத மலையின் உச்சியில் யானையின் மத்தகம் போன்று உயர்ந்திருந்த கஜமலை மற்றும் வசந்த மலையின் அழகைக் கண்களால் பருகியபடி இரதத்தினில் சென்று கொண்டிருந்தான், காம்போஜ தருமநகர மன்னன் தானவர்மன். அருகே அமர்ந்திருந்த ககனா இரதத்திற்கு முன்பாகச் செல்லும் புரவியின் மீது அமர்ந்தவனையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தாள். தனது கண்ணின் மணியாக அவள் கருதிக் கொண்டிருந்த மகன் சூரியவர்மன்தான் குதிரையை அனாயாசமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். மற்றொரு புரவியில் அவனது உயிர்த் தோழன் ஸ்ரீவர்தன் என்பவனும் ஐராவத மலையின் மீது ஏறிக் கொண்டிருந்தனர். ககனாவின் தோழிகள் பின்பாக ஒரு இரதத்தில் வந்து கொண்டிருந்தனர். வழக்கம் போல் அவர்களது கோடை வாசஸ்தலமான வசந்தக் குடீரத்துக்கு ஓய்வுக்காகச் சென்று கொண்டிருந்தனர்.

“நாளைக்கு சைத்ர ஹஸ்தம்! கஜமலை தேவராஜனுக்கு விசேடப் பூசனைகள் நடைபெறும். நாம் அதில் பங்கேற்க வேண்டும்.”

ககனமயி கூறியதும், தானவர்மனின் நினைவுகள் காஞ்சியை நோக்கி நழுவின. அத்திமலையானின் ஆலயத்திலும் நாளை விசேடமாக இருக்கும். ஆனால் அத்திமலையான் காணாமல் போய் ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே. இவனுக்கே இருபது வயதில் மகன் இருக்கிறான். அண்ணன் அவனிசிம்மன் இறந்து அவனது மகன் மகேந்திரன் பல்லவ மன்னன் ஆகிவிட்டான்

என்று செய்தி வந்தது. ஒருமுறை காஞ்சிக்குச் சென்று அனைவரையும் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் இருந்தாலும், ககனா ஏனோ காஞ்சிக்குச் செல்லவே விரும்பவில்லை.

"அத்திமலையானும் அங்கே இல்லை. உங்கள் பெற்றோரும் இறந்துவிட்டார்கள். உங்கள் தம்பிகள் இருவர் மர்மமான முறையில் காணாமல் போனார்கள். உங்கள் தங்கை நவரத்ன பல்லவியும், ஜெயவர்மரின் மனைவி சாயாதேவியும் தற்கொலை செய்து கொண்டனர். உங்கள் தந்தையாரும் இறுதிக்காலத்தில் பித்துப் பிடித்து இருந்தார். உங்கள் குடும்பத்தில் தொடர்ந்து அசம்பாவிதங்கள் நடக்கும் போது, வலியச்சென்று பிரச்னைகளைத் தேடிக்கொள்வார்களா? நாமும் அங்கே போய் என்ன செய்வது? அத்தி மலையான் காணாமல் போனதில் எங்கள் தருமநகரத் திற்கு ஒரே அனுகூலம் என்னவென்றால். இப்போ தெல்லாம் இங்கே நிலநடுக்கம் தோன்றுவதில்லை. அந்த நிலநடுக்கத்திற்குக் காரணம் அத்திமலையான் அணிந்திருந்த ஸ்ரீதள மணி என்றாரே அந்த மேகலையின் பாட்டனார். அதை மெய்ப்பிப்பது போன்று, அவை களவு போனதும், இங்கே நிலநடுக்கம் ஏற்படுவது நின்று போனது.." — ககனா கூறினாள்.

தானவர்மன் அவள் பேசுவதைக் கவனித்தாலும், மனம் தனது சகோதரர்களை நினைத்து அலை பாய்ந்தது.

மாயமாகிப்போன ஜெயவர்மன், மற்றும் பீமவர் மனைப் பற்றிய தகவல்கள் கிடைத்ததோ? அத்தி மலையான் இருக்குமிடம் குறித்து விவரங்கள் ஏதேனும் தெரிந்ததோ?

காலம்தான் எவ்வளவு விரைவாக மாறுகிறது! நேற்றுதான் அத்திமலையான் ஆலயத்தில் ககனமயியைக் கண்டு, நான்கோடு ஐந்து என்று திடீர்த் திருமணத் தம்பதிகளாக மாறியிருந்த ககனமயியும், தானவர்மனும் காம்போஜ தருமநகரின் மன்னராகவும், அரசியாகவும்

பதவியேற்று இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. இதோ பிராயங்கள் இருபதை எட்டிப்பிடித்திருந்த இவனது மகன் கட்டிளம் காளையாக வளர்ந்து வருங்கால மன்னனாகத் திகழப் போகிறான். அவனிசிம்மனுக்கும் மகேந்திரன் என்கிற மகன் உண்டு.

அண்ணன் சிம்மவிஷ்ணு மரணம் அடைந்து விட்டதாகத் தகவல் வந்த போது உடனே காஞ்சிக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று துடிதுடித்தான், தானவர்மன். ஆனால் ககனா அதற்கு ஒப்புக் கொள்ள வில்லை. காம்போஜத்தின் சார்பாகத் தலைமை அமைச்சராக உள்ள தீபன் சமந்தரையனை இறுதிச் சடங்குகளிலும், பின்னர் மகேந்திரனின் மகுடாபி ஷேகத்திலும் பங்கேற்கும்படி அனுப்பியிருந்தாள். பெயருக்கு தானவர்மன் மன்னனாக இருந்தானே தவிர, முக்கிய முடிவுகளை எடுத்து வந்தது ககனாதான். என்ன செய்வது! வீட்டோடு மாப்பிள்ளை என்பது போன்று நாட்டு மாப்பிள்ளையாக வந்தவன் தானவர்மன். அண்ணனுக்கு நிகராகத் தானும் ஒரு அரசனாகத் திகழ வேண்டும் என்பதற்காகக் ககனாவின் கோரிக்கைகளை ஏற்றதன் பலன், இவனது தனித்தன்மையை என்றோ இழந்துவிட்டிருந்தான். நியமிக்கப்பட்ட மன்னனாகத் திகழ்ந்த தானவர்மன் நியமிக்கப்பட்ட கணவனாகவும் திகழ்ந்ததுதான், பரிதாபம்.

அழகிய மலைத்தொடரும், தர்மாவதி ஆற்றின் பாய்ச்சலும், பசுமைக் காட்சிகளும், மனதிற்கு இதமளித் தாலும், தானவர்மன் அவற்றை ரசிக்கும் நிலையில் இல்லை. இளரத்தமும், புது மனைவியின் மீதிருந்த மோகமும், மன்னனாகிவிட்ட கர்வமும் மட்டுமே அவனிடம் ஒரு காலத்தில் நிலவியது. ஆனால் இப்போது சிறிது நாட்களாக, பெற்ற நாட்டையும், உற்ற தெய்வமான அத்திமலையானையும், உடன்பிறந்த சகோதரர்களையும் கவனியாமல் கைகழுவிவிட்டு, சுயநலமாக இருந்து விட்டோம். பெருமைகள் மிக்க காஞ்சிக்குச் சென்று தான்

சிறுவயதில் வளைய வந்த இடங்களையும், அத்தி மலையானின் ஆலயத்தையும், ஒத்தாடையானின் ஆலயத்தையும் காண வேண்டும். தனது மனிதர்களுடன் உறவாடிப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்கிற ஆவல் அவனது மனதை அலைக் கழித்தது. ஆனால் ககனமயி அதற்கு ஒப்புக்கொள்ள மறுப்பாள் என்பதால் அமைதியாக இருந்தான்.

கரிய குதிரையில் சென்று கொண்டிருந்தானே, தவிர, சூர்யவர்மனின் மனது வெண்மையாகவே இருந்தது. பிறர் துன்பப்படுவதைக் கண்டு சகியாதவன்.. தாளாதவன், உலகின் எதிர்மறை சக்திகளைப் பற்றி ஒன்றும் அறியாதவன். சுத்த சத்வ சிந்தனைகளுடன் வளைய வருபவன். உடன் வெள்ளைக் குதிரையில் பயணித்துக் கொண்டிருந்த ஸ்ரீவர்தன், பழைய ராஜகுரு சோமஸ பண்டிதரின் பெயரன். உலகில் உள்ள நன்மை தீமைகளை நண்பனுக்கு எடுத்துரைக்கும் வருங்கால ஆலோசகனாக, திகழ்வதற்குரிய திறமைகளை வளர்த்துக் கொண்டிருந்தான்.

தாங்கள் உரையாடுவது, பின்பாக இரதத்தில் வரும் மன்னர் மற்றும் அரசியின் செவிகளில் விழாத வண்ணம் தங்களது புரவிகளுக்கும், இரதத்திற்கும் இடை வெளியினை அதிகப்படுத்திய இருவரும், ஐராவத மலையின் உச்சியைப் பார்த்தனர்.

“சூரியவர்மா! அதோ உச்சியில் தெரிகிறதே, கஜமலை தேவராஜனின் ஆலயம். அது போன்றே பல்லவத்தின் தலைநகரம் காஞ்சியிலும் ஒரு தேவராஜன் ஆலயம் இருப்பதாக எனது பாட்டனார் சோமஸ பண்டிதர் கூறினார்.”

“அறிவேன்! எனது தாயுடன் அவரும், நமது தளபதியும் சென்ற போதுதான், அத்திமலையான் ஆலயத்தில் எனது தந்தையைச் சந்தித்து இருவரும் மணந்து கொண்டனர் என்று எனது தாய் கூறியிருக்கிறாள்.” — சூரியவர்மன் கூறினான்.

"ஆச்சரியமாக இல்லை. இங்கும் ஒரு தேவராஜன். அங்கும் ஒரு தேவராஜன். இங்குள்ள மலை கஜமலை என்றால் அங்கு யானைமலை. இங்கும் ஒரு தரும நகரம். அங்கும் ஒரு தரும நகரம். தர்மாதேவி நதி இங்கே பாய்ந்து ஓட, அங்கே வேகவதி நதி ஓடுகிறதாம். நமது தேவராஜனை சதுர்முகன் உருவாக்கினான் என்று நாம் கூறுகிறோம். அவர்கள் நான்முகன் உருவாக்கினான் என்கிறார்கள். இங்கும் மூன்று நதிகள் சங்கமம், அங்கும் முக்கூடல் சங்கமம் உள்ளது. ஐராவத மலையும் அத்திமலையும் ஒரே நேர்கோட்டினில் இருப்பதாக எனது பாட்டனார் கூறுகிறார்." — ஸ்ரீவர்தன் கூறினான்.

சூரியவர்மனின் பார்வை கஜமலையின் மீது நிலைகுத்தி இருந்தது.

"இதில் என்ன ஆச்சரியத்தைக் கண்டாய், ஸ்ரீவர்தா! இரு தேவராஜன்களுமே ஒருவர்தானே. அஸ்வத்தாமாவும், நாகசோமாவும் தம்பதிகளாக ஈன்ற இரட்டைக் குழந்தைகள்தானே பல்லவர்களும், காம்போஜர்களும்.." — சூரியவர்மன் கூறினான்.

"இருப்பினும், நாம் இருவரும் ஆராதனை முறைகளில் வேறுபடுகிறோம் அல்லவா? எனது பாட்டனார் கூடக் கூறினார். கைவல்யம் என்கிற மோட்சச் சாதனம் குறித்து நமது தேவராஜா மார்க்கத்திற்கும், காஞ்சி ஆலயத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. நமது காம்போஜத்தின் தேவராஜ மார்க்கத்தில் கைவல்யம் என்கிற சாதனம் மோட்சத்திற்குத் தேவையில்லை என்கிறோம். அவர்கள் அது அவசியம் என்கிறார்கள். நம்மைக் கைவல்ய பிரதிகூலர்கள் என்றும், அவர்களைக் கைவல்ய அனுகூலர்கள் என்றும் வேறுபடுத்தினார், எனது பாட்டனார்." — ஸ்ரீவர்தன் கூறினான்.

சூரியவர்மன் நண்பனை வியப்புடன் நோக்கினான்.

"ஸ்ரீவர்தா! அன்றொரு நாள் நமது தளபதியார் தீபன் சமந்தரையனுடன் பேசிக் கொண்டிருந்தேன். காஞ்சி

அத்திமலையில் குடிகொண்டிருந்த தேவராஜன் பிரம்மனால் தேவ உடும்பரத்தில் உருவாக்கப்பட்டவனாம். தேவ உடும்பர அத்தி மரங்கள் இரண்டு மட்டுமேதான் உருவாகின. ஒன்றின் கீழேதான் புத்தன் ஞானம் பெற்று அதனைப் போதி மரமாக மாற்றினான். அந்த மரம் அசோகனின் மனைவியால் சிதைக்கப்பட்டதாம். மற்றொரு மரத்தில்தான், தேவராஜனின் சிலை செதுக்கப்பட்டது. எனவேதான் அந்தச் சிலையை அடையப் பல மன்னர்கள் முயற்சித்தார்கள். நமது காம்போஜத்திற்கு அந்தச் சிலையைக் கவர்ந்து வர, உனது பாட்டனாரும், தளபதியாரும் முயற்சித்தனர். ஆனால், அதன் பிறகு, எனது தந்தைக்கும், தாய்க்கும் திருமணம் நடைபெற, எனது தாய் தனது திருமணச் சீராக அந்தச் சிலையைக் கேட்டாராம். ஆனால் அதற்குள்ளாகவே பிரதிமை காணாமல் போய்விட்டதாம்.." — சூரியவர்மன் கூறினான்.

"இன்னும் ஒரு வேறுபாடு கூட நமது கஜமலை ஆலயத்திற்கும், காஞ்சி ஆலயத்திற்கும் உள்ளது. காஞ்சி தேவராஜனின் ஆலயம் குண திசையான கிழக்கினை நோக்கி அமைந்துள்ளது. ஆனால் நமது கஜமலை தேவராஜன் குடதிசையான மேற்கு நோக்கி நிற்கிறான். இந்த வேறுபாட்டிற்கான காரணத்தைக் கேட்டேன். அவராலேயே கூற இயலவில்லை. ஆனால் நமது கஜமலை தேவராஜனின் ஆராதனைகளை மேற்பார்வை இடும் கைவல்ய அனுகூலப் பண்டாரிகளின் தலைவர் சௌமியவர்ம பண்டாரியைக் கேட்டால் அவருக்கு ஒருவேளை தெரிய வரலாம்.."

"நாளைக்கு சைத்ரா ஹஸ்தம் அல்லவா. கஜமலை ஆலயத்தில்தானே இருப்போம். பண்டாரியிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோம்." — சூரியவர்மன் கூறினான்.

அரச குடும்பப் பரிவாரம் வசந்தக் குடீரத்தை அடைந்தது.

*மறுநாள் பொழுது புலர்ந்ததும் நீராடிவிட்டு, கஜமலைக்கு அனைவரும் புறப்பட்டனர். ஆராதனை நிகழ்ந்து கொண்டிருந்த போது சூரியவர்மனும், ஸ்ரீவர்தனும், ஆலயத்தைச் சுற்றி வந்தனர்.*

*சங்குகளும், கொம்பு வாத்தியங்களும் முழங்க, ஆராதனைகள் நடந்தேறின. குடும்பத்தினருக்கு மரியாதை களைச் செய்து கொண்டிருந்தனர் பண்டாரிகள். தலைமை பண்டாரி சௌம்யவர்ம பண்டாரி கையில் மாலைகளுடன் வந்து அனைவருக்கும் தேவராஜன் அணிந்த மாலையினை அணிவிக்க, அவரைச் சட்டென்று கேட்டுவிட்டான், சூரியவர்மன்.*

*“சுவாமி! காஞ்சியிலும் யானைமலை என்கிற அத்திகிரியின் மீது ஒரு தேவராஜன் இருக்கிறானாம். அங்கேயும் ஒரு தரும நகரம். இங்கேயும் ஒரு தரும நகரம்.. முக்கூடல் சங்கமங்களும் இரண்டு இடங்களிலும் உள்ளன. ஆனால் அவர்களது தேவராஜன் கிழக்கே பார்த்து நிற்கிறான். நமது தேவராஜன் மேற்கே பார்த்து நிற்கிறான். இந்த வேறுபாடு ஏன்?” — என்று வினவிய சூரியவர்மனை ஆச்சரியத்துடன் பார்த்தார் பண்டாரி.*

*“உண்மை இளவரசே! இருவருமே அஸ்வத்தாமாவின் இரட்டைக் குலக்கொழுந்துகள் என்பதால் ஒற்றுமைகள் அதிகம். ஆனால் வேற்றுமை ஒன்று மட்டும் உண்டு. அஸ்வத்தாமாவும், நாகசோமாவும் பெற்ற இரட்டைக் குழந்தைகளுக்கு வேறுபாடு காட்ட வேண்டி ஒன்றிற்குத் தொண்டைக் கொடியையும், மற்றொன்றுக்கு சந்திரகாந்த கொடியையும்* மாலையாக அணிவித்தனர். நாம்*

*** சந்திரகாந்த கொடி என்பதைத் தாவரவியலில் Ephedra Foeminea என்று குறிப்பிடப்படுகிறது. Sweden Stockholm Universityயைச் சேர்ந்த Catrina Rydin என்னும் பெண் அறிஞர் இந்த வகை அபூர்வத் தாவரம் பௌர்ணமி நிலவால்தான் தனது மகரந்தங்களைப் பரிமாறிப் பெருக்கம் செய்கிறது (pollination) என்பதை ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்துள்ளார். நமது சனாதனத் தர்மம் சந்திரகாந்த**

*சந்திரகாந்த கொடியை மாலையாக அணிந்த அஸ்வதன் என்ற மகனின் வாரிசுகள். பல்லவர்கள் தொண்டைக் கொடியை அணிந்த புலிசோமனின் வாரிசுகள். தாயின் பெயரைப் பல்லவனும், தந்தையின் பெயரை நமது அஸ்வதனும் தாங்கி நின்றனர். எனவேதான் நமது இருவருக்கும் ஒற்றுமைகள் நிறைய உண்டு. ஆனால் பல்லவக் காஞ்சியின் தேவராஜனுக்கும், நமது தேவராஜ மார்க்கத்துக்கும் சில வேறுபாடுகள் உண்டு. ஆராதிக்கும் ஆகமங்களும்.. ஆலயம் எழுப்பும் முறைகளிலும் வேறுபாடு உண்டு. காரணம் நாம் ஆலயம் அமைக்கும் முறைகளுக்கு, சந்திரனின் பாதையை கணக்கிடுகிறோம். எனவேதான் மேற்கை நோக்கி நமது ஆலயங்களை அமைக்கிறோம். கிழக்கு சூரியனின் பாதையைக் கணக்கிட்டுக் காஞ்சி அத்திமலைத்தேவனின் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது." — சௌமியவர்மா பண்டாரி கூறினார். அனைவரும் அவர் கூறுவதை உன்னிப்பாகக் கவனித்தனர்.*

*"நாம் சூரியப் பாதையைத் தவிர்ப்பதால் கிழக்கு நோக்கி நமது ஆலயங்களை வைப்பதில்லை.. இதில்தான் அவர்கள் நம்மிடம் வேறுபடுகிறார்கள்." பண்டாரி தொடர்ந்து கூற, ககனமயிக்கு தான் உப்பரிகையில் இருக்கும் போது ஸ்ரீதளமணியின் ஒளிவட்டத்தைக் கண்டது நினைவுக்கு வந்தது.*

*"அஸ்வத்தாமாவின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான் வர்மன்* என்ற பெயரைப் பல்லவர் களும், காம்போஜர்களும் வைத்துக் கொள்கின்றனரோ?" — தானவர்மன் கேட்டான்.*

---

**கொடியைப் பற்றிக் குறிப்புகளை அன்றே வழங்கியிருக்க, Catrina-வின் ஆராய்ச்சிகளுக்குப் பிறகே வல்லுநர்கள் அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.**

*** வர்மம் என்றால் பாதுகாப்பு என்று பொருள். வர்மக்கலை என்றால் பாதுகாப்புக் கலை என்பது பொருள்.**

"ஆம்! அஸ்வத்தாமா சிறந்த போர் வீரன். பாரத யுத்தத்தில் கௌரவர் பக்கம் நின்று போர் பரிந்தான். அவனது நேர்வாரிசுகளான பல்லவர்களுக்கும், காம்போஜர்களுக்கும், அந்தப் பெயர் வழங்கப்படுவதில் வியப்பேதும் இல்லை." — பண்டாரி கூறினார்.

"கிழக்கு நோக்கி நிற்கும் தேவராஜா ஆலயத்திற்கும், மேற்கு நோக்கி நிற்கும் தேவராஜா ஆலயத்திற்கும் என்ன வேறுபாடு?" — ககனமாயி வினவினாள்.

"சூரியனுக்கும், சந்திரனுக்கும் உள்ள வேறுபாடுதான். கிழக்கு முகமாகச் சூரிய பாதையை நோக்கி இருக்கும் ஆலயம் சூரிய ஈர்ப்பு சக்தியை மையமாகக் கொண்டுள்ளது. மேற்கு முகமாகச் சந்திர பாதையை* நோக்கி நிற்கும் ஆலயம் சந்திரனின் ஈர்ப்பு சக்தியை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது!" — பண்டாரி கூறினார்.

"சூரிய பாதையை நோக்கும் ஆலயத்திற்கும் சந்திர பாதையை நோக்கும் ஆலயத்திற்கும் என்ன வேறுபாடு?" — ஸ்ரீவர்தன் கேட்டான்.

"நிறைய வேறுபாடுகள் உள்ளன! அதற்குப் பதில் கூற வேண்டுமென்றால், உலகம் உண்டானதில் இருந்து

---

* காம்போஜ மன்னன் சூரியவர்மன் எழுப்பிய அங்கோர் வடம் (Angkor Wat) என்கிற கம்போடிய விஷ்ணு ஆலயம் சந்திரபாதை என்னும் மேற்கு நோக்கிதான் எழுப்பப்பட்டது. (இரண்டாம் பாகம் அட்டைப்படத்தில் உள்ள முகம் அங்கோர் வடம் தேவராஜனின் முகம்தான்). தேவராஜ மார்க்கத்தினர் தங்களது ஆலயங்களை மேற்கு நோக்கி எழுப்பினர். மேரு மலையின் உச்சியில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்று Angkor Wat ஆலயத்தை அழைத்தனர். Angkor என்றால் நகரம். Wat என்றால் மரம். முன்பே தெரிவித்திருக்கிறேன். அட்சய வடம் என்றால் அரச மரம். மரத்தின் கீழே போதிக்கப்படும் வேதங்களை வடமொழி என்று குறிப்பிடுவார்கள். தமிழில் வடம் என்று கூறாமல் வட்ட மொழி என்று கூற வேண்டும். தருமநகரத் தேவ மரம் என்பதைக் குறிக்கத்தான் Angkor Wat என்று அந்த ஆலயத்திற்குப் பெயர் வைத்தனர்.

*துவக்க வேண்டும். சூரியன் உயிர்க்காரகன். சந்திரன் மனக்காரகன். உயிரைச் சூரியன் அளிக்கிறான். உணர்வு களைச் சந்திரன் அளிக்கிறான். குருதியைச் செவ்வாய் அளிக்கிறான். அறிவுத்திறமையைப் புதன் அளிக்கிறான். ஞானத்தை குரு அளிக்கிறான். வளர்ச்சியை, பெருக்கத்தைச் சுக்ரன் அளிக்கிறான். ஆற்றலைத் தருகிறான் சனி. மனிதத் தேகம் என்னும் தேர் ஓடத்துவங்க, ஓடும் தேரின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் முட்டுக்கட்டைகளாகத் திகழ்கின்றன ராகுவும் கேதுவும்.*

*"எல்லாக் கிரகங்களுக்கும் அதனதன் அளவுக்கு ஈர்ப்பு சக்தி உண்டு அல்லவா? நமது பூமியின் அளவு சந்திரனைவிடப் பெரியது என்பதால் சந்திரனைவிட நமது பூமிக்கு ஈர்ப்பு சக்தி அதிகம். சூரியன் நமது பூமியைவிட மிகப்பெரியது என்பதால் அதற்கு மூன்று இலட்ச மடங்கு ஈர்ப்பு சக்தி அதிகம். எப்படி நமது தேகத்தை இந்தக் கிரகங்கள் ஆளுமை செய்கின்றதோ அப்படி நாம் எழுப்பும் ஆலயங்களையும் இந்த ஈர்ப்பு விசைதான் ஆதிக்கம் செலுத்துகிறது."*

*"உங்களுக்குத் திரிசங்கு கதை* தெரியும் அல்லவா? அயோத்தி மன்னன் திரியருனியின் மகன் சத்தியவிரதன்*

---

* திரிசங்குவின் கதை, இராமாயணம், பாலகாண்டத்தில் இராமருக்கு விசுவாமித்திரர் கூறுவதாக அமைந்துள்ளது. அனைத்தையும் மூடநம்பிக்கை, புருடா என்று எளிதாக ஒரே சொல்லில் கூறிவிட்டுச் சென்றுவிடலாம். ஆனால் திரிசங்கு கதியின் மூலம் நமக்கு Gravitational force பற்றிய பாடங்கள்தான் வால்மீகி எடுத்திருக்கிறார். இந்திரன் உதைத்துத் தள்ளிய திரிசங்கு மன்னன் மீண்டும் பூமியின் ஈர்ப்பு விசை மண்டலத்தினுள் நுழைந்திருந்தால், அவன் பூமியில் வந்து விழுந்திருப்பான். பூமியின் ஈர்ப்பு விசையைக் கடந்த பகுதியைத் திரிசங்கு சுவர்க்கம் என்று கருதலாம். ஈர்ப்பு விசை நிலவும் எல்லை வரை எந்தப் பொருளை விண்ணை நோக்கி எறிந்தாலும், மீண்டும் நிலவுலகிற்கு வந்து விழும். அதே பொருளை வினாடிக்கு 12 கிலோமீட்டர் வேகத்தில் எறிந்தால்,

தர்மத்திற்குப் புறம்பாக நடந்ததால் வசிட்டர் அவனைக் காட்டிற்கு அனுப்பச் சொல்ல, விஸ்வாமித்திரர் தனக்கு உதவிய சத்தியவிரதனுக்குத் தேகத்துடன் சுவர்க்கம் செல்வாய் என்று வரம் கொடுக்கிறார். பாவியான அவனைச் சுவர்க்கத்திற்குள் அனுமதிப்பதா என்கிற கோபத்தில் சுவர்க்கத்துக்கு வந்த அவனை இந்திரன் எட்டி உதைக்க, வேறு வழியின்றி பூமிக்கும், சுவர்க்கத் திற்கும் இடையே ஒரு உலகை உண்டாக்கி அதனைத் திரிசங்கு சுவர்க்கம் என்று அழைத்து அவனை நிறுத்து கிறார். அவன் அந்தரத்திலேயே கிடக்கிறான். புவி ஈர்ப்பு விசையில் இருந்து மீண்டு வானவெளியில் அவன் சுற்றிக் கொண்டிருப்பதையே திரிசங்கு சொர்க்கம் எனலாம். இந்த ஈர்ப்பு விசையின் இயக்கத்தைக் கொண்டு அமைக்கப்படுகின்றன நமது ஆலயங்கள்.

"மனிதனுக்கு ஆண்டவன் தேகம் அமைத்துத் தருகிறான். நாம் அவனுக்குத் தேகமாக ஆலயங்களை உருவாக்குகிறோம். ஆலயங்களில் உள்ள பஞ்சபூத ஸ்தானங்கள் கிரகங்களின் ஈர்ப்பு சக்தியினால் வலிமை பெறுகின்றன. சூரிய பாதையினை நோக்கும் ஆலயத்தில் ஈர்ப்பு சக்தி மிக அதிகம். கிழக்கே நோக்கும் மூர்த்தம் சூரியனின் உயிர் சக்தியை உள்வாங்குகிறான். எனவே அக்னிகுண்டத்தில் இருந்து வெளிவந்த அத்தி மலைத்தேவன் சூரியப் பாதையை நோக்கும் போது அவனது உக்கிரம் பன்மடங்கு அதிகரிக்கிறது. சூரியனின் ஈர்ப்பு சக்தி நிலவுலகைவிட மூன்று இலட்ச மடங்கு அதிகமாவதால் அவனுள் சூரிய சக்தி அதிகமாகிறது. இதனால்தான் ஆற்றலும், உக்கிரமும் கிழக்கு நோக்கி நிற்கும் அத்திமலையானுக்கு அதிகமாக உள்ளது.

---

அந்தப் பொருள் மீண்டும் பூமிக்கு வருவதில்லை. காரணம் ஈர்ப்பு விசைப் பகுதியை அந்தப் பொருள் கடந்துவிடுகிறது. இந்த ஈர்ப்பு விசையின் தன்மையைக் கணித்துத்தான் ஆலயங்கள் எழுப்பப்படுகின்றன.

*"ஆனால் இதோ இங்கே எழுந்தருளி இருக்கும் ஐராவத மலையின் தேவராஜன் சந்திர பாதையான* மேற்கு நோக்கி நிற்கிறான். விண்வெளியில் உள்ள எல்லாக் கிரகங்களுமே சூரியனிடம் இருந்துதான் ஒளியைப் பெறுகின்றன. ஆனால் சந்திரனில் மட்டும்தான்*

* சிவாலயங்களில் நவக்கிரகங்களைக் கவனியுங்கள். மையத்தில் உள்ள சூரியனின் சிற்பம் கிழக்கு நோக்கி நிற்க, அவனுக்கு முன்பாகச் சுக்கிரன் கிழக்கு நோக்கியும், அவனது தென் கிழக்கில் சந்திரன் மேற்கு நோக்கியும் நின்றிருப்பார்கள். அவரவர்களது பாதைகளைக் குறிப்பதே நவக்கிரகச் சிற்பங்கள். விஷ்ணு ஆலயங்களில் நவக்கிரகச் சிற்பங்கள் அமையாத காரணம், ஆலயத்தின் அமைப்பே நவக்கிரகங்களை மையமாகக் கொண்டு இருப்பதால்தான். நவக்கிரகச் சிற்பங்கள் Inverter போன்றவை. மின்வெட்டு இருக்கும் போது inverter நமக்குப் பிரயோஜனப்படும். இருபத்து நாலு மணிநேரமும் மின்சக்தி இருக்கும் மந்திரிகள் வீடுகளுக்கு inverter எதற்கு? எனவேதான் விஷ்ணு ஆலயங்களில் நவக்கிரகங்கள் இல்லை.

இங்கு ஒரு முக்கியத் தகவல். திருமலை வேங்கடவன் கிழக்கு சூரியப் பாதையை நோக்கி நின்றாலும், சந்திர பாதையின் கிரணங்களை ஆகர்ஷிக்கும் வல்லமையைப் படைத்திருக் கிறான். எனவே அவனால் உக்கிரமாகவும் தோன்ற முடியும். குளிர்ச்சியாகவும் காட்சி தர முடியும். திருவரங்க அரங்கன் சுக்கிர பாதையில் நோக்கி இருந்து, பிறகு இலங்கையை நோக்குவதற்காகத் தெற்கே திரும்பி, குணதிசை பாதம் வைத்து, குடதிசை முடியை வைத்தான். கச்சி வரதன் சூரியப் பாதையான கிழக்கை நோக்கி இருந்துவிட்டு, பிறகு மேற்கு நோக்கி இப்போது சந்திர பாதையில் நிற்கிறான்.

பாதை மாறியதால், அரங்கனும், வரதனும் படையெடுப்புகளால் பல இன்னல்களை அனுபவித்துள்ளனர். கோயிலைவிட்டுக் கிளம்பிப் பல ஊர்களில் தலைமறைவாக இருந்துள்ளனர். ஆனால் பாதை மாறாத வேங்கடவனுக்கு அத்தகைய இன்னல்கள் ஏற்படவில்லை.

Eleanor Mannikka என்கிற சரித்திரப் பேராசிரியர் Angkor Wat பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார். அதில்-

Angkor Wat is located at 13.41 degrees north in latitude and that the north-south axis of the central tower's chamber is 13.43 cubits long.

*பிரதிபலிக்கும் சக்தி மிகவும் குறைவு. சூரியனிடம் இருந்து பெறும் ஒளியில் வெறும் ஏழு சதவிகித ஒளியை மட்டுமே பிரதிபலிக்கிறது. எனவே சந்திர பாதையான மேற்கு நோக்கி நிற்கும் நமது தேவராஜன் குளிர்ச்சி பொருந்தினவனாகத் திகழ்கிறான்." — பண்டாரி கூற, சூரியவர்மன் ஆச்சரியத்துடன் நண்பன் ஸ்ரீவர்தனை பார்த்தான்.*

*"மனிதர்கள் எப்படி எங்கோ இருக்கும் கிரகங்களின் ஈர்ப்பு விசையைப் பற்றி அறிகிறார்கள்?" — சூரியவர்மன் கேட்டான்.*

---

This, Mannikka believes, is not an accident. "In the central sanctuary, Vishnu is not only placed at the latitude of Angkor Wat, he is also placed along the axis of the earth," she writes, pointing out that the Khmer knew the Earth was round. In addition, in her writing, Mannikka notes a dozen lunar alignments with Angkor Wat's towers, suggesting that it served an important astronomical role. "During the long and clear Cambodian nights, when the stars filled every inch of the black sky, the astronomer-priests stood on the long western causeway.. and recorded the movements of the Moon against the towers in the top two galleries of the temple." ஆதாரம்: Angkor Wat: history of an ancient temple By Owen Jarus, Live Science Contributor.

உலகையே அளந்தவர்கள் நம் முன்னோர்கள். எந்த மார்க்கத்திலும் விண்வெளியை இவ்வளவு துல்லியமாக யாருமே அறிந்து கொள்ளவில்லை. ஈர்ப்பு சக்தியை அந்தக் காலத்தில் கோயில்களை எழுப்பியவர்கள் எப்படி அறிந்தார்கள்..? தங்களது ஞானக் கண்ணைத் திறந்து உலகை அளந்ததன் பலனே, இன்றைய ஆற்றல் மிக்க ஆலயங்களைப் பெற்றிருக்கிறோம். ஆலயங்கள் என்பவை வெறும் கற்பாறை மதில்கள் மற்றும் சிலைகள் மற்றும் காட்சிப் பொருள் அல்ல.. ஒவ்வொரு ஆலயமும் முன்னோர்களால் Programme செய்யப்பட்டிருக்கிறது. மனிதர் இல்லாத பணம் வழங்கும் ATM இன்று சர்வசாதாரணம். இருபது வருடங்களுக்கு முன்பாக இப்படி ஒரு வசதி என்று நமக்கே தெரியாது. ATM கார்டு, PIN நம்பர் போன்றுதான் ஒவ்வொரு தேகத்திற்கும் ஒரு பின் நம்பர் கொடுக்கப்பட்டுள்ளது. பணம் வாங்க ATM. அருளை வாங்க AMT (Aththi Malai Thevan) தவறாமல் ஜூலை 1ல் வெளிவரும் அவனைத் தரிசியுங்கள்).

“தன்னை உணர்ந்தால் ஈரேழு லோகங்களையும் அறியலாம் என்கிற சிறு தத்துவத்தைக் கொண்டுதான், உலகையே அளந்தார்கள். சில்ப சாத்திரம் மற்றும் ஆகமச் சாத்திரங்களைக் கொண்டு இறைவனுக்குத் தேகம் சமைத்தனர். தேகம் இல்லாமல் எந்தச் சக்தியாலும் வெளிப்பட முடியாது என்பதை அவர்கள் உணர்ந் திருந்தனர்.”

“பண்டாரி! ஒருவேளை சூரிய பாதை முகமாகக் கிழக்கே ஒரே நேர்கோட்டில் உள்ள நமது காம்போஜத்தை நோக்கி அத்திமலையான் நிற்பதால்தான் நமது நாட்டில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றனவோ..?” ககனமயி கேட்டாள்.

“இருக்கலாம், அரசியாரே!” — பண்டாரி கூறினார்.

“இப்போது நிலநடுக்கங்கள் ஏற்படவில்லை என்பதாலும், அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர பிரதிமையும் காணவில்லை என்பதாலும் இரண்டிற்கும் தொடர்பு உள்ளதாகவே கருதப்பட வேண்டியிருக்கிறது. நான் மேற்கு வானில் கண்ட ஒளிவட்டத்திற்குக் காரணம் அவன் அணிந்திருந்த ஸ்ரீதள மணி என்று அறிந்தேன். சைத்ர மாச ஹஸ்தம் நட்சத்திரத்தில் அத்திமலைத்தேவனுக்கு வீர்யம் அதிகம் என்பதால் நமக்கு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன போலும்..” — ககனமயி கூற, அவளைத் திகைப்புடன பார்த்தான் சூரியவர்மன்.

“அது என்ன ஒளிவட்டம்? என்னிடம் நீங்கள் இதுவரையில் கூறியதே இல்லையே?” — சூரியவர்மன் வியப்படைந்தான்.

“வசந்தக் குடீரத்தில் ஓய்வு எடுக்கப் போகிறோம். இன்றிரவு உப்பரிகையில் எனக்குக் கிடைத்த அனுபவங்களைப் பற்றிக் கூறுகிறேன்.” — ககனா கூறினாள்.

"அப்படியே மன்னரும் காஞ்சியைப் பற்றியும், அத்திமலைத்தேவனைப் பற்றிய விவரங்களையும் எங்களுக்குக் கூற வேண்டும்!" — ஸ்ரீவர்தன் கூற, புன்சிரிப்புடன் தலையசைத்தான் தானவர்மன்.

"அவரது பிறந்த வீட்டுப் பெருமைகளைக் கூறச் சொல்லிவிட்டாய் அல்லவா, ஸ்ரீவர்தா! இரவு முழுவதும் அந்தப் பெருமைகளைப் பேசிக் கொண்டே இருப்பார்." ககனா சிரித்தாள்.

அன்றைய இரவு உணவிற்குப் பிறகு, வசந்தக் குடீரத்தின் உப்பரிகையில் அரச குடும்பத்தினரும், ஸ்ரீவர்தனும் குழுமினர். மிகவும் ரம்மியமான அந்த இரவு வேளையில் வானம் நிர்மலமாகக் காணப்பட்டது. வானில் நிலவு காணப்படவில்லை என்றாலும், வைரங் களாகச் சிதறியிருந்த தாரகைகள், கண்சிமிட்டியபடி நின்றன.

'சொல்ல வேண்டியதை மட்டும் அவர்களுக்குச் சொல். சொல்லக் கூடாததைச் சொல்லாதே!' என்பது போன்று ககனாவையும், தானவர்மனையும் அவை எச்சரித்தது போன்று தோன்றியது. ஆனால் பழைய நினைவுகள் என்பவை புதைகுழி அல்லவா? சரித்திரம் என்கிற புதைகுழியில் அங்கே குழுமியிருந்த அனைவருமே சிக்கி, ஆழத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

தான் உப்பரிகையில் நீராடியபின், கீழ் மேற்கு வானில் கண்ட ஸ்ரீதள மணியின் ஒளிவட்டம், தரும நகரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம், தங்களது காஞ்சி பயணம், ஆலயத்தில் தானவர்மனைச் சந்தித்துக் காதல் வசப்பட்டது, இருவரது திருமணம், திருமணச் சீராக தான் கேட்ட அத்திமலையானின் சிலை ஆகியவற்றை விவரித்தாள்.

தானவர்மனும் அஸ்வத்தாமாவுக்குக் கண்ணன் தந்த சாபம், அத்தியூருக்கு அவன் வந்தது, நாகசோமாவிடம்

இரண்டு பிள்ளைகளைப் பெற்றது, தொண்டைக் கொடி மற்றும் சந்திரகாந்த கொடிகளை அணிவித்து இரட்டைப் பிள்ளைகளுக்கும் இடையே அடையாளம் கண்டது, சாணக்கியனின் சரித்திரம், திருலோச்சன பல்லவனின் பெருமைகள், கரிகாலன் மற்றும் இளந்திரையன் இடையே எழுந்த மோதல்கள், சமுத்திரகுப்தன் காஞ்சியின் மீது படை எடுத்து வந்தது, சிம்மவர்மனின் போர்த்திறமைகள், அவனது நான்கு மகன்களாகிய தங்களுக்கு இடையே நடந்த சச்சரவுகள், நவரத்ன பல்லவி மற்றும் சாயாதேவியின் தற்கொலைகள், விஜயவர்மன் கொலை, வீரகொசுவன் மரணம், மற்றும் தேவ உடும்பர சிலை காணாமல் போனது மற்றும் மாலிருஞ்சோலை என்கிற ஸ்ரீவரத்தில் இருந்து வரத நாராயணப் பெருமாளை அத்திமலையில் பிரதிஷ்டை செய்தது வரை அனைத்தையும் சொல்லி முடித்தான்.

பழைய நினைவுகளைச் சிலாகித்தபடி தானவர்மன் அவற்றைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்க அவற்றை மெய்மறந்து ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள், சூரியவர்மனும், ஸ்ரீவர்தனும்.

"இப்போது சிற்றப்பன் ஜெயவர்மர் எங்கே இருக்கிறார்?" — கண்களில் அவரைக் குறித்த பிரமிப்போடு சூரியவர்மன் கேட்டான்.

"அவன் உயிருடன் இருக்கின்றானா, இல்லையா என்பதே தெரியவில்லை. ஆனால் அவன் இருக்கும் இடத்தில்தான் அத்திமலைத்தேவனின் சிலையும் இருக்க வேண்டும்!"

தானவர்மன் இப்படிக் கூறியதும் ஸ்ரீவர்தனின் சிந்தையில் மின்னல்கீற்றாக ஒரு நினைவலை புறப்பட்டது.

"அரசே! சற்றுப் பொறுங்கள். கடற்படை பயிற்சிக்காக நான் மகிமாசனருடன் மேகமலை கடற்கரைக்குச்

*சென்றிருந்தேன் அல்லவா? மேகமலையின் உச்சியில் ஒரு ஆலயம் இருந்தது. அதை எழுப்பியவள் பென்* என்கிற மலைவாசி பெண். நான் அந்த ஆலயப் பெருமானைத் தரிசித்தேன். அச்சில் வார்த்தது போன்று நமது தேவராஜனைப் போன்றே இருக்கிறார். அந்தச் சிலை கடலில் மிதந்து வந்ததாகக் கூறுகிறார். ஒருவேளை, ஜெயவர்மர் சிலையுடன் கடலில் செல்லும் போது, கலம் மூழ்கி, சிலை கடலில் மிதந்து வந்து மேகா நதி கடலில் கலக்கும் இடத்தில் சிக்கியிருக்கலாம் அல்லவா? அதனைப் பென் சிலையை எடுத்து மேகமலையின் உச்சியில் வைத்து ஆலயம் கட்டியிருக்கலாம். அதனை ஆராதிக்கும் பண்டாரியை கேட்டேன். அது தேவ உடும்பர தேவராஜ மூர்த்தியாக இருக்கலாம் என்று கூறினார்.." — ஸ்ரீவர்தன் கூறியதும் தானவர்மனும், ககனமயியும் பரபரப் படைந்தனர்.*

*"தேவ உடும்பரம் நமது நாட்டில்தானா இருக்கிறது?" — வியப்புடன் கேட்டான், தானவர்மன். "அப்படியென்றால், ஜெயவர்மன் கடலில் மூழ்கி இறந்திருக்க வேண்டும்!" — சற்றே அவனது குரல் தழுதழுத்தது.*

* முன்பே குறிப்பிட்டது போன்று, தேவராஜனை ஆராதித்து அவன் பெயரிலேயே மார்க்கத்தைக் கடைப்பிடித்த காம்போஜ நாட்டின் தெற்கு பகுதியில் மேகநதி ஆற்றின் கரையில் அந்த மூதாட்டி பென்-னின் பெயரில் இன்று கம்போடியாவில் ஒரு மலை நகரமே உள்ளது. அதனை Phnom Penh என்று அழைக்கின்றனர். மேகநதி இப்போது மேகாங் என்று அழைக்கப்படுகிறது.

Mekong begins in the Lasagongma Spring which is in the plateau of Tibet, disputed part of China, and flows about 2, 703 miles (4, 350 km) south-east to the South China Sea. The river runs through Tibet, China, Burma, Thailand, Laos, Cambodia, and finally Vietnam. Phnom Penh, Cambodia's busy capital, sits at the junction of the Mekong and Tonlé Sap rivers. It was a hub for both the Khmer Empire

Phnom Penh (literally, 'Penh's Hill') takes its name from the present Wat Phnom ('Hill Temple'). Legend has it that a wealthy widow named Lady Penh found a Koki tree floating down the Tonle Sap river after a storm. Inside the tree was a stone statue of Vishnu-Cambodiai portal –Wikipedia.

*"அப்படியென்றால், நமது தெய்வம் தேவராஜன், காஞ்சியிலிருந்து தனக்கு உரிய இடத்திற்குத் தானாகவே வந்துவிட்டான் போலும்!" — ககனா குதூகலித்தாள்.*

*"உடனே நாம் அனைவரும் மேகமலைக்குப் போக வேண்டும்!" — சூரியவர்மன் கூறினான்.*

*"அந்தச் சிலை ஜெயவர்மன் கொண்டு சென்ற தேவ உடும்பர அத்திமலையானின் சிலைதான் என்பதற்கு ஆதாரம் இல்லையே.." — தானவர்மன் கூறினான்.*

*பழைய கதைகளைப் பேசியபடி அமர்ந்திருந்த அரச குடும்பத்தினர் நடுநிசி தொடங்கிவிட்டதை உணர்ந்தனர்.*

*"போதும் நமது மந்திராலோசனை.. நடுநிசி வந்து விட்டது. உறங்கப் போகலாம்!" கூறியபடி ககனமயி எழுந்தாள்.*

*அப்போதுதான் அந்த விசித்திரம் நடந்தது.*

*வானத்தை நோக்கியபடி தாரகைகளை ரசித்துக் கொண்டிருந்த ககனா கடைசியாக ஒருமுறை மேற்கு வானை நோக்கினாள். அப்படியே உறைந்து போனாள். "அதோ பாருங்கள்!" கிசுகிசுத்த குரலில் ககனா கூற, அனைவரும் அவள் சுட்டிக்காட்டிய திசையில் நோக்கினார்கள்..*

*மேற்கு வானின் கீழ்பகுதியில் சிறு புள்ளியாகத் தோன்றிய ஒரு ஒளிக்கீற்று, பிறகு பெரியதாக வளர்ந்து சுழன்றபடி, மீண்டும் தேய்வதும், பிறகு வளர்வதுமாக இருந்தது.*

*"சூரியவர்மா! இந்த ஒளியைத்தான் நான் பல வருடங்களுக்கு முன்பாக ஒரு சைத்ர ஹஸ்த நடுநிசியில் கண்டேன். மீண்டும் இன்று ஒளி புறப்படுகிறது என்றால் சற்று நேரத்தில் இங்கே நிலநடுக்கம் உண்டாகும் வாய்ப்புகள் உள்ளன.." — அவள் கூறியதும்தான் தாமதம்.*

தருமநகர அரண்மனையின் கண்டாமணி அடிக்கத் துவங்கியது. அரண்மனைக் கோவேறு கழுதைகளின் செவிகள் நீண்டுவிட்டன போலும். வரிசையாக ஒவ்வொரு மணியோசையாகக் கேட்க, ஐராவத மலையின் அடிவாரத்து மணியும் ஒலிக்க, இறுதியாக வசந்தக் குடீரத்து மணியும் ஒலித்தது.

உடனே —

நிலநடுக்கம் ஒன்று தோன்றிக் கிடுகிடுவென வசந்தக் குடீரமே குலுங்கத். துவங்கியது. அனைவரும் கலவரத்துடன் நிற்க, பிறகு மீண்டும் நிலம் சகஜ நிலைக்குத் திரும்பியது.

சூரியவர்மனும், ஸ்ரீவர்தனும் ககனாவை ஆச்சரியத் துடன் நோக்கினர்.

"ஸ்ரீவர்தா! நீ மேகமலையில் கண்டது ஜெயவர்மன் கொண்டு வந்த சிலையாக இருக்கும் என்று நினைக்கிறாயா..?" — ககனா கேட்டாள்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். காரணம், கடல் மின்னல் என்கிற சீனக் கலம் ஒன்று புயலில் சிக்கி வேங்கை தீவுக்கும், மேகமலைக்கும் இடையே உள்ள கடலில் மூழ்கியது என்கிறார்கள். சீனம் என்பதால் ஜெயவர்மன் அதில் பயணித்திருக்கக்கூடும். தேவராஜனின் சிலையை அதில்தான் அவன் கொண்டு சென்றிருப்பான். அந்தச் சிலைதான் மேகாநதியில் ஒதுங்கியிருக்கக்கூடும்." — ஸ்ரீவர்தன் கூறினான்.

"நீ சொல்வது உண்மையானால், ஜெயவர்மர் கொண்டு சென்றது தேவ உடும்பர சிலை அல்ல. காரணம், இதோ இன்றும் மேற்கு வானில் ஒளி தோன்றி நிலநடுக்கம் தொடர்கிறது என்றால், ஸ்ரீதளமணி இன்னும் பல்லவத்தில் இருக்கிறது என்று அர்த்தம். அதை அணிந் திருக்கும் அத்திமலைத்தேவனும் பல்லவத்தில்தான் இருக்கிறான் என்று பொருள். அப்படியென்றால்,

ஜெயவர்மர் வேறு ஒரு சிலையைத்தான் எடுத்துச் சென்றிருக்கிறார்." — ககனா கூறினாள்.

தானவர்மனுக்குத் துக்கம் பொங்கியது. 'அத்திமலைத்தேவனின் மீது உண்மையான பக்தியைச் செலுத்தியவன் ஜெயவர்மன். பிரக்ஞுதாரா வசியத்தின் மூலம் சிம்மவர்மனையும், அரச குடும்பத்தையும் வசியப்படுத்தித் தேவ உடும்பரத்தை அபகரிக்க நினைக்கிறாள் என்று முதலில் யூகித்தவன் ஜெயவர்மன்தான். நிச்சயம் தேவ உடும்பர அத்திமலையானை அந்நியர்கள் அபகரிப்பதைச் சகிக்கமாட்டான். அத்திமலைத் தேவனைக் காப்பாற்ற, வேறு ஒரு போலி சிலையைத் தயாரித்திருப்பான். ஜெயவர்மன் அடிக்கடி ஐயம்படுகை ஸ்தபதி காளநந்தியை சந்தித்ததாக அவனிசிம்மன் கூடக் கூறினானே.. ஒருவேளை அவரைக் கொண்டு போலி சிலையைத் தயாரித்துப் பிரக்ஞுதாராவை ஏமாற்றிருப்பானோ..?' — தனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று —

தாரகைகள் இன்னும் பிரகாசமாக ஜொலித்து நகைக்க ஆரம்பித்தன. காரணம், வசந்தக் குடீர உப்பரிகையில் ககனா மற்றும் தானவர்மன், அத்திமலைத்தேவனின் சரித்திரங்களைக் கூறிக் கொண்டிருந்த போது, இதே சரித்திரங்கள் வேறு இரண்டு உப்பரிகைகளிலும் அதே சமயத்திலேயே கூறப்பட்டன..

காஞ்சி அரண்மனையின் உப்பரிகையில், ராஜஸ்ரீ அத்திமலையின் சரித்திரங்களை மகேந்திர பல்லவனுக்குக் கூறிக் கொண்டிருக்க, அவன் அதை பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அதே போன்று கோஷி மலையின் பின்பாக இருந்த சூலினி கோட்டம் என்கிற ஷோலின் விஹாரத்தின் உப்பரிகையில் ஜெயவர்மன் என்கிற போதி தர்மா தனது சரித்திரத்தைக் கூறிக் கொண்டிருக்க அதனை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தான் சென் ஹூய்.

"குருவே! உங்களது சரித்திரம் என்னை பிரம்மிக்கச் செய்துவிட்டது. நாம் தெய்வத்தைத் தொழுவதே நம்மை அவன் காப்பான் என்றே. அந்தத் தெய்வத்தைக் காப்பாற்றுவதற்காக, உங்கள் தெய்வத்தை, உங்கள் குடும்பத்தை, உங்கள் அரண்மனையை ஏன்.. உங்கள் மார்க்கத்தையே துறந்து உங்களது வாழ்வையே தியாகம் செய்திருக்கிறீர்கள். உங்கள் தியாகத்திற்கு முன்பாக இந்த வையகமே சிறு தூசுதான். கவலைப்படாதீர்கள்.. நான் காஞ்சிக்குச் சென்று, உங்களது பெருமைகளை உரைத்து, உங்கள் மீது படிந்திருக்கும் களங்கங்களை நீக்கித் தேவ உடும்பர அத்திமலை பிரதிமையை மீண்டும் பிரதிஷ்டை செய்ய உதவுகிறேன்." — சென் ஹுய் நெகிழ்வுடன் போதி தர்மாவின் பாதங்களில் பணிந்தான்.

கண்கள் பனிக்க அவனை அணைத்துக் கொண்டான், போதி தர்மா.

"எனது மனம் லேசாகிப் போனது, ஹுய்! தீராப் பழியுடனே நான் மரணம் அடைந்துவிடுவேனோ என்கிற கவலை இனி எனக்கில்லை. அவசியம் நீ காஞ்சி செல்வாய். உலகப் பயணத்தை மேற்கொண்டு பாரத மண்ணிற்குச் செல். அவசியம் காஞ்சிக்குச் செல். அங்கே யார் மன்னனோ அவனைச் சந்தித்து நான் கொடுக்கும் சுவடியைத் தர வேண்டும். இங்கிருந்தபடியே அத்தி மலையான் இருக்கும் இடத்தை நான் அவனுக்கு உரைக்கிறேன். அத்திமலைத்தேவன் பல்லவத்தில் இருந்து நீங்கவேயில்லை. அவனை எனது தங்கை நவரத்ன பல்லவியும், அவளது சீதன வெள்ளாட்டிகளும் சேர்ந்துதான் பதுக்கி வைத்திருக்கிறார்கள். தான் செய்யும் பிராயச்சித்தம் இதுவே என்று அவள் எனக்குச் சுவடியில் குறிப்பிட்டிருந்தாள். அந்தச் சுவடியை நான் அர்ச்சகர் ஒருவரின் மகளிடம் கொடுத்து வைத்திருக்கிறேன். நீ சென்றுதான் இந்த உண்மைகளைப் பல்லவத்தை ஆளும் மன்னனிடம் உரைத்து அத்திமலைத்தேவனை மீண்டும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும்! எனது

தங்கை தற்கொலை செய்து கொண்டதால், அவளுடைய சீதன வெள்ளாட்டிகளும் தங்களையே கொன்று கொண்டு இருப்பார்கள். எனவே, அத்திமலைத்தேவன் இருக்கும் இடத்தை அறிவதற்கு யாருக்குமே வாய்ப் பில்லை." வேதனை மட்டுமே நிலவிக் கொண்டிருந்த போதி தர்மாவின் மனத்தில் முதன்முறையாக உற்சாகம் தோன்றுவதை அவனே உணர்ந்தான்.

"குருவே! அப்படியென்றால் கடல் மின்னல் என்கிற கலத்தில் தாங்கள் கொண்டு வந்த சிலை?" — திகைப்புடன் கேட்டான் சென் ஹூய்.

"பிரக்ஞுதாரா தேவ உடும்பர சிலையைக் கடத்த முயற்சிக்கிறாள் என்பதை அறிந்து அவளை ஏமாற்ற, ஐயம்படுகை என்கிற கிராமத்தில் இருந்த சிற்பி காளநந்தி என்பவரைக் கொண்டு அத்திமலைத்தேவனைப் போன்றே எட்டடி உயரத்திற்குச் செய்த போலி சிலை. அதுதான் புயலில் சிக்கிக் கடலில் மிதந்து சென்று விட்டது." போதி தர்மா கூறினான்.

"அத்திமலைத்தேவனுக்காக, உங்கள் நாட்டிற்காக, உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் செய்த தியாகங்களைப் பல்லவத்தில் பேசுவேன். பல்லவம் உள்ளவரை உங்கள் பெருமைகளும் நிலவும்!" — கண்களில் நீர் வழியக் கூறிய சென் ஹூய், போதி தர்மாவின் பாதங்களை இறுக அணைத்துக் கொண்டான்.

"என்னை ஆசி கூறி உலக யாத்திரைக்கு அனுப்புங்கள். புத்த பிக்குவாக உலக நாடுகளில் பயணிக்க விரும்புவ தாகக் கூறிக் கொண்டு, நான் எனது யாத்திரையைத் துவக்குகிறேன். காஞ்சிக்குச் செல்வதே எனது குறிக்கோள். எனது யாத்திரையின் முக்கிய நோக்கம், காஞ்சிக்குச் சென்று எனது குருவின் மீது ஏற்பட்டுள்ள களங்கத்தை நீக்க வேண்டும் என்பதே!" — சென் ஹூய் கூறியதும், மீண்டும் ஜெயவர்மன் அங்கே பிறந்தான். போதி

தர்மாவின் தேகத்தில் திரண்டிருந்த அவனது வேதனைகள் எல்லாமே கதறலாக வெளிப்பட்டது.

ஜெயவர்மனும் சென் ஹுயி — வுடன் காஞ்சிக்குச் செல்லத் துடித்தான். அத்திமலைத்தேவனைத் தரிசித்து, தனது குடும்பத்துடன் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்று தோன்றத்தான் செய்தது. ஆனால் இவனை யார் இன்னமும் நினைவு வைத்திருப்பார்கள்..? யார் உயிருடன் இருக்கின்றனரோ? தலைமுறைகள் மாறிவிட்டிருக்கும். இனி அவன் காஞ்சிக்குச் சென்று என்ன செய்யப் போகிறான்?

கண்களில் அருவியாக நீர் பொழிய, காஞ்சியை நினைத்தான். வேகவதியை நினைத்தான். அத்திமலையை நினைத்தான். தேவராஜனை நினைத்தான். முக்கூடல் கடிகையை நினைத்தான். ஒத்தாடை அரண்மனையை நினைத்தான். தனது பெற்றோரை, சகோதரரை நினைத் தான். சாயாவைப் பற்றி நினைத்தான். ராஜவர்மன், ராஜஸ்ரீ அனைவரையும் நினைத்தான். நினைவுகள் என்னும் சிறகுகளைக் கொண்டு ஜெயவர்மனாக மாறி, காஞ்சிக்குச் சென்று வந்தான்.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் போதி தர்மனாக மாறி, முகத்தில் பூரண அமைதியுடன் தனது சீடன் சென் ஹுய் — யின் தலையில் கைவைத்தான்.

"சென் ஹுய்! இனி நீ ஹீயன் சாங் என்று அழைக்கப்படுவாய். உலக நாடுகளுக்குச் சென்று அதன் கலாசாரங்களை, சரித்திரங்களைப் பதிவு செய்து சேகரித்து வா. நீ வரும் போது நான் இருக்கமாட்டேன். ஆனால் ஆசி கூறுகிறேன். உனது பெயர் உலகெங்கும் பரவும். நான் இன்றிரவு உனக்கு ஒரு சுவடியைக் கொடுக்கிறேன். அதனைப் பல்லவ மன்னனிடம் மட்டுமே கொடுக்க வேண்டும்.." என்ற போதி தர்மா அன்றிரவே பல்லவ மன்னன் யார் என்பதை அறியாமல்

மகேந்திரனுக்கு ஒரு மடலை வரைந்தான். அதனை ஹீயன் சாங் காஞ்சிக்கு எடுத்துச் செல்லப் போகிறான்.

ஹீயன் சாங் உலக யாத்திரை கிளம்பினாலும், அவன் சுமந்து செல்லும் ஓலையை மகேந்திரன் படிக்கப் போவதில்லை. அவன் காஞ்சிக்கு வரும் காலத்தில் நரசிம்ம பல்லவன்தான் அந்த ஓலையை வாங்கிக் கொள்ளப் போகிறான். அவன் ஓலையைக் கொடுத்து விட்டேன் என்கிற செய்தியை வந்து போதி தர்மாவிடம் கூற நினைத்திருந்தால், அது நடக்கப் போவதில்லை. ஹீயன் சாங் உலக யாத்திரை கிளம்பிப் போனவுடன் போதி தர்மா பிரக்ஞுதாரா இறந்த அதே குடிலில் அமர்ந்து சமாதி நிலையை அடையப் போகிறான். பல்லவ இளவரசன் ஜெயவர்மனை இனி சரித்திரம் போதி தர்மாவாகவே நினைவு கூரும்.

பல்லவச் சரித்திரங்களைக் கேட்டு, காம்போஜம், ஒத்தாடை மற்றும் கோஷு மலை ஷோலின் விஹார உப்பரிகைகள் கண்ணீரால் நனைந்தன.

"தந்தையே! நானும் ஸ்ரீவர்தனும் காஞ்சிக்குச் செல்லப் போகிறோம். உண்மையான தேவ உடும்பர தேவராஜனை நான் கண்டுபிடித்து, அவனைக் காம்போஜத்திற்கு அழைத்து வரப் போகிறேன்." — காம்போஜ ஐராவத மலை வசந்தக் குடீரத்தின் உப்பரிகையில் சூரியவர்மன் தனது தந்தை தானவர்மனிடம் கூறினான்.

"சிற்றன்னையே! எனது ஆட்சிக் காலம் முடிவதற்குள் அத்திமலையானின் தேவ உடும்பர பிரதிமையைக் கண்டு பிடித்து, மீண்டும் அத்திமலையில் பிரதிஷ்டை செய்கிறேன். இது உறுதி!" — ராஜஸ்ரீக்கு வாக்கு தந்து, உணர்ச்சியுடன் அவளது உள்ளங்கையில் தனது கையை வைத்தான், மகேந்திரன்.

"குருவே! உங்கள் களங்கம் நீங்கியது என்கிற நிம்மதியுடன் உங்களது வாழ்க்கையின் மிகுதி நாட்களைக் கழியுங்கள். அத்திமலைத்தேவன் அவனது ஆலயத்தில்

பிரதிஷ்டை செய்யப்பட்ட நல்ல தகவலுடன் வருகிறேன்" என்றான் ஹுயென் சாங்.

கண்கள் பனிக்க, ஹுயென் சாங்* ஷோலின் விகாரத்தைவிட்டுக் கோஷு மலையை நோக்கி நடந்து போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தான், ஜெயவர்மன் என்கிற போதி தர்மா. தனது களங்கம் நீங்கிய நிம்மதியுடன் அவன் இனி யோக நிலையினில் திளைக்கப் போகிறான்.

சூரியவர்மன் ஸ்ரீவர்தனுடன் கலம் ஒன்றில் காம்போஜம் புறப்பட அவனை உற்சாகமாக வழியனுப்பினர், ககனமயியும், தானவர்மனும்.

மகேந்திரன் தசகுமாரர்களை எட்டுத் திசைகளிலும் அத்திமலைத்தேவனைத் தேடி வர அனுப்பி இருந்தான். ராஜஸ்ரீயிடம் சரித்திரங்களை அறிந்த பின்பாக அவனே தேடுதல் வேட்டையில் இறங்கியதை, மகிழ்ச்சியுடன் கவனித்தாள் ராஜஸ்ரீ. முதுமையை அடைந்துவிட்ட தான் இறப்பதற்குள் அத்திமலைத்தேவன் மீண்டு வந்துவிட வேண்டும் என்கிற பிரார்த்தனையில் இருந்தாள்.

அத்திமலைத்தேவனின் திருவுள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதை யார் அறிவார்கள்?

* Xuanzang also known as Hiuen Tsang was born as Chen Hui (or Chen Yi) around 602 in Chenhe Village, Goushi in China. He visited Kanchi about the year 640 A.D. during the reign of Narasimhavarman I.

# 17. வாதாபி கணபதிம் சதிம்

சாளுக்கிய தலைநகரம் வாதாபியின் அரண்மனையில் பணிப்பெண் விடுதியில் இருந்து பணிப்பெண்களின் தலைவி சுமனஸா பரபரப்புடன் விடுதியைவிட்டு கிளம்பினாள். அவள் அரண்மனைக்குப் போவதைக் கண்டதும் அரண்மனையின் உள்படு கருமங்களை மேற்பார்வையிடும் அதிகாரி கட்கதரன் பேசாமல் இருந்தான். வேறு எந்தப் பணிப்பெண் அங்கே வந்தாலும், "அந்தப்புரம செல்! உப்பரிகை செல்! நந்தவனம் செல்! இளவரசரின் ஜாகைக்குச் செல்! அரசரின் கொலு மண்டபத்திற்குச் செல்!" என்று கட்டளைகளைப் பிறப்பிப்பான். ஆனால் சுமனஸாவின் அனுபவத்திற்கு முன்பாக அவனது அதிகாரம் எடுபடாது.

"நீ எனக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்காதே. நீ அரண்மனையில் காலடி வைப்பதற்கு முன்பாகவே, நான் இந்த அரண்மனையில் பணிபுரிந்து கொண்டிருந்தவள். விளக்குமாற்றினால் அரண்மனையையும் கூட்டி இருக்கிறேன். படையெடுப்பின் போது அந்தப்புரத்தினுள் நுழைந்த எதிரிகளையும் வெட்டி வீழ்த்தியிருக்கிறேன். நீ எனக்குப் பணியிடம் குறித்துக் கட்டளை இடத் தேவையில்லை. எனது உயிர் இருக்கும்வரை இளவரசர் *இறையாவுக்குதான் நான் ஊழியம் செய்திருப்பேன்"

---

* சாளுக்கிய இளவரசன் இறையாதான் பின்னாளில் இரண்டாம் புலிகேசி (கி.பி. 610-642) என்கிற பெயருடன் மிகவும் புகழ் பெற்ற மன்னனாகத் திகழ்ந்தான். இவனுடைய காலத்தில் சாளுக்கிய பேரரசு தக்காணத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது.

என்று கத்தியபடி இளவரசன் இறையாவின் ஜாகையை நோக்கிச் சென்றாள்.

சுமனஸா இளவரசனின் ஜாகையை நெருங்க அவளது மனம் கனத்தது. பாவம் இறையா! இன்று அவனுக்குப் பதினாறு பிராயங்கள் முடிந்து பதினேழாம் பிராயத்தில் அடியெடுத்து வைக்கிறான். சிறுவன் குமாரனாக மாறி விட்டிருந்தான். இறையா பிறந்த போதே இனி அரசியார் கர்ப்பம் தரிக்கக் கூடாது. இன்னுமொரு பிரசவத்தை ஏற்கும் நிலையில் அவரது தேகநிலை இல்லை என்று மன்னரிடம் மருத்துவர்கள் எச்சரித்திருந்தனர். ஆனால் ஆசைக்கு ஒரு மகள் வேண்டும் என்று அரசி மதுரவாணி தான் பிடிவாதம் செய்து மீண்டும் கர்ப்பம் தரித்திருந்தாள். மருத்துவர்கள் எச்சரித்தது போன்று, பேறுகாலத்தின் போது அதிக சிரமங்களைச் சந்தித்தாள். கடும் உதிரப்போக்கினால், அரசி மதுரவாணி இறக்க, பிறந்த ஆண்குழந்தைக்கு விஷ்ணுவர்தன் என்று பெயரிடப்பட்டுச் சுமனஸாவிடம் ஒப்புவிக்கப்பட்டது. இறையா மற்றும் விஷ்ணுவர்தனனுக்குத் தாயின் அரவணைப்பைச் சுமனஸாவே கொடுக்க வேண்டியதாயிற்று.

புராண, இதிகாசங்களைப் பற்றிக் கூறிக் கொண்டே, அன்னம் ஊட்டுவது, நீதிக் கதைகளைப் புகட்டுவது, நந்தவனத்தில் பந்து விளையாடுவது, விடுகதைகளைக் கூறுவது என்று தாய் இல்லாத குறையே இறையாவுக்குத் தோன்றாமல் பார்த்துக் கொண்டாள். சுமனஸாவிடம் நன்கு ஒன்றிப் போன இறையாவுக்கு உற்ற நண்பனாகவும், மதியூகியாகவும் இருந்தாள், சுமனஸா.

"சுமா! நான் மிகப்பெரிய சக்கரவர்த்தியாகத் திகழ்வேன் என்று இன்று ராஜகுரு ஆருடம் கூறினார், தெரியுமா?" — இறையா கூற, அவனை வாஞ்சையுடன் அணைத்தாள், சுமனஸா.

"அதைக் கூற ஒரு குரு தேவையில்லை, இறையா. நீ மன்னரிடம் குரு கூறியதாக இதைத் தெரிவித்தால், அவர் மனமகிழ்ந்து தனக்குப் பரிசளிப்பார் என்பதற்காக ராஜகுரு உன்னிடம் அப்படிக் கூறியிருக்கிறார். இறையா! மன்னருக்கு மகனாகப் பிறந்துவிட்டவர்கள் அனைவருமே சக்கரவர்த்திகளாக இருந்ததில்லை. பலர் மணிமுடியின் பாரம் தாங்காமல் இருக்குமிடம் தெரியாமல் அழுந்தி இருக்கிறார்கள். ஒரு இளவரசன் சக்கரவர்த்தியாக இருக்க வேண்டுமென்றால் அவன் பஞ்சபட்சியாகத் திகழ வேண்டும்!" — சுமனஸா கூறினாள்.

"அப்படியென்றால்...?" இறையா கேட்டான்.

"பஞ்சபட்சி என்றால் ஐந்து பறவைகள். சேவல், அன்னம், புறா, ஆந்தை மற்றும் சகோரத்தை போன்று இருக்க வேண்டும். விடியலில் எழுந்து உலகத்தைக் கூவி அழைக்கும் சண்டைக் குணம் கொண்ட சேவலைப் போன்று போருக்குத் தயாராக அறைகூவல் விடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். பாலையும், நீரையும் பிரித்துப் பருகும் அன்ன பறவையைப் போன்று நல்ல ஆலோசனைகளைப் பாலாக ஏற்றுத் தீய யோசனைகளை அன்னம் நீரை உமிழ்வது போன்று நிராகரித்துவிட வேண்டும். புறாவைப் போன்று இலக்கை நோக்கிப் பயணித்து மீண்டும் இருப்பிடம் வந்து சேருவதற்குத் தெரிய வேண்டும். மற்றவர்கள் உறங்கும் போது கண்விழித்துச் செயலாற்றும் ஆந்தையைப் போன்று நடுநிசியிலும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். கடைசியில் சகோர பறவையாக இருக்க வேண்டும். சகோர பறவை பூமியில் இறங்காது. வானத்தில் பறக்கும் போதே குஞ்சு பொரிக்கும். வெளிவரும் குஞ்சுகளும் பூமியில் விழுவதற்கு முன்பாகவே பறக்கத் துவங்கிவிடும். அதே போன்று, ஒரு மன்னனும், என்றும் பூமியில் விழாமல் அரசியல் வானில் பறந்து கொண்டே இருக்க

வேண்டும். இதுதான் பஞ்சபட்சி தத்துவம்." — சுமனஸா கூறியதும் அவளை ஆச்சரியமாகப் பார்த்தான், இறையா.

"நான் பஞ்சபட்சிகளைப் போன்று இருப்பேன்" பாலகன் இறையா கூறியதும், அவனை நெற்றியை வழித்துத் தனது சிரசின் இரு பக்கங்களிலும் வைத்துச் சொடுக்கினாள்.

இப்படியே நாட்கள் கழிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். காலம் தனது விளையாட்டைத் துவக்கியது. தாயற்ற இறையாவுக்குத் தகப்பன் பலம் இருந்தது. ஆனால் தந்தை கீர்த்திவர்மனும் திடீரென்று ஒரு நாள் மயங்கி விழுந்தான்.

மன்னருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. என்கிற தகவல் வந்ததும் இறையாவை இழுத்துக் கொண்டு முதலில் ஓடியவள் சுமனஸாதான். ஆனால் மன்னரின் பள்ளியறையை நெருங்கிய போது அறைக் கதவு உள்புறம் தாளிடப்பட்டிருந்தது.

உள்ளே யார் இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? திகைப்புடன் கதவைத் தட்ட முனைந்தவள், சட்டென்று ஒருவித எச்சரிக்கை உணர்வுடன் கதவைத் தட்டாமல் ஒரு கம்பத்தின் பின்பாக மறைந்து கொண்டாள்.

பள்ளியறையிலிருந்து கீர்த்திவர்ம மன்னரின் தம்பி மங்களேசன், அவன் மனைவி பவானி, மகன் ரணவிக்கிரமன் ஆகியோர் வெளியே வந்தனர்.

"இறையா எங்கிருக்கிறான்?" — மங்களேசன் கேட்ட விதமே, சுமனஸாவுக்குக் கிலியை ஏற்படுத்தியது. மன்னருக்கு என்ன ஆனது? தந்தை எங்கே? என்று கேட்க வந்த இறையாவின் வாயைத் தனது கையால் பொத்தினாள்.

"பவானி! நீ சென்று இறையாவின் பொறுப்பை ஏற்றுக்கொள். ரணவிக்கிரமா! நீ மருத்துவரை அழைத்து வா. நான் தலைமை அமைச்சரைப் பார்த்துவிட்டு

வருகிறேன்..” என்றபடி அங்கிருந்து மூவரும் அகல, அந்த இடைவெளியில் சடாரென்று மன்னரின் பள்ளியறைக்குள் நுழைந்தாள். மன்னர் கண்களை மூடிக் கிடந்தாலும், இவள் இறையாவுடன் வந்து நிற்பதை உணர்ந்திருக்க வேண்டும். உடனேயே கண்களைத் திறந்து பார்த்தார்.

இறையாவைக் கண்டதும் அவர் முகத்தில் ஒருவித மலர்ச்சி.

“சுமனஸா! என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. விடியலில் நான் அருந்தும் மூலிகைச் சாற்றினை அருந்தினேன். பிறகு எனது உணர்வுகளை இழக்க ஆரம்பித்தேன். என்னைப் பள்ளியறையில் கிடத்தி விட்டார்கள். அநேகமாக எனது முடிவு நிச்சயிக்கப் பட்டுவிட்டது என்றே கருதுகிறேன். ஒருவேளை எனக்கு ஏதாவது நேர்ந்தால், அடுத்த மன்னராக இறையாதான் இருப்பான். அதற்கான பட்டயத்தை அமைச்சரவையிடம் ஏற்கெனவே ஒப்படைத்துவிட்டேன். மூன்றே பிராயங்கள் நிரம்பிய இறையா இராஜ பரிபாலனம் செய்ய முடியாது என்பதால், எனது தம்பி மங்களேசன் அரசப் பிரதிநிதியாக அவனுக்குப் பதிலாக ஆட்சி செய்வான். இறையாவுக்குப் பதினாறு பிராயங்கள் நிரம்பியதும் அவன் அரசனாகப் பதவி ஏற்பான். யாரையும் நம்புவதற்கு இல்லை. உன்னிடம் இறையாவை ஒப்புவிக்கிறேன். அவன் மன்னனாக அமர்ந்து அவனுக்கு என்று ஒரு குடும்பம் ஏற்படும் வரை நீ அவனை ரட்சிக்க வேண்டும்!” உறுதிமொழியை வாங்கிக் கொண்டார், கீர்த்திவர்மன்.

அவருக்கு வாக்குறுதியைத் தந்துவிட்டு மன்னரின் பள்ளியறையைவிட்டு நழுவி இருந்தாள்.

இன்று —

இறையா பதினாறு பிராயங்களை முடித்துப் பதினேழில் அடியெடுத்து வைத்துவிட்டான். அதனால்

தான் சுமனஸா பரபரப்புடன் அவனது ஜாகைக்குச் சென்று கொண்டிருந்தாள்.

மங்களேசனைச் சந்தித்து, தான் மகுடத்தைத் தரிக்கத் தயார் நிலையில் இருப்பதாக இறையா அறிவிக்கப் போகிறான்.

சுமனஸா இறையாவின் பள்ளியறையினுள் நுழைந்த போது, அவன் சாளரத்தின் அருகே நின்று, பனியினில் நனைந்திருந்த நந்தவனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரசவம் முடிந்து, மகாராணி மதுரவாணி மயக்க நிலையில் இருக்க, முதன் முதலாக இறையாவை சுமந்தவள், சுமனஸாதான். இவளது கரங்களில் மல்லிகைக் குவியலாக, சிவந்த நிறத்திலும், சுருண்ட முடியுடனும் காணப்பட்ட இறையா இதோ பதினாறு பிராயங்களைக் கடந்து இளங்குமரனாக நிற்கிறான்.

தான் நிலத்தினில் நட்டு, நீரூற்றி வளர்ந்த செடி, கனி தரும் மரமாக வளர்ந்து நிற்பதைப் பரவசத்துடன் காணும் தோட்டக்காரனைப் போன்று, தான் வளர்த்த இறையாவை நோக்கினாள். இவள் ஊட்டிய உணவு, ஆண்மையின் திரட்சியாக அவனது தேகத்தை மிடுக்குடன் தோன்ற வைத்தது. இவள் உணவு ஊட்டும் போது கூறியிருந்த இதிகாசங்களும், புராணங்களும், நீதிக் கதைகளும் அவனது முகத்தில் மேதாவிலாசமாக ஜொலிக்கச் செய்தன.

சுமனஸாவின் தந்தை பவித்ர பாணர் ஒரு இசைச் சொற்பொழிவாளர். சாத்திரங்களையும், இலக்கியங் களையும் கரைத்துக் குடித்தவர். சிறு வயதில் தனது மகளுக்கு அனைத்தையும் போதித்திருந்தார். சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தை மகளுக்குப் போதிக்க, அவள் வாதாபி இளவரசன் இறையாவுக்கு அவற்றைக் கற்றுத் தந்திருந்தாள். சிற்றப்பன் மங்களேசன் இறையாவின் கல்வியைப் பற்றியோ, போர்க்

கலைகளைப் பயில்விப்பதற்கு ஏற்பாடுகளையோ செய்யவில்லை. ஆனால் மகன் ரணவிக்கிரமனுக்கு அரசனாகத் திகழ்வதற்கு வேண்டிய அத்தனை கலைகளையும் பயில்வித்துக் கொண்டிருந்தான்.

இறையாவை அவன் நடத்தும் விதத்தைப் பார்த்துக் குமுறிய சுமனஸா, தானே அவனுக்குக் கல்வியைப் போதிக்கத் துவங்கினாள். ஆனால் போர்க் கலைகளை இவளால் எங்கே போதிக்க முடியும்..?

வாதாபியின் சாளுக்கியப் படைகளின் தளபதியான யக்னகணபதியை சந்தித்தாள், சுமனஸா. மங்களேசனுடன் நெருங்கிப் பழகி அவனது ஆத்மார்த்த நண்பனாகிவிட்டிருந்தார், யக்னகணபதி.

"தளபதியாரே! இறையாவுக்கு வாட்பயிற்சி மற்றும் போர்க் கலைகளைக் கற்றுத் தர வேண்டும்!" — சுமனஸா கூற, அவளை அலட்சியமாக நோக்கினார், கணபதி.

"இப்போதைக்கு இறையாவிற்குப் பழம் நறுக்கும் கத்தியைக் கொடு. மாங்கனியை நறுக்கிச் சுவைக்கட்டும். பழம் நழுவிப் பாலில் விழுந்தால், அப்போது பார்த்துக் கொள்ளலாம்.." — நையாண்டியாக ஒலித்தது கணபதியின் குரல். கனக்கும் இதயத்துடன் மீண்டும் வாதாபியின் அரண்மனையை நோக்கி நடந்தவளின் செவிகளில் வாதாபி கணபதி ஆலயத்தின் மணி ஒலித்தது. வாதாபி நகரின் கணபதி ஆலயம்* அரண்மனைக்குப் போகும் வழியில்தான் இருந்தது.

---

* வாதாபி நகரின் கணபதி மிகவும் சக்தி வாய்ந்தவர். பாலக வயது கணேசர். ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட சிலை. கணபதி உணவுப் பிரியர். கஜாசூரன் என்கிற அசுரனை வீழ்த்தியதற்காக, தேவர்கள் அவருக்கு விருந்து தர, அவர் அதிகமாக உணவை உண்டுவிட, வயிறு பெருத்து, அது வெடித்துவிடக் கூடதே என்று அஞ்சித் தனது வயிற்றைப் பாம்பினால் கட்டி வைத்தாராம். இன்றும் அவரது வயிற்றில் பாம்பு ஒன்று க்கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். வாதாபி கணபதியைத்

*"வாதாபி கணபதியே! இறையாவை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். அவன் மன்னனாக அரியாசனத்தில் அமர வேண்டும்" என்று வேண்டினாள்.*

*சாளரத்தின் வழியாக நந்தவனத்தில் புதிதாகப் பூத்திருந்த புஷ்பங்களையும், இங்கும் அங்கும் தாவித் திரிந்து கொண்டிருக்கும் பறவைகளையும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான், இறையா.*

*"இறையா! பறவைகளைக் கவனித்துக் கொண்டிருக் கிறாய் போல இருக்கிறதே.." — சுமனஸா சிரித்தபடி அவனை நோக்கி நடந்தாள்.*

*"ஆம்! எல்லா பட்சிகளும் தென்படுகின்றன. ஆனால் நான் காண வேண்டிய பஞ்சபட்சிகள் இன்னும் தென்படவில்லை." அவளை நோக்கித் திரும்பியவன், கம்பீரமாகச் சிரித்தான்.*

*அந்தச் சிரிப்பில் சொக்கிப் போனாள், சுமனஸா. கீர்த்திவர்மனின் கம்பீரத்தையும், மிடுக்கினையும்,. மதுர வாணியின் அழகையும், நிறத்தையும் கொண்டிருந்தான். சிறுவனாகத் திகழ்ந்த போது கண்களில் நிலவிய குறும்பு வற்றி இப்போது பொறுப்புகளைச் சுமக்கப் போகிற நிதானம் பரவியிருந்தது.*

---

துதிப்பவர்கள், தங்களது கோரிக்கையை நிறைவேற்றவில்லை யென்றால், பாம்பு ஒட்டியாணத்தை அவிழ்த்துவிடுவோம் என்று அன்புடன் மிரட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்வார்களாம். வாதாபி கணபதி என்கிற இந்தப் புகழ் பெற்ற கணபதியின் சிலை தற்போது தமிழகத்தில்தான் உள்ளது. தஞ்சை அருகே உள்ள நன்னிலம் பகுதியில் திருசெங்காட்டன்குடி என்னும் சைவக்குரவர்கள் பாடிய திருத்தலத்தில் இருக்கிறார். நரசிம்மவர்மப் பல்லவனின் தளபதி பரஞ்சோதி (சிறுதொண்டர் நாயனார்) இரண்டாம் புலிகேசியைக் கொன்று வாதாபி சிலையைத் திருசெங்காட்டன்குடிக்கு எடுத்து வந்தார். அதற்கான காரணம் வரும் அத்தியாயங்களில் தெரியவரும். வாதாபி கணபதிம் பஜே என்று இவரைத் துதித்துவிட்டுதான், இன்று கர்நாடக இசையாளர்கள் தங்கள் கச்சேரிகளைச் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

“பஞ்சபட்சிகளாக மாறுவதற்கு முன்பாக நீ கொக்கைப் போன்று பொறுமையுடன் காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், இறையா. கால வெள்ளம் என்கிற நதியில், ஓடுமீன் ஓட, உறுமீன் வரும்வரை காத்திருக்கப் பழகு. உனது பிறந்தநாளுக்கு எனது வாழ்த்துகள். அடுத்த பிறந்த நாளை மன்னனாகக் கொண்டாட வேண்டும்.” — சுமனஸா களிப்புடன் கூறினாள்

“அடுத்த பிறந்த நாள் என்ன! இன்றே, இப்போதே, மன்னனாக நான் தயார். எனது சிகை என்னும் அரண்யத்தைச் சமன்படுத்தி, நறுநெய் தடவிச் சீவி அலங்கரித்து வைத்திருக்கிறேன். மகுடத்தை வைக்க வேண்டியதுதான் இனி சார்ந்தோரின் பணி!” — அவளை அர்த்தத்துடன் நோக்கினான், இறையா.

“உனது ஆசை நிறைவேற வேண்டும் என்று வாதாபி கணபதியிடம் நான் துதி பாடிவிட்டேன். ஆனால் உனது ஆசைக்கு மங்களம் பாட நினைக்கிறார்களே, சிலர்.” — சுமனஸா கூறினாள்.

“மங்கலத்தை உண்டாக்க வேண்டியவர்கள் மங்களத்தைப் பாட நினைக்கிறார்களே!” — இறையாவின் குரலில் வருத்தம் தொனித்தது.

“இன்று நீ பதினாறு பிராயங்களைக் கடந்துவிட்டாய். இனி மன்னன் ஆகும் உரிமை உனக்கு உள்ளது. நீ உரிமையைத் தாராளமாகக் கோரலாம். ஆனால் நீ மன்னனாகத் தயாராக உள்ளாய் என்கிற தகவல் மக்களிடம் சேர வேண்டும். மன்னனிடம் செல்வதற்கு முன்பாக மக்களிடம் செல்” என்ற சுமனஸா உடனே ஒரு திட்டத்தைத் தீட்டினாள். இப்போது அவள்தானே இறையாவின், தந்தை, தாய், சகோதரி, செவிலி, தோழி, ராஜகுரு, தளபதி மற்றும் பாதுகாவலன்.

அரண்மனை கஜானா அதிகாரியிடம் இறையாவின் பிறந்த தினச் செலவுகளுக்காக வெள்ளி மற்றும் தங்கக்

காசுகளை வாங்கிக் கொண்டாள். இறையாவுடன் வாதாபி கணபதி ஆலயத்திற்குச் சென்றாள். கணபதியைத் தொழுதுவிட்டு, ஆலயத்தின் முன்பாக இருந்த ஆலமர மேடையில் இறையாவை நிற்கவைத்து அவனைப் பேசச் சொன்னாள். அவனும் தனது வருங்காலப் பிரஜைகளிடையே உரையாடத் துவங்கினான்.

"வாதாபி மக்களே! உங்கள் ஆசியுடன் இன்று பதினாறு பிராயங்களைக் கடந்து பதினேழில் அடி எடுத்து வைத்துள்ளேன். உங்கள் சேவகனாக மகுடம் என்னும் பொறுப்பினை ஏற்க நான் தயாராக உள்ளேன். இன்று என் சார்பாக ஆட்சி செய்யும் பிரதிநிதி எனது சிற்றப்பன் மங்களேசரிடம் எனது மகுடத்தைக் கோரப் போகிறேன். என்னை வாழ்த்தி அனுப்புங்கள்."

"இளவரசர் இறையா ஜே!" என்கிற கோஷங் களிடையே "இரண்டாம் புலிகேசி வாழ்க!" என்று குரல் எழும்ப, அவ்வளவுதான்..

ஆவேசம் வந்தவளாக, இறையாவை கடந்து முன்வந்த சுமனஸா, கோஷத்தை எழுப்பிய மனிதனைப் பார்த்து வீறிட்டாள். "புலிகேசி என்று இறையாவை அழைக்காதே. இறையா என்றே கோஷம் போடு.." — வீறிட்ட சுமனஸாவை வியப்புடன் நோக்கினான் இறையா.

"ஏன் புலிகேசி என்று அழைத்தால் என்ன? எனது பாட்டனாரின் பெயர்தானே. முதலாம் புலிகேசியாகச் சிறப்பாகத்தானே ஆட்சி செய்தார்." இறையா கேட்டான்.

"அந்தக் கதையெல்லாம் உனக்கு இப்போது தேவையில்லை, இறையா. சென்று உனது உரிமையைக் கோரு!" கண்டிப்புடன் ஒலித்தது சுமனஸாவின் குரல்.

அரண்மனைக்குச் சென்றதும் நேராகச் சிற்றப்பன் மங்களேசனிடம் சென்றான். மங்களேசனுடன், சித்தி பவானி, அவர்களது மகன், ரணவிக்கிரமன் மற்றும்

தளபதி யக்னகணபதி அனைவருமே இவனது வரவை எதிர்பார்த்தவர்கள் போன்று அவனை வரவேற்றனர்.

"வா இறையா! பிறந்த நாள் வாழ்த்துக்கள்..!" அனைவரும் ஏககுரலில் கூறினர்.

சிற்றப்பன், சித்தி காலில் பணிந்து எழுந்த இறையா மங்களேசனை கண்களுக்குள் நோக்கினான்.

"சிற்றப்பா! பதினாறு பிராயங்களை முடித்துவிட்டேன். இனி நான் மன்னன் ஆக முடிவு செய்துவிட்டேன். எனக்கு மகுடாபிஷேகம் செய்யுங்கள்." — கோரிக்கை விடுத்தான், இறையா.

ஏதோ நகைச்சுவையைக் கேட்டவர்களைப் போன்று அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

"அதெப்படி இறையா? உனது தந்தை இறந்துவிட்டார். நான்தான் அதன்பின் ஆட்சி செய்கிறேன். எனக்குப் பின் எனது மகன்தானே ஆட்சி செய்ய வேண்டும்." — மங்களேசன் கேட்டான்.

"மன்னிக்க வேண்டும் சிற்றப்பா! நீங்கள் மன்னராக ஆட்சி செய்யவில்லை. எனது தந்தை இறந்த போது எனக்கு மூன்று பிராயங்கள் என்பதால் எனது பிரதிநிதியாகத்தான் நீங்கள் ஆட்சி செய்கிறீர்கள். எனது மகுடத்தை என்னிடமே கொடுத்துவிடுங்கள்." — குரலில் உறுதி கொப்பளிக்கப் பேசினான், இறையா.

"அங்ஙனம் இல்லை, இறையா! நீ குழந்தை என்பதால் உனது பிரதிநிதியாக என்னை ஆளச் சொன்னார்கள். இப்போது மக்கள் எனது ஆட்சியை விரும்புகிறார்கள். இந்த நாட்டை நான் வலுவாக்கி எனது தோளினில் சுமக்கிறேன். அதனை எடுத்து உனது தோளினில் வைத்தால் அது கீழே விழுந்து சிதறிவிடும்." — மங்களேசன் கூறினான்.

*"எனது தோளினில் நாட்டை வைத்துப் பாருங்கள். வலு இருக்கிறதா இல்லையா என்பதை நான் நிரூபிக்கிறேன்!" — இளம்குமரனுக்குரிய ஆவேசம் இறையாவினுள் கனன்று கொண்டிருந்தது.*

*"உனது தோளினில் வலு இருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதிக்க எங்களுக்கு அவகாசம் இல்லை. விரைவில் நான் பிரதிநிதியாக அல்லாமல் மன்னனாகவே மகுடாபிஷேகம்* செய்து கொள்ளப் போகிறேன். எனது மகன் ரணவிக்கிரமனுக்கு யுவராஜா பட்டம் கொடுக்கப் போகிறேன். நாங்கள் உனக்குக் கொடுக்கும் வருமானத்தை வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழப் பழகிக் கொள்." — மங்களேசன் கூறினான்.*

*"உங்கள் மகன் எதிர்காலச் சாளுக்கிய மன்னனா?" திகைத்தான் இறையா.*

*பவானி அவனை அலட்சியமாக நோக்கினாள். "ஏன் இறையா? அவன் மன்னனாகக் கூடாதா? அவனது பெயரைப் பார். ரணவிக்கிரமன். பெயரிலேயே வீரம் தெரிகிறது. உனது பெயரைப் பார். இறையா. அதென்ன இறையா? யாருக்கு நீ இரையாகப் போகிறாய்..?" அகம்பாவமாகக் கேட்டாள், பவானி.*

---

* இறையா முடிசூட்டிக் கொண்ட போது புலிகேசி என்னும் பெயர் பெற்றான். இவன் சாளுக்கிய மன்னன் முதலாம் கீர்த்திவர்மனின் மகன் ஆவான். கி.பி. 597ஆம் ஆண்டில் இவனது தந்தை கீர்த்திவர்மன் இறந்த போது இவன் மிகவும் இளம் வயதினனாக இருந்தான். இதனால் இவனது சிற்றப்பன் மங்களேசன் ஆளுநராகப் பொறுப்பேற்று ஆட்சி நடத்தி வந்தான். மங்களேசனும் திறமையான ஆட்சியாளனாகவே இருந்தான். அவனது காலத்திலும் சாளுக்கிய அரசின் எல்லைகள் விரிவடைந்தன. பதவி ஆசை காரணமாக, எரேயா (இறையா) பருவமடைந்த பின்னரும் அவனுக்கு உரிய அரசுரிமையைக் கொடுக்காமல் தனது வழியில் அரசுரிமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தனது மகனை முடிக்குரியவனாக மங்களேசன் அறிவித்தான். ஆதாரம்:- வேட்டவடக்கூர் கல்வெட்டு.

"இறைவன் என்பவனைக் குறிக்கிறது எனது பெயர். பதவி வெறியில் இறைவனை மறப்பது சகஜம்தான். இதோ கூறுகிறேன். இன்று எனது பிறந்த தினம். அடுத்த பிறந்த தினத்தில் நான் மன்னன். அன்று எனது பெயரின் உண்மையான அர்த்தத்தை உரைக்கிறேன்" — என்றபடி அந்த அறையைவிட்டுக் கம்பீரமாக நடந்து சென்றான்.

"நமது சதித் திட்டத்திற்கு இரையாகப் போகின்றான் என்பதால் இறையா என்று பெயர். இந்த லட்சணத்தில் வீர வசனம் வேறு!" தனது தேகம் குலுங்க நகைத்தார், யக்னகணபதி.

தனது ஜாகைக்குச் சென்ற இறையா, ஆவலுடன் அவனுக்காகக் காத்திருந்த சுமனஸாவை பார்த்தான்.

"என்ன நடந்தது?" — சுமனஸா கேட்டாள்.

"எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்தது. பிறந்த நாளுக்கு ஆசி கூறினார்கள். மங்களேசன் எனது எதிர்காலத்திற்கு மங்களம் பாடினான். சித்தி பவானி ஆரத்தி எடுத்தாள். தளபதி யக்னகணபதி திருஷ்டி திலகத்தைத் தீட்டினான்."

"இதை.. இதை.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்!" — உற்சாகத்துடன் சுமனஸா கூறினாள். அவளது உற்சாகத்தைக் கண்டு திடுக்கிட்டான், இறையா.

"என்ன சுமனா இது! எனக்கு மகுடம் மறுக்கப் பட்டிருக்கிறது என்று கூறுகிறேன். நீ குதூகலிக் கின்றாயே?" — இறையாவின் குரலில் கோபம் ததும்பியது.

"இறையா! உனக்குப் பஞ்சபட்சி தத்துவத்தை உரைத்தேனே. அதில்... பஞ்சபட்சியில் வாத்து உள்ளதா?" — சுமனஸா கேட்டாள்.

"இல்லை.." — இறையா தலையசைத்தான்.

"வாத்தாக இருக்கவா உனக்கு விருப்பம்? சிந்தனைத் திறன் இல்லாத மடமைக்குப் பெயர்போனது வாத்து.

தாய் வாத்து நீந்தும் திசையில் மட்டுமே குஞ்சுகளும் வரிசையாக நீந்தும். கடைசியில் நீந்தும் குஞ்சு தாயைப் பார்க்காது. தனக்கு முன்னால் நீந்தும் சகோதர குஞ்சினைத்தான் கவனிக்கும். உனது பாட்டன் மன்னன். உனது தந்தை, மன்னன், நீ மன்னன், உனது மகன் மன்னன் என்று சாளுக்கியத்தை வெறும் வாத்துக் குட்டையாக்கப் போகிறாயா? போராடு..! கம்பீர மன்னனாக எதிரிகளை அலறவிடு. சிங்கமாகக் கர்ஜனை செய்து முடியைச் சிலிர்த்துக் கொண்டு நில்.. அரண்மனை சுகத்தில் இருந்து கொண்டு உன்னால் சதியை முறியடிக்க முடியாது. வனவாசம் செல்." — சுமனஸா காட்டத்துடன் கூறினாள்.

"வனவாசமா? நீ யசோதையைப் போன்றவள் என்றல்லவா நினைத்தேன். கைகேயியாக இருக்கிறாயே..?" — இறையா திகைத்தான்.

"உண்மை! யசோதை கண்ணனைத் தனது சேலைத்தலைப்பில் கட்டி, வெண்ணையும் தயிரையும் புகட்டி, தனது பாசப்பிடியில் வைத்திருந்ததால்தான் அவன் மகாபாரதப் போரில் ஆயுதமே எடுக்கவில்லை. கைகேயி ராமனை வனவாசம் அனுப்பிய போது கோசலையால் தனது சக்களத்தி சிகையைப் பிடித்து 'எனது மகனை வனவாசம் அனுப்ப நீ யார்?' என்று கேட்டிருக்க முடியாதா? சாத்வீகமான தனது மகன் மன்னன் ஆவதற்கு முன்பாகத் தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பஞ்சபூத சக்திகளையும் உணர்ந்து அவற்றைத் தனது ஆற்றலுடன் இணைத்துத் தீயவர்களை அழிக்கும் போர் வீரனாகத் திகழ வேண்டும் என்றுதானே கோசலை அமைதியாக இருந்தாள். நான் கைகேயியாக உன்னை வனவாசம் அனுப்ப விரும்புகிறேன்.

"காரணம், நீ அரண்மனையில் இருந்தால், உனக்கு எதிராக நடைபெறும் சதிகளை முறியடிப்பதிலேயே உன்

கவனம் இருக்கும். நீ காடுகளில் திரிந்தால்தான், அரியணையைக் கைப்பற்ற வேண்டும் என்கிற உத்வேகம் பிறக்கும். எனவே, நீ அரண்மனையில் இருக்காதே. எங்கேயாவது கண்மறைவாகச் சென்று வாழு. அடவிகளில் திரி. உனது தாய் மதுரவாணியின் கங்க நாட்டிற்குச் சென்று பதுங்கிக் கொள். படைகளைத் திரட்டி வந்து உனது சிற்றப்பனைக் கொன்று ஆட்சியைப் பிடி. அப்போது உன்னை உலகமே கொண்டாடும். அப்போது உலகத்தின் கண்களில் நீ பஞ்சபட்சியாகத் தெரிவாய். இன்றே புறப்பட்டுச் செல்!" சுமனஸா கூற, அவளை பிரமிப்புடன் நோக்கினான், இறையா!

"சரி சுமனா! நான் வனவாசத்திற்குச் செல்லச் சித்தமாக இருக்கிறேன். ஆனால் அதற்கு முன்பாக நீ எனது கேள்விக்குப் பதில் தர வேண்டும். இன்று வாதாபி கணபதி ஆலயத்தில் ஒருவன் என்னை இரண்டாம் புலிகேசி வாழ்க என்று கூறிய போது எதற்காக அதற்கு ஆட்சேபம் கூறினாய்? புலிகேசி என்கிற பெயரில் என்ன குறை கண்டாய்! எனது பாட்டன் முதலாம் புலிகேசியின் ஆட்சி நன்றாகத்தானே இருந்தது?" — இறையா கேட்டான்.

"உனக்குத் தெரியாத ஒரு விவரத்தைச் சொல்கிறேன், கேள் இறையா! முதலாம் புலிகேசியாக உனது பாட்டனார் மிகவும் சிறந்த ஆட்சியை அளித்துக் கொண்டிருந்தார். அவரது ஆட்சியில் மக்களுக்குக் குறை ஏற்பட்டதே இல்லை. ரகுகுலத்தைச் சேர்ந்தவர்கள் சாளுக்கிய மன்னர்கள் என்பார்கள். எனவே ராம ராஜ்யத்தைத்தான் அளித்துக் கொண்டிருந்தார், உனது பாட்டன் புலிகேசி. அஸ்வமேத யாகத்தைச் செய்தால்தான் ஒரு மன்னன் பூரணத்துவம் பெறுவான் என்று ராஜகுரு கூற, உடனே அஸ்வமேத யாகத்தைச் செய்யத் தீர்மானித்தார் புலிகேசி. யாகத்துக்குத் தேவ உடும்பர சமித்துகள் தேவை என்று வேதியர்கள் கூறியதால், தேவ உடும்பர சமித்துகளைத் தேடியுள்ளார்.

அவருக்கு எங்குமே கிட்டாமல் போக, வேறு வழியின்றி ஆலம் சமித்துகளைக் கொண்டு யாகத்தைத் துவக்கிவிட்டார்கள். யாகம் துவங்கி மூன்றாம் நாள், யாக சாலைக்கு ஒரு முதியவர் வந்தார். நரைத்த தாடியும் சிவந்த கண்களுமாக இருந்த அவர், மன்னரைப் பார்த்து 'தன்னுடன் வந்தால் தான் யாகத்திற்குத் தேவையான தேவ உடும்பர சமித்துகளைத் தருகிறேன்' என்று கூற, தனது யாகத்திற்குப் பூரணத்துவம் கிடைக்க வேண்டுமென்றால் தேவ உடும்பரம் அவசியம் என்பதை உணர்ந்து, ஆட்களை அவருடன் அனுப்ப இசைந்தான். ஆனால் அந்த முதியவர் தன்னுடன் அவனது ஆட்கள் வருவதற்கு ஆட்சேபம் தெரிவித்தார். 'நீ என்னுடன் வந்தால்தான் உனக்குத் தேவ உடும்பரச் சமித்துகளைத் தருவேன்' என்று கூற, வேறு வழியின்றி அந்த முதியவருடன் புறப்பட்டுப் போனார், உனது பாட்டன், புலிகேசி. அதன் பிறகு அவர் திரும்பி வரவேயில்லை. அவர் சங்கல்பம் செய்து துவக்கிய அஸ்வமேத யாகம் பூர்த்தியாகாமலேயே நின்றது. நீ பிறந்த பிறகு உனக்குப் புலிகேசி என்று பெயரிட நினைத்தார் உனது தந்தை. ஆனால் உனது தாய் அதற்கு மறுப்பு தெரிவித்தார். புலிகேசி என்று பெயர் வைத்த உனது பாட்டனார் காணாமல் போனதால். அந்தப் பெயரை வைக்கக் கூடாது என்று தர்க்கம் செய்தார். வேறு வழியின்றி இறைவனை அழைப்பது போன்று உன்னை இறையா என்று அழைப்பது என்று முடிவு செய்தனர். உனது மகுடாபிஷேகம் அன்றுதான் உனக்குப் பெயரிட வேண்டும் என்றும் முடிவுகட்டினர். எனவேதான் அந்தப் பெயரில் கோஷம் போட வேண்டாம் என்று நான் அந்த மனிதனைக் கண்டித்தேன்." சுமனஸா விளக்கினாள்.

"எனது பாட்டனார் காணாமல் போனாரா? யாகத்திற்கு வந்த முதியவர் யார்? எதற்காக எனது பாட்டனாரை அழைத்துச் சென்றார்? அதற்குப் பிறகு மன்னரைத் தேடவில்லையா?" — இறையா கேட்டான்.

"தேடாமல் இருப்பார்களா? மன்னரைச் சல்லடை போட்டுத் தேடினார்கள். எதிரிகள்தான் அவரை கடத்திச் சென்றிருக்கக் கூடும் என்று ஒற்றர்களும் எதிரி நாட்டில் மன்னரைத் தேடினார்கள். அவர் துறவியாகப் போய்விட்டார் என்று கூடக் கூறினார்கள்." — சுமனஸா கூறினாள்.

"அஸ்வமேத யாகம் செய்து கொண்டிருந்தவர், பாதியில் யாகத்தை முடிக்காமல் எதற்குத் துறவியாகப் போக வேண்டும்?" — இறையா கேட்டான்.

"இப்போது அவரை நினைத்துச் சிந்தையைக் குழப்பிக் கொண்டிருக்க இயலாது. அவரைப் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லாததால், உனது தந்தை கீர்த்திவர்மரை மன்னனாக மூடிசூட்டினார்கள். இப்போது அவரும் மறைந்து விட்டதால் உனது தலையை மகுடம் அலங்கரிக்க வேண்டும். ஆனால் அதற்குத் தடைகளை உண்டாக்குகிறான், உனது சிற்றப்பன். அடுத்த பிறந்த நாளைக்கு நீதான் சாளுக்கிய மன்னன் என்கிற உறுதியுடன் இன்றிரவே கிளம்பிப் போ.. உனக்காக நான் இங்கே காத்திருக்கிறேன்" என்றாள் சுமனஸா.

"சரி, நான் புறப்படுகிறேன்.. என்னை வாழ்த்தி அனுப்பு!" சுமனஸாவின் பாதங்களில் விழுந்து பணிந்தான், இறையா.

கண்களில் கண்ணீர் திரள, அவனது தோள்களைப் பற்றி எழுப்பியவள், தனது பிடியை இன்னும் இறுக்கினாள்.

"புறப்படு இறையா!" — கிசுகிசுத்த குரலில் அவள் கூற, அவன் அவளைக் கேலியுடன் நோக்கினான்.

"புறப்படு.. புறப்படு என்று கூறுகிறாயே தவிர, உனது பிடியை இன்னும் இறுக்கி என்னை நகரவிடாமல் செய்கிறாயே." இறையா சிரித்தான்.

"இல்லை! நான் கூற வேண்டிய சமாசாரங்கள் இன்னும் உள்ளன. நீ உனது பாட்டன் ஊரான கங்க

நாட்டுக்குச் செல்ல வேண்டுமே தவிர அங்கே நீ யார் இன்னார் என்று கூறக் கூடாது. நீ இளவரசன் என்பதை யாருக்கும் கூறக் கூடாது. வழியில் புலவர்கள் அறிமுகமானால் அவர்களோடு மட்டும் நட்பு பாராட்டு. காரணம் அவர்கள் பல அரசவைகளுக்குச் செல்பவர்கள். நிறையத் தகவல்களைக் கூறுவார்கள். நீயாக யாரிடமும் உன்னை அறிமுகம் செய்து கொள்ளாதே. ஆனால் யார் நீ என்று கூறாமலேயே உன்னை இளவரசன் என்று யார் அறிகிறாரோ அவரை உயிர் நண்பராக ஏற்றுக் கொள்." — சுமனஸா கூற, அவளைக் குறும்புச் சிரிப்புடன் பார்த்தான், இறையா.

"எனது தாய் இருந்திருந்தால் கூட, இவ்வளவு கலங்கி இருக்கமாட்டாள். நீ மனதிற்குள் அழுது கொண்டிருக் கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது.." — இறையா அவளது கண்ணீரைத் துடைத்தான்.

"நான் பேசும் போது குறுக்கே பேசாதே, இறையா. கங்க நாட்டின் மிக அருகே பல்லவத் தலைநகரம் காஞ்சி உள்ளது. படைகளைத் திரட்டி உனது சிற்றப்பன் மங்களேசன் மீது படை எடுப்பதற்கு முன்பாக, காஞ்சிக்குச் சென்று அத்திமலையான் ஆலயத்தில் உள்ள அத்திமலைத்தேவனைத் தரிசனம் செய். மன்னர்களின் மன்னர் அவர். அவரைத் தொழுதால் உனக்குச் சாளுக்கிய அரியணையைப் பெற்றுத் தருவார். அவசியம் நீ அங்கு செல்ல வேண்டும்." — சுமனஸா கட்டளை யிட்டாள்.

"நிச்சயம் செல்கிறேன். வேறு ஏதாவது கூற வேண்டுமா?" — என்றபடி திரும்புவதற்கு எத்தனித்தான்.

"அதற்குள் என்ன அவசரம்..? உனக்கு ஒரு முக்கியமான பொருளைத் தரப்போகிறேன்.." என்றவள் மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த ஒரு சுருக்கு பையை எடுத்து அவனது கையில் திணித்தாள்.

"என்ன இது?" — வியப்புடன் கேட்டான் இறையா.

"நமது நந்தவனப் பாதையில் உனது பாட்டனும், தந்தையும், தாயும் மிதித்த செம்மண். இதனை அன்றாடம் குழைத்து நெற்றியின் மையத்தில் சூரிய வடிவில் இட்டுக்கொள். ரகுகுல வம்சமான உன்னை அவர்கள் காப்பாற்றுவார்கள். உனக்கு இந்த வாதாபியின் மண் ரட்சையாகத் திகழும்." சுமனஸா சொல்ல, இறையா அதனைத் தனது தோள் பையில் திணித்துக் கொண்டான்.

"சரி, நான் புறப்படுகிறேன். தம்பி விஷ்ணுவைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்." — இறையா கூற, 'ஐயோ.. கிளம்பிச் செல்கிறானே' — என்பது போன்று பரிதவிப்புடன் நோக்கினாள், சுமனஸா. பிறகு எதையோ நினைத்துக் கொண்டவள், மீண்டும் ஓடிச் சென்று அவனைத் தடுத்தாள்.

"இரு போகாதே! இன்னும் ஒரு விஷயம் உள்ளது.." என்றவள் ஓடோடிச்சென்று ஒரு பனையோலையையும், எழுத்தாணியையும் எடுத்து வந்தாள்.

"உன்னுடைய சிற்றப்பன் வீரர்களை அனுப்பி உன்னைத் தேடிக் கண்டுபிடித்துக் கொல்ல நினைப்பான். அவனிடம் இருந்து தப்ப ஒரு சிறு நாடகம் ஒன்றை நடத்துவோம். நான் சொல்வது போல் நீ எனக்கு ஒரு ஓலையை எழுது. அதைக் கொண்டு நாளை ஒரு நாடகமாடப் போகிறேன்." சுமனஸா சொல்ல, அவள் கூறியபடி சுவடியில் பதித்து அவள் வசம் தந்தான்.

மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்த தம்பி விஷ்ணு வர்தனின் தலையில் முத்தம் ஒன்றைப் பதித்துவிட்டு, அறையைவிட்டு நீங்கி, அரண்மனையிலிருந்து வெளியேறினான். இறையா கம்பீர நடை போட்டு, இருளில் கலந்து மறைந்து போவதை, கண்ணீருடன் பார்த்தபடி நின்றிருந்தாள் சுமனஸா.

மறுநாள் காலை —

அழுது ஆர்ப்பரித்தபடி மங்களேசனின் ஜாகையை நோக்கி ஓடினாள், சுமனஸா.

"ஐயோ..! இறையா இந்த ஓலையை எழுதி வைத்துவிட்டுக் காணாமல் போனான்.." — சுமனஸா அலற, பரபரப்புடன் அவள் நீட்டிய ஓலையை வாங்கிப் படித்தான், மங்களேசன்.

'சுமனா,

எனக்குச் சிம்மாசனத்தில் அமருவதற்குரிய பக்குவமும், தகுதியும் இல்லை என்று எனது சிற்றப்பா கூறினார். உண்மைதான்.. எனக்கு இருக்கும் மனக்குழப்பங்கள் நீங்க வேண்டும் என்றால், நான் துறவியாவதைத் தவிர வேறு வழியில்லை. என் மனமும் ஆன்மிகத்தை நாடுகிறது. மன்னனாவதற்குத் துணிச்சல் வேண்டும். எனக்குத் துறவியாக மட்டுமே துணிச்சல் உள்ளது. தம்பியைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்.' — இறையா.

'விட்டது சனியன்.' முகத்தில் தோன்றிய நிம்மதி உணர்வைக் கூட மறைத்துக் கொள்ளாமல், தமையனின் மகன் காணாமல் மாயமாகிப் போனதை ஒரு பொருட்டாகவே நினையாமல் நின்றிருந்தனர், மங்களேசனின் குடும்பத்தினர்.

"ஆட்களை அனுப்பி இறையாவை தேடுங்கள்!" ஒப்புக்குச் சொன்னான் மங்களேசன்.

"அரசே! வேண்டாம். அவன் பாதையில் அவன் போகட்டும். அரசாளும் தகுதி அவனுக்கில்லை. கோழையுள்ளம் கொண்டவன். ஆன்மிக உலகம் அவனை அரவணைக்கட்டும். நீங்கள் உங்கள் தமையன் விட்டுச் சென்ற பணிகளை அரசனாக நிறைவேற்றுங்கள்." — மிகச் சாதுர்யமாகப் பேசினாள்.

'சுமனஸாவை போய் இறையாவின் ஆதரவாளர் என்று கூறினாய். பார்! அவளே நான் அரசனாவதற்கு ஆதரவு தெரிவித்துவிட்டாள்' என்று மனைவி பவானியிடம் கண்களால் பேசினான், மங்களேசன்.

தனது திட்டம் பலித்துவிட்டதை எண்ணி மகிழ்வுடன் விஷ்ணுவர்தன் உறங்கிக் கொண்டிருந்த அறையை நோக்கிச் சென்றாள் சுமனஸா.

# 18. கல்தூண் காட்டிய வழி

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.' —

திருநாவுக்கரசர் தருமசேனராக இருந்த போது ரணதிலகன் அவரது செவியினில் கூறிய ரகசியம். மருள்நீக்கியாராகப் பிறந்து, தருமசேனர் என்கிற சமணத் துறவியாக மாறி, பிறகு திருநாவுக்கரசராகத் திருத்திப் பணி கொள்ளப்பட்டு, தற்போது உமையிடம் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரின் பல்லக்கினைச் சுமந்து அவரால் அப்பா என்று அழைக்கப்பட்டு, சைவக்குரவர் நால்வரில் அப்பராகத் திகழத் தொடங்கிவிட்டிருந்தார்.

அவர் தெரிவித்த இரகசியம் அத்திமலைத்தேவன் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் என்பதை யூகித்தான் மகேந்திர பல்லவன். திருநாவுக்கரசர் தெரிவித்த இரகசியத்தைச் சுவடிகளில் பதிவு செய்து, தசகுமாரர்கள் வசம் கொடுத்து, அது குறித்துத் தகவல்கள் ஏதாவது கிடைக்கின்றதா என்று தேடி வரும்படி அவர்களை அனுப்பியிருந்தான். அவர்களும் அட்டதிக்கிலும் அது குறித்து விசாரிக்கச் சென்றிருந்தனர். அவர்களில் ஒருவராவது அத்திமலையானைப் பற்றிய தகவல் அனுப்புவர் என்று நம்பினான்.

தாய் புவனமாதேவியைச் சந்தித்துவிட்டு, அரண்மனை முற்றத்தின் வழியாகத் தனது ஜாகைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். ஒரு ராஜமாதா செய்ய வேண்டிய

பணியை மிகவும் சிரத்தையாகவும், பொறுப்புடனும் புவனமாதேவி செய்யத் துவங்கி இருந்தாள். இவன் உடனடியாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த, தான் அது குறித்து யோசிப்பதாக அவளிடம் வாக்கு கொடுத்துவிட்டு, அங்கிருந்து நழுவி வந்திருந்தான். இப்போதுதான் இவனே சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான். சிறிது காலம், சற்றே தாராளமாகவும், சுதந்திரமாகவும் சிங்காசனத்தில் அமரவிடமாட்டேன் என்கிறார்களே. மன்னனாக அமர்ந்ததும், உடனே, சர்வாபரணப் பூஷிதையாக ஒருத்தியை அழைத்து வந்து, பக்கலில் அமரவைத்து, அவளும் மகுடத்தின் கனம் தாங்காமல் இயந்திரகதியில் இவனை நோக்கி அடிக்கடி சிரிப்பது, நடனமோ, கவியரங்கமோ நிகழ்ந்தால், ரசமான இடங்களில் ஒருவரையொருவர் பார்த்து ·ரசித்துத் தலையாட்டுவது போன்ற செயல்களை அறவே வெறுத்தான் மகேந்திரன். இவனுக்கு இன்னும் திருமணம் குறித்த சிந்தனைகள் இல்லை. திருமணம் குறித்து மட்டுமல்ல.. பெண்களைப் பற்றி எவ்விதக் கருத்தினையும் இன்னும் கொண்டிருக்கவில்லை.

இவனுக்கு மனையாளாக வருபவளைக் குறித்து அவன் எவ்வித யோசனையும் செய்திருக்கவில்லை. ஆனால் இவனுக்கு மனைவியாக வருபவள் இவனது காதலியாக இருக்க வேண்டும். உலகில் உள்ள பெண்களில், இவனது கையைப் பற்ற உள்ளவள் வித்தியாசமானவளாக இருக்க வேண்டும். பேரழகியாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்றாலும், அவளது அழகில் சற்றே தனித்தன்மை இருக்க வேண்டும் என்பது மகேந்திரனின் எதிர்பார்ப்பு.

அப்படி ஒரு பெண் அவனது கண்களில் படும்வரை, இனி ராஜமாதாவின் அந்தப்புரம் பக்கம் தலை வைத்துப் படுக்கக் கூடாது, என்று நினைத்தபடி தனது ஜாகையை நோக்கிச் சென்றான்.

மகேந்திரன் முற்றத்தைக் கடப்பதைக் கண்ட பணிப்பெண் சூரியகாந்தம் அவனை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தாள்.

"அரசே! தளபதியும் இளவரசருமான ராஜவர்மன் குதிரையில் இருந்து விழுந்து அவரது கால் முறிந்து போனது. தற்போது மருத்துவர்களின் கண்காப்பில் இருக்கிறார்." — பணிப்பெண் கூறியதும், தனது ஜாகைக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு, ராஜவர்மனின் மாளிகையை நோக்கி நகர்ந்தான்.

மாளிகையில் நுழைந்து, ராஜவர்மனின் அறைக்குள் நுழைந்த போது அவனது முறிந்த காலைத் தனது தோளினில் வைத்து அதனைச் சுற்றித் துணியால் கட்டிக் கொண்டிருந்தான், மருத்துவனின் உதவியாளன். மருத்துவர் அளித்த மூலிகை மருந்தின் வாசம் பிடிக்காமல், ராஜவர்மன் முகத்தைச் சுளிக்க ராஜஸ்ரீ பலவந்தமாக அதனை அவனது உதட்டில் திணித்துப் புகட்டிக் கொண்டிருந்தாள்.

"என்ன நடந்தது சிற்றப்பா?" மகேந்திரன் கேட்க, அவனுக்குப் பதில் கூறும் பாவனையில் மருந்துக் குவளையை அப்பால் தள்ளினான், ராஜவர்மன்.

"முக்கூடல் கடிகை களரியில், புதிதாகச் சேர்ந்த காவல் படையினரிடையே என்னை உரையாட அழைத்தனர். அதற்காக எனது குதிரை ஜகஜாலம் மீது ஏறினேன். ஒத்தாடை ஆலய யானையின் பிளிறலைக் கேட்டு அதிர்ச்சியில் என்னைப் புரட்டித் தள்ளிவிட்டு ஓடியது ஜகஜாலம்." — ராஜவர்மன் கூறினான்.

"இனி அந்தக் குதிரையை ஜகஜாலப்புரட்டி என்று அழைக்க வேண்டியதுதான்..." — சிரித்தபடி ராஜஸ்ரீ மருந்துக் குவளையை ராஜவர்மனின் உதட்டில் திணித்து அவனை விழுங்கச் செய்தாள்.

"சிற்றப்பா! கேவலம் ஒரு மருந்துக் குவளை, மூடியிருக்கும் உங்கள் உதடுகளைப் பிளந்து உள்ளே

ஊடுருவுவதை உங்களால் தடுக்க இயலவில்லையே. உங்களை நம்பி நான் இந்த நாட்டின் தளபதி பதவியைத் தந்துள்ளேன். உங்களால் எதிரிகள் ஊடுருவாமல் எல்லைகளை எப்படி காப்பாற்ற முடியும்?" — மகேந்திரன் சிரித்தான்.

"புறமுதுகிட்டு ஓடாமல் துணிவுடன் மூலிகை மருந்தை எதிர்கொள்கிறேன் பார். அதற்கே நீ என்னைப் பாராட்ட வேண்டும்." — ராஜவர்மனும் நகைத்தான்.

"புறமுதுகிட்டு ஓட நினைத்தாலும், முடியுமா, அண்ணா! ஓட முடியாமல் கால் முறிந்திருக்கிறது அல்லவா?" — கேலி பேசியபடி உள்ளே வந்தாள் ஜெயஸ்ரீ, ராஜவர்மன் — ராஜஸ்ரீயின் ஒரே மகள். ஜெயவர்மனின் நினைவாக அவளுக்கு ஜெயஸ்ரீ என்று பெயரிட்டிருந்தான். ராஜஸ்ரீ சமயங்களில் தனது ஓரகத்தியை நினைவு கூரும் வகையில் ஜெயஸ்ரீயை சாயா என்றும் அழைப்பது வழக்கம்.

"நானும் புறமுதுகு காட்டித்தான் வந்திருக்கிறேன்." — மகேந்திரன் கூறியதும், புருவங்களை உயர்த்தியபடி மகேந்திரனைத் திரும்பி நோக்கினாள்.

"யாருக்குக் காட்டினாய்?" — ராஜஸ்ரீ கேட்க, புன்சிரிப்புடன் அவளைப் பார்த்தான்.

"எனது தாய் ராஜமாதாவுக்குத்தான். திருமணம் செய்து கொள் என்கிற பிரும்மாஸ்திரத்தை என் மீது ஏவினார். தப்பி ஓடி வந்துவிட்டேன்."

"நியாயமான கோரிக்கைதானே. பல்லவனுக்குப் பல்லவி பாட ஒரு பல்கலன் அணிந்த பாவை நமது அரண்மனைக்கு வரத்தானே வேண்டும்.." ராஜஸ்ரீ கூறினாள்.

"பார்த்து அண்ணா! வரப்போகும் பாவை உன்னைச் சாணக்கியனைப் போன்று ஆக்கிவிடப் போகிறாள். பல்லாங்குழி பலகைவாயனாக." — ஜெயஸ்ரீ கூற,

அவளது தலையில் வாஞ்சையுடன் ஒரு குட்டு வைத்தான், மகேந்திரன்.

"நான் ஒன்றும் வரப்போகும் பாவையிடம் பல் இளிக்கமாட்டேன். கலைகளை விரும்புபவன் நான். கலைநயத்துடன் இருப்பவளைத்தான் எனது வருங்கால மனைவியாக ஏற்பேன். சிற்பமாக நிற்க வேண்டும். நாட்டியமாக நடக்க வேண்டும், சலங்கையொலியாகச் சிரிக்க வேண்டும்.."

"ஒன்று செய் அண்ணா! உனது குதிரையை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு நாடாகச் சென்று, உனக்கேற்ற கலைநயம் மிக்கப் பெண்ணைத் தேடி அவளைச் சிறையெடுத்து வா. எனது தாயும் சிறையெடுத்து வரப்பட்டவள்தானே.. எப்படியப்பா உனக்கு அந்தத் துணிவு வந்தது?" — ஜெயஸ்ரீ கேட்க, தன்னையும் அறியாமல், ராஜஸ்ரீயின் நினைவுகள் பாலகாடக நிகழ்வுகளில் திளைத்தன.

ஜெயவர்மன் அவனிசிம்மனுக்காக இவளைச் சிறையெடுத்து வர, கடைசியில் ராஜவர்மனின் மனையாளாக அல்லவோ இவள் மாறிவிட்டிருந்தாள்.

ராஜவர்மனும் சட்டென்று தனது நகைச்சுவை உணர்வினை இழக்க, முகம் யோசனையில் ஆழ்ந்தது. ஜெயவர்மன் மட்டும் காணாமல் போகாமல் இருந்திருந்தால்?

ராஜஸ்ரீ சட்டென்று பேச்சை மாற்றினாள்.

"அத்திமலைத்தேவன் பிரதிமையைப் பற்றித் தகவல் ஏதேனும் தெரிந்ததா?"

ராஜஸ்ரீயை நோக்கித் தலையசைத்தான், மகேந்திரன். "தசகுமாரர்களை எல்லாத் திக்கிலும் அனுப்பியிருக் கிறேன். தகவல் கிடைக்கும் என்று நம்புகிறேன்." — மகேந்திரன் கூறினான்.

“எனக்கு உறுதியாகத் தெரிகிறது. ஜெயவர்மன் எடுத்துச் சென்ற சிலை போலியானது. சிற்பி காளநந்தி இறந்து போனாலும், அவரது மருமகள் தனது மாமனார் எட்டடி உயரச் சிலை ஒன்றைச் செய்து ஜெயவர்மனுக்கு அளித்ததை ஊர்ஜிதப்படுத்தினாள்.” — ராஜவர்மன் கூறினான்.

“சீனப் பெண் துறவி பிரக்ஞுதாராவை ஏமாற்றுவதற்காகச் சிற்றப்பா போலி சிலையைச் செய்து கொடுத்தார் என்றாலும், உண்மையான தேவ உடும்பர சிலை எங்கே? அதை எதற்காகப் பதுக்க வேண்டும்? ஆராதனை செய்யப்பட்டு வரும் சிலையை ஆலயத்தில் இருந்து எடுத்து மறைத்து வைப்பானேன்..?”

“எட்டடி உயரச் சிலையைத் தூக்கிச் செல்வதற்கே அதிகம் பேர் வேண்டுமே?” — ஜெயஸ்ரீ ஆச்சரிய பட்டாள்.

“சிலை எட்டு அடியாக இருந்தாலும், அது தேவ உடும்பர மரத்தில் செய்யப்பட்டதால், அதிகக் கனம் இல்லை, ஜெயஸ்ரீ!” — மகேந்திரன் கூறினான்.

“எனது உள்ளுணர்வு கூடக் கூறுகிறது, அத்திமலைத் தேவன் காஞ்சியில்தான் இருக்க வேண்டும் என்று. நவரத்னாதேவி எதற்காகத் தற்கொலை செய்து கொண்டாள்? விஜயவர்மன் எதற்காகக் கொலை செய்யப்பட்டான்? ஒருபுறம் ஜெயவர்மர் காணாமல் போனார் என்றால் மறுபுறம் பீமவர்மனும் காணாமல் போனது ஏன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இன்னும் பதில் கிடக்கவே இல்லையே. மன்னர் சிம்மவிஷ்ணு இறுதிவரை இந்தக் கேள்விகளுக்கான பதிலைப் பெறத் துடித்தார்.. காலம் அவரை ஏமாற்றிவிட்டது..” ராஜஸ்ரீ பெருமூச்சு ஒன்றைச் சிந்தினாள்.

“எனது தகப்பனை ஏமாற்றியது போன்று, காலம் என்னை ஏமாற்ற அனுமதிக்கமாட்டேன். வெகு விரைவிலேயே, எல்லாக் கேள்விகளுக்கும் நல்ல பதில்கள்

*கிடைக்கும். எனது நண்பர்கள் தசகுமாரர்கள் நல்ல செய்தியை அளிப்பார்கள். எவ்வளவு சிறு தகவல்களாக இருந்தாலும், உடனே பகிர்ந்துகொள்ளக் கட்டளை யிட்டுள்ளேன். பாலகனகன் என்பவன் *தூதுப் புறாக் களைப் பயிற்சி செய்பவன். எனக்கு ஐம்பது புறாக்களைக் கொடுத்துள்ளான். தசகுமாரர்களிடமும் தலா ஒரு புறாவை அனுப்பியுள்ளேன். எப்போது அந்த ரகசியம் குறித்துத் தகவல் கிடைத்தாலும் உடனே ஓலையில் புறாக்களின் மூலம் அனுப்பச் சொல்லியிருக்கிறேன்." மகேந்திரன் கூறினான்.*

*"அண்ணா! ஒருமுறை அந்த இரகசியப் புதிரை என்னிடம் கூறுங்களேன். என்னால் ஏதாவது கண்டு பிடிக்க முடிகிறதா என்று முயன்று பார்க்கிறேன்." ஜெயஸ்ரீ கூறினாள்.*

* பல்லவர்கள் காலத்தில் கடிதப் போக்குவரத்து மற்றும் தூது ஓலை அனுப்புவதற்கு நன்கு பயிற்சி கொடுத்துப் பழக்கப்பட்ட புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. பழக்கப்பட்ட புறாக்கள் வெகுதொலைவில் உள்ளவர்களுக்குச் செய்தி எடுத்துச் சென்றாலும், புறப்பட்ட இடத்திற்குச் சரியாகத் திரும்பிச் சென்றுவிடுகின்றன. மிகவும் இரகசியமான தகவல்களை எடுத்துச் செல்லும் போது எதிரிகளின் கண்களில் பட்டால் தற்கொலை செய்து கொள்ளும் புறாக்களும் உண்டு.

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப்போர்களில் புறா பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஆஸ்திரேலியா, பிரித்தானியா, பிரான்சு, செருமனி, அமெரிக்கா ஆகிய நாடுகளிடையே புறாக்கள் போரின் போது பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் உலகப் போரில் வழங்கப்பட்ட பங்களிப்புகளுக்காக 32 புறாக்களுக்கு டிக்கின் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஆதாரம்: புறாவிடு தூது.

இன்றும் ஒடிஸா மாநிலத்தில் புறாக்கள் விடும் தூது தொடர்கிறது. கடந்த வருடம் ஏப்ரல் 18 இல் புவனேஸ்வரத்தி லிருந்து கட்டா நகருக்குப் புறாக்கள் அனுப்பப்பட்டன. இருபத்து ஐந்து கி.மீ. தூரத்தை இருபது நிமிடங்களில் கடந்து தகவலை தந்துவிட்டு, திரும்பி வந்தன. ஆதாரம், தமிழ் இந்து இணையதளம் April 24, 2018.

அவளது ஆர்வத்தைக் கண்டு புன்னகைத்தான், மகேந்திரன்.

“நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.” — மகேந்திரன் கூறினான்.

“கடகங்கள் என்றால் நண்டுகள் என்று மட்டும் தெரிகிறது. அது என்ன நூற்றுப் பதினெழு என்கிற எண்ணிக்கை..? ஒன்றோ இரண்டோ என்றால் உடனேயே சொல்லியிருப்பேன்.”

“எனது ஆசான் திருநாவுக்கரசருக்கே புரியவில்லை. உனக்கு எப்படித் தெரிய வரும்?” — நையாண்டி செய்த மகேந்திரனை முறைத்தாள், ஜெயஸ்ரீ.

“திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சந்தித்துக் கொண்டார்களாமே?” ராஜவர்மன் கேட்டான்.

“ஆம்! இனி திருநாவுக்கரசரை அப்பர் என்றே அழைக்க வேண்டும் என்று ஞானசம்பந்தர் விருப்பம் தெரிவித்திருக்கிறார். என்னைத் திருத்திப் பணி கொண்ட திருநாவுக்கரசர்தான் எனக்கும் அப்பர். ஞான சம்பந்தருக்கும் அவர்தான் அப்பர் என்றால், நானும், ஞானசம்பந்தரும் சகோதரர்கள் அல்லவா ஆகிறோம்!” — மகேந்திரன் புளகாங்கிதத்துடன் கூறினான்.

“இந்தப் புதிரைப் பற்றி அவரால் ஒன்றும் யூகிக்க முடியவில்லையா? அவர்தானே உன்னிடம் இதைத் தெரிவித்தது? — ராஜஸ்ரீ கேட்டாள்.

“நமது அத்தை நவரத்ன பல்லவியின் கணவன் ரணதிலகனை ஒரு சமணப் பசடியில் சந்தித்திருக்கிறார். ரணதிலகன் மற்றும் அவன் நண்பன் மகாபலி என்கிற களப்பிரனுக்கிடையே தகராறு மூள; ரணதிலகனை கத்தியால் குத்திவிட்டான் மகாபலி. இறக்கும் போது தருமசேனராக இருந்த திருநாவுக்கரசரிடம் இந்த ரகசியப்

புதிரைக் கூறிவிட்டு இறந்துவிட்டான் ரணதிலகன்." — மகேந்திரன் கூற, ராஜவர்மன் கோபத்தில் பற்களைக் கடித்தான்.

"எனது தங்கை நவரத்னாவுக்கு இழைத்த துரோகத்திற்குத் தக்க தண்டனை கிடைத்தது." — ராஜவர்மன் கூற, அவனது புஜத்தில் தட்டி, அவனைச் சாந்தப் படுத்தினாள்.

"அந்த ரணதிலகருக்குத்தான் என்ன அவசரம்..? ஒரு துறவியிடமா ரகசியத்தைச் சொல்லுவார்? நம்மிடம் சொல்லியிருக்கக் கூடாதா? அண்ணா! நான் மட்டும் இதற்கான விடையைக் கூறிவிட்டால், எனக்கு நீ ஒரு நவரத்னமாலையைப் பரிசளிக்க வேண்டும்.." — ஜெயஸ்ரீ சவால்விட்டாள்.

"நவரத்ன பல்லவி துவக்கி வைத்த குழப்பம். அதனைத் தீர்த்தவர்களுக்கு நவரத்ன மாலையைப் பரிசளிப்பது தான் உத்தமம்!" — ராஜவர்மன் சோகத்துடன் கூறினான்.

"இன்று இரவுக்குள் கண்டுபிடித்துவிடுவேன்." — ஜெயஸ்ரீ கூறினாள்.

"புதிரை விடுவிக்கிறேன் என்று யோசித்தபடி தந்தையைக் கவனியாமல் இருந்துவிடாதே. மருத்துவர்கள் மூலிகைக் கலவையைத் தந்தைக்குப் புகட்டும் போது அருகில் நின்று அவருக்குத் தைரியம் கூறு! நான் ஆலயத்திற்குச் செல்கிறேன்" என்றபடி முக்காலியின் மீது இருந்த சுவடியை எடுத்துக் கொண்டாள்.

"அவசரமாக எந்த ஆலயத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறீர்கள், சிற்றன்னையே? எனது இரதத்தில் வாருங்கள்! நான் அழைத்துச் செல்கிறேன்."

"வேண்டாம் மகேந்திரா! மன்னனுடன் வந்தால், ஆலயத்தில் கூட்டம் கூடும். பிறகு உன்னுடன் வரும் எனக்கு விசேடக் கவனத்தைக் கொடுப்பார் அர்ச்சகர். நான் போகும் காரியம் காதோடு காதாகச் செய்ய வேண்டியது. யாருக்கும் தெரியக் கூடாது." — ராஜஸ்ரீ கூறினாள்

"அப்படி என்ன செய்யப் போகிறீர்கள்?" — வியந்தான் மகேந்திரன்.

"புரவி மீதிருந்து விழுந்த உனது சிற்றப்பனின் கிரகநிலைகளின் சுவடியை அரண்மனை ஜோதிடரிடம் காட்டினேன். பாத சனியாம். காலை கட்டிப் போட்டுவிட்டது. காலதேவன் அவரிடம் சற்றே கருணை காட்ட, சில சாங்கியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறியதால், சித்ரகுப்தன் ஆலயத்திற்குச் செல்கிறேன்." — ராஜஸ்ரீ கூறினாள்.

"நானும் வருகிறேன் சிற்றன்னையே. மன்னனாகப் பதவி ஏற்றதும் அந்த ஆலயத்திற்கு இதுவரை செல்லவில்லை. சாணக்கியரின் நினைவாகப் படை எடுத்து வந்த சமுத்திரகுப்தன் எழுப்பிய ஆலயத்திற்குச் சென்றால் ஒருவேளை குழம்பி இருக்கும் என் மனதுக்குத் தெளிவு பிறக்குமா? பல்லவத்தின் பிரச்சனைகளுக்கு விடிவு பிறக்குமா என்று பார்க்கலாம்" — வேதனையுடன் கூறிய மகேந்திரன், ராஜஸ்ரீயுடன் புறப்பட்டான்.

மாமரங்களும், அத்திமரங்களும் அடர்ந்திருந்த காஞ்சியின் தரும நகரத்தின் வடக்கே இருந்த சித்ரகுப்தனின் ஆலயத்தை* நோக்கிச் சென்றது இரதம்.

மகேந்திரனும், ராஜஸ்ரீயும் ஆலயத்தினுள் நுழைய அவர்களைக் கண்டதும் ஆலய அதிகாரி வீரக் கொண்டேசன் ஓடி வந்தான்.

"அரசே! தாங்கள் வரப்போவது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருப்பேன்." — கொண்டேசன் கூறினான்.

"சித்ரகுப்தனின் ஆலயம். அதிகாரத்தை அவரிடமே காட்டினால், எனது கணக்கில் திருத்தம் செய்துவிடுவார். எனவேதான், திடீரென்று வந்தேன். நீர் உமது பணியைக்

* பெரிய காஞ்சிபுரம் காந்தி சாலையில் சரவணா பவன் உணவகத்தின் அருகில் உள்ளது சித்ரகுப்தரின் ஆலயம்.

கவனியும். நான் சித்ரகுப்தரை தரிசித்துவிட்டுச் செல்கிறேன்." — மகேந்திரன் கூறினான்.

மகேந்திரனும், ராஜஸ்ரீயும் சித்ரகுப்தரை தரிசித்தனர். 'சித்ரகுப்தரே! சித்ரகுப்தர் அருள்பெற்ற சாணக்கியரே! எனது மனக்குழப்பங்களைத் தீர்த்து வையுங்கள். அத்திமலைத்தேவன் மீண்டும் அத்திமலை சேர்வதற்கு வழி செய்யுங்கள். பல்லவத்தில் நிலவும் குழப்பங்களைத் தீர்த்து வையுங்கள்.' — மகேந்திரன் உள்ளம் உருகப் பிரார்த்தித்தான்.

ராஜவர்மனின் ஜாதகச் சுவடியை அர்ச்சகரிடம் ராஜஸ்ரீ கொடுக்க, அவர் அதனைச் சித்ரகுப்தரின் திருவடிகளில் வைத்து, புஷ்பங்களைச் சேர்த்து அர்ச்சனை தோத்திரங்களைக் கூற, ராஜஸ்ரீ கண்கள் பனிக்க வேண்டினாள்.

'பல்லவ அரச குடும்பத்தின் பிரச்னைகளைத் தீர்த்து வை, சித்ரகுப்தா! இறந்தவர்களின் ஆன்மாவுக்கு நற்கதி அருள். மாயமாகிப் போனவர்களுக்கு மனநிம்மதியைத் தா. மற்றவர்கள் தீர்க்க ஆயுளுடனும் மனநிறைவுடனும் வாழ வழி செய்!'

அர்ச்சகர் பூசனையை முடித்துத் தீபாராதனை காட்டி, ஜாதகச் சுவடியை மீண்டும் ராஜஸ்ரீயிடம் கொடுத்தார். ராஜஸ்ரீ மட்டும் ஆலய நந்தவனம் வழியாகச் சந்நிதியை வலம் வர, மகேந்திரனை வழிமறித்த கொண்டேசன் தான் ஆலயத்திற்குச் செய்திருந்த திருப்பணிகள் குறித்து விளக்கிக் கொண்டிருந்தான்.

மாமரங்கள் ஊடே வலம் வந்து கொண்டிருந்த ராஜஸ்ரீ, சந்நிதியின் பின்பாகத் திரும்பியதும் ஆலயத்தின் பின்பாக நின்ற அந்த ஸ்தூபியைக் கவனித்தாள். முன்பு அவள் ஆலயத்திற்கு வந்த போது கவனிப்பாரற்று எழுத்துகள் தெளிவில்லாமல் காணப்பட்டது, அந்தக் கல்தூண். ஆனால் இப்போது புதுப்பொலிவுடன் தெளிவான வாசகங்களோடு காணப்பட்டது ஸ்தூபி.

வலம் வந்து கொண்டிருந்த ராஜஸ்ரீ ஸ்தூபியின் அருகே வந்ததும் சற்றே நின்றாள். சமுத்திரகுப்தன் காஞ்சிக்குப் படை எடுத்து வந்ததைக் குறிக்கும் வகையில் அவனால் எழுப்பப்பட்ட சித்ரகுப்தரின் ஆலயத்தில் அமைக்கப்பட்ட ஸ்தூபி. இதுவரை ராஜஸ்ரீ .அதை வாசித்தவள் இல்லை. புதுப்பொலிவுடன் கருங்கல்லில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துகள் அவளை வாசிக்கும்படி தூண்ட, கல்தூணில் பதிக்கப்பட்டிருந்த வாசகங்களைப் படித்தாள்.

'அஸ்வமேத திக்விஜயன் சமுத்திரகுப்த ஆரியச் சக்கரவர்த்தி சைத்ர ஹஸ்த பூர்ணிமையில் அவதரித்து, பாரதக் கண்ட தேசங்களை வென்று ஆர்யாவிரதத்தைக் கைப்பற்றி, தக்ஷிண தேசங்களையும் கைப்பற்றி அத்திமலைபுரிக்கு வந்து, அத்திமலையை தரிசித்து, சாணக்கியரின் தரிசனம் பெற்று, அவரது அனுக்ரகத்தால் சமுத்திரகுப்த சக்கரவர்த்தி எழுப்பிய சித்ரகுப்தரின் ஆலயம்.

திக்விஜயத்தில் சமுத்ரகுப்த கீர்த்தி சக்கரவர்த்தி வென்ற தேசங்களும் அனுக்ரஹ பட்டயத்தில் கையெழுத்திட்ட மன்னர்களின் விவரங்கள்:

மகாகாந்தாரத்து வியாக்ர ராஜா
குராளத்து மந்தராஜா
பிஸ்தபுரத்து மகேந்திரகிரி
கோட்டூர் ஸ்வாமிதத்தா
எரண்டபள்ளி தாமணா
அவமுக்த நீலராஜா

மகாகோசல மகேந்திரா மற்றும் அவனது தம்பி ஆளுமையில் இருந்த உதயகிரியின் நூற்றுப் பதினெழு கடக ·குகைகளும், காந்தகிரியின் பன்னிரண்டு கஜக் கிரிகளும்.*

* GOOGLE-ல் நுழைந்து KATAKA CAVES என்று குறிப்பிட்டால், உதயகிரி, மதூரம், காந்தகிரி குகைகளின் படத்தைக் காணலாம். இன்றைய CUTTACK பகுதிதான் கடக குகைகள். கடக என்ற சொல்லில் இருந்துதான் கட்டா உருவானது.

கல்வெட்டினைப் படித்தபடி நின்ற ராஜஸ்ரீ அந்தக் குறிப்பட்ட வாசகத்தைக் கண்டதும் அயர்ந்து நின்றாள்.. தொடர்ந்து மேலே வாசிக்க மறுத்து அவளது கண்கள் அந்தக் குறிப்பிட்ட வாசகத்திலேயே நிலைகுத்தி நின்றன.

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.'

ரணதிலகன் தருமசேனரின் செவிகளில் கூறிய ரகசியம்..

திருநாவுக்கரசர் மகேந்திரனிடம் கூறிய ரகசியம்..

இதோ —

சமுத்திரகுப்தன் கைப்பற்றி இருந்த பகுதிகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள் என்பது உதயகிரி மற்றும் காந்தகிரியை குறிக்கின்றதோ..?

பிடரியில் மயிர்க்கூச்சம் எடுக்க, ஆலயத்தின் முன் பகுதியை நோக்கி ஓடினாள், ராஜஸ்ரீ. இன்னமும் வீரக் கொண்டேசனுடன் நின்று பேசிக் கொண்டிருந்தான், மகேந்திரன்.

"மகாமல்லா! இங்கே வா!" — ராஜஸ்ரீ அழைக்கையில் அவளது முகத்தில் பரவியிருந்த பரபரப்பினைக் கண்டு வியந்து அவளை நோக்கி நகர்ந்தான், மகேந்திரன்.

"என்ன விஷயம்?" என்றவனின் கையைப் பற்றி விரைவாக ஆலயத்தின் பின்புறம் அழைத்துச் சென்று, சமுத்திரகுப்தன் எழுப்பியிருந்த ஸ்தூபியை சுட்டிக் காட்டினாள்.

"இதைப் படித்துப் பார்!" — ராஜஸ்ரீ கூறியதும், மகேந்திரன் அதனை வாசித்தான்.

முழுவதும் படித்தும் அவனுக்கு அந்தக் குறிப்பிட்ட வாசகம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

"இதில் என்ன இருக்கிறது. சமுத்திரகுப்தன் தான் வென்ற நாடுகளைப் பட்டியலிட்டு உள்ளான்.." — அலட்சியமாகக் கூறினான், மகேந்திரன்.

"மல்லா! தெளிவினைத் தேடிச் சாணக்கியனின் ஆசி பெற்ற சமுத்திரகுப்தன் எழுப்பிய சந்திரகுப்தன் ஆலயத்திற்கு வந்துள்ளாய். சாணக்கியரே சமுத்திர குப்தன் மூலமாக உனது குழப்பத்தை நீக்கித் தெளிவினை ஏற்படுத்த, நீ அதைப் புரிந்து கொள்ளாமல் நிற்கிறாய். இதோ பார்!"

ராஜஸ்ரீ அந்தக் குறிப்பிட்ட வாசகத்தைச் சுட்டிக் காட்டினாள்.

'மகாகோசல மகேந்திரா மற்றும் அவனது தம்பி ஆளுமையில் இருந்த உதயகிரியின் நூற்றுப் பதினேழு கடக குகைகளும், காந்தகிரியின் பன்னிரண்டு கஜக் கிரிகளும்..'

அவள் சுட்டிக்காட்டிய வாசகத்தை மீண்டும் மீண்டும் படித்த மகேந்திரன் திகைப்புடன் ராஜஸ்ரீயை ஏறிட்டான்.

"இப்போது திருநாவுக்கரசர் உன்னிடம் கூறிய புதிரை நினைவுபடுத்திப் பார்.."

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.'

கல்தூணில் காணப்பட்ட வாசகத்தையும், திருநாவுக்கரசர் குறிப்பிட்ட புதிரையும் மாற்றி மாற்றி மனத்தில் உருப்போட்டவன், சடாரென்று ராஜஸ்ரீயை பிரம்மிப்புடன் திரும்பிப் பார்த்தான்.

"சிற்றன்னையே! உண்மையில் சாணக்கியர்தான் நம்மை இங்கே வரவழைத்துத் தெளிவினை உண்டாக்கியுள்ளார். நீங்கள் இந்த ஆலயத்திற்கு வந்ததால்தான் எனக்கு ஒரு பாதை தெரிந்தது.." — மகேந்திரன் நெகிழ்ச்சியுடன் கூறினான்.

"உண்மையில் எனது கணவரைத் தள்ளிய ஜகஜாலக் குதிரைக்குத்தான் நீ நன்றி கூற வேண்டும்." — ராஜஸ்ரீ சிரித்தாள்.

"புறப்படுங்கள் சிற்றன்னையே! உங்களை அரண் மனையில் விட்டுவிட்டு, நான் திருவதிகை சென்று அப்பர் பெருமானைத் தரிசிக்கப் போகிறேன். இது குறித்துச் சில ஐயங்களையும் தீர்த்துக் கொண்டு, அவரிடம் ஆசி வாங்கியபின் கடக குகைகளுக்குச் செல்லப் போகிறேன்." — மகேந்திரன் கூறினான்.

ராஜஸ்ரீயை அரண்மனை வாயிலில் இறக்கியபின், மகேந்திரன் வந்த வேகத்திலேயே திருவதிகைக்குப் புறப்பட்டான். அரண்மனையின் அந்தப்புரத்தை நோக்கி நடந்த ராஜஸ்ரீ, தற்செயலாகத் தனது கணவனின் ஜாதகச் சுவடியை நோக்கினாள்.

ராஜவர்மனின் ஜாதகத்தின் கட்டங்களை நோக்கியவள் திகைப்புடன் நின்றுவிட்டாள். அவளது கண்கள் கணவனின் ஜாதகத்தை வெறித்து நோக்கின.

ராஜவர்மனின் கடக ராசியில் சந்திரன் தனது சொந்த வீட்டில் பலமாகக் காணப்பட்டான். கடகத்தின் ராசிநாதன் சந்திரன் அல்லவா?

கிரகங்களில் சூரியன் அரசன் என்றால், சந்திரன் அரசி அல்லவா..?

ராசிக் கட்டங்களில் மேஷம் முதலாவதாக நின்றால், கடகம் நான்காவதாக உள்ளது என்பதைக் கவனித்தாள்.

'நூற்றுப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதை புலப்படும்.'

ராஜஸ்ரீக்கு ஏதோ புரிவது போல் இருந்தது.

# 19. பாரளந்த பாரவி

நடுநிசியில் வாதாபி அரண்மனையைவிட்டு நழுவிய இறையா, தெற்கு திசையில் நடக்கத் துவங்கினான். பகல் முழுவதும் தொடர்ந்து நடந்தவன், மாலை சூரிய அஸ்தமனத்துக்கு முன்பாக விஷ்ணுகுந்தன வனத்தினுள் நுழைந்து இந்திராவதி நதிக்கரையை அடைந்தான். உயரமான மலைகளும் அடர்ந்த காடுகளும் துவக்கத்தில் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தாலும், மலைகளில் ஏறுவதும், இறங்குவதும் ஆற்றைக் கடப்பதும் அவனுக்குப் பெரும் சவாலாக இருந்தது. பசி மற்றும் தாகத்தைத் தணிக்க, கனிகளுக்கும் நீருக்கும் குறைவில்லை என்றாலும், முதன் முறையாகக் காட்டுப் பகுதியைக் கடக்கின்றான் என்பதால் பெரும் சிரமங்களுக்கு உள்ளானான், இறையா.

இந்தத் துன்பங்கள் எல்லாமே உனது உடலுக்கு வலுவேற்றும்; மனோதிடத்தைக் கொடுக்கும் என்று அவனைத் தயார்படுத்திதான் சுமனஸா அனுப்பி யிருந்தாள். கதிரவன் மேற்கு வானில் அஸ்தமிக்கத் தொடங்க, அன்றைய பயணத்தை அத்துடன் முடித்துக் கொள்ளும் எண்ணத்துடன், இந்திராவதி ஆற்றங்கரையில் பந்தலாக விரிந்திருந்த ஒரு ஆலமரத்தின் கீழே சென்று ஆயாசத்துடன் அமர்ந்தான். மனித சஞ்சாரமே அற்று, உலகில் தான் ஒருவன் மட்டும் தனித்திருப்பதைப் போன்று உணர்ந்தான். கண்களை மூடி சற்றே சயனிக்கலாம் என்று அங்கேயே படுத்து, கண்களை மூடினான். இரவுப் பறவைகள் நாங்கள் வெளி வருவதற்குத் தயார் என்று குரல் கொடுக்க, நாங்கள்

எங்கள் கூடுகளுக்குப் புறப்பட்டதும் நீங்கள் வெளி வரலாம் என்று பதில் கூறின, இதர பறவைகள். இந்திராவதி ஆற்றின் 'சளசள' என்ற நீர்ப் பாய்ச்சல் இறையாவுக்குத் தாலாட்டாக ஒலித்தது. முதன் முறையாக, ஒரு நாள் முழுவதையும் மேலே கூரையின்றிக் கழித்திருக்கிறான்.

வெகு தொலைவு நடந்திருந்ததால் படுத்ததும் உறங்கிப் போனான். நீண்ட ஆழமான உறக்கம்.. பறவைகள் இந்திராவதி நீரில் கிறீச்சிட்டபடி நீராடி விளையாடி யதால் ஏற்பட்ட ஒலி அவனது உறக்கத்தைக் கலைக்க, கண்மலர்ந்த இறையா, எழுந்து ஆற்றை நோக்கி நடந்தான். குளிர்ந்த ஆற்று நீரில் நீராடியவுடன் புத்துணர்வும் சுறுசுறுப்பும் அவனது தேகத்தில் பரவ, புதிய உடைகளை அணிந்து, களைந்திருந்த ஆடைகளை ஆற்று நீரில் நனைத்துச் சுத்தம் செய்து தான் உறங்கி யிருந்த ஆலமரத்தின் அடியிலேயே உலர்த்தினான். ஆடைகள் காய்வதற்காகச் சற்றே காத்திருக்கும் எண்ணத்துடன் ஆலமரத்தின் அடியில் அமர்ந்து காத்திருந்தான்.

அப்போது, வடக்கிலிருந்து தெற்காகச் செல்லும் அந்த ஒற்றையடி பாதையில் யாரோ நடந்து வரும் காலடிகளின் ஒலி கேட்டது. சருகுகளும், சுள்ளிகளும் மிதிபடும் ஒலி. ஆர்வத்துடனும், வியப்புடனும் இறையா அந்தத் திக்கில் நோக்க, அவனது கண்களில் ஒரு மனிதன் தென்பட்டான். இளைய வயதினன் என்றாலும் முகத்தில் கல்வியறிவு நிரம்பி இருந்ததற்கு அடையாளமாக அவனது மேதாவிலாசம் பொங்கிக் கொண்டிருந்தது. தன்னைச் சுற்றித் தென்பட்ட இயற்கை காட்சிகளை அவனது கண்கள் உள்வாங்கி அவனது சிந்தைக்கு உணவாக அனுப்ப, அவனது கூரிய கவித்துவமிக்க இயந்திர சிந்தையில் கவிதைகள் உற்பத்தியாகிக் கொண்டிருந்தன.

பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்த அந்த மனிதனின் பார்வை இறையாவைக் கண்டதும் வியப்புடன்

*நிலைகுத்தி நின்றன. இறையாவைப் போன்றே அவனும் மனித சஞ்சாரத்தைக் கண்டு வெகுநாட்களாகி இருக்க வேண்டும். இறையாவைக் கண்டதும் அந்த மனிதனின் கண்களில் ஆர்வமும், நிம்மதியும் தோன்றின. அவசரமாக இறையாவை நோக்கி வந்தவன், புன்முறுவலுடன் அவனருகே தடால் என்று அமர்ந்தான்.*

*"தம்பி! இப்போதே சொல்லிவிடுகிறேன். எனது துணி மூட்டையில் மாற்று வஸ்திரங்களும், கவிதைச் சுவடிகளுமே இருக்கின்றன. மற்றபடி பொக்கிஷங்கள் ஒன்றும் இல்லை. நான் உறங்கி இரண்டு நாட்களாகி விட்டன. முதலில் நான் சற்று உறங்க வேண்டும். பிறகு யாருடனாவது அளவளாவ வேண்டும். எங்கும் சென்றுவிடாதே."*

*ஆலமரத்தின் கீழே அமர்ந்ததும், சிலுசிலுக் காற்றில் அந்த மனிதனின் கண்கள் தன்னையும் அறியாமல் உறக்கத்தால் சொக்கின.*

*தன்னை அறிமுகம் கூடச் செய்து கொள்ளாமல், 'நான் உறங்கி எழும் வரை காத்திரு. உன்னுடன் பேச வேண்டும்' என்று கூறும் அந்த மனிதனை விசித்திரமாக நோக்கினான், இறையா.*

*"அய்யா! நான் வெகுதூரம் செல்ல வேண்டும். நீர் உறங்கி எழும் வரை நான் இங்கே என்ன செய்வது?" கேட்டான் இறையா.*

*"இந்த மூட்டையில் சுவடிகளை வைத்திருக்கிறேன். அவற்றை வாசித்துக் கொண்டிரு. எனது பெயர் தாமோதரா.* மற்றதைப் பிறகு பேசலாம்!"*

* தாமோதரா என்கிற அந்தப் புலவன்தான் ஆறாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிராயராக விளங்கிய காளிதாசனுக்கு இணையாகப் போற்றப்பட்ட பாரவி. மகாபாரதத்தைத் தனது கிரதஅர்ஜுன என்கிற பதினெட்டுச் சர்கங்களைக் கொண்ட காவியமாக இயற்றியவர். இயற்பெயர் தாமோதரா. கி.பி. 634 காலத்திய இவரைப் பற்றிக் கல்வெட்டு ஒன்று கர்நாடகத்தின்

*தனது மூட்டையில் இருந்து சுவடிக் கற்றை ஒன்றை இறையாவிடம் எடுத்துத் தந்துவிட்டு, அந்த மூட்டையையே தலையணையாக வைத்தபடி உறங்கச் சென்றான். தாமோதராவிடம் இருந்து உடனேயே லேசான குறட்டையொலி எழுந்தது.*

*தலைவிதியே என்று தாமோதரா தன்னிடம் கொடுத்த ஓலைகளை வாசிக்கத் தொடங்கினான்.*

*'பாணபட்டர் இயற்றிய சண்டிகாசதகம்'* என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. தேவியின் பெருமை களைப் பேசும் அந்த நூலைப் படிக்கத் துவங்கியவன் அதில் ஆழ்ந்து போனான். உண்மையிலேயே மிகவும் அற்புதமாகவே பாடியிருந்தார், பாணபட்டர். மார்க்கண்டேய புராணம் விவரித்த மகிஷாசூரனை துர்க்கை வென்ற கதையின் கடைசி யுத்தத்தைப் பற்றி மட்டுமே பாடியிருந்தாலும், மிகச் சுவையாகவே அந்தப் போரினை வர்ணித்திருந்தார், பாணபட்டர்.*

*இறையா நூலைப் படித்து முடிப்பதற்கும் தாமோதரா உறக்கத்திலிருந்து கண்விழிப்பதற்கும் சரியாக இருந்தது.*

---

ஐஹோளே என்கிற பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஹர்ஷரின் ஆஸ்தான கவிராயர் பாணபட்டரின் நெருங்கிய நண்பர் பாரவி. பாரவியின் கொள்ளுப்பேரன்தான் நரசிம்மவர்ம பல்லவனின் ஆஸ்தான கவி தண்டி என்கிற தண்டமிஹ்ரன். நரசிம்மனின் அபிமானத்தைப் பெற்றவன்.

* ஆறாம் நூற்றாண்டில், ஹர்ஷரின் ஆஸ்தானப் புலவராகத் திகழ்ந்த பாணபட்டர் காதம்பரி, ஹர்ஷசரித்ரா போன்ற நூல்களை இயற்றியவர். சண்டிகாசதகம் என்கிற நூலை இயற்றினார். ஹர்ஷரின் குலதெய்வமான சண்டி மகா காளியின் ஆலயத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. புத்த மதத்தைத் தழுவிய பின்னரும் கூட, தனது குலதேவி சண்டி கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக அவளுக்கு விசேடப் பூஜை களைச் செய்தார். தற்போது உத்தரப் பிரதேசம் கனோஜ் நகரில் மாகாளி தேவியாக இன்னமும் ஆராதிக்கப்பட்டு வருகிறாள்.

இறையா சண்டிகாசாதகம் நூலைப் படித்து முடித்துப் பிரமிப்புடன் அமர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான், தாமோதரா.

"ஒன்று நீ சுவடிகளை நுனிப்புல் மேய்ந்திருக்க வேண்டும் அல்லது நான் கோழித் தூக்கம் தூங்கியிருக்க வேண்டும்." — தாமோதரா சிரித்தான்.

"இல்லை சுவாமி! உங்களது உறக்கமும் இந்த ஆல் போன்று ஆழமாக வேர்விட்டு, நிம்மதியும் உங்கள் முகத்தினில் நிழல்பந்தலாகப் பரவி, காற்றில் ஆடும் இலைகள் ஓசைப்படுத்துவது போன்று தங்களது குறட்டை ஒலியும் இனிமையாகக் கேட்டது. ஆனால் உங்கள் குறட்டை ஒலியையும் மீறி, இந்த அற்புத நூலில் ஆழ்ந்துவிட்டேன். யார் இயற்றிய நூல் இது?" — இறையா கேட்டான்.

"பலே! எனது கேள்விக்கு மிக அழகாக விடையளித்து விட்டாயே.. இது எனது நண்பன் பாணபட்டர் என்பவர் எழுதியது. ஹர்ஷவர்தனனிடம் ஆஸ்தான புலவராக இருக்கிறார். அவர்தான் தான் இயற்றிய இந்த நூலை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். அவரைச் சந்தித்து விட்டுத்தான் நான் இங்கே வருகிறேன். அண்மையில் தான் கனோஜ நகரில் ஹர்ஷனின் குலதேவியான சண்டி காளி ஆலயத்தில் அவனது கையாலேயே இந்த நூல் அரங்கேற்றப்பட்டது." — தாமோதரா கூறினார்.

"ஹர்ஷனா? அவன் புத்தமதத்தைத் தழுவப் போவதாக அல்லவா கூறுகிறார்கள்..?" — இறையா வியப்புடன் கேட்டான்.

"உண்மைதான். மார்க்கத்தை மாற்றப் போவதற்கு முன்பாக, தனது குலதேவிக்கு விசேட ஆராதனைகளைச் செய்து, அவளது முன்பாக இந்தச் சண்டிகாசதகத்தை அரங்கேற்றினான். உள்ளம் உருகப் பாணபட்டர் பாடியதை நானும் கேட்டேன். உயிர் நண்பனான என்னை மட்டும்தான் பாணபட்டர் அழைத்திருந்தார்.

*ஆஸ்தானப் புலவராக அவர் எழுதிய கடைசி நூல் இது."* *பெருமையுடன் கூறினார் தாமோதரா.*

*"ஏன்? ஆஸ்தானப் புலவர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டாரா?" இறையா கேட்க, தாமோதரா தலையசைத்து மறுத்தார்.*

*"இல்லை! அவரே விலகிக் கொள்கிறார். சனாதனத்தைப் பின்பற்றி வந்த ஹர்ஷவர்தனன்* புத்த மார்க்கத்தைத் தழுவியதை அவர் ஒப்புக் கொள்ள வில்லை. எனவே ஆஸ்தானப் புலவர் பதவியைவிட்டு விலகுகிறார். அவருக்கு ஹர்ஷனின் மீது மனவருத்தம்!"*

*"எதற்காக ஹர்ஷன் திடீர் என்று மார்க்கத்தை மாற்றுகிறான்?" — இறையா கேட்டான்.*

* King Harsha Vardhana, who reigned c. 606-647 CE in north India first from Sthanvishvara (Thanesar), and later Kannauj. Bâna's principal works include a biography of Harsha, the Harshacharita (Deeds of Harsha), [1] and one of the world's earliest novels, Kadambari. BâGa died before finishing the novel and it was completed by his son BhûcaGabhaþþa. Both these works are noted texts of Sanskrit literature.

அத்திமலைத்தேவன் முதல் பாகத்தில் மகத மவுரியர்களைப் பற்றியும், இரண்டாம் பாகத்தில் சமுத்ரகுப்தன் தலைமையிலான குப்தர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். குப்த சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து வடபுலம் பல்வேறு ராஜ்யங்களாகச் சிதறின. வர்தன வம்சம் உருவாகியது. அதன் தலைநகரம்தான் தானேஷ்வர். பிரபாகர வர்தனன் இதன் முதல் மன்னன். ராஜவர்தன், ஹர்ஷவர்தன் மற்றும் ராஜஸ்ரீ என்கிற செல்வங்கள் இவனுக்கு இருந்தனர். ராஜஸ்ரீயை மவுகாரி நாட்டின் மன்னன் கிரஹவர்மன் திருமணம் செய்து கொள்கிறான். அவனது எதிரியான மால்வ நாட்டு மன்னன் தேவகுப்தன் படை எடுத்து வந்து கிரஹவர்மனை கொன்று ராஜ்ஸ்ரீயை கடத்திச் சென்று சிறை வைக்கிறான். தனது தங்கையை மீட்க ராஜவர்தன் தேவகுப்தன் மீது படை எடுத்துச் செல்கிறான். தேவகுப்தனை கொன்று ராஜஸ்ரீயை மீட்டு வரும் வழியில், சசாங்கன் என்கிற கௌட தேசத்து மன்னனால் ராஜவர்தன் கொலை செய்யப்பட, ஹர்ஷன் தனது பதினாறாவது வயதில் மன்னனாகப் பதவி ஏற்கிறான். ஆதாரம் ஹர்ஷ சரித்திரம்- பாணபட்டர்.

"சண்டி காளியிடம் மிகவும் பக்தி பூண்டவன். அவளைப் பற்றிய சதகம் ஒன்றை எழுதித் தாரும் என்று கூறிவிட்டு, திடீரென்று புத்த மதத்தைத் தழுவப் போவதாக என்னிடம் கூறினான் என்று பாணபட்டர் கூட மிகவும் வருத்தப்பட்டார். நான் அவரை சமாதானப்படுத்தினேன். ஆனால் நூலை அரங்கேற்றம் செய்த ஹர்ஷனை பார்த்த போது பெரும் குற்றம் ஒன்றைச் செய்துவிட்டு ஒருவிதக் குற்ற உணர்வுடனேயே மார்க்கத்தை மாற்றுகிறான் என்பதைப் புரிந்து கொண்டேன். அவன் புத்த மதத்தைத் தழுவுவதற்குக் காரணமே, அவன் மிகப்பெரிய குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறான்." — தாமோதரா கூற, வியப்புடன் அவரைப் பார்த்தான் இறையா.

"எதனை வைத்து அங்ஙனம் அனுமானிக்கின்றீர்கள்?" — இறைய்ா கேட்டான்..

"ஒரு பெருங்குற்றத்தினைச் செய்து தனது தெய்வம் அக்குற்றத்தை மன்னிக்காது என்பதைப் புரிந்து கொள்பவர்கள்தான் தங்களது மார்க்கத்தை மாற்றிக் கொள்வார்கள். தாங்கள் ஏற்றுக் கொள்ளும் புதிய மார்க்கத்தில் அவர்கள் முன்பு செய்த கொடிய செயல்கள் எல்லாம் கழிக்கப்படுகின்றன என்பதால் தங்கள் பெருங் குற்றமும் கழிந்துவிடும் என்கிற நம்பிக்கையில்தான் மார்க்கத்தை மாற்றுகிறார்கள். சனாதன மார்க்கத்தில் கர்மா என்கிற கூரிய வாள் ஒருவரின் தலையின் மீது தொங்கிக் கொண்டே இருப்பதால்தான் அதைவிட்டு நழுவிச் செல்கிறார்கள். ஆனால் மார்க்கத்தை மாற்றுவதும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மா என்பதை உணர மறுக்கிறார்கள். ஹர்ஷன் நிச்சயம் பெரிய குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறான். அவன் முகமே அதனைக் காட்டிக் கொடுக்கிறது." — தாமோதராவின் குரலில் உறுதி கொப்பளித்தது.

"எத்தகைய குற்றம்?"

"கொலைபாதகம் புரிந்தவனின் கண்களில் தென்படும் உணர்வை அவனது கண்களிலும் கண்டேன். கொலை புரிந்தவர்கள் தாங்கள் கொலை செய்த மனிதருக்காக வருந்தமாட்டார்கள். தாங்கள் அபவாதத்தில் சிக்கி விட்டோமே என்றுதான் வருந்துவார்கள். அத்தகைய உணர்வினைத்தான் அவனது கண்களில் கண்டேன்." — தாமோதரா கூற, இறையா அவனை வினோதமாகப் பார்த்தான்.

"அப்படி என்ன குற்றத்தைப் புரிந்திருக்கக் கூடும்?" — இறையா கேட்டான்.

"நானும் பாணபட்டரை துருவித் துருவிக் கேட்டேன். அவருக்கு ஒன்றும் தெரியவில்லை." — தாமோதரா கூறினார்.

"அரசர்களாகத் திகழ்ந்தால் குற்றம் செய்வதைத் தவிர்க்க முடியாது அல்லவா?" — இறையா யோசனையுடன் கேட்க, சட்டென்று அவனது முகத்தைத் திரும்பிப் பார்த்தார் தாமோதரா. முதன்முறையாகத் தனது சிந்தையின் ஓட்டத்தை நிறுத்திவிட்டு, நீண்ட நேரம் தான் பேசிக் கொண்டிருக்கும் இந்த இளம்குமரன் யார் என்பது போன்று இறையாவை ஏற இறங்க நோட்டம்விட்டார்.

அவனையே நீண்ட நேரம் ஆராய்ந்த தாமோதரா, மெல்லிய குரலில் பதிலளித்தார்.

"ஆம்! அரசர்களாகத் திகழ்ந்தால் குற்றம் செய்வதிலிருந்து தப்ப முடியாது. நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை, வாதாபி இளவரசரே!" — தாமோதரா கூறிய பதிலால் திடுக்கிட்டுப் போனான், இறையா.

"நான் வாதாபி இளவரசன் என்று யார் கூறினார்கள்..?" — முணுமுணுத்தான் இறையா.

"உங்களது நடையுடை பாவனைகள், மற்றும் பேச்சுகளே தங்களை அடையாளப்படுத்திக் காட்டி விட்டன, இளவரசே! வாதாபி நகரின் செம்மண் தங்கள் நெற்றியில் திலகமாக ஒளிர்கின்றது. தானசூர கர்ணனைப் போன்று சூரியகுலத்தைச் சேர்ந்த உங்களின் நெற்றியில் சூரியன் திகழ்கிறான். உங்களது பாதம் சிவந்து தாமரை ரேகைகள் தென்படுகின்றன. முதன்முறையாக வனத்தில் நடப்பதால், பாதங்களில் காயங்கள் தெரிகின்றன. கவிதைகளை விரும்புகிறீர்கள். நான் விழித்தெழும் வரை பொறுமையுடன் காத்திருந்தீர். மன்னனாகத் திகழ்ந்தால், குற்றம் செய்வதைத் தவிர்க்க முடியாது என்று மன்னர்களுக்காகப் பரிந்து பேசுகின்றீர்! எனவே, வாதாபியில் தமையனின் மகனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து மன்னனாகத் தன்னையே அறிவித்துக் கொண்டிருக்கும், சர்வாதிகாரி மங்களேசனால் பாதிக்கப் பட்ட இளவரசர் இரண்டாம் புலிகேசி நீங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று யூகித்தேன். இளவரசே! பல அரசவைகளுக்குச் சென்று வருபவன். தானேஷ்வரிலும், கனோஜிலும், நாளந்தா* பல்கலைக் கழகத்திலும் தற்போது வாதாபியின் அரசியல்தான் பேசப்பட்டு வருகிறது." — தாமோதரா கூறினார்.

'புலவர்களுடன் நட்புக்கொள். பல அரசவைகளுக்குச் சென்று வருபவர்கள். அரசியல் நிலவரம் குறித்துப் பல தகவல்களைக் கூறுவார்கள்...' — சுமனஸா கூறியது இறையாவின் செவிகளில் ரீங்கரிக்க, தாமோதராவை நட்புடன் நோக்கினான்.

"தாமோதரா! தாங்களும் ஒரு கவிஞர்தானே. உங்களது படைப்புகளைத் தராமல் தங்களது நண்பர் பாணபட்டரின் படைப்பினைத் தந்து என்னைப்

---

* ஹர்ஷவர்தனின் ஆட்சியில் நாளந்தா பல்கலைக்கழகம் மிகவும் புகழ் பெற்றிருந்தது. வேதங்கள், ஆகமங்கள், தத்துவம், சிற்பக் கலை, கட்டடக் கலை போன்றவை போதிக்கப்பட்டன.

படிக்கச் சொன்னீர்களே. தங்களது படைப்புகளை எனக்கு ஏன் தரவில்லை?"

இறையாவை தாமோதரா புன்சிரிப்புடன் பார்த்தார்.

"பாணபட்டரின் சண்டிகாசதகத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர், இளவரசே?"

"அற்புதமான காவியம்." — இறையா சொன்னான்.

"அத்தகைய அற்புதமான காவியத்தை இயற்றியவர், ஹர்ஷாவின் அவையில் ஆஸ்தானப் புலவராகத் திகழ்பவர் எனது நெருங்கிய நண்பர் என்றால், எனக்குத் தனியே அறிமுகம் தேவையோ? எங்களது நட்பு எனது திறமையைக் கூறும் அல்லவா.. தாமோதரா என்கிற பெயர் எனது உண்மையான பெயர். எனது படைப்புகளை நான் பாரவி என்கிற பெயரில்தான் எழுதுகிறேன்."

தாமோதரா கூற, பாரவி என்கிற பெயரைக் கேட்டதும் அதிர்ந்தான் இறையா. பாரவியின் படைப்புகளை இவன் வாசித்திருக்கிறான். சுமனஸாவுக்குப் பிரியமான கவிஞன். பாரவியே இவனுக்கு உற்ற துணையாகக் கிடைத்து விட்டார் என்பதை அறிந்தால் மகிழ்ந்து போவாள் சுமனஸா.

"மன்னித்துவிடுங்கள் பாரவியே! நான் தங்களது படைப்புகளை விரும்பிப் படிப்பவன். அதில் தொனிக்கும் கனத்தைச் சிலாகித்துப் போற்றுவார் எனது வளர்ப்புத் தாய். நீங்கள் இயற்றிய அர்ஜுன காவியத்தைப் படித்துத்தான் எனது போர்க் குணத்தை வளர்த்துக் கொண்டேன். பாரவி என்கிற புகழ்பெற்ற பெயர் இருக்க, நீர் ஏன் தங்களைத் தாமோதரா என்று அறிமுகம் செய்து கொண்டீர்?"

"எனது திறமைகள் கொடுத்த பெயரைக் காட்டிலும், எனது தாய் தந்தையர் கொடுத்த அடையாளத்தில் நடமாடுவதையே விரும்புகிறேன். புலிகேசி என்கிற

பெயரை விட்டு இறையா என்கிற பெயரில் தாங்கள் நடமாடவில்லையா?" — தாமோதரா கேட்டார்.

"நீங்கள் என்னை நீ என்றே அழையுங்கள். ராஜ்ய லட்சுமிக்கு வித்யாலட்சுமி மூத்தவள். நீங்கள் என்னைப் புலிகேசி என்று அழைப்பதை எனது வளர்ப்புத் தாய் விரும்பமாட்டாள். அந்தப் பெயரை வைத்து அழைத்தால் எனக்குத் தீமை நடந்துவிடும் என்று நினைக்கிறாள்." — இறையா கூறினான்.

"இறையா என்றுதான் அழைக்கப்பட்டு வந்தாய். ஆனால் மங்களேசன் உனக்குத் தீமை செய்யவில்லையா? பெயரில் என்ன இருக்கிறது? நான் உன்னைப் புலிகேசி என்றே அழைக்கிறேன். வீரம் செறிந்த பெயர். உனக்குப் போராடும் குணத்தை அந்தப் பெயர்தான் தரும். இறையா என்கிற பெயர் சாத்வீகமாக உள்ளது." — தாமோதரா கூறினான்.

தனது கையில் இருந்த பாணபட்டரின் சண்டிகாசதகச் சுவடிகளின் முகப்புச் சுவடியை நோக்கினான்.

'வர்தன மன்னர் புருஷமேதி ஹர்ஷவர்தனரின் குலதேவி சண்டிமகாகாளியின் ஆலயத்தில், அவரது திருக்கரங்களால் சமர்ப்பிக்கப்பட்ட நூறு ஸ்லோகங்களைக் கொண்ட, ஆஸ்தான கவிராயர் பாணபட்டரால் இயற்றப்பட்ட ஸ்ரீசண்டிகா சதகம்!' — என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

"வியப்பாகத்தான் இருக்கிறது. சண்டி தேவியின் மீது சதகத்தை எழுதும்படி கட்டளையிட்ட மன்னன் அதை அரங்கேற்றிவிட்டுப் புத்த மதத்தைத் தழுவினான் என்பதைச் சற்றும் நம்ப முடியவில்லை." — இறையா கூறினான்.

"அதனால்தான் நான் கூறினேன். அவன் ஒரு பாதகத்தைச் செய்திருக்கிறான். அதனால் அவன் நெஞ்சம் அவனைக் குற்றம் சாட்ட, வேறு வழியின்றிப்

புத்த தருமத்தில் சேர்ந்து மன நிம்மதியைக் காண முயல்கிறான் போலும். மேலும் நாளந்தா பல்கலைக் கழகத்தில் ஒரு புரளி புறப்பட்டுள்ளது. ஹர்ஷனின் அண்ணன் ராஜவர்த்தனனைக் கொன்ற கவுடா அரசன் சசாங்கனும், ஹர்ஷவர்தனனும் ரகசிய நண்பர்கள் என்றும், இருவரும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கல்வி பயின்றவர்கள் என்றும் கூறுகிறார்கள்." — தாமோதரா கூறினார்.

"ஒருவேளை, ஹர்ஷனே சசாங்கனை வைத்து தனது அண்ணனைக் கொன்றுவிட்டு, ஒன்றும் தெரியாமல் நடிக்கின்றானோ? நீங்கள் அவனது கண்களில் கண்ட குற்ற உணர்ச்சிக்கு அந்தக் கொலைகூடக் காரணமாக இருக்கலாமோ?" — இறையா கேட்டான்.

"இருக்கலாம்! அரசியலில் எதுவும் நடக்கலாம். பதவி என்பது பாசம், பந்தம், ரத்தம் எதனையும் பார்க்காது. பாணபட்டர் கூடச் சொன்னார். சனாதனத் தர்மங்களை நியமங்களோடு கடைப்பிடிப்பவன். தீவிரச் சிவபக்தன் ஹர்ஷன். அப்படிப்பட்டவன் இந்த முடிவுக்கு எப்படி வந்தான் என்று என்னிடம் வருந்தினார். அஸ்வமேதம், வாஜ்பேயம், ராஜசூயம் என்று அனைத்து யாகங் களையும் செய்ய வேண்டும் என்கிற தீவிரத்தில் இருந்தானாம்." — தாமோதரா கூறினார்.

இறையாவின் பார்வை மீண்டும் அந்தச் சுவடிகளின் முகப்பினைக் கண்டது.

'வர்தன மன்னர் புருஷமேதி ஹர்ஷவர்த்தனரின் குலதேவி சண்டிமகாகாளியின் ஆலயத்தில் அவரது திருக் கரங்களால், சமர்ப்பிக்கப்பட்ட நூறு ஸ்லோகங்களைக் கொண்ட, ஆஸ்தான கவிராயர் பாணபட்டரால் இயற்றப்பட்ட ஸ்ரீசண்டிகா சதகம்.'

மீண்டும், முகப்பில் பதிக்கப்பட்டிருந்த அந்த வாசகத்தைப் படித்தான். இறையாவின் கண்களில் ஒருவித பரபரப்பு தோன்றியது. மீண்டும் அதை

வாசித்தவன், தாமோதராவை கேள்வியுடன் நோக்கினான்.

“புலவரே! இதென்ன! உங்கள் நண்பர் பாணபட்டர், சண்டிகா சதகத்தின் முகப்பில் ஹர்ஷரை ‘புருஷமேதி’ என்று கூறியுள்ளாரே? அஸ்வமேதி என்றால் எனக்குத் தெரியும். அஸ்வமேத யாகத்தைச் செய்தவர்களை அஸ்வமேதி என்பார்கள். புருஷமேதி என்றால்..?” — இறையா கேட்க, அவனை வினோதமாகப் பார்த்தார், தாமோதரா.

“எங்கே.. காட்டு?” என்றவர் சுவடியை வாங்கிப் பார்த்தார். அவரது கண்கள் விரிந்தன.

யோசனையுடன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டார். “ஹர்ஷன் எப்போது புருஷமேதியாக மாறினான்..?”

“புருஷமேதி என்றால் என்ன, தாமோதரரே?” — இறையா கேட்டான்.

“யாகங்களில் மிகவும் உயர்ந்தது அஸ்வமேத யாகம். எந்த ஒரு மன்னனும் அஸ்வமேத யாகத்தைச் செய்வதற்கு விருப்பம் கொண்டிருப்பான். ஆனாலும் அதைக் காட்டிலும் ஆற்றலைக் கொண்டது, புருஷமேத யாகம்.”

தாமோதராவின் குரலில் சற்றே நடுக்கம் தொனித்ததாகப் பட்டது இறையாவுக்கு.

“புருஷமேதி யாகத்தின் பலன் என்ன, புலவரே?”

“புருஷமேத யாகம் என்பது என்ன தெரியுமா..? அஸ்வமேத யாகத்தைச் செய்கிறேன் என்று சங்கல்பம் செய்து கொண்ட ஒரு மன்னனை நரபலி கொடுத்துச் செய்யப்படும் யாகம்தான் புருஷமேதம். அதனை ஹர்ஷன் எப்போது செய்தான் என்றுதான் யோசிக்கிறேன்.”

இறையாவின் பிடரியில் மயிர்க்கூச்சம் எடுத்தது. தாமோதராவை வெறித்துப் பார்த்தான்.

"சற்றே தெளிவாகக் கூறுங்கள். புருஷமேத யாகத்திற்கு எந்த ஒரு மன்னனையும் நரபலி கொடுக்கலாமா..?"

"இல்லை. அஸ்வமேத யாகத்தைச் செய்வதாகச் சங்கல்பத்தைச் செய்த அரசனை மட்டும்தான் நரபலி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்த பலனைப் பெற முடியும்..!"

முதலாம் புலிகேசி அஸ்வமேத யாகத்தைத் துவங்கிய போது ஒரு முதியவர் தன்னுடன் வந்தால் தேவ உடும்பரத்தைத் தருவதாகவும் சொன்னார். தான் ஆட்களை அனுப்புவதாகப் புலிகேசி கூற, மன்னரே வந்தால்தான் தான் தேவ உடும்பரத்தைத் தருவேன் என்று அந்த முதியவர் கூற, புலிகேசி அவருடன் புறப் பட்டுச் சென்றான். பிறகு அவர் திரும்பி வரவில்லை..!

தன்னை எதற்காக இரண்டாம் புலிகேசி என்று அழைக்கக் கூடாது என்று இவன் கேட்ட போது, சுமனஸா விவரித்த சம்பவம் அவனது நினைவுக்கு வந்தது. ஒருவேளை, இவனது பாட்டனை அழைத்துச் சென்று நரபலி கொடுத்தது, ஹர்ஷவர்தனன்தானா?

உறைந்து போய் அமர்ந்திருந்தான், இறையா. தன்னுடன் கலகலவென்று பேசி வந்த இறையா திடீர் என்று மௌனமாகிவிட்டதைக் கண்ட தாமோதரா அவனை வியப்புடன் நோக்கினான்.

"ஏன் இறையா திடீரென்று மௌனமாகிவிட்டாய்?" — தாமோதரா கேட்க, அவரை யோசனையுடன் பார்த்தான்.

"புலவரே! நீங்கள் ஹர்ஷனின் கண்களில் பார்த்திருந்த குற்ற உணர்ச்சிக்குக் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டேன். அவன் ஒரு மன்னரைக் கொன்று புருஷமேத

யாகத்தைச் செய்திருக்கிறான். அந்தக் குற்றத்தை மறைக்கத்தான் அவன் மார்க்கத்தை மாற்றியிருக்கிறான்" என்றதும் பதற்றத்துடன் அவனைப் பார்த்தார், தாமோதரா.

"மன்னரைக் கொன்றது இருக்கட்டும். யார் அந்த மன்னன் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?" — தாமோதரா கேட்டார்.

"கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. நரபலி கொடுக்கப்பட்ட மன்னர் வேறு யாரும் அல்ல? எனது பாட்டனார் புலிகேசி. அவர் அஸ்வமேத யாகம் செய்து கொண்டிருந்த போது, ஒரு முதியவர் அங்கே தோன்றி, அஸ்வமேதம் செய்வதற்குத் தேவ உடும்பர மரத்தைக் கூறுவதாகச் சொல்லி அழைத்துச் சென்றிருக்கிறான். அதன் பிறகு எனது பாட்டனார் திரும்பி வரவேயில்லை" என்றதும் திடுக்கிட்டுப் போன தாமோதரா அந்தச் சுவடியை, இறையாவிடமிருந்து வாங்கி, மீண்டும் அதன் முகப்பினை ஒருதரம் வாசித்தார்.

"இந்தச் சிந்தனை எனக்கு ஏன் ஏற்படவில்லை. உன்னைப் போன்று நானும் ஒரே இரவில் இந்தச் சுவடிகளை வாசித்தேன். முகப்பில் உள்ள இந்தக் குறிப்பை நான் வாசிக்கத் தவறிவிட்டேன். நீ கூறியபடி நடப்பதற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன. முதலாம் புலிகேசி மன்னன் துறவியாகப் போய்விட்டான் என்றுதானே எங்கள் நாடுகளுக்குத் தகவல் வந்தது. அவரது மகன் கீர்த்திவர்மன் பதவி ஏற்றுக் கொண்டதாகக் கூறினார்கள்." — தாமோதரா அதிர்ந்தான்.

"எனது பாட்டனார் வராததால், எனது தந்தை கீர்த்திவர்மனை மன்னராகப் பதவி ஏற்கச் செய்தனர். இப்போது புரிகிறது. ஹர்ஷன்தான் எனது பாட்டனைக் கடத்திச் சென்று நரபலி கொடுத்திருக்கக் கூடும்." குரோதத்துடன் கூறினான் இறையா.

"நல்லதாகப் போனது. ஒரு காரணத்தோடுதான் உன்னையும் என்னையும் சந்திக்க வைத்திருக்கிறான், இறைவன். கவலை கொள்ளாதே. இனி நாம் இருவரும் சேர்ந்து பயணிப்போம். ஒரு புலவனாகப்பட்டவன், நாடோடியாக, ஊரோடியாக இருந்தால் மட்டும் போதாது. தனது சீரிய சிந்தனைகளின் மூலம் மன்னர்களிடத்திலும், நாட்டின் மக்களிடையேயும் தரும சிந்தனையைப் பரப்ப வேண்டும். நீ கவலைப்படாதே, இறையா! எனது திறமைகளுக்குத் தகுந்த தீனி இல்லையே என்று நான் நினைத்திருந்தேன். நீ எனக்கு ஒரு சவாலைத் தந்திருக்கிறாய். மங்களேசனைப் பதவியில் இருந்து நீக்கி, அவனிடத்தில் உன்னை அமர வைக்கப் போகிறேன். இதை நிச்சயம் நடத்திக் காட்டுவேன்," என்றவன் எழுந்து இந்திராவதி ஆற்றை நோக்கி நடந்தான். முகம் கழுவி, கைகால்களைச் சுத்தம் செய்து, கரையேறியவன், மீண்டும் இறையாவை நோக்கி நடந்தான்.

"இறையா! எங்கே போகிறாய்?" — தாமோதரா கேட்டான்.

"நான் அத்தியூர் என்கிற காஞ்சிக்குப் போகிறேன்!" — இறையா கூறினான்.

"பலே! அத்திவரதனை தரிசிக்கப் போகிறாயா? நல்ல தருணத்தில்தான் செல்கிறாய். அவன் அரசர்களுக்கு அரசன். தேவராஜன் என்று அவனை அழைப்பார்கள். போரைத் தொடங்குவதற்கு முன்பாகவும், அரசாட்சி அமைப்பதற்கு முன்பாகவும் அத்திவரதனை தரிசித்தால் பிறகு வெற்றிதான். நானும் காஞ்சிக்குத்தான் போகிறேன். நாம் இருவரும் அத்தியூருக்குச் செல்வோம். பிறகு மங்களேசனுக்கு எதிராகப் படைகளைத் திரட்டுவோம்." — தாமோதரா கூற, நெகிழ்ச்சியுடன் அவரது கரத்தைப் பற்றினான், புலிகேசி என்கிற இறையா.

"அடுத்த பிறந்த தினத்தில் நான் நிச்சயம் வாதாபி மன்னனாகத் திகழ்வேன்!" தனக்குள் சூளுரைத்தான் இறையா. அவர்கள் இருவரும் மீண்டும் நடைப் பயணத்தைத் துவக்கி, தெற்கு திசையில் வானவ நகரத்தை நோக்கி நடந்தனர். தாமோதராவின் அருகாமையில் இறையா புது நம்பிக்கையைக் கொண்டிருந்தான்.

## 20. புதிர்விடுத்த கதிர்!

**தி**ருவதிகை* —

*மகேந்திரன் தனது புரவியை வீராடேஸ்வரரின் ஆலயத்தின் எதிரே இருந்த அப்பரின் மடத்தின் வாயிலில் கட்டிவிட்டு, உள்ளே நுழைந்தான். உமையாள் கேள்வன் என்கிற சீடன் மகேந்திரனை வரவேற்று அழைத்துச் செல்ல, எதிரே ஒரு சீடன் அவசரமாக எதிரே வந்தான்.*

*"உமையாள் கேள்வரே! இன்றுதானே நமது மடத்தில் புதிரெடுத்தல்** வைபவத்தை நடத்த உள்ளோம்?" —*

---

* திருவதிகை வீராடேஸ்வரன் கோயில் பண்ருட்டியின் கிழக்கே இரண்டு கி.மீ. தொலைவில் உள்ளது. திருபுரசுந்தரி சமேத வீராடேச்வரர் தேவாரத்தில் போற்றப்பட்டுள்ளார். அசுரர்களை ஒழிக்கத் திருமால் தனது சாரங்கவில்லை கொடுத்து உதவியதாகவும், அதனால் சரநாராயணப் பெருமாள் என்கிற பெயரில் அவரும் அருகே கோயில் கொண்டுள்ளார்.

** உழவர்கள் தம் வயலில் விளைந்த நெல்லை முதன் முதலில் சமைத்து உண்ணும் சடங்கு புதிர் எடுத்தல் எனப்படும். தைப்பூச நாளில் சில இடங்களில் புதிர் எடுத்தல் நடைமுறையில் உள்ள போதிலும் சில இடங்களில் வயல் அறுவடையைத் தொடர்ந்து வரும் நாள் புதிர் எடுத்தல் நடைபெறும். புதிர் சமையல் இறைவனுக்குப் படைக்கப்பட்டு ஏழைகளுக்கு உணவிட்டபின் உண்ணும் வழக்கம் காணப்படுகின்றது. இந்நிகழ்வுக்கு அயலவர்களையும் உறவினர்களையும் அழைப்பர். குத்தகைக்கு வயல் எடுத்து விளைச்சல் செய்பவர்கள் அறுவடையின் பின் நிலஉடைமையாளருக்கு புதிர் நெல் வழங்குவர். இது தவிர

அந்தச் சீடன் கேட்டாலும், அவனது கண்கள் மகேந்திரனையே நோட்டம்விட்டுக் கொண்டிருந்தது.

“இதென்ன கேள்வி. சிவகதிரா? நேற்றுத்தான் உனக்கு நான் மீண்டும் மீண்டும் கூறினேனே. நீயும் நெல் மூட்டைகளை மடத்தின் உப்பரிகைக்கு எடுத்துச் சென்றாயே? அதற்குள் மறந்துவிட்டாயா?” — அப்பரின் அறையை நோக்கி நடந்தபடி உமையாள் கேள்வன் சொல்ல, மகேந்திரன் மீது பதிந்திருந்த தனது கண்களை நீக்காமல் பதிலளித்தான், சிவகதிர்.

“தைப்பூசம் அன்றுதான் நாம் புதிர் எடுப்போம் என்றார்கள். நாளை முற்பகல்வரை பூச நட்சத்திரம்தான் நிலவுகிறது. எனவேதான் இன்றா நாளையா என்று கேட்டேன்?” என்று சமாளித்தபடி தன்னைக் கடந்து சென்ற இருவரையும் உறுத்துப் பார்த்தான், சிவகதிரான்.

அப்பரைப் பணிந்து எழுந்த மகேந்திரன், உமையாள் கேள்வன் அகலுவதற்காகக் காத்திருந்தான். அறையில் நிலவிய மௌனம் தன்னை அப்புறப்படுத்துவதற்காக என்பதை உணர்ந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினான், உமையாள் கேள்வன்.

“சுவாமி! ரணதிலகன் உங்கள் செவியில் கூறிய அந்தப் புதிரை விடுவித்துவிட்டோம். காஞ்சி சித்திரகுப்தனின் ஆலயத்தில் சமுத்ரகுப்தனைப் பற்றிய கல்வெட்டு ஒன்று அந்தப் புதிரினை விடுவித்தது.”

“பலே! புதிர் எடுக்கும் நாளில் புதிரினை விடுவித்தாயோ..? என்ன சொல்கிறது அந்தக் கல்வெட்டு?” — அப்பர் கேட்டார்.

---

நெல் விளைச்சல் செய்யாத உறவினர்களுக்கும் புதிர்நெல் வழங்கும் வழக்கம் காணப்படுகின்றது. தமிழர்கள் வாழும் கிராமங்கள் சிலவற்றில் உழவு செய்யாதவர்களும் மரபுப்படி தம் வீட்டில் புதிர் எடுக்கும் வரை புது நெல்லை உண்ணாத வழக்கமும் உண்டு.

"சமுத்ரகுப்தன் கைப்பற்றிய நகரங்களில் கடகக் குகைகள் என்று ஒரு பகுதி குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் நூற்றுப் பதினேழு சிறு குகைகளும், பன்னிரண்டு பெருங்குகைகளும் உள்ளன. நீங்கள் குறிப்பிடும், நூற்றுப் பதினேழு கடகங்களும், பன்னிரண்டு யானைகளும் இந்தக் குகைகளாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்."

"உண்மை. கடக குகையில் தருமசேனராக உரகச் சூத்திரத்தைப் படித்துக் கொண்டு இருந்தேன். அப்போது 'ஹா' என்கிற அலறலுடன் ரணதிலகன் எனது குகைக்கு ஓடி வந்தான். என்ன ஏது என்று அவனை விசாரிப் பதற்குள் 'நண்டுகள், யானைகள்' இரகசியத்தை எனது செவிகளில் பாய்ச்சிவிட்டு இறந்து போனான். அந்த பொக்கிஷம் என்னிடம் இருப்பதாக நினைக்கும் மகாபுலி சந்தேகத்துடன் என்னைச் சிறைப்படுத்தினான். ஈசன்தான் சூலை நோய் தந்து அவனது சூழ்ச்சியையும், சமணத் திட்டங்களையும் முறியடித்தான்." — அப்பர் கூறினார்.

"இனி பட்டத்து அரசியைக் கேட்டால் பொக்கிஷத் திற்கான வழியைக் கூறுவார் என்று ரணதிலகன் சொன்னான் அல்லவா? அநேகமாக அத்திவரதனின் பிரதிமையைக் கடத்திய களப்பிரர்கள் அதனைக் கடகக் குகையில் ஒளித்திருக்கக் கூடும்." மகேந்திரன் கூறினான்.

"அதற்கான வாய்ப்பு இல்லை என்று சொல்ல மாட்டேன். இருக்கக்கூடும்! இதோ நாம் இருக்கும் திருவதிகை திருத்தலம் சைவ — வைணவ ஒற்றுமைக்கு ஒரு உதாரணம். திருபுரம் எரிக்கப் புறப்பட்ட வீராடேஸ்வரனுக்கு இங்கிருக்கும் சரநாராயணன்* தனது சாரங்கத்தைத் தந்து உதவினான். அதற்குப் பிரதியுபகாரம்

* ஹேமாம்புஜவல்லி சமேத சரநாராயணப் பெருமாள் ஆலயம் திருவதிகையில் உள்ளது. பண்ருட்டி, புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் பகுதிகளில் இன்றும் மிகவும் பிரபலமாகத் திகழ்கிறது.

செய்ய நினைக்கிறான், வீராடேச்வரன். தேவ உடும்பர அத்தியானைக் கண்டுபிடித்து மீண்டும் அவனை அத்திமலையில் ஸ்தாபிதம் செய். சிம்மவர்மனின் காலத்தில் பறிபோன அத்திமலையானின் பிரதிமை உனது காலத்தில் கிடைத்த பெருமை உனக்குக் கிட்டட்டும். அத்திமலையான், அத்தியூருக்கு மட்டுமல்ல, பல்லவத்திற்கு, தொண்டை நாட்டிற்கு, பரதக் கண்டத்திற்கு, ஏன் உலகிற்கே வளத்தை வாரி வழங்கும் ஆற்றலைப் படைத்தவன். அவனை மீட்பது நமது கடமை. பௌத்தர்களும், சமணர்களும் கூட அதனை அடையத் துடிக்கிறார்கள். காரணம், பௌத்தர்களுக்கும், தேவ உடும்பரம் விசேடமானது. நமது சனாதனத்தின் பொக்கிஷத்தை மீட்டு எடுத்தால், வைணவர்கள், சைவர்கள் மட்டுமல்லாமல் தொண்டை மண்டலமே உன்னைப் போற்றும்." — அப்பர் கூறினார்.

"உடனே காரியத்தில் இறங்குகிறேன், சுவாமி!" — மகேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போதே, நாசியில் ஒருவித நறுமணத்தை உணர்ந்தான்.

உமையாள் கேள்வன் அறையைவிட்டு நீங்கும் போது கதவை மூடி இருந்தான். கதவிடுக்கின் வழியாக நறுமணப் புகை அறைக்குள் வந்து பரவுவதைக் கவனித்தான் மகேந்திரன்.

"அது என்ன புகை?" — மகேந்திரன் கேட்டதும், அப்பர் கதவுப் பக்கமாகப் பார்த்தார்.

"அது வேறொன்றுமில்லை மகேந்திரா! புதிரெடுத்தல் வைபவத்தைத் துவக்குவதற்கு முன்பாக, அகிலும், அருகத்தையும் பொடிசெய்து தணலில் தூபம் காட்டுகிறார்கள். அந்த நறுமணம்தான் அறையில் பரவுகிறது. இன்று புதிர் எடுத்து, முதல் நெல்லில் ஈசனுக்கு உணவு சமைத்து, அவனுக்குப் படைத்து, பிறகு மக்களுக்கு அன்னதானம் செய்வோம்." — அப்பர் கூறினார்.

மீண்டும் கதவை யோசனையுடன் நோக்கினான் மகேந்திரன். ஏனோ அவனது மனக்கண் முன்பாக, சற்று முன் இவனை வெறித்து நோக்கிய சிவகதிரான் என்கிற சீடனின் கண்கள் தோன்றி மறைந்தன.

அவன் திடீரென்று அமைதியாகிவிட்டதைக் கண்ட அப்பர், அவன் செவியோரம் குனிந்தார்.

"நீ எச்சரிக்கை உணர்வு கொள்வதில் நியாயம் இருக்கிறது. நானும் என்னைச் சுற்றிப் பல கண்களும், செவிகளும், மிதந்து கொண்டிருப்பதைக் காண்கிறேன்.. என்னுடன் வா. உனக்கு ஒன்று காட்ட வேண்டும்" என்றவர், அறையின் கதவைத் திறந்து கொண்டு மடத்தின் உப்பரிகையை நோக்கி நடந்தார்.

அவரைப் பின்தொடர்ந்து நடந்த மகேந்திரன் தனது பார்வையைச் சுழலவிட்டான். ஒரு பக்கமாக, மடத்தின் கீழ்ப்பகுதிகளில் தணல் கரண்டியை ஆட்டியபடி, அகில் மற்றும் அருகம் பொடியைத் தூவி, தூபம் காட்டிக் கொண்டிருந்தான், சிவகதிரான். சற்றுமுன்பாக அவன்தான் மூடியிருந்த அப்பரின் அறைக் கதவின் வெளியில் நின்று, இவர்களது உரையாடலைக் கவனித்திருக்க வேண்டும். புதிர் எடுக்கும் தினத்தன்று, ரணதிலகனின் புதிருக்கான விடையை அறிய முயற்சித் திருக்கிறான். இவன் சீடனல்ல. பலிதானாவினால் அனுப்பப்பட்ட அடியாள். மகேந்திரன் யூகித்துவிட்டான்.

உப்பரிகைக்குச் சென்ற போது உச்சி வெயில் கொளுத்திக் கொண்டிருந்தாலும், கெடில நதியின் குளுமையான காற்று அவர்கள் மீது பன்னீர் தெளிப்பதைப் போன்று ஈரத்தைத் தூவியபடி வீசியது. உப்பரிகை கைப்பிடி சுவரின் அருகே சென்று தனது கண்களுக்கு வலது கையால் பந்தல் இட்டபடி, மேற்கே நோக்கினார்.

சற்றுத் தொலைவில் இருந்த சமணப் பசடியை* சுட்டிக்காட்டினார்.

“அதோ நிற்கிறதே நமது மடத்தை வேவுபார்க்கப் பலிதானா என்கிற மகாபலி எழுப்பிய சமணப் பசடி. அங்கிருந்து எனது நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறான். களப்பிரர்கள் பதுக்கியுள்ள பொக்கிஷங்களை நான் அபகரித்துவிடுவேன் என்கிற அச்சத்தில், இரவும் பகலுமாக என்னைப் பின்தொடர ஆட்களை நியமித்திருக்கிறான். அங்கிருந்து அவன் வேவுபார்ப்பது தொடர்கிறது. சமயங்களில் அர்ப்பணன்சேரியில் இருந்து இங்கே வந்து தங்குகிறான், பலிதானா.” — அப்பர் கூறியதும், அவருக்கு ஆறுதல் கூறினான் மகேந்திரன்.

“கவலைப்படாதீர்கள் சுவாமி! அந்தப் பசடியில் உள்ளவர்களால் தங்களுக்கு இனி பிரச்னைகள் உருவாகாது” என்று வாக்களித்தான் மகேந்திரன்.

“அவர்கள் கையில் நமது சனாதனத்தின் பொக்கிஷங்கள் சிக்கக் கூடாது. தங்களுக்கு என்று ஆகமங்களும், நியமங்களும், கோட்பாடுகளும் இல்லாத மதவாதிகள் நமது மார்க்கத்தின் நியமங்களைத் தங்களுடையதாகக் காட்டி மக்களைக் குழப்பி, அவர்களைத் தங்கள் மார்க்கத்தில் இணைக்கப் பார்க்கின்றனர். இந்த உலகத்தை மட்டுமல்லாமல், பிரபஞ்சத்தையே அளந்தது நமது வேதாகமங்கள். எனவே, நமது சனாதனம் நிலைக்க வேண்டுமென்றால், நம்மிடம் உள்ள பொக்கிஷங்களின் அருமையை நமது மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். பல்லவ மன்னனான உன்னால்தான் இது முடியும்!” — அப்பர் கூறினார்.

* திருவதிகை ஆலயத்தின் அருகே பலிதானா எழுப்பியிருந்த சமணப் பசடியை இடித்துத் தள்ளினான், மகேந்திர பல்லவன். எனவே, அப்பர் அவனைக் குணவரேஸ்வரன் என்று அழைத்தார். ஆலயச் சரித்திரம் இதனை ஊர்ஜிதம் செய்கிறது.

அவர் பேசிக் கொண்டிருந்த போதே, மீண்டும் தூபத்தின் நறுமணத்தை உணர்ந்தான், மகேந்திரன். வியப்புடன் திரும்பிப் பார்க்க, சிவகதிரான்தான் உப்பரிகையில் உலர்த்தப்பட்டிருந்த புதிர்நெல்லுக்குத் தீபத் தூபங்களைக் காட்டிக் கொண்டிருந்தான். புதிரெடுக்க அலையும் அவன் தூபத்துடன் எதற்குத் தீபத்தையும் சேர்த்துக் காட்டுகிறான்..? ஏதாவது சங்கேத மொழியா? மகேந்திரன் சடாரென்று திரும்பி, தொலைவில் தெரிந்த அந்தச் சமணப் பசடியை நோக்க, அங்கே சாளரம் அருகே சில அசைவுகளைக் கண்டான்.

சந்தேகமேயில்லை..! இவன் மடத்தில் சீடனாக இருந்தபடி, பலிதானாவுக்கு உளவு பார்க்கின்றான்.

அத்துடன் தங்களது உரையாடலுக்கு முற்றுப் புள்ளியை வைக்க எண்ணியவன், அப்பரை மீண்டும் பணிந்தான்.

"நிற்க நாழியில்லை. நான் காஞ்சிக்குச் சென்று, உடனே கடக குகைகளுக்குப் புறப்பட வேண்டும். என்னை ஆசி கூறி அனுப்புங்கள்.." மகேந்திரன் வேண்ட, அவனுக்கு ஆசிகளை வழங்கினார் அப்பர்.

சரநாராயணப் பெருமாள் ஆலயத்தின் அருகில் இருந்த மகிழ மரம் ஒன்றின் பின்பாக மறைந்திருந்தான் மகேந்திரன். இருள் படர்ந்துவிட்டது. ஆலயக் கோபுரத்தின் உச்சியில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீபக் கப்பரையின் மங்கிய ஒளி மட்டுமே, அவனது கண்களுக்கு வெளிச்சத்தைத் தந்து கொண்டிருந்தது. கப்பரையைப் பார்ப்பதும், மடத்தின் வாயிலைப் பார்ப்பதுமாக இருந்தான், மகேந்திரன். அவன் யூகித்தது போலவே, நடுநிசியில் அப்பரின் மடத்தைவிட்டு வெளியே வந்த சிவகதிரான் தொலைவில் நின்ற சமணப் பசடியை நோக்கி நடைபோடத் துவங்கினான்.

அவன் பசடியைச் சேர்ந்த உளவாளி என்பது மகேந்திரனுக்கு நன்றாகவே புலப்பட்டது. இருப்பினும்,

எந்த முடிவுக்கும் வரவில்லை அவன். பதுங்கிச் சென்றபடி பசடியை நோக்கி நடந்தவனை இரகசியமாகப் பின்தொடர்ந்தான்.

சிவகதிரான் பசடியினுள் கால் வைத்த சமயம், தனது வாளினை உருவிக் கொண்டு அவனது கதையை முடிக்கும் எண்ணத்துடன் அவனை நோக்கி நடந்தான். பிறகு சற்று யோசித்தவன், மீண்டும் வந்த வழியே நடந்தான்.

ஓடும் மீன் ஓடட்டும். உறுமீன் நிச்சயம் வந்து இவனிடம் சிக்கும். இவனது ஆசானுக்குச் சிக்கல்களை உண்டாக்கிக் கொண்டிருக்கும் பலிதானாதான் இவனது இலக்கு. அவன் நிச்சயம் பொக்கிஷ விவரங்களைத் தேடி கடக குகைக்கு வருவான். அங்கே அவனது கதையை முடிப்போம் என்கிற தீர்மானத்துடன் மகேந்திரன் தனது புரவியை நோக்கி நடந்தான்.

# 21. அந்தியில் வந்த அவந்தி

இந்திராவதி காட்டில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தார்கள் இறையாவும் தாமோதராவும். காட்டின் மேற்குப் பகுதியில் இருந்த வாதாபியில் இருந்து வந்திருந்த இறையாவும், வடக்குப் பாதை வழியாகக் கனோஜ் நகரில் இருந்து வந்திருந்த தாமோதராவும் இப்போது மிகவும் நெருங்கியிருந்தனர். மங்களேசனை வீழ்த்துவதற்குத் தாமோதரா மிகவும் தேவைப்படுவான் என்பதை உணர்ந்து கொண்டான், இறையா.

அந்திவேளை. சூரியன் தனது கிரணங்களின் வீரியத்தைச் சுருட்டி மூட்டையாகக் கட்டிக் கொண்டு மேற்கில் இறங்கிச் செல்வதற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கி இருந்தான். இறையாவும், தாமோதராவும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போது, தொலைவில் குதிரைகளின் குளம்பொலி கேட்க, இருவரும் திகைத்து வடக்கு திசையை நோக்கினார்கள்.

“குழாமாகக் குதிரையில் வருகின்றனர் என்றால், வேட்டையாடும் மன்னர் படையாக இருக்கலாம்; இல்லையேல் கொள்ளையர்களாக இருக்கலாம். நாம் எதற்கும் பதுங்கிக் கொள்வது நல்லது.” — தாமோதரா கூற, இருவரும் ஒரு அடர்ந்த மரத்தின் பின்பாகச் சென்று நின்று கொண்டார்கள். அருகில் இருந்த செடிகளைப் பற்றித் தங்கள் புறமாக இழுத்து, இலைகளை முகமூடியாகப் பயன்படுத்தி, கண்களால் மட்டும் பாதையை நோட்டம்விட்டனர்.

இருபது குதிரைகளில் ஒரு மன்னரின் படை இவர்கள் பதுங்கியிருந்த பகுதியைக் கடந்தது. இலைகளின் ஊடே

நோட்டம்விட்டுக் கொண்டிருந்த இறையாவின் கண்கள் அந்தக் குதிரை வீரர்களின் நடுவே பயணம் செய்து கொண்டிருந்த இருவரின் மீது பதிந்தது. அவனது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

குதிரையின் மையத்தில் இருந்த புள்ளிகளுடன் காணப்பட்ட வெண்குதிரையில் மன்னன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவனது அருகில் கருமை வண்ணக் குதிரையில் ஒரு குமரி அமர்ந்திருந்தாள். அவளைக் கண்டதும் இறையாவுக்கு அதுவரையில் தோன்றியிராத ஒரு உணர்வு. சுமனஸாவின் வளர்ப்பினால் இதுவரை பெண்களைக் காணும் போது அவர்களது அழகையும் நளினத்தையும் ரசிக்கும் திறன் இல்லாதிருந்தான். ஆணென்ன! பெண்ணென்ன! அனைத்துமே இறைவனுக்கு உரித்தான ஆத்மாக்கள் என்றுதான் சுமனஸா அவனுக்குப் போதனை செய்திருந்தாள். ஆனால் இந்த இளங்குமரி, ஒரு பெண்ணின் சிறப்பு அவளது ஆத்மாவில் அல்ல, தேகத்தில்தான் உள்ளது என்பதை அவனுக்கு மெய்ப்பிக்கும் வண்ணமாகக் காட்சி அளித்தாள், அவள் நிச்சயம் அந்த மன்னனின் மகளாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் பகட்டான ஆடைகளோ, விலைமதிப்பில்லாத ஆபரணங்களோ அணிந்திருக்கவில்லை. தனது கூந்தலைத் தோள்களின் இருபுறமும் வழியவிட்டு, நுனி முடிகற்றைகளைப் பிணைத்து சிரசின் உச்சியில் சிறு பந்தாகச் சுருட்டி வைத்திருந்தாள். அதற்கு உறுதி தரும் விதமாக ஒரு ஸ்வர்ண ஊசியினைச் சொருகியிருந்தாள்.

அதனால் துகில் மறைக்காத முழுநிலவாக அந்தக் குமரியின் முகம் பிரகாசித்தது. உளியினைக் கொண்டு செதுக்கி இருந்ததைப் போன்று செவிகள், நாசி, உதடுகள் எல்லாமே முகத்தில் உள்ளடக்கி இருந்தன. குறுகிய கழுத்தும், குவிந்த தோள்களுமாய், பேரழகின் மொத்த உருவாய்த் திகழ்ந்தாள். இதழ்களின் நுனியில் அகந்தை சிரிப்பு ஒன்று மிளிர்ந்து கொண்டிருந்தது. கையில்

வில்லேந்தி இருக்க, முதுகில் அம்புகளைத் தாங்கிய சம்பூடம் ஒன்றைப் பிணைத்திருந்தாள். அந்த மன்னன் கம்பீரமாகக் காணப்பட்டாலும், மகளின் பேரழகிற்கு முன்பாகச் சிறுத்துப் போய் இருந்தான்.

"ம்ம்! விரைந்து செல்லுங்கள்.. மழை வரும் போல உள்ளது. அதற்குள் நாம் முகாமிட வேண்டும்.." — அந்தப் பெண் குதிரை வீரர்களைப் பார்த்துக் குரல் கொடுக்க, மகரயாழினை மீட்டியது போன்ற அவளது குரல் இறையாவின் நாடி நரம்புகளில் எல்லாம் எதிரொலித்து ஒருவித சுகமான உணர்வினைத் தோற்றுவித்தது. இமைகொட்டாமல் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருக்க, அருகில் நின்றிருந்த தாமோதரா இறையாவின் செவிகளில் கிசுகிசுத்தான்.

அவன் சைந்தவ* மன்னன் தந்திதுர்கன், உடன் செல்வது அவனது பெண் அவந்திகா! சகலகலாவல்லி..! அவள் தெரிந்து கொள்ளாத கலைகளே இல்லை." — தாமோதரா கூறினான்.

"பல்கலைகளை அறிந்தவளா? அதுதான் பல்கலன் அணியவில்லை! மன்மதன்தான் வில்லேந்துவான். இங்கே ரதி வில்லேந்தி இருக்கிறாளே! அவள் வில்லேந்தும் விதமே போர்க் கலைகளை அறிந்தவள் என்பதைத் தெரிவிக்கிறது." இறையா கூறினான்.

"ரதி சொரூபத்தைக் கொண்டவள். திருமகளாக வளங்களை மக்களுக்கு வாரி வழங்குபவள். கலைமகளைப் போன்று மேதாவிலாசம் மிக்கவள். மலைமகளைப் போன்று வீரமானவள். இவளை மணப்பவன் இந்திராணியை அடைந்த இந்திரனாக

* சைந்தவ மன்னன் தந்திதுர்கன் ஹர்ஷவர்தனின் தோழன். சைந்தவ நாட்டை சைந்தவ செப்பேடுகள் பூதம்பிலிகா, பூமிலிகா, பூம்பிலி என்று குறிப்பிடுகின்றன. இன்றைய குஜராத்தின் போர்பந்தரின் அருகே கூம்லி என்று தற்போது அழைக்கப்பட்டு வருகிறது. தந்திதுர்கனின் மகள் அவந்திகா பேரழகி.

ராஜ்ய பரிபாலனம் செய்வான்!" தாமோதரா கூற, அவள் போன திக்கையே வெறித்துப் பார்த்தான், இறையா.

"ம்ம்! எந்த மன்னனுக்கு அவளை அடையும் பாக்கியம் இருக்கிறதோ?" — இறையா பிரம்மிப்புடன் கூறினான்.

தாமோதரா சிரித்தான். "வாதாபியின் வருங்கால மன்னன் இரண்டாம் புலிகேசி என்கிற இறையாவுக்கு தான் அவளை மனைவியாக அடையும் பாக்கியம் கிட்டப் போகிறது!" — தாமோதரா கூற, அவனை அதிர்வுடன் நோக்கினான், இறையா.

"நான் மன்னனாகத் திகழ்வேனா என்பதே இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அப்படி இருக்கையில் இந்தப் பேரழகி இளவரசியை நான் எப்படி மணந்து கொள்ளப் போகிறேன்?" — இறையா கேட்டான்.

"அவர்களைப் பற்றிப் பெரிதாக நினைத்துவிடாதே.. தந்திதுர்கன் ஒருகாலத்தில் உனது வாதாபியின் கீழ் இருந்த சிற்றரசர்களில் ஒருவன். வாதாபிக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தான். கனோஜ் ஹர்ஷரின் அதிகாரத்தின் கீழ் வந்ததும், இவனும் ஹர்ஷருடன் நெருங்கிவிட்டான். ஹர்ஷரின் ஆதரவாளராக மாறிய தந்திதுர்கன் உங்கள் நாட்டிற்குக் கப்பம் கட்டுவதை நிறுத்தினான். உனது பாட்டனார், முதலாம் புலிகேசி காணாமல் போனதும், இவன் ஹர்ஷனுடன் கைகோத்துக் கொண்டு தனது நாட்டை வாதாபியின் அதிகாரத்தில் இருந்து மீட்டுக் கொண்டான். உனது பாட்டனார் காணாமல் போக, அதன் பின்பு சைந்தவம் சுதந்திர நாடாக, ஹர்ஷாவின் ஆதரவு நாடாக மாறியது." — தாமோதரா கூறினான்.

"எனது பாட்டனுக்கு இவன் கப்பம் கட்டிக் கொண்டிருந்தானா? எனது தந்தை ஏன் இவனை விட்டு வைத்தார்..?" இறையா திகைத்தான்.

"தந்தை காணாமல் போன வருத்தம், மனைவி இறந்த அதிர்ச்சி, உனது சிற்றப்பன் செய்த சூழ்ச்சிகள் என்று

தொடர்ந்து நடைபெற்ற எதிர்மறை நிகழ்வுகளால் மனம் நொந்து போனார் உனது தந்தை. நான் பலமுறை கவி பாட உனது தந்தையின் அவைக்கு வந்த போது, எதையோ பறிகொடுத்தவராகவே காணப்பட்டார். இந்தத் தருணத்தில்தான் தந்திதுர்கன் தன்னை வாதாபி யிடம் இருந்து விடுவித்துக் கொண்டான். நியாயப்படி, அவன் உனக்குக் கப்பம் கட்ட வேண்டியவன். உனது அதிகாரத்திற்கு உட்பட்ட குறுநிலம் சைந்தவம். நீ பிரம்மித்துப் போய் நோக்குகின்றாயே, இளவரசி அவந்திகா, அவள் உனக்குச் சொந்தமானவள். அவள் பிறந்தவுடன் உனக்குத்தான் என்று உனது பாட்டனிடம் வாக்குறுதி தந்திருந்தான், தந்திதுர்கன்!" — தாமோதரா கூற, அதிர்ந்து போய் நின்றிருந்தான்.

அஸ்வமேத யாகத்தைச் செய்யத் துவங்கியிருந்த பாட்டன் முதலாம் புலிகேசியை ஏமாற்றி அழைத்துச் சென்ற ஹர்ஷவர்தனன் அவனைச் சண்டி கோயிலில் பலி கொடுத்துப் புருஷமேதி ஆகிவிட்டிருந்தான். பாட்டனிடம் சரணாகதி அடைந்து கப்பம் கட்டிக் கொண்டிருந்த தந்திதுர்கன் ஹர்ஷனின் பக்கம் சாய்ந்துவிட்டான். இவனுடைய தந்தை கீர்த்திவர்மன் திடீரென்று நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் விழுந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக இவனது சிற்றப்பனே மகுடத்தைப் பறித்துக் கொண்டான். எல்லாமே ஏன் கூட்டுச் சதியாக இருந்திருக்கக் கூடாது..? அனைத்துக்கும் காரணகர்த்தாவாக ஹர்ஷாதான் இருக்க வேண்டும். தனது சாம்ராஜ்யத்தை விஸ்தீரணமாகச் செய்வதற்கு ஹர்ஷன் முயற்சிகளை மேற்கொண்டு வருவது அனைவருக்குமே தெரியும். தனக்குள் யோசித்தபடி நின்ற, இறையாவை பரிதாபத்துடன் நோக்கினான், தாமோதரா.

"எல்லாமே ஹர்ஷனின் திட்டம்தான் இறையா! இன்று நீ வனவாசியாகக் காட்டில் திரிவதற்கும் அவனே காரணமாக இருப்பான். உனது பாட்டனைப்

பலிகொடுத்து, உனது மகுடத்தையும் பறித்துக் கொண்டு, மங்களேசன் என்கிற உனது தலையாட்டிப் பொம்மை சிற்றப்பனை மன்னனாக அமர்த்தியிருக்கிறான். விடாதே இறையா..! நீதான் இரண்டாம் புலிகேசியாக மீண்டும் வாதாபியை ஆளப்போகிறாய். ஹர்ஷனை வீழ்த்தி வடபுலனை வெற்றி கொண்டு, அவனது மமதையை அடக்கப்போகிறாய். உனது குடும்பத்தைச் சின்னா பின்னம் செய்தவர்களைப் பழிவாங்கப் போகிறாய். அதைச் செய்வதற்கு முன்பாக நான் சொன்னபடி கேள். காஞ்சிக்குச் சென்று அத்திமலையானின் அருளைப் பெறுவோம். மன்னர்களை உருவாக்குபவன் அவன்." — தாமோதரா கூற அவனை ஆவலுடன் நோக்கினான்.

"எனது வளர்ப்புத் தாய் சுமனஸா இதையேதான் கூறினாள். தாங்களும் இதையேதான் கூறுகிறீர்கள்.. அவ்வளவு ஆற்றல் மிக்கவனா அத்திமலைத்தேவன்..!?" — இறையா வினவினான்.

"காஞ்சியில் பிறந்த சாணக்கியன் வடபுலத்தில் மவுரியத்தை நிறுவி, முடிசூடா மன்னனாகத் திகழ்ந்ததை அறிவாய் அல்லவா? புஷ்யமித்ரா, சமுத்ரகுப்தன், திருலோச்சன பல்லவன், கரிகாலன், இளந்திரையன் அனைவருமே அத்திமலையானின் அருள்பெற்றவர்களே. பல்லவர்களின் எழுச்சிக்கும் அவன்தான் காரணம். நீ அவனைச் சரண் பற்றினால், உனக்கு நிச்சயம் அத்திமலையான் அருள் செய்வான்."

தாமோதரா சொல்வதையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான், இறையா.

"காஞ்சிக்குச் சென்று அத்திமலைத்தேவனைத் தரிசித்துவிட்டு, கங்க நாட்டில் உனது தாய்மாமனின் உதவியோடு படைகளைத் திரட்டி, மங்களேசனின் மீது படையெடுப்போம். அவன் வெறும் மாவு பொம்மை. அவனது கழுத்தில் நூலைக் கட்டி ஆட்டுபவன் ஹர்ஷனே. மங்களேசனை எளிதாக வீழ்த்திவிட்டு, நீ

மன்னனாக வேண்டும். அதன் பிறகு ஹர்ஷனை வீழ்த்த வேண்டும். பிறகு தந்திதுர்கனை வென்று, அவன் மகள் அவந்திகாவை மணக்க வேண்டும். இதுவே உனது வருங்காலத் திட்டம்.." தாமோதரா கூற, தலையசைத்து ஆமோதித்தான், இறையா.

"நீ எளிதாகத் தலையசைத்துவிட்டாய் இறையா. ஆனால் மங்களேசனை வீழ்த்துவதோ, ஹர்ஷனை வெற்றி கொள்வதோ, தந்திதுர்கனை பணிய வைப்பதோ சிரமமான காரியம் அல்ல. ஆனால் அகந்தையின் மொத்த உருவம் அவந்திகாவை பணிய வைத்து அவளை மனையாளாக மாற்றுவது மிகவும் சிரமமான காரியம். காதல் என்கிற சொல்லை வெறுப்பவள் அவள். உடலால் பெண்ணே தவிர, உள்ளத்தால் தன்னை ஒரு மன்னனாகக் கருதுபவள். அவளை போர்க் கலைகளாலோ, காதலாலோ வீழ்த்த முடியாது. ஆத்திரம் அவளது நாசியின் நுனியில் அமர்ந்து யார் மீது பாயலாம் என்று காத்திருக்கும். ஆர்ப்பாட்டங்கள் செய்து காரியங்களைச் சாதித்துக் கொள்வாள்."

"ஆர்ப்பாட்டம் செய்வாளா!" — வியந்தான் இறையா.

"ஆம்! இலக்கியத்திலும், தத்துவத்திலும் மிகவும் ஆர்வம் உள்ளவள். இலக்கிய ரீதியாகக் கேள்விகளைக் கேட்டு, பதில் கூறாத புலவர்களைத் தனது அரண்மனை சேவகர்களாக நிற்க வைப்பாள். பாணபட்டரே ஒருமுறை இவளிடம் சிக்கித் தவித்து, பிறகு ஹர்ஷன் தந்திதுர்கன் மூலமாக அவளிடம் இறைஞ்சி அவரை விடுவித்தான் என்றால் பார்த்துக் கொள், இறையா!" — தாமோதரா கூற, இறையா பிரமிப்புடன் அவரைப் பார்த்தான்.

"மூன்று தேவிகளின் அம்சங்களையும் கொண்டிருப்பவளோ?" கேட்டான்.

"மூன்று தேவிகளின் சக்தி இணைந்தால், காளியின் அம்சமல்லவா? இவள் மகாகாளிதான். சந்தேகமேயில்லை. இவளைக் கணவனாக அடைந்தவன்

தொலைந்தான். கேள்விகளைக் கேட்டு, நியாயத் தத்துவங்களை அலசி, அவன் உயிரை வாங்கிவிடுவாள்..”

‘வாதாபி மகுடத்தை மீட்க வேண்டும், ஹர்ஷனை அடக்க வேண்டும். அவந்திகாவை கைப்பிடிக்க வேண்டும்..’ — அவனையும் அறியாமல் இறையாவின் மனதில் சிறு எண்ணம் தோன்றி உறுதி பெறத்துவங்கியது.

மீண்டும் தங்களது நடைப்பயணத்தை இருவரும் தொடங்க, சூரியன் அன்றைய பணியை முடித்துவிட்டு, மேற்கே இறங்கிச் செல்ல, இருளில் தட்டுத்தடுமாறி சென்று கொண்டிருந்தனர்.

இரவு எங்கே தங்குவது என்று இருவரும் பார்த்தபடி நடக்க, தொலைவில் வெளிச்சம் தெரிவதைக் கண்டனர். நிறையக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்க, அவற்றின் நடுவே குளிரை விரட்டியடிக்க வேண்டி தீ மூட்டப் பட்டிருந்தது. அதன் முன்பாக இருக்கையில் அமர்ந் திருந்தாள், அவந்திகா.

அவளைச் சுற்றித் தீப்பந்தம் ஏந்திய பணியாட்கள் நின்றிருக்க, தோழியர் இருவர் அவந்திகாவின் இருபுறமும் நின்றிருந்தனர். தாமோதராவும், இறையாவும் மறைவாக நின்று அவந்திகாவை நோட்டம்விட்டனர். அங்கே பரிபூரண அமைதி நிலவிக் கொண்டிருந்தது. திடீரென்று, ஒரு கூடாரத்தின் திரை விலக, உள்ளிருந்து ஏழு முனிவர்கள் வந்தனர். அனைவரும் காண்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தனர். உயரம், பருமன், சிரசில் அணிந்திருந்த கொண்டைகளின் அளவு, ஆடைகள், தாடியின் நீளம் அனைத்துமே கச்சிதமாக ஒரே அளவில் இருந்தன.

“யார் இந்தச் சப்த ரிஷிகள்?” — இறையா கேட்டான்.

“இவர்கள் சப்தரிஷிகள் அல்லர். தந்தையும், மகளும் அடிக்கடி விளையாடும் விளையாட்டு இது. இந்த ஏழு முனிவர்களில் ஒருவனாக மன்னன் தந்திதுர்கனும்

நிற்கிறான். அவனைச் சரியாக அடையாளம் காண வேண்டும் என்பதுதான் விளையாட்டு. பொறுத்திருந்து நடப்பதைப் பார்!" — தாமோதரா கூற, இறையா அவர்களது விளையாட்டையே நோட்டம்விட்டான்.

அவந்திகா எழுந்து சென்று, இடமிருந்து மூன்றாவதாக நின்ற தனது தந்தையின் தாடியைப் பிடித்து இழுக்க, மன்னன் தந்திதுர்கன் சிரித்தபடி தனது இருக்கையை நோக்கி நடந்தான்.

"எப்படி என்னை இனம் கண்டு கொண்டாய், அவந்திகா?" — தந்திதுர்கன் கேட்க, அவள் கலகல வென்று சிரித்தாள்.

"இதென்ன பிரம்ம வித்தையா என்ன? கொண்டை யின் அளவு, தாடியின் நீளம், அனைத்திலும் கவனம் செலுத்திய தாங்கள், நிற்கும் போது இடைவெளியையும் ஒரே சீராக வைத்திருக்க வேண்டாமா? தங்களுக்கு வலப்புறமும், இடப்புறமும் நின்றவர்கள் மிகவும் பணிவுடன் அதிக இடைவெளிவிட்டு நிற்க, மற்றவர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக நின்றிருந்தனரே. இடைவெளியின் அளவை வைத்துத் தங்களை எளிதாக அடையாளம் கண்டேன்.." — அவந்திகா சிரிக்க, அவளது புத்திக்கூர்மையைக் கண்டு இறையா அசந்து போனான்.

"இறையா பார்த்தாயா! பெற்ற அப்பனே அவளிடம் திணறுகிறான். அறிவுக்கூர்மை, சாதுரியம், போர்க்கலை, இலக்கியப் புலமை என்று அனைத்திலும் கைதேர்ந்தவள். இத்தனை கலைகளையும் அறிந்து அவளுக்கு ஈடு கொடுப்பவனால் மட்டுமே அவளது கணவனாகத் திகழ முடியும்.." தாமோதரா கிசுகிசுக்க, பதில் ஒன்றும் கூறாமல் அவந்திகாவை தொடர்ந்து கவனித்தான்.

"தந்தையே! என்னை யாரும் ஏமாற்ற முடியாது. அதுவும் குறிப்பாக எந்த ஆண்மகனும் என்னை ஏமாற்ற முடியாது. என்னை ஏமாற்றும் அளவுக்கு எந்த ஆண்மகனும் ஆற்றல் கொண்டிருக்கவில்லை. என்னை

ஏமாற்றவும் எந்த ஆண்மகனும் துணியமாட்டான். ஏமாற்றிய மறுகணமே, எனது வாளுக்கு இரையாவான்." — வீறாப்புடன் பேசினாள் அவந்திகா.

"என்னம்மா இது! மாறுவேடம் தரிப்பதில் சிறுவயதில் இருந்தே சமர்த்தன் நான். எப்படியும் இந்த முறை நீ என்னிடம் ஏமாறுவாய் என்று நினைத்தேன். ஆனால் அடுத்த முறை உன்னை ஏமாற்றிக் காட்டுகிறேன்." — தந்திதுர்கன் பொய்க் கோபத்துடன் கூற, அவந்திகா சிரித்தாள்.

"உங்களால் முடியவே முடியாது, தந்தையே! உங்களுக்கு அந்தச் சாதுர்யம் இல்லை." — அவந்திகா கூறினாள்.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? ஹர்ஷவர்தனன் செய்த புருஷமேத யாகத்திற்கு ஒரு மன்னனைப் பலி கொடுக்க வேண்டும் என்று இருக்க, வாதாபி மன்னன் முதலாம் புலிகேசியை முதியவரின் வேடத்தில் கனோஜுக்கு அழைத்துச் சென்றதே நான்தானே.. சிங்கத்தின் குகைக்கே மாறுவேடத்தில் சென்று அதனைக் கடத்தி வந்தேன். யாரும் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை." — தந்திதுர்கன் கூற, அதனைக் கேட்டுக் கொண்டிருந்த இறையா உறைந்து போனான்..

ஆக, இவனது யூகம் சரியே! இவனது குடும்பத்தின் சீரழிவுக்குக் காரணம் ஹர்ஷவர்தனன். ஹர்ஷன், தந்திதுர்கன், மங்களேசன் அனைவரும் கூட்டாகச் செய்த சதி. அவர்களால்தான் இன்று இவன் மகுடத்தை இழந்து காட்டில் திரிகிறான். பாய்ந்து சென்று தந்திவர்மனின் தலையைச் சீவித் தள்ள வேண்டும் போன்ற ஒரு துடிப்பு எழ, அதனை உணர்ந்தவனாக தாமோதரா, அவனது தோளினில் கையைப் போட்டு, அவனை ஆசுவாசப் படுத்தினான்.

"இப்போது உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. இப்போதைக்கு நீ அவர்கள் முன் சென்று நின்றால்,

உன்னை ஒரு வனவாசியாகவோ, வழிப்பறிக் கொள்ளை யனாகவோ தான் நினைப்பார்கள். உன்னை இரண்டாம் புலிகேசியாக உயர்த்திக் கொள். மங்களேசனை வீழ்த்தி, மன்னனான ஹர்ஷனையும், தந்திதுர்கனையும் எதிர்கொள். உனது சொத்தான அவந்திகாவையும் கைப்பற்று!" — தாமோதரா கூற, சற்றே அமைதி யடைந்தான், இறையா.

இறையா தனது மறைவிடத்தில் இருந்து அவந்திகாவை உறுத்துப் பார்த்தான். இவள் பிறந்த உடனேயே இவனுக்காக என்று பட்டயம் எழுதித் தரப்பட்டவள் என்றால் இவனுக்கு உரிமையானவள் அல்லவோ..? இந்தப் பேரழகுப் பெட்டகம் தனது பக்கலில் அரியணையில் அரசியாக அமர்ந்திருப்பது போன்று அவனது மனக் கண்களில் காட்சி தென்பட, புளகாங்கிதத்துடன் அவளையே நோக்கிக் கொண்டிருந் தான்.

'வாதாபி அரசி அவந்திகா தேவி அவந்திகா வாழ்க!' — மனதிற்குள் கூறிக் கொண்டான் இறையா.

தனது பட்டமகிஷி என்கிற ஆர்வத்துடன் அவந்திகாவை இறையா என்கிற இரண்டாம் புலிகேசி நோட்டம்விட்டுக் கொண்டிருந்த அதே நேரம், இன்னொரு ஜோடிக் கண்கள் அவந்திகாவை அதே ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தன. அத்தி மலையானைப் பற்றித் தகவல் அறிந்து வாருங்கள் என்று மகேந்திர பல்லவனால் அனுப்பப்பட்ட தசகுமாரர்களில் ஒருவனான தொண்டரையன்தான் அவந்திகாவை ஒரு மரத்தின் பின்பாக நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

'எனது நண்பன் மகேந்திர பல்லவனின் பக்கலில் பட்டத்து மஹிஷியாக அமரும் அத்தனை தகுதிகளையும் கொண்டவள், இந்த ஆரணங்கு!' — என்று தனக்குள் முடிவு கட்டினான், தொண்டரையன்.

## 22. ஆளுமை கோல் முறிந்தது

**தி**ருவதிகையிலிருந்து காஞ்சிக்குத் திரும்பியதும், மகேந்திரன் தனது ஜாகைக்குச் சென்று ஆயாசத்துடன் மஞ்சத்தில் சாய்ந்தான். சித்ரகுப்தன் ஆலயத்தில் இருந்து வந்ததும் அரண்மனையினுள் கூட நுழையாமல் திருவதிகைக்கு உடனே புறப்பட்டுச் சென்றவன், உறங்குவதற்கு அவகாசம் கிடைக்காமல் தொடர்ந்து பயணித்திருந்தான். களைப்பு நீங்கவேண்டி சற்று நேரம் உறங்கியவன், மீண்டும் கண்விழித்த போது அதற்காகவே காத்திருந்தவளாக மாதுளைரசம் கலந்த பாலினைக் கொண்டு வந்து நீட்டினாள் தாதி. அவன் அதைப் பருகி முடித்ததும், அவனை நோக்கிப் பணிவுடன் தலை வணங்கினாள்.

"அரசே! இளவரசியார் ராஜஸ்ரீ தங்களை உடனே சந்திக்க வேண்டும் என்று செய்தி அனுப்பியிருக்கிறார். மிகவும் முக்கியமான தகவலைத் தர வேண்டுமாம். நீங்கள் கடக குகைகளுக்குச் செல்வதற்கு முன்பாகத் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டிருக் கிறார்.." — தாதி கூற, மகேந்திரன் உடனே புறப்பட்டான்.

ராஜஸ்ரீ அழைக்கவில்லை என்றாலும், இவன் அவளைச் சந்திப்பதாகத்தான் இருந்தான். அப்பர் மடத்தில் நடந்தவற்றை அவளிடம் கூறிவிட்டு, கடக குகைகளில் ஒன்றில் அத்திமலையான் பிரதிமை குறித்த தகவலை ரணதிலகன் பதுக்கியிருக்கக் கூடும் என்று அப்பரும் சந்தேகப்படுவதாக அவளிடம் தெரிவிக்க நினைத்திருந்தான்.

*பன்னிரண்டு கஜங்களான பன்னிரண்டு குகைகளில் ஒன்றில்தான் ரணதிலகன் ரகசியத்தை வைத்திருக்கக் கூடும். பன்னிரண்டு குகைகளில் பட்டத்து அரசியைக் கேட்டால் வழி கிடைக்கும் என்று கூறப்படுவதால், எளிதாக இரகசியத்தைக் கண்டு பிடித்துவிடலாம்..!*

தனக்குள் நினைத்தபடி தனது புரவியை ராஜ வர்மனின் மாளிகைக்குச் செலுத்தினான். ராஜவர்மனின் கால்கட்டு அளவில் குறைந்திருந்ததால் அவன் நலம்பெற்று வருகிறான் என்பது தெரிந்தது.

"சிலரால்தான் மன்னராகத் தலைப்பாகை கட்டிக் கொள்ள முடியும். என் போன்ற இளவரசர்களுக்கு அதற்குப் பதிலாகக் காலுக்குப் பாகை கட்டிக் கொள்ளத்தான் முடியும்!" — சிரித்தபடி அண்ணன் மகனை வரவேற்றான், ராஜவர்மன்.

குடும்பத்தில் நிகழ்ந்த தொடர் சோகச் சம்பவங்கள் முதுமையை முன்னதாகவே ராஜவர்மனுக்கு அளித்துவிட்டிருந்தது போலும்.. ஆண்டுகள் பல ஓடியும் சோக நிகழ்வுகள் அனைத்துமே மர்மமாகவே திகழ்ந்தன. ஒரு மர்ம முடிச்சு அவிழ்ந்தால் கூட, அனைத்து முடிச்சு களும் அவிழ்க்கப்பட்டுவிடும் என்றுதான் ராஜவர்மன் நினைத்தான். இவன் கால் ஒடிந்து கிடக்கும் நிலையில், மகேந்திரன்தான் அனைத்துப் பிரச்னைகளையும் சமாளிக்க வேண்டும், பாவம்!

தங்கை நவரத்ன பல்லவியின் தற்கொலை, உடன் பிறந்த தம்பி விஜயவர்மனின் கொலை போன்ற விபரீதங்களைக் காட்டிலும் ஜெயவர்மன் காணாமல் போனதுதான் அவனைப் பெரிதும் பாதித்திருந்தது. அவன் இனி மீண்டு வருவான் என்கிற நம்பிக்கையும் வற்றியிருந்தது.

'அத்திமலைத்தேவனின் பிரதிமை கிடைத்தது. தேவ உடும்பர சிலை மீண்டும் அத்திமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது!' என்கிற செய்தி உயிர் பிரிவதற்குள்

செவியில் விழுந்தால் போதும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தான், ராஜவர்மன்.

"ஜெயஸ்ரீ! அண்ணன் வந்துவிட்டான் என்று உனது தாயிடம் சொல்!" ராஜவர்மன் கூற, அவள் மகேந்திரனைப் பார்த்துச் சிரித்தாள்.

"நான் அழைக்கவே வேண்டாம், தந்தையே! அண்ணா வந்துவிட்டான் என்பது தெரிந்தால், திருக்குன்ற கழுகாக அம்மா இங்கே தோன்றிவிடுவாள்" என்று ஜெயஸ்ரீ கூறி முடிப்பதற்குள்ளாக நூபுரங்கள் சப்திக்க ராஜஸ்ரீ அங்கே பிரசன்னமானாள்.

"அதோ கழுகு வந்துவிட்டது.." — ராஜவர்மன் கூற, மகேந்திரன் சிரித்தான்.

"உண்மைதான் சிற்றப்பா! நமது சிற்றன்னை உயரே பறக்கும் கழுகு. அவரால்தான் நமது குடும்பம் இன்னமும் நிலைகுலையாமல் உள்ளது. நடந்த சோகங்களுக்கு வேறு குடும்பமாக இருந்தால் சின்னாபின்னமாக ஆகி விட்டிருக்கும்." — மகேந்திரன் கூறினான்.

"ஜெயவர்மனின் கண்டுபிடிப்பாயிற்றே? சோடை போகுமா?" — ராஜவர்மன் கூற, வெட்கத்தினால் அந்த வயதிலும் முகம் சிவந்தாள்.

"சற்றுப் பொறுத்திருங்கள். ஜெயஸ்ரீக்குத் திருமணம் முடிந்து அவளது கணவனும் வரட்டும். அவரிடமும் நான் பல்லவத்திற்கு மருமகளாக வந்த பெருமைகளைப் பேசலாம்.." — மகேந்திரனை வாஞ்சையுடன் நோக்கினாள்.

"பாவம் நீ மகேந்திரா! திருவதிகையில் இருந்து இப்போதுதான் வந்திருப்பாய். ஓய்வு எடுக்கக்கூட உனக்கு அவகாசம் இருந்திருக்காது. நான் அதற்குள் உன்னை அழைத்துவிட்டேன்."

"தற்போது ஓய்வு முக்கியம் இல்லை, அன்னையே! நமது பிரச்னைகள் தீர்ந்தால் அதுவே எனக்குப் போதும்.

எனது தந்தையின் கடைசிக் கோரிக்கையே அத்தி மலையானை கண்டுபிடித்து மீண்டும் கோயிலில் வைக்க வேண்டும் என்பதுதான். அதனை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்று துடிக்கிறேன்." — மகேந்திரன் கூறினான்.

"கவலைப்படாதே மகேந்திரா! நீ நிச்சயம் சாதிப்பாய்." — ராஜஸ்ரீ கூறினாள்.

"திருவதிகை சென்றாயே! அப்பரைத் தரிசித்தாயா?" — ராஜவர்மன் கேட்டான்.

"சந்தித்து ஆசி பெற்றேன். நூற்றிப் பதினேழு நண்டுகள், பன்னிரண்டு யானைகள் என்பன கடக குகைகளைக் குறிக்கின்றன என்பதைக் கூறினேன். அவரும் ரணதிலகன் அங்குதான் பொக்கிஷம் குறித்த குறிப்பைப் பதுக்கியிருக்கக் கூடும் என்றார். அவனும், மகாபலியும் பொக்கிஷம் குறித்துச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். மகாபலிக்குப் பயந்து அவன் அங்கேயே இரகசியத்தைப் பதுக்கி இருக்கலாம் என்று அப்பர் கூறினார்." மகேந்திரன் கூறினான்.

"அப்படியென்றால் நீ உடனே கடக குகைகளுக்குச் செல்ல வேண்டியதுதான்.." — ராஜவர்மன் கூறினான்.

"ஆம் சிற்றப்பா! உதயகிரியில் உள்ள நூற்றிப் பதினேழு குகைகளில் இரகசியத்தைத் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதால் எனது பணி எளிதாகிவிட்டது. உதயகிரியின் பன்னிரண்டு குகைகளில் ஒன்றில்தான் இரகசியம் உள்ளது. அங்கே தேடினால் போதும்." — மகேந்திரன் கூறினான்.

"அங்கேயும் நீ தேடவேண்டிய அவசியம் இல்லை, மகேந்திரா! பன்னிரண்டு குகைகளில் நான்காவது குகைக்குச் சென்றால் போதும். உனக்கு இரகசியம் கிட்டிவிடும்." — ராஜஸ்ரீ கூற, அவளை திகைப்புடன் நோக்கினான் மகேந்திரன்.

"அதெப்படி இவ்வளவு உறுதியாகக் கூறுகின்றீர்கள்?" — மகேந்திரன் கேட்டான்.

"அன்று சித்ரகுப்தன் ஆலயத்திலிருந்து வந்து என்னை அரண்மனையில் விட்டுவிட்டு, திருவதிகை புறப்பட்டுச் சென்றாய் அல்லவா? அப்போது எனது கணவரின் ஜாதகச் சுவடியை ஆராய்ந்தபடி நடந்தேன். அப்போது ஒரு தகவல் எனக்குப் புலப்பட்டது. கடகம் என்கிற நண்டு, ராசி சின்னங்களின் வரிசையில் நான்காவதாக உள்ளது. பன்னிரண்டு குகைகளையும் பன்னிரண்டு ராசிகளாகக் காட்டி இருக்கிறான் ரணதிலகன். அதன்படி பார்த்தால் கடக குகை நான்காவதாக வருகிறது. மேலும் பன்னிரண்டு ராசிகளில் சூரியனை அரசனாகவும், சந்திரனை அரசியாகவும் கொள்ளுகிறார்கள். கடக ராசிக்கு அதிபதி சந்திரன். சிம்ம ராசிக்கு அதிபதி சூரியன். பட்டத்து அரசியிடம் கேள் என்றால், கடக ராசியின் அதிபதியான சந்திரனிடம் கேள் என்பதாகப் பொருள்.. நீ நேராக உதயகிரியின் பன்னிரு குகைகளில் நான்காவது குகைக்குச் செல். அங்கே சந்திரனைக் குறித்து ஏதேனும் தகவல் கிடைத்தால், அங்கேதான் பொக்கிஷத்தைக் குறித்த இரகசியத்தை வைத்திருப்பான், ரணதிலகன்." — ராஜஸ்ரீ கூற, அவளை பிரமிப்புடன் நோக்கினான், மகேந்திரன்.

"அன்னையே! இதென்ன அதிசயம். காஞ்சியில் அமர்ந்து கொண்டு எங்கோ இருக்கும் கடக குகைகளின் இரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டீர்களே..? இத்தகைய புத்திக்கூர்மை ஒரு அரசனுக்குத் தேவை. நீங்களே பல்லவ நாட்டிற்கு அரசனாக இருக்கும் தகுதியைப் பெற்றவர்.." — மகேந்திரன் கூறினான்.

"உனது சிற்றன்னையை மிகவும் புகழாதே. எனது தந்தையின் ஜாதகச் சுவடியைக் கொண்டுதான் உனது சிற்றன்னை இரகசியத்தைக் கண்டுபிடித்தார். எல்லாப்

பெருமையும் எனது தந்தைக்கே!" — ஜெயஸ்ரீ கூற, ராஜஸ்ரீ அவளைப் பார்த்துச் சிரித்தாள்.

"நான் உடனேயே கடக குகைக்குப் புறப்படுகிறேன். சிற்றப்பா! ஆட்சியைப் பார்த்துக் கொள்ளுங்கள்." — மகேந்திரன் புறப்பட்டான்.

"அண்ணா! நீ பாட்டுக்குக் கடக குகைக்குப் புறப்பட்டுவிட்டாயே. இந்த வருடம் மாமல்லன் போட்டி நடைபெற உள்ளதே. நீ அதில் கலந்து கொள்ளப் போவதில்லையா..?" — ஜெயஸ்ரீ கேட்டாள்.

"நல்ல கேள்வி, ஜெயஸ்ரீ! நான் கடக குகைக்குப் போவதைத் தவிர்க்க முடியாது. அதே சமயம் மகாமல்லனாக அறிவிக்கப்பட்டிருக்கும் நான் இந்த வருடம் போட்டியில் கலந்து கொள்ளாமலும் இருக்க முடியாது. எனது ஆசான் தானமல்லன் கூறியபடி நான் நடக்கிறேன்.." என்றவன், அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

முக்கூடல் கடிகைக்குப் பயணித்த மகேந்திரன், களரிக்குச் சென்று தனது ஆசான் தானமல்லனை நாடிச்சென்றான். அவனை அன்புடன் வரவேற்றார், தானமல்லன்.

"உன்னுடன் மோதுவதற்குப் போட்டியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒன்றிரண்டு பேர் பிற தேசங்களைச் சேர்ந்தவர்கள். இருப்பினும், இந்த ஆண்டும் நீதான் மகாமல்லனாகத் தேர்ந்தெடுக்கப்படப் போகிறாய் என்று நிச்சயமாக நம்புகிறேன்." — தானவர்மன் கூறினார்.

"என்னை மன்னித்துவிடுங்கள் ஆசானே! தந்தைக்கு இட்ட ஒரு ஆணையை நிறைவேற்றும் பொருட்டு, நான், அவசரமாக வடபுலம் செல்கிறேன். இந்த ஆண்டு என்னால் போட்டியில் கலந்து கொள்ள இயலாது." — மகேந்திரன் உண்மையான வருத்தத்துடன் சொன்னான்.

தானவர்மனின் முகத்தில் ஏமாற்றம் பரவியது.

"சேர நாட்டில் இருந்து விஜயேந்திரன் என்கிற மல்லன் வந்திருக்கிறான். மிகவும் பலவானாகத் திகழ்கிறான். நமது களரியின் மல்லர்களைப் புரட்டி எடுத்துவிட்டான். அவனை உன்னுடன் மோதவைத்து மண்ணைக் கவ்வ வைக்க வேண்டும் என்று இருந்தேன். மகாமல்லன் என்கிற பட்டத்தை அவன் நிச்சயம் வாங்கிவிடுவான்.." — தானவர்மனின் குரலில் வருத்தம் தொனித்தது.

"என்னை மன்னித்துவிடுங்கள் ஆசானே! அரசாங்கப் பணியைத் தவிர்க்க முடியாது. நான் செல்வதால் பல்லவத்தின் பெரும் பிரச்னைகள் தீரும் என்கிற நிலையில் நான் வடபுலம் போகும் கட்டாயத்தில் இருக்கிறேன்." மகேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது, தானவர்மனின் நண்பரும், கடிகையில் புராண இதிகாசங்களைப் போதிப்பவருமான பலராமராயர் அங்கே வந்தார். மகேந்திரனைக் கண்டதும் பணிந்தார்.

"மகேந்திர மல்லரே! உமது வீர விளையாட்டைக் காண்பதற்காகவே தீர்த்த யாத்திரை போகாமல் காத்திருக்கிறேன். வரும் சனிக்கிழமை போட்டி நடைபெற உள்ளதாகத் தானமல்லர் கூறினார். அதைக் காண்பதற்காகவே நாளை தீர்த்த யாத்திரை கிளம்புவதாக இருந்த நான், அதனைத் தள்ளி வைத்தேன்!" — பலராமராயர் கூறினார்.

"ராயரே! நீர் உமது தீர்த்த யாத்திரைக்குப் புறப்படுங்கள். மகேந்திர மல்லர் இந்த ஆண்டு போட்டியிடப் போவதில்லை. அரசு அலுவலாக வடபுலம் செல்கிறார்." — தானமல்லனின் குரல் சோகத்துடன் ஒலித்தது.

"அடடா! மகேந்திர மல்லரின் ஆற்றலைப் பார்க்கும் சந்தர்ப்பம் இந்த ஆண்டு நமக்குக் கிட்டாதா?" — மெய்யான வருத்தத்துடன் பலராமராயர் கூறினார்.

தனது நலவிரும்பிகளை ஏமாற்றிவிட்டோம் என்கிற குற்றஉணர்வு மனத்தில் உதிக்க, அவர்களை ஆறுதலுடன் நோக்கினான், மகேந்திரன்.

"அடுத்த ஆண்டு, நிச்சயம் நான்தான் மகாமல்லன்..! இந்த ஆண்டு மட்டும்தான் இல்லை." மகேந்திரன் கூறினான்.

"அப்படியென்றால், இந்த வருட மகாமல்லன் சேர நாட்டு விஜயேந்திரன்தான்! நான் வேறு ஒரு தவறு இழைத்துவிட்டேன். அவன் சவால் விடுத்து, என்னை வெல்ல உங்கள் பல்லவ நாட்டில் யார் இருக்கிறார்கள் என்று கேட்டபோது, எங்கள் மன்னன் மகேந்திர மகாமல்லர் உன்னை வீழ்த்துவார் என்று பதிலுக்குச் சவால்விட்டுவிட்டேன். தற்போது மன்னர் போட்டியில் கலந்து கொள்ள இயலாத நிலையில், மன்னர் அவனுக்குப் பயந்து போட்டியில் கலந்து கொள்வதைத் தவிர்த்துவிட்டார்.. என்று வம்பு பேசுவான். அத்தகைய பேச்சு எழுந்தால், அதற்கு நானே காரணமாக இருப்பேன். என்னை மன்னித்துவிடு, மகேந்திரா!" — தானமல்லர் வருந்தினார்.

"வருத்தப்படத் தேவையில்லை. மகேந்திர மன்னர் சார்பாக ஆளுமைகோல் நாட்டிவிடுவோம். ஆளுமை கோல் நாட்டி மகாமல்லனான என்னை வெல்லும்வரை — மகாமல்லனாகத் திகழும் என்னை எவரேனும் வீழ்த்தாத வரையில் — நானே மகாமல்லன் என்று ஆளுமை ஓலையினை மகேந்திரனின் கைப்பட எழுதி ஆளுமைகோலில் பிணைத்து வைப்போம். அரசர் தனது வடபுல விஜயத்தை முடித்துக் கொண்டு வந்த பிறகு, இருவரும் மற்போர் புரியட்டும். இதிகாசங்களில் கண்ணனும் பலராமனும் ஆளுமைகோல் நாட்டியும் மற்போர் புரிந்து இருக்கின்றனர். பிறர் நாட்டிய ஆளுமைகோலையும் முறித்துச் சவாலை ஏற்றிருக் கின்றனர்." — பலராமராயர் கூறினார்.

தானமல்லரின் முகம் மலர்ந்தது. "நல்ல யோசனை! இது எனக்குத் தோன்றாமல் போனதே! விஜயேந்திரனின் திமிரையும், கொட்டத்தையும் அடக்குவதற்கு நல்ல வழி. உடனே ஆளுமைகோல் நாட்டிவிடுவோம். மகேந்திரா! உனது கையால் ஆளுமைகோலை நாட்டிவிட்டுப் புறப்படு!" — தானவர்மர் வேண்டினார்.

'பல்லவத்தின் மகாமல்லனாகத் திகழும் மகேந்திர மகாமல்லப் பல்லவன் விடுக்கும் சவால். யாத்திரை சென்றிருக்கும் நான் திரும்பி வந்ததும் நான் நாட்டி இருக்கும் இந்த ஆளுமைகோலினை மீண்டும் எடுக்க வருவேன். என்னுடன் மோதி மகாமல்லன் பட்டத்தைப் பெற விரும்புபவர்கள், இந்தக் கோலினை முறித்து என்னுடன் மோதி வென்ற பிறகே, அந்தப் பட்டத்தை அடைய முடியும்.' — மகாமல்லன் மகேந்திரன்.

என்று சுவடியில் எழுதிக் கையொப்பம் இட்டு, பிறகு கடக குகைகளை நோக்கிப் புறப்பட்டான் மகேந்திரன்.

சனிக்கிழமை —

மதம் பிடித்த யானையைப் போன்று ஆவேசத்துடன் வந்து நின்றான் விஜயேந்திரன். போட்டியைக் காண வந்திருந்த பெண்கள் அவனைக் காண்பதற்கு அச்சப்பட்டுக் கண்களை மூடிக் கொண்டனர். முஷ்டிகளை முறுக்கியபடி சிம்ம நடையைப் போட்டுக் கொண்டு இருபுறமும் ஆணவத்துடன் வெறித்தபடி நடந்தான்.

மையத்தில் வந்து நின்று, கதாயுதங்களைப் போன்ற தனது துடைகளைத் தட்டிவிட்டுக்கொண்டு சுற்றுமுற்றும் பார்க்க, காளியின் கோயிலுக்கு வழிநடத்திச் செல்லப் படும் பலியாடுகளைப் போன்று தானமல்லனின் சீடர்கள் வரிசையாக வந்தனர்.

பறந்து வரும் பூச்சிகளைத் தாவி விழுங்கும் பல்லியைப் போன்று, அனைவரையும் கபளீகரம் செய்தான்,

விஜயேந்திரன். தனது சீடர்கள் பந்தாடப்படுவதை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார், தானமல்லன். மகேந்திரன் நாட்டி இருந்த ஆளுமை கோல்தான் இனி பல்லவத்தின் மானத்தைக் காக்கப் போகின்றது. யோசனையைக் கூறிய பலராமராயருக்குத் தான் நன்றியைக் கூற வேண்டும்.

தானமல்லர் தனக்குள் நிம்மதி பெருமூச்சு ஒன்றைச் சிந்தினார்.

'அனைவரையும் வீழ்த்திவிட்டேன். இனி யார் என்னுடன் மோதப் போகின்றீர்?' என்று கேட்பது போன்று அலட்சியத்துடன் நின்ற விஜயேந்திரனிடம், மகேந்திரன் நாட்டி இருந்த ஆளுமைகோலைச் சுட்டிக்காட்டினார், தானமல்லன்.

"எங்கள் மன்னர் மகேந்திர மகாமல்லர் நாட்டிய ஆளுமைகோல் இது. அவருடன் மோதி வென்ற பிறகே, அவருக்கு உரித்தான மகாமல்லன் பட்டத்தை எவராலும் கைப்பற்ற முடியும். எமது மன்னருடன் மோத விருப்பம் உண்டாகில் அதனை முறித்துச் சவாலை ஏற்றுக்கொள். யாத்திரை போயிருக்கும் அவர் வரும்வரை காத்திருந்து அவரை வென்று, பிறகு மகாமல்லன் பட்டத்தை நீ அடையலாம்."

தானமல்லன் கூற, அகம்பாவத்துடன் ஆளுமை கோலை நோக்கி நடைபோட்டான், விஜயேந்திரன். சுற்றி அமர்ந்திருந்த கூட்டத்தினர், அவன் கோலினை முறிப்பதற்காக நடந்து செல்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு சுவாசத்தைவிடவும் தோன்றாமல் அவனையே வெறித்தனர்.

ஜெயஸ்ரீயும், அவளது தோழிகளும், மற்போர் விளை யாட்டுகளைக் காண்பதற்குக் களரிக்கு வந்திருந்தனர். மகேந்திரன் நாட்டியிருந்த ஆளுமைகோலினை முறிப்பதற்காக விஜயேந்திரன் நடக்க, அதனைக் கண்ட

ஜெயஸ்ரீயும், அவளது தோழிகளும் எரிச்சல் கொண்டனர். பல்லவ மல்லர்களைப் பந்தாடிய விஜயேந்திரன் அப்போதே தோற்கடிக்கப்படுவதைக் காண விரும்பினர்.

தோழிகளில் ஒருத்தியான பைம்பொழில் ஆவேசத்துடன் எழுந்து நின்றாள்.

"சேர நாட்டு யானைக்கு மதம் பிடித்துவிட்டது. இந்த அடங்காக் களிறுக்குப் பாவம் பிடி* எங்கே கிடைக்கப் போகிறது?" என்று உரத்த குரலில் கேலி செய்யத்துவங்க, மகேந்திரனின் ஆளுமைகோலினை நோக்கி நடந்து கொண்டிருந்த விஜயேந்திரனது கவனம் அந்தப் பெண்களின் பக்கமாகத் திரும்பியது. அழகிய மங்கையர் சிலர் தன்னைக் கேலி செய்வதைக் கண்டதும் கோபத்துடன் அவர்களை நோக்கித் திரும்பினான்.

"எனக்கு ஏற்ற பிடி நீங்கள்தான். என் பலத்திற்கு ஒரு பிடி போதாது. அத்தனை பேரையும் பிடித்துக் கொள்கிறேன்" என்று நையாண்டியாகக் கூவியபடி இருகைகளையும் விரித்தபடி அந்தப் பெண்களை நோக்கி நடந்தான்.

ஜெயஸ்ரீயும், அவளது தோழிகளும் அரண்டு போயினர்.

கூட்டத்தினருடன்தானே அமர்ந்திருக்கிறோம் என்கிற துணிவில் விஜயேந்திரனை கேலி செய்ய, அவன் திடீரென்று தங்களை நோக்கி வருவான் என்பதை அவர்கள் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அருகில் இருந்த ஆண்கள் பதற்றத்துடன், "வேண்டாம் விஜயேந்திரா.. அவர்கள் சிறு பெண்கள். தெரியாமல் பேசிவிட்டார்கள்" என்று அலறினார்களே தவிர ஒருவரும் பாய்ந்து வந்து அவனைத் தடுக்கவில்லை.

---

* களிறு - ஆண் யானை; பிடி - பெண் யானை.

*தானமல்லனும், பலராமராயரும் நிலைமை விபரீதமாகப் போவதைக் கண்டு பதற்றத்துடன் அவனை நோக்கி ஓடிவந்து அவனது இருகரங்களையும் ஆளுக்கொன்றாகப் பற்ற, அவன் உதறியதில் இருவரும் நிலைகுலைந்து கீழே சரிந்தனர்.*

*தன்னை அடக்குவதற்கு யாரும் இல்லை என்கிற துணிவில், அந்தப் பெண்களை நோக்கி நடையை இன்னும் வேகப்படுத்தினான். அவனது கண்கள் மிகவும் அழகாகத் தோன்றிய ஜெயஸ்ரீயைத்தான் குறி வைத்திருந்தன.*

*அவனது பார்வையை வைத்தே, தனக்குத்தான் அவன் குறி வைத்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட ஜெயஸ்ரீ அலறியபடி தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழ முயன்றாள். அவன் ஜெயஸ்ரீயை பலவந்த மாகத் தூக்கிச் சென்றுவிடக்கூடும் என்று அனைவரும் பயத்துடன் எதிர்பார்த்திருக்க, அரச குடும்பத்திற்கு என்ன பதில் கூறுவது என்று தானமல்லர் துடிதுடிக்க, காவலர்கள் ஈட்டிகளுடன் விஜயேந்திரன் மீது பாய்வதற்கு ஓடி வர, அப்போது அந்த அதிசயம் நடந்தது.*

*கட்டிளங்காளை போன்ற ஒருவன் கூட்டத்தில் இருந்து குதித்து விஜயேந்திரனை நோக்கிப் பாய்ந்து வந்தான். அவனது பிடரியில் கைவைத்து அவனை அப்பால் தள்ள, விஜயேந்திரன் தொலைவில் போய் விழுந்தான்.*

*திகைப்புடன் விஜயேந்திரன் திரும்பி நோக்க, தனது மேலாடையைக் கழற்றியபடி நின்ற அந்த வாலிபனைக் கண்டான். அவன் சுழற்றி வீசிய மேலாடையைத் தாவிப் பிடித்தான், அவனது நண்பன் ஒருவன்.*

*விஜயேந்திரனுடன் மோதுவதற்கு அந்த வாலிபன் தயாராகிவிட்டான் என்பதனைப் புரிந்து கொண்ட கூட்டத்தினர் பெரும் ஆரவாரத்தினை எழுப்ப,*

ஜெயஸ்ரீக்கும், அவளது தோழிகளுக்கும் ஒரு ஆண் மகனாவது விஜயேந்திரனை துணிவுடன் எதிர்கொள் கிறானே என்கிற மலைப்பில் தங்களது கைகளைக் கொட்டி, அவனை உற்சாகப்படுத்தினர்.

அதன்பின் அங்கே நடந்தது எதுவுமே காஞ்சிவாசி களின் கண்களுக்கு நம்பும்படியாகவே இல்லை. யானையைப் புலிக்குட்டி ஒன்று பந்தாடிய கதையை முதன்முறையாகப் பார்த்தார்கள். மகேந்திரனின் ஒத்த வயதை உடைய அந்த வாலிபன் அனாயாசமாக விஜயேந்திரனை தாக்கத் துவங்கினான். இறுதியில் அவனைச் சுழற்றித் தூக்கிய அந்த வாலிபனின் பலத்தை மக்கள் புரிந்து கொண்டனர். அவன் விஜயேந்திரனை தலைக்கு மேலாகத் தூக்கிய போது அவனது கம்பீரமான தோள்கள் உயர்ந்து சிறு குன்றுகளாக இருபுறமும் நின்றன. அவனது இரு கைகளிலும் தசைகள் முறுக்கேறி இரும்புத் தூண்களாக நிலைத்து நின்றன. அவனது முகத்தில் தெரிந்த உக்கிரம், அனைவரையும் அச்சப்படுத்தும் வகையில் இருந்தது. அவன் வாயைத் திறந்து எக்காளம் இட, அது கோபம் கொண்ட புலியின் உறுமலாக ஒலித்தது.

அத்தி என்றால் யானைதானே. யானை போன்ற தேகத்தைப் பெற்றிருந்த விஜயேந்திரனை சுமக்கும் அத்திமலையாகத் தோன்றினான், அந்த வாலிபன். ஜெயஸ்ரீயும் அவளது தோழிகளும், கோவர்தன கிரியைச் சுமந்து நிற்கும் கண்ணனைப் போன்று அந்த வாலிபன் நிற்பதைக் கண்டு பரவசப்பட்டனர். மலையின் நிழலில் ஓடிச்சென்று அடைக்கலம் தேடிய கோபிகைகளைப் போன்று ஜெயஸ்ரீயின் நெஞ்சம் விஜயேந்திரனை சுமந்து நின்ற அந்த வாலிபனின் வசம் அடைக்கலம் புகுந்தது.

விஜயேந்திரனை சக்கரத்தைச் சுற்றுவது போன்று சுழற்றி வீசி எறிந்த அந்த வாலிபன், ஒருமுறை ஆரவாரிக்கும் கூட்டத்தைச் சுற்றி நோக்கினான்.

"மகேந்திரனைப் போலவே இருக்கிறான். மகேந்திரனுக்கும், இவனுக்கும் மல்யுத்தம் நடத்தினால் யார் வெல்வார்கள்?" என்று பலரும் ஒருவருக்கொருவர் ரகசியமாகத் தர்க்கம் செய்து கொண்டிருக்க, தானமல்லனும், பலராமராயரும் கூட அதே கேள்வியைத் தங்களுக்குள் கேட்டுக் கொண்டிருக்க, கூட்டத்தினரை நோக்கிக் கைகூப்பிய அந்த வாலிபன், யாரும் எதிர்பார்த்திராத ஒரு காரியத்தைச் செய்தான்.

விடுவிடுவென்று மகேந்திரன் நாட்டியிருந்த ஆளுமை கோலைக் கையில் எடுத்து அதில் பிணைக்கப்பட்டிருந்த சுவடியை எடுத்தான்.

"மகேந்திர மல்லன்விடும் சவாலை நான் ஏற்கிறேன். கங்க நாட்டில் தங்கியிருக்கும் நான் வாதாபியின் வருங்கால மன்னன் இரண்டாம் புலிகேசி. மகேந்திரனை வென்று நான் மகாமல்லனாகத் திகழ்வேன்," என்று சூளுரைத்தான்.

கூட்டத்தினர் மட்டுமல்ல. ஜெயஸ்ரீ, அவளது தோழிகள், தானமல்லன், பலராமராயர், களரியின் அதிகாரிகள், காவலர்கள் என்று அனைவருமே ஸ்தம்பித்துப் போயினர்.

அன்று காலைதான் இறையா அத்திமலைக்குச் சென்று அத்திமலைத்தேவனாக நிற்கும் வரத நாராயணனைத் தரிசித்திருந்தான். அங்கே ஒரு பட்டரிடம் அந்த ஆலயப் புராணத்தைக் கேட்ட போது தேவ உடும்பர அத்திவரதனை ஆராதிக்கும் மன்னர்கள் உலகையே ஆளுவார்கள் என்று கூற, அப்போதே ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான், புலிகேசி.

முதலில் மங்களேசனை வீழ்த்தி வாதாபி மகுடத்தைத் தரிக்க வேண்டும். பிறகு ஹர்ஷனையும், தந்திதுர்கனையும் வீழ்த்த வேண்டும். அவந்திகாவை கடத்திச் சென்று மணக்க வேண்டும். காஞ்சியைக் கைப்பற்ற வேண்டும்.

*அத்திமலையானின் அருளைப் பெற வேண்டும். அவன் ஆசியுடன் உலகையே ஆள வேண்டும்!*

இறையாவை ஆதரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த கூட்டத்தினர், அவன் மகேந்திரன் நாட்டியிருந்த ஆளுமைகோலினை முறித்தவுடன் அமைதியாகிவிட்டனர். ஜெயஸ்ரீ தனது இதயம் கதிரவனை நோக்கும் சூரியகாந்தியைப் போன்று அந்த வாலிபனை நோக்கத் துவங்கிவிட்டதை உணர்ந்தாள். ஆனால், அவன் மகேந்திரனுடன் நட்பாக இருக்கப் போகின்றானா, அல்லது விரோதியாகத் திகழப் போகின்றானா என்பதை அனுமானிக்க இயலாமல், தனது இதயம் மலர்வதைத் தடுக்க நினைத்தாள். ஆனால் தனது கம்பீரமான உருவத்தால், சற்றுமுன் கோவர் தனத்தைச் சுமந்த கண்ணனாக நின்ற அந்த வாலிபன், இப்போது சிவ தனுசை முறித்த ராமனைப் போன்று மகேந்திரனின் ஆளுமைகோலினை முறித்து இரண்டு துண்டங்களுடன் நின்றிருந்தான். இறையாவின் மேலாடையைச் சுழற்றியபடி கூட்டத்தினருடன் நின்றிருந்தான், தாமோதரா, எதிர்காலத்தில் பாரவி என்ற பெயரில் புகழ் பெறப்போகும் கவிஞன்.

# 23. குகையில் கிட்டிய ரகசியம்

மகேந்திரன் நாட்டியிருந்த ஆளுமைகோலினை இறையா என்கிற புலிகேசி முறித்த அதே சமயம் குமார பர்வதத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். அவ்வப்போது தனது பின்பாக யாரேனும் பின்தொடர்கின்றனரா என்று ஓரக்கண்களால் நோக்கிக் கொண்டிருந்தான். பலிதானாவும் அவனது ஆட்களும் தன்னை நிச்சயம் பின்தொடர்ந்து வருவார்கள் என்று நம்பினான், மகேந்திரன். பலிதானாவை தீர்த்துக் கட்டி, தன்னைத் திருத்திப் பணிகொண்ட அப்பர் பெருமானுக்குப் பெரும் கைங்கர்யத்தை ஆற்ற நினைத்தான்.

உதயகிரி மற்றும் சந்திரகிரி என்கிற அந்த இரண்டு மலைகளை வியப்புடன் நோக்கினான். ஒத்தாடை அரண்மனையின் உப்பரிகைகளில் வரிசையாக மாடங்கள் காணப்பட்டிருக்கும். அவற்றில் தங்கியிருக்கும் மாடப்புறாக்கள், உப்பரிகையில் இங்கும் அங்கும் பறந்து விளையாடித்திரியும். அந்த மாடங்களைப் போன்றே உதயகிரி மற்றும் சந்திரகிரியில் அடுக்கடுக்காகக் குகைகள் தென்பட்டன. கீழிருந்து அவை சிறு மாடங்களாகத் தோன்றுகின்றனவே தவிர, மலையுச்சிக்குச் சென்றால் மனிதர்கள் தங்கக்கூடிய குகைகளாக அவை காட்சி தரும் என்பதனை உணர்ந்தான். தன்னையும் அறியாமல் அவனது பார்வை சந்திரகிரியின் உச்சியை நோக்கியது. அங்குதானே ரணதிலகன் களப்பிரர்களால் களவாடப் பட்ட பொக்கிஷங்கள் பதுக்கப்பட்டுள்ள இடத்தைக் குறித்த தகவலை வைத்திருக்கிறான்.

புல்தரை அதிகமாக இருந்த ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து ஒரு மரத்தின் நிழலில் தனது புரவியைப் பிணைத்தான். இவன் வரும்வரை புல்லை மேய்ந்து கொண்டிருக்கும் அல்லவா!

“உதயகிரி ஏறி, அதன் வழியாகத்தான் சந்திரகிரியை அடைய முடியும்!” சமணத் துறவி ஒருவர் வழி கூற, மகேந்திரன் உதயகிரியின் மீது ஏறத்துவங்கினான்.

இருபுறமும் வழுக்கும் கற்பாறைகள் இருக்க, உதயகிரியின் மீது தொடர்ந்து ஏறினான். வலது புறம் உள்ள செங்குத்தான கற்பாறையில் ஏறி மறுபுறம் இறங்கினால், சந்திரகிரிக்குச் செல்லும் பாதை புலப்படும் என்று அந்தச் சமணத் துறவி கூறியிருந்ததை நினைவுபடுத்திக் கொண்டான். வலதுபுறம் ஒரு சரிந்த சுவரைப் போன்று தென்பட்ட அந்தச் செங்குத்தான பாறையில் ஏறத்துவங்கினான்.

காலணிகளுடன் ஏறுவது சிரமம் என்று அந்தச் சமணத் துறவி கூறியிருந்ததால், பாதரட்சைகளைத் தவிர்த்திருந்தான். அதனால் கடும் வெயிலில் கற்பாறை கொதிக்க, மகேந்திரனின் பாதங்கள் வெந்து போயின. இருப்பினும், மனம் தளராமல் தொடர்ந்து ஏறிக் கொண்டே இருக்க, அந்தச் செங்குத்தான பாறை மறுபுறம் வழுக்குப் பாறையாகச் சரிந்தது. அமர்ந்த நிலையில் சறுக்கியபடி கீழே இறங்கியதும் சந்திர மலைக்குப் போகும் பாதை புலப்பட்டது. உதயகிரி சூரியனையும் சந்திரகிரி சந்திரனையும் குறித்ததாலோ என்னவோ, சந்திரகிரி மலைப்பாதையில் பச்சைப்பசேல் என்று மரங்களும், செடிகளும், பாதையின் இருபுறமும் காட்சியளித்தன. ஒரு பாறையில் இருந்து நீரருவி விழுந்து சிறு குளமாகத் தேங்கியிருக்க, அந்தக் குளத்துநீரில் கைகால்களைக் கழுவிக் கொண்டு, தனது முகத்தில் நீரை வாரி அடித்துக் கொண்டான். குளிர்ந்த நீரும், காற்றும் சற்றுமுன் அவனுக்கு ஏற்பட்டிருந்த சிரமங்களைப் பெரிதளவும் குறைத்தன.

சற்று நேரம் ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், சந்திரகிரியின் பாதையில் ஏறத்துவங்கினான்.

அந்தி சாயும் நேரத்தில் சந்திரகிரியின் உச்சியை அடைந்தான். மூலமண்டபம் ஒன்று தென்பட அதில் சமணத் துறவிகள் அநேகம் பேர் அமர்ந்து கொண்டிருந்தனர்.

அப்பர் தான் தருமசேனர் என்கிற சமணத் துறவியாக இருந்த போது குகை மூலமண்டபத்தைக் கடந்து உயரே செல்லும் பாதையின் உச்சியில் இருந்ததாக அடையாளம் கூறியிருந்தார். ரணதிலகனும், மகாபலியும் அதே வரிசையில் இருந்த குகைகளில்தான் தங்கியிருந்தனர். அந்த வரிசையினில் மொத்தம் பன்னிரண்டு குகைகள் இருந்ததாக அப்பர் கூறியிருந்தார். ராஜஸ்ரீயின் கூற்றுப்படி பன்னிரண்டு குகைகளில் நான்காவது குகையில்தான் ரணதிலகன் தங்கியிருக்க வேண்டும். அங்குதான் எங்கேயோ அவன் ரகசியத்தைப் பதுக்கியிருக்கக் கூடும். மகாபலி அவனைக் கத்தியால் குத்த கடைசிக் குகையில் தங்கியிருந்த தருமசேனரின் குகைக்கு அவன் ஓடிச்சென்று அவரது செவிகளில் ரகசியத்தைப் பாய்ச்சி இருக்கிறான்.

மூல மண்டபத்தின் பின்பாக உயரே சென்ற பாதையை மகேந்திரன் கவனித்தான். அடர்ந்த மரம்செடி கொடிகளின் ஊடே வளைந்து நெளிந்து சென்ற அந்தப் பாதையின் முடிவில் பன்னிரண்டு குகைகள் வரிசையாக நின்றதைக் கண்டான். அவனது கண்கள் நான்காவதாக இருந்த குகையை நோட்டம்விட்டன.

பங்கஜாக்ஷர் என்கிற துறவிதான், வருபவர்களை உபசரித்து அவர்களுக்குக் குகைகளை ஒதுக்கிக் கொண்டிருந்தார். தனது முன்பாக நின்ற மகேந்திரனை அவர் வியப்புடன் நோக்கினார்.

“நான் பல்லவ இளவரசன். எனது பெயர் மகேந்திரன். நான் சமணத்தைச் சேர்ந்தவன். இங்கே சலிக்கானா விரதம் இருக்கும் சமணத் துறவிகளிடம் ஆசியினைக் கோரி வந்திருக்கிறேன். எனக்கு மேலே ஆனந்த மார்க்கம் என்கிற பாதையில் உள்ள பன்னிரண்டு குகைகளில் ஒரு குகையை ஒதுக்கித் தாருங்கள். எனது ஆசான் தருமசேனர் தங்கியிருந்த குகையை ஒதுக்கினால் நான் மகிழ்வேன். காரணம் அவர் தங்கிய இடத்தில் நான் தங்க விருப்பப்படுகிறேன்.” — மகேந்திரன் கூற, அந்தத் துறவி தன்னிடம் இருந்த சுவடிகளை ஆராய்ந்தார்.

“அப்படியே செய்கிறேன், இளவரசே!” — பங்கஜாக்ஷர் கூறி அவனுக்குத் தருமசேனர் தங்கியிருந்த கடைசிக் குகையை ஒதுக்கினார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட குகையினுள் நுழைந்தவன், அதனைக் கண்களால் மேலும் கீழுமாக அளந்தான். இவனது அத்தை நவரத்னாவின் கணவன் ரணதிலகன் தருமசேனரின் செவிகளில் இரகசியத்தைக் கூறிவிட்டு இறந்த இடம் இதுவாகத்தான் இருக்க வேண்டும். குகையின் தரைப்பகுதியை வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

பணியாள் ஒருவன் மண்பானையில் நீரை நிரப்பி அவனது குகையில் கொண்டு வைத்தான்.

“தாங்கள் இளவரசர் என்பதால் தங்களைக் கவனிப்பதற்கு என்னை நியமித்திருக்கிறார்கள்.” — மகேந்திரனிடம் பவ்யத்துடன் கூறினான், அந்தப் பணியாள்.

‘கவனிக்கவா, வேவு பார்ப்பதற்கா?’ — தனக்குள் சிரித்துக் கொண்டான், மகேந்திரன்.

அன்றிரவு, முகப்பு மண்டபத்தில் இருந்த காண்டா மணி அடிக்க, இரவு உணவுக்கு அழைப்பு விடுக்கப் பட்டதை அறிந்து, மகேந்திரன் மூலக் குகையை நோக்கி

நடந்தான். பாக்கு மட்டைத் தட்டினில் கோதுமை ரொட்டிகளும் தேனும் பரிமாறப்பட, மகேந்திரன் ரொட்டியை உண்டபடி தன்னைச் சுற்றிலும் பார்த்தான். இதுவரை பலிதானாவும் அவனது ஆட்களும் இவனைப் பின்தொடர்ந்து வரவில்லை. உணவு உண்ணும் இடத்திலும் சந்தேகப்படும்படியாக ஒருவரும் இவனது கண்களில் சிக்கவில்லை.

ஆனால்.. யாரோ.. தன்னை கவனிக்கிறார்கள் என்கிற உள்ளுணர்வின் எச்சரிக்கை அவனுள் எழுந்தது. தனது கண்களைச் சுழலவிட்டவன், தற்செயலாக ஒரு மூலையில் அமர்ந்திருந்த அந்தச் சந்நியாசினியை கவனித்தான். கண்களை மூடி அமர்ந்திருந்தாள். அவளது வாயையும் நாசியையும் மறைத்திருந்த சதுரவடிவ துணியை அவள் நீக்கியிருக்கவில்லை. தனது தலைமுடியை முழுவதுமாக மழித்திருந்தாள். பருமனான அவளது தேகத்தை மூடியிருந்த வெள்ளை ஆடைகள் பழுப்பேறி இருந்தன. அவள் தனது கண்களைத் திறப்பாள் என்று இவனது கண்கள் காத்திருக்க, அவளோ ஆழ்ந்த நிஷ்டையில் இருந்தாள். இவன் தனது தட்டைக் கவனித்த போது, மீண்டும் அவனது உள்ளுணர்வு யாரோ அவனைக் கவனிப்பதாக எச்சரித்தது. மீண்டும் அந்தச் சந்நியாசினி பக்கமாக இவன் பார்வையைத் திருப்ப, அதுவரை திறந்திருந்த அவளது கண்கள் மீண்டும் மூடியதைப் போன்று உணர்ந்தான். அந்தப் பெண் துறவிதான் தன்னை நோட்டம்விடுகிறாள் என்பதனைப் புரிந்து கொண்டான். இவன் தனது பக்கமாக வெறித்துப் பார்ப்பதைக் கண்டதும், கண்களைத் திறந்த அந்தச் சந்நியாசினி தனது தட்டினில் வைக்கப்பட்டிருந்த ரொட்டிகளை எடுத்துத் தனது மேலாடையில் கட்டிக் கொண்டவள், தனது முகத்தை மறைத்திருந்த துணியை விலக்காமல் அந்தக் குகையைவிட்டு அகன்றாள். அவசரமாக ரொட்டிகளை உண்டு முடித்த மகேந்திரன்,

அந்தச் சந்நியாசினியினை இரகசியமாகப் பின்தொடர்ந் தான். ஆனந்தப் பாதையின் நான்காவது குகையினுள் அவள் அவசரமாக நுழைந்து கொள்ள வேறு வழியின்றி மகேந்திரன் தனது குகையினுள் நுழைந்து கொண்டான்.

ரணதிலகன் ரகசியத்தைப் பதுக்கி வைத்திருக்கும் நான்காம் குகையில்தான் அந்தச் சந்நியாசினி தங்கியிருக் கிறாள் போலும்.

மண்பானையில் நீரை நிரப்புவதற்காக வந்த பணியாளனுடன் பேச்சு வளர்த்தான்.

"நான்காவது குகையில் தங்கியிருக்கும் அந்தப் பெண் தபஸ்வினி யார்?" — மகேந்திரன் கேட்க, பணியாள் பதில் தந்தான்.

"அவர் தானேஷ்வர் நகரில் இருந்து வந்திருக்கிறார். தற்போது மௌன விரதத்தை அனுஷ்டிக்கிறார். இரவு உணவுக்குத் தவிர, தனது குகையைவிட்டு அவர் வெளியே வருவதில்லை."

'அதுதானே பிரச்னை! அவர் தங்கியிருக்கும் குகையில் எனக்கு வேலை இருக்கிறதே..' — மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

நடுநிசி —

மகேந்திரன் கண்களை மூடிப் படுத்திருந்தான். ஆனால் உறங்கவில்லை. நிலவின் ஒளி ஆனந்த பாதையை நிறைத்து, மெல்லிய கீற்றுகளாக ஒளி குகையின் உள்ளே எட்டிப்பார்த்தது. நடுநிசியில் தனது குகைக்குப் பலிதானாவும் அவனது ஆட்களும் வரக்கூடும் என்பதால் தனது வாளினைப் போர்வையின் உள்ளேயும், குத்துவாளைத் தலையணையின் அடியிலும் பத்திரப்படுத்தி இருந்தான்.

தனது கண்களை மூடுவதும், திறந்து போர்வையின் ஊடே குகையின் வாயிலினைப் பார்ப்பதுமாக

இருந்தான், மகேந்திரன். ஒருமுறை கண்களை மூடிய போது, என்னை ஆக்ரமிக்கவிடேன் என்று உறக்கம் கண்களை அழுத்த, மிகவும் சிரமப்பட்டு அவன் தனது கண்களை விரித்தான். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. அவன் கண்களைத் திறந்த அதே சமயம், ஓர் உருவம் அவனது குகையின் வாயிலின் ஓரமாக நின்று தனது கண்களை மட்டும் உள்ளே நீட்டியது. மகேந்திரன் தங்கியிருந்த கடைசிக் குகையின் பக்கலில் நின்ற மலைப்பாறை இயற்கையாகவே சுவர் ஒன்றை அமைத்திருக்க, நிலவொளியின் நிழலில் பாறையில் அந்த உருவத்தின் நிழல் படிந்திருப்பதைக் கண்டான், மகேந்திரன். போர்வைக்குள் கிடந்த வாளின் பிடியை அவனது வலதுகை பற்றி இறுக்கின.

குகையின் உள்ளே மெதுவாக நுழைந்த அந்த உருவம் ஒரு மூலையில் வைத்திருந்த அவனது பையை நோக்கி நகர்ந்தது. மகேந்திரன் அசையாமல் உறங்குவது போன்று கிடக்க, அந்த உருவம் அந்தப் பையினைத் திறந்து எதையோ தேடத் தொடங்கியது.

போர்வையை லேசாக விலக்கித் தனக்கு முதுகினைக் காட்டி அமர்ந்திருந்த உருவத்தைக் கவனித்தான். நான்காம் குகையில் தங்கியிருந்த அந்தப் பெண் தபஸ்வினிதான், இவனது பையில் எதையோ தேடுகிறாள்..

எழுந்து சென்று கையும் களவுமாக அவளைப் பிடித்துக் கேள்விகள் கேட்கலாமா? ஒருவேளை, பல்லவப் பொக்கிஷங்களைக் குறித்த இரகசியத்தை இவன் கண்டுபிடித்துத் தனது பையினில் வைத்திருக்கக் கூடும் என்கிற நம்பிக்கையில் இவனது பையைச் சோதனை இடுகிறாளோ..? ஒருவேளை இவள் பலிதானாவின் அடியாளாக இருக்கக் கூடுமோ?

இப்போதைக்கு அவளிடம் எந்த வம்பையும் வளர்க்க வேண்டாம். பாவம்! தான் தங்கியிருக்கும் குகையில்தான்

பொக்கிஷம் குறித்த இரகசியம் பதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாமல், இவனது குகையில் வந்து அதனைத் தேடுகிறாள். அந்தச் சந்நியாசினி ஏமாற்றத்துடன் அவனது குகையைவிட்டு மீண்டும் நழுவி வெளியேறிப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரனுக்கு ஒரு யோசனை. மறுநாளே அந்த யோசனையை நிறைவேற்ற எண்ணினான்.

பொழுது விடிந்தது..

மூல மண்டபத்தில் காலைப் பிரார்த்தனைகளைச் செய்து கொண்டிருந்தனர், சமணத் துறவிகள். தனது குகையைவிட்டு வெளியே வந்த மகேந்திரன், அந்த சந்நியாசினி தான் தங்கியிருந்த குகையின் வாயிலில் அமர்ந்திருப்பதைக் கண்டான்.

பிரார்த்தனை நடைபெறும் நேரத்தில் ஆனந்தப் பாதையில் உள்ள குகைகளைச் சுத்தப்படுத்தும் எண்ணத்துடன் பசடியின் பணியாட்கள், கையில் விளக்குமாறும், துறவிகளின் பழைய துணிகளை எடுத்துச் செல்வதற்கு ஒரு கூடையுமாக வந்தனர். ஒரு பணியாள் மகேந்திரனின் குகையை நோக்கி நகர்ந்து வந்தான்.

“எனது குகையைச் சுத்தப்படுத்தத் தேவையில்லை. எனது ஆசான் தருமசேனர் எனக்காகச் சில சுவடிகளைக் கடைசிக் குகையில் மறைத்து வைத்திருக்கிறார். அவற்றைத் தேடிக் கொண்டிருக்கிறேன். எனவே என்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம். எனது குகைக்கு யாரும் வரவேண்டாம்...” — உரத்த குரலில் மகேந்திரன் கூற, அந்தச் சந்நியாசினி சட்டென்று இவன் பக்கமாகத் திரும்பி நோக்குவதை ஓரக்கண்களால் கவனித்தான். தனது திட்டம் நிச்சயம் பலிதமாகும் என்று எண்ணினான்.

அன்று பிற்பகல் பங்கஜாக்ஷர் மகேந்திரன் தங்கியிருந்த குகைக்கு வந்தார்.

"இளவரசே! ஒரு சிறு கோரிக்கை.. தங்களுக்கு இதே வரிசையில் உள்ள நான்காவது குகையை ஒதுக்கித் தருகிறேன். அங்கே தற்போது தங்கியிருக்கும் தபஸ்வினிக்கு ஆழ்நிலை தியானம் செய்ய ஒதுக்குப் புறமான குகையைக் கேட்கிறார். நீங்கள் நான்காவது குகையில் தங்கிக் கொள்ளுங்கள்." — பங்கஜாக்ஷர் கூறினார்.

நான்காவது குகையில் நிழலாடியது. தனது பதிலைக் கேட்பதற்காகத் தபஸ்வினி ஆவலுடன் காத்திருக்கிறாள் என்பதனைப் புரிந்து கொண்டான்.

"எனது ஆசான் தங்கிய இடம். நான் இங்கே இருக்கத்தான் பிரியப்படுகிறேன்.." — வேண்டுமென்றே பிடிவாதம் செய்தான், மகேந்திரன்.

"திவ்யபோதினி என்கிற அந்தப் பெண் துறவி விரைவில் சலிக்கானா என்னும் உண்ணா நோன்பைத் துவக்க இருக்கிறார். அதற்கு முன்பாக ஆழ்நிலை தியானத்தைச் செய்து தனது உடலைச் சமநிலைப்படுத்த விரும்புகிறார். இங்கே ஒதுக்குப்புறமாக இருப்பதால் யாரும் வரமாட்டார்கள் என்பதால் இந்தக் கோரிக்கை யினை முன்வைக்கிறார்." — பங்கஜாக்ஷர் கூறினார்.

"சலிக்கானா செய்யப் போகிறாரா? அப்போது அவரது கோரிக்கை நியாயமே. அவர் எனது குகையில் தங்கிக் கொள்ளட்டும். நான் அவர் தங்கி இருக்கும் நான்காவது குகையில் தங்கிக் கொள்கிறேன்." — மகேந்திரன் கூறினான்.

பங்கஜாக்ஷர் நிம்மதியுடன் அங்கிருந்து விலக, பணியாள் ஒருவன் மகேந்திரனின் பொருட்களை நான்காவது குகைக்கு எடுத்துச் செல்ல, மற்றொரு பணியாள் தபஸ்வினியின் உடைமைகளைக் கடைசிக் குகைக்கு எடுத்து வந்தான்.

மகேந்திரன் ஆனந்த மார்க்கம் என்கிற அந்தப் பாதையில் நடந்தான். நான்காவது குகையை நோக்கி

அவன் செல்ல, உள்ளிருந்து வந்த அந்த தபஸ்வினி எதிரே இவன் இருக்கும் பக்கமாக நடந்து வந்தாள்.

வெளிச்சத்தில் அவளை நன்றாகவே காண முடிந்தது. ஆஜானுபாகான தேகத்துடன், நிலம் அதிர நடந்து வந்தாள். மழிக்கப்பட்ட அவளது தலையை வெள்ளைத் துணியால் மூடியிருந்தாள். இவனது பார்வையைத் தவிர்த்தபடி நடந்தாலும், அவளும் இவனைக் கவனிக்கின்றாள் என்பது நன்றாகப் புலப்பட்டது. இடையில் ஒரு சிறு விளக்குமாற்றினைக் கட்டியிருந்தாள். நடக்கும் போது கண்ணில் புலப்படாத ஜந்துக்களை மிதிக்கக் கூடாது என்பதற்காக விளக்குமாற்றினால் தரையைக் கூட்டிக் கொண்டே செல்வார்கள் சமணப் பெண் துறவிகள் என்பதை அறிந்திருந்தான் மகேந்திரன். இவனைக் கடக்கும் போது அந்த தபஸ்வினி இடையில் கட்டியிருந்த சிறு விளக்குமாறு கழன்று விழ, பருமனான அவளது தேகத்தை வளைத்து அவள் அதனை எடுப்பதற்குள், மகேந்திரனே அதனை எடுப்பதற்குக் குனிந்தான்.

விளக்குமாற்றைக் கரத்தில் எடுத்தவன், தற்செயலாக அந்த தபஸ்வினியின் பாதங்களை நோக்கினான். யோசனையுடன் எழுந்தவன், புன்முறுவலுடன் அதனை அந்தப் பெண் துறவியிடம் நீட்டினான்.

“எனது ஆசிகள்..!” — என்று கூறிவிட்டு, அவசரமாகக் கடைசியில் இருந்த குகையை நோக்கி நடந்தாள், அந்த தபஸ்வினி. அவள் நடந்து செல்வதையே கவனித்துக் கொண்டிருந்தான், மகேந்திரன்.

அவள் தபஸ்வினி அல்ல. பெண் துறவி வேடத்தில் இருக்கும் பலிதானா. அவனது பாதங்களே அவன் ஒரு ஆண்மகன் என்பதைக் காட்டிவிட்டது. அவன் தேகத்தின் பருமனும், உயரமும், அகன்று விரிந்த தோள்களும், அவனை அடையாளம் காட்டிவிட்டன.

அப்பர் மடத்தில் வேவு பார்த்த சிவகதிரான் தனது பணியைச் செவ்வனே செய்துவிட்டிருந்தான் போலும். இவனுக்கு முன்பாகவே, பெண் துறவி வேடத்தில் வந்து இவனுக்காகக் காத்திருக்கிறான் பலிதானா. வேடமிட்டு வந்ததற்குக் காரணம் உள்ளதே. ரணதிலகனைக் கொன்ற மகாபலியாகத் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பாமல், பெண் துறவி வேடத்தில் வந்திருக்கிறான்.

நான்காவது குகையில் நுழைந்ததும் அவனது பார்வை பம்பரமாகச் சுழன்று அந்தக் குகையை ஆராயத் துவங்கியது. குகை முழுவதும் ஏதேதோ சிற்பங்களைச் செதுக்கியிருந்தனர். அனைத்தும் சமணத் தாத்பரியங் களை விளக்கும் காட்சிகள். ஒரு மன்னன் சமணத் துறவியாக மாறும் காட்சி அங்கே சித்திரிக்கப் பட்டிருந்தது. மன்னன் அமர்ந்திருக்க, அவனைச் சுற்றித் துறவிகள் நின்று அவனது தலைமுடியைப் பிடுங்கி எறிவது போன்ற ஒரு காட்சி வடிக்கப்பட்டிருந்தது.

முடியைப் பறிக்கும் போது துறவியாகப் போகின்றவர் வலி தாங்காமல் குரல் எழுப்பினால், அவர் துறவியாகும் அருகதையற்றவர் என்பதை விளக்கும் அந்தக் காட்சியைக் கூர்ந்து கவனித்தான். துறவிகளின் பின்பாகக் கையில் ஒரு தாமரை மலருடன் நின்ற அரசியின் சிற்பத்தைக் கவனித்தான்.

நூற்றிப் பதினேழு காவல் கடகங்களின் நடுவே பன்னிரண்டு அரச கஜங்கள். பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதையைச் சுட்டிக்காட்டுவாள்.. என்கிற அப்பர் பெருமான் கூறியிருந்த அந்தப் புதிரில் குறிப்பிடப்பட்ட பட்டத்து அரசி இந்தச் சிற்பமாக இருக்கக்கூடுமோ?

அரசியின் சிற்பத்தைக் கூர்ந்து கவனித்தான். அழகிய மகுடத்துடன், ஆபரணங்களுடன் செதுக்கப்பட்டிருந் தாள். அரசன் துறவறம் பூணுகையில் அரசிக்கு எதற்கு இவ்வளவு அலங்காரங்கள்?

*தனக்குள் அவன் நினைத்துக் கொண்டான். தனது கரத்தால் சிலையைத் தடவிப் பார்த்தான்.*

*மீண்டும் அப்பர் பெருமான் கூறிய புதிரை நினைத்துப் பார்த்தான்.*

*'பட்டத்து அரசியிடம் கேட்டால் பொக்கிஷத்திற்கான பாதையைச் சுட்டிக்காட்டுவாள்..'*

*சுட்டிக்காட்டுவாளா? மகேந்திரன் அந்தச் சிலையின் கைவிரலை நோக்கினான். கையில் தாமரையை ஏந்தியிருக்க, அந்தச் சிற்பத்தின் சுட்டு விரல் மடிந்து தாமரைப் பூவின் மீதாக நின்றது.*

*மகேந்திரன் தாமரைப் பூவை உன்னிப்பாகக் கவனித்தான். மலர்ந்த அந்தத் தாமரை சிற்பத்தின் தண்டு நீளமாக அரசியின் கால் பெருவிரல் வரை நீண்டிருந்தது. தாமரையின் மையத்தில் ஒரு சிறு துளை தெரியத் தனது கைவிரலால் அதனைச் சுரண்டிப் பார்த்தான். ஒரு நீண்ட பனையோலையின் நுனி அவனது கையில் தட்டுப்பட, கட்டைவிரல் மற்றும் சுட்டு விரல்களின் நகங்களைச் சேர்த்து அந்த ஓலையின் நுனியைப் பற்றி இழுத்தான்.*

*உறையிலிருந்து உருவப்படும் வாளினைப் போன்று, ஒரு நீண்ட பனையோலை சுவடி ஒன்று அவன் விரல்களுடன் வெளிவந்தது. கண்கள் ஆர்வத்துடன் மினுமினுக்க அதனைப் பிரித்தான். உள்ளே பாலி மொழியில் ஏதோ குறிப்பிடப்பட்டிருந்தது. சமணத்தில் சிறிது காலம் இருந்த போது, பாலி மொழியைக் கற்றுக் கொள்ளத் துவங்கியிருந்தான் மகேந்திரன். ஆனால் அப்பர் பெருமானால் திருத்திப் பணிகொண்டுவிட்ட பிறகு, பாலியைக் கற்பதைத் தவிர்த்துவிட்டிருந்தான். பல்லவ பொக்கிஷங்களைக் குறித்த ரகசியத்தை ரணதிலகன் பாலியில் எழுதி வைத்திருப்பான் என்று இவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. என்ன செய்யலாம் என்கிற யோசனையுடன் நின்றிருந்தான்.*

"ரணதிலகன் பாலி மொழியில் எழுதி வைத்திருக்கின்றானா? அவனுக்குப் பாலி மட்டுமே எழுதப் படிக்கத் தெரியும். உங்கள் தமிழை அவன் எழுதிப் பழகவில்லை. நான் வேண்டுமானால் அதனைப் படித்துப் பொருள் கூறட்டுமா?" — குகையின் வாயிலில் குரல் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான், மகேந்திரன். திவ்யபோதினி என்கிற பெண் துறவியின் வேடத்தில் நின்ற பலிதானாதான் கோரமாகச் சிரித்தபடி நின்றான்.

"தேவையில்லை பலிதானா! எங்கள் முக்கூடல் கடிகையில் பாலி மொழி அறிந்த விற்பன்னர்கள் உள்ளனர். அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" மகேந்திரன், தனது உறையிலிருந்து வாளினை வெளியே எடுத்துவிட்டு, பனையோலை சுவடியை உறையினுள் திணித்தான்.

தன்னை மகேந்திரன் அடையாளம் கண்டுவிட்டான் என்பதை அறிந்ததும் பலிதானா ஆத்திரத்துடன் தனது மேலங்கியைக் கழற்றி வீசி எறிந்தான்.

"மகேந்திரா! அவை களப்பிரரின் பொக்கிஷங்கள். நானும், ரணதிலகனும் சேர்த்தவை. சுவடியைக் கொடுத்துவிட்டு, உனது நாடு திரும்பிவிடு. பல்லவ அரச குடும்பத்தினர் அற்ப ஆயுளைக் கொண்டவர்கள் என்கிற விதியை நீயாவது மாற்று!" — பலிதானா கூறினான்.

"நீங்கள் சேர்த்த சொத்துக்களா இது? பல்லவர்களின் அரண்மனையிலும், ஆலயத்திலும் கொள்ளையடித்தவை. எனது அத்தை நவரத்ன பல்லவியை ஏமாற்றி அபகரித்த பொக்கிஷங்கள். எங்கள் பல்லவத்தின் ஒப்பற்ற தெய்வமான தேவ உடும்பர சிலையை வடக்கே கடத்திக் கொண்டு போவதற்காக மறைத்து வைத்திருக்கின்றீர்கள் என்பதை நான் அறிவேன். பல்லவர்கள் அற்ப ஆயுளைக் கொண்டவர்கள் அல்லர் என்பதை நான் நிரூபிக்கிறேன்.. வா!" — தனது வாளினைச் சுழற்றியபடி அவனை அழைத்தான், மகேந்திரன்.

அங்கியின் பின்பாக மறைத்து வைத்திருந்த தனது வாளை பலிதானா நீட்ட, அந்தக் குறுகிய குகையில் இருவருக்குமிடையே வாட்சண்டை தொடங்கியது. ஒரு கட்டத்தில் பலிதானாவின் வாள் எகிறிச்சென்று விழ, ஆயுதம் இன்றித் திகைத்து நின்ற அவனை வெறித்த மகேந்திரன், தனது வாளையும் வீசி எறிந்துவிட்டு, அவனை நெருங்கினான். மகாமல்லனான மகேந்திரனின் இரும்புக் கரம் மலைப்பாம்பாகப் பலிதானாவின் கழுத்தினைச் சுற்றிக் கொள்ள, மகேந்திரன் தனது பிடியினை இறுக்கத் தொடங்கினான். விழிபிதுங்க, சுவாசத்துக்குத் திணறினான், பலிதானா.

"ஆசானே! உமக்கு எனது குருதட்சணை!" என்று முழங்கியபடி அவனது குரல்வளையை ஒடித்துப் போட்டான், மகேந்திரன்.

சுவடி பத்திரமாக இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக் கொண்ட மகேந்திரன், அதே வேகத்தில் காஞ்சிக்குப் புறப்பட்டான்.

சுவடியில் ரணதிலகன் குறிப்பிட்டிருந்த ரகசியத்தைக் கொண்டு, அத்திமலைத்தேவனைத் தேடி எடுத்து மீண்டும் அத்திமலையில் நிறுத்திவிடும் தீவிரத்துடன் காஞ்சிக்குப் பயணித்துக் கொண்டிருந்தான். தந்தை சிம்மவிஷ்ணுவுக்கு அவன் தந்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றானா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## 24. மூன்றாம் மதிமலை

ஜெயஶ்ரீ தோழி பைம்பொழிலுடன் மாலிருஞ்சோலை மலையின் அடிவாரத்தில் நின்றிருந்தாள். ஶ்ரீவர நரசிங்கனை தரிசிக்கப் போகிறேன் என்று தாய் ராஜஶ்ரீயிடம் கூறிவிட்டு வந்திருந்தாள். ஆனால் அவளது பார்வை, மலையின் எதிரே இருந்த கூராளம் என்கிற அந்த மாளிகையின் மீதே பதிந்திருந்தது. காஞ்சிக்கு வரும் வெளிதேசத்தவர்கள் தங்கும் ஜாகை கூராளம். ரம்மியமான சூழ்நிலையில் முக்கூடலுக்குச் செல்லும் பாதையில் அமைந்திருந்தது. அங்கேதான் இறையாவும், தாமோதராவும் தங்கியிருந்தனர்.

விஜயேந்திரனிடமிருந்து தங்களைக் காப்பாற்றிய புலிகேசி என்னும் அந்த வாலிபன் அங்குதான் தங்கியிருக்கிறான் என்பதைத் தோழிகள் மூலம் அறிந்து கொண்டிருந்த ஜெயஶ்ரீ, அவனைச் சந்தித்துத் தங்களது நன்றியைத் தெரிவித்துவிட வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் மாலிருஞ்சோலை மலைக்கு வந்திருந்தாள். ஜெயஶ்ரீயின் கண்கள் புலிகேசியைத் தேடின. ஆனால் அவன் தென்படவில்லை என்பதால், மலையேறி செல்வதா அல்லது அவனுக்குக் காத்திருப்பதா என்று தயங்கி நின்றாள்.

அப்போது —

கூராளம் ஜாகையிலிருந்து திடீரென்று வெளிவந்த இறையாவும் தாமோதராவும், மலையடிவாரத்தை நோக்கி நடந்து வந்தனர். அவர்கள் மலையேறி ஶ்ரீவர நரசிங்கனை தரிசிக்கப் போகிறார்கள் என்பதை யூகித்து உற்சாகம் அடைந்தாள்.

பைம்பொழிலும் அவளும் இறையாவைப் பின் தொடர்ந்து மலையேறினர்.

மலையேறி நரசிங்கனை தொழும்வரை ஜெயஸ்ரீ இறையாவிடம் பேச முற்படவில்லை. சந்நிதியில் ஓரிருமுறை இறையாவின் கண்களும், ஜெயஸ்ரீயின் கண்களும் சந்தித்தன. ஆனால், இவளது கண்கள் படபடத்த அளவுக்கு அவனது கண்களில் எவ்விதத் துடிப்பும் இல்லை.

தன்னை ஆர்வத்துடன் வெறித்து நோக்கியபடி நின்ற ஜெயஸ்ரீயைக் கண்டு சற்றே திகைத்தான், இறையா. எதற்காக இந்தப் பெண், தெய்வத்தின் சந்நிதியில், அவனை நோக்காமல் தன்னை நோக்கிக் கொண்டிருக்கிறாள் என்று தனக்குள்ளாகக் கேட்டுக் கொண்டான்.

தரிசனம் முடிந்ததும், இறையாவும், தாமோதராவும், வெளியே வர, பைம்பொழில் அவனை வழிமறித்தாள்.

"இளவரசே! எங்கள் பல்லவ இளவரசி தங்களுடன் பேச வேண்டுமாம்!" — பைம்பொழில் தூது உரைக்க, இறையா வியப்புடன் பைம்பொழிலின் பின்பாக நின்ற ஜெயஸ்ரீயை பார்த்துவிட்டு, பிறகு தாமோதராவை கேள்வியுடன் நோக்கினான்.

"எதற்கு என்னை அழைக்கிறாள், பல்லவ இளவரசி?" — இரகசியக் குரலில் தாமோதராவை கேட்டான்.

"மல்யுத்தத்தில் வென்றவனைப் பல்லாங்குழி ஆடி வெல்ல நினைக்கின்றாளோ என்னவோ! மல்லுக்கு நின்ற உனது பல்லை வாங்க நினைக்கின்றாள் போலும்.." — தாமோதரா நகைச்சுவையுடன் கூறினான். ஆனால், கால் பெருவிரலால் மண்ணில் கோலம் வரைந்து கொண்டிருந்த ஜெயஸ்ரீயைக் கண்டதுமே அவனுக்கு அனைத்தும் விளங்கிவிட்டது. அவன் ஒரு கவிஞன் அல்லவா? முந்தைய தினம் விஜயேந்திரனிடமிருந்து

தன்னைக் காப்பாற்றிய இளவரசனுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு, அப்படியே தனது இதயத்தைத் தந்துவிட்டுச் செல்ல நினைக்கிறாள்.

தாமோதரா இறையாவைப் பொருள்பட நோக்க, இறையா அவனது பார்வையைக் கண்டு சற்றே குழம்பினான். ஜெயஸ்ரீயை கேள்வியுடன் பார்க்க, அவள் நாணத்துடன் முன்வந்து நின்றாள்.

“இளவரசே! அந்த துஷ்டனிடம் இருந்து எங்களைக் காப்பாற்றிய உங்களுக்கு நன்றியைச் சொல்வதற்காக வந்திருக்கிறேன்.” — ஜெயஸ்ரீ கூறினாள்.

“அவன் வீரன்! துஷ்டன் இல்லை. பெரிய கூட்டத்தின் இடையே ஒரு வீரனைக் கேலி செய்தாலோ, அவமதித்தாலோ அவன் அப்படித்தான் நடந்து கொள்வான். நீங்கள் என்னைக் கேலி செய்திருந்தாலும், நானும் அப்படித்தான் நடந்து கொண்டிருப்பேன். ஒருவேளை, என்னிடமிருந்து விஜயேந்திரன் உங்களைக் காப்பாற்றியிருக்கக் கூடும். நீங்கள் எனக்கு நன்றியை உரைக்கத் தேவையில்லை. இனி பொது இடங்களில் வீரர்களைக் கேலி செய்யாமல் இருங்கள். அது உங்களுக்கும் நல்லது. உங்கள் நாட்டிற்கும் நல்லது!” என்றபடி மீண்டும் மலையிலிருந்து இறங்குவதற்காகத் தாமோதராவுடன் நடந்தான்.

ஜெயஸ்ரீ விக்கித்துப் போய் நின்றாள். ஒரு அழகிய பெண் நன்றி சொல்ல வரும் போது, அவளை வசீகரிக்கும் பொருட்டு, தனது வீரத்தை உயர்த்திப் பேசி அவளிடம் காதல் யாசகத்தைப் பெறவே ஒரு வீரன் முயற்சிப்பான் என்றே இலக்கியங்களில் படித்திருக் கிறாள். ‘உங்கள் மீதுதான் தவறு. அவன் துஷ்டன் இல்லை!’ என்று அலட்சியமாகக் கூறிவிட்டுச் செல்லும் அந்த இளவரசனை எந்த வகையில் சேர்ப்பது..?

"அந்த இளவரசி உன்னைக் காதலிக்கத் துவங்கி விட்டாள் என்று நினைக்கிறேன்." — தாமோதரா கூறினான்.

"முழுமதியைக் கண்டுவிட்டேன். பிறைநிலா என்னை எப்படி ஈர்க்கும், தாமோதரா?" — இறையா கூற, ஆச்சரியத்துடன் நின்றான்.

"யாரைக் குறிப்பிடுகிறாய்?" — தாமோதரா கேட்டான்.

"அவந்திகாவைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாது." — இறையா கூறினான்.

"அவள் உன்னைக் காண்பாள் என்பது என்ன நிச்சயம்? கண்டாலும் உன்னைக் காதலிப்பாள் என்று நீ எப்படி நினைக்கலாம்..? அவளை வீழ்த்துவது மிகவும் கடினம். அவளை அடையக் காலமெல்லாம் போராட வேண்டியிருக்கும். அதைவிட, உன்னை நாடி நிற்கும் இந்த இளவரசியின் காதலை ஏற்கலாமே. இவளும் பல்லவ இளவரசிதானே.." — தாமோதரா கூற, அவனை ஆழமாக நோக்கினான், இறையா.

"மங்களேசன், ஹர்ஷன், தந்திதுர்கன், அவந்திகா என்று எனது இலக்குகளை நிர்ணயித்துவிட்டேன். எனது இலக்குகளை நோக்கி நான் நகரத்துவங்கிவிட்டேன். புதிய இலக்குகளை இனி நான் ஏற்க விரும்பவில்லை." — தீர்மானமாகக் கூறினான்.

அவர்கள் மலையிலிருந்து இறங்கிக் கொண்டிருக்க, பின்பாக விரைந்து வந்தனர், ஜெயஸ்ரீயும், பைம் பொழிலும்.

"இளவரசே! தவறாக நினைக்க வேண்டாம். விஜயேந்திரனை கேலி பேசியது நான்தான். எங்கள் இளவரசி அல்ல!" என்றபடி பைம்பொழில் ஓடி வந்து அவர்களது வழியை மறைத்து நின்றாள். ஜெயஸ்ரீ படபடக்கும் நெஞ்சத்துடன், துடிக்கும் இமைகளுடன் மேலேயே அவன் பின்பாக நின்றிருந்தாள்.

"அப்படியென்றால், இளவரசி தனது தோழியைக் கண்டித்து அமரச் செய்திருக்க வேண்டும் அல்லவா?" — இறையா குரலில் கடுமையை வரவழைத்தான்.

"தவறுதான்! என்னை மன்னித்துவிடுங்கள். இனி எங்கள் நாட்டிற்கு விருந்தாளியாக வரும் அனைவரையும் பணிவுடன் நடத்துவோம். இளவரசே! தாங்கள் எனது மாளிகைக்கு வர வேண்டும். பல்லவ மன்னர் மகேந்திரனின் சிற்றப்பன் ராஜவர்மனின் மகள் நான். நீங்கள் எனது மாளிகைக்கு வந்தால் எனது தந்தை மகிழ்வார்." — ஜெயஸ்ரீ கூறினாள்.

"நான் இன்னும் நாடோடிதான். இன்னும் அதிகாரபூர்வமான அரசனோ, இளவரசனோ இல்லை. எனது நாட்டை மீட்கும் பணியில் நான் போராடிக் கொண்டிருக்கிறேன். தற்போது எனது சிந்தையில் அதற்கு மட்டுமே இடம். உங்கள் அழைப்புக்கு நன்றி. ஆனால் அதனை ஏற்கும் நிலையில் நான் இல்லை." இறையா கூறிவிட்டுத் தொடர்ந்து நடக்க, அவனுடன் சேர்ந்து நடக்காமல், ஜெயஸ்ரீயை பரிதாபமாகப் பார்த்தபடி நின்றான், தாமோதரா.

காப்பாற்றியவனிடம் தன்னையே அர்ப்பணிக்கத் துடிக்கும் அந்த இளங்குமரியின் கண்களை நோக்கினான். தன் மனதை எப்படி இறையாவிடம் தெரிவிப்பது என்கிற குழப்பத்தில் அந்தக் கண்களில் நீர் ததும்பி நிற்பதைத் தாமோதரா கண்டான்.

"இளவரசி! பல சம்பவங்களால், சோதனைகளால் வாதாபி இளவரசர் மனம் நொந்து போயிருப்பதன் விளைவுதான் கடுமையான சொற்களைச் சிந்துகிறார். தாங்கள் அதற்காக வருந்தத் தேவையில்லை. அத்தி மலையானை தரிசிக்கக் காஞ்சிக்கு வந்திருக்கும் அவரது மனம் விரைவில் உங்கள் பக்கம் திரும்பும். உங்கள் காஞ்சியில்தான் திரும்பிய திக்குகளில் எல்லாம் தெய்வங்கள் இருக்கின்றனர். அவர்களை வேண்டிக்

கொள்ளுங்கள். நிச்சயம் உங்கள் எண்ணங்கள் பூர்த்தி யாகும்! — தாமோதரா கூற, ஜெயஸ்ரீ நம்பிக்கையுடன் அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

"அய்யா! சற்றுத் தொலைவில் முக்கூடல் சங்கமம் உள்ளது. பாலாறு, செய்யாறு, வேகவதி என்கிற மூன்று நதிகள் சங்கமமாகும் இடம். அங்கே உங்கள் இளவரசரை அழைத்துச் சென்று நதிகள் இணைவதைப் பார்க்க வையுங்கள். அதைக் கண்டாவது தனது மனதை எனது மனதுடன் சங்கமிக்கச் செய்வார் என்று நம்புகிறேன்." — ஜெயஸ்ரீ கூறினாள்.

தாமோதரா திகைத்தான். முந்தைய தினம் மாலைதான் அவள் இறையாவைக் கண்டிருக்கக் கூடும். அதற்குள்ளாகவா அவன் மீது தீவிரக் காதலைக் கொண்டுவிட்டாள் பல்லவ இளவரசி. ஏற்கெனவே, அவந்திகாவுடன் அவன் மனம் சங்கமம் ஆகிவிட்டதை அறிந்தால் அவள் என்ன நினைப்பாள்?

அவந்திகா என்பவள் இறையாவுக்கு எட்டாக்கனி. இந்தப் பல்லவ இளவரசியோ தானே நழுவி அவன் மடியின் மீது விழும் கனி.. இதனை இறையா விரைவில் புரிந்து கொள்வான்..

"மணமேடை சென்ற பிறகும் மனம் மாறியிருக்கின்றனர் பல மன்னர்கள். நீ தொடர்ந்து உனது முயற்சிகளைச் செய்து வா. வாதாபி இளவரசன் வெளியே முட்கள் நிறைந்த பலாக்கனியாகக் காட்சி தந்தாலும், உள்ளே அவன் இனிமை நிறைந்தவன்." — தாமோதரா கூறினான்.

"நானும் மாங்கனியைப் போன்றவள். வெளியே இனிமையாகவும், மென்மையாகவும் காட்சி தந்தாலும், மாங்கனியின் விதையைப் போன்று உறுதியானவள். இந்த மாங்கனியின் விதையில் உங்கள் இளவரசனின் மீது காதல் துளிர்த்துவிட்டது. அதனை மாமரமாக நான்

வளர்க்கப் போகிறேன். விரைவில் உங்கள் இளவரசர் அந்த மாமரத்தின் நிழலில் இளைப்பாறுவார்! வா பைம்பொழில் புறப்படுவோம்!" — விடுவிடுவென்று ஜெயஸ்ரீ மலையிலிருந்து இறங்க, பைம்பொழில் அவளைப் பின்தொடர்ந்து ஓடினாள். காண்பதற்கு இளங்குமரியாகத் தோன்றினாலும், அவள் எண்ணியதைச் சாதிக்கும் உறுதியைக் கொண்டிருப்பவள் என்பதைப் புரிந்து கொண்டாள், தாமோதரா.

★ ★ ★

**ம**கேந்திரன் கடக குகைகளுக்குச் சென்று வெற்றியுடன் திரும்பிவிட்டான். அத்திமலைத்தேவன் இருக்குமிடத்தை விரைவில் அறிந்து, அவனை ஆலயத்தில் மீண்டும் நிறுவி விடலாம். அரண்மனை அதிகாரிகளிடையே பரவிய தகவல் மெதுவாக அத்திமலை ஆலயத்தை அடைய, கோயில் அதிகாரிகளும், பட்டர்களும் பரபரப்பில் ஆழ்ந்தனர். தங்களது உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் வெளிக்காட்ட முடியாமல், ஒருவருக்கொருவர் புன்னகைகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

ராஜஸ்ரீயும், ராஜவர்மனும் அதிக எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்தனர். அன்று இரவுதான் அவர்கள் மாளிகைக்கு வந்து ரகசியத்தைப் பற்றி ஆராய்வதாகக் கூறியிருந்தான், மகேந்திரன். முக்கூடல் கடிகையில் பாலி மொழியைப் போதித்த வடுகதேவரை வரவழைக்கவும் மகேந்திரன் ஏற்பாடு செய்திருந்தான். பாலி, சமஸ்கிருதம், தமிழ் என்று அனைத்து மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார், வடுகதேவர்.

மகேந்திரன் வடபுலத்திலிருந்து வந்துவிட்டான் என்பதை அறிந்ததும், தானமல்லன் அவசரமாகச் செய்தி அனுப்ப, மகேந்திரன் களரிக்குச் சென்றான்.

அவன் நாட்டியிருந்த ஆளுமைகோல் முறிக்கப் பட்டதைக் காட்டினார், தானமல்லன்.

மகேந்திரன் திகைத்தான். "கவலை கொள்ள வேண்டாம் ஆசானே! விஜயேந்திரனை மண்ணைக் கவ்வச் செய்கிறேன்..!"

தானமல்லன் சிரித்தார். "அவன் நிறையவே பல்லவ மண்ணைக் கவ்விவிட்டான். உனது ஆளுமைகோலின்னை முறித்தது விஜயேந்திரன் அல்ல. வாதாபியின் எதிர்கால மன்னன் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் புலிகேசி என்கிற வாலிபன். தன்னை இறையா என்று அழைத்துக் கொள்கிறான்."

மகேந்திரன் அதிர்ந்தான். "புலிகேசியா? யாரவன்? எங்கிருந்து திடீர் என்று முளைத்தான்?"

"சாம்ராஜ்யங்கள் திடீரென்று முளைக்கும். திடீரென்று காணாமல் போய்விடும். நமது பல்லவம் மட்டுமே பாரதக் காலத்தில் துவங்கி இன்னும் ஆலமரமாகத் தழைத்துக் கொண்டு உள்ளது. ஆலமரம் என்றா சொன்னேன்.. இல்லை தேவ உடும்பர அத்திமரம்! அவனால்தான் பல்லவத்திற்குப் பெருமை. அவன் இருக்கும்வரை பல்லவத்திற்குப் பயமில்லை. நீ அந்தப் புலியின் பல்லைப் பிடுங்கி புலிநகமாக அணிந்து கொள்!" — தானமல்லன் கூறினான்.

பாவம் தானமல்லன். அத்திமலையானின் பிரதிமை காணாமல் போன விவரம் அவனுக்கும் இன்னும் தெரியாது. காஞ்சியின் பெரும்பான்மை மக்களுக்கே இன்னும் இந்த விவரம் தெரிந்திருக்கவில்லை. கேள்விப் பட்ட சிலரும் அதனைப் புரளி என்றே நம்பிக் கொண்டிருந்தனர். கடக குகையில் ரணதிலகன் ஒளித்து வைத்திருந்த சுவடியைக் கண்டு எடுத்திராவிட்டால் தானமல்லன் கூறியதைக் கேட்டுச் சற்றே மனம் குழம்பியிருப்பான். ஆனால் அத்திமலைத்தேவன் பதுக்கப்பட்டிருக்கும் இடத்தினைக் குறிப்பிடும் சுவடி கிடைத்துவிட்ட நிலையில் அன்றைய இரவே ரகசியத்தை அறிந்து தேடுதல் வேட்டையைத் தொடங்கிவிட வேண்டும் என்று தீர்மானித்திருந்தான்.

"அந்தப் புலிகேசி எங்கிருந்தாலும் வரவழையுங்கள். நான் அவனுடன் மோதத் தயார்..!" — தானமல்லனிடம் கூறிவிட்டு ராஜவர்மனின் மாளிகையை நோக்கிப் புரவியை வேகமாகச் செலுத்தினான்.

"மல்லா! இது உனக்கே நியாயமா? ரகசியச் சுவடியுடன் வந்துவிட்டேன் என்று செய்தி மட்டும் அனுப்பிவிட்டுக் கண்களில் படாமல் இருக்கின்றாயே. நான் ஆர்வத்தின் உச்சத்தில் இருக்கின்றேன். இன்னும் சற்று நீ தாமதித்திருந்தாலும், எனக்குச் சித்தமே கலங்கி இருக்கும்!" — சிரித்தபடி ராஜஸ்ரீ கூறினாள்.

"ஐயோ..! பல்லவத்தின் மதியூகி நீங்கள் அன்னையே. உங்களுக்குச் சித்தம் கலங்கிப் போனால், பிறகு சுவடியில் உள்ள ரகசியத்தை யாரால் யூகிக்க முடியும்? பிறகு அத்திமலைத்தேவன் கிடைத்தது போல்தான்!" — மகேந்திரன் குறும்புடன் சிரித்தபடி ராஜஸ்ரீயுடன் நடந்தான்.

அனைவரும் மகேந்திரனுக்காக ஆவலுடன் காத்திருந்தனர். ராஜவர்மன், ராஜஸ்ரீ, ஜெயஸ்ரீ, தலைமை அமைச்சர் காடவராயர், அரண்மனை அதிகாரி, ஜெயதேவர் என்று பலரும் அங்கே குழுமியிருந்தனர்.

தனது உடைவாளில் பதுக்கியிருந்த சுவடியை வெளியே எடுத்ததும், அனைவரது கண்களும் ஆவலில் மின்னின. வியக்கத்தக்க வகையில் ஜெயஸ்ரீ மட்டும் அதிக ஆர்வமின்றி சுவடியைப் பார்த்துவிட்டு அமைதியாக இருந்தாள். அவளைச் சற்றே வியப்புடன் கவனித்த மகேந்திரன் அவள் ஏதோ யோசனையில் இருப்பதை உணர்ந்தான்.

ராஜவர்மனிடம் சுவடியை நீட்டினான், மகேந்திரன். "சிற்றப்பா! ரணதிலகன் கடக குகையில் பதுக்கியிருந்த சுவடி இதுதான்."

“ரணதிலகனும், களப்பிரர்களும் சிலையைக் கடத்தி இருக்க, அநியாயமாக ஜெயவர்மனை அனைவரும் சந்தேகித்தனர், உனது தகப்பன் உள்பட!” ராஜவர்மன் சோகத்துடன் கூறினான்.

“ஜெயவர்மனை யாருமே புரிந்து கொள்ளவில்லை. இந்தச் சுவடி ஒன்றுதான் அவனைக் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப் போகின்றது. அவ்வகையில் இதனைத் தேடிக் கண்டுபிடித்த உனக்கு ஜெயவர்மனின் ஆசிகள் எப்போதும் உண்டு!” — நெகிழ்வுடன் ஒலித்தது ராஜவர்மனின் குரல்.

“போதும்! சுவடியை வடுகதேவரிடம் ஒப்படையுங்கள். அவர் அதனை வாசித்து நமக்குப் பொருள் கூறட்டும்!” — ராஜஸ்ரீ கூற, சுவடியை வடுகதேவரிடம் நீட்டினான், ராஜவர்மன்.

வடுகதேவர் ஒருமுறை மௌனமாகச் சுவடியை வாசித்தார். பிறகு பாலி மொழியில் அதனை ஒருமுறை அனைவரும் கேட்கும்படி வாசித்தார்.

வாசித்து முடித்தவர், மகேந்திரனை நோக்கினார். “நான் தமிழில் இதன் பொருளை உரைக்கிறேன். அதனைச் சுவடியில் வடித்துத் தருகிறேன்!” என்றபடி பாலியில் எழுதப்பட்டிருந்த குறிப்பைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

**‘வெள்ளை களர்குலம்**
**வளர்த்த மூன்றாம் மதிமலை**
**குபேரன் திக்கில் நிற்கும்**
**வனவரச துர்க்கையின் வசம்**
**கிடக்கும் ஆதி ஒருபுறம்**
**நிற்கும் ஆதி மறுபுறம்**
**மத்தியில் பாதியாக**
**காளியின் உக்கிரம்**
**சிம்மத்தின் சீற்றம்**
**யானையின் மதம்**
**கொண்டு நிற்கிறது.**

குபேரன் எமனாக
மாறும் போது
பொக்கிஷங்கள் கைமாறும்.'

வடுகதேவர் வாசித்து முடித்ததும், அனைவரும் ஒருவரையொருவர் நோக்கினர். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை என்பது அவர்களது குழப்பமான பார்வையில் இருந்தே புலப்பட்டது.

"இதென்ன இவ்வளவு சிக்கலான, நீளமான புதிர். இதனை எப்போது நாம் அறிந்து எப்போது நமது அத்திமலையானை மீட்பது?" — அலுத்துக் கொண்டார், தலைமை அமைச்சர் காடவராயர்.

"பொறுமை அவசியம்! அத்திமல்லத்தேவனின் ஆற்றலை உணர்ந்தவர்கள், பிரக்ஞுதாரா என்கிற ஆற்றல்மிக்கச் சித்தினியின் உதவியோடு அதனை அபகரித்தவர்கள், அதனைப் பல்லவத்தைவிட்டு எடுத்துச் செல்ல முடியாமல் தவித்திருக்கின்றனர். காரணம், உனது தந்தை சிம்மவிஷ்ணு களப்பிரர்களின் மீது தொடுத்த போர். எனவே தாங்கள் தப்பினால் போதும் என்று பொக்கிஷங்களைப் பத்திரப்படுத்திவிட்டார்கள். யார் கையிலும் சிக்காத வண்ணம் மிக எச்சரிக்கையாக அத்திமலையானை பதுக்கியவர்கள், சிலை உள்ள இடத்தை எளிதாகவா உரைப்பார்கள்..? இப்படிச் சூசகமாகப் பிறர் அறியா வண்ணம்தான் கூறுவார்கள். ரணதிலகன் தன்னைத் தவிர வேறு யாரும் ரகசியத்தை அறியக்கூடாது என்பதற்காகத் தனது பாலிமொழி புலமையைக் காட்டி எழுதியிருக்கும் ரகசியம். இதன் பொருளை அறிந்து, புதிரை விடுவிப்பதில்தான் நமக்குச் சவால் காத்திருக்கிறது. இந்தப் புதிரை விடுவித்தோம் என்றால் அத்திமலையான் இருக்குமிடத்தை அறியலாம்." ராஜவர்மன் கூற, மகேந்திரன் ராஜஸ்ரீயை பார்த்தான்.

அவளது சிந்தனைக் குதிரை ஏற்கெனவே பறந்து கொண்டிருந்தது.

"அன்னையே! ஏதாவது தோன்றுகிறதா?" — மகேந்திரன் கேட்டான்.

"சிம்மவிஷ்ணு ஈன்ற சிங்கக்குட்டியே! சிங்கம் வேட்டையாடுவதைப் பார்த்திருக்கிறாயா? மான்கூட்டம் சிங்கத்தைக் கண்டதும் சிதறி ஓடும். சிங்கம் ஒரு மானைக் குறி வைத்துதான் பாய்ந்து ஓடும். வேகமாக ஓடும், அந்த வேளையில் அந்தச் சிங்கம் கடந்து ஓடும் மற்ற மான்களைத் தாக்காது. தனது இலக்கில் உள்ள அந்தக் குறிப்பிட்ட மானை நோக்கித்தான் ஓடும். இலக்கையும் மாற்றாது. பக்கத்தில் ஓடும் வேறு ஒரு மானையும் கொல்லாது. அதுபோல், மான்கூட்டமாகப் பல புதிர்கள் இந்தச் சுவடியில் உள்ளன. சிங்கம் ஒரே ஒரு மானைக் குறிவைப்பது போன்று, நாமும் ஒரே ஒரு புதிரைக் குறிவைப்போம். ஒரு முடிச்சு அவிழ்ந்தால், பல முடிச்சுகள் அவிழலாம்." — ராஜஸ்ரீ கூறினாள்.

"ராஜஸ்ரீ! நீ குறிவைத்திருக்கும் புதிர் எது?" — ராஜவர்மன் கேட்டான்.

"மூன்றாம் மதிமலை! இந்தத் தகவல்தான் எனது சிந்தையில் ஒரு சிறு சுழற்சியை உண்டு செய்துள்ளது. எனவே அதையே எனது இலக்காக வைத்திருக்கிறேன். மூன்றாம் மதிமலை..! அனைவரும் அந்தச் சொல்லை நோக்கியே பயணிப்போம்!" — ராஜஸ்ரீ கூறினாள்.

மகேந்திரனின் பார்வை அமைதியாக அமர்ந்திருந்த ஜெயஸ்ரீயின் மீது தாவியது.

"எனது தங்கைக்கு என்ன நேர்ந்தது. வழக்கமாகப் புதிர் என்றால் நான் விடுவிக்கிறேன் என்று அனைவருக்கும் முன்பாகப் பாய்பவள், இன்று ஏன் அமைதியாக இருக்கிறாள்?"

ராஜவர்மன் சிரித்தான். "களரியில் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து அவள் இன்னமும் மீளவில்லை என்று நினைக்கிறேன், மகேந்திரா!"

மகேந்திரன் வியந்தான். "களரியில் என்ன நடந்தது?" — மகேந்திரன் புருவங்களை உயர்த்தினான்.

"ஒன்றுமில்லை அண்ணா! பல்லவ மல்லர்களுக்கு ஆதரவாக நானும், பைம்பொழிலும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தோம். அதனால் எரிச்சல் அடைந்த சேர நாட்டு மல்லன் விஜயேந்திரன் எங்களைத் தாக்குவதற்கு வந்தான். அப்போது கூட்டத்தில் இருந்த புலிகேசி என்பவர் பாய்ந்து அவனை அடித்து வீழ்த்தி எங்களைக் காப்பாற்றினார். அதனைப் பற்றித்தான் தந்தையார் கூறுகிறார்.." ஒருவித சோகத்துடன் ஜெயஸ்ரீ கூற, மகேந்திரனுக்கு உடனே தானமல்லர் கூறியது நினைவுக்கு வந்தது.

'விஜயேந்திரன் நிறையவே பல்லவ மண்ணைக் கவ்விவிட்டான். அவனை வீழ்த்தியது புலிகேசி என்கிற வாலிபன். தன்னை இறையா என்று அழைத்துக் கொள்கிறான். அவன்தான் உனது ஆளுமைகோலினை முறித்தவன்..'

தானமல்லன் குறிப்பிட்ட வாலிபனும், ஜெயஸ்ரீ குறிப்பிட்ட வாலிபனும் ஒருவனே என்பதை உணர்ந்து கொண்டான், மகேந்திரன்.

"ஜெயஸ்ரீ! அந்தப் புலிகேசி எந்த நாட்டைச் சேர்ந்தவன்?" அவளது முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி கேட்டான், மகேந்திரன்.

ஜெயஸ்ரீயின் முகம் கதிரவனைக் கண்ட கமலமாக மலர்ந்தது. "அண்ணா! வாதாபி அரியணைக்காகப் போராடும் ஒரு இளவரசராம். அவரது சிற்றப்பனுக்கு எதிராகப் படைகளைத் திரட்டி வருகிறாராம்.." அவளது மலர்ந்த முகம் மகேந்திரனுக்கு எதையோ உணர்த்தியது.

*தனது வருங்கால மைத்துனனுடன்தான் தான் மல்யுத்தம் செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டான்.*

*"அந்தப் புலிகேசிக்கு நன்றியைக் கூறினாயா இல்லையா?" வேண்டும் என்றே தொடர்ந்து அவனைப் பற்றிப் பேசினான், மகேந்திரன். ஜெயஸ்ரீயின் உள்ளக் கிடக்கை என்ன என்பதை அறிவதில் முனைந்திருந்தான், அவளது அண்ணன்.*

*"நன்றி கூறத்தான் சென்றேன், அண்ணா! ஆனால், விஜயேந்திரன் மீது தவறில்லை. அவனைக் கேலி செய்து அவனது கோபத்தைக் கிளறிய உங்கள் மீதுதான் தவறு என்று முகத்தில் அறைவது போன்று கூறிவிட்டான்" — கோபத்துடன் கூறினாள், ஜெயஸ்ரீ.*

*"அவ்வாறு உன்னிடம் கூறிவிட்டு, பிழைத்தானா என்ன?" மகேந்திரன் சிரித்தான்.*

*"ஆமாம்! நீங்கள் ஆண்கள் அனைவரும் அரிச் சந்திரர்கள்! உண்மைகளை மட்டுமே உரைப்பீர்கள்." — வெடுக்கென்று கூறினாள் ஜெயஸ்ரீ.*

*"அவன் அரிச்சந்திரனா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நீ அவனது சந்திரமதியாகத் திகழ வேண்டும் என்று எண்ணுகிறாய்!" — மகேந்திரன் சிரித்தபடி கூற, ஜெயஸ்ரீ அவனைக் கோபத்துடன் முறைக்க, அப்போது—*

*அதுவரையில் தீவிர யோசனையில் இருந்த ராஜஸ்ரீ பரபரப்புடன் மகேந்திரனை நோக்கினாள். அவள் திடீரென்று துள்ளி எழுந்து தன்னை நோக்கி வினாவை எழுப்பியதும், மகேந்திரன் அதிர்ந்தான்.*

*"என்ன கூறினாய், மல்லா?" இமைகள் துடிதுடிக்க ராஜஸ்ரீ கேட்டாள்.*

*"அரிச்சந்திரனுக்குச் சந்திரமதியாகத் திகழ நினைக்கிறாய் என்று ஜெயஸ்ரீயை கேலி செய்தேன், அவ்வளவே!"*

"சந்திரமதி.. ஆமாம்! அதுதான் விடை. மகேந்திரா! மதிமலை என்பதற்குப் பொருள். சந்திரகிரி. கிரி என்பதைத்தானே மலை என்கிறோம்.. ரணதிலகன் சந்திரகிரி என்பதைத்தான் தனது சுவடியில் குறிப்பிடுகிறான்."

"அன்னையே! சந்திரகிரியில் இருந்துதானே நான் சுவடியை மீட்டு வந்தேன். அப்படியென்றால், அங்குதான் அத்திமலைத்தேவனின் சிலை இருக்கிறதா..?" — மகேந்திரன் கேட்டான்.

"இல்லை மல்லா! மூன்றாம் மதிமலை என்று கூறியிருப்பதால் மொத்தம் மூன்று சந்திரகிரிகள் இருக்க வேண்டும்.." என்றபடி அமர்ந்தவள், மீண்டும் கைகளைத் தட்டியபடி எழுந்தாள்.

'அட! என்னை ஜெயவர்மன் சிறையெடுத்த பாலகாடம் சந்திரகிரியின் அடிவாரத்தில் அல்லவா உள்ளது. அதைக் கைப்பற்றத்தானே எனது தந்தைக்கும், உனது பாட்டனார் சிம்மவர்மனுக்கும் போர் நிகழ்ந்தது. அங்கும் களப்பிரர்கள்தானே ஆட்சி செய்தனர்.'

தன் மீது மையல் கொண்டு ஜெயபாலன் என்கிற களப்பிரர் செய்த ஜாலங்கள் ராஜஸ்ரீக்கு நினைவுக்கு வந்தன. தனது தந்தையின் வெறுப்பினைச் சம்பாதித்து, அழிவைத் தேடிக்கொண்ட ஜெயபாலன் சந்திரகிரியைத் தானே ஆண்டு கொண்டிருந்தான்.

ஹூனர்களிடமிருந்து பிரிந்து ஸ்வேத ஹூனர்களாகத் திகழ்ந்து பின்பு பிரக்ஞுதாராவினால் புத்தபரர்கள் என்று அழைக்கப்பட்டுப் பின்பு களப்பிரர்களாக மாறியவர்கள். தங்களைச் சந்திரகுலம் என்றுதானே அழைத்துக் கொண்டார்கள்.

"'வெள்ளை களர்குலம் வளர்த்த மூன்றாம் மதிமலை' என்கிற முதல் இரண்டு அடிகளில் உள்ள தகவலை நான் அறிந்துவிட்டேன். சீனத்திலிருந்து வந்தவர்கள்

ஹூனர்கள். அவர்கள் ஸ்வேதா ஹூனர்களாகப் பிரிந்து காடுகளில் வசித்தனர். வெள்ளை ஹூனர்கள்தான் களப்பிரர்களாக மாறினார்கள். அவர்களுடைய குலம் சந்திரகுலம். அவர்கள் வசித்த இடங்களைச் சந்திரகிரி என்றே அழைத்தனர். கடக குகைகள் இருக்குமிடம் ஒரு சந்திரகிரி. அங்குதான் நீ சென்று சுவடியுடன் வந்தாய், மகேந்திரா! எனது தந்தை ஜெயபாலனை வென்ற இடம் ஒரு சந்திரகிரி. அது வேங்கடத்திற்குச் செல்லும் பாதையில் உள்ளது. மூன்றாவதாக எங்கோ ஒரு சந்திரகிரி இருக்கிறது. அங்குதான் நமது அத்திமலைத்தேவன் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறான். மூன்றாம் சந்திரகிரியை தேடுங்கள். அங்கே சென்றால்தான் புதிரின் மற்ற விவரங்களை அறிந்து கொள்ள முடியும்." — பிரமிப்புடன் கூறினாள், ராஜஸ்ரீ.

அனைவரும் அவளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"தசகுமாரர்களை மீண்டும் வரவழையுங்கள், தலைமை அமைச்சரே. அவர்களுடன் நானே அத்திமலைத் தேவனைத் தேடப் போகிறேன். அவனை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டுதான் மறுவேலை!" — என்று கூறிய மகேந்திரன் சிறிது இடைவெளிவிட்டு, பிறகு மீண்டும் தொடர்ந்தான்.

"ஆனால் அதற்கு முன்பாக நான் செய்ய வேண்டிய பணி ஒன்று உள்ளது. எனது ஆளுமைகோலினை முறித்த புலிகேசியுடன் மல்யுத்தம் நடத்தி அவனை வீழ்த்தப் போகிறேன்.." ஓரக்கண்களால் ஜெயஸ்ரீயை நோக்கியபடி கூற, அவள் அவனைத் திரும்பி நோக்கினாள்.

அவள் முகத்தினில் பிரதிபலித்தது, ஆர்வமா, கலவரமா? மகேந்திரனால்· புரிந்து கொள்ள இயலவில்லை.

## 25. சிங்கமல்லன்! புலிமல்லன்!

'பல்லவ இளவரசன் மகேந்திர மகாமல்லனுக்கும் வாதாபியைச் சேர்ந்த புலிகேசிக்கும் இன்று மாலை முக்கூடல் கடிகையின் களரியில் மல்யுத்தம் நடைபெறும்.'

— நகரம் முழுவதும் தண்டோரா ஒலிகளுடன் அறிவிப்பு செய்யப்பட்டது.

முக்கூடல் வேங்கடவன் ஆலயத்திற்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு, பைம்பொழில் உடன் வர, இரதத்தில் புறப்பட்டாள் ஜெயஸ்ரீ. கூராளம் மாளிகையில் நுழைந்தாள். மாளிகையின் உப்பரிகையில் தேகப்பயிற்சி செய்து கொண்டிருந்த இறையா, இரதத்தில் இருந்து இறங்கி மாளிகையினுள் நுழையும் ஜெயஸ்ரீயை பார்த்தான்.

ஒருகணம் செயலற்று நின்றவன், நண்பன் தாமோதராவைத் தேடினான். உப்பரிகையின் நிழலான பகுதியில் அமர்ந்து சுவடிகளில் கவிதை ஒன்றை வடித்துக் கொண்டிருந்த தாமோதராவை கையசைத்து அருகே அழைத்தான்.

"தாமோதரா! அன்று நம்மை ஆலயத்தில் சந்தித்த பல்லவ இளவரசி இங்கே வந்திருக்கிறாள். அவளிடம் பேசித் திருப்பி அனுப்பிவிடு. நான் யாரையும் சந்திக்கும் மனநிலையில் இல்லை." தொடர்ந்து தனது தேகப் பயிற்சியில் ஈடுபட்டான், இறையா.

"பல்லவ நாட்டில் தங்கியிருக்கிறோம், நாம் அவர்களது விருந்தாளிகள் இறையா! பல்லவ இளவரசியைச்

சந்திக்காமல் அவமதித்தால் பிரச்னைகள் எழலாம்." — தாமோதரா கூறினான்.

"தாமோதரா! நாம் அத்திமலையானை தரிசிப்ப தற்குத்தான் காஞ்சிக்கு வந்தோம். தரிசனம் முடிந்ததும் உடனே புறப்படலாம் என்றேன். நீதான் முக்கூடல் கடிகையையும், மல்யுத்த களரியையும் காணலாம் என்று அங்கே அழைத்துச் சென்றாய். அந்த மல்யுத்த வீரனால், பெண்களுக்கு ஆபத்து என்பதால் நான் அவர்களைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. என்னை மகேந்திரன் நாட்டிய ஆளுமைகோலையும் முறிக்கச் சொன்னது நீதான். இப்போதே நான் பல்லவ நாட்டைவிட்டுப் புறப்படத் தயாராக உள்ளேன். நீதான் மல்யுத்தத்தை முடித்துவிட்டுப் புறப்படலாம் என்றாய். 'இப்போது எதற்காக அந்த இளவரசியைச் சந்திக்க வேண்டும் என்கிறாய்?" — இறையா எரிச்சலுடன் கேட்டான்.

"காரணம் உள்ளது, இறையா! மங்களேசனை வாதாபி அரியணையில் இருந்து இறக்கப் போகிறோம். மிகவும் பலம் படைத்த ஹர்ஷனை வீழ்த்தப் போகிறோம். பல்லவ இளவரசியின் அன்பைப் பெற்றால், உனக்குப் பல்லவப் படைகள் உதவக்கூடும் அல்லவா? அதற்காகத்தான் அவளைச் சந்திக்கச் சொல்கிறேன்." — தாமோதரா கூறினான்.

"அவந்திகா எனக்காகவே பிறந்தவள் என்று எனது மனத்தில் உருவேற்றினாய். இங்கே இந்தப் பெண்ணை ஏற்பதன் மூலம் பல்லவப் படைகளின் உதவியை நாடலாம் என்கிறாய். பெண்களின் மனத்தை மயக்கி அவர்களின் மூலம் படைபலத்தைப் பெருக்க வேண்டும் என்கிற உனது திட்டத்தை நான் ஏற்கவில்லை. எனது ஆற்றலின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. மங்களேசனையும், ஹர்ஷனையும் எனது பலத்தைக் கொண்டு நான் வீழ்த்துவேன். எனக்குப் பல்லவத்தின் உதவி தேவையில்லை. அந்தப் பெண்ணை உடனே இந்த மாளிகையைவிட்டு விரட்டுகிறாயா, இல்லை நான்

மல்யுத்தம் செய்யாமல் இப்போதே கங்க நாட்டிற்குக் கிளம்பிவிடுவேன்.." இறையா உறுதியுடன் சொல்ல, வேறு வழியின்றி உப்பரிகையிலிருந்து இறங்கிப் போனான், தாமோதரா.

கூராள மாளிகையின் முற்றத்தில் வரிசையாக மண்தொட்டிகளில் செடிகள் நடப்பட்டிருந்தன. அவற்றை நோட்டம்விட்டபடி நின்றிருந்த ஜெயஸ்ரீ, படிகளில் காலணிகள் ஒலிக்க, ஆர்வத்துடன் திரும்பி நோக்கினாள். இறையாவை எதிர்பார்த்திருந்த அவள், தாமோதராவைக் கண்டதும் ஏமாற்றம் அடைந்தாள்.

"வாதாபி இளவரசர் இல்லையா?" — மெல்லிய குரலில் கேட்டாள் ஜெயஸ்ரீ.

"இன்று மல்யுத்தம் செய்யப் போகிறான் அல்லவா? அதுதான் தேகப்பயிற்சி செய்து கொண்டிருக்கிறான்." — தாமோதரா கூறினான்.

"எனது அண்ணனுடன் அவர் மல்யுத்தம் செய்யப் போகிறார். எனது வாழ்த்துகளைக் கூறிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.." — கிசுகிசுத்த குரலில் ஜெயஸ்ரீ கூறினாள்.

"நான் சொல்லிவிடுகிறேன்." — தாமோதரா தயக்கத் துடன் கூறினான்.

கங்க நாட்டிற்குச் சென்று தாய்மாமனைச் சந்தித்து உதவி கோரி, படைகளைத் திரட்டி எந்தக் காலத்தில் அவன் மங்களேசனையும், ஹர்ஷனையும் ஒழிப்பது..? கையில் வெண்ணை திரண்டு வருகிறது. ஜெயஸ்ரீயின் காதலை ஏற்றால், மகேந்திரனே படை எடுத்துச் சென்று வாதாபி அரியணையை மீட்டுத் தருவான் அல்லவா? பல்லவ இளவரசியை பட்டத்து அரசியாகவும், அவந்திகாவை மனதிற்கு இனியவளாகவும் இருத்திக் கொள்ளலாமே. ஆனால் பல்லவ இளவரசியைச் சந்திக்கவும் மறுக்கிறான். தயக்கத்துடன் உப்பரிகையை நோக்கினான்.

"இளவரசர் தேகப்பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது யாரையும் சந்திக்கும் வழக்கம் இல்லை" — தாமோதரா கூற, வேறு வழியின்றித் தலையை அசைத்து விட்டுத் திரும்பி நடந்தாள். அவள் வேதனையுடன் புறப்பட்டுச் செல்வதைக் கண்ட தாமோதரா, மீண்டும் உப்பரிகைக்குச் செல்லாமல் தனக்காக ஒதுக்கப் பட்டிருந்த ஜாகையை நோக்கி நடந்தான். தாமோதரா தனது அறையினுள் நுழைந்ததும்தான் தாமதம், ஜெயஸ்ரீ திரும்பி வந்து வேகமாக நடந்து உப்பரிகையில் ஏறினாள்.

உப்பரிகை மாடத்தின் அருகே நின்று தேகப்பயிற்சி செய்து கொண்டிருந்தான் இறையா! முறுக்கேறிய அவனது தசைகளும், வேர்வை பொங்கிய அவனது உடலையும் கவனித்த ஜெயஸ்ரீ, தனது தமையன் மகேந்திர மல்லனுக்குச் சரியான போட்டியாளன் கிடைத்தான் என எண்ணினாள்.

மெல்லியதாக எழுந்த நூபுரங்களின் ஒலியைச் செவியுற்ற இறையா திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினான். ஜெயஸ்ரீயைக் கண்டதும் அவனுடைய முகம் கோபத்தில் சிவந்தது.

"இங்கு எதற்கு வந்தீர்கள்? நான்தான் யாரையும் சந்திக்க விரும்பவில்லை என்று கூறியிருந்தேனே. தாமோதரா எங்கே?" சால்வை ஒன்றை எடுத்துத் தனது உடலை மறைத்துக் கொண்டவன், கீழ் நோக்கிக் குரல் கொடுத்தான்.

"தாமோதரா!"

துணிவை வரவழைத்தபடி ஜெயஸ்ரீ பதில் கூறினாள். "உங்கள் நண்பரின் மீது தவறு இல்லை. அவர் ஏமாந்திருக்கும் போது நான் மேலே வந்துவிட்டேன். தங்களை நேரில் சந்தித்து இன்றைய போட்டிக்கு வாழ்த்துகளைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்." ஆவலுடன் அவனை நோக்கினாள்.

"உனது அண்ணனைப் போன்று நான் மகாமல்லன் இல்லை. ஆனால் சவால் என்று வரும் போது எதையும் ஏற்க சித்தமாக இருப்பவன்." — இறையா கூறினான்.

"ஒருவேளை நான் தங்களிடம் சவால்விட்டால் என்னையும் ஏற்பீர்களா?" — ஜெயஸ்ரீ கூற, அவளைத் திகைப்புடன் நோக்கினான். அவனது திகைப்பு கோபமாகக் கொழுந்துவிட்டெரிந்தது.

"இதற்குத்தான் நான் உன்னைச் சந்திக்கத் தயாராக இல்லை என்றேன்... இளவரசி என்றால் காதல் பாடம்தான் படிக்க வேண்டுமா? எனக்குப் பல கடமைகள் உள்ளன. காதலை நினைத்துப் பார்க்கும் நிலையில் நான் இல்லை." — இறையா கூற, அவனை ஏக்கத்துடன் நோக்கினாள் ஜெயஸ்ரீ.

"தவறாக நினைக்க வேண்டாம். இம்மாதிரி எண்ணங்கள் எல்லாம் இதற்கு முன்பாக எனக்குத் தோன்றியதே கிடையாது. உடலால் நான் குமரியாக இருக்கிறேனே தவிர, உள்ளத்தில் நான் குழந்தைதான். ஆனால் என்னுள் இருக்கும் குமரியைத் தட்டி எழுப்பியது உங்கள் வீரம்தான். பல்லவர்கள் எதையும் கலைக்கண்ணுடன் பார்ப்பதில் வல்லவர்கள். நான் தங்களை அத்தகைய கண்ணுடன் பார்த்ததால்தான் காதலில் விழுந்துவிட்டேன். எனது அப்பாவித்தனத்தை மன்னித்து எனது காதலை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் அரியணை மீட்பு போராட்டத்தில் நானும் ஒரு சிறு அணிலாகக் கலந்து கொள்கிறேன்." — மனதில் தோன்றிய படி ஜெயஸ்ரீ பேசிக் கொண்டிருக்க, இறையாவுக்கு அந்தச் சூழ்நிலையே அருவருப்பினைத் தந்தது.

எதையாவது சொல்லி, அவளை அங்கிருந்து கழற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்தவன், அவளைக் கீழ்க்கண்ணால் வெறித்தான்.

"என் மீது உண்மையாகவே காதல் கொண்டிருக் கிறாயா?" — இறையா கேட்டான்.

அவனது கல் உள்ளம் கனிய ஆரம்பித்துவிட்டது என்று எண்ணிய ஜெயஸ்ரீ, புன்சிரிப்புடன் மேலும் கீழுமாகத் தலையசைத்தாள்.

"அப்படியானால் எனக்காக எதையும் செய்வாயா?" — விடாப்பிடியாகக் கேட்டான், இறையா.

"நிச்சயம் செய்வேன்.." — உற்சாகத்துடன் தலையாட்டினாள் ஜெயஸ்ரீ.

"அப்படியென்றால் ஒன்று செய்யேன்! நான் இன்றைய மல்யுத்தத்தில் வெற்றிபெற்றால்தான் உன்னைக் காதலிப்பேன். உன் அண்ணனிடம் சொல்லி இன்றைய மல்யுத்தத்தில் நான் வெற்றி பெற வேண்டும் என்று சொல். நான் வெற்றி பெற்றால் உன்னை ஏற்றுக் கொள்கிறேன்." — இறையா கேட்டான்.

காரணத்தோடுதான் இறையா இத்தகைய நிபந்தனை ஒன்றை விதித்திருந்தான். தமையன் மீது பாசம் கொண்டவள், அவன் தோல்வி அடைவதை ஒரு போதும் விரும்பமாட்டாள். மேலும் இவனது வீரத்தால் ஈர்க்கப்பட்டு, தன் மீது காதல் வசப்பட்டுவிட்டதாகக் கூறும் பல்லவ இளவரசி, மல்யுத்தத்தில் தன்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்கிற கோழைத்தனமான கோரிக்கையை முன்வைத்தால், இவனை வெறுத்துத் தனது காதலைக் கைவிட்டுவிடுவாள் என்று எதிர் பார்த்தே இத்தகைய கோரிக்கையினை முன்வைத்தான்.

ஆனால் முதலில் திகைத்துப் போன ஜெயஸ்ரீ, உடனே சுதாரித்துக் கொண்டாள். "இளவரசே! எனக்காக எனது அண்ணன் எதையும் செய்வான். அவன் இன்று உங்களிடம் தோற்றுப் போவான்" என்று உறுதியுடன் கூறிவிட்டு, உப்பரிகையைவிட்டு இறங்கி ஓடினாள்.

இறையா வாழ்வையே வெறுத்துவிட்டான். காதல் அவ்வளவு கொடியதா? நேற்று சந்தித்த இவனை அடைய வேண்டும் என்பதற்காகச் சிறு பிராயத்தில்

இருந்து உறவாடிய அண்ணனைத் தோற்கச் சொல்கிறேன் என்று கூறிவிட்டுச் செல்கிறாளே. கேவலம் தனது காதல் உணர்வுக்காக நாடாளும் அரசனையே தலைகுனியச் செய்வாளாமே..?

எல்லாம் இந்தத் தாமோதராவினால் வந்தது. புலவனா யிற்றே! நல்வழி காட்டுவான் என்று நினைத்தால் புதிய பிரச்னைகளில் சிக்கவிடுகின்றானே. அவனுக்கென்ன.. மனைவியையும், மகனையும் கனோஜ் நகரில் விட்டு விட்டு தேசாந்தரம் செல்பவன். இவனைப் பெண்களின் வலையில் சிக்க வைத்துவிட்டு, அவன் நிம்மதியாகக் கவிதை புனைந்து கொண்டிருக்கிறான்.

தற்செயலாகத் தனது அறையைவிட்டு வெளியே வந்த தாமோதரா, ஜெயஸ்ரீ ஓடிச்செல்வதைக் கண்டு திகைத்து உப்பரிகைக்குச் சென்றான். இறையா உப்பரிகையின் கைப்பிடிச் சுவரில் இருகைகளையும் பதித்து, சினத்துடன் அனல் பெருமூச்சினை விட்டுக்கொண்டிருந்தான்.

"என்ன நடந்தது, இறையா?" — தாமோதரா கேட்க, சடாரென்று திரும்பி அவனை நோக்கினான், இறையா.

"எல்லாம் நல்லவிதமாக நடந்தது புலவரே! பல்லவ இளவரசி என்னைப் பல்லவத்தின் மருமகப்பிள்ளையாக மாற்றப் பார்க்கிறாள். நான் உன்னிடம் அப்போதே சொன்னேன் அல்லவா? எனது குறிக்கோள்களைத் திசை மாற்றும் எதையும் என்னை அணுகவிட வேண்டாம் என்றேனே. பல்லவ இளவரசி என்னைத் தீவிரமாகக் காதலிக்கிறாள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. மல்யுத்தம் செய்யத் தேவையில்லை. வா! இப்போதே நாம் கங்க நாட்டிற்குப் போவோம்." — இறையா இறைஞ்சினான்.

"விளையாடாதே, இறையா! நீயும் மகேந்திரனும் மல்யுத்தம் செய்யப்போவதாக ஊரெங்கும் அறிவித்து விட்டார்கள். போட்டியைச் சந்திக்காமல் நீ கிளம்பினால், காலம் முழுவதும், மல்யுத்த போட்டியைத் தவிர்த்தவன்

என்கிற பெயர் நிலைத்து நிற்கும். நீ அஸ்வமேத யாகம் நடத்தி மகாசக்கரவர்த்தியாகத் திகழ்ந்தாலும், இந்தக் களங்கம் நீங்காது. பல்லவ இளவரசி உன்னைக் காதலிப்பதால் உனது கடமைகளில் நீ தவறப் போவதில்லையே. அவளை நீ காதலிக்காதவரை நீ ஏன் கவலைப்பட வேண்டும்? விருப்பம் இருந்தால் காதலி. இல்லையேல் அவளைப் புறக்கணித்துவிடு. அதற்காக ஏன் சினம் கொள்ள வேண்டும்! இன்றைய மல்யுத்தத்தை நல்லபடியாக முடித்துக் கொண்டு, நாம் கங்கம் புறப்படலாம்." — தாமோதரா கூறினான்.

சற்றே சமாதானம் அடைந்தான், இறையா. "பல்லவ இளவரசியின் பெயரைக் கூட நான் கேட்கவில்லை. அவளைப் போய் நான் காதலிப்பதாவது.. சிறு பெண்ணாக இருக்கிறாளே அவள் மனம் புண்படக் கூடாது என்பதற்காக அவளைப் பொறுத்துக் கொண்டேன். என் மீது உள்ள காதலை அவள் மறக்க வேண்டும் என்பதற்காக ஒரு கேவலமான நிபந்தனையை விதித்தேன். ஆனால் அவளோ, அதனை தான் நிறை வேற்றுவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றுவிட்டாள். நான் என்ன செய்வது?" — குழப்பத்துடன் இறையா கூற, அவனைத் திகைப்புடன் நோக்கினான், தாமோதரா.

"என்ன நிபந்தனையை விதித்தாய்?" —

"நான் உன்னைக் காதலிக்க வேண்டும் என்றால், இன்றைய மல்யுத்தப் போட்டியில் மகேந்திரன் என்னிடம் தோற்க வேண்டும் என்று கட்டளையிட்டேன். செய்து காட்டுகிறேன் என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்." — இறையா கூற, ஸ்தம்பித்துப் போனான், தாமோதரா.

"நல்ல நிபந்தனை விதித்தாய். நிச்சயம் அவன் உன்னிடம் தோல்வி அடைந்து. தனது தங்கையை உனக்குத் திருமணம் செய்விப்பான்." — தாமோதரா கூறினான்.

இறையா பதில் கூறவில்லை.

★ ★ ★

**கூ**டிகையின் களரி மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இன்னும் சாரைசாரையாக மக்கள் வந்துகொண்டேதான் இருந்தனர். அரச குடும்பத்தினர் அமர்வதற்குத் தனியாக மேடை ஒன்று அமைக்கப் பட்டிருக்க, ராஜவர்மன், ராஜஸ்ரீ மற்றும் ஜெயஸ்ரீ ஆகியோர் அமர்ந்திருந்தனர். தானமல்லரிடம் ஆசியைப் பெற்றுக்கொண்டு மையத்தில் வந்து நின்ற மகேந்திரன், தனக்கு முன்பாகவே வந்து நின்ற இறையாவை வியப்புடன் பார்த்தான். ஒரு அரசனைப் போன்று கம்பீரத்துடன், நின்ற இறையாவை வியப்புடன் நோக்கியவன், மேடையில் வீற்றிருந்த ஜெயஸ்ரீயை 'பொருத்தமானவனைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய்' என்பதைப் போன்று நோக்கினான்.

'எனது காதல் நிறைவேறுவது உனது கையில்தான் உள்ளது, அண்ணா!' பார்வையாலேயே ஜெயஸ்ரீ இறைஞ்ச, மகேந்திரன் கண்களாலேயே அவளுக்கு அபயம் அளித்தான்.

அண்ணன் மற்றும் தங்கையிடையே நடந்த நயனப் பரிமாற்றத்தை இறையா காணத் தவறவில்லை. இறையாவும், மகேந்திர மல்லனும் ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டு நின்றனர்.

தானமல்லர் நடுவே நின்றார்.

"உங்களது மல்யுத்தம் எந்தச் சாத்திரத்தின் அடிப்படையில் நிகழப் போகிறது..? ஹநுமந்தி, ஜம்புவந்தி, ஜராஸந்தி, பீமசேனி என்கிற நான்கு சாத்திரங்களில் எதனைக் கடைப்பிடிக்கப் போகிறீர்கள்?" — தானமல்லன் கேட்க, மகேந்திரன் "பீமசேனி*" என்று கூறினான்.

---

* ஹநுமந்தி: நுட்பமான முறைகளைக் கொண்டு தாக்குதல்.
ஜம்புவந்தி: கிடுக்கிப் பிடிகளின் மூலம் எதிரியைப் பணிய வைப்பது.
ஜராஸந்தி: எலும்புகளை நொறுக்குவது.
பீமசேனி: தனிப்பட்ட தேகபலத்தைக் கொண்டு மோதுவது.

மல்யுத்தம் தொடங்கியது. இருவரும் சளைக்காமல் ஆக்ரோஷத்துடன் யுத்தம் செய்தனர். இரண்டு முறை இறையாவை தாக்கிவிட்டு மூன்றாவது முறை தான் தாக்குதலைப் பெற்றுக் கொண்டு அவனிடம் பணிந்து விடுவதாக ஜெயஸ்ரீயிடம் கூறியிருந்தான். மகேந்திரன். ஆனால் —

தனது பலத்தைப் பிரயோகித்து முதன்முறையாக மகேந்திரன் இறையாவை தாக்க, அவன் நிலத்தில் சரிந்தான். சரிந்த வேகத்திலேயே மூர்ச்சையாகிப் போனான். மகேந்திரன் திகைத்து நிற்க, கூட்டத்தினர் "மாமல்லன் மகேந்திரன் வாழ்க!" என்று கோஷம் போடத்துவங்கினர். ஜெயஸ்ரீ திகைத்துப் போய் நிற்க, மூர்ச்சையடைந்தவனைப் போன்று நடித்துக் கொண்டிருந்த இறையா மனதினுள் சிரித்துக் கொண்டிருந்தான்.

'மகேந்திரன் தோற்றால்தானே, நான் பல்லவ இளவரசியை மணக்க வேண்டியிருக்கும். மகேந்திரனே வெல்லட்டும். நான் தோற்றதாகவே இருக்கட்டும். அவந்திகாவை நான் காதலிக்கத் துவங்கிவிட்டேன். பல்லவ இளவரசி எனது வாழ்க்கையில் குறுக்கிடக் கூடாது' என்று நினைத்தபடி கிடந்தான்.

தாமோதரா மட்டுமே இறையா மூர்ச்சையடைய வில்லை என்பதைப் புரிந்து கொண்டான். காட்டில் தான் அவந்திகாவை இறையாவுக்குக் காட்டாமலேயே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என நினைத் தான், தாமோதரா.

மகேந்திரன் செய்வதறியாது ஜெயஸ்ரீயை திரும்பிப் பார்க்க, அவள் கோபத்துடன் மேடையில் இருந்து இறங்கிச் சென்று கொண்டிருந்தாள்.

## 26. பழுதையுமல்ல! பாம்புமல்ல!

**கி.***பி. 615.*

*கங்க நாட்டு* அரண்மனையில் இறையா தங்கி இருந்தான். கங்க மன்னன் பாலவீர்யன் தனது சகோதரி மதுரவாணியின் மீது மிகவும் பாசம் கொண்டிருந்தான். அவளது மரணத்திற்குப் பிறகு தனது தங்கையின் மகன் இறையாவின் மீது அந்தப் பாசத்தை வாஞ்சையாகப் பொழிந்தான். பாலவீர்யனின் மகன் இளவரசன் பாலவிக்கிரமனும், மகள் சாருபாலாவும் இறையாவைச் சுற்றி வந்து அவனுக்குத் தேவையான வற்றை உடனே நிறைவேற்றித் தந்தனர். சாருபால்ா இறையாவுக்குப் பணிவிடைகளைச் செய்யும் உரிமையை தானே எடுத்துக் கொண்டிருந்தாள். இறையா தனது இருக்கையில் அமர்ந்தபடி தாமோதராவுடன் வாதாபியின் மீது படை எடுப்பது குறித்து ஆலோசனை செய்து கொண்டிருக்க, திடீரென்று அவன் முன்பாக இருக்கும் முக்காலியின்*

---

* கி.பி. 607 முதல் கி.பி. 629 வரை கங்க நாட்டைப் பாலவீர்யனும் பிறகு அவன் மகன் பாலவிக்கிரமனும் ஆண்டனர். கோலார் மற்றும் தலக்காடு உள்ளிட்ட பகுதிகள்தான் கங்க நாடு என்று அழைக்கப்பட்டது. இதன் தலைநகரம் தலக்காடு என்றாலும், கோலார் தங்கச் சுரங்கம், நாட்டிற்கு வளத்தைச் சேர்த்ததால் அது முக்கிய நகரமாகக் கருதப்பட்டது. கோலாரின் பழைய பெயர் குவலாலபுரம் அல்லது கோலாகலப்புரம். சிறிய நாடாக இருந்தாலும், ஸ்வர்ணம் அதிகமாகக் கிடைத்ததால் மிகவும் செல்வந்த நாடாகத் திகழ்ந்தது. புராணத்தில் அவந்திசேத்திரம் என்று புகழ் பெற்றிருந்தது. அதற்கு அடையாளமாக, இன்றைய கர்நாடகத்தின் முல்பகல் தாலுகாவில் அவனி என்று இந்தப் பகுதி அழைக்கப்படுகிறது.

மீது, ஏலம் கலந்த நறுமணப் பால் வெப்பத்துடன் வைக்கப்படும். தட்டு நிறையக் கனிகள் தோன்றும். தாமோதராவுடன் மும்மரமாக வாதாபியின் வரைபடத்தை வைத்துக் கொண்டு எப்புறம் சென்று அவனைத் தாக்குவது என்று இவன் ஆலோசித்துக் கொண்டிருக்க, திடீரென்று வெட்டிவேரின் நறுமணம் கலந்த குளிர்காற்று இவன் மீது பரவி, சிலிர்ப்பினை ஏற்படுத்தும். திரும்பி நோக்கினால், சாருபாலாதான் கண்களில் கனிவுடன் இறையாவுக்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருப்பாள். அவளை நோக்கிப் புன்முறுவல் ஒன்றை விடுப்பானே தவிர, எனக்குப் பணி செய்யாதே என்று தடை சொல்லமாட்டான்.

சாருபாலா அகன்றதும், தாமோதரா மனம் பொறுக்காமல் அவனைக் கேட்டேவிட்டான். “இறையா! உன்னைப் பழுதை என்று மிதிக்கவும் முடியவில்லை; சர்ப்பம் என்றும் தாண்டவும் முடியவில்லை. காஞ்சியில் உன் மீது காதலைப் பொழிந்த ஜெயஸ்ரீயை உதாசீனம் செய்தாய். மாபெரும் சாம்ராஜ்யத்தின் இளவரசி அவள். அவளைவிட அழகிலும், பெருமையிலும் சிறுத்துக் காணப்படும் இந்தச் சாருபாலாவின் காதல் கணைகளைத் தடுக்காமல் சிலாகித்து நிற்கிறாய். ஜெயஸ்ரீயிடம் இல்லாதது, இந்தச் சாருபாலாவிடம் அப்படி என்ன இருக்கிறது என்று தெரியவில்லை..?” — தாமோதரா குழப்பத்துடன் கேட்டான்.

“ஜெயஸ்ரீயின் அழகையும், சாருபாலாவின் அழகையும் ஒரே துலாக்கோலினில் நிறுத்தினால், ஜெயஸ்ரீயே பேரழகியாகத் திகழ்வாள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. அந்த அழகை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது..? ஆனால் சாருபாலா அழகுச் சுரங்கம் இல்லை என்றாலும், அவள் பின்பாகக் கோலாகல நகரத்தின் ஸ்வர்ண சுரங்கங்கள் மிக அழகாகத் தெரிகிறதே. அந்தச் சுவர்ணச் சுரங்கங்களைக் கொண்டு உலகத்தையே

ஆளலாமே. எனவேதான், சாருபாலா செய்யும் பணிவிடைகளுக்கு மறுப்பு சொல்லாமல் இருக்கிறேன்."

இறையா கூற, அவனை விசித்திரமாகப் பார்த்தான், தாமோதரா.

"அப்படியென்றால் அவந்திகாவின் மீது கொண்டிருந்த காதல்?" — தாமோதரா கூறியதும், அவனை அலட்சிய மாக நோக்கினான், இறையா.

"நான் அவந்திகாவை காதலிக்கிறேன் என்று எப்போது உன்னிடம் கூறினேன். அவள் மீது மோகம் உள்ளது உண்மை. ஆனால் அவள் நான் சிறைபிடிக்க உள்ள கைதி. எனது பாட்டனை அவளது தந்தை தந்திதுர்கன் கடத்திச் சென்று ஹர்ஷனிடம் ஒப்படைக்க, அவன் அவரை பலி கொடுத்தான். அதற்குத் தண்டனையாக அவந்திகாவை நான் பழிவாங்கப் போகிறேன். வாதாபி எனது மகுடம்! அவந்திகா எனது செங்கோல்! இரண்டுமே எனது தன்மானங்களின் சின்னம். இரண்டையும் நான் இழக்க மாட்டேன். அரியணைக்குச் சாருபாலா..! அரசியலுக்கு அவந்திகா..!" — இறையா கூற, தாமோதரா கல்லாகச் சமைந்து நின்றிருந்தான்.

"இரண்டோடு மூன்றாக, ஜெயஸ்ரீயையும் மணந்து கொள். வாதாபி, பல்லவம், கனகம் மூன்றும் ஒரே அணிகளில் நின்றால் உனது திக்விஜயங்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். சோழம், பாண்டியம், சேரம் அனைத்தையும் வென்று, தட்சிண சக்கரவர்த்தியாகத் திகழலாம்." — தாமோதரா கூற, அவனை அலட்சியமாக நோக்கினான்.

"ஒரு பெண்ணைக் காதலிப்பதற்கு முன்பாக அவளது பின்புலத்தை ஒருவன் அவசியம் பார்க்க வேண்டும். இல்லையென்றால், அந்தப் பெண் வேலியில் ஓடும் ஓணானாகவே திகழ்வாள். எனக்கு மகேந்திரனைப் பிடிக்கவில்லை. காரணம் என்னைவிடச் சிறந்த மன்னனாக அவன் பெயர் பெறுவான். எனது

வளர்ச்சிக்குச் சவாலாக இருப்பான். எனவேதான் ஜெயஸ்ரீயை நான் விரும்பவில்லை. எனது மாமனாகிய கங்க மன்னன் கீர்த்தி இல்லாதவன். அவனால் எனது வளர்ச்சிக்குக் கேடு விளையாது. தக்ஷிணம் என்கிற உறையினில் ஒரு வாளினைத்தான் வைக்க முடியும். அந்த வாள் வாதாபி புலிகேசியா அல்லது காஞ்சி மகேந்திரனா என்பதைக் காலம் நிர்ணயிக்கும்!" — இறையா கூறிவிட்டு அகல, தாமோதரா ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தான்.

அழகிய, அப்பாவியான சுத்த சத்வ குணம் நிரம்பிய இறையாவை அரசியலுக்கு இயல்பான ராஜச குணம் தழுவத் துவங்கிவிட்டதை உணர்ந்தான், தாமோதரா. அதோடு நின்றால் பரவாயில்லையே. இரத்த வெறி பிடித்த தாமச அசுரக் குணத்தின் சாயை கூட அல்லவோ அவனுள் தோன்றத் துவங்கியிருந்தது. கவலையுடன் அகன்றான் தாமோதரா.

வாதாபியின் மீது படையெடுத்துச் செல்வதற்கு முந்தைய நடுநிசியில் உறங்கிக் கொண்டிருந்த இறையா திடீரென்று கண்விழித்தான்.

அவனைக் கண்விழிக்க வைத்திருந்தது அந்தக் கனவு.

அவன் அத்திமலையான் ஆலயக் குளக்கரையில் நிற்கிறான். திடீரென்று குளத்தின் நீர் பொங்குகின்றது. உள்ளிருந்து அத்திமலைத்தேவன் எழுந்து நிற்கிறான். தனது கரத்தை இவனது சிரசின் மீது வைத்து ஆசீர்வதிக்கிறான்.

"உனது தலைமையில் வாதாபி சாளுக்கியம் மிகவும் பலம் பொருந்திய ராஜ்யமாகத் திகழும். போர்களில் வெற்றி மீது வெற்றி ஈட்டி, மன்னர் குலத்தையே நடுநடுங்க வைப்பாய். புலியாகப் பாய்வாய், ஆனால் சிம்மத்தோடு மோதாத வரை..!" — என்று இவனிடம் கூற, சட்டென்று கனவு விலகியது.

தனது மஞ்சத்தில் அமர்ந்து கனவினை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்த்துச் சிலாகித்தான்.

போருக்குச் செல்வதற்கு முந்தைய இரவு, அத்தி மலையானே இவனை ஆசீர்வதித்துவிட்ட பிறகு இவனை யாரால் வெல்ல முடியும்?

வாதாபி மன்னனாக மட்டுமல்ல, இவன் ஏன் தாமோதரா கூறியது போன்று தென்புலத்திற்கே சக்கரவர்த்தியாகத் திகழக் கூடாது..? ஹர்ஷனை மட்டுமல்ல, மூவேந்தர்களையும், பல்லவர்களையும், கங்கத்தையும், கைப்பற்றித் தென்புலம் முழுவதையும் இவன் ஆள வேண்டும். அத்திமலையான் இருக்கும் காஞ்சி, காவிரி பாயும் சோழம், முத்துகள் விளையும் பாண்டியம், தந்தம் மிகுந்திருக்கும் சேரம், ஸ்வர்ண சுரங்கங்களைக் கொண்ட கங்கம் அனைத்துமே இவனுக்கு ஏன் உரித்தாக இருக்கக் கூடாது?

இந்த எண்ணம் எழுந்ததும் இறையாவால் தொடர்ந்து உறங்க முடியவில்லை. சால்வையைக் கூடப் போர்த்திக் கொள்ளாமல் அடுத்த அறையில் உறங்கிக் கொண்டிருந்த தாமோதராவை தேடிப்போனான்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தாமோதராவை உலுக்கி எழுப்பினான்.

"தாமோதரா! எனது கனவில் அத்திமலையான் வந்தான். என்னைச் சக்கரவர்த்தியாகத் திகழ்வதற்கு ஆசி வழங்கினான். இனி என்னை வெல்வதற்கு யாரும் இல்லை!" — புளகாங்கிதத்துடன் தாமோதராவின் தோள்களைப் பற்றி மீண்டும் உலுக்கினான்.

இறையாவின் கனவு மிகுந்த கண்களைக் கவனித்தான், தாமோதரா. பேராசையும், புகழ் போதையும், பதவி வெறியும் இப்போது அதிகமாகத் தென்பட்டன. தாமசம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது போலும்..

"அத்திவரதனை கனவில் கண்டிருக்கிறாய் என்றால் உண்மையிலேயே நீ அவனால் ஆசீர்வதிக்கப்பட்டவன் தான். உனது தாய்மாமன் உனக்காகப் பெரும் படையை

*வாதாபிக்கு அனுப்புகிறான். உண்மையிலேயே கங்க மன்னன் பாலவீர்யன் மிகவும் தாராளமனம் படைத்தவன். உனக்குப் படையையும் அளித்துத் தனது பெண்ணையும் கொடுக்கப் போகிறான். 'உனது மாமனுக்கு நீ எங்ஙனம் நன்றியைச் செலுத்தப் போகிறாய், இறையா?" — தாமோதரா கேட்டான்.*

*"நிச்சயம் நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்.. கங்க நாட்டையும் அதன் தங்கச் சுரங்கங்களையும் கைப்பற்றி எனது வாதாபி சாளுக்கியத்துடன் இணைக்கப் போகிறேன். எனது மாமனுக்கு ஆட்சி செய்யும் தொந்தரவை நீக்கி, ஓய்வு அளிக்கப் போகிறேன். அது மட்டுமல்ல தாமோதரா, வாதாபியில் துவங்கி, கங்கம், சேரம் குர்ஜரம், பல்லவம், சோழம், சேரம் அனைத்தையும் எனது குடையின் கீழ் கொண்டு வரப் போகிறேன்.*" — இறையாவின் குரல் உறுதியுடன் ஒலித்தது.*

*அவனை வியப்புடன் நோக்கினான், தாமோதரா.*

*"இறையா! உன்னிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?" — தாமோதரா தயங்கினான்.*

*"நாம் உயிர் நண்பர்கள். நண்பர்களிடையே என்ன தயக்கம். கேள் தாமோதரா?" கூறினாலும், என்ன கேட்கப் போகிறாய்? கேட்பதைப் பார்த்து, எனது கோபத்தைக்*

---

* வடபுலச் சக்கரவர்த்தி ஹர்ஷனை வென்று, தென்னகத்தின் பலம் பொருந்திய மன்னனாகச் சேர, சோழ, பாண்டியம், பல்லவம், குர்ஜரம், கொங்கணச் சாளுக்கியம், கங்கம் உள்ளிட்ட நாடுகளைப் பணிய வைத்து மஹாராஜாதிராஜன், பட்டரக்கன், பரமேஸ்வரன் போன்ற பட்டங்களைப் புலிகேசி வென்றான் என்று பீஜப்பூர்-மும்பை கல்வெட்டு கூறுகிறது. பாரசீகக் குறிப்பு ஒன்று புலிகேசியைப் பரமேஸ்வரா என்று குறிப்பிடுகிறது. சீனப் புத்த பிக்கு காஞ்சிக்கு வரும் வழியில் வாதாபிக்குச் சென்றார். அவரது பயணக் குறிப்புகளில் அவன் புலிகேஷ் என்று குறிப்பிடப்படுகிறான்.

கிளறாதபடி கேள் என்பது போன்று அவனது பார்வை இருந்தது.

"மேலும் மேலும் நாடுகளைக் கைப்பற்றி வெற்றிகளை ஈட்ட வேண்டும் என்பது எல்லா மன்னர்களுக்கும் உள்ள ஆசைதான். உனக்கும் அத்தகைய ஆசை இருப்பதில் வியப்பில்லை. ஆனால், வெற்றிகளை எட்ட வேண்டும் என்று துடிப்பவன், அன்று காஞ்சியில் எதற்காக மகேந்திரனிடம் தோற்றது போன்று நடித்தாய்?" — தாமோதரா கேட்டான்.

"இந்தக் கேள்வியை நீ கேட்பாய் என்று நிச்சயம் எதிர்பார்த்தேன். உனது அண்ணன் என்னிடம் தோற்றால் நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று அந்தப் பல்லவ இளவரசி ஜெயஸ்ரீயிடம் கூறியிருந்தேன். மகேந்திரன் அதற்கு மறுப்பான் என்று நினைத்தேன். ஆனால் தங்கை மீதுள்ள பாசம் மற்றும் பரிவில் என்னிடம் தோற்பதற்கு இசைந்துவிட்டதாகத் தெரிந்து கொண்டேன். மகேந்திரன் செய்தது தவறு. தனது தங்கையின் காதலுக்காக ஒரு அரசனின் தன்மானத்தை, நாட்டின் பெருமைகளைப் பணயம் வைக்கலாமா..? மகேந்திரன் தோற்றால் ஜெயஸ்ரீயை நான் மணந்து கொள்ள வேண்டும் என்பதால் நான் முதல் தாக்குதலிலேயே மூர்ச்சை அடைந்தவனைப் போன்று நடித்தேன். அந்தப் பல்லவ இளவரசி எனக்கு ஏற்றவள் அல்ல!" — இறையாவின் குரலில் அலட்சியம் ஒலித்தது

"மொத்தத்தில் அவள் இனி உனது வாழ்க்கையில் இல்லை என்று கூறுகிறாய். சரி! அவளை இப்போது முதல் முழுவதுமாக மறந்துவிடு.. உனது திக்விஜயத்தை வாதாபியின் மீது படையெடுப்புடன் தொடங்கு!" — தாமோதரா கூறினான்.

"திக்விஜயம் செய்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை, தாமோதரா!" — இறையா குழப்பத்துடன் நண்பனை நோக்கினான்.

"என்ன புரியவில்லை?" — தாமோதரா கேட்க, அவனைக் கூர்ந்து கவனித்தான் இறையா.

"அத்திமலைத்தேவன் கனவில் கூறியது அனைத்துமே எனது சிந்தையில் பதிந்து போனது. எனது தலையில் கைவைத்து ஆசி வழங்கியவன், புலியாகப் பாய்வாய், ஆனால் சிங்கத்துடன் மோதாதே என்றான்." — இறையா கூற, தாமோதரன் யோசித்தான்.

"நாளைக் காலை நாம் வாதாபி புறப்பட வேண்டும். நிம்மதியாக உறங்கு. நாளை அது பற்றி யோசிக்கலாம்.. பேசிக் கொள்ளலாம்." — தாமோதரா கூற, தனது அறைக்குத் திரும்பினான், இறையா.

இறையா அறையைவிட்டு வெளியேற, ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தான், தாமோதரா. நன்றியுணர்ச்சி என்பது இறையாவிடம் இம்மியும் இல்லை என்பதை உணர்ந்தான். பதவி, செல்வம், புகழ், வெற்றி இவை மட்டுமே இறையாவின் இலக்காகத் திகழ்கின்றனவே. தாமோதராவினால் இறையாவிடம் ஏற்பட்டிருந்த இந்த மாற்றத்தைச் சகித்துக் கொள்ளவே இயலவில்லை.

இறையாவின் தாய்மாமன் பாலவீர்யன் தனது தங்கச் சுரங்கங்களைக் காட்டியதும், இறையாவின் கண்களில் தோன்றியிருந்த மலைப்பு பேராசையாக மாறுவதைக் கண்டிருந்தான், தாமோதரா. அடவியில் தான் சந்தித்திருந்த — சுமனஸா வளர்த்திருந்த — பால்மணம் மாறாத பாலகன் என்கிற நிலையிலிருந்து மாறி, உலகின் சிறந்ததை எல்லாம் அடைய வேண்டும் என்கிற வெறி அவனுள் வேரூன்றத் துவங்கியிருப்பதையும் உணர்ந்தான்.

தாமோதராவை நண்பன், ஆசான், வழிகாட்டி, நலம்விரும்பி என்கிற பல நிலைகளில் உயர்த்தி வைத்துப் பேசிய இறையா, இப்போது நண்பன் என்கிற ஸ்தானத்தில் மட்டுமே இவனை வைத்திருக்கிறான். இவன் வழங்கும் ஆலோசனைகளைக் கூட ஏற்பதில்லை. இப்போதுதான் வயதுக்கு வருகிறான் பாவம்! என்று

தாமோதராவும் அதனைப் பெரிதுபடுத்தாமல் இருந்தான். தானேஸ்வரில் தனது தாயுடன் வசிக்கும் இவனது மகனின் வயதுதான் இறையாவுக்கு இருக்கும். தனது மகனே இவன் சொல்வதைக் கேட்பான் என்பது என்ன நிச்சயம்..? அப்படியிருக்க இறையாவிடம் இதற்கு மேல் ஒன்றும் எதிர்பார்க்க இயலாது. தனக்கு உரிய மரியாதைகளைத் தருகிறான். ஆலோசனைகளை ஏற்பதில்லையே தவிர, அனைத்துப் பிரச்னைகளிலும் இவனைக் கலந்து ஆலோசிக்கிறான்.

யோசித்தபடியே மிகுதி இரவை உறக்கமில்லாமல் கழித்திருந்தான்.

மறுநாள் காலை.. பெரும்படைகளுடன் வாதாபிக்கு புறப்பட்டான் இறையா. மாமன் பாலவீர்யனும் அவனது மகள் சாருபாலாவும் வழியனுப்ப, கம்பீரமான யானையின் மீது அமர்ந்து வாதாபிக்குக் கிளம்பினான்.

தொடர்ந்து வாதாபியை நோக்கிப் படைகள் முன்னேறிக் கொண்டிருந்தன.

மிகவும் சாதுர்யமாகக் காயை நகர்த்தினான், இறையா. தனது படையில் ஒரு நான்கு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களைத் தன்னருகே அழைத்தான்.

"வீரர்களே! எனது எதிரி சிற்றப்பன் மங்களேசன் போர் புரியும் ஆற்றல் இல்லாதவன். ஹர்ஷனின் தூண்டுதலின் பேரில்தான் எனது மணிமகுடத்தைப் பறித்து என்னைக் காட்டுக்கு அனுப்பினான். அவன் வெறும் கணைதான். ஏவிவிட்டவன் ஹர்ஷன். நான் படையெடுத்து வருகிறேன் என்றதும் மங்களேசன் பதறுவான். அவனால் என்னை எதிர்க்க இயலாது. எனவே ஹர்ஷனிடம் ஆதரவு கேட்டு ஓலை அனுப்புவான். நீங்கள் நால்வரும் வாதாபி எல்லையில் நின்று ஓலையைக் கொண்டு செல்பவன் நகரைவிட்டுச் செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவன் அனுப்பும் ஓலை ஹர்ஷனை அடையக்கூடாது. ஹர்ஷன் அவன்

உதவிக்கு வருவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் மங்களேசனைக் கொன்று வாதாபி அரியணையில் அமர்ந்து அரசனாகவே ஹர்ஷனை வீழ்த்த நினைக்கிறேன். எனவே வாதாபி எல்லையில் நின்று, ஹர்ஷனுக்குச் செய்தி போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று உத்தரவு போட, அவர்கள் நால்வரும் விரைந்தனர்.

துறவறம் ஏற்றுக் காணாமல் போன இறையா பெரும் படையுடன் வாதாபியை நோக்கி வருவதை அறிந்ததும், மங்களேசன் பதைபதைத்துப் போனான். உடனே ஹர்ஷனுக்கு உதவி கேட்டு மடல் அனுப்பினான்.

'ஹர்ஷவர்தனரே! தங்களது யோசனைப்படிதான் நான் எனது அண்ணனுக்குப் பிறகு மன்னனாக அமர்ந்தேன். இப்போது எனது அண்ணன் மகன் இறையா என்கிற புலிகேசி படையெடுத்து வருகிறான். என்னைக் காப்பாற்றுவதற்குப் படைகளை அனுப்புங்கள்!' — மங்களேசன்.

ஓலையை அனுப்பிவிட்டு, நம்பிக்கையுடன் காத்திருக்க, ஓலை இறையாவை அடைந்தது. அதனைப் படித்துவிட்டு, இகழ்ச்சியுடன் சிரித்தான் இறையா.

எதிர்த்தவர்களையெல்லாம் பந்தாடியும், துண்டாடியும் செய்த இறையா, தனது படைகளுடன் வாதாபியினுள் நுழைந்தான். வாளைச் சுழற்றிக் கொண்டு அரண் மனையினுள் விரைந்தவனை வரவேற்கக் கையில் ஆரத்தி தட்டுடன் வாயிலிலேயே நின்றிருந்தாள், சுமனஸா.

"இறையா..! என் மகனே! எப்படி இருக்கிறாய்?" — என்றபடி ஆரத்தியைச் சுழற்றினாள்.

"நீ எப்படி இருக்கிறாய், சுமனஸா? எனது தம்பி விஷ்ணுவர்தன் எப்படி இருக்கிறான்..?" — அவளை அன்புடன் நோக்கினான் இறையா.

*"நீ உனது கடமைகளை முடித்துவிட்டு வா. பிறகு நிம்மதியாக உரையாடலாம்! உனது சிற்றப்பனும், சித்தியும், தளபதியும் உன்னை வரவேற்பதற்காக அதோ அந்த அறையில் காத்திருக்கிறார்கள்." — இறையாவை அர்த்தத்துடன் பார்த்துவிட்டு, உள்ளே சென்றாள் சுமனஸா.*

*தாமோதராவை மட்டும் அழைத்துக் கொண்டு மங்களேசன் இருந்த அறையினுள் நுழைந்தான், இறையா.*

*"மகனே வந்துவிட்டாயா. நீ பாலகன் என்பதால்தான் உனக்கு அரியணை வழங்கப்படவில்லை. இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. உன்னையும் ஒரு யுவராஜனாக அறிவிக்கிறேன். நாம் அனைவரும் ஒரே குடும்பமாக வாழ்வோம்.." — மங்களேசன் விழித்தபடி சொல்ல, இறையா மங்களபவானியையும், மங்களேச னையும் மாற்றி மாற்றிப் பார்த்தான்.*

*சற்றுத் தள்ளி தளபதி யக்னகணபதி, தேகம் நடுங்க இவனையே வெறித்துக் கொண்டிருந்தான்.*

*"சிற்றப்பா! இவர் எனது குரு. ஆலோசகர், நண்பர், வழிகாட்டி எல்லாம் இவரே. இவர் பெயர் தாமோதரா! பாரவி என்கிற பெயரில் புலவராகத் திகழ்கிறார். என்னை யுவராஜாவாக நீங்கள் செய்ய இருக்கும் அறிவிப்போடு இவரை ராஜகுருவாக நியமித்து அறிவிப்பினை விடுங்கள். இப்போதே அதனைச் செய்யுங்கள்..." — இறையா கூறினான்.*

*தன்னைத் தனது அண்ணன் மகன் மன்னித்து விட்டான். தன்னையே மன்னனாகத் தொடர்வதற்கு அனுமதி வழங்கிவிட்டான். அவனை யுவராஜாவாகவும், அவனது நண்பனை ராஜகுருவாகவும் அறிவிப்பதால் இவனுக்கு நட்டம் ஒன்றுமில்லை. உடனேயே அறிவிப்பினை எழுதி அதில் ராஜமுத்திரையை இட்டு, காவலன் மூலம் அமைச்சரவைக்கு அனுப்பினான் மன்னன்.*

தனது கணவனின் உயிருக்கு இனி ஆபத்து இல்லை என்கிற நிம்மதியில் இறையாவை அன்புடன் பார்த்தாள், மங்களபவானி.

"மகனே! எப்படி இருக்கிறாய்? நீ பெரும் வீரனாக வளர்ந்துள்ளதைக் குறித்து மகிழ்கிறேன்!" — மங்கள பவானி கூறினாள்.

"ஆம் அன்னையே! பெரும் வீரக்கலைகளை எல்லாம் கற்றிருக்கிறேன். எனது வாட்சுழற்சியைக் காண்கிறீர் களா..?" என்றவன் தனது வாளை உருவிச் சுழற்றத் தொடங்கினான்.

"எப்படிச் சிற்றப்பா! எனது வாள் சுழற்சி?" — இறையா கேட்க,

"பலே இறையா! பிரமாதம். எனது அண்ணன் கீர்த்திவர்மன் வாள் சுழற்றுவதைப் போன்று இருக்கிறது!"

இறையாவை புகழ்ந்தான், சிற்றப்பன் மங்களேசன்.

"ஓ..! அப்படி என்றா கூறுகிறீர்கள். எனக்கு அப்படித் தோன்றவில்லை. இன்னும் எனக்குப் பயிற்சி தேவை என்றே நினைக்கிறேன். வாளினால் இதுவரை எவரது தலையையும் நான் சீவியதில்லை. இப்போது முயன்று பார்க்கட்டுமா?" என்றவன் திடீரென்று திரும்பித் தனது வாளினால் தளபதி யக்னகணபதியின் தலையை வெட்ட, அவனது தலை எகிறிப்போய் விழ, துடித்துக் கொண் டிருந்த அவனது உடல் கீழே விழுந்தது.

நடுநடுங்கிப் போனார்கள் மங்களேசனும், மங்கள பவானியும்.

"இல்லை சித்தப்பா..! எனக்கு இன்னும் வாள் பயிற்சி வேண்டும். எனது பாட்டனார், அதுதான் உனது தந்தை முதலாம் புலிகேசியை ஏமாற்றி அழைத்துச் சென்று ஹர்ஷவர்தனன் சண்டி கோயிலில் பலி கொடுத்தானாம். அப்போது அவன் எனது பாட்டனின் தலையை ஒரே

சீராக வெட்டியிருந்தானாம். வெண்ணையில் கத்தி இறங்குவது போன்று தலையைச் சீவுபவனே சிறந்த போர் வீரன் என்று எனது நண்பன் தாமோதரா கூறினார். எனக்கு அந்தப் பயிற்சி இல்லை என்கிறார். இன்னும் ஒருமுறை முயன்று பார்க்கிறேன்!" என்றவன் சட்டென்று திரும்பி மங்களேசனின் தலையையும் சீவித் தள்ளினான். அந்தக் காட்சியைக் காணச் சகியாமல் கண்களை மூடினாள் மங்களபவானி.

"யாரங்கே!" என்று கர்ஜித்தான் இறையா. காவலர் களும் பணியாளர்களும் ஓடி வந்தனர்.

"இந்த இரு பிணங்களையும், இந்த நடைப்பிணத்தை யும் அப்புறப்படுத்துங்கள்..!"

மங்களபவானி கதறத் துவங்கினாள். "என்னை மன்னித்துவிடு, இறையா! என்னையும், எனது மகனையும் விட்டுவிடு. நாங்கள் வேறு எங்கேயாவது சென்று பிழைத்துக் கொள்கிறோம். இனி வாதாபியில் காலடி கூட வைக்கமாட்டோம். காட்டில் வாசிக்கக் கூடத் தயார்." — மங்களபவானி கெஞ்சினாள்.

"சிற்றன்னையே! காட்டில் திரியும் இளவரசன்தான் வருங்காலத்தில் சக்கரவர்த்தியாகத் திகழ்வான். நான் பெரும் சக்கரவர்த்தியாக ஆட்சி செய்வதை நீ காண வேண்டும். எனவே உன் தலை உனது சிரசில்தான் இருக்கும். கவலைப்படாதே. நீயும், உன் மகனும் பாதாளச் சிறையில் இருங்கள். இனி சூரிய ஒளியை நீங்கள் காணவே கூடாது. ம்ம்.. அழைத்துச் செல்லுங்கள்!" — இறையா உறுமினான். மங்களபவானியும், அவளது மகனும் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

தாமோதரா உறைந்து போய் நின்றிருந்தான். முதன் முதலாக தான் சந்தித்திருந்த அந்த இறையா எங்கே போனான்..? முதன்முறையாகத் தாமோதராவுக்கு இறையாவிடத்தில் ஒருவித அச்சம் பிறந்தது. காட்டில்

திரிந்த இறையா வேறு. நாட்டில் மன்னனாகப் பதவி ஏற்க உள்ள புலிகேசி வேறு..! சிங்கம் என்றால் கூடப் பசித்தால்தான் வேட்டையாடும். புலி பார்ப்பதையெல்லாம் அல்லவா வேட்டையாடும்.

தாமோதராவின் மனதில் சஞ்சலம் தோன்ற, இனி அவனை எங்ஙனம் கையாள்வது என்பது போன்று பார்க்க, அவனை அலட்சியமாக நோக்கினான், இறையா.

"என்ன ராஜகுருவே என்னைப் பார்க்கிறீர்கள்..? எனது மகுடாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் போய் எனது வேலைக்காரி சுமனஸாவையும், எனது தம்பி விஷ்ணுவர்தனையும் பார்த்துவிட்டு வருகிறேன்.." என்றபடி அறையைவிட்டு வெளியேற முயன்றவன், சடாரென்று நின்று தாமோதராவை திரும்பி நோக்கினான்.

"தாமோதரா! இனி உன்னைப் பாரவி என்றுதான் நான் அழைக்கப் போகிறேன். நீ வாதாபியின் ராஜகுரு. எனவே உனது இலக்கியத் திறமைகள், கவி புனையும் ஆற்றல் அனைத்தும் எனது அவைக்கு மட்டுமே சொந்தம். பாரவி என்றே இனி நீ உன்னை அழைத்துக் கொள்ள வேண்டும்" என்றபடி தாமோதராவின் பார்வையிலிருந்து மறைந்தான்.

தாமோதரா திகைத்துப் போய் நின்றிருந்தான். சுதந்திரப் பறவையாகத் திரிந்து கொண்டிருந்த தான், இனி புலிகேசியின் அடிமை என்பதைப் புரிந்து கொண்டான். முதன்முறையாக இறையாவுடன் தன்னை இணைத்துக் கொண்டது தவறோ என்று எண்ணியபடி நின்றான்.

# 27. சோழியன் குடுமி..

தசகுமாரர்கள் அனைவரும் மீண்டும் காஞ்சிக்கு வந்துவிட்டிருந்தனர். ஆனால் தொண்டரையனைப் பற்றி மட்டும்தான் எவ்விதத் தகவலும் இல்லை. மகேந்திரன் மற்றவர்களைத் தனது அந்தரங்க ஆலோசனை அறைக்கு வரவழைத்தான்.

"நண்பர்களே! எனது பாட்டனின் காலத்தில் காணாமல் போன அத்திமலையானின் பிரதிமையை இன்னும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். இந்நிலையில் மூன்றாம் சந்திரகிரி என்கிற மலையில் பல்லவத்தின் பொக்கிஷங்களைக் களப்பிரர் பதுக்கியுள்ளதாகத் தெரிகிறது. மொத்தமாக மூன்று சந்திரகிரிகள் இருப்பதாக அந்த இரகசியக் குறிப்பின் மூலம் அறிந்து கொண்டோம். இளவரசி ராஜஸ்ரீ தங்கியிருந்த பாலகாடம் திருவேங்கடத்தின் அருகில் உள்ள சந்திரகிரியின் அடிவாரத்தில் உள்ளது. இரண்டாவது சந்திரகிரி, கடக குகைகள் உள்ள கலிங்கத்து குமாரபர்வதத்தில் உள்ளது என்று கூறினார்கள். இப்போது, நீங்கள்தான் மூன்றாவது சந்திரகிரியை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதன் மீதுதான் நமது அத்திமலைத்தேவனைக் களப்பிரர்கள் பதுக்கியிருக்க வேண்டும். மன்னனாக இருக்கும் நான் அரசாங்க அதிகாரிகளையோ, காவல்படையையோ அனுப்பாமல் உங்களுக்கு இந்தப் பணியைத் தருவதற்குக் காரணம் உள்ளது. அத்திமலையான் காணாமல் போன விவரம் நாட்டில் மிகச் சிலருக்கே தெரியும். எனவேதான், நமது செயல்பாடுகள் மிகவும் இரகசியமாக இருக்க

*வேண்டும் என்றுதான் உங்களை அழைத்து இந்தப் பணியைக் கொடுக்கிறேன்." — மகேந்திரன் கூறினான்.*

*"மகேந்திரா! எதற்காக நீ பீடிகைகளையும், காரணங் களையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறாய்..? உனக்குச் சேவகம் செய்வதற்காகவே நாங்கள் இருக்கிறோம். உத்தரவுகளை மட்டும் இடு. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் கூறு!" பிரமதி என்பவன் கூறினான்.*

*மகேந்திரன் யோசித்து தான் மனப்பாடம் செய்திருந்த ரகசியக் குறிப்பினைக் கூறினான்.*

*"கடக குகையில் ரணதிலகன் மறைத்திருந்த ஒரு இரகசியக் குறிப்பைக் கண்டேன். அதில் —*

**'வெள்ளை களர்குலம் வளர்த்த**
**மூன்றாம் மதிமலையின்**
**குபேரத் திக்கில் நிற்கும்**
**வனவரச துர்க்கையின் வசம்**
**கிடக்கும் ஆதி ஒருபுறம்**
**நிற்கும் ஆதி மறுபுறம்**
**மத்தியில் பாதியாக**
**காளியின் உக்கிரம்**
**சிம்மத்தின் சீற்றம்**
**யானையின் மதம்**
**கொண்டு நிற்கிறது.**
**குபேரன் எமனாக**
**மாறும் போது**
**பொக்கிஷங்கள் கைமாறும்..'**

*ரணதிலகன் கூறிய குறிப்பு இதுதான்! இந்தக் குறிப்பு மறைக்கப்பட்டுள்ள அத்திமலைத்தேவனின் சிலை இருக்கும் இடத்தைக் குறிப்பிடுகிறது. இந்தக் குறிப்பினில் உள்ள ஐயங்களை இளவரசி தீர்த்து வைப்பார். மூன்றாவது சந்திரகிரியை கண்டுபிடித்தால் போதும். சிலை இருக்கும் இடத்தை அறிந்துவிடலாம்! எப்படியும் அதனைக் கண்டுபிடித்து அத்திமலையானின் ஆலயத்தில்*

வைப்பேன் என்று எனது தந்தையிடம் வாக்களித்து உள்ளேன். உங்கள் உயிர் நண்பன் தனது வாக்கினை நிறைவேற்ற நீங்கள்தான் உதவ வேண்டும்!" — உருக்கத்துடன் வேண்டினான் மகேந்திரன்.

"உனக்காக உயிரையே கொடுப்போம்., மூன்றாம் சந்திரகிரியை எங்கு இருந்தாலும் நிச்சயம் கண்டு பிடிக்கிறோம்." — தசகுமாரர்கள் உறுதியளித்தனர்.

எட்டுத்திக்கிலும் வழக்கம் போல் அனைவரும் புறப்பட, உபஹாரன் என்பவன் காஞ்சிக்குத் தெற்கே சென்றான்.

குதிரையில் இருந்து விழுந்து காலை முறித்துக் கொண்டிருந்த ராஜவர்மன் நலமடைந்து நடக்கத் தொடங்கி இருந்தாலும், அவனது காலெலும்பு நிலை படாததால், சற்றே விந்தி நடந்தான்.

ராஜவர்மனும், ராஜஸ்ரீயும் புவனமாதேவியின் அழைப்பை ஏற்று மகேந்திரனின் அரண்மனைக்கு வந்திருந்தனர். வேங்கடத்தில் இருந்து சௌரப பண்டிதர் என்னும் ஜோதிடரை வரவழைத்திருந்தாள் புவனமாதேவி. மகேந்திரனையும் அவரை சந்திப்பதற்குத் தயாராக இருக்கும்படி கூறியிருந்தாள்.

ராஜவர்மனும், ராஜஸ்ரீயும் புவனமாதேவி அமர்ந்திருந்த அறையினுள் நுழைய, ராஜவர்மன் சிரமப்பட்டு நடப்பதைக் கண்ட மகேந்திரன், அவசரமாக எழுந்து சென்று அவரது கையைப் பற்றி அழைத்து வந்து அவரை இருக்கையில் அமர வைத்தான்.

புவனமாதேவி ராஜவர்மனை வருத்தத்துடன் நோக்கினாள்.

"எவ்வளவு கம்பீரமாக நடந்து வருவீர், ராஜவர்மரே! இப்படிச் சிரமப்பட்டு நடக்கும்படி ஆகிவிட்டதே. நமது பல்லவக் குலத்தை விதி ஏன்தான் இன்னும் வாட்டி

வதைக்கின்றதோ? காண்பதற்கே வேதனையாக உள்ளது, ராஜவர்மரே!" — புவனமாதேவி புலம்பினாள்.

"எனது கால் விபத்துடன் நமது குடும்பத்திற்கு நிகழ்ந்து வந்த கெடுவினைகள் அனைத்துமே தீர்ந்துவிட்டதாகவே கொள்வோம். அத்திமலையானை இழந்துவிட்டதால் தான், நமக்கு இவ்வளவு வல்லடிகள். அனைத்தையும் மகேந்திரன் தீர்த்து வைப்பான். அண்ணி! நமது பல்லவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறான், உங்கள் மகன் மகேந்திர மல்லன்."

"ஒருபக்கம் ஜெயவர்மர் சீனத்திற்குச் சென்று பௌத்தத்தை ஏற்றுக் கொண்டான் என்கிற செய்தி. மறுபக்கம், கடைசி மைத்துனர் பீமவர்மன் துறவியாகச் சமணத்தை ஏற்றார் என்கிற செய்தி. தானவர்மரோ காம்போஜ மன்னனாக அரியணையில் அமர்ந்த பிறகு நம்முடன் தொடர்பையே விட்டுவிட்டார். நவரத்ன பல்லவியின் தற்கொலை இன்னும் எனது மனதைவிட்டு அகலாமல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது. நீங்கள் கூறுவது போன்று, உங்களுக்கு நேர்ந்த விபத்தே கடைசியாக இருக்கட்டும். நமது குடும்பத்தில் நிகழும் விபரீதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படட்டும். சௌரப பண்டிதர் முக்காலமும் அறிந்தவர். முகத்தைப் பார்த்தே எதிர்காலத்தைக் கூறிவிடுவாராம்!" — புவனமாதேவி கூறினாள்.

"சிற்றப்பா! ஜெயஸ்ரீ எப்படி இருக்கிறாள்? இப்போதெல்லாம் ஏன் அரண்மனை பக்கம் வருவதேயில்லை?" — மகேந்திரன் கேட்க, அவனை அலுப்புடன் நோக்கினான், ராஜவர்மன்.

"அவள் விவகாரம் ஒன்றும் புரியவில்லை. எப்போது பார்த்தாலும் விட்டத்தைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டு அமர்ந்திருக்கிறாள். அழைத்தாலும் பதில் இல்லை.. அவளது கலகலப்புப் பேச்சுக்களும் குறைந்து விட்டன. எதையோ பறிகொடுத்தவளைப் போன்று இருக்கிறாள்!" — ராஜவர்மன் கூறினான்.

"படருவதற்குக் கொடி ஆதாரத்தைத் தேடும் போது இப்படித்தான் துவண்டு போகும். அவளுக்கு உடனே திருமண ஏற்பாடுகளைத் துவக்குங்கள். தன்னால் சரியாகிவிடுவாள்!" — புவனா கூறினாள்.

"நாங்களா மாட்டோம் என்கிறோம். அவளையே கேட்டுப் பார்த்துவிட்டோம். பதில் இல்லை." — ராஜஸ்ரீ கூறினாள். "அவளது ஜாதகச் சுவடியைக் கொண்டு வந்திருக்கிறோம். சௌரப பண்டிதரைத்தான் கேட்க வேண்டும்."

"இதற்குப் பண்டிதர் எதற்கு..? அவளது மனதில் உள்ள பிரச்னையை நான் அறிவேன். வாதாபி புலிகேசியின் மீது மையல் கொண்டிருக்கிறாள். மல்யுத்தத்தில் நான் அவனை வீழ்த்திவிட்டதால், என் மீது அவள் கோபம் கொண்டிருக்கிறாள். அதனால்தான் இப்போதெல்லாம் அரண்மனைப் பக்கம் வருவதில்லை." — மகேந்திரன் கூற, அனைவரும் திகைத்தனர்.

"வாதாபி புலிகேசியா..? இப்போதுதானே தனது சிற்றப்பனைக் கொன்று மன்னனாக மகுடம் சூட்டிக் கொண்டான். அவனை ஜெயஸ்ரீ எங்கே சந்தித்தாள்?" — ராஜவர்மன் திகைத்தான்.

"நான் கடக குகைகளுக்குச் செல்லுவதற்கு முன்பாக ஆளுமைகோல் நட்டேன் அல்லவா? அதனை முறித்து, விஜயேந்திரன் என்கிற சேர நாட்டு மல்லனை வீழ்த்திய இறையாதான் இப்போது புலிகேசியாக அவதாரம் செய்திருக்கிறான். அவன் எனது ஆளுமைகோலை மட்டும் முறிக்கவில்லை. நமது ஜெயஸ்ரீயின் இதயத்தையும் அபகரித்துச் சென்றிருக்கிறான். அவனுக்கு ஜெயஸ்ரீயை மணமுடித்துத் தந்துவிடலாம்! என்ன நினைக்கிறீர்கள், சிற்றப்பா?" — மகேந்திரன் கேட்க, புவனாவும் அவனுடன் சேர்ந்து கொண்டாள்.

"நல்ல யோசனை! உடனே செயலில் இறங்குங்கள்." — புவனா அறிவுரை கூறினாள்.

"சௌரபரை கேட்போம்..!" — ராஜஸ்ரீ கூற, சரியாகப் பணிப்பெண் ஒருவள் உள்ளே நுழைந்தாள்.

"ராஜமாதா! சௌரப பண்டிதர் என்பவர் வந்திருக்கிறார்!" — பணிப்பெண் கூற, அவளை நோக்கித் தலையசைத்தாள், புவனமாதேவி.

"உள்ளே அனுப்பு, சுரேந்திரி! முக்கியமான ஆலோசனை செய்யப் போகிறோம். எங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.." — புவனமாதேவி கூறினாள்.

சுரேந்திரி தலையசைத்துவிட்டு அகல, சௌரப பண்டிதர் உள்ளே வந்தார்.

குட்டையாக, உருண்டு திரண்டு காணப்பட்ட சௌரபர் அனைவரையும் வணங்கிவிட்டு, தனது இருக்கையில் அமர்ந்து கொண்டார். தனது முன்பாக இருந்த முக்காலியில் கையிலிருந்த சுவடிகளை வைத்தவர் தனது உத்தரீயத்தின் முனையைப் பற்றினார். உத்தரீயத்தின் நுனியில் முடிச்சு ஒன்று காணப்பட்டது. அதைப் பிரித்து உள்ளிருந்து ஒன்பது சோழிகளைக்* கையில் எடுத்தார்.

* தட்சிண பாரதத்தில் சோழிகளைக் கொண்டு வருங் காலத்தைக் கணிக்கும் ஜோதிடர்கள் இருந்தனர். இவர்களைச் சோழியர்கள் என்று அழைப்பார்கள். இவர்களுக்கு ஜோதிடம் ஆதிபரம்பரை தொழில். பிரச்னைகளை ஆராய்ந்து பரிகாரங்களைக் கூறி மக்களின் வினைகளைக் கழிப்பவர்கள், சோழியர். பொதுவாக ஜோதிடம் கூறுபவர்களை நவக் கிரகங்கள் பழிக்கும் என்கிற நம்பிக்கை அந்தக் காலத்தில் இருந்தது. நவக்கிரகங்களின் திட்டங்களை, செயல்பாடுகளைக் கூறுவதால் நவக்கிரகங்கள் ஜோதிடர்களைச் சபிக்கும் என்பார்கள். அதற்குரிய பரிகாரங்களை ஜோதிடர்கள் செய்து கொள்ளவில்லையென்றால், இவர்கள் யாருக்குப் பரிகாரம் சொல்கின்றனரோ, அவர்கள் அனுபவிக்க வேண்டிய வினைகளை இவர்கள் அனுபவிப்பார்கள் என்பார்கள். அந்தச் சாபங்களுடன் வாழ நேரிடும் என்பதால், சோழிய ஜோதிடர்கள் பிறரால் புறக்கணிக்கப்பட்டனர். எனவே, மற்ற பிராமணர்கள்

"இவையே எனது ஆயுதங்கள். நவக்கிரகங்களைக் குறிக்கும் சோழிகள். இளம்சிவப்பு சூரியனையும், வெள்ளைச்சோழி சந்திரனையும், செம்மை அங்காரகனையும், பச்சை புதனையும், மஞ்சள் பொன்னையும், வெளிர் நீலம் சுக்ரனையும், கருநீலம் சனியையும், வெண்மையில் கரும் புள்ளிகளை உடையவை ராகுவையும், கருமையில் நீலப் புள்ளிகளை உடையவை கேதுவையும் குறிக்கும். கேள்விகேட்பவரின் முகத்தையும், சோழிகள் கூறும் தகவல்களையும் வைத்து உங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறுவேன்!" என்றவர் அனைவரின் முகங்களையும் ஒருமுறை ஏறிட்டார்.

"அரச குடும்பத்தினராகிய நாங்கள், மனநிம்மதியின்றித் தவிக்கிறோம்.." — என்று துவக்கினாள் புவனமகாதேவி. "எத்தை தின்றால் பித்தம் தெளியும் என்கிற நிலையில் இருக்கிறோம்." ஈனஸ்வரத்தில் ஒலித்தது அவளது குரல்.

"கவலை வேண்டாம், ராஜமாதா! எனது சோழிகள் இந்த அரண்மனையில் உருளும் போது எழும் ஒலி, உங்கள் சோகங்களை நீக்கி, மனநிம்மதியை உருவாக்கும் என்பது உறுதி! மன்னனின் ஜாதகச் சுவடியைத் தாருங்கள்." — சௌரப பண்டிதர் கூற, புவனா மகேந்திரனின் ஜாதகத்தைக் கவனித்தார்.

---

இவர்களுடன் திருமணத் தொடர்பு வைத்துக் கொள்ள மறுத்தார்கள். சோழியர்கள் தங்கள் சிகையைச் சிரசின் உச்சியில் முடிந்திருப்பார்கள். ஜாதகத்தைப் படித்ததும், நடுவில் இருக்கும் சிகையை அவிழ்த்துச் சிரசின் வலப்புறப் பக்கவாட்டினில் குடுமியாக முடிந்தால், பிரச்னைகள் நீங்கும் என்பதாகப் பொருள். அவர்கள் குடுமியைச் சிரசின் இடப்புறத்தில் முடிந்தால், பிரச்னைகள் தொடரும் என்று குறிப்பு கூறுவார்கள். எனவே சோழியனின் குடுமி சமநிலையில் இருக்காது. ஒன்று இடப்புறம் சாயும் அல்லது வலப்புறம் சாயும் என்பதைக் குறிக்க, சோழியன் குடுமி சமமாகாது என்றார்கள். அதாவது இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் என்பதால் சோழியனின் குடுமி ஒன்று இடப்புறம் இருக்கும், அல்லது வலப்புறம் இருக்கும். சமநிலையில் இருக்காது என்பது இந்தப் பழமொழியின் பொருள். அதைத்தான் சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று இப்போது கூறிவருகிறோம்.

*தலையைக் குனிந்தபடி செளரப பண்டிதர் மகேந்திரனின் ஜாதகத்தை ஆராய்ந்து கொண்டிருக்க, அவரது சிரசின் உச்சியில் நின்றிருந்த அவரது சிகையையே உறுத்துப் பார்த்தனர், அரச குடும்பத்தினர். குடுமி வலதுபுறம் சரியுமா, இடதுபுறம் சரியப் போகின்றதா?*

*ஜாதகத்தை ஆராய்ந்த செளரபர், உச்சிக்குடுமியை அவிழ்த்துத் தனது சிரசின் பின்புறமாகக் கட்டிக் கொள்ள, அனைவரும் அவரைத் திகைப்புடன் நோக்கினர்.*

*"சுவாமி! உங்களது செய்கைக்கு என்ன பொருள்?" — ராஜஸ்ரீ கேட்டாள்.*

*"ஆகாமி கர்மவினையும் இல்லை. பிராரப்த கர்ம வினையும் இல்லை. அனைத்தும் சஞ்சிதம்தான். எனது சிகையைப் பின்னோக்கி முடிந்ததற்குக் காரணம் பல்லவத்தின் கேடுகளுக்குக் காரணம் கர்மா இல்லை. மூலகுலத்தைப் பின்னோக்கித் தள்ளிவிட்டுப் பல்லவத்தை ஆளுவதற்கு ஒரு மகன் முயல்கிறான். அவன்தான் அனைத்து விபரீதங்களுக்கும் காரணம். அரண்மனை வளாகத்தில் சிறுவினை விதைக்கப்பட்டது. உங்கள் அரண்மனையில் எங்கோ வர்மகேது குளிகம்* புதைக்கப்பட்டுள்ளது. அதுதான் உங்கள் குடும்பத்தில் பரவிக் கிடக்கும் எதிர்மறையான எண்ணங்களுக்குக் காரணம்." — பண்டிதர் கூற, மகேந்திரன் தனது செவிகளையே நம்ப முடியாமல் அவரை வெறித்தான்.*

---

* வர்மகேது குளிகம் - நுகரும் சக்தி, கேட்கும் சக்தி, புணரும் சக்தி, ருசிக்கும் சக்தி, காணும் சக்தி என்று அனைத்து சக்திகளின் மூலமும் மனதை வசியப்படுத்தலாம் என்று நமது மூதாதையர்கள் கூறி உள்ளனர். நறுமணச் சென்ட் (SCENT)கள் சிலருக்குத் தலைவலியை உண்டு பண்ணுகின்றன. உண்மையில் அலர்ஜி என்பது உடல் தொடர்பான நோய் அல்ல. மனதுக்கு ஒவ்வாத விஷயங்கள் உடலில் அலர்ஜியாகப் பிரதிபலிக்கின்றன. தலைவலிக்குக் காரணம் அந்த நறுமணம் மனதுக்கு உகந்தவை அல்ல என்பதுதான்

*"வர்மக் கேது என்றால்?" — மகேந்திரன் கேட்க, அவனிடம் விளக்கினார், பண்டிதர்.*

*"நாசி மனிதனை நுகர வைக்கிறது. நாடி அவனது தேகத்தை இயங்கச் செய்கிறது. நுகர்தல் சக்தியால் மனிதர்களின் மனதைக் குழப்ப முடியும். நறுமணங்கள் மனதை நுகர வைக்கும். மல்லிகை மலருக்குக் காதல் உணர்வைத் தூண்டும் சக்தி உண்டு. கணவன் மனைவி யிடையே காதலைத் தூண்டச் செய்யும் மல்லிகை. துழாய் என்கிற துளசியின் மணத்தை நுகரும் போது மனநிம்மதி கிடைக்கும். மனம் ஒருநிலைப்படும். வாகை மலரின் நறுமணம் வீரத்தைப் பெருக்கும். எனவேதான் போர்க்கள மலராக வாகையை வைத்திருக்கிறார்கள். அத்தி மலரை நுகர்ந்தால், நாடிச்சக்கரங்கள் சீர்படும். வியாதிகள் அகலும். அது போல் வர்மகேது என்பது எதிர்மறையான விதை. அதன் மணத்தை நுகர்பவர்கள் மனவழுத்தம் பெறுவார்கள். வாழும் எண்ணம் போய்விடும். உடன்*

---

உண்மை. வர்மகேது என்பது மனதில் வக்கிரங்களை உண்டாக்கி வாழ்வில் வெறுப்பினை உண்டுபண்ணித் தற்கொலை எண்ணத்தைத் தூண்டச் செய்யும் மணம். இதன் வாசத்தை நுகர்ந்தால், தற்கொலை உணர்வுகளைத் தூண்டும்... சித்தர்கள் எண்பது சதவீத மூலிகைகளை இன்னமும் மர்மமாகவே வைத்திருப்பதற்குக் காரணம், மக்கள் அதனைத் துஷ்ப்ரயோகம் செய்யக்கூடும் என்கிற கவலையில்தான் என்று கர்ணபரம்பரை நாவலில் தெரிவித்திருக்கிறேன்.

எல்லாமே மூடநம்பிக்கை என்று அரசியல்வாதிகளின் பிரசாரத்தால் நாம் நம்மை உணர்ந்து கொள்வதையே மறந்து, அவர்களது பிரசாரத்தை நம்புகிறோம். அதுவே ஒருவித மனவசியம்தான், மக்களைச் சிந்திக்கவிடாமல் செய்வது என்பது. நமது மூதாதையர் கூறியதை மூடநம்பிக்கை என்று கூறும் நாம், மேலைநாட்டினர் விடும் மூடநம்பிக்கை கரடிகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். Pied Piper தனது இசையின் வசியத்தால், ஹாம்லின் நகரக் குழந்தைகளைக் கவர்ந்து சென்றான் என்பதை ஸ்லாகித்துப் படிக்கிறோம். Harry Potter கதையின் மாயாஜாலங்களை நம்பும் நாம் நமது சித்தரின் கதைகளை ஏற்க மறுக்கிறோம்.

இருக்கும் மனிதர்களின் மீது பற்று நீங்கும். சொந்த மனைவி மக்களையே காண விரும்பமாட்டார்கள். திடீரென்று காணாமல் போவார்கள். அல்லது தற்கொலை செய்து கொள்ளுவார்கள். அது இப்போது பெருமரமாக வளர்ந்திருக்கிறது. அந்த விஷ விருட்சத்தை வேரோடு வெட்டி எறிந்தால், பிரச்னைகள் தீரும். குடும்பத்தில் மனநிம்மதி உருவாகும். உங்கள் அரண் மனையில் எங்கோ வர்மகேது குளிகம் புதைத்து வைக்கப் பட்டுள்ளது. அரச குடும்பம் செய்யும் தவறுகள்தான் இப்போது தங்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அனைத்துப் பிரச்னைகளுக்கும் காரணம். மன்னிக்க வேண்டும்..! உங்கள் தந்தை சிம்மவிஷ்ணுவுக்கு உங்களைத் தவிர வேறு யாராவது ஒரு மகன் இருக்கின்றாரா?" — பண்டிதர் கேட்டார்.

திகைத்துப் போனாள் புவனமாதேவி. "ஏன் கேட்கிறீர் பண்டிதரே? என்னைத் தவிர மன்னர் வேறு யாரையும் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. எங்களுக்குப் பிறந்தது மகேந்திரன் ஒருவனே..!" — புவனமாதேவி கூறினாள்.

"இல்லை ராஜமாதா! காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிவது போன்று பல்லவ இரத்தம் தனியாகப் பிரிந்து சிற்றாறாக இன்னொரு கிளை ஓடுகிறது. அந்த பல்லவத்தின் ரத்தம் விதைத்துள்ள வினைதான் வர்மகேது குளிகம். பல்லவ அரச குடும்பத்தில் மனக் குழப்பங்களை உண்டாக்குகின்றது. தற்கொலை எண்ணம், காணாமல் போதல், துர்மரணங்கள், மனக் குழப்பத்தால் செய்வதை அறியாமல் கேடான செயல்களில் ஈடுபடுதல் போன்ற வற்றிற்குக் காரணமாக அமையும்."

சௌரப பண்டிதர் முக்காலியின் மீது தான் குவித்திருந்த அந்த ஒன்பது சோழிகளைக் கையில் எடுத்து இருகைகளாலும் குலுக்கி முக்காலியில் வீசினார்.

ராகு, கேதுவைக் குறிக்கும் சோழிகள் மட்டும் நிமிர்ந்து விழுந்திருக்க, மற்ற கிரகங்களைக் குறிக்கும் சோழிகள் மல்லாந்து கிடந்தன.

பண்டிதரின் கண்கள் சுருங்கின. சோழிகளைக் கவனித்தவர், பிறகு கவலை தோய்ந்த முகத்துடன் அரச குடும்பத்தினரை ஏறிட்டார்.

"மன்னா! சோழிகளைக் கவனியுங்கள். சுக்ரனை குறிக்கும் சோழி ராகு கேது என்கிற இரு சோழி களிடையே சிக்கி உள்ளது. சுக்ரன் ராசி கட்டங்களில் இரண்டாவதாக உள்ள ரிஷபத்தின் அதிபதி. ரிஷபம் என்பதுதானே பல்லவச் சின்னம். பல்லவக் குடும்பத்தை எதிர்த்து வினை ஏவப்பட்டுள்ளது. அதுதான் குடும்பத்தைத் தாக்கி வருகிறது. குடும்பத்தில் இதுவரை இரு கொலைகள், இரு தற்கொலைகள், இருவர் காணாமல் போயிருக்க வேண்டுமே..!" — சௌரப பண்டிதர் கூற, அனைவரும் ஒருவரையொருவர் திகைப்புடன் நோக்கினர்.

"இல்லையே! நவரத்ன பல்லவியும், சாயாதேவியும் தற்கொலை செய்து கொண்டனர்.. ஜெயவர்மனும் பீமவர்மனும் காணாமல் போனார்கள். அந்த வகையில் நீங்கள் கூறுவது சரியே! ஆனால் எனது தம்பி விஜயவர்மன் மட்டுமே கொல்லப்பட்டான். நீங்கள் இரு கொலைகள் என்று கூறுகின்றீர்களே..!" — ராஜவர்மன் குழம்பினான்.

பண்டிதர் மீண்டும் சோழிகளை வழித்து எடுத்து, மீண்டும் கைகளில் குலுக்கியபடி உரத்த குரலில் வினாவை எழுப்பினார்.

"நந்தி குடும்பத்தில் எத்தனை தற்கொலைகள்?" சோழிகளை மீண்டும் முக்காலியில் உருட்டிவிட, ஏழு சோழிகள் நிமிர்ந்து விழ, செவ்வாய் சோழியும், சுக்ரன் சோழியும் மல்லாந்து விழுந்தன.

"இரண்டு சுமங்கலிகளின் தற்கொலைகள்! ஒருத்தி வாழ்ந்தவர். ஒருத்தி வாழாதவர். மல்லாந்து விழுந்த செவ்வாய் சோழி ஜெயவர்மரின் மனைவியைக் குறிக்கிறது. செவ்வாய் மூன்றாவது கிரகம். சாயாதேவி மூன்றாவது மருமகள். சுக்ரன் பெண் கிரகம். குடும்பத்துப் பெண் நவரத்னாவை குறிக்கிறது. அவர் வாழாதவர்..!" — சோழிகளைக் காட்டி விளக்கிய சௌரபர், மீண்டும் சோழிகளை உருட்டினார்.

"தொண்டையர்கோன் குடும்பத்தில் எத்தனை பேர் காணாமல் போனார்கள்?"

மீண்டும் இரு சோழிகள் மல்லாந்து விழ மற்றவை நிமிர்ந்து விழுந்திருந்தன. அதனைக் கண்ட அரச குடும்பத்தினரின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"மூன்றாவது கிரகமான செவ்வாயைக் குறிக்கும் சோழி மீண்டும் மல்லாந்து விழுந்துள்ளது. அதற்கு அடுத்த நான்காவது கிரகமான புதனைக் குறிக்கும் சோழியும் மல்லாந்து விழுந்துள்ளது. எனவே, மூன்றாவது மகன், நான்காவது மகன் ஆகியோரைக் காணவில்லை..!" என்றார் சௌரபர்.

"பல்லவ அரச குடும்பத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்ட துர்சம்பவங்கள் நிகழ்ந்திருக்கிறன?" — பண்டிதர் கேட்க, அனைவரும் பண்டிதரின் கைகளில் குலுங்கிக் கொண்டிருக்கும் சோழிகள் எப்போது கீழே விழும் என்கிற ஆவலுடன் காத்திருக்க, சோழிகளை உருட்டினார் பண்டிதர்.

அனைவரும் ஆர்வத்துடன் குனிந்து நோக்கினர்.. அவர்களது இதயங்கள் படபடத்துக் கொண்டிருந்தன.

மீண்டும் இரண்டு சோழிகள் மல்லாந்து விழுந்திருக்க, மற்ற சோழிகள் நிமிர்ந்து விழுந்திருந்தன.

முதல் சோழியான சூரியச் சோழியும், ஏழாவது சோழியான சனியின் சோழியும் மல்லாந்து விழுந்திருந்தன.

"சூரியச் சோழியும், சனியின் சோழியும் மல்லாந்து விழுந்துள்ளன. சனி ஏழாவது கிரகம். இறந்த மகனும் பல்லவக் குடும்பத்தின் ஏழாவது மகன்" என்றார் பண்டிதர்.

அறையில் மரண அமைதி நிலவியது.

'சிம்மவர்மனுக்கு ஐந்து செல்வங்கள். அவன் தம்பி விஷ்ணுவர்மனுக்கு ராஜவர்மன் மற்றும் விஜயவர்மன் என்கிற இரண்டு செல்வங்கள்.. அவ்வகையில் ஏழாவது மகன் விஜயவர்மன். பொருத்தமாகக் குடும்பத்தைப் பீடித்திருந்த சனிதான் விஜயவர்மன்!' — மனதினுள் நினைத்தான், ராஜவர்மன்.

சௌரப பண்டிதர் தொடர்ந்தார். "சிம்ம ராசியைச் சேர்ந்த ஒருவரும், மகர ராசியைச் சேர்ந்த ஒருவரும் துர்மரணத்தைக் கண்டிருக்க வேண்டுமே. மக நட்சத் திரத்தைச் சேர்ந்த ஒருவரும், உத்திராட நட்சத்திரத்தைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டிருக்க வேண்டும். காரணம், சூரியனைக் குறிக்கும் சோழியும் சனியைக் குறிக்கும் சோழியும் மல்லாந்திருப்பதைக் கவனியுங்கள்..!" — பண்டிதர் கூற, ராஜஸ்ரீ கவலையுடன் அவரை நோக்கினாள்.

"எனது மைத்துனர் விஜயவர்மன் உத்திராட நட்சத்திரத்து மகர ராசியைச் சேர்ந்தவர். அப்படி யென்றால் கொல்லப்பட்ட இன்னொருவர் யார்?" — ராஜஸ்ரீ கூற, அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

புவனமாதேவி தான் அமர்ந்த இருக்கையிலிருந்து தனது கைகளால் தலையைப் பற்றியபடி கீழே சரிய, மகேந்திரன் நல்லவேளையாக அவளைத் தாங்கிப் பிடித்தான்.

"என்ன நடந்தது தாயே?" — பதைபதைத்தான் மகேந்திரன்.

புவனா பதில் கூற முடியாமல் திணறினாள். அவளது கண்களில் நீர் பீறிட்டது.

"என்ன நடந்து அண்ணியாரே?" — ஆதுரத்துடன் ராஜஸ்ரீ புவனாவை அணைத்தாள்.

"நமது மாமன் மன்னர் சிம்மவர்மர் சிம்ம ராசியின் மக நட்சத்திரத்தைச் சேர்ந்தவர்..!" புவனமாதேவி கூறியதும், அனைவரும் உறைந்து போயினர்.

"மன்னர் சிம்மவர்மரின் மரணம் இயற்கையானது. நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் விழுந்தார். கடைசிவரை அவனிசிம்மனுடனும், என்னுடனும் பேசிக் கொண்டுதான் இருந்தார். இறப்பதற்கு சற்று நேரம் முன்பாக நான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தரும நகரத்திற்குச் சென்றேன். அப்போது கூட, அத்தி மலைத்தேவனைக் கண்டுபிடித்து, அத்திமலையில் வைக்க வேண்டும் என்று என்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார். நான் அவரைக் கடைசியாக அப்போது தான் பார்த்தேன். நன்றாகத்தான் பேசிக் கொண்டிருந் தார். மருத்துவர் கூட மூலிகைக் கலவையைப் புகட்டினார். அதன்பின் எனது தாய் குந்தளாதேவியார் வந்ததும் நான் புறப்பட்டேன்." — ராஜவர்மன் கூறினான்.

"ஆம்! அரசியார்தான் அங்கே இருந்தார். ஆனால் நடுவில் அரசியார் ஒருமுறை வெளியே வந்தார்..!" புவனா கூறினாள்.

"அந்த இடைவெளியில் மன்னர் கொல்லப்பட்டிருக் கலாமே?" — பண்டிதர் பரபரப்புடன் கேட்டார்.

"அதற்கு சாத்தியம் இல்லை. மன்னர் அருகிலேயே தான் அரசியார் அமர்ந்திருந்தார். ஒரே ஒருமுறை, ஒத்தாடை ஆலயத் தலைமை அர்ச்சகர் சங்கமேஸ்வரர் மன்னரின் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதங் களுடன் வந்திருந்தார். அவற்றைப் பெற்றுக் கொள்ள நான்தான் அரசியாரை அழைத்தேன் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி விருந்தினர் அறையில் அர்ச்சகரைச்

சந்தித்துப் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு உடனே அரசியார் மன்னரின் அறைக்குத் திரும்பிவிட்டார். பிறகு மன்னர் இறந்துவிட்டார் என்று கதறியபடிதான் வெளியே வந்தார், அரசியார்..!" — துக்கம் புவனாவின் நெஞ்சை அடைத்தது.

"பிரசாதங்களை அளிக்கும் போது அர்ச்சகர் மௌனமாகவா இருந்தார்?" — பண்டிதர் கேட்டார்.

"இல்லை! சமனப்ரஷ்னம் என்கிற மந்திரத்தைக் கூறிப் பிரசாதங்களை அளித்தார்." — புவனா கூறினாள்.

"அந்த வேளையில்தான் கொலை நடந்திருக்கும். அங்கே மன்னருக்காக அர்ச்சகர் மறை ஓத, இங்கே மன்னவரின் உயிர் வாங்கப்பட்டிருக்கிறது!"

பண்டிதர் அனைவரையும் வெறித்துப் பார்த்தார். "நீங்கள் அனைவரும் என்னை மன்னிக்க வேண்டும். எனது ஆற்றலின் மீது எனக்கு முழு நம்பிக்கை உண்டு. எனது ஆற்றலை, சாளுக்கியம், கடம்பம், குந்தளம், சேரம், சோழம், பாண்டியம் என்று எல்லாத் தேசங்களிலும் உணர்ந்திருக்கிறார்கள். எனது புகழைக் கேள்வியுற்றுதான், நீங்களும் என்னை இங்கே தருவித்திருக்கின்றீர்கள். எனவேதான், நான் துணிவுடன் உண்மைகளைக் கூறுகிறேன். மன்னரின் அருகே இருந்த அரசியார், ஒத்தாடை கோயில் அர்ச்சகரைச் சந்தித்துப் பிரசாதங்களை வாங்குவதற்குள் மன்னரின் கதை முடிக்கப் பட்டிருக்க வேண்டும். ஒரு உயிரை வாங்குவதற்கு, ஒரு க்ஷணநேரம், ஒரு வினாடி போதும், மன்னர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்தார். வெறும் ஓய்வுப்படுக்கையை மரணப்படுக்கையாக மாற்றப் பட்டிருக்கிறது. அரண்மனையிலேயே சுற்றிக் கொண்டிருக்கும் ஒருவரால்தான் இம்மாதிரிக் கொலைகளைச் செய்ய முடியும். தவறாக நினைக்க வேண்டாம், என்னை மன்னர் படுத்திருந்த அறைக்கு அழைத்துச் செல்லுங்கள். ஏதாவது புலப்படும்..!" —

பண்டிதர் கேட்க, மகேந்திரனும், ராஜவர்மனும், தங்களையும் அறியாமல் எழுந்தார்கள்.

"நீங்கள் செல்லுங்கள். எனக்கு அவர் சொல்வதைக் கேட்க உடலில் வலு இல்லை.." கண்ணீர் உகுத்தபடி தனது இருக்கையில் சாய்ந்தாள், புவனமாதேவி.

சௌரபருடன், மகேந்திரன், ராஜவர்மன், மற்றும் ராஜஸ்ரீ நடந்தனர். சிம்மவர்மன் படுத்திருந்த அறையினுள் நுழைய, பண்டிதர் அறை முழுவதும் தனது பார்வையைச் சுழலவிட்டார். அவருக்கு ஒன்றும் புலப்படவில்லை. பிறகு சிம்மவர்மன் படுத்திருந்த மஞ்சத்தை வெறித்துப் பார்த்தார்.

தனது கைகளில் இருந்த சோழிகளை நெற்றியில் வைத்துக் கண்மூடித் தியானத்தினுள் நழுவினார். அவர் அம்மாதிரி செய்கிறார் என்றால், ஆகாஷ அந்தரச் சக்கரத்தைப்* பிரயோகிக்கிறார் என்பது பொருள்.

நிஷ்டையில் இருந்த சௌரபருக்கு ஒரு மங்கிய ஒளியில் ஒரு காட்சி தென்பட்டது. சிம்மவர்மன் கண்மூடி இருக்க, வலிமையான, உறுதிமிக்க, கரங்கள்

* சக்கர யோகங்களில் திருஷ்டி யோகம் என்கிற வகை உண்டு. ஞானதிருஷ்டியால் தொலைவில் நடப்பதையும் முனிவர்களால் காண முடியும். ஒரு சாலை வளைந்து திரும்பும் இடத்தில் எதிர்புறம் வரும் வண்டிகளைக் காண முடியாது. வண்டி ஓட்டுபவர்களுக்கு எதிர்புறம் வரும் வாகனத்தைக் காட்டுவதற்காக, அந்த வளைந்து திரும்பும் சாலையின் மத்தியில் ஒரு வட்டவடிவக் கண்ணாடியை வைத்திருப்பார்கள். திருப்பத்தில் வண்டிகள் மோதுவதைத் தவிர்ப்பதற்கு இந்தக் கண்ணாடிகள் உதவும். அது போல்தான் ஆகாச அந்தரச் சக்கரம். ஞான திருஷ்டிகளின் பாதையும் அதுவே..! நடந்து கொண்டிருக்கும் செயல்களை எளிதாக முனிவர்களால் ஞான திருஷ்டியில் அறியலாம். மகாபாரதத்தில் சஞ்சயன் ஞான திருஷ்டியால் திருதராஷ்ட்ரனுக்கு மகாபாரத யுத்தத்தை வர்ணனை செய்தான். ஆனால் என்றோ நடந்து முடிந்த செயலைப் பற்றி அறிய வேண்டுமென்றால் ஆகாச அந்தர யோகச் சக்கரத்தைப் பிரயோகிக்க முயலுவார்கள். என்ன நடந்து என்று காண முயலுவார்கள்.

இரண்டு மஞ்சத்தில் இருந்து செம்மைவண்ண தலையணை ஒன்றை எடுக்கிறது. அந்தத் தலையணை சிம்மவர்மனின் முகத்தை மறைக்கிறது. பிறகு அந்தக் கரங்கள், தலையணைக்கு அழுத்தத்தைத் தருகிறது..

பண்டிதர் கலக்கத்துடன் மனக்கண்ணில் தோன்றும் அந்தக் காட்சியைப் பார்க்கிறார்.

திடீரென்று பண்டிதரின் கண்கள் சுழன்றது. முகம் பதறியது.. சிம்மவர்மனின் கொலைக்காட்சி மறைந்து வேறு சில காட்சிகள் அவருக்குத் தென்பட்டன. அந்தரச் சக்கரத்தைப் பிரயோகப்படுத்தினால் இதுதான் பிரச்னை. நடந்த காட்சிகள் மட்டும் அல்ல, நடக்கப் போகின்ற காட்சிகளும் மனக்கண்ணின் முன்பாகப் புலப்படும்.

திடீரென்று காட்சி மாறுகிறது.

ஒரு மரத்தில் பெண் ஒருத்தி தூக்குக் கயிற்றினில் ஊசலாடிக் கொண்டிருக்கிறாள்..

ஒரு மனிதன் நிர்வாணமாக, உடல் முழுவதும் எண்ணையைத் தடவிக் கொண்டு பல்லவ அரண் மனையினுள் எட்டிப்பார்த்து நிற்கிறான்..

தேகம் நடுங்க பண்டிதர் கண்விழித்ததைக் கவனித்தனர் அரச குடும்பத்தினர்.

அவரை அனைவரும் கவலையுடன் பார்த்தனர்.

தனது மனக்கண்ணில் தோன்றிய காட்சிகளை அரச குடும்பத்தினருக்கு விவரித்தார், சௌரப பண்டிதர்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். வர்மகேது குளிகம் இருக்கும்வரை இந்த மாதிரி எதிர்மறை நிகழ்வுகள் அரச குடும்பத்தில் நடந்து கொண்டேதான் இருக்கும். துர்மரணங்கள், தற்கொலைகள், குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போவது போன்ற சம்பவங்களைத் தடுக்க வேண்டும் என்றால் வர்மகேது குளிகத்தை அரண்மனை வளாகத்திலிருந்து நீக்க வேண்டும். தேடுதல் வேட்டையை உடனே துவங்குகிறேன்!" பண்டிதர் கூறினார்.

"பல்லவ அரச குடும்பத்தில் இரு தற்கொலைகள், இரு கொலைகள் மற்றும் இருவர் காணாமல் போய் இருக்கிறார்கள். இந்த விபரீதங்களுக்குக் காரணம், யாரோ ஏவிய வினை என்கிறீர்கள். வர்மகேதுவை விதைத்ததன் மூலம் யார் அரச குடும்பத்திற்குக் கேடு நினைக்கிறார்கள் என்பதைத் தங்களால் கூற முடியுமா?" — ராஜஸ்ரீ கேட்க, அனைவரும் பண்டிதரைக் கலக்கத்துடன் நோக்கினர்.

"முயன்று பார்க்கிறேன், இளவரசி!" என்ற பண்டிதர், சோழியைத் திரட்டி மீண்டும் நெற்றியில் வைத்தார். கண்களை மூடிய நிலையில் அவரது வாய் ஏதோ முணுமுணுக்க, திடீரென்று அவரது உடல் குலுங்கியது. சோழிகளை நான்கு திசையிலும் நீட்டிவிட்டு, பிறகு உயரே வைத்து அங்கிருந்து நழுவவிட, சோழிகள் பூமியில் சிதறின.

சோழிகளை உறுத்துப் பார்த்தார், பண்டிதர்.

"இளவரசி! என்னால் யூகிக்க முடியவில்லை. நான் கண்ட காட்சியை வர்ணிக்கிறேன். அதனைக் கொண்டு உங்களுக்கு ஏதாவது புரிகிறதா என்று பாருங்கள். ஒரு யானை நிற்பது தெரிகிறது. அதன் பின்பாகம் மட்டும் புலப்படுகிறது. யானையின் பின்பாக ஒரு குளம் தெரிகிறது. குளத்தில் ஒரு தங்க மீன் நீந்திக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது."

அனைவரும் யாருக்கேனும் ஏதாவது புரிய வருகிறதா என்பது போன்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு அனைவரது பார்வையும் ராஜஸ்ரீயின் மீது பதிந்தது. ராஜஸ்ரீதானே அறிவுக்கூர்மை அதிகம் உடையவள். அவள்தான் இத்தகைய புதிர்களை விடுவிப்பதில் கைதேர்ந்தவள். யானையின் பின்பாகத்தின் அருகே ஒரு குளம்..! அதில் ஒரு தங்க மீன்! யோசித்துக் கொண்டே இருந்தாள், ராஜஸ்ரீ.

# 28. இரும்புக்கர மங்கை!

மங்களேசனை வீழ்த்தி வாதாபியின் மன்னன் இரண்டாம் புலிகேசியாகப் பதவி ஏற்றுவிட்டான் இறையா.

"தலையில் மகுடம் என்னும் பாரம் ஏறியதும், பொறுமை, பணிவு, பரிவு, அடக்கம் எல்லாமே கொண்டு யோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும் இறையா!" — சுமனஸா கூற, அவசரமாகத் தலையசைத்தபடி, அருகில் நின்ற ராஜகுரு பாரவி என்கிற தாமோதரானை நோக்கினான்.

"சைந்தவ மன்னன் தந்திதுர்கன் மீது உடனே படையெடுத்துச் செல்ல வேண்டும் பாரவி!" — அவந்திகாவின் எழில்முகம் கண்களில் நிழலாட உடனே சைந்தவம் புறப்படத் துடித்தான்.

"இப்போதுதான் உனது வளர்ப்புத் தாய் உனக்குப் பொறுமை, பரிவு, அடக்கம் தேவை என்று புத்திமதி கூறினாள். யோசித்து முடிவு எடுக்கவும் சொன்னாள். அவளிடம் தலையசைத்துவிட்டு, இப்போது உடனே, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவு எடுப்பது நியாயமா..?"

"எனது அவசரம் அவளுக்கு எப்படித் தெரியும்? தந்திதுர்கனைவிட அவன் மகள் அவந்திகாவை*

---

* சைந்தவனின் மகள் அவந்திகா பேரழகி. இவளை மகேந்திரன் உயிருக்குயிராகக் காதலித்தான். அவளுக்காகக் கடல்மல்லையில் ஒரு மாளிகையை அமைத்து அதில் அவளைச் சிறை வைத்தான். நரசிம்மவர்ம பல்லவனின்

*கைப்பற்றத்தான் நான் படையெடுத்துச் செல்கிறேன் என்று உனக்குத் தெரியாதா? இன்றே நாம் புறப்பட்டு, அந்தத் தேவ அரம்பையளை நமது வாதாபிக்கு கடத்தி வந்துவிடலாம் புறப்படு!" — புலிகேசி அவந்திகாவை நினைக்க நினைக்க, அவனது தீவிரம் அதிகமாவதை உணர்ந்தான், பாரவி.*

*பாரவி கேட்டான்.*

*"ஹர்ஷன் என்கிற பரமசிவனின் கழுத்தில் இருக்கும் பாம்பு தந்திதுர்கன். ஹர்ஷனின் வலதுகரம் அவன். நீ தந்திதுர்கனை முதலில் குறிவைத்தால், ஹர்ஷன் பொறுத்துக் கொள்ளமாட்டான். முதலில் ஹர்ஷனை ஒழித்துக் கட்டிவிடு. பிறகு தானாகத் தந்திதுர்கனின் கொட்டம் அடங்கிவிடும்." — பாரவி கூறினான்.*

*"அவந்திகா எனது சொத்து பாரவி. நீதானே கூறினாய், அவள் எனக்கு என்று எனது பாட்டனிடம் தந்திதுர்கன் பட்டயம் எழுதித் தந்திருக்கிறான் என்று."*

*"பட்டயமும் எழுதித் தந்துவிட்டு, பலியும் வாங்கி விட்டான். கையாளுவதற்கு, கைப்பற்றுவதற்கு அவந்திகா பொம்மையல்ல, புலிகேசி. மிகவும் சாதுர்யமானவள். கொதிக்கும் அக்னியை உள்ளங்கையில் வைத்திருப்பது போன்று, அவளைக் கையாள முடியாமல் தவிப்பாய். உனது மாமன் மகள் சாருபாலாவை மணந்து கொண்டு நிம்மதியாக இரு!" — பாரவி கூற, மேலும் கீழும் உலவிக்*

---

தலைமைப் புலவராக இருந்த தண்டி அவந்திசுந்தரி என்கிற படைப்பில் மகேந்திரனுக்கு அவந்திகா மீது உள்ள காதலை வெளிப்படுத்துகிறான். தாமோதரா என்கிற பாரவியின் கொள்ளுப்பேரன்தான் என்று தண்டி தனது நூலான அவந்திசுந்தரியில் தெரிவிக்கிறான், தண்டி. ஏறக்குறைய அவந்திகாவின் பாத்திரத்தைத் தழுவியே அமரர் கல்கி தனது சிவகாமி சபதம் கதையின் சிவகாமியை உருவாக்கியிருக்கிறார் என்று கருதுகிறேன். அவந்திகாவின் மீதுள்ள மகேந்திரனின் காதலை நரசிம்மவர்மன்-சிவகாமி இடையே நடைபெறுவதாக வடித்திருக்கிறார்.

கொண்டிருந்தவன், நின்று சினத்துடன் பாரவியை நோக்கினான்.

"ஆலோசனைக்கு நன்றி பாரவி. உனது மன்னன் அதனை ஏற்கவில்லை. நாளை விடியலில் நாம் சைந்தவம் செல்கிறோம்!" — புலிகேசி உறுதியுடன் கூற, வேறு வழியின்றி, பாரவி தலையை மேலுங்கீழும் அசைத்தான்.

புதிதாக நியமிக்கப்பட்டிருந்த வாதாபி சாளுக்கியத்தின் தளபதி வல்லபராஜாவை அழைத்து மறுநாள் விடியலில் சைந்தவத்தின் மீது படையெடுத்துச் செல்ல ஏற்பாடு களைச் செய்யும்படி உத்தரவிட்டான், புலிகேசி.

மறுநாள் விடியலில் வாதாபியின் படைகள் சைந்தவத்தை நோக்கிப் புறப்பட்டன. படைகளுடன் புறப்பட்ட புலிகேசியை வாழ்த்துவதற்கு அவனது தம்பியுடன் வந்திருந்தாள், சுமனஸா.

"இறையா! நீ தொடுக்கும் முதல் போர் இது. இந்தப் படையெடுப்பில் நீ அடையும் புகழ்தான் உன்னை இந்த உலகிற்கு நீ எப்படிப்பட்டவன் என்பதனை உரைக்கும். குருதி வெறிபிடித்தவன், பெண்ணாசை பிடித்தவன், மண்ணாசை பிடித்தவன் என்றெல்லாம் ஒரு மன்னன் முத்திரை குத்தப்படுவதே, தனது முதல் படையெடுப்பின் போது அவன் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்த்தே. நான் உனக்குச் சாணக்கியனின் அர்த்தசாஸ்திரத்தைப் படித்துக் காட்டியிருக்கிறேன் அல்லவா. லோப விஜயனாக இருக்காதே. வெற்றி பெற்றாலும் தர்மத்தைக் கடைப்பிடிக்கும் தர்மவிஜயனாகவே திகழு. பெண்களை மதிப்புடன் கையாள்வாய். உனது படையினரால் எந்தப் பெண்ணுக்கும் அநீதி நடைபெறக் கூடாது..!" — சுமனஸா கூறினாள்.

சுமனஸா கூறியிருந்தது பொன்னேடுகளில் பொறிக்கப் பட வேண்டிய சொற்கள்தான். ஆனால் அவை

செவிடன் செவியில் ஊதப்பட்ட சங்கு என்று அருகில் இருந்த பாரவி நினைத்தான்.

வாதாபியின் படைகள் சைந்தவத்தைச் சுற்றி முற்றுகையிட்டன. சைந்தவத்தின் தந்திதுர்கன் மிகவும் பலவான்தான். அவனுடைய பாட்டன் ஆகுகன் படையெடுத்து வந்த அரேபியர்களை* விரட்டியடித்த வன்தான். ஆனால் வாதாபி புலிகேசி சரித்திரம் படைக்கப் புறப்பட்டிருக்கும் போது, சைந்தவர்களின் வீரம் சற்றே ஒதுங்கித்தானே இருக்க வேண்டும்.

புலிகேசி படையெடுத்து வந்த போது தந்திதுர்கன் ஹர்ஷரின் அழைப்பை ஏற்றுப் பிரயாகை வைபவத்தில் கலந்து கொள்வதற்காகப் பிரயாகராஜம்** சென்றிருந் தான்.

இரவினைக் கழிப்பதற்காகச் சைந்தவத்தின் வெளியே கூடாரமிட்டுத் தங்கியிருந்தான் புலிகேசி. சூரியோதயம் தொடங்கியவுடன் சைந்தவ நகரத்தை முற்றுகையிட வேண்டும் என்று கூடாரத்தில் அமர்ந்து பாரவியுடன்

* The Saindhava were also known as Jayadrathas, ruled western Saurashtra (now in Gujarat, India) from c. 600 CE to c. 900 CE, probably in alliance with Maitrakas in early years. Their capital was at Bhutamabilika (now Ghumli. The known historical events during their rule are the attacks of Arabs repulsed by Agguka I.

** பிரயாகராஜம் என்கிற நகரம்தான் அலஹாபாத் என்று மாற்றப்பட்டது. (இப்போது மீண்டும் பிரயாக்ராஜ் என்று மாற்றப்பட்டுள்ளது.) ஹர்ஷவர்தனன் புத்த மதத்திற்கு மாறினாலும், இந்துக்களின் கும்பமேளாவை விமரிசையாக நடத்தினார் என்று உலக யாத்திரை மேற்கொண்ட புத்த பிக்கு ஹுயன் சாங் கூறியுள்ளார்.

The Chinese traveler Xuanzang (Hiuen Tsang) mentions that Emperor Shiladitya (identified with Harshvardhan) distributed his wealth among the public once every five years; his treasury was then replenished by his vassals. He describes such a ritual at a site located at the confluence of two rivers, in the kingdom of Po-lo-ye-kia (identified with Prayaga). He also mentions that many hundreds take a bath at the confluence of two rivers, to wash away their sins.

பேசிக் கொண்டிருந்த போது, வாதாபியின் ஒற்றன் ஒருவன் வந்தான்.

"அரசே! சைந்தவ மன்னன் ஹர்ஷரின் அழைப்பின் பேரில் பிரயாகை வைபவத்திற்குச் சென்றிருக்கிறான். இளவரசி அவந்திகா மட்டுமே அரண்மனையில் இருப்பதாகத் தெரிகிறது." — ஒற்றன் கூறியதும், பாரவியைக் களிப்புடன் நோக்கினான், புலிகேசி.

"அப்படி என்றால் நல்லதாகப் போனது. நாம் உடனேயே அரண்மனையைக் கைப்பற்றி, அவந்திகாவை சிறை பிடிப்போம்." — புலிகேசி கூற, பாரவி அவனை நோக்கித் [illegible]தான்.

"உனது வளர்ப்புத் தாய் சுமனஸா கூறிய போதனைகளை மறந்தாயா? மன்னன் இல்லாத நேரத்தில், அரண்மனைக்குள் புகுந்து அவன் மகளைக் கடத்தியதாகத் தவறாகச் சித்திரிக்கப்படுவாய். எனவே, தந்திதுர்கன் இருக்கும் போதுதான் நீ அரண்மனையினுள் நுழைய வேண்டும். ராமன் இல்லாத நேரத்தில் ஜானகியைக் கடத்திய இராவணனாகத் திகழ்வாய்." — பாரவி கூறினான்.

"இராமன் இல்லாத போது ஜானகியைக் கடத்தினால்தானே தவறு..? ஜனகன் இல்லாத போதுதானே நான் சிறைப்பிடிக்கிறேன். எனவே தவறு இல்லை. நமது திட்டத்தில் எவ்வித மாறுதலும் இல்லை." — புலிகேசி அகம்பாவத்துடன் கூறப் பாரவி மனதினுள் அதிர்ந்தான்.

பாரவியை மீண்டும் ஏறிட்டு நோக்காமல் கூடாரத்தைவிட்டு வெளியேறிய புலிகேசி, இருளில் தொலைவில் வெளிச்சப் புள்ளிகளாகத் தெரிந்த சைந்தவ அரண்மனையை நோக்கினான்.

அங்கே நிலவுலகின் பேரழகி அவந்திகா இருக்கிறாள். ரம்பை, ஊர்வசி, மேனகை மற்றும் திலோத்தமை ஆகிய

நான்கு தேவ கன்னிகைகளும், சிவிகையில் சுமந்து செல்லப்பட வேண்டியவள். ஸ்ரீதேவி பூதேவியாக இவனது அரியணையின் இரு பக்கலிலும் மனைவி களாகச் சாருபாலாவும், அவந்திகாவும் அமர, இவன் கம்பீரத் திருமாலாக* ஆட்சி செய்வது போன்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டான்.

அப்போது —

சைந்தவ அரண்மனை பக்கத்தில் இருந்து ஒரு குதிரை வீரன் இவர்களின் கூடாரத்தை நோக்கி விரைந்து வருவதை அவனது கண்கள் கவனித்தன. அவந்திகா சமரசம் பேசத் தூது அனுப்புகிறாள் போலும்.

புலிகேசியின் இதயம் குதூகலித்தது. 'சமரசம் பேசினால், அவளிடம் என்னைத் திருமணம் செய்து கொள் என்கிற நிபந்தனையை விதிக்க வேண்டும். பைங்கிளியைச் சிறைபிடித்துத் தங்கக் கூண்டில் அடைத்து வாதாபி அந்தப்புரத்தில் வைக்க வேண்டும்.' — தனக்குள் சிந்தித்தபடி விரைந்து வந்து கொண்டிருக்கும் அந்தக் குதிரைவீரனையே வெறித்துப் பார்த்தான். அந்த குதிரைவீரன் புலிகேசியை நெருங்கி அவனது முன்பாக நின்றான். குதிரையில் அமர்ந்திருந்தது, வீரன் அல்ல; அவந்திகா!

இரவில், கடுங்குளிரில் சற்றும் அச்சமின்றி முற்றுகை இட்டிருக்கும் தனது முன்பாக அலட்சியமாக வந்து நிற்கும் அவளது துணிவைக் கண்டு திகைத்து நின்றான், புலிகேசி.

தனது கட்டை விரலையும், நடுவிரலையும் இணைத்துச் சொடுக்கி புலிகேசியை அழைத்தாள்.

"ஏய் போர் வீரனே! சென்று உனது மன்னனை அழைத்து வா. நான் பேச வேண்டும்!" — அவந்திகா அதிகாரத்துடன் கூற, புலிகேசி வாயடைத்து நின்றான்.

---

* இரண்டாம் புலிகேசி பரம வைணவன்.

வெண்மையில் கரும்புள்ளிகளைக் கொண்டிருந்த குதிரையின் சேணத்தின் மீது கம்பீரமாக அமர்ந் திருந்தாள், அவந்திகா. அவளது அடர்த்தியான நீண்ட கூந்தலைக் கரிய நிற பட்டுத்துணியால் சுற்றி அத்னைத் தலையில் பாகையாக இருத்தி, அதனை ஒரு வைரப் பதக்கத்தால் பிணைத்திருந்தாள். மாம்பழ நிறப் பாவாடையை அணிந்து கரிய சால்வையினால் தேகத்தைப் போர்த்தியிருந்தாள். கரிய தலைப்பாகை மற்றும் கரிய சால்வையின் இடையே நடுநிசியில் தோன்றிய செந்நிறக் கதிரவனாக ஜொலித்தது அவளது முகம். அவளை அந்நிலையில் கண்ட எந்த ஆடவனுக்கும் அவளது அழகும், குயிலைப் போன்ற அவளது குரலும், காதல் உணர்வுகளைத் தூண்டிவிட்டிருக்கும், அவளது இடையினில் சொருகியிருந்த வாளும் கேடயத்தையும் மாட்டும் அவன் பாராதிருந்தால். தன்னையே மறந்து, அவளது அழகை ரசித்துக் கொண்டிருந்தான், புலிகேசி.

அவன் தன்னை உறுத்துப் பார்த்தபடி நிற்பதைக் கண்டு கொதித்துப் போனாள், அவந்திகா.

“முன்னர் பின்னர், நீ ஒரு பெண்ணைப் பார்த்ததே கிடையாதா? இளவரசி என்கிற பணிவு கூட இன்றி அப்படி வெறிக்கின்றாயே?” — காட்டத்துடன் கேட்டாள் அவந்திகா.

“பெண்ணைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இரவில், கடுங்குளிரில், எதிரியின் முகாமைத் தேடி வரும் பெண்ணை இப்போதுதான் முதன்முறையாகப் பார்க்கின்றேன்.. நான்தான் வாதாபியின் புலிகேசி மன்னன்!” தான் யார் என்று கூறியதும் அவள் மருட்சி யுடன் குதிரையில் இருந்து இறங்குவாள் என்று நினைத்தான், புலிகேசி.

அவனை ஏற இறங்க நோக்கினாள் அவந்திகா. “கேசம் அடர்த்தியாக இருக்கிறது. கேசி என்கிற சொல் பொருந்துகிறது. ஆனால் புலி பகலில்தானே

வேட்டையாடும். நீர் எங்கள் அரண்மனையில் மனிதர்கள் உறங்கும் நேரத்தில் ஓடித்திரியும் எலிகளைப் போன்று மன்னர் இல்லாத நேரத்தில் முற்றுகையிட வந்துள்ளதால், உம்மை எலிகேசி என்றே அழைக்கத் தோன்றுகிறது..!" — நையாண்டியாக அவந்திகா பேச, சுள்ளென்று உரைத்தது அவனுக்கு.

"புலியாகப் பாயத்தான் வந்திருக்கிறேன். பாய்ந்த பிறகு தெரியும். ஆனால் என்ன செய்வது. புலி இன்னொரு புலியுடன்தான் மோதும். அந்தப் புலி புள்ளிமானின் கையில் கோட்டையைக் கொடுத்துவிட்டுப் பிரயாகை பக்கம் சென்றிருப்பதாக அறிந்தேன். அதுதான் புள்ளிமானை முற்றுகையிட மனமில்லாமல் இங்கே நிற்கிறேன்." அவளைச் சினத்துடன் நோக்கினான்.

"புள்ளிகளைக் கொண்டதெல்லாம் மான் என்று நீர் நினைத்தால் அது உமது அறிவின்மையைக் காட்டுகிறது. சிறுத்தைகளுக்கும் புள்ளிகள் இருக்கும். நான் வந்த கார்ரணமே அதுதான். அதோ எனது கோட்டையின் வாயிலைக் கூட மூடும்படி நான் உத்தரவிடவில்லை. நாளைக் காலை எனது படைகள் உமது படைகளைச் சந்திக்கும். போரில் வெல்வது எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. அதற்குமுன் ஒரு வாய்ப்பு தருகிறேன். நாளை பொழுது இனிதாகப் பிறக்கட்டும். இரத்தக் களரி வேண்டாம். உங்கள் வாதாபி படை வீரரின் குருதி எங்கள் மண்ணில் பாய வேண்டாம். வீர சைந்தவக் குருதியால் வளம் பெற்றுள்ள எங்கள் பூமியில் உங்கள் வாதாபி இரத்தம் கலப்படம் ஆக வேண்டாம். இதில் உங்கள் குருதி கலந்தால், நிலத்தின் வீர்யத்திற்குப் பங்கம் வந்துவிடுமோ என்கிற எண்ணத்தில்தான் உங்களைத் திரும்பிப் போகச் சொல்கிறேன். உங்களுக்கு அஞ்சி அல்ல. குதிரையின் மீது கவிழ்த்து கிடத்தப்பட்ட பிணமாக மீண்டும் வாதாபி செல்லாமல், கம்பீரமாகவே செல்லுங்கள்..! உமக்குக் கடைசி எச்சரிக்கை!" — அவந்திகா கூற, புலிகேசியின் பொறுமை தகர்ந்தது.

"பெண்ணே! வார்த்தைகளில் நிதானம் தேவை. சைந்தவம் எங்களுக்கு விளைவித்திருக்கும் கேடுகள் அதிகம். சைந்தவத்தைச் சேர்ந்த வேறு எவர் இங்கு வந்திருந்தாலும், அவர்களை எனது வாள் பதம் பார்த்திருக்கும். பெண்கள் துணிவுடன் சொல்ஜாலம் செய்வார்கள். காரணம், எந்த ஒரு ஆண்மகனும் தன்னைத் தாக்குவதற்கு முன்வரமாட்டான் என்கிற துணிவில் அவனை எள்ளி நகையாடுவார்கள். சினம் பொங்கினாலும், அவளை ஒன்றும் செய்யாமல் பொறுமை காப்பான், அந்த ஆண்மகன். அது அவனது கோழைத்தனத்தைக் காட்டவில்லை. ஒரு பெண்ணிடம் போய்த் தனது பலத்தைக் காட்டுவதா என்கிற கட்டுப்பாடினால் வாளாயிருப்பான். ஆனால் அவன் பொங்கி எழுந்து தண்டிக்கத் துவங்கினால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். என்னைக் கொன்றுவிடுங்கள் என்று அந்தப் பெண்ணாகக் கதறும்வரை சித்திரவதை களைச் செய்வான் அந்த ஆண்மகன். எனவே விபரீதங் களை விலை கொடுத்து வாங்க வேண்டாம் என்று எச்சரிக்கிறேன்..!" — உக்கிரத்துடன் கூறினான், புலிகேசி.

அவந்திகா அவனை ஒரு துரும்பைப் பார்ப்பது போன்று நோக்கினாள்.

"புலி எவ்வளவு உறுமினாலும் கர்ஜனைக்கு ஈடாகுமோ? ஒரு ஆடவன் தனது தேகப் பலத்தை மட்டுமே நம்பி இருக்கிறான். பெண் அறிவுக்கூர்மையுடன் செயலாற்றுவதால் அவளுக்கே வெற்றி. விதண்டா வாதங்கள் தேவை இல்லை. நாளை உதிக்கும் கதிரவனே நமது போர்க் கலைகளுக்குச் சாட்சியாக இருக்கட்டும். நாளை சூரிய அஸ்தமனத்திற்குள் நீங்கள் எனது கோட்டை யினுள் புகுந்து என்னைச் சிறைப் பிடித்தால், காலமெல்லாம் நான் வாதாபியின் அடிமையாக இருக்கிறேன். ஆனால் அங்ஙனம் நீங்கள் என்னைச் சிறைப்பிடிக்காவிட்டால், எங்கள் நாடு உங்களுக்குக் கப்பம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. ஒப்புக்

கொள்கிறீர்களா?" என்றவள் அவனது பதிலுக்காகக் காத்து நின்றாள்.

அவந்திகா இப்படியொரு சவாலை விடுத்துவிட்ட பிறகு அவனால் அதனை ஏற்க முடியாது என்றா கூற முடியும்?

"நாளை மாலை சூரியன் அஸ்தமிக்கும் போது நீ வாதாபியின் அடிமையாக இருப்பாய்?" எதிர் சவால் விட்டவன், கோபத்துடன் திரும்பித் தனது கூடாரத்தை நோக்கி நடந்தான்.

அவந்திகாவுடனான முதல் சந்திப்பினை அவன் காதல் ரசமாகத்தான் கற்பனையில் வடித்திருந்தான். இம்மாதிரியான சவால் போட்டியாக அது மாறக்கூடும் என்று சிறிதும் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

"பாரவி! அவந்திகாவை கைப்பற்றி அவளை எனது இதய சிம்மாசனத்தில் அமர வைத்து மிகவும் பாதுகாப்புடன் அவளை வாதாபிக்கு அழைத்துச் செல்ல நினைத்திருந்தேன். ஆனால் அவளது அகந்தை அதற்கான சந்தர்ப்பத்தினை அமைத்துத் தரவில்லை. அவளைக் கைது செய்து கைவிலங்கு பூட்டிச் சிறையில் தள்ளி, அவளது செருக்கை அகற்றுவதுதான் முதல் வேலை.." — கர்ஜித்தான் புலிகேசி.

பாரவி பதில் கூறவில்லை. அவனும் அவந்திகாவை பார்த்துவிட்டான். போர்க் கலைகளில் வல்லவளாகக் காணப்படுகிறாள். அவளை எளிதில் வெல்ல முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால், அதைக் கூறிப் புலிகேசியின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்யவும் அவன் விரும்பவில்லை.

"ஒன்றும் பெரிய காரியம் இல்லை, புலிகேசி. சூரியன் உச்சி வானத்திலிருந்து இறங்குவதற்குள் அவளைக் கைது செய்வோம்," — என்றான் பாரவி.

கதிரவன் உதித்துவிட்டான். ஆனால் உங்கள் போருக்கு என்னை நீதிபதியாக நியமித்து என்னை வம்பினில் சிக்கவிடாதீர்கள் என்பது போன்று, உதித்த பிறகு மேகங்களின் பின்பாக மறைந்து கொண்டான்.

சைந்தவக் கோட்டையிலிருந்து சீறிப் பாய்ந்து வந்தன படைகள். இரதம் ஒன்றில் மகிஷாசுரனை வதம் செய்யப் புறப்பட்ட துர்கையைப் போன்று கம்பீரத்துடன் நின்றிருந்த அவந்திகா, தொலைவில் போருக்குத் தயாராக நின்றிருந்த வாதாபி படைகளை நோக்கினாள்.

"தாக்குங்கள்..." — என்று அவந்திகா முழங்க, புலிகேசி சடாரென்று திரும்பி அவனை வழியனுப்புவதற்காக நின்ற பாரவியைக் கேள்வியுடன் நோக்கினான்.

"எனக்கு இதுவே முதல் போர், பாரவி! மங்களேச னிடம் ஆட்சியை மீண்டும் பெறுவதற்காகப் போர் தொடுத்தேனே தவிர, அவன் என்னை எதிர்க்காமல் சரணடைந்துவிட்டான். எனவே, எதிர்ப்பை சந்திக்கும் முதல் போர் இதுதான். ஆனால் எதிர்பாராதவிதமாக என்னை எதிர்ப்பவள் ஒரு பெண். அதுவும் இளங்குமரி. நான் இந்தப் போரை எப்படிக் கையாளுவது..? ஒரு பேரழகியை எனது எதிரியாக எனக்குப் பார்க்கத் தோன்றவில்லையே! நான் அவளைக் காணும் போதெல்லாம் அவளைக் கொல்ல வேண்டும் என்று தோன்றவில்லை. கரும்பு வில்லினால், மலர்க் கணை களைத்தான் செலுத்த வேண்டும் என்றே தோன்றுகிறது. நான் என்ன செய்வது..?" — புலிகேசி கேட்டான்.

"அப்படியென்றால், நீ அவளது இரதத்தை உடைத்து அவளை நிராயுதபாணியாக நிற்க வைத்துக் கைது செய். அவளது சேனைகளைத் துவம்சம் செய்து அவள் மீண்டும் தனது கோட்டைக்குள் தப்பிச் செல்லாமல் அவளை உனது படைகளால் சூழ்ந்துவிடு!" — பாரவி கூறினான்.

விருட்டென்று புறப்பட்டுத் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த சைந்தவப் படைகளை எதிர்கொள்ளச் சென்றான், புலிகேசி. அவனது முதல் போர் அவனுக்குப் பெரும் வெற்றியைத் தர வேண்டும். சைந்தவத்தை வீழ்த்தி, அதன் இளவரசி அவந்திகாவை வாதாபி மன்னன் சிறைபிடித்தான் என்கிற சரித்திரத்தைப் படைக்க வேண்டும் என்கிற உத்வேகத்துடன் போரிட்டான், புலிகேசி.

ஆனால், அவந்திகாவின் வேகத்தைக் கண்டு பிரமித்துப் போனான். தனது தந்தை தந்திதுர்கனுடன் அரேபியப் படைகளை நாசம் செய்தவள். தனது தந்தையின் உதவியின்றி தன்னால் தனது கோட்டையைக் காப்பாற்ற முடியும் என்கிற தன்னம்பிக்கையுடன் சீறிப் பாய்ந்து போரிட்டுக் கொண்டிருந்தாள். புலிகேசியினால் அவளை நெருங்கவே முடியவில்லை. திடீரென்று பெய்த அம்பு மழை ஒன்று இவனது பின்பாகத் தொடர்ந்து கொண்டிருந்த குதிரைவீரர்களைப் பதம் பார்க்க, அவர்கள் அலறிக் கொண்டே விழுந்து உயிரைவிட, தனது முக்கியக் குதிரைப் படைத்தலைவர்களை அவள் வீழ்த்திவிட்டதைக் கண்டு திகைத்தான்.

அவனது திகைப்பு சினமாக மாறி, பெரும் கோபமாக வடிவெடுத்தது. அவளைக் குரோதத்துடன் நோக்க, அவந்திகா அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பாவம் நீ புலிகேசி..! வாதாபியின் மன்னன் என்றதும் பெரிய மாவீரனை எதிர்கொள்ளப் போகிறோம் என்கிற ஆர்வத்துடன் போருக்கு வந்தேன். நேற்றிரவு உன்னைச் சந்தித்த போது மிகவும் இளங்குமரனாக இருக்கிறாய். சீறிப் பாய்ந்து போரிடுவாய். எனது போர்வேட்கைக்கு நல்ல தீனி கிடைத்தது என்று மகிழ்ந்தேன். ஆனால் உனக்குப் போர் அனுபவம் இல்லை. இது உனக்கு முதல் போர் என்று நினைக்கிறேன். வீரன் என்று சுற்றி இருப் பவர்கள் கோஷமிடுவதால் நீ வீரன் ஆகிவிடமாட்டாய்.

இளங்கன்று பயமறியாது என்பதால் படை எடுத்து வந்துவிட்டாய். போர் என்பது உனது உயிரைப் பாதுகாத்து வெற்றியை இலக்காகக் கொள்வது அல்ல. உனது குதிரைவீரர்களின் மீது நான் பாண வர்ஷம் (அம்பு மழை) செய்யப் போகிறேன் என்பதனை யூகித்து அவர்களைப் பின்னுக்குப் போகச் சொல்லி நீ கட்டளை இட்டிருக்க வேண்டும். போர்புரிவது மட்டும் வீரமல்ல. ஒருங்கிணைத்து நமது படைகளையும் காப்பாற்ற வேண்டும். உனக்கு அனுபவம் இல்லை. 'ராமன் இராவணனுக்கு ஒரு நாள்தான் அவகாசம் கொடுத்து, 'இன்று போய் நாளை வா' என்றான்.. நான் ஓராண்டு உனக்கு அவகாசம் கொடுக்கிறேன். இன்று போய் போர்க் கலைகளை கற்றுக் கொண்டு வா.." — இறுமாப்புடன் கூவினாள் அவந்திகா.

அவமானத்தால் துடிதுடித்தான் புலிகேசி. இவனைவிட வயதில் இளையவள், தேகரீதியாக வலுவில்லாதவள். போர்க் கலைகளில் இவனுக்கு அனுபவம் இல்லை என்று கூறி ஒரு தமக்கையைப் போன்று அறிவுரை கூறி அவகாசம் கொடுப்பதை அவனால் தாள முடியவில்லை.

காஞ்சிக்குச் சென்ற போது அத்திமலையானின் சந்நிதியில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நினைத்துப் பார்த்தான். அவன் அத்திமலைத்தேவனைத் தரிசித்துக் கொண்டிருந்த போது அவரது வரத ஹஸ்தத்தில் வைக்கப்பட்டிருந்த மாங்கனி ஒன்று நழுவிக் கீழே விழுந்தது. நல்ல சகுனம் என்று பாரவி இறையாவின் செவியில் கிசுகிசுத்த போது, அர்ச்சகரே அந்தக் கனியை எடுத்துக் கொண்டு அவனை நோக்கி வந்தார்.

"அப்பா! நீ யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அத்திமலையான் ஹஸ்த* நட்சத்திரக்காரன்.

* போரில் ஈடுபட்டிருக்கும் மன்னர்கள் அத்திமலையானை நாடினால், அவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்று அஸ்திகிரி தந்திரம் கூறுகிறது. ஹஸ்தம் குறித்து ஒரு சுவையான

*மன்னர்களின் மன்னன் என்று சொல்வார்கள். அத்தத்தைப் பெற்றவன் அத்திரத்தை வென்றிடுவான்.*

---

சம்பவம்.. நெருக்கடி நிலைக்குப் பின்னர் 1977 -இல் தேர்தல் முடிந்து வடமாநிலங்களில் ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்தது. இந்திராகாந்தி தனது சொந்தத் தொகுதியான ரேபரேலியில் ராஜநாராயண் என்பவரிடம் தோல்வி அடைந்திருந்தார். அவர் மீது வழக்குகள் போட்டு அவரைக் கைது செய்யத் துடித்துக் கொண்டிருந்தது ஜனதா அரசு. அவரது சொந்த காங்கிரஸ் கட்சியிலேயே, பிரும்மானந்த ரெட்டி தலைமையில் ஒரு அணி, இந்திராகாந்தியைக் கட்சியைவிட்டு வெளியேற்ற முயற்சித்துக் கொண்டிருந்தது. சவான், ரெட்டி, தேவராஜ் அர்ஸ் போன்றவர்கள் அவரது முக்கியத்துவத்தைக் குறைக்க முயல, எல்லா வகையிலும் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருந்தார், இந்திராகாந்தி. அப்போது தமிழகத்திற்கு வந்த போது, காஞ்சி மகாபெரியவரைத் தரிசிக்கத் தேனம்பாக்கம் சென்றிருந்தார், மகாபெரியவர் மௌன விரதத்தில் இருந்த நேரம். இந்திராகாந்தி தனது பிரச்னைகளுக்கு விடிவு ஏற்பட வேண்டும் என்று மனதினுள் வேதனையுடன் நினைத்தபடி அவரை நோக்கிக் கைகூப்ப, கிணற்றுக்கு அப்பால் அமர்ந்திருந்த மகாபெரியவர் அஸ்திகிரி தந்திரத்தை ஜபித்தபடி இந்திராகாந்தியை நோக்கித் த்னது கையை உயர்த்தினார். அனைவரும் அவர் இந்திராகாந்தியை ஆசீர்வதிப்பதாக நினைத்தனர். இந்திராவும் அப்படித்தான் நினைத்திருந்தார். காரணம் அவர் தனது கையைத் தனது தலைக்கு மேலாக உயர்த்தி, அரசியல்வாதிகள் தங்கள் சின்னத்தைக் காட்டுவதைப் போன்று காட்டினார். அனைவரும் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் தனது அந்தரங்க உதவியாளரைப் பெரியவர் பார்க்க, அவர் அவரது சைகையைப் புரிந்து கொண்டு இந்திராவிடம் சென்று ஆங்கிலத்தில், "Madam! Change your symbol. He wants you to show your Hand to the people.." என்றதும் அவர் திகைத்தாராம். அதன் பிறகு காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்து பசுவும் கன்றும் சின்னம் முடக்கப்பட்டுப் பிரும்மானந்த ரெட்டிக்கு ராட்டைச் சின்னமும், இந்திராவுக்குக் கைச்சின்னமும் ஒதுக்கப்பட, 1978 பிப்ரவரியில் நடைபெற்ற கர்நாடகா, ஆந்திரா சட்டமன்றத் தேர்தல்களில் இந்திரா அமோக வெற்றி பெற்றார். 1977-ல் பதவி இழந்த இந்திராகாந்தி இரண்டே வருடங்களில் மீண்டும் பிரதமராக வந்துவிட்டார். ஹஸ்தம் என்கிற கைச்சின்னம் மீண்டும் பதவிக்கு வர அவருக்கு உதவியது.

(ஹஸ்த வரதனின் அருள் பெற்றவன் அஸ்திரங்களை வென்றிடுவான்). திருலோச்சன பல்லவன் தொடங்கி, கரிகாலன், இளந்திரையன், சமுத்ரகுப்தன், பல்லவர்கள் என்று மன்னர்களை இரட்சித்து அவர்களுக்கு வெற்றிகளைத் தந்தவன். மன்னர்கள் அவனைத் தரிசிக்கும் போது கனிகள் இம்மாதிரி நழுவி விழுந்தால் அவர்களுக்கு வெற்றிக் கனியை அளிக்கின்றான் என்று புரிந்து கொண்டு அந்தக் கனியை அவர்களுக்கே அளிப்போம். உனக்கும் அவன் கனியைத் தந்திருக் கிறான்!" — என்று கூற, இறையா பயபக்தியுடன் அந்தக் கனியைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

அத்தத்தைப் பெற்றவன் அத்திரங்களை வென்றிடு வான் என்று அத்திமலைத்தேவனே இவனை வாழ்த்தி இருக்க, ஒரு பெண்ணா இவனுக்குப் போர்க் கலைகளைப் பற்றி அறிவுரைகள் கூறுவது? வெகுண்டு எழுந்தான், புலிகேசி.

"போரிடாமல் வாய் ஜாலம் செய்கிறாய், இளவரசி! புலி வாலைப் பிடித்துவிட்டாய். இனி நீ கதறிக் காலில் விழுந்தாலும் உனக்கு மன்னிப்பு கிடையாது.. இன்று மாலைக்குள் நீ சிறைப்படுத்தப்படுவாய்" என்றவன் புதிய உத்வேகத்துடன் தளபதி வல்லபராஜாவை நோக்கினான்.

"இன்று சூரிய அஸ்தமனத்திற்குள் நான் அவந்திகாவை சிறைபிடிக்கவில்லை என்றால், என்னை உனது வாளால் வெட்டிக் கொன்றுவிடு!" — கர்ஜித்த புலிகேசி மீண்டும் வீறு கொண்டு எழுந்தான். பௌருஷத்தை உந்தச் செய்வதே பெண்மைதானே. தன்னையும் அறியாமல் அவனது வீரத்தையும், தன் மானத்தையும், தனது அகந்தைப் பேச்சினால் தூண்டி விட்டிருந்தாள் அவந்திகா. அதுவரை அவளது கை ஓங்கி இருக்க, நுணலும் தனது வாயினால் கெடும் என்பது போன்று, அவள் பேசிய பேச்சே அவளுக்கு வினையாக முடிந்தது. புலிகேசியும், வல்லபராஜாவும், புறாக்

கூட்டத்தில் புகுந்த கடுவன் பூனைகளாக மாறினர். அவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், சைந்தவத் தளபதிகள் திணற, அதைக் கண்டு புதிய ஊக்கத்துடன் வாதாபி படையினர் சைந்தவப் படையினரைத் தாக்கினர்.

தனது இரதத்தினில் இருந்து ஒரு கதையை எடுத்துக் கொண்டு புரவியில் தாவி ஏறிய புலிகேசி அவந்திகாவின் தேரை நோக்கிச் சென்று அதில் தாவி ஏறினான். தனது கதையினால் இரதசாரதியை அடித்துத் தள்ளியவன், அந்தத் தேரை நொறுக்கத் தொடங்கினான். இரதசாரதி இல்லாததால் அந்தக் குதிரை தறிகெட்டு ஓட, அவந்திகா செய்வதறியாது திகைத்தாள். ஒருகணம்தான். சட்டென்று புலிகேசியின் குதிரையின் மீதே தாவி ஏறியவள், தனது கோட்டையை நோக்கி விரைந்தாள். அதனைச் சற்றும் எதிர்பார்த்திராத புலிகேசி, அவளது வேகத்தைக் கண்டு அயர்ந்து போனான்.

“எங்கே போய்விடப் போகிறாய்? பத்திரமாகக் கோட்டையில் எனக்காகக் காத்திரு. உனது மிகுதிப் படைகளை அழித்துவிட்டு, உனது முடியைப் பற்றி வாதாபிக்கு இழுத்துச் செல்கிறேன்!” — புலிகேசி அவளை நோக்கி உறுமினான்.

மின்னல் வேகத்தில் அரண்மனைக்குச் சென்றவள், பரிதவிப்புடன் தனது அந்தப்புரத்தில் இப்படியும் அப்படியுமாக நடை போட்டாள். போரில் தளர்ச்சி அடைந்திருந்த புலிகேசியை இவளே அகந்தையுடன் பேசி ஊக்கப்படுத்தி இருந்தாள். இந்தத் திடீர்த் திருப்பத்தை அவள் எதிர்பார்த்திருக்கவில்லைதான்.

இப்போது என்ன செய்வது? யோசித்துக் கொண்டே இருந்தாள். புலிகேசியிடம் அவள் சிக்கிவிடக் கூடாது. இவள் பேசிய பேச்சுக்கு, அவன் பழி வாங்குவான். அன்றாடம் சித்திரவதை செய்யவும் கூடும். இவளை எப்படியெல்லாம் கேவலப்படுத்துவது என்று யோசிப்பான்.

என்ன செய்யலாம்? திடீரென்று அவள் சிந்தையில் ஒரு யுக்தி தோன்றியது..

"யாரங்கே! நமது அரசவைப் புலவர் சலபதியை அழைத்து வா." — பணிப்பெண்ணை ஏவினாள்.

என்னவோ ஏதோ என்று பதறியபடி ஓடி வந்தார் சலபதி.

"சலபதி! உம்மிடம் சுவடியும் எழுத்தாணியும் உள்ளது அல்லவா?" — அவந்திகா கேட்க, தலையசைத்துச் சுவடியையும், எழுத்தாணியையும் கையில் எடுத்தார்.

அவந்திகா தொடர்ந்து நடைபோட்டபடி அவரைப் பார்த்தாள்..

"நான் சொல்லியபடி அதில் பதிவு செய்யுங்கள். சைந்தவ இளவரசி அவந்திகா, சைந்தவத்தின் தலைமைப் புலவனான சலபதி என்கிற என்னிடம் தத்துவ ரீதியான தர்க்கத்தில் சவால் ஒன்றை ஏற்று, வாதத்தினில் தோல்வியடைந்ததால், எனக்கு அடிமையாகத் திகழ்கிறார். எனது அனுமதியின்றி இளவரசி சைந்தவ எல்லையைவிட்டு வெளியேறக் கூடாது. எப்போது அவர் மீண்டும் வாதத்தில் என்னை வெல்கின்றாரோ அப்போதுதான் அவரை நான் விடுவிப்பேன்..!"

அவந்திகா கூற, அதனைப் பதிவு செய்தவர், திகைப்புடன் இளவரசியை நோக்கினார்.

"என்னை அப்படிப் பார்க்காதீர்கள். வாதாபி புலிகேசி என்னைச் சிறைப்பிடிக்கச் சற்று நேரத்தில் வருவான். அவன் என்னைக் கவர்ந்து செல்லாதபடி நீர் இந்த ஓலையைக் காட்டி வாதித்து என்னைக் காப்பாற்றுங்கள். அதற்காகத்தான் இந்த ஓலை.." என்றவள், அவசரமாக அந்த ஓலையை அவரது கரத்தில் இருந்து பறித்துத் தனது கையொப்பத்தை இட்டு, ராஜ இலச்சினையையும் பதித்தாள்.

சலபதி பிரமித்துப் போய் நிற்க, அவரை எரிச்சலுடன் நோக்கினாள், அவந்திகா. "ஏன் இங்கேயே நிற்கிறீர்கள். தலைமறைவாக இருங்கள். அவன் என்னைக் கடத்திச் செல்ல வரும் போது எதிரே வந்து கூப்பாடு போடுங்கள். நீர் என்னுடன் நின்றால், இதனை நாம் செய்யும் ஏமாற்று வேலை என்பதை யூகித்துவிடுவான்." — அவந்திகா கூற, சலபதி ஓடிச்சென்றார்.

அவந்திகா செய்வதறியாது மஞ்சத்தில் சரிந்தாள். தான் அளவுக்கு அதிகமாகப் பேசிவிட்டோமோ..? சற்றே பணிவுடன் பேசியிருந்தால், அவன் இவள் மீது கருணை காட்டியிருப்பானோ..? புலிகேசியை அச்சுறுத்தும் எண்ணத்துடன் பேசியிருக்க இப்போது இவளே அச்சத்துடன் அமர்ந்திருந்தாள். அவனது முரட்டு உருவமும், உக்கிரமான முகமும் அவளுக்குள் சற்று நடுக்கத்தை ஏற்படுத்தின.

பாரவியை அழைத்துக் கொண்டு நேராக அவளது அந்தப்புரத்திற்கே வந்துவிட்டான் புலிகேசி.

"சூரியன் இன்னும் அஸ்தமிக்கவில்லை. ஒருவேளை உன்னை வாதாபி நகருக்கு நான் சிறைப்பிடித்துச் செல்வதைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறான் போலும், புறப்படு! சீவி முடிந்திருக்கும் உனது கொண்டையை நான் பற்றி இழுத்துச் செல்வதற்குத் தோதாக அவிழ்த்துவிடு! உனது ஆணவத்திற்குக் காரணமான உனது அடர்த்தியான கூந்தலை நான் பற்றி இழுத்துச் செல்லும் போது, உனது முடிக்கால்களில் நிலவும் அகந்தை, ஆணவம், திமிர் அனைத்தும் வற்றிப் போகும்!" அவளை நோக்கித் தனது வாளை நீட்டியபடி எக்காளமிட்டான், புலிகேசி.

மௌனமாகத் தனது கொண்டையைத் தாங்கி இருந்த ஸ்வர்ண ஊசியை அவள் இழுக்க, தன்னால் அவள் கூந்தல் அருவியைப் போன்று கீழே நழுவியது. அவளது முழங்கால் வரை அவள் கூந்தல் ஊசலாட அதனைக் கவனித்தான், புலிகேசி.

"உனது கூந்தல் இன்னும் சற்று நீண்டிருந்தால், நிலத்தைத் தொட்டிருக்கும். பூமாதேவியை ஸ்பரிசித்திருந்தால், அவள் உனக்குப் பொறுமையையும், பணிவையும் கற்றுத் தந்திருப்பாள். அதனால்தான் உனக்கு அந்த நற்குணங்கள் இல்லை. வாதாபியின் மண் உன்னைப் பண்படுத்திவிடும்!" முதல் முறையாகத் தனது கையை நீட்டி அவளது கூந்தலை இறுகப் பற்றினான்.

அவளது கூந்தலின் மென்மை பரவசத்தை உண்டு பண்ண அவனது உக்கிரமான முகத்தையும் மீறி அந்த மென்மை அவனது கண்களில் பிரதிபலித்தது.

அதனைக் கவனிக்கத் தவறவில்லை பாரவி. இதுதான் சமயம் என்று பேசத் துவங்கினான்.

"இறையா! தந்திதுர்கன் இல்லாத போது அவன் மகளைச் சிறைப்பிடிப்பது கோழைத்தனம் என்று கூறுவார்களே!" — பாரவி சொல்ல, அவனை அலட்சியத்துடன் நோக்கினான் புலிகேசி.

"அதை அறிந்ததும், நான் திரும்பிச் செல்லும் நோக்கத்துடன்தான் இருந்தேன், பாரவி. அவளாக வந்து என்னுடன் மோதி, தன்னையே சிறைப்படுத்திக் கொண்டாள். இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எனது தன்மானத்தை இடறிவிட்டாள். இனி காலமெல்லாம் என்னடிமை" என்று அவளது கூந்தலைப் பற்றி மூன்றடி எடுத்து வைத்தான்.

"ஏற்கெனவே அடிமையானவள் இன்னொருவனுக்கு எப்படி அடிமையாக முடியும்?" சலபதி எதிரே கையில் சுவடியுடன் அலட்சியமாக நடை போட்டு வந்தார்..

புலிகேசியும், பாரவியும் அவனை வியப்புடன் நோக்கினர்.

"யார் நீ?" — புலிகேசி கேட்டான்.

"வாதாபி மன்னரே! நான்தான் சலபதி. சைந்தவத்தின் தலைமைப் புலவன். இலக்கிய ஆர்வம் மிக்க இளவரசி,

என்னுடன் தத்துவத் தர்க்கத்தில் ஈடுபட்டு என்னிடம் சவால்விட்டு, தன்னையே என்னிடம் அடிமைப்படுத்திக் கொண்டார். அதற்கான சாசனம் இதோ!" — கர்வத்துடன் புலிகேசியின் முன்பு சுவடியை ஊசலாட்டினார்.

அவந்திகாவின் தலைமுடியைப் பற்றியிருந்த தனது பிடியை விடாமல், பாரவியைப் புலிகேசி பார்க்க, அவன் சலபதியிடம் இருந்து அந்தச் சுவடியை வாங்கிப் படித்தான்.

"ஆம் இறையா! இளவரசி இவருக்கு அடிமை என்று கையொப்பம் இட்டுச் சாசனத்தைத் தந்திருக்கிறார்." — பாரவி கூற, அவளது தலையை உயர்த்திக் கண்களுள் கோபத்துடன் நோக்கினான்.

"உனக்குச் சவால்விடத்தான் தெரியுமா? வெல்வதற்குத் தெரியாதா? என்னிடம் சவால்விட்டுத் தோற்றது போலப் பலரிடம் சவால்விட்டு அடிமையாகத் திகழ்கிறாய் போல் உள்ளதே?" கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத கோபம் அவனது குரலில் பிரதிபலித்தது.

தனக்குள் எழுந்த வெற்றிக் களிப்பை அடக்கியபடி கண்களில் பரிதாபத்தை வரவழைத்தாள் அவந்திகா.

"இலக்கிய ஆர்வம் என்னைப் புலவரிடம் அடிமையாக்கிவிட்டது. அவர் அனுமதி தந்தால்தான் உங்களுடன் வாதாபிக்கு வர முடியும்!" பரிதாபத்துடன் குரலை ஒலிக்கச் செய்தாள். அவனுடன் வருவதற்குத் தனக்குத் தடை ஏதும் இல்லை என்பது போலவும், சலபதிதான் அவளைத் தடுப்பது போலவும் ஒருவித ஆதங்கத்தைக் குரலில் ஒலிக்கச் செய்தாள்.

"ஆமாம்! இளவரசியார் எனது அடிமை!" — சலபதி கூவினான்.

"இவளை மீட்பதற்கு என்ன வழி?" — புலிகேசி அவரை ஏறிட்டான்.

"என்னை வாதத்தில் வென்று அவரை மீட்டுச் செல்லுங்கள்!" — சலபதி சவால்விட்டான்.

அவந்திகா சலபதியை நம்பிக்கையுடன் நோக்கினாள். சலபதியை வாதத்தில் வெல்ல இனி ஒருவன் பிறந்துதான் வர வேண்டும். மனதில் எழுந்த நிம்மதி உணர்வை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. சலபதியை வென்று இவளைச் சிறைப்பிடிக்கும் திறமை புலிகேசிக்கு இல்லை.. உறுதியுடன் நம்பினாள் அவந்திகா.

"அப்படியா! இதோ எனது தலைமைப் புலவன், பாரவி. உங்களுடன் வாதித்து இவளை மீட்டுச் சிறைப்பிடித்துச் செல்கிறேன்" — புலிகேசி கர்ஜித்தான்.

ஒருகணம் பாரவியைத் திகைப்புடன் நோக்கினான், சலபதி. பிறகு கர்வத்துடன் புலிகேசியைப் பார்த்தான்.

"பாரவி வென்றால், இளவரசி உங்களுக்கு.. தோற்றால், நீங்கள் எங்கள் இளவரசிக்கு அடிமை! அதாவது எனது அடிமையின் அடிமை. ஒப்புக்கொள்கிறீர்களா?" ஓரக்கண்களால் அவந்திகாவை நோக்கினார், சலபதி.

திரும்பிப் பாரவியை நோக்கிய புலிகேசி அவனது அனுமதிக்குக் கூடக் காத்திராமல், சலபதியிடம் தலையை அசைத்தான். அவந்திகாவை சிறைப்பிடிப்பதில் அவ்வளவு துடிப்பு போலும்.

சலபதி மட்டுமல்ல, பாரவியும் தயங்கினான். ஒருவேளை இவன் தோல்வியுற்றால், அவந்திகாவுக்குப் புலிகேசி அடிமையாகிவிடுவான். தனது நண்பனை ஒரு பெண்ணிற்கு அடிமையாக்கிய சிறுமை இவனுக்கு ஏற்பட்டுவிடும். அடவியில் அவந்திகாவை அவனுக்குக் காட்டி இருக்கவே கூடாது. அதனால் ஏற்பட்ட வல்லடிகள்தானே இவை.

"ம்ம்.. கேளுங்கள். நான் பதில் கூறுகிறேன்!" — பாரவி கூறினான்.

"முதலில் எனது அடிமையின் கூந்தலை விடுங்கள். அவர் இன்னும் எனது அடிமை. எனது அனுமதியின்றி நீங்கள் அவரது கூந்தலைப் பற்றக் கூடாது.." சலபதி கூற, விருப்பமின்றி அவந்திகாவின் கூந்தலை விடுவித்தான், புலிகேசி.

"ம்ம்.. கேளுங்கள்! ஒரு கேள்விதான். எனது புலவர் சரியான விடையைக் கூறிவிட்டால், பிறகு நான் வென்றது போல. உங்கள் அடிமை எனது அடிமையாகிவிடுவாள்." — புலிகேசி உறுமினான்.

சலபதி சற்றே தயக்கத்துடன் அவந்திகாவை பார்த்தார். எதையாவது செய்து என்னைக் காப்பாற்று, அவந்திகாவின் கண்கள் அவரை இறைஞ்சின.

தொண்டையைச் செருமிக் கொண்ட சலபதி, பாரவியை நோக்கினார்.

"சிறியதில் இரண்டு ஒன்றாகிறது. பெரியதில் ஒன்று இரண்டாகிறது.. இது எங்ஙனம் நிகழ்கிறது..?" — சலபதி கேட்டான்.

ஒருகணம்தான் பாரவி யோசித்தான். உடனே அதற்கான விடையைக் கூறத் தொடங்கினான்.

"நீங்கள் சிறியது பெரியது என்று குறிப்பிடுவது, சிற்றின்பம் மற்றும் பேரின்பம். சிற்றின்பத்தின் போது ஆண் ஒரு உடலும், பெண் ஒரு உடலுமாக இரு உடல்கள் ஓர் உயிராக இணைகிறார்கள். பேரின்பம் என்பது பரமாத்மா. அது சித் அசித் என்று இரண்டு உடல்களைக் கொண்டு செயல்படுகிறது." — நொடியில் பாரவி பதிலை அளிக்க, தோல்வியினால் தலைகுனிந்தார், சலபதி.

"இளவரசியை மீட்டெடுத்தோம்!" பாரவி கூறியதும்தான் தாமதம், அவளது கூந்தலை மீண்டும் பற்றினான், புலிகேசி. "பாரவி! நீ அவளை வென்று எடுத்ததால், இனி அவந்திகா உனது அடிமை. உனது அனுமதியுடன் நான் அவளைக் கடத்துகிறேன்"

என்றவன் யாருமே எதிர்பார்த்திராத மற்றொரு காரியத்தைச் செய்தான்.

தனது வாளினை உருவியவன், தலைகுனிந்து நின்ற சலபதியின் கழுத்தைக் குறிபார்த்தான்.

"உனது அடிமையை என் மீது போர் தொடுக்கச் செய்த உனக்கு இதுதான் தண்டனை!" என்று கூறியபடி சலபதியின் தலையை வெட்டினான், புலிகேசி.

அவந்திகா அதிர்ச்சியால் உறைந்து போய் நிற்க, புலிகேசி அவளது கூந்தலைப் பற்றி இழுத்துச் சென்றான். தான் மிகவும் ஆபத்தான ஒரு மனிதனிடம் சிக்கி இருக்கிறோம் என்பதை அவந்திகா உணர்ந்தாளோ இல்லையோ, பாரவி உணர்ந்து கொண்டான். அவந்திகா இவனது அடிமை என்றால், இனி புலிகேசி இவனை யல்லவா ஆட்டி வைப்பான்?

அவந்திகாவை இழுத்துச் சென்று வலுக்கட்டாயமாகத் தனது இரதத்தினில் ஏற்றுவதை நோட்டம்விட்டுக் கொண்டிருந்தன, இரு கண்கள்.

தசகுமாரர்களில் ஒருவனான தொண்டரையனின் கண்கள் அவை. தனக்குப் பிரிய நண்பனான மகேந்திர பல்லவனுக்கு ஏற்ற மனைவியாக அவந்திகாவை கண்டவுடன் மனதினுள் தீர்மானித்திருந்தான், தொண்டரையன். அவளைப் பின்தொடர்ந்து வந்து சைந்தவத்தில் அவளைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டு இருந்த போதுதான், வாதாபி புலிகேசி சைந்தவத்தின் மீது படையெடுத்து வந்திருந்தான்.

தான் மகேந்திரனுக்காகப் பார்த்திருந்த இளவரசியைப் புலிகேசி தட்டிக் கொண்டு போகிறானே. இத்தகைய பேரழகி மகேந்திரனின் மனையாளாகக் காஞ்சி அரண்மனையில் அல்லவா இருக்க வேண்டும். விடக்கூடாது. தனக்குள் நினைத்தவனுக்கு, அரண்மனையில் நிகழ்ந்த சம்பவங்கள் செவிகளில் விழுந்தன.

*புலிகேசியிடம் இருந்து தப்பிப்பதற்காக, போலி சாசனம் ஒன்றை இளவரசி தயாரிக்க, அரசவைப் புலவர் சலபதியை பாரவியைக் கொண்டு வாதத்தில் வென்று புலிகேசி அவந்திகாவை கைப்பற்றிய கதையை அறிந்தான்.*

*'அவந்திகா புலிகேசியின் அடிமை இல்லையாமே..! பாரவியின் அடிமைதானாமே. நண்பனுக்கு அடிமை யாக்கிவிட்டு, பிறகு காலம் கனியும் போது அவளைத் தனது வசப்படுத்தப் போகிறானா, புலிகேசி..? அதுவும் நன்மைக்கே. பாரவியை வாதத்தில் வென்று, அவந்திகாவை மீட்டு, காஞ்சிக்கு அழைத்துச் சென்று மகேந்திரனுக்குப் பரிசாகத் தருவோம்!' என்கிற எண்ணத்துடன் சைந்தவத்தை விட்டு நீங்கி வாதாபியை நோக்கி நடந்தான், தொண்டரையன்.*

# 29. திகம்பரச் சாமியார்

தசகுமாரர்களில் ஒருவனான தொண்டரையன் புலிகேசியிடம் சிக்கியுள்ள பேரழகி அவந்திகாவை மீட்டு எப்படியும் மகேந்திர பல்லவன் வசம் அவளை ஒப்படைப்பது என்கிற தீர்மானத்துடன் வாதாபி நகரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த அதே சமயம், தசகுமாரர்களில் மற்றொருவனான உபஹாரன் அத்தியூரிலிருந்து ஒத்தாடைக்குச் சென்று கொண்டிருந் தான். ஒத்தாடை அரண்மனை அதிகாரியைச் சந்தித்துத் தனது வழிச் செலவுக்குப் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு, மூன்றாம் சந்திரகிரியைத் தேடி தெற்கே செல்லத் திட்டமிட்டிருந் தான். அப்படியே இளவரசி ராஜஸ்ரீயைச் சந்தித்து மகேந்திரன் கொண்டு வந்திருந்த ரணதிலகனின் குறிப்பினைக் குறித்த ஐயங்களையும் நிவர்த்தி செய்து கொள்ள நினைத்திருந்தான். மூன்றாம் சந்திரகிரி எங்கு உள்ளது என்பதை அறிந்தால், பல்லவப் பொக்கிஷங்கள் குறித்த விவரங்கள் தெரிய வரும். பொக்கிஷங்களோடு அத்திமலைத்தேவனின் பிரதிமை யும் வைக்கப்பட்டிருக்கலாம் என்று அனைவருமே நம்பினர்.

தும்புருவனத்தைக் கடந்து, ராஜவீதியை நோக்கி நடந்தான். ராஜவீதியின் தென்கோடியை அடைந்த போது, திடீரென்று அவனது பின்பாக வீறிட்டுப் பெண்கள் அலறும் ஒலி கேட்க, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பெண்கள் பரபரப்புடன் தங்கள் வீட்டினுள் ஓடிச்சென்று கதவைத் தாளிடுவதையும், ஆண்கள் அவசரமாகக் கூடிப் பேசுவதையும் கண்டான்.

சுமார் ஒன்பது திகம்பரத் துறவிகள் ராஜவீதியில் நுழைந்து அவனுக்குப் பின்பாக நடந்து வந்தனர். திகம்பரத் துறவிகளைக் கண்டுதான் பெண்கள் அலறியடித்து ஓடினார்கள் என்பதைப் புரிந்து கொண்ட உபஹாரன் சற்றே ஒதுங்கி அங்கே நடைபெறுவதை நோட்டம்விட ஆரம்பித்தான்.

"இவர்கள் ஏன் நகருக்குள் வருகிறார்கள்..? திருபரித்திகுன்றம் போக வேண்டும் என்றால் ஊருக்கு வெளியே ஒற்றையடிப் பாதை இருக்கிறதே. எதற்காகப் பெண்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வருகிறார்கள்?" — ஆண்கள் குழப்பத்துடன் ஒருவருக்கொருவர் விவாதம் செய்தபடி நின்று கொண்டிருந்தனர்.

அனைவரும் ராஜவீதியின் தென்கோடியை நோக்கி நடந்து வரும் அந்தத் திகம்பரச் சமணத் துறவிகளை எரிச்சலுடன் வெறித்துக் கொண்டிருக்க, உபஹாரனும் அவர்கள் பக்கமாக நோக்கினான். மேனியில் ஆடை எதுவுமின்றி திகம்பரத் துறவிகள் நிதானமாக நடக்க, வீதியின் இரு பக்கங்களிலும் நின்ற ஆண்கள் அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது சில இளங்குமரர்கள் அங்கே குழுமினர். அவர்களது கைகளில் கருங்கற்கள் காணப்பட்டன.

"பெண்கள் நடமாடும் இடத்தில் இப்படி ஆடையின்றி நடக்கின்றீர்களே. இது எங்களது கோட்பாடுகளுக்குப் புறம்பானது. இந்தப் பக்கமாக வர வேண்டாம். ஊருக்கு வெளியே திருபரித்திகுன்றம் செல்வதற்குப் பாதை உள்ளது. ஏராளமான செடிகொடிகளுடன் மறைவான பாதையாக இருக்கும். நீங்கள் நிர்வாணமாகச் செல்வதில் பிரச்னை ஏதும் இருக்காது."

ஒரு வயது முதிர்ந்தவர், அந்தத் துறவிகளைத் தடுத்து நிறுத்திக் கூற, துறவிகளில் ஒருவர் முன்பாக வந்து அவருக்குப் பதில் கூறினார்.

"ஐயா! நாங்கள் இப்போது தருமநகரம் செல்கிறோம். தாராதேவியைத் தரிசித்துவிட்டு, இன்றிரவு தரும நகரத்தில் தங்கிவிட்டு, நாளைக் காலைதான் திருபரித்தி குன்றம் செல்கிறோம். எனவேதான் ஊரில் நுழைந்து தருமநகரம் செல்கிறோம்." — பிங்களதேவர் என்கிற துறவி முன்வந்து கூற, முதியவர் என்ன பதில் கூறுவது என்று யோசித்தார்.

அவர்களை நோட்டம்விட்டுக் கொண்டிருந்த, உபஹாரன் அந்த முதியவருடன் பேசிக் கொண்டிருந்த பிங்களதேவரையே வெறித்து நோக்கினான். அவரது கோதுமை நிறமும், நெடிய உயரமும், கம்பீரமான முகமும், அவரை முன்பு எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்கிற உணர்வைத் தந்தது. அந்த முதியவருடன் தலையசைத்து அவர் பேசிய விதம், அவரது உடற்கூறின் மொழி அனைத்துமே அவனுக்குப் பரிச்சயமாக இருந்தது. இருப்பினும் அவர் யார் என்பதை யூகிக்க முடியவில்லை.

யோசிப்பதற்குள், அங்கே வந்து குழுமிய இளங் குமரர்கள் திடீரென்று தங்கள் கையில் இருந்த கற்களைத் துறவிகளின் மீது வீசத்துவங்கினர்.

"திரும்பிச் செல்லுங்கள் துறவிகளே! இந்தப் பக்கமாக வர உங்களுக்கு அனுமதி இல்லை!" என்றபடி கற்களை வீச, பிங்களதேவரின் நெற்றியில் ஒரு கல் தாக்க, அவரது நெற்றியில் காயம் உண்டாகி, குருதி வழிந்தது.

அதைக்கண்டு பதைபதைத்துப் போன உபஹாரன், தனது வாளை உருவிக் கொண்டு துறவிகளின் முன்பாகப் பாய்ந்தான். மன்னர் மகேந்திரனின் நண்பர்கள் குழாம் தசகுமாரர்களில் ஒருவன் வாளேந்தி துறவிகளுக்கு அரணாக நிற்பதைக் கண்டதும் அங்கிருந்து வேகமாக அந்த இளங்குமரர்கள் நழுவினர். உபஹாரனைக் கண்டதும், கூட்டம் கலைய, துறவிகளை அருகில் இருந்த ஒரு தரும சத்திரத்தினுள் பாதுகாப்பாக அழைத்துச் சென்றான் உபஹாரன்.

துறவிகளை ஒரு அறையில் அமர வைத்தான். தன்னைக் கடந்து நடந்து சென்ற பிங்களதேவரை மீண்டும் கவனித்தான். அவரது முன்னிடையில் வட்ட வடிவ மச்சம் ஒன்று இருந்தது. நிச்சயம் இவரை எங்கோ பார்த்திருக்கிறோம். அவரது முகம் பரிச்சய்மாக இருக்கிறது. அவரையே கேட்டுவிடுவோமா?

“ஸ்வாமி! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” — உபஹாரன் கேட்டதும் தனது நெற்றியில் பதித்திருந்த உள்ளங்கையை எடுத்தபடி, “நாங்கள் சிரவண பெலகோலத்தில் இருந்து வருகிறோம்!” என்று சொல்ல, குருதி நிற்காமல் பெருகுவதைக் கண்ட உபஹாரன், சத்திரப் பொறுப்பாளரிடம் விரைந்து சென்று சொல்ல, அவர் உடனே மூலிகைப் பெட்டியுடன் அங்கே வந்தார். கலுவத்தில் வாரணக் களிம்பை அரைத்துப் பிங்கள தேவரின் நெற்றிக் காயத்தில் அப்பினார். அவரது நெற்றியில் துணியினால் கட்டு ஒன்றைப் போட முயல, பிங்களர் தடுத்துவிட்டார்.

“வஸ்திரக் கட்டு வேண்டாம்!” என்று சற்றே குரல்விட்டுச் சிரிக்க, அந்தச் சிரிப்பைக் கண்டதும், சட்டென்று உபஹாரனுக்கு மின்னல் பளிச்சிட்டது. பிங்களதேவரை முதன்முறையாகத்தான் பார்க்கிறான். ஆனால் அவரது நடை, பேச்சு, உடற்கூறின் மொழி மற்றும் சிரிப்புதான் இவனுக்குப் பரிச்சயமாக இருக்கிறது. அவரையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். மகேந்திர பல்லவன் சற்றே வயது முதிர்ந்தவனாக இருந்தால் இவரைப் போலவே இருப்பான். ஒருவேளை காணாமல் போன ஜெயவர்மர்தான் மீண்டும் வந்திருக்கிறாரோ?

“துறவிகளே..! சற்று ஓய்வு எடுங்கள். உங்களைத் தருமநகரத்திற்கும், பிறகு நாளை திருபரித்திகுன்றத்திற்கும் பாதுகாப்புடன் செல்வதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.”

“உங்களுக்கு ஏன் வீண் சிரமம்!” — பிங்களர் கூறினார்.

"இல்லை ஸ்வாமி! இது மன்னரின் உத்தரவு. திகம்பரத் துறவிகளுக்கு எந்தப் பிரச்னைகளும் வரக்கூடாது என்பதில் மன்னர் உறுதியாக இருக்கிறார். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்பட வேண்டும் என்று நினைக்கிறார். நீங்கள் சற்று ஓய்வு எடுங்கள். நான் காவலர்களுடன் வருகிறேன்" என்ற உபஹாரன் வேகமாக அரண்மனையை நோக்கிச் சென்றான்.

அரண்மனைக்குச் சென்ற போது அரண்மனை நந்தவனத்தில் ராஜவர்மன் — ராஜஸ்ரீயுடன் மகேந்திரன் உலாவிக் கொண்டிருந்தான்.

உபஹாரன் தன்னை நோக்கி விரைந்து வருவதைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினான், மகேந்திரன்.

"உபஹாரா! இன்னுமா நீ தெற்கே புறப்படவில்லை. மூன்றாம் சந்திரகிரியை இந்நேரம் கண்டிருப்பாய் என்றல்லவா நான் நினைத்தேன்." — மகேந்திரன் சிரித்தான்.

"அதைவிட முக்கியமான விஷயம். நான் ஒரு சமணத் துறவியைப் பார்த்தேன். அவரைப் பார்ப்பதற்குச் சந்தேகமாக இருக்கிறது. அச்சில் உன்னையும், இளவரசர் ராஜவர்மரையும் போலவே இருக்கிறார். காணாமல் போன இளவரசர் ஜெயவர்மர்தான் வந்திருக்கிறாரோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்று உபஹாரன் கூறியதும், மூவரும் அதிர்ச்சியுடன் அவனை நோக்கினர்.

"உண்மையாகவா?" தனது காலின் பலவீனத்தையும் மறந்து, பாய்ந்து வந்து உபஹாரனின் புஜத்தை இறுகப் பற்றினார், ராஜவர்மன்.

"ஆமாம்! ஆனால் அவர் துறவியாக இருக்கிறார். ராஜவீதியில் உள்ள செங்கழுநீர் சத்திரத்தில் தங்க வைத்திருக்கிறேன்." — உபஹாரன் கூற, மூவரும் திகைத்தனர்.

“ஜெயவர்மரை .அரண்மனைக்கு அழைத்து வர வேண்டியதுதானே!” — மகேந்திரன் நண்பனைக் கடிந்து கொண்டான்.

“அங்கேதான் சிக்கல் இருக்கிறது. ஜெயவர்மர் தற்போது பிங்களர் என்கிற பெயரில் திகம்பரச் சமணத் துறவியாகத் திகழ்கிறார். அவரை நான் எப்படி அரண்மனைக்கு அழைத்து வருவது?” என்று உபஹாரன் கூறியதும், ராஜவர்மனும், ராஜஸ்ரீயும் அதிர்ந்து போய் ஒருவரையொருவர் பார்த்தனர்..

“திகம்பரத் துறவியா? பல்லவ அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் இப்படி ஒரு முடிவுக்கு ஏன் வந்தான்..? நான் ஜெயவர்மனை உடனே சந்திக்க வேண்டும்.” ராஜவர்மன் கூறினான்.

“நானும் அவரைச் சந்திக்க ஆவலாக உள்ளேன். ஆனால்..” — ராஜஸ்ரீ கூறினாள்.

மகேந்திரன் இடைமறித்தான். “கவலைப்பட வேண்டாம். சிற்றப்பாவை அப்பர் பெருமானைத் தரிசிக்க வைக்கலாம். அவர் ஜெயவர்மரை திருத்திப் பணிகொள்வார். அதன் பிறகு நாம் அவரை அரண் மனைக்கு அழைத்து வரலாம். இப்போதைக்கு நானும், உபஹாரனும் மட்டும் செல்கிறோம்.” — மகேந்திரன் கூற, ராஜவர்மன் பிடிவாதமாக மகேந்திரனின் கையைப் பற்றினான்.

“எனது சகோதரனை நான் உடனே சந்திக்க வேண்டும். நானும் வருகிறேன்.” ராஜவர்மனும் கூற, மூவரும் புறப்பட்டனர்.

‘அத்திவரதனே! வந்திருக்கும் அந்தத் துறவி ஜெயவர்மராகவே இருக்கட்டும். குடும்பத்தில் நிலவும் மர்மங்கள் நீங்கட்டும். அத்திவரதனின் சிலை கிடைக் கட்டும். மீண்டும் குடும்பத்தில் அமைதி நிலவட்டும்.’ — மனதினுள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் ராஜஸ்ரீ.

செங்கழுநீர் சத்திரத்தின் வாயிலில் மன்னன் மகேந்திரனும், இளவரசர் ராஜவர்மரும் தங்கள் புரவிகளில் வந்து இறங்குவதைக் கண்ட சத்திர உரிமையாளருக்குத் தலைகால் புரியவில்லை. அவர்களை பணிவுடன் வரவேற்க, உபஹாரன் இருவரையும் பிங்களரும் மற்ற துறவிகளும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்..

கண்களை மூடி நிஷ்டையில் அமர்ந்திருந்த பிங்களரைக் கண்டதுமே வாயடைத்து நின்றான், ராஜவர்மன். அவனது இடையின் மேல்பகுதியில் தென்பட்ட அந்த வட்ட வடிவ மச்சத்தைக் கண்டதுமே வந்திருப்பவன் யார் என்று தெரிந்துவிட்டது.

“தம்பி!” வாஞ்சையுடன், குரல் நெகிழ அழைத்தான், ராஜவர்மன்.

இது சித்தப்பன் ஜெயவர்மன்தான் போல இருக்கிறது. ராஜவர்மன் மற்றும் ராஜஸ்ரீ மூலமாக அவரது பிரதாபங்களை அறிந்திருந்ததால், மகேந்திரனும் அவரை பணிவுடன் அழைத்தான்.

“சிற்றப்பா!”

தம்பி என்றும் சிற்றப்பா என்றும் உறவுகளால் தான் அழைக்கப்பட நிஷ்டையில் இருந்த பிங்களர் கண்களைத் திறந்தார்.

ராஜவர்மனைக் கண்டதும் பிங்களரின் கண்கள் நிலைகுத்தி நின்றன. பிறகு அவை ஆச்சரியத்துடன் விரிந்தன.

“தம்பி பீமவர்மா!” — ராஜவர்மன் அழைத்ததும் திடுக்கிட்டு அவரைப் பார்த்தான் மகேந்திரன்.

“காணாமல் போன ஜெயவர்மன் இல்லையா இவர்?” — மகேந்திரன் கேட்க, தலையசைத்தார், ராஜவர்மர்.

“இல்லை! இவன் ஜெயவர்மரின் தம்பி பீமவர்மன்..!” என்று கூறியபடி பாய்ந்து சென்று பீமவர்மனை அணைத்துக் கொண்டான்.

“என்னடா தம்பி இது கோலம்?” — கதறினான் ராஜவர்மன்.

“ராஜவர்மா!” தான் துறவி என்பதையும் மறந்து பாய்ந்து சென்று கட்டிக் கொண்டான், பீமவர்மன்.

“சொல்லாமல் எங்கே சென்றாய்? எதற்காக இந்தத் துறவிக்கோலம்? ஆலயங்களுக்கு மேலாடையின்றித் திறந்த மார்புடன் வருவதற்குக் கூடத் தயங்குவாயே. நீயா இப்படிப் பிறந்த மேனியோடு..” — ராஜவர்மன் கதறினான்.

“தெரியவில்லை ராஜவர்மா ஏன் இப்படி நிகழ்ந்தது என்று? திடீரென்று அரச வாழ்க்கையின் மீது வெறுப்பு. உங்கள் எல்லோரது மீதும் வெறுப்பு. அரண்மனையை விட்டு வெளியேறிக் கால் போன போக்கில் நடந்தேன். என்னையே நான் அழித்துக் கொள்ள நினைத்த போது சில சமணத் துறவிகள் என்னைக் காப்பாற்றினார்கள். அவர்களுடனேயே சிரவணபெலகோலா சென்று அங்கேயே தீட்சை பெற்றுவிட்டேன். இங்கே வந்ததும் தான் பழைய நினைவுகள் தோன்றுகின்றன.” ராஜவர்மனை அணைத்துக் கொண்டான், பீமவர்மன்.. மற்ற துறவிகள் அனைவரும் எழுந்து நிற்க, அவர்களை நோக்கிக் கைகூப்பினான், மகேந்திரன்.

“துறவிகளே. எனது சிற்றப்பன் பீமவர்மனை இவ்வளவு நாட்கள் பார்த்துக் கொண்டதற்கு நன்றி. அவருக்கு ராஜாங்கக் கடமைகள் இருக்கின்றன. இனி அவர் உங்களில் ஒருவர் அல்லர். பல்லவத்தின் இளவரசர். உங்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்படும்.. நீங்கள் உங்கள் பயணத்தைத் தொடரலாம்” என்றான்.

'இது யார்?' என்கிற பாவனையில் பீமவர்மன் மகேந்திரனை நோக்க, ராஜவர்மன் மகேந்திரனின் கையைப் பற்றி அவன் முன்பாக நிறுத்தினான்.

"இவன்தான் நமது அவனிசிம்மனின் மகன் மகேந்திரன். பல்லவ அரசன்!" என்று கூறியதும், பீமவர்மனின் கண்களில் பொலபொலவென்று கண்ணீர்.

"அவனிசிம்மா..!" என்று கதறியபடி மகேந்திரனை ஆரத்தழுவினான். சிறிது நேரம் அப்படியே அழுது கொண்டிருந்தவன், பிறகு கண்களைத் துடைத்தபடி, ராஜவர்மனைப் பார்த்தான்.

"ஜெயவர்மனைப் பற்றித் தகவல் ஒன்றுமே கிடைக்க வில்லையா?" — பீமவர்மன் கேட்க, தலையசைத்தான், ராஜவர்மன்.

"உன்னையே இன்றுதான் பார்க்கிறேன். அத்தி மலையான் சந்நிதியில் ஐந்து திருமணங்கள் நடந்ததே. அதுதான் நமது குடும்பத்தில் நடைபெற்ற கடைசிச் சுப நிகழ்ச்சி. அதன் பிறகு பல விபரீதங்கள் நடந்தேறி விட்டன. எங்கள் திருமணம் முடிந்த கையோடு இரண்டு நாட்களில் நீயும் காணாமல் போனாய். ஏன் அப்படிச் சொல்லாமல் போனாய்?" — ராஜவர்மன் அரற்றினான்.

"நான் ஏன் அப்படிச் செய்தேன் என்று எனக்கே தெரியவில்லை. உங்களை எல்லாம் வெறுத்து உடனே எங்கேயாவது சென்று தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம். உங்கள் திருமணம் நடந்த நாட்களில் இருந்தே எனக்குத் தற்கொலை எண்ணம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. துறவிகளுடன் சேர்ந்த பிறகு கூடப் பலமுறை தற்கொலைக்கு முயன்றேன். அவர்கள் என்னைக் காப்பாற்றினார்கள். எனது தற்கொலை எண்ணத்தைப் போக்கவே அவர்கள் என்னைத் துறவியாக்கினார்கள்."

"சரி! புறப்படு பீமவர்மா! இனி நீ இளவரசன்! உனக்கு ராஜாங்கக் கடமைகள் இருக்கின்றன. வயதும், இளமையும் இன்னும் உனக்கு இருப்பதால், பல சாதனை களைச் செய்ய வேண்டும் நீ. எனவே துறவறத்திற்கு முழுக்கு போடு." — ராஜவர்மன் கட்டளையிட்டான்.

"வேண்டாம் ராஜ்வர்மா! இனியும் ஒட்டாது. நான் இந்தத் துறவிகளுடனேயே காலத்தைக் கழித்துவிடு கிறேன்." — தயங்கினான், பீமவர்மன்.

"என்ன பேசுகின்றீர்கள் சிற்றப்பா! எனக்கு நீங்களும், ராஜவர்மரும்தானே பக்க பலமாக இருக்க வேண்டும். பல்லவ சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க எத்தனை கைகள் இருந்தால்தான் போதும்..?"

"பீமவர்மா! நாங்கள் காணாமல் போன அத்திவரதர் பிரதிமையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். உனது வருகை எங்களுக்கு நல்ல சகுனமாகத் தோன்றுகிறது. விரைவில் ஜெயவர்மனிடம் இருந்து தகவல் வரும் என்கிற நம்பிக்கையும் பிறக்கிறது." ராஜவர்மன் கூறினான்.

"முதலில் சிற்றப்பாவைத் திருத்திப் பணிகொள்ள வேண்டும். அப்பர் ஸ்வாமியிடம் நான் கூறி அதற்கு ஏற்பாடு செய்கிறேன். திருக்கச்சி மயானத்தில் பெரும் வைபவத்தில் நமது சிற்றப்பா மீண்டும் பீமவர்மராகப் பிறப்பெடுப்பார்." — மகேந்திரன் கூறினான்.

அனைவரும், ஒத்தாடை அரண்மனைக்குச் செல்ல, திகம்பரமாக நின்ற பீமவர்மன், தான் வாழ்ந்த அரண்மனையினுள் உருக்கத்துடன் எட்டிப்பார்த்தான். உபஹாரன் ஒரு வேட்டியைக் கொண்டு வந்து தர, பீமவர்மன் அணிந்தான்.

அனைவரும் அரண்மனையினுள் சென்றனர்.

"ராஜஸ்ரீ! தம்பி கிடைத்துவிட்டான். ஆனால் ஜெயவர்மன் அல்ல.. பீமவர்மன்!" என்றதும், பீமவர்மன் ராஜஸ்ரீயை நோக்கிப் புன்னகை புரிந்தான்.

"இப்படித்தான் திடீரென்று மாயமாகிப் போவீர்களா, பீமவர்மரே? ஒரு பக்கம் ஜெயவர்மர் காணவில்லை. ஒரு பக்கம் நீங்கள் காணவில்லை. அத்திவரதர் பிரதிமை யையும் காணவில்லை..? எல்லாப்பக்கமும் சோகமான நிகழ்வுகள் அரங்கேற, நமது குடும்பம் திணறிப் போனது தெரியுமா?" — ராஜஸ்ரீ கூறினாள்.

"முதலில் தம்பி நீராடி உணவு அருந்தட்டும். பிறகு பேசலாம்." ராஜவர்மன் கூற, அவர்களது உரையாடல் நின்றது.

உணவு அருந்திவிட்டு, உப்பரிகை மல்லிகைப் பந்தலின் அடியில் காற்றாட அமர்ந்தனர், ராஜவர்மனும், பீமவர்மனும். ராஜஸ்ரீயும், மகேந்திரனும் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர்.

கிழக்கிலிருந்து முக்கூடல் காற்றும், தெற்கிலிருந்து செய்யாறு மற்றும் வேகவதியின் குளிர் தென்றலும் அந்த உச்சி வெய்யிலிலும் வீசி, அந்த மல்லிகைப் பந்தலைக் கவரியாக மாற்ற, சுகமான நறுமணக் காற்று அவர்களைக் கிறங்கச் செய்தது.

"இப்போது சொல், பீமவர்மா! எங்கெல்லாம் சென்றாய்? உனக்கு ஏன் திடீர் என்று அனைவரின் மீதும் வெறுப்பு தோன்றியது?" ராஜவர்மன் கேட்டான்.

"உங்கள் திருமணம் முடிந்த அன்றே எனக்கு மனதில் மெல்லிய குழப்பம். இரவு திடீரென்று ஜெயவர்மன் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு எங்கோ சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம், ரணதிலகன் புரவியில் அவசரமாக வந்தான். என்னை நந்தவனத்தில் பார்த்ததும், 'நவரத்ன பல்லவி எங்கே?' என்று என்னைக் கேட்டான். நான் இங்கே வரவில்லை என்றதும், பதில் கூறாமல் போய்விட்டான். என்ன நடக்கிறது என்று நான் யோசித்துக். கொண்டே நடந்தேன். திடீரென்று.. அந்த எண்ணம் உதித்தது!" — பேசுவதை நிறுத்திவிட்டு மௌனம் சாதித்தான், பீமவர்மன்.

அவன் தொடர்ந்து பேசுவான் என்று மற்ற மூவரும் காத்திருக்க, அவன் எழுந்து உப்பரிகையின் மதிற்சுவரைப் பார்த்தபடி பேசாமல் நின்றான்.

"அதோ.. அந்த நந்தவனத்தில் நடந்து கொண் டிருந்தேன். திடீரென்று எனது காதில் ஒரு குரல் கிசுகிசுத்தது. 'நீ தற்கொலை செய்து கொள்' என்று எனது செவியில் யாரோ கூவுவது போன்று எனக்குத் தோன்றியது. மனதைப் பயம் கவ்வ, நான் எனது அறைக்கு விரைந்துவிட்டேன். ஆனால் அதற்குப் பிறகு நந்தவனம் போகும் போதெல்லாம் எனக்குத் தற்கொலை எண்ணம் அதிகரித்தது." சடாரென்று திரும்பி, மல்லிகைப் பந்தலின் அடியில் அமர்ந்திருந்த மற்ற மூவரையும் பார்த்தான்.

அவன் முகம் பயத்தாலும், வேதனையாலும் வெளிறிப்போய்க் கிடந்தது..

"ராஜ்வர்மா! துறவியாக இருந்த போது நிம்மதியாக இருந்தேன். இதோ இங்கே உப்பரிகையில் வந்து நின்றதும் எனக்கு மீண்டும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் வருகிறது!" என்றவன் தட்டுத் தடுமாறி நடந்து வந்து மீண்டும் தனது இருக்கையில் சரிந்தான்.

ராஜஸ்ரீ பதைபதைப்புடன் எழுந்தாள்.

"மல்லா! செளரப பண்டிதர் கூறிய ஜோதிடம் நினை விருக்கிறதா? பல்லவக் குடும்பத்தில் தற்கொலைகள், துர்மரணங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போவது என்றெல்லாம் நிகழ்வதற்குக் காரணம் நமது அரண்மனையில் வர்ம கேது புதைக்கப்பட்டிருப்பதால் என்று . கூறினாரே. நமது பீமவர்மர் கூறுவதற்கும், அவர் கூறியதற்கும் தொடர்பு உள்ளது என்று நினைக்கிறேன்." — ராஜஸ்ரீ கூறினாள்.

"ஜோசியரா? என்ன கூறினார்?" திகைப்புடன் ராஜஸ்ரீயை நோக்கினான், பீமவர்மன்.

"வர்மகேது என்கிற குளிகம் நமது அரண்மனையில் எங்கோ புதைக்கப்பட்டுள்ளதாம். அதன் தாக்கத்தினால் தான், நமது குடும்பத்தில் துர்மரணங்கள், தற்கொலைகள், குடும்பத்தினர் காணாமல் போதல் போன்றவை நடப்பதாகச் சௌரப பண்டிதர் என்பவர் கூறினார்.

"யார் வைத்திருக்கக்கூடும் என்று கூறினாரா?" — பீமவர்மன் கேட்டான்.

"ஒரு யானையின் பின்பகுதியின் அருகே முதல் வியூகப் பெருமான் ஆலயத்தின் குளத்தில் ஒரு தங்க மீன் நீந்துகிறது என்றார். எங்களால் யோசிக்க முடியவில்லை." — ராஜஸ்ரீ கூறினாள்.

"ராஜஸ்ரீயாலேயே முடியவில்லை என்கிற போது எங்களால் எப்படி அதனை யூகிக்க முடியும்?" — ராஜவர்மன் சிரித்தான்.

பணிப்பெண் ஒருத்தி உள்ளே வந்து மகேந்திரனைத் தலைவணங்கினாள்.

"அரசே! தசகுமாரர் உபஹாரர் வந்திருக்கிறார்." — பணிப்பெண் கூறினாள்.

'வரச்சொல்' என்கிற பாவனையில் மகேந்திரன் தலையசைக்க, பணிப்பெண் அகன்றாள். உபஹாரன் உள்ளே வந்து மகேந்திரனைப் பார்த்துச் சிரித்தான்.

"மன்னித்துக் கொள், மகேந்திரா! குடும்பம் ஒன்றாக இருக்கும் போது தொல்லை கொடுக்கிறேன். மூன்றாம் சந்திரகிரியை தேடிப் புறப்பட்டேன்." — உபஹாரன் கூறினான்.

"சென்று வா! வெற்றியுடன் திரும்பி வா! சந்திரகிரியில் அத்திமலைத்தேவன் இருக்கும் நல்ல செய்தியைக் கொண்டு வா!" — என்றதும், பீமவர்மன் வியப்புடன் மகேந்திரனை நோக்கினான்.

"அதென்ன மூன்றாம் சந்திரகிரி..?" — பீமவர்மன் கேட்டான்.

*"நமது தங்கை நவரத்ன பல்லவியின் கணவன் ரணதிலகனும் அவனது களப்பிரப் படைகளும் பல்லவத்தில் கொள்ளையடித்த பொக்கிஷங்களை எங்கோ பதுக்கி வைத்தனர். அந்தப் பொக்கிஷங்களில் அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர சிலையும் உள்ளதாகத் தெரிகிறது. நமது அவனிசிம்மன் களப்பிரர்களின் மீது படையெடுத்த போது அவர்கள் பொக்கிஷங்களை எடுத்துச் செல்ல முடியாமல் அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். ரணதிலகன் சந்திரகிரி என்னும் மலையில் கடக குகையில் அவன் பதுக்கியிருந்த பொக்கிஷங்களைக் குறித்த சுவடியை வைத்திருந்தான். அதில்தான் மூன்றாம் சந்திரகிரியில் பொக்கிஷம் உள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மகேந்திரன் சென்ற கடக குகை உள்ள இடம் முதலாம் சந்திரகிரி என்று தெரிகிறது."*

*"எனது தந்தை படையெடுத்துச் சென்று களப்பிரரை அழித்த இடம் இரண்டாம் சந்திரகிரி. இது வேங்கடத்திற்கு அருகாமையில் இருக்கிறது. மூன்றாம் சந்திரகிரியைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். அங்கே தான் நமது அத்திமலைத்தேவன் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறார் என்று நம்புகிறோம்!" — ராஜஸ்ரீ கூறினாள்.*

*"ரணதிலகனது குறிப்பில் என்ன தெரிவிக்கப் பட்டிருந்தது?" — ஆவலுடன் கேட்டான் பீமவர்மன்.*

*ராஜஸ்ரீ ஒருமுறை அந்தக் குறிப்பினைச் சொன்னாள்.*

**"வெள்ளை களர்குலம்<br>வளர்த்த மூன்றாம் மதிமலை<br>குபேரன் திக்கில் நிற்கும்<br>வனவரச துர்க்கையின் வசம்<br>கிடக்கும் ஆதி ஒருபுறம்<br>நிற்கும் ஆதி மறுபுறம்<br>மத்தியில் பாதியாக<br>காளியின் உக்கிரம்**

சிம்மத்தின் சீற்றம்
யானையின் மதம்
கொண்டு நிற்கிறது.
குபேரன் எமனாக
மாறும் போது
பொக்கிஷங்கள் கைமாறும்..

*இதுதான் அந்தக் குறிப்பு தெரிவித்திருந்த விஷயம்!" ராஜஸ்ரீ கூறினாள்.*

*"எனக்கு அந்த மூன்றாம் மதிமலை இருக்கும் இடம் தெரியும்!" — பீமவர்மன் கூறியதும் அனைவரும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.*

*"முதல் மதிமலை மகேந்திரன் சென்ற மதிமலை.*

*இரண்டாம் மதிமலை ராஜஸ்ரீயின் தந்தை வென்ற மதிமலை.*

*மூன்றாம் மதிமலை நான் துறவறம் ஏற்ற மதிமலை..!" பீமவர்மன் கூறினான்.*

*"உனக்குத் தெரியுமா மூன்றாம் மதிமலை?" — ராஜவர்மன் கேட்டான்.*

*"மூன்றாம் மதிமலை என்ன.. ரணதிலகன் கூறியிருக்கும் அந்தப் புதிரையே என்னால் விடுவிக்க முடியும். காஞ்சியின் தெற்கே உள்ளது இந்த மதிமலை. இங்கேயும் ராஜகிரி, சந்திரகிரி என்கிற இரண்டு குன்றங்கள் உள்ளன. சந்திரகிரிக்கு வடக்கே நீங்கள் குறிப்பிடும் வனவரச மலை உள்ளது. வன அரசன் என்றால் சிங்கம் அல்லவா? சிங்க கிரி* என்று அழைக்கப்படுகிறது. இந்த மலையில் ஏறி எனது உயிரை மாய்த்துக் கொள்ள நான் நினைத்த போதுதான், அங்கே ஆதிதேவர் என்கிற சமணத்*

* செஞ்சி கோட்டையின் ராஜகிரி, சந்திரகிரி என்கிற மலைகள்தான் மூன்றாம் மதிமலையாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கவரம் என்கிற மலை சந்திரகிரியின் வடக்கே பதினோரு கி.மீ. தொலைவில் உள்ளது. மண்டகப்பட்டுக் கல்வெட்டு இந்த ஆலயத்தைக்

*தீர்த்தங்கரரின் பசடியைச் சேர்ந்த சில துறவிகள் என்னைத் தடுத்தனர். மனநிம்மதியைத் தேடிய என்னைத் துறவியாக மாற்றினார்கள். அங்கே உள்ள ஆதி ரங்கன் ஆலயத்தையும் என்னைப் பார்க்கச் சொன்னார்கள். அங்கேயே வெகுகாலம் தங்கியிருந்தேன். ஒருமுறை ரணதிலகன் சிம்மகிரி ஆதிதேவர் ஆலயத்திற்கு வந்தான். நான் அவன் கண்களில் படாமல் மறைந்திருந்தேன். திடீரென்று அவன் காணாமல் போனான். அன்று இரவுதான் மீண்டும் கண்களில் பட்டான். இரவு ஆதிதேவர் ஆலயத்தில்தான் தங்கிவிட்டு, மறுநாள் காலை புறப்பட்டுச் சென்றுவிட்டான். நீங்கள் குறிப்பிடும் அந்தப் பொக்கிஷங்களை அங்கேதான் அவன் பதுக்கி இருக்கக் கூடும்!" — பீமவர்மன் கூற, மகேந்திரனின் முகம் மலர்ந்தது.*

*"எங்களது பணிகளை மிகவும் எளிதாக்கிவிட்டீர்கள், சிற்றப்பா. அத்திமலைத்தேவனின் பிரதிமை அங்கேதான் இருக்க வேண்டும். நாங்கள் உடனே படையுடன் புறப்படுகிறோம்!" — மகேந்திரன் பரபரப்புடன் எழுந்தான்.*

---

கண்டுபிடித்தவன் மகேந்திர பல்லவன் என்று கூறுகிறது. பல்லவ நாட்டில் கொள்ளையடித்த பொக்கிஷங்களை இங்கேதான் பதுக்கி வைத்தனர் களப்பிரர்கள். மலையின் உச்சியில் ஆதிரங்கம் என்கிற ரங்கநாதர் கோயில் உள்ளது. இது குடைவரைக் கோயில். பல்லவர்களின் பொக்கிஷங் களைத் தேடி இங்கே வந்த மகேந்திர பல்லவன், களப்பிரர் களால் மூடப்பட்டுக் கிடந்த ஆலயத்தை மீண்டும் புதிப்பித்து வழிபாடுகளைத் துவக்கினான். இந்த இடத்தை ஆக்கிரமித்த களப்பிரர்கள், முதல் சமணத் தீர்த்தங்கரரான ஆதிதேவருக்கு ஒரு பசடியை எழுப்பி, சமணச் சிற்பங்களைச் செதுக்கி னார்கள். இங்கே இருந்து புறப்படும் குகை ஒன்று செஞ்சிக் கோட்டை ராணிமலை என்கிற சந்திரகிரி வரை செல்கிறது. படையெடுப்பின் போது சந்திரகிரியில் தங்கியிருக்கும் அரசியும் பெண்களும் தப்பிச் செல்வதற்காக இந்தக் குகை அமைக்கப் பட்டது. களப்பிரர்கள் இங்கேதான் பல்லவப் பொக்கிஷங் களைப் பதுக்கியிருந்தார்கள். மகேந்திரன் இந்த ரங்கநாதர் கோயிலை ஆதரித்துப் பல தொண்டுகளைப் புரிந்தான். இன்றும் இந்தச் சிங்கவரம் ரங்கநாதரைத் தரிசிக்கலாம்.

"சற்றுப் பொறு! நானும் உங்களுடன் வருகிறேன். சந்திரகிரியையும், சிம்மகிரியையும் இணைக்கும் குகையில்தான் பொக்கிஷங்களை ரணதிலகன் பதுக்கி இருக்க வேண்டும். அத்திமலைத்தேவன் சிலையும் அங்கேதான் இருக்க வேண்டும். ரணதிலகன் கூறும் குறிப்பினை நினைவுபடுத்திப் பாருங்கள். குபேரன் திக்கு என்பது சந்திரகிரிக்கு வடக்கே என்று பொருள். வனவரச துர்க்கையின் வசம் கிடக்கும் ஆதி ஒருபுறம், நிற்கும் ஆதி ஒருபுறம் என்கிறான். கிடக்கும் ஆதி ஆதிரங்கநாதன். நிற்கும் ஆதி சமணத் தீர்த்தங்கரர் ஆதிதேவர். இருவருக்கும் மத்தியில் பாதியாகக் காளியின் உக்கிரம் சிம்மத்தின் சீற்றம் யானையின் மதம் கொண்டு நிற்கிறது ஒரு உருவம் என்கிறான். காளி, சிம்மம், யானை மூன்றையும் இணைக்கும் ஒரு மிருகம் யாளி. காளியின் பெயரில் பாதியாக, சிம்மத்தின் சீற்றத்துடன், யானையின் துதிக்கையுடன் நிற்கும் யாளி சிலை ஒன்று ரங்கநாதர் கோயிலுக்கும், ஆதிதேவர் கோயிலுக்கும் இடையே உள்ளது. அங்கேதான் பொக்கிஷம் மறைத்து வைக்கப் பட்டுள்ளது என்கிறான் ரணதிலகன்."

"பலே..! நாம் எல்லோரும் நாளைப் பொழுது புலர்ந்ததும், சிங்ககிரி மலைக்குப் புறப்பட்டு அத்தி மலைத்தேவனை மீண்டும் காஞ்சிக்கு எழுந்தருளச் செய்யப்· போகிறோம்.." — உற்சாகத்துடன் கைகளை உயர்த்தினான், மகேந்திரன்.

'தந்தையே! உங்களுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றும் தருணம் வந்துவிட்டது.' — தந்தை சிம்ம விஷ்ணுவை நினைத்தான் மகேந்திரன்.

ஆனால் பொழுது விடிவதற்கு முன்பாக இரவு என்று ஒன்று இடையே வரப்போகிறதே..! அது விளைவிக்க இருக்கும் பயங்கரத்தைப் பற்றி அறியாமல் பல்லவர்கள் மறுநாள் காலையில் சிங்ககிரிக்குப் புறப்படுவதற்கு ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

# 30. ஆசைக் குமிழிகள்

**வெ**ற்றி எக்காளமிட்டபடி மீண்டும் வாதாபிக்குத் திரும்பின புலிகேசியின் படைகள். படைகள் வீதிகளில் நடந்ததால், வாதாபி நிலத்தின் செம்மணல் புழுதியாகக் கிளம்ப, சரியாக மழையும் பெய்ய, செந்நிறக் குழம்பாக நிலம் மாறி வெற்றி பெற்ற புலிகேசிக்கு வாதாபி அன்னையே ஆரத்தி சுழற்றுவதைப் போன்று காட்சி யளித்தது. புலிகேசியின் இரதத்திற்குப் பின்பாகப் பாரவி மற்றொரு இரதத்தினில் வந்து கொண்டிருந்தான். அதே இரதத்தினில் பாரவியின் அடிமையாக வந்து கொண் டிருந்தாள், அவந்திகா. பாரவி தனது ஓரக்கண்களால் இரதத்தினில் அமைதியாக அமர்ந்திருக்கும் அவந்திகாவை நோக்கினான். தான் எதையுமே காண விரும்பாதவளைப் போன்று கண்களை மூடி அமர்ந் திருந்தாள், அவந்திகா.

புலிகேசி சைந்தவத்தின் மீது படையெடுத்துச் சென்று, தந்தை இல்லாத சமயம் பார்த்து, பேரழகி அவந்திகாவை கடத்தி வந்தான் என்கிற அவச்சொல் தனக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே பாரவி தத்துவார்த்தத் தர்க்கம் ஒன்றில் அவளை வென்று அடிமைப்படுத்தி இருந்ததாக வாதாபி சாளுக்கியத்தை நம்பவைப்பதற்கே, இவனது தேரில் அவளைப் பயணிக்கச் செய்திருந்தான், என்பது பாரவிக்குத் தெரியாதா என்ன?

அவந்திகாவை பரிதாபத்துடன் நோக்கினான். பிழைக்கத் தெரியாத பேதை. காதல் உணர்வுடன் வந்தவனை, மயக்கி, ஜாலம் செய்து தனது மானத்தைக்

காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். தந்தையிடம் பெண் கேளுங்கள் என்று கூறிச் சிருங்காரரசத்துடன் பேசியிருந்தால், சொக்கிப் போயிருக்கமாட்டானா புலிகேசி?

சீறிப் பாயும் அடலேறுகளுக்கு மூக்கணாங் கயிற்றினைப் போடுவதே காதல் பார்வையை வீசும் நங்கையர்தானே. தான் ஒரு போர்த் தளபதி போன்று அறிவுரைகளைக் கூறி அவனது கோபத்தைச் சம்பாதித்துவிட்டிருந்தாளே.

அவள் எப்படியோ போகட்டும்.. அவளது அகந்தை அழிந்து, புலிகேசியிடம் கதறிச் சரணாகதி அடையும் வரை அவன் விடமாட்டான். அன்று அப்படிச் சொன்னாயே. இன்று பார்! எனது காலணிகளைவிடக் கேவலமாகக் கிடக்கின்றாய் என்று அவ்வப்போது சொல்லிக்காட்டிக் கொண்டே இருப்பான். அது அவந்திகாவின் தலைவதி என்று விட்டுவிட்டாலும், இப்போது இவனது தலையெழுத்தும் கூடத்தானே அவர்களுடன் பிணைந்துள்ளது. அவந்திகா இவனது அடிமை என்றால், அவளது முழுபொறுப்பும் இவனுடையது என்றல்லவா பொருள்.

இவனது மாளிகையில்தான் அவந்திகாவை சிறை வைப்பான். அரண்மனையின் பின்பாகவே இவனது ஜாகை இருந்தது மட்டும் அதற்குக் காரணமல்ல. அரண்மனையைப் போன்றே அதிக வசதிகளும், ரம்யமான காட்சிகளையும் கொண்டிருந்தது, பாரவியின் ஜாகை.

"கவிதை புனையும் தலைமைப் புலவரின் மாளிகை ரம்மியமாக இருத்தல் வேண்டும். கற்பனையை உந்தச் செய்ய வேண்டும். அதற்கு மலப்பிரபா* மாளிகைதான்

*** வாதாபி, இளவா என்கிற இரு சகோதர அரக்கர்கள் இங்கே வசித்து வந்தனர். அந்தப் பக்கமாக செல்லும் வழிப் போக்கர்களை ஒரு முனிவரின் வடிவில் இளவா வரவேற்று**

*சரி!" — என்று பாரவி மறுத்தும் அவனுக்கு அதனை ஒதுக்கியிருந்தான், புலிகேசி.*

---

உபசரிப்பான். நரமாமிசத்தை புசிக்கும் சகோதரரின் செயல்பாடு விசித்திரமானது. அண்ணன் வாதாபி மாங்கனி வடிவில் இருக்க, அதை இளவா வழிப்போக்கர்களுக்கு சமர்ப்பிப்பான். அவர்கள் அதை புசித்ததும், வாதாபி சுயஉருவத்துடன் அவர்கள் உடலை பிளந்து கொண்டு வெளிவந்து, இருவரும் அந்த நரமாமிசத்தை புசிப்பார்கள். அகஸ்தியர் ஒருமுறை இவ்வழியே செல்ல, சகோதரர்கள் தங்களது திட்டத்தை அவரிடம் செயல்படுத்தினர். தனது ஆற்றலால், நடப்பதை அறிந்து கொண்ட அகஸ்தியர், தனது வயிற்றைத் தடவி, 'வாதாபி ஜீரணோ பவ' என்று கூற வாதாபி ஜீரணமாகிவிட்டான். இளவா மன்னிப்பு கோர, அகஸ்தியர் இருவரையும் ஆசீர்வாதம் செய்து வாதாபி, இளவா என்று இரு மலைகளாக இந்தப் பகுதியிலேயே இருக்கும்படி அருளிவிட்டுப் புறப்பட்டார்.

வாதாபி என்று அழைக்கப்படும் இந்த இரட்டை மலைப்பகுதி ஆறாம் நூற்றாண்டில் சாளுக்கியரின் தலைநகரமாகத் திகழ்ந்தது. இரண்டு பிரிவுகளாக உடைந்தனர் சாளுக்கியர்கள். வாதாபியை தலைநகரமாக கொண்டவர்கள் வாதாபி சாளுக்கியர்கள் என்றும் மற்றொரு பிரிவு கல்யாணி சாளுக்கியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அரிஞ்சய சோழரின் மனைவியும், சுந்தர சோழரின் தாயும், குந்தவையின் பாட்டியுமான கல்யாணி, கல்யாணி சாளுக்கியத்தைச் சேர்ந்தவள்.

வாதாபி, இளவா என்கிற இந்த இரண்டு மலைகளின் நடுவே மலப்பிரபா என்கிற ஆறு ஓடுகிறது. மலைகளின் முன்பாக இந்த ஆறு விரிந்து ஒரு சிறிய ஏரியை உருவாக்கியுள்ளது. அதற்கு அகஸ்திய தீர்த்தம் என்று பெயர். செம்மண்ணில் இந்த ஏறி அமைந்ததால், இன்றும் இந்த ஏரி சிவப்பாகக் காணப்படும். இந்த ஏரியின் கரையில் உள்ள இரட்டை மலைகளில் அடிவாரத்தில்தான் புலிகேசி நான்கு குகைகளை அமைத்தான். மலையின் வடக்கு கோடி அடிவாரத்தில் முதல் குகை அமைந்தது. நான்கு குகைகளில் மூன்றாவதும் மிகப்பெரியதுமான குகை, மலையின் வடபுற அடிவாரத்தில் உள்ளது. இன்றும் ஹம்பிக்கு 140 கி.மீ. மேற்கிலும், பஞ்ச நாராயண கோட்டத்தில் நான் குறிப்பிட்டிருந்த கர்நாடகத்தின்

மலப்பிரபா மாளிகையில்தான் தன்னுடன் அவந்திகாவை சிறைவைக்கக் கூடும் என்று யூகித்திருந்தான், பாரவி. இனி அவன் பாடு பெரும்பாடுதான். இவனுக்கு அவந்திகா அடிமையாக இருப்பாளே தவிர, அவள் புலிகேசிக்குதான் ஊழியம் செய்ய வேண்டியிருக்கும். அவளைப் பிணைப்பதற்கு வெறும் கைவிலங்கு இவன். அவந்திகா என்கிற கூண்டுக்கிளியோடு அவ்வப்போது விளையாடிவிட்டு, மீண்டும் அவளைப் பாரவி என்னும் தங்கக் கூண்டில் அடைத்துவிடுவான், புலிகேசி. தான் வெறும் கிளிக் கூண்டு என்பதை நன்றாகவே உணர்ந்திருந்தான், பாரவி.

இந்த வேலைக்கு இவன் இலக்கியவாதியாகவும், தத்துவ அறிஞனாகவும் உயர்ந்திருக்க வேண்டியதில்லை. சிற்றின்ப அடிமையாகத் திகழப்போகும் ஒரு பெண்ணின் காவலனாக இருப்பது எவ்வளவு கேவலம்? பாரவி என்கிற கவிஞனாகவா இவனை வருங்காலம் அழைக்கும்..? புலிகேசியின் அடிமையின் மேற்பார்வையாளன் என்றல்லாவா இவனை அழைக்கும்.. பாலகன், நியாயச் சிந்தனை உள்ளவன், மகுடம் இழந்தவன் என்கிற பரிதாபத்தில் இறையாவிடம் நெருங்கிப் பழக, சுதந்திரப் பறவையாகத் தேசாந்தரம் சென்று கொண்டிருந்த இவனை வாதாபியுடன் கட்டிப் போட்டுவிட்டானே. இவனிடம் இருந்து விலகி நம் வழியே போக வேண்டியதுதான். கட்டிய மனைவியையும், மகனையும் பிரிந்து இலக்கியச் சேவை செய்வதற்காக அலைந்த இவன் கடைசியில் தனது ஈனச் செயலுக்கு உடந்தை ஆக்கிவிட்டானே..! மனதினுள் பொருமினான் பாரவி.

---

பெலகவியின் கிழக்கே 182 கி.மீ. தொலைவிலும், மலைபிரபா ஆற்றின் கரையில் நான்கு கி.மீ. தொலைவில் வாதாபி நகர குகைகள் அமைந்திருப்பதை காணலாம். திரிவிக்கிரமர், நரசிம்மர், ஹனுமான், துர்க்கை போன்ற தெய்வங்களின் வடிவினை இந்தக் குகைகளில் காணலாம்.

முன் போல் காருண்யமும், கம்பீரமும் நிறைந்த இளங்குமரன் இல்லை, புலிகேசி, வன்மமும், குரோதமும், பேராசையும் அவனைச் சூழ்ந்து கொள்ளத் துவங்கி இருந்ததைப் பாரவி உணராமல் இல்லை. என்ன செய்வது? அவனை விட்டுதான் பிடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தான். ஆனால் அவந்திகாவை கடத்தி வரும் விதத்தைப் பாரவி அடியோடு ஆமோதிக்க வில்லை. வீரம் நிறைந்த பெண்ணோ அல்லது அகந்தை பிடித்தவளோ..? தந்தையோ, கணவனோ இல்லாத நிலையில், ஒரு அரண்மனையைத் தாக்கி ஒரு இளவரசியைக் கடத்தி வருவது எவ்வகையில் நியாய மாகும், தருமமாகும்..?

“உங்கள் மன்னன் புலிகேசிக்கு இருப்பது மண்ணாசையா, பொன்னாசையா? பெண்ணாசையா?” — திடீரென்று தனது இனிய குரலில் கேட்டாள், அவந்திகா.

“இளவரசி! மிகவும் கடினமான கேள்வியைக் கேட்டு இருக்கிறாய்? கர்ப்பத்தில் பிறக்கும் சிசு கூக்குரல் இட்டு அழும் போதே தாயின் அரவணைப்பு என்கிற சுகத்திற்காக ஆசைப்பட்டே அழுகிறது. உனக்கு ஆசை வீர ஆண்மகன்களை ஜெயிக்க வேண்டும் என்பது. ஒவ்வொருவருக்கும் ஒரு ஆசை.. எனக்கு ஆசை உலகக் கவிஞனாகப் புகழ் பெற வேண்டும் என்பதே. ஆனால் புலிகேசிக்கு ஆசை கிடையாது. ஆனால் மற்றவர்கள் ஆசைப்படுவதை அபகரிக்கும் ஆசை உள்ளவன். உன்னை அடைய வேண்டும் என்று அவன் ஆசைப்பட வில்லை. ஆனால் மிகவும் பேரழகியான நீ இன்னொரு வரின் சொந்தமாக மாறுவதற்குள் உன்னைச் சிறைப் பிடித்திருக்கிறான்.. காரணம் உலகில் மிகச் சிறந்தது எல்லாம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறான். அவ்வளவே..”

“அப்படியென்றால், புலிகேசியின் இலக்கு சைந்தவமோ, நானோ இல்லையா?” — அவந்திகா கேட்டாள்.

"இளவரசி! நாம் இருவரும் பேசுவதைத் திரும்பி நோக்கிவிட்டான், புலிகேசி. பார்.. தேரை நிறுத்திவிட்டு என்னிடம் நீ என்ன பேசினாய் என்பதை அறிவதற்கு இங்கே வருவான். நீ மௌனமாகவே வா" என்றான் பாரவி.

பாரவி கூறியது போன்று இரதங்கள் திடீரென்று நின்றன. மன்னன் புலிகேசி தனது இரதத்தில் இருந்து இறங்கி வந்தான்.

நேராகப் பாரவியை நோக்கி வந்தான். "என்ன வேண்டுமாம், உனது அடிமைக்கு?" — புலிகேசி கேட்டான்.

"இறையா! தான் உன்னை எதிர்த்தது தவறு என்று உணர்ந்து வருந்துகிறாள், எனது அடிமை. தனது தந்தையை எண்ணிக் கலங்குகிறாள். தன்னை தனது தந்தையிடமே திருப்பி அனுப்பும்படி கெஞ்சுகிறாள்!" — தான் கூறும் பொய்யை ஆமோதிக்கும்படி அவந்திகாவை கண்களால் கெஞ்சினான், பாரவி.

புலிகேசியின் ஆசைகள் எதுவாக இருந்தாலும் சரி. அவை சிறிய ஆசைகளாக இருந்தாலும் சரி, பெரிய ஆசைகளாக இருந்தாலும் சரி! அவனது ஆசைக் குமிழிகளை ஊசியால் துளைத்து வெடிக்கச் செய்வாள். அவற்றை முறியடித்து தான் வெற்றி பெற வேண்டும் என்கிற தீர்மானத்தில் இருந்த அவந்திகா பாரவியின் கெஞ்சலை ஏற்று, முகத்தில் சோகத்தைத் தருவித்தாள்.

"வீரரே! உங்களை இழிவுபடுத்தியதற்கு வருந்துகிறேன். என்னை மீண்டும் எனது தந்தையிடமே சேர்ப்பித்து விடுங்கள். உங்கள் வீரம் இன்னும் புகழ் பெறும்!" — அவந்திகா கண்களால் புலிகேசியின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

அவளது அழகிய கண்களின் காந்த வீச்சு புலிகேசியின் இதயத்தைச் சுண்டி இழுத்தாலும், அவனது கண்கள் எச்சரிக்கையுடன் அவளைப் பார்த்தன.

"தலைக்கு மேல் வெள்ளம் பாய்ந்துவிட்டது, அடிமையே! எனது வீரத்தின் புகழைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. ஒருவேளை, என்னைப் போரில் வென்றுகூட யாராவது உன்னை அடையலாம். ஆனால் பாரவியின் புலமையை வென்று உன்னை அடைவதற்கு யாருமில்லை. எனவே நீ வாதாபியின் நிரந்தர அடிமை. உனது தலைவிதியை ஏற்பது தவிர உனக்கு வேறு மார்க்கம் இல்லை. அடிமைக்குப் பேச கூட உரிமை இல்லை என்பதை மறந்து உனது எஜமானனுடன் நீ எப்படிப் பேசலாம். பாரவி! அவளிடம் கடுமையைக் காட்டு! அவள் பேசினாலும்.. நீ அவளுடன் பேசாதே" என்றபடி தனது இரதத்தை நோக்கி நடந்தான், புலிகேசி.

வாதாபி அரண்மனைக்கு வந்ததும் புலிகேசி பாரவியிடம் வந்தான்.

"பாரவி! இந்திராவதி காட்டில் நீ அவந்திகாவை முதன்முதலாகக் காட்டி, அவள் எனக்கு உரியவள் என்றாய். எனக்கு உரியவள் என்பதால் நான் அவளைச் சிறைப்பிடித்து வந்தேன். தாய் பெற்றாலும் என்னை வளர்த்தது சுமனஸா. சுமனஸாவின் இடத்தில்தான் உன்னை இருத்துகிறேன். உனது பணி அவந்திகாவை காவல் காக்க வேண்டும். அவள் மனதை என்பால் திசை திருப்ப வேண்டும். என்னைப் பற்றிப் புகழ்ந்து எனது பெருமைகளை அவள் உணரச் செய்ய வேண்டும். அவளுக்கு முன்பாக நான் கடும் வார்த்தைகளைப் பேசுவேன். அவளைச் சாட்டையால் அடி என்று கூடக் கூறுவேன். அவள் உனக்குக் கவரி வீச வேண்டும் என்பேன். அதை நம்பிக் கொண்டு அவளிடம் உரிமைகளை எடுக்க நினைக்காதே பாரவி. அவள் எனக்கு மட்டுமே உரியவள். என்னை அவமானம் செய்ததால் மட்டுமே அவளுக்கு இந்தத் தண்டனை. அவளை வேறு எந்த ஆண்மகனும், அவளது தந்தையே ஆனாலும் கூட நெருங்காமல் இருப்பதற்கு நீதான்

பொறுப்பு. உன்னுடன் மலப்பிரபா மாளிகையில்தான் அவளைச் சிறைவைக்கப் போகிறேன்.. அவளுக்குத் துணையாக எனது வளர்ப்புத் தாய் சுமனஸாவையும் மலப்பிரபா மாளிகைக்கு மாற்றுகிறேன். இனி நீங்கள் இருவரும்தான் அவளுக்குக் காவல்.." என்றபடி தனது ஜாகையை நோக்கி நடந்தான்.

புலிகேசி அவந்திகாவுக்கு மட்டும் தண்டனை விதிக்கவில்லை. அவனுக்கு நல்ல புத்திமதிகளைக் கூறி, சிறுவயதில் அவனை வளர்த்திருந்த உரிமையை நிலைநாட்டி, அவனது சுதந்திரங்களுக்கு இடையூறு செய்யும் சுமனஸாவுக்கும் அவன் விதிக்கும் தண்டனை இது. அதுமட்டுமா? வழிப்போக்கனாக அறிமுகம் ஆகி, நண்பனாக ஏற்கப்பட்டு, ஆலோசகனாக மாறி, ராஜதர்மத்திற்கு எதிராக அவன் செயல்படாதபடி தடை விதிக்கும், தாமோதராவாகிய இவனுக்கும் அவன் விதிக்கும் தண்டனை இது.

அவன் கோபம் கொண்டிருக்கும் மூன்று பேரை மலப்பிரபா மாளிகையில் சிறைவைத்து அவர்களைக் கண்காணிக்கப் போகிறான், புலிகேசி!

மனதினுள் நினைத்தான், பாரவி. யார் எப்படியாவது போகட்டும். போதும் இவனுக்கு இந்த வாதாபியின் வாழ்க்கை. புலிகேசியின் நட்பும் தேவையில்லை. இவன் இங்கே அடிமையாகவும் இருக்கத் தேவையில்லை. எலி, தவளை நட்பு போன்று தன்னையே அவனுடன் பிணைத்துக் கொண்டால் அவனுடன் மூழ்க வேண்டியதுதான்.

மலப்பிரபா மாளிகையில் அவந்திகா சிறைவைக்கப் பட்டாள். மாலை உப்பரிகையில் வாதாபி சரித்திரத்தைக் கவிதையாகப் புனைந்து புலிகேசியின் பிறந்த நாளன்று அதனை அவனுக்குப் பரிசளிக்க நினைத்தான், பாரவி. சரித்திரக் கவிதையைத் துவக்கி இரண்டு அடிகளே புனைந்திருப்பான். திடீரென்று குளிர்காற்று தேகத்தை

வருட, அந்தச் சுகமான அனுபவத்தில் ஒருகணம் தனது கண்களை மூடியவன் மீண்டும் அவற்றைத் திறந்த போது, அவன் கண்ட காட்சி..

திடுக்கிட்டுப் போய் எழுந்தான். அவந்திகாதான் அவனுக்குக் கவரி வீசிக் கொண்டிருந்தாள்.

“என்ன காரியம் செய்கிறீர்கள், இளவரசி?” — பதைபதைத்து எழுந்தான், பாரவி.

“புலிகேசி செய்யச் சொன்னதைத்தானே நான் செய்கிறேன்!” — அவந்திகா தொடர்ந்து கவரியை வீசியபடி கூற, பாரவி வலுக்கட்டாயமாக அவளது கரத்தில் இருந்து கவரியைப் பிடுங்கி வீசி எறிந்தான்.

“இறையா பேசியதை நீங்கள் முழுதும் கேட்க வில்லையா..? அவன் உங்களிடம் கடுமையாகப் பேசுவான். அது ஒரு நாடகமே. ஆனால், உங்கள் மீது ஒரு துரும்பு பட்டாலும், அவன் எனக்கு அளிக்கும் தண்டனை பெரிதாக இருக்கும்.” — பாரவி கூறினான்.

“இதென்ன விந்தையாக உள்ளதே. உங்கள் அடிமையை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.. அதைக் கேட்க புலிகேசிக்கு என்ன உரிமை?” — அவந்திகா கேட்டாள்.

“நான் அவன் அடிமை. நீ என்னடிமை. அடிமையின் அடிமை அவனுக்குத்தானே சொந்தம். மன்னனின் அடிமையாகத் திகழ்வதால் உனக்கு மற்றவரிடையே செல்வாக்கு அமையும் அல்லவா? மன்னனின் அந்தப்புரத்தில் அவனைத் திருப்தி செய்பவள் என்பதால் மற்றவர்கள் உன்னிடம் மரியாதையுடன் பழகலாம். அந்த மரியாதை கூட உனக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்காக, தனது தலைமைப் புலவன் பாரவியின் அடிமை என்று கூறி உனக்கு அந்தச் செல்வாக்கு ஏற்படாமல் செய்திருக்கிறான். நான் அவனுக்கு அடிமையாக இருக்கும் வரை நீயும் அவனுக்கு அடிமை.” — பாரவி கூறினான்.

"புலிகேசி ஒரு விசித்திரப் பிரகிருதியாக இருக்கிறானே? இப்படியெல்லாம் கூட ஒரு மனிதனின் சிந்தனை பாயுமா என்ன?" — அவந்திகா அயர்ந்து போய் நின்றாள்.

"அவனது சிந்தை எட்டுத்திக்கிலும் பாயும் ஒரு போர்வாள். எந்தத் திசையில் எப்படிப் பாயும் என்று கூற முடியாது.." — திடீரென்று குரல் கேட்க, திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

சுமனஸாதான் அங்கு வந்து நின்றிருந்தாள். இருவரும் வியப்புடன் அவளைப் பார்க்க, அவர்களை நோக்கிப் புன்னகைத்தாள், சுமனஸா.

"இறையாவின் தந்தை கீர்த்திவர்மன் குழந்தை இறையாவை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் விட்டார். எனது குழந்தையாகவே அவனை வளர்த்தேன். ஆனால் நானும் இளங்கன்னிதானே. எனக்கு ஆசாபாசங்கள் இருக்காதா? அரண்மனை அதிகாரியின் மகன் சுரஞ்சனனை காதலித்தேன். ஆனால் எங்கள் திருமணம் நிச்சயமானதோடு சரி. அதனை நடக்கவிடாமல் செய்துவிட்டான், இறையா. என் மீது அவ்வளவு உரிமையை எடுத்துக் கொண்டான். அனுபவப் பாத்யதை என்று கூறலாம். தனது தாய் எப்படி இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று என்னிடமே சூளுரைத்தான். எங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டதும், மர்மமான முறையில் இறந்து கிடந்தான், சுரஞ்சனன். அவனது நெஞ்சில் குத்துவாள் பதிந்திருந்தது.. இது சிற்றப்பன் மங்களேசன் வேலையாக இருக்கும் என்று இறையாதான் என்னிடம் கூறியிருந்தான். நானும் அதை நம்பினேன். ஆனால் தற்போது இறையாவின் மூர்க்கத்தினைக் காணும் போது எனது சந்தேகங்கள் வேறு மாதிரி திரும்புகின்றன." — கிசுகிசுத்தக் குரலில் கூறினாள் சுமனஸா.

“நான் வளர்த்த இறையாவாக இருந்த வரை அவன் நன்றாகவே இருந்தான். ஆனால் புலிகேசியாக மாறியதும் மிகவும் விகார எண்ணங்களைக் கொண்டிருக்கிறான். அனைவரும் எனது வளர்ப்பினில்தானே குறை கூறுவார்கள்?” — வாட்டத்துடன் கூறினாள் சுமனஸா.

“இப்போது என்ன செய்வது? நான் புலிகேசியிடம் இருந்து தப்பிக்க வேண்டும்!” — அவந்திகாவின் முகத்தில் ஒருவித அருவருப்பு தோன்றியது.

“எனக்கும் இந்த வாழ்க்கை போதும். புலமையும் வேண்டாம். தலைமைப் புலவர் பதவியும் வேண்டாம். எனது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்து நிம்மதியாக எனது வாழ்நாளைக் கழிக்கிறேன்..” — தாமோதரா என்கிற பாரவி கூறினான்.

“உங்களைத் தப்பவிடக் கூடாது என்றே உங்கள் இருவரையும் கண்காணிக்க என்னை அனுப்பியிருக் கிறான். இறையாவை பொறுத்தவரை தற்போது ஒரே கல்லில் மூன்று மாங்காய்கள்.. அவனுக்கு வேண்டிய அவந்திகாவை பாதுகாக்க அவனுக்கு வேண்டாத உங்களைக் காவலுக்கும், வேண்டாத என்னை உங்களை வேவு பார்ப்பதற்கும் வைத்திருக்கிறான். அவனது கண்கள் எப்போதும் நம்மை நோக்கியே இருக்கும். ஒருவேளை அவந்திகா தப்பிச்சென்றால், நமது இருவர் தலைகளும் பூமியில் உருளும். எனவே அவந்திகா இங்கே இருக்கும்வரைதான் நமது உயிரும் நிலைத்திருக்கும். முள்ளின் மீது விழுந்த பட்டுச்சீலையை எடுப்பது போன்ற விஷயம் இது. எச்சரிக்கையுடன் செயல் படுவோம். சிறிது காலத்திற்கு இப்படியே நடிப்போம். அவனது பார்வையை மலைபிரபா மாளிகையிலிருந்து திசைதிருப்புவதற்கு ஒரு சந்தர்ப்பம் அமையும். அப்போது செயலாற்றுவோம்..” — சுமனஸா கூறினாள்.

அவந்திகாவும், தாமோதராவும் அவளை நோக்கித் தலையசைத்தனர். முதன்முறையாகத் தனது நெஞ்சைக்

கிலி கவ்வுவதை உணர்ந்தாள், அவந்திகா. எந்தப்புறம் பாய்வான் என்று கூறமுடியாத, உக்கிரத்தை மட்டுமே கொண்ட ஒரு வாலிபனை முதன்முறையாகக் காண்பதால், அவளது பெண் மனது அச்சம் அடைந்தது. தனது பேரழகை இழப்பதற்கு எந்த ஆணும் துணியமாட்டான். தனது பேரழகுதான் தனது உயிருக்குப் பாதுகாப்பு வளையம் என்று நம்பியிருந்தாள், அவந்திகா. ஆனால் தனக்குக் கிடைக்கவில்லை என்றால், அவளது உயிரை உடனடியாகப் போக்குவதற்கும் புலிகேசி தயங்கமாட்டான் என்பதைப் புரிந்து கொண்டிருந்தாள், அவந்திகா.

உற்ற நண்பன்தான்! ஆனால் அவனது கோபத்தைக் கிளறினால், தனது குடும்பத்தைக் காண முடியாத இடத்திற்குப் புலிகேசி அனுப்பிவிடுவான் என்பதைப் பாரவியும் உணர்ந்தான்.

முந்தைய தினம் வந்திருந்த அவந்திகாவும், முந்தைய ஆண்டு அறிமுகம் ஆகியிருந்த தாமோதராவும் புலிகேசியை முழுவதுமாக உணர்ந்திருந்த போது சிசுவாக இருக்கையில் கையில் ஏந்தியிருந்த காலம் முதல் நேற்று வரை அவனது விருப்பு வெறுப்புகளை அறிந்து வைத்திருந்த சுமனஸாவினாலா புலிகேசியின் மனதை யூகிக்க முடியாது? வளர்ப்புத் தாய் என்கிற நிலையில் இருந்து இப்போது வெறும் பணிப்பெண் என்கிற நிலைக்கு மீண்டும் இறங்கியிருந்தாள். துரோகி, குற்றவாளி என்கிற அடுத்த நிலைக்கும் எந்தச் சமயத்திலும் இறக்கப்பட்டுவிடுவாள் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

"மூவருமே கத்தியின் மீது நடக்கிறோம். தனியாக நடந்தால், நழுவி விழ வாய்ப்பு உள்ளது. கத்தியின் மீது கைகோத்து ஒன்றாக நடந்து பார்ப்போம். நழுவி விழாமல் கத்தியில் நடந்து கைப்பிடியைக் கடந்து, பத்திரமாகக் கீழே இறங்குவோம்." — சுமனஸா

கூறியதைக் கேட்டதும் அவந்திகா சட்டென்று அவளை நோக்கினாள். சற்றுமுன்னர் சுமனஸா கூறியிருந்த ஒரு சொல் அவளது சிந்தையில் ஒரு சிறு கீற்றாக ஒளியை ஏற்படுத்தி இருந்தது. என்ன கூறினாள்? அனுபவப் பாத்யதை என்றல்லவா கூறினாள்!

தனக்கு மட்டுமே ஒரு பொருள் சொந்தம். அதனைப் பிறர் யாரும் அனுபவிக்கக் கூடாது. தனக்கு உரிய இவளை உயிர் நண்பனான பாரவியின் பாதுகாப்பில் விட்டு அவனை வேவு பார்க்கத் தனது வளர்ப்புத் தாயைப் போன்ற சுமனஸாவையே அனுப்புகிறான் என்றால், தனக்கு உரியவள் என்கிற வெறியை வளர்த்துக் கொண்டிருப்பான். அவனுக்கு ஒரு போட்டியை உருவாக்கி, புலிகேசியையே தங்களுடன் கத்தியின் மீது நடக்க வைத்தால்..? புலிகேசியின் வீரத்திற்கு இணையான ஒரு வீரனை தான் காதலித்து வருவதாக அறிவித்தால், நிச்சயம் புலிகேசி அவனுடன் மோதி அவனை அழித்து அவனது உடலை இவளது முன் கிடத்தி, நீ காதலித்தவனை அழித்துவிட்டேன். நீ எனக்குத்தான் சொந்தம்! — என்று எக்காளமிடுவான். அத்தகைய ஒரு வீரனுடன் இவனை மோதவிட்டால்?

அந்த வீரனாக யாரைத் தேர்ந்தெடுப்பது? தனக்குள் யோசித்தாள் அவந்திகா. தான் முன்பின் பார்த் திராதவனாக இருந்தாலும் பரவாயில்லை. அவன் புலிகேசியை வெல்லும் திறனுடையவனாக இருக்க வேண்டும்.

மலப்பிரபா மாளிகையின் வாயிலில் முரசங்களும், கொம்பு வாத்தியங்களும் முழங்கின.

“எச்சரிக்கை! இறையா வருகிறான்!” உப்பரிகையில் இருந்து எட்டிப்பார்த்த சுமனஸா கூறினாள். அவந்திகா உடனே தனது அறையில் முடங்கிக் கொள்வதற்காக விரைந்தாள். மற்ற இருவரும், புலிகேசியை வரவேற்பதற்கு மாளிகையின் வாயிலுக்குச் சென்றனர்.

தனது அறையில் யோசித்தபடி அமர்ந்திருந்தாள், அவந்திகா. தன்னைத் தேடித்தான் புலிகேசி அங்கே வருகிறான் என்பதனை யூகித்தாள். கூண்டுக்கிளியைச் சுற்றித்தான் கடுவன் பூனை வட்டமிடும். தன்னை அடைவதற்கு அவன் முயன்றால், தனது மனம் வேறொருவனுக்கு வசப்பட்டுவிட்டது. அவனை வீழ்த்தினால்தான் நான் உனக்குக் கிடைப்பேன் என்று கூறிச் சற்று அவகாசத்தை வாங்கிக் கொள்ள நினைத்தாள் அவந்திகா.

இல்லாத காதலனுக்கு எங்கே போவது..? அதுவும் புலிகேசியின் ஆற்றலுக்குச் சமமான ஆண்மகனை எங்கே தேடுவாள். ஹர்ஷரின் பெயரையே கூடச் சொல்லலாம். ஆனால் அதில் நம்பகத்தன்மை இருக்காது. இவளது தந்தையின் சமவயதுடைய ஹர்ஷனை தான் காதலிக்கிறேன் என்றால் புலிகேசி நம்பமாட்டான். வேறு யாரைச் சொல்வது..?

வெளியே பேச்சுக் குரல் கேட்க, அவந்திகா தனது செவிகளைக் கூர்மைப்படுத்தினாள்.

"ஹர்ஷன் தனது படைகளைத் திரட்டுகிறான் என்கிற தகவல் வந்துள்ளது, பாரவி! நான் சைந்தவத்தை வென்ற கையோடு ஹர்ஷனையும் வீழ்த்தப் போகிறேன். நர்மதையைக் கடந்து அவன் வரக்கூடாது. எனவே, நான் அவன் மீது படை எடுத்துச் செல்லப் போகிறேன். அதுவரை நீ உனது அடிமையைப் பார்த்துக்கொள். நான் ஹர்ஷனை வென்று, எனது பாட்டனின் கொலைக்கு வஞ்சம் தீர்க்கப் போகிறேன்." — என்றான் புலிகேசி.

"நல்லது இறையா! ஹர்ஷனிடம் நீண்ட நாள் தீர்க்க வேண்டிய பாக்கி அது. வெற்றியுடன் திரும்பி வா. நான் அவந்திகாவை பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன்." — பாரவி கூறினான்.

"எங்கே அந்த அடிமை?" — புலிகேசி கேட்டான்.

"இரவெல்லாம் கண்ணீர் உகுத்தபடி அதோ அந்த அறையில் அடைபட்டுக் கிடக்கிறாள்!" — சுமனஸா கூறினாள்.

"அழட்டும். அவளது கண்ணீர்தான் அவளது அகந்தையைக் கரைக்கும்" என்றவன் அவந்திகாவின் அறையை நோக்கி நடந்தான். திடீரென்று ஏதோ நினைவுக்கு வர, பாரவியைத் திரும்பிப் பார்த்தான்.

"பாரவி! சரியான தீனி கிடைத்துள்ளது. எவனோ காஞ்சியைச் சேர்ந்த தசகுமாரர்கள் என்பவர்களில் ஒருவனாம். தொண்டரையன் என்கிற பெயராம். பல்லவ மன்னன் மகேந்திரனின் அவையில் புலவனாக இருக்கிறானாம். அவன் உன்னுடன் வாதம் செய்ய வேண்டும் என்று நாவலிட்டு* அரண்மனையில் சுவடி இட்டிருக்கிறான். நீ அவனுடன் வாதம் புரியச் செல்ல வேண்டும். எங்கு சென்றாலும், அவந்திகாவின் மீது ஒரு கண் இருக்கட்டும்!" என்றபடி மீண்டும் அவந்திகாவின் அறையை நோக்கி நடந்தான்.

'பல்லவ மன்னன் மகேந்திரன்..!'

புலிகேசி பாரவியிடம் கூறிய பெயர் சட்டென்று அவந்திகாவின் சிந்தையில் இறங்கியது. தனது காதலனாக மகேந்திரனின் பெயரைக் கூறினால் என்ன? ஆம்! அதுதான் செய்ய வேண்டும்.

அறையினுள் ஆர்ப்பாட்டத்துடன் நுழைந்த புலிகேசி, அறையின் கதவினைத் தனது இடது காலால் உதைக்க, அது அவனுக்குப் பயந்து தன்னையே அறைந்து மூடிக் கொண்டது.

"அடிமையே! அகந்தை கரைந்ததா?" என்றபடி ஒரு இருக்கையை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து, தனது வலது காலை இடது காலின் மீது இருத்தியபடி அவளைக் கேலியாகப் பார்த்தான், புலிகேசி.

---

* நாவல் இடுவது : நாவல் செடியை நட்டு வாதிடுவது. அது வாடும்போது வாதத்தில் எவர் கை ஓங்கியுள்ளதோ அவரே வென்றவர்.

"அகந்தைதானே பெண்களுக்குப் பாதுகாப்பு. என்னைப் பாதுகாத்துக் கொள்ள, நான் அகந்தையாக இருப்பது, தவறா?" — நிலத்தை நோக்கியபடி அவந்திகா கேட்டாள்.

"அகந்தை தங்கள் அழகில் மட்டுமே இருக்க வேண்டும்.. போர்க் கலைகளில் அகந்தையைக் காட்ட வேண்டியது ஆண்கள். ஆண்களைப் போன்று போர்க் கலையில் அகந்தையைக் காட்டினால், அவர்களைப் போன்று உயிரைவிடத் தயாராக இருக்க வேண்டும். நீ அதற்குத் தயாரா?" — அவந்திகாவை தனது சிவந்த கண்களால் நோக்கியபடி கேட்டான். அவனது அடர்ந்த மீசையின் நுனிகள் சுருண்டிருந்த போதிலும் அவை துடிப்பதைக் கண்டு, அவன் கடும் சினத்தில் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள். இதுதான் பொருத்தமான தருணம்.

பெண்கள் மயக்கத்தில் இருக்கும் போது ஆண்கள் அவர்களைத் தங்கள் விருப்பப்படி ஆட்டி வைக்க முடியும். ஆண்கள் சினத்தில் இருக்கும் போதுதான் பெண்களால் அவர்களைத் தங்கள் விருப்பப்படி ஆட்டி வைக்க முடியும் என்பதனை உணர்ந்தவளாயிற்றே, சைந்தவ இளவரசி, அவந்திகா.

புலிகேசியை எச்சரிக்கையுடன் நோக்கியவள், நிதானமாகக் கூறினாள்.

"உயிரைவிடத் தயாராக இருக்கிறேன், அரசே! ஆனால் இந்த உடல் மட்டுமே பாரவிக்கு அடிமை. பாரவிக்கு அடிமையாகும் முன்னரே, எங்கள் சைந்தவத் தலைமைப் புலவர் சலபதிக்கு அடிமையாகும் முன்னரே, எனது உயிர் ஒரு ஆண்மகனுக்கு அடிமையாகிவிட்டது. எனது உயிர் அவர் வசமே உள்ளது. எனது காதலர் மகேந்திரன் வசம் உள்ள உயிரை மீட்டுக் கொண்டு வந்து நீங்கள் அதனை எடுத்துக் கொள்ளலாம்.." அவனை ஓரக் கண்களால் நோக்கியபடி கூறியவள், அவனது உடனடி

முகபாவத்தைக் கண்டு நடுங்கிப் போனாள். புலிகேசியின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போக, தான் அமர்ந்திருந்த நாற்காலியைப் பின்னால் உதைத்துக் கொண்டு, எழுந்தான்.

"யார்...? பல்லவ அரசன் மகேந்திரனா?" கொதித்துப் போனான் புலிகேசி.

"ஆம் அவரேதான். எனது இதயத்தைக் கவர்ந்தவர். அவருக்கு உரிமையான என்னை நீர் அடைந்துவிடக் கூடாதே என்றுதான் அகந்தை பிடித்தவளாக நடித்து உம்முடன் போர் புரிந்தேன். தயவு செய்து ஒன்று எனது தந்தையிடம் என்னை ஒப்படைத்துவிடுங்கள். இல்லையேல் நான் காதலிக்கும் மகேந்திரனிடம் என்னை அனுப்பிவிடுங்கள்." வேண்டுமென்றே சோகமாக அவனை நோக்கிக் கைகளைக் கூப்பி வேண்டினாள்.

பொறுப்பானா புலிகேசி? இவனிடம் பல்லவ இளவரசி ஜெயஸ்ரீ கொண்ட காதலை வெற்றிபெறச் செய்வதற்காக இவனிடம் மல்யுத்தத்தில் தோல்வி அடைய மகேந்திரன் தீர்மானித்திருக்க, அதனை முறியடிக்க இவன் அவனிடம் துவக்கத்திலேயே தோல்வி அடைந்திருந்தான். ஜெயஸ்ரீயின் மீது இவனுக்கு விருப்பு இல்லாததால் அவனிடம் தோல்வியடைந்திருந்தான். ஆனால் அவந்திகாவுக்காக மகேந்திரனுடன் மோத வேண்டிய நிலை உருவானால், இவன் தயங்கப் போவதில்லை. அவனைக் கொன்றாவது இவன் அவந்திகாவை அடைவான்.

"நீ காதலிக்கும் மகேந்திரன் எனக்கு ஈடாகமாட்டான். கண்ணிமைக்கும் நேரத்தில் நான் பல்லவத்தை அழித்து மகேந்திரனைக் கொல்வேன்.." — புலிகேசி உறுமினான்.

"மகேந்திரனின் வீரத்தைத் தாங்கள் அறியமாட்டீர்கள். தங்களது நிலையில் இருந்திருந்தால் எனது தந்தை பிரயாகையில் இருந்து வரும் வரை காத்திருந்து பிறகு என்னைப் போரில் வென்று, கொண்டு சென்றிருப்பார்.

போர்க் கலையில் வல்லவர். காண்பதற்குக் கம்பீரர்!" தான் பார்த்திராத மகேந்திரனைப் புகழ்ந்து கூறினாள், அவந்திகா.

புலிகேசி அவளை நோக்கி ஆத்திரத்துடன் இரண்டடி நகர்ந்தான். "அவந்திகா! உனது மனத்தில் இருக்கும் மகேந்திரனின் உருவத்தை அழித்துவிடு. காரணம், நான் இதோ ஹர்ஷனை வீழ்த்துவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஹர்ஷனை வீழ்த்திவிட்டு, நேராகப் பல்லவத்திற்குச் சென்று மகேந்திரனின் தலையைக் கொண்டு வந்து உனக்குப் பரிசளிக்கிறேன். பிறகு, நீ எனது வீரத்தை உணர்வாய். இந்த உலகில் எனக்கு நிகராக ஒரு வீரன் கூட இல்லை என்பதைப் புரிந்து கொள்வாய்" என்றவன், அதே வேகத்தில் திரும்பி அறையைவிட்டு வெளியேறினான்.

வெளியே நின்றிருந்த பாரவியின் புஜத்தை இறுகப் பற்றினான், புலிகேசி.

"பாரவி! நான் தானேஸ்வரின் மீது படையெடுத்துச் சென்று ஹர்ஷனை வென்றுவிட்டு உடனே வருகிறேன். பிறகு நாம் பல்லவத்தின் மீது படை எடுக்கிறோம்." — புலிகேசி கர்ஜித்தான். சரியாக, பணிப்பெண் ஒருவள் அங்கே வந்து நின்றாள்.

தனது முகத்தின் கடுமை இம்மியும் குறையாமல், அந்தப் பணிப்பெண்ணை நோக்கினான். "என்ன வேண்டும் உனக்கு?"

"அரசே! பல்லவத்திலிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கிறான். தங்களுக்காக பட்டோலை ஒன்றைச் சுமந்து வந்திருக்கிறான்." — பணிப்பெண் கூறியதும், திகைப்புடன் பாரவியைப் பார்த்தான். இப்போதுதான் மகேந்திரனின் மீது படையெடுக்க வேண்டும் என்று இவன் கூறிக் கொண்டிருக்க, பல்லவ மன்னனே இவனுக்கு ஓலை அனுப்புகிறானே!

ஓலையை வாங்கி அதனைப் பிரித்துப் பார்த்த புலிகேசியின் முகத்தில் ஒருவிதக் குரூரப் புன்னகை படர்ந்தது. ஓலை மகேந்திரனிடம் இருந்து வந்திருக்க வில்லை. பல்லவ இளவரசி ஜெயஸ்ரீதான் ஓலையை அனுப்பியிருந்தாள். ஓலையை வாசித்தான் புலிகேசி.

'வாதாபி மன்னா! மல்யுத்த களரியில் தாங்கள் என்னையும், எனது தோழியரையும் சேர நாட்டு மல்லன் விஜயேந்திரனிடம் இருந்து காப்பாற்றிய போதே, தங்களிடத்தில் எனது மனதைப் பறிகொடுத்துவிட்டேன். தாங்கள் இன்றி எனது வாழ்க்கை அமையப் போவதில்லை. இன்னமும் தாங்கள் பாராமுகமாக இருந்தால், நான் பசலை நோயில் விழுந்துவிடுவேன். தங்களது அருகில் இருந்தால்தான் எனது சுவாசமே சீராக இருக்கும். இந்தப் பட்டோலையை எனது நம்பிக்கைக்குரிய பணியாளன் மூலமாக அனுப்புகிறேன். எனக்கு எனது பெற்றோர் திருமண ஏற்பாடுகளைத் துவக்கிவிட்டனர். மனதினால் உங்களைக் கணவனாக வரித்துவிட்டேன். இனி வேறு ஒருவனை மணக்க முடியாது. உடனே காஞ்சிக்கு வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள். உங்களைச் சேரத் துடிக்கும்...

பல்லவ இளவரசி,<br>ஸ்ரீஜெய பல்லவி'

ஓலையைப் படித்ததும் முகத்தை விநோதமாகச் சுளித்தான், புலிகேசி. ஜெயஸ்ரீ இவனை அடையத் துடிக்கிறாள். ஒருவேளை, அவந்திகா தான் மகேந்திரனைக் காதலிப்பதாக அவனிடம் கூறாமல் இருந்திருந்தால், ஜெயஸ்ரீக்கு ஆறுதல் மொழிகளைப் பதிலாக எழுதியிருப்பானோ என்னவோ. ஆனால் தான் அடையத் துடிக்கும் பேரழகி அவந்திகா மகேந்திரனிடம் உயிரை வைத்திருக்கிறேன் என்று கூறியிருந்தது அவனது ஆக்ரோஷத்தைக் கிளப்பி இருந்தது. பல்லவத்தைச் சேர்ந்தவர்களின் மேல் துவேஷத்தைக் கொள்ளச்

செய்தது. இளவரசி ஜெயஸ்ரீயை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்கிற வெறி கிளம்ப, பாரவியைத் திரும்பி நோக்கினான்.

"பாரவி! பல்லவ இளவரசி ஜெயஸ்ரீ காதல் மடல் ஒன்றை அனுப்பி இருக்கிறாள். அவளுக்குப் பதில் அளிக்கப் போகிறேன். நான் கூறுவதைச் சுவடியில் பதிவு செய்!" என்று கூற, பாரவி சுவடி எழுத்தாணியுடன் தயாராக அமர்ந்தான்.

"பிரிய இளவரசி ஸ்ரீஜெய பல்லவி,

உனது மடல் கிடைக்கப் பெற்றேன். அன்றைய களரியில் நிகழ்ந்த சம்பவத்தை நீ இன்னும் மறக்கவில்லை என்பது தெரிகிறது. என்னையே நீ நினைத்துக் கொண்டிருப்பதும் புரிகிறது. நியாயம்தான். உன்னைப் போன்ற இளவரசிகளுக்கு, என்னைப் போன்ற அரசர்களைக் கண்டவுடன் காதல் பிறப்பது இயற்கையே. ஒவ்வொரு இளவரசியும் தனது கணவன் மன்னன், மாவீரன், கம்பீரன், மன்மதன் என்று பிறரால் அழைக்கப்படுவதை விரும்புவதும் இயற்கைதான். ஆனால் என்னைப் போன்று மாவீர மன்னர்களுக்கும் சில ஆசைகள் உண்டு அல்லவா? எனக்குப் பக்கலில் பட்டத்து அரசியாக அமர்வதற்கு எனது தாய்மாமன் மகள் சாருபாலாவை தேர்ந்தெடுத்திருக்கிறேன். பேரழகி அல்ல. ஆனால் அவள் நான் மன்னனாக வேண்டும் என்பதற்காகத் தனது தந்தையிடம் கூறி எனக்கு உதவியாகப் படைகளை அனுப்புவதற்குக் காரணமாகத் திகழ்ந்தாள். அவளே பட்டத்து அரசியாக எனது வலப்புறம் அமர உள்ளாள். எனது இடப்புறத்தில் ஒரு இடம் உண்டு. அதனை உனக்கு அளிக்கலாம் என்றால், உலகிலேயே பேரழகியான சைந்தவ இளவரசி அவந்திகாவின் மீது மையல் கொண்டுவிட்டேன். அவளை எனது மற்றொரு அரசியாக இடது பக்கலில் அமர்த்தத் தீர்மானித்திருக்கிறேன். எனக்கு இருபக்கமும்

அமர்வதற்கு அரசிகள் தயாராக இருக்கும் நிலையில் உனது காதலைத் தெரிவித்து ஓலை அனுப்பியிருக்கிறாய். உனது காதலை ஏற்றால் உன்னை எங்கே அமர்த்துவது..? தசரதன் கோசலையை வலப்புறமும், கைகேயியை இடப்புறமும் அமர்த்தினான். அவனது பின்புறம் சுமித்திரையை அமர்த்தியிருந்தான். அது போன்று உன்னை எனது பின்பாகத்தான் அமர்த்த முடியும். அரசியைப் பின்புறம் அமர்த்த வாதாபியின் ராஜநியதிகள் அனுமதிக்கவில்லை. எனவே ஒரே ஒரு வாய்ப்புதான் உள்ளது. எனது அந்தப்புரத்தில் எனது பிரிய தாசியாக, நீ தங்குவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. வேண்டுமென்றால், உன்னைத் தலைமை தாசியாக நியமிக்கிறேன். உனக்கு விருப்பம் இருந்தால், புறப்பட்டு வா. எனது அந்தப்புரத்தில் தலைமை தாசியாக நீ சாருபாலாவுக்கும், அவந்திகாவுக்கும் ஊழியம் செய்து கொண்டு இருக்கலாம். சமயங்களில் எனக்கும் ஊழியம் செய்யலாம். எனவே, என்னைச் சேரத் துடிக்கும் உனது இதயத்திற்கு நான் தடையாக இருக்கப் போவதில்லை. நீதான் முடிவு செய்ய வேண்டும்.

வாதாபி மன்னன் புலிகேசி."

பாரவி பதைபதைத்தான். இப்படி ஒரு ஓலையைப் பல்லவ இளவரசிக்கு அனுப்பினால், மகேந்திரன் எப்படிப் பொறுப்பான்?

"வேண்டாம் இறையா! ஒரு இளவரசியை அவமானப்படுத்தாதே. உன்னைக் கணவனாக வரித்துவிட்டேன். வேறு ஒருவரையும் மணக்க முடியாது. என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தன்னையே உனக்கு அர்ப்பணம் செய்து எழுதியிருக்கிறாள். அப்படிப் பட்டவளுக்கு இம்மாதிரி பதிலை அனுப்பினால் நொறுங்கிப் போவாள். அவளது உள்ளத்தை நீ மதிப்பாய் என்றுதானே உனக்கு அதனைத் திறந்து காட்டுகிறாள். உனக்கு அவளைப் பிடிக்கவில்லை என்றால் கூட,

உன்னை ஏற்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். உனக்கு நல்வாழ்வு அமையட்டும் என்பதோடு நிறுத்திக்கொள். என்னுடைய தாசியாக இரு என்று ஒரு இளவரசியைக் கூறுவது மிகவும் கொடுமையான சொல்.." — பாரவி சுவடியில் எழுதுவதை நிறுத்திவிட்டு, புலிகேசிக்கு அறிவுரை கூற, அவனை வெறித்து நோக்கினான், புலிகேசி.

"நீ இறையாவின் நண்பன் தாமோதரா இல்லை. புலிகேசியின் அரசக் கவிஞன் பாரவி. அதனால்தான் உன்னைக் கொண்டு ஜெயஸ்ரீக்குப் பதில் அளிக்கிறேன்.." என்றவன் தனது கையை நீட்ட, மறுபேச்சின்றி, பாரவி தான் எழுதிய சுவடியைப் புலிகேசியிடம் நீட்டினான். தனது சுவடியை, ஜெயஸ்ரீயின் பட்டோலையிலேயே சுருட்டி வைத்து அலட்சியமாக வந்திருந்த தூதுவரிடம் நீட்டினான்.

"உங்கள் இளவரசியிடம் இதனைக் கொடுத்துவிடு. அவளுக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துவிடு!" என்றவன் அந்தத் தூதன் அகலும் வரை காத்திருந்தான்.

பிறகு அவன் திரும்பிப் பாரவியை நோக்கிய போது அதில் பிரதிபலித்த வெறுப்பைக் கண்டான் பாரவி. "அவந்திகா பத்திரம்.." — என்று கிசுகிசுத்தக் குரலில் கூறிவிட்டு ஹர்ஷனை சந்திக்கப் போர்க்களத்திற்குப் புறப்பட்டான், புலிகேசி

இவனை இனியும் எப்படிச் சமாளிக்கப் போகின்றோம் என்கிற குழப்பத்துடன் ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்தான், பாரவி.

# 31. வர்மகேதுவின் அடுத்த பலி

சூரிய உதயத்திற்குப் பிறகு நாம் மூன்றாம் மதிமலை என்னும் சந்திரகிரிக்குச் சென்று அதன் வடக்கே உள்ள சிம்மகிரியில் களப்பிரர்கள் மறைத்திருக்கும் பொக்கிஷங் களைத் தேடிக் கண்டு பிடிப்போம். — மகேந்திரன் உத்தரவிட, காணாமல் போன அத்திமலைத்தேவனின் பிரதிமை விரைவில் கிடைத்துவிடும். அதனை அத்திமலையானின் ஆலயத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்ததும், அனைத்துப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என்கிற ஒருவித நிம்மதியுடனும், எதிர்பார்ப்புகளுடனும் அனைவரும் உறங்கச் சென்றுவிட்டனர்.

ஆனால் —

பீமவர்மனுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. பல வருடங்களுக்குப் பின்னர் அரண்மனை பஞ்சணையில் படுத்திருந்தது உறுத்த, எழுந்து தனது அறையிலேயே இங்கும் அங்குமாக உலவினான். சமணத் துறவியாக இருந்த போது மனநிம்மதியுடன் இருந்தான் என்று கூற முடியாது. தனது குடும்பம், மனிதர்கள், அரண்மனை வாழ்க்கை அனைத்தையும் நினைத்து ஏங்கிக் கொண்டு தான் இருந்தான். ஆனால் அரண்மனையில் இருந்த போது அவனுள் எழுந்திருந்த அந்த எதிர்மறை எண்ணங்கள் அறவே தோன்றாமல் இருந்தது. அதற்காகவே துறவறத்தைத் தனக்கு ஒரு காப்பாகக் கருதினான். வெகு காலத்திற்குப் பிறகு ராஜவர்மனையும், அரச குடும்பத்தினரையும், அரண்மனையையும் கண்ட பிறகு, துறவறத்தைவிட்டு, மீண்டும் லௌகீக வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

ஆனால் இரண்டே நாட்களில் இதோ மீண்டும் எதிர்மறையான எண்ணங்கள் அவனுள் தோன்றி, உறக்கம் வராமல் செய்தன. அன்றிரவே ஏதோ அசம்பாவிதம் நிகழக்கூடும் என்பது போன்று ஒரு எண்ணம் ஏற்பட்டது.

ராஜஸ்ரீ கூறியது போன்று அரண்மனையில் வர்மகேது என்கிற எதிர்மறை எண்ணங்களைத் தூண்டச்செய்யும் குளிகன் ஒன்று புதைக்கப்பட்டிருப்பதால் இந்த எண்ணங்கள் தோன்றுகின்றனவா? இதை அலட்சியமாக மூடநம்பிக்கை என்று ஒரே சொல்லில் கூறி நிராகரித்துவிடலாம். ஆனால் குடும்பத்தில் இரண்டு தற்கொலைகள், துர்மரணங்கள் எல்லாம் ஏற்பட்டிருப்பதை மூடநம்பிக்கை என்று ஒதுக்கிவிட முடியாதே.

தந்தையார் சிம்மவர்மனின் மரணமே இயற்கை இல்லை என்று ஜோதிடர் கூறியதாக ராஜவர்மன் சொன்னது பீமவர்மனுக்கு உறுத்தியது. தொடர்ந்து யோசித்தபடி பீமவர்மன் தனது அறையிலிருந்து சாளரத்தின் வழியாக நந்தவனத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ராஜஸ்ரீயும் தனது அறையில் யோசித்தபடிதான் படுத்துக் கிடந்தாள். ராஜவர்மன் காலையில் மகேந்திரனுடன் சந்திரகிரிக்குச் செல்ல வேண்டும் என்பதற்காகப் பொழுதோடு உறங்கச் சென்றிருந்தான். முன்பு போல அவனது உடலில் ,வலு இல்லை. முதுமை அவனை மெல்ல அரவணைத்துக் கொண்டிருந்தது.

சிம்மவிஷ்ணுவின் மனைவி புவனமாதேவி, ராஜவர்மனின் பெற்றோர் விஷ்ணுவர்மன் மற்றும் தாய் காஞ்சனை அனைவருமே காலமாகிவிட்ட நிலையில் இப்போது குடும்பப் பெரியவனாக ராஜவர்மன்தான் மகேந்திரனை வழிநடத்தி வந்தான். ஜெயவர்மன் பற்றிய செய்தி கிடைக்காத நிலையில் ஆறு இளவரசர்கள் மற்றும்

ஒரு இளவரசியைக் கொண்டிருந்த பல்லவ அரச குடும்பத்தில், அவனிசிம்மனும், ராஜவர்மனும் மட்டுமே எஞ்சியிருந்தனர். அவனிசிம்மன் இறந்துவிட்டதும், பழைய தலைமுறையின் ஒரே பிரதிநிதியாக ராஜவர்மன் மட்டுமே இருந்தான். நல்லவேளையாக, இப்போது பீமவர்மன் மீண்டும் வந்துவிட்டிருந்தான். ஜெயவர்மனும் இதுபோல் திரும்பி வந்து, மீண்டும் பல்லவ அரச குடும்பத்தில் கலகலப்பும் ஆனந்தமும் தோன்றக்கூடாதா?

'அத்திமலைத்தேவா! நாளையே சிம்மகிரிக்கு வந்து உன்னைத் தேடிக் கண்டுபிடித்து, உனது பிரதிமையை அத்திமலையின் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்கிறோம். எங்கள் குடும்பத்திற்கும், பல்லவ நாட்டிற்கும் கேடுகள் ஏதும் விளையாமல் காத்தருள்வாய்.'

ராஜசிம்மனின் முதுகினை வெறித்தபடி தனக்குள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவனது முதுகையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அவர்களது திருமணமான புதிதில் பள்ளியறையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வந்தது.

பல்லவக் குடும்பத்தில் நிகழ்ந்த சோகங்களையும், விபரீதங்களையும் கருத்தினில் கொண்டு, சிற்றின்பக் கேளிக்கைகளை அறவே ஒதுக்கி இருந்தனர், ராஜவர்மனும், ராஜஸ்ரீயும். துயரங்களைச் சிறிது சிறிதாகக் குடும்பத்தினர் மறக்க, ஒரு நல்ல நாளில் தங்களது இல்லறத்தைத் தொடங்கினார்கள் ராஜஸ்ரீயும், ராஜவர்மனும்.

அவனது பரந்த மார்பையும், விரிந்த முதுகையும் மாறி மாறிப் பார்த்தாள், ராஜஸ்ரீ.

"என்ன பார்க்கிறாய்?" — வியப்புடன் கேட்டான் ராஜவர்மன்.

"மார்பில் இவ்வளவு வடுக்கள் உள்ளனவே தவிர, முதுகில் ஒரு வடுவையும் காணோமே. அவ்வளவு சுத்த வீரரா நீங்கள்..?" — கேலியாகக் கேட்டிருந்தாள், ராஜஸ்ரீ.

"எங்கள் ஆறு பேருக்குமே, முதுகில் வடு கிடையாது, தெரிந்துகொள்!" — பெருமை பேசினான், ராஜவர்மன்.

"இல்லையே! உங்கள் பிருஷ்டப் பாகத்தில் ஒரு வடு இருக்கிறதே.. நீங்கள் புறமுதுகு இட்டு ஓடியிருக்கிறீர்கள்." கலகலவென்று சிரித்தாள், ராஜஸ்ரீ.

"அது போர் வடு இல்லை. சிறு வயதில் நானும் ஜெய வர்மனும், போர்வாளை வைத்துக் கொண்டு நாடகம் அரங்கேற்றினோம். விளையாடிய போது ஏற்பட்ட விபத்து.." ரோஷத்துடன் ராஜவர்மன் கூற இருவரும் சிரித்துக் கொண்டே இருந்தனர்.

அவனது பரந்த முதுகை வெறித்தபடி அவள் கிடந்தாள். இவளது கணவன் ராஜவர்மன்தான் எவ்வளவு இளகிய மனம் படைத்தவன். ஜெயசிம்மன் மற்றும் அவனிசிம்மன் இவளை ஏற்க முடியாது என்று அறிவித்த போது, தான் அவளைத் திருமணம் செய்து கொள்வதாக முன்வந்து இதுநாள் வரை அவள் மீது தூய அன்பைச் செலுத்தி வந்திருக்கிறான், ராஜவர்மன். ஜெயவர்மனுக்கு நெருங்கியவனாக இருந்தாலும், அவனிசிம்மனுக்கும், பின்னர் மகேந்திரனுக்கும் விசுவாசமாகப் பணியாற்றியிருக்கிறான். பல்லவத்திற்கு எதிராக எங்கே சதி நடப்பினும், அங்கே தோன்றி, சதியாளர்களை அடக்கிவிடுவான். பல்வேறு போர்களில் பெரும் பங்காற்றி இருந்தான். போரில் தான் பெற்ற வடுக்களைப் பற்றிப் பெருமை பேசியதில்லை. வடுக்கள் அற்ற அந்த முதுகைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவனிசிம்மனை சிம்மம், தானவர்மனை புலி, ஜெயவர்மனை குதிரை, ராஜ வர்மனை யானை, பீமவர்மனை சிறுத்தை மற்றும் விஜய வர்மனை கரடி என்று சிறுவயதில் சகோதரர்கள் நாங்கள் ஒருவரையொருவர் பெயரிட்டு அழைத்துக்கொள்வோம் என்று ராஜவர்மன் கூறியிருந்தான்.

*"மற்றவர்கள் எப்படியோ, நீங்கள் யானையைப் போன்று உயரமாகவும், காத்ரமாவும் இருக்கின்றீர். தங்களை யானை என்று அழைப்பது சாலப் பொருந்தும்."* — ராஜஸ்ரீ சிரித்தாள்.

*"உனது கேலியினால் இந்த யானைக்கு மதம் பிடித்தால் அதற்கு நீயே பொறுப்பு!"* — பொய்க் கோபத்துடன் அவளை நோக்கினான், ராஜவர்மன்.

*"மதம் பிடித்த யானையை அடக்க, காதல் என்னும் அங்குசத்தை நான் வைத்திருக்கிறேன்!"* — அவனை மிரட்டும் தொனியில் ராஜஸ்ரீ கூறினாள்.

*"யானை நன்றாகத் தூங்கட்டும். நாளை சந்திரகிரிக்குப் பயணம் போக இருக்கிறது!"* தனக்குள் கூறியபடி அவனது அடிமுதுகை தற்செயலாக நோக்க, அவனது பிருஷ்டத்தில் ஜெயவர்மன் வீசிய வாளால் ஏற்பட்ட காயத்தினைத் தற்செயலாக நோக்கினாள்.

*"யானையின் பிருஷ்டத்தைத் தவிர வேறு எங்குமே வடுக்கள் இல்லை. வீர யானைதான்!"* என்று கூறியவளின் சிந்தையில் ஒரு தீப்பொறி பறந்து ஒளியை உண்டாக்கியது. யானை பிருஷ்டம் என்கிற சொல் அவளுள் ஒரு வேகத்தை ஏற்படுத்தியது. இந்தப் பெயரை எங்கோ கேள்விப்பட்டிருக்கிறாளே. ஆம்! அத்தி மலையின் பின்பாக வடமேற்கில் கஜபிருஷ்டம் என்கிற கிராமம் இருக்கிறதல்லவா! கஜபிருஷ்டம் புகழ் பெற்ற பகுதிதான். ஆனைமலையின் பின்பாகத்தில் இருப்பதால் அப்பகுதி கஜபிருஷ்டம் என்று பெயர் பெற்றது. ஆனால் இப்போது ஏன் அந்தப் பகுதியை பற்றி இவள் நினைக்க வேண்டும். வேறு ஏதோ தகவல் ராஜஸ்ரீயின் சிந்தையை உறுத்தியது. யோசித்துக் கொண்டே இருந்தாள்.

யோசித்துக் கிடந்தவள் செவிகளில் திடீரென்று சௌரப பண்டிதரின் குரல் ஒலித்தது. பல்லவக் குடும்பத்திற்கு எதிராக வர்மகேது குளிகத்தைப் புதைத்து,

குடும்பத்தைச் சீரழித்தது யார் என்று கேட்கப்பட்ட போது, சிம்மவர்மனின் அறையில், அவர் சோழிகளை உருட்டி தான் கண்ட காட்சியை வருணித்தது நினைவுக்கு வந்தது.

ஒரு யானை நிற்பது தெரிகிறது. அதன் பின்பாகம் மட்டும் புலப்படுகிறது. யானையின் பின்பாக ஒரு ஆலயம் தெரிகிறது. முதல் வியூகத்தின் ஆலயம். எதிரே ஒரு குளம் தெரிகிறது. குளத்தில் ஒரு தங்க மீன் நீந்திக் கொண்டிருக்கிறது.

சௌரப பண்டிதர் கூறிய அந்த யானையின் பின்பாகம் கஜபிருஷ்டம் பகுதியாக இருக்கலாம் அல்லவா. அங்கே முதல் வியூக ஆலயம் ஒன்று உள்ளதாம். முதல் வியூகம் என்றால்? யோசித்தபடி கிடந்தவள், மெதுவாக ராஜவர்மனின் உறக்கத்தைக் கலைக்காமல், எழுந்து அறையைவிட்டு வெளியே வந்தாள்.

அதே சமயம், பீமவர்மனும் தனது அறையைவிட்டு வெளியே வந்து உப்பரிகையை நோக்கிச் சென்றான். பீமவர்மன் உப்பரிகைக்குச் செல்வதைக் கண்ட ராஜஸ்ரீ வியப்புடன் அவனைப் பின்தொடர்ந்தாள்.

"பீமவர்மரே! உறக்கம் வரவில்லையா?" — உப்பரிகையில் திடீரென்று குரல் கேட்கத் திடுக்கிட்டுத் திரும்பினான், பீமவர்மன்.

"இளவரசியா? எனக்கு உறக்கம் வரவில்லை. மீண்டும் பழைய நினைவுகள். நவரத்ன பல்லவி, ஜெயவர்மன் மற்றும் விஜயவர்மனை பற்றிய நினைவுகள்.." — சோகத்துடன் ஒலித்தான், பீமவர்மன்.

"பழையதை மறப்போம். புதிய வாழ்க்கையைத் துவங்குவோம். நாளை சந்திரகிரிக்குச் சென்று அத்தி மலையானை அழைத்து வந்தவுடன், நமது குடும்ப நிலை சீரடையும் பாருங்களேன்!" — பீமவர்மனுக்கு ஆறுதல் கூற முயன்றாள், ராஜஸ்ரீ.

"இல்லை இளவரசி! இன்று எனது மனம் முன்பைவிட அதிகம் கலங்குகிறது. ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்று உள்ளுணர்வு எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறது.." — பீமவர்மனின் குரல் குழப்பத்துடன் ஒலிக்க, அவன் உப்பரிகை கைப்பிடி சுவரின் அருகே சென்று நின்றான், முக்கூடலின் குளிர் காற்று இதமாக வீச, அந்தக் காற்றை உள்வாங்கியபடி.

"எல்லாம் சரியாகிவிடும், கொழுந்தனாரே!" ராஜஸ்ரீ கூறியபடி அவனை நோக்கி நடந்து சென்று, அவன் அருகே நின்றாள்.

"நீங்கள் உறங்கவில்லையா, இளவரசி?" — பீமவர்மன் கேட்டான்.

"எனக்கும் ஏதேதோ நினைவுகள். நீங்கள் மீண்டும் வந்தது போல் காணாமல் போன ஜெயவர்மரும் திரும்பி வரக்கூடாதா என்று வேண்டிக் கொண்டிருந்தேன். உறக்கம் பிடிக்கவில்லை. ஆனால் உறங்காமல் இருந்ததும் ஒருவிதத்தில் நல்லதுதான். சௌரப பண்டிதர் கூறிய செய்தியில் ஒரு விவரத்தை அறிந்து கொண்டேன். யானையின் பின்பாகம் தெரிந்தது என்று அவர் கூறினார் அல்லவா? யானையின் பின்பாகம் என்றால் கஜபிருஷ்டம் என்று சமஸ்கிருதத்தில் கூறுவார்கள். அந்தப் பெயரில் அத்திமலையின் வடமேற்கே ஒரு பகுதி இருக்கிறது.." ராஜஸ்ரீ கூறினாள்.

"நானும் அறிந்திருக்கிறேன். வெகு காலத்திற்கு முன்பாக அங்கே ஒரு ஆலயத்திற்குச் சென்றிருக்கிறேன்." — பீமவர்மன் கூறினான்.

"கஜபிருஷ்டம் கிராமத்தில் முதல் வியூகத்தின் ஆலயம் என்றாரே, சௌரப பண்டிதர். முதல் வியூகம் என்றால்?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"தெரியவில்லை. ஆனால் நமது பழைய தலைமை அமைச்சர் மச்சவாசுதேவருக்குத் தெரிந்திருக்கலாம்..

அவருடைய பிறந்த கிராமம் அதுவே. ஒருமுறை என்னைக் கஜபிருஷ்டம் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அவரது குடும்ப ஆலயத்தில் புதிதாகக் கொடிமரம் ஒன்றைச் செய்வதற்காகப் பணியைத் துவக்க நினைத்திருந்தார். அரச குடும்பத்தில் ஒருவர் பணிகளைத் துவக்கினால் நன்றாக இருக்கும் என்று கூறி என்னை அழைத்துச் சென்றார்." — பீமவர்மன் கூறினான்.

"மச்சவாசுதேவர்தான் ஓய்வு பெற்று இப்போது படுத்த படுக்கையாக இருக்கிறாராம். அவரைச் சென்று என்ன கேட்பது..?" — ராஜஸ்ரீ அலுத்துக் கொண்டாள்.

"நல்ல திறமையான தலைவர். எனது தந்தை சிம்மவர்ம பல்லவனுக்கு மிகவும் பிடித்தவர். அவரது அரசியல் வியூகங்கள் உண்மையிலேயே நல்ல பலனளித்தன. அவர் எனது தந்தைக்கு வலது கரமாக இருந்தார். திக்விஜயம் செய்து போர்களில் எனது தந்தை ஈடுபட்டிருக்க, பல்லவத்தைச் சிறப்பான முறையில் மச்சவாசுதேவர் ஆட்சி செய்தார். எனது தந்தை அவரை வாய் ஓயாமல் பாராட்டிக் கொண்டிருப்பார். அவரும் அடக்கமாக, 'எனது அரசியல் வியூகங்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமே, எனது முதல் வியூக நாராயணன்' என்பார்." — பீமவர்மன் கூறியபடி ராஜஸ்ரீயை நோக்க, அவளது முகபாவத்தைக் கண்டு திடுக்கிட்டான்..

"இளவரசி! ஏன் உங்கள் முகம் ஒரு மாதிரியாக உள்ளது?" — பீமவர்மன் கேட்க, அவனை யோசனை யுடன் நோக்கினாள், ராஜஸ்ரீ.

"இப்போது என்ன சொன்னீர்கள்?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"தனது அரசியல் வியூகங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் தனது முதல் வியூக நாராயணன் என்று மச்சதேவர் கூறுவார் என்றேன்.." — பீமவர்மனின் குரல் ஆச்சரியத்துடன் ஒலித்தது.

"முதல் வியூகம் என்றால்..?" — ராஜஸ்ரீ கேட்டாள்.

"இளவரசி! நான் சமணத் துறவியாகச் சந்திரகிரி மலையின் மீது இருந்தேன். அங்கே ஆதி தேவர் என்கிற சமண முதல் தீர்த்தங்கரரின் பசடியும், அருகில் ஆதி அரங்கம் என்கிற ரங்கநாத ஆலயம் ஒன்றும் உள்ளது. அங்கே எனக்கு வைணவ நண்பர்கள் அதிகம். அவர்களுடன் தர்க்கம் கூடப் புரிந்திருக்கிறேன். வைணவர்கள் நாராயணனை நான்கு வியூகங்களில் நிலை இருப்பவன் என்று கூறுகிறார்கள். முதல் வியூகத்தில் வாசுதேவனாகவும், இரண்டாவது வியூகத்தில் சங்கர்ஷன் என்கிற நிலையிலும், மூன்றாவது வியூகத்தில் அனிருத்தனாகவும், நான்காவது வியூகத்தில் பிரதியுக்னனாகவும் நிலையிருக்கிறான் என்று கூறக் கேட்டிருக்கிறேன்."

"நான்கு வியூகங்களில் முதல் வியூகம் வாசுதேவன் என்றால், முன்னாள் தலைமை அமைச்சரின் பெயரும் அதுதானே!" — ராஜஸ்ரீ திகைத்தாள்.

"ஆம் இளவரசி! இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. கஜபிருஷ்டம் பகுதியில் பர வாசுதேவன் கோயில் ஒன்று உள்ளது. அங்குதான் கொடிமரப் பணிகளைத் துவக்க நான் சென்றிருந்தேன்."

"ஆலயத்தின் முன்பாக ஒரு குளம் இருக்கிறதா?" — ராஜஸ்ரீ தனது சேலை நுனியைக் கை விரலில் சுற்றுவதும், விடுப்பதுமாகப் பரபரப்புடன் அவனைப் பார்த்தாள்.

யோசனை செய்தான், பீமவர்மன். "ஆம் இருந்தது. அதன் கரையில்தான் மச்சவாசுதேவரின் மாளிகை இருந்தது. கொடிமரப் பணிகளுக்கு அங்குரார்ப்பணம் நடைபெற்றதும் என்னைத் தனது மாளிகைக்கு அழைத்துச் சென்று பாலும் கனிகளும் கொடுத்தார். ஆம்..! அங்கே ஆலயத்தின் புஷ்கரணி ஒன்று இருந்தது."

பீமவர்மன் கூறியதும் சௌரப பண்டிதர் கூறியதை யோசித்துப் பார்த்தாள், ராஜஸ்ரீ.

ஒரு யானை நிற்பது தெரிகிறது. அதன் பின்பாகம் மட்டும் புலப்படுகிறது. யானையின் பின்பாக ஒரு ஆலயம் தெரிகிறது. முதல் வியூகத்தின் ஆலயம். எதிரே ஒரு குளம் தெரிகிறது. குளத்தில் ஒரு தங்க மீன் நீந்திக் கொண்டிருக்கிறது.

கஜபிருஷ்டம். அதன் பின்பாக வாசுதேவனின் ஆலயம். அதன் எதிரே ஒரு குளம். குளத்தில் ஒரு தங்க மீன் நீந்திக் கொண்டிருக்கிறது. குளத்தில் தங்க மீன் என்றால்..?

முன்னாள் தலைமை அமைச்சரின் மாளிகை அதன் கரையில் இருக்கிறது.. பல்லவ அரச குடும்பத்திற்கு எதிராக வினைகளை விதைத்த அந்தத் தங்க மீன்..?

யோசித்தபடி நடந்தவளுக்குத் திடீரென ஒன்று உறைத்தது. வாசுதேவரின் பெயரே மச்சவாசுதேவர் தானே. மச்சம் என்றால் மீன்தானே. அட..! இதையேன் இவர்கள் யோசித்துப் பார்க்கவில்லை. பல்லவ அரச குடும்பத்திற்குக் கேடு நினைத்தது பல்லவ தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரா?

நவரத்ன பல்லவியின் தற்கொலை தொடங்கி, ஜெயவர்மன் காணாமல் போனது வரை அனைத்துக்கும் மச்சவாசுதேவரா காரணம்?

"பீமவர்மரே! சௌரப பண்டிதர் வினை விதைத்தவர் என்று கூறிய அந்த மனிதர் வேறு யாருமல்ல; முன்னாள் தலைமை அமைச்சர் மச்சவாசுதேவர்தான்!" — ராஜஸ்ரீ கூறியதும் பீமவர்மன் அரண்டு போனான்.

"இளவரசி! உங்களது கூற்று உண்மையாக இருக்கக் கூடும். ஏனென்றால், பலமுறை அவர் நமது அரண்மனை நந்தவனத்தில் உலாவுவதைக் கவனித்திருக்கிறேன். குறிப்பாக அந்தப் பஞ்சகல்யாண மரங்களைச் சுற்றியே வட்டமிடுவார்!" — பீமவர்மன் கூறினான்.

“பஞ்சகல்யாண மரங்களா? நமது அரண்மனை நந்தவனத்தில் அந்தப் பெயரில் மரங்கள் இருக்கின்றனவா?” — ராஜஸ்ரீ ஆச்சரியப்பட்டாள்.

“அழகுக்காக நமது அரண்மனையின் முன்பாக அமைக்கப்பட்டிருக்கிறதே, ஐந்து மரங்கள். அதைத்தான் அவர் பஞ்சகல்யாண மரங்கள் என்று அழைப்பார். உங்கள் திருமணத்தன்று எங்கள் நான்கு சகோதரர் களையும், நவரத்ன பல்லவியையும் மரம் நட வைத்தாரே. திருமண நாளில் விதைக்கப்பட்டதால் அந்த மரங்களைப் பஞ்சகல்யாண மரங்கள் என்று அவர் அழைப்பது வழக்கம்..” — பீமவர்மன் கூற, சடாரென்று உப்பரிகையி லிருந்து திரும்பி மைய அரண்மனைக்கு முன்பாக இருந்த அந்தப் பஞ்சகல்யாண மரங்களையே உறுத்துப் பார்த்தாள்.

அங்கு நிற்கும் ஐந்து மரங்களில் ஏதோ ஒன்றின் கீழ்தான் வர்மகேதுவை மச்சவாசுதேவர் புதைத்திருக்க வேண்டும்.. பல்லவ அரச குடும்ப அங்கத்தினர்களின் மனத்தில், எதற்காகத் தற்கொலை எண்ணத்தைத் தூண்ட வேண்டும்? எதற்காக அரச போகத்தை விட்டுத் துறவியாகத் திரிய வைக்க வேண்டும்? அரச குடும்பத்தின் மீது அவருக்கு என்ன வன்மம்?

பஞ்சகல்யாண மரங்களையே ராஜஸ்ரீ வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்க, அவளருகே வந்து நின்றான், பீமவர்மன்.

“அந்த மரங்களின் கீழேதான் வர்மகேது புதைக்கப் பட்டிருக்க வேண்டும். இவற்றை விதைத்த மறுநாளே நமது அரச குடும்பத்தில் விபரீதங்கள் நடந்தேறத் துவங்கின. நவரத்ன பல்லவியின் தற்கொலை, விஜய வர்மன் கொலை, ஜெயவர்மன் காணாமல் போனது, சாயாதேவி தற்கொலை, எனது தந்தை மன்னர் சிம்ம வர்மரின் கொலை, நான் துறவியாகப் போனது, ‘அந்த ஐந்து மரங்களையும் உடனே வெட்டிவிட வேண்டும்,

இளவரசி! இனியும் நமது குடும்பத்தில் அகால மரணங்கள் நிகழக் கூடாது.. எனக்கு ஒரு கேள்வி தோன்றுகிறது. சௌரப பண்டிதர், தான் கண்ட காட்சியாகச் சிலவற்றைக் கூறினார் அல்லவா..? இரு கைகள், எனது தந்தையின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தி அவரது சுவாசத்தை நிறுத்துகிறது என்பதைக் கொலையாக ஒப்புக் கொண்டாலும், ஒரு பெண்ணின் உடல் மரத்தில் தூக்கில் தொங்குவதாகவும், ஒரு நிர்வாண மனிதன் தேகம் முழுவதும் எண்ணையைப் பூசிக்கொண்டு அரண்மனையினுள் எட்டிப் பார்ப்பது போன்றும் தான் காட்சியைக் கண்டதாகச் சௌரப பண்டிதர் கூறியிருந்தாரே. அதற்கு என்ன பொருள்..?" — பீமவர்மன் கேட்டான்.

"புரியவில்லை பீமவர்மரே! ஆனால் இவை நடக்க இருக்கும் காட்சிகள். விரைவில் இவை நடைபெறும். எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாக வர்மகேது நீக்கப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மைகள் குடும்பத்திற்கு விளையும் என்கிற உறுதிமொழியைத் தந்தார், பண்டிதர்." — ராஜஸ்ரீ கூறினாள்.

"என்றால், நாளைக் காலையே மரங்களை வெட்டி வீழ்த்துவோம். கீழே உள்ள வர்மகேது பரப்பி வரும் எதிர்மறை எண்ணங்களை நீக்குவோம். அப்படிச் செய்தவுடன்.." என்று பேசிக்கொண்டிருந்தவன் திடீரென்று அமைதி அடைய, அவனை வியப்புடன் நோக்கினாள் ராஜஸ்ரீ. நடுநிசி இருளில் அவனது முகம் தெளிவாகப் புலப்படாவிட்டாலும், அதிர்ச்சியினால் அவனது சுவாசம் விட்டுவிட்டு வெளிவருவதை உணர்ந்தாள், ராஜஸ்ரீ.

"ஏன் பேசுவதை நிறுத்திவிட்டீர்கள், பீமவர்மரே?"

"இளவரசி! நிர்வாணமாக ஒரு மனிதன், அரண்மனையில் எட்டிப்பார்க்கிறான் என்று பண்டிதர் குறிப்பிட்ட மனிதன் நான்தான். திகம்பரச் சமணத்

துறவியாக இருந்த நான், செங்கழுநீர் சத்திரத்தில் உடல் முழுவதும் தைலத்தைப் பூசிக்கொண்டு அமர்ந்திருந்த போதுதான் ராஜவர்மன் வந்து என்னைக் கண்டான். அரண்மனை வரை நான் திகம்பரத் துறவியாகத்தான் இருந்தேன். அரண்மனைக்குள் எட்டிப்பார்த்தேன். பிறகே, மகேந்திரனின் நண்பன் தொண்டரையன் எனக்கு ஒரு வேட்டியை எடுத்து வந்தான்..” — பீமவர்மன் கூற, ராஜஸ்ரீயின் முகம் வியர்த்தது.

“அப்படியானால், சௌரப பண்டிதரின் கூற்று மெய்யானது. ஆனால் ஒரு மரத்தில் ஒரு பெண்ணின் உடல் தொங்குவதாகக் கூறினாரே..?” — அவளது குரல் நடுங்கியது.

“அது பலிக்கக் கூடாது என்றே வேண்டுவோம். நாம் சந்திரகிரிக்குப் புறப்படுவதற்கு முன்பாக, கஜபிருஷ்டம் சென்று மச்சவாசுதேவரிடம் விசாரணை செய்வது நலம்!” — பீமவர்மன் கூறினான்.

“விடியட்டும்! நான் ராஜவர்மரிடம் பேசி மகேந்திரனிடம் இந்தக் கோரிக்கையை வைக்கச் சொல்கிறேன்.” — ராஜஸ்ரீ கூறினாள்.

இருவரும் மௌனமாக நடுநிசி இருளில் பஞ்ச கல்யாண மரங்களையே வெறித்துக் கொண்டிருந்தனர். நிலவில்லா வானம், மின்னும் வைரங்கள் பதிக்கப் பட்டிருந்த விலைமதிப்பில்லா சேலையை அணிந்து இளவரசியைப் போன்று கர்வத்துடன் எங்கும் வியா பித்திருக்க, ஏழை பூமி தனது எளிமையான கரிய சேலையை இழுத்துப் போர்த்தியிருந்தது. அந்தச் சேலையை ஒட்டுபோட்டுத் தைத்தது போன்று அரண் மனையின் புல்வெளிகள் தெரிந்தன. நந்தவனத்தின் உயர்ந்த தீபஸ்தம்பத்தின் உச்சியில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீபக் கப்பரை, உக்கிரமாகப் பெய்யும் பனிமழைக்குப் பணிந்து, சிறிது சிறிதாக அடங்கிக் கொண்டிருந்தது. அதன் மங்கிய ஒளி பஞ்சகல்யாண

மரங்கள் வரை பாயவில்லை. என்றாலும், ராஜஸ்ரீயின் கூரிய கண்கள், பஞ்சகல்யாண மரங்களின் மையத்தில் நின்ற விருட்சத்தின் கிளையில் ஏதோ ஒன்று அசைவதைக் கவனித்தாள்.

"பீமவர்மரே! மையத்தில் உள்ள பஞ்சகல்யாண மரங்களில் ஏதோ ஒன்று அசைகிறதே!" — ராஜஸ்ரீ கூற, அவனும் அந்தப் பக்கமாக உறுத்து நோக்கினான்.

"இரவுப் பறவை ஏதாவது அமர்ந்திருக்கும்.." என்று கூறியபடி பார்வையை இன்னும் கூர்மையாக்கினான்.

பீமவர்மன் நன்றாகக் கவனித்துப் பார்த்ததில், மனித உடல் ஒன்று அந்த மரத்தில் ஊசலாடுவது போன்று தோன்றியது.

சற்றே பதற்றத்துடன் இன்னும் பார்வையை அந்தத் திக்கினில் பரவவிட்டான்.

"இளவரசி! அந்த மரத்தில் ஒரு உடல் தூக்கில் தொங்குகிறது!" பீமவர்மன் கூறியதும், ராஜஸ்ரீயின் உடல் சில்லிட்டுப் போனது.

'மரக்கிளை ஒன்றில் ஒரு பெண்ணின் உடல் தூக்கில் தொங்குவதைக் காண்கிறேன்.' சௌரப பண்டிதரின் குரல் அவளது செவிகளில் எதிரொலித்தது.

"பீமவர்மரே! எனக்கு அச்சமாக உள்ளது. ஏதோ அசம்பாவிதம் நடந்துள்ளது.." — ராஜஸ்ரீ உப்பரிகை கைப்பிடி சுவரில் தனது கைகளின் பிடியை இறுக்கினாள்.

அந்த மரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது தனது மகள் ஜெயஸ்ரீயின் பிணம் என்பதை அறிந்தால் ராஜஸ்ரீ அதனை எப்படி எடுத்துக் கொள்வாளோ?

# 32. ஐந்து பறவைகள்

இன்று —

தசகுமாரர்களில் ஒருவனும், மகேந்திர பல்லவனின் நண்பனுமான தொண்டரையனுடன் வாதம் செய்யத் தயாராகிக் கொண்டிருந்தான், பாரவி என்கிற தாமோதரா.

"எச்சரிக்கை பாரவி. அந்த மகேந்திர பல்லவனை அவந்திகா காதலிக்கின்றாள். அவளைக் கைப்பற்று வதற்கே, உன்னை வாதப்போருக்கு அழைக்கின்றான், பல்லவனின் நண்பன். எச்சரிக்கையுடன் செயல்படு.. என்னால் ஹர்ஷனுடன் நிகழும் போரினைத் தவிர்க்க முடியாது. எனவே எச்சரிக்கையுடன் செயல்பட்டு, வாதத்தில் வெல்லப் பார்!" — காட்டத்துடன் கட்டளை யிட்டுவிட்டு, போருக்குப் புறப்பட்டுவிட்டான், புலிகேசி.

"நீங்களும், நானும் புலிகேசியின் பிடியிலிருந்து தப்பிச்செல்வதற்கு நல்ல தருணம் இதுவே. எனவே வாதத்தில் தோல்வியுற்றாலும் பரவாயில்லை. நாம் இங்கிருந்து நழுவுவதைப் பார்ப்போம்." — அவந்திகா கூறினாள்.

"அவசரப்படாதே.. நீ, பாரவி மற்றும் நான் மூவருமே அவனது கண்காணிப்பில் இருக்கிறோம். ஒருவர் தப்பிதமாக நடந்து கொண்டாலும் மூவரின் உயிருக்கும் ஆபத்து என்பதை மறந்துவிடாதே. இந்த மலப்பிரபா மாளிகையைச் சுற்றிலும் கண்களும், செவிகளும் சூழ்ந்திருக்கின்றன. நாம் மூவருமே நோட்டம்விடப் படுகிறோம். நம்மைக் குறித்த அத்தனை தகவல்களும்

போர்க்களத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே நமக்குள் எச்சரிக்கை தேவை!" — சுமனஸா கூறினாள்.

"அப்படியானால் என் கதி..? அந்த மூர்க்கனிடம் சிக்கிச் சின்னாபின்னம் ஆக வேண்டியதுதானா?" — துக்கத்துடன் கேட்டாள், அவந்திகா.

"நான் அப்படிச் சொல்லவில்லை. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஒரு நாடகத்தை நடத்த வேண்டும். அப்போதுதான் நம் மீது நம்பகத்தன்மை இருக்கும். வாதப்போருக்கு முதலில் நீ புறப்படு பாரவி. வாயிலுக்குச் சென்றதும், 'அந்த அடிமையை இழுத்து வாருங்கள்!' என்று உரக்கக் கட்டளையிடு. இரண்டு பணிப்பெண்கள் அவந்திகாவை இழுத்துச் சென்று சிவிகையில் அமர வைக்கட்டும். நீ பாரவியுடன் செல்ல விருப்பப்படாதவளைப் போன்று கூக்குரல் இடு. நான் உங்களை வேவு பார்ப்பதைப் போன்று உங்களைப் பின்தொடர்கிறேன்.." — சுமனஸா கூறினாள்.

"எவ்வளவு நாட்கள்தான் இந்த நாடகத்தை அரங்கேற்றுவது..?" — பாரவி கேட்டான்.

"நம் மீது அவனுக்கு நம்பகத்தன்மை இல்லை. எனவே நம்மை அவன் உளவு பார்க்கிறான். புலிகேசிக்கு எப்போது நம் மீது நம்பகத்தன்மை ஏற்படுகிறதோ அப்போது நாம் தப்பிச் செல்லலாம்." — சுமனஸா கூறினாள்.

"இன்று எப்படியாவது நான் வாதத்தில் வென்று, அவந்திகாவை இழக்காமல் இருக்க வேண்டும். அதற்கு என்ன வழி? தெரியவில்லையே!" புலம்பினான். தனது மேதாவித்தனத்தின் மீது நம்பிக்கை இருந்தாலும், புலிகேசியிடம் இருந்த பயம் பாரவியைப் புலம்ப வைத்தது.

"யாரும் அறியாத ஒரு தந்திரத்தை நான் உனக்குக் கூறுகிறேன். அதனை வைத்து அவனைத் தோற்கடி.

காரணம், இந்தத் தந்திரத்தை இயற்றியது எனது தந்தை. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தைக் கற்ற எனது தந்தை அதனால் ஈர்க்கப்பட்டுப் பஞ்சபட்சி தந்திரம் என்கிற ஒரு நூலை இயற்றினார். ஒரு மன்னன் ஐந்து வகைப் பறவைகளைப் போன்று செயல்பட வேண்டும் என்று அந்த தந்திரம் உரைக்கிறது. அந்த நூலை, முதலாம் புலிகேசி ஆதரித்துத் தனது கொலு மண்டபத்தில் வெளியிட்டான். ஆனால் அதன்பின் அந்த நூல் பிரபல்யம் அடையவில்லை. அநேகமாகப் பல்லவப் புலவனுக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்த தந்திரத்தை நான் உனக்குக் கூறுகிறேன், பாரவி. அதனைப் பற்றிக் கேள். அவன் திணறித் தோல்வியை ஒப்புக்கொள்வான். வாதாபி ராஜாங்கம் அங்கீகரித்த நூலைப் பற்றி நீ கேட்பதால் அவனால் புகழ் அடையாத நூல் என்று கூறவும் முடியாது. அவந்திகாவை கைப்பற்ற நினைக்கும் தொண்டரையனின் முயற்சியை பஞ்சபட்சி தந்திரத்தைக் கொண்டு முறியடி..!" — சுமனஸா கூறினாள்.

"ஆம்..! என்னை மகேந்திர பல்லவனிடம் சிக்க வைக்காதே. புலிகேசியாவது அறிமுகமான பூதம். மகேந்திரன் அறிமுகம் ஆகாத தீயசக்தி. எனவே எப்படியும் இந்த வாதப் போரில் நீ வெற்றிபெற்றுவிடு பாரவி. தெற்கே இதுவரை நான் பயணித்ததில்லை. அங்கிருக்கும் அரசர்கள் எவ்வளவு கொடியவர்களோ? நான் அறியேன்." — அவந்திகா கூறினாள்.

"நீ மகேந்திரனைக் காதலிப்பதாக அல்லவா இறையா கூறினான்?" — பாரவி வியந்தான்.

"புலிகேசி என்னை நெருங்காமல் இருக்க அப்படி ஒரு பொய்யைச் சொன்னேன். மகேந்திரனும், அவனும் எனக்காக முட்டிக் கொள்ளட்டும். அதுவரை நான் நிம்மதியாக இருக்கலாமே என்றுதான் அப்படிச் சொன்னேன். இதுவரை நான் மகேந்திரனைப் பார்த்தது

கூட இல்லை." — அவந்திகா கூற, அவளை பிரம்மிப்புடன் நோக்கினான், பாரவி.

சுமனஸா பஞ்சபட்சி தந்திரத்தைப் பாரவிக்கு விளக்கினாள். "இதைக் கொண்டு நீ எப்படியும் தொண்டரையனை வெல்ல வேண்டும். புறப்படு! மறக்காமல் நமது நாடகத்தை அரங்கேற்றுங்கள்." — சுமனஸா கூறினாள்.

கம்பீரமாக ஆடைகளை அணிந்து கொண்ட பாரவி, மலப்பிரபா மாளிகையைவிட்டு வெளியே வந்தான். மாளிகையைச் சுற்றியுள்ள மலைப்பாறைகளையும், அடர்ந்திருந்த மரங்களையும், செடிகளையும் நோக்கினான். அவற்றின் பின்பாக எத்தனை கண்கள் இவர்களை உளவு பார்க்கின்றனவோ?

"யாரங்கே! அழைத்து வாருங்கள் அந்த அடிமை பிசாசை! என்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறேன். அவளை இங்கே தனியாக விடுவது ஆபத்து!" என்று பாரவி கட்டளையிட்டதும், இரண்டு மூன்று பணிப்பெண்கள் அவந்திகாவின் கைகளைப் பற்றி, தரதரவென்று அவளை இழுத்து வந்தனர்.

"என்னை விடுங்கள். நான் எங்கும் வர விரும்பவில்லை. புலிகேசியின் அரண்மனையில் காலை வைக்க நான் விரும்பவில்லை. எனது காதலர் மகேந்திரனிடம் என்னை இட்டுச் செல்லுங்கள்.." — வீறிட்டு அலறினாள், அவந்திகா.

வலுக்கட்டாயமாகப் பணிப்பெண்கள் அவளைச் சிவிகையில் ஏற்ற, அலறியபடி புறப்பட்டாள் அவந்திகா.

அவர்கள் புறப்பட்டுச் சென்றதும், சுமனஸா சுற்றுமுற்றும் நோக்கியபடி அரண்மனையை நோக்கி, மலப்பிரபா மாளிகையில் இருந்து கிளம்பினாள்.

★ ★ ★

‘யாரால் கேட்கப்படும் கேள்விக்கு மற்றவரால் பதில் கூற முடியவில்லையோ அவர் மற்றவருக்கு அடிமை’ என்கிற ஒப்பந்தத்துடன் வாதாபியின் பாரவியும், பல்லவத்தின் தொண்டரையனும் வாதத்தைத் துவக்கினார்கள்.

‘நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் விடையளித்து விட்டால், நீங்கள் என் அடிமை. நான் கேட்கும் கேள்விகளுக்கு உங்களால் பதில் அளிக்க முடியாவிட்டால் நீங்கள் அடிமை’ என்று இருவரும் ஒப்புக்கொள்ள, தர்க்கம் துவங்கியது.

“தங்கபாத்திரத்தினால் மறைக்கப்பட்ட வைரம் எது?” — தொண்டரையன் கேட்டான்.

“மனித அறிவு! இரண்யமய பாத்திரத்தால் மூடப்பட்டிருக்கும் கூர்மையான அறிவுதான் அந்த வைரம்!” — பாரவி கூறினான்.

“தனது கை இல்லாமல் ஒரு ஆண் வாழலாம். ஆனால் மனைவியின் கை இல்லாமல் ஒரு அந்தணன் வாழ முடியாது! தனது செவி இல்லாமல் ஒரு பெண் வாழலாம். ஆனால் கணவனின் செவி இல்லாமல் ஒரு பெண்ணால் வாழ முடியாது.. ஏன்?” — பாரவி கேட்டான்.

“ஆணின் செவியில் கங்கை நதி இருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. பெண்ணின் கையில் அக்னி இருப்பதாக அதே சாஸ்திரம் கூறுகிறது. எனவே தனது கை இல்லை என்றாலும் ஹோமம் வளர்ப்பதற்கு மனைவியின் கை தேவை. ஆணின் செவியில் கங்கை இருப்பதால் அவன் மனைவியின் தூய்மைக்குப் பாதுகாவலனாக இருக்கிறான்.” — தொண்டரையன் விளக்கினான்.

“பக்கத்தில் இருக்கும் வெள்ளைக்காரி எழுப்புகிறாள். நெஞ்சில் இருக்கும் செம்மைக்காரி உந்துகிறாள். பாதியில் நிற்கும் பசுமைக்காரி நிர்மூலம் செய்கிறாள். யாரிந்த

பெண்கள்?" — பாரவி கேட்க, சபை தொண்டரையனை நோக்கியது. சற்றே யோசித்த தொண்டரையன் உடனே பதிலைக் கூறினான்.

"பக்கலில் நிற்கும் வெள்ளைக்காரி கலைமகள். வீணையை மீட்டி, படைப்புக்கு நேரமாகிவிட்டதைப் பிரும்ம நிஷ்டையில் இருக்கும் நான்முகனுக்கு உணர்த்துகின்றாள். திருமாலின் நெஞ்சில் உறையும் திருமகளோ, என்னை நெஞ்சில் வைத்துக் காப்பது போன்று படைக்கப்பட்ட அனைவரையும் காத்து வாருங்கள் என்கிற உந்துதலைச் செய்கிறாள். மாதொருபாகனின் பாதியாகத் திகழும் பசுமைக்காரி மலைமகள், அழிக்கும் தொழிலில் பாதி பொறுப்பினை ஏற்கிறாள் என்கிற திரிமூர்த்தினி தத்துவமே உங்கள் கேள்வி." — தொண்டரையன் கூறினான்.

போட்டி கடுமையாக நடந்து கொண்டிருந்தது.

"கடல்நீரில் ஒரு தீவு. அதில் ஐம்பத்து ஐந்து பேர் வசிக்கின்றனர். அனைவருமே சிரஞ்சீவிகள். அவர்களுக்கு மரணமே கிடையாது. சாகா வரம் பெற்ற இந்த ஐம்பத்து ஐந்து பேர் வசிக்கும் தீவு எங்கே உள்ளது?" — பாரவி கேட்டான்.

"ஜம்புத்வீபத்தில் நிகழும் காலச்சக்கரத்தின் சுழற்சியினைக் கூறுகிறீர்கள். அறுபது வயது கிழவன், அறுபது ஆண்டுகளைக் குறிக்கும். உத்தராயனமும், தட்சிணாயனமும் அவனது இரண்டு மனைவிகள். வசந்த, வர்ஷ, ஹேமந்த, கிரீஷ்ம, சரத் மற்றும் சிசிரருதுக்கள் ஆகிய ஆறு பெண்கள். பன்னிரண்டு மாதங்கள் பெயரன்கள். ஏழு கிழமைகள் பெயர்த்திகள். இருபத்து ஏழு நட்சத்திரங்கள் பணியாளர்கள். இந்தக் காலச் சுழற்சிக்கு முடிவே இல்லை." தொண்டரையன் கூறினான்.

பாரவி அவந்திகாவை ஒருமுறை பார்த்தான். பிறகு தனது தொண்டையைச் செருமிக் கொண்டு தனது அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"பஞ்சபட்சி தந்திரத்தை விளக்க முடியுமா?" — பாரவி கேட்ட அதே சமயம், சுமனஸா அவை மண்டபத்தினுள் நுழைந்து ஒரு தூணின் பக்கமாக மறைந்து நின்றாள். 'தான் பாரவியிடம் விளக்கியிருந்த பஞ்சபட்சி தந்திரத்தைப் பற்றி அவன் கேட்டுவிட்டான் போல் இருக்கிறதே. அதனை அந்தப் பல்லவக் கவிஞன் எப்படி எதிர்கொள்கிறான் பார்ப்போம்' என்று தான் மறைந்திருந்த பகுதியில் இருந்து எட்டிப்பார்த்தாள். அந்த உருவத்தைப் பார்த்ததும் ஸ்தம்பித்து நின்றாள். அந்த முகம் அவளுக்கு மிகவும் பரிச்சயமான முகம். இவளது தந்தையின் இரண்டாம் தாரத்தின் மூலம் பிறந்த மகன். இவளுக்குச் சகோதரன். அபஹாரன் என்று பெயரிட்டு இருந்தார், இவளது தந்தை. அவன் எப்போது பல்லவ நாட்டின் கவியாக மாறினான். பெயர் தொண்டரையன் என்றல்லவோ கூறினார்கள்..? அபஹாரன் எப்படித் தொண்டரையனாக மாறினான்..?*

'வேண்டாம்! அந்தக் கேள்வியை அவனிடம் கேட்காதே. எனது தந்தை அவனுக்கும் அந்த தந்திரத்தைக் கூறியிருக்கிறார்..' — தனக்குள் அலறினாள் சுமனஸா.

பாரவி கேட்டதும்தான் தாமதம்.. வில்லினில் இருந்து புறப்படும் அம்பு போன்று தொண்டரையனிடமிருந்து பதில் வந்தது. ஒரு அரசன் ஐந்து வகைப் பறவைகளின் குணத்தைக் கொண்டிருக்க வேண்டும். சேவலைப் போன்று, கூவி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். புறாவைப் போன்று இலக்கினை அடைந்து

* நரசிம்மவர்ம பல்லவனின் அரசவை கவி தண்டி தசகுமார சரித்திரம் என்கிற நூலில், தசகுமாரர்களின் அனுபவங்களைச் சுவையாக வடித்தான். உபஹாரன், அபஹாரன் என்று இரு தசகுமாரர்கள் இருந்தபடியால், மகேந்திர பல்லவன் குழப்பத்தைத் தவிர்க்க அபஹாரன் என்கிற தசகுமாரனை தொண்டரையன் என்று பெயர் மாற்றம் செய்தான். அவன்தான் வாதாபிக்குச் சென்று பாரவியுடன் வாதம் புரிந்தான்.

மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வரத் தெரிந்திருக்க வேண்டும். அன்னத்தைப் போன்று நன்மையையும், தீமையையும், பிரித்துப் பாகுபாடு செய்யும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆந்தையைப் போன்று பிறர் உறங்கும் போது விழித்திருந்து திறமையான முடிவுகளை எடுக்க வேண்டும். சகோர பறவையைப் போன்று நிலத்தைத் தொடாமல் வாழக் கற்க வேண்டும். அதாவது போரில் தோற்காமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இதுவே பஞ்சபட்சி தந்திரம்." — தொண்டரையன் கூறியதும், விக்கித்துப் போய், மேலே பேச முடியாமல் திணறினான், பாரவி.

"இப்போது எனது முறை!" தொண்டரையன் கூறினான்.

"இளையவன் வளர்த்த மாங்கனியைக் குறுமுனிவன் ஜீரணித்தான்.

பெருமுனிவன் வளர்த்த கனியை..

அரக்கன் ஜீரணிப்பானா? அமரன் ஜீரணிப்பானா?"

தொண்டரையன் கேட்டதும் திடுக்கிட்டான், பாரவி. இது என்ன கேள்வி..? இவனுக்கு ஒன்றும் புரிய வில்லையே. சிந்திக்கும் திறமை இருந்தும், புலிகேசியின் உக்கிரமான முகம் கண்களின் முன்பாக நிழலாட, பாரவி சிந்திக்கும் ஆற்றலை இழந்தான்.

குறுமுனிவன் என்பது அகஸ்தியர் என்பது புரிகிறது. இளையா என்கிற அரக்கன் தனது சகோதரன் வாதாபியை மாங்கனியாக அகஸ்தியருக்குப் படைத்து அவரைப் புசிக்க வைக்க, அகஸ்தியரும் அவனை ஜீரணித்தார் என்கிற வாதாபி பகுதியின் புராணத்தைப் பற்றிக் கூறுகிறான். ஆனால் அவன் அடுத்து கேட்ட கேள்வி —

**'பெருமுனிவன் வளர்த்த கனியை**
**அரக்கன் ஜீரணிப்பானா? அமரன் ஜீரணிப்பானா?'**

யார் அந்தப் பெருமுனிவன்..? பாரவி யோசித்தும் அவனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டு பாரவி தலைகுனிந்தான்.

சபை முழுவதும் அமைதி.

"நீரே பதிலைக் கூறும்.." என்றவுடன் தொண்டரையன் வெற்றியுடன் பாரவியை நோக்கினான்.

"இளவா என்கிற அரக்கன் வாதாபியை மாங்கனி யாக்கி அகத்தியனுக்குப் படைக்க, அவன் அதை ஜீரணித் தான். வாதாபி என்னும் அரக்கனின் பெயரில் உருவான இந்த நாட்டின் மன்னன் அபகரித்து வந்த அவந்திகாவை கவர்ந்து வந்து உலகை ஆளும் புலவனான, முனிவனைப் போன்று, தேசச் சஞ்சாரம் செய்யும் உங்களின் பாதுகாப்பில் வைத்திருக்கிறானே, புலிகேசி. அதைத்தான் குறிப்பிட்டேன். அவந்திகாதான் மாங்கனி. நீரே முனிவன். அவந்திகா என்னும் அடிமை வாழப் போவது வாதாபி என்கிற அரக்கனால் உருவாகிய நகரிலா.. இல்லை தேவேந்திரனால் உருவாக்கப்பட்ட காஞ்சி நகரிலா என்று கேட்டேன். நீங்கள் பதில் கூறவில்லை. ஆகையால், நீர் எனக்கு அடிமை. அதன்மூலம், உங்கள் அடிமை அவந்திகாவும், எனது அடிமை. உடனடியாக நீங்கள் இருவரும் என்னுடன் காஞ்சிக்குப் புறப்பட வேண்டும்." — பாரவி துவண்டு போய் நின்றான். இதற்குப் பதிலாக, தொண்டரையன் இவனது உயிரைப் பறித்துக் கொண்டிருக்கலாம். கொதிக்கும் எண்ணெய் கப்பரையில் இருந்து தீயில் விழுந்தவளைப் போன்று மாறினாள், அவந்திகா.

அரண்மனை அதிகாரியை அலட்சியமாகப் பார்த்தான், தொண்டரையன். "நான் நாவலிட்டுச்* சவால்விட்ட போது அதனை அங்கீகாரம் செய்து

---

* நாவல் இடுவது : நாவல் செடியை நட்டு வாதிடுவது. அது வாடும்போது வாதத்தில் எவர் கை ஓங்கியுள்ளதோ அவரே வென்றவர்.

கையொப்பம் இட்டவர், புலிகேசி மன்னன். எனவே, எனது வெற்றியை அங்கீகரித்து, பாரவியையும், அவந்திகாவையும் காஞ்சிக்கு அனுப்ப வேண்டும். இது எனது கோரிக்கை!" புலிகேசியின் கையொப்பம் இட்ட சுவடியைக் காட்டியதும், அரண்மனை அதிகாரி அவர்களை அவனுடன் புறப்படும்படி உத்தரவிட்டார்.

தொண்டரையனுடன், பாரவியும், அவந்திகாவும் காஞ்சிக்குப் புறப்பட்டனர். புலிகேசியிடம் இருந்து தப்பிச் சென்றுவிட்டோம் என்கிற நிம்மதி உணர்வை இருவராலும் தவிர்க்க முடியவில்லை.

தொண்டரையன் பின்பாக நடந்த பாரவியின் பார்வை தொலைவில் நின்ற, சுமனஸாவின் மீது விழுந்தது.

'நீயும் தப்பிச் சென்றுவிடு.. பஞ்சபட்சி தந்திரத்தைப் பற்றிக் கேள்வி கேட்கச் சொன்னது நீ. உன்னால்தான் நான் தோற்றேன் என்பது தெரிந்தால் உன்னைப் புலிகேசி கொன்றுவிடுவான்..' — கண்களாலேயே அவளை எச்சரிக்க, சுமனஸா அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டவளைப் போலத் தலையசைத்தாள்.

★ ★ ★

**கி.பி.** *618* —

நர்மதா நதிக்கரையின் பரந்த மணற்பரப்பில் புலிகேசியின் படைகள் புஷ்யபூர்த்தி மன்னன் ஹர்ஷவர்தனின் படைகளை எதிர்நோக்கத் தயாராக நின்றன. கிழக்கிலிருந்து மேற்கே பாயும் நர்மதையை நோக்கித் தொழுதான், புலிகேசி. பரமசிவனின் தேகத்திலிருந்து உதித்ததாகக் கருதப்படும் நர்மதை, தனக்கு வெற்றியைத் தர வேண்டும் என்று மனதில் பிரார்த்தனை செய்தான். தொலைவில் ஹர்ஷனின் படைகள் பெருத்த ஆரவாரத்துடன் நர்மதையை நோக்கி வந்து கொண்டிருந்தன.

தனது பாட்டன் முதலாம் புலிகேசியைத் தந்திரமாக வரவழைத்துச் சண்டி காளிக்குப் பலி கொடுத்த ஹர்ஷனின் கதையை முடிக்க வேண்டும் என்கிற வெறியோடுதான் புலிகேசி வந்திருந்தான்.

வட பாரதம் முழுவதையும் தனது வசப்படுத்தி, காமரூபம் வரை ஆண்டு கொண்டிருந்த ஹர்ஷன், நர்மதையைக் கடந்து வாதாபி சாளுக்கியத்தைக் குறிவைத்துக் கொண்டிருந்தான். தான் வாதாபியை நோக்கி நகர்வதற்குள், புலிகேசியே தன்னைத் தேடி வந்து காத்திருப்பதை ஹர்ஷன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை தான்.

இருவரது யானைப் படைகளும் ஒன்றையொன்று மோத, மலைத்தொடர்கள் இரண்டு மோதிக்கொள்வது போன்று காட்சியளித்தது. கடும்போர் தொடர்ந்தது. புலிகேசி இவ்வளவு கடுமையாக மோதுவான் என்று சிறிதும் எதிர்பார்த்திராத ஹர்ஷன், புலிகேசியைக் கொல்லும் தீவிரத்துடன் தனது வாளினை ஓங்க, தனது யானையின் மீதிருந்த புலிகேசி அதனைச் சாதுர்யமாகத் தடுத்தான். தொடர்ந்து இருவரது வாட்களும் மோத, புலிகேசி சற்றும் எதிர்பார்த்திராத நிலையில் அவனுடைய வாள் கைநழுவி நிலத்தில் விழுந்தது. நிராயுதபாணியாக நின்ற புலிகேசியைக் கொல்வதற்கு அதுதான் தருணம் என்று நினைத்த ஹர்ஷன், தனது யானையின் மீதிருந்து புலிகேசியின் யானையின் மீது தாவ, சட்டென்று புலிகேசியின் யானை வேகமாக நகர, ஹர்ஷன் நிலைதடுமாறி, புலிகேசியின் பட்டத்து யானையின் முதுகில் கட்டப்பட்டிருந்த கயிற்றினைப் பற்றிக்கொண்டு ஊசலாடிக் கொண்டிருந்தான். புலிகேசி சட்டென்று தனது கையை நீட்டி அவனைப் பற்றிக் கொண்டான்.

“எனது கையைப் பற்றிக் கொண்டு மேலே வா! பிறகு நாம் போரைத் தொடரலாம்” என்றபடி புலிகேசி, கீழே விழாமல் அவனை மேலே இழுத்தான்.

இருவரும் யானையின் மீது நிற்க, நிராயுதபாணியாக நின்ற புலிகேசியை உறுத்துப் பார்த்தான். "என்னைக் கைப்பிடித்துத் தூக்கிவிட்டிருக்கிறாய்! நிராயுத பாணியான உன்னை நான் எப்படித் தாக்குவது?" என்ற ஹர்ஷனை அலட்சியமாக நோக்கினான், புலிகேசி.

"நிராயுதபாணிகளைக் கொல்வது உனக்குப் புதிதா என்ன? எனது பாட்டனைச் சண்டி கோயிலில் பலி கொடுத்தது போன்று என்னையும் கொல்லப்பாரேன்!" — புலிகேசி கூற, விதிர்விதிர்த்துப் போனான், ஹர்ஷன்.

"புலிகேசி! உனது வீரத்தைப் பற்றி நான் அறிவேன். உனது போரிடும் திறனால் நான் மலைத்துப் போய் இருக்கிறேன். நமது போரினை நிறுத்திக் கொள்வோம். எனக்கு உனது நட்பு தேவை. உனது பாட்டனுக்கு நான் இழைத்த அநீதிக்குப் பரிகாரமாக, நான் நர்மதையைக் கடந்து இனி வரப்போவதில்லை. நர்மதை தொடங்கித் தட்சிணம் வரையில் நீயே ஆண்டு வா. எனக்கு உனது நட்பைத் தா..!" — ஹர்ஷன் கூறினான்.

"உன்னைக் கொன்றுவிட்டு வருவதாக எனது நாட்டில் சபதம் செய்திருக்கிறேன்.." — புலிகேசி கூறினான்.

"நீ என்னைக் கொல்வதைப் பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. வடபுலத்தின் வலுவான மன்னன் நான். தட்சிணத்தின் வலுவான மன்னன் நீ. இருவரும் நட்புடன் திகழ்ந்தால் பாரதக் கண்டத்திற்கு நன்மை தரும் என்கிற எண்ணத்தில்தான் உனது நட்பைக் கோருகிறேன். உனக்கு விருப்பம் இல்லையென்றால், நாம் நமது போரினைத் தொடர்வோம்." தனது வாளை ஓங்கியபடி ஹர்ஷன் புலிகேசியின் மீது பாய, சடாரென்று பின்வாங்கிய அவன், ஓங்கிய ஹர்ஷனின் கையைப் பற்றி அவனது பின்பாகச் சிறைவைத்து அவனது வாளினைப் பிடுங்கி, அவனது கழுத்தினில் வைத்தான். புலிகேசி அந்தக் கணத்தில் மல்யுத்த வீரனாக மாறி ஹர்ஷனை வளைக்க, கண்ணிமைக்கும் நேரத்தில்

தன்னைச் சிறைபிடித்த புலிகேசியின் வேகத்தைத் தாளாமல் திணறினான், ஹர்ஷன். மனதினுள் அவனது சமயோஜிதத்தைப் பாராட்டினான். தன்னைக் கொன்று விடுவதாக சபதம் செய்துவிட்டு வந்திருக்கிறான். கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடுவானா புலிகேசி..? வடபுலத்தின் மாபெரும் சக்கரவர்த்தியைப் போரில் கொன்றவன் என்கிற பெருமையை அவன் நிச்சயம் அடையத் துடிப்பான். மரணதேவி தன்னைத் தழுவுவதற்கு முன்பாக, வானத்தை, தொலைவில் தெரிந்த நர்மதையை, போரிடுவதை நிறுத்திவிட்டு, இவன் மரணத்தைத் தழுவப் போவதை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கும் தனது படையினரை ஒருமுறை பார்த்தான்.

'இதோ இவனது உயிர், உடற்கூட்டினைவிட்டுப் பறக்கப் போகிறது..' தனது குரல்வளை அறுபடுவதற்காகக் காத்திருந்தான், ஹர்ஷன். ஆனால், தனது கையில் இருந்த வாளை வீசி எறிந்த புலிகேசி, ஹர்ஷனை ஆவேசத்துடன் தனது பக்கமாகத் திருப்பினான்.

"ஹர்ஷா! உனது குரல்வளையை அறுத்தேன் என்றால், எனது பாட்டனின் கொலைக்குப் பழி வாங்கினேன் என்பதாகச் சரித்திரத்தில் பெயர் பெறுவேன். எனது வீரத்திற்கு மதிப்பு இருக்காது. எனது வீரத்தை மெச்சி, உனது வாய் திறந்து உலகத்திடம் சொல்.. 'நான் புலிகேசியிடம் தோற்றுப் போனேன். அவன் என்னை வென்றான்..' என்று சரித்திர தேவியின் செவிகளில் விழும் வண்ணம் ஒருமுறை ஓலமிட்டு, அந்தப் பெருமையை எனக்குத் தா. நான் உனக்கு எனது நட்பைத் தருகிறேன்." — புலிகேசி கூறினான்.

ஒருகணம் அவனை உறுத்துப் பார்த்தான், ஹர்ஷன். அடுத்தகணம், தனது படையினரைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

"வாதாபியின் மன்னன் புலிகேசி, வர்தன சக்கரவர்த்தியான என்னை நர்மதை கரையில் நடந்த

போரில் வீழ்த்தினான். அவனது வீரத்திற்கு நான் தலை வணங்குகிறேன்" என்று கூறியதும் வாதாபி சாளுக்கிய படைகள் பெரும் ஆரவாரம் செய்தன.

ஹர்ஷனும், புலிகேசியும் கைகுலுக்கியபின், இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். அன்றிரவு கூடாரத்தில் இருவரும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.*

'நர்மதையைக் கடந்து ஹர்ஷனாகிய நான் வரமாட்டேன். புலிகேசியாகிய நான் நர்மதையைக் கடந்து வடபுலம் புகமாட்டேன்' என்கிற உடன்படிக்கையில் இருவரும் கையொப்பம் இட்டனர்.

ஹர்ஷனை வென்ற பெருமையுடன், மீண்டும் வாதாபிக்குப் புறப்பட்டான். புலிகேசி.

★ ★ ★

"மன்னர் ஹர்ஷனுடன் நிகழ்த்திய போரில் வென்று வாதாபிக்குள் பிரவேசித்துவிட்டார். தெருவெங்கும் கோலாகலம். மக்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றனர்.." அரண்மனை அதிகாரியின் உதவியாளர் அந்தப்புரத்திற்கு வந்து அறிவித்தான். தோழிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, உதவியாளரின் பார்வை சுமனஸாவை தேடியது. அவனது கண்கள் தன்னைத்தான் தேடுகிறது என்பதனை யூகித்து முன்னால் வந்தாள், சுமனஸா.

---

* ஹர்ஷனுக்கும், புலிகேசிக்கும் இடையே நிகழ்ந்த போர், கி.பி. 610 மற்றும் கி.பி. 630 இடைப்பட்ட காலகட்டத்தில் நடந்திருக்கக் கூடும் என்று இதுகாறும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தனர். ஆனால் பந்தர்கர் ஓரியண்டல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் -Bhandarkar Oriental Research Institute (BORI), சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிலர் ஒரு செப்பேட்டினைக் கண்டெடுத்து ஆராய்ந்த போது, அதில் புலிகேசி ஹர்ஷவர் தனனை வெற்றி கொண்ட வருடத்தைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தது. அதன்படி கி.பி. 618-இல் புலிகேசி ஹர்ஷனை வீழ்த்தியுள்ளான். ஸ்ரீநாத் பப்பட் என்னும் ஆராய்ச்சியாளர், இரண்டு படைகளும் பெரும் யானைப் படைகளுடன் மோதின, என்று அந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

"மன்னர் அரண்மனையினுள் பிரவேசம் செய்யும் போது தாங்கள் அவரை வரவேற்க வர வேண்டாம், என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே வாயிலுக்கு வருவதைத் தவிர்த்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு அவசரமாக அங்கிருந்து விலகினான்.

இனி தனக்குக் கிடைக்கப் போவது என்ன என்பதை சுமனஸா யூகித்துவிட்டாள். இவள் வளர்த்த குழந்தை இவளது நெஞ்சில் உதைக்கப் போகிறது. எதையும் தாங்கிக் கொள்ளும் வண்ணம் இதயத்தை இரும்பாக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

பாரவி தனது கண்களால் எச்சரிக்கை செய்து, சுமனஸாவை தப்பிச் சென்றுவிடும்படி செய்திருந்தான். ஆனால் ஒரு குற்றவாளியைப் போன்று தப்பித்துச் செல்வதற்கு அவளது மனம் இசைவு தரவில்லை. அதே சமயம் தனது பாட்டனையே கொன்ற ஹர்ஷனையே மன்னித்து அவனிடம் நட்பு பாராட்டியிருக்கிறான் புலிகேசி என்பதை அறிந்ததும் அவனை வளர்த்த தன்னிடம் சற்றே பாசமும் பரிவும் காட்டுவான் என்றே நம்பினாள். ஆனால் அரண்மனை வாயிலில் தன்னை அவள் வரவேற்க வரக்கூடாது என்று கூறியது சற்றே அதிர்வினை ஏற்படுத்தினாலும், தன்னைப் பார்த்ததும் அவன் கோபம் வடிந்துவிடும் என்று நினைத்தாள்.

ஆனால் —

மறுநாள் காலைவரை, புலிகேசி சுமனஸாவை காண வரவில்லை. சூரியன் உதயமாகி ஒரு நாழிகை கழித்து தனது தளபதி வல்லபராஜாவுடன் அவளைத் தேடி வந்தான்.

"பல்லவ தேசத்துப் புலவன், தொண்டரையனிடம் நமது தலைமைப் புலவர் பாரவி தோற்றுப் போனானாமே! அவனையும், அவந்திகாவையும் அடிமைப்படுத்திக் காஞ்சிக்கு அழைத்துச் சென்று விட்டானாமே?" — முகத்தில் எவ்வித உணர்வுமின்றி வினவினான், புலிகேசி.

"ஆம்! நன்றாகத்தான் வாதாடினான். இருப்பினும்.." — சுமனஸா முடிப்பதற்குள், இடைமறித்தான், புலிகேசி.

"பஞ்சபட்சி தந்திரத்தைப் பற்றிக் கேட்டுமா அவன் தோல்வியுற்றான்?" — புலிகேசி கேட்க, சுமனஸாவுக்கு வியர்த்தது. 'ஆம்' என்கிற பாவனையில் தலையசைத்தாள்.

"பல்லவ நாட்டுப் புலவன் தொண்டரையன் உனது சகோதரனாமே..? உண்மையா?" — புலிகேசி கேட்டான்.

"ஆம்! எனது தந்தையின் இரண்டாம் தாரத்து மகன். எனக்கும் அவனுக்கும் எவ்வித உறவும் இல்லை." — சுமனஸா கெஞ்சும் குரலில் கூறினாள்.

நீண்ட அமைதி அங்கே நிலவியது. இவளை ஒருமுறை நோக்கினான், புலிகேசி. அந்தப் பார்வையில் பால்யத்தில் அவள் கண்டிருந்த அந்தப் பாச உணர்வினைப் பார்த்தாள். அவளது கையைப் பற்றித் தனது கைகளினுள் சிறை வைத்தான் புலிகேசி.

"உனது தந்தை இரண்டாம் தாரத்தை மணந்து கொண்டது தவறில்லை. ஆனால் உனக்குப் போதித்த பஞ்சபட்சி தந்திரத்தை அவனுக்கும் போதித்ததுதான் தப்பு" என்றபடி அவளை உறுத்துப் பார்த்தான்.

"சுமனஸா! உனது வாழ்க்கையையே எனக்காகத் தியாகம் செய்தாய். தொட்டிலில் இருந்த நாள் முதல் இன்று ஹர்ஷனை வென்ற நாள் வரை, எனக்காகப் பல தியாகங்களைச் செய்திருக்கிறாய். எனக்கு வளர்ப்புத் தாயாகத் திகழ்ந்திருக்கிறாய். பல தியாகங்களை எனக்காகச் செய்த நீ, கடைசியாக ஒரு தியாகத்தையும் செய்துவிடு!" என்றவன் தளபதி வல்லபராஜாவை நோக்கித் தலையசைத்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான். புலிகேசியின் பின்பாக உறையிலிருந்து வாளை உருவும் போது ஏற்படும் உராயும் ஒலியும், 'சர்ர்ர்' என்று தலை துண்டாடப்படும் ஒலியும் அவன் செவிகளில் கேட்டன.

'வாதாபியை குறிவைத்த ஹர்ஷனை மன்னித்தேன். காரணம் வாதாபியை கைப்பற்றும் ஆற்றல் அவனிடம் இல்லை என்பதை உணர்ந்தேன். ஆனால் அவந்திகாவை குறிவைத்த மகேந்திரனுக்கு மன்னிப்புக் கிடையாது. காரணம் அவந்திகாவை அடையும் ஆற்றல் அவனிடம் உள்ளது. அத்தகைய மகேந்திரனிடம் அவந்திகாவை அனுப்பி வைத்த சுமனஸாவுக்கு உரிய தண்டனையை வழங்கினேன். வளர்ப்புத் தாய் சுமனஸா என்ன, பெற்ற தாய் மதுரவாணி அரசியாகவே இருந்தாலும் கூட, இந்தத் தண்டனையைத்தான் வழங்கியிருப்பேன்.' — மனதிற்குள் கூறியபடி தனது ஜாகையை நோக்கி நடந்தான், புலிகேசி.

"மகேந்திரா! உனது முடிவு எனது கையினால்தான்!" — அவனது வாய் முணுமுணுத்தது.

# 33. குழம்பிய குளத்தில் நீந்தும் கயல்

ஒத்தாடை அரண்மனையின் நிலாமுற்றத்தில் சடலமாகக் கிடந்தாள், ஜெயஸ்ரீ. ராஜஸ்ரீ வீறிட்டு அலறிக் கொண்டிருக்க, அழுவதற்கும் திராணியின்றி, ராஜவர்மன் அவளது சடலத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

புலிகேசி ஜெயஸ்ரீக்கு வரைந்திருந்த சுவடி, மரக்கிளையில் ஊசலாடிக் கொண்டிருந்த அவளது சடலத்தின் கையில்தான் காணப்பட்டது. அதை மீண்டும், மீண்டும் வாசித்துத் தனது உக்கிரத்தை அதிகரித்துக் கொண்டே இருந்தான்.

"அடேய்.. புலிகேசி! உனது மரணம் எனது கரத்தினால் தான்" — மகேந்திரன் கர்ஜிக்க, தசகுமாரர்களில் ஒருவனான பிரமதி அவனது தோளினில் கைவைத்தான்.

"மகேந்திரா! சற்றே ராஜவர்மரிடம் ஆறுதலாகப் பேசிக் கொண்டிரு. நீ புலிகேசியைக் கொல்வேன் என்று சபதமிடும் போதெல்லாம், துக்கம் தாளாமல் துடிக்கிறார்." — பிரமதி கூறியதும், ராஜவர்மன் மற்றும் ராஜஸ்ரீயை நோக்கி நடந்தான்.

தன்னருகே வந்து அமர்ந்த மகேந்திரனின் தோளில் தனது தலையைச் சரித்த, ராஜஸ்ரீ, குலுங்கி அழத்துவங்கினாள்.

"மல்லா! நமது பல்லவத்திற்குப் பெண் ராசியே இல்லாமல் போய்விட்டதே. நவரத்தினப் பல்லவிதான்

*அகாலத்தில் உயிரைவிட்டாள் என்றால், எனது மகளும் அந்த வழியிலேயே போய்விட்டாளே! என்ன சாபமோ? சௌரப பண்டிதர் கண்ட காட்சியில் தூக்கில் தொங்கிய பிணம், கடைசியில் ஜெயஸ்ரீயாக இருப்பாள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை." — பொலபொலவென்று கண்ணீர்விட்ட ராஜஸ்ரீயை ஆதூரத்துடன் அணைத்துக் கொண்டான், மகேந்திரன்.*

*"சிற்றன்னையே! மகள் போய்விட்டாள் என்று இடிந்து போகாதே. மகன் நான் உனக்கு இருக்கிறேன். புலிகேசியின் தலையைக் கொண்டு வந்து உனது காலடியில் வைக்கிறேன்." — மகேந்திரன் கூற, ராஜவர்மன் அவனைச் சோகமாகப் பார்த்தான்.*

*"புலிகேசியை நொந்து என்ன பயன், மகேந்திரா? அவனுக்கு நமது ஜெயஸ்ரீயின் மீது விருப்பம் இல்லை என்கிற போது அவளை எப்படி ஏற்றுக் கொள்வான்..? இந்தப் பெண் சற்றுப் புத்தியுடன் நடந்து கொண்டிருக்கலாம். அவனைத்தான் மணப்பேன் என்று ஏன் பிடிவாதம் காட்ட வேண்டும்..?" — மெல்லிய குரலில் கூறினான்.*

*"அவன் ஜெயஸ்ரீயை நிராகரித்ததில் நான் தவறு காணவில்லை, சிற்றப்பா. ஒரு இளவரசிக்குத் தகாத சொற்களைப் பிரயோகித்து மடல் அனுப்பியிருக்கிறான். அந்தச் சொற்கள்தான் எனது தங்கையின் உயிரைப் பறித்துவிட்டது. போர்க்களத்தில் உயிரைக் குடிக்கும் கணையின் கூர்மையைக் காட்டிலும் அதிகக் கூர்மை வாய்ந்த சொற்களை உபயோகம் செய்திருக்கிறான். என்வேதான், குதூகலச் சிரிப்புடன் வளைய வந்த எனது தங்கை இங்கே பிணமாகக் கிடக்கிறாள்." — மகேந்திரன் கூறினான்.*

*"இப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்கிற விதி இருக்கும் போது யாரால் என்ன செய்ய முடியும், மல்லா? நடப்பதைக் கவனிப்போம். எங்களுக்கு இனி*

வாழ்க்கையில் இருக்கும் ஒரே பிடிப்பு நீதான். நீ நன்றாக வாழ வேண்டும். பழி தீர்க்கும் நடவடிக்கைகளில் இறங்காமல், மீண்டும் நமது அரண்மனையில் சந்தோஷம் நிலவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடு. அத்திமலைத் தேவனைப் பறிகொடுத்ததால்தான் இப்படி நமது குடும்பத்தில் அடுக்கடுக்காகச் சோகங்கள் நிகழ்கின்றதோ என்னவோ.. எனவே முதலில் சந்திரகிரிக்குச் சென்று அத்திமலைத்தேவனைத் தேடி மீட்க வேண்டிய வழியைப் பார்." — ராஜஸ்ரீ கூற, மகேந்திரன் யோசனையில் ஆழ்ந்தான்.

"அத்திமலையான் எனக்காகக் காத்திருப்பான். ஆனால் அதற்கு முன்பாக நான் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உள்ளது. மரணப்படுக்கையில் கிடக்கும் மச்சவாசுதேவரிடம், அவரது செயல்களுக்கான காரணத்தைக் கேட்கப் போகிறேன்!" — குரலில் வெறுப்பு மேலிடக் கூறினான், மகேந்திரன்.

ஜெயஸ்ரீயின் ஈமச்சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அனைவரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்க, மகேந்திரவர்மன், ராஜவர்மனுக்குப் பக்கலில் நின்று அவருக்குத் தைரியம் கூறிக் கொண்டிருந்தான்.

புரோகிதரின் உதவியாளனான அந்தணச் சிறுவன் கிருஷ்ணத்ரிஷ்ணன் மரத்தின் அடியில் வைத்திருந்த தர்ப்பை புல் கட்டினை எடுப்பதற்காகச் சென்றான். தரப்பைப் புல் கட்டைக் கையில் எடுத்தவன், திகைத்தான். தர்ப்பைப் புல் கட்டின் நடுவே ஒரு நீண்ட சுவடி சொருகப்பட்டிருந்தது.. திகைப்புடன் அதனை வாசிக்க முயன்றான்.

'மகேந்திர பல்லவா' என்று ஒருமையில் அழைக்கப் பட்டிருக்க, பயந்து நடுங்கிய கிருஷ்ணத்ரிஷ்ணன் தனது ஆசானிடம் சென்று அந்த ஓலையை நீட்டினான்.

அதை வாங்கிப் பார்த்த, புரோகிதர், த்யக்கத்துடன் அதனை எடுத்துக் கொண்டு மகேந்திரனை நோக்கிச் சென்றார்.

ராஜவர்மனை அணைத்துக் கொண்டு நின்றிருந்த மகேந்திரனின் முன்பாக நின்றார்.

“மன்னா! மரத்தடியில் எனது கூர்ச்சர கட்டை வைத்திருந்தேன். அதில் ஒரு சுவடியை யாரோ சொருகி இருக்கின்றனர். உங்களுக்குத்தான் அந்த ஓலை அனுப்பப்பட்டுள்ளது..” என்றபடி பணிவுடன் ஓலையை நீட்டினார்.

திகைப்புடன் அந்த ஓலையை வாங்கி வாசித்தான், மகேந்திரன்.

‘மகேந்திர பல்லவா,

அடுத்த விபரீதம் நிகழ்ந்துவிட்டதே! நவரத்தினப் பல்லவியின் தற்கொலையில் தொடங்கி இன்று வரை, தொடர்ந்து நிகழ்கிறதே. எப்படி இதனைச் சகித்துக் கொண்டிருக்கிறது பல்லவ குடும்பம்..? ஒருவேளை, விபரீதங்களைச் சந்திப்பதற்கு உனது குடும்பம் பழகிக் கொண்டுவிட்டதோ..! ஒரு சிறு தவறுதான், எல்லா விபரீதங்களுக்கும் காரணம். அந்தத் தவறினைப் பொறுக்காமல்தான், அத்திமலையானே உனது நாட்டைவிட்டுப் போய்விட்டான். குற்றங்களை இனி சரி செய்ய முடியாதுதானே..? ஆனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நன்மை செய்வதன் மூலம், உங்கள் பாவங்களைக் குறைக்கலாம் அல்லவா? யோசித்துப் பார்.

— மல்லன் எதி.

மல்லன் எதி என்பதற்குக் கீழே மீன் உருவம் ஒன்று வரையப்பட்டிருந்தது.

சுவடியை ஆட்டியபடி மகேந்திரன் யோசித்துக் கொண்டு நின்றதைக் கண்ட ராஜவர்மனும் அதனை வாங்கிப் படித்தான்.

“யார் இந்த மல்லன் எதி?” — ராஜவர்மன் கேட்க, தனக்குத் தெரியாது என்பது போன்று தோள்களைக் குலுக்கி உதட்டினைப் பிதுக்கினான், மகேந்திரன்.

அன்று மாலை —

பிரமதியை அழைத்துக் கொண்டு கஜபிருஷ்டம் கிராமத்திற்குக் கிளம்பினான். அவர்கள் புறப்படுவதைக் கண்டதும், உப்பரிகையில் யோசனையுடன் நின்றிருந்த பீமவர்மன் கையாட்டினான். அவர்கள் கஜபிருஷ்டம் போவதற்கான காரணத்தை அறிந்து கொண்டான் போலும்.

"மகேந்திரா! நானும் உன்னுடன் வருகிறேன்" என்று மேலிருந்தே குரல் கொடுத்துவிட்டு, கீழே இறங்கி வந்தான். அதற்குள் குதிரைலாயத்தை நோக்கிப் பிரமதி தனது கையை அசைக்க, ஒரு வெண்குதிரையை அழைத்து வந்தான், லாயத்தின் காப்பாளன்.

"மகேந்திரா! நீ அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவன். மச்சவாசுதேவருக்கு உண்மைகளை மறைப்பதற்கு அது வசதியாக இருக்கும். நான் அவரது தலைமுறையைச் சேர்ந்தவன். என்னிடம் அவரால் சிலவற்றை மறைக்க முடியாது. எனவேதான் நான் உன்னுடன் வருகிறேன்" என்றான்.

கஜபிருஷ்டம் வாசுதேவ ஆலயத்தின் முன்பாக இருந்த குளத்தின் கரையில் இருந்தது, வாசுதேவரின் மாளிகை. மகேந்திரனையும் மற்றவர்களையும், அவருடைய மருமகள் பாலகோபாலி வரவேற்று அவர்களை வாசுதேவர் படுத்திருந்த அறைக்கு இட்டுச்சென்றாள்.

மகேந்திரனையும், பீமவர்மனையும் வாசுதேவரின் அறைக்குள் போகவிட்டு, பிரமதி அவரது மருமகளையும், மகனையும் உள்ளே செல்லாதபடிக்கு வழிமறித்து அவர்களை மடக்கிப் போட்டான். மன்னரும், இளவரசரும் மச்சவாசுதேவருடன் ஏகாந்தத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளட்டும்.

கிழிந்த நாராகக் கிடந்தார், வாசுதேவர். பீதாம்பரத் தலைப்பாகையுடன், தந்தத்தினால் செய்யப்பட்டிருந்த

தனது ஊன்றுகோலைப் பற்றியபடி கம்பீரமாக நடந்தவர்தான். பல அரசியல் வியூகங்களை அமைத்து, பல்லவ சாம்ராஜ்யத்தினை ஒளிபெறச் செய்திருந்தவர், இன்று அதிக வெளிச்சமும், காற்றும் இல்லாத அறையில் அடைபட்டு, தனது அந்திமப் பயணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்..

அவரது உடலில் எங்கோ உயிர் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். அது எங்கே இருக்கிறது என்று அவருக்குத் தான் தெரிந்திருக்க வேண்டும்.

பீமவர்மன் தனது இரு கைகளையும் வாசுதேவரின் முகத்தருகே வைத்துக் கும்மி கொட்டுவது போன்று கையைத் தட்டினான். உடனே உணர்வில்லாமல் கிடந்த வாசுதேவரின் முகத்தில் சிறு அசைவு. தனது கண்களை மெல்லமாகத் திறந்தார்.

கம்பீரமாகத் தனது இரு கைகளையும் தட்டி, 'யாரங்கே! இந்த ஓலையைச் சோழ மன்னனிடம் தாருங்கள்!' என்று அழைத்தவரையே, இரு கைகளைத் தட்டி எழுப்ப வேண்டிய நிலையை உருவாக்கி இருந்த காலம்தான் எவ்வளவு கொடுமையானது! தனக்குள் நினைத்தான், பீமவர்மன்.

வாசுதேவரின் ஒளியிழந்த கண்கள், பீமவர்மனையும், மகேந்திரனையும் கண்டதும் ஒளியைப் பெற்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

"மன்னா! இளவரசன் பீமவர்மன்! நீங்கள் வந்து விட்டீர்களா? ஜெயவர்மன் எங்கே?" — பலவீனமாகக் காணப்பட்டாலும், அவரது குரல் சிறிதும் பிசிறின்றி, தெளிவாகக் கணீரென்று ஒலித்தது.

"அமருங்கள்!" — வாசுதேவர் மன்னனையே கண் களால் விழுங்கியபடி கூற, பீமவர்மனும், மகேந்திரனும் அவரது மஞ்சத்தின் அருகே இருக்கைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தனர்.

*"நானே உங்களைக் காண வேண்டும் என்கிற துடிப்பில் இருந்தேன். பலமுறை எனது மகனிடம் கூறினேன். அவன் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை." — வாசுதேவர் கூறினார்.*

*"என்ன செய்வது! உங்கள் குடும்பத்தினர் நிம்மதியாக உள்ளனர். துர்மரணங்களோ, விபரீதங்களோ அல்லது கேடு விளைவிக்க யாராவது இருந்திருந்தாலோ, எத்தை தின்றால் பித்தம் தெளியும் என்கிற மனோபாவத்தில் நீங்கள் சொன்னதைக் கேட்டிருப்பார்கள். நிம்மதியாக இருக்கும் நேரத்தில், எதற்கு மீண்டும் மன்னரைக் காண வேண்டும் என்று, உங்கள் கோரிக்கையை அசட்டை செய்திருப்பார்கள்..!" — பீமவர்மன் கூறியபடி அவரது முகபாவத்தை எச்சரிக்கையுடன் கவனித்தான்.*

*ஒருகணம்தான் அவர் அமைதி காத்தார்.*

*"துர்மரணங்கள் அரச குடும்பத்திற்கு மட்டும் சொந்தமில்லை.." — வாசுதேவர் கூறினார். "இன்னும் வேறு சில குடும்பத்திலும் துர்மரணங்கள் நடைபெற்று இருக்கின்றன."*

*மகேந்திரனும், பீமவர்மனும் வியப்புடன் அவர் கூறுவதைக் கவனித்தனர்.*

*"மன்னா! இளவரசே! பல்லவ அரச குடும்பத்தில் பல மர்மச் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. இளவரசி நவரத்ன பல்லவியின் தற்கொலையில் துவங்கியது. மன்னர் சிம்மவர்மன் புத்த சித்தனியின் வசியத்தில் சிக்கியது, ஜெயவர்மன் காணாமல் போனது, விஜய வர்மன் கொலை, வீரகொசுவன் மரணம், சாயாதேவியின் தற்கொலை என்று விபரீதங்கள் தொடர்ந்தன." சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார், வாசுதேவர்.*

*"விபரீதங்கள் தொடர்கின்றன, வாசுதேவரே! எனது ஆருயிர் தங்கை ஜெயஸ்ரீ நேற்று தற்கொலை செய்து கொண்டாள். நவரத்ன பல்லவியைத் தொடர்ந்து*

*மற்றொரு தற்கொலையும் நிகழ்ந்திருக்கிறது." — மனம் வெதும்பினான், மகேந்திரன்.*

*சற்றே அதிர்ந்து போன வாசுதேவர், அந்தச் செய்தியைத் தாங்க இயலாமல், இருமுறை இருமினார். பிறகு அயர்ச்சி மிகுந்த கண்களுடன் மகேந்திரனைப் பார்த்தார்.*

*"விபரீதங்கள் தொடர்கின்றன.. எப்போது தெய்வத்திற்கு மதிப்பு இல்லையோ, அப்போது அவன் நம்மைவிட்டு விலகத் துவங்குகிறான். எப்போது அவன் விலகிச் செல்கிறானோ, அப்போது நாட்டிலும், குடும்பங்களிலும் விபரீதங்கள் நிகழ்கின்றன. நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் அவன் நம்மை நோக்கிப் பத்து அடிகளை எடுத்து வைப்பான். ஆனால் நாம் அவனை நோக்கி அடி எடுத்து வைப்பதே அவனது பிரதிமையைக் கைப்பற்ற என்கிற போது அதனால்தானே விபரீதங்கள் நிகழ்கின்றன. அத்திமலைத்தேவனின் கோபம்தான் நமது பல்லவத்தை வாட்டி வதைக்கின்றது!" — வாசுதேவர் கூறினார்.*

*"அதனால்தான் நீரும் வர்மகேது குளிகத்தை அரண்மனை நந்தவனத்துப் பஞ்சகல்யாண மரங்களின் கீழ் புதைத்தீரோ?" — பீமவர்மன் கேட்டான்.*

*"வர்மகேது வரை உமக்கு விவரங்கள் தெரிந்து விட்டதா? அப்படியென்றால் எனது பணிகளை எளிதாக்கிவிட்டீர்கள். புதைக்கப்பட்ட கேதுவைதான் நானும் தேடிக் கொண்டிருக்கிறேன். அந்த மரங்களின் கீழ்தான் இருக்கிறதா? அப்படியென்றால் உடனே அதனை எடுத்துக் கடலில் வீசி எறியுங்கள். இனியாவது அரச குடும்பத்தினரின் மனங்களைப் பேதலிக்கச் செய்யாமல் இருக்கட்டும்.." — வாசுதேவர் கூறினார்.*

*இவரை எவ்வளவு தூரம் நம்புவது என்பது போன்று மகேந்திர பல்லவனும், பீமவர்மனும் ஒருவரையொருவர் நோக்கினர்.*

பீமவர்மன் சற்றும் தயங்காமல் சொற்களில் கடுமையை வரவழைத்தான்..

"அரச குடும்பத்தினரின் பிரச்னைகள் குறித்துக் கேட்பதற்காகச் சௌரப பண்டிதர் என்கிற சோழியரை வரவழைத்தோம். அரச குடும்பங்களுக்குக் கேடு விளைவித்தவர் கஜபிருஷ்டம் வாசுதேவ ஆலயத்தின் குளத்தில் தங்க மீனாக நீந்துகிறார் என்று கூறப்படவே தங்களைக் காண வந்தோம்." — பீமவர்மன் கூறினான்.

"சரியாகத்தான் கூறியிருக்கிறார். ஆனால் நீங்கள்தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.." என்றவரின் பார்வை தனது மஞ்சத்தின் அருகே இருந்த சாளரத்தின் மீது பதிந்தது.

"அந்தச் சாளரக் கதவைச் சற்றே திறவுங்கள்.." — வாசுதேவர் கூற, பீமவர்மன் அவரது மஞ்சத்தின் பின்பாகச் சென்று அந்தக் கதவைத் திறந்தான். சாளரத்தின் வழியாக ஆலயத்தின் முன்பாக இருந்த குளம் நன்கு புலப்பட்டது.

"சோழியர் சரியாகத்தான் கணித்திருக்கிறார். ஆனால் ஒரு குளத்திற்கு நான்கு கரைகள் உண்டல்லவா? எதிர்கரையை நோக்குங்கள். பசுமை வண்ணத்தில் இரண்டு தென்னைமரங்களுடன் கூடிய மனை ஒன்று தெரிகிறதல்லவா? அங்கேதான் ஒருவன் தங்கியிருந்தான். மர்மமான நடவடிக்கைகளில் ஈடுபடுபவன் என்பதை அவனது கண்களே உரைத்தன. நான் மரணப் படுக்கையில்தான் கிடக்கிறேன். ஆனால் அவ்வப்போது சாளரத்தின் வழியாக உலக நடப்புகளைக் காண்பேன். இதுதானே இப்போது என்னிடம் உள்ள ஒரே பொழுது போக்கு. அந்த மனிதனின் முகம்.. எனக்குப் பழக்கப்பட்ட தாகத் தோன்றியது. ஆனால் யார்.. என்று தெரியாமல் இருந்தது. பிறகு அவன் யார் என்று கண்டுபிடித்தேன். அவன்தான் மீனலோச்சனியின் மகன்." மச்சவாசுதேவர் கூறினார்.

“யார் அந்த மீனலோச்சனி?” — பிரமதி கேட்டான்.

“உங்களுக்கெல்லாம் நினைவிருக்கிறதா? சாளுக்கியத் தேசத்திலிருந்து நமது முக்கூடல் கடிகையில் நாட்டியம் புரிவதற்காக வந்தாளே, ஒரு நாட்டியமாடும் பெண்.. வித்யுதா என்று பெயர்!” — மச்சவாசுதேவர் கூறினார்.

பீமவர்மனுக்கு நினைவுக்கு வந்தது.

“ஆம்! இளவரசன் விஜயவர்மன் அவளிடம் தகாத முறையில் நடந்து கொண்ட போது ஜெயவர்மன் தன்னைக் காப்பாற்றியதாக அரசவையில் சாட்சி சொன்ன சாளுக்கியப் பெண். அவளது நடனத்தைக் காணத்தானே நாங்கள் குடும்பமாகச் சென்றோம்!” பீமவர்மன் கூறினான்.

“ஆம்! அவளேதான். அவள்தான் மீனலோச்சனி. மின்னல் சக்தியைப் போன்று துள்ளிப் பாய்ந்து நடனமாடுகிறாள் என்று பாராட்டி, சாளுக்கிய மன்னன் அவளுக்கு அளித்திருந்த பட்டம்தான் வித்யுதா. அந்தப் பெயரிலேயே தன்னை அழைத்துக் கொண்டாள். அவளது மகன்தான் இந்த மாளிகையில் தங்கியிருந்தான். அவனது கண்கள் மீனலோச்சனமாக ஒரு பெண்ணின் கண்களைப் போன்றுதான் இருந்தன. ஆனால் அவனது கம்பீர முகம்..” என்றவரின் முகம் திடீரென்று பேயைக் கண்டது போல் விரிந்தன. அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் பேசுவதை நிறுத்திவிட்டு இருமத் துவங்கினார்.

இருவரும் திரும்பிப் பார்க்க, மச்சவாசுதேவரின் மகனும், மருமகளும், பிரமதியோடு வந்து நின்றனர்.

இருமலினிடையே, ஓரிரு வார்த்தைகள் அவரிடம் இருந்து வெளிவந்தன. “மீனலோச்சனை.. இப்போது.. உயிருடன் இல்லை.”

மீண்டும் கட்டுப்படுத்த முடியாமல் இருமத் தொடங்கினார். ஆனால் அவரது கண்களுக்கு எம

தரிசனம் கிட்டிவிட்டதோ என்னவோ, கண்கள் சுழல, சுவாசம் இறைக்க அலற ஆரம்பித்தார். "மீனலோசினி.. கொல்லப்பட்டாள். லொக்.. லொக் கொன்றது.. யார் தெரியுமா.. லொக்.. லொக் அவளைக்.. காதலித்தவன்.. ஒரு ஆண்மகனைத் தந்துவிட்டு.. லொக்.. லொக்.. லொக்.. அந்த மகன் யார் தெரியுமா? லொக்.. லோக்.."

அவரது இருமலில் நெஞ்சில் பாயும் கோழை அவரைப் பேசவிடாமல் தடுத்தது.

"அவளது காதலன் யார்? அவளது மகன் எனக்குத் தெரிந்தவனா?" மகேந்திரன் கேட்டான். அதற்குள்ளாக வாசுதேவரின் நினைவு தப்ப ஆரம்பித்தது. வாசுதேவரின் மகனும், மகளும் ஓடி வந்தனர்.

"அவருக்கு நீர் கொடு." மகன் மனைவியிடம் கூற, பிரமதி அவரது முகத்தையே கூர்ந்து கவனித்தான்.

"நீர் கொடுக்காதீர்கள். பால் கொடுங்கள்! தனது இறுதி சுவாசத்தை விடப்போகிறார்." — பாலகோபாலி உள்ளே போக, அதற்குள் தனது நிலவுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு விண்ணுலகத்திற்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார், முன்னாள் தலைமை அமைச்சர், மச்சவாசுதேவர்.

மீண்டும் ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர், மூவரும். அனைவருமே மௌனமாகப் பயணித்துக் கொண்டிருக்க, மகேந்திரனின் சிந்தை மட்டும் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது.

அன்றொரு நாள், சௌரப பண்டிதர் இவனிடம் கேட்ட கேள்வி மகேந்திரனின் செவிகளில் ரீங்கரித்தன.

'உங்கள் தந்தை சிம்மவிஷ்ணுவுக்கு உங்களைத் தவிர வேறு யாராவது ஒரு மகன் இருக்கின்றாரா?' பண்டிதர் கேட்டாரே.

'என்னைத் தவிர மன்னர் வேறு யாரையும் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. எங்களுக்குப் பிறந்தது மகேந்திரன்

ஒருவனே..' என்று இவனது தாய் புவனமாதேவியும் உறுதியாக மறுத்திருந்தாளே.

'இல்லை ராஜமாதா! காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிவது போன்று பல்லவ இரத்தம் தனியாகப் பிரிந்து சிற்றாறாக இன்னொரு கிளை ஓடுகிறது. அந்த பல்லவத்தின் ரத்தம் விதைத்துள்ள வினைதான் வர்மகேது குளிகம், பல்லவ அரச குடும்பத்தில் மனக் குழப்பங்களை உண்டாக்குகின்றது. தற்கொலை எண்ணம், காணாமல் போதல், துர்மரணங்கள், மனக்குழப்பத்தால் செய்வதை அறியாமல் கேடான செயல்களில் ஈடுபடுதல் போன்ற விபரீதங்களை அரச குடும்பத்தில் நிகழ்த்துகிறது.' — பண்டிதர் எச்சரித்திருந்தாரே.

அவனிசிம்மனாக அவனது தந்தை ஒரு மனைவியை மட்டுமே கொண்டிருக்கக்கூடும். ஆனால் சிம்மவிஷ்ணு என்கிற மற்றொரு பெயரும் அல்லவா அவருக்கு இருந்தது. மகேந்திரனுக்கு ஏதோ புரிவது போன்று இருந்தது.

அன்றிரவு —

அரண்மனை உப்பரிகையில் மச்சவாசுதேவரின் மாளிகையில் அவரது அந்திமச் சமயத்தில் தங்களிடம் தெரிவித்ததை விவரித்துக் கொண்டிருந்தான், பீமவர்மன். "குளத்தின் தென்கரையில் வசித்த மச்சவாசுதேவரை நாம் குறிவைத்தோம். ஆனால் குற்றவாளி வடகரையில் இருந்த ஒருவன். நாட்டியக்காரி வித்யுதாவின் மகன். மீனலோச்சனியின் மகன் என்பதால், சௌரப பண்டிதர் குளத்தில் நீந்தும் மீன் என்று கூறியிருக்கிறார். நாம் மச்சவாசுதேவரை சந்தேகித்துவிட்டோம்." — மகேந்திரன் கூறினான்.

ராஜவர்மன், விண்ணில் ஜொலித்துக் கொண்டிருந்த தாரகைகளையே நோக்கினான்.

"உண்மைதான்! வித்யுதாவுடன் சரசமாடிக் கொண்டிருந்தான், அவனிசிம்மன். எனவேதான், எனது தம்பி விஜயவர்மன் அவளிடம் முறை தவறி நடந்த போது மிகவும் அதிர்ச்சி அடைந்தான், ஜெயவர்மன். 'அண்ணனின் பிரிய நாயகியிடம் உரிமை எடுத்துக் கொள்வதற்கு ஒரு தம்பிக்கு எப்படி மனம் வரும்?' என்று என்னிடம் புலம்பிக் கொண்டே இருந்தான். அவனிசிம்மன் வித்யுதாவிடம் வாழ்ந்ததை வெளியே கூறவே இல்லை. திடீரென்று ஒரு நாள் அவள் தற்கொலை செய்து கொண்டாள். ஆனால் நீ கூறிய பிறகுதான் தெரிகிறது, அவளுக்கு அவனிசிம்மன் மூலமாக ஒரு மகன் பிறந்திருப்பது." — மனம் வெதும்பினான், ராஜவர்மன்.

"அவளது மரணமும் தற்கொலை அல்ல. கொலை என்றார், மச்சவாசுதேவர்." — மகேந்திரன் கூறினான்.

"என்றால் கொலை செய்தது..?" — ராஜவர்மன் கேட்டான்.

அங்கே நீண்ட அமைதி நிலவியது. யார் கொலை செய்திருக்கக்கூடும் என்பது ஒரே சமயத்தில் அங்கிருந்த அனைவரது மனங்களிலும் தோன்றியிருக்க வேண்டும். ராஜஸ்ரீதான் மௌனத்தைக் கலைத்தாள்.

"அரச குடும்பம் என்றதும் நாம் நம்மை விசேடப் பிறவிகளாகக் கருதித் தவறுகளை இழைக்கின்றோம். கர்மா நம்மைக் கைப்பற்றும் போது, நமது குடும்பத்தில் இப்படி நடக்க வசமா என்று பரிதவிக்கிறோம். நாம் செய்த தவறுகளுக்குப் பலனாகத்தான் நமது குடும்பத்தில் விபரீதங்கள் நிகழ்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். அத்திமலைத்தேவன் என்கிற நமது கலியுக தெய்வத்தினை மனம் குளிரச் செய்யத் தவறி விட்டோம். அதனால்தான் அவன் நம்மைவிட்டுச் சென்றுவிட்டான்." — ராஜஸ்ரீ கண்ணீர்விட்டு அரற்றினாள்.

*"சிற்றன்னையே! தாங்கள் தெரிவித்த இதே கருத்தைத் தான் ஒருவன் எனக்குச் சுவடியில் அனுப்பியிருக்கிறான். மல்ல எதி என்று அவனுக்குப் பெயர்."*

*ராஜவர்மன் யோசித்தான். "மகேந்திரா! எனக்குப் புரிகிறது. மச்சவாசுதேவர் பார்த்திருந்த அந்த மர்ம மனிதன்தான் உனக்கு ஓலை அனுப்பியிருக்க வேண்டும். அவனது பெயரின் கீழ் கயல் வரையப்பட்டிருந்ததே." — ராஜவர்மன் கூறினான்.*

*"ஒருவேளை பாண்டிய நாட்டவனோ!" — பிரமதி கேட்டாள்.*

*"அப்படி நாம் நினைக்க வேண்டும் என்றுதான் கயல் சின்னம் வரையப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பாண்டியர்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றே தோன்றுகிறது. மகேந்திரா! நான் சொல்வதைக் கேள்! இப்போதைக்கு இதை எல்லாம் மறந்துவிட்டு, ஆட்சியில் கவனம் செலுத்து. அதுதான் உனக்கும் நல்லது. இந்த நாட்டுக்கும் நல்லது. ஜெயஸ்ரீ மரணம் அடைந்து விட்டாள். புலிகேசியைக் கொல்வதால் அவள் இனி திரும்பி வரப்போவதில்லை. நேர்மறையான எண்ணங் களை வளர்த்துக் கொள்வோம். நானும் ராஜவர்மரும் உனக்குத் திருமணம் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். வேண்டாம் என்று சொல்லாதே.. உனக்கு ஒரு திருமணம் ஆகி, அவள் எங்களுக்கு ஒரு பேரப்பிள்ளையைப் பெற்றுத் தந்தால், எங்களது சோகங்களை நாங்கள் மறப்போம். உனக்காக, வடகங்க மன்னன்*

*** கி.பி. 550இல் கருநாடகத்தை ஆண்ட கங்க அரசர்களில் ஒருவனான துர்விந்தன் என்ற சிறந்த மன்னனின் மனைவியார் நற்குணவல்லி ஒரு சோழ இளவரசியாவாள். அவள் 'உரகபுரத்தை ஆண்ட கரிகால சோழனின் வழிவந்தவனும் பரம சத்திரியனுமான சோழ அரசனின் பெண்' என்று குறிக்கப்பெறுகிறாள். அதைக் குறிக்கும் செப்பேடு 'உரகபுராதிப பரம க்ஷத்திரிய சோழகுலதிலக ஸ்ரீதக்தசரண**

*ஸ்ரீவிக்கிரமனின்* மகள் இளவரசி ராஜசந்தனாவை திருமணம் பேசியுள்ளோம். நீ திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தால் போதும். நாங்கள் மற்றதைப் பார்த்துக் கொள்கிறோம்." — ராஜஸ்ரீ கூறினாள்.*

*"சிற்றன்னையாரே! இப்போது எனக்கு மட்டும் யார் இருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பாக ஒரு நிபந்தனை.." — மகேந்திரன் கூற, அனைவரும் அவன்*

---

சந்தான.' தக்தசரண என்றால் தீயால் கருகிய காலை உடையவன். அவனது சந்தானம் வழி தோன்றிய என்று பொருள். கங்க மன்னன் ஸ்ரீவிக்கிரமன் தனது தங்கை சந்திரமதியை பீமவர்மனுக்கும், தனது மகள் ராஜசந்தனாவை மகேந்திரனுக்கும் திருமணம் செய்து தருகிறான். கங்க அரசன் ஸ்ரீவிக்கிரமன் தனது வசம் உள்ள மேற்கு காடவ பகுதிகளை மாப்பிள்ளை பீமவர்மனுக்குச் சீதனமாகத் தர, மகேந்திரனும், தங்கள் வசம் உள்ள கிழக்கு காடவ பகுதிகளைப் பீமவர்மனுக்குத் தர, இரு காடவ பகுதிகளையும் இணைத்துப் பல்லவ-காடவ சோழனாகத் திகழ்கிறான் பீமவர்மன். அவனது வழியில்-

-புண்ணியகுமார சோழன் 630-655.
-விக்கிரமாதித்த சோழன் 650-680.
-சக்திகுமார சோழன் 680-705.
-விக்கிரமாதித்த சோழன் II 705-730.
-சத்தியாதித்த சோழன் 730-755.

என்று செல்கிறது. பிறகு முழு சோழமாக உறையூரைத் தலைநகராகக் கொண்டு திகழ்கிறது. திருபுறம்பியம் போரில் தனக்கு உதவியதால், அபராஜித பல்லவன் தன்வசம் உள்ள சோழப் பகுதிகளை ஆதித்த சோழனுக்கு அளிக்க, பாண்டியர்களை ஆதரித்த முத்தரைய சோழர்களைத் தஞ்சையில் இருந்து விரட்டிவிட்டுச் சோழ மன்னர்கள் தஞ்சையில் இருந்து ஆட்சி புரிகின்றனர்

விஜயாதித்த சோழன், ஆதித்த சோழன், பராந்தக சோழன், அரிஞ்சய சோழன், சுந்தர சோழன், உத்தம சோழன், ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் என்று செல்கிறது. பல்லவர்கள் அழிந்து சோழர்கள் வசம் காஞ்சி திகழ்வதை நாலாம் பாகத்தில் காணலாம்.

என்ன நிபந்தனையை விதிப்பானோ என்கிற கவலையுடன் அவனைப் பார்த்தனர்.

“எனது முந்தைய தலைமுறை சிற்றப்பா பீமவர்மர் திருமணம் ஆகாமல் இருக்கும் போது நான் எப்படித் திருமணம் செய்து கொள்வது?” அவருக்கு முதலில் திருமணத்தை முடியுங்கள்.” — மகேந்திரன் கூறினான்.

“துறவிக்கு எதற்கப்பா திருமணம்?” — பீமவர்மன் கூறினான்.

“போர் வீரர்களைக் காட்டிலும் துறவிகளுக்குத்தான் பெண்களிடையே செல்வாக்கு அதிகம்.. நீர் மண முடியுங்கள். அடுத்தகணம் நானும் மணமுடிக்கிறேன்.” — உறுதியுடன் கூறினான், மகேந்திரன்.

“அது குறித்து நாங்கள் யோசிக்காமல் இருப்போமா? கங்க மன்னன் தங்கை சந்திரமதியை பீமவர்மனுக்கும், மகள் ராஜசந்தனாவை உனக்கும் பேசி முடித்துள்ளோம். இரு திரும்மண ஏற்பாடுகளையும் நாங்கள் கவனிக்கிறோம். நீ சந்திரகிரி சென்று அத்திமலையான் பிரதிமையை எடுத்து வரும் வழியைப் பார். உனது திருமணத்திற்குள் அத்திமலை வரதனை அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அவன் முன்பாக இந்த இரு திருமணங்களும் நடைபெற வேண்டும். அவனுக்குப் பச்சை சார்த்தி ஆராதனை செய்து, அவனது உக்கிரத்தைக் குறைத்து, நமது குடும்பத்தை அவன் ஆசீர்வதிக்க வேண்டும்.” — ராஜஸ்ரீ கூறினாள்.

“அப்படியே செய்யலாம். அதற்கான ஏற்பாடுகளில் இதோ இறங்குகிறேன்” என்று கூறியபடி தனது நண்பர்கள் தசகுமாரர்களையும், காவல் படையினரையும் அழைப்பதற்காக உப்பரிகையில் இருந்து கீழே வந்தான், மகேந்திரன்.

ஒரு இரதம் வந்து நிற்க, அதிலிருந்து தொண்டரையன் இறங்குவதைக் கண்டு வியப்புடன் நின்றான், மகேந்திரன்.

"தொண்டரையா.. எங்கு போனாய்? உன்னைத் தேடாத இடமில்லை. நீ உயிருடன் இல்லை என்றே தசகுமாரர்கள் என்னிடம் கூறினார்கள். எங்கு தொலைந்து போனாய்?" — என்று கேட்டவன், அவனது பின்பாக இறங்கும் பாரவியைக் கண்டான். யார் அவன் என்று தனக்குள் யோசித்தபடி தனது நடையின் வேகத்தைக் குறைத்தான். அடுத்து இறங்கிய உருவத்தைக் கண்டதும் அவனது நடை தானாகவே நின்று போனது. ஆயிரம் மின்னல்களைத் தேகமாகத் திரட்டி, வெண்மதியை முகமாக அமைத்து, அலைபாயும் வேகவதியை கூந்தலாகப் புரளவிட்டு, காந்த சக்தியைக் கண்களில் நிரம்பக் கொண்டிருந்தவளாக இறங்கும் அந்த மோகினியை முதன்முதலாகக் கண்டான். அவந்திகாவை கண்டு சிலையாக நின்ற மகேந்திரனிடம் சென்றான் தொண்டரையன்.

"மகேந்திரா! உனக்கு அத்திமலைத்தேவனைத் தேடிக் கண்டுபிடித்துப் பரிசளிக்க நினைத்தேன். ஆனால் தேவ உடும்பர சிலை கிடைக்கவில்லை. தேவ கன்னிகையின் சிலைதான் கிடைத்தது. அத்திமலையானைப் போன்றே நெருப்பில் உருவானவள். காதலை அருள்பாலிப்பவள். இவளை அடைய வேண்டும் என்பதற்காகவே மன்னர்கள் போர் புரிந்து வெற்றி பெற வேண்டும் என்று துடிப்பார்கள். இந்த வாதாபி நகரப் புலவர் பாரவியின் அடிமை அவள். பாரவி வாதத்தில் என்னிடம் தோற்று என்னுடைய அடிமையானார். நான் உனது அடிமை. இந்த அடிமைச் சங்கிலியின்படி இவள் இப்போது உன்னுடைய அடிமை. அவளது பெயர் அவந்திகா. சைந்தவ நாட்டின் இளவரசி!" — என்றான் தொண்டரையன்.

அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரனின் மனம் படபடத்தது. உள்ளே ஓடிச்சென்று ராஜஸ்ரீயிடம் சொல்லத் துடித்தான்.

'சிற்றன்னையே, ராஜசந்தனாவை மறந்துவிடுங்கள். எனது இதயம் கவர்ந்த தேவதையைக் கண்டேன். அவள் பெயர் அவந்திகா..!'

ஒருகணம் தனது ஒத்தாடை அரண்மனையை முழுவதுமாக நோக்கினான், மகேந்திரன். இந்தப் பேரழகியை இந்தப் புராதன மாளிகையிலேயா தங்க வைப்பது? வடபுலத்திலிருந்து வந்திருப்பவள். நமது பல்லவத்தின் நாகரிகத்தைக் கண்டு மலைக்க வேண்டாமா..? இவளுக்காக ஒரு கனவு மாளிகையைப் பரிசளித்து அவளை அதில் தங்க வைக்க வேண்டும். அத்திமலைத்தேவன் என்கிற பொக்கிஷத்தைத் தேடுவதற்குப் புறப்படும் போதே, ஒரு பொக்கிஷம் வந்து அவன் முன்பாக நிற்கின்றதே! உற்சாகத்துடன் நின்றான் மகேந்திரன்..

"பாரவி, அவந்திகா! இவர்தான் மகேந்திர பல்லவ மன்னன்!" — அறிமுகம் செய்தான் தொண்டரையன். மகேந்திரனின் கம்பீரத்தில் ஈர்க்கப்பட்ட பாரவி அவனை நோக்கி வணங்க, அவந்திகா மட்டும் கண்களைத் தாழ்த்தியபடியே அவனை நோக்கிப் பணிந்தாள்.

புலிகேசியைக் காட்டிலும் கம்பீரமாக இருக்கிறான். ஆனால் கரிய நிறத்தில் இருக்கிறான். புலிகேசி மூர்க்கன்! இவன் எப்படிப்பட்டவனோ? ஆனால் ஒன்று மட்டும் உறுதி! இவளது காதலைப் பெறுவதற்குப் புலிகேசி, மகேந்திரன் இருவருக்குமே தகுதி இல்லை. இவளது மனதைப் பறிக்கக் கூடிய ஆண்மகனை தான் இன்னும் சந்திக்கவில்லை என்பதை மட்டும் உணர்ந்து கொண்டாள், அவந்திகா.

தொண்டரையனை தன்னருகே அழைத்த மகேந்திரன், அவனது செவிகளில் ஏதோ கிசுகிசுத்தான்.

# 34. ஆதியில் பாதி.. பாதியில் காளி!

**சி**ம்மகிரி — *

*மகேந்திரனின் படைகள் சந்திரகிரிக்கு முன்பாகவே நின்ற சிம்மகிரியின் அடிவாரத்தை அடைந்தன.*

---

* சிம்மகிரி தற்போது செஞ்சிக்கோட்டையில் உள்ள உதயகிரி, ராஜகிரி, மற்றும் சந்திரகிரி என்கிற மூன்று மலைகளின் வடக்கே பதினோரு கி.மீ.-ல் உள்ளது. அதனை இப்போது சிங்கவரம் என்று அழைக்கின்றனர். சிம்மகிரி பிரபலமாக இருந்த காலத்தில் செஞ்சி கோட்டை கட்டப்படவில்லை. பசுக்களை மேய்த்து நாடு விட்டு நாடு சென்று பால் வியாபாரம் செய்து வந்த யாதவர் என்கிற ஆய் மக்கள் தங்களது பசுக்களுடன் சிம்மகிரிக்கு வந்தவர்கள், அங்கே ஆளரவமற்ற மலைகளில் குடியேறினர். யாதவர் என்கிற வடபுலத்து அடையாளத்தைத் துறந்து கோனார் என்று தங்களை அழைக்கத்தொடங்கினர். 'கோ' என்றால் தமிழில் பசு. 'கோ'வை பராமரிப்பதால் கோனார்கள் ஆயினர். விரைவிலேயே கோனார் ராஜ்யத்தையும் உருவாக்கினர். அவர்கள்தான் செஞ்சியை முதலில் உருவாக்கினர். கோனார் ராஜ்யப் பெண்கள் மிகவும் அழகாக இருப்பார்கள். எனவே தாங்கள் பசுவை மேய்க்கச் செல்லும் போது, படையெடுப்பு நடந்தால், பெண்கள் தப்பிச் சென்று சிம்மகிரி குகைகளில் ஒளிவதற்காக ராணிமலை என்கிற சந்திரகிரியில் இருந்து சிம்மகிரிக்கு ஒரு குகையை ஏற்படுத்தினர். களப்பிரர் படையெடுப்பால் ஆதிரங்கனை தரிசித்துவிட்டு அந்த மூன்று மலைகளில் குடியேறினார்கள். இந்த மலைகளின் வடக்கே, பதினோரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலையின் மீது ஆதிரங்கம் என்கிற ரங்கநாதர் கோயிலும், சமணத் தீர்த்தங்கரர் ஆதிதேவருக்குப் பசடியும் உள்ளன. களப்பிரர் இந்த மலையைக் கைப்பற்றியதும், குடைவரைக் கோயிலான ரங்கநாதர் கோயிலில் ஆராதனை நின்று போய், மீண்டும் மகேந்திரன் இந்த மலையில் ஆராதனையைத் தொடங்கி வைத்தான்.

*அந்த மலையின் தெற்கே நின்ற மூன்று மலைகளைச் சுட்டிக்காட்டினான், பீமவர்மன். "மகேந்திரா! அதோ தெரிவதுதான் மூன்றாம் மதிமலை என்கிற சந்திரகிரி. எப்படிப் பார்த்தாலும் அது மூன்றாம் மதிமலைதான். கலிங்கத்தில் நீ சென்ற சந்திரகிரி முதல் மதிமலை. வேங்கடத்தில் உள்ள சந்திரகிரி இரண்டாம் மதிமலை. இதோ.. மூன்று மலைகளின் கடைசியில் நிற்கும் இந்தச் சந்திரகிரி மூன்றாம் மதிமலை. அதன் வடக்கே நாம் நிற்பதுதான் வன அரசனான சிம்மகிரி. இதன் மேலே இரண்டு ஆதிகள் உள்ளன. ஆதிரங்கம் என்கிற ரங்கநாதன் கோயில், ஆதிதேவர் என்கிற சமணத் தீர்த்தங்கரரின் பசடி. இந்த இரண்டு ஆதிகளுக்கும் நடுவேதான் பல்லவத்தின் பொக்கிஷம் உள்ளது. நாம் உடனே அங்கே செல்வோம்."*

*சமணத் துறவியாகப் பீமவர்மன் வசித்த இடம் என்பதால் மிக எளிதாக அவனால் ரணதிலகன் விடுத்த*

---

அதன் பிறகு சிவாஜி, விஜயநகர மன்னர்கள், நாயக மன்னர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர் இதனைக் கைப்பற்றினர். சத்ரபதி சிவாஜி செஞ்சி கோட்டையினை யாராலும் புக முடியாத கோட்டை என்று பாராட்டினான்.

ஆங்கிலேயர்கள், செஞ்சிகோட்டையை Troy of India என்று அழைத்தனர். திருவரங்கத்தின் மீது மாலிக்காபூர் படை எடுத்த போது வெளியேறிய நம்பெருமாள் என்கிற ரங்கநாதர், திருமலையில் உள்ள ரங்க மண்டபத்தில் இருந்து வெளி யேற்றப்பட்டதும், இங்கே சந்திரகிரியில்தான் ஒளிந்திருந்தார். ஆதிரங்கநாதர் ஆலயத்திலிருந்துதான் அவருக்கு நிவேதனம் சென்றதாம். செஞ்சிமலை கோட்டையை உருவாக்கியவர்கள் கோனார்கள். இவர்கள் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள். மாடுகளை வனவிலங்குகள் வேட்டையாடக் கூடாது என்று கையில் சிலம்பம் ஏந்தியிருப்பார்கள். ஜல்லிக் கட்டு, சிலம்பம் சுழற்றுவது இவர்களின் வீர விளையாட்டுகள். கோனாரின் வீரத்தைப் பற்றிக் கலித்தொகை கூறும் விவரம் இது:

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்..

- கலித்தொகை, முல்லைக் கலி, பாடல் 103, வரிகள் 63-64

*புதிரின் விடையை அறிய முடிந்தது. அனைவரும் ஆதிரங்கன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டனர். குகையில் எழுந்தருளியிருந்த ரங்கநாதர், எவ்வித ஆபரணங்களும், மலர்மாலைகளும் இன்றி வெறும் வேட்டி ஒன்றை அணைந்து பரிதாபமாகக் காணப்பட்டார்.*

*'எங்கள் பல்லவப் பொக்கிஷங்களுக்குக் காவலாக இருந்திருக்கும் உங்களது ஆலயத்தை மீண்டும் செப்பனிட்டு, ஆராதனைகளை ஏற்படுத்துகிறேன்!' — மனதிற்குள் வேண்டினான், மகேந்திரன்.*

*அரங்கனை வழிபட்டதும், மகேந்திரன், பீமவர்மன் மற்றும் தசகுமாரர்கள் அனைவரும் அரங்கன் ஆலய மண்டபத்தின் வெளியே வந்தனர். அரங்கன் ஆலயத்தின் தென்கோடியில் ஆதிதேவரின் சமணப் பசடி ஒன்று காணப்பட்டது.*

*"அதோ அதுதான், ஆதிதேவரின் பசடி. அந்தப் பசடியின் பின்புறம் ஒரு பெரிய குகை உள்ளது. அதில்தான் துறவிகளாக நாங்கள் தங்கியிருந்தோம். இந்தப் பசடிக்குதான் நவரத்னாவின் கணவன் ரணதிலகன் அடிக்கடி வருவான். தான் கொள்ளை யடித்த பல்லவப் பொக்கிஷங்களை ஒளித்து வைக்க இங்கே வந்திருக்கக் கூடும்.." — என்று கூறியவாறே, ஆதிரங்கன் ஆலயத்திற்கும் ஆதிதேவன் பசடிக்கும் மையத்தில் இருந்த வெட்டவெளிப் பகுதிக்கு அனைவரையும் அழைத்துச் சென்றான்.*

*பீமவர்மன் மகேந்திரனை ஆர்வத்துடன் நோக்கினான். "மகேந்திரா! ரணதிலகன் சுவடி கூறியதை நினைவுபடுத்திப் பார்!*

**'வெள்ளை களர்குலம்**
**வளர்த்த மூன்றாம் மதிமலை**
**குபேரன் திக்கில் நிற்கும்**
**வனவரச துர்க்கையின் வசம்**

**கிடக்கும் ஆதி ஒருபுறம்**
**நிற்கும் ஆதி மறுபுறம்'**

என்றானே. சரியாக அந்த இடத்தில் நிற்கிறோம். இங்கே இருக்கும் சிற்பங்களில் உனக்கு ஏதாவது புலப்படுகிறதா என்று பார்?" — பீமவர்மன் கூறினான்.

மகேந்திரன் தனது பார்வையைச் சுழலவிட்டான்.

இரு வழிபாட்டு தளங்களிடையே இருந்த அந்தத் திறந்த வெளியில் நிறைய சிற்பங்கள் காணப்பட்டன. தசாவதாரச் சிற்பங்கள், கருடன், குதிரை, யாளி, நாட்டியமாடும் தேவ கன்னிகைகள் என்று சிற்பங்கள் நிறையவே காணப்பட்டன. இவற்றில் ஏதோ ஒரு சிற்பத்தின் கீழேதான் அத்திமலைத்தேவன் இருக்கிறான். உற்சாகத்துடன் சுவடி தகவலை மீண்டும் நினைவு கூர்ந்தான், மகேந்திரன்.

'காளியின் பாதி உக்கிரம், சிம்மத்தின் சீற்றம், யானையின் மதம் கொண்டு நிற்கும் உருவம் எது?' — மகேந்திரன் ஒவ்வொரு சிற்பமாகக் கவனித்தான். காளியின் சிற்பம் எதுவும் அங்கே காணப்படவில்லை. யானையின் சிற்பமோ, சிங்கத்தின் சிற்பமோ எதுவுமே அங்கே இல்லை. பின் எதற்காக, காளியின் உக்கிரம், சிம்மத்தின் சீற்றம் யானையின் மதம் என்று கூறப்பட்டது? அவனது கண்கள் அங்கிருந்த யாளியின் சிற்பம் மீது பதிந்தது. யாளி வடக்கு திசையைப் பார்த்து நின்றது. மற்ற சிற்பங்கள் கிழக்கு திசையைப் பார்த்து நின்றன. அந்த யாளியின் சிற்பத்தையே வெறித்துப் பார்த்து நின்றான்.

மிக அழகாக வடிக்கப்பட்டிருந்தது அந்தச் சிற்பம். சிம்மத்தைப் போன்றே உடல்வாகு கொண்டிருந்த அந்த யாளியின் முகத்தில் நீண்ட துதிக்கை காணப்பட்டது. அந்தச் சிற்பத்தையே வெறித்துப் பார்த்தான். உடல்வரை சிம்மம், முகத்தில் யானையின் துதிக்கை..! யோசித்தவனின் சிந்தையில் கற்பூரமாக பற்றிக் கொண்டது விடை.

இதோ.. யானையின் மதம், சிங்கத்தின் சீற்றம் ஒருங்கே கொண்ட மிருகம் யாளி. அதன் சிற்பம்தான் விடை. காளியின் பாதி உக்கிரம் என்பது காளியின் பெயரில் பாதியினைக் கொண்டிருக்கும் யாளி சிற்பத்தின் அடியில்தான் அத்திமலைத்தேவன் இருக்கிறான்.

தனது அனுமானத்தைப் பீமவர்மனிடம் கூற, அவன் "பலே!" என்று மகேந்திரனின் முதுகில் தட்டினான்.

மகேந்திரன் தொடர்ந்தான். "மூன்றாம் மதிமலையின் குபேரத் திக்கில் வனவரசனாகிய நாம் நிற்கும் சிம்மகிரி உள்ளது. இங்கே யாளியின் சிற்பமும் குபேரத் திக்கு என்கிற வடதிசையை நோக்குகின்றது. குபேரனை எமனாக்கினால் பொக்கிஷங்கள் கிடைக்கும் என்கிறது சுவடி. என்றால், வடதிசையை நோக்கும் இந்த யாளியின் சிற்பத்தினை எம திக்கு என்கிற தென்திசையை நோக்கித் திருப்பினால், பொக்கிஷங்கள் கிடைக்கும் என்கிறான் ரணதிலகன்."

மகேந்திரன் இங்ஙனம் கூறியதும், அவனது உத்தரவுக்குக் கூடக் காத்திராமல் தசகுமாரர்கள் அந்த யாளியின் சிற்பத்தைச் சூழ்ந்து நின்று அதனைத் திருப்பத் துவங்கினர்.

ஆனால் சிற்பம் அசைந்து கொடுக்கவில்லை. உடனே, பிரமதி தனது வாளை உருவி, சிற்பத்தின் அடிபாகத்தில் வளர்ந்திருந்த புல்லை வெட்டத்துவங்கினான்.

"பலே.. மகேந்திரா! பிரமதியின் வாள் போர்க்களத்தில் மனிதத் தலைகளை வெட்டியதில்லையே தவிர, நன்றாகவே புல் வெட்டுகிறது!" — உபஹாரன் சிரித்தான்.

புற்களை நீக்கி, சிற்பத்தின் அடியில் படிந்திருந்த மண்ணை அப்புறப்படுத்தியதும், மீண்டும் சிற்பத்தைத் திருப்ப முயன்றனர், தசகுமாரர்கள். இப்போது சிற்பம் அசைந்து கொடுத்தது. அதைப் பலங்கொண்ட மட்டும்

நகர்த்த, யாளியின் சிற்பம் தெற்கு திசையை நோக்கித் திரும்பியது.

சிற்பத்தின் கீழே நோக்கியவர்கள் சுவாசிக்கக் கூட மறந்தனர். சிற்பம் நின்ற இடத்தில் ஒரு வழி புலப்பட்டது. ஒன்றிரண்டு அடிகள் நகர்ந்து உள்ளே எட்டிப் பார்த்தான், மகேந்திரன். அந்த உச்சி வெயில் வேளையிலும், குகை தன்னுள் வெளிச்சத்தை அனுமதிக்க மறுத்தது.

“சுளுந்துகளை ஏற்றிக் கொண்டு வாருங்கள்!” — பீமவர்மன் உத்தரவிட, நான்கைந்து சுளுந்துகள் கொண்டு வரப்பட்டன.

“என்ன கொடுமை பார், மகேந்திரா! இதே யாளியின் சிற்பத்தின் கீழே அமர்ந்து நான் தியானம் செய்திருக் கிறேன், எனக்குக் கீழேதான் அத்திமலையான் இருக்கிறான் என்பதை அறியாமல்!” என்ற பீமவர்மன், தன்னிடம் நீட்டப்பட்ட சுளுந்தினை பெற்றுக் கொண்டு முதல் மனிதனாக அந்தக் குகையினுள் இறங்கினான். அவனைத் தொடர்ந்து மகேந்திரனும், தங்கள் மன்னனைத் தொடர்ந்து தசகுமாரர்களும், அவர்களைத் தொடர்ந்து காவல்படை வீரர்களும் இறங்கினர்.

குகையின் நுழைவுப் பகுதி சற்றே ஆழமாக, உள்ளே குதிக்கும்படியாக இருந்தது. ஆனால் அங்கிருந்து இறங்கிச் செல்வதற்குப் படிகள் இருந்தன. அனைவரும் படிகளில் இறங்கத் துவங்கினர். ஒரு ஐம்பது படிகள் இறங்கியதும், சமதளப் பாதை ஒன்று வந்தது. அந்தப் பாதை நீண்டு கொண்டே செல்ல, பாதையின் இருமருங்கிலும் மலையில் குடைந்து உருவாக்கப்பட்ட சிறு சிறு அறைகள். அந்த அறைகளில் —

அனைவரும் பிரம்மித்துப் போய் நின்றனர். தங்களது பல்லவம் இவ்வளவு செல்வந்த நாடா? பல்லவத்தில் இருந்து மட்டும் கொள்ளையடிக்கப்பட்ட

பொக்கிஷங்களா, இல்லை, சோழம், பாண்டியம் மற்றும் சேரத்தை சேர்ந்த பொக்கிஷங்களும் உள்ளனவா?

எங்கு நோக்கினும் ஸ்வர்ண கட்டிகள்.. ஆபரணங்கள், நவரத்ன கற்கள், ஐம்பொன் சிலைகள், வெள்ளி விக்கிரகங்கள், பட்டு வஸ்திரங்கள்.. எந்தெந்த ஆலயங்களில் களவாடப்பட்டவையோ? எந்தெந்த அரண்மனைகளில் சூறையாடபட்டனவோ? எத்தனை வழிப்போக்கர்களிடம் பறிமுதல் செய்யப்பட்டன வையோ..?

"அனைத்தையும் கைப்பற்றி பல்லவக் கஜானாவில் சேர்த்துவிடுங்கள்." — மகேந்திரன் உத்தரவிட்டான்.

மகேந்திரனும், பீமவர்மனும், தசகுமாரர்களும், அந்தப் பாதையில் தொடர்ந்தனர். கையில் ஏந்திய சுளுந்து களுடன், இருபுறமும் நோட்டம்விட்டனர். சந்திர கிரிவரை அந்தப் பாதை தொடர்ந்தது. அவர்களின் எதிரே வட்டவடிவில் கதவு ஒன்று தெரிய, அவர்களிடையே பரபரப்பு.

அந்தக் கதவின் பின்பாக அத்திமலைத்தேவன் இருக்கக்கூடும். ஆர்வத்துடன் தசகுமாரர்கள் அந்தக் கதவைத் தள்ள, பளீரென்று சூரிய ஒளி அவர்களது கண்களைக் கூசச் செய்தது.

வெளியே வந்து தங்களைச் சுற்றி நோக்க, இப்போது அவர்கள் சந்திரகிரி மலையின் மீது நின்றிருந்தனர். தொலைவில் அவர்களை நையாண்டி செய்வது போல் தெரிந்தது, சிம்மகிரி ஆதிரங்க ஆலயத்தின் கோபுரம்.

அத்திமலையான் சிலை கிடைக்கவில்லை. மகேந்திரன் ஏமாற்றத்துடன் அங்கிருந்த பாறை ஒன்றின் மீது அமர்ந்தான்.

# 35. கடல்மல்லையில் காதல் கோட்டை!

ஒத்தாடை அரண்மனையில் தனக்கு ஒதுக்கப்பட்ட ஜாகையில் அமர்ந்து தலைவிதியே என்று அமர்ந்து சாளரத்தின் வழியே தெரிந்த ஒத்தாடையான் கோயில் கோபுரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவந்திகா. முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை. வித்தியாசமான மனிதர்கள். சைந்தவத்தைச் சேர்ந்த இவள், வாதாபி புலிகேசியிடம் சிக்கி, காஞ்சி மகேந்திர பல்லவனின் அரண்மனையில் அடிமையாகத் திகழ்வோம் என்று சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஒருமுறை இவளது தந்தை தந்திதுர்கன் கூடக் கேட்டிருந்தான்.

"அவந்திகா! ஹர்ஷன் என்னிடம் மிகவும் நட்பு பாராட்டுகிறான். எனக்குப் பல உதவிகளைச் செய் கிறான். ஒருவேளை, உனது பேரெழிலால் கவரப்பட்டு, எனக்கு நட்புக்கரம் பாராட்டுகின்றானோ என்று சந்தேகமாக உள்ளது. அதிக வயது வித்தியாசம் இல்லையென்றால், உன்னைப் பெண் கேட்டிருப்பான் என்று நினைக்கிறேன்.." — தந்திதுர்கன் கேட்ட போது இவள் அலட்சியமாகப் பதில் கூறியிருந்தாள்.

"நான் பிராயக் கணக்குகளைப் பார்க்கவில்லை தந்தையே! ஹர்ஷன் மாபெரும் வீரர். அவரைத் திருமணம் செய்து கொள்ளக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால் வயது மூத்தவர் என்பதால் நான் அவரை நிராகரிக்கவில்லை. எனது ஆசை, இறுதிவரை சைந்தவத்து அரசியாக இருக்க வேண்டும் என்பதே.

உங்களுக்கோ மகன் இல்லை. மகனுக்கு மகனாக, நானே சைந்தவத்தை ஆளப்போகிறேன். ஆனால், என்னுடன் சைந்தவத்தில் வாழச் சம்மதிக்கும் இளவரசன்தான் எனக்கு நாதன்!" என்று உறுதிபடக் கூறியிருந்தாள், அவந்திகா. ஆனால் நடப்பது என்ன?

மூர்க்கன் புலிகேசியிடம் சிக்கி, இப்போது பல்லவ மகேந்திரனின் கைதியாக அடைபட்டுக் கிடக்கின்றாளே! இந்தப் பகுதியின் மொழியும் இவளுக்குப் புரியவில்லை. அவர்களது நாகரிகங்களும் இவளுக்குப் பழக்கமில்லை. சோர்ந்து போய் அமர்ந்திருந்தாள் அவந்திகா. ஹர்ஷரின் உதவியோடு, தந்தை தன்னை மீட்டெடுப்பான் என்கிற நம்பிக்கையும் தகர்ந்துவிட்டது. ஹர்ஷரை வென்ற புலிகேசி, இவளது தந்தையைக் கைது செய்து தனது சிறையில் அடைத்திருந்தான். ஹர்ஷன் எந்த உதவியும் செய்யவில்லை என்பதோடு, சைந்தவத்தைத் தனது வாதாபி சாளுக்கியத்தோடு இணைத்த புலிகேசியின் செயலுக்கு ஆதரவும் நல்கிவிட்டான். ஆக, சைந்தவத்தின் மகாராணியாகக் கோலோச்சப் போகும் இவளது கனவு நிறைவேறப் போவதில்லை.

சோர்வுடன் அமர்ந்திருக்க, அவளது அறையின் கதவு தட்டப்பட்டது.

"ஆகஸ்ச!" — என்று தேவமொழியில் உள்ளே வரலாம் என்று குரல் கொடுத்தாள், அவந்திகா.

தொண்டரையன்தான் உள்ளே வந்தான். "சிரமப் படாதே இளவரசி! எனக்குப் பாலி மொழி தெரியும். பாலி மொழியில் நீ என்னுடன் உரையாடலாம்" என்றவன், "உடனே புறப்படுங்கள்!" என்றான்.

"எங்கே?" — சந்தேகத்துடன் கேட்டாள் அவந்திகா.

"இங்கே அரண்மனையில் தங்களுக்கு வசதிகள் போதாது. உங்களுக்காகத் திருகடல்மல்லையில் அழகிய

மாளிகை ஒன்றை மன்னர் எழுப்பியிருக்கிறார். அதற்கு அவந்திக பவனம் என்று தங்கள் பெயர்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை பல்லவத்தில் இவ்வளவு பிருமாண்டமான மாளிகையில் யாரும் வசித்தது கிடையாது. வாருங்கள். உங்களது அவந்திக பவனத்தில் உங்கள் புது வாழ்க்கையைத் தொடருங்கள்.." — தொண்டரையன் கூறினான்.

அவந்திகாவுக்குத் தேகம் சில்லிட்டது. எப்போது ஒரு அழகிக்காக ஒருவன் மாளிகை கட்டுகிறானோ, அவனது காமக்கிழத்தியாளாகத்தான் அந்த அழகி காலமெல்லாம் கழிக்க வேண்டியிருக்கும் என்பதை அறியாதவளா என்ன?

"எனக்கு விருப்பமில்லை. என் பெயரில் மாளிகைகள் எல்லாம் தேவையில்லை. நான் இங்கேயே இறந்து போனால் கூட, எனக்குப் பல்லவத்தில் நினைவிடம் அமைக்கத் தேவையில்லை. என்னை விட்டுவிடுங்கள். நான் சைந்தவத்திற்கே போகிறேன். சாதாரண ஒரு குடிமகளாக அங்கேயே எனது காலத்தைக் கழிக்கிறேன்." — அவந்திகா அலறினாள்.

"எனது மன்னர் மகேந்திரன் உன் மீது காதல் கொண்டுவிட்டார். அவருக்காகத்தான் நான் பாரவியை வென்று உங்களை இங்கே அழைத்து வந்தேன். அவர் அமைத்திருக்கும் காதல் மாளிகையை ஒருமுறை பாருங்கள் இளவரசி. பிரமித்துப் போவீர்கள். அதனைப் பார்த்தவுடன் உங்களுக்கு அவர் மீது காதல் பிறக்கும்." — தொண்டரையன் கூறினான்.

"ஒரு மனிதனின் தோலின் கீழே குருதியும், மாமிசமும், மலமும், சீழும்தான் உள்ளன என்று அனைவரும் அறிவோம். அருவருக்கத்தக்க இந்தத் தேகத்தை மீறி எதனால் காதல் வயப்படுகிறோம்? ஒருவர் செய்யும் நல்ல காரியங்கள் அவனுக்கு மெருகை உண்டாக்குகிறது. அவன் முகம் கம்பீரமாக மிளிர்கின்றது. தேகத்துக்கு

மெருகு ஏறுகிறது. சாதாரண மாமிசப் பிண்டம் தேஜசத்தால் முகம் ஜொலிக்கிறது. அந்தத் தேஜசத்தைக் கண்டுதான் பெண்களும், ஆண்களும் காதல் வயப்படுகின்றனர். ஒரு பெண்ணை அடிமைப் பொருளாகக் கருதும் உங்கள் மன்னனின் காதல் என்னை ஈர்க்கவில்லை. அவரிடம் நான் சுத்த சத்வத்தையும் காணவில்லை, தேஜசத்தையும் காணவில்லை. அமரலோகத்தையே நீங்கள் குறிப்பிடும் கடல்மல்லையில் கொண்டு வைத்தாலும் கூட, நான் மலைக்கமாட்டேன். எனக்குக் காதலை ஏற்படுத்தக்கூடிய ஆண்மகன் இன்னும் இந்த வையத்தில் பிறக்கவில்லை என்று நினைக்கிறேன். இனி பிறந்தாலும் கூட, நான் அவனை ஏற்க முடியாது. எனவே.. என்னை சைந்தவம் அனுப்பிவிடுங்கள்." தொண்டரையனிடம் கெஞ்சினாள் அவந்திகா.

"கோரிக்கைவிடும் நிலையில் நீங்கள் இல்லை இளவரசி அவந்திகா. புறப்படுங்கள் திருகடல்மல்லைக்கு.. வழியில் எங்கள் அத்திமலைத்தேவனின் ஆலயம், முக்கூடல் கடிகை, முக்கூடல் சங்கமம் ஆகியவற்றைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்பது மகேந்திர பல்லவரின் உத்தரவு!" — தொண்டரையன் கூறினான்.

மளுக்கென்று அவந்திகாவினுள் ஏதோ முறிந்தது.. இளவரசியாக மட்டும் அல்ல, ஒரு சாதாரணப் பெண்ணிற்கு உரிய அபிலாஷைகளை கூட இவள் வைத்துக் கொள்ள முடியாது. முரடனாகவும், கோபக்காரனாகவும் திகழும் புலிகேசியிடம் கூட இவள் அஞ்சவில்லை. ஆனால் நெடிய உருவமும், அடர்ந்த மீசையும், சிவந்த கண்களும், கனத்த குரலும் கொண்ட மகேந்திரனைக் காணும் போது அவளுள் இனம்புரியாத ஒரு கலக்கம் தோன்றியது. புலிகேசியைப் போன்று மகேந்திரன் இவள் முன்பாக ஆவேசப்பட்டதோ, கோபப்பட்டதோ கிடையாது. இருப்பினும், அவன்

கடைப்பிடித்த மௌனம்தான் அவந்திகாவை அச்சுறுத்தியது.

தலைவிதியே என்றுதான் தொண்டரையன் சுட்டிக்காட்டிய இரதத்தில் ஏறினாள், அவந்திகா.

"பாரவி எங்கே?" — திகைத்தாள் அவந்திகா.

"அவந்திக பவனம் உங்களுக்கு மட்டும்தான். பாரவி இங்கே ஒத்தாடை அரண்மனையில்தான் இருக்கப் போகிறார்." — தொண்டரையன் கூற, அவந்திகா பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

அத்திமலைத்தேவனின் ஆலயத்தின் முன்பாகத் தனது இரதத்தை நிறுத்திய தொண்டரையன் அவந்திகாவை நோக்கினான்.

"எங்கள் காஞ்சியின் விதையே இந்த அத்தி மலைத்தேவன். அவனைத் தரிசியுங்கள்! உங்களுக்கு மனநிம்மதி கிடைக்கும்." — தொண்டரையன் கூறினான்.

"நீங்கள் மற்றவரது மனநிம்மதியைக் குலைப்பீர்கள். பிறகு உங்கள் அத்திமலைத்தேவன் அவர்களுக்கு மனநிம்மதி அளிப்பானா? எங்களுக்கு மனநிம்மதி தருவதற்குப் பதிலாக, அவன் உங்களுக்கு நல்ல இதயத்தையும், புத்தியையும் கொடுக்கலாமே?" — நிஷ்டூரமாகக் கூறினாள், அவந்திகா.

தனது கோபங்கள், ஆத்திரங்கள், துக்கங்கள் அனைத்தையும் சற்று நேரம் மறந்து அத்திமலையில் அருள்பாலித்துக் கொண்டிருந்த வரதநாராயணப் பெருமாளை வியப்புடன் தரிசித்தாள். இவ்வளவு பிருமாண்டமான ஆலயங்களும், ஆகம நியதிகளும் வடபுலத்தில் கிடையாது என்பதால், அந்த ஆலயம் அவளுக்குப் பரவசத்தை ஏற்படுத்தியது.

மூலச் சந்நிதியில், தன்னை மறந்து கண்களை மூடி கைகளைக் கூப்பி நின்றாள். 'எங்கள் சைந்தவத்தையும்,

புலிகேசியின் சிறையில் வாடும் எனது தந்தையையும், என்னையும் காப்பாற்று!' — மனதினுள் அவந்திகா வேண்டிக் கொள்ள, அவளது கண்களில் அவளையும் அறியாமல் நீர் திரண்டு கன்னங்களில் வழிந்தோடியது.

மூலச் சந்நிதியில் அவள் எதிரே நின்று கொண்டிருந்த அந்த மனிதன் அவளது கண்ணீரைக் கண்டான்.. அவந்திகாவின் பேரழகு அவனைச் சுண்டி இழுக்க, அவளைப் பிரமிப்புடன் நோக்கினான். அவளது கண்களில் உருண்டோடிய கண்ணீர் கூட விலை மதிப்பற்ற முத்துக்களாகத் தோன்றின. அது பக்தியினால் ஏற்பட்ட கண்ணீர் அல்ல. அந்தப் பெண் ஏதோ பிரச்னையில் சிக்கியிருக்கிறாள் என்பது அந்த வாலிபனுக்குப் புலப்பட்டது. அந்தப் பெண்ணின் அருகே நின்ற மனிதன் பாலி மொழியில் உத்தரவிடுவதும், இயந்திரகதியில் அந்தப் பெண் அவனது கட்டளையை நிறைவேற்றுவதுமாக இருப்பதைக் கண்டான், அந்த வாலிபன். அந்தப் பெண் எப்போது கண்திறப்பாள் என்று காத்திருந்தான்.

அவந்திகாவும் கண்களைத் திறந்த அடுத்தகணம் எதிரே நின்ற அந்த வாலிபன் அவளது கண்கள் வழியாக அவளது இதயத்தில் இறங்கினான். தனது எதிரே நின்ற அந்த வாலிபனை முதலில் தற்செயலாகத்தான் கவனித்தாள். அந்த வாலிபனின் உயரமும், ஆகிருதியும், கம்பீரமும், அவளது கண்களை நிலைகுத்தி அவனையே காணச் செய்தன. மிகவும் அழகாக, பால் வண்ணத்தில் இருந்தான். சற்றே பூனையின் கண்களைப் போன்று மஞ்சளாகத் தோன்றிய அவனது கண்களும், அவந்திகாவின் கண்களும் சிக்கிக் கொண்டன.

பல்லவர்கள் சற்றே மாநிறமாகத்தான் இருக்கிறார்கள். இவன் மட்டும் எப்படி இவளைவிட அதிகமாகப் பால் நிறத்தைக் கொண்டிருக்கிறான்? வியப்புடன் அவனை நோக்கியவள், அர்ச்சகர் தீப ஆராதனை எடுக்க, தனது

பார்வையை வலுக்கட்டாயமாகச் சந்நிதியை நோக்கித் திருப்பினாள்.

இவள் ஆலயத்தைவிட்டு நீங்கித் தேரில் ஏறிக் கிழக்காகச் செல்லும்வரை, அந்த வாலிபனின் கண்கள் அவந்திகாவை பின்தொடர்ந்தபடிதான் இருந்தன.

அதன் பிறகு அவந்திகாவுக்குத் தொண்டரையன் காண்பித்த முக்கூடல் கடிகை, மாலிருஞ்சோலை மலை மற்றும் முக்கூடல் சங்கமக் காட்சி எதுவுமே சுவாரஸ்யப் படவில்லை. அவள் மனம் முழுவதும் அத்திமலைத் தேவன் கோயிலில் கண்ட அந்த வாலிபனின் மீதே இருந்தது. புலிகேசியைக் கண்ட போது தோன்றாத எண்ணங்கள், மகேந்திரனைக் கண்ட போது எழாத கற்பனைகள் எல்லாம் இப்போது அவளுக்கு ஏற்பட்டன. இரு பெரும் மன்னர்களின் மீது எழாத ஈர்ப்பு ஆலயத்தில் கண்ட அந்தச் சாதாரண வாலிபனின் மீது ஏற்பட்டதைக் கண்டு திகைத்தாள், அவந்திகா. இது எப்படிச் சாத்தியம்..? அந்த வாலிபனைப் பற்றி மென்மையான எண்ணங்கள் தோன்றுகிறதே? இதுதான் காதலா..? இதுவரை சந்தித்திராத அந்த வாலிபன், முதல் சந்திப்பிலேயே இவளை முழுவதுமாக வியாபித்து இவளது துக்கங்களையும் மறக்க வைத்திருக்கிறான் என்றால், அவன் இவளை ஆக்கிரமித்துவிட்டான் என்றுதானே பொருள்! யார் அந்த வாலிபன்..? அவனது பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் அவந்திகாவுக்கு ஏற்பட்டது. அவனது பெயர் தெரியும் வரை அவனைச் சாயாதேவன் என்று நாம் அழைப்போம் என்று தனது மனதைச் சித்திரவதை செய்து கொண்டிருந்த அந்த மனிதனுக்கு நிழல்தேவன் என்று பெயரிட்டாள். அத்திமலைத்தேவன் சந்நிதியில் சந்தித்த நிழல் மனிதன் என்பதால் அவனுக்குச் சாயாதேவன் என்கிற பெயர் பொருந்தும் என்று நினைத்தாள்.

'புலிகேசி, மகேந்திரா! உங்களுக்குச் சவால்விடுப்பதற்கு ஒருவன் தோன்றிவிட்டான். உங்கள் இருவருக்கும் நான் பயன்படப் போவதில்லை. நான் எனது நிழல்தேவனுக்கு என்னையே அர்ப்பணிக்கப் போகிறேன்!' — அவந்திகா மனதினுள் கூறிக் கொண்டாள்.

தான் காதலில் விழவே போவதில்லை என்று சைந்தவத்தில் வீறாப்பு பேசிக் கொண்டிருந்த அவந்திகா, தான் முன்பின் பார்த்திராத, இனி மீண்டும் காண்போமா என்று நிச்சயமாகத் தெரியாத நிலையிலும், தான் ஆலயத்தில் கண்ட அந்த நிழல் தேவனின் மீது தீராத காதல் கொண்டாள்.

★ ★ ★

**கா**ஞ்சியின் கிழக்கே இருந்த கடற்கரைப் பகுதி. தலசயன பெருமாள் ஆலயம், அங்கே நின்றிருந்தது. ஆலயத்தின் கிழக்கு மதிலில் கடல் அலைகள் மோதிக் கொண்டிருக்க அலைகள் பின்னோக்கிச் செல்லும்போதெல்லாம் ஆலயத்தினுள் நுழைவதும், வெளியேறுவதுமாக இருந்தனர் மக்கள். இந்த ஆலயத்தைச் சுற்றிக் கற்பாறை குன்றுகளும், கடற்கரை மணல்வெளியும் காணப்பட்டன. பிரம்பு மரங்களும், மூங்கில் காடும், அசோக மரங்களும் ஆங்காங்கே அடர்ந்திருந்தன. நீலநிறக் கடல், சயனித்துக் கொண்டிருக்கும் பெருமாளின் உறக்கத்தைக் கலைக்கக் கூடாது என்பதற்காக அமைதியைக் கடைப்பிடித்தது போலும். கடற்கரையை அடைந்த தொண்டரையன் தனது இரதத்தைத் தெற்கே திருப்பி அந்தப் பாதையில் செலுத்தத் துவங்கினான். கடற்கரைப் பாதையிலே பயணித்தால், மாவிலக்கை துறைமுகம் வந்துவிடும். திருகடல்மல்லையில் தென்கோடியை நோக்கி இரதம் சென்றது.

கடற்கரையில் வீசிய ரம்மியமான காற்று, அவந்திகாவின் இதயத்திற்கு இதமளித்தது. 'போராடு

வோம். சமாளிப்போம். புலிகேசி, மகேந்திரன் என்கிற இரண்டு மலைகளைக் கடந்து, சாயாதேவனின் இதயக் கூண்டினுள் கிளியாக ஒடுங்குவோம்!' — தனக்குள் தீர்மானித்துக் கொண்ட அதே வேளையில், கடல் மல்லையின் தென்கோடியில் நின்ற அந்தப் பிரும்மாண்ட மாளிகையின் மீது அவளது கவனம் படர்ந்தது.

"அதோ.. அவந்திகா பவனம்!" — தொண்டரையன் சுட்டிக்காட்டினான்.

கடற்கரையின் உயர்ந்த குன்றம் ஒன்றின் மேலே அமர்ந்திருந்தது அந்த மாளிகை. குன்றத்தின் மீது உள்ள அந்தப் பளிங்கு மாளிகையை விழுங்கியே தீருவேன் என்பது போன்று அந்தப் பாறைக்ளின் மீது மோதி ஏறி, முடியாமல் பின்வாங்கிக் கொண்டிருந்தன கடல் அலைகள். உயரத்தில் இருந்த மாளிகைக்குச் செல்ல, இருபத்து நான்கு படிகள் இருந்தன. மாளிகையின் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட மதில்சுவர்கள் வெண்மையை வாரிக்கொட்டிக் கொண்டு இருக்க, அந்த மாளிகையின் கூரை செந்நிற ஓடுகளால் வேயப் பட்டிருந்தது. அழகிய அலங்கார வாயிலின் வழியே மாளிகையின் உள்ளே நுழைந்தால் விஸ்தீர்ணமான நந்தவனம். அந்த நந்தவனத்தைக் கடந்து மாளிகையினுள் நுழைவதற்கு முன்பாக நீராடுவதற்குத் தாமரைத் தடாகம். அதனைக் கடந்து உள்ளே நுழைந்தால் பல அறைகளைக் கொண்ட மிகப்பெரிய கூடம். உப்பரிகைக்குச் செல்லப் படிகள். படியேறிச் சென்றால், இவளது அந்தப்புரம். அந்தப்புரத்தின் வெளியே நந்தவனத்துடன் கூடிய உப்பரிகை. அங்கிருந்து பார்த்தால், கடற்கரை மிகவும் அழகாகக் காட்சியளித்தது. இவளுக்காக ஒதுக்கப்பட்ட சயன அறையைக் கண்டு பிரமித்துப் போனாள் அவந்திகா. இவளது மஞ்சத்தின் எதிரே பெரிய

* கண்ணாடி புராதன பாரதத்தின் ஒரு முக்கியத் தயாரிப்பாக இருந்தது. கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பாகவே கண்ணாடி தயாரிப்பில் பாரதம் ஈடுபட்டு வந்தது. சதபத பிரம்மனத்தில்

கண்ணாடிச்* சுவர். அதன் பின்பாக நீலக்கடல் தெளிவாகக் காட்சி தந்தது. சூரியோதயக் காட்சியைக் கண்டுவிட்டு, கண்ணாடிச் சுவரை மறைப்பதற்கு நீல வண்ணத்தில் திரைச்சீலை.

அவந்திகா மலைத்துதான் போனாள். எல்லாவற்றையும்விட அவளை மெய்ம்மறந்து போகச் செய்தது, கீழே தாமரைத் தடாகத்தின் அருகே இருந்த சுழல் கோபுரம். ஒரு கலங்கரை விளக்கத்தைப் போன்று அமைக்கப் பட்டிருந்த அந்தச் சுழல் கோபுரத்தின் உச்சிக்கு அவந்திகாவை அழைத்துச் சென்றான், தொண்டரையன். அங்கிருந்து கடற்கரையைச் சுட்டிக்காட்டினான். அங்கிருந்து தென்பட்ட காட்சியைக் கண்டு அதிசயித்தாள், அவந்திகா. இத்தகைய கிறங்க வைக்கும் இயற்கைக் காட்சியை அவள் தனது வாழ்நாளில் இதுவரை கண்டதில்லை.

---

கண்ணாடி கக: (kaca) என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கி.பி. நான்காம் நூற்றாண்டில்தான் கண்ணாடி தொழிற்சாலை பெரும் புகழ் அடைந்தது. தற்போது புதுவையில் உள்ள அரிக்கமேடு பல்லவக் காலத்தில் கண்ணாடி தொழிற் சாலைக்கு மிகவும் பெயர் போனது. இங்குத் தயாரிக்கப்படும் கண்ணாடிகள் மாவிலக்கை துறைமுகம் வழியாக ரோமாபுரி, கிரேக்கம், எகிப்து போன்ற உலக நாடுகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

Arikamedu is an archaeological site in southern India, in Kakkayanthope, Ariyankuppam Commune, Puducherry. It is 4 kilometres (2.5 mi) from the capital, Pondicherry of the Indian territory of Puducherry. Sir Mortimer Wheeler 1945, and Jean-Marie Casal conducted archaeological excavations there in 1947-1950. The site was identified as the port of Podouke, known as an "emporium" in the Periplus of the Erythraean Sea and Ptolemy. Digs have found Amphorae, Arretine ware, Roman lamps, glassware, glass and stone beads, and gems at the site. Based on these excavations, Wheeler concluded that the Arikamedu was a Greek (Yavana) trading post that traded with Rome, starting during the reign of Augustus Caesar, and lasted about two hundred years-from the late first century BCE to the first and second centuries CE. Subsequent investigation by Vimala Begley from 1989 to 1992 modified this assessment, and now place the period of occupation from the 2nd century BCE to the 8th century CE. - ஆதாரம்: இந்தியப் போர்டல் விக்கிபீடியா.

"இயற்கையின் இத்தனை அழகும் ஒன்று திரண்டாலும், தங்களது அழகுக்கு ஈடாகாது என்பதை உலகுக்கு உணர்த்தவே, எனது நண்பன் மகேந்திர பல்லவன் உங்களுக்காக அமைத்திருக்கும் சுழல் கோபுரம் இது, இளவரசி! நீங்கள் அன்றாடம் இதன் மீது ஏறி நின்று, 'உலகத்தின் பேரழகியான நான் மகேந்திரனுக்குச் சொந்தம்' என்று கூவ வேண்டும் என்று விரும்புகிறான், மகேந்திரன்!" — உணர்ச்சியுடன் கூறினான், தொண்டரையன்.

உண்மையிலேயே தனக்காக இவ்வளவு பெரிய மாளிகையை எழுப்பியிருக்கும் மகேந்திரனை மதிப்புடன்தான் நினைத்தாள். மான்குட்டியின் மீது பாய்வதற்குத் தயாராகும் புலியைப் போன்றுதான் புலிகேசி இவளைக் காணும் போது நின்றான். ஆனால் தான் இன்னும் ஒரு வார்த்தை கூடப் பேசிப் பார்த்திராத பெண்ணுக்காக இவ்வளவு பெரிய மாளிகையை எழுப்ப, மகேந்திரனுக்கு இந்தக் கிழக்கு கடற்கரையைப் போன்று விஸ்தாரமான மனம் இருக்கிறது என்று மனதினுள் நினைத்தாள்.

"ஒரு காதலனும், காதலியும், உலகத்தை மறந்து சஞ்சரிக்க ஏற்ற இடம்தான்..!" — அவந்திகா கூற, அவளை மகிழ்ச்சியுடன் பார்த்தான், தொண்டரையன்.

"நான்தான் கூறினேனே! மாளிகையைக் கண்டதும் நீங்கள் மகேந்திர பல்லவனைக் காதலிக்கத் தொடங்கி விடுவீர்கள் என்று!" — தொண்டரையன் நகைத்தான்.

'இந்த அழகிய மாளிகையில் என்னுடன் மகேந்திரனுக்குப் பதிலாகச் சாயாதேவனைச் சஞ்சரிக்க வை!' — மனதிற்குள் பிரார்த்தித்தாள், அவந்திகா.

அவந்திகாவுக்கு ஊழியம் செய்வதற்கும், காவல் காப்பதற்கும், வில்வண்டிகளில் பணிப்பெண்களும், காவலர்களும் வந்து இறங்கினர்.

"உங்கள் மாளிகை பணியாளர்கள் வருகிறார்கள்." தொண்டரையன் கூறியதும், சுழல் மாளிகையில் இருந்து கீழே நோக்கினாள். காவல் வீரர்களில் ஒருவனாக வந்தவனின் உயரமும், கட்டுமஸ்தான உடற்கட்டும், குரூரமான முகமும், அவளுக்கு ஏதோ உணர்த்தின. அவ்வளவு உயரத்தில் இருந்தும், அந்த மனிதனின் ஆணவ நடையும், உக்கிரமான முகமும் அவளுக்குள் திகிலை ஏற்படுத்தின. முகத்தில் தாடியும் மீசையும் அடர்ந்திருந்தாலும், அவனது கூரிய கண்கள் உயரத்தில் நிற்கும் இவள் பக்கமாக நோக்கி இவளது இதயத்தைத் துளைப்பது போன்று உணர்ந்தாள். தொலைவில் மேயும் புள்ளிமானைக் கண்டுவிட்ட புலியின் கண்களைப் போன்று அந்த மனிதன் அவந்திகாவை நோக்கிக் கொண்டிருந்தான்.

அவந்திகா உறைந்து போய் நின்றாள். அவளையும் அறியாமல் அவளது கால்களும், சுழல் கோபுரத்தின் கைப்பிடி சுவரைப் பற்றியிருந்த கைகளும் நடுங்கிக் கொண்டிருந்தன.

# 36. பொக்கிஷக் குவியலில் ஒரு செய்தி

**ஸ்**வர்ண கட்டிகளும், நவரத்ன குவியல்களும், ஐம்பொன் சிலைகளும், இரத்தினக் கம்பளங்களும், தந்தங்களும், ஆபரணங்களும், பட்டுப் பீதாம்பரங்களும் கஜானாவில் சேர்க்கப்பட, பல்லவக் கஜானாவே நிரம்பி வழிந்தது. 'சமுத்ரகுப்தனால் தெற்கே விரட்டப்பட்டு, தெற்கே இருநூறு வருடங்கள் களப்பிரர்கள் ஆடிய ஆட்டத்தால் கொள்ளைகளும், கொலைகளும் தமிழ்புலத்தையே ஸ்தம்பித்துப் போகச் செய்தன. அவர்களை விரட்டி மீண்டும் நாட்டில் ஒளியைக் கொண்டு வந்த பெருமை எனது தந்தை சிம்ம விஷ்ணுவைத்தான் சாரும்!' — மனதிற்குள் நினைத்தான், மகேந்திரன்.

தமிழ்புலத்தின் இருண்ட காலம்தான் களப்பிரர் காலம் என்றால், அவர்கள் ஒளியை எல்லாம் திரட்டி சிம்மகிரியின் குகையினுள் அடைத்து வைத்திருந்தனர் போலும். குகையைத் திறந்ததும், பொக்கிஷங்களின் ஒளி முழுவதுமாகப் பல்லவக் கஜானாவில் பாய்ந்தன..

ஒரு மூங்கில் கூடை நிறைய நவரத்ன ஆபரணங்களை இரு காவலாளிகள் சுமந்து போக, மகேந்திரனின் பார்வை அந்த ஆபரணக் குவியலின் மேலே கிடந்த ஒரு பதக்கத்தின் மீது படர்ந்தது. மிகவும் பெரிய பதக்கமாகக் காணப்பட்டது. அதன் நடுவில் திருமகளின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. அதில் பதிக்கப்பட்டிருந்த கற்கள் கண்களைப் பறித்தன. நவரத்தினங்களில் அந்தக் கற்கள் எந்த வகையைச் சேர்ந்தவை என்பதை அறியமுடியாதபடி வினோதமான நிறங்களில் அந்தக்

கற்கள் காணப்பட்டன. இந்தப் பதக்கத்தை அவந்திகா அணிந்தால் மிகவும் சிறப்பாக இருக்குமே! அற்புதமான வேலைப்பாடுகளுடன் கண்ணைப் பறிக்கும் கற்களுடன் மிக அழகாக இருக்கும், இந்தப் பதக்கத்தை அவந்திகாதான் அணிய வேண்டும். மகேந்திரனின் சிந்தனைகள் அவந்திகாவை நோக்கித் தாவின.. முதன் முதலாக அவந்திகாவுடன் பேசும் போது அவளுக்கு இந்தப் பதக்கத்தைக் கொடுக்க வேண்டும். அந்தப் பதக்கத்தை எடுத்துத் தனது மார்பின் மேலாடை உறையினில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

சிம்மகிரியிலிருந்து மீண்டும் காஞ்சிக்குப் புறப்படுவதற்கு முன்பாக ஒரு பாறையின் மீது நின்று கொண்டு தசகுமாரர்களிடமும், காவல்படை வீரர்களுடனும் பேசினான்.

"தசகுமாரர்களே! வீரர்களே! அத்திமலைத்தேவனைத் தேடி வந்தோம். அவன் நமக்குக் கிட்டவில்லை என்றாலும், நமது வளங்களை அதிகரிக்கக் கூடிய பொக்கிஷங்களை நமக்கு அளித்திருக்கிறான். விரைவில் அவனது பிரதிமையைக் கண்டுபிடித்து அத்திமலை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வோம். மனம் தளர வேண்டாம். எப்படியும் எனது இறுதி மூச்சினை விடுவதற்குள், அத்திமலைத்தேவனைக் கண்டுபிடித்து எனது தந்தைக்கு நான் அளித்த வாக்கினை நிறைவேற்றுவேன்." — மகேந்திர பல்லவன் கூறியதும், விண்ணைப் பிளக்கும் ஆரவாரம் எழுந்தது.

தான் கைப்பற்றிய பொக்கிஷங்களில் ஒரு கூடை ஸ்வர்ணக் கட்டிகளை ஆதிரங்கப் பெருமாளுக்குக் காணிக்கையாக அளித்துவிட்டு, காஞ்சிக்குப் புறப்பட்டான்.

"அத்திமலையான் கிட்டவில்லை. ஆனால் களவாடப்பட்ட பொக்கிஷங்கள் கிடைத்தன..!" — சொல்லியபடியே ராஜவர்மனின் அரண்மனைக்குள்

நுழைந்த மகேந்திரனும், பீமவர்மனும் திடுக்கிட்டு நின்றனர்.

ராஜவர்மனும், ராஜஸ்ரீயும் அமர்ந்திருக்க, அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்த நங்கையர் இருவர், இவர்களைக் கண்டதும் அவசரமாக எழுந்து நின்றனர். இருவருமே அழகாக இருந்தனர். ஆனால் சூரியனை நோக்கிவிட்டு மற்ற பொருட்களை நோக்கினால் இருள்தானே புலப்படும். அதுபோல மகேந்திரனின் கண்கள் அவந்திகா என்கிற சூரியனை நோக்கிவிட்டு, அந்தப் பெண்ணை நோக்கியதால் அவன் கண்களுக்கு அந்தப் பெண்கள் மிகவும் சாதாரணமாகத் தோன்றினர்.

"வடகங்க அரசன் ஸ்ரீவிக்கிரமனது தங்கை சந்திரமதி இவள். இது ஸ்ரீவிக்கிரமனின் மகள் ராஜசந்தனா! உங்களது வருங்கால மனைவியர்.." என்றதும் இருவரும் வாயடைத்துப் போய் நின்றனர்.

சிம்மகிரியில் கிடைத்த பொக்கிஷங்களைப் பற்றி ராஜவர்மனிடம் தெரிவித்துவிட்டு, கடல்மல்லைக்குச் சென்று அவந்திகாவை சந்திக்க வேண்டும் என்று இவன் துடித்துக் கொண்டிருக்க, ராஜசந்தனாவை முதலில் சந்திப்போம் என்று மகேந்திரன் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

எரியும் தீயில் எண்ணையை வார்த்தான், சிற்றப்பன் பீமவர்மன். சிம்மகிரி குகையில் தான் எடுத்து வைத்திருந்த வைரப் பதக்கம் ஒன்றைத் தனது மேலாடை பையிலிருந்து எடுத்து சந்திரமதியை நோக்கி நடந்தான்.

"கங்க இளவரசிக்கு வந்தனங்கள். வருங்காலப் பல்லவ இளவரசிக்கு நான் தரும் முதல் பரிசு!" — என்று அந்த வைரப் பதக்கத்தை அவளிடம் நீட்ட, இமைகள் படபடக்க, வாயெல்லாம் முத்துக்களாகப் பற்கள் வெளிப்பட, சிரித்தபடி அந்த வைரப் பதக்கத்தை ஏற்றுத் தனது நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

சிற்றப்பனை நோக்கிப் பற்களை நறநறவென்று கடித்தான் மகேந்திரன். இப்போது இவனும் அல்லவா ராஜசந்தனாவுக்கும் பரிசு கொடுக்க வேண்டும். ராஜசந்தனாவின் கண்கள் ஆர்வத்துடன் மகேந்திரன் பக்கமாக நோக்கின. 'வெறும் இளவரசனான உனது சிற்றப்பன் இளவரசியான எனது அத்தைக்கு வைரப் பதக்கம் ஒன்றை அளித்திருக்கிறான். பல்லவ மன்னனான நீ உனது மனைவிக்கு என்ன பரிசளிக்கப் போகிறாய்?' — என்கிற அர்த்தம் அந்தப் பார்வையில் தொனித்தது.

தனது மேலாடையில் பத்திரப்படுத்தி இருந்த மகரக் கண்டிகையைத் தடவிப் பார்தான். 'விலைமதிப்பில்லா மகரக் கண்டிகையை அணிவதற்கு அவந்திகாவுக்கு மட்டுமே தகுதி உள்ளது. உனக்கு அல்ல!' என்றுதான் அவனது கண்கள் கூறின. ஆனால், ராஜசந்தனா மட்டுமல்லாமல், சந்திரமதி, ராஜஸ்ரீ, ராஜவர்மன், பீமவர்மன் போன்றோரும் இவனையே ஆவலுடன் நோக்க, மகேந்திரனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"என்ன மகேந்திரா யோசிக்கிறாய்? எங்கள் எதிரே பரிசு கொடுக்க விருப்பமில்லையா? உனது மேலாடையில் பதுக்கியிருக்கும் பரிசை எப்போது உனது மனையாளுக்குத் தரப்போகிறாய்?" என்று பீமவர்மன் சிரித்தபடி கேட்டான்.

'அதிகப்பிரசங்கி சிற்றப்பனே!' — மனதிற்குள் அவனைச் சபித்தபடி தனது மேலாடையினுள் பதுக்கியிருந்த அந்தப் பெரிய பதக்கத்தை — 'இந்தா வைத்துக் கொண்டு தொலை' என்பது போன்று ராஜசந்தனாவிடம் நீட்ட, கண்கள் விரிய அதனை வாங்குவதற்காகக் கையை நீட்டினாள்.

மகேந்திரன் நீட்டிய பதக்கத்தை வாங்குவதற்காக ராஜசந்தனா முன்னேற, அவளை முந்திக் கொண்டு, ராஜவர்மன் அந்தப் பதக்கத்தை அவனது கையில் இருந்து பறித்தான்.

"அத்திமலையானின் ஸ்ரீதள மணி..! உனக்கு எங்கே கிடைத்தது மல்லா?" — ராஜவர்மன் திடுக்கிட்டு அவனைப் பார்த்தான்.

"சிம்மகிரியின் பொக்கிஷக் குவியலில்தான் கிடைத்தது." — மகேந்திரன் கூற, ராஜவர்மன் யோசனையில் ஆழ்ந்தான்.

"அத்திமலையான் ஒவ்வொரு ஹஸ்த நட்சத்திரத் தன்றும் அணியும் ஸ்ரீதளமணி. யட்ச நேத்திர கற்களால் ஆனது. குபேரன் அணிவித்தது. அரண்மனை கஜானாவில் வைக்கப்பட்டிருந்தது. சிம்மகிரிக்கு மாற்றிவிட்டான், ரணதிலகன். எவ்வளவு பெரிய சதிவலை நமது அரச குடும்பத்தைச் சுற்றிப் பின்னப் பட்டுள்ளது. மூன்று தலைமுறையாக நமது குடும்பம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதே.." முதுமையின் காரண மாகவோ, பழைய சம்பவங்களை நினைத்ததாலோ என்னவோ, இருக்கையில் இடிந்து போய் அமர்ந்தான் ராஜவர்மன்.

"நமது குடும்பம் பழைய மகிழ்ச்சியை மீண்டும் அனுபவிக்குமா? எல்லாப் பிரச்னைகளும் நீங்கி, நமது பல்லவம் பழைய பொலிவினைப் பெறுமா? மல்லா! ஸ்ரீதளமணி சிம்மகிரியில் இருந்தது என்றால், அத்திமலையானும் அங்கேதான் இருக்க வேண்டும். நன்றாகத் தேடிப் பார்த்தாயா..?" — கவலையுடன் கேட்டான், ராஜவர்மன்.

"சிற்றப்பா! நன்றாகத் தேடிப் பார்த்தேன். அத்திமலைத்தேவன் சிலை கிடைக்கவில்லை. ஆனால், இதுதான் ஸ்ரீதளமணி என்றால், அத்திமலைத்தேவன் இங்கேதான் எங்கோ பத்திரமாக இருக்கிறான் என்று மனதில் படுகிறது. விரைவில் தன்னை வெளிக்காட்டிக் கொள்வான். அது குறித்துச் சில தகவல்களைத் திரட்டுவதற்காக, நான் தற்போது கடல்மல்லைக்குச் செல்கிறேன்.." என்றான்.

"ஒன்று செய்யலாமா? நாம் இருவருமே அவரவர் வருங்கால மனைவியரை அழைத்துக் கொண்டு கடல் மல்லைக்குச் செல்லலாமா?" — கண்கள் மின்ன, பீமவர்மன் கேட்டான்.

'நீ எப்படி சிற்றப்பா திகம்பரத் துறவியாக இருந்தாய்?' — மனதிற்குள் கேட்டுக் கொண்ட மகேந்திரன் சிற்றப்பனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு நீங்கள் காஞ்சியைச் சுற்றிக் காட்டுங்கள். எனக்குக் கடல்மல்லையில் அவசரப் பணி இருக்கிறது!" மகேந்திரன் புறப்பட்டான்.

"இதை மட்டும் கேட்டுவிட்டுச் செல் மகேந்திரா! அடுத்த வெள்ளிக்கிழமை உங்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற உள்ளது!" — ராஜஸ்ரீ கூறினாள். பீமவர்மனும், சந்திரமதியும் ஆவலுடன் ஒருவரை யொருவர் பார்க்க, மகேந்திரனோ ராஜசந்தனாவை திரும்பியும் பார்க்காமல், அங்கிருந்து அகன்றான். தசகுமாரர்களில் ஒருவனான தொண்டரையன் இவனுக்காகக் காத்திருந்தான். தொண்டரையனை அழைத்துக் கொண்டு கடல்மல்லையை நோக்கிப் புறப்பட்டான்.

புதிய மாளிகை ஒன்றை எழுப்பி அதில் அவந்திகாவை சிறை வைத்திருக்கும் விஷயத்தை மகேந்திரன் ரகசியமாகவே வைத்திருந்தான். சிறிது காலம் சைந்தவ இளவரசி காஞ்சியைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஒத்தாடை அரண்மனையில் தங்கிவிட்டுப் பிறகு தனது நாட்டிற்குத் திரும்பிவிட்டாள் என்றே அரண்மனையில் இருப்பவர் கள் உள்படப் பலரும் நினைத்திருந்தனர். அவந்திகாவின் அழகில் முழுவதுமாகத் தன்னை இழந்துவிட்டிருந்த மகேந்திரன், எப்படியாவது அவளைத் தனது பட்டத்து அரசியாக அமர வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தான்.

எனவேதான் அவளை எப்படியாவது தனது வசப்படுத்த வேண்டும் என்று அவளுக்கு மாளிகை ஒன்றை எழுப்பி அவளைத் தனிமையில் சிறை வைத்திருந்தான். தொண்டரையனைத் தவிர வேறு யாருக்குமே, அங்கே அவந்திகா இருப்பது தெரியாது. அரண்மனையில் உள்ள காவலர்களையும், பணிப் பெண்களையும் அவந்திக பவனத்தில் பணியில் அமர்த்தினால், அவந்திகா அங்கு தங்கியிருக்கும் விஷயம் அரண்மனையில் தெரிந்துவிடும் என்பதால், தொண்டரையன் மூலமாகப் புதிய காவலாளர்களையும், பணிப்பெண்களையும் நியமித்திருந்தான்.

பாரவியையும் அவந்திகாவையும் தொண்டரையன் வாதத்தில் வென்று அடிமைப்படுத்திக் காஞ்சிக்கு அழைத்துச் சென்றுவிட்டதைக் கண்டு நிலை கொள்ளாமல் தவித்த புலிகேசி எப்படியும் அவந்திகாவை மீண்டும் வாதாபிக்கு கடத்தி வருகிறேன் என்று சூளுரை இட்டுக் காஞ்சிக்கு மாறுவேடத்தில் வந்திருந்தான். காஞ்சி ஒன்றும் அவனுக்குப் புதிது இல்லையே. காஞ்சியைச் சுற்றிப் பார்க்க வந்த புலவனைப் போன்று வேடமிட்டு, கடிகையில் தங்கி ஒத்தாடை அரண் மனையை வேவு பார்த்துக் கொண்டிருந்தான். தொண்டரையன் இரதத்தில் அவந்திகாவை கடல் மல்லைக்கு அழைத்துச் செல்வதை முக்கூடல் கடிகையில் இருந்து சங்கமத்தில் நீராடுவதற்காகச் சென்று கொண்டிருந்த புலிகேசி தற்செயலாகப் பார்க்க, தனது புரவியில் அவர்களைத் தொடர்ந்தான். மகேந்திரன் அவந்திகாவை கடல்மல்லை மாளிகையில் சிறை வைப்பதைக் கண்டான். அந்த மாளிகையில் பணியாற்றத் தொண்டரையன் ஆட்களைத் தேடுவதை அறிந்து தலைமைக் காவலன் பணிக்கு அவனிடம் விண்ணப் பிக்க, அவனும் புலிகேசிக்கு அந்தப் பணியினைக் கொடுத்தான். சமயம் கிடைக்கும் போது அவந்திகாவை வாதாபிக்கு கடத்திச் சென்றுவிட வேண்டும் என்கிற

தீர்மானத்தில், அன்றாடம் மாலை பணிக்கு வந்து இரவு முழுவதும் தான் காவல் புரிவதாகத் தொண்டரை யனிடம் கூறியிருந்தான் புலிகேசி. புலிகேசியை முன் பார்த்திராத தொண்டரையனும் சந்தேகம் கொள்ளாமல் அவனுக்கு இரவுப் பணியை ஒதுக்கி இருந்தான். அவந்திகாவை கடத்திச் செல்ல நல்ல சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான், புலிகேசி.

புலிகேசி சுழல் கோபுரத்தின் அடியே நின்று உப்பரிகையில் நின்றிருந்த அவந்திகாவையே வெறித்துக் கொண்டிருந்தான். அவளைக் காணக் காண, தன்னிடம் சிக்காமல் அலைக்கழிக்கும் அவள் மீது கோபம் அதிகரித்துக் கொண்டே போனது.

'நீ என்னிடம் சிக்கித் துன்பங்களைத்தான் அனுபவிக்கப் போகிறாய். நான் ஒன்றும் கொடியவன் இல்லைதான். ஹர்ஷனையே பிழைத்துப் போ என்று வாழ்வளித்தவன். ஹர்ஷனைவிட உன்னை நேசத்துடன் நெருங்கிய என்னை நீ மிகவும் அலைக்கழித்துவிட்டாய். மன்னனாகிய நான் இன்று ஒரு காவலாளியாக நிற்கிறேன். எதற்காக..? உன்னை அடைய வேண்டும் என்பதற்காக.. நான் படும் சிரமங்கள் அனைத்துக்கும் சேர்த்து நீ எனக்குக் கப்பம் செலுத்தப் போகிறாய்..' புலிகேசி தனக்குள் பொங்கிய சினத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தான்.

அதே சமயம் —

மகேந்திரனும் கடல்மல்லையை நோக்கித் தனது புரவியில் விரைந்து கொண்டிருந்தான். 'அடுத்த வெள்ளிக் கிழமை உனக்குத் திருமணம்' — ராஜஸ்ரீ கூறியது அவனது செவிகளில் ரீங்கரித்தது. ராஜசந்தனா ஒன்றும் பெரிதாக அவனது மனதை ஈர்க்கவில்லை என்றாலும், அவனால் அந்தத் திருமணத்திற்கு மறுப்புத் தெரிவிக்க இயலாது என்பதை உணர்ந்தான்.

*தங்களது மகள் ஜெயஸ்ரீ இறந்துவிட்ட துக்கத்திலும், இவன் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகக் கங்க இளவரசி ராஜசந்தனாவை இவனுக்காக மணம் பேசிய ராஜவர்மன் — ராஜஸ்ரீ இருவரின் மனங்களையும் உடைக்க விரும்பவில்லை. அவந்திகாவையும் அவனால் மறக்க இயலாது.. என்ன செய்யலாம்? தனக்குள் கேட்ட படி அத்தியூரைக் கடந்த போது ஆலய வாசலில் இருந்து தேவபெருமாள் வீதியுலா வந்து கொண்டிருந்தார். 'எனது குழப்பத்தை சற்றுத் தீர்த்து வையேன்!' என்று குதிரையில் இருந்து இறங்கி அவரைத் தொழுத போது, தேவபெருமாளின் உற்சவ மூர்த்தங்களை வெறித்தான்.*

*'இதற்குப் போய்க் குழம்புகின்றாயே? மாலை வீதியுலா செல்லும் நான் எனது இரண்டு தேவிகளையும் அழைத்துச் செல்வதைப் பார். என்னைப் போன்று நீயும் இரண்டு தேவிமாரை வைத்துக் கொள்ளேன்!' என்று சொல்ல, உடனே தெளிவடைந்தான். தலைக்கு ஒருவள், இதயத்துக்கு ஒருவள். மகுடத்துக்கு ராஜசந்தனா. இதயத்துக்கு அவந்திகா..!*

*தெளிவு பிறக்க, தனது குதிரையைக் கடல்மல்லையை நோக்கி வேகமாகச் செலுத்தினான், மகேந்திரன்.*

*கடல்மல்லையில் அவந்திக பவனம் அமைதியில் உறைந்திருந்தது. பறவைகள் கீறீச்சிட்டபடி கடலின் மீது பறந்து சென்று ஒரு மீனைக் கொத்திக் கொண்டு ஒரு பறவை கரைக்குத் திரும்ப, மற்றொரு பறவை அந்த மீனைப் பிடுங்குவதற்காக அந்தப் பறவையை விரட்டிக் கொண்டிருந்தது. அந்த மீனின் நிலையில் தன்னையும் அதனை அடையப் போட்டியிடும் பறவைகளாகப் புலிகேசியையும், மகேந்திரனையும், நினைத்துப் பார்த்தாள். மாலை விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டது.. உப்பரிகையின் கிழக்குப்புறக் கைப்பிடி சுவரின் அருகே நின்று கடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வேளை —*

கிழக்கே கடலைப் பார்த்து அமர்ந்திருந்த இவளது சயன அறை மாளிகையின் உப்பரிகையில்தான் அமைந்திருந்தது. அந்த அறை செங்குத்தான ஒரு பாறையின் மேல் அமைக்கப்பட்டிருந்தது. அந்த நீண்ட செங்குத்தான பாறையின் முடிவில் கீழே புல்வெளியும் புல்வெளியைச் சுற்றி மாளிகையின் மதில் சுவரும் அமைந்திருந்தன. தனது சயன அறையின் வெளியே உப்பரிகை நந்தவனத்தில் நின்று கடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவந்திகா, ஓர் உருவம் மதிலைத் தாண்டிப் புல்வெளியில் குதிப்பதைக் கவனித்தாள்.

கரிய ஆடையை அணிந்திருந்த அந்த உருவம், புல்வெளியில் இருந்து இவளை நோக்கியது. ஒருகணம் இதயமே நின்றுவிடும் போல இருந்தது, அவந்திகாவுக்கு. அவளையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அந்த உருவம் தனது முகமூடியைக் கழற்றித் தனது முகத்தைக் காட்ட, திகைத்துப் போனாள், அவந்திகா. எவனை நினைத்து நாளெல்லாம் மருகிக் கொண்டிருந் தாளோ, அத்திமலைத்தேவனின் ஆலயத்தில் இவளது மனதை அபகரித்த அந்தச் சாயாதேவன்தான் இவளை நோக்கிப் புன்னகையுடன் நின்றிருந்தான்.

அவந்திகா மகிழ்ச்சியில் திணறினாள். ஆனால் தாமரைத் தடாகத்தின் அருகே நின்று தன்னையே வெறித்து நோக்கிக் கொண்டிருக்கும் புலிகேசியின் கழுகுப் பார்வை இன்னும் அவளை அச்சுறுத்திக் கொண்டுதான் இருந்தது. ஓரக்கண்களால் அவன் நின்ற பக்கமாகப் பார்த்தாள். மாளிகையின் நுழைவாயிலும், சுழல் கோபுரமும், தாமரைத் தடாகமும் மாளிகையின் வடக்குப்புறம் இருந்ததால், புலிகேசியால் கிழக்கு மதில் சுவர் அருகே நடப்பதைக் காண முடியாது என்பதை யூகித்தாள். சற்றே நிம்மதியுடன், உப்பரிகையில் இருந்த மல்லிகைப் பந்தலில் இருந்து மலர்களைப் பறிப்பவளைப் போன்று பாவனை செய்தபடி உப்பரிகையில் இருந்து

இடைகழிக்குள் நுழைந்தவள் தனது பின்பாகக் கதவைத் தாளிட்டாள்.

மீண்டும் சயன அறைக் கதவைத் திறந்து கொண்டு இடைகழி வழியாக உப்பரிகைக்குச் சென்றாள். தான் முன்பு நின்ற இடத்திலேயே நின்று கீழே பார்த்தாள். முகமூடியை அணிந்து கொண்டு தான் நின்ற இடத்திலேயே காத்திருந்தான், சாயாதேவன். மீண்டும் தாமரைத் தடாகத்தின் பக்கமாக நோக்கினாள். நல்ல வேளையாக, புலிகேசி இப்போது அங்கே காணப்பட வில்லை. உப்பரிகையில் பணிப்பெண்களின் நடமாட்டம் கூடக் காணப்படவில்லை. இதுவும் நன்மைக்கே..!

இவளது சயன அறை மட்டுமே, உப்பரிகையில் இருந்தது. சயன அறையின் வெளியே ஒரு நீண்ட இடை கழி இருந்தது. இடைகழியின் ஒருபுறம் உப்பரிகைக்குச் செல்லும் வாயில். இடைகழியின் மறுபுறம், மாளிகையின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் வாயில். இடைகழியின் இருபக்க வழியின் கதவுகளையும் சாற்றிவிட்டால், உப்பரிகையில் நடப்பதை யாராலும் அறிய முடியாது.

உப்பரிகையில் இருந்து இடைகழிக்குள் நுழைந்தவள் தனது பின்பாகக் கதவைத் தாளிட்டாள், பிறகு விரைந்து சென்று இடைகழியின் மறுபுறத்தையும் தாளிட்டாள். இப்போது உப்பரிகை முழுவதும் இவளது ராஜ்யம். இவளுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த போர்வை களையும், சால்வைகளையும், பிணைத்து, நீண்ட கயிற்றினைப் போன்று திரித்தாள்.

கனமான பூஜாடி ஒன்றைக் கையில் எடுத்தவள், கண்ணாடிச் சுவரினை ஓங்கி அடித்தாள். கண்ணாடி துகள்களாக உடைய, ஒரு மனிதன் உள்ளே வரும்படியான துவாரம் உண்டானது. சாயாதேவனின் உடலைக் கண்ணாடி நுனிகள் கிழிக்காத வண்ணம் நீட்டிக் கொண்டிருந்த கண்ணாடிச் சிதல்களைப்

பெயர்த்தவள், அந்த நீண்ட போர்வை வடத்தைக் கீழே தொங்கவிட்டாள். உயரமான சாயாதேவனால் எளிதாக அந்தப் போர்வை வடத்தைப் பற்ற முடிந்தது. செங்குத்தான அந்தப் பாறையில் கால்களை ஊன்றி, போர்வை வடத்தினைப் பற்றிக் கொண்டு விறுவிறு என்று மேலே ஏறித் தனது கம்பீர முகத்தை உடைந்த கண்ணாடிச் சுவரின் வழியே காட்டி, அவளை நோக்கி முறுவலித்தான்.

அந்தப் புன்முறுவலில் அவந்திகா தனது சோகங்கள் அனைத்தையும் மறந்துவிட்டாள்.

“சீக்கிரம் உள்ளே வாருங்கள். யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!” — அவந்திகா பதற, அந்த வாலிபன் எச்சரிக்கையுடன் உடைந்திருந்த கண்ணாடிச் சுவரின் துவாரம் வழியாக உள்ளே வந்தான்.

“பார்த்து. தரையெங்கும், கண்ணாடித் துண்டங்கள் இருக்கின்றன..” — அவந்திகா எச்சரிக்க, அந்த வாலிபன் சிரித்தான்.

“இதுதான் உண்மையான காதல். மனங்கள் இணைந்துவிட்டால், கற்சுவரே நொறுங்கிப் போகும். கண்ணாடிச் சுவர் எந்த மூலைக்கு?” — பாலி மொழியில் அழகிய வார்த்தைகளைக் கோத்து மிகக் கவர்ச்சியாகப் பேசினான், அந்த வாலிபன்.

“நமது மனங்கள் இணைந்ததாக யார் கூறினார்கள்? நாம் இப்போதுதானே முதன்முறையாக உரையாடுகிறோம். நீங்களாக எப்படி அதனை அனுமானிக்கலாம்?” — அவந்திகா பொய்க்கோபத்துடன் கேட்டாள்.

“மனங்கள் இணையாமலா போர்வைகள் இணைந்து என்னை இந்த நிலைக்கு உயர்த்தின?” — கேலியாகப் பேசியபடி அவளது மஞ்சத்தில் உரிமையுடன் அமர்ந்து கொண்டான், அந்த வாலிபன்.

"நீங்கள் யார், உங்கள் பெயர் என்ன என்பது எனக்குத் தெரியாது. நான் யார், எந்த தேசத்தைச் சேர்ந்தவள், எனது பெயர் என்ன என்பது உங்களுக்குத் தெரியாது. அப்படி இருக்க நமது மனங்கள் இணைந்துவிட்டன என்று கூறிக் கொண்டு எனது மஞ்சத்தில் ஏறி அமர உங்களுக்கு எவ்வளவு துணிவு?" — அவந்திகா கேட்டாள்.

அந்த வாலிபன் அவளை அலட்சியமாகப் பார்த்தான். "நீதானே என்னைக் காப்பாற்றும்படி அத்திமலைத் தேவனிடம் கேட்டாய். அதனால் வந்திருக்கிறேன்." — அந்த வாலிபன் கூறினான்.

"நான் எப்போது கேட்டேன்..? — அவந்திகா அயர்ந்தாள்.

"அத்திமலைத்தேவன் ஆலயத்தில் கண்ணீர் சிந்தி வேண்டிக் கொண்டிருந்தாய் அல்லவா? அப்போதே உனது துயரைத் தீர்க்க முடிவு கட்டிவிட்டேன். ஒரு. புலி, ஒரு சிங்கம், இரண்டிற்கிடையே சிக்கிய புள்ளிமான் நீ. உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்."

"என்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன் என்கிறீர்கள். சிங்கம், புலியைப் போன்று நீங்களும் பொல்லாத மிருகமாக இருக்கலாமே. இந்த மான் எப்படி உங்களை நம்புவது..?" — அவந்திகா கேட்டாள்.

"புலி, சிங்கத்திடம் பேசிய போது உனக்கு ஏற்பட்ட அச்சம் என்னுடன் பேசும் போது உனக்கு ஏற்படுகிறதா? ஏற்பட்டால் சொல், நான் வந்த வழியே போய் விடுகிறேன்.." — அவளை ஆழமாகப் பார்த்தான் அந்த வாலிபன்.

"ஐயோ இல்லை! நான் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுகிறேன் அவ்வளவே. நீங்கள் அருகில் இருக்கும் போது புலியையும், சிங்கத்தையும் பற்றி நான் கவலைப் படப் போவதில்லை." — அவந்திகா கூறினாள்.

"நான் உன்னைக் கண்டதும் காதலிக்கத் துவங்கி விட்டேன். அவசரம் இல்லை. நாம் திருமணம் செய்வதற்குள் நீ உனது பெயரைக் குறிப்பிட்டால் போதும்!" — நையாண்டி செய்தான் அந்த வாலிபன்.

கலகலவென்று சிரித்தாள் அவந்திகா.

"வெகுகாலம் கழித்துச் சிரிக்கிறேன். எனது பெயர் அவந்திகா. நான் சைந்தவ தேசத்து இளவரசி. எனது தந்தை பிரயாகை வைபவத்திற்குச் சென்ற போது வாதாபியின் புலிகேசி என்னைச் சிறைப்பிடித்தான். அவனது தலைமைப் புலவன் எனது தலைமைப் புலவனை வென்று, என்னை அடிமையாக்கினான். பல்லவப் புலவன், அவனை வென்று என்னை மகேந்திரனுக்கு அடிமையாக்கினான். எனக்காக மகேந்திரன் கட்டியிருக்கும் காதல் மாளிகை இது!" அவந்திகா கூறினாள்.

கீழே நொறுங்கிக் கிடந்த கண்ணாடியையும், உருண்டு கிடந்த பூஜாடியையும் கண்ணுற்றான், அந்த வாலிபன்.

"மகேந்திரனின் காதல் பலவீனமாக உள்ளதே. ஒரு பூச்சாடி அவனது மாளிகையின் கண்ணாடிச் சுவரை உடைத்துவிட்டதே..!" — நகைத்தான் அந்த வாலிபன்.

"நான் என்னைப் பற்றிக் கூறிவிட்டேன். நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?"

தன்னைப் பற்றி அந்த வாலிபன் கூற ஆரம்பித்த, அதே சமயம் —

இடைகழியின் கதவினை யாரோ தடதடவென்று பலமாகத் தட்டினார்கள்.

அவந்திகா பதறினாள். "ஐயோ! யாரோ வருகிறார்கள். புறப்படுங்கள்!" என்றாள்.

"சரி! நாளை இரவு நான் வருகிறேன். ஒன்று மட்டும் உறுதியுடன் கூறிவிட்டுப் போகிறேன். நீ சிங்கத்துக்கும்

உரிமை ஆகப்போவதில்லை. புலிக்கும் உரிமையாகப் போவதில்லை. இந்த பட்டத்து யானைக்குத்தான் நீ உரியவளாக இருப்பாய்.. வருகிறேன்" என்றபடி வந்த வழியே, போர்வை வடத்தின் மூலமாகக். கீழே இறங்கினான். அவன் புறப்பட்டதும், பூஜாடியை எடுத்து அதன் இடத்திலேயே வைத்தாள். போர்வை வடத்தைச் சுருட்டி, வஸ்திரங்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தில் போட்டாள். கண்ணாடிச் சுவரின் துளையை மறைப்பதற்குத் திரைச்சீலையை மீண்டும் படரவிட்டாள்.

உறங்கி எழுபவளைப் போன்று கொட்டாவிவிட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள். பங்கஜாக்ஷி என்கிற அவளது அந்தரங்கத் தோழிதான் நின்றிருந்தாள்.

"உங்களைச் சந்திக்க மகேந்திர பல்லவ மன்னர் வந்திருக்கிறார். உங்களை அழைத்து வரச் சொன்னார்." — பங்கஜாக்ஷி சொன்னாள்.

"ஐயோ.. நான் பாட்டுக்கு உறங்கிக் கொண்டே இருந்து விட்டேனே. என் மீது தவறில்லை. கடற்கரை காற்று பிய்த்துக்கொண்டு வீசுகிறது. அந்த இதத்தில் தூங்கி விட்டேன். பங்கஜா! நான் சற்று அலங்கரித்துக் கொண்டு வருகிறேன். நீ மன்னரிடம் சொல்லி, நான் உறங்கி எழுந்திருப்பதாகச் சொல். இன்னொரு விஷயம்.. என்னை உங்கள் மன்னன் சிறைபிடித்துவிட்டாரே என்கிற கோபத்தில் பூச்சாடியை வீசி எறிந்தேன். அது கண்ணாடிச் சுவரில் பட்டு, கண்ணாடிச் சிதில்கள் அறை முழுவதும் இறைந்திருக்கின்றன. அவற்றைச் சுத்தம் செய்!" என்றபடி தன்னை அலங்கரித்துக் கொள்வதற்குச் சென்றாள்.

சாயாதேவன் யார் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு அவளுக்குப் புலிகேசியிடமும், மகேந்திரனிடமும் அறவே பயம் நீங்கியிருந்தது. சாயாதேவனின் பரந்த தோளும், புஜபராக்கிரமமும், வாதாபி மற்றும் பல்லவத்தையும் சேர்த்தே எதிர்கொள்ளக்கூடிய வலு

பெற்றது என்பதை அவன் அவளுக்குப் புரிய வைத்து, எவ்வித அச்சத்தையும் கொள்ளாதே என்று கூறியிருந்தான்.

தன்னை அலங்கரித்துக் கொண்டு கீழே போனாள், அவந்திகா. அவளுக்காக ஒரு அறையில் காத்திருந்தான், மகேந்திரன். உப்பரிகையிலிருந்து கால் அதிராமல் மெல்லிய அடிகளை வைத்து நிதான்மாக மிதந்து வந்து அவன் முன்பாக நின்றாள், அவந்திகா.

நிலத்தைப் பார்த்தபடி ஏதோ யோசனையில் அமர்ந்திருந்த மகேந்திரன் அவள் தனது முன்பாக வந்து நின்றதை அறியவில்லை. இன்னும் அவந்திகாவை காணோமே என்று சற்றே வியப்புடன் நிமிர்ந்த போது அவள் எதிரே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"நீ வந்துவிட்டாயா? என்னை அழைக்க வேண்டியது தானே?" — மகேந்திரன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்.

"அழைத்தவுடன் வரவேண்டியது அடிமையின் கடமை. மன்னன் உன்னைக் காண வேண்டுமாம் வா என்றுதான் என்னிடம் கூறப்பட்டது. அதுதான் வந்து நிற்கிறேன்." — அவந்திகா கூறினாள்.

வெண்மை பீதாம்பரப் பாவாடை அணிந்திருந்து, அதனை ஒத்த மேலாடை அணிந்து, சிவப்பு வண்ண மாராப்பை மேலே போர்த்தியிருந்தாள். காதில், மாணிக்கத் தொங்கணங்களை அணிந்து கூந்தலை அழகாக மடித்துக் கொண்டையாகப் போட்டிருந்தாள். கொண்டையின் மையத்திலிருந்து ஒரு அருவி போன்று பாய்ந்த கூந்தலைத் தோளின் இருபுறங்களிலும் தவழவிட்டிருந்தாள். கழுத்தில் சிவப்புக் கற்களினால் ஹாரத்தை அணிந்திருந்தாள். மிகவும் எளிமையாகத்தான் தன்னை அலங்கரித்திருந்தாள். ஆனால் அந்த அழகே மகேந்திரனின் இதய நரம்புகளை வீணையாக மீட்டச் செய்தது.

"மாளிகை உனக்குப் பிடித்திருக்கிறதா?" — மகேந்திரன் கேட்டான்.

"இராவணனின் அசோக வனம் மிகவும் சுந்தரமானது. அருவிகளும், இனிய பட்சிகளும் கூவும் இடம். ஆனால் சீதையால் அதனை ரசிக்க முடியவில்லை. அந்தச் சீதையின் நிலையில்தான் நான் இருக்கிறேன்." — அவந்திகா கூறினாள்.

"தவறு! நான் இராவணன் இல்லை. உன்னை அடிமைப்படுத்திய இராவணன் புலிகேசி. அவனிடம் இருந்து நான் உன்னைக் காப்பாற்றி இருப்பதால், நீ என்னை இராமனாகவே காணலாம்!" — மகேந்திரன் அவளது முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

அந்தக் கண்களை நேராகச் சந்தித்தாள், அவந்திகா. புலிகேசியைக் காட்டிலும் மிகவும் பண்பட்டவனாகத் திகழ்கிறான். ஆனால் இவளது மனதில் இவனுக்கு இடம் இல்லை என்பது தெரிந்தால், இவனும் வக்கிரப் புத்திக்காரனாக மாறலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சாயாதேவன் எப்படியாவது இவளை மீட்டு அழைத்துச் செல்கிறேன் என்று உறுதியளித்துவிட்டுதான் சென்றிருக்கிறான், அதுவரை புலியையும், சிங்கத்தையும், மாற்றி மாற்றிச் சமாளிக்க வேண்டியதுதான்.

"பல்லவ மன்னரே! உங்கள் மீது எனக்குப் பிடிப்பு ஏற்படவில்லை. அதே சமயம் புலிகேசியை வெறுத்தது போன்று நான் உங்களை வெறுக்கவும் இல்லை. புலிகேசியிடம் நான் சிக்கினால் சின்னாபின்னம் ஆகிவிடுவேன். நல்லவேளையாக உங்கள் புலவன் என்னைக் காப்பாற்றி இங்கே அழைத்து வந்திருக்கிறான். இவ்வளவு பிரும்மாண்ட மாளிகையை எனக்கு அளித்து என்னைக் கௌரவப்படுத்தி இருக்கிறீர்கள். புலிகேசியால் கேவலப்படுத்தப்பட்டு மிகவும் நொந்து போயிருக்கும் எனக்கு நீங்கள் தரும் பாதுகாப்பு இதத்தைத் தருகிறது. எனக்குச் சற்றுக் கால அவகாசம் தாருங்கள். நான்

உங்களை இராமனாக நோக்குவதற்குதான் அவகாசம் கேட்கிறேன்." — என்று கெஞ்சும் கண்களுடன் அவனை நோக்கினாள்.

மகேந்திரன் உருகிப் போனான். இந்தச் சிறிய வயதில் எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்கிறாள். இளவரசியாகத் துள்ளிக் குதித்து ஆடிப் பாடிக் கொண்டிருக்க வேண்டியவள், புலிகேசியால் அடிமைப் படுத்தப்பட்டு, இப்படி அலைக்கழிக்கப்படுகிறாளே.

"புலிகேசியைப் பற்றி நீ கவலைப்படாதே. அவனது உயிர் எனது கையால்தான் பறிபோக உள்ளது. நான் அவனிடம் தீர்க்க வேண்டிய கணக்கு ஒன்று உள்ளது. எனவே, அவனை எண்ணி அச்சம் கொள்ளாதே. அவனைக் கொல்வதற்கு நான் இருக்கிறேன். நீ எவ்விதக் கவலையுமின்றி சந்தோஷமாக இரு. எவ்வளவு காலம் வேண்டுமென்றாலும் நீ அவகாசம் எடுத்துக்கொள். ஆனால் நீ இராமனைப் போன்று என்னை நோக்கக் கற்றுக்கொள்!" — மகேந்திரனின் குரல் கட்டளையாகவே ஒலித்தது.

"நான் உங்களை இராமனாக நோக்குகிறேன் என்றே வைத்துக் கொள்வோம். கங்க இளவரசி ராஜசந்தனா உங்களை இராமனாக நோக்கப் போகிறாளா, கண்ணனாக நோக்கப் போகிறாளா?" — அவனைக் கீழ்கண்களால் பார்த்தபடி கேட்டாள்.

வேண்டுமென்றேதான் அப்படிக் கேட்டாள். அடுத்த வெள்ளிக்கிழமை கங்க இளவரசி ராஜசந்தனாவை மகேந்திரன் மணக்கப் போவதாகப் பங்கஜாக்ஷி கூறியிருந்தாள்.

மகேந்திரன் வாயடைத்துப் போய் நின்றான். மௌனமாக அங்கிருந்து புறப்பட்டவன், மீண்டும் ஒத்தாடை அரண்மனைக்குத் திரும்பியவுடன், தனது திருமணத்தைத் தள்ளிப்போடும்படி ராஜவர்மனிடம் வற்புறுத்த அவர்கள் காரணம் தெரியாமல் திகைத்துப் போய் நின்றனர்.

# 37. சுழல் கோபுரத்தின் உச்சியில்...

சூரிய அஸ்தமனம் துவங்கிவிட்டிருந்தது. தாமரைத் தடாகத்தின் அருகே உலாவிக் கொண்டிருந்தாள், அவந்திகா. இன்று இரவு வருகிறேன் என்று அவளது மனம் கவர்ந்த சாயாதேவன் கூறியிருந்தான். அவனுக்காக விசேடமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள், அவந்திகா.

பங்கஜாக்ஷி அன்று பிற்பகல் இவளிடம் ஒரு தகவலைக் கூறியிருந்தாள். மன்னன் தனது திருமணத்தைத் தள்ளி வைத்துவிட்டதாகக் கூறியதும், தான் முந்தைய தினம், மகேந்திரனிடம் கேட்டிருந்த வினாவுக்கான விடை இது என்பதைப் புரிந்து கொண்டாள். கங்க இளவரசிக்காக இளவரசி ராஜ சந்தனாவை நினைத்து இவளது மனம் வருந்தியது. தான் மகேந்திரனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாமோ என்று நினைத்தாள். எப்படியும் இவள் அவனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்கிற போது அவன் ராஜசந்தனாவை மணந்தால் இவளுக்கு என்ன..? பங்கஜாக்ஷியிடம் தான் அவனைச் சந்திக்க விரும்புவதாக மகேந்திரனுக்கு ஒரு ஓலையை அனுப்பியிருந்தாள். மகேந்திரனையும் அன்றே அவள் எதிர்பார்த்திருந்தாள்.

யோசித்தபடி நடந்தவள் தற்செயலாக வானத்தை நோக்கினாள். அழகிய இந்திரதனுசு ஒன்று வானத்தில் படர்ந்திருந்தது. அந்த வானவில்லையே கிறங்கிப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுழல் கோபுரத்தின் மீது ஏறி வானவில்லை காணும் ஆவலுடன் விடுவிடுவென்று மேலேறி வானவில்லையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூரிய அஸ்தமனம் ஆக, கீழே செல்லும் நோக்கத்துடன் நின்றவள், பின்பாக நின்று கொண்டிருந்த உருவத்தின் மீது மோதினாள். திகைப்புடன் நிமிர்ந்து பார்க்க, குரூரப் புன்னகையுடன் நின்றிருந்தான், புலிகேசி.

"வானவில்லைப் போன்றே உனக்கும் எத்தனை நிறங்கள், அவந்திகா?" — கேலியாகக் கேட்டான் புலிகேசி.

"இறையா!" —. மெல்லிய குரலில் அவனை அழைத்தாள்.

"என்ன.. பாரவியைப் போன்று என்னை அழைக்கிறாய்?" — போலி வியப்புடன் கேட்டான் புலிகேசி.

"புலிகேசியாக இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு பேசுகிறீர்கள். இறையா என்றாலாவது என் மீது இரக்கம் காட்டுவீர்கள் என்ற நினைப்பில் அப்படி அழைக்கிறேன்!" — அவந்திகா கூறினாள்.

"என்னை வாய் நிறைய இறையா என்று அழைத்த எனது வளர்ப்புத் தாய் சுமனஸா எனது தளபதியால் வெட்டிக் கொல்லப்பட்டாள், தெரியும் அல்லவா? எனவே, நீ இறையா என்று அழைத்தாலும், புலிகேசி என்று அழைத்தாலும், உன் மீது கொண்டுள்ள வன்மம் மட்டும் குறையவே குறையாது." — புலிகேசி அவளைக் கடுமையுடன் பார்த்தான்.

"அதுதான், ஏன் என்று கேட்கிறேன்? உங்களது பாட்டனைக் கொன்ற ஹர்ஷனையும் மன்னித்து விட்டீர்கள். என் மீது மட்டும் இவ்வளவு வன்மத்தைக் ஏன் காட்டுகிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்?" — அவந்திகா சோகமாக அவனைப் பார்த்தாள்.

"கண்டதும் உன் மீது காதல் கொண்டேன். உன்னை எனது இதயச் சிம்மாசனத்தில் அமர வைத்து, காலமெல்லாம் உனக்குப் பிரேமாபிஷேகம் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் நீ என்னை

*விட்டு நழுவிச் சென்று கொண்டே இருக்கிறாய்." — புலிகேசி துவேஷத்துடன் கூறினான்.*

*"வாதாபி அரசரே! உங்களுக்கு என் மீதுள்ள காதலை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. ஆனால் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை. உங்கள் பாரவிக்கு நான் அடிமையானது போன்று இன்று மகேந்திர பல்லவனின் புலவனுக்கு அடிமையாக இருக்கிறேன். நாளையே நீங்கள் பல்லவனின் மீது போர் தொடுத்து அவனை வென்றீர்கள் என்றால் நான் மீண்டும் உங்களுக்குச் சொந்தமாகி விடுவேன். அப்போது நாள் முழுவதும் நீங்கள் என்னைக் காதலிக்கலாம். எனது போதாத காலம், முதலில் உங்களுக்கு அடிமையாக இருந்தேன். உங்கள் மனதைப் புரிந்து கொள்வதற்குள், பல்லவ மன்னனுக்கு அடிமையாகிவிட்டேன். நீங்கள் ஒன்றை யோசித்துப் பார்த்தீர்களா?" — அவந்திகா கண்களில் நீர் ததும்ப அவனைப் பார்த்தாள்.*

*"இராமன், இலக்குவன் இல்லாத போது சீதை கடத்தப்பட்டாள். அது அவளது குற்றமா? எனது தந்தை இல்லாத போது நீங்கள் என்னைக் கைப்பற்றியது போன்று, நீங்கள் போர்க்களம் சென்ற போது, என்னைப் பல்லவன் கடத்திவிட்டான். இதில் எனது குற்றம் என்ன..? போதும் இந்த அடிமை வாழ்க்கை! மத்தளத்திற்கு இரண்டு பக்கம் அடி என்பது போன்று உங்களுக்கும், மகேந்திரனுக்கும் இடையே சிக்கி நான் படும் அவதிகள்... எனது வாழ்வையே நான் வெறுத்து விட்டேன். இதோ.. இந்தச் சுழல் கோபுரத்திலிருந்து நானே குதித்துவிடுகிறேன். ஒரு பெண்ணைக் கொன்ற அவப்பெயர் உங்களுக்கு வர வேண்டாம்!" — மிக உருக்கமாகப் பேசி, சுழல் கோபுரத்தின் மதிற்சுவரைக் கடந்து குதிக்க முயலுபவளைப் போன்று காலை உயர்த்த, புலிகேசி சட்டென்று அவளது புஜத்தைப் பற்றித் தடுத்தான்.*

அவனது முகம் சற்றே கனிந்திருந்தது. "நீ மகேந்திரனைக் காதலிக்கிறேன் என்று அப்போது சொன்னாயே..?" — அவளைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

"உங்களைக் காண எனக்கு அச்சமாக இருந்தது. உங்களால் எனது மானத்திற்குக் கேடு நேருமோ என்கிற அச்சம். இன்னொருவனின் காதலி என்று கூறினால், நீங்கள் என்னை நெருங்கத் தயங்குவீர்களோ என்று ஒரு பாதுகாப்பிற்காக நான் பார்த்தே இராத மகேந்திரனைக் காதலிப்பதாகக் கூறினேன். ஆனால் அவனைப் பார்த்ததும் தாங்கள் எவ்வளவு உயர்ந்தவர் என்பதை உணர்கிறேன். என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் அருமை தெரியாமல் நடந்து கொண்டேன். என்னை இந்த நரகத்தில் இருந்து மீட்டெடுத்து வாதாபிக்கே அழைத்துச் செல்லுங்கள். உங்களது இதயத்து ராணியாகவே நான் காலமெல்லாம் திகழ்கிறேன்." — புலிகேசியின் பாதத்தில் பணிந்தாள் அவந்திகா.

தனது செவிகளையே நம்ப முடியாமல் நின்றான், புலிகேசி. அவளைக் கடத்திச் சென்று சித்தரவதை செய்து கொலையே செய்ய வேண்டும் என்கிற வெறுப்பில் இருந்தவன், உண்மையில் அவள் தன்னை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறாள் என்பதை அறிந்ததும், திகைத்து நின்றான்.

"நீ என்னிடம் மனதுவிட்டுப் பேசியிருந்தால், நான் உன்னைத் தவறாக நினைத்திருக்கமாட்டேனே, அவந்திகா..! நீயாக, மகேந்திரன் மீதுள்ள காதலில் அவனது புலவனுடன் சேர்ந்து நாடகமாடிப் பல்லவத்திற்கு ஓடி வந்துவிட்டாய் என்கிற கோபத்தில் உன்னைப் பழிவாங்கவே நான் இங்கு திரிகிறேன்..!" — புலிகேசி கூறினான்.

"ஆண்கள் மனது ஒரு பக்கமாகவே பாயும். மெய்ம்மறந்து காதலிப்பீர்கள். சந்தேகம் வந்தால், கொன்று போட்டுவிடுவீர்கள். எனக்குத் தெரியும்.

அதனால்தான் இதுவரை எந்த ஆண்மகனிடமும் நான் அவனைக் காதலிப்பதாகக் கூறவே இல்லை. எனது உயிர் எனக்கு முக்கியம்." — அவந்திகா கூறினாள்.

"சரி! இனி நான் உன்னைப் புரிந்து கொண்டேன். என்னுடன் இப்போதே வாதாபிக்குப் புறப்பட்டு வா..!" — புலிகேசி அழைத்தான்.

"கவிபாடி என்னை அடிமைப்படுத்தி அழைத்து வந்திருக்கிறான். இராமன் நினைத்திருந்தால் ஹனு மானைவிட்டே, சீதையை அழைத்து வந்திருக்கலாமே. ஹனுமான் அழைத்த போது சீதை மறுத்தாளே. ஏன்? இராமன் போரிட்டு அரக்கரை அழித்து அவளை மீட்டு எடுத்துக் கொண்டு போனதால்தான், இராமனின் பெருமை இன்றுவரை நிலைத்திருக்கிறது. நீங்களும் காஞ்சியின் மீது படையெடுத்து வந்து மகேந்திரனை வீழ்த்தி என்னை மீட்டு எடுத்துக் கொண்டு செல்லுங்கள். நான் நிச்சயம் உங்களோடு வருகிறேன்.." — அவந்திகா கூறினாள்.

"உண்மையாகவா?" — புலிகேசி கேட்டான்.

"அடுத்த வெள்ளிக்கிழமை மகேந்திரன், கங்க இளவரசியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறான். சைந்தவ இளவரசியான நான், ஒருவனுக்கு இரண்டாம் தாரமாகத் திகழமாட்டேன். என்னை மீட்டு எடுத்துச் செல்லும் இராமனாக வாருங்கள். உங்களது ஒரே சீதாவாக நான் இருக்கிறேன்." — அவந்திகா சொன்னதும் உருகிப் போனான், புலிகேசி.

"உனது நல்ல மனதைப் புரிந்து கொள்ளாமல், உன்னிடம் வன்மம் பாராட்டினேனே. என்னை மன்னித்துவிடு..!" — புலிகேசி கூறினான்.

"வாதாபி மன்னரே! எனக்காக இந்தக் காதல் மாளிகையைக் கட்டிவிட்டு, இதற்கு நான் மயங்கி அவனது பிரிய நாயகியாக இருப்பேன் என்று மகேந்திரன் நினைக்கிறான். இந்த மாளிகை அவனுக்குக் கால் தூசு

என்று அவனுக்கு நிரூபிக்க வேண்டும்!" — அவந்திகா கூறினாள்.

"அதற்கு என்ன செய்ய வேண்டும் அவந்திகா?" வன்மம் மறைந்து இப்போது புலிகேசியின் கண்களில் காதல் எட்டிப்பார்த்தது.

'ஆண்கள் இவ்வளவு முழுமூடர்களா? சற்று உருக்கமாகப் பேசிக் காதலிப்பது போன்று நடித்தால் அப்படியே குணத்தை மாற்றிக் கொண்டு நாயைப் போன்று வால் ஆட்டுகின்றனரே. இவனுக்கா இவ்வளவு காலம் பயந்தோம்?' — மனதினுள் நினைத்தாள், அவந்திகா.

"எனது காதலைப் பெறுவதற்காக, மகேந்திரன், இந்தக் கடல்மல்லையில் சிற்பக் கோயில்களைக் கட்டப் போகிறானாம். கலைகளுக்குப் பிறப்பிடம் பல்லவம் என்கிறான். அவன் எழுப்பும் குடைவரை கோயில் களுக்கு எனது பெயரை இடுவானாம். அவனைக் காட்டிலும் நீங்கள் சிறந்த குடைவரை கோயில்களை எழுப்ப வேண்டும். உங்கள் வாதாபி மலப்பிரபா மாளிகை எனது இதயத்தைக் கவர்ந்தது. அதன் பின்பாக இருக்கும் இரட்டை மலையில் நீங்கள் குடைவரை கோயில்களைக் கட்ட வேண்டும். வாதாபி குடைவரை கோயில்கள் கடல்மல்லையின் கோயில்களைக் காட்டிலும் புகழ் பெற வேண்டும். உனது கோயில்கள் எனது புலிகேசி எழுப்பிய கோயில்களுக்கு ஈடு இணையாகாது என்று மகேந்திரனிடம் கூறிவிட்டு, நான் தங்களது புரவியில் ஏறி வாதாபிக்கு வர வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்..!" — அவந்திகா கூற, புலிகேசி புளகாங்கிதத்துடன் அவளைத் தாவி அணைத்தான்.

"அவ்வளவுதானே அவந்திகா! உன்து கோரிக்கையை உடனே நிறைவேற்றுகிறேன். வாதாபியில் துர்கைக்கும், திருவிக்கிரமனுக்கும் குடைவரை கோயில்களை எழுப்புகிறேன். மகேந்திரன் மீது போர் தொடுத்து,

காஞ்சிக்கு வந்து உன்னை மீட்டு எடுத்துச் செல்கிறேன்!" — சபதம் இட்டான், புலிகேசி.

"நான் உங்களுக்காகக் காத்திருப்பேன்!" மெதுவாகத் தன்னை அவனிடம் இருந்து விடுவித்துக் கொண்டாள். புலியைச் சமாளித்தாகிவிட்டது. அடுத்தது மகேந்திர சிங்கத்தைச் சமாளிக்க வேண்டும்.

பேரழகுப் பெட்டகமாக அவந்திகா இறங்கிப் போவதைக் காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தான், புலிகேசி. மகேந்திரனுக்குத் திருமணம் நடைபெற உள்ளது. அவந்திகா மகேந்திரனைக் காதலிக்கவில்லை. அவள் இவனை ஏற்கத் தயாராக இருக்கிறாள். இனியும் காவல் தலைவன் வேடம் எதற்கு..? மறுநாளே அவன் வாதாபிக்குப் புறப்படப் போகிறான். வாதாபி மலையில் குடைவரை கோயில்களை எழுப்பி அவற்றில் சிற்பக் வேலைப்பாடுகளைச் செய்து அவந்திகாவின் காதலுக்குச் சமர்ப்பிக்கப் போகிறான். காஞ்சியின் மீது படைஎடுத்து வந்து அவந்திகாவை மீட்கப் போகிறான். சர்வ வல்லமை பொருந்திய அத்திமலையான் ஆலயம் உள்ள காஞ்சியைத் தனது வசப்படுத்தப் போகிறான். குதூகலத்துடன் புலிகேசி சுழல் கோபுரத்தின் உச்சியில் நின்றிருந்தான்.

அன்னம் போன்ற நர்த்தன நடை பயின்று அவந்திகா தனது அந்தப்புரத்தை நோக்கி நகர்ந்தாள். சுழல் கோபுரத்தின் உச்சியில் இருந்து புலிகேசியின் கண்கள் தன்னை வெறித்துப் பார்ப்பதை உணர்ந்தாள். இப்போது அந்தக் கண்களில் வன்மம் இருக்காது. காதலே தலைதூக்கியிருக்கும். புலிகேசியின் காதல் ததும்பும் பார்வை அதிக ஆபத்தானதா, இல்லை அவனது குரோதம் நிறைந்த பார்வை ஆபத்தை விளைவிக்கக் கூடியதா? அவந்திகாவால் அனுமானிக்க முடியவில்லை. புலிகேசி, மகேந்திரன் இருவரிடமும் தந்திரத்தைப் பிரயோகித்து, ஒருவரையொருவர் மோதவிட்டு, மானத்தையும், உயிரையும் ஒருசேரக் காப்பாற்றி நிழல்

மனிதனான தனது காதலன் சாயாதேவனை அடைய வேண்டும். மனதினுள் எண்ணியபடி மாளிகையினுள் நுழைந்தாள்.

சுழல் கோபுரத்தின் உச்சியில் புலி யோசனையுடன் நின்றிருக்க, சரியாகச் சிங்கமும் அவந்திக பவனத்தில் நுழைந்தது. மகேந்திரன் மாளிகையை நோக்கிச் சிம்ம நடை போட, மேலிருந்து அதைக் கவனித்த புலியின் கண்கள் சிவந்தன. அவந்திகா தனது மனதைத் திறந்து காட்டிய பிறகு, அவள் தனக்கு உரியவள் என்கிற எண்ணம் மீண்டும் மேலோங்கியிருந்தது. "இனியும் மகேந்திர ஜாலங்கள் அவந்திகாவிடம் எடுபடாது. உனது கதை முடியும் நேரம் நெருங்கிவிட்டது, மகேந்திரா!" — மெதுவான குரலில் ஊளையிட்டான், புலிகேசி.

தனது சயன அறைக்கே தேடி வந்து தனது முன்பாக நின்ற மகேந்திரனைப் பணிவுடன் நோக்கினாள் அவந்திகா. புலிக்கு உக்கிரம் ஒன்றே உண்டு. மானைப் பார்க்கும் போதெல்லாம் விரட்டி அடித்து உண்ணும். ஆனால் சிங்கம் அப்படியல்லவே. பசி இருந்தால்தான் மானை விரட்டும். மகேந்திரனின் அமைதியான முகம் அவளுள் குற்ற உணர்வினை ஏற்படுத்தியது. இவனைக் காதல் வார்த்தை பேசி ஏமாற்ற வேண்டியிருக்கிறதே! இவளுக்காகத் தனது திருமணத்தைக் கூடத் தள்ளி வைத்துவிட்டானே.

"என்னை அழைத்தாயா?" — மகேந்திரன் அவளை ஆவலுடன் நோக்கினான்.

"ஆம் அரசே! எனது தோழி பங்கஜாக்ஷி இன்று காலையில் ஒரு செய்தியைக் கூறினாள். அடுத்த வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்த தங்களது திருமணத்தை ஒத்தி வைத்துவிட்டதாக அறிந்தேன்..?" — அவந்திகா அவன் கண்களையே நோக்கினாள்.

"ஆம், கண்ணனாக இருக்கப் போவதில்லை. இராமனாகவே இருப்பதாக உத்தேசம், நீ சீதையாக இருக்கும் பட்சத்தில்!" — மகேந்திரன் கூறினான்.

*“அரசே! அவசரப்பட வேண்டாம்.. ஒரு நகைச்சுவைக்காகத்தான் உங்களிடம் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டேன். ஒரு பெண்ணின் மனதைச் சிதைத்துவிட்டு, நான் உங்களுடன் சேர்ந்து வாழ்வது நியாயம் அல்ல. ராஜசந்தனா கண்ணீர் விடுவதை என்னால் சகிக்க முடியாது. அவளைத் திட்டமிட்டபடி வரும் வெள்ளிக் கிழமை மணந்து கொள்ளுங்கள். அவள் ஒத்தாடை கொலுமண்டபத்தை அலங்கரிக்கட்டும். எனக்கு இந்த அவந்திக பவனம் போதும். இரு உள்ளங்கள் இணைவதற்கு இதோ இந்தக் கடல் சாட்சி இருந்தால் போதும். காலம் வரும் போது நாம் சேருவோம். கடல் எல்லையில் இருப்பதுதான் நல்லது. ஊருக்குள் புகக் கூடாது. நான் கடலைப் போன்று கடல்மல்லையிலேயே இருக்கிறேன். நீங்கள் ஒத்தாடையில் இருந்து அவ்வப்போது வந்து கடற்கரை காற்றை வாங்கிக் கொள்ளுங்கள்.” — அவந்திகா கூறினாள். அவளுக்கே ஆச்சரியம்! தன்னால் எங்ஙனம் இவ்வளவு கோர்வையாகப் பசப்பு வார்த்தைகளைப் பேச முடிகிறது என்று.. வலிமையான போர் சிந்தனையுள்ள ஆண்களைப் பெண்களின் பசப்பு வார்த்தைகள் என்னமாய் அலைக்கழிக்கின்றன... கடல் நீரில் பெரிய கப்பல்கள் மிதக்கின்றன. ஆனால் கடல் நீர் கப்பல்களினுள் புகுந்து விட்டால், கப்பல் மூழ்கித்தானே ஆக வேண்டும்..? பசப்பு வார்த்தைகள் என்கிற கடல் நீர் மாவீரர்களின் சிந்தையினுள் புகுந்து அவர்களை மூழ்கடித்த சரித்திரங்கள் இல்லையா என்ன?*

*மகேந்திரன் கண்களில் ஆனந்தம் மின்ன, அவளை நோக்கினான்.*

*“அப்படியென்றால் நீ எனது காதலை ஏற்றுக் கொள்கிறாயா, அவந்திகா?” — மகேந்திரன் கேட்டான்.*

*“புயலில் சிக்கிப் பாய்மரம் கிழிந்த கலமாக அலையும் எனக்கு, கலங்கரை விளக்கமாக நீங்கள் திகழ்கிறீர்கள். அது போதும் எனக்கு. உங்கள் காதலை நான் ஏற்றுக்*

கொள்ள வேண்டிய கட்டாயத்தில்தான் இருக்கிறேன். ஆனால் நான் கேட்கும் மூன்று கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். உங்கள் காதலை விலை பேசவில்லை. உங்களுக்குக் கீர்த்தியைத் தரப்போகிற மூன்று கோரிக்கைகளைத்தான் வைக்கப் போகிறேன்." — அவனை ஆழமாக நோக்கினாள், அவந்திகா.

மகேந்திரன் பேரானந்தத்தில் திளைத்தான். தேவலோக மங்கையைப் போன்று காட்சி தரும் இந்தப் பேரழகி இவனது காதலை ஏற்கத் தயாராகிவிட்டாள் என்பது அவனை சுவர்க்க லோகத்தில் மிதக்கச் செய்தது.

"உனது கோரிக்கைகளைக் கூறு அவந்திகா! உடனே நிறைவேற்றுகிறேன்."

அவந்திகா அவனை நெருங்கி வந்து, அவனது கரத்தைப் பற்றித் தனது உள்ளங்கைகளில் சிறைப் பிடித்தாள்.

"திட்டமிட்டபடி வரும் வெள்ளிக்கிழமை நீங்கள் ராஜசந்தனாவை மணக்க வேண்டும். இதுவே எனது முதல் கோரிக்கை." — அவந்திகா கூற, தனது இமைகளை மூடித் திறந்து அதற்குத் தனது சம்மதத்தினைத் தெரிவித்தான்.

"புலிகேசி எனக்காக வாதாபி மலையில் குடைவரை கோயில்களை எழுப்பிக் கொண்டு இருக்கிறான். நான் அவனிடம் சவால்விட்டிருக்கிறேன். மகேந்திரன் எனக்காக உனது வாதாபி கோயில்களைக் காட்டிலும் மிகவும் அற்புதமான குடைவரை கோயில்களை எழுப்பு வார் என்று அவனிடம் சூளுரை செய்திருக்கிறேன். மகாமல்லர் எழுப்பும் கோயில்கள் உனது வாதாபி கோயில்களைவிட அற்புதமாக இருக்கும் என்று கூறி இருக்கிறேன். எனவே, அவன் எழுப்பும் கோயில்களை விடப் பிரும்மாண்டமான, சிறப்பக் கோயில்களைத் தாங்கள் எழுப்ப வேண்டும். இதுவே எனது இரண்டாவது கோரிக்கை." அவந்திகா வேண்டினாள்.

“எனது காதலை ஏற்க, நீ கோரிக்கைகளை முன் வைக்கிறாய் என்றவுடன், நீ இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்பாய் என நினைத்தேன். ஆனால் நீ கேட்பவை எதுவுமே உனக்காக இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன். ராஜசந்தனாவுக்கு முதல் கோரிக்கையின் மூலம் வாழ்வளித்தாய். இரண்டாவது கோரிக்கையின் மூலம், வாதாபியின் மீது கலைப்போர் தொடுக்கச் சொல்கிறாய். இது பல்லவத்திற்கு அழியாப் புகழைத் தரும். உனது மூன்றாவது கோரிக்கையையும் சொல்லிவிடு, அவந்திகா! எனது காதலி அவந்திகா, சுயநலம் இல்லாதவள் என்று அதோ அந்தச் சுழல் கோபுரத்தின் மீது நின்று வையகமெங்கும் கேட்கும்படி கூறுகிறேன்.” — நெகிழ்ச்சியுடன் கூறினான், மகேந்திரன்.

“மூன்றாவது கோரிக்கை, நீங்களும், நானும் காதலர்களாக இணைவதற்குள் நீங்கள் வாதாபி புலிகேசியின் தலையை, இதோ எனது உப்பரிகையில் இருந்து கடலில் வீசி ஏறிய வேண்டும்..” — அவந்திகா கூறி முடித்திருக்கமாட்டாள்.

“பலே!” பரவசத்துடன் அவந்திகாவை தனது இரு கைகளால் ஏந்திச் சயன அறையை வலம் வந்து, அவளைக் காதலுடன் மஞ்சத்தில் கிடத்தினான்.

“எனது சிற்றப்பன் ராஜவர்மனுக்கு நான் ஒரு வாக்குத் தந்திருந்தேன்... அவர் தேர்ந்தெடுக்கும் பெண் யாராக இருந்தாலும் அவளை மணந்து கொள்கிறேன் என்று. உனது முதல் கோரிக்கையின் மூலம் எனது வாக்கினைக் காப்பாற்றினாய். உனது இரண்டாவது கோரிக்கையின் மூலம் எனது கலையார்வத்தைத் தூண்டிவிட்டாய். உனது மூன்றாவது கோரிக்கையின் மூலம் எனது வீரத்தின் கீர்த்தியை வையமெங்கும் பரவுவதற்கு வழி தேடி உள்ளாய். எனவே இது உனது கோரிக்கைகள் அல்ல. பல்லவத்தின் மேன்மைக்கான உனது கட்டளை கள். நான் உனக்கு உறுதிமொழி அளிக்கிறேன். உனது மூன்று கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்.” —

மகேந்திரன் அவந்திகாவை காதலுடன் பார்த்தபடி கூறினான்.

அவந்திகா தனக்குள் சிரித்துக் கொண்டாள். 'எனக்கா சுயநலம் கிடையாது, பல்லவரே! அனைத்துமே எனது நலத்தைப் பேணுவதற்குதான் செய்கிறேன். போகப் போகப் புரிந்து கொள்வீர்கள்..' மனதுக்குள் கூறியவள், மகேந்திரனின் கைகளைப் பற்றித் தனது கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

மகேந்திரன் வெற்றிக் களிப்பில் மிதந்தான். அவந்திகா அவனது வசமாகிவிட்டாள்! ஆட்சிக்கு, கங்க ராணி. காதலுக்குச் சைந்தவ ராணி..!

அவந்திகா ஏற்படுத்தியிருந்த மகிழ்ச்சியினை துளித்துளியாக ரசித்தபடி உப்பரிகையிலிருந்து இறங்கி, தாமரைத் தடாகத்தைக் கடந்து சென்றவனின் பார்வையில் சுழல் கோபுரம் தென்பட்டது.

ஒருமுறை அதன் மீது ஏறி நின்று தனது வெற்றியைக் கொண்டாடுவோம்! தனக்குள் தீர்மானித்த மகேந்திரன் கோபுரத்தின் மீது ஏறத் தொடங்கினான். கோபுரத்தின் உச்சியில் நின்று, மகேந்திரனை நோட்டம்விட்டுக் கொண்டிருந்த புலிகேசி, அவன் சுழல் கோபுரத்தின் உள்ளே நுழைவதைக் கண்டதும் திகைத்தான். நல்லவேளை, ஒரு கலங்கரை விளக்கத்தைப் போன்று அமைக்கப்பட்டிருந்த அந்தக் கோபுரம் வட்ட வடிவத்தில் இருந்தது. அதன் மீது ஏறி வருவதற்கான படிகள் சுழன்று ஏறும் விதமாக அமைக்கப்பட்டிருந்ததால், அதற்குச் சுழல் கோபுரம் என்று பெயரிடப்பட்டிருந்தது. படிகள் உச்சியில் வந்து சேரும் இடம் ஒரு அறையைப் போன்று அமைக்கப் பட்டிருந்தது. அந்த அறையைச் சுற்றிக் கோபுரத்தின் உப்பரிகை வட்ட வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. ஒருவர் உப்பரிகையின் இந்தப்புறம் நின்றால், மறுபுறம் நிற்பவரை அந்த அறை மறைக்கும்.

அதைக் கவனித்த புலிகேசி உப்பரிகையின் மறுபுறமாக நின்று மகேந்திரனின் வரவை எதிர்பார்த்தான்.

மகேந்திரனின் காலணிகள் கோபுரத்தின் மரப்படிகளில் மோதி ஒலிக்கும் சத்தம் நெருங்கிக் கொண்டே வந்தது.

உச்சிக்கு வந்த மகேந்திரன், கடலைப் பார்த்தபடி நின்றான்.

"அவந்திகாவின் மீது நான் கொண்டுள்ள காதலின் சின்னமாக இதோ, இந்தத் திருக்கடல்மல்லையில் மாபெரும் சிற்பக் கோயில்களை அமைப்பேன். எனது மனக்குகையில் குடியிருக்கும் அவந்திகாவுக்குக் குடைவரை கோயில்களை அமைப்பேன்.. எங்களது காதல் வருங்காலக் காதலர்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ ஒரு கலங்கரை விளக்கமும் அமைப்பேன். அவந்திகா வசிக்கும் இந்தக் கடல்மல்லை மாமல்லனின் புரமாகவே காலமெல்லாம் திகழும்..!" — பெரும் குரலில் கடலை நோக்கிக் கூவினான், மகேந்திரன்.

உப்பரிகையின் மறுபுறமாக நின்றிருந்த புலிகேசியின் செவிகளில் மகேந்திரனின் அறைகூவல் விழுந்தது. அவனுக்கு நெஞ்சமும், தேகமும் எரிந்தது.

'பல்லவமே கேள்! உனது மன்னன் மகேந்திரன் அறைகூவல்விடும் அதே கோபுரத்தின் உச்சியில் நின்று நானும் அவனுக்கு எதிர் அறைகூவல் விடுக்கிறேன். எனது வாதாபியில் மகேந்திரன் கட்டும் குடைவரை கோயில்களைக் காட்டிலும் சிறப்பான குடைவரை கோயில்களை எழுப்பி, அதில் அவந்திகாவை மாலை யிடுகிறேன். இது உறுதி. கடல்மல்லையைவிட வாதாபி கோயில்களை உலகம் புகழ்ந்து பேச வைக்கிறேன்.' — தனக்குள் கூறிக் கொண்டான், புலிகேசி.

"நான் புலியின் தலையைச் சீவி அவந்திகாவுக்குப் பரிசளிக்கிறேன்!" — ஆவேசத்துடன் அலறினான், மகேந்திரன்.

அதுவரை கட்டுப்பாட்டுடன் அமைதியாக இருந்த புலிகேசி மகேந்திரனின் ஆவேசச் சபதத்தைக் கேட்டதும், பொறுமையை இழந்தான்.

"சிங்கத்தின் தலையைச் சீவி அவந்திகாவுக்குப் பரிசளிக்கிறேன். பார்க்கலாம், புலியா சிங்கமா?" தனது பங்குக்குப் புலிகேசி அலற, அவனது கூக்குரல் மகேந்திரனைத் திடுக்கிட வைத்தது.

"யார்?" பரபரப்புடன் சுழல் கோபுர உப்பரிகையின் மறுபுறம் நோக்கி ஓட, அதற்குள் அங்கிருந்து நழுவிய புலிகேசி, மறுபுறமாகச் சுற்றி வந்து, கடகடவென்று கோபுரப் படிகள் இறங்கி ஓட, யாரோ படிகளில் இறங்கி ஓடும் ஒலியைக் கேட்டு, மகேந்திரனும் படிகளில் இறங்கி ஓடினான். சிங்கத்தின் கம்பீரமான ஓட்டம், பாய்ந்து செல்லும் புலியின் பாய்ச்சலுக்கு முன்பாக எடுபட வில்லை. இவன் கீழே செல்வதற்குள், குரல் எழுப்பியவன் ஓடி மறைந்திருந்தான். வந்தது யாராக இருக்கும் என்று யோசித்தபடியே தொண்டரையன் நின்றிருந்த பகுதிக்குச் சென்றான்.

அங்கே —

மகேந்திரன் உறைந்து போனான். குரல்வளை அறுபட்டுப் பிணமாகக் கிடந்தான், தொண்டரையன். அவனது நெஞ்சுக் குழியில் இருந்து பெருகிக் கொண்டிருந்த குருதி மல்லையின் மண்ணை நனைத்தது.

கோபுரத்தில் மறைந்திருந்த மனிதன்தான் தொண்டரையனை கொன்றிருக்க வேண்டும். அவன் யார்?

மகேந்திரனின் பார்வை தொண்டரையனின் உடலை நோட்டம்விட்டது. சடலத்தின் இடக்கையில் ஒரு பனையோலை சொருகப்பட்டிருந்தது. அதனை உருவி எடுத்து வாசித்தான், மகேந்திரன்.

'மல்ல எதி' என்று மட்டும்தான் அந்த ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# 38. மல்ல எதி

பீமவர்மனுக்கும் — சந்திரமதிக்கும் முதலில் திருமணம் நடந்தேறியது. அதன் பிறகு, தனி மணப்பந்தலில் மகேந்திரன், ராஜசந்தனாவின் கழுத்தினில் மங்கல நாணைப் பூட்டினான். இது ராஜஸ்ரீயின் ஏற்பாடு. ஐந்து திருமணங்கள் ஒரே நாளில் அத்திமலையானின் சந்நிதியில் நிகழ்ந்த பிறகு, அரச குடும்பத்தில் பல விபரீதங்கள் நடந்துவிட்டன. இனி வாழப்போகும், தலைமுறையாவது ஆனந்தத்துடன் வாழ வேண்டும்; என்பதற்காகப் புரோகிதரிடம் உறுதியாகக் கூறிவிட்டாள், ஒரே பந்தலில் இரு திருமணங்கள் நடைபெற வேண்டாம்; வேறு வேறு முகூர்த்தங்களில், வெவ்வேறு பந்தல்களில் திருமணம் நடக்க வேண்டும் என்று.

இறந்து போன மகள் ஜெயஸ்ரீயின் ஆபரணங்களை ராஜசந்தனாவுக்கும், சந்திரமதிக்கும் கண்ணீருடன் அணிவித்தாள். அவளது கண்ணீருக்கான காரணத்தை உடனே புரிந்து கொண்டான் மகேந்திரன். 'கவலைப்படாதீர்கள் சிற்றன்னையே! ஜெயஸ்ரீக்கு நியாயத்தைக் கிடைக்க வழி செய்கிறான்.' — தனக்குள் கூறினான்.

திருமணத்திற்கு முன்பாக, மறக்காமல், அரண்மனை நந்தவனத்தில் இருந்த பஞ்சகல்யாண மரங்களை வெட்டி, அதன் கீழே புதைக்கப்பட்டிருந்த வர்மகேது குளிகத்தை எடுக்க உத்தரவிட்டாள், ராஜஸ்ரீ. குளிகத்தோடு, ஒரு ஓலையும் கிடந்தது.

'குழி தோண்டி மறைக்கப்பட்டிருக்கும் இந்தக் குளிகம் பல்லவத்தைக் குழி தோண்டிப் புதைக்கும்!

*பல்லவர்களுடன் பல்லாங்குழி விளையாட்டு ஆரம்பம்!*
*— மல்ல எதி.'*

ஓலையைப் படித்ததும் மகேந்திரன் யோசனையில் ஆழ்ந்தான். தொண்டரையனைக் கொன்றதும் மல்ல எதி. குளிகத்தைப் புதைத்ததும் மல்ல எதி. அவனி சிம்மனுக்கும், வித்யுதாவுக்கும் பிறந்த அந்த மல்ல எதி எங்கிருக்கிறான்..? அவனிசிம்மனின் மகனாக இருந்தும் அவனே பல்லவ சாம்ராஜ்யத்திற்கு உலை வைக்கிறானே?

திருமணம் முடிந்ததும் அவனுக்குப் பல பணிகள் உள்ளன.

அத்திமலைத்தேவனைத் தேடி, கண்டுபிடிக்க வேண்டும்.

அவந்திகாவின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

மல்ல எதி என்கின்ற இவனது சகோதரனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அடக்க வேண்டும்.

யோசித்தபடியேதான் திருமணத்தைச் செய்து கொண்டான், மகேந்திரன். திருமணத்திற்கு மறுநாளே, மாபெரும் சபை ஒன்றைக் கொலுமண்டப ஆலோசனை அறையில் கூட்டினான். புதிய தலைமை அமைச்சர், பவனகல்யாண சதுர்வேதர், அமைச்சர்கள், தளபதிகள் மற்றும் தசகுமாரர்கள் ஆகியோரைத் தவிர, பாரவி என்கிற தாமோதராவும் அவரது மகன் பிரசன்ன வாசனும் அங்கே அமர்ந்திருந்தனர். காஞ்சிக்கு வந்ததும் தானேஸ்வரில் இருந்த மனைவி மகனைக் காஞ்சிக்குத் தருவித்துவிட்டான், பாரவி.

ராஜவர்மனும், பீமவர்மனும் கூட மகேந்திரனின் இருக்கைக்கு இருபுறத்திலும் அமர்ந்திருந்தனர். மகேந்திரன் வந்ததும், அனைவரும் எழுந்து நின்றனர்.

அனைவரையும் வணங்கிவிட்டுத் தனது இருக்கையில் அமர்ந்து கொண்டான், மகேந்திரன்.

ஒருமுறை கூட்டத்தினரைச் சுற்றிப் பார்த்தான். தசகுமாரர்கள் எட்டுப் பேர் ஒன்றாக அமர்ந்திருந்தனர். புஷபோத்பவன் என்பவன் வந்திருக்கவில்லை. தொண்டரையன் மரணத்திற்குப் பிறகு மித்ரகுப்தனைத் தான் மிகவும் நெருக்கமாக வைத்திருந்தான், மகேந்திரன். அவனை நோக்கித் தனது புருவங்களை உயர்த்தினான், மகேந்திரன்.

அவனோ புஷ்போத்பவன் வராத காரணத்தை தான் அறியேன் என்பது போன்று உதடுகளைப் பிதுக்கினான்.

மகேந்திரன் கூட்டத்தினரை நோக்கி உரையாற்றத் துவங்கினான். "சபையோர்களே! மணமுடித்துப் புதிய பொறுப்புகளைச் சுமக்கும் மன்னவனாக இன்று நான் உங்கள் முன்பாக அமர்ந்திருக்கிறேன். எனது பாட்டனார் சிம்மவர்மன் காலத்தில் பல்லவ அரச குடும்பத்தைப் போரினால் வெல்ல முடியாதவர்களால், சூழ்ச்சி வலை பின்னப்பட்டது. அதற்குப் பிறகு அரச குடும்பத்தில் பல விபரீதங்கள் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். எல்லாவற்றையும் களை எடுத்துப் புதிய சகாப்தத்தை நான் துவக்க நினைத்திருக்கிறேன். அதற்கு உங்கள் உதவி தேவை. புதிய பல்லவம் எழுச்சி பெற்று நிற்கப் போகிறது. பல்லவர்கள் போர்க் கலைகளை மட்டும் அறிந்தவர்கள் அல்ல. சிற்பக் கலைகளையும் தெரிந்தவர்கள் என்பதை நிரூபிக்க, திருக்கடல்மல்லையில் பல்லவர் புகழ் பாடும் சிற்பக் கோயில்களை எழுப்பப் போகிறேன். மல்லை பொலிவு பெற, பல்லவத்தின் தொல்லையும் அகலும்.

"இன்று முதல் புதிய உத்வேகத்துடன், நாம் அத்திமலைத்தேவனைத் தேடி எடுக்க வேண்டும். அவனது ஸ்ரீதளமணி கிடைத்துள்ள நிலையில், அவன் தன்னை மிக விரைவில் வெளிக்காட்டப் போகிறான் என்று உறுதியாக நம்புகிறேன். தசகுமாரர்கள் மற்றும் படைவீரர்களைக் கொண்டு புதிய வல்லுநர்கள் படை ஒன்று அமைக்கப்படும். அதன் முக்கியப் பணியே அத்திமலையானைத் தேடுவதுதான். ஜோதிடமும்,

*தீர்க்கதரிசனமும் கொண்ட புலவர் பாரவியின் மகன் பிரசன்னவாசன், உபதளபதி வர்ஷாங்கன், தசகுமாரர் களில் புஷ்போத்பவன், ராஜவாகனன், சோமதத்தன், அர்த்தபாலன், மந்த்ரகுப்தன், விஸ்ருதன், உபஹாரன், பிரமதி ஆகியோர் அந்தப் படையில் இருப்பர்!" — மகேந்திரன் அறிவித்தான். புஷ்போத் பவனைத் தவிர மற்றவர்கள் எழுந்து நின்று மன்னரைப் பணிந்தனர்.*

*புஷ்போத்பவன் எங்கே? — அனைவரின் மனதிலும் கேள்வி பிறந்தது.*

*மகேந்திரவர்மன் தொடர்ந்தான். "சோழ நாடு தற்போது மிகவும் பலவீனம் அடைந்து பாண்டியர்களின் வசம் உள்ளது. நமது பல்லவத்தின் எல்லையில் பாண்டிய மீன்கள் துள்ளி விளையாடுவதாக அறிகிறேன். எனவே நமது பல்லவத்தின் தென்புறத்தை வலுவாக்கும் முயற்சியில் இருக்கிறேன். அதற்கு எனது சிற்றப்பா பீமவர்மனின் திருமணம் பெரும் உதவி புரிந்துள்ளது. வடகங்க மன்னர், ஸ்ரீவிக்கிரமர், தனது வசமுள்ள காடவ பகுதிகளைத் தனது மாப்பிள்ளை பீமவர்மனுக்குச் சீதனமாகத் தந்துள்ளார். பல்லவமும் தனது வசம் உள்ள கிழக்கு காடவ பகுதிகளைப் பீமவர்மருக்கு அளித்து, கிழக்கு மற்றும் மேற்கு காடவ பகுதிகளை ஒரே காடவமாக அமைத்துப் பல்லவத்தின் சிற்றரசாகக் காடவத்தை அறிவிக்க உள்ளேன். புதிய காடவத்தின் மன்னனாகப் பீமவர்மர் இருப்பார். பாண்டியர்கள் வடபுறம் முன்னேறுவதைத் தடுத்துக் காடவத்தைப் பல்லவத்தின் தடுப்புச் சுவராகத் திகழச்செய்வார்."*

*மகேந்திரன் அறிவித்ததும், பீமவர்மன் எழுந்து நின்று சபையைப் பணிந்து நிற்க, கரகோஷம் விண்ணை முட்டியது. திகம்பரத் துறவியாக இருந்த பீமவர்மன், மன்னனாகிவிட்டான். சிம்மவர்மன் பெற்ற நான்கு மகன்களில் அவனிசிம்மன் பல்லவத்திற்கும், தானவர்மன் காம்போஜத்திற்கும், பீமவர்மன் காடவத்திற்கும் மன்னர்களாகிவிட்டனர். ஜெயவர்மன் மாயமாகிப்*

போகாமல் இருந்தால் அவனும் மன்னனாகி இருப்பானோ? ராஜவர்மனின் நெஞ்சில் துயரம் பந்தாக எழுந்து நெஞ்சை அடைத்தது.

"கடைசியாக, நமது பல்லவத்தின் அரச குடும்பத்திற்கு எதிராக, மல்லன் எதி என்று ஒரு நிழல் மனிதன் புறப்பட்டிருக்கிறான். மல்லனாகிய எனக்கு எதிரி அவன் என்பதைக் குறிக்கவே மல்ல எதி என்று தன்னை அழைத்துக் கொள்கிறான். பஞ்சகல்யாண மரங்களின் அடியே புதைக்கப்பட்டிருந்த குளிகத்தோடு வைக்கப் பட்டிருந்த ஓலையிலும் மல்லன் எதி என்று காணப்பட்டது. கொலை செய்யப்பட்ட எனது நண்பன் தசகுமாரன் தொண்டரையன் கையில் இருந்த சுவடியிலும் மல்லன் எதி என்கிற ஓலை காணப்பட்டது. மல்லன் எதியை கைது செய்பவருக்கோ, இல்லை தகவல் தருபவர்களுக்கோ பரிசு அறிவிக்கப்படும். மல்லன் எதி உயிரோடு கைது செய்யப்பட வேண்டும்!" மகேந்திரன் அறிவிக்க, அனைவரும் ஒருவரையொருவர் பரபரப்புடன் நோக்கினார்கள்.

மகேந்திரன் தனது உரையை முடித்தான். "பல்லவம் புதிய எழுச்சியுடன் எழுந்து நிற்கும். நாம் அதற்காகப் பாடுபடுவோம்.." மகேந்திரன் தனது உரையை முடித்த அதே வேளையில் அரண்மனை அதிகாரி, உள்ளே நுழைந்தார். வெளிறிப் போயிருந்த அவரது முகத்தைக் காணும் போதே, அவர் கொணரும் செய்தி சுபமானது அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்து போனது.

"மன்னா! தசகுமாரரில் ஒருவரான புஷ்போத்பவர் தனது மனையில் இன்று விடியற்காலை கொல்லப்பட்டுக் கிடந்தார். அவரது கையிலிருந்த சுவடி இது.." — அரண்மனை அதிகாரி சுவடியை நீட்டினார்.

அதனைப் பார்க்காமலேயே, அதில் குறிப்பிடப்பட்டு இருந்ததை அறிந்து கொண்டான், மகேந்திரன். வேறென்ன! மல்ல எதி என்றுதானே குறிப்பிடப் பட்டிருக்கும்..?

# 39. ராஜ - ராஜஸ்ரீராஜன்

'மகேந்திர பல்லவனின் மனைவி அரசியார் ராஜ சந்தனாதேவியார் கர்ப்பவதியாக இருக்கிறார்..!'

செய்தி அரண்மனையில் கசிந்தது. ராஜஸ்ரீயும், ராஜவர்மனும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பல்லவ குலம் அத்திமலைத்தேவனின் அருளால் தழைத்து ஓங்குகின்ற செய்தியை அறிந்ததுமே, நிலைகொள்ளாமல் தவித்த தம்பதியர், தட்டு நிறைய இனிப்புகளுடன், மலர் கொத்துகளுடனும் மகேந்திரனின் ஜாகையை நோக்கி நடந்தனர். இதே அரண்மனையில் ராஜஸ்ரீயும், ராஜவர்மனும் இளம்தம்பதிகளாகத் துள்ளித்திரிந்த காலம் உண்டு. முதுமை அவர்களது தேகத்தில் தளர்வினை ஏற்படுத்தி இருக்க, யார் முன்பும் பணிந்திராத ராஜவர்மனின் தேகம், கூனலாக வளைந்திருந்தது. அவனது கையைப் பற்றியபடி ராஜஸ்ரீ அடி மேல் அடியெடுத்து வைத்தபடி நடந்தாள். இருவரையும் வரவேற்று அமர வைத்த மகேந்திரன், சந்தனாவை அழைத்தான். இருவரும், ராஜவர்மன் மற்றும் ராஜஸ்ரீ கால்களில் பணிந்து எழுந்தனர்.

ராஜசந்தனாவை தனது அருகே இருத்திக் கொண்டாள், ராஜஸ்ரீ.. "உனது உடல்நிலையையும் பார்த்துக்கொள். அரசி என்பவள் வருங்கால அரசனைப் பெற்றுத் தருவதோடு பணி முடிந்துவிட்டது என்று ஒதுங்கி இருக்கக் கூடாது. நாடாளும் மன்னவனைக் காக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். தற்கொலை படையோ, காவல் படையோ மன்னனுக்குத் தரும்

பாதுகாப்பைவிட, ஒரு மனைவி மன்னனுக்குத் தரும் பாதுகாப்புதான் அவனுக்கு அரணாக விளங்கும்..” என்றவள் பலவீனத்துடன் மகேந்திரனைப் பார்த்தாள்.

“மகேந்திரா! பல்லவத்தைப் பார்த்துக் கொள். உனது சிற்றப்பா ராஜவர்மர் இன்னும் குழந்தைதான். அவரையும் பத்திரமாகப் பார்த்துக் கொள். அத்தி மலையானை எப்பாடுபட்டாவது தேடிக் கண்டுபிடித்து அவனது ஆலயத்தில் வைத்துவிடு. அதன் பின் நமது அரச குடும்பத்திற்கு எவ்விதக் கெடுதலும் நேராது!” — என்றவள், இருகைகளாலும் தனது நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

“அன்னையே! என்ன செய்கிறது?” மகேந்திரன் கேட்க, ராஜவர்மன் பதற்றத்துடன் ராஜஸ்ரீயின் அருகில் அமர்ந்து அவளது தோளினில் கைவைத்தான்.

“நெஞ்சை அடைக்கிறது. சற்று அருந்துவதற்கு நீர் கொண்டு வா!” — ராஜஸ்ரீ கூற, சந்திரமதி நீர் கொண்டு வர விரைந்தாள். பீமவர்மன் மருத்துவரை அழைக்க ஓடினான். அதற்குள் அப்படியே ராஜவர்மனின் மடியில் சரிந்தாள், ராஜஸ்ரீ.

மருத்துவர் வருவதற்கும் அவளது தலை சரிவதற்கும் நேரம் சரியாக இருந்தது.

“இளவரசி நம்மைவிட்டுச் சென்றுவிட்டார்..” — மருத்துவர் கூற, மகேந்திரன் கண்களில் நீர் வழிய நின்றிருந்தான். அவனிசிம்மனும், புவனமாதேவியும்தான் இவனைப் பெற்றிருந்தனர். ஆனால் இவனை வளர்த்தது ராஜவர்மனும், ராஜஸ்ரீயும்தான். தனது பெற்றோர் மறைந்த போது கூட, மகேந்திரன் கலங்கவில்லை. ஆனால் தாயன்பைவிட அதிகமான வாஞ்சையைக் காட்டிய ராஜஸ்ரீ இறந்ததை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. குழந்தையைப் போன்று தேம்பித் தேம்பி அழுதான், மகேந்திரன்.

ராஜவர்மன் சூழ்நிலையையே மறந்து ராஜஸ்ரீயின் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். 'பாலகாடத்தில் இருந்து அண்ணன் அவனிசிம்மனுக்கு ஒரு கன்னியைக் கொண்டு வந்திருக்கிறேன்.' ஜெயவர்மன் இவனிடம் கூறியது நேற்றுதான் போல் இருந்தது.

'நான் அத்தை மகள் சாயாதேவியைக் காதலிக்கிறேன். அவனிசிம்மனோ ராஜஸ்ரீயை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்கிறான். பாவம் அந்த இளவரசி..! அவளைச் சிறை பிடித்து வந்து அவளது வாழ்வைக் கெடுத்துவிட்டேன். இனி அவளை யார் ஏற்றுக் கொள்வார்கள்..? அந்தப் பெண் கண்ணீரும், கம்பலையுமாக இங்கே நின்றால், அதற்கு முழுக் காரணமும் நானேதான்!' — ஜெயவர்மன் ராஜ்வர்மனிடம் மனம் வெதும்பி இருந்தான்.

அவன் கூறியது போலவே, நீ கடத்தி வந்த பெண்ணை நீயே மணந்து கொள் என்று அவனிசிம்மன் ராஜஸ்ரீயை ஏற்க மறுத்த போது, அவள் கண்களில் நீர் கோர்த்து, அவமானத்துடன் தலைகுனிந்து நிற்க, அந்த ஒரு கணத்தில் அவள் கண்ணீரைத் துடைக்க முன்வந்தான். தனது கண்ணீரையும், அவமானத்தையும் ஒரு சேரத் துடைத்திருந்த ராஜவர்மனுக்குக் காலமெல்லாம் பணிவிடை செய்து தனது நன்றியைத் தெரிவித்திருந்தாள், ராஜஸ்ரீ..

"திக்கில்லாமல் கண்ணீருடன் நின்ற உனக்கு நான் அன்று கைகொடுத்தேனே. இன்று என்னைத் திக்கில்லாமல் நிற்க வைத்துவிட்டு, நீ புறப்பட்டுச் சென்று விட்டாயே..? இது நியாயமா? அவ்வளவு நன்றி கெட்டவளா நீ? நான் போன பிறகு நீ போயிருக்கலாம் அல்லவா?" — தனக்குள் முணுமுணுத்தான் ராஜவர்மன்.

"சிற்றப்பா! நீங்கள் சற்று ஓய்வெடுங்கள்! அந்திமக் கிரியைகள் நடக்கும் சமயத்தில் நீங்கள் வந்தால் போதும்!" மகேந்திரன் கூறினான்.

“இல்லையப்பா! அவள் எனது மடிமீதே தலை வைத்துக் கிடக்கட்டும். அவள் புறப்பட்டுச் செல்லும் வரை எனது மடியிலேயே இளைப்பாறட்டும்!” — ராஜவர்மன் கூறினான்.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இள்வரசி ராஜஸ்ரீக்கு இறுதி மரியாதை செலுத்த வேண்டும் என்று வந்து காத்திருந்தனர். பொதுமக்களும் அஞ்சலி செலுத்துவதற்காகக் காத்திருக்க, இளவரசியாரின் தேகத்தை அலங்காரப்படுத்திப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பதற்காக ராஜவர்மரை அணுகினான், பீமவர்மன். இன்னும் ராஜ ஸ்ரீயின் முகத்தை நோக்கியபடியேதான் அமர்ந்திருந்தார், ராஜவர்மர்.

“அண்ணா! அதிகாரிகள் அஞ்சலி செய்யக் காத்திருக் கிறார்கள்!” என்றபடி ராஜவர்மரின் தோளினைத் தொட, அவரது தலை அப்படியே சரிந்து இளவரசி ராஜஸ்ரீயின் மார்பில் தவழ்ந்தது.

‘நான் நன்றி கெட்டவள் அல்ல. உங்களையும் உடன் அழைத்துச் செல்கிறேன் பாருங்கள்!’ என்று ராஜவர்மனுக்கு ராஜஸ்ரீ பதில் கூறி இருந்தாள் போலும்.

ராஜவர்மன் — ராஜஸ்ரீயைப் போன்ற மனம் ஒத்த தம்பதிகள் பல்லவ குடும்பத்தில் வேறு யாருமே இருக்க முடியாது. ஜெயவர்மனுடன் வாழும் பாக்கியத்தை அறவே இழந்தவள் சாயாதேவி. அவனிசிம்மனின பட்டத்து அரசியாகப் புவனமாதேவி இருந்தாளே தவிர, தீராத நோயில் தவித்துக் கொண்டு அந்தப்புரத்திலேயே அடைந்து கிடந்தாள். அதனால் அவனிசிம்மன் வித்யுதா என்கிற நடன மாதின் பின் போனான். ஆனால் அன்னியோன்யத் தம்பதியாகக் காலமெல்லாம் ஒற்றுமையுடன் வாழ்ந்து, இறப்பிலும் ஒன்றாகப் புறப்பட்டுச் சென்றிருந்தனர், ராஜவர்மனும், ராஜஸ்ரீயும். மகேந்திரனுக்குத் தேறுதல் சொல்ல யாராலும் இயலவில்லை.

ராஜவர்மன் — ராஜஸ்ரீ ஒன்றாகக் கிடத்தப்பட, அதிகாரிகள் வரிசையில் நின்று அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பீமவர்மன் கண்களில் நீர் அருவியாகப் பொழிந்து கொண்டிருந்தது. தந்தை சிம்மவர்மனின் மரணத்திலும் மர்மம், அவனிசிம்மனும் மனம் உடைந்து வருத்தத்திலேயே மூழ்கி மாண்டான். ஜெயவர்மன் போன இடம் தெரியவில்லை. தானவர்மன் காம்போஜத்திற்கு மன்னனாகச் சென்று தனது பிறந்த குடியுடன் தொடர்பினையே அறுத்துக் கொண்டான். விஜயவர்மனோ கொலை செய்யப்பட்டு மாண்டான். அவனது தலைமுறையைச் சேர்ந்த அனைவரும் காலமாகிவிட்டனர். அந்தத் தலைமுறையின் அடையாளமாக எஞ்சி இருப்பவன் இவன் மட்டுமே.

சடலங்களின் ஒருபுறம் மகேந்திரனும், மறுபுறம் பீமவர்மனும் நின்று கொண்டிருந்தனர். அஞ்சலி செய்த அதிகாரிகள், இருவரிடமும் ஆறுதல் சொல்லிவிட்டுச் செல்ல, இருவரும் பணிவுடன் அந்த அனுதாபங்களை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

அப்போது —

ராஜவர்மர் மற்றும் ராஜஸ்ரீயின் காலடியில் மலர் தூவித் தலை வணங்கும் அந்த வாலிபனின் மீது பீமவர்மனின் கவனம் படர்ந்தது. அவனது கண்கள் நிலைகுத்தி அந்த வாலிபனின் முகத்தையே நோக்கின. யார் இவன்? மிகவும் பரிச்சயமாக இருக்கிறானே..?

அவனது முகத்தில் தனது சகோதரனின் சாயை தெரிகிறதே! பீமவர்மன் அந்த வாலிபனையே நோக்க, அவனும் பீமவர்மனின் கண்களையே நோக்கினான். எதுவும் கூறாமல், அவனைக் கடந்து சென்ற அந்த வாலிபனின் உதட்டில் ஒரு குறுஞ்சிரிப்பு மிளிர்வதைக் கண்டான், பீமவர்மன்.

"அனுதாபங்கள் சிற்றப்பா!" — மெல்லிய குரலில் பீமவர்மனுக்கு மட்டும் கேட்கும்படியாகக் கூறிவிட்டு, மின்னல் வேகத்தில் படி இறங்கி, கூட்டத்தில் கலந்து காணாமல் போனான் அந்த வாலிபன்.

செயலற்று நின்றிருந்த பீமவர்மன் மெதுவாக மகேந்திரவர்மனின் பக்கமாக நெருங்கினான்.

"மகேந்திரா! நீ தேடும் உனது எதிரி, மல்லன் எதி இப்போதுதான் நமது சிற்றப்பாவுக்கும், சிற்றன்னைக்கும் அஞ்சலி செலுத்திவிட்டுச் செல்கிறான். நீ கவனித்தாயா?" — பீமவர்மன் கேட்டான்.

"உண்மையாகவா?" — அதிர்ந்தான் மகேந்திரன். தான் நின்ற இடத்தில் இருந்து தனது பார்வையைக் கூட்டத்தை நோக்கிச் சுழலவிட்டான்!

"அவன்தான் மல்ல எதி என்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள் சிற்றப்பா?" — தனது செவிகளையே நம்பாமல் கேட்டான், மகேந்திரன்.

"தனது வாயால், 'அனுதாபங்கள் சிற்றப்பா' என்று தனது அனுதாபங்களைத் தெரிவித்துவிட்டுதான் சென்றான், உனது சகோதரன்..!" — பீமவர்மன் கூற, விருட்டென்று அங்கிருந்து புறப்பட்டு, கூட்டத்தைக் கடந்து அரண்மனை நந்தவனத்தை அடைந்தான். அடர்ந்த மரங்களின் இடையேயும், படர்ந்திருந்த செடிகள் நடுவேயும் மல்ல எதியைத் தேடினான், மகேந்திரன். ஆனால் அவனது கண்களுக்குச் சந்தேகப் படும்படியாக யாருமே புலப்படவில்லை.

மீண்டும் அரண்மனைக்குத் திரும்பலாம் என்று நினைத்த போதுதான் தற்செயலாக அவன் கண்களில் ஒரு சிவப்பு நிறத் தலைப்பாகை புலப்பட்டது. ஒத்தாடை அரண்மனைக்கும், அதன் பகுதியான ஒத்தாடை ஆலயத்திற்கும் இடையே ஒரு நந்தவனம் அமைந்திருந்தது. ராஜவர்மரும் ராஜஸ்ரீயும் இறந்துவிட்டிருந்ததால், ஆலய

ஆராதனைகள் நிறுத்தப்பட்டு ஆலயமும் தாளிடப் பட்டிருந்தது. எனவே ஆலயமும், ஆலய நந்தவனமும் வெறிச்சோடிக் காணப்பட்டன. நந்தவனத்தின் முகப்பில் நின்ற மாமரம் ஒன்றின் கிளை இரண்டாகப் பிரியும் இடத்தில் அந்தச் சிவப்புத் தலைப்பாகை தெரிந்தது. மல்ல எதிதான் அங்கு ஒளிந்திருக்கிறான்! மகேந்திரன், அடிமேல் அடி எடுத்து வைத்து அந்த மரத்தை நோக்கி நகர்ந்தான். தனது வாளை ஓங்கியபடி அந்த உருவத்தின் பின்பாகவே சென்று அந்த இரு கிளைகளின் வழியாகக் கையை நீட்டிப் பதுங்கியிருந்த மல்லன் எதியின் கழுத்தைத் தனது கையால் சிறை வைத்தான். அடுத்த கணம் அருவருப்புடன் தனது கையைப் பின்னுக்கு இழுக்க, அவனது கையில் பசையாக ஒட்டியது மல்ல எதியின் குருதி.

திடுக்கிட்டு மரத்தின் மறுபக்கம் சென்று எட்டிப் பார்க்க, கீழே பிணமாகக் கிடந்தது மல்லன் எதி அல்ல. இவனுடைய தசகுமாரர்களில் ஒருவனான, மித்ரகுப்தன். குரல்வளை கிழிக்கப்பட்டுக் கிடந்தான், அவன். அவன் கையிலும் பனையோலை. 'மல்லன் எதி' என்கிற எழுத்துக்கள் மகேந்திரனைப் பார்த்துச் சிரித்தன.

தசகுமாரர்கள் இப்போது சப்தக் குமாரர்களாகத் திகழ்ந்தார்கள்.

★ ★ ★

"**த**சகுமாரர்கள் ஒவ்வொருவராகக் கொலை செய்யப்படுகிறார்கள். எங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. தொண்டரையன், புஷ்போத்பவன், இப்போது மித்ரகுப்தன்! எங்களுக்கு அச்சமாக உள்ளது. நாங்கள் புறப்பட்டுப் போகிறோம்!" — அர்த்தபாலன் என்பவன் மகேந்திரனிடம் கெஞ்சினான்.

"உங்களை நான் பாதுகாப்பேன் என்று கூறி இனியும் எமனின் வாயில் உங்களைத் தள்ள விரும்பவில்லை. அரண்மனையைவிட்டுப் போக வேண்டும் என்பவர்கள்

போகலாம்..” மகேந்திரன் கூற, பிரமதி என்பவன் மட்டும் எழுந்து அர்த்தபாலனை சினத்துடன் நோக்கினான்.

“தசகுமாரர்களாகிய நமக்கு யாரால் பல்லவத்தில் பெயரும், புகழும் வந்தன. நாம் காஞ்சி வீதிகளில் சென்றால், இளவரசர்களுக்கு நிகராக நமக்கு மரியாதை தருகிறார்கள்.. உயிரை வெல்லக்கட்டியாக நினைப்பவர்கள், இப்போதே கிளம்பிச் செல்லுங்கள். நான் கடைசி வரை மகேந்திரனுடன்தான் இருப்பேன். அப்படியே அந்த மல்லன் எதி எனது உயிரைக் குடித்தாலும், உயிர் போவதற்கு முன்பாக அவனைக் கட்டி இழுத்து வந்து மகேந்திரனின் காலில் தள்ளிவிட்டே உயிரைவிடுவேன்..” — ஆவேசத்துடன் பிரமதி கூற, அவனை நெகிழ்ச்சியுடன் அணைத்தான், மகேந்திரன்.

“அந்த எதி எதற்காக எங்களைக் குறி வைக்கிறான்..? அவனது எதிரி நீதானே, மகேந்திரா?” — அர்த்தபாலன் கேட்டான்.

மகேந்திரன் அவனை ஆழமாகப் பார்த்தான். “நீங்கள் எனது ஆபத்துதவிகள். எனக்காக உயிரையேவிடுபவர் நீங்கள். தேங்காய் மட்டையை உரித்தால்தானே காயை நெருங்க முடியும்!” — மகேந்திரன் கூற, தசகுமாரர்கள் ஒருவரையொருவர் நோக்கினர்.

“மல்லா! எனக்கு ஒரு யோசனை.. எஞ்சிய தசகுமாரர்கள் தனியாக இருந்தால்தானே இனி மல்லன் எதியால் கொல்ல முடியும். நாங்கள் அனைவரும் ஒரே அறையில் தங்கி, எங்கு சென்றாலும் ஒன்றாகவே சென்றால், எதியால் என்ன செய்ய முடியும்?” — சோமதத்தன் என்கிற தசகுமாரன் கூறினான்.

“நல்ல யோசனை! இனி நாம் அனைவரும் ஒன்றாகவே இருப்போம். ஒன்றாகவே உறங்குவோம், எழுவோம்.” — அர்த்தபாலன் கூறினான்.

மகேந்திரன் அவர்களை ஆறுதலுடன் நோக்கினான். "கவலைப்படாதீர்கள். மல்லன் எதியை விரைவில் கைது செய்கிறேன். அத்திமலைத்தேவன் கிடைத்தவுடன் நீங்கள் அவரவர் குடும்பங்களுடன் இணையலாம். உங்களுக்கு வாழ்வதற்கு மாளிகையும், உழுவதற்கு நிலமும், பொன்னும், பொருளும் அளிக்கிறேன்!" — மகேந்திரன் அவர்களுக்கு உறுதி கூறினான்.

★ ★ ★

**ரா**ஜவர்மன் மற்றும் ராஜஸ்ரீயின் கிரியைகள் அனைத்தும் முடிந்தன. இத்தனை நாட்கள் இல்லாத வெறுமையை உணர்ந்தான் மகேந்திரன். பீமவர்மனும், சந்திரமதியுடன் காடவ மாளிகைக்குச் சென்றுவிட்டான். அவ்வளவு பெரிய ஒத்தாடை அரண்மனையில் மகேந்திரனும், சந்தனாவும்தான் இருந்தனர். சிம்மவர்மனின் நான்கு மகன்கள், விஷ்ணுவர்மனின் இரண்டு மகன்கள், ராஜமாதங்கியின் இரண்டு குமாரத்தி கள் என்று பெரிய குடும்பமாகச் சதா சிரிப்பொலிகளும், பேச்சுக்குரல்களும், பெண்களின் நூபுரங்களின் ஒலிகளும், இளவரசர்கள் உறையிலிருந்து வாளினை உருவி, விளையாட்டுக்கு வாட்சண்டை இடும் போது ஏற்படும் உராய்வுகளும் இன்றி, மிகவும் அமைதியாக இருந்தது, ஒத்தாடை அரண்மனை. இந்த வெறுமையைத் தாள முடியாமல், மகேந்திரன், அவந்திகாவை தேடி திருக்கடல்மல்லைக்கு அடிக்கடி செல்லத் துவங்கினான்.

தனது மனபாரத்தையும், அரண்மனையின் வெறுமையையும் நீக்க அவந்திகாதான் அவனுக்கு அந்த யோசனையைச் சொன்னாள்.

"அரசே! கால ஓட்டத்தில் நமது மனிதர்கள் அனைவரும் திடீர் என்று காணாமல் போய்விடுவார்கள். நீங்கள் உங்கள் சிற்றப்பனின் மரணத்தை எண்ணிக் கலங்குகின்றீர்கள். எனது தந்தை உயிருடன் இருக்கும்

போதே நான் அவரிடம் இருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டேன். அப்படியென்றால், எனது துக்கம் இன்னும் அதிகமாக இருக்கும் அல்லவா? துக்கப் பட்டிருக்கும் போதுதான் நமது திறமைகளை அதிகம் வெளிப்படுத்த வேண்டும். எனது கோரிக்கையை இப்போது நிறைவேற்றுங்கள். கடல்மல்லையில் சிற்பக் கோயில்களை எழுப்புங்கள். உங்கள் ஒத்தாடை அரண் மனையில் இருந்து அரசவையை அவந்திக பவனத்திற்கு மாற்றுங்கள். கர்ப்பவதியான உங்கள் மனைவியின் உடல்நிலைக்கும் கடற்காற்று நன்மை தரும். இங்கேதான் நிறைய அறைகள் இருக்கின்றனவே! இங்கே குடியேறுங்கள்.. எனக்கும் நிறைய மனிதர்களைப் பார்த்தால் மனதுக்கு நிறைவாக இருக்கும்!" — அவந்திகா இப்படிக் கூறியதும், உற்சாகத்துடன் எழுந்தான், மகேந்திரன் இந்த யோசனை தனக்கேன் தோன்ற வில்லை!

"அவந்திகா! யோசனைக்கு நன்றி! உடனே நான் அரசவையை மல்லைக்கு மாற்றுகிறேன். ஒத்தாடையை விட்டு சிறிது காலம் வெளியே தங்கினால், எனது மனதில் உள்ள சோகங்கள் மாறும்!" — என்றபடி அவளை நன்றியுடன் பார்த்தான்.

"மல்லையில் கோயில்களை எழுப்பும் பணி தொடங்கப்படும். அதன் பொருட்டு அரசர் நாளை முதல் கடல்மல்லை அவந்திக பவனத்தில் தங்கியிருந்து தமது பணிகளை ஆற்றுவார் —"

அரண்மனையிலிருந்து அறிக்கை வந்தது. அமைச்சர்கள், தளபதிகள், தசகுமாரர்கள், பணிப் பெண்கள், காவலர்கள், பணியாளர்கள், புரவிகள், யானைகள் என்று பெரும்படை காஞ்சியின் ஒத்தாடை அரண்மனையில் இருந்து, திருக்கடல்மல்லைக்குப் புறப்பட்டது.

"மன்னர் காஞ்சியை விட்டுவிட்டு கடல்மல்லையில் தங்கிச் சிற்பக் கோயில்களை எழுப்பப் போகிறார்.." — மக்கள் பரபரப்புடன் பேசியபடி அந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிற்பிகளும், ஆகமச் சாத்திரமறிந்த ஐயம்படுகை அந்தணர்களும் மல்லையில் குழுமி எழுப்ப உள்ள ஆலயங்களைப் பற்றி விவாதித்தனர்.

"காஞ்சியின் தருமபுரத்தில் களப்பிரர்களால் அழிக்கப்பட்ட எழுமால் கோயில் என்கிற ஏழு பெருமாள் கோயில்களைப் போன்று எழுமால்* கோயில்களைக் கடற்கரையில் எழுப்ப வேண்டும்.." — மகேந்திரன் கூறினான். மற்ற கோயில்களில் அடைக்கலம் புகுந்திருக்கும் அந்தத் திருமாலின் மூர்த்தங்களைக் கடல்மல்லையில் எழுந்தருளச் செய்ய வேண்டும்!" — மகேந்திரன் கூறினான்.

"திருமாலின் அவதாரங்கள், மகாபாரதக் கதைகள், துர்கையின் போர்க் கோலம் போன்ற காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட வேண்டும். குன்றத்தின் மீது ஒரு கலங்கரை விளக்கம் அமைக்கப்பட வேண்டும்!" தனது கனவுகளை மகேந்திரன் கூற, அதிகாரிகளும், அந்தணர்களும், சிற்பிகளும் குறிப்புகளை எடுத்துக் கொண்டனர்..

அவந்திக பவனத்தின் தாமரைத் தடாகத்தின் அருகே இருந்த மணல் வெளியில் ஒளிர்ந்து கொண்டிருந்த தீப்பந்தங்களின் நடுவே, கடலலைகள் தொலைவில் நீலாம்பரி பாட, முழுநிலா விண்ணில் அன்னமாய் மிதக்க, அவந்திகா மட்டுமல்ல, சந்தனா மட்டுமல்ல, தாதிகளும், காவலாளிகளும் கூட, ஒத்தாடை அரண்மனையின் இறுக்கமான சூழ்நிலையில் இருந்து

* **எழுமால் கோயில்: மகாபலிபுரத்தில் உள்ள ஏழு கோயில்கள். Seven Pagodas of Mamallapuram shore temples என்று உலகெங்கும் புகழ் பெற்றவை.**

ரம்யமான கடல்மல்லைக்கு வந்ததை மனதார விரும்பியிருந்தனர்.

அனைவரும் அந்த அமைதியான இரவை ரசித்தபடி சொக்கிப் போய் அமர்ந்தனர்.

"அரசியாரே! குளிரத் துவங்கியுள்ளது. நீங்கள் உறங்கச் செல்லுங்கள். மன்னர் ஆலோசனையை முடித்துவிட்டு வரத் தாமதம் ஆகலாம்!" — அவந்திகா கூற, அவளை நோக்கிப் புன்னகைத்துவிட்டு, சந்தனா தனது அறைக்குப் புறப்பட்டாள். மறுநாள் ஆலயப்பணிகள் தொடர வேண்டி இருந்ததால், ஆலோசனைக் கூட்டம் முடிந்த போது நடுநிசியாகிவிட்டது.

மகேந்திரன் தனது சயன அறையை நோக்கி நடந்தான். உப்பரிகையில் அவந்திகா நின்று கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கீழிருந்தே அவளை அழைத்தான்.

"அவந்திகா!"

அவள் கீழே எட்டிப்பார்க்க, அவளை நோக்கித் தனது பெருவிரலை உயர்த்தினான்.

"அனைத்துக்கும் நன்றி அவந்திகா!"

"எதற்கு நன்றி?" — அவந்திகா வியந்தாள்.

"சோகத்தில் மூழ்கியிருந்த என்னை மீண்டும் உற்சாகப்படுத்தியதற்கு!" என்றபடி அவளையே ஆழமாக நோக்கினான். அந்த இருளிலும் அவனது காதல் பார்வையை அவளால் உணர முடிந்தது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு அன்றுதான் மகேந்திரன் அமைதியாக உறங்கினான் போலும். கடலலைகளின் ஓலம், குளிர்ந்த காற்று கற்பாறைகளில் மோதி எழுப்பும் ஒலி ஆகியவை மனதுக்கு இதத்தை அளித்திருக்க வேண்டும். படுத்தவுடன் தூங்கிவிட்டான்.

அரச குடும்பத்துப் பெண்கள், மருத்துவச்சிகள், செவிலிகள், பணிப்பெண்கள் என்று பெண்களுக்கு மாளிகையின் அறையை ஒதுக்கிவிட்டு, ஆண்களுக்குக் கடற்கரை மணல் வெளியில் கூடாரங்களை அமைத் திருந்தார்கள். அமைச்சர்களுக்கு, தளபதிகளுக்கு, காவலர் களுக்கு, பணியாட்களுக்கு என்று தனித்தனியே கூடாரங்கள். அமைச்சர்களின் கூடாரத்தின் பின்புறம் மஞ்சள் வண்ணக் கூடாரத்தில் தசகுமாரர்கள் தங்கி யிருந்தனர். தினம் ஒருவர் காவல் காக்க, மற்றவர்கள் உறங்க வேண்டும் என்று அவர்களுக்குள் தீர்மானித் திருந்தனர்.

ஒத்தாடை அரண்மனை அதிகாரி ஒருமுறை தங்களது மல்லை முகாமைச் சுற்றிப் பார்த்தார். ஒத்தாடை அரண்மனையிலும் அன்றாடம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருக்கின்றதா என்று அரண்மனை வளாகத்தை ஒருமுறை ஆராய்ந்துவிட்டுப் பிறகே உறங்கச் செல்வது வழக்கம். அந்த வழக்கத்தை மல்லையிலும் கடைப் பிடித்தார். மாளிகையைச் சுற்றி வந்தவர், கூடாரங்களை நோக்கி நடந்தார்.

ஒவ்வொரு கூடாரமாக ஆராய்ந்தவர், அமைச்சர் களின் கூடாரத்தைக் கடந்து தசகுமாரர்களின் கூடாரத் திற்கு வந்தார்.

"சோமதத்தா! உனது நண்பர்கள் உறங்கச் சென்றனரா?"

"இப்போதுதான் உறங்கச் சென்றனர்! தினம் ஒருவராகக் காவல் காக்க முடிவு செய்துள்ளோம். இன்று எனது முறை.." சோமதத்தன் கூறினான்.

தனது இரவு ரோந்தை முடித்துக் கொண்டு அரண்மனை அதிகாரி உறங்கச் சென்றுவிட்டார்.

கடல்மல்லையின் அலைகள் எழுப்பும் ஒலிதான் அந்த நடுநிசியில் கேட்டுக் கொண்டிருந்தது. இரவுப் பறவை

ஒன்று சுழல் கோபுரத்தின் மீது வந்து அமர்ந்து கீழிருந்த தாமரைத் தடாகத்தில் துள்ளிக்கொண்டிருந்த நுணல் களை நோட்டம்விடத் துவங்கியது. தசகுமாரர்களின் கூடாரத்தின் வாயிலில் வாளுடன் அமர்ந்திருந்த சோமதத்தனும், தடாகத்தில் விளையாடும் அந்த நுணல் களைத்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று, சுழல் கோபுரத்தின் உச்சியில் அமர்ந்திருந்த அந்த ஆந்தை அந்தத் தாமரைத் தடாகத்தை நோக்கிப் பாய்ந்து வந்து நுணல்களில் ஒன்றைக் கவ்வியது. அதனால் மற்ற நுணல்கள் அஞ்சி அனைத்தும் ஒன்றாக நீரில் குதிக்க, நீரின் சலசலப்பு அந்த இரவு வேளையில் பெரிதாகக் கேட்க, அந்தச் ‘சளசள’ சத்தத்தின் ஊடே ‘சர்ரென்று’ வஸ்திரம் கிழிபடுவது போன்று ஒரு ஒலி கேட்டது. சோமதத்தனின் செவிகளில் அந்த ஒலி கேட்க, திகைப்புடன் கூடாரத்தின் நுழைவு வாயிலில் இருந்த திரையை விலக்கி உள்ளே எட்டிப்பார்த்தான்.

அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். ஒருமுறை கூடாரத்தைச் சுற்றி வந்தான், சோமதத்தன். சற்றுத் தள்ளி அமைச்சர்களின் கூடாரத்தில் குறட்டைச் சத்தம் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. தனது கூடாரத்தின் பின்புறமாகத் திரும்பினான். ஒரு மனிதன் நுழையும் அளவுக்குக் கூடாரம் கிழிக்கப்பட்டிருந்தது. திடுக்கிட்டு அந்தத் துளை வழியாகவே உள்ளே நுழைந்தான். உள்ளே யாரும் இல்லை. சந்தேகத்துடன் அனைவரது போர்வைகளையும் விலக்கினான். அனைவரது குரல்வளைகளும் அறுக்கப்பட்டுக் குருதி பொங்கிக் கொண்டிருந்தது.

அலறுவதற்காக வாய் திறந்தான் சோமதத்தன். அவனது கழுத்தை யாரோ பிடித்து அவனது குரல் வளையைத் தனது வாளினால் அறுக்க, சோமதத்தனும் தனது உயிரை இழந்தான்.

குளிர்ந்த இரவில் திடீர் என்று தான் உறங்கிக் கொண்டிருந்த கூடாரத்தில் அனல் வீசுவதை உணர்ந்து கண்விழித்தார் அமைச்சர் ஒருவர். தாங்கள் உறங்கிக் கொண்டிருந்த கூடாரத்தில் புகை பரவுவதைக் கண்டு திகைப்புடன் வெளியே எட்டிப்பார்த்தார். தசகுமாரர்களின் கூடாரம் தீப்பற்றி எரிவதைக் கண்டு அலறினார். அவரது அலறல் சத்தம் உப்பரிகையில் உறங்கிக் கொண்டிருந்த அவந்திகாவின் செவி வரை கேட்டது.

திகைப்புடன் எழுந்தவள், அந்த ஓலத்தைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு ஏற்படுவதைக் கண்டு, எழுந்து சென்று இடைகழி வழியாக உப்பரிகையை அடைந்து கீழே நோக்கினாள். தசகுமாரர்களின் கூடாரத்தில் துவங்கிய தீ, மெல்ல அமைச்சர்களின் கூடாரத்தையும் தழுவிக் கொள்ள, அங்கே மரண ஓலங்கள் கேட்டன. தீ கூடாரங் களில் பரவி, நந்தவன மரஞ்செடி கொடிகளிலும் பரவியது. மலர்ச்செடிகள் தீயில் கருகின.

உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட மகேந்திரனிடம் செய்தி கூறப்பட்ட போது, அவன் நினைத்தது இதுதான்.. தேங்காயின் மட்டைகள் எல்லாம் உரிக்கப்பட்டுவிட்டன. இனி காய்க்குதான் ஆபத்து!

தீயை அணைப்பதில் காவலாளர்கள் மும்முரமாக இருக்க, அதிகாரிகளும், காவலர்களும் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்க, உப்பரிகையில் வந்து நின்று அவந்திகா, பங்கஜாக்ஷியை அழைத்தாள்.

"பங்கஜாக்ஷி! அரசி ராஜசந்தனாவையும், பெண் களையும் அழைத்துக்கொண்டு வா. நாம் மாளிகையின் பின்வாயில் வழியாகக் கடற்கரைக்குச் சென்று நிற்போம். தீ எல்லாக் கூடாரங்களுக்கும் பரவி இப்போது நந்தவனத்திலும் பரவியுள்ளது. நெருப்புப் புகை மாளிகையைச் சூழத்துவங்கியுள்ளது. கர்ப்பிணியான அரசியாருக்கு சுவாசிக்க இயலாமல் போகும். வயிற்றில்

உள்ள சிசுவுக்கு அந்தப் புகை ஆபத்தாக முடியலாம். அனைவரையும் அழைத்து வா..!" என்றபடி உப்பரிகையிலிருந்து கீழே இறங்க, சரியாகத் தங்கள் அறையைவிட்டு மகேந்திரனும், சந்தனாவும் வெளியே வந்தனர். தனது உயிர் நண்பர்கள் தசகுமாரர்கள் அனைவரும் தீயில் கருகி இறந்தனர் என்னும் செய்தி மகேந்திரனை இடிந்து போகச் செய்தது. கண்கள் கலங்கியிருக்க, சோர்வுடன் காணப்பட்டான்.

"அரசே! தீ பரவுகிறது. புகைமூட்டம் மாளிகையை நோக்கி வருகிறது. அரசியாரே! நாம் மாளிகையைவிட்டு நீங்கி, கடற்கரையில் நின்று கொள்வோம். தீ அடங்கியதும் மாளிகைக்குத் திரும்புவோம்.." — அவந்திகா அழைக்க ராஜசந்தனா மகேந்திரனை நோக்கினாள்.

"அவந்திகாவுடன் செல், சந்தனா! உன்னைக் கண்ணுங்கருத்துமாகப் பார்த்துக் கொள்வாள். பெண்கள் அனைவரும் கடற்கரையில் காத்திருங்கள். தீயை அணைத்துவிட்டு, உங்களை அழைக்கிறேன்." சொல்லிய படி மகேந்திரன் இறங்கிச் செல்ல, பெண்கள் அனைவரும் மாளிகையின் பின்புற வாயில் வழியாக வெளியேறிக் கடலை நோக்கி மணல்வெளியில் நடக்கத் தொடங்கினர்.

அவந்திக பவனத்தின் கூடாரங்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்க, மாளிகையைப் புகைமூட்டம் சூழ்ந் திருக்க, அனைவரும் தீயை அணைக்கப் போராடிக் கொண்டிருக்க, மாவிலக்கையில் இருந்து புறப்பட்ட கலம் ஒன்று மல்லை கடலின் அருகே நடுகடலில் நின்றது. கலத்தில் இருந்து ஒரு தோணி இறக்கப்பட்டது. இப்போது கலத்தில் இருந்து இரண்டு மனிதர்கள் தோணி யினில் இறங்கினர். அவர்களில் ஒருவன் தோணியைச் செலுத்த, மற்றொருவன் எரிந்து கொண்டிருந்த கூடாரங்களையே கவனித்துக் கொண்டிருந்தான். அந்தத் தோணி கடற்கரையை நோக்கி ஊர்ந்தது.

*கடற்கரைக்கு வந்துவிட்டிருந்த பெண்கள் கடலுக்குத் தங்கள் முதுகினைக் காட்டியபடி எரிந்து கொண்டிருந்த கூடாரங்களையே பார்த்துக் கொண்டிருக்க, அவந்திகா மட்டும், கடலைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.*

*இதோ —*

*புலியிடம் இருந்து சிங்கத்திடம் இருந்தும் தப்பிச் செல்லத் தருணம் வந்துவிட்டது. அவளைக் காப்பாற்றி அழைத்துச் செல்ல இவளது உயிர் காதலன் சாயாதேவன் வந்து கொண்டிருக்கிறான். இனியும் அவனை எதற்கு நிழல் மனிதனாகவே கருத வேண்டும்..? கடலின் நடுவில் தொலைவில் நிற்கும் ஐராவதம் என்கிற கப்பலின் உரிமையாளன்தான் அந்த நிழல் மனிதன். காம்போஜ இளவரசன் சூரியவர்மனை நினைவிருக்கிறதா? காம்போஜத்தில் இருந்து காஞ்சியைப் பார்ப்பதற்காக நண்பன் ஸ்ரீவர்தனுடன் வந்திருந்தானே. தன்னை இனம் காட்டிக் கொள்ளாமல் ராஜவர்மன் மற்றும் ராஜஸ்ரீயின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்தினானே. அங்கே நின்ற பீமவர்மனை 'சிற்றப்பா' என்று வாய் நிறைய அழைத்திருந்தானே. அவனேதான் அவந்திகாவின் ஆருயிர் காதலன். காம்போஜ இளவரசன். வருங்காலக் காம்போஜ அரசன். சிம்மவர்மனின் இரண்டாவது மகன் தானவர்மனுக்கும், ககனமயிக்கும் பிறந்த மகன். அத்திமலைத்தேவன் ஆலயத்தில், தானவர்மன் ககனாவை சந்தித்த அதே இடத்தில்தான், சூரியவர்மனும் அவந்திகாவை சந்தித்தான். சரித்திரம் அப்படித்தானே திரும்பும்.*

*புலியுடன் போராடியும், சிங்கத்திடம் சமாளித்தும் தலைவிதியே என்று மலப்பிரபா மாளிகையிலும் பிறகு, மல்லையின் அவந்திக பவனத்திலும் போராட்டத்துடன் வாழ்ந்த அவந்திகாவுக்கு இனி விடிவுகாலம். அவந்திகாவின் மனம் தன்பால் திரும்பிவிட்டது என்று அறிந்ததுமே, சிறையில் கிடந்த அவளது தந்தை*

தந்திதுர்கனை விடுவித்தான், வாதாபி சென்று இரகசியமாக அவரை மீட்டு வந்த சூர்யவர்மன், ஐராவதக் கலத்தில் அவரைத் தங்க வைத்திருக்கிறான்.

இதோ —

அவந்திகா தோணியில் ஏறி ஐராவதம் ஏறியவுடன் தந்தையும், மகளும் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்க இருக்கிறார்கள். காம்போஜம் சென்றதும், சூரியவர்மனை மணக்க இருக்கிறாள், அவந்திகா. புலிக்கும் இல்லாமல், சிங்கத்துக்கும் இல்லாமல், சூரியவர்மன் என்கிற பட்டத்து யானையின் மீது அரசியாகப் பவனி வரப் போகிறாள் அவந்திகா. தோணி, கரையில் வந்து நின்றது. யாரையும் திரும்பிப் பாராமல் அவந்திகா சூரியவர்மனை நோக்கி நடந்தாள். அவளை ஆசையுடன் நோக்கிய சூரியவர்மன், இரு கைகளாலும் அவளைத் தூக்கித் தோணியில் அமர வைத்தான். தோணியைச் செலுத்திக் கொண்டிருந்த ஸ்ரீவர்தன் மீண்டும் ஐராவதத்தை நோக்கிச் செலுத்தினான். ஐராவதத்தில் ஏறியதும்தான் அவந்திகா திரும்பிக் கடல் மல்லையைப் பார்த்தாள்.

"அப்பத்திற்காக மோதிய பூனைகளே, இந்தக் காம்போஜ குரங்கு அப்பத்தைக் களவாடிச் செல்கிறது. நாங்கள் வருகிறோம்!" — கடற்கரையை நோக்கிக் கையசைத்தான், சூரியவர்மன். தன் மீது அன்புடன் ஒரு கை படருவதை உணர்ந்து திரும்பி நோக்கினாள், அவந்திகா. கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் தளர்ந்த நிலையில் தந்தை தந்திதுர்கன். வெகு காலத்திற்குப் பிறகு ஆனந்தத்தில் திளைத்தாள், அவந்திகா.

தீ அடங்கியது. கடற்கரையில் இருந்த பெண்களை நோக்கி அரண்மனை அதிகாரி பின்தொடர, மகேந்திரன் வந்தான்.

"தீயைக் கட்டுப்படுத்தியாகிவிட்டது. இனி நீங்கள் மாளிகைக்குத் திரும்பலாம்.." என்ற மகேந்திரன்

வாஞ்சையுடன் சந்தனாவை அணைத்தான். அவனது கண்கள் அவந்திகாவைத் தேடின.

"அவந்திகா எங்கே?" — கேட்டான்.

"மாளிகைக்குத் திரும்பி இருக்க வேண்டும். தீயில் காயம் அடைந்தவர்களுக்கு உதவப் போகிறேன் என்று கூறிக் கொண்டிருந்தாள்."

மாளிகைக்குச் சென்ற மகேந்திரன் அவந்திகாவைத் தேடினான். அவளை எங்குமே காணவில்லை என்பதைக் கண்டு திகைத்து நின்றான். புலிகேசியும் அவனது ஆட்களும், கலவரத்தை உண்டு செய்து, அவளைக் கடத்திச் சென்றுவிட்டார்களோ?

"புலிகேசி!" — சிம்மம் கர்ஜித்தது.

# 40. உளிகளின் யுத்தம்

உளிகளின் யுத்தம் துவங்கியது. அத்திமலையின் கிழக்கே திருக்கடல்மல்லையில் பல்லவத்தின் சிற்பக்கலைகளை உரைக்கப் போகும் மாமல்லனின் நகரத்தை எழுப்பும் பணிகள் தீவிரம் அடைந்தன. மேற்கே வாதாபி நகரின் வாதாபி மலையில் பிரும்மாண்டமான குடைவரை கோயில்களை எழுப்பிக் கொண்டிருந்தான், புலிகேசி. நகரம் எழுப்பும் பணிகள் இரண்டுமே அவந்திகாவுக்காக எழுப்பப்பட்டு வரும் குடைவரை கோயில்கள்தான்.* ஆனால் அவற்றைக் காண்பதற்கு அவந்திகா வரப் போவதில்லை என்பது சிங்கத்திற்கும் தெரியாது. புலிக்கும் தெரியாது.

வாதாபி ஆலயப் பணிகளை முடித்துக் கொண்டு காஞ்சியைக் கைப்பற்றும் எண்ணத்துடன் படைகளுடன் புறப்பட்டான் புலிகேசி. அத்திமலையான் ஆலயம் கொண்டிருக்கும் காஞ்சியைக் கைப்பற்ற வேண்டும். அவந்திகாவை வாதாபிக்கு அழைத்து வந்து தான் அவளுக்காக அமைத்திருக்கும் குடைவரை கோயில் களைக் காட்டி, அங்கேயே அவளை மணந்து கொள்ள வேண்டும். மகேந்திரனின் தலையை வெட்டி, அவந்திகாவின் காலடியில் வைக்க வேண்டும். அவந்திகா

* வாதாபி என்கிற பாதாமி குடைவரை கோயில்களும், மாமல்லபுரத்தின் கோயில்களும் ஏககாலத்தில் எழுப்பப்பட்டவை. வாதாபி மலைக்குகை கோயில்களில் துர்க்கை, திரிவிக்கிரமர் மற்றும் சயனித்திருக்கும் திருமால் ஆகிய சிற்பங்கள் இருப்பது போலவே, மல்லைக் கோயில்களிலும், துர்க்கை, திரிவிக்கிரமர், மகாபாரதக் காட்சிகள் எல்லாம் உண்டு.

அடிமையாவதற்குக் காரணமான பாரவியைக் கொல்ல வேண்டும் என்கிற தீர்மானங் களோடு காஞ்சியை நோக்கி வந்தான்.

காஞ்சியின் புள்ளலூரரில்* முகாமிட்டான் புலிகேசி. அவந்திகாவை தன்னிடம் அனுப்பிவிடு என்று தளபதி வல்லபராஜா மூலம் செய்தி அனுப்பினான்.

மகேந்திரன் பெருங்கோபத்துடன் புலிகேசிக்குப் பதில் அனுப்பினான்.

"அவந்திக பவனத்தில் கலவரம் செய்து அவந்திகாவை கடத்தி வைத்திருப்பது நீதான். என்னைக் காதலிக்கும் அவளை மீண்டும் என்னிடமே திருப்பி அனுப்பிவிடு" — என்று பதில் ஓலை அனுப்பினான், மகேந்திரன்.

உக்கிரத்தின் உச்சநிலைக்குச் சென்றான், புலிகேசி. "நாளை சூரியோதயத்தில் புள்ளலூரரில் நமது படைகள் சந்திக்கும்" என்று செய்தி அனுப்பினான்.

பலவகையில் சோர்ந்திருந்தான், மகேந்திரன். ராஜஸ்ரீ — ராஜவர்மனின் மரணங்கள், நண்பர்கள் தசகுமாரர்களின் கொலைகள், அத்திமலையானை பற்றித் தகவல் ஏதும் கிடைக்காமை, எல்லாவற்றையும்விட, ஆருயிர் அவந்திகா காணாமல் போனது போன்ற சம்பவங்களால், போரினைச் சந்திக்கும் மனநிலை யிலேயே இல்லை. இருப்பினும், நவரத்ன பல்லவியின் கணக்கு இன்னும் தீர்க்கப்படாமல் அல்லவா இருந்தது. சோர்ந்த மனதுடன் தனது படையைத் திரட்டிக் கொண்டு புள்ளலூர் சென்றான், மகேந்திரன்.

---

* புள்ளலூர் என்கிற பொல்லிலூர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரத் தாலுக்காவில் உள்ளது. வாதாபி புலிகேசி இங்குதான் முகாமிட்டுப் பல்லவத்தின் மீது படை எடுத்தான். பின்னர், இதே இடத்தில் ஆங்கிலேயருக்கும் மைசூருக்கும் 1780-லும் பிறகு ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலிக்கும் போர் நடைபெற்றது. ஹைதர் அலி கைப்பற்றியிருந்த சோளிங்கபுரத்தை மீட்பதற்காக மீண்டும் 1781-ல் போர் நடந்தது.

அவந்திகாவின் மீது மூர்க்கமான ஆசையைக் கொண்டிருந்த புலிகேசி பாய்ந்து தாக்க பல்லவப் படைகள் திணறின. மிக எளிதாகப் பல்லவர்களை வீழ்த்திக் காஞ்சிக்குள் நுழைந்தான், புலிகேசி. அத்திமலைத் தேவனின் ஆலய வாயிலில் மகேந்திரனைக் கைது செய்தான். அவனை ஒத்தாடை அரண்மனைக்கு விலங்கு மாட்டி அழைத்துச் சென்ற புலிகேசி அவனது இருக்கையில் அமர்ந்து கொண்டு மகேந்திரனைத் தனது முன்பாக நிறுத்தினான்.

"நினைவிருக்கிறதா மகேந்திரா? உனது தங்கை ஜெயஸ்ரீயை நான் மணக்க வேண்டும் என்பதற்காக நீ மல்யுத்தத்தில் என்னிடம் தோற்பதற்கு முடிவு கட்டினாயே. அதை அறிந்து நான் உனக்கு முன்னதாகவே, உன்னிடம் தோற்பது போன்று நடித்துவிட்டேன். இன்றும் நீ தோற்பது போல் நடித்தாயா அல்லது உண்மையாகவே என்னிடம் தோற்றுப் போனாயோ, எனக்குத் தெரியாது. ஆனால் நீ என்னிடம் தோற்றுவிட்டேன் என்கிற அனுக்கிரக பட்டயத்தில் கையொப்பம் இட்டுத் தர வேண்டும். அதுவே எனக்குப் பெரிய வெற்றி. நீ செத்த பாம்பு..! இனியும் உன்னை நான் அடிக்க விரும்பவில்லை. அவந்திகா எங்கிருந்தாலும் அவளை நான் தேடிக் கண்டுபிடிக்கிறேன். இனி நீ அவளது வாழ்வில் இருந்து ஒதுங்கிக் கொள்!" — என்றவன், வல்லபராஜா நீட்டிய அனுக்ரக பட்டயத்தை மகேந்திரனிடம் நீட்டினான். இதயத்தில் குருதி வடிய, கண்களை நீர் மறைக்கக் கூனிக் குறுகி அந்த பட்டயத்தில் மகேந்திரன் கையொப்பம் இட்டான்.

"காஞ்சி அத்திமலையானின் இருப்பிடம். அவன் மீதுள்ள பக்தியைக் கருத்தில் கொண்டு உன்னையும், காஞ்சியையும் விட்டுவிடுகிறேன்!" — என்று அகந்தையுடன் கூறியவன், தொடர்ந்து தனது படைகளுடன் தெற்கே போனான். காவிரிக்கரை வரை படைகளுடன் சென்றான். தமிழகப் பகுதிகளை வெல்ல முடிந்த

அவனால் அவந்திகாவை மட்டும் கண்டுபிடிக்க இயலவில்லை.

கவரிமான் இனத்தைச் சேர்ந்தவனோ, மகேந்திரன். பட்டயத்தில் கையொப்பம் இட்டவுடன் மரணப் படுக்கையில் விழுந்தான் மகேந்திரன். மகன் நரசிம்ம பல்லவனை அருகில் அழைத்தான்.

"நரசிம்மா! மிகவும் பலவீனமான பல்லவத்தை உனக்கு விட்டுச் செல்கிறேன். ஒரு காலத்தில் பொலிந்த பல்லவமாகத்தான் நமது நாடு இருந்தது. அதன் ஜீவ வித்தான அத்திமலைத்தேவன் பிரதிமையை நாம் தொலைத்துவிட்டோம். அதிலிருந்து நமது அரச குடும்பத்தில் மரணங்களும், குடும்பத்தினர் மாயமாக மறைவதும் நிகழ்ந்து வருகின்றன. அவனது பிரதிமை கிடைத்தால்தான் பல்லவம் மீண்டும் பொலிவு பெறும். சாணக்கியர், திருலோச்சன பல்லவன், கரிகாலன், இளந்திரையன், சமுத்ரகுப்தன், விஷ்ணுகோபன், எனது பாட்டன் சிம்மவர்மன், எனது தந்தை சிம்மவிஷ்ணு, அவர் தம்பிகள் ஜெயவர்மன், தானவர்மன், பீமவர்மன் என்று பலர் அத்திமலையானை ஆராதித்து நலம் பெற்றுள்ளனர். இனி பல்லவத்தின் எதிர்காலத்தை உன் வசம் ஒப்படைக்கிறேன். எனக்கு நீ மூன்று வரங்களைத் தர வேண்டும்.

"அத்திமலைத்தேவனை எப்படியாவது கண்டுபிடித்து அவனது சந்நிதியில் வைக்க வேண்டும். இது முதல் வரம். வெறும் சத்தியமாக நினைக்காதே. இதனை நீ செய்து முடிக்க வேண்டிய கட்டாயம். மீண்டும் பல்லவத்தை நிலைநிறுத்த இதனைச் செய்தே தீர வேண்டும்.

அடுத்தபடியாக, பாதியில் நிற்கும் மாமல்லபுரக் கோயில் பணிகளை நீ எடுத்து நடத்த வேண்டும். எனது கனவினை நீ நிஜமாக்க வேண்டும். காலமெல்லாம் மாமல்லபுரம் நமது பல்லவத்தின் புகழைப் பாட வேண்டும்.

*கடைசியாக, வாதாபி புலிகேசியை வீழ்த்தி நான் அவன் வசம் தந்திருக்கும் அனுக்ரக பட்டயத்தைப் பிடுங்கித் தீயிட்டு எரிக்க வேண்டும். அவனது தலையைக் கொண்டு வந்து கிழக்குக் கடலில் வீச வேண்டும்..!*

*இந்த மூன்று வரங்களையும் நீ எனக்குத் தர வேண்டும்!"*

*கண்ணீருடன் கைநீட்டினான் மகேந்திரன்.*

*"தந்தையே! இந்த மூன்று காரியங்களையும் நிச்சயம் செய்து முடிப்பேன் என்கிற உறுதியைத் தருகிறேன்..!" — தனது கையைத் தந்தையின் கரத்தின் மீது அழுத்த, அந்த ஸ்பரிசம் பல்லவனின் முகத்தில் ஒருவிதப் பரவசத்தை உண்டாக்கியது. அந்தப் பரவசத்தை அனுபவித்தபடியே மகேந்திர பல்லவனின் உயிர் அவனது உடல்கூட்டைவிட்டுப் பிரிந்தது.*

*சிம்மவர்மனின் ஆட்சியில் காணாமல் போன அத்திமலைத்தேவன் இன்னும் ஒளிந்து கொண்டு விளையாட்டு காட்டுகிறான். சிம்மவர்மனுக்குப் பிறகு, சிம்மவிஷ்ணு என்கிற அவனிசிம்மன் ஆட்சி செய்து, அவன் மகன் மகேந்திர பல்லவனின் காலமும் முடிந்து விட்டது. பல மன்னர்கள் வந்தார்கள், வென்றார்கள், போனார்கள். ஆனால் அத்திமலைத்தேவனை மீண்டும் அவனது வாசஸ்தலமான அத்திமலையில் சேர்ப்பவனே உண்மையான வெற்றி வீரன். நரசிம்ம பல்லவனின் தலைமையில் புதிய தலைமுறை தோன்றிவிட்டது. பார்ப்போம்..! நரசிம்மவர்மனுக்குக் காலம் விடுக்கும் சவாலை ஏற்று வெற்றிகரமாகச் செயல்படுகின்றானா என்று?*

## 41. மூன்றாவது பங்காளி

'மகேந்திர பல்லவனின் பூதஉடல் திருக்கடல்மல்லை கடற்கரையில் தகனம் செய்யப்படும்' — அரண்மனையில் இருந்து அறிக்கை வந்ததுமே, மல்லைக் கடற்கரையை நோக்கி மக்கள் சாரை சாரையாய் நடந்து சென்றனர். முதியவர்கள் கூட வண்டிகளைக் கட்டிக்கொண்டு திருக் கடல்மல்லைக்குப் புறப்பட்டுச் சென்றனர். திருக்கடல் மல்லைக்குச் செல்ல இயலாதவர்கள், ஒத்தாடை அரண்மனைக்கு வந்து தங்களது அஞ்சலியைச் செய்தனர்.

திருக்கடல்மல்லை கடற்கரை..

மாலை சூரியன் மகேந்திரனை உடன் அழைத்துச் செல்வதற்காக மேற்கு வானில் மறையாமல் காத்திருந்தான்.

மன்னன் மகேந்திரனின் பூத உடல் காஞ்சியில் இருந்து வந்து கொண்டிருந்தது. தகனத்தைக் காண்பதற்காகப் பெருங்கூட்டம் முன்பாகவே கூடிவிட, காவலர்கள், கூட்டத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் விழி பிதுங்கிக் கொண்டிருந்தார்கள். உபதளபதி பரஞ் சோதியின் வசம் தகன ஏற்பாடுகள் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

அரச குடும்பத்தினர், அமைச்சர்கள், போர்ப் படைத்தலைவர்கள், அரச குடும்பத்து நண்பர்கள், புலவர்கள், கலை விற்பன்னர்களுக்கு தகன மேடையின் பக்கமாக தனிச் சிறப்பு அமர்விடம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார், பரஞ்சோதியார். தசகுமாரர்களின்

கொலைகள், திருக்கடல்மல்லையின் தீ விபத்து ஆகிய துர்சம்பவங்களுக்குப் பிறகு பாதுகாப்பு ஏற்பாடுகள், குறிப்பாக அரச குடும்பத்திற்குப் பலப்படுத்தப் பட்டிருந்தன. அந்தச் சிறப்பு இருப்பிடத்தைச் சுற்றிப் பலமான காவல் போடப்பட்டிருந்தது. சிறப்பிடத்தைச் சுற்றி மூங்கில் கழிகளால் வேலி அமைக்கப்பட்டு, உள்ளே வருவதற்கும், வெளியேறுவதற்கும் ஒரே ஒரு நுழைவாயில் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தது.

பரஞ்சோதியார் அங்கு நின்று, உள்ளே வரும் நபர்களை விசாரித்து, அவர்களது பெயர், அவர்களின் வாழும் பகுதி, ஆகியவற்றைக் குறித்துக் கொண்டு அவர்களிடம் ஓலையில் கையொப்பம் வாங்கிய பிறகே உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தார்.

சுமார் இருநூறு பேர் அமருவதற்காக இருக்கைகள் போடப்பட்டிருந்தன. இருநூறு இருக்கைகளும் நிரம்பி வழிய, பரஞ்சோதி காவலர் ஒருவனிடம் சுவடிகளைத் தந்து எண்ணிப் பார்க்கச் சொன்னார். இருநூறு இருப்பதாக அவன் கூறியதும் சுவடிகளை மீண்டும் வாங்கிக் கொண்டார்.

“இனி யாரையும் உள்ளே விடாதே. இயற்கை உபாதைகளுக்காக வெளியே செல்பவர்களின் பெயரை மட்டும் குறித்து வைத்துக் கொள்!” என்றபடி சுவடிகளைத் தனது அங்கிக்குள் வைத்துக் கொண்டு தகன மேடையின் அருகே காவலாக நின்று கொண்டார்.

காஞ்சி ஒத்தாடையில் இருந்து காலையே புறப்பட்டுவிட்ட மகேந்திரனின் இறுதி ஊர்வலம், ராஜவீதி, தருமவனம், தும்பைவனம், அத்தியூர், ஐயம்படுகை, மாலிருஞ்சோலை மலை, முக்கூடல் வழியாகக் கிழக்கே சென்று கடல்மல்லையை சூரிய அஸ்தமனத்தின் போது நெருங்கியது.

"மன்னர் மகேந்திரமல்ல பல்லவரின் புகழ் ஓங்குக!" என்று உணர்ச்சியுடன் மக்கள் கோஷமிட, மகேந்திரனின் உடல் தகன மேடையின் மீது வைக்கப்பட்டது.

நரசிம்ம பல்லவன் தனது கையில் எரியும் சுளுந்து ஒன்றுடன் தகன மேடையில் நின்றபடி புரோகிதர் கூறிய நியமங்களைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்தான். தகன மேடையின் படிகளில் நின்றபடி பீமவர்மன் சோகத்துடன் சடங்குகளைக் கவனித்துக் கொண்டிருந்த வேளை —

சிறப்பிடத்தில் முதல் வரிசையில் அமர்ந்திருந்த அந்த உருவம் சிதை மேடையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. கரிய வேட்டியும், மேலங்கியும் அணிந்திருந்தது. கரிய நிறத் தலைப்பாகை ஒன்றையும் அணிந்திருந்தது. முகத்தில் தாடி அடர்ந்து கிடந்தது.

'தப்பிவிட்டாயே! மகேந்திரா! தசகுமாரர்களைத் தீர்த்துக் கட்டிய பிறகு உன்னை நெருங்கி வரலாம் என்று இருந்தேன். அதற்குள் புறப்பட்டுச் சென்றுவிட்டாயே. எனக்கு முன்பாகப் புலிகேசி முந்திக் கொண்டானே!' — மனதினுள் புலம்பியவாறு, தகனமேடையைச் சற்றே நெருங்கி நின்றான்.

"இரண்டு தலைமுறையாக உங்கள் பல்லவத்தைக் குறி வைத்தேனடா, மகேந்திரா! உனது பாட்டனின் அரசவையில் நடனமாடுவதற்காகச் சாளுக்கியத்திலிருந்து வந்திருந்த எனது தாய் வித்யுதாவை தனது பிரிய நாயகியாக வைத்துக் கொண்டானடா நமது தந்தை அவனிசிம்மன்! நீ பால்யத்தில் முக்கூடல் வரும் போதும், போகும் போதும், 'அவன்தான் பட்டத்து இளவரசன் உனது அண்ணன்' என்று உன்னைச் சுட்டிக்காட்டுவாள் எனது தாய். இருவருக்கும் ஒரே தந்தை என்பதனால் உன் மீது பாசத்துடன்தான் வளர்ந்தேன். ஆனால், நான் உன்னைப் போலவே வீரத்திலும், மல்யுத்தத்திலும் சிறந்து விளங்குவதைக் கண்டதும், நான் உனக்குப் போட்டியாக

வந்துவிடுவேனோ என்று அச்சப்பட ஆரம்பித்தார். அதனால் எங்கள் இருவரையும், மீண்டும் சாளுக்கியம் செல்லும்படி வற்புறுத்தினார். காரணம் கூறாமல் அழுது கொண்டே இருந்தாள் எனது தாயார். திடீரென்று ஒரு நாள் இரவு என்னை எழுப்பி என்னைக் குடிலைவிட்டு வெளியே சென்று உறங்கு என்று கூறினாள். தந்தை வரும்போதெல்லாம் என்னை வெளியே சென்று உறங்கு என்று அவள் கூறுவது வழக்கம். எனவே அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், குடிலைவிட்டு ஒதுங்கி, முக்கூடல் கடிகையின் வரங்குளம் அருகே சென்று உறங்கினேன். பொழுது விடிந்த போது எனது தாய் தங்கியிருந்த குடில் தீக்கு இரையாகி இருந்தது. தாயும், நானும் இறந்து போனோம் என்று நமது தந்தை நிம்மதியாக இருந்தார். நான் திரையன் ஏரிக்கரையில் ஒரு உழவரின் வீட்டில் அவருக்கே மகனாக வாழ்ந்தேன். நான் வந்த வேளை, பிள்ளையே இல்லாத உழவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. மனோரஜா என்று பெயரிட்டு ஆசையுடன் வளர்த்து வந்தோம். பேரெழில் அவளிடம் திரள, உழவரின் மகளாக அல்லாமல் மனோரஜாவை ஒரு ராஜகுமாரியாகவே வளர்த்தோம்.

நினைவிருக்கிறதா மகேந்திரா? நமது தந்தையின் ஐம்பதாவது பிறந்த நாள் அன்று முக்கூடல் கடிகையில் நடைபெற்ற மல்யுத்த போட்டியில் நானும், நீயும் மல்யுத்தத்தில் மோதினோமே. இளவரசனுடன் நான் மோதப் போகிறேன் என்பதை அறிந்ததும், மல்யுத்தத்தைக் காண முக்கூடல் களரிக்கு போட்டியைக் காண வந்து எனக்கு ஆச்சரியத்தைத் தர வேண்டும் என்று எனக்குத் தெரியாமல் வந்தாளே, எனது தங்கை மனோரஜா. எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. தீராத் துக்கத்தைத்தான் மனோரஜா எங்களுக்கு அளித்தாள். மல்யுத்தத்தில் நீ வெற்றி பெற்றுவிட்டாய் என்கிற மகிழ்ச்சியில், நீயும் உனது நண்பர்களும் மது அருந்தி, அந்த மயக்கத்தில் என்னவெல்லாம் ஆட்டம்

ஆடினீர்கள். தனியாக வந்திருந்த மனோரஜாவை உனது நண்பர்கள், களரியின் தியான மண்டபத்தில் சீரழித்ததும், விஷயம் வெளியே தெரியாமல் இருக்க, குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த மனோரஜாவின் குரல்வளையை நீ வாளால் கீற, அவள் உயிர் பிரிய, அவளது உடலை முக்கூடல் சங்கமத்தில் வீசி எறிந்தீர்களே. அன்றுதான் மல்லன் மகேந்திரனின் சகோதரனான நான் 'மல்ல எதி'யாக உருமாறினேன். எனது தங்கையின் குரல்வளையைக் கீறிக் கொலை செய்த அதே மாதிரியில் உனது நண்பர்களையும் கொன்றேன். உன்னை நெருங்குவதற்குள் நீ தப்பித்துக் கொண்டாய். பல்லவம் இன்று, தான் செய்த பாவங்களின் பலனை அனுபவிக் கிறது. உங்களது செயல்பாடுகளை விரும்பாமல்தான் அத்திமலையான் ஆலயத்தைவிட்டு நீங்கிவிட்டான். நீங்கள் உங்களது செயல்பாடுகளை மாற்றிக் கொள்ளாத வரை, அவன் மீண்டும் வரமாட்டான். அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்!" — குரூரத்துடன் சிதையைப் பார்த்தபடி தனக்குள் பேசிக் கொண்டிருந்தான், மல்ல எதி.

"எதி என்றால் எதிரிதானே..? எதிராஜன் என்றால் எதிரிகளை வென்று ராஜனாகத் திகழ்கின்றவன் என்றல்லவா பொருள்..? மல்ல எதியின் பார்வை சிதையைச் சுற்றி வரும் நரசிம்ம பல்லவனின் மீது படர்ந்தது. உனது தந்தை சிறந்த மல்லன். அவனுடைய எதிரி என்பதால் என்னை மல்ல எதி என்று அழைத்துக் கொள்கிறேன். நீ மகாமல்லனாகத் திகழ்வதற்கு உரிய திறமைகளைக் கொண்டிருப்பதாக அறிகிறேன். அப்படியென்றால், நானும் மகாமல்ல எதியாக நான் என்னையே உயர்த்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்கிறேன். விரைவில் சந்திப்போம், மகாமல்லா!" — தனக்குள் கூறிக் கொண்டிருந்தான், மல்ல எதி.

சிதைக்குத் தீ வைக்கும் தருணம் நெருங்கியது. சிறப்பு இடத்தில் அமர்ந்தவர்கள் அனைவரும் தகன மேடையைச் சுற்றி முண்டியடித்துக்கொண்டு நின்றனர்.

"அடேய் விஜயராகவா! கூட்டத்தில் மன்னர் குடும்பத்துப் பங்காளிகளின் நெய்ப்பந்தங்களைச் சேகரித்துச் சிதையினில் சேர்த்துவிடு.." புரோகிதர் கூவ, விஜயராகவன் என்கிற அந்த அந்தணச் சிறுவன் பீமவர்மனை நோக்கி வந்தான்.

அவன் கையில் ஏந்தியிருந்த நெய்ப்பந்தத்தை வாங்கிக் கொண்டான். அந்தச் சிறுவனைக் குனிந்து நோக்கினான், பீமவர்மன்.

"எனது தந்தை சிம்மவர்மனுக்கு ஒரு சிற்றப்பா மகன் இருக்கிறான். புஷ்பவர்மன் என்று பெயர். சிறப்பிடத்தில் முதல் வரிசையில் நிற்கிறான். அவனும் நெய்ப்பந்தம் ஏந்தி வந்தான். குடும்பப் பெரியவர் என்கிற முறையில் அவரிடமும் சென்று நெய்ப்பந்தத்தைச் சேகரித்துக் கொள்!" — பீமவர்மன் கூற, விஜயராகவன் தகன மேடையில் இருந்து இறங்கிச் சென்றான்.

மீண்டும் சிதைக்குத் திரும்பிய விஜயராகவனின் கையில் பீமவர்மன் அளித்த நெய்ப்பந்தத்தைத் தவிர, இன்னும் இரண்டு நெய்ப்பந்தங்கள் காணப்பட்டன. அதைக் கவனித்த பீமவர்மனின் கண்களில் வியப்பு. விஜயராகவனை அருகே அழைத்து அவனது கைகளை உறுத்து நோக்கினான். "புஷ்பவர்மரும் நானும் மட்டும் தானே பல்லவ மன்னனுக்கு எஞ்சியிருக்கும் பங்காளிகள். நீ மூன்று பந்தங்களைக் கையில் வைத்திருக்கிறாயே?" — வியப்புடன் கேட்டான், பீமவர்மன்.

"முதல் வரிசையில் நின்றிருந்த புஷ்பவர்மரிடம் நான் பந்தத்தை வாங்கிக் கொண்டிருந்த போது, மற்றொருவர், 'நானும் மன்னருக்குப் பங்காளிதான்' என்று கூறியபடி ஒரு பந்தத்தை எடுத்துக் கொடுத்தார். அதனைத்தான்

நான் ஏந்தியிருக்கிறேன்?" — விஜயராகவன் கூற, திடுக் கிட்டுக் கூட்டத்தின் முதல் வரிசையை நோக்கினான்.

'அது யார் எனக்குத் தெரியாமல் திடீரென்று முளைத்த பங்காளி?' — பீமவர்மன் கூட்டத்தின் முன்வரிசையில் நின்றிருந்தவர்களை நோட்டம்விட்டான். மின்னல் தோன்றி மறைவது போன்று சட்டென்று அந்தக் கரிய உருவத்தின் முகம் அங்கு நின்றிருந்தவர்களிடையே அவன் கண்களில் சிக்கியது. நகர்ந்து சென்ற தனது கண்களில் ஏதோ தடுமாற்றத்தை உணர்ந்து மீண்டும், அந்தக் கரிய உருவத்தின் முகத்தைக் காண்பதற்காகத் தனது பார்வையை அந்தப் பக்கமாகச் செலுத்த, அந்த முகம் கண்ணிமைக்கும் நேரத்தில் காணாமல் போனது.

பரபரப்புடன் விஜயராகவனை நோக்கினான், பீமவர்மன். "சிறுவனே! உன்னிடம் நெய்ப்பந்தத்தைக் கொடுத்த அந்தப் பங்காளி தனது பெயரைக் கூறினாரா?" பீமவர்மனுக்கு விடை தெரிந்தாலும், ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காகவே அந்தச் சிறுவனைக் கேட்டான்.

"மகாமல்ல எதி என்று கூறினார்!" — விஜயராகவன் கூறினான்.

பீமவர்மன் உறைந்து போனான். மகேந்திர மல்லன் இருந்தவரை தன்னை மல்ல எதி என்று கூறியவன், இன்று தனது பெயரை மகாமல்ல எதி என்று கூறுகிறான் என்றால்? திகிலுடன் அருகே நின்றிருந்த நரசிம்ம மல்லனைப் பார்த்தான். மகாமல்லன் என்கிற பெயரோடு மற்போர் புரிவதில் மிகவும் சமர்த்தனாக இருந்தான், நரசிம்ம பல்லவன்.

சடங்குகள் முடிந்து பீமவர்மன் நரசிம்ம பல்லவனை மட்டும் தனியே அழைத்தான்.

"சிங்கமல்லா! உனது தந்தை உன்னிடம் மூன்று வரங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நான்

அறிவேன். நீ அதை நிறைவேற்றுவாய் என்பதும் எனக்கு உறுதியாகத் தெரியும். இருப்பினும், உனது தந்தை உன்னிடம் கூறாமல்விட்ட செய்திகளும் உண்டு. அதில் ஒன்றுதான் எனது அண்ணன் அவனிசிம்மனின் வாழ்க்கையில் உள்ள ஒரு மர்மம். வித்யுதா என்கிற நடனப்பெண்மணியோடு உறவு கொண்டு ஒரு மகனைப் பெற்றான் எனது அண்ணன். அவனால் பல்லவத்திற்கும், நமது அரச குடும்பத்திற்கும் பெருங்கேடுகள் விளைந்து வருகின்றன. உனது தந்தையை மல்லன் எதி என்கிற பெயரில் எதிர்த்து வந்தவன், இப்போது தன்னை மகாமல்ல எதி என்று அழைத்துக் கொள்வதாக அறிகிறேன். உனது தந்தை மீது இருந்த விரோதத்தை இப்போது உன் மீது திருப்பியிருக்கிறான் போலும். எச்சரிக்கையுடன் இரு..!!" — பீமவர்மன் கூறினான்.

"பாட்டனாரே! நான் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இருக்கிறேன்." — நரசிம்மவர்மன் கூறினான்.

# 42. அத்திமலை முழைஞ்சில் சீரிய சிங்கம்

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம்தான் வேரிமயிர் பொங்க முழங்கிப் புறப்படுமா என்ன? அத்திமலை முழைஞ்சில் இதுகாறும் மன்னிக் கிடந்துறங்கிய சிங்கமும் சிலிர்த்துக் கொண்டு மகுடாபிஷேகம் செய்து கொள்வதற்கு மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டது.

சிங்கமல்லன் என்று மக்களால் பிரியமாக அழைக்கப் பட்ட நரசிம்ம பல்லவன், விடியற்காலையிலேயே எழுந்து மகுடாபிஷேகத்திற்காகத் தயாராக நின்றான். கொலு மண்டபத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாக அரண்மனை பூஜை அறையில் பிரார்த்தனை செய்வதற்காக, ராஜகுரு திரிமூர்த்திலோகிதர் அவனை பூஜா அறைக்கு அழைத்துச் சென்றார்.

இறைவனைத் தொழுதுவிட்டுத் திரும்பிய சிங்க மல்லனின் பார்வை ஒரு மூலையில் சதுர வடிவில் அமைந்திருந்த நிலவறைக் கதவின் மீது படர்ந்தது. நிலவறைக் கதவின் தாள் மூடப்பட்டு, ஒரு சிறிய பூட்டு தாளில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

"உள்ளே என்ன இருக்கிறது?" — சிங்கமல்லன் கேட்க, அங்கு ஆராதனை செய்து வரும் அரண்மனை புரோகிதனான அந்த அந்தண வாலிபன் பிந்துமாதவன் பணிவுடன் தலைவணங்கினான்.

"அடியேனுக்குத் தெரியாது மன்னா! நான் ஆராதனை செய்ய இங்கு வரும் நாளில் இருந்தே அந்த நிலவறையின்

கதவு மூடியே இருக்கிறது. உள்ளே என்ன இருக்கிறது என்பதை நான் அறியேன்!" — அந்தணக் குமரன் கூறியதும், மீண்டும் அந்த நிலவறையை ஓரக் கண்களால் பார்த்துவிட்டு, கொலுமண்டபத்திற்குப் புறப்பட்டான்.

புதிய தலைமுறை, புதிய தலைவர்கள், புதிய நம்பிக்கைகளுடன் காஞ்சியில் புதிய காற்று வீசிக் கொண்டிருந்தது. பல்லவர்களின் ராஜகுருவாக அய்யம்படுகையைச் சேர்ந்த திரிமூர்த்திலோகிதர் நியமிக்கப்பட்டிருந்தார். நரசிம்ம பல்லவனின் மகுடாபிஷேகப் பணிகளை அவரது ஆலோசனையில், புதிய தலைமை அமைச்சர் அரங்கநாத ஆமாத்தியர் செய்து கொண்டிருந்தார். அத்திமலைத்தேவன் அதிகாரி மாயகூத்த மடலூருவர் மற்றும் அர்ச்சகர் சதானந்த அத்தங்கியும் அத்திமலையின் பரிவட்டப் பிரசாதங் களுடன் ஒரு பக்கம் நின்றிருந்தார்.

மன்னன் நரசிம்மவர்மனின் ஆசனத்தின் மிக அருகே ஒரு இருக்கை காணப்பட்டது. இன்னும் நரசிம்ம பல்லவனுக்குத் திருமணம் நடைபெறவில்லை என்கிற போது அவனது பக்கலில் அவ்வளவு நெருக்கமாக அதுவும் பட்டாபிஷேகம் அன்றே ஒரு இருக்கை போடப்பட்டுள்ளதை எண்ணி வியப்புடன் அவையில் குழுமியிருந்தோர் தங்களுக்குள் கிசுகிசு என்று பேசிக் கொண்டிருந்தனர்.

மேளதாளங்கள் முழங்கின. ராஜ்ய வாத்தியங்கள் இயம்பின. கொம்பு வாத்தியங்கள் அலறின. காஞ்சியில் இருந்த அத்தனை ஆலய மணிகளும் ஒலித்தன. நடனப்பெண்மணிகள் கீதம் பாடியபடி, கால்களில் நூபுரங்கள் ஒலிக்க, ஸ்வர்ணத் தட்டுகளில் குவிந்திருந்த மலர்களை வாரி, விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளத்தில் தூவினர். அய்யம்படுகை அந்தணர்கள் "ஜெய விஜயீபவ!" கோஷங்களை எழுப்பியபடி கையில் பூரணக் கும்பங்களுடன் நின்றனர். அனைவரது

கண்களும் கொலுமண்டபத்தின் வாயிலையே கவனித்தன.

அஸ்வத்தாமாவின் மகன் தொண்டைச்செடி என்கிற பல்லவத்தை அணிந்து உருவாக்கிய சாம்ராஜ்யம் பல சோதனைகளைச் சந்தித்து திருலோச்சன பல்லவன், இளந்திரையன், விஷ்ணுகோபன், சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, மகேந்திரன் என்று பல மன்னர்களின் காலகட்டத்தினைக் கடந்துவிட்டது. இன்னமும் ஆல் போல் தழைத்து நீடிக்கும் என்பதற்கு அடையாளமாகப் போர்களில் தோல்வியே கண்டிராத அஜாதசத்ருவாகத் திகழப் போகும் நரசிம்ம பல்லவன் இதோ மன்னனாகப் பொறுப்பேற்கப் போகிறான். மல்யுத்தம், போர்க் கலைகள், சிற்பக் கலைகள், இசைக் கலை நாடகக் கலை என்று அனைத்திலும் தேர்ச்சி பெற்ற சகலகலா வல்லவன் நரசிம்ம பல்லவன். சிங்கக் கர்ஜனையாகப் பேசுவான். அடிக்கடி உரையாடமாட்டான். வாய் திறந்து பேசினால், ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்பு இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வான். அவனுக்குப் பிடித்தவை பிடிக்காதவை என்ன என்பதை அவனைச் சுற்றி இருப்பவர்கள் அறிய முயன்றாலும், தனது எண்ணங்களை வெளிக்காட்டாதவன்.

பல்லவ மன்னர்கள் அனைவருமே உயரமானவர்கள். அவர்கள் அணிந்திருக்கும் மணிமுடியும் மாலவன் அணிந்திருக்கும் கிரீடம் போன்று நீளமாக உயர்ந்து நிற்கும். அது பல்லவ மன்னர்களை இன்னும் உயரமாகக் காட்டும். ஆனால் நரசிம்மவர்மன் அந்த மகுடத்தை அணியாமலேயே உயர்ந்து காணப்பட்டான். வட்டவடிவ முகம். வில்லாக வளைந்து நிற்கும் அடர்ந்த புருவங்கள். தீர்மையான நாசி. தடித்த உதடுகள். நீண்ட முகத்தில் இரு மலைகள் சேர்வது போன்ற சதைப்பற்றுள்ள கன்னங்கள். அகன்ற தோள்களில் பிணைத்திருக்கும் மார்பு கவசத்தின் நுனியில் இருபுறமும் சங்கு சக்கரச் சின்னங்கள். கடல்மல்லையின் பரந்து விரிந்த

மணற்பரப்பைப் போன்ற வெண்ணிற மார்பு, வழுக்கி இறங்கும் மலைப்பாறையாக ஒட்டிய வயிறு. குறுகிய இடை, கலங்கரை விளக்கம் போன்ற நெடிய கால்கள் என்று கம்பீரத்தின் ஒத்த உருவமாக இருந்தான். அவனது சிறப்பே கணீரென்ற குரல்தான். சாதாரணமாக உரையாடும் போதே வீரக் கர்ஜனையாக இருக்கும். போர்க்களத்தில் அவன் சிம்மநாதம் செய்தால்..?

"ராஜாதி ராஜ மார்த்தாண்ட கம்பீரச் சதபல்லவ, மாமல்ல விஜயத் திவ்யக் காஞ்சிமணி மார்ப, மகேந்திர குமார, நரசிம்ம பல்லவ பராக் பராக் பராக்..!" — கட்டியங்காரன் குரல் கொடுக்க, கம்பீரமாகக் கொலு மண்டபத்தில் நுழைந்தான், நரசிம்ம பல்லவன். அவனது உயர்ந்த தேகமும், ஆகிருதியும் மண்டப நுழை வாயிலையே அடைத்தது. பணிப்பெண் ஒருத்தி மங்கள ஆர்த்தி சுழற்றச் சற்று நின்றவன், அங்கிருந்தபடியே, சிம்மாசனத்தை நோக்கினான். புகழ் பெற்ற பல மன்னவர்கள் அமர்ந்திருந்த ஆசனம்தான். இருப்பினும் இம்முறை ஒரு சிங்கம் அல்லவா சிங்காசனத்தில் அமரப் போகிறது. இன்றுதான் சிங்காசனம் தனது பெயருக்கு ஏற்றபடி விளங்கப் போகிறது.

வாத்தியங்கள் முழங்க, அரியணையை அடைந்து அதில் அமர்ந்தான். நரசிம்ம பல்லவன். அவன் பின்பாகவே ஒரு அழகிய வாலிபன் வந்தான். சுருள் முடியும், அழகிய முகமும், குட்டையான தேகத்தையும் கொண்டிருந்தான். கையில் சுவடிகளைச் சுமந்திருந்தான். மன்னரின் இருக்கைக்கு அருகே அவனுக்குப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தான்..

வேதமந்திரங்கள் முழங்க, மங்கலவாத்தியங்கள் இசைக்க மகுடாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து அரண்மனை அதிகாரி ஒரு அறிவிப்பினைச் செய்தார்.

"மன்னர் சிங்கமல்ல நரசிம்ம பல்லவர், புதிய தளபதி திருச்செங்காட்டங்குடி பரஞ்சோதிக்கு உடைவாளை

அளிப்பார்" என்று சொன்னவுடன் மிடுக்காக எழுந்து சென்று மன்னர் முன் நின்றார், பரஞ்சோதி. பரஞ்சோதியிடம் வாளை நீட்ட அதை உயர்த்தி இருமுறை சுழற்றி, "பல்லவம் வெல்க!" என்று கூறிவிட்டுத் தனது உறையில் சொருகிக் கொண்டான், பரஞ்சோதி.

மகுடாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்படுவதற்கு முன்பாகவே, புதிய ராஜகுருவும் தலைமை அமைச்சரும் நிச்சயப்படுவதற்கு முன்பாகவே, தனது தளபதியைத் தேர்ந்தெடுத்துவிட்டிருந்தான்.

மகேந்திரனின் தகனத்திற்குப் பிறகு உபதளபதி பரஞ்சோதி தனது சொந்த ஊரான திருச்செங்காட்டங் குடிக்குச் சென்றிருந்தான். சிங்கமல்லன் ஆளை அனுப்பிப் பரஞ்சோதியை உடனடியாக ஒத்தாடைக்கு வரும்படி கட்டளையிட்டான்.

தனது முன்னால் நின்ற பரஞ்சோதியை ஆழமாக நோக்கினான், சிங்கமல்லன்.

"பரஞ்சோதி! நீதான் எனது தளபதியாகத் திகழப் போகிறாய்!" — சிங்கமல்லன் கூறியதும் திகைத்துப் போனார், பரஞ்சோதி. உணர்ச்சியால் வாய் அடைத்துப் போக, பிறகு சமாளித்துக் கொண்டு, சிங்கமல்லனை நன்றியுடன் நோக்கினான்.

"மன்னரே! தலையல்லால் கைமாறிலனே!" — என்றார் பரஞ்சோதி.

தனது தலை எப்போதும் உங்களது திருவடிகள் வணங்கும் என்கிற பொருளில் பரஞ்சோதி கூறியது, சிங்கமல்லனுக்கு ரசிக்கவில்லை.

"உமது தலையை எனது காலுக்குக் கொடுப்பதைக் காட்டிலும், புலிகேசியின் தலையை எனது கைக்குத் தாரும். கடலில் வீசி எறிவதற்கு வசதியாக இருக்கும்!" — என்றான் சிங்கமல்லன்.

மன்னர் தன்னிடம் என்ன எதிர்பார்க்கிறார். எதற்காகத் தனக்குத் தளபதி பதவி அளிக்கப்பட்டது என்கிற காரணத்தைப் புரிந்து கொண்டார், பரஞ்சோதி.

அரண்மனை அதிகாரி, அடுத்து ஒரு அறிவிப்பைச் செய்தார்.

“பல்லவத்தின் தலைமைப் புலவரான தண்டி மன்னரைப் பாராட்டி மங்களக் கவி ஒன்றை இசைப்பார் என்று கூறியதும், நரசிம்ம பல்லவனின் அபிமானத்தைப் பெற்ற தண்டி அவனைப் புகழ்ந்து கவிதை பாடினான். சபையினர் பலத்த கரகோஷம் செய்ய நரசிம்ம பல்லவன் அவனை பெருமையுடன் பார்த்தான்.

தண்டி பழைய புலவன் பாரவியின் பெயரன். வாதாபி மன்னன் இறையாவின் நண்பனாகத் திகழ்ந்து பிறகு அவனது கோபத்திற்கு ஆளாகி, குடும்பத்தோடு காஞ்சிக்குக் குடிபெயர்ந்திருந்தான். பாரவியின் மகன் பிரசன்னன் மகேந்திரனின் அரசவையில் பணிபுரிந்தான். அவனது மகள் பாலதுர்கா, பல்லவ அரசி சந்தனாவின் அலங்கார நிபுணராகத் திகழ்ந்தாள். அவளது மகன்தான் தண்டி. பால்யத்திலேயே சமஸ்கிருதம், தமிழ் மற்றும் பாலி மொழிகளில் புலமை பெற்றிருந்தான். அரசியல் அறிவும், இலக்கிய ஆர்வமும் கொண்டிருந்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசவும் செய்வான். சிந்திக்க வைக்கவும் செய்வான். குருகுலத்தில் கல்வி பயின்ற போதே நரசிம்மவர்மனும் தண்டியும் மிகவும் நெருங்கி விட்டிருந்தனர்.

மகுடாபிஷேகம் முடிந்ததும் அத்திமலை தரிசனத் திற்குப் புறப்பட்டான், நரசிம்மவர்மன்.

வழியெங்கும், “மன்னர் சிங்கமல்லர் வாழ்க வாழ்க!” என்கிற கோஷம் விண்ணைப் பிளக்க, அத்திமலைத் தேவனின் கோயிலின் முன்பாக நின்றது அவனது இரதம். மன்னனின் வருகையை முன்னிட்டு விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது ஆலயம்.

கோயில் அதிகாரி மாயக்கூத்த மடலூருவாரை அழைத்தான். "அத்திமலையான் சந்நிதியில் நான் ஏகாந்தமாக இருக்க விரும்புகிறேன். எனவே சந்நிதிக்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம். அர்ச்சகரையும் ஒதுங்கி நிற்கச் சொல்லுங்கள்!" — மன்னன் சிங்கமல்லன் கட்டளையிட, மாயக்கூத்தர் பணிவுடன் தலையசைத்து விட்டு அகன்றார்.

தண்டி மட்டுமே சிங்கமல்லனுடன் ஆலயத்தினுள் நுழைந்தான். மலையின் அடிவாரத்தில் மேற்கே நோக்கி அமர்ந்திருந்த சிங்கபிரானை தரிசித்துவிட்டு மலை யேறினான். தண்டி மலையடிவாரத்திலேயே நிற்க, சிங்க மல்லன் சந்நிதியின் முன்பாக அமர்ந்தான்.

அத்திமலைத்தேவன் நின்ற இடத்தில் அருள்பாலித்த வரதநாராயணப் பெருமாளைத் துதித்தான். கண்களை மூடி தியானத்தில் அமர்ந்தான்.

தனது மனக்குரலால் அத்திமலையானிடம் பேசத்துவங்கினான்.

"பல்லவத்தின் வித்து நீதான், அத்திமலைத்தேவா! உனது அருளால் பல்லவம் மாபெரும் சாம்ராஜ்யமாக உருவாகி உள்ளது. மாபெரும் மன்னர்கள் கூடப் பல சமயங்களில் மற்றவர்களுக்குப் பகடைக் காயாக மாறிச் சில அடாத செயல்களில் ஈடுபடுகிறார்கள். எனது முன்னோர்கள் என்ன தவறுகள் செய்தார்களோ தெரியாது! எதனால் நீ ஆலயத்திலிருந்து நீங்கி மறைந்து போனாய் என்கிற காரணமும் தெரியாது. தவறுகளைச் செய்திருந்தால் எங்களை மன்னித்து மீண்டும் உனது ஆலயத்திற்கே வந்து சேர்ந்துவிடு. நீ எங்கிருக்கிறாய் என்று எங்களுக்குப் புலப்படுத்து! நீ உருவாக்கிய பல்லவம் உன்னாலேயே அழியக்கூடாது!" கண்ணீர் மல்க வேண்டினான்.

தண்டி அத்திமலை ஏறி வந்தான். சந்நிதியில் கண்மூடி தியானத்தில் அமர்ந்திருந்த சிங்கமல்லனைக் கண்டான்.

கண்களில் நீர் வடிய, தன்னை மறந்து மோன நிலையில் இருந்த மன்னனின் தோளினில் கைவைத்தான்.

“சிங்கம் கலங்கலாமா? எழுந்து வேட்டைக்குப் புறப்படும் நேரமல்லவா? முக்கூடல் கடிகையில் உனது உரையைக் கேட்கப் பெருங்கூட்டம் காத்திருக்கிறதாம். புதிய மன்னன் என்ன கூறப் போகிறான் என்பதைக் கேட்க அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனராம். புறப்படு சிங்கமல்லா!” தண்டி கூற, சிங்கமல்லன் எழுவதற்குப் பிரயத்தனப்படாமல், சந்நிதியின் உள்ளே யோசனையுடன் வெறித்தான்.

“தண்டி! நான் கலங்கவில்லை. தியானத்தில் இருந்த எனது மனக்கண்ணில் ஒரு காட்சி தென்பட்டது. ஒரு பெரிய கலயம். அதில் பல்லவர்களின் சின்னமான நந்தியும், ஒரு யானையும் செதுக்கப்பட்டு உள்ளன. அந்தக் கலயத்தில் அக்னி கொழுந்துவிட்டு எரிகிறது. நான் அதனைக் காணும் போதே அக்னியில் இருந்து இறங்கி வரும் அத்திமலைத்தேவன் ஒரு பொய்கையில் இறங்கி மறைந்துவிடுகிறான். இந்தக் காட்சிக்குப் பொருள் விளங்க வில்லை என்றாலும், மனக்கண்ணில் அத்திமலையான் காட்சி தந்தது என்னுள் ஒருவிதப் பரவசத்தை உண்டு பண்ணியது. அந்தப் பரவசமே கண்களில் ஆனந்த நீராக வெளிவந்தது..!” — சிங்கமல்லன் கூற, அவன் எழுவதற்காகக் கை கொடுத்தான், தண்டி.

“அந்தக் காட்சியைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம். முக்கூடல் கடிகையில் மக்கள் உனக்காகக் காத்திருக் கிறார்கள்!” — தண்டி கூற, அவனது கையைப் பற்றிக் கொண்டு எழுந்தான், சிங்கமல்லன்.

தனது குடும்பத்தில் நிகழும் விபரீத மரணங்கள்..! குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போனது, மகேந்திரன் புலிகேசியிடம் தோல்வி அடைந்து பட்டயம் எழுதித் தந்தது போன்ற நிகழ்வுகளை எண்ணிக் கலங்கிய மனத்தினனாய் தியானம் செய்து கொண்டிருந்த

வேளையில் மனக்கண்ணில் தோன்றிய காட்சிக்குப் பொருளென்ன? சிந்தித்தபடியே இரதத்தினில் பயணித்துக் கொண்டிருந்தான்.

தண்டி கூறியது போன்று முக்கூடல் கடிகை மைதானத்தில் பெரும் கூட்டம் அவனுக்காகக் காத்திருந்தது.

இரதத்தில் இருந்து இறங்கியவன், அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏறி நின்று கூட்டத்தினரை நோக்கிக் கைகளைக் கூப்பினான்.

"சிங்கமல்ல பல்லவர் பல்லாண்டு வாழியவே!" — மக்களின் ஆர்ப்பரிப்பு அடங்கும்வரை காத்திருந்த சிங்கமல்லன் தனது உரையை துவக்கினான்.

"எனது உயிருக்கும் மேலான பல்லவப் பெருங்குடி மக்களே,

உங்களது நல்லாசியுடன் இன்று மன்னனாகப் பதவி ஏற்றுள்ளேன். சிங்காசனத்தை அலங்கரிக்கும் மன்னனாக நான் திகழப் போவதில்லை. ஆசனத்தில் அமரும் சிங்கமாக, சீரிய முறையில் ஆட்சி செய்யும் சிங்கமாகவும் இருப்பேன். சீற வேண்டிய சமயங்களில் சீறுவேன்.

"புதிய பல்லவம்! பொலியும் பல்லவம்! — என்பதே எனது தாரக மந்திரமாகத் திகழும். நமது பல்லவ நாட்டில் மூன்று தலைமுறையாக நிகழும் சில சம்பவங்கள் அனைவரது மனங்களிலும் வேதனைகளை ஏற்படுத்தி உள்ளன என்பதை நான் அறிவேன். புண்பட்ட மனங்களில் உள்ள ரணங்களை ஆற்றி, பிரச்னைகளைக் கண்டறிந்து, வினைகளை வேரோடு களைந்து அனைவரோடும் கைகோத்து, எனது தாரக மந்திரமான 'புதிய பல்லவம்! பொலியும் பல்லவம்' என்பதை நோக்கிப் பயணிப்பேன். இனி பல்லவம் எந்தப் போரிலும் தோற்காது. வெற்றி என்றால் பல்லவம் என்கிற நிலையை உருவாக்குவேன். இது உறுதி..! உங்களது

நல்லாசிகளுடன் எனது ஆட்சியைத் துவக்குகிறேன்!" — சிங்கமல்லன் தனது உரையை முடிக்க, அவன் நின்றிருந்த மேடைக்குப் பின்பாக அமைக்கப்பட்டிருந்த, வைக்கோலால் அடைக்கப்பட்ட வஸ்திர நந்தி சிலையின் கழுத்தில் 'விர்'ரென்று ஒரு அம்பு பாய்ந்து தைத்தது.

அதனை அலட்சியமாகத் தனது கையினால் பறித்து அந்த அம்பினில் பிணைக்கப்பட்டிருந்த வஸ்திரத்தில் வரையப்பட்டிருந்த சொற்களைக் கவனித்தான்.

"மாமல்லனுக்கு வந்தனங்கள்." — மாமல்ல எதி.

"எனது தந்தையின் தகனத்தின் போது எனது சிற்றப்பன் மல்ல எதி என்பவனைப் பற்றி எச்சரித்திருந்தார். அவனே எனக்கு வந்தனங்களைத் தெரிவித்து வாழ்த்து அனுப்பி உள்ளான். எனது தந்தைக்குச் சகோதரன் முறை என்றால் எனக்கு எதி சிற்றப்பன்..!" — கூட்டம் முடிந்ததும், ஒத்தாடைக்குத் திரும்பிச் செல்லுகையில், சிங்கமல்லன் தண்டியிடம் கூறிச் சிரித்தான்.

"மகுடம் சூட்டிய உனது தலைக்குச் சவால் விட்டிருக்கும் முதல் அம்பு!" — தண்டி கூறினான்." "முதல் உணவு, முதல் இரவு என்பது போன்று உன் மீது ஏவப்பட்ட முதல் அம்பையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் அல்லவா?" — தண்டி கேட்டான்.

"தண்டி! பல்லவ அரியணையைச் சுற்றி என்னதான் நடக்கின்றன? எல்லாமே மர்மங்களாக உள்ளனவே. என்னால் எனது தந்தைக்குக் கொடுத்திருக்கும் மூன்று வாக்குகளையும் நிறைவேற்ற முடியுமா? எங்கிருந்து தொடங்குவது என்று எனக்கு மலைப்பாக உள்ளது..?" — சிங்கமல்லன் கூற, அவனைத் தண்டி ஆறுதலுடன் நோக்கினான்.

"சிறு கல்லைக் கண்ணருகே வைத்துக் காண்பது போன்று, பிரச்னைகளை நீ உனது கண்ணருகே வைத்துக்

காண்பதால் அவை உனக்குப் பூதாகாரமாகத் தெரிகின்றன. உனது முன்னோர்களும் கூட, 'ஐயோ இப்படி நமது குடும்பத்திற்கு நடக்கின்றதே' என்று புலம்பினார்களே தவிர, ஏன் அப்படி நடந்தது என்று யோசிக்கவில்லை. நீ ஒருவன்தான் இன்று அத்திமலைத்தேவனின் முன்பாக அமர்ந்து அவனுடன் பேசியிருக்கிறாய். உனக்குப் பதிலாகத்தான் அவன் உனது மனக்கண்ணில் ஒரு காட்சியைத் தோற்றுவித்திருக்கிறான். அந்தக் காட்சி கூறும் பொருள் என்ன என்பதைப் பின்னர் அறிவோம்.

"உனது முன்னோர்களைப் பழிக்கிறேன் என்று நினைக்காதே. அன்று கடல்மல்லைக்குச் சென்றோமே, சிற்பப் பணிகள் எல்லாம் அப்படியே நிற்கின்றன. புலிகேசியுடன் நடந்த போரினால், உனது தந்தை அவற்றை அப்படியே நிறுத்திவிட்டார். விளைவு, திரிவிக்கிரம அவதாரத்தை விவரிக்கும் சிற்பம் மட்டும் பூர்த்தி அடைந்து நிற்கிறது. பிரச்னைகளை வளர வைத்து விஸ்வரூபம் எடுக்கும் வரை காத்திருந்து திரிவிக்கிரம அவதாரமாக வளர்ந்துவிட, பிறகு கையாள முயன்று இருக்கின்றனர். சிறு வாமனன் மகாபலியின் தலையில் காலை வைத்துப் பாதாளத்தினுள் அழுத்திவிட்டது போன்று, பிரச்னைகளைத் துவக்கத்திலேயே அழுத்தியிருக்க வேண்டாமா? எங்குத் துவங்குவது என்று குழம்புகிறாய், சிங்கமல்லா! பிரச்னைகள் அதிகமாக இருக்கும் போது இந்தக் குழப்பம் ஏற்படுவது இயற்கையே. கல்லைத் தொலைவில் வைத்துப் பார். சிறு துகளாகத் தெரியும். நீ உனது தந்தைக்குக் கொடுத்திருக்கும் வாக்கு எவை?"

"மல்லைச் சிற்பக் கோயில்கள் பணிகளைப் பூர்த்திச் செய்வேன்.

புலிகேசியின் தலையைக் கடல்மல்லை கடலினில் வீசி எறிவேன்.

அத்திமலையானின் பிரதிமையை ஆலயத்தில் வைப்பேன்!

என்கிற மூன்று வாக்குகளைத்தான் நான் நிறைவேற்ற வேண்டும்." — சிங்கமல்லன் கூறினான்.

"மூன்று பிரச்னைகளுமே தொடர்புடையவைதான், சிங்கமல்லா! முதல் வாக்கினை நிறைவேற்ற ஒரு உளி தேவை. இரண்டாவது வாக்கை நிறைவேற்றப் புலிகேசியின் தலை தேவை. மூன்றாவது வாக்கை நிறைவேற்ற ஒரு சிலை தேவை. சிலை எப்படிக் கிடைக்கும்? மரச் சுத்தியலைக் கொண்டு உளியின் தலையில் அடித்துச் செதுக்கினால் சிலை கிடைக்கும். சுத்தியலால் உளியின் தலையில்தானே அடிக்க வேண்டும். உளி, தலை, சிலை என்கிற மூன்று சொற்கள்தான் உன்னுடைய பிரச்னை. மூன்றே சொற்கள்தான்..! பிரச்னை எவ்வளவு எளிதாகிவிட்டது, பார்த்தாயா. உளியைக் கொண்டு உனது பணிகளைத் துவக்கு. உளியால் அடித்தால், தலை தானாகவே தேடி வரும். முடிவில் சிலையும் உருவாகும்!" — தண்டி கூற, அவனை வியப்புடன் நோக்கினான், சிங்கமல்லன்.

மறுநாள் —

கடல்மல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிற்பப் பணிகளை அன்றே துவங்க வேண்டும் என்று கட்டளையிட்டான், சிங்கமல்லன். மீண்டும் உளிகள் சரித்திரங்களைப் பேசத் துவங்க, வாதாபி குகைகளிலும், தனது குடைவரைக் கோயில்களில், தான் காஞ்சியில் பெற்ற வெற்றியைச் சேர்க்கையாகச் சில குகைகளில் வடித்துக் கொண்டிருந்தான்.

போரிலும் வென்று, குடைவரைக் கோயில்களையும் எழுப்பிவிட்டோம். ஆனால் அதைக் காண வேண்டிய அவந்திகா எங்கே சென்றாள் என்றே தெரியவில்லை. அவந்திகா தன் வசம் இல்லை என்று மகேந்திரன் கூறிய போது அதை நம்ப மறுத்திருந்தான். காவிரிக்

கரையின்வரை அவளைச் சல்லடை போட்டுத் தேடியும் அவந்திகா கிடைக்கவில்லை.

பிறகு கலிங்க மன்னனின் மகன் திருமணத்திற்குப் புலிகேசி சென்றிருந்த போது காம்போஜ அரசியாக அவந்திகா பதவி ஏற்ற விவரம் தெரிய வந்தது. அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான், புலிகேசி. இவனையும், மகேந்திரனையும் மோதவிட்டு, காம்போஜ மன்னனுடன் கம்பி நீட்டியிருக்கிறாள் அவந்திகா. கடல் கடந்து காம்போஜத்திற்குச் சென்று போரிடவா இவனால் முடியும்?

இரண்டு பூனைகள் ஒரு அப்பத்திற்காகச் சண்டையிடக் குரங்கு ஒன்று அதை அபகரிப்பது போன்று ஒரு சிற்பக்கதையை வடித்திருந்தான், ஒரு சிற்பி.

புலிகேசி — மகேந்திரன் கதையை ஒரு பூனை, குரங்கு கதையின் மூலம் சிற்பத்தில் வடித்திருந்த அந்தச் சிற்பியை மனதால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை..!

"தெய்வச் சிற்பங்களின் இடையே, இந்தச் சிற்பத்தை வைக்க வேண்டாம்!" என்று கூறிவிட்டு, ஏமாற்றத்துடன் அங்கிருந்து நகர்ந்திருந்தான்.

மகேந்திரன் உண்மையைத்தான் கூறியிருந்தான். இருப்பினும், இவன்தான் பாழாய்ப்போன அந்த அவந்திகாவின் பசப்பு வார்த்தைகளை நம்பி அவன் மீது போர் தொடுத்திருந்தான். அவனை அவமானம் செய்து அனுக்ரக பட்டயத்திலும் கையொப்பம் வாங்கியிருந் தான். இருப்பினும், தான் அவந்திகாவை இழந்ததற்கு மகேந்திர பல்லவன்தான் காரணம் என்கிற வெறி அவனுள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. மல்லையில் கேட்கப்படும் உளியின் ஒலியும் தனக்கு விடப்படும் சவாலாகவே நினைத்திருந்தான், புலிகேசி.

சிங்கமல்லனே காஞ்சியில் இருந்து அவ்வப்போது மல்லைக்குச் சென்று சிற்பப் பணிகளை மேற் பார்வை யிட்டு வந்தான்.

*அன்று துர்க்கை அஷ்டமி. தரும நகரத்து உக்கிர சரஸ்வதி ஆலயத்திற்குச் சென்று வழிபட்டான். ஆலயத்தைவிட்டு வெளியே வந்த போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர், சிங்கமல்லனை நெருங்கினார்.*

*"அரசே! அடியேனது பெயர் ஷங்கபாணி. வெகு காலமாக இந்த தரும நகரத்தில்தான் வசிக்கின்றேன். தங்களது கொள்ளுப்பாட்டனார் காலத்தில், இந்த ஆலயத்தைச் சுற்றி எழுமால் கோயில்கள் என்கிற ஏழு திருமால் கோயில்கள் இருந்தன. அவை அனைத்தையும் வெளியேற்றிவிட்டு, இங்கே சமணப் பசடிகளையும், தந்துபிறவாள மாளிகையையும் விஸ்தாரமாகக் கட்டினான், ரணதிலகன்." — கோயிலுக்கு அருகே நின்ற அந்த மாளிகையைச் சுட்டிக்காட்டினார், முதியவர்.*

*அந்த மாளிகையை வியப்புடன் நோக்கினான், சிங்கமல்லன்.*

*"பெரியவரே! பிரவாள மாளிகை பாழடைந்து காணப்படுகிறதே.. அதில் யாரும் வசிக்கவில்லையா?" — சிங்கமல்லன் கேட்டான்.*

*"அரசே! பல்லவ இளவரசி நவரத்ன பல்லவியை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டவன் ரணதிலகன். அந்தச் சதிக்கு உடந்தையாக இருந்தவள், பிரக்ஞுதாரா என்கிற சூனியக்காரி. உங்கள் பாட்டனார் அவனிசிம்மன் இந்த மாளிகையை முற்றுகையிட்ட போது ரணதிலகன் தப்பிச் சென்றான். இந்த மாளிகையில் வசித்த இளவரசி நவரத்னா தற்கொலை செய்து கொண்டதாலும், சூனியக்காரி பிரக்ஞுதாரா வசித்த மாளிகை என்பதாலும், யாரும் அங்கே போவதில்லை. இப்போது இப்பகுதி மக்களாகிய நாங்கள், பிரவாள மாளிகையைப் பேய்மாளிகை என்றே அழைக்கிறோம்!" — அந்தப் பெரியவர் கூறினார்.*

*சிங்கமல்லன் அந்த மாளிகையை உறுத்துப் பார்த்துக் கொண்டே இருக்க, அந்தப் பெரியவர் தொடர்ந்தார்.*

*"அரசே! எனது கோரிக்கை இதுதான். தருமநகரத்தின் கள்வரெம்பெருமான் இங்கேயே ஆதிசரஸ்வதி* கோயிலில் உறைகிறார். நிலாத்திங்கள் துண்டத்தார் தற்போது ஒத்தாடையார் ஆலயத்தில் உள்ளார். நீராயுருகுவார், கரியமாணிக்கத்தார், நீலமேகத்தார், பள்ளிகொண்டார் ஆகியோரும் பல்வேறு கோயில்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். உக்கிர சரஸ்வதியின் கோபத்தைத் தணிக்க, அவளைச் சுற்றி ஏழு எம்பெருமான்கள் இங்கிருப்பதாகப் புராணம் கூறுகிறது. இப்போது பெருமாள்கள் நீக்கப்பட்டதால், உக்கிர சரஸ்வதியின் கோபத்தைத் தாள முடியாது என்று கருதுகிறோம். எனவே மீண்டும் எழுமால் கோயில்களை எழுப்ப வேண்டும்." பெரியவர் கோரினார்.*

*"உங்கள் கோரிக்கையைப் பரிசீலிக்கிறேன்!" — சிங்கமல்லன் கூறினான்.*

*"மன்னா! பரிசீலனை என்கிற சொல் பிரயோகிக்கப் படும் போதே, அந்தப் பணி நடக்காது என்பது புலப்படுகிறது. அரசே! தாங்கள் அக்னி கலயப் பரம்பரை என்பதனை மறந்துவிடக் கூடாது. அந்த அக்னிகலயத்தில் அக்னி கொழுந்துவிட்டெரிவது போன்று பல்லவர்களின் வீர்யம் வழியும். அக்னிகலயத்தில் அனல் குறைந்தால் உங்கள் வீரியமும் குறையும். அனல் வளர்ந்தால் உங்கள் வீரியமும் வளரும். அஸ்வத்தாமா பரம்பரையில்*

---

* கள்வரெம்பெருமான் இப்போது காமாட்சி அம்மன் கோயிலில் உள்ளார்.

நிலாத்திங்கள் துண்டப் பெருமாள் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் உள்ளார்.

மற்ற பெருமாள்கள், உலகளந்த பெருமாள் கோயிலிலும், பள்ளிகொண்டான் என்கிற வேலூர் அருகே உள்ள ஆலயத்திலும் அத்தி என்கிற செய்யாறு அருகே உள்ள ஆலயத்திலும் உள்ளனர்.

வந்தவர்கள் நீங்கள். அவன் வளர்த்த அணையா அக்னி உங்கள் ஒத்தாடை அரண்மனையில் இன்னமும் ஒளிர்ந்து கொண்டிருப்பதைத் தாங்கள் மறந்துவிடக் கூடாது. வீர்யம் நிறைந்த பல்லவர்களால் முடியாத காரியமே இல்லை. எனவே, எழுமால் ஆலயங்களை நீர் விரைந்து மீண்டும் கட்டி முடிக்க வேண்டும்!" — ஷங்கபாணி வேண்டினார்.

"அரண்மனையில் அணையா அக்னி உள்ளதா? எங்கே?" — திகைப்புடன் ராஜகுரு திரிமூர்த்தி லோகிதரை நோக்கினான்.

"அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை, அரசே!" — லோகிதர் தனது தாடியை நீவிவிட்டுக் கொண்டே, ஷங்கபாணியை எரிச்சலுடன் நோக்கினார். இல்லாத விஷயங்களைப் பேசி மன்னரைக் குழப்பு கின்றாரே, அந்த முதியவர்..!

"நிச்சயம் உள்ளது அரசே! உங்கள் எள்ளுப் பாட்டனார் குமாரவிஷ்ணு இறக்கும் தறுவாயில் தனது மகன் சிம்மவர்மனை அழைத்து அந்த அணையா அக்னி கலயத்தில் சமித்துகளைப் போடச் செய்தார். அதற்கு முன்பாக அக்னிகலயத்தை ராஜவீதியில் ஊர்வலமாக எடுத்து வந்தார், சிம்மவர்மர். எனது பாட்டனின் தோளில் அமர்ந்து நான் சிறுபிள்ளையாக அந்த ஊர்வலத்தைப் பார்த்ததுகூட எனது நினைவில் உள்ளது." — ஷங்கபாணி கூறியவுடன் தனது ராஜகுருவைக் கேள்வியுடன் பார்த்தான், சிங்கமல்லன்.

"ஆவன செய்கிறேன்!" என்று மட்டும் ஷங்கபாணி. யிடம் கூறிவிட்டு, அரண்மனைக்கு விரைந்தான், சிங்கமல்லன்.

"பூஜை அறையில் நான் காலையில் பார்த்திருந்த நிலவறையைத் திறவுங்கள்!" — சிங்கமல்லன் உத்தரவிட, தலையைச் சொரிந்தார் அரண்மனை அதிகாரி.

"அரசே! திறவுகோலைக் காணவில்லை!" — அதிகாரி கூறினார்.

"கஜானாவின் திறவுகோல் காணாமல் போனால் என்ன செய்வோம்?" — சிங்கமல்லன் கேலியுடன் கேட்டான்.

"பூட்டை உடைப்போம்!" — மெல்லிய குரலில் கூறினார், அதிகாரி.

"உள்ளே கஜானா இருப்பதாக நினைத்து நிலவறைக் கதவை உடையுங்கள்!" — மன்னன் கூறினான்.

தண்டி பின்தொடர நிலவறைப் படிகளில் இறங்கினார். மொத்தம் பன்னிரண்டு படிகள். நிலவறை மையத்தில் ஒரு மேடை. அதன் மீது பெரிய கலயம். அஸ்வத்தாமா அக்னி வளர்த்துத் தனது மகன் பல்லவம் மாலையணிந்த புலி சோமாவுக்கு அளித்த அக்னிகலயம். சிம்மவர்மன் காலம் வரை அஸ்வத்தாமா மூட்டிய அக்னி கொழுந்துவிட்டு ஒளிர்ந்திருக்க வேண்டும்.

சிங்கமல்லனின் கவனம் கலயத்தில் செதுக்கப் பட்டிருந்த உருவங்களின் மீது சென்றது. திகைப்பினால் வாய் பிளந்தான். அத்திமலையான் சந்நிதியில் தியானத்தில் இருந்த போது இவனது மனக்கண்ணில் தோன்றிய அதே அக்னி கலயம். இம்மாதிரிக் கலயத்தில் ஒளிரும் அக்னியில் இருந்து இறங்கித்தான் அத்தி மலையான் ஒரு பொய்கையினுள் மறைந்து போகிறான்!

'அணையா அக்னி கலயத்தில் தீ வளர்ந்தால், பல்லவத்தின் வீரியம் வளரும். அனல் குறைந்தால், வீரியமும் குறையும்.'

தருமநகரத்து முதியவர் ஷங்கபாணி கூறியது நினைவுக்கு வர, கோபத்துடன் தலைமை அமைச்சர் அரங்கநாத ஆமாத்தியரை நோக்கினான்.

“எப்படி இது அணைந்தது..? ஏன் இதனை யாரும் கவனிக்கவில்லை?” — சிங்கமல்லன் ஆத்திரத்துடன் ராஜகுரு லோகிதரை நோக்கினான்.

“இந்த அணையா அக்னி கலயத்தைக் கவனிப்பதற்கு என்றே வாஞ்சிதரர் என்கிற ஒரு முதியவர் இருந்தார். அவருக்குத் தான் தெரியும் இது எப்படி அணைந்தது என்று. நாங்கள் பணியில் அமர்ந்த காலம் தொட்டே, இந்த நிலவறை பூட்டப்பட்டுதான் கிடக்கிறது!” — லோகிதர் கூறினார்.

“அஸ்வத்தாமா கொடுத்த அணையா அக்னி கலயம் என்று ஒன்று இருப்பது கூடவா ராஜகுருவுக்குத் தெரியாது? எங்கே அந்த வாஞ்சிதரர்?” என்று காட்டத்துடன் கூறியவன், ஒரு மூலையில் ஒடுங்கி அச்சத்துடன் நின்ற, அந்த அந்தண வாலிபனை நோக்கினான், சிங்கமல்லன்.

“எனது பாட்டனார்தான் வாஞ்சிதரர்! அவரால் நடக்க இயலாது!” — அவன் நடுங்கியபடி கூற, “அவரை அழைத்து வரச் சிவிகை அனுப்புங்கள்!” என்று கட்டளையிட்டான், சிங்கமல்லன்.

நடக்க முடியாமல் அவதிப்பட்ட வாஞ்சிதரரை சிவிகையில் அமர்த்தி அழைத்து வந்தார்கள். ஒரு இருக்கையில் அமர்த்தி நிலவறைக்குக் கொண்டு வந்தார்கள். அவர் வரும்வரை நிலவறையிலேயே நின்றான், சிங்கமல்லன்.

கலயத்தின் முன்பு இருக்கையை வைத்ததும், வாஞ்சிதரரின் இடுங்கிய கண்களில் வேதனை கண்ணீராகத் தளும்பியது.

“அஸ்வத்தாமா கொடுத்த அணையா அக்னி குண்டத்திற்கா இந்தக் கதி!” — அரற்றினார் வாஞ்சிதரர்.

“அவ்வளவு அக்கறை கொண்டிருப்பவர் ஏன் அதனை அணையவிட்டீர்?” — கடுப்புடன் கேட்டான், சிங்க மல்லன்.

"அரசே! நான் அணைக்கவில்லை! சதியால் அணைந்தது." — வாஞ்சிதரரின் கண்களில் நீர் வழிந்தது.

"சதியா?"

"ஆம்! சிம்மவர்மர் இறந்த அன்று நடந்த சதி. அரச குடும்பத்தினருக்கே இதுவரை தெரியாத சதி. மன்னர் சிம்மவர்மர் கொல்லப்பட்ட அன்று நடந்த சதி..!" — வாஞ்சிதரர் கூற, அனைவருமே அதிர்ந்தனர்.

"சிம்மவர்மன் கொல்லப்பட்டாரா?" — சிங்கமல்லன் திகைத்து நின்றான்.

"ஆம்!" — நடந்த நிகழ்வுகளை விவரிக்கத் துவங்கினார், வாஞ்சிதரர்.

"அஸ்வத்தாமா அளித்த அணையா அக்னி குண்டத்தைப் பராமரிப்பது எனது கடமை. அதற்காகவே நியமிக்கப்பட்டேன் நான். பூஜை அறை நிலவறையில் தங்கி, சமித்துகளை அவ்வப்போது கலயத்தில் போட்டுக் கொண்டே இருப்பேன். மன்னர் சிம்மவர்மர் படுத்த படுக்கையானதும் அன்றாடம் அவரது சயன அறைக்குச் சென்று அவரது கையால் சமித்துகளைத் தொட்டு வாங்க வேண்டும் என்பது அரசியார், ராஜகுந்தளா தேவியின் கட்டளை. அதன்படி நான் அன்றாடம் பூஜை அறையில் ஆராதனை முடிந்ததும், மன்னரின் அறைக்குச் சென்று சமித்துகளை மன்னரிடம் நீட்டி, அவரைத் தொட வைத்து, வாங்கிக் கொள்வேன். வழக்கமாக அன்று நான் சென்ற போது அரசியார் அறையில் இல்லை. நான் உள்ளே நுழைய முற்பட்ட போது, ஒரு மனிதன் தலையணையை மன்னரின் முகத்தில் வைத்து அழுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். நான் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றேன். மன்னனின் கதையை அவன் முடித்துவிட்டான் என்பதை அறிந்த, எனது கதையையும் அவன் முடித்துவிடக் கூடாதே என்று அவசர அவசரமாக அங்கிருந்து நழுவினேன்.

நிலவறைக்குச் சென்று 'ஓ'வென்று கதறி அழத் தொடங்கினேன். திடீரென்று நிலவறையினுள் உக்கிரத்துடன் யாரோ நுழைந்தார்கள். வந்த வேகத்தில் ஒரு குடத்து நீரை அணையா அக்னி குண்டத்தில் கொட்டி அணைத்தார்கள்.

"இது என்ன அக்கிரமம்?" என அலறியபடி வந்தவனை நோக்கினேன். மன்னரைக் கொலை செய்தவன்தான் நின்றிருந்தான்.

"அஸ்வத்தாமாவின் அக்னி அணைந்தது. பல்லவமும் அழிந்து கொண்டிருக்கிறது. அந்தணரே! கர்மாவைப் பற்றி வாய்கிழியப் பேசுபவர்தானே நீங்கள்.. சற்று முன்பாக அரசர் சிம்மவர்மர் கொலை செய்யப் பட்டதைப் பார்த்தீர்கள் அல்லவா? அந்தக் கொலையை யார் செய்தார்?" என்று, புன்னகையுடன் எதுவுமே நிகழாதது போன்று கேட்டான் அவன்.

"நீதான் செய்தாய்! நான்தான் உன்னை இரண்டு கண்களால் பார்த்தேனே. மன்னரின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்திக் கொண்டிருந்தாயே..!" என்றேன்.

"நான் அழுத்தவில்லை, அந்தணரே! கர்மா அழுத்தியது!" என்று கூறி, வெறித்தனமாகச் சிரித்தான் அவன்.

"கர்மா வலியது. நான் யார் என்பது உங்களுக்குத் தெரியும். கர்மா அழித்தது என்று கூறினால், உங்களுக்கு நன்மை கிடைக்கும். நான் அழுத்தியதாக வெளியே கூறினால், சமித்துகளைக் கொண்டு செல்வது போன்று, மன்னர் அறைக்குச் சென்று நீங்கள்தான் அவரைக் கொன்றுவிட்டதாகக் கூறுவேன். நான் மன்னரின் அறைக்குச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள்தான் அன்றாடம் மன்னர் படுத்திருக்கும் அறைக்குச் சொல்கிறீர்கள். எனது பதவி, செல்வாக்கு

இதையும் கருத்தில் கொள்ளுங்கள். யாரது வார்த்தை அரண்மனையில் எடுபடும்?" என்று கூறினான்.

நடுநடுங்கிப் போன நான், "மன்னித்துவிடுங்கள். கர்மா வலியதுதான். கர்மாதான் அந்தக் கொலையைச் செய்தது!" — வாஞ்சிதரர் கெஞ்சினார்.

"வாஞ்சிதரரே! பொதுவாக இம்மாதிரிக் கொலை களைக் கண்ட மனிதர்களுக்கு உடனே மோட்சப் பதவி சித்தித்துவிடும். இருப்பினும், நீங்கள் அந்தணராக இருப்பதால், இன்னும் சனாதனத்திற்குத் தொண்டாற்ற வேண்டி இருப்பதால் மட்டுமே உங்களை உயிரோடு விடுகிறேன். ஆகவே புத்திசாலித்தனத்தோடு நடந்து கொள்ளுங்கள்" என்றான் அந்தக் கொலையாளி.

பிறகு அரண்மனையில் உள்ள தனது செல்வாக்கை வைத்து எனக்குக் கட்டாய ஓய்வு கொடுத்துவிட்டு, வேறு ஒருவரை ஆராதனை செய்ய நியமித்தான். தாங்கள் வந்ததும் எனது பெயரனுக்கு அந்தப் பணியைக் கொடுத்தீர்கள். இந்த விவரத்தை மறைத்ததற்குத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்!" — வாஞ்சிதரர் கதறினார்.

"உண்மைகளை மறைத்துவிட்டீர்கள்! அறிந்து கொள்ள வேண்டிய எனது குடும்பத்தினர் யாரும் இப்போது உயிருடன் இல்லை. எனவே நீங்கள் குற்ற உணர்வுடன் அழத் தேவையில்லை. நான் கேட்கும் கேள்விக்கு மட்டும் எச்சரிக்கையுடன் யோசித்து விடை கூறுங்கள். கொலை காரன் யார்? அவன் பெயர் மல்ல எதிதானே?" — சிங்கமல்லன் கேட்டான்.

"கொலை செய்தவன் தற்போது உயிருடன் இல்லை, அரசே! மகேந்திரர் கடல்மல்லையில் தங்கி இருந்த போது, கூடாரங்கள் தீப்பற்றி எரிந்ததே. அதில் சிக்கி மாண்டு போனான்!" — வாஞ்சிதரர் கூறினார்.

திகைத்துப் போனான், சிங்கமல்லன். "அது எப்படிச் சாத்தியமாகும். நேற்றுதான் என் மீது முக்கூடல்

கடிகையில் அம்பை எய்திருக்கிறான். அவன் எப்படி இறந்து போயிருக்க முடியும்?" — மன்னன் கேட்டான்.

"அரசே! கொலைகாரன் மகேந்திர பல்லவருக்கு மிகவும் நெருங்கிய தசகுமாரர்களில் ஒருவன். நான் அவனை அடிக்கடி அரண்மனையில் பார்த்திருக்கிறேன்..!" — வாஞ்சிதரர் கூறியதும், அனைவரும் 'ஆ' என்று குரலெழுப்பினர்.

"உறுதியாகத்தான் சொல்கிறீர்களா?" — தலைமை அமைச்சர் ஆமாத்தியர் கேட்க, பயத்துடன் தலையசைத்தார் வாஞ்சிதரர். கொலைகாரன் இறந்துவிட்டான் என்கிற நிம்மதியில் அனைத்து உண்மைகளையும் போட்டு உடைத்திருந்தார். அவன் உயிருடன் இருப்பதாக மன்னர் கூறுகிறாரே. ஒருவேளை, அவன் உயிருடன் இருந்தால், இவரது கதி?

வாஞ்சிதரருக்கு நெஞ்சை அடைத்தது.

"உமது கையாலேயே மீண்டும், அஸ்வத்தாமா அளித்த இந்தக் கலயத்தில் அக்னியை மூட்டுங்கள். அக்னி கொழுந்துவிட்டெரியும் வரை பாட்டனும், பெயரனும் அரண்மனையைவிட்டு நீங்கக் கூடாது. பல்லவத்திற்கு மீண்டும் பழைய பொலிவை உண்டாக்கிவிட்டே நீங்கள் உங்கள் மனைக்குத் திரும்ப வேண்டும்!" — ஆவேசத்துடன் அவர்களுக்குக் கட்டளையிட்டவன், தலைமை அமைச்சரைப் பார்த்தான்.

"உடனடியாகக் காடவ அரசர், எனது சிற்றப்பன் பீமவர்மரை வரவழையுங்கள்!" என்றபடி, அந்தக் கலயத்தையே வெறித்துப் பார்த்தான்.

வாஞ்சிதரரும், அவரது பெயரனும், சமித்துகளைக் குவித்து, நெய்யை வார்த்து அக்னியை மூட்ட, அது கொழுந்துவிட்டெரிய மேலும் நெய்யை வார்த்தனர். அஸ்வத்தாமா அளித்திருந்த அணையா அக்னி குண்டம் மீண்டும் உயிர்பெற்றது. அது உயிர்பெற்ற அதே வேளையில் —

ஒரு சீனத் தேசத்துப் பயணி காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருந்தார். கனோஜ், மற்றும் வாதாபி நகரங்களில் சுற்றுப்பயணம் செய்து முடித்துவிட்டுக் கொசத்தலை ஆற்றைக் கடந்து ஜடாயு க்ஷேத்ரம் என்கிற திருப்புட்குழி வழியாகக் காஞ்சியை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார், அந்தப் புத்த பிக்கு. அவரது நீண்ட அங்கியினுள் ஒரு சுவடி படபடத்துக் கொண்டிருந்தது.

நினைவிருக்கிறதா? கோஷு மலையில் ஷோலின் விஹாரத்தில் சூலினி தந்திரத்தை உபாசித்து வர்மக் கலையைப் போதித்த போதி தர்மா என்கிற ஜெயவர்மன் தனது சீடன் ஹுயன் சாங் மூலம் பல்லவத்திற்கு அனுப்பியிருந்த செய்தி. ஜெயவர்மனின் அண்ணனின் பெயரன் நரசிம்ம பல்லவனைச் சந்திக்கத்தான், போதி தர்மாவின் சீடன் ஹுயன் சாங் சென்று கொண்டிருந் தான்.

சிம்மவர்மன் காலத்தில் காணாமல் போன ஜெயவர்மன் பல்லவத்துக்கு அனுப்பிய செய்தி, சிங்கமல்லனின் துயரத்தைத் தீர்க்குமா? காணாமல் போன அத்திமலையானைப் பற்றிய தகவல் ஏதாவது கிட்டுமா?

சிங்கமல்லன் சுவடியைப் படிக்கும் வரை காத்திருக்க வேண்டியதுதான்.

# 43. கண்டு கொண்டேன் கொலையாளியை!

“மூந்தையதினம் முதல் அரண்மனை பூஜை அறையில் அஸ்வத்தாமா வழங்கியிருந்த அணையா அக்னி குண்டம் மீண்டும் ஒளிர்விடுவதைப் பீமவர்ம னிடம் தெரிவித்தான், சிங்கமல்லன்.

“நல்ல காரியத்தைச் செய்தாய். இனி கதிரவனைக் கண்ட பனி போல நமது பிரச்னைகள் தீரும், பாரேன்!” என்றான் பீமவர்மன்.

“பீமவர்மரே! அணையா அக்னி குண்டத்தைப் பராமரிக்கும் வாஞ்சிதரரைப் பற்றி நீர் கேள்விப் பட்டிருக்கின்றீர் அல்லவா?”

“குடும்பப் பூஜைகளின் போது பார்த்திருக்கிறேன். அதிகப் பரிச்சயம் கிடையாது!” — பீமன் கூறினார்.

பாட்டனும், பெயரனும் பேசிக்கொள்வதைச் சபையினர் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

“வாஞ்சிதரர் ஒரு முக்கியத் தகவலைக் கூறினார். மன்னர் சிம்மவர்மன் கொலை செய்யப்பட்டதாகவும், தான் அதனைப் பார்த்ததாகவும் என்னிடம் கூறினார்..!”

‘ஆ..!’ — சபையோரிடையே சலசலப்பு தோன்றியது.

“இது குறித்து முன்பே சௌரப பண்டிதர் என்கிற சோழியர் ஒருத்தர் கூறியிருந்தார். இரு கைகள் மன்னரின் முகத்தைத் தலையணையால் அழுத்திக் கொலை செய்வது போன்று காட்சி தெரிவதாகக் கூறியிருந்தார்.”

— பீமவர்மன் கூற, அவரைத் திகைப்புடன் நோக்கினான், சிங்கமல்லன்.

"சரியாகச் சொன்னீர்கள். அங்ஙனம் மன்னர் சிம்மவர்மனை தலையணையால் அழுத்திக் கொலை செய்தது தசகுமாரர்களில் ஒருவன் என்றும் அவர் கூறினார்." — பீமரவர்மர் திடுக்கிட்டார்.

மீண்டும் அந்த அறையில் சலசலப்பு தோன்றியது.

"அதெப்படி சாத்தியம் தசகுமாரர்கள் அனைவருமே தீயில் கருகி இறந்துவிட்டதாக மகேந்திரன் என்னிடம் கூறியிருந்தானே. எனக்கு என்னவோ, நமது நண்பன் மல்ல எதி மீதுதான் சந்தேகம் உள்ளது. நினைவிருக் கிறதா! மகேந்திரனின் சிதைக்குத் தீ வைப்பதற்கு முன்பாக இரண்டுக்குப் பதிலாக மூன்று நெய்ப்பந்தங்கள் இருந்ததே..!"

அதுவரை அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த புதிய தளபதி பரஞ்சோதியார் எழுந்து நின்றார்.

"அரசே! கடல்மல்லையில் தகனம் நடைபெற்ற போது பாதுகாப்பு பணிகளை நான்தான் மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் குறிப்பிட்டது போல் சந்தேகப்படும்படியான யாரும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை. தங்கள் பெயரைக் குறிப்பிட்டு, கையொப்பம் இட்டவர்களை மட்டும்தான் சிறப்பு அமர்விடத்தில் அனுமதித்தோம். நீங்கள் குறிப்பிடும் 'மல்லன் எதி' என்கிற பெயரில் யாரும் ஓலையில் கையொப்பம் இடவில்லை." — பரஞ்சோதி கூறினார்.

சிறப்பு அமர்விடத்தில் அமர்ந்திருந்த அனைவருமே ஓலைகளில் கையொப்பங்களை இட்டவர்கள்தான். நான் இப்போதே ஓலைகளை இங்கே கொண்டு வருகிறேன். அனுமதி தாருங்கள்..!" — பரஞ்சோதி கூற, சிங்கமல்லன் தலையசைத்தான்.

ஓலைகளுடன் விரைந்து வந்தார் பரஞ்சோதி. தலைமை அமைச்சர் ஆமாத்தியார் ஓலைகளை வாங்கி ஆராய்ந்தவர், உதட்டைப் பிதுக்கினார்.

"இல்லை அரசே! மல்ல எதி என்கிற பெயரில் யாரும் கையொப்பம் இடவில்லை." — ஆமாத்தியார் கூறினார்.

"அப்படியென்றால், தசகுமாரர்களின் பெயர்களில் ஏதாவது ஓலையில் இருக்கிறதா என்று பாருங்கள்!" — தலைமை அமைச்சர் மீண்டும் ஆராய்ந்தார்.

"இல்லை! தசகுமாரர்களின் பெயர்கள் இந்த ஓலைகளில் காணப்படவில்லை..!" — தலைமை அமைச்சர் கூறினார்.

"இல்லை! நிச்சயம் அந்தச் சிறப்பிடத்தில் அமர்ந்திருந்த 200 பேரில் ஒருவன் சந்தேகத்திற்கு இடமளிக்கும் படியாகத்தான் இருந்தான். ஒருகணம் நான் அவனது முகத்தைப் பார்த்தேன்.. மிகவும் பரிச்சயமான முகம். அரண்மனையில் அடிக்கடி நான் பார்த்த முகம்தான். புரோகிதரின் உதவியாளச் சிறுவனிடம், 'நானும் பங்காளிதான்' என்று கூறி நெய்ப்பந்தம் தந்திருக்கிறான். அந்தச் சிறுவன் பெயரைக் கேட்ட போது, மாமல்ல எதி என்று கூறியுள்ளான். ஒருவேளை, ஓலையில் கையொப்பம் இடாமல் யாரும் அறியாமல் உள்ளே வந்து அமர்ந்தானோ?" — பீமவர்மன் கேட்டான்.

"அதற்கு வாய்ப்பே இல்லை, காடவ அரசே! சிறப்பு அமர்விடத்தைச் சுற்றிக் கடுங்காவல் போட்டிருந்தோம். நானே அந்த இடத்தில் நின்றிருந்தேன். இருநூறு இருக்கைகளும் நிறைந்த பிறகே நான் தகன மேடைக்கு வந்தேன்." — பரஞ்சோதியார் கூறினார்.

"இல்லை பரஞ்சோதியாரே! எனது கண்களால் நான் அவனைப் பார்த்தேன். அவனுடன் நெருக்கமாக நானும் சிங்கமல்லனும் பேசிக் கொண்டிருந்தோம்." — பீமவர்மரின் குரலில் உறுதி தொனித்தது. இருப்பினும் முதுமைக் காரணமாக நினைவில் சற்றே குழப்பம்.

சிங்கமல்லன் தனது சிறிய பாட்டனின் முகத்தையே பார்த்தான். கையை உயர்த்தி, 'இருங்கள். மேலே யாரும் எதுவும் பேசாதீர்கள். சிந்தையில் தீப்பொறியாக ஒரு தகவல் கிளம்பி உள்ளது. ஆனால் வெளிவராமல் சிந்தையிலே சுற்றுகிறது. அந்தத் தீப்பொறியைப் பெரிதாக்கிக் கொழுந்துவிட்டெரிய முயற்சி செய்கிறேன்' என்பது போன்று ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

திடீரென்று, பீமவர்மன் எழுந்து பரஞ்சோதியைப் பார்த்தான்.

"பரஞ்சோதியாரே! அந்த ஓலைகளில் உள்ள பெயர்களையும் அவர்களது இருப்பிடங்களையும் ஒருமுறை வாசியுங்கள். ஏதாவது புலப்படுகிறதா என்று பார்க்கிறேன்!" — பீமவர்மன் கூறினான்.

பரஞ்சோதியார் ஒவ்வொரு ஓலையாகப் படித்து வந்தார். வரிசைப்படி அவர் படித்ததால் முதல் வரிசை பெயர்களை ஒவ்வென்றாகப் படிக்கும் போதே, பீமவர்மனின் கண்கள் பரபரப்புடன் மின்னின.

பரஞ்சோதி பட்டியலை தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

ஜெகதாயினி — (அரண்மனை ஆஸ்தான வீணைக் கலைஞர்) முக்கூடல் கடிகை,

காஞ்சனமாலை — (நாட்டியக் கலைஞர்) முக்கூடல் கடிகை,

புஷ்பவர்மர் — (மன்னர் சிம்மவர்மனின் சிற்றப்பா மகன்) தருமநகரம்,

குணபரர் — (மன்னர் மகேந்திர பல்லவரின் நண்பர்) கஜபிருஷ்டம்..

என்று பரஞ்சோதியார் படித்ததும்தான் தாமதம். தனது முதுமையையும் மறந்து துள்ளிக் குதித்தார், பீமவர்மர். கஜபிருஷ்டம் என்றதும், தன்னையும் அறியாமல்,

மகேந்திரனும், தானும் முன்னாள் தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரின் மாளிகைக்குச் சென்றது நினைவில் எழுந்தது.

“யானையின் பின்பாகம்.. முதலாம் வியூகம்.. நடுவே குளத்தில் நீந்தும் தங்க மீன்..! கண்டு பிடித்தேன் அந்த மல்ல எதி யார் என்று?” பீமவர்மன் அலறினார்.

“யார் அந்த மல்ல எதி?” — சிங்கமல்லனும் பரபரப் புடன் எழுந்தான்.

அங்குக் கூடியிருந்த அனைவருமே பீமவர்மனையே உன்னிப்பாகக் கவனித்தனர். அனைவரையும் ஒருமுறை நோக்கிய பீமவர்மன் ஒரு வெற்றிப்பா ஒன்றைப் பாடினான்.

**“பகாப்பிருகுலலிதாங்குரன்**
**சத்துரு மல்லன்**
**சிக மல்லன்**
**எதி குணபரன்**
**அவன்தன் காயம் கிழிபட**
**மயேந்திர போத்தரசர் கந்தசேனன்**
**வெல்வித்தது மல்ல தேவகுலம் – ”**

என்று வெற்றிப்பாவை பாடி முடித்தவன் சிங்கமல்லனை நோக்கினான். அவன் ஒன்றும் புரியாமல் தனது சிறிய பாட்டனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“நமது மகேந்திர மல்லன் ஒருமுறை குணபரன் என்கிற மல்லனை வீழ்த்தினான் அல்லவா..? அப்போது புஷ்போத்பவன் என்கிற தசகுமாரன் மகேந்திரனைப் பாராட்டிப் பாடிய வெற்றிப் பா இது. குணபரனை வென்றதற்காக மகேந்திரனும், அவனது நண்பர்களும் அளவுக்கு அதிகமாக மதுவை அருந்திப் போதையில் கிடந்தனர். அப்போது அவனது நண்பர்கள் அங்கே வந்த ஒரு பெண்ணிடம் முறை தவறி நடந்து கொண்டனர். போதை தெளிந்து எழுந்த மகேந்திரன் நடந்ததை அறிந்து வருந்தி நண்பர்களைக் கடிந்து கொண்டான். இருப்பினும்

அவர்கள் தங்களைக் காப்பாற்றும்படி கெஞ்ச, அந்தப் பெண்ணைக் கொன்று முக்கூடலில் தூக்கி எறிந்து விட்டார்கள். அவளது அண்ணன்தான் இந்த மல்ல எதி.. ஒரு நாள் மல்லையில் நாங்கள் தனித்து இருந்த போது, மகேந்திரன் என்னிடம் அனைத்தையும் கூறிவிட்டான். மல்ல எதி ஒவ்வொரு தசகுமாரனாகக் கொன்றுவிட்டு, தன்னிடம் வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தான். காவல் படையைவிட்டு எவ்வளவு தேடியும் அவன் கிடைக்கவில்லை. எப்படிக் கிடைப்பான், அவன் தசகுமாரனாக மகேந்திரனின் கூடவே இருக்கும் போது..?

"குணபரனை எதிர்த்து வென்ற மகேந்திரனை ஒரு நாள் குணபரன் தேடி வந்து தசகுமாரர்களில் ஒருவனாகச் சேர்ந்தான். குணபரனுக்குப் பிரமதி என்று பெயரிட்டுத் தசகுமாரர்களில் ஒருவனாகச் சேர்த்தான், மகேந்திரன். இந்தக் குணபரன்தான், எனது மூத்த சகோதரன் அவனிசிம்மனுக்கும், வித்யுதா என்கிற நடனப் பெண்ணுக்கும் பிறந்த மகன். வித்யுதா அவனிசிம்மனின் ஆட்களால் கொல்லப்பட, குணபரன் தப்பிச்சென்று திரையன் ஏரியில் ஒரு உழவரின் வீட்டில் தலைமறைவாக வளர்ந்தான். அந்த உழவரின் மகள்தான், குணபரனுக்கும், மகேந்திரனுக்கும் நடைபெற்ற மல்யுத்தத்தைக் காணக் களரிக்கு வந்திருந்தாள். தசகுமாரர்கள் அவளை நாசமாக்க, அவர்களைக் கொல்லவே அவன் தசகுமாரனாக அவர்களுடனே சேர்ந்தான். ஒவ்வொருவரையாகக் கொன்று வந்தவன், திருக்கடல்மல்லைக் கூடாரத்தில் தங்கிய போது அனைவரையும் கொன்று, கூடாரத்தை எரித்துவிட்டு, தப்பிவிட்டான். குணபரன்தான் பிரமதி. பிரமதிதான் மல்ல எதி! இப்போது புரிந்ததா? நானும், மகேந்திரனும், பிரமதியோடு மச்சவாசுதேவர் மாளிகைக்குச் சென்ற போது அவர் பிரமதியை பார்த்ததும் திடுக்கிட்டுப் போனார். காரணம் குளத்தின் எதிர்கரையில் மல்ல

*எதியாக வசித்தவன் பிரமதிதான். அதனால்தான் அவனைக் கண்டதும் நிலைகுலைந்து போனார். சௌரப பண்டிதர் சிம்மவிஷ்ணுவுக்கு இன்னொரு மகன் இருக்க வேண்டுமே என்று மிகச் சரியாகச் சொன்னார். இப்போது எல்லாக் குழப்பங்களும் தீர்ந்தது..! பரஞ்சோதியாரே! பிரமதியை எங்கே பார்த்தாலும் கைது செய்யுங்கள்..”* — பீமவர்மன் கூறிய அதே நேரம், *காஞ்சியினுள் தனது கால்களைப் பதித்தான், ஜெயவர்மன் என்கிற போதி தர்மனின் சீடன், ஹுயென் சாங்.*

# 44. ஜெகமே ஜெயன்

அஸ்வத்தாமா அளித்திருந்த அணையா அக்னி குண்டம் நல்லவேளையில்தான் ஒளிரத்துவங்கி இருந்தது. காஞ்சியைவிட்டு மர்மமான முறையில் நீங்கி இருந்த ஜெயவர்மன், ஜெகத்தையே தனது ஷோலின் விஹாரத்தில் இருந்தபடியே ஆட்டி வைத்துக் கொண்டிருக்க, தான் பிறந்த மண்ணில் நிலவிக் கொண்டிருக்கும் குழப்பங்களுக்கு விடிவினை ஏற்படுத்தும் முடிவில், தனது நெருங்கிய சீடன் ஹூயன் சாங்* மூலம் செய்தி அனுப்பியிருந்தான்.

ஹூயன் சாங் ஒத்தாடை அரண்மனை வாயிலில் வந்து நின்ற போது அத்திமலைத்தேவனைக் காடவ அரசர் பீமவர்மன், ராஜகுரு திரிவேதி லோகிதர், தலைமை அமைச்சர் ஆமாத்தியார், பல்லவத் தளபதி பரஞ்சோதியார், அத்திமலை ஆலய அதிகாரி மாயகூத்த மடலூருவார், தண்டி, அமைச்சர்கள், காவலதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

---

* கி.பி. 630-ல் நரசிம்மவர்மன் பதவிக்கு வந்தான். அப்போது ஹூயன் சாங் கனோஜ் நகரில் தங்கியிருந்தான். அங்கிருந்து வாதாபி, கங்கம், சிரவணபெலகோலாவில் வெகுகாலம் தங்கியிருந்தான். அவனது பயணக் குறிப்பில் மகேந்திரன்-புலிகேசி இடையே நடந்த போரைப் பற்றிக் குறிப்பு உள்ளது. ஆனால் நரசிம்மவர்மன் புலிகேசியை மணிமங்கலத்தில் வீழ்த்தி, விரட்டிச் சென்று வாதாபியை கைப்பற்றியதைக் குறிப்பிடவில்லை. நரசிம்மவர்மன் சார்பில் பரஞ்சோதி என்கிற சிறுத்தொண்டர் வாதாபிக்குச் சென்று புலிகேசியைக் கொன்றது கி.பி. 642ஆம் ஆண்டு என்பதால் ஹூயன் சாங் காஞ்சிக்கு வந்து நரசிம்மவர்ம பல்லவனைச் சந்தித்தது கி.பி. 638-40க்கு இடைப்பட்ட காலமாக இருக்கலாம்.

*வாயிற்காவலன் ஒருவன் தயக்கத்துடன் உள்ளே வந்து மன்னனை வணங்கினான். அவனை எரிச்சலுடன் நோக்கினான், சிங்கமல்லன்.*

*"என்ன வேண்டும் உனக்கு?" — காவலனை உறுத்துப் பார்த்தான்.*

*"சீனத் தேசத்தில் இருந்து உலக யாத்திரை மேற்கொள்ளும் புத்த பிக்கு ஹுஃயன் சாங் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்." — காவலன் கூறியதும், சிங்கமல்லனின் புருவங்கள் உயர்ந்தன.*

*"சீனப் பயணியா? மரியாதை நிமித்த சந்திப்புதான் போலும். பாலி மொழி தெரிந்த நீ அவரிடம் பேசி அனுப்பிவிடு. மன்னர் முக்கியமான ஆலோசனையில் இருப்பதாகக் கூறிவிடு!" — சிங்கமல்லன் கூற, தண்டி எழுந்தான்.*

*"மன்னிக்க வேண்டும் அரசே! 'அரசர் என்னைச் சந்திக்கத் தயங்கினால், அவரது சிறிய பாட்டனார் ஜெயவர்மனிடம் இருந்து முக்கியச் செய்தி ஒன்றை நான் கொண்டு வந்திருப்பதாகக் கூறு. அவர் நிச்சயம் என்னைச் சந்திப்பார்' என்று அந்தப் புத்த பிக்கு கூறினார்.."*

*காவலன் இப்படிக் கூறியதும், 'ஆ..ஆ..!' என்கிற ஓலம் ஒருசேர அந்த ஆலோசனை அறையில் எழுந்தது. தனது செவிகளையே நம்ப முடியாதவன் போல் அந்தக் காவலனை வெறித்த சிங்கமல்லன், தலையைக் கூட அசைக்கத் தோன்றாமல் உறைந்து போய் அமர்ந்திருக்க, "ஜெயவர்மா.." என்று பெரும் ஓலம் எழுந்தது. பீமவர்மன் தான் கண்ணீர்விட்டுக் கதறிக் கொண்டிருந்தான். "இன்னமும் உயிருடன்தான் இருக்கிறாயா? எங்கிருக்கிறாய்?"*

*பீமவர்மன் முதுமை தாங்காமல் குரல்விட்டுக் கதறக்கூட வலுவின்றிச் சால்வையினால் தனது வாயை*

அடைத்துக் கொண்டு அழுதான். அவனுக்கு ஆறுதல் சொல்லக்கூடத் தோன்றவில்லை, சிங்கமல்லனுக்கு. தண்டிதான் பீமவர்மரை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டு காவலனை நோக்கித் தலையசைத்தான்.

"நீ அவரை உள்ளே அனுப்பு!" — என்றவன் மன்னரின் மிக அருகில் ஒரு இருக்கையைப் போடச் செய்தான்.

அனைவரது கண்களும் அந்த அறையின் நுழைவாயிலையே பார்த்தன.

கதவு திறந்தது. சாந்தமான முகம். உச்சந்தலையில் உறுதியாக நின்ற கொண்டை. அதில் சொருகப்பட்டிருந்த வெள்ளி ஊசி. காதிரெண்டிலும் ஒரு எலுமிச்சை பழத்தை நுழைக்கும் அளவிற்குத் துளைகள். புருவமே இல்லையோ என்பது போன்று கண்களின் மீது தொங்கிய சதைகள். பிதுக்கிய திராட்சைக் கனிகளைப் போன்ற கண்கள், மெல்லிய உதடுகள், கழுத்தே இல்லாத வெண்கலக் குண்டானைப் போன்று உருண்டையான தேகம். குட்டையான கால்கள், தத்தித் தத்தி நடந்து, மிதந்து வருவது போன்ற நடை — என்று விநோதமாக, ஆனால் சிநேகிதமான புன்சிரிப்புடன் வந்து அமர்ந்தார்.

"நமோ நமஹா!" என்று தூய சமஸ்கிருதத்தில் துவங்கியவர் மன்னனைக் கூர்ந்து கவனித்தார்.

"நான் பாலி மொழியில் பேச உள்ளேன். மொழி பெயர்ப்பாளர் யாராவது உள்ளனரா?" என்று கேட்டார்.

"எனது அவைப் புலவர் தண்டி உங்களது உரையைத் தமிழில் மொழி பெயர்ப்பார்." — சிங்கமல்லன் கூறியதும், தண்டி ஹூயன் சாங் அருகே சென்று நின்றான். அவனை ஒருகணம் ஏறிட்டுப் பார்த்தவர், முகம் சுருங்கும்படியாகப் புன்னகைத்தவர், பேசத்துவங்கினார்.

"பாண்டவ குமாரர்களின் சக்திவாய்ந்த குரு துரோணாச்சாரியாரின் மகன் அஸ்வத்தாமா வழிவந்த

நரசிங்கப் பல்லவருக்கு இந்தப் புத்த பிக்குவின் வந்தனங்கள். ஷோலின் விஹாரத் தலைவரும், பௌத்தத் தர்மத்தின் நம்பிக்கை தாரகையும், பூர்வாஷ்ரமத்தில் பல்லவ மன்னர் சிம்மவர்மரின் மூன்றாவது புத்திரரும் எனது ஆத்மார்த்த குருவும், பல்லவ இளவரசருமான ஜெயவர்மரின் ஆசிகளைக் கொண்டு வந்திருக்கிறேன்..!" என்று ஹுயன் சாங் கூறியதும், மன்னன் சிங்கமல்லன் தனது அரியணையில் இருந்து எழுந்து நின்றான்.

மன்னன் எழுந்து நின்றதும், அனைவருமே எழுந்து கைகூப்பி நின்றனர். கண்கள் பனிக்க, பரவசத்துடன் இறங்கி வந்தவன், அவரது கையைப் பற்றி அழைத்துச் சென்று இருக்கையில் அமரச் செய்தான்.

பீமவர்மன் கண்ணீருடன் எழுந்து நின்றான். "துறவியே! வறண்ட பயிர்களுக்கு மழையாக வந்திருக்கிறீர்கள். ஒரு தலைமுறைக்கு முன்பாகவே தாங்கள் பயணத்தைத் துவக்கி இருந்தால் எத்தனை உயிர்களைத் தாங்கள் காப்பாற்றி இருக்கலாம்..? எனது சிறிய பாட்டனாரை நினைத்துதான் பல்லவமே மறுகிக் கொண்டிருந்தது. எனது தந்தை, அவரது தந்தை அனைவருமே ஜெயவர்மரிடம் இருந்து செய்தி வரும் என்று காத்திருந்தனர்..! எங்கே இருக்கிறான், எனது அண்ணன்?" பீமவர்மன் கதற, அவரை புன்னகையுடன் நோக்கினார், ஹுயன் சாங்.

"இந்தக் கதறலுக்கும், பாசப் பொழிவுக்கும் அஞ்சித்தான், பனிபடர்ந்த மலையின் மேலே, முற்றும் துறந்த சிலையாய் மோன நிலையில் அமர்ந்திருந்தார். இப்போது உங்கள் ஜெயவர்மன் உலகத்தின் மிக முக்கியப் பௌத்த குரு. ஷோலின் விஹாரத்தினை உருவாக்கி, வர்மக்கலைகளைப் போதிக்கும் சித்தர் அவர். எங்கள் தருமத்திற்கு மிகப்பெரிய தலைவரை பெற்றுத் தந்த பல்லவ நாட்டிற்கு நாங்கள் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறோம்.."

ஹு-யன் சாங்கின் குரல் நாசியின் மூலமாகக் கணீரென்று ஒலித்தது.

"மனிதப் பிறவிகளில் ரத்தினம் அவர். எனது குரு என்பதற்காகச் சொல்லவில்லை. சிறுவனாக இருக்கும் போதே நான் இறந்திருக்க வேண்டும். என்னைக் காப்பாற்றி, தருமத்தைப் போதித்து, கலைகளைக் கற்றுத் தந்து, என்னை உலகப் பயணம் மேற்கொள்ளச் செய்திருக்கிறார், போதி தர்மர். அவரைப் போன்ற ஞானியை இழந்தது பல்லவத்தின் நஷ்டம் — எங்களது பாக்கியம். ஜகத்தையே ஆளும் தருமர் அவர்!" — ஹு-யன் சாங் கூறினான்.

"உண்மை! சகோதரர்களாகிய நாங்களே அவனைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். அவனை இழந்தது பல்லவத்தின் நஷ்டம்தான். அவன் மட்டும் துறவியாகப் புறப்பட்டுச் செல்லாமல் இருந்தால், பல்லவம் வீறு கொண்டு எழுந்திருக்கும்.." — பீமவர்மன் சோகத்துடன் கூறினான்.

"துறவியே! ஜெயவர்மன் எப்படி இருக்கிறார்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? உங்களுடன் அவரை அழைத்து வந்திருக்கலாமே..?" சிங்கமல்லன் கேட்டான்.

"இல்லை! பழைய நினைவுகளை அறவே ஒதுக்கி விட்டார். மனிதப் பிறவி என்கிற நிலையைக் கடந்து தெய்வப்பிறவி என்கிற நிலையை நோக்கி நகர்ந்து சென்று விட்டார். தன்னை நினைத்துப் பல்லவம் இனியும் வருந்தக் கூடாது என்கிற செய்தியைச் சொல்லி அனுப்பியுள்ளார். தன்னைப் பற்றிக் காஞ்சியில் வதந்திகளும், தவறான தகவல்களும் நிலவி வருவதை உணர்ந்திருந்தார் எனது குரு. 'நீங்கள் என்னுடன் வந்து அந்தத் தவறான கருத்துகளை நீக்குங்கள்..' என்று நான் அவரை அழைத்தேன். ஆனால் அதற்கு அவசியமில்லை என்று கூறிவிட்டார். அதற்கு அவர் கூறிய காரணம்

'நான் இனி எனது பல்லவத்தையோ, எனது மனிதர்களையோ காணப்போவதில்லை என்கிற போது, அவர்கள் என்னைத் தவறாக நினைத்தாலோ, மதிப்புடன் நினைத்தாலோ அதனால் நான் பாதிக்கப்படப் போவதில்லை. எனவே, நான் காஞ்சிக்கு வந்து எவ்வித விளக்கங்களையும் தரத்தேவையில்லை. ஆனால்! எனக்கு முக்கியப் பணி ஒன்று உள்ளது. அதை என் சார்பாக, எனது சீடனான நீயே அதனைச் செய்து முடி..' என்றார். அவரது கட்டளையை ஏற்றுத்தான், நான் உலகப் பயணம் கிளம்பி இதோ, காஞ்சிக்கு வந்திருக்கிறேன். எனது உலக யாத்திரையின் இலக்கே காஞ்சிதான்!" — புன்னகையுடன் ஹ்யுவான் சாங் கூற, அனைவரும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

திடீரென்று தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்றார், ஹ்யுவான் சாங். பல்லவ மன்னரை நான் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும் என்பது எனது குரு போதி தர்மரின் கட்டளை. மன்னரே! வருகிறீர்களா?" — ஹ்யுவான் சாங் கேட்டதும் சிங்கமல்லன் திகைத்தான்.

பாலி மொழியில் பேசும் இவரிடம் தமிழில் எப்படி அளவளாவுவது? தயக்கத்துடன் ஹ்யுவான் சாங்கைப் பார்த்தான்.

"எனது புலவர் தண்டி உடன் வரலாமா?" — சிங்கமல்லன் கேட்டான்.

"கூடாது! தாங்கள் மட்டும்தான்!" என்று பாலி மொழியில் கூற, வேறுவழியின்றி அவரை அழைத்துக் கொண்டு அருகில் இருந்த அறையினுள் நுழைந்து கதவைத் தாளிட்டான்.

உள்ளே நுழைந்ததும்தான் தாமதம்..!

பாய்ந்து வந்து சிங்கமல்லனின் கையைப் பற்றிக் கொண்டார் ஹ்யுவான் சாங்.

"கவலைப்படாதீர்கள், பல்லவ அரசரே! நான் தமிழ் அறிந்தவன். முப்பாலையும் கற்றவன். எனது குரு போதி தர்மா என்னும் போது தமிழை நான் அறியாமல் இருப்பேனா? நான் தமிழ் அறிந்தவன் என்பதைப் பிறர் அறிய வேண்டாம் என்பதற்காகவே மொழி பெயர்ப்பாளரைக் கேட்டேன்.." — ஹுயன் சாங் சொன்னதும் வியப்பின் உச்சத்தில் நின்றான், சிங்கமல்லன்.

"காஞ்சியின் பொக்கிஷம் ஒன்று காணாமல் போனதா? நீங்கள் அதனைத் தேடிக் கொண்டு இருக்கிறீர்கள் அல்லவா?" — ஹுயன் சாங் கேட்டார்.

"இன்று நேற்றல்ல, துறவியே. எனது பாட்டனார் காலத்தில் இருந்தே தேடிக் கொண்டுதான் இருக்கிறோம். எனது தந்தையார் அந்தப் பொக்கிஷத்தை நினைத்தே கவலையில் உயிரைவிட்டார்." — வேதனையுடன் கூறினான், சிங்கமல்லன்.

"வேதனைப்படாதீர்கள். அந்தச் சிலை பத்திரமாக உள்ளது. காஞ்சியைவிட்டு அந்தப் பொக்கிஷம் நீங்கவேயில்லை. அந்தச் சிலையைத் தனது கணவனிடம் இருந்து காப்பாற்ற, இளவரசி நவரத்ன பல்லவியும் அவளது சீதன வெள்ளாட்டிகளும் சேர்ந்து ஆலயத்தில் இருந்த தேவ உடும்பர சிலையை எடுத்து ஒளித்தனராம். அவ்வளவே!" — ஹுயன் சாங் கூறியதும், சிங்க மல்லனின் கண்களில் இருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தது.

முந்தைய தினம்தான் அஸ்வத்தாமாவின் அணையா அக்னி குண்டத்தில் அக்னியைக் கொழுந்துவிட்டு எரியச் செய்திருந்தான். இன்று அத்திமலைத்தேவன் இருக்கு மிடம் குறித்து ஜெயவர்மன் செய்தி அனுப்புகிறான். அத்திமலைத்தேவா! உனது கருணையே அலாதி!

"துறவியே! எனக்கு ஆனந்தம் தாங்கவில்லை. இப்படி என்னருகே அமர்ந்து எனது சிறிய பாட்டன்

*ஜெயவர்மன் கூறியதை எல்லாம் தெரிவியுங்கள். அவர் காணாமல் போனது ஏன்? துறவியாகப் போனது ஏன்? ஏன் எங்களுடனான தொடர்புகளை அறுத்துக் கொண்டார்?"*

*"அனைத்தையும் சொல்கிறேன்!" என்றவர் தனது மடியில் கட்டியிருந்த இடுங்கிய குடுவையில் சிறிது நீரைப் பருகினார். பிறகு வாயைத் துடைத்தபடி சிங்கமல்லனை நோக்கினார்.*

*"பௌத்த மதம் அமைதியான மார்க்கம். உங்கள் சனாதன மதமும் அமைதியை விரும்பும் மார்க்கம்தான். ஆனால் நீங்கள் மும்மூர்த்தித் தத்துவத்தையும், அம்பிகை வழிபாடுகளையும் மட்டும் பற்றிக் கொண்டீர்கள். படைப்பதும், காப்பதும், அழிப்பதும், மும்மூர்த்திகள் என்று அவர்களை மட்டுமே தொழுதீர்கள். ஆனால் இவர்கள் அனைவருமே பிரபஞ்சத்தை மட்டுமே படைத்து, காத்து, அழிப்பவர்கள். மன்னர்களுக்குக் கிராமத் தலைவர்கள் என்கிற பரிவார அதிகாரிகள் இருப்பது போன்று தெய்வங்களுக்கும் பரிவாரத் தேவதைகள் உள்ளன. கிராமத்தில் கிணற்றை வெட்டு வதற்கு மன்னனைவிடக் கிராமத் தலைவனுக்குத்தான் அதிகாரம் அதிகம். அப்படி இருக்க, நீங்கள் சிறிய தெய்வங்களைக் கைவிட்டுவிட்டு, இந்தப் பெரிய தெய்வங்களைப் பற்றிக் கொண்டீர்கள். எனவே எங்கள் பௌத்த மார்க்கத்தில் சிலர், தியானத்திற்குப் புத்தரைக் குருவாக வைத்துக் கொண்டு, தீய காரியங்களுக்கு, உங்கள் மார்க்கத்தின் சின்னஞ்சிறு தெய்வங்களை உபயோகித்துக் கொண்டார்கள். அவ்வகையில் மிகவும் பலம் வாய்ந்த சூலினி தந்திரம் என்கிற காளி தந்திரத்தைக் கொண்டு பிரக்ஞதாரா என்னும் பெயர் கொண்ட ஒரு சித்தினி உருவானாள். அவள் மிகவும் தீய சிந்தனை உள்ளவள். களப்பிரர்களை வசியம் செய்து அவர்களை விட்டுக் கொள்ளை அடிப்பாள். உங்கள் மன்னன் சிம்மவர்மனை வசியம் செய்து சோழம் செல்ல*

அனுமதி வாங்கினாள். சந்திர வம்சத்தைச் சேர்ந்த களப்பிரர்கள் தங்கும் பகுதிகள் எல்லாமே சந்திரகிரி எனப்படும். உங்கள் நவரத்ன பல்லவியை மயக்கி அவளது மனதைக் கொள்ளை அடித்தனர். சோழம், பல்லவம், சேரம் என்று தெற்கில் கொள்ளைகளைப் புரிந்தனர்.

அவர்கள் அத்திமலைத் தேவ உடும்பரத்தையும், விலைமதிப்பில்லா ஸ்ரீதளமணியையும் களவாடக் கூடும் என்பதனால் பிரக்ஞுதாராவை எதிர்க்கத் துவங்கினார், ஜெயவர்மர்.. அவள் ஆபத்தானவள் என்பதை உணர்ந்து தனது குடும்பத்தைக் காப்பாற்ற வலியப் போய் தானே அவளிடம் சிக்கினார். எனது குரு போதி தர்மா குற்றமற்றவர். அவர் எந்தத் தவறையும் செய்யவில்லை. எதையும் களவாடவில்லை. யாரையும் கொல்லவில்லை!" — என்ற ஹுயன் சாங் தனது அங்கியில் இருந்து ஜெயவர்மன் அனுப்பியிருந்த ஓலையை எடுத்துச் சிங்கமல்லனிடம் நீட்டினார்.

கண்கள் குளமாக, சிங்கமல்லன் அந்த ஓலையை வாங்கிப் பார்த்தான். தமிழில் தனது மனதைத் திறந்து அந்த ஓலையை வரைந்திருந்தான், ஜெயவர்மன் என்கிற போதி தர்மன்.

'பல்லவ அரசே!

எனது ஆருயிர் அண்ணன், அவனிசிம்மனின் மகனா அல்லது பெயரனா? நீ யாராக இருப்பினும் எனது ஆசிகள். எனது நீண்ட மௌனத்தைக் கலைக்கிறேன். நான் இங்கே ஜீவசமாதியாகும் நாள் நெருங்கிவிட்டது. தலைமுறைகள் வாட்களாகச் சுழன்று மாறி வருகின்றன. நேற்று இருந்தோர் இன்று இல்லை.. இன்று இருப்போர் நாளை இல்லை என்று கண்ணிமைக்கும் நேரத்தில் காலங்கள் மாறிக் கொண்டு வருகின்றன.

ஆனால் நிரந்தரமாக நிற்கப் போகும் பொக்கிஷம், நமது அத்திமலைத்தேவன். பல்லவத்தின் விதையும்

அவன். மன்னர்கள் பெற்ற கனியும் அவன். சனாதனத்தின் வேரும் அவன். அவனுக்கே ஆபத்து என்கிற போது மன்னர் குடும்பத்தின் கடமையே அவனைக் காப்பதுதானே..? ஆனால் மன்னர்களே அவனை அடையப் பேராசைப் பிடித்து அலைவதுதான் கொடுமை.

எங்கள் சகோதரர் நால்வருக்கு இல்லாத அக்கறை எனது தங்கை நவரத்ன பல்லவிக்கு ஏற்பட்டது. பிரக்ஞுதாரா எனது குரு. குரு நிந்தனை செய்வது தவறு. இருப்பினும் எனக்கு அவர் அறிமுகமான போது அத்திமலைத்தேவனை அபகரிக்க வந்த ஆபத்தான சித்தினியாகத்தான் தெரிந்தார். எனது தந்தையும், தங்கையும் அவரது சதித்திட்டங்களுக்குப் பலியானார் கள். நல்லவேளை, வசியம் நீங்கிய வேளையில் எனது தங்கை உண்மையைப் புரிந்து கொண்டாள். அத்திமலைத்தேவனைக் களவாடிச் சீனத்திற்கு எடுத்துச் செல்ல அவர்கள் முயல்கிறார்கள் என்பதை அறிந்து, தனது சீதன வெள்ளாட்டிகளுடன் சேர்ந்து ஆலயச் சாவியை வாங்கி, சிலையை எடுத்து ஒளித்துவிட்டனர். அதனைத்தான் தனது பிராயச்சித்தமாகக் குறிப்பிட்டு இருந்தாள். ரணதிலகன் என்கிற களப்பிரனிடம் தான் ஏமாந்து போனோமே என்கிற துயரத்தில் தனது உயிரை அவளுக்கு மிகவும் பிடித்த பொற்றாமரைக் குளத்தின் அருகேயே முடித்துக் கொண்டாள். சிலை இருக்கும் இடத்தை யாரும் அறியக் கூடாது என்பதற்காக, கவிதை புனையும் திறமை கொண்ட அவள் சங்கேத மொழியில் குறிப்புகளை எழுதித் தனது சீதன வெள்ளாட்டிகளின் மூலம் குறிப்புகளைப் பல்வேறு இடங்களில் ஒளித்து விட்டாள். அந்தக் குறிப்புகளைப் புரிந்து கொள்பவர் களால் மட்டுமே சிலையைக் கண்டுபிடிக்க இயலும்.

நவரத்ன பல்லவியைத் தொடர்ந்து சீதன வெள்ளாட்டிகளும் உயிரை நிச்சயம் தியாகம்

செய்திருப்பார்கள். காரணம், தலைவி இறந்தவுடன், வெள்ளாட்டிகளும் உயிர்த் தியாகம் செய்ய வேண்டும் என்பது அவர்கள் செய்திருக்கும் சத்தியம். இந்த நிலையில், இப்போது சிலை இருக்கும் இடத்தை அறிவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அனந்த பட்டரின் மகள் அஞ்சிலை அணங்கு என்பவளிடம் சிலை இருக்கும் இடத்தைப் பற்றிய தகவல்களைக் குறிக்கும் சுவடி உள்ளது. அஞ்சிலை அணங்கிடம் இருந்து சுவடியை வாங்கினால், சிலை இருக்கும் இடம் அறியலாம்.

சிலையைப் பெறுவதற்குப் பலர் சதி செய்வதால், பல்லவர்கள் எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும். சுவடிக் குறிப்புகள் எக்காரணம் கொண்டும் எதிரிகளின் கைகளில் சிக்காமல் பார்த்துக் கொள்ளவும்.

விஜயவர்மன், இலங்கை படைவீரன் மற்றும் வீரகொசுவன் மூவரையும் பிரக்ஞுதாரா வசியம் செய்துவிட்டாள். விஜயவர்மனும், இலங்கை வீரனும் ஒருவரையொருவர் வெட்டிக் கொன்றனர். வசியம் செய்யப்பட்ட நிலையில் வீரகொசுவனும் தன்னையே அழித்துக் கொண்டான்.

பிரக்ஞுதாராவிடம் நான் சரணாகதி அடையவில்லை என்றால் பல்லவர்கள் இன்னும் மோசமான பின்விளைவுகளைச் சந்தித்திருப்பார்கள். எனவேதான் ஐயம்படுகை சிற்பி காளநந்தியிடம் கூறி, அத்திமலைத் தேவனைப் போன்றே ஒரு சிலை வடித்து அதை எடுத்துச் சென்று தேவ உடும்பர சிலையெனக் கூறி ஏமாற்றினேன். அதை அவள் கண்டு கொண்டாள். சிலைக்குப் பதில் என்னையே எடுத்துச் சென்றாள். என்னையே பிரக்ஞுதாராவிடம் அர்ப்பணம் செய்து கொண்டு பல்லவத்தைக் காப்பாற்றினேன். நான் யாரையும் கொலை செய்யவில்லை. யாரையும் வெறுக்கவில்லை. பதவியையும் நாடவில்லை. எவ்வித வருத்தமும் இன்றிப்

போகிறேன். என்னைப் பெற்ற அத்திமலையானிடம் இறுதி விடைபெற்றுக் கொள்ளவே இந்த மடல். மீண்டும் பிறந்தால் காஞ்சியில் பிறந்து அத்திமலையானை கண்குளிரத் தரிசிக்க வேண்டும்.

எனது மனையாள் சாயாதேவி நிச்சயம் இறந்திருப்பாள். நான் பிரிந்து சென்ற உடனேயே அவள் கதை முடிந்திருக்கும். யார் யார் இருக்கிறார்கள்? யார் யார் மறைந்துவிட்டார்கள் என்பது தெரியாததால் மொத்தமாகப் பிரியா விடைபெறுகிறேன்.

இருப்பவர்களுக்கு ஆசிகள்..

மறைந்தவர்களின் ஆத்மா அமைதி பெறட்டும்..

அத்திமலைத்தேவனின் புகழ் பல்லாண்டுகள் நிலைக்கட்டும்..

காஞ்சி இப்போது போன்று எப்போதும் புகழுடன் வாழட்டும்..

பொலியும் பல்லவமே வருகிறேன்..' — ஜெயவர்மன் என்கிற போதி தர்மன்.

கண்களில் நீர் வழிய, ஜெயவர்மன் அனுப்பி இருந்த மடலை வாசித்தான்.

ஹுயன் சாங்கும், சிங்கமல்லனும் அறையைவிட்டு நீங்கி ஆலோசனை அறைக்கு வந்தனர். ஜெயவர்மனின் ஓலையை பீமவர்மரிடம் சிங்கமல்லன் நீட்டினார். அதனைப் படித்துவிட்டு, அவர் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தார்.

ஹுயன் சாங் பாலி மொழியில் பேசியபடி சிங்கமல்லனை அன்புடன் நோக்கினார்.

"எனது குரு எனக்கிட்ட பணியை முடித்தேன். அதற்காகவே காஞ்சிக்கு வந்தேன். நான் போகும் போது அவர் ஜீவசமாதி அடைந்திருப்பார். அது பற்றி எனக்குக்

கவலையில்லை. அவரது சமாதியின் பக்கலில் அமர்ந்து எனது மிகுதி நாட்களை அவரது நினைவில் கழிப்பேன். அத்திமலை தெய்வத்தை மீண்டும் தேடி எடுத்துப் பத்திரமாக வைத்து ஆராதியுங்கள். இதுவே உங்கள் ஜெயவர்மனின் கடைசி வேண்டுகோள்!" என்று கூறிய ஹுயன் சாங்* அனைவரிடமும் புன்னகையுடன் விடைபெற்றுக் கொண்டு ஒத்தாடை அரண்மனையிலிருந்து புறப்பட்டார்.

* ஹுயன் சாங் காஞ்சியிலிருந்து இமாச்சலத்தில் உள்ள தர்மசாலாவில் சிறிது காலம் தங்கிவிட்டு, கி.பி. 642-ல் சீனத்தை அடைந்தார். கி.பி. 664-ல் தனது 62வது வயதில் போதி தர்மனின் போதனைகளை நினைத்தபடி மரணமடைந்தார்.

# 45. தேவனைக் காட்டிய தேவி!

காடவ மன்னன் பீமவர்மனுக்கு உடல்நிலை சரியில்லை என்கிற தகவல் வர, சிங்கமல்லனும், தண்டியும் காடவத்திற்கு வந்து சேர்ந்தார்கள். முதுமை மற்றும் தளர்ச்சியாலும் பீமவர்மனின் முழங்கால் முட்டுகள் தேய்ந்து நடமாட முடியாமல் மஞ்சத்தில் கிடந்தான்.

"சிங்கமல்லா.. அஞ்சிலை ஆரணங்கு பற்றித் தகவல் ஏதேனும் கிடைத்ததா?" — கவலையுடன் கேட்டார், பீமவர்மன்.

"இல்லை பீமவர்மரே! காவல் படையினர் அக்கிரஹாரங்களில் தண்டோரா போட்டு, அறிவிப்புச் செய்து வருகின்றனர். நமது அத்திமலை தலைமை பட்டர் சதானந்த அத்தங்கியும் விண்ணகர அக்கிரஹாரங்களில் தேடி வருகிறார். எப்படியும் கண்டுபிடித்துவிடலாம்!" — சிங்கமல்லன் கூறினான்.

"அத்திமலையானை கண்டுபிடிக்க அவளே கடைசி வாய்ப்பு. சிம்மவர்மரின் காலத்தில் இளநங்கை. அதன்பின், அவனிசிம்மன், மகேந்திரன் என்று இருவர் காலங்கள் சென்றுவிட்டன. இப்போது அஞ்சிலை அணங்கு உயிருடன் இருக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறேன். காலம் கடந்து கொண்டிருக்கிறது, சிங்கமல்லா! அத்திமலையான் காணாமல் போன அந்தக் காலத்துடன் தொடர்பு கொண்டவன் நான் ஒருவனே. எனது இறுதி மூச்சுப் பிரிவதற்குள் எப்படியாவது அதனைக் கண்டுபிடித்துவிட்டால், ஒருமுறை அவனைத்

தரிசித்துவிட்டுப் புறப்பட்டுவிடுவேன்." — பீமவர்மர் கூறினார்.

"கவலைப்படாதீர்கள், பீமவர்மரே..! நிச்சயம் அத்திமலைத்தேவன் நமது கண்களின் முன் தோன்றப் போகிறான். அவனை நாம் தரிசிக்கப் போகிறோம், பாருங்களேன்.." — சொல்லிக் கொண்டிருக்கும் போதே சந்திரமதி விரைந்து வந்தாள்.

"சிங்கமல்லா! காஞ்சியில் இருந்து தூதுவன் வந்திருக்கிறான். மிக அவசரம் என்கிறான்.." — சந்திரமதி கூறியதும், சிங்கமல்லன் அறையைவிட்டு வெளியே செல்ல, பரஞ்சோதியின் உபதளபதி கங்காதரன் அங்கே நின்றிருந்தான்.

"என்ன விஷயம், கங்காதரா?" — சிங்கமல்லன் கேட்டான்.

"மீண்டும் புலி வேட்டையாட வருகிறது. புலிகேசி நமது காஞ்சியை நோக்கிப் படைகளுடன் வந்து கொண்டிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. தளபதியார் பரஞ்சோதி கையோடு உங்களை அழைத்து வரச் சொன்னார்.." — கங்காதரன் கூற, மல்லன் மீண்டும் பீமவர்மரின் அறையினுள் நுழைந்தான்.

"பாட்டா! மீண்டும் புலிகேசி படையெடுத்து வருகிறான். எனது தந்தைக்கு நான் கொடுத்திருந்த வாக்கினை நிறைவேற்றும் தருணம் வந்துவிட்டது. நான் உடனே புறப்படுகிறேன்." — அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான், சிங்கமல்லன்.

பீமவர்மனின் முகம் சூம்பியது. "இந்த நிலையில் எனது கால்கள் எனக்கு உதவ மறுக்கின்றனவே. போர்க்களத்தில் உன்னுடன் நிற்க வேண்டிய நான், இப்படி மஞ்சத்தில் கிடக்கின்றேன்!" — மனம் வெதும்பினார்.

"கவலைப்படாதீர்கள் பாட்டா! உங்கள் கால்கள் போர்க்களத்திற்கு வரவில்லை என்றால் என்ன?

புலிகேசியின் தலை இங்கே வந்து உங்களது பாதங்களில் பணியும்.. நிச்சயம் இது நடக்கும், காத்திருங்கள்!" — என்றபடி சிங்கமல்லனும், தண்டியும் காஞ்சிக்குப் புறப்பட்டனர்.

மணிமங்கலம்* பகுதியில் புலிகேசியின் படைகள் வந்து நின்றன.

சிங்கமல்லன் தனது படைகளுடன் புலிகேசி காஞ்சியை நோக்கி நகர விடாமல் மணிமங்கலம் வந்து அவனைத் தடுத்து நின்றான்.

புலிகேசியும், சிங்கமல்லனும் ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்தபடி நின்றனர்.

"உனது தந்தை மகேந்திரன், என்னிடம் தோற்று, அனுக்ரக பட்டயத்தில் கையொப்பம் இட்டுக் கொடுத்திருக்கிறான். அதனை எனது வாதாபியில் உள்ள கணபதி ஆலயத்தின் வாயிலில் மக்களின் பார்வைக்கு வைத்திருக்கிறேன். உனது தந்தையின் பட்டயம் கணபதி ஆலயத்தின் ஒருபுறமும், நீ இப்போது கையொப்பம் இட்டுத் தரும் பட்டயத்தை மறுபுறமும் வைக்கப் போகிறேன். வாதாபி கணபதி ஆலயத்தின் துவார நாயகர்களாகத் தந்தையும், மகனும் திகழ்வீர்களாக!" — புலிகேசி சிரித்தான்.

---

* மணிமங்கலம் காஞ்சிக்குக் கிழக்கே உள்ளது. பல்லவ சாம்ராஜ்யத்தின் வரலாற்றுப் பக்கங்களில் மறக்க முடியாத ஒரு சிறப்பிடம்! சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் படைகள் காஞ்சியை நோக்கி அணிவகுத்தன. நரசிம்மவர்மன் மணிமங்கலத்தில்தான் அவனது படைகளைத் தடுத்து நிறுத்தினான். புலிகேசி ஒரு கட்டத்தில் புறமுதுகிட்டு ஓடியதைப் 'புலிகேசியின் முதுகாகிய தகட்டில் நரசிம்மன் வெற்றி என்பதைப் பொறித்தான்' எனக் கூரம் செப்பேடு பல்லவ மன்னனின் வெற்றியைப் பறைசாற்றுகின்றது. மிகப்பழமை வாய்ந்த வைகுந்தநாதர் கோயில், ராஜகோபால பெருமாள் கோயில் மற்றும் தர்மேஷ்வர், கைலாசநாதர் ஆகிய சிவன் கோயில்களும் மணிமங்கலத்தில் உள்ளன.

"புலியே! உனது உறுமல் இங்கே செல்லாது. இது சிங்கத்தின் குகை. உனது தலையை எனது அரண்மனையில் மாட்டி, எனது தந்தையின் புகழுக்கு உன்னால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கிறேன்!" — நரசிம்ம பல்லவன் கர்ஜித்தான்.

கடும் போர் மூண்டது. அந்தப் போரினில் வாட்களும், வாட்களும் உராயும் ஒலி காஞ்சி வரை கேட்டது. வாதாபி சாளுக்கிய மற்றும் பல்லவக் குருதி மணிமங்கல நிலத்தை நனைத்தது. சாளுக்கியத் தளபதி வல்லபராஜா மிகவும் திறமைசாலியாக இருந்தான். ஒரு தருணத்தில், பல்லவ காலாட்படையின் ஊடே புகுந்து பலத்த சேதங் களைச் செய்தான். காலாட்படையின் தலைமையைத் தனது கட்டுப்பாட்டினில் வைத்திருந்த உபதளபதி கங்காதரன் பாய்ந்து சென்று வல்லபராஜாவை எதிர்க்க, அனாயாசமாக அவனைக் கட்டுப்படுத்திக் கங்காதரனின் தலையைச் சீவி எறிந்தான், வல்லபராஜா. சூரிய அஸ்தமனத்தில் கங்காதரனின் தலை உருண்டது என்கிற செய்தி வர, நரசிம்ம பல்லவனும், பரஞ்சோதியாரும் அதிர்ந்தனர். மறுநாள் போரைத் தொடருவோம் என்று இரு தரப்பிலும் சங்கநாதம் முழங்க, இரு படைகளும் தத்தம் பாசறைக்குத் திரும்பின.

"நாளை நரசிம்ம பல்லவன் தனது கையொப்பத்தினை எனது அனுக்கிரக பட்டயத்தில் இடுவான்." — தனது கூடாரத்தில் வல்லபராஜாவிடம் இறையா கொக்கரித்துக் கொண்டிருந்தான்.

இந்தத் தகவலும் ஒற்றனின் மூலமாகச் சிங்கமல்லனை வந்து அடைந்தது.

தனது புரவியில் ஏறி, அத்திமலைக்கு விரைந்தான். போர் சமயம் என்பதால் ஆலயத்தைப் பொழுதோடு சார்த்தி இருந்தார்கள். திறவுகோலுக்காகக் காத்திருக்க நேரமில்லை.

மூடியிருந்த ஆலயக் கதவின் முன்பாகக் கண்களை மூடி அமர்ந்தான்.

"அத்திவரதா! எனது தந்தைக்கு மூன்று வாக்குகளை அளித்தேன். உன்னைத் தேடிக் கண்டுபிடித்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்கிறேன். மல்லையின் சிறபப் பணிகளை முடிக்கிறேன். புலிகேசியின் தலையைக் கடலில் வீசி எறிகிறேன் என்கிற அந்த மூன்று வாக்குகளையும் என்னால் நிறைவேற்ற முடியவில்லை. 'நரசிம்ம பல்லவன் தனது தந்தைக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றாமல் புலிகேசிக்கு தனது கீர்த்தியை பட்டயம் எழுதிக் கொடுத்தான்' என்று நாளைய உலகம் கூற வேண்டும் என்று நீ எதிர்பார்க்கின்றாயா? அப்படி ஒரு சூழ்நிலையை நான் உருவாக்கமாட்டேன். இதோ உனது சந்நிதியின் வாயிலில் எனது தலையை நானே உனக்குக் காணிக்கையாகத் தருகிறேன். அத்திமலைத்தேவனைக் கண்டுபிடிக்கிறேன் என்கிற தனது வாக்கினை நிறைவேற்ற முடியாமல், தனது தலையை வெட்டிக் கொண்டு நரசிம்ம பல்லவன் மாண்டான் என்று வருங்காலம் கூறட்டும். புலிகேசியிடம் தோற்றேன் என்பதைவிட, அத்திமலைத்தேவனிடம் நான் தோற்றதாகவே இருக்கட்டும்..!" என்று கூறியபடி தனது வாளினை உருவித் தனது கழுத்திற்குக் குறி பார்த்த வேளை —

ஒரு மென்மையான வளைக்கரம் வாளைப் பற்றியிருந்த அவனது உறுதியான கையின் மீது படர்ந்தது. திகைத்துப் போய்த் திரும்பிப் பார்த்தான். பதற்றம் நிறைந்த முகத்துடன் ஒரு பெண் நின்றிருந்தாள்.

அவளது அழகிய வதனம், அவன் செய்யப் போகும் காரியத்தைக் கண்டு பதறியதால், கண்கள் மருட்சியால் விரிந்திருக்க, வாய் பிளந்து மாதுளை முத்துக்களைப் போன்ற பற்கள் கிடுகிடு என்று நடுங்கிக் கொண்டிருந்தன. ஓடி வந்து இவனைத் தடுத்திருந்ததால்

சுவாசம் மேலும் கீழும் ஏறி இறங்க, அதற்கேற்றபடி அவளது மார்பகங்களும் நிலநடுக்கத்தினால் அசையும் குன்றங்களாக விளங்கின. அரசனின் கையைப் பற்றிவிட்டோமே என்கிற அச்சம் ஒருபுறம், நரசிம்ம பல்லவன் தன்னையே மாய்த்துக் கொண்டுவிட்டால், நாட்டின் கதி என்ன? என்கிற அச்சம் ஒருபுறம் என்று அவள் தடுமாறியபடி நின்றிருந்தாள். அழகிய அவளது முகம் அச்சத்தினால் சிவந்து அவளது நிறத்தை இன்னும் கூட்டியது.

தந்தை மகேந்திரன் இவனிடம் கேட்டிருந்த மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றுகிறேன் என்று உறுதிமொழி அளித்திருந்த போது இவனுக்குப் பதினாறு பிராயங்களே நிரம்பியிருந்தன. தந்தை மகேந்திரன் இறந்ததும் மன்னனாகவும் பதவி ஏற்றுவிட்டான். சிங்கமல்லனின் இருபத்து ஆறாவது பிரர்யத்தில்தான் சீனப் பயணி ஹுயென் சாங் ஜெயவர்மனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருந்தார். கி.பி. 642—ல் தன்னுடைய இருபத்து எட்டாவது வயதில்தான் மணிமங்கலத்தில் புலிகேசியின் படையை எதிர்த்துக் கொண்டிருந்தான். தந்தைக்கு அளித்திருந்த மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்றும்வரை தான் காதல் வயப்படக் கூடாது என்கிற உறுதியில் இருந்தான். தனது தாய் ராஜசந்தனாவின் பெண் தேடும் முயற்சிகளுக்கும் இவன் ஆதரவு தெரிவிக்கவில்லை. பெண்கள் என்கிற பிறவிகளே உலகில் இல்லை என்பது போல்தான் அவன் அரண்மனையில் நடந்து கொள்வான். ஆனால் இன்று முதன்முறையாக இவனது கையைப் பற்றி நிற்கும் அந்தப் பெண்ணைக் கண்டு சற்றே அயர்ந்து போனான்.

இவனது நண்பர்கள் அனைவருமே தத்தம் காதலிதான் பேரழகி என்று பெருமைபட்டுக் கொள்வதை இவன் விசித்திரமாகப் பார்ப்பான். பொதுவாகப் பெண்கள் என்றாலே அழகாகத்தான் இருப்பார்கள். அதில் ஒருத்தியைவிட இன்னொருத்தி பேரழகு என்று எப்படிக்

கூற முடியும்..? ஆண்களுக்கு வீரம் போன்று பெண்களுக்கு அழகு. ஆனால் ஆண்களில் சுத்த வீரர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். இருவரில் யார் வீரன் என்பதைக் கண்டறிய அவர்களை மோதவிடலாம். ஆனால் இரு பெண்களை மோதவிட்டாலும், அவர்களிடையே யார் அழகி என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் போகலாம்.

இந்த நடுநிசி வேளையில், தனது கையைப் பற்றிக் கலங்கி நிற்கும் இந்தப் பெண்தான், இவன் இதுவரை சந்தித்த பெண்களிலேயே பேரழகியாக இருக்கக் கூடும் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. அவனது பார்வை அவள் முகத்தையே கவனிக்க, அவள் பார்வையில் இருந்த மருட்சி இப்போது நாணமாக மாறியது.

“பெண்ணே! நீ யார்?! இந்த நடுநிசியில் ஆலய வாயிலில் ஏன் வந்து நிற்கின்றாய்? அதுவும் போர் சமயத்தில்?” — சிங்கமல்லன் பரிவுடன் கேட்டான்.

சிங்கமல்லனின் சிம்மக் குரல் அந்த நடுநிசி வேளையில் கணீரென்று ஆலய மணி போல ஒலித்தது.

“அரசே! எனது பெயர் உள்ளே இருக்கின்றாளே பெருந்தேவி, அவளது பெயர்தான். எனது ஊர் திருவேங்கடம். வேங்கடத்தில் கைங்கர்யம் செய்கிறார் எனது தந்தை. எனது தாயின் ஊர் பஞ்சப் பொய்கை க்ஷேத்திரம். அங்கிருந்து வரதனை தரிசிப்பதற்கு இங்கு எனது தந்தையின் நண்பர் மனைக்கு வந்திருக்கிறேன். இன்று நான் உறங்காத நாள். இன்று சித்திரை மாத ஹஸ்த நட்சத்திரம் என்று மறந்துவிட்டீர்களா? இன்று முழுவதும் உண்ணாமல், உறங்காமல் உபவாசம் இருந்து நாளை காலை வேகவதி ஆற்றுக்குச் சென்று அத்தி இலையில் ஓலை இடப்போகிறேன். அதற்காகத்தான் உறங்காமல் விழித்திருந்தேன். எனது மனையின் வாயில் திண்ணையில் அமர்ந்து அத்திவரதனை நினைத்துக்

கொண்டிருந்த வேளையில் தங்களது புரவியின் குளம்பொலி எனது தியானத்தைக் கலைத்தது. திண்ணையில் அமர்ந்தபடி உங்களைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். போர்க்கள பாசறையில் இருக்க வேண்டிய மன்னன், ஆலய வாசலில் என்ன செய்கிறான் என்கிற கேள்வியோடு உங்களையே கவனித்துக் கொண்டிருந்தேன். என்ன காரியம் செய்யத் துணிகிறீர்கள், மன்னரே?" — பெருந்தேவி கேட்டாள்.

"புலிகேசியிடம் தந்தையும் மகனும் தோற்றார்கள் என்று பெயர் வாங்கி, பல்லவத்தின் கீர்த்தியைக் கெடுப்பதைக் காட்டிலும், அத்திமலையானிடம் தோற்றேன் என்கிற பெயரோடு நான் மறைந்து போக விரும்புகிறேன்.." வேதனையுடன் கூறினான்.

"அரசே! அத்திமலையான் போர்க்கால இறைவன் என்பதை மறந்துவிட்டீர்களா..? அசுரர்களை வீழ்த்த அஸ்வமேத அக்னியிலிருந்து வெளியே வந்தவன் என்பதை மறந்தீர்களா? தோல்வியின் வண்ணம் கருப்பு, சமாதானத்தின் வண்ணம் வெள்ளை, சேதங்களின் வண்ணம் சிவப்பு என்றால் வெற்றியின் வண்ணம் பசுமை என்பதைத் தாங்கள் அறியவில்லையா..? நமது அத்திமலையான் பசுமைக் கடவுள் என்பதையும் மறந்தீர்களா?" — பெருந்தேவி கேட்டதும், அவளை வியப்புடன் நோக்கினான், சிங்கமல்லன்.

"அஸ்வத்தாமாவின் வழிவந்தவர், இப்படிக் கலங்கலாமா? சமுத்ரகுப்தன் படையெடுத்து வந்த போது, விஷ்ணுகோபரும் இப்படித்தான் கலங்கி நின்றார். அவருக்கு அத்திமலையான் உதவவில்லையா?"

"பெண்ணே! அத்திமலைத்தேவன் எனக்கு உதவுவான் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. எனக்கு உதவ வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்கு இருந்தால், எனக்கு அவன் கிடைத்திருப்பானே! போரில் எனக்குப் பக்கபலமாகத் திகழ்ந்திருப்பானே! எனது தந்தைக்கு

நான் கொடுத்த வாக்குகளை என்னை நிறைவேற்றச் செய்திருப்பானே..!" — வேதனையுடன் கூறினான், சிங்கமல்லன்.

"செய்யமாட்டேன் என்று அவன் கூறவில்லையே! அணுகும் விதத்தில் தாங்கள் அவனை அணுக வில்லையே. உங்கள் தந்தையின் வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் அவனைத் தேடினீர்களே தவிர, அவனது உண்மையான பக்தனாக அவனைத் தேடினீர்களா? கரிகால மன்னனுக்கும், ஜெயவர்ம இளவரசருக்கும் அத்திமலைத்தேவனிடம் இருந்த பக்தி தங்களிடம் இருக்கிறதா என்று தேடிப் பாருங்கள்.." பெருந்தேவி கூறத் திகைத்துப் போனான், சிங்கமல்லன்.

"எனது சிறிய பாட்டன் ஜெயவர்மனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்..? உன்னைப் பார்த்தால் பதினெட்டுப் பிராயங்களைக் கூடக் கடக்காதவளாகத்தானே தெரிகிறாய்..?" — சிங்கமல்லன் கேட்டான்.

"எனது பாட்டி அவரைப் பற்றிக் கதைகதையாக என்னிடம் கூறியிருக்கிறாள். இன்னும் சொல்லப் போனால் ஜெயவர்மர் வருவார் என்று இன்னமும் கூறிக் கொண்டே இருக்கிறாள். அவள்தான் சித்திர ஹஸ்தத்தின் போது அத்தியோலை அனுப்புதல் என்கிற சாங்கியத்தைச் செய்யச் சொல்லி, என்னைக் காஞ்சிக்கு அனுப்பினாள். எனக்குத் திருமணம் நடைபெறுவதற்கு அருள்புரிய வேண்டும் என்பதற்காக நாளை உபவாசம் இருந்து வேகவதியில் நீராடி அத்தியோலை அனுப்பப் போகிறேன். அதற்காகத் தியானம் செய்து கொண்டிருந் தேன். நல்லவேளையாக உங்களைப் பார்க்க நேர்ந்தது..!" — பெருந்தேவி கூறினாள்.

"அப்படி ஒரு சாங்கியத்தை நான் இதுவரை கேள்விப்பட்டதே இல்லையே?" — திகைப்புடன் கூறினான் சிங்கமல்லன்.

"பச்சை சார்த்தி அத்தியோலை அனுப்புதல் என்கிற ஒரு சாங்கியம் அந்தக் காலத்தில் நடந்ததாக எனது பாட்டி கூறினாள். ஒருவேளை அத்திமலையானின் சிலை காணாமல் போனதால், அந்தச் சாங்கியமும் மறக்கப்பட்டிருக்கலாம். எனக்கு இப்போது ஒரு யோசனை தோன்றுகிறது அரசே! எனது உபவாசப் புண்ணியத்தை நான் உங்களுக்குத் தருகிறேன். நாம் இருவரும் சென்று அத்தியூரானுக்கு அத்தியோலை இடுவோம். உங்கள் தந்தைக்கு நீங்கள் அளித்திருந்த மூன்று வாக்குகளை நிறைவேற்றித் தரும்படி அத்தி வரதனுக்கு ஓலை இடுவோம். மன்னனாக உங்கள் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டாலும், பக்தனாக நீங்கள் அத்தியோலை அனுப்பிக் கோரிக்கைகளை வைத்தால் அவன் அதை நிறைவேற்றித்தானே தீர வேண்டும். என்னுடன் வருவதற்கு ஆட்சேபம் இல்லையே?" — பெருந்தேவி கேட்டாள்.

இந்தச் சிறுபெண் ஏதேதோ கூறுகின்றாளே. செய்து பார்ப்போமா..? இங்கேயே கழுத்தை அறுத்துக் கொண்டு மரணம் அடைவதைக் காட்டிலும், இவள் கூறுவதைச் செய்து பார்க்கலாமே. 'உன்னுடன் வருகின்றேன்' என்கிற பாவனையில் தலையசைத்தான், சிங்கமல்லன்.

"சற்று இங்கேயே நில்லுங்கள். இதோ வருகிறேன்!" என்றவள் அருகிலேயே இருந்த தனது மனைக்குச் சென்றாள். சிங்கமல்லன் ஆலயக் கோபுரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு யோசனையுடன் நின்றிருந்தான்.

புலிகேசியின் தலை, மல்லையின் உளி. அத்திவரதனின் சிலை, இவை மூன்றும்தான் இவனது கோரிக்கை. இதனை நிறைவேற்றி வைக்கிறானா அத்திமலையான் என்பதனைப் பார்ப்போம். பச்சை சார்த்தி அத்தி யோலை அனுப்புதல் என்கிற சாங்கியத்தைப் பற்றி ராஜ குருவோ, பீமவர்மரோ யாருமே இவனிடம் கூறிய தில்லையே!

பெருந்தேவி வேகமாக வந்தாள். கையில் பசுமை வண்ணத்தில் ஒரு வஸ்திரமும், ஒரு கெண்டியும், ஒரு அத்தியிலையும், ஒரு சிறு கிண்ணத்தில் செம்மை வண்ணத்தில் ஏதோ கலவையும் இருந்தன.

"வாருங்கள்! வேகவதியாற்றுக்குப் போவோம்!" என்றவள் தயங்கி நின்றாள். மன்னன் சிங்கமல்லன் புரவியில் வந்திருக்கிறான். இவள் எப்படி அவனுடன் ஒரே குதிரையில் பயணிப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, சிங்கமல்லன் சட்டென்று அவளை இருகைகளாலும் தூக்கிக் குதிரையின் மீது அமர வைத்தான்.

குதிரை வேகமாக வேகவதியாற்றை நோக்கிப் போக, சிங்கமல்லனின் பரந்த மார்பில் பெருந்தேவியின் தலை மோதியது. பூங்கொத்தால் தனது மார்பை வருடுவது போல உணர்ந்தான், சிங்கமல்லன். உறுதி, பலம், வலிமை, கடினம், ஆற்றல், உக்கிரம் போன்ற சொற்களுக்கு உறைவிடமாகத் திகழ்ந்த சிங்கமல்லன், முதன்முறையாக, மிருதுவான ஒரு ஸ்பரிசத்தை உணர்ந்தான். இவ்வளவு மெல்லியவர்களா பெண்கள்..! இவனைப் போன்ற பலவான்கள் சற்று மென்மையாகக் கையாளவில்லை யென்றால் உடைந்து போவார்களோ? கற்சுவரைப் போன்ற தனது மார்பில் அவள் மோதுவதால் அவளது தலைக்கு வலிக்குமோ..? அவள் முகத்தில் அந்த வலி தென்படுகிறதா என்பதைக் காண அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான்.

பல்லவத்தையே கற்கோட்டையாகக் காக்கும் ஒருவனின் நெஞ்சில் தலை சாய்த்திருக்கிறோம் என்பதே பெருந்தேவிக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. எவ்வளவு பெரிய வீரன், மாமல்லன்! புலிகேசியை எதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருப்பவன், திருக்கடல்மல்லையைப் புதிய சிற்ப நகரமாக ஸ்ருஷ்டித்தவனுடன் ஒரே குதிரையில் பயணிக்கிறோம் என்பதே அவளால் நம்ப

இயலவில்லை. ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணான தான் அஸ்வத்தாமாவின் வழிவந்த மாபெரும் பல்லவ குலத்தின் வழித்தோன்றல் நரசிம்ம பல்லவனின் மார்பில் சாய்ந்திருக்கிறோம் என்பதை எண்ணி அவன் அருவருப்பு கொள்வானா? தனது மீது எரிச்சல் கொள்வானா..? அந்த எரிச்சல் அவனது முகத்தில் தெரிகிறதா என்பதைப் பார்ப்பதற்காகத் தனது தலையை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள். இருவரின் கண்களும் அங்கே கலந்தன.

'இவ்வளவு நெருக்கமாகத் தெரியும் இந்த முகம், இன்று மட்டும்தான் இவ்வளவு நெருக்கத்தில் தோன்றுமா? ஒருவேளை இந்த முகத்தை இனி காணாமலேயே இருந்துவிடுவோமா?' சிங்கமல்லன் தனக்குள் நினைத்தான். பெருந்தேவியும் அது போன்றே நினைத்திருக்க வேண்டும். இருவரது கண்களும், வேகவதி ஆறு வரும்வரை எதிர் எதிரே நோக்கிக் கொண்டே இருந்தன.

திடீரென்று முன்பின் சந்தித்திராத பெண்ணைத் தனது புரவியில் ஏற்றிக்கொண்டு நடுநிசியில் அவளை கண்களால் விழுங்கியபடி பல்லவ மன்னன் செல்வதைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? அப்படிப் பார்த்து, அரண்மனைக்குச் சென்று இவனது தாயிடம் கூறி விட்டால்...? கூறட்டுமே! நரசிம்ம பல்லவன் பெருந்தேவி என்கிற சிற்பத்தின் மீது காதல் கொண்டுவிட்டான் என்று பதில் கூறிவிட்டால் போகிறது.

வேகவதி ஆற்றங்கரையில் இருவரும் இறங்கினார்கள்.

"வாருங்கள் அரசே!" என்ற பெருந்தேவி அவனது கையைப் பற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கினாள்.

"அரசே! எத்தனையோ கீர்த்திமான்கள் நீராடிய ஆறு இது. சாணக்கியர், திருலோச்சனர், கரிகாலர், சமுத்ரகுப்தர், விஷ்ணுகோபன், சிம்மவர்மர், அவனிசிம்மர்,

ஜெயவர்மர் ஆகியோர் நீராடிய ஆறு இது. தாங்கள் இந்த ஆற்றில் நீராடியது உண்டோ?" — பெருந்தேவி கேட்டாள்.

"இல்லை! முக்கூடலில் நீராடி உள்ளேன்" என்றான் சிங்கமல்லன்.

"வேகவதியில் நீராடி, அத்திமலைத்தேவனுக்குப் பச்சை சார்த்தி, அத்தியோலை அனுப்புவோம். நாளை புலியின் தலை உங்கள் வசம்!" — என்றபடி அத்திமலையை நோக்கி அவனை நிற்க வைத்தாள்.

"வாருங்கள்.. தலை முழுகுவோம்." அவனது கையைப் பற்றினாள். நல்லவேளையாக மகுடத்தைப் பாசறையிலே வைத்திருந்தான்.

அந்த நடுநிசி வேளையில் —

வேகவதி நீரில் மூழ்கி எழுந்த அவர்கள் அத்தி மலையை நோக்கிக் கைகூப்பி நின்றனர்.

பெருந்தேவி பிரார்த்தனை செய்யத் துவங்கினாள். "அத்திமலைத்தேவா! நீ எங்கிருக்கிறாய் என்பது எங்களுக்குத் தெரியாது. நீ எங்கிருந்தாலும், எங்கள் பிரார்த்தனை உன்னை வந்தடையும். உபவாசம் இருந்த எனது பலன்களை நரசிம்ம பல்லவருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறேன்.." என்றவள், கெண்டியில் சேகரித்திருந்த ஆற்றுநீரைச் சிங்கமல்லனின் கரங்களில் வார்த்தாள்.

"மன்னர் உனக்குப் பச்சை சார்த்தி அத்தியோலை அனுப்புகிறார். அவரது கோரிக்கை மூன்று. அதை அவரே கூறுவார். அதனை நீ நிறைவேற்றி வை. அரசனாக இல்லாவிட்டாலும், உனது பக்தனாக அவர் இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கிறார். அதனை நீ நிறைவேற்றி வைக்கத்தான் வேண்டும்!" என்று கூறியபடி சிங்கமல்லனை நோக்கினாள்.

நடுநிசியில், குளிர்ந்த நீரில் நின்று இம்மாதிரி அத்திமலைத்தேவனுடன் பேசுவது அவனுக்குப் புதிய அனுபவமாக இருந்தது. மந்திரிப் பிரதானிகள், அதிகாரிகள் சூழ, அதிகார மன்னனாகவே இதுவரை அத்திமலைக்குச் சென்றிருக்கிறான். அதிகாரத்துடன் அத்திமலையில் வரதனின் முன்பாக நிற்பதைக் காட்டிலும், வேகவதியில் நின்றபடி அவனது மலையை நோக்கி அவனுடன் பேசினால், அவனது செவிகளை பக்தர்களின் கோரிக்கைகள் எட்டும் என்பதை உணர்ந்தான் சிங்கமல்லன்.

"உளியின் பணிகள் மல்லையில் சிறக்க வேண்டும்..

புலியின் சிரசு மல்லைக் கடலில் மிதக்க வேண்டும்..

நினது உடும்பரமேனி அத்திமலையில் நிற்க வேண்டும்..

இவையே எனது கோரிக்கைகள்" என்றவுடன் சிங்கமல்லனின் வலதுகை பெருவிரலைக் கிண்ணத்தில் இருந்த புனுகு — அரக்குக் கலந்த குழைவினில் பதித்து அத்தி இலையில் வைத்தாள்.

"அரசே! அத்திமலையானை வேண்டிக்கொண்டு இந்த இலையை நீரில் விடுங்கள். உமது கோரிக்கைகள் நிறைவேறும்!" என்றபடி அந்த அத்தியிலையைச் சிங்கமல்லனிடம் கொடுக்க, அவன் அதனை நீரில் விட்டான். வேகவதியின் அலைகளில் அந்த இலை மிதந்தபடி சென்றது.

"வாருங்கள் மன்னரே! முக்கூடல் செல்வோம். மீண்டும் அந்த இலை உங்கள் வசம் கிட்டினால், உங்கள் கோரிக்கைகளை அத்திமலையான் நிறைவேற்றி வைப்பான் என்று அர்த்தம்.." — பெருந்தேவி கூற, சிங்கமல்லன் வியந்தான்.

"அது எப்படிச் சாத்தியம்?" — மன்னன் கேட்டான்.

"சாத்தியம்தான் என்பதை விரைவில் உணர்வீர்கள்," என்ற பெருந்தேவியை மீண்டும் புரவியின் மீது

அமர்த்தினான். இருவரும் முக்கூடல் சங்கமத்திற்கு விரைந்தார்கள். சங்கமத்தின் கரையில் நின்றபடி ஆற்று நீரையே பார்த்துக்கொண்டிருக்க, திடீரென்று பெருந்தேவி ஆனந்தத்துடன் கூவினாள்.

"அதோ பாருங்கள் அரசே! ஆற்று மணலில் கரையோரம் ஒதுங்கியுள்ள தென்னை மட்டையின் நடுவே..!" ஓடிச்சென்று அந்த இலையை எடுத்து வந்து சிங்கமல்லனின் கரத்தில் வைத்தாள்.

தனது கண்களையே நம்பாதவனாக அந்த இலையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான், சிங்கமல்லன். அவன் வைத்திருந்த அடையாளக் கையொப்பம் அந்த இலையில் காணப்பட்டது.

"பெருந்தேவி! உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" — நெகிழ்வுடன் கேட்டான், சிங்கமல்லன்.

"ஒன்றும் செய்ய வேண்டாம். போரில் வென்று, புலியின் தலையைக் கடலில் வீசிவிட்டு, மீண்டும் நீங்கள் இப்போது அமர்ந்திருந்த இடத்திலேயே எனக்காகக் காத்திருங்கள். உங்களை நான் ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன்.."

"எங்கே?" — சிங்கமல்லன் கேட்டான்.

"மரணப்படுக்கையில் உள்ள எனது பாட்டியைக் காண்பதற்கு. அவள் மரணம் அடைவதற்குள் தங்களைச் சந்தித்தே தீர வேண்டும் என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காத்திருக்கிறாள்." — பெருந்தேவி கூறினாள்.

"உனது பாட்டி எதற்காக என்னைக் காண வேண்டும் என்று துடிக்கிறாள்..!" — திகைத்தான் சிங்கமல்லன்.

பெருந்தேவி சிரித்தாள். "எனது பாட்டியின் பெயர் அஞ்சிலை அணங்கு!"

பெருந்தேவி கூறியதும்தான் தாமதம், பரவசத்தினால் அவளது இரு கைகளையும் பற்றித் தனது கண்களில் ஒற்றிக்கொண்டான் சிங்கமல்லன்.

சிங்கமல்லன் மீண்டும் பெருந்தேவியை அத்தியூரின் ஆலயத்தின் அருகே இறக்கினான். குதிரையிலிருந்து இறங்க முற்பட்டவளின் இரு தோள்களையும் திடீர் என்று பற்றித் தனது மார்பில் சாய்த்தான். திகைப்புடன் அவள் நிமிர்ந்து பார்க்க, அவளது கண்களைக் காதலுடன் நோக்கினான்.

"எனது உயிரை இன்று நீ காப்பாற்றினாய்.. அத்தியூரானே தனது நாயகியை அனுப்பி எனது உயிரைக் காப்பாற்றியதாகவே உணர்கிறேன். இதன் மூலம் அத்திமலைத்தேவன் நம்மை ஒன்று சேர்த்திருப்பதாகவே நினைக்கிறேன். நீ யாரோ, எனக்குத் தெரியாது. இப்போது முதல் உன்னை நான் காதலிக்கிறேன். நான் திருமணம் செய்து கொள்ளும் போது நீதான் எனது மனைவியாகப் பக்கத்தில் அமர்ந்திருப்பாய்! நான் உன்னை நிச்சயம் தேடி வருவேன்!" என்றபடி அவளை இறக்கிவிட்டு, தனது புரவியை விரைவாகச் செலுத்திக் கொண்டு போனான்.

இன்ப அதிர்ச்சியில் அதிர்ந்து போய் நின்றாள், பெருந்தேவி.. திருமணம் நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதற்காக — அத்தியோலை இடுவதற்குக் காஞ்சி வந்திருந்தாள். அத்திமலைத்தேவன் இவளையே காஞ்சியின் அரசியாக அமர வைத்து விடுவான் போல் இருக்கிறதே..

பெருந்தேவியை மீண்டும் அத்தியூரில் விட்டுவிட்டு, மணிமங்கல போர்ப் பாசறைக்குத் திரும்பிய சிங்கமல்லன் புதிய உத்வேகத்துடன் காணப்பட்டான்.

# 46. வீழ்ந்தது வாதாபி!

ஒரு இரவில் ஒருவனிடம் இத்தகைய மாற்றம் ஏற்படுவது சாத்தியமா? பல்லவத்தின் உபதளபதி கங்காதரன் வாதாபியின் தளபதி வல்லபராஜாவின் கரத்தால் சிரச்சேதம் செய்யப்பட்டதைக் கண்டு மனம் நொந்து நூலாகி, தளர்ச்சியுடன் சிங்கமல்லன் போர்க்களத்தைவிட்டு வெளியேறிய காட்சியை முந்தைய தின மாலையில் கண்டிருந்தான், புலிகேசி. எனவேதான், மறுநாள் நிச்சயம் அவனிடம் அனுகிரக பட்டயத்தில் நரசிம்ம பல்லவனின் கையொப்பத்தினை வாங்கி விடுவேன் என்று இறுமாப்புடன் சூளுரைத்திருந்தான்.

ஆனால் இன்று நடப்பதென்ன?

மணிமங்கல போர்க்களமே நரசிம்ம பல்லவனின் கோபத்தால் தகித்தது. எந்த இடத்தைத் தட்டி, நரசிம்மன் இங்கு இருக்கிறானா என்று இரண்யன் பிரகலாதனை கேட்பானோ என்பது நிச்சயமில்லாமல், நரசிங்கம் எல்லா இடங்களிலும் வியாபித்து நின்றது போன்று, போர்க்களம் முழுவதுமாக வியாபித்து நின்றான், நரசிம்ம பல்லவன்.

கதிரவன் உச்சியை அடைவதற்குள் வல்லப ராஜாவைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்கிற தீர்மானத்துடன் அவனை விரட்டிக் கொண்டே இருந்தான். அவன் எண்ணப்படியே அதற்கான அருமையான சந்தர்ப்பம் ஒன்று கிட்டியது. நரசிம்ம பல்லவனின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டவன் போல, எப்போதெல்லாம் சிங்கமல்லன் வல்லப

ராஜாவை குறிவைத்தானோ, அப்போதெல்லாம், புலிகேசி குறுக்கே வந்து அவனுடன் சண்டை இட்டு வல்லபராஜாவை காப்பாற்றினான். இதைக் கவனித்த பரஞ்சோதி மன்னனைப் பார்த்துக் கண்ணசைக்க, மன்னன் அவனது சமிக்ஞையைப் புரிந்து கொண்டான். மீண்டும் வல்லபராஜாவைச் சிங்கமல்லன் குறிவைக்க — அவனுக்கும் வல்லபராஜனுக்கும் இடையே புலிகேசி புக முயற்சிக்க — அதற்குள் பரஞ்சோதி அந்த இடைவெளியில் புகுந்து புலிகேசியைத் தடுத்தான். பரஞ்சோதியுடன் புலிகேசி கடும்போரில் ஈடுபட்டபடி தனித்துவிடப்பட்ட வல்லபராஜாவை அணுகுவதற்கு வசதியாக இடைவெளி அமைத்துக் கொடுக்க, எளிதாக முன்னேறிய சிங்கமல்லன் நேராக வல்லபராஜனை அடைந்தான்.

"கங்காதரனின் தலைக்குப் பழிக்குப் பழி!" — என்று கர்ஜித்தபடி தனது வாளை ஓங்கி அவனது தலையை வெட்டிச் சாய்த்தான். அடுத்தது உனது தலைதான் என்பது போன்று புலிகேசியைப் பார்த்தான்.

தனது பலம் வாய்ந்த தளபதி வல்லபராஜாவின் தலை மணிமங்கல பூமியில் உருளுவதைக் கண்டதும் அரண்டு போனான், புலிகேசி. இவனது முழுபலமுமே வல்லப ராஜாதான். போர்க் கலைகளில் நிபுணன். வியூகங்கள் அமைப்பதில் சமர்த்தன்.. விவேகி. மதியூகி. ராஜதந்திரி. எல்லாச் சிறப்புகளும் கொண்டிருந்த அவன் தலை இப்போது சிந்திக்க வழியில்லாமல், மாமிசப் பிண்டமாக நிலத்தில் அம்போ என்று கிடந்தது. அதற்கு மேல் புலிகேசிக்கு போரிடவே தோன்றவில்லை. உடல் நடுநடுங்க, வாதாபியின் அரண்மனையின் கதகதப்பை மனம் நாடியது. மணிமங்கலத்திலிருந்து தனது முதுகைக் காட்டியபடி குதிரையைச் செலுத்தியபடி ஓடினான்.

அவந்திகாவை மயக்குவதற்காக அகன்று பரந்து விரிந்திருந்த தனது மார்பைக் காட்டியபடி நடை

போடுவது இறையாவின் வழக்கம். பறந்து விரிந்த அந்த மார்பு புறமுதுகிட்டு ஓடும் இந்தச் சமயத்தில் குறுகிக் காணப்பட்டது.

ஓடிக்கொண்டிருந்த புலிகேசியைச் சுட்டிக் காட்டினான், சிங்கமல்லன்.

"பரஞ்சோதி! சிவத்தொண்டாற்றிய உன்னைத் தேடிப்பிடித்து எதற்கு எனது தளபதி ஆக்கினேன் என்று கேட்டாயல்லவா? இதற்குதான். அதோ.. வடமேற்கே ஓடுகிறது புலியின் தலை. இதோ தென்கிழக்கே இருக்கிறது மல்லைக் கடல். இரண்டையும் இணைப்பாயாக! புலியின் தலை கடலில் மிதக்கட்டும். அது மிதக்கும் இடத்தில் நமது வெற்றிச் சின்னம் அமையட்டும்!" — கர்ஜித்தது பல்லவ சிங்கம்.

புலிகேசியை வாதாபி வரையில் விரட்டிக் கொண்டு போனான், பரஞ்சோதி. சரியாக வாதாபி கணபதி ஆலயத்தின் வாயிலில் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டிருந்த புலிகேசியை வளைத்துப் பிடித்தான்.

"மகேந்திர பல்லவர் எழுதிக் கொடுத்த பட்டயத்தை உனது கையாலேயே எடுத்துக் கொடு!" — பரஞ்சோதி கட்டளையிட்டான்.

ஆலயத்தின் வாயிலில் வாதாபியின் மக்களின் பார்வைக்காக வைத்திருந்த பட்டயத்தை எடுத்துப் பரஞ்சோதியின் கையில் கொடுத்தான், புலிகேசி.

அடுத்தகணம் —

பரஞ்சோதியின் வாள் புலிகேசியின் தலையை நோக்கி பாய்ந்தது. தனது தலை உருளும் தருணத்தில் அவந்திகாவை நினைக்க வேண்டும் என்றுதான் உத்தேசம் செய்திருந்தான், புலிகேசி. ஆனால், சூரிய ஒளியில் தகதகத்துக் கொண்டு சீறிக் கொண்டு வரும் அந்த ஒருகணத்தில் அவன் நினைத்துப் பார்த்தது தனது

*வளர்ப்புத் தாய் சுமனஸாவை. அவளது தலை வெட்டப்பட்ட அந்தத் தருணத்தில், தான் வளர்த்த மகன் இறையாவை பற்றி என்ன நினைத்திருப்பாள்? அந்தக் கேள்வியை மட்டும்தான் தனக்குள் கேட்பதற்கு இறையாவுக்கு அவகாசம் கிட்டியது. அதற்குரிய பதிலை அவன் நினைத்துப் பார்க்கவிடாமல், அவன் தலை உடலுடனான தனது தொடர்பை அறுத்துக் கொண்டு பறந்து சென்றது. அதை இலாவகமாகத் தனது கரங்களில் ஏந்திய பரஞ்சோதி சாக்குப் பை ஒன்றில் அதனைப் போட்டுக் கொண்டான். மகேந்திரன் பட்டயத்தையும் அந்தச் சாக்குப் பையினுள் திணித்தான்.*

*“வாதாபி கணபதி!* இனி நீர் எனது கணபதீச்சரத்தில் பல்லவத்தின் கீர்த்தியைப் பாடிக் கொண்டு இரும்!” என்றபடி வாதாபியின் கணபதி சிலையையும் எடுத்துக் கொண்டு பல்லவம் புறப்பட்டான்.*

---

* பரஞ்சோதி கணபதீச்சரம் என்ற சிவாலயமுள்ள திருச்செங்காட்டங்குடியைச் சேர்ந்தவர். இது நாகப்பட்டினம் அருகில் உள்ளது. அதனால் பிறவியிலிருந்தே பிள்ளையாரிடம் அவருக்கு ஒரு பிடிமானம் இருந்திருக்க வேண்டும். எனவேதான். வாதாபியை வென்று அங்கேயுள்ள பொன், மணி, யானை, குதிரை எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு ஊர்வலம் வருகிற போது அங்கே வாதாபி கணபதியைப் பார்த்தார். பார்த்தவுடன் பக்தி பொங்கிக் கொண்டு வந்தது. அந்த வாதாபி கணபதி சிலையைத் தமக்கென்று எடுத்துக் கொண்டுவிட்டார். தற்போது திருச்செங்காட்டங்குடி ஆலயத்தில் உள்ளது இந்தச் சிலை. அதற்குப்பின் அரசியலைவிட்டு நீங்கி, சிறுத்தொண்டர் நாயனாராக உருமாறினார், பரஞ்சோதி.

மண்ணின் அடையாளம் அதோடு மறைந்து போனது.

அவன் தலை மிதந்த கடல்மல்லை கடலோரம் வாதாபி புலிகேசியை வென்றதற்கு அடையாளமாக ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பினான். புலித்தலை என்று அதற்குப் பெயரிட்டான். மாமல்லபுரத்தில் நுழைவதற்கு முன்பாகப் புலிக்குகை என்கிற பெயருடன் அந்த நினைவுச் சின்னம் இன்றும் காணப்படுகிறது.

*நரசிம்மவர்மப் பல்லவன் புலிகேசியின் தலையை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தான்.*

*"எனது அத்தை ஜெயஸ்ரீயின் ஆன்மா இன்று குளிர்ந்திருக்கும். அவளை உனது பிரிய நாயகியாக வரும்படி வாதாபிக்கு அழைத்தாய் அல்லவா..? அதற்குப் பதிலாக உனது தலையை நான் இங்கு அழைத்து வந்துவிட்டேன். எங்கள் மல்லைக் கடலில் அதை வீசி எறியப் போகிறேன்..! அதற்கு முன்பாக எனது தந்தை உனக்குத் தந்த பட்டயத்தை உனது கண்கள் முன்பாகவே பொசுக்குகிறேன்!" அருகில் இருந்த தீபத்தின் சுடரில் அந்தப் பட்டோலையை பொசுக்கினான், சிங்கமல்லன்.*

*பிறகு அந்தத் தலையுடன் மல்லைக்குச் சென்று, அவந்திக பவனத்தின் உப்பரிகையில் நின்று அதனைக் கடலில் வீசினான். புலிகேசியின் தலை மிதந்த இடத்தில் நினைவுச்சின்னம் ஒன்றை அமைத்து அதற்குப் புலித்தலை என்று பெயரிட்டான். பிறகு அத்திமலைத் தேவன் ஆலயத்தின் முன்பாகப் பெருந்தேவிக்காகக் காத்திருந்தான், சிங்கமல்லன்.*

*மல்லையின் மிகுதிப் பணிகளையும் களிப்புடன் செய்து முடித்துவிட்டு, தந்தைக்குத் தந்திருந்த இரு வாக்குகளை முடித்துவிட்ட மகிழ்ச்சியுடன் அத்திமலைத்தேவனின ஆலயத்தின் வாசலில் மூன்றாவது வாக்கை நிறைவேற்றும் உத்வேகத்துடனும் பெருந்தேவிக்காகக் காத்திருந்தான், சிங்கமல்லன்.*

# 47. அஞ்சிலை அணங்கு

பஞ்சப் பொய்கை க்ஷேத்ரம்.—*

கஜப் பொய்கையின் கரையில் உள்ள அத்திவரதனின் ஆலயத்தின் எதிரில் இருந்த ஒரு சிறு குடிலினுள் சிங்கமல்லனை அழைத்துச் சென்றாள் பெருந்தேவி.

"பாட்டி! பல்லவ மன்னர் நரசிம்மவர்மர் வந்திருக்கிறார்!" கட்டிலில் கிடந்த கிழவியின் காதில் உரக்கக் கத்தினாள், பெருந்தேவி.

அவளது குரல், கிழிந்த நாராகக் கிடந்த அஞ்சிலை அணங்கின் செவி வழியாக உட்புகுந்து எங்கோ ஒட்டிக் கொண்டிருக்கும் அவளது உயிரைத் தட்டி எழுப்பி இருக்க வேண்டும்.

முதலில் துடிதுடித்த அந்தக் கண்கள் மெதுவாகத் திறந்தன.

தனது முன்பாக நின்ற சிங்கமல்லனை ஏறிட்டுப் பார்த்ததும், சிறிது சிறிதாக அந்தக் கண்களுள் ஒளி தோன்றியது.

"ஜெயவர்மரே! வந்துவிட்டீர்களா?" — அஞ்சிலை அணங்கின் முகத்தினில் பரவசம் தோன்றியது.

"பாட்டி! இவர் நரசிம்ம பல்லவர்! ஜெயவர்மர் இல்லை!" — பெருந்தேவி புரிய வைக்க முயன்றாள்.

"இல்லை! ஜெயவர்மர் இப்படியேதான் இருந்தார். அதே உயரம். அதே கம்பீரம். கருணை பொங்கும் கண்கள். ஜெயவர்மர்தான் வந்திருக்கிறார். ஜெயவர்மரே!

---

* பஞ்சபொய்கை க்ஷேத்தரம் : திருவல்லிக்கேணி.

நீங்கள் வருவீர்கள் என்று எவ்வளவு காலம் காத்திருந்தேன். பொக்கிஷம் வைத்துள்ள இடத்தை விவரிக்கும் சுவடியை என்னிடம் தந்தீர்கள் அல்லவா..? பல்லவ மன்னன் கேட்டால் மட்டும் கொடு என்று கூறிவிட்டுச் சென்றீர்களே! சுவடிகளை யாரிடம் சேர்ப்பது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள்!" என்றவள் பெருந்தேவியைப் பார்த்தாள்.

"ஆராதனை அறையில் ஒரு பாக்குமரப் பெட்டகம் உள்ளது. அதனைக் கொண்டு வா!" — பலஹீனமான குரலில் அஞ்சிலை அணங்கு கூற, பெருந்தேவி விரைந்தாள். பெட்டகத்துடன் வந்து பெருந்தேவி நிற்க, அதிலிருந்து வஸ்திரத்தில் சுற்றியிருந்த சுவடிகளை எடுத்துத் தன்னிடம் தரும்படி கூறினாள், அணங்கு.

பெருந்தேவி அதனைப் பாட்டியின் கரத்தில் வைக்க, அதைத் தனது கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"அத்திமலையா! நாளை முதல் நீ இங்கேயும், அங்கேயும் திரியாமல் கோலம் செய்து அத்தியிலேயே இரு!" என்றபடி அந்தச் சுவடிகளை வெறித்து நோக்கினாள். அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. கண்ணீர் வழியச் சிங்கமல்லனைப் பார்த்தாள்.

"அரசே! ஜெயவர்மர் என்னிடம் தந்த சுவடிகளை உங்கள் வசம் ஒப்படைக்கிறேன். அத்திமலையானுக்கு நான் செய்த கைங்கரியமாக இதைக் கருதுகிறேன். சிறு பிராயத்திலிருந்தே அத்திமலைத்தேவனைத் தவிர வேறு மூர்த்தியை நான் வணங்கியதில்லை. திருமணம் செய்து கொண்டால், அத்திவரதனை பிரிய வேண்டியிருக்கும் என்பதால் திருமணத்தைக் கூட வெறுத்தேன். எனது தந்தை கொண்டு வந்த வரன்களை நிராகரித்தேன். பஞ்ச தீர்த்தத்தில் அத்திவரதனை ஆராதிப்பவர் என்ப

தாலேயே எனது கணவனை மணக்கச் சம்மதித்தேன். எனது தந்தை அனந்த பட்டரும் தனது இறுதி நாட்களில் இங்கே என்னுடன்தான் வசித்தார். அத்திமலைத்தேவன் மீண்டும் தனது இருப்பிடம் சேர வேண்டும் என்று அன்றாடம் நாங்கள் வேண்டிக் கொண்டு இருந்தோம். ஜெயவர்மருக்குக் கொடுத்த வாக்கின்படி எனது தந்தைக்கும் தெரியாமல் இந்தச் சுவடிகளை வைத்திருந் தேன். இப்போது ஜெயவர்மரின் உருவில் இருக்கும் உங்களிடமே அதனைத் திருப்பி ஒப்படைக்கிறேன். எனது அத்திமலைத் தெய்வத்தை மீண்டும் அத்தியிலேயே சேர்த்துவிடுங்கள்.. ஜெயவர்மரே! நீங்கள் இட்ட பணியை நான் முடித்துவிட்டேன். இனி நிம்மதியுடன் அத்தி மலைக்குச் செல்வேன்.." என்றவள் தனது கண்களை ஒருமுறை நன்றாக விரித்து நரசிம்ம பல்லவனைக் கண்குளிரப் பார்த்தாள்.

ஒரு நீண்ட புன்னகையை அவரை நோக்கி விட்டபடி சற்றே தலையைத் தூக்கி அவனை நோக்கி வணங்குவது போன்று அசைத்தாள். நீண்ட பெருமூச்சு ஒன்றைச் சிந்திவிட்டுத் தலையைத் தலையணையில் சரிக்க, அஞ்சிலை அணங்கின் நீண்ட போராட்டம் நிறைவு பெற்றது.

நடுநிசியில் ஜெயவர்மன் அனந்த பட்டரின் வீட்டுக் கதவினைத் தட்ட, அதனைத் திறந்த அஞ்சிலை அணங்கின் கரங்களில் ஜெயவர்மன் சுவடிகளை ஒப்படைத்த போது துவங்கிய போராட்டம், அந்தச் சுவடிகளை நரசிம்ம பல்லவனின் கரங்களில் பத்திரமாகச் சேர்ப்பித்ததுடன், அஞ்சிலை அணங்கின் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன.

சிம்மவர்மன், அவனிசிம்மன், ஜெயவர்மன், சாயாதேவி, நவரத்ன பல்லவி ஆகியோரைக் கண்டிருந்த அஞ்சிலை அணங்கின் கண்கள் நரசிம்ம பல்லவனையும் கண்டுவிட்ட பிறகேதான் ஒரேடியாக மூடியிருந்தன.

## 48. பல்லவம் பல்லவி பாடட்டுமே..

அஞ்சிலை அணங்கை பஞ்சப் பொய்கை க்ஷேத்திரத்தில் சந்தித்து, ஜெயவர்மன் அவளிடம் ஒப்படைத்திருந்த குறிப்புகளை சிங்கமல்லன் பெற்றுக் கொண்டான் என்கிற செய்தி வந்ததுமே, தனது தேக அசௌகரியத்தை மறந்தான், பீமவர்மன்.

காஞ்சிக்குப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க, வேறு வழியின்றி சந்திரமதி அவரை அழைத்துக் கொண்டு காஞ்சிக்குப் புறப்பட்டாள். பீமவர்மர் நடமாடுவது இனியும் சாத்தியம் இல்லை என்பதால் அவருக்குச் சக்கர நாற்காலி ஒன்றைத் தயார் செய்து கொண்டாள்.

மனைவியுடன் வந்து இறங்கிய பீமவர்மரை ஆச்சரியத்துடன் வரவேற்றான், சிங்கமல்லன்.

"இந்த உடல் நிலையில் எப்படி அவரைப் பயணிக்க அனுமதித்தீர்கள்?" — சந்திரமதியை கேட்டான். அவள் சலிப்புடன் சிங்கமல்லனைப் பார்த்தாள்.

"உனது பாட்டனின் பிடிவாதம் நீ அறியாததா? எல்லாம் உனது தந்தையால் வந்தது. திகம்பரத் துறவியாகத் திரிந்து கொண்டிருந்தவரை, காடவ அரசனாக்கி, என்னையும் அவருக்குத் திருமணம் செய்து அவரது பிடிவாதங்களைச் சகித்துக் கொள்ளும்படி செய்துவிட்டாரே. 'எனது சிங்கமல்லன் புலிகேசியை வென்றான்.. எனது சிங்கமல்லன் மல்லைச் சிற்பக் கோயில் பணிகளை முடித்துவிட்டான்..' என்று எப்போதும் உன் பெருமைதான். ஜெயவர்மன்

அஞ்சிலையிடம் கொடுத்திருந்த சுவடிகளை நீ கண்டு பிடித்துவிட்டாய் என்று அறிந்ததும், அவர் உடனே காஞ்சிக்குப் போக வேண்டும் என்று உண்ணா நோன்பே இருக்கத் தொடங்கிவிட்டார். அதுதான் அழைத்து வந்தேன். இனி உன் பாடு.. உனது பாட்டன் பாடு! என்னை ஆளைவிடுங்கள். எனது மருமகள் ராஜசந்தனாவுடன் பொழுதைக் கூ க்கப் போகிறேன்!" வேடிக்கையாகக் கூறினாள் சந்திரமதி.

"சற்றுப் பொறுங்கள், காடவ அரசியாரே!" தண்டி சிரித்தபடி குறுக்கே புகுந்தான். "உங்கள் கணவரின் பொறுப்பினை எங்கள் சிங்கமல்லனிடம் கொடுக்காதீர் கள். அவருக்குத் தற்போது நிறைய பணிகள். ஓய்வின்றி உழைக்கிறார்." தண்டி கூற, ராஜசந்தனா மகனைக் கேலியாகப் பார்த்தாள்.

"மன்னனின் பணி என்றால் சும்மாவா? உனக்குத்தான் அமைச்சர்கள், அதிகாரிகள் என்று பல கைகள் உள்ளனவே. உனது பணிகளை அவர்களுடன் பகிர்ந்து கொள். இல்லையேல் உனது தந்தையைப் போன்று தசகுமாரர்களை வைத்துக் கொள்!" — அரசி சிரித்தபடி கூறினாள்.

"அரசியாரே! அரசுப் பணிகள் என்றால் பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் மகனுக்குக் காதல் பணிகள் நிறைய உள்ளன. அதை அவன் யாருடன் பகிர்ந்து கொள்வான்..?" என்றதும் பீமவர்மன் மற்றும் சந்திரமதி கூட வியப்புடன் சிங்கமல்லனை நோக்கினர்.

"காதல் வயப்பட்டுவிட்டாயா? அப்போது சரி! அடுத்தது உக்கிர நரசிம்மனை லட்சுமி நரசிம்மனாக மாற்ற வேண்டியதுதான். உன் காதலி எந்த நாட்டு இளவரசி?" — சந்திரமதி கேட்டாள்.

தண்டி தனது பணி முடிந்துவிட்டதைப் போன்று சிங்கமல்லனின் பின்பாகச் சென்று நின்று கொண்டான்.

*இந்த விவகாரம் குறித்துப் பேசுவதற்காகத்தான் தண்டியைத் தயார்படுத்தி அழைத்து வந்திருந்தான், சிங்கமல்லன். பெருந்தேவி ஒரு சாதாரண வைணவக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை அவனது தாய் ஏற்பாளோ மாட்டாளோ?*

*"அவள் இளவரசியுமல்ல, அரச குடும்பத்தைச் சேர்ந்தவளும் அல்ல. ஒரு சாதாரண வைணவக் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். நமது ஜெயவர்மன் அத்திமலையான் இருக்கும் இடத்தைக் குறித்துச் சுவடிகளை ஒப்படைத்திருந்தாரே.. அஞ்சிலை அணங்கின் பெயர்த்தி. அஞ்சிலை அணங்கினைச் சந்திக்க வைத்துச் சுவடிகளை என்னிடம் ஒப்படைத்ததும் அவளே. எனது உயிரைக் காப்பாற்றியதும் அவளே. அவள் மட்டும் இல்லையென்றால், நான் புலிகேசியைப் போரில் சந்திக்காமல் தற்கொலை செய்து கொண்டிருப்பேன். இன்று நம் தந்தைக்கு நான் கொடுத்திருந்த வாக்குகளைச் செய்து முடித்ததற்கு அவள்தான் காரணம். அவள் பெயர் பெருந்தேவி."* — தனது தாயைப் பார்த்துக் கூறினான், சிங்கமல்லன்.*

* தாயிடம் கூறியது போல், தான் நடுநிசியில் அத்திமலை ஆலயத்தின் வாயிலில் சந்தித்த பெருந்தேவியைத் திருமணம் செய்து கொண்டு தனது அரசியாக அமர வைத்தான். திருவேங்கடத்தைச் சேர்ந்த பெருந்தேவி அரசியாக அமர்ந்ததும் ஸாமவை என்று அழைக்கப்பட்டாள். தன்னை அரசியாக அமர வைத்த திருவேங்கடவனுக்கு நிலங்களையும், தனது எடைக்கு எடை தங்கத்தையும் கொடுத்த ஸாமவை, போக ஸ்ரீனிவாசர் என்கிற உற்சவ விக்கிரகத்தையும் செய்து திருவேங்கடத்திற்கு அளித்தாள். ஆலயக் கல்வெட்டுகளில் இந்த போக ஸ்ரீனிவாசரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரங்கள் அரசி பெருந்தேவி ஸாமவையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

The idol is a faithful copy of the Dhruva Bera except that the Sanka and Chakra are fixed in the case of Bhoga Srinivasa.[2] On the pitham and below the feet of the deity is a Yantra that is in the shape of two interplaced equilateral triangle. - என்று குறிப்புகள் கூறுகின்றன.
- திருமலை மகாத்மியம்.

"நீ அரசன். அவளைத்தான் மணக்கப் போகிறேன் என்று நீ கூறிவிட்டால், நான் யார் அதைத் தடுக்க..?" — ராஜசந்தனா கூற, அவளை நன்றியுடன் நோக்கினான், சிங்கமல்லன்.

"உங்கள் அனுமதியுடன் அத்திமலையானைக் கண்டுபிடித்து அவனது சந்நிதியில் வைத்ததும் நான் பெருந்தேவியைத் திருமணம் செய்து கொள்ள எண்ணியிருக்கிறேன்!" — சிங்கமல்லன் கூறினான்.

"அதற்கான ஏற்பாடுகளில் நான் இறங்குகிறேன். நீ ஒருமுறை பெருந்தேவியை அரண்மனைக்கு அழைத்து வந்து காட்டு!" பீமவர்மன் கூற, பணிவுடன் அவரை நோக்கித் தலையசைத்தான், சிங்கமல்லன்.

அன்று மாலை தண்டி சென்று பெருந்தேவியையும், அவளது தந்தையையும் அழைத்து வர, அரச குடும்பத்தினருக்குப் பெருந்தேவியைப் பார்த்ததுமே பிடித்துப் போனது..!

வருங்கால மருமகளை அணைத்து உச்சி முகர்ந்தாள், ராஜசந்தனா.

"நரசிம்ம பல்லவனின் மனைவியாக — அரசியாக அமரப் போகும் நீ ஸாமவை பெருந்தேவி என்று அழைக்கப்படுவாய்! அரசியாகத் திகழப்போகும் நீ அதற்குரிய பழக்க வழக்கங்களைக் கற்றறிய வேண்டும் அல்லவா..? அதுவரை நீயும், உனது பெற்றோரும் நமது ஒத்தாடை அரண்மனையிலேயே தங்கலாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய், தண்டி!" — ராஜசந்தனா கூறினாள்.

அன்றிரவு —

பீமவர்மன் மஞ்சத்தில் படுத்திருக்க, அவனைச் சுற்றி, சிங்கமல்லன், தண்டி, ராஜகுரு திரிமூர்த்தி லோகிதர், தலைமை அமைச்சர் அரங்கநாத ஆமாத்தியார் அத்தி மலைத்தேவன் ஆலய அதிகாரி மாயகூத்த மடலூருவார்,

*தளபதி பரஞ்சோதி அனைவரும் அமர்ந்திருந்தனர். பீமவர்மனின் தலைப்புறமாகச் சந்திரமதியும், ராஜசந்தனாவும் அமர்ந்திருந்தனர்.*

*அஞ்சிலை அணங்கிடம் இருந்து பெற்று வந்த சுவடிகளை வஸ்திரத்திலிருந்து எடுத்து அதை ஒருமுறை உயர்த்தி அனைவருக்கும் காட்டினார், லோகிதர்.*

*"இளவரசன் ஜெயவர்மன் அஞ்சிலை அணங்கிடம் கொடுத்து வைத்திருந்த சுவடி...!" — லோகிதர் கூறினார்.*

*"ஆம்! ஹுயன் சாங் அளித்த ஓலையில் குறிப்பிடப் பட்டிருந்த சுவடிகள்தாம் இவை! அத்திமலையான் ஆலயத்திற்குச் சென்ற எனது அண்ணன் ஜெயவர்மன் நவரத்ன பல்லவியின் தேகம் அங்கிருந்த இரத்தின மண்டபத்தில் ஊசலாடிக் கொண்டிருந்ததைக் கண்டான். அவளது கையில் இந்தச் சுவடிகள் இருந்தன. அதைத்தான் அவன் அஞ்சிலை அணங்கிடம் ஒப்படைத்திருக்கிறான்." — பீமவர்மன் கூறினார்.*

*"சுவடிகளை வாசிக்கட்டுமா!" — திரிமூர்த்தி லோகிதர் சிங்கமல்லனை நோக்க, அவன் தலையசைத்தான்.*

**"பரிவேள்வி பரம்பொருளை**
**பறிபோகவிடுவேனோ?**
**பரிதவித்துப் புறம் மறைத்து**
**பல்லவம் புகழ் காக்கின்றேன்.**
**நால்திசை தொண்டையர்**
**நடுவே பல்கல நவமணி**
**ஆரணங்கின் பெயரதுவே**
**பாதையைப் பகர்ந்திடுமே**
**புதிருரைத்து, படம்தீட்டி**
**பாமகள் யான் பகல்கின்றேன்**
**பாதகரைச் சிரமறுத்து**
**துடமதில் தொடர்வீரே.**
**முடிவில் துவக்கம்**
**துவக்கத்தில் முடிவு,**
**தேவியவள் முடிவே**

**தேவனவன் தொடக்கம்.**
**அலரவள் மலர, மலரவள் அலற,**
**அமுதநீர் துறையில்**
**கிட்டும் ரவிரத்தினமே**
**அத்தியனின் முதல் வரம்.."**

*ராஜகுரு லோகிதர் சுவடியை வாசித்து முடிக்க அங்கே அமைதி நிலவியது.*

*"நவரத்ன பல்லவி மிகவும் இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தாள். அத்திமலை ஆலயத்தின் பொற்றாமரைக் குளத்தருகே உள்ள மண்டபத்தில்தான் அமர்ந்து கவிதைகளை புனைந்து கொண்டிருப்பாள். அங்கேயே அவள் தனது உயிரை மாய்த்துக் கொண்டது, கொடுமைதான்.." — பீமவர்மன் சோகத்துடன் கூறினான்.*

*"இளவரசி அளித்திருக்கும் குறிப்புகளை எவரேனும் புரிந்து கொண்டீர்களா??" — சிங்கமல்லன் கேட்டான்.*

*"முதல் மூன்று குறிப்புகளும் புரிய வருகிறது. காரணம் அவை குறிப்புகள் அல்ல. நடந்தது என்ன என்பதை மட்டுமே இளவரசியார் விவரித்திருக்கிறார். பரி வேள்வி பரம்பொருள் என்று அத்திமலைத்தேவனைக் குறிப்பிடுகிறார். அஸ்வமேத யாகத்தில் தோன்றியவன் என்று குறிப்பிடுகிறார். தனது கணவன் மற்றும் சதியாளர்களின் திட்டத்தைச் செவியுற்று தான் பரிதவித்துப் போனதாகக் கூறி, அதனை தான் மறைத்து வைத்துப் பல்லவர்களின் மானத்தைக் காப்பாற்றியதாகக் கூறுகிறார்.*

**'நால்திசை தொண்டையர்**
**நடுவே பல்கல நவமணி**
**ஆரணங்கின் பெயரதுவே**
**பாதையைப் பகர்ந்திடுமே..'**

*"நால்திசை தொண்டையர் என்று தனது நான்கு சகோதரர்களைக் குறிப்பிடுகிறார். அவர்களின் நடுவே தான் பல அணிகலன்களைப் பூட்டியிருந்த*

*இளவரசியாகத் திகழ்ந்ததாகவும் கூறுகிறார். நவமணி என்கிற நவரத்தினப் பல்லவி என்று தனது பெயரை இளவரசி கூறுகிறார்..” தண்டி கூறினான்.*

**“‘புதிருரைத்து, படம்தீட்டி**
**பாமகள் யான் பகல்கின்றேன்**
**பாதகரைச் சிரமறுத்து**
**தடமதில் தொடர்வீரே..’**

*என்கிற மூன்றாம் குறிப்பில், தான் சிலையை மறைத்து வைத்திருக்கும் இடத்தை மறைமுகமாகக் குறித்து, வரைபடம் வரைந்து வழியைக் கூறியிருப்பதாகத் தெரிவிக்கிறார். சதியாளர்களிடம் சிலை சிக்கிவிடாமல் அவர்களை ஒழித்துவிட்டு, தனது குறிப்புகளின் மூலம் சிலையைக் கண்டுபிடித்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று இளவரசியார் வேண்டியிருக்கிறார்.”*

*“ஆனால் நான்காவது குறிப்புதான் சிந்திக்க வைக்கிறது.*

**‘தேவியவள் முடிவே**
**தேவனவன் தொடக்கம்.**
**அலரவள் மலர, மலரவள் அலற,**
**அமுதநீர் துறையில்**
**கிட்டும் ரவிரத்தினமே**
**அத்தியனின் முதல் வரம்..’**

*என்கிற குறிப்பில் இருந்துதான், சிலை இருக்கும் பாதையைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார். அங்கிருந்து தான் நாம் மிகவும் கவனமாகப் பொருளறிந்து அந்தப் பாதையில் பயணிக்க வேண்டும்!” — தண்டி கூறினான்.*

*“அத்தியனின் முதல் வரம் என்பதால், இதுவே முதல் குறிப்பு என்பது மட்டும் புரிகிறது..” — சிங்கமல்லன் கூறினான்.*

*“தேவியவள் முடிவே தேவனவன் தொடக்கம் என்பதால் பெருந்தேவி தாயின் சந்நிதியில் பாதை தொடங்குகின்றது என்று நினைக்கிறேன்..” ராஜகுரு*

லோகிதர் கூற, தலைமை அமைச்சர் ஆமாத்தியார் மன்னனைப் பார்த்தார்.

"உத்தரவிட்டால் உடனே தேடத் தொடங்கிவிடலாம்.." என்றதும், யோசனையுடன் தனது முகவாயைத் தடவினான், சிங்கமல்லன்.

"ஆலயத் தரிசனத்திற்கு வரும் அன்பர்களுக்கு நம்மால் தொந்தரவுகள் நேரக்கூடாது. இரவு திருகாப்பு சார்த்திய பிறகு தேடுவோம்." — சிங்கமல்லன் கூறினான்.

"அன்றாடம் மதியம் உணவு அருந்திய பிறகு அனைவரும் இந்த ஆலோசனை அறையில் குழும வேண்டும். அத்திமலைத்தேவன் பிரதிமை கிடைக்கும் வரை நமது ஆலோசனைக் கூட்டம் அன்றாடம் தொடரும். இன்றைய இரவு தேடுதல் படலத்தைத் துவக்குங்கள். ஏதாவது முக்கியச் செய்தி இருந்தால், நடுநிசி என்றாலும் என்னை உறக்கத்திலிருந்து எழுப்பலாம். தண்டி! நீயே தேடுதல் படலங்களுக்குத் தலைமை ஏற்று நடத்து." — சிங்கமல்லன் கூற, தண்டி தலையசைத்து நண்பனின் ஆணையை ஏற்றான்.

ஆலய அதிகாரி மாயகூத்த மடலூருவார் மற்றும் அர்ச்சகர் சதானந்த அத்தங்கி ஆகியோர் முன்னிலையில் அன்றிரவு அத்திமலை ஆலயத்தின் பெருந்தேவி பிராட்டி சந்நிதியில் தண்டி காவலர்களுடன் தேடுதல் வேட்டையைத் தொடங்கினான். இரவு முழுவதும் தேடியும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

மறுநாள் —

இரவெல்லாம் கண்விழித்துத் தேடுதல் படலத்தை மேற்கொண்டிருந்த தண்டி, சிவந்த கண்களோடு சிங்கமல்லனிடம் தனது தேடுதல் வேட்டையைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான்.

தலைமை அமைச்சர் அரங்கநாத ஆமாத்தியார் யோசித்தபடி அமர்ந்திருந்தார்.

"அரசே! நாம் இளவரசியார் அளித்திருக்கும் குறிப்பின் முதல் அடியை மட்டுமே மனத்தில் கொண்டு தேடுகிறோம். எனக்கென்னவோ, குறிப்பின் முதல் அடியை மட்டும் மனத்தில் கொள்ளாமல், முழுவதுமாக உருவகப்படுத்திக் கொண்டு பின்னர் பொருளறிந்து தேட வேண்டுமோ என்று தோன்றுகிறது! அந்தக் குறிப்பில் 'அமுத நீர்த் துறையில்..' என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நினைவுபடுத்த விரும்புகிறேன்." — ஆமாத்தியார் கூறவும், சிங்கமல்லன் அவரை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

"அமுத நீர்த் துறை என்றால்..?" — சிங்கமல்லன் கேட்டான்.

"தேவர்களுக்கு அமுதம் எங்கே கிட்டியது.. பாற்கடலில் அல்லவா? எனவே அமுத நீர்த் துறை என்றால், நமது காஞ்சியில் பாயும் பாலாற்றினை இளவரசி குறிப்பிடுகிறார் போலும்.. தேவியின் முடிவு என்றால், உக்கிர சரஸ்வதி வேகவதியாகப் பாய்ந்து முக்கூடலில் பாற்கடலில் கலக்கிறார். அங்குதானே தேவி என்கிற வேகவதி முடியப் பாலாறு தொடருகிறது.." — ஆமாத்தியார் கூற, அனைவருக்கும் அவர் கூறுவதே சாத்தியமாகப்பட்டது.

"பலே ஆமாத்தியாரே! முக்கூடல் சங்கமத்தில் தேடிப் பார்ப்போம்!" — சிங்கமல்லன் கூற, தண்டி தலையசைத்தான்.

ஆலோசனைக் கூட்டம் முடிந்ததும், காவல் படையினரோடு முக்கூடல் சங்கமத்திற்கு விரைந்தான்.

மூவரில் யாருக்கு வீர்யம் அதிகம் என்பது போன்று, பாலாறு, செய்யாறு மற்றும் வேகவதி மூன்றுமே ஆவேசமாகப் பெருகிக் கொண்டிருக்க, சங்கமமாகும் இடத்தில் நிலத்தைத் தோண்டிப் பார்க்கத் துவங்கினர், காவல் படையினர். சிலர் அருகில் இருந்த வேங்கடவன் ஆலயத்திலும் சென்று தேடுதல் பணிகளை

மேற்கொண்டனர். சூரிய அஸ்தமனம் வரையில் தேடிக் கொண்டே இருந்தனர்.

அரசவைப் பணிகளை முடித்துக்கொண்டு நீராடி விட்டு, அத்திமலையானின் ஆலயத்திற்குச் செல்லும் முடிவுடன் அரண்மனையைவிட்டு வெளியே வந்தான். ஒத்தாடை சிவனாரின் ஆலயத்தின் நந்தவனத்திற்குள் நுழையும் இடத்தில்தான் ஸாமவை பெருந்தேவிக்கு ஜாகை ஒதுக்கப்பட்டிருந்தது. அவளையும் உடன் அழைத்துக் கொண்டு போனால் என்ன என்கிற எண்ணத்துடன் அவளது ஜாகையை நோக்கி நடந்தான்.

"பெருந்தேவி இப்போதுதான் அத்திமலையான் ஆலயத்திற்குப் புறப்பட்டுச் சென்றாள்!" — திருவேங்கடத்தில் இருந்து வந்திருந்த ஸாமவை பெருந்தேவியின் தாயார் பத்மவல்லி பெருமையுடன் கூறினாள். பல்லவ அரசனே தனது மருமகன் என்கிற பெருமை இருக்காதா என்ன?

"சரி! நான் ஆலயத்தில் அவளைச் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு, அத்தியூருக்கு விரைந்தான். அத்தி மலையில் தரிசனத்தை முடித்தான்.

அங்கு அத்திமலையானாக அருள்பாலிக்கும் வரத நாராயணனை நோக்கினான்.

"அரசன் வேட்டைக்குச் செல்லும் போது ஆட்சி செய்யும் தலைமை அமைச்சராக, நீர் அத்திமலைத் தேவனின் பணிகளைச் செய்து கொண்டு இருக்கின்றீர் என்பது அறிந்தேன். உமது இருப்பிடமான ஸ்ரீவரத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்கிற உமது துடிப்பை உணருகிறேன். அத்திமலைத்தேவன் வந்தவுடன் மீண்டும் உங்களை ஸ்ரீவரம் அனுப்பி வைக்கிறேன்." — சிங்கமல்லன் தனக்குள் கூறிக் கொண்டான்.

தரிசனத்தை முடித்துக் கொண்டு ஆலயத்தைச் சுற்றி வந்தான். அவனது கண்கள் பெருந்தேவியைத் தேடின.

பொற்றாமரைக் குளத்தின் கரையில் இரத்தின மண்டபத்தில் அமர்ந்து ஆழ்ந்த யோசனையில் இருந்தாள்.

பொற்றாமரைக் குளத்தைக் கடந்து மண்டபத்தை நோக்கி நடந்தான். இவன் வருவதை அவள் கவனிக்கவில்லை.

"ஸாமவை!"

குரலெல்லாம் ஆசை பொங்க, அவளை அழைத்தான், சிங்கமல்லன்.

அவள் திரும்பி நோக்கவேயில்லை.

"பெருந்தேவி!"

இப்பவும் அவள் திரும்பி நோக்கவில்லை.

புன்முறுவலித்தபடி அவள் முன்பு நின்று தனது இரு கைகளையும் அவள் முகத்தின் முன்பாக பட்டென்று அடிக்க, கண்கள் படபடக்கத் தனது மோன நிலையில் இருந்து வெளியே வந்தாள். அவனை வியப்புடன் பார்த்தாள்.

"நீங்கள் எப்போது வந்தீர்கள்?"

"உனக்கு ஸாமவை என்கிற பெயர் பிடிக்க வில்லையா?" — கவலையுடன் கேட்டான், சிங்கமல்லன்.

"ஏன்?" — திகைத்தாள் பெருந்தேவி.

"ஸாமவை என்று அழைத்தேன்.. திரும்பிப் பார்க்கவில்லை. பெருந்தேவி என்று அழைத்தேன்.. அப்படியும் திரும்பி நோக்கவில்லை.."

"சிங்கமல்லரின் வருங்கால மனையாளே என்று அழைத்திருந்தால் நான் திரும்பிப் பார்த்திருப்பேன் அல்லவா!" — சிரித்தாள் ஸாமவை பெருந்தேவி.

"அதுதான் பல்லவ அரசனையே பிடித்துவிட்டாயே. இன்னும் எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" — சிங்கமல்லன் கேட்டான்.

"நேற்று எனது மாளிகையில் இரண்டு பணிப்பெண்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தேன்.."

"என்ன பேசிக்கொண்டிருந்தார்கள்?" — சிங்கமல்லன் அவளது அருகே அமர்ந்தான்.

"பல்லவ அரச குடும்பத்தில் பெண் குழந்தைகளே பிறப்பதில்லையாமே. அப்படிப் பிறந்தாலும் அவர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடுகின்றனராமே..? அவனிசிம்மரின் தங்கை நவரத்ன பல்லவி, ராஜவர்மரின் மகள் ஜெயஸ்ரீ என்று இருவர் தற்கொலை செய்து கொண்டனராமே.." — கவலையுடன் கேட்டாள், ஸாமவை பெருந்தேவி.

"அது உண்மைதான் என்று கூறும் நிலையில் இருக்கிறேன் ஸாமவை! மறுக்க நினைக்கத்தான் ஆசை. ஆனால் பல்லவ சரித்திர ஏடுகளில் அம்மாதிரி இரு தற்கொலைகள் நடந்திருப்பது உண்மை. ஏன்..? ஜெயவர்மரின் மனைவி சாயாதேவியும் தற்கொலை செய்து கொண்டுதான் மறைந்தார். அதைத் தவிர இரண்டு கொலைகளும் நடந்துள்ளன. எனக்குப் புரிகிறது! இவ்வளவு துர்சம்பவங்கள் நடைபெற்றிருக்கும் பல்லவ அரச குடும்பத்தின் மருமகளாக வருவது குறித்து அச்சப்படுகிறாய் போல இருக்கிறது?" — சிங்கமல்லன் ஒருவித பயத்துடன் அவளை நோக்கினான்.

"இதென்ன அபத்தமான கேள்வி! எனது புக்ககத்தின் குறைகளை எப்படி நீக்குவது என்கிற கவலையில்தான் கேட்டேன். நமக்குத் திருமணம் முடிந்ததும், நான் ஒரு பெண் குழந்தையைத்தான் பெற்றுக் கொள்ளப் போகிறேன். பல்லவ இளவரசிகள் துர்பாக்கியசாலிகள்

என்கிற மூடநம்பிக்கையை களைந்து, எனது மகளை நூறாண்டு காலம் வாழ வைப்பேன், போதுமா!" — ஸாமவை கூற, அவளை நன்றியுடன் நோக்கினான், சிங்கமல்லன்.

"எதற்காக இங்கே வந்து தனிமையில் அமர்ந்திருக்கிறாய்?" — சிங்கமல்லன் கேட்க, ஸாமவை ஒருமுறை அந்த மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தாள்.

"உங்களது அத்தை பாட்டியார் நவரத்ன தேவி, கடைசியாக இங்குதான் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் அல்லவா?" — ஸாமவை கேட்க, 'ஆம்' என்கிற பாவனையில் தலையசைத்தான், சிங்கமல்லன்.

"கடைசியாக, தூக்கில் தொங்குவதற்கு முன்பாக அவர் என்ன நினைத்திருப்பார் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.." — ஸாமவை கூறினாள்.

"அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்..? அத்திமலையானைத் தேடும் படலம் தொடங்கிவிட்டது. பெருந்தேவி பிராட்டி சந்நிதி மற்றும் பாலாற்றங்கரையில் சிலையைத் தேடிக் கொண்டு இருக்கின்றனர்." — சிங்கமல்லன் கூறினான்.

"நவரத்ன தேவிக்கு இந்த ஆலயத்தில் மிகவும் பிடித்த இடம் இதுதான் இல்லையா?" — ஸாமவை கேட்டாள்.

"ஆம்! இங்குதான் அன்றாடம் அமர்ந்து கவிதைகளை புனைந்து கொண்டிருப்பார். அவர் அரண் மனையில் இல்லையென்றால் இங்குதான் இருப்பார் என்று அவரது சகோதரர் பீமவர்மர் கூறினார்." — சிங்க மல்லன் கூறினான்.

"தனது மனதுக்கு உகந்த இடத்திலேயே அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது கொடுமையான விஷயம். ஆனால் ஒரு சிறு கேள்வி.. அவர் இந்த ஆலயத்திற்கு வந்தது எதற்காக? இந்த ரத்ன

மண்டபத்தில் அமர்ந்து கவிதைகளை புனைவதற்கா.. அல்லது அத்திமலைத்தேவனை தரிசிப்பதற்கா?"

சிங்கமல்லன் திகைத்தான்.

"இதென்ன கேள்வி ஸாமவை? அத்திமலைத் தேவனைக் காப்பதற்காக தனது இன்னுயிரையே தந்திருக்கிறாள். அத்திவரதன் மீது அளவு கடந்த பக்தி. அவன் கோயிலில் இருக்கும் போது தனக்கு இலக்கிய ஆர்வம் பொங்கிப் பெருகுவதாகத் தனது சகோதரர் களிடம் கூறுவாராம்." — சிங்கமல்லன் கூறினான்.

"அப்படி அத்திமலையானின் மீது பக்தி கொண் டிருப்பவர், அவரது ஆலயத்திலேயே தற்கொலை செய்து கோயிலின் சாந்நித்யத்திற்குக் கேடு விளைவிப்பாரா?" — ஸாமவை கேட்டதும் சிங்கமல்லன் அதிர்ந்தான்.

"என்ன சொல்ல வருகிறாய்? அவரை யாராவது கொலை செய்து இந்த மண்டபத்தில் தூக்கில் தொங்கவிட்டிருப்பார்கள் என்கிறாயா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை. இந்த மண்டபத்தில் நவரத்ன பல்லவி தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் ஏதோ உள்ளது. ஆலயத்தில் இருந்து அத்திமலையானின் சிலையைத் தனது சீதன வெள்ளாட்டிகளின் உதவியோடு பத்திரப்படுத்திவிட்டு, பிறகே இங்கு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். அவரது வெள்ளாட்டிகளும் தங்களையே மாய்த்துக் கொண்டால், சிலை எங்கிருக்கிறது என்கிற தகவலைத் தங்களைச் சித்திரவதை செய்தாவது தெரிந்து கொள்ளக் கூடும் என்பதற்காகவே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரிகிறது!" — ஸாமவை யோசித்தாள்.

ஸாமவையுடன் தங்களது எதிர்காலக் கனவுகளைப் பற்றிப் பேச வேண்டும் என்றுதான் வந்திருந்தான், சிங்கமல்லன். ஆனால் அவள் சிலையினைச் சுற்றியுள்ள

மர்மங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாளே! ஆனால் இவர்கள் அரண்மனையில் ஆலோசித்ததைவிட, மிக ஆழமாக யோசிக்கின்றாளே.

தனது தந்தை மகேந்திர பல்லவன் கூறியது நினைவுக்கு வந்தது. சித்ரகுப்தன் ஆலயத்தில் கல்தூண் ஒன்றை ஆராய்ந்து கடக குகை மர்மத்தை உடைத்தது, ராஜவர்மரின் மனைவி ராஜஸ்ரீதான். அதுபோன்று, மூன்றாம் மதிமலை என்கிற சிம்மகிரி பொக்கிஷங்களைப் பற்றிக் கண்டறிந்ததும் ராஜஸ்ரீதான். ஆண்களின் சிந்தனை ஒரு பக்கமாகவே பாயும். காரணம் அவர்களது மூளையைக் காக்கும் ஓடு தேங்காய் மட்டையினைப் போன்று உறுதியானது. பெண்களுக்குக் கூரிய சிந்தனையைச் செய்யும் விதமாக அவர்களது ஓடு சகதியினைப் போன்று மென்மையானது என்று மகேந்திரன் கூறியிருந்தான். உண்மைதான்! ஸாமவையைப் போன்று ஆலோசனைக் கூட்டத்தில் யாருமே சிந்திக்கவில்லையே!

"உங்கள் பீமவர்மரிடம் கேளுங்கள். இந்த மண்டபம் எப்போது கட்டப்பட்டது?" ஸாமவை கேட்டாள்.

"அதனை அவரிடம் எதற்குக் கேட்க வேண்டும்.. இங்கேயே கோயில் அதிகாரி மாயகூத்த மடலூருவாரைக் கேட்கலாமே!" என்றவன் சுற்றிலும் பார்த்தான். ஒரு ஆலயப் பணியாளன் பொற்றாமரைக் குளத்தில் மிதந்த இலைகளை நீக்கிக் கொண்டிருந்தான். அவனைச் சைகை செய்து அழைத்தான், சிங்கமல்லன்.

"நீ சென்று மாயகூத்தரை நான் அழைத்ததாக உடனே இங்கே அழைத்து வா!" என்று பணித்ததும், தலை வணங்கிவிட்டு அவன் ஆலய அலுவலகத்தை நோக்கி ஓடினான்.

"எதனால் உனக்கு இந்த யோசனைகள் தோன்றுகின்றன, ஸாமவை?" — சிங்கமல்லன் கேட்டான்.

"இறந்தவர்கள் தேகங்களை மட்டுமே துறக்கிறார்கள். அவர்களது எண்ண அலைகள் இறந்த இடத்திலேயே தான் பரவிக்கொண்டிருக்கும். பெருங்காயம் வைத்திருந்த கலயம், பெருங்காயம் தீர்ந்தாலும், காலமெல்லாம் அதன் வாசத்தை உணர்த்தும். எங்கேயோ மழை பெய்தால், இங்கு மண்வாசம் வீசும் அல்லவா? நவரத்ன பல்லவியின் எண்ண அலைகளை உணர முயன்றுதான் நான் இங்கே அமர்ந்து யோசிக்கின்றேன். தனக்கு உகந்த இடத்தினில் அவள் ஏன் தற்கொலை செய்து கொண்டாள்? கடைசியாக அவள் எழுதிய அந்தக் குறிப்பைச் சற்றுக் கூறுங்களேன்!" — ஸாமவை கோரினாள்.

சிங்கமல்லனின் சிந்தனையில் அந்தக் குறிப்பு ஏற்கெனவே நன்றாகப் பதிந்து போயிருந்தது. உடனேயே அதனை ஒப்புவித்தான்.

**"முடிவில் துவக்கம்<br>
துவக்கத்தில் முடிவு,<br>
தேவியவள் முடிவே<br>
தேவனவன் தொடக்கம்.<br>
அலரவள் மலர, மலரவள் அலற,<br>
அமுதநீர் துறையில்<br>
கிட்டும் ரவிரத்தினமே<br>
அத்தியனின் முதல் வரம்.."**

சிங்கமல்லன் கூறிய குறிப்பினை மனதினுள் ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள் ஸாமவை!

சரியாக ஓட்டமும் நடையுமாக வந்தார், ஆலய அதிகாரி மாயகூத்த மடலூருவார்.

"மடலூருவாரே! இந்த இரத்தின மண்டபம் எப்போது கட்டப்பட்டது..?" — சிங்கமல்லன் கேட்டான்.

"பல்லவ சாம்ராஜ்யத்தில் பெண் குழந்தையே பிறக்காது என்கிற ஒரு சாபம் இருப்பதாகக் கூறப்பட்டது. மன்னர் சிம்மவர்மருக்கு நான்கு மகன்கள் வரிசையாகப்

பிறந்தனர். அந்த சாபத்தைப் பொய்ப்பிப்பது போன்று நவரத்ன பல்லவி தேவியார் பிறந்தார். பல்லவமே அவரைக் கொண்டாடியது. அவர் பிறந்ததைக் கொண்டாடும் வகையில் காஞ்சியில் உள்ள திருமால் விண்ணகரங்களில் ரத்ன மண்டபங்கள் கட்டப்பட்டன. சிவாலயங்களில் ஸ்வர்ண அபிஷேகத் தாரைகள் வழங்கப்பட்டன. இளவரசி நவரத்ன பல்லவியாரின் முதல் பிறந்த தினத்தன்று இந்த மண்டபத்தைச் சிம்மவர்மரே துவக்கி வைத்தார்" என்று மாயகூத்த மடலூருவார் கூறிய அடுத்தகணம் துள்ளி எழுந்தாள், ஸாமவை.

"அரசே! விஷயம் இங்கேதான் உள்ளது. பெருந்தேவி தாயார் சந்நிதியிலோ, பாலாற்றங்கரையிலோ தகவல் இல்லை. 'முடிவில் துவக்கம், துவக்கத்தில் முடிவு' என்கிற குறிப்பைக் கவனியுங்கள். பல்லவத்தில் பெண் குழந்தைகளே பிறக்காது என்கிற சாபத்தை முடிவு கட்டும் விதமாக தான் பிறந்ததை முடிவில் துவக்கம் என்கிறார் இளவரசி. தனது தொடக்கமான பிறப்பு, சாபம் என்கிற மூடத்தனத்தை முடித்து வைத்தது என்கிறார், இளவரசி. அதே சமயம், அத்திமலையானின் இருப்பிடத்திற்குப் போவதற்கான பாதையின் துவக்கம் தான் தற்கொலை செய்து முடிவைத் தேடிக் கொண்ட இதோ இந்த மண்டபத்தில்தான் இருக்கிறது என்கிறார்.. நாம் இங்கேதான் தேட வேண்டும்" என்றவள் இரத்தின மண்டபத்தைச் சுற்றி வந்தாள்.

சிங்கமல்லன் ஸாமவையைப் பிரமிப்புடன் பார்த்தபடி அமர்ந்திருந்தான். தனது பலத்தோடு இவளது சிந்தனாச் சக்தியும் சேர்ந்தால் அமரலோகத்தையே கைப்பற்றலாமே! ஆலய அதிகாரி மாயகூத்தரும் வியப்புடன் ஸாமவையை நோக்கினார். வருங்கால அரசி கூரிய அறிவு படைத்தவள் போல் இருக்கிறதே! காஞ்சிக்கு இப்படி ஒரு அரசி தேவைதான்..

மண்டபத்தை ஓரிருமுறை சுற்றி வந்தவள், அதனை மேலும் கீழும் ஆராய்ந்தாள்.

மண்டபத்தின் மேல்பகுதி, கீழ் பகுதி என்று ஆராய்ந்தவள் மண்டபக் கூரையின் உள்பகுதியை ஆராய்ந்தாள். பெருந்தேவி பிராட்டி வெள்ளிக்கிழமைகளில் அந்த மண்டபத்தில் ஊஞ்சலாடுவது வழக்கம். ஊஞ்சலைப் பிணைப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கொக்கிகளைக் கவனித்தாள். கொக்கிகள் மண்டபத்தின் மேல்கூரையில் பதிக்கப்பட்டிருந்த இடத்தின் துவாரங்கள் வழியாகச் சூரிய ஒளி கீழே ஊடுருவி, மேடையின் மையத்தில் இரு புள்ளிகளாகத் தெரிந்தன. அந்த ஒளியைத்தான் முதலில் பார்த்தாள். பிறகு அந்த மேடையின் மையத்தில், கருங்கல்லில் செதுக்கியிருந்த அந்த ஓவியத்தைப் பார்த்தாள். சூரியனின் வடிவம் அந்தக் கல்லில் செதுக்கப்பட்டிருந்தது.

பரபரப்புடன் மீண்டும் மேடையில் ஏறிய ஸாமவை அங்கே மண்டியிட்டாள்.

"அரசே! நவரத்ன பல்லவியின் குறிப்பை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்..

முடிவில் துவக்கம்

துவக்கத்தில் முடிவு,

இளவரசியின் துவக்கம் அதாவது பிறப்பு பல்லவ சாபத்தின் முடிவு —

இளவரசியின் முடிவுதான் அதாவது இறப்புதான் ரகசியத்தின் துவக்கம் —

அதனைத்தான் தேவியவள் முடிவே தேவனவன் தொடக்கம்... என்கிறார்.

அடுத்து அலரவள் மலர, மலரவள் அலற என்று கூறுகிறார்.

அலரவள் என்பவள் பெருந்தேவி பிராட்டி. அவள் மலர்ந்த இடம், அதாவது அவதரித்த இடம் இந்தப் பொற்றாமரைப் பொய்கை.

மலரவள் அலற என்று தன்னைக் கூறுகிறார். தான் கண்ணீர்விட்டுக் கதறியபடி தற்கொலை செய்து கொண்டதைக் குறிப்பிடுகிறார்.

இந்தப் பொற்றாமரைக் குளம் என்கிற அமுத நீர்த் துறையில் கிட்டும் ரவிரத்தினமே அத்தியனின் முதல் வரம் என்று கூறி முடிக்கிறார்.

அதாவது அத்திமலை சிலையை அடைய இங்குதான் துவங்க வேண்டும். மண்டபத்தின் மையத்தில் இருந்த இந்தச் சூரியச் சிற்பத்தின் கீழே ரகசியம் உள்ளது என்கிறார்..” — ஸாமவை பெருந்தேவி கூறினாள்.

சிங்கமல்லன் பரபரப்புடன் அவளை நோக்கினான்.

“எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய், ஸாமவை?”

ஸாமவை அவனை புன்னகையுடன் நோக்கினாள்.

“இளவரசியின் பெயர் நவரத்தினப் பல்லவி. இளவரசியின் பிறப்பைக் கொண்டாட நவரத்ன மண்டபங்கள் கட்டப்பட்டன. இரத்தின மண்டபத்தின் மையத்தில் சூரியன். நவக்கிரகங்களில் சூரியன்தானே மையத்தில் இருக்கிறான். அதைத்தான் ரவிரத்தினம் என்று குறித்து இருக்கிறார். ரவி என்றால் சூரியன் தானே..? இளவரசியின் சீதன வெள்ளாட்டிகளில் சிற்பி ஒருவரும் இருந்திருக்க வேண்டும். எவ்வளவு நுண்ணியமாகப் புதிரைப் போட்டு, ரகசியத்தைக் கூறியுள்ளார். இளவரசி மிகவும் கூர்மையான அறிவு படைத்தவராக இருந்திருக்க வேண்டும்.” ஸாமவை கூற, சிங்கமல்லன் மலைத்தான்.

மாயகூத்த மடலூருவார் அனுப்பிய பணியாள், முக்கூடலில் இருந்த தண்டியை அழைக்க, காவலர் களுடன் அவசரமாக ஆலயத்திற்கு விரைந்தான், தண்டி.

*பொற்றாமரைக் குளத்தின் இரத்தின மண்டபத்தின் மையத்தில் வடிக்கப்பட்ட சூரியச் சிற்பத்தைத் தாங்கிக் கொண்டிருந்த கருங்கல்லை நெம்பினார்கள், காவலர்கள். கருங்கல் வழிவிட, கீழே ஒரு ஆழமான குழி. அதில் உருளை வடிவில் ஒரு தேக்கு மரப் பெட்டகம்.. அதன் மூடியைத் திறக்க, 'இதோ வெளிப்பட்டுவிட்டேன்' என்றபடி ஒரு பட்டோலைச் சுருள் வெளிவந்தது. சிங்கமல்லன் பட்டோலைச் சுருளை வாங்கி விரித்து ஒருமுறை படித்துவிட்டு, நிமிர்ந்தான். அதனைப் படித்துப் பார்த்துப் பொருள் விளக்கும்படி தன்னிடம் பட்டோலையைத் தருவான் என்கிற நினைப்பில் தண்டி தனது கையை நீட்டினான்.*

*சிங்கமல்லன் பட்டோலையை ஸாமவையிடம் நீட்டினான். "இதனை அனைவருக்கும் வாசித்துக் காட்டு!" என்றான்.*

*ஸாமவை அந்தப் பட்டோலையினை வாசித்தாள்:*

**"கதிர்மணி கிட்டியது பேரருளே.**
**கனி கரிக்கு, கரி கனிக்கு**
**இடம்மாறி நின்று**
**தடம் மாறி நடவீர்**
**வரமே வைரமாகி**
**சிங்கக் குகையில்**
**நந்தியை நாடினால்**
**உடும்பனை தரும்.."**

*"உனக்கு ஏதாவது புரிகிறதா தண்டி?" — சிங்கமல்லன் கேட்டான்.*

*"ஓர் பெண்ணின் மனதை இன்னொரு பெண்ணே அறிவார். வருங்கால அரசியாரே அதனைத் தெளிவுப் படுத்தட்டும்." — தண்டி சிரித்தான்.*

*"அரசே! இளவரசியாரின் பெயர் நவரத்ன பல்லவி! நவரத்தினங்களில் முதல் ரத்தினமான மாணிக்கம் என்கிற ரவிரத்தினம் இதோ, நாம் நிற்கும் இரத்தின*

மண்டபத்தில் கிடைத்தது. அதாவது அத்திமலைத்தேவன் இருக்கும் இடத்திற்கான முதல் குறிப்பு.. நம்மை நவரத்தினங்களைத் தேடச் சொல்கிறார், இளவரசி. அதாவது ஒன்பது குறிப்புகள் நம்மைச் சிலை இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப் போகின்றன. இப்போது தான் முதல் ரவிரத்தினத்தைப் பெற்று இருக்கிறோம். இன்னும் எட்டு இரத்தினங்களைப் பெற வேண்டும். அடுத்தது நாம் பெற இருக்கும் ரத்தினம் வைரம். வரமே வைரமாகும் என்று அடுத்த குறிப்பு சொல்வதால், நாம் இனி வைரத்தைத் தேட வேண்டும்!" — ஸாமவை கூறினாள்.

"வைரத்தைப் பெற எங்கே போக வேண்டும்?" சிங்கமல்லன் கேட்டான்.

"யோசிப்போம்!" — என்றாள் ஸாமவை பெருந்தேவி.

"ஸாமவை! நாளை முதல் அதிகாரபூர்வமாக அத்திமலைத்தேவனைத் தேடும் படையில் நீயும் சேர்த்துக் கொள்ளப்படுகிறாய். மதியம் ஒத்தாடை அரண்மனையில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டங்களில் நீயும் பங்கேற்க வேண்டும்." — சிங்கமல்லன் உத்தரவிட்டான்.

ஸாமவையின் கண்கள் தனது கையிலிருந்த பட்டோலையின் பின்புறமாக வரையப்பட்டிருந்த வரைபடத்தின் ஒரு பகுதியை நோக்கியது.

"அரசே!"

இரத்தின மண்டபத்தின் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த சிங்கமல்லன் திரும்பிப் பார்க்க, அவனது கண்கள் முன்பாக அந்தப் பட்டோலையில் இருந்த வரைபடத்தினைக் காட்டினாள்.

"வரைபடமா?" — பிரமித்தான் சிங்கமல்லன்.

"வரைபடத்தின் ஒரு பகுதி.. சீதன வெள்ளாட்டிகளில் ஒருவன் சிற்பி! மற்றொருவன் ஓவியன். இளவரசி

*குறிப்புகளைக் கூற, சிற்பி ஒருவன் செதுக்க, ஓவியன் பட்டோலையில் வரைந்திருக்கிறான். ஒரே இரவில் எவ்வளவு பெரிய பணிகளை முடித்திருக்கின்றனர்..! அஞ்சிலை அணங்கு கொடுத்த சுவடியில் இளவரசியார் கூறியதை நினைவுபடுத்திப் பாருங்கள்!...*

**புதிருரைத்து, படம்தீட்டி**
**பாமகள் யான் பகல்கின்றேன்**
**பாதகரைச் சிரமறுத்து**
**துடமதில் தொடர்வீரே..**

*என்றார் அல்லவா? அத்திமலையான் மறைக்கப் பட்டிருக்கும் இடத்தின் வரைபடம் ஒன்றை வரைந்து அதனை ஒன்பது துண்டங்களாகக் கிழித்துப் பல்வேறு இடங்களில் மறைத்து வைத்திருக்கிறார். உடன் ஒவ்வொரு வரைபடம் இருக்கும் இடத்தையும் குறிப்பு களால் உணர்த்தி இருக்கிறார். அந்த வரைபடத்தின் பாகங்களை இணைத்தால் வரைபடத்தின் முழு வடிவம் கிடைக்கும். நாம் அத்திமலைத்தேவனின் இருப்பிடத்தை அறியலாம். வரைபடத்தின் ஒன்பது பாகங்களையும் நவரத்தினங்களாகக் குறிப்பிட்டுள்ளார். என்னே ஒரு முன்னெச்சரிக்கை சிந்தனை, இளவரசியாருக்கு!" — உண்மையிலேயே மலைத்துப் போனாள், ஸாமவை.*

*சிங்கமல்லனும் அயர்ந்து போயிருந்தான். விரைவில் அத்திமலைத்தேவனின் தேவ உடும்பர மேனியை அவனது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வோம் என்னும் நம்பிக்கை அவனுள் அதிகரித்தது..*

# 49. வேட்டையாடு! உறவாடு!

திருவேங்கடத்தில் இருந்து வந்திருந்த தாய் பத்மவல்லியை அழைத்துக்கொண்டு ஊரகத்தான் ஆலயத்திற்கு வந்திருந்தாள், ஸாமவை பெருந்தேவி. அவள் தாய்க்கு ஓயாத பெருமை. தனது மகள் அரசியாவது மட்டுமல்ல, மன்னனால் ஆலோசனைக் கூட்டத்திற்கும் அழைக்கப்பட்டிருக்கிறாளே. அவள் இன்னமும் அத்தியூர் ஆலயத்தையே பார்க்கவில்லை. ஒத்தாடை அரண்மனையின் அருகில் இருந்ததால் மட்டுமே, ஊரகத்தான் ஆலயத்திற்கு வந்திருந்தார்கள். தரிசனத்தை முடித்ததும், பத்மவல்லி மகளைப் பார்த்தாள்.

"உனக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ளது. இந்த ஆலயம் நாக க்ஷேத்ரம் என்பதால் நீ நாகத்தை வலம் வந்தால் நல்லது. நான் இங்கேயே அமர்ந்திருக்கிறேன். நீ நாகத்தை ஒன்பது முறை வலம் செய்துவிட்டு வா!" என்றபடி மூல மண்டபத்தின் அருகே அமர்ந்தாள். ஸாமவை நாகத்தை வலம் வருவதற்காகச் செல்ல, அப்போது யாரோ இரண்டு பட்டர்கள் சந்நிதிக்குள் செல்வதற்காக அங்கே வந்தார்கள். தொலைவில் நாகத்தை வலம் வந்து கொண்டிருக்கும் ஸாமவையின் மீது அவர்களது பார்வை விழுந்தது.

"புண்டரீக பட்டரே! அதோ அந்த நாக மரத்தின் கீழ் நாகத்தைப் பிரதட்சிணம் செய்வது யார் என்று தெரிகிறதா?" அங்கே அமர்ந்திருந்த பத்மவல்லி யார் என்பது தெரியாமல் அவர்கள் உரையாடத் தொடங்கினர்.

*"யார் அவள் நவநீத பட்டரே?" — புண்டரீகர் கேட்டார்.*

*"அவள்தான் வருங்காலப் பல்லவ மகாராணி. நமது பட்டர் வம்சம்தான். மன்னர் சிம்மவர்மன் காலத்தில் அத்திமலையில் அனந்த பட்டர் என்பவர் இருந்தார். அவரது கொள்ளுப் பேத்தி இவள். பல்லவ மன்னனையே கைக்குள் போட்டுக் கொண்டுவிட்டவள்." — நவநீதர் கூறினார்.*

*"பட்டரின் மகள் அரசியா? கேட்பதற்கே செவிக்குக் கர்ணக் கொடூரமாக உள்ளதே..? மன்னர் குடும்பத்தில் இதற்கு எப்படிச் சம்மதித்தார்கள்..?" — புண்டரீகர் கூறினார்.*

*"என்ன செய்வது? எல்லாமே தலைகீழாகத்தான் செல்கிறது. இருக்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் இல்லை. எங்கிருந்தோ வந்ததெல்லாம் அதிகாரம் செய்கிறது.." — நவநீதர் சலித்துக் கொண்டார்.*

*"அத்திமலையான் ஏன்தான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறானோ?" — புண்டரீகர் கூறினார்.*

*"இருக்க வேண்டிய இடத்தில் அத்திமலையானே இல்லையே, சுவாமி? ஸ்ரீவரத்து வரதநாரயணன்தானே அத்திமலைத்தேவனாக இப்போது அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான். கரிவரதனுக்குப் பதில் கனிவரதன்தானே அத்திமலையில் நிற்கிறான்! எல்லாம் கலியின் கொடுமைதான்!" என்றபடி அவர்கள் இருவரும் சந்நிதிக்குள் போக, கண்களில் பொலபொலவென்று கண்ணீர் உருண்டோட அமர்ந்திருந்தாள், பத்மவல்லி.*

*தனது மகள் அரசி என்கிற பெருமையை ஒருகணத்தில் சிதைத்துவிட்டனரே, இந்த பட்டர்கள்! ஏன் பட்டரின் மகள் அரசியாகக் கூடாதா?*

*நாகமரத்தை வலம் செய்துவிட்டு, தாயிடம் வந்த ஸாமவை அவளது கண்ணீரைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.*

*"என்ன நடந்தது அம்மா?"*

*"நீ அரசியாவது குறித்துக் குறை கூறிவிட்டுப் போகிறார்கள் அந்த இரண்டு பட்டர்கள். கலி முற்றிவிட்டதாம். அதனால்தான் இப்படி எல்லாம் நடக்கிறதாம். என்னவோ சொன்னார்களே.. அத்திமலை ஆலயத்திலேயே கரிக்குப் பதில் கனியைத்தான் அனைவரும் தொழுகிறார்களாம். இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டியவை எல்லாம் இல்லாதிருக்க, எங்கிருந்தோ வந்ததெல்லாம் ஆட்டம் போடுகிறதே என்றார்கள்." — பத்மவல்லி கூற, அதிர்ந்தாள், ஸாமவை.*

*"அம்மா!" என்று தாயைச் சமாதானம் செய்வதற்குத் துவங்கியவள், சட்டென்று அமைதியாக நின்றாள்.*

*"அந்த பட்டர்கள் என்ன சொன்னார்கள்?" — திகைப்புடன் கேட்டாள் ஸாமவை.*

*"நீ வருத்தப்படாதே, ஸாமவை! ஏதோ சொல்லி விட்டுப் போகட்டும்.." — பத்மவல்லி கூற, ஸாமவை பெருந்தேவி பொறுமை இழந்தாள்.*

*"அவர்கள் என்ன சொன்னார்கள். கரிக்குப் பதில் கனியா?" — அப்படியென்றால்..?"*

*"அத்திமலைத்தேவன் ஆலயத்தில் இருக்க வேண்டிய கரிவரதனுக்குப் பதிலாக ஸ்ரீவர மலை பழவரதனை கொண்டு வந்து அத்திமலையானாகக் கொண்டாடு கிறார்களாம் என்று நிஷ்ட்டூரமாகக் கூறினார்கள்." — பத்மவல்லி பேசி முடிக்கக்கூட இல்லை. நவரத்ன பல்லவியின் அடுத்த புதிருக்கான விளக்கம் அவளது சிந்தையில் பளிச்சிட்டது.*

**'கதிர்மணி கிட்டியது பேரருளே.**
**கனி கரிக்கு, கரி கனிக்கு**
**இடம்மாறி நின்று**
**தடம் மாறி நடவீர்**
**வரமே வைரமாகி**
**சிங்கத்தின் குகையில்**
**நந்தியை நாடினால்**
**உடும்பனை தரும்..'**

*"அத்திமலை தெய்வத்தின் பேரருளால் ரவிமணி என்கிற முதல் நவரத்னம் கிட்டியது. வரைபடத்தின் முதல் பகுதி கிடைத்தது. இரண்டாவது ரத்னமாகிய வைரம் கிடைப்பதற்கு வழி இதுதான்..! கனி கரிக்கு, கரி கனிக்கு என்று இடம் மாறி இருக்கிறது. பழமுதிர்சோலை என்கிற ஸ்ரீவர பெருமாள் தற்போது அத்திமலையில் இருக்கிறார். இடம் மாறி உள்ளது. எனவே, தடம் மாறி செல்வீர் என்றால், வரைபடத்தின் அடுத்த பகுதி, ஸ்ரீவர மலையில் இருக்கிறது. அங்கேதான் ரகசியம் உள்ளது. வைரம் என்று சொல்லுவதால், நவரத்னா பதுக்கிய நவரத்னங்களில் வைரம் ஸ்ரீவரத்தில் உள்ளது. சிங்கக் குகையில் நந்தி கையில் ரகசியம் உள்ளதாகக் கூறுகிறாள்.. நந்தி என்றால் ரிஷபம்தானே.. நவக்ரகங்களில் ரிஷபத்திற்கு அதிபதி சுக்ரன். அவனது நவரத்தினம் வைரம்..! ஸ்ரீவர மலையில் உள்ள நரசிம்ம ஆலயத்தைத் தான் சிங்கக் குகை என்று நவரத்னா குறிப்பிடுகிறாள்.. ஆஹா! அறிந்து கொண்டேன் விடையை!"*

*சினம் கொள்வதற்குப் பதிலாகத் தனது மகள் உற்சாகத்துடன் துள்ளிக் குதிப்பதைக் கண்டு பத்மவல்லி திகைத்தாள். அவளை மேலே பேசவிடாமல், தங்களது ஜாகைக்கு இழுத்துச் சென்றாள், ஸாமவை.*

*ஆலோசனைக் கூட்டத்தில் தனது கண்டுபிடிப்பைக் கூற, சிங்கமல்லனுக்குப் பெரும் வியப்பு. தண்டியை நோக்கித் தலையசைக்க, அவன் காவல் படையினரோடு ஸ்ரீவரம் சென்றான். நரசிம்ம ஆலயத்தின் ரத்ன*

*மண்டபத்தில் நந்தி சிற்பம் செதுக்கப்பட்டிருந்த கருங்கல்லை நீக்கிய போது நவரத்னாவின் வைரம் கிட்டியது. உருளை வடிவத்தில் இருந்த அந்தப் பாக்கு மரப் பெட்டகத்திலிருந்து பட்டோலை ஒன்றை எடுத்தார், தலைமை அமைச்சர்.*

*ஆமாத்தியார் சிங்கமல்லனைப் பார்க்க, அவன் தலையசைத்தான்.*

*கணீரென்ற குரலில் பட்டோலையை வாசித்தார்:*

**"ஸ்ரீவரம் பெற்றீரோ செந்தீ**
**ஒரு கவளம் உண்டால்**
**அந்தியில் செம்பவளம்**
**சிந்துவாள். பவளத்தை நாடு**
**செவ்வாய் திறந்து**
**செவ்வேளை காட்டுவாள்.."**

*வாசித்து விட்டுப் பட்டோலையைத் திரும்பிப் பார்க்க, அதில் வரைபடத்தின் மற்றொரு பகுதி இருந்தது.*

*மாயகூத்த மடலூருவார் பரபரப்புடன் எழுந்தார்.*

*"அரசே! எனக்கு விளங்கிவிட்டது. இளவரசி பிறந்த போது, பல்லவத்தில் அபூர்வமாகப் பெண் குழந்தை பிறந்ததே என்று அவருக்கு நவரத்ன பல்லவி என்று பெயரிட்டு ஒன்பது ஆலயங்களில் நவரத்ன மண்டபங்களை எழுப்பினார், சிம்மவர்மர். அந்த ஒன்பது ரத்ன மண்டபங்களில்தான் இளவரசி நவரத்ன பல்லவி, வரைபடத்தின் ஒன்பது பாகங்களை மறைத்து வைத்திருக்கிறார். மாணிக்கம், வைரம் இரண்டும் கிடைத்துவிட்டன. அடுத்தது இப்போது தலைமை அமைச்சர் வாசித்த புதிரின்படி நவரத்னங்களில் அடுத்து நாம் எடுக்க வேண்டியது பவளம். அத்தியூர் செல்லும் வழியில் பிரவாளவண்ண ஆலயம் இருக்கிறது. அங்குள்ள ரத்ன மண்டபத்தில் அடுத்த இரத்னம் கிடைக்கும்..!" — மடலூருவார் கூறியதும், சிங்கமல்லனின் பார்வை ஸாமவையை நோக்கியது.*

"மடலூருவர் கூறுவது சரி. பவளவண்ணன் ஆலய ரத்ன மண்டபத்தில்தான் அடுத்த பட்டோலை இருக்கக் கூடும். பவளத்தின் நவக்ரக அதிபதி செவ்வாய். செவ்வாயின் சின்னம் விருச்சிகம் என்கிற தேள் அல்லது மேஷம் என்கிற ஆடு. இந்த இரண்டு சின்னங்களில் ஏதாவது ஒன்று அங்கே நிச்சயம் வடிக்கப்பட்டிருக்கும். எளிதாகக் கண்டுபிடித்து எடுத்து வந்துவிடலாம்." — ஸாமவை கூறியதும் தண்டி புறப்பட்டான்.

வெகு விரைவிலேயே அடுத்த பட்டோலை சிங்க மல்லனின் கையில் தவழ்ந்தது.

**"பவளவாய் கண்டீரோ**
**எட்டாநிலை உறை நாதனை**
**எட்டுவதற்கு எட்டுக் கரம் தேவை.**
**அட்டெழுத்தான் தரும்**
**பச்சையை வாங்கி**
**அத்தியோலை அனுப்பினால்**
**பச்சைமாமலையான் கிட்டிடுவான்.."**

என்றதுமே பல்லவத் தளபதி பரஞ்சோதி எழுந்தார்.

"அரசே! இப்போது எனது முறை.. நமது மன்னர் சிம்மவர்மர் வேங்கியை கைப்பற்றுவதற்காகத் திக்விஜயம் புறப்பட்ட போது, எண்கரத்தான் என்கிற அஷ்டபுஜ பெருமாள் சந்நிதியில் சிம்மவர்மருக்கு எண்கரத்தான் என்கிற பட்டம் அளிக்கப்பட்டது. அங்குள்ள ரத்ன மண்டபதில்தான் அடுத்த பட்டோலை இருக்க வேண்டும்" என்றார்.

"ஆம் அரசே! பச்சை என்கிற மரகதம் புதன் கிரகத்தின் ரத்தினம். மாலவனுக்கு உகந்தவன் புதன். நமது அத்திமலைத்தேவனுக்கும் பச்சைதான் உகந்தது. எனவே, எண்கரத்தான் ஆலய ரத்ன மண்டபத்தில் தேடிப்பாருங்கள். புதனின் சின்னம் கன்னி. ஒரு பெண்ணின் வடிவம் செதுக்கப்பட்டிருக்கும். அந்தக் கருங்கல்லை நகர்த்திப் பாருங்கள். உள்ளே இருக்கிறது பட்டோலை" — ஸாமவை கூறினாள்.

*மரகத ரத்தினமும் கிடைத்தது. மாணிக்கம், வைரம், பவளம், என்கிற மூன்று வரைபடங்கள் ஒரு தங்கத் தாம்பாளத்தில் கிடந்தன. மரகதப் பட்டோலையை ஸாமவையே படித்தாள்.*

**"துண்டவெண் பிறையான்**
**சூடிய கொண்டைமலர் பறித்து**
**முத்தெடுத்தால் கிட்டும்.**
**அஞ்சிலையே தொடர்வாள்.."**

*சிங்கமல்லன் புன்னகையுடன் மற்றவர்களைப் பார்த்து கையை உயர்த்தினான்.*

*"மன்னன் நான்! இப்போது எனது முறை! நான்தான் இம்முறை புதிரை விடுவிப்பேன். நமது ஒத்தாடையான் சந்நிதியில் எழுமால் கோயில் திருமாலில் ஒருவரான நிலாத்திங்கள் துண்டத்துப் பெருமாள் உள்ளார். அவரது நாயகி அஞ்சில வல்லி. அவர்கள் ஆலயத்து ரத்ன மண்டபத்தில் ரகசியம் உள்ளது சரியா?" — ஸாமவையை நோக்கினான்.*

*'சரி' என்கிற பாவனையில் ஸாமவை தலையசைத்தாள்.*

*"ஆனால் தருமநகரத்தில் இருந்த ஏழு பெருமாள்கள் கோயில்களும் சமணப் பசடிகளாக மாற்றப்பட்டனவே. பெருமாள்கள் வெளியேற்றப்பட்டுப் பிற கோயில்களில் அல்லவா குடியேறி உள்ளனர்..?" — தண்டி நினைவு படுத்தினான்.*

*"திங்கள் துண்டத்தான் ஆலயம் சமணப் பசடியாக இருந்தாலும், ரத்ன மண்டபம் அப்படியேதான் இருக்கும். அங்கே சென்று பிறைச் சந்திரன் செதுக்கப்பட்டிருக்கும் கல்லை நகர்த்துங்கள். பட்டோலை கிடைக்கும்." — ஸாமவை கூறினாள்.*

*நவரத்னங்களில் மாணிக்கம், வைரம், பவளம், மரகதம், முத்து ஆகியவை கிடைத்துவிட்டன. இன்னும் நீலம்,*

வைடூரியம், புஷ்பராகம் மற்றும் கோமேதகம்தான் கிடைக்க வேண்டும்.

தருமநகரம் சென்று பாக்கு மரப் பெட்டகத்துடன் வந்தான் தண்டி.

"ரகசியமெல்லாம் காஞ்சியின் பிரதான ஆலயங்களில் தான் வைத்திருக்கிறாள், எனது தங்கை. இது தெரியாமல், அத்திமலையான் கடல் கடந்து சென்றுவிட்டதாக நாம் நம்பிக் கொண்டிருந்தோம்!" — பீமவர்மன் கூறினான்.

**"ஓர் இரவு இருந்தானை**
**குளிரொளி நீலன்**
**சாரம் சொல்ல, அவ்வண்ணமே,**
**பாய் சுருட்டிப் புறப்பட்டவனின்**
**இருக்கையில் தேடினால்**
**கரிய மாணிக்கத்திற்கு அணையிட்டு,**
**அம்பாரியில் ஏற்றலாம்.."**

சிங்கமல்லன் அடுத்த புதிரினைப் படிக்க, பீமவர்மன் இந்த முறை அனைவரையும் முந்திக் கொண்டான்.

"இது சொன்னவண்ணம் செய்த பெருமாளைக் குறிக்கிறது. யதா உக்தகாரி என்று சொன்னதைச் செய்த பெருமாள். கரிய மாணிக்கம் என்றால் நீலக்கல். சனியின் உகந்த நிறம். சனி பெயர்ச்சி மனிதனை ஆட்டி வைப்பது போன்று பெருமாளையே இடம் பெயர வைத்த நீலக்கல் வைக்கப்பட்டிருக்கும் இடம். அங்குள்ள ரத்ன மண்டபத்தில் சனியின் சின்னமான கும்பத்தையோ அல்லது மகர மீனையோ செதுக்கி இருப்பார்கள். அதன் கீழே பாருங்கள்!" — பீமவர்மன் உத்தரவிட்டான். தனது காலம் முடிவதற்குள் அத்திமலைத்தேவனை மீண்டும் கண்டுவிடுவோம் என்கிற நம்பிக்கை அவனுக்கு வந்துவிட்டது.

அடுத்த பட்டோலைக்காக அனைவரும் ஆவலுடன் காத்திருக்க, தண்டி வாடிய முகத்தோடு வந்தான்.

*"அரசே! அந்த ஆலயத்தின் ரத்ன மண்டபத்தில் தேடினோம். கும்பமோ, மீனோ மண்டபத்தில் செதுக்கப்படவே இல்லை!" — தண்டி கூறியதும், அனைவருமே திகைத்தனர்.*

*"இதென்ன! வேகமாக நகர்ந்து திடீரென்று நின்று போனதே. சொன்ன வண்ணம் செய்ய மறுக்கிறாரே, பள்ளிகொண்ட பெருமாள்." — மடலூருவார் கூறினார்.*

**'ஓர் இரவு இருந்தானை**
**குளிரொளி நீலன்**
**சாரம் சொல்ல, அவ்வண்ணமே,**
**பாய் சுருட்டிப் புறப்பட்டவனின்**
**இருக்கையில் தேடினால்**
**கரிய மாணிக்கத்திற்கு அணையிட்டு,**
**அம்பாரியில் ஏற்றலாம்..'**

*"சனியின் ரத்தினம் அல்லவா நீலக்கல். அதுதான் நம்மை அலைய வைக்கின்றது!" — தளபதி பரஞ்சோதியார் சிரித்தார்.*

*திடீரென்று ஸாமவை குரல் கொடுத்தாள். "ஆலயத்தில் ஏன் தேடினீர்கள்..? அவர்தான் பாயைச் சுருட்டிக் கொண்டு இடம் பெயர்ந்தார் அல்லவா..? ஒரு இரவு இருக்கையில் (ஓரிருக்கையில்) தேடுங்கள். கிடைக்கும்..!" — கிண்கிணி மணியாக ஸாமவையின் குரல் ஒலிக்க, சிங்கமல்லன் அவளைப் புன்சிரிப்புடன் நோக்கினான்.*

*"சென்று வா தண்டி! வருங்கால அரசியார் கூறியது போல் இருக்கையில் தேடிப்பார்!" — சிங்கமல்லன் கூறினான்.*

*மீண்டும் தண்டி வந்த போது அவனது கையில் பாக்கு மரப் பெட்டகம் இருந்தது. பட்டோலையை வெளியே எடுத்து முதலில் அதன் பின்புறம் வரைபடத்தின் பகுதி உள்ளதா என்று ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு பிறகே அடுத்த குறிப்பினைப் படித்தான் சிங்கமல்லன்.*

"கடல்வண்ணனை காணக் கலமேறி
செல்வீரே! சற்றே நங்கூரத்தை இட்டு
இளைப்பாறும்.
அசைந்தாடும் ஆனையின் பின்னே
இரு சகஸ்ர கழிகளை
சுருக்கி யோசனையுடன் நடந்தால்
ஆதி கல்லைத் தருவான்.."

*அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். "இந்த ஓலை குறிப்பிடும் ஆலயம் எதுவாக இருக்கும்?*

*யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.*

*ராஜகுரு திரிமூர்த்தி லோகிதர் எழுந்தார். "இதனை யாராலும் யூகிக்க முடியாது.. காரணம் இது எனது கிராமத்தைக் குறிக்கிறது. அசைந்தாடும் யானையின் பின்னே என்பதைக் கவனியுங்கள். உங்களுக்கு விளங்கும்." — லோகிதர் கூறினார்.*

*அனைவரும் அவரை அமைதியுடன் நோக்கினர்.*

*அசைந்தாடும் யானை என்பது நம் அத்திமலை. அதன் பின்பாகம் கஜபிருஷ்டம் கிராமம். நமது பழைய தலைமை அமைச்சர் மச்சவாசுதேவரின் கிராமம். அசைந்தாடும் ஆனையின் பின்னே இரு சகஸ்ர கழிகளைச் சுருக்கி யோசனையுடன் நடக்கச் சொல்கிறார். இதன் பொருள் எனக்கு விளங்கிவிட்டது. கஜப்ருஷ்ட கிராமத்தைக் கடந்து நம்மைச் செல்லச் சொல்கிறார். இரு சகஸ்ர கழிகள் என்பது நாம் தொலைவினைக் கணக்கிடும் விதம். நாம் தொலைவினை எப்படிக் கணக்கு இடுகிறோம்?*

| | | |
|---|---|---|
| தோரை(நெல்) | = | 1 விரல் |
| 12 விரல் | = | 1 சாண் |
| 2 சாண் | = | 1 முழம் |
| 4 முழம் | = | 1 பாகம் அல்லது தண்டம் |
| 2000 தண்டம் | = | 1 குரோசம் (2¼ மைல்) |

| | | |
|---|---|---|
| 4 குரோசம் | = | 1 யோசனை |
| 7½ நாழிகைவழி | = | 1 காதம் (10மைல்) |

என்றல்லவா கணக்கிடுகிறோம். இரண்டு சகஸ்ர கழிகள் என்றால் இரண்டாயிரம் தண்டம். இரண்டாயிரம் தண்டம் என்றால் ஒரு குரோசம். நன்கு குரோசம் என்றால ஒரு யோசனை. ஆக இளவரசி நவரத்ன பல்லவி நம்மை வழிநடத்திச் செல்கிறார். கஜபிருஷ்ட கிராமத்தைக் கடந்து ஒரு யோசனை தூரம் செல்ல வேண்டும் என்கிறார். அதன்படி அங்கு க்லமேறி சென்று கடல்வண்ணனைக் கண்டதும் நங்கூரம் இட்டு இளைப்பாருங்கள் என்கிறார். இதன் பொருள், கஜபிருஷ்ட கிராமத்தைக் கடந்து ஒரு யோசனை தொலைவு சென்றால், கூரம் என்கிற கிராமம் உள்ளது. அங்கு ஆதிநாராயணப் பெருமாள் ஆலயம் உள்ளது. அங்கே சென்று அங்குள்ள ரத்ன மண்டபத்தில் ஓலையை எடுக்கச் சொல்கிறாள். ஆதி கல் என்பது வைடூரியம். பெருமாள் பெயரும் பொருத்தமாக ஆதிநாராயணப் பெருமாள்!" — லோகிதர் கூறியதும், சிங்கமல்லன் தண்டியை நோக்கித் தலையசைக்கத் தண்டியும் புறப்பட்டான்.

அடுத்த பட்டோலையும் கிட்டியது.. ஆலயத்தில்!

"கடை நாமக்காரனுடன்
தாமதமின்றி மல்லுக்கு நிற்பீர்.
அகம் குளிர நீராழியில்
தலை முழுகி
புஷ்ய ராகம் இசைத்தால்
ஆறாம் வீட்டுக் கைகாரன் வருவான்.."

அடுத்த பட்டோலையை வாசித்ததும், தண்டி சிங்கமல்லனை நோக்கினான்.

"அரசே! நான் ஒரு புலவன். ஆனால் தங்களது நண்பன் என்பதால் என்னை ராஜாங்கக் காரியங்களில் ஈடுபடுத்தி வருகிறீர்கள். ஒரு புலவனாக எனது சிந்தைக்குச் சற்று வேலை தாருங்கள். இந்தப் புதிரை

நான் விடுவிக்கிறேன்..” தண்டி கூற, சிங்கமல்லன் சிரித்தான்.

“நாம் அத்திமலைத்தேவனைத் தேடிக் கொண்டு இருக்கிறோம். விளையாடவில்லை. இருப்பினும், புலவனாக உனக்கு ஒரு வாய்ப்பினை நல்க வேண்டும். நீ முயற்சி செய்து பார், தண்டி!” — மன்னன் கூற, உற்சாகத்துடன் பேசினான், தண்டி.

“அரசே! மாலவனின் பன்னிரு நாமங்களில் கடை நாமம் தாமோதரன்.

மல்லர்கள் வசிக்கும் கிராமம் ஒன்று உள்ளது. அதற்குத் தாமோதர மல்லம் என்று பெயர். நீரே அங்கு வந்து மல்யுத்தம் செய்துள்ளீர். அங்குள்ள தாமோதர பெருமாள் ஆலயம் மிகவும் புகழ் வாய்ந்தது. கண்ணன் சிறந்த மற்போர் வீரன். மல்லர்களின் தெய்வம் அவனும், அவன் அண்ணன் பரசுராமனும். மல்லர்கள் வசிக்கும் அந்தக் கிராமத்தில் தங்கள் குலதெய்வம் கண்ணனுக்கு ஆலயம் கட்டினர். அதுதான் தாமோதர மல்லர் கோயில்* அங்குள்ள ரத்ன மண்டபத்தில் ஒரு கை வரையப் பட்டிருப்பதை அண்மையில் அங்கு சென்ற போது நான் பார்த்தேன். காரணத்தைக் கேட்ட போது யாருக்கும் தெரியவில்லை. ஒருவேளை, அங்குதான் நமது இளவரசியார் வைத்திருக்கும் அடுத்த ரத்தினம் உள்ளதோ என்று தோன்றுகிறது!” — தண்டி கூறினான்.

“கைக்கும், நாம் தேடும் புஷ்ய ராகம் ரத்தினத்திற்கும் என்ன தொடர்பு?” — பீமவர்மன் கேட்டான்.

“தண்டி கூறுவது முற்றிலும் உண்மையே!” — ஸாமவை பெருந்தேவி கூற, அனைவரும் அவளை நோக்கினர்.

* தற்போது தாமல் என்கிற தாமோதர மல்லர் கோயில் அழைக்கப்படுகிறது. காஞ்சியில் இருந்து வேலூர் செல்லும் பாதையில் உள்ளது.

*"கவனியுங்கள்..! தாமோதர மல்லர் கோயிலில் புஷ்ய ராகம் இசைத்தால் ஆறாம் வீட்டுக் கைகாரன் வருவான். புஷ்ய நட்சத்திரத்தில் இருந்து ஆறாவது நட்சத்திரம் ஹஸ்தம் அல்லவே. ஹஸ்தம் என்றால் கைதானே. அதனால்தான் கைகாரன் என்று கூறியிருக்கிறாள், நவரத்ன பல்லவி."*

*தான் ஒரு புதிரை விடுவித்தோம் என்கிற மன நிறைவோடு தண்டி தாமோதர மல்லர் கோயிலுக்குப் புறப்பட்டான்.*

*பட்டோலையும் விரைவில் வந்தது.*

**"குன்னமேறி குளிர் மழை**
**காத்தவன், உடும்பரன்**
**நிலவின் குழியில்**
**நீள்சயனம் செய்கிறான்**
**அத்திக்காய்ச் சென்று**
**அத்தியை வென்று**
**எத்திக்கும் அவனை ஏத்துவீர்**
**என் பணி முடிய**
**அவன் பணி செய்ய**
**வைகுந்தம் புகுகின்றேன்." – நவரத்ன பல்லவி.**

*இம்முறை, பீமவர்மன் பட்டோலையை வாசித்தான்.. தங்கை நவரத்னாவையும், ஜெயவர்மனையும் நினைத்து அவனது குரல் உடைந்தது. கதறியபடியேதான் ஓலையை வாசித்தான்.*

*அனைத்து பட்டோலை பாகங்களையும் ஒன்றாக இணைத்த போது, அத்திமலைத்தேவன் மறைந்திருக்கும் இடம் தெரிந்தது. அனைவரும் ஆவலுடன் வரைபடம் வைக்கப்பட்டிருந்த மேஜையைச் சுற்றி நின்று பார்த்தனர்.*

*கோ என்றால் தெய்வம் என்றும் கொள்ளலாம்.. மன்னன் என்றும் கொள்ளலாம். மன்னர்களின் தெய்வமான தேவராஜன் என்கிற அத்திமலையான் கோமேதகம் அல்லவா? தான் உயிரைவிட்டாலும்,*

அத்திமலைத்தேவன் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தனது பெயரான நவரத்னங்களாலேயே பாதை அமைத்துக் கோமேதம் மறைக்கப்பட்டிருக்கும் இடத்தைக் காட்டி இருந்தாள், நவரத்னா.

வரைபடத்தின் வழியே சென்ற போது குணங்குன்றம் என்கிற பகுதியைக் காட்டியது. அங்குள்ள ஆதி நாராயணப் பெருமாளின் நிலவறையில் இருந்த நீர் தொட்டியில் ஆனந்த சயனம் கண்டு கொண்டிருந்தார், அத்திமலைத்தேவன்.

சிம்மவர்மன் ஆட்சியில் மறைந்து போன அத்தி மலைத்தேவன் இதோ நரசிம்ம பல்லவன் ஆட்சியில் திரும்பக் கிடைத்துவிட்டார்.

அவனிசிம்மனும், மகேந்திர பல்லவனும் செய்யாத பாக்கியத்தை நரசிம்ம பல்லவன் செய்திருக்கிறான். பரமானந்தத்தில் மிதந்தான் நரசிம்ம பல்லவன் என்கிற சிங்கமல்லன்.

அவனைவிட அதிக ஆனந்தத்தில் திளைத்தான், பீமவர்மன். தனது காலம் முடிவதற்குள் அத்திமலையான் கிடைத்துவிட்டானே.

"ஜெயவர்மா! உன்னால்தான் பல்லவம் பிழைத்தது. ஹுயன் சாங் மூலம் செய்தி அனுப்பி எங்களிடம் அத்திமலைத்தேவனைச் சேர்த்துவிட்டாய்!" — ஹோவெனக் குரல்விட்டு அழுதான், பீமவர்மன். பல்லவ குடும்பத்திற்கு இன்றுதான் ஆனந்தத் திருநாள்.

தலைமுறையே மாறிவிட்டிருந்தது. அத்திமலையான் கிடைத்துவிட்டதைக் கோலாகலத்துடன் முதியவர்கள் கொண்டாட, புதிய தலைமுறை அத்திவரதரை முதன் முறையாக தரிசித்தனர்.

அஸ்வத்தாமாவினால் உபாசிக்கப்பட்டு, சாணக்கியனால் வடபுலத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டு, அசோகனால் நாடப்பட்டு, திருலோச்சன பல்லவன்,

*கரிகாலன், இளந்திரையன், விஷ்ணுகோபன், சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, மகேந்திரன், புலிகேசி துவங்கி நரசிம்மவர்மப் பல்லவன் வரை மன்னர்கள் தொழுதிருந்த அத்திமலைத்தேவன் 'ஏன் என்னை எழுப்புகிறீர்கள்?' எனக் கேட்பது போன்று, குணங் குன்றம்* ஆலயத்தின் நிலவறையில் இருந்து வெளிவந்து பிராகாரத்தில் நின்றான்..*

*மீண்டும் அத்திமலைக்கு எப்போது திரும்பப் போகிறான்? பார்க்கலாம்!*

---

* குணம் குன்றம் என்கிற பகுதிதான் குன்னவாக்கம் என்று இன்று அழைக்கப்படுகிறது. சென்னை-படப்பை-காஞ்சி சாலையில் உள்ளது. தான் அங்கு பல ஆண்டுகள் தங்கியிருந்ததற்கு அடையாளமாக இப்போதும் வரதர் குன்னவாக்கம் சென்று தங்குகிறார். திரையன் ஏறி என்கிற தென்னேரியில் தெப்பம் முடிந்த பிறகு குன்னவாக்கம் செல்கிறார்.

# 50. கைக்கு எட்டியது.. ஆனால்..

"குணம் குன்றத்திலிருந்து அத்திமலைக்கு நல்ல நாளில் எழுந்தருளச் செய்து அவரை மீண்டும் பிரதிஷ்டை செய்ய வேண்டும்" — பட்டர்கள் உற்சாகத்துடன் கோயில் அதிகாரி மாயகூத்த மடலூருவாரிடம் கோரிக்கை வைத்தனர். தலைமை அமைச்சருடன் மன்னரைச் சந்தித்து அதற்கான ஏற்பாடுகளில் இறங்குவதாக அவரும் வாக்களித்திருந்தார். அத்தியூர் மட்டுமல்ல, அத்திமலைத்தேவன் மீண்டும் கிடைத்து விட்டான் என்கிற உற்சாகத்தில், ஒத்தாடை, தருமநகரம், முக்கூடல் கடிகை என்று எங்கும் உற்சாக வெள்ளம். மாலிருஞ்சோலை என்கிற ஸ்ரீவரத்தில் இரட்டிப்பு மகிழ்ச்சி. அத்திவரதனாக அருள்பாலித்துக் கொண்டிருந்த ஸ்ரீவரத நாராயணன், கரிவரதன் திரும்பி வந்ததும், தனது மலைக்குக் கனிவரதனாகத் திரும்பி வருவானே!

எங்கு பார்த்தாலும், கொண்டாட்டமும், கேளிக்கைகளும்தான்.

ஒத்தாடை அரண்மனை குதூகலத்துடன் காணப்பட்டது. இருக்காதா? மன்னன் நரசிம்ம பல்லவன் தனது தந்தை மகேந்திர பல்லவனுக்குக் கொடுத்திருந்த மூன்று வாக்குறுதிகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றி இருந்தான்.

உளியைக் கொண்டு மல்லைக் கோயில் பணிகளை முடித்திருந்தான்.

*புலிகேசியின் தலையை வாங்கிக் கடலில் வீசி எறிந்திருந்தான்.*

*தேவ உடும்பர அத்திமலையானையும் கண்டுபிடித் திருந்தான்.*

*நரசிம்மவர்மனின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தான் மன்னன் என்பதை மறந்து, காவலர்கள், பணிப்பெண்கள் என்று பேதம் பார்க்காமல் அனைவருடன் விளையாடி, ஆட்டம், பாட்டம் என்று ஒவ்வொரு மணித்துளியையும் உற்சாகத்துடன் கழித்தான்.*

*அன்று இரவு, உற்சாகக் களைப்பில் பொழுதோடு உறங்கச் சென்றான்.*

*ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நரசிம்ம பல்லவனின் கனவில் மகேந்திர பல்லவன் வந்தான்.*

*“எனது கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டாய், சிங்கமல்லா! உன்னை மகனாகப் பெற்றதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்!” என்று மகனை வாரி அணைத்து உச்சி முகர்ந்தவன் திடீரென்று அவனை இறுக அணைத்தான்.*

*“போதும் தந்தையே! என்னை விடுங்கள்!” — நரசிம்ம பல்லவன் தந்தையின் பிடியில் திணறினான்.*

*“விடமாட்டேன்! நீயும் அத்திமலைத்தேவனைப் போன்று காணாமல் போய்விடுவாய். உன்னை விடமாட்டேன். உன்னை என்னோடு அமரலோகத்திற்கு இட்டுச் செல்லுவேன்! உன்னை அங்கே பத்திரமாக வைத்துக் கொள்வேன்!” — பேய்த்தனமாகச் சிரிக்கத் தொடங்கினான், மகேந்திரன்.*

*“தந்தையே! என்னை விடுங்கள்! நான் வரமாட்டேன்! எனக்குப் பணிகள் உள்ளன!” — நரசிம்ம பல்லவன் கெஞ்சினான்.*

"விடமாட்டேன்.." இன்னும் இறுகக் கட்டியணைத் தான், மகேந்திரன். இரும்புச் சிலையை அணைத்த திருதராஷ்ட்ரன் பிடியா அது? நரசிம்ம பல்லவன் சுவாசிக்க முடியாமல் திணறினான்.

"என்னை விட்டுவிடுங்கள் தந்தையே!" — சிங்கமல்லன் இறைஞ்சினான்.

"சரி விடுகிறேன்.. ஆனால் ஒரு நிபந்தனை?" — மகேந்திரன் கேட்டான்.

"கூறுங்கள் தந்தையே!" — சிங்கமல்லன் தந்தையின் முகத்தைக் கவனித்தான்.

"எனது மூன்று கோரிக்கையை நீ நிறைவேற்றினாய். அது போன்று இன்னும் ஒரு கோரிக்கை. அத்தி மலைத்தேவன் அத்திமலை ஆலயத்தில் இருப்பதால் தானே எல்லாத் தேசத்தவரும் அவனை உரிமை கோருகிறார்கள். அவன் நமது பல்லவத்திற்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும். வேறு யாரும் அவனை அணுகக் கூடாது. எனவே.."

"எனவே?" — சிங்கமல்லன் கேட்டான்.

"எனவே அத்திமலைத்தேவனை நமது திருக்கடல் மல்லையில் பத்திரப்படுத்திவிடு. களப்பிரர்களால் கைப்பற்றப்பட்ட தருமநகர எழுமால் கோயில்களை மல்லையில் எழுப்பி, அங்கே ஏழு பெருமாள்களையும் வைத்துவிடு. நமது அத்திமலைத்தேவன் நீரில் இருந்தால் அவனுக்கு ஆற்றல் அதிகம். எனவே அவனை ஜலசயன பெருமாளாக மல்லையில் வைத்துவிடு. அவன் பல்லவத்தின் பெருமாள். வேறு யாரும் அவனிடம் உரிமை கோர முடியாது! இதனை நீ செய்து முடிக்கவில்லை என்றால், நான் உன்னை விடமாட்டேன். செய்கிறாயா?" மகேந்திரன் உறுமினான்.

தன்னை விடுவித்துக் கொள்ள இயலாமல் திணறிய நரசிம்ம பல்லவன், வேறு வழியின்றி, "செய்கிறேன் தந்தையே..!" என்று கூச்சலிட்டான்.

"அத்திமலைத்தேவனின் மீது ஆணையாக?" — மகேந்திரன் பிடியை இறுக்கினான்.

"அத்திமலைத்தேவன் மீது ஆணையாக!" — நரசிம்ம பல்லவன் அலறினான். மகேந்திரன் சிரித்தபடி அவனைவிட்டு நீங்க, சிங்கமல்லனுக்கு மீண்டும் விழிப்பு ஏற்பட்டது. அதன் பிறகு அவன் உறங்கவே இல்லை.

★ ★ ★

நரசிம்மவர்மன் பிடிவாதமாக இருந்தான்.

திருக்கடல்மல்லையில் ஏழு இரதங்கள் வரிசையாக வடக்கு தெற்காகக் கிழக்கு முகமாக எழுப்பப்படும். அதில் கடைசி இரதத்தில் அத்திமலைத்தேவன் ஜலசயன பெருமாளாக வைக்கப்படுவான்..

அத்திமலை கோயில் அதிகாரிகளும், பட்டர்களும் மட்டுமல்ல, கஞ்சி நகரம் மட்டும் அல்ல, பல்லவமே திகைத்து நின்றது. எதற்காக இப்படி ஒரு முடிவை எடுக்க வேண்டும், மன்னன்?

"அத்திமலையில் ஆவிர்பவித்தவன் தேவராஜன். அவனை அங்கே வைப்பதுதான் நியாயம். அவனை மல்லையில் வைத்தால், அத்திமலை ஆலயத்திற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்" — அத்திமலைக் கோயில் அதிகாரி, மாயகூத்த மடலூருவாரும், தலைமை பட்டர் சதானந்த அத்தங்கியும் சிங்கமல்லனிடம் கெஞ்சினர்.

"நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆலயத்தைவிட்டு நீங்கி இருக்கிறான். இதுவே அவனது திருவுள்ளம். நீரில் இருக்க விரும்பும் அவன், கடற்கரையில் இருப்பதுதானே நியாயம். நான் தீர்மானித்துவிட்டேன். மல்லையில் ஏழு கோயில்களின் பணிகளும் துரிதமாய் நடைபெறுகின்றன. அத்திமலையான் இனி மல்லையில் வசிப்பான்." — உறுதியுடன கூறிவிட்டான், சிங்கமல்லன்.

தலைமை அமைச்சரும், ராஜகுருவும் கூட "அத்தி மலையான் உக்கிரம் நிறைந்தவன். இத்தகைய முடிவினை மேற்கொண்டால், பல்லவத்தைத் தண்டிப்பான்" என்று கூறியும் பார்த்தனர்.

"பல்லவத்திற்குத் தண்டனைகள் புதிதா என்ன? சிம்மவர்மர் சித்தத்தை இழந்தார். நவரத்னா, விஜயவர்மன், சாயாதேவி, ஜெயஸ்ரீ என்று துர்மரணங்களுக்கும் குறைவில்லை. ஜெயவர்மன் ஏற்ற தண்டனைகள் போதாதா? வரதநாராயணர் அத்திவரதனாக இங்கேயே இருக்கட்டும். நமது அத்திமலைத்தேவன் மல்லையில் ஜலசயன பெருமாளாக நீரில் இருப்பான்.." — உறுதியாகச் சொல்லிவிட்டான்.

அனைவரும் சேர்ந்து, ஸாமவை என்கிற அஸ்திரத்தைச் சிங்கமல்லன் மீது ஏவிவிட்டனர்.

"அரசே! பெருந்தேவி இங்கே இருக்க, நாயகன் அத்திவரதனை மல்லையில் வைப்பீர்களா? உம்மை விட்டு என்னால் இருக்க முடியுமா?" — அவனை தான் மடக்கிவிட்டதாக நினைத்தாள்.

"ஏன்..? உங்கள் திருவேங்கடமலையான் தேவியை மலையின் கீழே அமர வைத்துவிட்டு, தான் மலைமேல் இருக்கவில்லையா? அலர்மேல் மங்கையைப் போன்று பெருந்தேவியும் மலை கீழ் காத்திருப்பவளாகவே இருக்கட்டும்.." என்று கூற, வாயடைத்துப் போனாள், ஸாமவை பெருந்தேவி.

இறுதியாக பீமவர்மனை சிங்கமல்லனிடம் பேசச் சொன்னார்கள்.

"ஏனப்பா இந்த முடிவுக்கு வந்தாய்? காலங்காலமாக இங்கு இருக்கும் தெய்வம். மல்லைக்கு ஏன் கொண்டு செல்கிறாய்?" — பீமவர்மன் கேட்க, அவரைப் பணிவுடன் நோக்கினான், சிங்கமல்லன்.

"பாட்டா! புரிந்து கொள்ளுங்கள். பாதுகாப்பு நடவடிக்கைதான். எனது தந்தை கனவில் வந்து முன்வைத்த கோரிக்கை இது. நான் இதைச் செய்ய மறுத்தேன் என்றால் எனக்கு மரணம் நிச்சயம்" என்றான்.

"இதுநாள் வரை அத்திமலைத்தேவனை நாம் பாதுகாத்தோம். இப்போது பல்லவத்தை அவன் பாதுகாக்க வேண்டும். இந்த நடவடிக்கை, பல்லவத்தின் குடும்பப் பாதுகாப்புக்காகவே! இனியும் நமது குடும்பத்தில் துர்மரணங்களும், பெண்கள் தற்கொலை செய்து கொள்வதையும், இளவரசர்கள் காணாமல் போவதையும் தவிர்க்க வேண்டும் என்றால் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை! அக்னியில் இருந்து வந்தவன் நீரில் இருக்கப் பிரியப்படுகிறான். அவனது மனம் குளிர்ந்தால், நமது குடும்பத்தின் கேடுகள் நீங்கும்" என்று கூற, மௌனமாக நின்றார் பீமவர்மர்.

நரசிம்ம பல்லவனின் உத்தரவுப்படி திருக்கடல் மல்லையில் ஏழு இரதங்களுடன் கூடிய ஆலயங்கள் வரிசையாக எழுப்பப்பட்டன. அத்திமலையான் ஊர்வலமாக திருக்கடல்மல்லைக்கு எழுந்தருளச் செய்யப்பட்டு, ஏழாவது கோயிலில் ஜலசயன பெருமாளாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டான்.

அத்திமலைத்தேவன் திருக்கடல்மல்லையில் கோயில் கொண்ட ஏழாம் நாள் —

காஞ்சி நகரத்தில் ஒரு அசாதாரண அமைதி. என்றாவது ஒருநாள் அத்திமலைத்தேவன் அவனது இருப்பிடமான அத்திமலைக்குத் திரும்பி வருவான் என்கிற நம்பிக்கையில் காத்திருந்த பட்டர்கள் அவன் மல்லைக்குச் சென்றதை ஜீரணிக்க முடியாமல் அன்றைய ஆலயப் பணிகளை முடித்துவிட்டு மனைக்குக் கிளம்பி, உறங்கச் சென்ற வேளை —

தனது மஞ்சத்தில் உறங்கத் துவங்கியிருந்த நரசிம்ம பல்லவனை யாரோ தூக்கித் தரையில் வீசி எறிந்தனர். திடுக்கிட்டுக் கண் விழித்தான், நரசிம்ம பல்லவன். அவன் கிடந்திருந்த மஞ்சம் ஆடிக் கொண்டிருந்தது.

*மஞ்சம் மட்டுமா?*
*அரண்மனையே ஆட்டம் கண்டு கொண்டிருந்தது..!*
*அரண்மனை மட்டுமா?*
*ஒத்தாடையே குலுங்கிக் கொண்டிருந்தது!*
*ஒத்தாடை மட்டுமா?*
*காஞ்சியே நடுங்கிக் கொண்டிருந்தது!*
*காஞ்சி மட்டுமா?*
*பல்லவமே நிலநடுக்கத்தால் துடித்துக் கொண்டிருந்தது.*

திருக்கடல்மல்லையின் அருகே பூகம்பம் ஒன்று தோன்றியிருந்தது. அதனால் உருவாகிய ஆழிப்பேரலை, ஆவேசத்துடன் மல்லைக்கு வந்து தந்தையும், மகனுமாகச் சேர்த்து உருவாக்கியிருந்த சிற்ப நகரைச் சூறையாடத் தொடங்கியது.

கடல் அலைகள் கடற்கரையில் எழுப்பப்பட்டிருந்த ஏழு கோயில்களையும் கபளீகரம் செய்து விழுங்கியது. எங்கு பார்த்தாலும் தண்ணீர். காதலன் சமுத்திர ராஜன் தான் மல்லையை உண்டதோடு நில்லாமல், தனது காதலி பாலாற்று கன்னிக்கு முக்கூடல் கடிகையை எடுத்து வாயில் ஊட்டினான்.

பல்லவமே பரிதவித்து நின்றது.

நரசிம்ம பல்லவன் நொறுங்கிப் போனான். திருக்கடல்மல்லைக்கு விரைந்து சென்று தனது தந்தையும், தானும் உருவாக்கியிருந்த கடல்மல்லையை சோகத்துடன் நோக்கினான்.

அவன் கட்டியிருந்த ஏழு இரதங்களில் ஒன்று மட்டுமே மிஞ்சியிருந்தது.

*'அத்திமலையானின் உக்கிரத்தோடு விளையாடாதீர்கள்!' — ராஜகுருவின் எச்சரிக்கை மொழிகள் அவனது செவிகளில் ரீங்கரித்தன.*

*மாதங்கள் கடந்தன.*

*அத்திமலைத்தேவனை மீண்டும் கடல் அடியில் இருந்து எடுத்து அத்திமலையிலேயே எழுந்தருளச் செய்துவிடுங்கள் என்கிற பல்லவ அரசி ஸாமவை பெருந்தேவியின் கோரிக்கையை ஏற்றான்.*

*கடல் நீரின் அடியில் இருக்கும் அத்திமலைத்தேவனை மீண்டும் எடுக்க முடிவு செய்தான், நரசிம்ம பல்லவன். ஆழ்கடல் நீச்சல் தெரிந்த மீனவர்கள் சிலரைத் தண்டியின் தலைமையில் கடல்மல்லைக்கு அனுப்பினான்.*

*திருக்கடல்மல்லையில் கிழக்கு நோக்கி வடக்கிலிருந்து தெற்காக ஏழு கோயில்களை அமைத்திருந்தான், நரசிம்ம பல்லவன். கடைசிக் கோயிலான ஜலசயன பெருமாளின் ஆலயத்தை கடல்மல்லையின் தெற்கே வள்ளூர் கடற்கரையில் எழுப்பியிருந்தான். தண்டி, மீனவர்களுடன் வள்ளூருக்குச் சென்று கடலின் அடியில் உள்ள ஜலசயன பெருமாள் என்கிற அத்திமலையானை வெளியே எடுத்து வரும்படி பணிக்க, அவர்கள் உறுதியான தாம்புகளுடன் நீரின் அடியில் சென்றனர்.*

*ஏழாவது கோயிலான ஜலசயன பெருமாள் ஆலயத்தினுள் நுழைந்தனர். வெளியே குறுகலான நுழைவாயிலும், உள்ளே நாற்பதடி அகலமாகவும் இருந்தது சந்நிதி.*

*உள்ளே —*

*சிலை எதுவும் இருக்கவில்லை.*

*ஆலயக் கற்சுவரில் உளியால் சில எழுத்துக்கள் வடிக்கப்பட்டிருந்ததை அந்த மீனவர்கள் பார்த்தார்கள்.*

எழுதப் படிக்கத் தெரிந்த அவர்களில் ஒருவன் அந்த வார்த்தைகளைப் படித்தான்.

மகா மல்ல எதி..

என்று அந்த ஆலயச் சுவரில் உளியால் வடிக்கப் பட்டிருந்தது. தண்டியின் மூலமாகத் தகவலை அறிந்த நரசிம்ம பல்லவன் அயர்ந்து போனான்.

கைக்கு எட்டிய அத்திமலைத்தேவன் மீண்டும் நழுவி விட்டான். தான் செய்த மாபெரும் தவறு. இவனது சிறு தவறால், மல்லையும் பறிபோனதே.

அத்திமலைத்தேவனைக் காப்பாற்ற நவரத்ன பல்லவியும், ஜெயவர்மனும் செய்த தியாகங்கள் அனைத்தும் வீணானதே.

மகேந்திரன் தகனத்தின் போது பீமவர்மன் செய்திருந்த எச்சரிக்கை அவனுக்கு நினைவில் வந்தது.

'உனது தந்தைக்கு 'மல்ல எதி' என்று ஒரு எதிரி இருந்தான். நீ மாமல்லன் என்பதால் 'மா மல்ல எதி'யாகத் திகழ்வான்' என்றாரே!

ஜலசயன பெருமாள் ஆலயச் சுவரில் 'மகா மல்ல எதி' என்று செதுக்கி இருக்கும் இவனது எதிரியின் வசம்தான் அத்திமலைத்தேவனின் சிலை இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். புரிந்து கொண்டு என்ன பயன்? கைக்கு எட்டிய ஹஸ்த நட்சத்திரத்துக் காரன், வாய்க்கு எட்டாமல் நழுவிப் போய்விட்டானே..!

மீண்டும் அத்திமலையான் எங்கே சென்றான்?

## 51. 2004 டிசம்பர் 24, சுனாமி

டிசம்பர் 24, 2004, திடீரென்று ஆழிப்பேரலை என்கிற சுனாமி தமிழகக் கடற்கரையைத் தாக்கியது. அப்போது பழைய கடற்கோளின் போது மூழ்கிய ஆலயங்கள் வெளியே தெரிந்தன. மாமல்லபுரத்தின் தெற்கே, பதினெட்டு கி.மீ. தொலைவில் உள்ள வசவ சமுத்திரம் கடற்கரை பகுதியில், ஜலசயன பெருமாள் ஆலயமும் வெளிப்பட்டது. வசவ சமுத்திரம் பகுதியில் வெளிவந்த ஆலயத்தின் சுவரில் 'மல்ல எதி' என்று செதுக்கப்பட்ட வாசகத்தின் புகைப்படம் கூட பத்திரிகைகளில் வெளிவந்தது. அப்போது ஒரு ஆங்கில தினசரியில் வெளியான கட்டுரை இது.

Tsunami uncovers ancient Temples in Mahabalipuram

The tsunami uncovers ancient sculptures


The December 2004 tsunami, which battered much of the south Indian coast, has helped unearth priceless relics in the ancient port city of Mahabalipuram in Tamil Nadu. The killer waves shifted thousands of tonnes of sand to uncover granite sculptures which archaeologists claim, are remnants of a seventh - century civilisation. The sculptures include an elaborately carved lion, a half - completed elephant and a stallion in flight. "As the tsunami waves receded, they scoured away sand deposits that had covered these sculptures for centuries," says Alok Tripathi, an underwater archaeologist. Tripathi, who led the Archaeological Survey of India (asi) team that excavated Mahabalipuram, says the discoveries throw new light on this ancient port city, south of Chennai. Ways of the sea Mahabalipuram was an important centre of the Pallava dynasty, which

held sway over much of south India between the fourth and the ninth century. Known for its Shore Temple, the city has been designated by the unesco as a World Heritage Site. Legend has it that Mahabalipuram had six other temples - seafarers referred to it as the land of seven pagodas till even two centuries ago - which were consumed by waves (Land of seven pagodas).

The city has also been the subject of much scholarly curiosity. asi had begun excavations here in 2001. But the tsunami threw a spanner in their works. Only for a brief while, however: the archaeologists got going again after a report from local fisherfolk. Just before the tsunami waves struck on December 26, 2004, the sea withdrew about 500 metres, baring its bed on which lay a temple structure and several rock sculptures, the tsunami - struck fisherfolk announced after they had recovered some of their bearings. Once the waves subsided, asi researchers enlisted help of divers from the navy to scan the deep seas. "We found some stone structures which appear to be man - made. They are perfect rectangular blocks arranged in a clear pattern," says Tripathi.



The urn (above) and the lion statue (below) unearthed by the tsunami could be part of a temple or a port city, say scholars.



The investigators also found partly submerged blocks of walls, some of which extended into the land. "Our investigations showed that the partially submerged blocks and those completely under water are part of one edifice," said Tripathi. "The blocks appear to be part of a temple wall," the archaeologist added. Other parts of the temple that surfaced include a square garbha griha - the sanctum sanctorium - an elegant terracotta ring well and a sandstone kalash (an urn).

# 52. அத்திமலைத்தேவன் பேசுகிறேன்..

அத்திமலையின் சரித்திரத்தை வாசித்துக் கொண்டிருக்கும் சரித்திரப் பிரியர்களே!

காஞ்சி என்னும் பாஞ்சாலி உடுத்தியிருக்கும் சரித்திரம் என்கிற துகிலினைக் 'காலச்சக்கரம்' நரசிம்மா, துச்சாதனனாக மாறி உரித்துக் கொண்டே இருக்க, கண்ணனைப் போன்று நான் அந்தச் சரித்திரச் சேலையை வளரச் செய்து கொண்டே இருக்கிறேன். நான்கு பாகங்களில் எனது கதையைக் கூறப் போகிறேன் என்று கூறியவன், இப்போது ஐந்து பாகங்கள் என்கிறான். என்னைப் பற்றி ஐந்து என்ன, பன்னிரண்டு பாகங்களைக் கூட எழுதலாம்.

நான், பார்த்திராத சாம்ராஜ்யங்களா? மன்னர்களா? மந்திரிகளா? ராஜதந்திரிகளா? ஆழ்வார் ஆச்சார்யர்களா? இரத்த வெறி பிடித்த படை வீரர்களா? அந்நியர்களா? பக்தர்களா? நாத்திகர்களா? கோடிக்கணக்கானோர் வந்தார்கள், வென்றார்கள், போனார்கள். யார் நிரந்தரமாக நின்றார்கள்..?

ஆயர்பாடி காலம் தொடங்கி, இன்றைய காலம் வரையில் அனைத்தையும் சகித்துக் கொண்டு நான் ஒருவன்தானே நிரந்தரமாக நிற்கிறேன்?

என்னைச் சுற்றி எத்தனையோ போர்கள், உயிர் சேதங்கள், சதிவலைகள்! யார் எதனைச் சாதித்தார்கள்..? தாங்கள் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை என்பதை அறிந்தும், மன்னர்கள் மோதிக் கொண்டார்களே!

தாங்கள் அநித்யமானவர்கள் என்பதைப் புரிந்து கொண்டிருந்தால், இவ்வளவு போர்கள் நடந்திருக்குமா? நிரந்தரமான நானே, வனவாசத்திற்கும் அஞ்ஞாத வாசத்திற்கும் சென்றேன் என்றால், நிரந்தரம் இல்லாத ஆட்சியாளர்கள் எத்தகைய துன்பங்களை அரசியல் விளையாட்டுகளால் தேடிக் கொண்டிருப்பார்கள்..?

இராமனைப் போன்றே நானும் பலகாலம் வனவாசம் புரிந்திருக்கிறேன். பிறகு அஞ்ஞாத வாசமும் செய்திருக்கிறேன். எவ்வளவோ பிரச்னைகளை நானும் சந்தித்திருக்கிறேன். அனைத்திற்கும் காரணமே சாணக்கியன்தான். அவன் மட்டும் எனக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கப் போகிறேன் என்று தேவ உடும்பரத்துடன் வடபுலம் செல்லாமல் இருந்திருந்தால், எனக்கு இங்கே இவ்வளவு பிரச்னைகள் ஏற்பட்டிருக்காது. என்ன செய்ய? பல்லாங்குழி பலகைவாயன், பல்லவத்தைப் பல பிரச்னைகளில் சிக்க வைத்து விட்டான். இல்லையென்றால் சமுத்திரகுப்தன், புலிகேசி என்று ஏன் வடபுலம் காஞ்சியைத் தேடி வரப் போகிறது?

கோடிகோடியாக மனிதர்களை நான் பார்த்து விட்டேன். என்னால் பயன் அடைந்தவர்களும் கோடி! சிலரால் நான் பெற்ற உதவிகளும் ஏராளம். எத்தனையோ மன்னர்கள் மகுடம் சூட்டிய போதும் நான் மகிழவில்லை. மறைந்த போதும் நான் துயரப்படவில்லை. இருப்பினும் ஜெயவர்மன் என்கிற ஒரு சிறந்த பக்தனை இழந்த போதுதான் நான் சற்றுக் கலங்கினேன். காஞ்சியின் ஒப்பற்ற மணி அவன். அதன்பின் பலம் வாய்ந்த பல மன்னர்கள் வந்தாலும், என் மனதில் ஜெயவர் மனுக்கென்று ஒரு தனி இடம் இருக்கும்.

இதுநாள்வரை எவ்வளவோ அநீதிகளும், அக்கிரமங்களும் நடந்த போதிலும் நான் பேசவில்லை.

என்னைச் சுற்றியே பல சாம்ராஜ்யங்களின் அரசியல் நடந்த போதிலும் நான் பேசவில்லை.

*ஆனால் பேச வேண்டிய பல சமயங்களில் பேசாமல் இருந்த நான், இன்று பேசுவதற்குக் காரணம், இன்றைய சூழ்நிலை.*

*உங்களுக்கு இன்று பிரச்னைகள் ஏராளம். தனிப்பட்ட பிரச்னைகள், வீட்டுப் பிரச்னைகள், நாட்டுப் பிரச்னைகள் என்று பல பிரச்னைகள் இருந்தாலும், இப்போது தலைவிரித்தாடுவது தண்ணீர் பிரச்னை.*

*தேவ உடும்பர அத்திவரதனான நான், தேக ஆரோக்கியம், மன நிம்மதி மற்றும் வளங்களை வாரி வழங்குபவன். நாற்பது வருடங்களுக்கு ஒருமுறைதான் நான் வெளியே வருகிறேன் என்பதால் எனது ஆற்றலை இந்த முறை உங்கள் ஒவ்வொருவருக்கும் வாரி வழங்க விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் இதனை எனது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று என்னைக் காண வாருங்கள்.*

*'காலச்சக்கரம்' நரசிம்மா சரியான சந்தர்ப்பத்தில்தான் எனது கதையைக் கூறத் துவங்கியிருக்கிறான்.*

*இதுவரை எனது கதையின் மூன்று பாகங்களை வெளியிட்டுவிட்ட அவர், மீண்டும் நான் அடுத்த மாத இறுதியில், அனந்தசரஸ் நீருக்குள் சென்று ஓய்வு எடுப்பதற்கு முன்பாக மிகுதி பாகங்களை வெளியிட்டுவிட வேண்டும் என்று கட்டளையிடுகிறேன். காரணம் —*

*மூன்று பாகங்கள் வெளிவந்துவிட்ட நிலையில் இதுவரை பாதிக் கிணற்றைத் தான் தாண்டியிருக்கிறான், 'காலச்சக்கரம்' நரசிம்மா. சிங்கமல்லன் என்கிற நரசிம்மவர்மர் ஆட்சியில் நிகழ்ந்த ஆழிப்பேரலை வரையில்தான் நாம் கடந்து வந்திருக்கிறோம். இன்னும் நிறைய இருக்கிறது.*

*நான் இப்போது உள்ளே சென்று உறங்கத் துவங்கி விட்டால், பிறகு 2059ஆம் வருடத்தில்தான் வருவேன்.*

சிம்மவர்மனின் காலத்தில் காணாமல் போன எனது தேவ உடும்பர சிலை மீண்டும் நரசிம்மவர்மன் காலத்தில் கிடைக்கிறது. வனவாசம் முடிந்து அஞ்ஞாதவாசம் போவது போல், காணாமல் போய்க் கிடைத்து மீண்டும் காணாமல் போனேன். கடல் கோளில் மீண்டும் நான் கைநழுவிப் போனேன். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போன்று நடந்த சம்பவம் அது. அதன் பிறகு யார் என்னைக் கண்டு பிடித்து, யார் எனது ஆலயத்தில் என்னைச் சேர்ப்பித்தார்கள் என்பதே பெரிய கதைதான்..

பல்லவம் அழியாது என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் என்னையும் மீறி அவர்கள் செய்த சில செயல்களால் தாங்களாகவே அழிவினைத் தேடிக் கொண்டனர். ராஜசிம்மன் என்கிற இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் பாலாறு முதன்முறையாக வற்றிப் போனது, வாரிசு இல்லாமல் பல்லவர்கள் அழியும் அபாய நிலையில், சிம்மவிஷ்ணுவின் தம்பி காம்போஜ மன்னன் தானவர்மனது மூன்றாவது மகன், பன்னிரண்டு வயது நந்திவர்மனை காஞ்சிக்கு மன்னனாக அழைத்து வந்தனர். நந்திவர்மன் செய்த சில அடாத செயல்கள் பல்லவரின் ஆணிவேரையே அசைத்தன..

பல்லவர் குலம் அபராஜிதவர்மனோடு அழிந்து போனது. சோழர்கள் வசம் காஞ்சி வந்தது. பிறகு பாண்டியர்கள், ஹொய்சளர்கள், கோல்கொண்டா நவாப், முகலாயர்கள், விஜயநகர மன்னர்கள், ராஜா தோடர்மால், உடையார்கள், ராபர்ட் கிளைவ், சந்தாசாகெப் வரை கதைக்களம் இருக்கிறது. என்னைச் சுற்றி நிகழ்ந்த சம்பவங்களையெல்லாம், நான் 'காலச்சக்கரம்' நரசிம்மாவிடம் கூறியிருக்கிறேன். இவற்றையெல்லாம் கடைசி இரு பாகங்களில் அவன் கட்டாயம் கூறுவார்.

இனி —

*திருக்கடல்மல்லை ஆழிப்பேரலையில் காணாமல் போன நான் எங்கு இருந்தேன், மீண்டும் யார் என்னைக் கண்டுபிடித்து மீண்டும் கோயிலில் சேர்த்தனர் என்பதை அறியும் முன்பாக, என்னை நேரிலே காண வாருங்கள்.*

*இதோ —*

*ஜூலை 1. 2019, அன்று அனந்தசரஸ் என்கிற காஞ்சி வரதராஜர் ஆலயத்தில் உள்ள குளத்தில் இருந்து எழுந்து வருகிறேன்.*

*'காலச்சக்கரம்' நரசிம்மா கூறி வரும் கதையின் முடிவு உங்களுக்கெல்லாம் தெரியும். அத்திமலையானாகிய நான் பத்திரமாக எனது ஆலயம் வந்து சேர்ந்துவிட்டேன். நான் பத்திரமாகத் திரும்பி வந்ததால்தான் வரும் ஜூலை 1, 2019 முதல் உங்களுக்குக் காட்சி தர உள்ளேன்.*

*ஐந்து பாகங்களில் இலட்சக்கணக்கான சொற்களில் 'காலச்சக்கரம்' நரசிம்மா கூறும் சரித்திரங்களை, எனது ஒரு பார்வை உங்களுக்குப் புரிய வைக்கும். எனவே, என்னைக் கண்டு களிக்க வாருங்கள். காரணம் இப்போது என்னைத் தவறவிட்டால்..*

*2059, 2099, 3039, 3079 வருடங்களில் நான் வெளியே வரும் போது நான் இருப்பேன். ஆனால் நீங்கள்..?*

*அப்போது நிச்சயம் என்னைக் காணுவோம் என்று நம்புகிறவர்கள் மட்டும் இப்போது வரவேண்டாம்.*


*திருக்கடல்மல்லையின் கடற்கோளுக்குப் பிறகு எனது பயணத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா..? நான் எப்போது மீண்டும் அத்திமலைக்குத் திரும்பினேன் என்கிற சுவாரஸ்யமான கதையை அறிந்து கொள்ள, நான்காம், ஐந்தாம் பாகங்களுக்குக் காத்திருங்கள்.*

*என்றும் வரங்களை அள்ளித்தரக் காத்திருக்கும்,*

*கலிவரதன்*
*உங்களது*
**அத்திமலைத்தேவன்.**

# வாராத வரதர் வந்தார்


**தி**ருகடன்மல்லை ஆழிப்பேரலையில் நரசிம்ம பல்லவன் எழுப்பியிருந்த ஏழு மால் கோவில் என்கிற ஏழு இரதங்களில் ஆறு இரதங்களை கடல் கொண்டது. ஏழாவது கோவிலான ஜலசயன பெருமாள் கோவிலில் எழுப்பட்ட அத்திவரதனின் ஆலயத்தையும் கடல் விழுங்க தண்டியின் தலைமையில் மீனவர்களை கடலின் உள்ளே அனுப்பி, சிலையை கொண்டு வர உத்தரவு இடுகிறான். அவர்கள் கடலடியில் சென்று பார்க்க, அத்திமலையானின் சிலை அங்கே காணப்படவில்லை. சிலையை அத்திமலையில் எழுந்தருள செய்யாதது




நாவலாசிரியர் காலச்சக்கரம் நரசிம்மா காஞ்சி வரதராஜ ஆலயத்தின் அனந்தசரஸ் குளத்தில் அத்திமலையான் வெளியே வருவதற்கு முன்பாக



நள்ளிரவில் அத்திமலைத்தேவனை வெளியே சுமந்து வரும் காட்சி.



குளத்தின் படுகையில் பன்னிரண்டு படிகளில் இறங்கி சென்றால், அத்தி வரதர் சயனித் திருக்கும் தொட்டியை காணலாம்.



அத்திவரதரை எடுத்த பிறகு, தொட்டி. நாகபாச சிலைகளையும் காணலாம்.



அலங்காரங்களுடன் அத்திமலைத்தேவன்

*மாபெரும் தவறு என்பதை உணர்ந்து மீண்டும் பிரதிமையைத் தேடுகிறான். ஜலசயன பெருமாள் ஆலயத்தின் கல்சுவற்றில் "மகாமல்ல எதி" என்று செதுக்கப்பட்டிருக்கிறது. மகாமல்ல எதி என்கிற தனது தந்தையின் எதிரியின் வசம் சிலை சிக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து, அவனைத் தேடும்படி கட்டளையிடுகிறான், சிங்க மல்லன் என்கிற நரசிம்ம பல்லவன்.*

*கடந்த ஜூன் இருபத்தி எட்டாம் தேதி நள்ளிரவில் காஞ்சி அனந்தசரஸ் குளத்தில் இருந்து வெளிவந்து ஜூலை ஒன்று முதல் அருள்பாலிக்கும் அத்திவரதர் திருக்கடல் மல்லையில் இருந்து எங்கு சென்றார் ? அவர் மீண்டும் அனந்த சரஸ் குளத்திற்கு எப்படி வந்தார்?*

*பல்லவ வம்சம் அழிந்த கதை, சோழர்கள் வசம் காஞ்சி வந்தது, ஆதித்த கரிகாலன் எழுப்பிய பொன்மாளிகை, இராஜேந்திர சோழன் காஞ்சியில் இருந்து வங்கத்தின் மீது படையெடுத்து சென்றது, சோழர்கள் வீழ்ச்சி ஆகிய காலங்களை விவரிக்கும்.*

**காலச்சக்கரம் நரசிம்மா**

## காலச்சக்கரம் நரசிம்மாவின் புதினங்கள்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை-17.

**வானதி பதிப்பக வெளியீடு**

காலச்சக்கரம்

ரங்கராட்டினம் *(மூன்று பதிப்புகள்)*

சங்கத்தாரா *(மூன்று பதிப்புகள்)*

குபேரவனக்காவல் *(இரண்டு பதிப்புகள்)*

பஞ்சநாராயணக்கோட்டம் *(இரண்டு பாதிப்புகள்)*

கர்ணபரம்பரை *(இரண்டு பதிப்புகள்)*

அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா


அத்திமலைத்தேவன் – முதல் பாகம்

அத்திமலைத்தேவன் – இரண்டாம் பாகம்

---

சிரித்ராலாயா (தி இந்து தமிழ் திசை வெளியீடு)

காமதேனுவின் முத்தம் (ஸ்ரீ பதிப்பகம்)





**காலச்சக்கரம் நரசிம்மா என்கிற டி.ஏ.நரசிம்மன்,**

தி இந்து ஆங்கில நாளிதழில் நிர்வாக ஆசிரியராகப் பணிபுரிகிறார். அதற்கு முன்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பணிபுரிந்தார். காலச்சக்கரம் என்கிற இவரது முதல் நாவல் பெரும் வரவேற்பினை பெற, அவரது பெயர் 'காலச்சக்கரம் நரசிம்மா' வாக மாறியது.

குமுதம், கலைமகள், அமுதசுரபி உள்பட பல பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதியுள்ள காலச்சக்கரம் நரசிம்மா, ஆங்கில கட்டுரைகளையும், தொலைக்காட்சி தொடர்களையும் எழுதி உள்ளார். சன் டிவி, கலைஞர் டிவி, ஜெயா டிவி, வசந்த் டிவி மற்றும் தூர்தர்ஷனில் சின்னத்திரை தொடர்களையும் எழுதி வருகிறார். தொலைக்காட்சிகளில் அரசியல் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டிருக்கிறார்.

சங்கதாரா, பஞ்ச நாராயண கோட்டம், ரங்கராட்டினம், கர்ணபரம்பரை, அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா, குபேரவன காவல் போன்ற இவரது நாவல்களின் மூலம் தனக்கென்று ஒரு வாசகர் வட்டத்தையே கொண்டிருக்கிறார். அத்திமலைத்தேவன் இவரது ஒன்பதாவது நாவல். ஐந்து பாகங்களில் மூன்றாம் பாகம் இது.

**சரித்திரம் + மர்மம், அரசியல் + மர்மம், ஆன்மிகம் + மர்மம், குடும்பம் + மர்மம், காதல் + மர்மம்**

என்கிற வரிசையில், அத்திமலைத்தேவன் சரித்திரம் + ஆன்மிகம் + அரசியல் + காதல் + மர்மம் என்று ஒரு பஞ்சாமிர்தமாக உங்களுக்கு சுவை தரப் போகிறது.

இவரது தந்தை திரைப்பட இயக்குனரும் திரைக்கதை வசனகர்த்தாவுமான சித்ராலயா கோபு. தாய் மறைந்த எழுத்தாளர் நாவலாசிரியர் கமலா சடகோபன். இவரது மகன் மற்றும் மகள் திரைப்படத்துறையில் பணிபுரிகின்றனர். மனைவி சுதா இவரது சரித்திர ஆராய்ச்சிகளுக்கு உதவி செய்து வருகிறார். குடும்பத்துடன் திருவான்மியூரில் வசித்து வருகிறார்.

வானதி பதிப்பகம்